செந்தமிழ்ச் செல்வி

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.,
Tirunelveli. : Madras-1.

[Price Rs. 6-0-0

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்

EDITORIAL BOARD MEMBERS

உள்ளுறை

பக்கம்

அண்ணாமலை வாழ்த்துப்பா—பொன்னி, இரா. இளமுருகனார் ௧௨௧

அறிவுலகச் சிற்பி ஆல்பேர்ட் ஐன்ஸ்டீன்
—திரு. பி. எஸ். சாமி, பி.எஸ்ஸி ௪௨௧

அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாறு ௧௪௫

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழாத் திருநாள்
—ஆசிரியர் ௨௪௩

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழாப் பாராட்டு
—அருட்கவிப்புலவர், சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராம
நாத பிள்ளை ௨௪௪

அவர் கடமை முடிக!—வித்துவான், திரு. செந்துறைமுத்து ௪௫௯

அறிவறிந்த மக்கட் பேறு " " ௪௨௧

அறிவியல் ஆராய்ச்சி—காரை. திரு. த. இ. வேலன் ௬௦௭

அறிவுக் கோயில் வாழ்க! " " ௨௮௫

அரும்பெரும் ஆற்றல்"—இனி ௪௬௧

அறுபதாம் ஆண்டு நிறை அணிவிழா வாழ்த்து—பேருரையாளர்,
திரு. பு. இ. புள்ளிவலசர முதலியார் ௧௨௭

ஆங்கில தமிழ் ஆட்சி மொழியாம்—இ. கா. அறிவு ஒளி ௬௦

இயற்கையின் இயல்புகள்—திரு. ஆ. சேதுபதி ௬௪௪

இரங்கற்பா—செல்லூர்க்கிழார் ௧௦௦

இருவீரரும் தமிழும்—திரு. சமி ௪௧

இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் வரலாறு ௨௬௭

இராஜா சர். முத்தையாச் செட்டியார் வரலாறு ௨௩௫

இலக்கியத்தில் இன்பச் சுவை—திரு. கி. வைரமுத்து ௪௫௭

உபவேந்தர் டாக்டர் பி. சேதுப்பிள்ளை திருவம்பாவை
—செல்லூர்க்கிழார், திரு. செ. செ. இராமசாமி
பிள்ளை ௪௨௪

உலகத்து இயற்கை—திரு. க. சுப்பிரமணியன், ௪௨௧, ௫௭௧

எண்ணிப் பாரீர்!—காரை, திரு. த. இ. வேலன் ௧௮௧

எழுத்தும் ஒலியும்—ஆடக்கரை, திரு. ச. கண்ணன் பி. ஏ. ௨௩௩

எழுத்தும் புணர்ச்சியும்—செல்லூர்க்கிழார்,
திரு. செ. செ. இராமசாமி பிள்ளை ௰௩௩

ஏற்றம் ஏற்றம்—காரை, திரு வேலன் ௪௭

ஏதுமிலே தேவன்—திருவாட்டியார், சொ. பத்மாவதி
அம்மையார் பி. ஏ. எல் (ஆனர்ஸ்) ௧௨௪

கலைக்கோயில் வாழிய!—செல்லூர்க்கிழார்,
திரு. செ. செ. இராமசாமி பிள்ளை ௨௫௪

கற்பிப்பதும் கோயில் வாழ்க! " ௨௮௯

கல்கியின் மறைவு—இதழாசிரியர்
கவிமணி, தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் மறைவு
—இதழாசிரியர்
கவிமணி பிரிவிரங்கற்பா—[illegible], திரு. [illegible]
கவிமணி, தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் பிரிவு பற்றிய
இரங்கற்பா—திரு. [illegible]
கவிமணி, திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் மறைவு பற்றிய
கையறுநிலை—வித்துவான், திரு. [illegible]
கவுந்தியடிகள்—வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனார், [illegible]

கன்றும் தாயும்—[illegible],
திரு. செ. வெ. இராமசாமி செட்டியார்
காதற் கவற்சி—[illegible], திரு. [illegible]
காவியக் காதல்—திரு. [illegible]
காவியத்தில் சில ஓவியங்கள்—திரு. [illegible]
கானல் வரி—வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனார், [illegible]

குமரிமுனை—திரு. [illegible]
குமரிமுனையில் [illegible]—[illegible]
குளவியும் தேனீயும்—[illegible], திரு. [illegible]
குன்றக்குடி அடிகளார் [illegible]—இதழாசிரியர்
சித்தாந்த [illegible]
சிலப்பதிகார ஆராய்ச்சி [illegible]
அ. சிதம்பரனார்
சிவஞானம் பிள்ளை அவர்கள்—இதழாசிரியர்
சிறந்தன் [illegible]—கவிஞர், திரு. கா. [illegible]
சிற்றூர்க் காட்சிகள்—திரு. ஆ. [illegible]
செய்திகளும் குறிப்புகளும், [illegible]
செல்வங்களே!—கவிஞர், திரு. கா. [illegible]
செல்வியே வருக! வருக!—வித்துவான்,
திரு. இ. இராமசாமி, [illegible]
செழுங்கலைக் கோயில் வாழ்க!—[illegible]
புலவர், திரு. செ. வெ. இராமசாமி செட்டியார்
சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்
சேக்கிழார் திருப்பணி [illegible]
[illegible] திரு. [illegible]
சேக்கிழார் திருப்பணி [illegible]
சேர மரபு—வித்துவான், [illegible]
சேனாவரையத்தில் 'செய்து'—வித்துவான், திரு.
செ. வேங்கடராமச் செட்டியார்

சைவசமயமே சமயம்—இதழாசிரியர் [illegible]

சொல்லும் பொருளுமே நோ கதை—திரு. பி. எஸ். சாமி,
பி. லிட். [illegible]

சோமசுந்தர பாரதியாருக்குப் பாராட்டு [illegible]

தண்டமிழ் வேள்—திரு. செ. வி. செகநாதலிங்கம் [illegible]

தமிழகத்தில் இந்தியெதிர்ப்பு—இதழாசிரியர் [illegible]

தமிழகத்தில் தமிழ்நிலை

—திரு. ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை [illegible]

தமிழ்ப் பண்பு—சொக்கலிங்கனார்—[illegible], ச. மு. பிள்ளை [illegible]

தமிழ்ப் பாட்டு—திரு. [illegible] வடிவேலனார் [illegible]

தமிழில் வழிபாடு—இதழாசிரியர் [illegible]

தமிழில் வழிபாடு செய்தல் கூடுமா?—செல்வப்பாக்கியநாதர்,
திரு. செ. ரெ. துரைசாமிப் பிள்ளை [illegible]

தமிழ் அருச்சனை—சித்தாந்த பண்டிதர், சமயப் புலவர்
திரு. ப. இராமநாத பிள்ளை [illegible]

தமிழ் கலை பல்கலைக் கழக விழா—செல்வப்பாக்கியநாதர்,
திரு. செ. ரெ. துரைசாமிப் பிள்ளை [illegible]

தமிழ் நிலை வாழ்த்து [illegible]

தமிழ் எழுத்துக்களின் தோற்றம்—இராவ்சாகிப், டாக்டர்
தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை,
L.M.S., A.M.R.A.S. (LOND) [illegible]

தமிழ்நாட்டு உணவுக் கலைச்சொற்கள்—ஆசிரியர்,
திரு. கா. பொ. இரத்தினம் எம்.ஏ., பி.ஓ.எல் [illegible]

தமிழ் புலவர்களுக்கு—செல்வப்பாக்கியநாதர்,
திரு. செ. ரெ. துரைசாமிப் பிள்ளை [illegible]

தமிழ்ப்புலவர் மாநாட்டுச் செய்தி [illegible]

தமிழ்ப் பேராசிரியர் மறைமலையடிகள் மறைவு—இதழாசிரியர் [illegible]

தமிழ் மறை நாவலர்—புலவர், திரு. சாமி வெள்ளைவாரணன் [illegible]

தமிழ்மொழி நாட்டு—செல்வப்பாக்கியநாதர் [illegible]

தமிழ் வாழ்த்து [illegible]

தவத்திரு பெருமை—சித்தாந்த புலவர், திரு [illegible] [illegible]

தனித்தமிழ் தந்தை—மா. இளஞ்சேரன் [illegible]

தாயுமானவர்—செல்வப்பாக்கியநாதர் டாக்டர்,
திரு. ச. மு. பிள்ளை [illegible]

திருக்குறள் நல்ல பல சிந்தனைகள், [illegible], [illegible], [illegible], [illegible],
[illegible], [illegible]

திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் பிரிவு [illegible]

திருவாசகத் தேன்—செல்வப்பாக்கியநாதர் [illegible]

திரு வி. கல்யாணசுந்தரனார் மறைவு—இதழாசிரியர் [illegible]

திரு. வி. க. படத் திறப்பு—டாக்டர், திரு. மு. வரதராசனுர்
தினையும் பனையும்—திரு. கரு. நாகரத்தினம், கணியூர்
துடிசைகிழாரின் பேராவியற்கை—இதழாசிரியர்
துடிசைகிழார் மறைவு குறித்த இரங்கற் பாக்கள்
—திரு. கோவைகிழார்
தேவாரத் தெள்ளமிழ்து—செல்லூர்க்கிழார்
திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை
நடுநிலை—நாஞ்சில், திரு. கா. கணபதி
நம் செல்வியின் புதிய ஆண்டு—இதழாசிரியர்
நல்லிசை நிறுத்த வேண்டினல்
—குடந்தை, திரு. சு. கண்ணன் B.A. [illegible]
நால்வர் திருமணிமாலை—திரு. சிவானந்த சுவாமிகள் [illegible]
நெய்தலே நெய்தல்—வித்துவான், திரு. ப. சு. நடராசன் [illegible]
படித்தார் நிலையும், படிப்பார் நிலையும்
—நெல்லை, திரு. க. சுப்பிரமணியன் [illegible]
பரிபாடல் மாநாடு—இதழாசிரியர் [illegible]
பல்கலைக் கழகம் நீடுவாழ்க !—திரு. பாரதிதாசன் [illegible]
பழுத்த புலமைப் பசும்பாவலர்—பேராசிரியர்
கா. பொ. இரத்தினம், எம்.ஏ., பி.ஓ.எல் [illegible]
பாராட்டுப் பத்து—வித்துவான், திரு. செ. வேங்கடராமச்
செட்டியார் [illegible]
பாராட்டுரை—திரு. V. ஆனந்தராசு, எம்.ஏ., எல்.டி.
தென்னார்க்காடு மாவட்டக் கல்வித்துறைத் தலைவர்
பாராட்டு வாழ்த்து மலர்—சென்னை மாணவர் மன்றத்
தினரும், சென்னைத் தமிழாசிரியர் கழகத்தினரும் [illegible]
பாரியொடு மூவேந்தர் போர்—வித்துவான்,
திரு. செ. வேங்கடராமச் செட்டியார் [illegible]
பிரஞ்சு இந்தியா அன்றுமுதல் இன்றுவரை [illegible]
பிரஞ்சு இந்தியா விடுதலை—இதழாசிரியர் [illegible]
'புகழ் படைத்த காவலனே !'—திரு. புலவர் 'அரசு' [illegible]
புகழ் மொழிகள் [illegible]
புலவர் மாணவர் தேர்வு [illegible]
புளிய மரம்—திரு. சு. அ. இராமசாமிப் புலவர் [illegible]
பெரியோர் தூதுகள்—நாஞ்சில், திரு. கா. கணபதி [illegible]
பெருங்காப்பியமும் தொடர்நிலையும்—திரு. [illegible]. பார்த்தசாரதி [illegible]
'பேபர்' என்னும் பூச்சிப்புலவர்—திரு. என். கே. வேலன் B.A. [illegible]
பேராசிரியர் திரு. ஆ. முத்துசிவன்—பண்டிதர்,
திரு. கா. பொ. இரத்தினம் எம்.ஏ., பி.ஓ.எல் [illegible]
பொங்கல் வாழ்த்து—செல்லூர்க்கிழார்,
திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை [illegible]

பொங்குக இன்பப் பொங்கல்—திரு. சோ. க. கந்தசாமி,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் [illegible]

பொய்யில் மெய்யுரை—சித்தாந்த பண்டிதர்,
கழகப் புலவர், திரு. ப. இராமநாத பிள்ளை [illegible]

போற்றி வழங்கும் நெறி—திரு. தென்மொழி ஞான
பண்டிதன், ஆனைமலை [illegible]

மதிப்புரை [illegible]

மர மனிதன்—வித்துவான், திரு. செங்குறை முத்து [illegible]

மறப்பெண் மங்கையர்க்கரசி—புலவர், திரு. க. குமரன் [illegible]

மறைவுற்ற தமிழ் நூல்கள்—மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி [illegible]

மன்மத ஆண்டில் விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தர்சட்டி
—டாக்டர், கவிஞர், திரு. ஔ. மு. [illegible]
பிள்ளை [illegible]

மாசித் திங்கள்—வித்துவான், திரு. கா. திருநாவுக்கரசு [illegible]

மீனாட்சிசுந்தரனார் பொன்விழா மாண்பு—ஆசிரியர் [illegible]

மெய்ப்பொருள் நாயனார்—[illegible],
திரு. செ. செ. இராமசாமி பிள்ளை [illegible]

மேலைநாட்டு மெய்விளக்கம்—திரு. க. அன்புமலர் [illegible]

வரவேற்புரை—டாக்டர், திரு. சிதம்பரநாதச் செட்டியார்
அவர்கள் [illegible]

வழிபாட்டு அடிப்படை—சித்தாந்த பண்டிதர்,
திரு. ப. இராமநாத பிள்ளை [illegible]

வழியனுப்பு வாழ்த்து—வித்துவான்,
செ. வேங்கடராமச் செட்டியார் [illegible]

வள்ளுவத்தில் மருத்துவம்—வித்துவான், செங்குறை முத்து [illegible]

வள்ளுவர் நாள்—கழகப்புலவர், சித்தாந்த பண்டிதர்
ப. இராமநாத பிள்ளை அவர்கள் [illegible]

வள்ளுவர் வழிவந்த வள்ளல்—திரு. பி. எல். சாமி,
[illegible] [illegible]

விஞ்ஞானச் செல்வி—இராசேசுவரி அம்மையார் [illegible] [illegible]

வெள்ளிவிழா வாழ்த்து—[illegible], திரு. கா. கணபதி [illegible]

வெள்ளிவிழா வாழ்த்துப் பாடல்கள்—பண்டித வித்துவான்,
திரு. வெ. ப. சுரு. இராமநாதன் செட்டியார் [illegible]

வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள்—தமிழ்மறைக் கழகத்
தலைவர், திரு. கா. பொ. இரத்தினம் [illegible]

படங்கள்

பக்கம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கட்டிடங்கள் [illegible]

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளி விழாவின்போது (9-2-1955) கலந்துகொண்ட பெருமக்கள் [illegible]

இராசா சர். மு. அ. முத்தையா செட்டியார் அவர்கள் [illegible]

இராசா சர். முத்தையா செட்டியாரும் சோமசுந்தரபாரதியாரும் [illegible]

இராசா சர். முத்தையா செட்டியார் சோமசுந்தர பாரதியாருக்குப் பொன்னாடை போர்த்துச் சிறப்புச் செய்தல் [illegible]

க. அ. சிவஞானம் பிள்ளை [illegible]

கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி [illegible]

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் [illegible]

காமராசரும் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும் [illegible]

குன்றக்குடி அடிகளார் அப்பர் அச்சகத்துக்கு எழுந்தருளல் [illegible]

குன்றக்குடி அடிகளார் கழகத்துக்கு எழுந்தருளிய நிலைவுக் காட்சி [illegible]

குன்றக்குடி அடிகளார் கழக விற்பனை நிலையத்திற்கு எழுந்தருளல் [illegible]

சர். சி. பி. இராமசாமி ஐயரவர்கள் [illegible]

செட்டிநாட்டரசர் உயர்திரு. மு. அண்ணாமலைச் செட்டியாரவர்கள் [illegible]

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்க்கு திரு. ரா. பி. சேதுப் பிள்ளை பரிசு வழங்குதல் [illegible]

திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கட்கு நிகழ்ந்த பாராட்டுக் காட்சி [illegible]

துடிசைகிழார் அ. சிதம்பரனார் [illegible]

பரிபாடல் மாநாடு [illegible]

பன்மொழிப் புலவர், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் [illegible]

பேராசிரியர், லெ. ப. கரு இராமநாதன் செட்டியார் வரவேற்புரை வழங்குதல் [illegible]



சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, ஆவணி	பரல்
௨௯	செப்டம்பர், 1954	௧

நம் செல்வியின் புதிய ஆண்டு

அருட்கு இருப்பிடனான எல்லாம்வல்ல சிவபெருமான் திருவருளால் நம் செல்விக்கு இருபத்தொன்பதாம் ஆண்டு துவங்குகின்றது.

கடந்த இருபத்தெட்டாண்டுக் காலங்களில், நம் செல்வி, நாட்டிற்கும் மொழிக்குஞ் செய்துபோந்த தொண்டுகள் பலப்பல.

நாவீறுபெற்ற புலவர் பெருமக்களால் நம் செல்வி, அறிவு சுவைநலம் கனிந்த கட்டுரை அணிகள் பல பூண்டு, தமிழகம் முழுவதும்—கடல்கடந்த தமிழர் வாழுமிடமெங்கும்—சென்று சென்று, தன் செய்தியைச் செவ்வி பரப்பிப் போதருவாளாயினள்.

நம் செல்வியைப் போற்றி வளர்த்து—வளர்க்கின்ற—வளர்க்கும் பெருமை அருட்செல்வர்க்கும், பொருட் செல்வர்க்கும் ஏற்ற பெரும்பணியாகும். கடந்த இருபத்தெட்டாண்டுக் காலங்களிலும் இவர்கள் தந்த அன்புள் ஆதரவும் மிகப்பெரிதாகும். இவர்களின் பேராதரவுப் பெருக்கால் நம் செல்வி, நாளொரு வண்ணமும் வனப்பும் பெற்றுப் புத்தாடையோடு புதுவணியுங்கொண்டு போதருவாளாயினள். இத்தகைய அரும் பெறல் எம் தமிழக நல்லோர்க்கு எம் உளங்கனிந்த அன்பு கலந்த நன்றியுடன் மகிழ்வுரையையும் கூறி வாழ்த்துகின்றோம்.

கடந்த ஆண்டில் எம் செல்வி, அரிய சிறந்த சீரிய கூரிய தீஞ்சொல் வளனுடைய கட்டுரைகளைத் தாங்கி அன்பர்களின் நாவகத்தும் நெஞ்சகத்தும் உலவி நலம்பல புரிந்தாள்.

நம் செந்தமிழ்மொழி, பண்டைக்காலத்தில் மணிமுடிசூடி ஆட்சிபுரிந்த அரிய மொழி. அஃது, இக்காலைத் தனக்கென ஓர் ஆட்சியின்றி, ஊர்ப்பிடாரி ஒண்டவந்த பிடாரிக்கு இடங் கொடுத்ததுபோல, வேற்று மொழிகள் வந்துவந்து ஆளும் மொழியாக அமைய, இது நாட்டில் நடமாடாது, பாட்டிலும் ஏட்டளவிலுமே நிற்கின்றது. இவ்விழுக்கு நம் மக்களின் விழிப்பற்ற நிலையேயென்பதை உணர்ந்து, வேற்று மொழிகளினால் நம் செந்தமிழ்ச் சொற்கள், வழக்காறற்றனவாக ஒதுக்கப் பெற்றனவென அவர்க்குத் தெருட்டி அவைகளையெல்லாம், மீண்டும் புதுவனவாகப் புதுக்கி எம் செல்வி ஆட்சிக்குக்

தன்னுரிமையாக விளங்கும் நாட்டில், வேற்றுமொழி, இக்காலை ஆட்சிமொழியாக வந்துளது. அது, தன்னுரிமை பெற்ற நாட்டுக்கு ஒவ்வாதது; எனவே, நம் செல்வி, கடந்த ௨-ஆம் சிலம்பு ௫-ஆவது இதழில் 'தமிழ் ஆட்சிமொழி ஆகவேண்டும்' என்ற தலைப்பிட்டுக் கட்டுரை வரைந்து, நாட்டு மக்களுக்கு விழிப்பூட்டியது. அதன் பயனாகவே 20-12-1953-இல் சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில், சென்னை அண்ணாமலை மன்றத்தில் தமிழ் ஆட்சிமொழி மாநாடு நடைபெற்றது. அதற்கு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. ஆ. கசபதி நாயகரவர்கள் பி. ஏ., பி. எல்., எம். எல். சி. தலைமை தாங்கினர்கள். பல கட்சித் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து ஒருமுகமாகத் தமிழ் மொழி ஆட்சிமொழியாக வேண்டுமென்ற அரிய கருத்தைச் சொற்பொழிவு வாயிலாக விளக்கிப் பேசினர்கள். பல்லாயிரக் கணக்கான தமிழ்ப் பெருமக்கள் மாநாட்டிற் கலந்துகொண்டு தம் மகிழ்ச்சியையும் தமிழே ஆட்சிமொழி ஆகவேண்டுமென்ற கருத்தையும் தெரிவித்தனர்.

இம் மாநாட்டில் தமிழ் மொழிக்கும், தமிழ்நாட்டுக்கும் இன்றியமையாத சிறந்த முடிபுகள் முடிபாக்கப்பெற்றன.

பின்னர்த் தமிழே ஆட்சிமொழியாக வேண்டுமென்பதை வற்புறுத்தி 11-4-54-இல் பெண்ணாடத்திலும், 30-5-54-இல் தூத்துக்குடியிலும், 31-5-54-இல் நெல்லையிலும் திரு. ஆ. கசபதி நாயகரவர்கள் தலைமையின் கீழ் மாநாடுகள் நடந்து பல அரிய பெரிய முடிபுகளை நிறைவேற்றின.

இவ்வாறு கிளர்ச்சி உண்டாதற்கும், அதனால் மக்களின் மன எழுச்சிக்கும் தூண்டுதலாக நின்றது, எம் செல்வியே யெனின் மிகையாகாது.

கடந்த ஆண்டில் எம் செல்விக்குப் பேரதிர்ச்சியை உண்டாக்கும் பல வருத்தச் செய்திகள் நிகழ்வுற்றன. தமிழ்த் தென்றல்—தமிழ்மொழியின் உயிர்நாடியாக இலங்கிய பெரியார் திரு. வி. க. அவர்கள் பெரும்பிரிவும், அதனையடுத்து அருங்கலைச் செல்வர், மகாமகோபாத்தியாய பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்களின் இப்மெனும் பிரிவும், பின்னர்ச் சைவ சித்தாந்தப் பேராசிரியர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களின் பெருஞ்செலவும், நாக்கைக் கவியரசு திரு. ஆர். வெங்கடாசலம் பிள்ளையவர்களின் மறைவும், இராசிகமணி திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்களின் பிரிவும், எம் கழக நிறைவேற்றுக் கழக உறுப்பினராகிய திரு. உடையப்பா அவர்களின் பிரிவும், எம் செல்வியின் இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினரும், பேரறிஞருமான திரு. அ. க. சுந்தரமூர்த்தி முதலியாரவர்களின் மறைவும் எம் செல்வியை கலக்குறச்செய்தன. அவையனைத்தெல்லாம் தலைப்பிலும் உள்ளிதழ்களிலும் தன் ஆரா அயராத் துயரினைக் கூறி எம் செல்வி வெளிப்போந்தாள்.

நம் செல்வியானவள், தமிழ் மொழிக்கோ, தமிழ் மக்களின் பண்பாட்டுக்கோ, நாட்டின் வரலாற்றுக்கோ பிறரால் ஊறு செய்யும், திரித்துக்கூறும் நிலை ஏற்பட்டால், உடனே அவை யிற்றைக் கடிந்து உண்மையை நிலைநிறுத்துவள்.

கடந்த ஆண்டில், 'ஔவையார் திரைப்படம்' ஜெமினி திரைப்பட நிலையத்தாரால் எடுக்கப்பெற்றுத் திரையரங்குகளில் உலாவியது மக்கள் யாவரும் அறிந்ததே. அதுகாலை நம் செல்வி தலைப்பில், ஔவையார் திரைப்படத்தில் ஔவையார் வரலாற்றிற்கேற்ற செய்திகளை மறைத்தும் திரித்தும் கடுவிக்க

தெடுத்த வரலாற்றைக் கண்டித்து 'ஔவையார் நிரைப்படம்' என்ற தலைப்பில் எழுதித் தமிழகம் உண்மையுணர வழி கோலியது.

'தமிழர் பேரவை' யெனப் பெயரிய ஓர் அவை தோன்றுதற்கு எம் செல்வியே காரணமாகும். அது தோன்றி நம் தமிழகம் தன்னுரிமை பெற்றுத் தனித்தமிழ் மாநிலமாக நாடு பிரிந்து மொழி, கலை, பண்பு, அறம், மறம், மானம் முதலிய சிறந்த தமிழர் பேறங்கள் தழைப்ப உழைக்கும் பேரவையாக அமைந்து தொண்டாற்றி வருகின்றது.

இப் புத்தாண்டில் எம் செல்வி, அரிய கருத்து நயமிக்க கட்டுரையணிகள் தாங்கி, ஐந்திணை நெறியளாவி உலாவருவள். அவட்கு அறிஞர்களும், செல்வர்களும் ஆதரவுதந் துதவி அருளுமாறு வேண்டுகின்றோம்.

உலகில் எதற்கும் செல்வப்பொருள் இன்றியமையாதது; இதனானே, 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்' என்றருளினர் மணிமொழிப் பெருமகனார்

எனவே, நம் செல்வியின் ஒவ்வொரு கையொப்பக் காரரும், குறைந்தது நாம் ஒரு கையொப்பக் காரரையாவது சேர்த்துதவினால் எம் செல்வி, செல்வச் செழிப்பால் ஆக்கமும் ஊக்கமும் நிறைந்து வெளிவந்து தொண்டுகள் பல ஆற்றுவாள். அவ்வாறே அறிஞர்கள் கட்டுரை வழங்கி எம் செல்வியைப் புரந் தருளுமாறு பெரிதும் வேண்டுகின்றோம்.

வாழ்க வையகம்! வளர்க தமிழ்மொழி!

பொய்யில் மெய்யுரை

[சித்தாந்த பண்டிதர், கரந்தைப் புலவர், திரு. ப. இராமநாதபிள்ளை]

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்."
—திருக்குறள், ௬௪.

இதன் கருத்து, தேவர்கள் உணவாகிய அமிழ்தினும் சுவை மிகுந்து பெற்றெடுத்த காத்துக் குழவியாம் மக்களின் சிறு கைகளான் அளாவப்பட்ட கூழ், மிகவும் இனிமை உடையது என்பதாம்.

அமிழ்து மருந்தெனவும், சாவா மருந்தெனவும் கூறப்படும். சாவா மருந்து - சாவாமைக்கு ஏதுவாகிய மருந்து.

கூழ் - எளிய உணவு. மக்கள் சிறுகை அளாவியகூழ் சிறந்ததென்பதும், அதனின் மேலும் பேறு என்பதும் வரும் புறநானூற்றுப் பாட்டான் உணரலாம்:

"படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
௫. நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே."
—புறநானூறு, ௧௮௮.

பயக்குறை - நிறைபடுவதற்கு வேண்டிய இன்றியமையாப் பொருள். பிள்ளைகள் கைபட்ட எளிய உணவும் மிக்க இன்பம் தரும். அவ்வின்பம் பெற்றோர்களைக் களிமகிழ்ச் செய்யும் சிறப்பால் மயக்கஞ் செய்யும் மாண்புடையதாகும். அதனால் ஆசிரியர் 'மயக்குறு மக்கள்' என்றனர்.

மக்கள், தம்மை ஈன்றோர்க்கு இம்மைப் புகழும் அம்மை அழியா இன்பும் அளிப்பவர் ஆவர். அவ்வுண்மை வரும் அகப்பாட்டான் உணரலாம்:

"இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப

‘இப்பூமி சிவன் உய்யக்கொள்கின்ற’ சிறப்பு வாய்ந்தது என்பது மேலைப் பெருமறை. இப்பூமி என்பது நால்வர் பெருமக்கள் தோன்றிய செந்தமிழ் நாடேயாகும். இந்நாட்டகத்துத் தான் திருக்குறள், திருமுறை, சித்தாந்தத் தொன்மறைகள் உலகப் பொதுஉண்மை நூல்களாக இன்றும் நின்று நிலவுகின்றன. ‘சிவன்’ என்னும் திருப்பெயரான் முழுமுதற் கடவுளைச் சிறந்து எடுத்து வழுத்தும் செந்நெறிச் சீர்மையும் இந்நாட்டகத்தேதான் உள்ளது. சிவன் என்னும் திருப்பெயர் எல்லா நன்மையும், எல்லா இன்பமும் ஒருங்கு வாய்ந்தவன் என்பதாகும். அத்தகைய வாய்ப்பு வேறு எந்நாட்டிற்கும் அமையப் பெற்றிலது.

இதுகாறுங் கூறியவாற்றால் மக்கட்பேறற்ற வானவர்கள் வருந்தியுண்ட வறிதாய அமிழ்தம் உண்டகாலத்து அவ்வவர்க்குப் பொய்யாகத் தோன்றிய சிற்றின்பமேயாம். அது,

> ‘விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும்
> உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்.’

என்னும் இளங்கோ அடிகளின் இன்மொழியால் உணரலாம். இதன் கருத்து விண்ணோர் அமுதுண்டும் மாண்டனர் என்பதேயாம். மாண்டபின் ஈடேற்றத்திற்குத் துணை செய்யும் மக்கட்பேறோ இல்லாதவர். அதனாலும் ஈடேற்றம் எய்தாதவராவர். மேலும் நீண்டநாள் தேவ உடற் சிறையிலுற்ற துன்பமேயல்லால் அவ்வமிழ்தாற் பெற்ற பயனென்?

மக்களைப் பெற்றவர்களாகிய மானிடர் அவர்தம் ‘சிறுகை யளாவிய கூழால்’ இவ்வுலக வாழ்க்கையின்பமும், அவர்தம் திருவருள் வேண்டுகோளால் சிவனடியின்பமும் இடையின்றிப் பெறுகின்றனர். அதனால், ‘அமிழ்தினும் ஆற்ற இனிதே’ என்பது ஒரு சிறிதும் ஐயமில் மெய்யுரையேயாம்.

தேவாரத் தெள்ளமிழ்து

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

அமிழ்து என்பது அவிழ் என்னும் சொல்லடியாகப் பிறந்த பெயர். இது அமுது அமிர்து அமிர்தம் அமுர்தம் எனப் பலவாறு திரிபுபட்டு வழங்கும். இதன் பொருள், சாவா மருந்தென்பது. இவ்வமிழ்தைத் திருப்பாற்கடலைக் கடைந்து எடுத்ததென்றும், இது, தேவர்கட்குச் சிறந்த உணவென்றும், இதை உண்பார்க்கு நரை திரை மூப்பு பிணி சாவு அணுகாவென்றும் புராணிகரும் புராணங்களும் கூறுப. இதன் திரண்ட பொருள், உடலை நெடு நாள் உலகில் நிலைத்திருக்கச் செய்யும் அரிய மருந்தென்பது மட்டும் தெளிவு.

ஆனால், நம் வள்ளுவப் பெருந்தகை, நீரையே அமிழ்தம் என்று குறிக்கின்றார். அவர் தாம் அருளிய குறள் நூலில், இரண்டாவததிகாரமாகக் காட்டியருளியது, 'வான்சிறப்'பெனப் பெயரிய அதிகாரமாகும். இதனைத் தோற்றுவாய் செய்யும் போதே,

> [2]"வானின்று உலகம் வழங்கி வருதலால்
> தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று"

'மேகத்தின்கண்ணிருந்து மழை பொழிந்து நீரைத்தந்து, அக் கொடையால் உலக உயிர்கள் நிலைபெற்று வருதலினால், அதனை அமிழ்தமென்று அறிக' என்பது, இதன் திரண்ட பொருள்.

எனவே, உலகம் நீரின்றி அமையாது: வாழுதல் ஒன்றாது; நாம் கண்கண்ட பேரமிழ்தாக வகுத்து வைத்திருப்பது நீரேயாகும். நீரின்றேல் எந்த உயிரும் வாழுதல் கூடுமோ? உண்டற்கு உணவும், ஏனையவற்றை ஆக்குதற்கும் நீரே நமக்கு வேண்டப்படுமென்றோ? இதனாலே, பிறிதோரிடத்து வள்ளுவப் பெருமானார் 'நீரின் றமையாது உலகு' எனவும் அருளுவாராயினர். நமக்கு உயிரையும் உடலையும் வளர்ப்பது, இவ்வமிழ்தொன்றே. கம்பநாடரும், கமலக்கண்ணனான இராமனைக் குடிமக்கள் கொண்டாடிய - அன்பு கொண்ட - நிலைக்கு 'உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பார்' என அரிய பெரிய கூரிய நேரிய ஏரிய கருத்தை அமைத்துணர்த்துவாராயினர். இதில் முதற்கண்

2. திருக்குறள்: கக.

‘உண்ணுநீர்’ என்று குறித்துப் பின்னர், ‘உயிரினும்’ எனக் குறித்தது, உயிரினும் உண்ணும் நீர் உயர்ந்தது ; சிறந்தது என்னும் கருத்தைக் கொண்டன்றோ? என்று உணர்மின்.

இவ்வமிழ்தாகிய நீர், உடலைமட்டும் ஓம்புவது ; ஆனால் உடலையும் உயிரையும் உணர்வையும் ஒருங்கே காக்கும், உயர்த்தும் ஓரமிழ்தம் உளது. அஃதே தேவாரமெனப் பெயரிய வான் அமிழ்து. அதனை ஈண்டுத் ‘தேவாரத் தெள்ளமிழ்து’ என்று தலைப்பிட்டுக் குறித்தாம். அஃதோடு இதற்குத் ‘தெள்’ என்னும் அடை கொடுத்தது, அதன் சிறப்பு நோக்கி. சிறப்பு என்னை என வினவின்,

உலகில் உயிர்கள் தோன்றுகின்றன ; வளர்கின்றன ; சில செயல்களை ஆற்றுகின்றன ; இறுதியில் மறைகின்றன ; இவைகளை எண்ணின்-கூர்ந்து நோக்கின்-ஆராயின் அஃதோர் காணத்தகு காட்சியாகவே தோன்றும். இவ்வுயிர்களுள் அறிவு திருந்தியனவும், திருந்தாதனவும் எனப்பட்டு விளங்குதலை நாம் காண்டுமன்றோ?

இவ்வறிவு உலகில் உண்டல் உறங்கல் புணர்தல்களோடு எல்லா உயிர்களிடத்தும் நிகழ்தலை நாடோறும் காண்கின்றோமன்றோ? இவ்வினைமைகளினின்றும் மக்களுக்கும் ஓர் அரிய அறிவு உளது. இதனைப் பெரியோர் ‘மனவுணர்’வென்பர். மனவுணர்வு இல்லாத உயிர்களே இல்லையே எனக் கேட்பின், அஃது விரிவுபடவில்லை. பறவைகளை விலங்குகளை ஊர்வனவற்றைக் காணின், மேற்கூறிய உண்டல் முதலியவற்றிலேயே உழல்கின்றமையையே அறிகின்றோம். நல்லன தீயனவற்றை, அவை பகுத்தறியா. அவைகளைப் பகுத்தறியும் போதமே மனவுணர்வென உயர்த்துக் கூறப்பெறும். இஃதே அன்பினின்றும் தோன்றி மலர்ந்து கனிவது; இவ்வன்பே இறை திருவருளைக் கூட்டுவது; இவ்வுலகைக் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் ஒருவன் உளன் என உணரும் ஒட்பமுடையது ; இவ் இறையுண்மையை, அவன் றன் பொருட் பண்பினை உணர்த்தி, நம்மை உய்விப்பன மூவர் முதலிகள் அருளிய தேவாரத் திருமறைப்பாடல்கள். அதனானே ‘தெள்ளமிழ்து’ எனக் குறித்தாம். தெள்ளமிழ்து, தெளிந்த அமிழ்து; மாசுமறுவற்ற தன்மையுடையது என்பது அதன் இரண்டு பொருளும்.

திருஞானசம்பந்தப் பெருமான் இறைவனை,

[1]"நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானை

1. திருஞானசம்பந்தர் தேவாரம், பதிகம்: கஅ : க.

> சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
> குன்றுடையானைக் கூறஎன் உள்ளம் குளிரும்மே'

என்றருளுவதில் எல்லாம் வல்ல ஆண்டவனை நன்மையுடையான்; தீமையில்லான்; வெண்ணிற எருதையுடையான் என, அவன்றன் முழுமுதல் தன்மையை அளப்பரிய ஆற்றலைக் காண்டற் கரிய அவன் பெருமையைக் கண்கூடாகக் காண, மனவுணர்வாற் கண்டு மகிழக் கூறி, அவனை வாழ்த்த என் உள்ளம் குளிருமென்று அருளி நம்மை இறையருளில் வழிப்படுத்துகின்றார்.

திருநாவுக்கரசு அடிகளாரும் இறைவனை,

> "பாரவன்காண் பாரதனிற் பயிரா னான்காண்
> பயிர்வளர்க்குந் துளியவன்காண் துளியில் நின்ற
> நீரவன்காண் நீர்சடைமேல் நிகழ்வித் தான்காண்
> நிலவேந்தர் பரிசாக நினைவுற் றோங்கும்
> பேரவன்காண் பிறையெயிற்று வெள்ளைப் பன்றி
> பிரியாது பலநாளும் வழிபட் டேத்தும்
> சீரவன்காண் சீருடைய தேவர்க் கெல்லாம்
> சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன் தானே"[1]

என, உலகமும் உலகைக் காக்கும் உணவும், அவ்வுணவை ஆக்கும் நீரும் இறைவனே எனக் குறித்து, ஆண்டவன்பால் மாறா இன்பத்தில் திளைக்க வைப்பதறிக.

நம்பியாரூரரும் இறைவனை,

> "பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
> போகமுந் திருவும் புணர்ப்பானைப்
> பின்னை என்பிழையைப் பொறுப்பானைப்
> பிழையெலாந் தவிரப் பணிப்பானை
> இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
> எம்மானை எளிவந்த பிரானை
> அன்னம் வைகும் வயற்பழனத் தணி
> ஆரூரானை மறக்கலும் ஆமே."[2]

என, இறைவனை உலக வாழ்வுக்குப் பொன் முதலிய பொருள் களைத் தந்து பாதுகாக்கும் பேரருள் திறத்தையும், அறியாமை இருள்மலம் அறுத்துத் தம் திருவடிக்கண் பேரின்புடைமையாக் கும் திறத்தையும் தருபவனாகக் குறித்து, நம்மை இறையருள் இன்பத் தொண்டராக்கும் அருள், வியந்து போற்றற்குரியதாம்.

1. திருநாவுக்கரசர், தேவாரம், பதிகம், [illegible] : ௧.
2. சுந்தரர் தேவாரம், பதிகம், ௫௯ : ௧.

இன்னும் இவைபோன்ற அரிய பெரிய இறைவன்றன் ஆற்றலும் அருளும் காட்டி நாம் உய்யும் வண்ணம் மூவர்களும் அன்பையும் அருளையும் குழைத்துக் குழைத்துத் தாம் அருளிய தேவாரப் பாக்களில் பொதிந்து வைப்பாராயினர். இத் தெள்ளமிழ்தத்தை ஆர அயரப் பருகுபவர்க்குப் பிறவேறு பொருள்களும் வேண்டுங்கொல்? இவைகளை நாம் உளங் கரைந்து ஓதுவோமானால் கருங்கல் மனமும் கரைந்துகக், கண்கள் தொடு மணற் கேணியிற் சுரந்து நீர்பாய, அன்பாரவொருதலை. அவ்வின்பத்தெள்ளமுதை உண்டு தேக்கி உளமகிழ்வீராமின் உலகீரே! இஃதொன்றே பிறவிப் பெரும்பயன்.

[1]"வழங்குகின் றாய்க்குன் அருளார் அமிழ்தத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை யேனென் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக் கொள்ளாய்"

என, இறைவனை வேண்டுவோம், வம்மின்.

இத்தகைய தேவார அமிழ்து நமக்கிருக்கையில், இவைகளை ஓதி உளங்கரைந்து இறைவன்பால் உள்ளன்பு கொள்ளாது, நாம் வாளா காலங்கழித்து, 'கலகல கூடும் அவை'யுடைய அறிவுசாலா நூல்களைப் படித்து வெற்றாரவாரஞ் செய்வதாற் பயனென்னை? பயன் தருவது, உயிருக்கும் உணர்வுக்கும் இத் தேவாரத் தெள்ளமிழ்தன்றோ? இவைகளை முற்றுங் கற்றுப் பொருள் தெளிந்து இன்ப அன்பைப் பெறுவது நங் கடமையே.

தேவாரத்தைப் பண்ணொடு பயின்றோதுவார்க்கு மனத்தின் தூய்மையும் வாய்மை நெறியும் வந்தெய்தும்; அதனால் அவர் இடையறா இன்பில் திளைத்தல் ஒருதலை; கற்றதற்கும் கற்பதற்கும் பயன் இதுவேயாம். இஃதன்றி ஏனைய இன்பங்கள், நிலைபேறுடையன அல்ல. நிலைத்து நிற்பது, இறைவன் புகழ்சேர் பொருள் ஒன்றே;

[2]"காலமுண் டாகவே காதல்செய் துய்ம்மின்"

என்பது பேரறிஞர் திருமொழி.

1, 2. திருவாசகம், அடைக்கல : ௧௦. திருப்பாண்டி : ௧.

இரகுவீரரும் தமிழும்

[திரு. சாமி]

மலையைக்கல்லி எடுத்த எலி

மலையைக்கல்லி எடுத்த எலியைக் கண்டால் யாவரும் நகைப்பர். அதுபோல டாக்டர் ரகுவீரர் என்பார் அண்மையில் சென்னையில் நடந்துகொண்டார். ஆங்கிலத்திந்திய அகராதியை வெளியிடும் ஆற்றலும் அறிவும் துணிவும் உள்ள பேரறிஞர் இரகுவீரர், தமிழெனும் அளப்பருஞ் சலதியைக் கரைகண்டவர்போல் தமிழின் சொல்லாற்றலைப்பற்றி ஒரு மாபெரும் உண்மையை வெளியிட்டிருக்கிறார். இந்தி மொழிக்குள்ள சொல்லாற்றல் தமிழுக்கில்லையாம். தமிழ்நாட்டில் தமிழைப் பற்றித் தப்பாகச் சொன்னதைத் தந்தப்பேச மார்தட்டிவந்த ஒரே ஒருவர், 'மார்' என்ற வெளிநாட்டறிஞர்தான். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இலக்கிய இலக்கணங்களோடு வளர்ந்த தமிழின் சொல்லாற்றல் இந்தியைவிடக் குறைவாம். ஆங்கில இந்திய மொழிகளின் அகராதி வெளியிட்டவருக்குத் திராவிட மொழிகளில் முதல் மொழியான தமிழைப்பற்றித் தெரிந்த அளவைப் பாருங்கள்!

எங்கள் குடும்பம் பெரிசு

மார்ஷலை அறிந்த அளவு இரகுவீரர் அறியாதிருப்பது வியப்பைத் தருகிறது. 'இந்து'வில் மார்ஷலை எழுதியதற்கு மறுப்புக் கூறியபோது மற்றொரு மாபெரும் உண்மையை இரகுவீரர் திருவாய்மலர்ந்தருளினார். இந்தியில் தமிழில் இருப்பதைவிட சொற்கள் கூடுதலாம். அது எப்படி என்றால் இந்திச் சொற்களையும் அதன் தாய்மொழியான வடமொழிச் சொற்களையும் சேர்த்துக்கூட்டிப் பாருங்கள் என்கிறார். என்ன கணக்கு! எங்கள் குடும்பம் பெரிசு என்பதற்கு இறந்துபோன பாட்டன் பூட்டன்களையும் கணக்கிலெடுப்பது போலல்லவா இருக்கிறது! இவருடைய கணக்குப்படி ஆங்கிலம், லத்தீன், கிரேக்க மொழிகளிலுள்ள சொற்களையெல்லாம் கூட்டி 'எங்கள் குடும்பம் பெரிசு பெரிசு' என்று பாடலாம். தமிழ்கூடத் திராவிட மொழிகளின் சொற்கூட்டத்தையெல்லாம் சேர்த்துக் கணக்குக் காட்டலாம். ஆனால், இம்முறையில் உயிரில்லாத சொற்களை உயிருள்ள மொழியின் சொற்களாகக் கூறுவது அறிஞர்களின் கருத்தன்று.

செல்லாத காசு

காசுகளை இயந்திரத்தில் அடித்து அனுப்பும்போது செல்லாத காசுகளும் வெளிவருமாம். டாக்டர் இரகுவீரருக்கு இந்தச் செல்லாத காசுகளே செல்லுபடியாகத் தெரிகிறது. இரகுவீரர் ஒரு அனைத்திந்திய கலைச்சொல் தொழிற்சாலையை நாகபுரியில் வைத்திருக்கின்றார். அத்தொழிற்சாலையில் ஆயிரக்கணக்கான கரடுமுரடான, வாயில் வராத, காதில் கடைபடாத, பல்லை உடைக்கும் வடமொழிச் சொற்களை இந்திக் கலைச்சொற்கள் என்ற பெயர்கொடுத்துத் தள்ளியிருக்கின்றார். அவைகளைப் படித்த அறிஞர்கள், அரசியல் தலைவர்கள் பொருள்புரியாது திகைக்கின்றனர். பழக்கமில்லா, வாய்க்கு வராத சொற்கள் செலாவணியாகாத காசுகள் போன்றன. இந்தச் செல்லாக் காசுச் சொற்களையும், வழங்காத வடமொழிச் சொற்களையும் சேர்த்துத்தான் இரகுவீரர் 'எங்கள் குடும்பம் பெரிசு' என்று பாடுகின்றார்.

குலியாலும் அலியாலும்

இந்த வடமொழிச் சொற்குவியலைத் தமிழ்க் கலைச்சொல்லாக ஏற்றுக்கொள்ளலாம் என்று வேறே எழுதியிருக்கின்றார். இதைச் சொல்ல இரகுவீரர் வேண்டுமோ? தமிழ்நாட்டிலே இல்லையா, இதே கருத்துடன் வேலைசெய்யும் அறிஞர்கள்? அந்த அறிஞர்கள் 'ஜலபாதை' 'மத்ஸ்ய கேந்திரம்' போன்ற அருமையான சொற்களைத் தமிழ்த்தாய்க்கு 'அர்ப்பணிக்கவில்லையா?' அண்மையில் தினமணி ஞாயிறுமலரில் எழுதிய எழுத்தாளர் சங்கத் தலைவர் 'இந்தியக்கலை' என்ற மதிப்புரையில் 'ஆந்தராபாஷா,' 'மனித சரீர உறுப்புகளின் ஸௌஷ்டவம்,' 'ஸ்ரீமிதமான' என்ற மணியான அருமையான சொற்களைத் தமிழுலகிற்குக் 'கடாக்ஷித்திருந்தார்.' இந்த முறையான 'கிருபாகடாட்சத்திற்கு' இரகுவீரர் தேவையில்லை. எத்தனையோ இரகுவீரர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். மேலே காட்டிய சொற்களை எத்தனை படித்த அறிஞர்கள் புரிந்துகொள்வர்! ஆயினும் அவை எழுதியவர் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர், பேசுவதுபோல் எழுதுபவர்!

அடுத்து இரகுவீரர் மற்றொரு அருமையான கருத்தை வெளியிட்டுள்ளார். குலியை ஏற்றுக்கொள்ளாவிடில் அலியையாவது ஏற்றுக்கொள்ளுங்கள் என்கிறார். வடசொற்களையும் தமிழ்ச்சொற்களையும் சேர்த்துக் கலைச்சொல்லாக்கம் செய்துகொள்ளுங்கள் என்கிறார். இம்முறையான மணிப்பிரவாளத்தின் கதி என்னவாயிற்று என்று தெரிந்திருந்தால், இந்த அலி

யல் கருத்தை வெளியிட்டிருக்கமாட்டார். இந்த அவியற் சொற்களைப் படைத்துக் குவிக்க எத்தனையோ எழுத்தாளர்கள் தமிழ்நாட்டில் உளர். ஆதலின் அதுவும் புதிதல்ல. இறுதியில் அவரே வழிக்கு வருகிறார். இந்த இரண்டு முறையும் பிடிக்கா விட்டால் தனித்தமிழ்ச் சொற்களையே வைத்துக் கொள்ளுங்கள் என்கிறார். ஆனால் இதுவும் புதிதல்ல. இவர் சொல்வதற்கு முன்னரே பலர் இங்குச் செய்து வருகிறார்கள். இந்த அடிப்பட்ட கருத்துகளை இராகுவீரர் சொல்லித்தான் தமிழர் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

இந்தி வெறி

வடமொழியை அடிப்படையாகக் கொண்ட இந்தியக்கலைச் சொற்களை உண்டுபண்ணி அதை இந்தியாவிலுள்ள எல்லா மொழியினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சில அறிஞர் கள் சொல்லிவருகின்றனர். இந்தக் கலைச்சொற்கள் தமிழைப் பொறுத்தவரை கொலைச் சொற்களாகவே இருக்கும். தெலுங்கு, மலையாளம் பேசுவோர் ஏற்றாலும் தமிழர் இதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆனால் தனித்தமிழ்ச் சொற்களை வேண்டாம் என்றும் புரியாதன என்றும் புறத்தொதுக்கிய எழுத்தாளர்கள் இக்கலைச்சொற்களை எதிர்த்துப் பேசாதது ஏன்? புரியாத ஒரே காரணத்தால் தனித்தமிழை எதிர்த்த இந்தப்பிரகிருதிகள், புரியாத வடமொழிக்கொலைச் சொற்களை' மட்டும் எதிர்க்காதது ஏன்? அஞ்சல், புகை வண்டி நிலையங்களில் பயன்படும் பொருள் களில் இந்தியில் எழுதப்படுவதை எதிர்க்காதது ஏன்? புரிவதற் குத்தான் சொற்கள் என்று சொல்லுவோர், புரியாத இந்திச் சொற்கள் அஞ்சல் நிலையத்தில் வாங்கும் பொருள்களிலெல்லாம் இருப்பதை எதிர்க்காதது ஏன்? புரியாத தனித்தமிழை எதிர்த் தார்கள், ஆனால் புரியாத வடமொழி, இந்திச் சொற்களை எதிர்க் கவில்லை. காரணம் இவர்கள் உள்ளூற என்றுமே வடமொழி யை உயர்வாகவும் தமிழை அதனினும் தாழ்வாகவும் கருதி வந் ததுதான்.

அளகேசனார் 'அளந்து' விளந்தது

அரசியலில் ஈடுபட்டோர் மொழித்துறையில் புகும்போது என்னமோ வாய்க்கு வந்ததெல்லாம் பேசுகின்றனர். தமிழில் 'ழகரம்' வேண்டியதில்லை. ணகர னகர வேற்றுமையை எடுத்து விடலாம். ளகர, லகர வேற்றுமையையும் ஒழித்துவிடலாம். ஏன் தமிழை ரோமன் எழுத்திலேயே எழுதலாம்; இப்படியெல் லாம் அளகேசனார் தில்லியில் பேசியுள்ளார். சிறப்பு 'ழகரம்' தமிழுக்குரியதல்லவாம், அதைத் தமிழரே ஒழுங்காக ஒலிப்ப

தில்லையாம். அதுவே 'ழகரம்' தமிழுக்குப் புறம்பானது என்பதைக் காட்டுகிறது என்கிறார். ழகரத்தை எடுத்துவிட்டு அல்லது லகர ளகர னகர ணகர வேற்றுமையை அகற்றிவிட்டு எந்த இலக்கியத்தை அளகேசனார் படிக்க முடியும்? இவ்வெழுத்துக்களையுடைய அடிப்படையான சொற்கள் தமிழில் ஆயிரக்கணக்கில் இருக்கும்போது அவ்வெழுத்துக்களை எப்படி மாற்றிப் படிக்கமுடியும். இலக்கிய வளமில்லா மொழிகளில் இந்த மாற்றங்கள் பயன் தரலாம். ஆனால் இலக்கிய வளமுள்ள மொழியில் இந்த மாறுதல் ஒரே குழப்பத்தில் ஆழ்த்திவிடும். ரோமன் எழுத்தில் தமிழை எழுதுவதில் ஒரு பயனும் இல்லை. இம்முறை எழுத்தே இல்லாத மொழிகளுக்குப் பொருந்தும். ஆனால் பண்பட்ட, இலக்கிய இலக்கணமுடைய மொழிகளுக்குச் சிறிதும் பயன்படாது. இவர்களின் சீர்திருத்தம் மொழியின் அடிப்படையில் கைவைப்பதால் இதனால் யாதொரு பயனும் இல்லை.

இந்தியா என்றுமே ஒரேமொழியுடனே, ஒரே பண்பாட்டுடனே, ஒரே நாகரிகத்துடனே, ஒரே அரசியற்கீழோ இருந்ததில்லை. ஆதலின், இந்திய ஒருமைக்காக ஒரே கலைச்சொல்லாக்கத்தையோ, ஒரே வடமொழிப் பண்பாட்டையோ, நாகரிகத்தையோ, ஒரே நாகரி எழுத்தையோ, ரோமன் எழுத்தையோ ஒரே மொழியையோ புகுத்த முயலும் அரசியலாரும் அறிஞர்களும் மேற்காட்டிய அடிப்படை உண்மையை உணர்வதில்லை. இவர்கள் முயற்சிகள் பிரிவினைக்கங்களை இந்தியாவில் பெருகச் செய்யுமே அன்றி, ஒற்றுமையை உண்டுபண்ணாது. அதனால் டாக்டர் இரகுவீரர் போன்ற அறிஞர்கள் ஒரே கலைச்சொல்லாக்கத்தையோ, ஒரே நாகரி எழுத்தையோ, ஒரே மொழியான இந்தியையோ புகுத்துவதை இனி விரைந்து கைவிடல் வேண்டும்.

> "சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும்
> நல்லிரும் பூந்தாது நாறுதலால்—மல்லிகையின்
> வண்டார் கமழ்தாமம் அன்றே மலையாத
> தண்டாரான் கூடல் தமிழ்.'[1]

1. மதுரைக்காஞ்சி இறுதி வெண்பா.

வரவேற்புரை*

[டாக்டர், திரு. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள்]

தமிழ்ப் பெருமக்களே, தமிழாசிரிய நண்பர்களே, கல்வி அமைச்சர் அவர்களே, தலைமை தாங்க வந்திருக்கும் பேராசிரியர் அவர்களே, உங்கள் அனைவருக்கும் என் அன்பும் வணக்கமும் உரிய ஆகுக. இந்த இரண்டாவது மாநிலத் தமிழ் ஆசிரியர் மாநாட்டுக்கு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்புக் குழுவின் சார்பில் வரவேற்கின்றேன். இம்மாநாடு இம்மாவட்டத்தில் நடத்தப் பெறவேண்டும் என்ற சென்னை மாவட்டத் தமிழாசிரியர் கழக வேண்டுகோளை யொட்டி இங்கு இதனைக் கூட்டியுள்ளோம். இந்த மாநாடு தில்லையின் எல்லையிலே நடைபெறுவது மிகவும் பொருத்தமுடையது ஒன்று. தமிழிலே பெருவிருப்பமுள்ள தில்லைக் கூத்தன் அண்மையில் நடமாடுவது அன்றியும், இங்கே ஒரு கலைக்கோயிலைச் செட்டிநாட்டு அரசர் சர். மு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் எழுப்பி இருக்கின்ற காரணத்தாலும், தமிழுக்குப் பெருமையும் சிறப்பும் அளிக்கின்ற பல்கலைக் கழகமாக இஃது அமைந்திருக்கின்ற காரணத்தாலும், செட்டிநாட்டரசர் சர். முத்தைய செட்டியாரவர்களுடைய பேராதரவினால் தமிழாசிரியர்கள் அனைவரும் ஏனைய ஆசிரியர்களுக்கு ஒப்பாக மதிக்கப்படும் பெருமையுடைய பல்கலைக் கழகமாக இஃது இருக்கின்ற காரணத்தாலும், இவண் இம்மாநாடு கூட்டப்படுவது மிகப் பொருத்தமானதே. தமிழினிடத்தில் மிக்க பற்றும் அன்பும் உடைய கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இம்மாநாட்டினைத் திறக்க இசைந்திருப்பது பொருட்டு அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றேன். அண்மையில், கலைக்களஞ்சிய முதல் சம்புடத்தை வெளியிட்டபொழுது மாண்புறு கல்வி அமைச்சர் ஆற்றிய விரிவுரையில், தமிழ் மொழியிலேயே எல்லாப் பாடங்களையும் யாங்கும் கற்பிக்க வேண்டும் என்று துணிவுடன் கூறினார். பக்கத்தில் இருந்த நேயர்களை நோக்கி, "நீங்கள் தமிழிலே முடியுமா?" என்று கேட்டால், நான் "ஆங்கிலத்திலே முடியுமா? என்று கேட்பேன்" என்று அறைகூவினார். அதிலிருந்து அவருடைய தமிழ்ப் பற்றும் தமிழ் ஆர்வமும் அறியப்படும். அவர்கள் இம்மாநாட்டுத் திறப்பாளராக அமைவது இக்காரணத்தாலும், கல்வி அமைச்சராக இருக்கின்ற காரணத்தாலும் மிகவும் பொருத்தமானதே.

---

*சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் 11-7-51ல் பேசியது.

நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் இந்தப் பல்கலைக் கழகத்திலேயே ஐந்து ஆண்டுகள் தமிழ்ப்புலமைத் தலைமை நடாத்திப் பெருந் தொண்டாற்றித் தமிழ்மொழிக்கென வாழ்ந்து வருபவர். இன்றும், வயது முதிர்ந்த நிலையிலும் தமிழே தம் உயிர்ப் பொருள் என வாழ்ந்து வருகின்ற அவர்கள், அத்தமிழ் மொழிக்காக அருந் தொண்டாற்றி வருவது போற்றத்தக்கது ஒன்றாகும். அவர்கள் இன்று இம்மாநாட்டிற்குத் தலைமை தாங்குவதற்கு இசைந்ததற்காக அவர்களுக்கும் நன்றி சொல்லி அவர்களை வரவேற்கிறேன். அன்றியும், இந்த மாநாட்டிலே பங்கு பெறுவதற்காக எங்கள் அழைப்பிற்கு இணங்கி வந்திருக்கின்ற ஆசிரியர்கள் பலருக்கும் "நுங்கள் வரவு நல்வரவாகுக" என மொழிகின்றேன். எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி இங்குக் கூடியிருக்கின்ற அனைவரையும் வரவேற்கும் பொறுப்பு என்னுடையது ஆகின்றது.

இம்மாநாட்டிலே சிறப்பாகத் தமிழாசிரியர்களுடைய நிலையையும் ஊதியத்தையும் உயர்த்துதற்கு வழி காணவேண்டும் என்பது பல மாவட்டக் கழகங்களின் செயற்குழுக்களுடைய விருப்பம். உயர்தரப் பள்ளிக்கூடங்களிலே பணியாற்றுகின்ற தமிழாசிரியர்கள் ஏனைய ஆசிரியர்களின் நிலை அளவாவது உயர்த்தப்படவேண்டும் என்பது அவர்களுடைய விழைவு. ஏனைய பொருள்களைப் பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள் உதவி ஆசிரியர்களாகவும் தேர்வு மேற்பார்வையாளர்களாகவும் அமைவதைப் போலத் தமிழாசிரியர்களும் அமைய இடம் செய்து தருதல் வேண்டும் என்ற அவர்களுடைய வேண்டுகோள் அரசியல் அதிகாரிகளாலும், பள்ளிக்கூட நிர்வாகிகளாலும் கவனித்துச் செயலாற்றப்படும் தரத்ததாகும். தமிழ்மொழியினைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தங்கள் பொருளிற் திறமை மிக்க சிறந்த தகுதி பெற்றிருக்கிறார்கள். ஆனதினாலே, பயிற்சி பெற்ற வித்துவான்களும் புலவர்களும் பி. ஏ., எம். ஏ. பட்டம் பெற்ற ஆசிரியர்கள் பெறும் ஊதியம் பெறுமாறு செய்ய வேண்டும் என விடுக்கும் இக்கிளர்ச்சியின் எதிர்பார்ப்பது பொருத்தமானதே. அவ்வண்ணமே, அவர்களுடைய நிலையையும் சம்பளத்தையும் உயர்த்துவதற்குக் கேட்டுக் கொண்டு தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இம்மாநாடு தமிழாசிரியர்களுடைய குறைகளைத் தெரிவிப்பதற்கு மாத்திரம் கூட்டப்பெறுவது ஒன்று அன்று. சென்னை மாநிலத்திலேயுள்ள தமிழாசிரியர்கள் பலர் ஒருமுறையேனும் ஒருங்கு கூடி அளவளாவுதற்கும், தமிழைப் பற்றியும் தமிழாசிரியர்களைப்பற்றியும் தங்கள் தங்கள் கருத்துக்களை உரையாடித்

கொள்வதற்கும் இம்மாநாடு பெரிதும் உதவும் என்பது நம்பிக்கை.

தமிழாசிரியர்கள் திருக்குறளை நன்முகக் கற்று ஓதிப் பயிற்றுவித்து வருகிறார்கள். ஆனதால் அவர்கள் கடவுள் நம்பிக்கையும் கடவுட் பற்றும் உடையராக இருப்பர் என்பது சொல்லாமலே விளங்கும். திருவள்ளுவர் கூறிய "கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்ற திருக்குறள் தமிழாசிரியருக்கு என்றும் உவகை அளிக்கும் ஒரு பொன்மொழி என்பதில் ஐயமில்லை. எனவே, கற்றுத் தேர்ந்ததன் நோக்கங்களில் தலையாயதாய இறைவனை நம் அவர்களுடைய உடம்போடும் உயிரோடும் ஒட்டியது ஒன்றாகும். அவ்வாறு இருப்பவும், எங்கேயாவது யாராவது ஒரு தமிழாசிரியர் கடவுள் நம்பிக்கை குறைவாக வுடையவராகவோ, கடவுள் நம்பிக்கை அற்றவராகவோ காணப்பட்டால், அது காரணமாகத் தமிழாசிரியர் அனைவரும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் என்பதுபோல் கருதப்படுகின்ற கருத்து தக்கது அன்றாம். கடவுள் நம்பிக்கை இல்லாமல் வாழ்கின்ற ஆசிரியர்கள் ஏனைய துறைகளிலும்தான் காணப்படுகிறார்கள். ஆனால் பொதுவாக அவர்களைப்பற்றி எவரும் ஒன்றும் சொல்லிவிடாமல், தமிழாசிரியர் என்றவுடனேயே அவர் கடவுள் நம்பிக்கையின்கண்ணே ஐயுறுகிறார்கள். இதற்குச் சிறந்த காரணமாக இருக்கக் கூடியது தமிழாசிரியர்களின் தமிழ்ப்பற்றே ஆகும் போலும்! தமிழாசிரியர்கள் சிலர் தமிழ்மொழியிலேயே தமிழ் மக்களின் வாழ்க்கைச் செயல்முறைகள் அமைய வேண்டும் என விளம்புகிறார்கள்; நடத்தியும் காட்டுகிறார்கள். பிறந்த நாள் தொட்டு நடைபெறுகின்ற சடங்குகளிலும், திருமணங்களிலும் கடவுள் வழிபாட்டிலும், நீத்தார் வழிபாட்டிலும் தமிழ் மொழி இடம்பெற வேண்டும் என்பது பல தமிழாசிரியர்களின் ஒப்ப முடிந்த கருத்து. இக்கருத்து உடையோரைத் தலைமுதலாகச் சில வேளைகளில் சிலர் கடவுட் பற்று உடையவர் அல்லர் எனக் கூறிவிடுகிறார்கள். அது பொருந்தாது. உதாரணமாக, இந்தப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாற்றி வந்த திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்., அவர்கள் தமிழர் தம் செயல்கள் அனைத்தும் தமிழ் மொழியில் இருத்தல் வேண்டும் என விரும்பினவர். அதனால், இல்லை கடவுள் கோவிலுக்கு அவர் சென்றாலும், வடமொழி வாயிலாக அர்ச்சனை செய்து கொள்ள விருப்பம் இல்லாதவராகத்தான் கடைசிவரை வாழ்ந்து காட்டினார்கள். அதற்காக, அவரை நாத்திகர் என்று சொன்ன

வர்கள் கூட உண்டு. இதிலிருந்தே அறியப்படுவ[illegible] தமிழ்ப்பற்று சில வேளைகளில் பிறர் உணராமல் [illegible], அக் காரணமாக எச்சரிக்கையும் பேச்சுரையும் [illegible] இன்றது என்பது.

நம்முடைய சமயத் தலைவர்கள் [illegible] திருப்பது ஒரு கடவுள் வழிபாடும் [illegible]. அதனால் கண்டகண்ட கடவுளரை [illegible] பத்திற்கு ஏற்ப அமைத்துக் கொண்டு, [illegible] எனின், அவரைக் குற்றம் கூற [illegible] கூடாது. உண்மையிலே, புறவேடம் [illegible] செல்லாமலும் உள்ளத்திலேயும் விட்டுவிடாமல் [illegible] பட்டு உய்யக்கூடிய பெருமையுடைய [illegible] ர்கள்.

ஆனால், மாணவர்களுக்குக் கற்பிக்கின்ற [illegible] மாணவர்களுடைய கடவுள் [illegible] மாணவர்களுடைய கடவுள் [illegible] வகையிலேயும் ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும் [illegible] ஒப்புக்கொள்ள வேண்டியதே. [illegible] உருவ வழிபாடு இல்லாமலும் [illegible] கண்டனை பற்றுக் கொள்ளாமல் [illegible] கடவுளைப் பற்றித் திட்டமான [illegible] யாமல் போகும் என்று [illegible] வழிபாட்டின் அவசியத்தையும், [illegible] அவசியத்தையும் ஆசிரியர்கள் சொல்லக் [illegible] என்றால், அதுவும் பொருத்தமானதே. [illegible] கூடங்களில் பாடமாக [illegible] கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் [illegible] கால், ஆராய்ச்சி செய்து இனிய [illegible] களில் தூய [illegible] ஆசிரியர்கள் [illegible] என்று எதிர்பார்ப்பது பொருத்தமானதே. [illegible] ஆசிரி யர்கள் செய்துவிடுதல் [illegible].

தமிழ் ஆசிரியருள் [illegible] நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதம் பற்றி [illegible] சொல்லுதல் [illegible] இதேன். [illegible] கூட்டத்திலேயே [illegible] மாணவர்களுக்கு முன் மாதிரியாக இருத்தல் வேண்டும். சில வேளைகளில் தேசிய கொடியை "துவசம்" பாட வேண்டிய நிகழ்ச்சிகளும் இடங்களும் அமைகின்றன. அந்நேரங்களில்,

இந்தியில் நமக்கு விருப்பம் இருந்தாலும் இல்லாது போனாலும் அது தேசிய கீதம் ஆனதால், அது பாடப்படும்பொழுது நேர் நின்று, மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பது வற்புறுத்தத்தக்கது. அதனைப் பாடும்பொழுது கூட்டங்களில் இருந்து எழுந்து போய்விடுதல் என்பது ஒவ்வாது. இவ்வகையில் நாம் மாணவருக்கு வழிகாட்டியாய் இருத்தல் வேண்டும்.

இக்கோத்தில் நான் இன்னொரு செய்தியையும் குறிப்பிட விரும்புகிறேன். நம் நாட்டிலே சில கல்லூரி மேடைகளிலேயும், உயர்தரப் பள்ளிக்கூட மேடைகளிலேயும் "வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்" என்ற பாரதியார் பாட்டினைப் பாடுதற்குப் பலர் எதிர்ப்பு செய்கிறார்கள். அக்கோஷ்டியிலே அப்பாட்டில் வருகின்ற "ஆரிய நாட்டினர் ஆண்மையோடியற்றிய சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக" என்று வருகின்ற காரணத்தால் அப்பாட்டை அவ்வண்ணம் பாடுதற்கு உளம் தாராமல் இருக்கின்ற தமிழ் ஆசிரியர்களும் மாணவர்களும் உண்டு என்பதை அறிவேன். இவ்வாறு மாணவரும் ஆசிரியரும் இருப்பாராயின், அது காரணமாக அவர்களை நாத்திகர் என்றோ தேசத் துரோகிகள் என்றோ கூறிவிடுதல் பொருந்தாது. ஆரிய நாட்டினர் என்று இந்தப் பாட்டிலே வருகின்ற பகுதி பாரத நாட்டினர் என்று பொருள்படும். அதனால் இந்திய தேசத்தினர் செய்யும் முயற்சிகள் ஓங்குக என்று பொருள் கொள்ளக்கூடிய வகையில் பாட்டு அமைகின்றது என்று சிலர் சொல்லுதல் இயலும். ஆயினும், இந்தப் பாட்டினைப் பாடிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரே தமிழ்மொழியினை ஆரியத்தினின்று வேறுபடுத்தி ஆரியத்தைக் காட்டிலும் சாலத் தமிழ்த்தாய் வாழ்த்தாக என்றுமுள இன்னொரு பாடலில் கூறியுள்ள காரணத்தாலே ஆரியமொழி வேறு தமிழ்மொழி வேறு என்ற கருத்துடையவர் அவர் என்பது அறியப்படும். தமிழ்த்தாய் கூற்றாக அவர் அமைத்திருக்கின்ற ஒரு பாடலிலே, "ஆன்ற மொழிகளினுள்ளே உயர் ஆரியத்திற்கு நிகர் என வாழ்ந்தேன்" என்று அமைத்துப் பாடியிருக்கின்றார். ஆனால் வடமொழி வேறு தமிழ்மொழி வேறு என அவர் கருதினார் என்பது அறியப்படும். இதனால், அறிவும் சான்றோரும் வாய்ந்த கூட்ட அமைப்பாளர்கள் செய்யவேண்டிய பணி யாதெனின், "வாழிய செந்தமிழ்" என்ற பாட்டைப் பாட ஏற்பாடு செய்யும்பொழுது, "ஆரிய நாட்டினர்" முதலாக வருகின்ற அடிகளை விடுத்துப் பாட ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதே. ஆயினும், இப்பாடலை உள்ளபடியே ஒரு மேடையிலே ஒருவர் பாடிவிட்டால், அந்தக் கூட்டத்தில்

உடனே குழப்பத்தை விளைத்துவிடாமல் தலைமை ஆசிரியரையோ கூட்ட அமைப்பாளரையோ பிறகு கண்டு அவ்வாறு இனிச் செய்யலாகாது என்று எடுத்துச்சொல்லி, அவ்வண்ணம் மேற்கொண்டு செய்யாமல் பாதுகாத்துக்கொள்வதே தமிழாசிரியர் பொறுப்பும் கடமையும் ஆகும். அன்றி, அப்பாட்டையே பாடுதற்கு ஏற்பாடு செய்யாமல், "வாழ்க நிரந்தரம்—வாழ்க தமிழ்மொழி—வாழிய வாழியவே" என்ற தொடக்கத்திலே பாரதியார் பாடியுள்ள தமிழ்மொழி வாழ்த்தினைப் பாட ஏற்பாடு செய்வது இன்னும் விரும்பத்தக்கதாகும்.

இவை என் உள்ளத்தில் தோன்றிய கருத்துக்கள். இவற்றைச் சிந்திக்குமாறு உங்களைக் கேட்டுக்கொண்டு, நீவிர் அனைவிரையும் அன்புடன் வரவேற்கிறேன். இம்மாநாடு வெற்றியுடன் நடைபெறுமாறு அருளும்படி இறைவனை வேண்டிக் கொண்டு உங்களுடைய ஒத்துழைப்பை நாடுகிறேன்.

செல்வியே வருக! வாழ்க!!

[வித்துவான், திரு. சி. இராமசாமி, வத்தலக்குண்டு]

இராகம் : சங்கராபரணம்]   [தாளம் : ஆதி

தொடுப்பு

செல்வியே! வருகவே! — செந்தமிழ்ச்
செல்வி! வாழ்கவே!

அடுப்பு

பல்வகை யானமணிப்   பாக்கள் நிறைசெய்து
ஒல்லென ஒலிசெய   ஒய்யார மாய்நடந்து

முடிப்பு

இருபத்தெண் அகவைகள்   இனிதே நிறைந்தனை!
இருபத்தொன்பான் வயதை   எய்துதற் கேகினை!
திருமுத் தமிழ் பரப்புந்   திறங்களைக் கொண்டனை!
திகழும் தென்னாட்டவரின்   புகழ்மொழி கொண்டனை!

ஆயதனிற் தமிழால்   செல்வியே இசைப்பாய்!
தொன்மைப் பனுவல்களின்   தன்மையை விரிப்பாய்!
ஆயும் புலவர்களின்   ஆற்றலை உரைத்தனை!
அன்புரைகள் வழங்கும்   அன்னையை ஏத்தனை!

தெளிய வடித்தகொம்புத்   தேனொடும் மொழியில்
தேர்ந்த பலகலைதால்   ஆய்ந்தவர் வழங்கும்
கனிதரு சுவையீத்   தாக்க அறிவிப்புகள்
கழகத்திலே பயின்று   காண்பதற் கினிதாய்

தலைமைப் பேருரை*

[தொகுத்தோர் திரு. பழம் நீ]

என்னை இந்த ஆசிரியர் மாநாட்டுக்கு வந்து அழைத்த போது என் இயலாமையைக் கூறி மன்னிக்கும்படி கேட்டுப் பார்த்தேன். என்னுடைய குறைபாடுகளைச் சொல்லுவதற்காக வாவது இந்த மாநாட்டிலே என்னை அழைத்தார்களோ? எப்படி இருந்தாலும் நாம் சொல்லும் கருத்துக்களையோ என்னையோ மறுத்துக்கூற உங்களுக்கு உரிமை இல்லை! என்று முதலிலேயே சொல்லிக் கொள்ளுகிறேன்.

வாழ்க்கையிலே ஒரு மொழியைப்பற்றி மட்டுமே தெரிந்து கொண்டால் போதாது. வாழ்க்கையில் ஒரு மொழியைமட்டும் படித்துப் பயன்படுத்திவிடலாம் என்று எண்ணுவது தவறு. ஒவ்வொரு மொழிகளிலும் சிறந்த துறைகள் உண்டு. மொழி கள் எல்லாம் சிலசில துறைகளிலே மேம்பட்டிருக்கலாம். ஒரு மொழி மற்றொரு மொழிக்குத் தாழ்ந்ததல்ல.

அக்காலத் தமிழகம், பாரதியாரைத் தமிழனாகக் கருத வில்லை! தமிழனைத் தமிழன் போற்றியதில்லை! பாரதியார் கௌபீனம் கட்டிய நாள் முதல் பட்டினியோடு அவர் புதுவை யிலேயே காலம் கழித்ததை நான் அறிவேன். முதலிலே என்னைச் சந்தித்ததும் கட்டித் தழுவினார். நான் எழுதிய கட் டுரைகளையெல்லாம் படித்துப் பாராட்டினார். தமிழர்கள் தமி ழர்களை மதிப்பதில்லை! தமிழர்களே தமிழர்களை மதிக்கவில்லை யென்றால் பார்ப்பனர் தமிழர்களை ஏன் மதிக்கப்போகிறார்கள்?

புலமையைப் புலமைக்காகப் படிக்கவேண்டும். பாராமல் ஒப்பிப்பது படிப்பல்ல. அறிவு என்ற நிலையிலே மொழியைப் பற்றிக் கவலையில்லை. அறிவை வளர்க்கக்கூடியது எதுவோ அது தான் கல்வி. தமிழ் வளரவேண்டுமானால் முதலிலே அறிவு வளர வேண்டும்.

ஆசிரியர் என்று வருகிறவர் என்ன மொழியினாலே சொன்னாலும் அறிவை அடிப்படையாகக் கொண்டு சொல்ல வேண்டும். ஆசிரியர்களும், மக்களும் சிந்திக்க வேண்டும்.

* அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்புவிழாமண்டபத்தில் 11-7-'51 அன்று நடைபெற்ற சென்னை மாநிலத் தமிழாசிரியர்கள் மாநாட்டில் தாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் ஆற் றிய தலைமைப் பேருரை.

சாதாரணமாகச் சில பழைய பாட்டுக்களை தமிழர்கள் பலர் நெஞ்சுருக்கி ஒப்பிப்பதைப் பார்க்கிறேன். பாடல்களைச் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும்.

தமிழையே அகத்தியர் உண்டுபண்ணினாரா? இல்லையா? என்ற ஐயப்பாடு உங்களில் பலர்க்கு இருக்கிறது. எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு அகத்தியர் தமிழை உண்டாக்கினார் என்று சொல்லுகிறீர்கள்? அகத்தியர் தமிழை வளர்த்தார் என்று கூறுவது முழுப்பொய். தமிழைப் படித்ததால் அகத்தியன் பெருமை பெற்றான்; கம்பனைச் சம்பந்தப்படுத்திப் பேசுவதற்கு அவசியம் இல்லை! கம்பன் சொல்லுகிறான், தமிழைக் கடவுள் ஆக்க வில்லை. வடமொழியையும் கடவுள் ஆக்கவில்லை. தென்மொழி என்று கூறி ஒரு கூட்டத்தார் புகுத்தினார்கள். பேச்சு வழக்கில் வடமொழி இருக்கவில்லை! இருக்கப்போவதுமில்லை. அதை மக்கள் ஒரு சில காரியங்களுக்காக வளர்த்தார்கள்; காளிதாசன்கூடப் பேச்சிலே வடமொழி இருந்ததாகச் சொன்ன

...ன் மொழி நூலோர்களிலே சிறந்த மொழியாகக் கருதப்பட்டது. நூலோர்களிலே இருந்த அறிஞர் பலர் இலத்தீன் மொழியைப் படித்தனர். இலத்தீன் மொழியும் பேச்சு வழக்கில் இல்லாத மொழி, இலத்தீன் மொழியைவிட நூறு மடங்கு சிறந்தது வடமொழி என்பாருமுண்டு. கம்பர் கூட அகத்தியனைப் பற்றிக் கூறப்போது,

"என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்டான்"

என்று கூறியுள்ளார்.

அகத்தியன் கடவுள் அல்ல; அகத்தியன் ஒரு மனிதன். அகத்தியனைப்பற்றிப் புராணங்கள் கட்டுக்கதைகளைக் கட்டிவிட்டன. கடலால் அழிந்தொழிந்த பகுதிகள் பல, பழைய தமிழ்நாடு என்று அழைக்கப்படுகிறது. புதிதாக தமிழ்மொழி பிறக்க வில்லை. ஆரியம் பற்றித் தவறான கருத்து தமிழ்நாட்டில் நிலவு கிறது. ஆரியம் என்ற சொல் பழிப்பதற்கு அல்ல.

வடமொழியைச் சனியாக ஏன் கருதுகிறீர்கள்? வட மொழியைக் கண்டு அருவருக்கத் தேவையேயில்லை! வடமொழியால் தமிழை எக்காலத்திலும் அழிக்க முடியாது; அழிப்பதற்கு என்று இட்டப் போட்டுக்கொண்டு சிவ பெருமானே வந்தாலும் தமிழ் அழியாது.

தமிழ் ஆதிகூட இல்லாதது; அந்தமும் இல்லாதது; கம்பன் சொல்லிய கருத்தைப் புலவர் பெருமக்கள் சிந்தனைப்

பார்க்கவேண்டும்; சிந்திக்காமல் விரைவு விரைவாக இக்காலப் புலவர்கள் பலர், கருத்தை வெளியிடுவது தவறு; எந்தக் கருத்தைச் சொல்லுவதானாலும் சிந்தித்து ஆராய்ந்து பேசுங்கள்.

கேள்விப்பட்டதை யெல்லாம் ஆராயாமல் மேடையிலே தெரிவிக்கிறீர்கள். தமிழ்ப் புலவர்களே தமிழைப் பற்றி ஆராயாமல் கருத்தைத் தெரிவித்தால் (Physics, Chemistry) படித்த ஆசிரியர்கள் தமிழைப் பற்றி என்ன என்ன எண்ணுவார்கள்?

தன் மதிப்பு இருக்க வேண்டும்; நீங்களே தமிழை முதலிலே மதிக்க வேண்டும்; தமிழை நீங்கள் நன்கு மதித்தால் தான் தமிழுக்கும் உங்களுக்கும் பெருமை. தமிழே தமிழரின் செல்வம் என்பதை நினைவில் வையுங்கள்.

“மானம்” என்ற சொல் எந்த மொழியிலும் கிடையாது. இந்தச் சொல்லிலே இருக்கிற சிறப்பை எண்ணிப் பாருங்கள்; தமிழாசிரியர்கள் உண்மையைத் தேடி அலையவேண்டும்; தமிழின் பழமையை மட்டும் பேசினால் - தமிழ் உயர்ந்து விடுமா? தமிழ்மொழி பழமை வாய்ந்தது என்று சொன்னால் தமிழ் மொழி வளர்ந்துவிடுமா?

இலக்கணம் என்றால் இலக்கணம், பாட்டு என்றால் பாட்டு, ஆனால் செய்யுள் என்றால் பாட்டல்ல. செய்யுள் என்றால் (Literature) இலக்கியம். இலக்கியத்திற்குப் பொதுப்பெயர் செய்யுள் என்பது. செய்யுள் என்ற சொல்தான் தமிழ். இலக்கியம் என்ற சொல் தமிழல்ல: அது வடமொழி.

அறிவை முன்னிறுத்தி எதையும் செய்யுங்கள். மேலும் மேலும் அறிவை வளர்த்துக்கொண்டே போகவேண்டும். அறிவுத் துறையிலே நின்று ஆராய்ச்சி செய்தால் புதிய துறையிலே தமிழும் தமிழர்களும் முன்னேறலாம். உலகமொழிகளிலே சிறந்தது, தமிழ்மொழி.

ஆங்கிலம், பிரெஞ்சு மொழியைவிடத் தமிழுக்குத் தேவை இருந்து வருகிறது. தமிழாசிரியர்கள் தமிழை ஒதுக்கிவிடும்படி விட்டுவிடக்கூடாது; தமிழை எல்லோருக்கும் பயன்படும்படி செய்ய வேண்டும்; தமிழை ஒரு துறையிலே மட்டும் வளர்க்காமல் பல துறையிலும் வளர்க்க வேண்டுமென்று அமைச்சர் சொன்ன கருத்தை வரவேற்கிறேன்.

இந்தப் பல்கலைக் கழகம் என்ன நோக்கத்துக்காக ஏற்பட்டது? தமிழ் மக்களுக்காக, தமிழுக்காக ஏற்பட்டது,

இந்தப் பல்கலைக் கழகம். தமிழுக்கு ஒரு சிறந்த தலைமையிடம் இதில் இருக்கிறது. இது நல்ல நோக்கத்தோடு கட்டப்பட்டது. வருங்காலத்தில் தமிழே கூடாது; தமிழுக்காகப் பல்கலை கழகம் ஏன்? என்ற காலம் வந்தாலும் வரலாம். அந்தக்கால வராமல் இருக்கும்படி செய்ய வேண்டிய பொறுப்பு, தமிழா சிரியர்களைச் சார்ந்தது.

தமிழாசிரியர்கள் நெஞ்சுருக்கிப் பாடல்களை மனப்பாட செய்தால்மட்டும் போதாது. எல்லாத் துறையிலும் தமிழா சிரியர்கள் அறிவைச் செலுத்திப் படிக்கவேண்டும். பல்கலை கழகம் என்றால் எல்லாத் துறையிலும் அறிவை வளர்ப்பது என்று பொருள். எல்லாம் என்றால் நல்லதெல்லாம் என்று பொருள். தமிழ் இளைஞர்கள் மற்ற எந்த நாட்டு இளைஞர் களையும்விட ஒருபடி முன்னேறவேண்டும் என்ற தனித்த எண்ணமுடையவன் நான். தமிழாசிரியர்களும் மற்ற ஆசிரிய களைவிட ஒருபடி முன்னே இருக்கவேண்டுமென்பது என் ஆசை.

கல்வி அமைச்சர் பேசியதைக் கேட்டேன். கல்வி அமைச்சர் இவ்வளவு தூரம் கடவுள் உண்மையை வற்புறுத்தும்படி வந்து விட்டதே? கடவுள் உண்டா? இல்லையா? கடவுள் என்ற சொல்லிலே இருக்கிற அமைதியைப் பாருங்கள். தமிழன் தெய்வத்தை வழிபட்ட முறையே ஒரு சிறந்த முறை. இக் காலத்தில் பலர் கடவுளுக்கு ஒரு தலையா? ஆறு தலையா! கடவுளுக்கு ஒரு பெண்டாட்டியா? ஆறு பெண்டாட்டியா! என்றெல்லாம் கேட்கிறார்கள். இப்படிக் கேட்பது தவறு. கடவுள் என்றால் உள்ளம் கடந்தது என்பது பொருள். கடவுள் வழிபாடு ஒழுக்கத்தைப் பொறுத்து இருக்கிறது. ஒழுக்கத் துக்கு மாறாக நடப்பவனிடம் கடவுள் வழிபாடு இருப்பதாகச் சொல்லமுடியாது.

கி. பி. மூன்றும் நூற்றாண்டு முதல், பதின்மூன்றும் நூற் றாண்டுவரை, கலி முதலிய பாட்டுக்கள் இருந்தன. பின் பத்தாம் நூற்றாண்டில் தாழிசை, விருத்தம் முதலிய பாவினங்களைக் காலநிலைக்கேற்ப இசைவகையில் கட்டினர்.

> "பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையி னானே."

என்றவனும் தமிழனே. பாவினங்களிலே இப்பொழுது பலர் பாடிவருகிறார்கள். தமிழாசிரியர்கள் பாவினங்கள் பல இயற் றுவதோடு நில்லாமல் அறிவுநூல்கள் பல இயற்றவேண்டும்.

தமிழாசிரியர்கள் நல்ல தமிழ்ச் சொல்லையே பயன்படுத்த வேண்டும். நல்லநெறி என்று சொல்லுங்கள்; சமயம் என்று ஏன் சொல்லவேண்டும்? 'சிவநெறி' என்று சொல்வதற்குப் பதிலாக 'சைவசித்தாந்தம்' என்று ஏன் சொல்லவேண்டும்?

அன்பர்களே, நல்ல துறையிலே அறிவாராய்ச்சி செய்யலாம். தமிழாசிரியர்களிடையே அறிவு வளரவேண்டும். அறிவு வளர்ந்தால் நாடும் முன்னேறும்; நாமும் முன்னேறுவோம். தமிழாசிரியர்கள் அனைவரும் அறிவுத்துறையிலே ஒன்றுபட்டு உழைத்தால்தான் நாம் வெற்றிபெறலாம். அறிவுத்துறையிலே பெரியவர் என்று சொல்லப்படுகிற பெருந்திருவாளர் சவகர்லால் நேரு, எல்லாக் கருத்துக்களையும் தாய்மொழியிலேயே வெளியிடவேண்டுமென்று சொன்னார்.

ஆங்கிலம் மிகுதியாகப் படித்த எனக்கு இளமையில் தமிழார்வம் உண்டானது. வழக்கறிஞர் தொழிலிலே மிக்க வருவாய் வந்தபொழுதும் அதை விட்டுவிட்டுத் தமிழைப்படிக்க எண்ணினேன். தமிழ், படிக்கும்படியான ஆற்றலை எனக்கு ஊட்டியது; மொழியின் ஆற்றலைக்கண்டு நான் வியந்தேன். தமிழிலே சிறிது சுவையும், அன்பும் தோன்றிவிட்டால் அது அவர்களை எந்நாளும் விடாது. இந்த மாநாட்டிலே கலந்து கொண்டதைக் கண்டு விருப்பமடைகிறேன்.

தமிழ்மொழி இன்றோ அல்லது நேற்றோ தோன்றியதல்ல. தமிழ் பழமைவாய்ந்த மொழி. மனிதர்கள் முதலில் பேசுவதற்கு முன்பே தமிழ் தோன்றியது. தமிழ் என்ற சொல்லின் அழகை எண்ணிப்பாருங்கள். எல்லா உலகமும் போற்றக் கூடிய திருக்குறள் நம்முடைய தமிழ்மொழியிலே தோன்றியது நமக்கெல்லாம் எவ்வளவு பெருமையைத் தந்திருக்கிறது.

"பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்"

என்று மணிமேகலை கூறுகிறது. திருவள்ளுவருக்கு மற்றப் பெயரைவிடப் 'பொய்யில் புலவன்' என்பது மிகவும் பொருத்தம். வள்ளுவன் சாதிப்பெயரல்ல; தொழிற்பெயர்; சாதி என்ற சொல்லே திருக்குறளில் இல்லை!

தமிழாசிரியர்கள் தமிழ்க்கலையை வளர்ப்பதோடு மட்டும் நில்லாமல் எல்லாக் கலையையும் வளர்க்கப் பாடுபடவேண்டும். தமிழாசிரியர்கள் அனைவரும் இனியாவது ஒன்றுபட்டு நாட்டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும் தொண்டாற்றவேண்டும் என்று சொல்லி என் உரையை இந்த அளவோடு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

பெருங்காப்பியமும் தொடர்நிலையும்

[திரு. நா. பார்த்தசாரதி]

பிற்காலத் தண்டியலங்காரஞ் செய்த தண்டியாசிரியர் கவி யான் யாக்கப்படுவனவற்றுள் பொருட்டொடர் நிலையைக் காப்பிய மெனப் பெயர் நிறீஇத் தனியவற்றைப் பெருங்காப்பியம் சிறுகாப் பியமென இருவகைப் பாகுபாடுஞ் செய்தனர்.

> “பெருங் காப்பியமே காப்பிய மென்றாங்
> கிரண்டா மியலும் பொருட் டொடர்நிலையே” (தண்டி : 8)

அவற்றுள்,

> “பெருங் காப்பியநிலை பேசுங் காலை
> வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்
> றேற்புடைத் தாகி முன்வர வியன்று
> நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்
> தன்னிகரில்லாத் த
> மலைகடல் நாடு வளநகர் பருவம்
> இருசுடர்த் தோற்றமென் றினையன
> நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
> பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
> தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
> புலவியிற் புலத்தல் கலவியிற் களித்த
> லின்னன புனைந்த நன்னடைத் தாகி
> மந்திரந் தூது செலவிகல் வென்றி
>
> பரிச்சேத மென்
> நெருங்கிய சுவையும் பாவமும்
> . . . .

எனத் தண்டியாசிரியர் கூறிய பெருங்காப்பிய இலக்கணத் தையும்,

> “அறமுதல் நான்கினுங் குறைபா
> காப்பிய மென்று கருதப் படும்” (௯)

என்ற சிறுகாப்பிய இலக்கணத்தையும், ஒருபுடையாய் ஒத் திருந்தமை நோக்கி [illegible] சிந்தாமணி, சிலப்பதி காரம், மணிமேகலை என்னும் தொடர்நிலைச் செய்யுட்களை

காப்பியமென மயங்கினர் ஒரு பகுதியார். அதனாலேயன்றோ இவையிற்றை, "ஐம்பெருங் காப்பியம்" என்றுங் குறியிட்டு வழங்குவாராயினர். பொருட் டொடர்நிலையெனக் குறியீடு நோக்க வேறுபாடு தெற்றென விளங்காதாயினும், அத்தொடர் நிலைச் செய்யுட்களைக் கருத்தொடு நுணுகி ஆராயப்புக்கால் பெருங்காப்பியத்தின் அமைப்போடு இதனிடையுள்ள வேறு பாடுகள் பலவிடை மடுவிடைக் குன்றுபோல அமையும். தண்டி யாசிரியர் கூறியவாறு பிற்காலத்துப் பெருங்காப்பியங்கள் மலை வருணனை, கடல் வருணனை, நாட்டு வருணனை முதலியவற்றைப் பரக்க அமையும்படியும் பிற உறுப்புக்களும் ஒன்று தவறாமல் அமையும்படியும் செய்திருப்பச் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியன அவ்வுறுப்புக்களையோ, பிறவற்றையோ தனியாக முன்னிறுவியும் விதந்தெடுத்தும் கூறாமை கண்டுச் சிந்திக்கத்தக்கது. சிந்தாமணி நாட்டுவருணனை, நகர வளம் முதலியன கூறிற்றேனும் பின்னையோர் காப்பியங்கள் போலாது காவியநாயகன் சீவகன் தோற்றத்தைக் கூறவேண்டுழி அதன் முன் அவற்குத் தந்தை தாய் இவர்களது வரலாற்றைக் கூறு தற்கு முன்னிலையாக நகரத்தைச் சிலவாகிய பாக் களால் புனைந்துரைத்தார். பின்னூல்களுள் இவ்வருணனைகளைத் தனித்தனிச் சிறப்புகளாக விரித்துச் செய்திருப்பக் கதைப்பகுதி மிக்குள்ள இவ்வருணனைப்பகுதி இவையுபற்றிச் சிற்றளவே வர 'நாமகளிலம்பகத்தை'த் தேவர் அமைத்துள்ளமையும் நோக்கத் தக்கது. அன்றியும் சிந்தாமணியொழியப் பிறவிரண்டும் நான்கு உறுதிப்பொருள்களையும் முற்றக் கூறியனவில்லை. மணிமேகலை வீடொன்றுமே பற்றக் கூறிற்று. சிலப்பதிகாரம் இன்பம் குறைய அறம் பொருள் என்னும் இரண்டுறுதிப் பொருள் களுமே பெருக அமைத்துள்ளது. அங்ஙனமிருக்கவும் இவற் றைப் பெருங்காப்பியமென நம்மனோர் பெயர் கொடுத்து வழங் குவது பொருந்துவதாகுமோ? அடியார்க்குநல்லார் சிலப்பதி காரத்தையும் மணிமேகலையையும் ஒன்றாக எண்ணி இரண்டுங் கூடின் நாற்பொருள் பயக்குமென்று கொண்டு சிலப்பதி காரத்தைப் பெருங்காப்பியமாகக் கூறினமையும், தண்டியாசிரி யர்க்குப் பிற்காலத்துத் தமிழ் இலக்கண நூல்களுள் அணி யிலக்கணம் கூறப்புகுந்த வீரசோழியம், இலக்கண விளக்கம் இவைகளின் ஆசிரியர்கள் அம்முறையே பெருங்காப்பிய இலக் கணங் கூறுதல் பற்றியும் இவைகளை ஒருங்குதொகுத்தி 'ஐம்பெருங் காப்பியம்' என்பாராயினர். அடியார்க்குநல்லார் கூற்றுப்படி சிலப்பதிகாரமும் மணிமேகலையும் வெவ்வேறாசிரி யர்களால் இயற்றப்பட்டனவாயினும் இரண்டுஞ் சேர்ந்து நாற் பொருள் பயக்குமாயினும், 'ஐம்பெருங் காப்பியம்' எனத்

தொகைதந்தது பொருந்தாது. வளையாபதி, குண்டலகேசி, சிந்தாமணி என்னும் ஏனைய மூன்றோடு இவையிரண்டையும் ஒன்றாக்கிக் கூட்டி 'நாற்பெருங் காப்பியம்' எனல் வேண்டும். சிந்தாமணியில் நச்சினார்க்கினியரும் செய்யுளியலுரையிற் பேராசிரியரும் கூறிய விளக்கங்களால், பெருங்காப்பியம் வேறு, தொல்காப்பியர் வனப்பியல் வகையாற் கூறும் தொடர்நிலைச் செய்யுள் வேறு என்பது புலப்படும். 'ஒருகதையைப் பொருட்டொடர்படக் கூறுவன' என்ற புற நோக்கால் பெருங்காப்பியமும் தொடர்நிலைச் செய்யுளும் ஒக்குமாயினும், உட்பகுதி பலவும் இரண்டிற்கும் ஒவ்வாமை விளக்கப்படும்.

"தொன்மைதானே
உரையொடு புணர்ந்த பழமைமேற்றே"
(தொல்: செய்யு: உ௩௰)

என்னுந் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரவுரையில் "தொன்மையென்பது உரைவிராய்ப் பழைமையவாகிய கதைப்பொருளாகச் செய்யப்படுவது, அவை பெருந்தேவனாரால் பாடப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன" என்றார், பேராசிரியர். நச்சினார்க்கினியரும் இவ்வாறே புரைத்துச் சிலப்பதிகாரத்தையும் இதன்பாற்படுத்தினார். அங்ஙனம் சிலப்பதிகாரத்தை இதிலடக்கிய நச்சினார்க்கினியர், மணிமேகலை சிலப்பதிகாரத்தின் தொடரேயாகி அடங்கும் என்று கருதிச் சிலப்பதிகாரத்தை மட்டும் இதிலடக்கினாரோ? அன்றிச் சிலப்பதிகாரத்தை மட்டும் தனியாகக் கூறினாரோ? அறிகிலம். இனிச் சிந்தாமணித் தொடக்கவுரையில், "மெல்லென்ற சொல்லான் அறம்பொருளின்பம் வீடென்னும் விழுமியபொருள் பயப்பப் பழையதொரு கதை மேற் கொச்சகத்தாற் கூறின், அது தோல் என்று கூறினமையின் இச்செய்யுள் அங்ஙனங் கூறிய தோலாமென்றுணர்க" என்றும், "மூத்த நூல்களிற் காப்பியம் என்னும் வடமொழியாற் றொடர்நிலைச் செய்யுட்குப் பெயரின்மையானும் இதற்குப் பின்பு கூறிய நூல்கள் இதற்கு விதியன்மையுமுணர்க" என்றும் கூறினார் நச்சினார்க்கினியர். இதே கருத்தைத் தொல்காப்பியச் செய்யுளியலுரையில், "அஃதிருவகைப்படும் இழுமென் கிளவியானும் ஆசிரியத்தானுஞ் செய்யப்படுவன" என்றும், "பரந்தமொழியான் அடிநிமிர்ந்தொழுகினும் ஆசிரியப் பாட்டான் ஒருகதைமேற் றொடுக்கப்படுதலும் அவையும் பொருட்டொடர்நிலைத் தோலென்று சொல்லுவர் புலவர்" என்றும் கூறினார் பேராசிரியர். இன்னும் 'இழைபு' என்னும் வனப்புக்கு இலக்கணம் கூறும் சூத்திர உரையில், மணிமேகலையும் பெருங்கதையும் தொடர்நிலைச் செய்யுளாகவே பேராசிரியரால் எடுத்துக் காட்டப்படுகின்றன. அன்றியும்,

'சிலப்பதிகார மென்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'
(சிலப்பதிகாரப்பதிகம் : ௫௯-௬0)

'உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசா லடிகள் அருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்'　(பதிகம்: ௮௭-௮௯)

எனவரும் அடிகளை நோக்குங்காலும் அவை தோலென்னும் வனப்பியல் வகை பெற்றுக், கொச்சகக்கலியானும் ஆசிரியத்தானும், தனி ஆசிரியத்தானும் பழையதாகியதொரு கதை மேல் நிகழ்ந்த தொடர்நிலைச்செய்யுள் என்பதே சாலப் பொருந்தும். இன்னோரன்னவற்றை நோக்காராகி "உலகத்துக் காப்பியஞ் செய்வோன் அறனும் பொருளும் இன்பமும் வீடுங்கூறல் வேண்டுமன்றே; இந்நாடகக் காப்பியத்துள், அறனும் பொருளும் இன்பமும் சிறிதாயினுங் கூறி வீடு கூறிற்றிலர்; என்னையெனின், யானறிகுவனது பட்ட தென்றுரைத்த சாத்தனார் நாற்பொருளும் பயப்பப் பெருங்காப்பியமாகச் செய்யக் கருதியிருக்கின்றார்க்கு அடிகள் "நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" என உடம்பாட்டுத் தன்மையாற் கூற" என்றும் "மணிமேகலை துறந்தாளென்பதுணர்ந்து அத்துறவினைப் பின்வைத்து அதனொடு நாற்பொருளும் பூரித்துப் பெருங்காப்பியமாக முடித்தலைக்கருதி அடிகள் சாத்தனார்க்கு இவ்வுரையை யுரைத்தருளி, அவர் மணிமேகலை பெயரான் அவள் துறவே துறவாக அறனும் வீடும் பயப்ப ஒரு காப்பியஞ் செய்தமைத்தனரெனக் கேட்டு, அவ்வடிகள், விரும்பி இவ்விரண்டினையும் ஒரு காப்பியமாக்கி உலகின் கண்ணே நடத்துவான் வேண்டவும் இருவர் செய்தலின் இரண்டாக நடந்தன வென்க" என்றும் பதிகவுரையிற் கூறினார், அடியார்க்கு நல்லார். இனி இளங்கோவடிகள் நூலிறுதிக் கட்டுரையினுள்ளே,

"மணிமேகலை மேலுரைப்பொருள் முற்றிய
சிலப்பதிகார முற்றும்"　(சிலப்பதிகாரம் : நூற்கட்டுரை)

என்றமையின் மணிமேகலையை மேற்றொடராகத் தாமே கூறக் கருதியிருந்தாரென்றாதல், அல்லது சாத்தனார் கூற அமையும் என்று கருதி விடுத்தாரென்றாதல் முடிவு செய்யவேண்டும். இல்லாக்கால் எவ்வாற்றானும் பிறர்கூறுமாறு பெருங்காப்பியமாக முடியாது. இரண்டும் சேர்ந்து தனித்தனிச் சிறுகாப்பியங்களாக இயங்குவன என்பாராயின், ஐம்பெருங் காப்பியமென்றது பொய்ப் பெயராம். அடியார்க்கு நல்லார் கருத்து இரண்டும் ஒன்றுபிணைந்து பெருங்காப்பியமா மென்பதாகும். இரண்டு மொன்றும் இணையுமென்னுங் கருத்துடையா ரோடு

நாம் சிறிதும் முரணவேண்டிய அவசியமில்லை. பெருங்காப்பியமா? தொடர் நிலைச் செய்யுளா? என்பதுதான் ஈண்டைக்கு வேண்டும் வினா. பிற்காலத்துப் பெருங்காப்பியமாயின் விருத்தம் முதலிய இனங்களாலும் வருவதற்குப் பெருங்காப்பிய இலக்கணம் தடைசெய்யாது. சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய இரண்டும் தோலுறுப்புக்குக் கூறிய பாக்களின் வரையறை விலகாமல் வந்திருப்பதும் கவனித்திடத்தக்கது. 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' என்பதை [illegible]த் தலைமையாகக் கொண்டார் அடியார்க்கு நல்லார். அதன் காரணமாகவே அவர் இரண்டும் ஒன்று இரண்டா என்ற கருத்தை எழுப்பிவைத்தனர். தற்செயலாகச் சாத்தனார் மணிமேகலையையும், அடிகள் சிலப்பதிகாரத்தையும் வெவ்வேறாகத் தாந்தாம் இயற்றினார் என்பதிற் பற்றும் [illegible] ஐயங்கள், பயனற்றவைகளாம். 'விழுமியது [illegible]ஞர்க்கு அறமுதற்பொருள் நான்கும் முறையாய்க் கிடைத்தல் வேண்டும் என்பது கருத்தா? ஒன்றிரண்டு குறைந்தாலும் பெயர் பெறலாம் என்பது கருத்தா? என்பதை முடிவுகாணவியலாமையால், முன்னது கருத்தேல் ஐம்பெருங்காப்பியமென [illegible]யிட்ட பிற்காலத்தார் கருத்தோடன்றி, 'ஐம்பெருந் தொடர்நிலைச் செய்யுள்' என்று, தொடர்நிலைச் செய்யுளாகவே கூறினும் ஐந்தென்னும் தொகையான் வருவதாம். பின்னது கருத்தாயின் இக்காலத்தோர் பெயர்வைப்பிற்கு அது பொருத்தமாதலோடு ஐம்பெருந் தொடர்நிலைச் செய்யுளனைய ஆகும். இன்ன பல கருத்துக்கள் இன்னும் விரிவாக ஆராயத்தக்கன. இவையாவுமன்றித் தொடர்நிலைச் செய்யுட்கும் காப்பியத்திற்கும் இடை தெரிவின்றிக் "கவியால் யாக்கப்படுவனவெல்லாம் காப்பியம்'' என்னும் பொதுக் கருத்தால் பிற்காலத்தார் இவைகட்கு ஐம்பெருங்காப்பியம்'' எனக் குறியீட்டால் வடமொழிக் காப்பியத்தோடு பெரிதும் ஒப்புமை கருதிக் குறியிட்டனர் எனினும் அவைபற்றி ஆய்தல் பயனின்றென்பாம். பெருங்கதை முதலியவும் தோலுறுப்பால் வந்த வனப்பியல் தொடர்நிலை என்று பேராசிரியர் கருதினரேல், அதற்குக் காலத்தால் முற்பட்ட இவை காப்பியமாதல் சிறிதளவும் பொருந்தா முடிபோ [illegible] பெறப்படும். எனவே, ஆசிரியர் தொல்காப்பியர் வனப்பியல் வகையால் விரித்துக் கூறிய தொடர்நிலைச் செய்யுள் வேறு, பிற்காலத் தலங்கார நூலார் இலக்கணம் வகுத்த காப்பியம் வேறு என்பதும், ஐம்பெருங்காப்பியங்களை இக்காலத்தார் போக்கு குறியீடு, அவைகட்குப் பொருந்தாமையும், அவை தோலுறுப்புப் பெற்று வந்த தொடர்நிலையாகலும் இனிது விளங்கும்.

மறைவுற்ற தமிழ் நூல்கள்

[மயிலை சீனி. வேங்கடசாமி]

([illegible])

85. [illegible]

பாடலனார் என்பவர் ஒரு இலக்கண நூல் இயற்றினார் என்பது, யாப்பருங்கல விருத்தியுரையால் தெரிகிறது. யாப்பருங் கலம், ஒழிபியலில் விருத்தியுரைகாரர் இந்நூல் சூத்திரம் ஒன்றை மேற்கோள் காட்டுகிறார். அது:

"[illegible]

"[illegible]"

[illegible]

இந்நூலைப் பற்றியும் இதை இயற்றிய பாடலனாரைப் பற்றியும் வேறு செய்திகள் தெரியவில்லை.

8

86. வங்கர் கோவை

வங்கர் கோவை என்னும் இந்நூலைக் களவியற் காரிகை உரையாசிரியர் தமது உரையில் கூறுகிறார். இது வங்கர் என்பவர் மீது அகப்பொருள் துறையமையப் பாடப்பட்ட கோவைப் பிரபந்தம். வங்கர் என்பவர் யார் என்பது தெரியவில்லை. களவியற் காரிகைப் பதிப்பாசிரியர் வங்கர் கோவையைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்:—"வங்கர் கோவையைக் குறித்து யாதும் அறியக் கூடவில்லை. 'வங்கர் குலோத்தமன் வண்கடந்தை' என வருதலால் சோழர், பாண்டியர் என்பன போன்று வங்கர் என்பதும் அரசர் குலப் பெயராமென்பதும், அக்குலத்தினர் கடந்தை என்பதைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தனர் என்பதும் அறியக்கிடக்கின்றன. தலைநகர்ப் பெயர் தடந்தை எனவும் ஒரு செய்யுளிற் காணப்படுகின்றது."

களவியற் காரிகை உரையாசிரியர், வங்கர் கோவையிலிருந்து மூன்று செய்யுள்களைத் தமது உரையில் மேற்கோள் காட்டுகிறார். அச் செய்யுள்கள் இவை:

விந்தா சனிகொண்கண் வேந்தரில்
ஆண்பிள்ளை வென்றி வெற்பிற்
கொந்தார் இணைப்புனங் காவனிற்
பீர்வழி கூறுமென்று
வந்தார் சிலர்க்கு வழியறி
வாரொடு வார்த்தை சொன்னாற்
சிந்தாது காணும் பவழச் செவ்
வாயிற் றிரு முத்தமே. 1

செங்கையில் வாங்கித் திருமுடி
[illegible]
கொங்கையின் மேல்வைத்துக் கொண்டுகின்
றுள்குமரித் துறையுங்
கங்கையு மாடுங் கடகளிற்
றான் வங்கர் காவலவன்
பொங்கெயில் சூழ்தடந் தைப்பொருப்
பர்தந்த பூந்தழையே. 2

மடலே சொரிதொங்கல் வங்கர் குலோத்தமன் வண்கடந்தை
யடலே புரிபு மரும்பனி வாடையை யஞ்சம் வஞ்சி
யுடையேயு மன்றி யுயிருங் கிடக்கதென் றேயொருகாற்
கடலே கருங்கழி யேயுரை யீரெங்கள் காதலர்க்கே. 3

இந்நூலைப் பற்றி வேறு செய்யுள்கள் தெரியவில்லை.

87. இன்னிசை மாலை

இந்நூலைக் களவியற் காரிகை உரையாசிரியர், தமது உரையில் கூறுகிறார். இன்னிசை மாலை என்னும் பெயரை நோக்கும் போது, இது இசைத்தமிழ் நூலோ என்னும் ஐயம் உண்டாகும். இது இசைத்தமிழ் நூல் அன்று; அகப்பொருளைக் கூறும் நூல். இன்னிசை என்பதற்கு இனிய புகழ் என்பது பொருள். தொண்டை, விராடபுத் தலைவனைப்பற்றி இசை (புகழ்ப்பொருள்) கூறுவதாகி அகப்பொருள் துறைகள் அமைய பாடப்பெற்றது இந்நூல். இந்நூல் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பாட்டுடைத் தலைவரின் பெயரும் தெரியவில்லை. இந்நூலிலிருந்து இரண்டு வெண்பாக்களைக் களவியற் காரிகை உரையாசிரியர் மேற்கோள் காட்டுகிறார். அவற்றில் ஒரு செய்யுள் சிதைந்து காணப்படுகிறது. மற்றச் செய்யுள் இது:

இந்நூலைக் களவியற் காரிகை உரையாசிரியர், தமது உரையில் குறிப்பிடுகிறார். இந்நூலிலிருந்து ஒரு செய்யுளையும் தமது உரையில் மேற்கோள் காட்டுகிறார். அச்செய்யுள் இது:

[illegible]

இச்செய்யுளில் கூறப்பட்ட தயாபரன் என்னும் பெயர் பாட்டுடைத் தலைவனின் இயற்பெயர்தானா என்பது தெரியவில்லை. அவன் ஆண்ட தஞ்சை, சோழநாட்டுத் தஞ்சாவூரா, அல்லது பாண்டிநாட்டிலிருந்த தஞ்சாக்கூர் என்னும் தஞ்சையா என்பது தெரியவில்லை.

அமையத் தோவை என்னும் இந்நூலைப் பற்றியும் இதன் ஆசிரியரைப் பற்றியும் இதன் பாட்டுடைத் தலைவனைப் பற்றியும் யாதொரு செய்தியும் தெரியவில்லை.

89. கிளவி மாலை

இப் பெயருள்ள நூல், இருந்ததென்பது களவியற் காரிகை உரையிலிருந்து தெரிகிறது. இது வெண்பாவினால் ஆன நூல். அகப்பொருளைக் கூறுவது. இந்நூலிலிருந்து நான்கு செய்யுள்களைத் தமது உரையில் மேற்கோள் காட்டுகிறார் களவியற் காரிகை யுரையாசிரியர். அவற்றில் ஒன்று இப்பொழுது சிதைந்து காணப்படுகிறது. மற்ற மூன்று செய்யுள்கள் இவை:

வெள்ளிய வள்ளத்து ளேந்தும் விரைச்சுண்ணத்
துள்ளகத்தி றெண்பவளம் வைத்தாங்குத்—தெள்ளுநீர்க்
கானலெல்லாம் பூக்குமே புன்னை கரிவண்டு
பானலெல்லாம் பாடும் துறை.

கொங்கைக்குந் தூய குலவளைசேர் மோகனைச்
செங்கைக்கு மென்னவிலை செப்புவோம்—மங்கை
தெரியா மருங்குலுக்குந் தேசம்விலை யென்னத்
தரியார் மலைவாணர் தாம்.

தீய பெருவனமுஞ் செந்தறையு நந்தறையுந்
தூய பெரிவனமுஞ் சோலையுமா—மாய
கலம்பா முலைமகட்குக் காமருபூங் கண்ணிச்
சிலம்பாநின் பின்னர்ச் செலின்.

இந்நூலாசிரியர் பெயர் காலம் முதலிய வரலாறுகள் தெரியவில்லை.

90. சங்ககாலத்துப் பாரதம்

மதுரைத் தமிழ்ச்சங்கத்திலே பாண்டியர் மகாபாரதத்தைத் தமிழில் மொழி பெயர்த்தனர் என்னும் செய்தியைச் சின்னமனூர் செப்பேட்டுச் சாசனம் கூறுகிறது. இந்தப் பாண்டிய சாசனம் சின்னமனூரில் கிடைத்தபடியால் சின்னமனூர்ச் செப்பேட்டுச் சாசனம் என்று கூறப்படுகிறது. சின்னமனூர், மதுரை மாவட்டத்துப் பெரியகுளம் தாலுகாவில் உள்ளது. இவ்வூர்ப் பெருமாள் கோயில் மடைப்பள்ளி கட்டுவதற்காக 50 ஆண்டுகளுக்கு முன் நிலத்தைத் தோண்டியபோது இந்தச் செப்பேடுகள் கிடைத்தன. இவை பெரிய செப்பேடுகள், சிறிய செப்பேடுகள் என இருவகைப்படும். இந்தச் செப்பேட்டின் சாசனங்கள் இப்போது சென்னை அரசாங்கப் பொருட் காட்சிசாலையில் உள்ளன. இவை தமிழ்மொழியிலும் வடமொழியிலும் எழுதப்பட்டவை. சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டின் தமிழ்ப் பகுதியில், பழைய பாண்டியரைப் பற்றிக்

கூறும் பகுதியில், பாண்டியர் தமிழ்ச்சங்கம் வைத்ததும், அச் சங்கத்தில் மாபாரதம் தமிழில் பாடப்பட்டதும் ஆகிய செய்திகள் கூறப்படுகின்றன. அந்தப் பகுதி வருமாறு:—

“...............[illegible] மகாபாரதந் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் [illegible] கண்ட [illegible] தென்னவர் [illegible]...............”

இவ்வாறு [illegible] கூறுகின்றது. [illegible] பாரதம் [illegible] பாடப்

[illegible] “[illegible]” என்று [illegible]. [illegible] இந்தப் [illegible] இச் செய்திகளைக் கூறுகின்றன.

“தென்னவர்க்குத் [illegible] பாரதம் [illegible] தொண்டைமான் [illegible] பாரதம் [illegible]” (தொண்டைமண்டல [illegible] 13 ஆம் [illegible])

“பாண்ட [illegible] பதி [illegible]” ([illegible] 1 ஆம் [illegible]).

இவ்வாறு [illegible] பாரதம் [illegible] தமிழில் [illegible] பாரதம் [illegible] தெரி

கின்றன. எனவே, அடியார்க்குநல்லார் கூறுகிற இந்திரகாளியத்தை இயற்றிய யாமளேந்திரர் என்னும் பாரசவர் காளிபூசை செய்பவர் என்றும் யாமளநூலை அறிந்தவர் என்றும் தெரிகிறது. ஆனால், அவருடைய இயற்பெயர் தெரியவில்லை. இந்திரகாளியம், சிலப்பதிகார உரை எழுதிய அடியார்க்குநல்லார்க்கு உதவியாக இருந்தது. ஆனால், இந்த நூல் இப்போது கிடைக்கவில்லை. இந்நூலைப்பற்றிய வேறு செய்திகளும் தெரியவில்லை.

92. மதிவாணனார் நாடகத் தமிழ்நூல்

மதிவாணன் என்னும் புலவர் இயற்றியதாகலின் இந்நூலுக்கு இப்பெயர் வந்தது. சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் அடியார்க்குநல்லார் இந்நூலைப்பற்றி, "கடைச்சங்க மிரீஇய பாண்டியருள் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த முதனூல்களிலுள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்தியன்ற மதிவாணர் நாடகத் தமிழ்நூல்" என்று எழுதுகிறார். எனவே, இது கடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்ட நூலாகும்.

அடியார்க்குநல்லார் தமது உரையிலே இந்நாடகத் தமிழ் நூலிலிருந்து சில சூத்திரங்களை மேற்கோள் காட்டுகிறார். அவை வருமாறு:—

"அவைதாம்
நாடகப் பிரகரணப் பிரகரணம்
ஆடிய பிரகரணம் அங்கம் என்றே
ஓதுப நன்னூல் உணர்ந்திசி னோரே.

என்றார் மதிவாணனாரும்." (சிலம்பு: அரங்கேற்று காதை 13-ஆவது வரி, உரை மேற்கோள்).

"'முன்னிய வெழினிதான் மூன்று வகைப்படும்' என்றார் மதிவாணனார்." (சிலம்பு: அரங்கேற்று காதை 109 ஆம் வரி, உரை மேற்கோள்).

"பூராடம் கார்த்திகை பூரம் பரணியுடன்
சீரா திரையிட்டுச் சித்திரைசோ டேறுநேர்
மாசி யிடப மரிதுலை வான்கடகம்
பேரிய தேள்மிதுனம் பேச

என்றார் மதிவாணனாரும்." (சிலம்பு: அரங்கு, 123-ஆம் வரி, உரை மேற்கோள்.)

"இருவகை ராசிச் சென்றிவரி தேறிப்
பரவுந் தேவரைப் பரவுங் காலை

[illegible]
[illegible] யென்றும்
[illegible] குடையே யென்றும்
இரும்பனைத் [illegible] யென்றும்
[illegible] படையோ யென்றும்
[illegible] யென்றும்
[illegible]
[illegible] மொழிப.

என்றார் மதிவாணனார்." (சிலப்பு : கடலாடு. 39-ஆம் வரி. உரை மேற்கோள்)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

என்றார் மதிவாணனார்.

இந்நூல் இப்போது மறைந்துவிட்டது. இதுபற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

இந்த மேற்கோள்களை அன்றி, [illegible] இந் நூலாசிரியர் யார், இவர் எந்தக் காலத்தில் இருந்தவர் என்பது தெரியவில்லை. [illegible]

" [illegible]

“உலகியற் செய்யுட் கோதிய வளவையிற்
குறையவும் மிகப்பவுங் குறையா வாற்றல்
இருடிகண் மொழிதலி னாரிட மென்ப”

எனவும்,

“ஆரிடச் செய்யுள் பாடுதற் குரியோர்
கற்றோ ரறியா வறிவுமிக் குடையோர்
மூவகைக் காலப் பண்பு முறையுணரும்
ஆற்றல் சான்ற வருந்தவத் தோரே”

எனவும் சொன்னார் பாட்டியன் மரபுடையாராகலின்.”

“மனத்தது பாடு மாண்பி னோருஞ்
சினத்திற் கெடப்பாடுஞ் செல்வி யோரு
முனிக்கணச் செய்யுண் மொழியவும் பெறுப.

என்பது பாட்டியன் மரபு.” (யாப்பருங்கலம், செய்யுளியல், 40-ஆம் சூத்திர உரை மேற்கோள்).

“நான்கடி யொத்து வருவனவும், நான்கடியு மொவ்வாது வருவனவும், இரண்டடி யொத்து நான்கடியால் வருவனவும், பிறவாற்றால் வருவனவும், மாராச்சையும் மாராச்சாங்கிருதியும் முதலாகிய சாதியும் ஆரிடமும் பிரத்தார முதலாய ஆறு பிரத்தியமும்.................பாட்டியன்மரபு, பூதபுராண முதலாகிய தமிழ் நூலுள்ளும் புகுதியுடையார்வாய்க் கேட்டுக்கொள்க. அவை யீண்டுரைக்கிற் பெருகும்.” (யாப்பருங்கலம் ஒழிபியல், விருத்தியுரை.)

94. அகத்தியர் பாட்டியல்

பரஞ்சோதியார் இயற்றிய சிதம்பரப் பாட்டியலில்,

“பாமேவு தமிழ்ப் பொதியக் குறுமுனிவன் கூறும்
பாட்டியலைச் சுருக்கமதாய்ப் பகர்ந்திடுவேன் பாலே”

என்று கூறுகிறபடியினால், அகத்தியர் பாட்டியல் என்னும் ஒருநூல் இருந்ததென்பது தெரிகிறது. அன்றியும், பன்னிரு பாட்டியல் என்னும் நூலில், அகத்தியர் பாட்டியலிலிருந்து எடுக்கப்பட்ட இரண்டு சூத்திரங்கள் காணப்படுகின்றன. எனவே, அகத்தியர் பாட்டியல் என்னும் பெயருள்ள ஒரு செய்யுளிலக்கண நூல் இருந்ததென்பது ஐயமற விளங்குகிறது.

அகத்திய முனிவர் தம் பெயரால் அகத்தியம் என்னும் முத்தமிழ் இலக்கண நூலை இயற்றினார் என்பர். அது சிற்றகத்தியம் பேரகத்தியம் என்று இருவகைப்படும் எனவும் கூறுவர்.

(தொடரும்)

வள்ளுவத்தில் மருத்துவம்

[வித்துவான் திரு. செந்துறை முத்து]

உலகில் பல நாடுகளால் பல தத்துவங்கள் தோன்றின. இன்று நாட்டுக் காந்தி மகானின் தத்துவத்தைக் காந்தீயம் என்று பேசியும் எழுதியும் வருகின்றனர். அதுபோலவே [illegible] வள்ளுவரால் தொகுத்தளிக்கப்பட்ட தத்துவங்கள் அனைத்தும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே 'வள்ளுவம்' என்று வழங்கியும், வளர்ந்தும் வந்திருக்கின்றது. அதிலே, உலகம் வள்ளுவத்தில் காணப்படும் தத்துவங்கள் உலகிற்கே புதியது என்பதை அறிவுடையோர் அறிவர். அத் தத்துவங்கள் மக்களின் அன்றாட வாழ்க்கையில் அறநெறி பிறழாது சிறந்து விளங்கி உண்மை வாழ்க்கையை விளக்கும் கருவியாக உள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது.

இவ்வுலகவாழ்வின் இயற்கையில் எழும் இன்னல்கள் பல வாழும். அவை பிணி, வறுமை, பகை, கொலைப் பழக்கமே ஆகும். இவையிற்றை இல்லாதொழிக்கும் [illegible] வாழ வேண்டிய வழிமுறைகளைத் தான் வள்ளுவம் விளக்குகின்றது.

காட்டிலே மருந்தும் கண்டனர், அதைக் கொண்டு மனித இனத்தை அன்னையின் ஆதரித்து வருகின்றது. இப்படித் திகழ்வதால் மக்கள் பல பொருள்களை இயற்கையின் துணைகொண்டு தெளிகின்றது. இதனால் பல நூற்றாண்டுகள் பரந்துபட்டன. இன்றைய விஞ்ஞான உலகிலே மக்களிடையே பல [illegible] திறமைகளில் வென்று இன்றைய மருத்துவத் திறத்தை [illegible].

மக்களின் வாழ்க்கையில் பிணி வருவதால், பசிப்பிணி மிகக் கொடியதாகும். அதில் மக்கள் படும் துன்பமே பெரிது துன்பமாகும். பசிப் பிணிகளுக்கும் இப்பிணிகள் அடிப்படையாக அமைகின்றது. இதைத்தான் வள்ளுவர், வள்ளலார் முதலிய மகான்கள் விளக்கியுள்ளனர்.

வள்ளுவத்தில் பசிப்பிணியைப்பற்றிக் கூறியிருக்கும் பெருந் தெளிவினைப் பசிப்பிணியை நீக்குவதே மக்களாற்றலாம் தொண் டில் பெருந் தொண்டாகும். இப் பசிப்பிணி மனித இனத்தை மட்டுமின்றி மற்ற இனத்தையும் கொன்று அழிப்பதைக் காண் பதாகும். அத்துடன் மிகப்பெரும் அவ்வப்போது [illegible] ஆற்றலின் வாழ்க்கையில் ஒரு பெருத்த மாற்றத்தை உண்டாக்குகின்றது. மற்றைப் பிணிகளோ அத்தகைய மாற்றங்களை உண்டாக்குவ

தின்று. எனவே, பசிப்பிணி மட்டும் எல்லா உயிர்களிடத்தும் தோன்றும் பிணியாகும். இப் பிணியினும் மிஞ்சியதொரு பிணி இன்று என்பதை வள்ளுவத்தில் 'பசியென்னும் தீப்பிணி' என்று காண்பதோடன்றி அன்றாட வாழ்க்கையிலும் கண்டு வருகின்றோம்.

இக் கொடிய பிணிக்குரிய மருந்து யாதெனின், சோறும் நீருமேயாகும். எனவேதான், 'உண்டி கொடுத்தவர் உயிர்கொடுத் தவராவர்' என்று விளம்பினர் ஆன்றோர். அப் பிணியின் கொடுமையைக் கண்ட பெரியர் வள்ளலார் அவர்கள், அப் பிணியைக் கண்டு வெறுத்துக் கூறுமிடத்து:

குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண்அணி களையும் மாண்எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி.

என்றுவரும் மணிமேகலைப் பாட்டடிகளை எடுத்துக்கூறி, பின் தான் அதை நீக்குவான் வேண்டிப் பெருமுயற்சி செய்தார். பசியால் நலிந்து வரும் மக்களுக்குற்ற துன்பத்தை நீக்கத் தருமச்சாலை ஒன்று அமைக்க அரும்பாடுபட்டார் என்று

வள்ளுவத்தை நோக்குமிடத்து, இல்லறத்தில் வாழ்வொரு வன் தன்னிடமுள்ள பொருளை இல்லையென்று யாசிக்கும் மக்களுக்கு ஈந்தருள வேண்டும்; அங்ஙனம் கொடுத்து வாழு மிடத்து எதிர் பயன் கருதல் கூடாது; பயன் கருதிக் கொடுத் தல், பசிப்பிணிக்குரிய மருந்தாகாது என்று விளக்கப்பட்டுள் ளதைக் காண்கின்றோம். இம்முறை நாம் மகனிடம் உண்டென் பதைக் கூறவந்த வள்ளுவர்,

"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள"

என்று கூறிச் சென்றார். ஒருவன் எவ்வளவுதான் பொருளைச் சேர்த்து வைத்தாலும், வறியவரின் கடும் பசியையாயினும் நீக்க வேண்டும்: அங்ஙனம் செய்வதுதான் பிற்காலத்தில் தான் வாழ்வதற்கு அப்பொருளைச் சேர்த்துவைக்கு மிடமாகும். எனவே, தான் பெற்ற பொருள்களை இல்லையென்று, அன்பு மொழியால், இனிய முகத்துடன் வரவேற்று அருள் கூர்ந்த பார்வையாளனாய், அமுதான உணவையும் பகிர்ந்து பருத்துவா னும் பண்புடையவனிடம் பசியென்னும் தீப்பிணி தீண்டுவ தில்லை யென்பதை,

"பாற்றனன் மாழ்கு வலனைப் பிணியென்னும்
தீப்பிணி நீண்டல் அரிது"

என்று வள்ளுவத்தில் நீட்டப்பட்டுள்ளது. இங்ஙனம் வள்ளு வத்தில் பசியென்னும் பிணியையும், அதன் மருந்தையும், அதை நீக்கும் மருத்துவனையும் கூறப்பட்டுள்ள தன்மை தனிச்சிறப் புடையதென்பதை எவரும் மறுக்கார். மேலும் மெய்ம் மொழியின் வாயினின்று தெரிக்க மென்மொழிச் சொல்லாகிய,

"ஆர்த்தலின் இன்றாக மன்ற கிரப்பிய
நாமே நம்பியர் உணவு"

என்ற சொல்லை அறிந்து, அதன் நன்பொருளை நன்கு ஆய்ந்து உள்ளத்தில் இருத்தி, உறுதியான கொள்கையில் நின்று, உலகிற்கு ஒப்பற்றவனாய், பிறர் கலக்கத்தைப் போக்கி, பிறர் வாழ்வையே தன் வாழ்வாகக் கருதி வாழ்க்கை நெறிப் புகழுடன் வாழ்வு விளங்கிய ஒரு மருத்துவனை வள்ளுவம் நிலைநிறுத்த விழைகின்றான். அவன் யாரெனின் : அவன் தான் பண்பால் உயர்ந்த பெருமகன் !

அவன் எங்குப் பிறந்தான், வாழ்ந்தான் என்றறிய முடியா வகை இருப்பினும், பொய்யாது தான் பொய்யாக் காவிரி வழிச் சோழநாட்டுக் கண்ணே, காவிரியாறுவில் இருந்து என்னுரு சிறப்பர் இருந்தது. அப்பதியின்கண் ஆதிரைச்செல்வன் ஆன ஆன்மிகட்டுருண்டு பண்பாளன் என்ற பெருமகன் தோன் றினன். இவன் படை வலிமையினும் கொடை வலிமையினும் மிகச் சிறந்து விளங்கினன்

புவியுற்ற பனிதவிடப் பொருந்த மேலாய பெருந்தெரு வாயில் வீரம், வல்லமை இரண்டும் இரண்டறக் கலந்து காணப்பெற்றன. அவன் பண்பை அப்புறமே, சமையுமாய செயற்கருங்குணங்களைச் செய்தவனாகும் நிலைக்க இயலாமையின் மிக்குக் காணப்பட்டான். 'சோழநாடு சோறுடைத்து' என் றொரு ஆன்றோர் மொழியுமுண்டன்றோ ! அதன்படி சோழநாட்டு மருத்துவன் பண்பால் என்று சொல்லத்தக்க நிலை யில் மக்களுக்கு உதவிப்பணிபுரிந்து செய்து உயர்ந்து விளங்கினன் என்று வரலாற்றின், இப்பக்கத்திலும் காணமுடிகின்றது.

அப்படிப்பட்டவனுக்குத் தன் மனைவிமார்களும், அழகும், செல் வாக்கும், திடமும் அமைவுடையன் ! மருத்துவக் கழக ளன் ! மருத்துவக் கலைஞன் ! மருத்துவக் குறிப்புகள் என்று அறிஞர் கொண்டாடினர். அன்னவன் கருணையுள்ள மும் கனிந்த பார்வையுமுடையவனன்றோ ! ஆகையால், அவை

யனைத்தையும் தனக்கெனப் பேணாது வாழத் தொடங்கினான்; வறியோரின் வாழ்க்கையை வளமாக்கினான்.

அன்னானின் குடிக்கண் அடி வைக்கும் பாணராயினும், கூத்தராயினும், புலவராயினும், மற்று யாவராயினும் பண்ணனுடைய தடாகத்தில் நீராடி, பூங்காவினுள் புகுந்து மலர்சூடி, தோப்பினுள்ளும் காவினுள்ளும் நுழைந்து பழுத்த கனிகளைப் பறித்து உண்பர். இங்ஙனம் உண்டுசென்ற மக்கள் பலராவர். அப்பலரும் பண்ணனின் பெருங்குணநலனை நோக்கி "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் பண்ணன்" எனவும் "பசிப்பிணி மருத்துவன் பண்ணன்" எனவும் புகழ்ந்தேத்திச் சென்றனர்

புலவனாகவும் பேரரசனாகவும் விளங்கிய குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பவன் பண்ணனைப் புகழ்ந்து பாடிய பாடலை,

"யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய"

என்ற வாழ்த்துடனேயே தொடங்கிப் பாடினார். அப்பாட்டின் கண் பண்ணனின் குடியைச் சிறப்பிக்குமிடத்து, கனி பழுத்த மரத்தின்கண் பறவைகள் ஒலித்தாற்போல் பண்ணனுடைய இல்லத்தில் உணவு உண்பவர்களின் ஆரவாரம் கேட்குமெனவும், மழைபெய்யும் காலத்தைக் கண்டு தன் முட்டைகளைக் கொண்டு திட்டையேறும் சிற்றெறும்பின் வரிசையைப்போல் சுற்றத்துடன் கூடிய பாண்சிறுவர்கள் சோற்றுத்திரளுடன் கூடிய கையுடன் வரிசை வரிசையாகச் செல்வர் எனவும் அழகாக எடுத்துக் கூறுகின்றனர்.

மற்றும் தன் பாடலில் கிள்ளிவளவன் "யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய" என்று பாடிய அடியின் பொருளைச் சிறிது நோக்கல் இன்றியமையாதது. யான் வாழும் நாள்களையும் பண்ணன் பெற்றுப் பன்னாள் வாழ்வானாக என்று கூறி மகிழ்கின்றார்; நாட்டில் வாழும் உயிர்களுக்கெல்லாம் தலைவன், நாடு காவலன் அங்ஙனம் பாடுகின்றானெனில் பண்ணன்பால் அவன் கொண்டிருந்த பேரன்புதான் என்னே! தன் வாழ்நாளையும் அளிக்க விரும்பினானெனில் பண்ணனின் அருமைதான் என்னே! எனவே தான் "பசிப்பிணி மருத்துவன் இல்லம்" என்று பண்ணனின்
...நப் பட்டப்பெயர் அமைந்தது.

இப்பெருமகன் வள்ளுவத்தில் கூறியவண்ணம் பசியென்னும் தீப்பிணியைப் போக்கி மக்களைக் காத்த மருத்துவன் என்பது நம்மனோர்க்குத் தெள்ளத்தெளிய விளங்குகின்றதன்றோ!

ஒப்பற்ற முப்பற்று

[நாகை, திரு. வேலன்]

ஒன்றினை யொன்று பற்றி உறைவதாம்
உயிரிலே அன்பின் வழியது ஆகுமாம்
உலகின் இயற்கை என்பதை உணரின்
ஒப்பிலா மூன்று பற்றுகள் உலகில்
அடிப்படை யாகும் தெற்றென விளங்கும்
அம்முப் பற்றில் தாய்மொழிப் பற்றே
அடிமுத லாக அமைவது என்பீர்
மொழிப்பற் றதுவே முதியது வாகி
இனப்பற் றெனவோர் இனிமையாப் பற்றும்
தனிவீட் டோங்கித் தழைத்திட லாகும்
தாய்மொழிப் பற்றும் தன்னினப் பற்றும்
தழைத்திடின் நாட்டுப் பற்றெனும் மரபும்
உயர்ந்திடக் காண்போம் உண்மையே அன்றோ?
உயர்த்திடின் அம்மூன் றொன்றே உயிர்த்திடக்
காட்டி வல்லமை யுற்றிடின் மனிதராம்.
எனவே என்னருந் தமிழரே கேளீர்
உண்மையை நாட்டுக உயர்தனிச் செம்மொழி
உயர்நிலை எய்திட எண்ணுவை ஆயின்
இதனைத் தன்னில் இனப்பற் றோங்க
நாட்டுப் பற்றில் நாட்டஞ் செலுத்து
இவ்விரு பற்றும் இல்லா மொழியின்
இல்லை உன்மொழிக் கேற்றம் அறிவாய்
ஒப்பிலா இந்த முப்பெரும் பற்றும்
ஒன்றிப் போற்று உண்மை விளங்கிட
அடைவாய் அடைவாய் அழிவில் வீடே.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) தமிழ் மொழியின் மாண்பு

தமிழ் மொழியின் மாண்பு குறித்து 31-7-54 'இந்து' இதழில் சி. துன்ஹூன்ராஜா என்பவர் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதன் மொழி பெயர்ப்பு கீழே தரப்படுகிறது :—

தமிழ்மொழி மாண்புமிக்கதோர் மொழி. இதற்குக் காரணம் அது பழைமையானது, அல்லது அது வளமான சொற்றொடர்களைக் கொண்டது என்பதல்ல. அதனிடம் சிறந்த இலக்கியங்கள் உள்ளன. இதுவே தமிழின் சிறப்புக்குக் காரணம். மொழிகள் பல நூற்றாண்டுகள் வாழலாம்; பிற மொழிகளினின்று சொற்களைக் கடன் வாங்கலாம்; ஆனால், இவற்றின்மூலம் அவை சிறந்தவை ஆகிவிடமுடியாது. அவை கருத்தைச் சரிவர வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றவை ஆகிவிடமுடியாது. தனித்த ஒருசொல் தனித்த ஒரு பொருளைத் தந்துவிடமுடியாது. அதனை ஒரு சொற்றொடரில் அமைத்துப் பார்க்கின்ற போதுதான் அதன் நிலைக்குரிய பொருள் விளங்கும். ஒரே சொல் பல சூழ்நிலைகளில் பல பொருளைத் தரக்கூடும். எனவே, சொற்களின் பொருட் செறிவைத் தெளிய வைப்பவை, அகராதிகள் அல்ல. கற்றறிந்த பெரியோர்கள் இடம், பொருள், ஏவல்களுக்கேற்பக் கொள்ளும் பொருளே முடிந்த பொருளாகும்.

வடமொழிக் கலப்பால் தமிழ் ஆக்கம் பெறுவதாகப் பேசுகிறவர்களெல்லாம், தமிழ்மொழியால் வடமொழி எத்துணை வளமும் வாழ்வும் பெற்றது என்பதை வலியுறுத்தவோ சுட்டிக்காட்டவோ தவறிவிடுகிறார்கள். வடமொழியாக்கத்தை முழு அளவில் காணவேண்டுமானால், அதற்குத் தமிழை நன்கு கற்றல் வேண்டும். போதிய தமிழ்க்கல்வி இல்லாமல் வடமொழியை அறிய இயலாது. வேதகால வடமொழியில் திராவிடமொழி நிறைய ஆதிக்கம் பெற்றிருந்தது. மற்ற ஆரிய மொழிகளுக்கும் பண்டைய சமஸ்கிருதத்துக்கும் நிறைய வேற்றுமைகள் உண்டு. பண்டை வடமொழி திராவிட மொழிகளுடன் நெருங்கிய தொடர்புடையது. சமஸ்கிருதத்தில் திராவிடமொழி கலப்பின் காரணமாகவே வட இந்திய ஆரிய மொழிகளில் மாறுதல்கள் ஏற்பட்டன.

இதுபோலவே, இந்தியாவு அயல்நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புக்கும் வடமொழியைவிடத் தமிழ்மொழியே முதன்மைபெற்று விளங்கிற்று எனலாம். அயல்நாட்டுச் சொற்களான Rice அரிசி, Sugar சருக்கரை, Sandal சந்தனம் முதலியன திராவிட மொழிகளிலிருந்து கடன் வாங்கப்பெற்றவையேயாகும். இதற்கெல்லாம் காரணம் பண்டைத் தமிழ்ப் புலவர்களின் அறிவாற்றலேயாம். அவர்களுடைய

கருத்துக்களும், அக்கருத்துக்களை அவர்கள் வெளியிட்ட முறையுமே இதற்கு உறுதுணை புரிந்தன.

எனவே, சொற்பொருட்களைக் கொண்டு மாத்திரம் தமிழை இந்தி முதலிய பிறமொழிகளோடு ஒப்பிடுவது சரியல்ல. தமிழ் மொழியைப் போல் பிறமொழிகளில் கருத்துவளம் இல்லை என்பதே ஏற்ற காரண மாகும்.

(உ) தேவகோட்டையில் அருள்நெறி மாநாடு

அருள்நெறி மாநாடு தேவகோட்டையில் 11-7-57-ஆம் நாள் திரு. எஸ். பி. ஆதித்தனார் தலைமையில் நடந்தது. இன்றியமையாத பல முடிவுகள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டன. பல அறிஞர்கள் அருள்நெறி பற்றிய சொற்பொழிவாற்றினார்கள். குன்றக்குடி அடிகளாரின் வாழ்த்துரையுடன் திருக்கூட்டச் செயலாளர் திரு. அரு. அரு. சொ. காசிநாதன் செட்டியார் நன்றிகூற முடிந்தது.

(ஊ) ஆராய்ச்சியாளர் உயர் தொல்காப்பியத் தொண்டு

இலக்கணத்தில் வல்லுநர் திரு. [illegible] அவர்கள், தம் இருபத்தைந்தாண்டுகளாகப் பல தொண்டுகள் செய்து வருகின்றனர். அவற்றுள் ஒன்று, [illegible] இருந்து உயர் தொல்காப்பியப் பொழிப்பைத் தாம் கற்றுக் கொண்டு, அதற்கு 1957-இல் தொடக்கவிழா நடத்தி அதற்குக் 'குமரகுருபரர் சபையின் உயர் தொல்காப்பியம்' எனப் பெயரளித்து நடத்திவர முயல்கின்றனர்.

குறிப்பு: அடிகளாரின் பொழிப்புரையும், கட்டுரைகளும், தெளிவுரையும் [illegible] பல்லாண்டுகள் செய்து அடிகளார் இருப்பதன் பயன் [illegible].

(எ) மாணவர் ஆராய்ச்சி மன்றத் திறப்புவிழா

[illegible] இந்துமத பாடசாலையின் [illegible] மாணவர் இல்லத்தில், மாணவர் பாராளுமன்றத் திறப்புவிழா சென்னை மாநில அரிசன வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. B. பரமேசுவரன் அவர்கள் தலைமையில் 25-8-57-ல் நடந்தது.

குறிப்பு: அருங்கலை மக்களை இளைஞர் மாணவர்கள், இவ் விளம்பருவத்திலே நாட்டு எல்லைகளை அறிந்து [illegible] பயிலும் முறையில் இவ்வாறு மன்றத்தைத் தொடங்கிப் பயிற்சியளிக்கும் பாடசாலை முதல்வரின் அருமுயற்சியை வாழ்த்துகின்றோம்; பெரிதும் பாராட்டுகின்றோம்.

மதிப்புரை

(க) தமிழிசைப் பாடல்கள் பத்தொன்பதாம் தொகுதி

திருப்புகழ் சுரதாளக் குறிப்புடன்:

[இசைப்படுத்தியவர், காஞ்சிபுரம் இசைப்பெரும் புலவர் திரு. நாயனாப்பிள்ளையவர்கள். வெளியிட்டது, அண்ணாமலைப் பல்கலைக் கழகம். முன்னுரையுடன் உ0ச பக்கம்.]

இசை, கல்லையும் உருக்கும் கனிவுடையது. அதிலும் தமிழிசை, கற்பார், கேட்பார் நெஞ்சைக் கரைக்கும் நீர்மையது. அவ்விசை பல்வகைப் பாக்களால் இயன்று படர்வது; அவற்றுள் வண்ணப் பாக்கள், இசையின் ஏற்றத்தை மிகுவிப்பன; இப்பாக்களால் இயன்றன, செவ்வேற்சேயின் திருவருள்பெற்ற அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாக்கள். இவை, இசை இன்பத்தோடு இறை இன்பமும் கூட்டுவிப்பன. இத்தகைய தமிழிசைப் பாடல்களாகிய திருப்புகழில் நூற்றொரு பாடல்களுக்கு இராகம் மேளம் தாளம் இவைகளின் குறிப்புக்களுடன், அவைகட்கேற்ற குறியீடுகளும் அமைத்து அழகிய முறையுடன் வெளியிட்டுள்ளனர். இப்பாடல் நூற்றொன்றில் முதல் (௫௰) பாடல்களுக்குக் காஞ்சிபுரம் இசைப்பெரும் புலவர் திரு. நாயனாப் பிள்ளை யென்னும் சுப்பிரமணிய பிள்ளையவர்களாலும், பின் (௫௧) பாடல்களுக்கு இசைமன்னர் சித்தூர்ச் சுப்பிரமணிய பிள்ளையவர்களாலும் சுர தாளக் குறிப்புக்கள் எழுதப்பெற்று வெளிவந்துள்ளது. கண்கவர் வனப்புடன் மிளிர்கின்றது.

தமிழிசை மங்கிக்கிடந்த நாளில் அதற்கு உயிரூட்டியவர்கள் இராசா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள். அவர்கள் நிறுவிய பல்கலைக் கழகத்தில் இத்தகைய இசை நூல்கள் வெளிவருவது போற்றற்குரியதே. இசைவாணரும் இசைச் சுவைஞரும் இசைபயில்வோரும் கற்றுத் துறைபோக வேண்டிய அரிய நூல்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், இதுபோன்ற அரிய பெரிய இசை நூல்களை வெளியிடுந் துறையில் இன்னும் ஊக்கமுற்று நூல்கள் வெளியிட்டுத் தமிழிசையை உலக அரங்கில் நடமாடச் செய்யும் வாய்ப்பை அளிக்குமாறு வேண்டுகின்றோம்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.



கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்

தோற்றம் :	மறைவு :
1876	26.9.1954



சிலம்பு ௨௯	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, புரட்டாசி அக்டோபர், 1954.	பரல் ௨

ஓம்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் மறைவு

பிறப்பு

புலமை மிகப்படைத்தற்குரிய புண்ணியர் புகழ்பெற்ற நல்ல குடும்பத்துத் தோன்றுதல் இயல்பு. அம்முறைப்படி நம் கவிமணி அவர்களும் இருபாற்புலமையும் ஒருங்கமைந்த சிறந்த வேளாண் குலத்து அருமகனாய்த் தோன்றினர். இத்தகைய நற்குடும்பம் வாழ்ந்தவூர் புத்தேரி ஆகும். இவ்வூர் என்னும் பொன்னூர்ச் செந்தமிழ்நாட்டு நாஞ்சில்நாட்டில் நாகர்கோவிற்கு அண்மையில் உள்ளது. புத்தேரி என்னும் சொல் புத்தேரி என மருவிற்றென்ப. புதுமை ஏரி புத்தேரி என வழங்குவதாயிற்று என்பதாம் பொருத்தம்.

அவ்வூரில் சான்றாண்மை மிக்க சிவதாணுப் பிள்ளை அவர்கட்கும், அவர்தம் கற்பிற்சிறந்த பொற்புடை மனைவியார் ஆதி இலட்சுமி அம்மையார்க்கும் அன்பிருவர் பெருந்தவமும் ஒருங்கு கூடி ஓர் உருவாய் அருமகன் நம் கவிமணி அவர்கள் தோன்றினர். இவர்தம் சிறப்புகளே பிற்காலச் சிறப்புகளுக்கின் அடிகோலாய் அமைந்திருந்தது. ஒவ்வொருவரும் மனையறத்தில் இன்பம் உறும் வகை பொதுத் தாய் மொழியாம் செந்தமிழும் சான்றோராம் சைவமும் மிகப் பெருகி எல்லாவுலகமும் இனிதே இன்புற்று வாழ்வதற்கேயாம். இவர் பிறந்த நாள் தாது ஆண்டு (1876) ஆடித்திங்கள் பதினைந்தாம் நாளாகும்.

ஈன்றார் மாண்பு

தந்தையார் சிவதாணுப் பிள்ளையவர்கள் செந்தமிழ்ப் புலமையும், சிவனெறிப்பற்றும், ஆங்கில அறிவும் பாங்குறக் கொண்டவர். அழகியபாண்டியபுரம் உப்புப் பண்டகசாலையில் அலுவல் பார்த்து வந்தனர். அவ் அலுவலின்கண் உண்மையும், ஊக்கமும், ஒல்லும் வாயெல்லாம் ஓவா உழைப்பும், நடுநிலையும் பூண்டு நல்லார் மதிக்க ஒழுகினர். அவர்தம் மனைவியாரும் பெயருக்கு ஏற்பச் சீரிய திருமகளாய் விருந்துபேணல் முதலியவற்றால் மனையறம் பெருக்கி மாண்புடன் வாழ்ந்தனர். இவ் அம்மையார் நாகபட்டினம் வேளாண் விழுத்திணைப் பிறந்தவர். "வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிரு"ப்பவராவர் என்பது உலகறிந்தது ஒன்று. வள்ளன்மை பிறர்க்கென வாழும் உள்ளம் உடைமை. இவ் அம்மையார் சிவநேயமும், தமிழார்வமும், தவஒழுக்கமும், அடியார்ப்பற்றும் முடிமணியாகக் கொண்டு ஒழுகினர்.

கல்வி

நம் கவிமணியார் மிகவும் செல்வமாக வளர்ந்து வந்தனர். உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் நல்லநாள் கொண்டு எழுத்தறிவிக்கப்பெற்றனர். எழுத்தறிவித்தல் ஏடு தொடங்குதல். கல்வியின் பண்பைச் சேக்கிழார் அடிகள் உள்ளவாறுணர்த்தும் அருண்மொழி வருமாறு :

" மருள்நீக்கி யார்சென்னி மயிர் நீக்கும் மணவினையும்
தெருள்நீர்ப்பல் மாந்தரெலாம் மகிழ்சிறப்பச் செய்ததற்பின்
பொருள்நீத்தம் கொளவீசிப் புலன்கொளுவ மனமுகிழ்த்த
சுருள் நீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்குவித்தார்."

—கஉ. திருநாவுக்கரசர் புராணம், உ0.

கலைபயில் தொடக்கத்தே முன்னைத் தொடர்பாலும், அன்னை அத்தர் அரும்பண்பாலும் செந்தமிழ்மாட்டும், செய்யுட்டிறத்தும் இனித்ததோர் தனிப்பற்று உண்டாயது. இஃது,

" ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து." —திருக்குறள், ௧௬௮.

என்பதால் வலியுறும்.

நல்ல பாட்டுக்கள் என்றால் மிகவும் கருத்தூன்றிக் கேட்பர். பெரிதும் உவப்பர். அஞ்ஞான்று தமிழ்ப் பெருமக்களும், செல்வர்களும் தாய்மொழிக்கண் வாய்மொழி அகலாப் பெரும் புலவர்களை மிகவும் போற்றிப் புகழ்ந்து ஓம்பிவந்த பொற்காலம். அதனால் நல்லிசைப் புலவர்கள் நன்மதிப்பு நாடெங்கும் இயல்

பாகவே பரவியிருந்தது. அம்மதிப்பு நம் கவிமணியவர்கள்பாலும் இயல்பாகவே அமைந்திருந்தது. புலவர்கள் பொற்கிழி, பொன்னாடை, போனகம், நன்னிலம், மாளிகை பலவும் பெற்று வாழ்ந்திருந்தனர். பாண்டி நாட்டுப் புலவர் ஒருவர் நாஞ்சில் நாடு நண்ணினர். தம் புலமையால் பரிசு பெற எண்ணினர். புலவர்ப் போற்றும் பாவலராம் நம் கவிமணியின் தந்தையார் சிவதாணுப் பிள்ளையவர்கள் அப் புலவர் பெருமானைப் பெரிதும் நல்வரவேற்றுத் தம் மனையகத்து இருத்தினராய்த் தக்கவேண்டுவன நல்கிப் போற்றி வந்தனர். புலவர் பெருமகனார் சிவதாணுப் பிள்ளையவர்களை மெய்யாகப் புகழ்ந்து பொய்யாப் பாமாலை சூட்டினர். அப்பாட்டினைத் தந்தையார் அருமைமகனார்க்குப் படித்துக் காட்டினர். அதனைக் கேட்ட நம் கவிமணி உடனே தாமும் ஓர் அரும்பெறற் பாட்டியாத்துத் தந்தையார்க்குச் சூட்டினர். அச்செயல் மிகவும் இளமைப் பருவத்து நிகழ்ந்தது. அதனால், ஒரு சிலவே நம் கவிமணியின் நினைவில் இன்றுகாறும் நின்றிருந்தன:

> "நவகோடி நாராயணன்...உப்பும் பண்டசாலைக்குத்
> சிவதாணுப் பிள்ளைக்கனுகூலன், வீரபாகம்மை தேவிதானே..."

பாட்டனார் மாண்பு

நம் கவிமணியாரின் பாட்டனார் தாமரைக்குளம் என்ற ஊரில் இருந்தனர். நிரம்பிய தமிழ்ப் புலமை வாய்ந்தவர். தம் பெயரனாராம் நம் கவிமணியைப் பெரிதும் நேசித்து வந்தனர். பல நாளும் தம்முடனே உறையும்படி செய்தனர். வேண்டுவ நல்கி விழைவுடன் போற்றி வந்தனர். தம் அருகிலேயே துயிலுமாறு பயிற்றி வந்தனர். பாட்டனார் துயிலுறுது பாட்டுப் பாடும் செயலில் எப்பொழுதும் பாடிக்கொண்டே இருப்பர். அப்பாட்டுக்கள் அனைத்தும் அவர் புதுவதாகப் புனையும் பொற்பாட்டுக்களேயாம். நம் கவிமணி தம் அருமைப் பாட்டனாரைப் பார்த்து "பாட்டையா ஏன் என் தூக்கத்தையும் கெடுத்துவிடாது முணுமுணுத்துக்கொண்டிருக்கிறீர்கள்" என்று அடுத்தடுத்து வினவுவர். அவரும் அன்புடன் புன்னகை பூத்த முகத்தினராய், "அப்பா இது முணுமுணுப்பல்ல புத்தம் புதிய பாட்டுக்கள் தோன்றும்போது உண்டாம் மெல்லொலி" என்று விடையிறுப்பர். இதைக் கேட்டதும் நம் கவிமணிக்குத் தாமும் அவ்வாறு பாடவேண்டும் என்னும் புத்துணர்ச்சியும் பெற்றது. பாட்டனார் பாடி முடித்த பெருநூல் "காசியாத்திரை" என்னும் அருநூலாகும். இந்நிகழ்ச்சி நம் கவிமணி பிற்காலப் புலவர் மணியாவதற்கோர் எழுச்சித்துணையாய் இருந்தது. இதிலிருந்து

சூழ்வும் துணையும் ஒருவர் வாழ்வின் அடிப்படைக் காவலாகும் லன்பது நன்கு துணியப்படும்.

ஆங்கிலப் படிப்பு

நம் கவிமணியார்க்குத் தந்தையாரும் பாட்டனாரும் முறையே பள்ளிப்படிப்புடன் புலமைப்படிப்பின் வேட்கையும், புலமைப் படிப்பும் நாளும் ஓங்கப் போதித்துவருவாராயினர். அம்மட்டோ! அஞ்ஞான்று தேரூரைச் சார்ந்த வாணத்திட்டில் செந்தமிழும், சித்தாந்த சைவமும் தேயமெல்லாம் ஓங்க ஒல்லும் வகை ஓவாது உழைத்துப் பெரும்புகழ்கொண்டு திகழும் திருவாவடுதுறைத் திருமடம் ஒன்று இன்றும் உளது. அஞ்ஞான்று அத் திருமடத்து வீற்றிருந்து ஆட்சிபுரிந்த அடிகள் சிவத்திரு சாந்தலிங்கத் தம்பிரானவர். அவ்வடிகளார் தென்மொழி வடமொழி முதலிய பன்மொழி வல்லுநர். சித்தாந்தமும் திருமுறையும் சிறக்கவுணர்ந்த செம்மலார். அழுக்கிலாத் துறவடக்கம் அறிவொடு அருச்சித்தல் ஆதி வழுக்கிலாத் தவ ஒழுக்கமுடையார். அவ்வடிகள்பால் நம் கவிமணி தமிழ்ப் புலமைப்படிப்பு முற்றாக ஓதியுணர்ந்தனர்.

நம் கவிமணியவர்கள் ஆங்கிலப்பள்ளியில் சேர்ந்து மெட்ரிகுலேசன் தேர்வில் மிக எளிமையாகத் தேறினர். பின் கல்லூரியில் இளம்புலமை (F. A.) வகுப்பிற் சேர்ந்து கற்றுவந்தார். ஆங்கிலக்கல்வி கற்குங்காலத்தும் ஓங்கிய சிவநெறிப்பற்றும், பாங்குறு திருநீற்றுப்பொலிவும், திருமுறை சித்தாந்தம் ஓதலும் முதலாய தவஒழுக்கமுடையராய்த் திகழ்ந்தனர். ஆசிரியர்மாட்டு அன்பும் பணிவும் இன்சொல்லும் அணிபெனப் பூண்டொழுகினர். உடன்பயில் மாணவர்பால் கனிவும், ஆர்வமும், சுட்டுரை வன்மையும், உளமமர் நண்பும், ஒற்றுமைப் பண்பும் உளராய் விளங்கினர். திருமண நிகழ்ச்சி காரணமாக ஆங்கிலப் படிப்பு அவ்வளவில் அமைந்தது.

தமிழ்க்கவி யாற்றல்

தூய தமிழ்ப்புலமை வாய்ந்தார் பலரும் சிவபெருமான் திருவருளும், மெய்யடியார் தலையளியும், சான்றோரிணக்கமும் கைவரப்பெற்றவராய்த் திகழ்வது கண்கூடு. அதனால் அவர் தம் வாய்மொழிப் பாக்கள் இயல்பாகவே ஆணை கிரம்பிய மறைமொழியாகின்றன. இவ்வுண்மை:

> "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப." —தொல். பொ. ௪௮௦.

என்னும் தொல்காப்பியச் செழுமறையானும்,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்." —திருக்குறள், ௨அ.

என்னும் திருக்குறள் பொதுமறையானும் நன்கு பெறப்படும்.

இம்முறையில் நம் கனிமணியவர்கள் அடிகளார்பால் தமிழ்ப் புலமைப்பாடிப்புப் படிக்குங்கால் ஆசிரிய அடிகளாரின் ஆணைவழிநின்று ஒரு மறைக்கனி பாடினர். அம் மறையாற்றலால் பாடப்பட்டோன் உடன் மாண்டனன். அடிகளாரும் கனிமணியவர்களின் நாவன்மையை வாயாரப் புகழ்ந்து வாழ்த்தினர். அக்கனியின் சில தொடர்களே கனிமணி அவர்கள் நினைவிருந்து வெளிப்போந்தன. அவை வருமாறு:

"செந்நெறிய வழிநின்றவை கொல்லக்கொம்பிடாது
இந்நிலையன் விட்டொழிய சபோற்றிக் கண்ணுறுமே."

என்பன. இதற்குரிய காரணம் வருமாறு:

அடிகளார் மதுரையிலுள்ள கா. போற்றிக்கண் என்பவனிடம் இயமணி வாங்கியனுப்பப் பணங்கொடுத்தனர். அவன் வல்லார் முதல் எல்லாரையும் ஏமாற்றும் வல்லான். நல்லார் போல் நடிக்கும் வாய்ந்தகா பொல்லான். அத்தகைத் தீயோன் அடிகளாரையும் ஏமாற்றிவிட்டனன். அடிகளார்க்குச் சிறிது வருத்தம் ஏற்பட்டது. அவ்வருத்தம் வெகுளிக்கு அடிப்படையாயது.

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது." —திருக்குறள், ௨௯.

என்பது செந்தமிழ்ப் பொதுமறையல்லவா? அதுபோல் அடிகளார் வெகுளியும் நம் கனிமணியவர்களைத் தூண்டி மேற்கூறிய மறைக்கனியாகப் போந்தது. அக்கனி பாடத் தொடங்கிய போதே குறித்த கா. போற்றிக்கண் மாறுதலெய்தினன். யாவர்களும் கனிமணியின் கனியாற்றலை வியந்தனர்.

வெறுக்கை

ஆருயிர் உடைமைக் கைக்கொள்ளவேண்டிய அகக்கல்வி இருமுறை இயற்கைக் கருவிய பெறுதற் கல்வியேயாம். அதற்கு வேண்டும் அடிப்படை உணர்வும், ஒழுக்கமும், ஆற்றலும், பயிற்சியும் அளிப்பது வெறுக்கையேயாம். அத்தகைய வெறுக்கையினைத் திருநெல்வேலி மறைத்திரு. உமைபொருபாகக் குருக்களிடம் பெற்றுக்கொண்டனர். இத்தாக்க மையச்செலாய் ஒழுகினர்.

நம் கவிமணியவர்கள் சிவதீக்கை பெற்றமையினை மகிழ்ந்து கூறும் சொல்லும் பொருளும், எளிமையும் இனிமையும், திட்பமும் நுட்பமும் செறிந்த வெண்பா வருமாறு :

வேறும் ஒருதுணையான் வேண்டுவனோ வேணுவனம்
தேறும்உமை யோர்பாகத் தேசிகனே—கூறுமெனக்
கெய்யாப் பிறவி இருளகல நீயளித்த
பொய்யா விளக்கிருக்கும் போது.

குடும்ப வாழ்க்கை

கற்பும், பொற்பும், கவினும் நிறைந்த உமையம்மை என்ற நங்கையினைக் கடவுளருளால் திருமணம் செய்துகொண்டு அறவோர்க் களித்தலும், அந்தணரோம்பலும், துறவோர்க் கெதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும், நம்பர் திருவடியார்கட்கு வேண்டுவ நல்கலும், சுற்றம் ஓம்பலும், கற்றவர்ப் போற்றலும், கற்புநிறை காத்தலும், மக்கட் பேணலும், சிவவழிபாடும், தவநெறி ஒழுக்கம் கைவிடாதியற்றலும் முதலிய வற்றால் மாண்டகுணஞ்சேர் மங்கல மனைவியுடன் ஞானிலம்புகழ் மேனிலம் வாழ்ந்த, 'காலுணவாகச் சுடரொடு கொட்கும் முனிவரும் மருள' மனையறம் பேணிவந்தனர். இவர்தம் மனையறச் சிறப்பு பண்டைச் செந்தமிழ்ச் சான்றோரின் ஓரிய வாழ்க்கையினை நினைவூட்டும் நீர்மையது. அவ்வாழ்க்கை பலவற்றுள்ளும் இரண்டொன்றை ஈண்டுக்காட்டுதும் :

"கந்துமுனிந் துயிர்க்கும் யானையொடு பணைமுனிந்து
காலியற் புரவி ஆலும் ஆங்கண்
மணன்மலி முற்றம் புக்க சான்றோர்
உண்ணா ராயினும் தன்னொடு சூளுற்று
உ. உண்மென இரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்." —புறம், ௧௭௮.

என்னும் இச் செய்யுட்கிணைய நம் கவிமணியவர்களும் அம்மையாரும் அகனமர்ந்த அன்பினராய் விருந்து பேணுவதுடன் விருந்தினரைக் கனிந்து நோக்கி உள்ளங்குழைந்து இனிய குரலில் "சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள், முழுவதும் சாப்பிடுங்கள்; அப்படியானால்தான் எங்கள் மனம் நிறைவுறும்; மகிழ்வு எய்தும்" என வற்புறுத்தி உண்பிப்பர்.

ஆசிரியத் தொண்டு

இளம்புலமைப் (F. A.) பட்டம் எய்துமுன்பே போதனாமுறைக் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சி பெற்றனர். நடுநிலைப் பள்ளி (Secondary Grade) ஆசிரியராகத் தேர்ச்சிபெற்றனர்.

கோட்டாற்றில் முதன்முதல் ஆசிரியத் தொண்டியற்றினர். பின் நாகர்கோவிலிலும் அப்பணியே புரிந்தனர். அக்காலங்களில் பாடிய இன்னிசைப் பாக்கள் பல. கற்பிக்கும் காலங்களில் மாணவ மாணவிகள் மிகவும் எழுச்சியுடனும் உணர்ச்சியுடனும் பயின்றனர். உள்ளம் உவந்து, கருத்தூன்றி, மறவா நினைவோடு கற்றனர். அவற்றிற்கெல்லாம் காரணம் நம் கவிமணியவர்களின் கற்பிக்கும் பேராற்றலேயாம்.

இப் பேராற்றலைக் கண்டும் கேட்டும் மிக வியந்த திருவிதாங்கூர் அரசினர் இவரை "மகாராசா பெண்கள் கலாசாலை"த் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தினர். இவர்களும் அத்தொண்டினையே தம் வாழ்நாளெல்லாம் வளமொடு இயற்றினர். முதற்கண் ஆசிரியர் வேலையில் அமர்ந்தது ஏற்றேறத்தாழ 1895-ஆம் ஆண்டாகலாம். அக்காலத்து இவர்கட்கு அகவை பத்தொன்பது. வேலையினின்று விடுபெற்றது 1931-ஆம் ஆண்டு என்ப.

உரனுடை உள்ளம்

கல்லூரிக் கண்காணிப்பு மேலாளர் ஒருகால் கல்லூரியை ஆய்ந்து இவர்தம் தொண்டினை வியந்தனர். இவரை அரசினர் ஆண்கள் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்த விழைந்தனர். அதற்குப் பெண்கள் கல்லூரி முதல்வி இணங்கவில்லை. பின்பு இவர்தம் அஞ்சாநெஞ்சத்து உரனுடை உள்ளத்தை அளக்க ஓர் நிகழ்ச்சி நிகழ்ந்தது. அஃதாவது, நம் கவிமணி அவர்களைப் பார்த்துக் கண்காணிப்பு முதன்மையர் "தாங்கள் பெண்கள் கல்லூரியில் அலுவல் பார்ப்பது பொருத்தமா? மேலும் தாங்கள் ஆண்கள் கல்லூரியில் அலுவல் பார்க்கலாமா? அதற்கோர் நற்சான்று பெற்றுவருதல் வேண்டும்" என மொழிந்தனர். நம் கவிமணியவர்கள் தடையாதும் மொழியாது பெண்கள் கல்லூரிக்குப் பெண்களே அமைவுடையர் எனப் பகர்ந்தனர். விரைவினைச் சென்று அலுவலொழிவு விண்ணப்பம் (Resignation letter) எழுதிவைத்து நல்கினர். இவ்வண்ணம் தான் விலகுமென்று கல்லூரி முதல்வியார் முன்னரே அறிவித்துள்ளனர். பின்னர் அவரைக் கண்காணிப்பு முதன்மையர் வியந்து பாராட்டி இவ்வண்ணம் செய்தது தங்கள் உள ஆய்வின் பொருட்டேயாம், தாங்கள் எவ்வகைத் தடையுமின்றி ஆண்பாற் கல்லூரி அலுவலைப் பார்க்கலாம் என முகமலர்ந்து அகமுற மொழிந்தனர். இது தொன்மைத் தமிழக மறமாண்பை நினைவூட்டுவதாகும். அது, "வலியரென வழிமொழியலன், மெலியரென மீக்கூறலன்" என்பதேயாம்.

கொலை மறுத்தல்

தேரூரில் நல்லமாடன் கோவில் ஒன்று உண்டு. அதற்குத் திருவிழாக் கொண்டாடுங்காலத்து ஆடு கோழிகளைப் பலியிடுவது அவ் வழிபாட்டினரின் அடாச் செயலாகும். நம் கவிமணியவர்கள் தம் இளமைக்காலத்தே பள்ளித் தோழருடன் இச்சிறு தெய்வ வழிபாட்டைக் காணச்சென்றனர். அறியாமையையே அறிவெனத் திரியக்கொண்டு கல்மனத்தராய்ச் சிற்றுயிர்க்கிரங்காது நற்றிறம்படாச் சுற்றத்துடன் அமைதியே வடிவாய் அகமுறப் பழகிய ஆடு கோழிகளை அவை கதறக்கதற வெட்டிப் பலியிடுவதும, குருதிப்பெருக்காறு பலிபீடத்தினின்று வழிந்தோடுவதையும் அச் சிற்றுயிர்கள் துள்ளித் துடிப்பதைக் கண்டு மகிழ்வதையும் பார்த்து மனம் நடுங்கினர். கண்ணீர் பெருக்கினர். நண்பர்கள் வேண்டுகோளின்படி பாடினர். நினைவுள்ள பகுதி வருமாறு:

நாடியறம் தேடியிடும் நற்றேரூர் தன்னிலமர்
  நல்லமாட னென்றும் மறவ னென்றும்
கோடிபழி செய்தபெருங் கொலைஞர் வேதம்
  கூறிய தெனவே தெளிந்து கொண்டு
ஆடினோர் ஆடறுத்தார் அள்ளி யுண்டார்
  ஐயையோ இக்கொடுமை அறிகி லேனே.

இவ்விளம் பருவப்பாட்டு, தாம் பாடிய ஆசியசோதி (The Light of Asia) என்னும் மொழிபெயர்ப்பில் வருமாறு வளர்ச்சியுருப்பெற்றிருப்பது காண்க:

காட்டுப் புலியின் கொடுமைக் கஞ்சி—உங்கள்
  கால்நிழல் தங்கிய ஆடுகளை
நாட்டுப் புலியெனக் கொல்லுவதோ—அந்த
  நான்மறை போற்றிய நீதிஐயா
மண்ணில் வளர்ந்திடும் புல்லை யுண்டும்—வான
  மாரி பொழிந்திடும் நீரை யுண்டும்
எண்ணி நீர்செய்யும் உதவி என்றும்—இதை
  ஏனோ உணர்ந்திலீர் மானிடரே.

இக்கொடுமை விலக்கு நம் செந்தமிழ்ப் பொதுமறையாம் திருக்குறளின்கண் வருமாறு வலியுறுத்தப் பெற்றுள்ளது காண்க:

"நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
  கொன்றாகும் ஆக்கம் கடை." —திருக்குறள், ௩௨௮.

ஆராய்ச்சி வன்மை

நம் கவிமணியவர்கள் வரலாற்று நுட்பம் உணர்ந்த வல்லுந ராய் விளங்கினர். கல்வெட்டு ஆராய்ச்சியில் தலைசிறந்து தோன்றினர். அவர்தம் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அவ்வப் போது ஆங்கிலச் செய்தித்தாள்களில் வெளிவந்துள்ளன. கவிமணி அவர்கள்பால் கடவுட்பற்றும் பெரியார் வணக்கமும் நிறைந்தமைந்துள்ளன. எனினும், அயற்புல மாக்கள் சேர்க் கையால் இடையிடையே புகுந்து இன்னலுறுத்தும் பொருந்தாக் கொள்கைகளை வன்மையாகக் கண்டிப்பர். அதனால் பொது மக்களிடையே பரந்த மூடக் கொள்கைகளுக்கு இலக்காயினர். அக்கொள்கைகளை அறவே அகற்ற எல்லா முயற்சியும் எடுப் பதில் எந்நாளும் பின்னடையார்.

நாகர்கோவில் "நகர்க் கழக (Municipality) த்துக்குத் தென்பால் ஓர் அருவருப்பான இடமிருந்தது. அவ்விடம் நாற்றம் மிக்குடையது. அதன்பக்கம் யாரும் ஆண்டுச் செல்ல ஒருப்படார். அந்த இடத்தில் ஒரு கல் இருந்தது. அக்கல்லினைப் பொதுமக்கள் இசக்கியம்மை என்று கும்பினர். அதனால் பலரும் அங்கு வழிபட்டனர். இழிவுதராசாரம் அச்சமே அன்றோ? அக் கல்லினுக்கு எண்ணெய் நீவி, நீராட்டிப், பூச்சூட்டிப், பொங்கலும் படைப்பும் படைத்து, புகை ஒளி காட்டி நெறியல்லா நெறியால் பயமின்றி அருச்சிக்கவும் செய்தனர்.

இக் கல்லின் தன்மையைப்பற்றிப் புலவர் உமைதாணுப் பிள்ளை அவர்கள் நம் கவிமணி அவர்களிடம் கூறினார்கள். கவிமணியவர்கள் உடனே சென்று நேர்ந்ததையும் பொறுத் துக்கொண்டு ஆராய்ந்து அமைந்தனர். கல்லினிற் பன்னெடுங்கால் பதிந்துள்ள அழுக்கை அகற்றினர். வழிச்செல்வார் கண்டு நகைத்தனர். புலவர் பெருமானையும் அச்சுறுத்தினர். மெய் புணர்வினர் யாவரையும் அந்நிலை கலக்கம் படைத்ததன்றோ? நம் கவிமணியவர்கள் ஒருசிறிதும் அஞ்சாது கல்லெழுத்தைக் கற்றையும் அகற்றினர். அஃதோர் சோழமன்னன் கல்வெட் டெனக் கண்டு விளக்கத்துடன் படியெடுத்து வெளிப்படுத்தினர். மேலும் இவர்தம் ஆராய்ச்சித் திறனுக்கு, "காந்தளூர்ச்சாலை" என்னும் இவர் ஆக்கிய ஆராய்ச்சி ஆங்கில நூலே போதிய சான்றாகும்.

*

கவிமலர்

நம் கவிமணியவர்கள் அவ்வப்போது இயற்றிய அரும்பெரும் கவிமலர்களை மணமொழுகத் தேன் ததும்பும் வண்டுகளோடிய

மாணவர்கள், பெருமக்கள் யாவரும் நுகருமாறு பல்வேறு செய்தித்தாள்கள்வழி மலர்வித்தனர். அவற்றுள் சில வருமாறு: குமரன், கானவித்தியா, கலைமகள், சுதேசமித்திரன், ஆனந்தவிகடன், லட்சுமி, தமிழ்நேசன் முதலியன. இச் செய்யுட்களெல்லாம் ஆற்றொழுக்கும், இன்னோசையும், எளிமையும், தெளிவும், சொற் சுருக்கமும், புது மலர்ச்சியும், கவர்ச்சியும், கிளர்ச்சியும், எழுச்சியும் பிறவும் செறிந்திருந்தன. எல்லாரும் மிகவும் உவப்பாய் வரவேற்றனர்; பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆசிரியரும் மாணவரும் சிறப்பாக அன்புடன் வரவேற்றனர். அதனால் பள்ளிப் பாடங்கள் எல்லாவற்றிலும் இடம் பெற்று மிளிர்வவாயின அப்பாடல்கள். இப்பாடல்கள் அனைத்தும் "மலரும் மாலையும்" என்னும் பெயருடன் ஓர் அழகிய நூலாக வெளிவந்து அனைவர்களாலும் போற்றிப் புகழ்ந்து கொண்டாடப்பெற்று நிலவுகின்றன.

தீமை ஒழிப்பு

திருவிதாங்கூரில் மருமக்கள் தாயமுறை என்றொரு பொருந்தா முறை மேற்கொள்ளப்பட்டு மக்களுக்குப் பேரின்னல் விளைப்பதாயிற்று. அஃதென்னையெனின்? ஒருவனது மனை நிலம் செல்வம் முதலிய உடைமைகளின் உரிமை அவன் தவமிருந்துபெற்ற மக்களைச் சார்வதில்லை. அவன் தன் கூடப்பிறந்த பெண்களின் மக்களாகிய மருமக்களையே சார்வதாகும் என்பதே. இதனால் பெற்ற பிள்ளைகள் ஏதுமிலா வறிஞராய் வறுமையிலாழ்ந்து நீங்காத் துயருறவும், மற்ற மக்கள் பெருஞ் செல்வராய் வாழ்ந்து இன்புறவும் நேர்ந்தன. இது கண்ட பெருஞ்செல்வர்கள் பொருள் ஒரு சிறிதும் மிச்சம் வையாது செலவுசெய்யும் வழிவகைகளை நாடினர். அவ்வழிகள் நாட்டிற்கும் தமக்கும் நலம் பயப்பனவாக இருக்கவேண்டுமே என்ற எண்ணம் சிறிதுங் கொண்டிலர். நன்மைக்கு மாறாகப் புன்மையே பயக்கும் பல பெண்களை முறையின்றி மணந்து நிறையிழந்து பொருளையும் பொழுதையும் போக்கிக் களிப்பாராயினர்.

இக் கொடுமையினை அறவே ஒழிக்க முன்வந்தனர் நம் கவிமணியவர்கள். புனைபெயரால் "நாஞ்சில்நாட்டு மருமக்கள் வழி மான்மியம்" என்னும் நகைச்சுவை பயக்கும் அரியதோர் நூலை யாத்து வெளிப்படுத்தினர். அந்நூல் அகவற்பாவால் ஆயது. இந்நூலால் பலரும் உணர்ச்சிபெற்றுக் கிளர்ச்சியுடன் வேண்டுவ புரிந்தனர். இதன்கண் வரும் பஞ்சகலியாணிப் பிள்ளையின் வாழ்க்கை வரலாறு மிக்க சுவை பயப்பதாகும்.

பாங்கற் கூட்டம்

தேரூரில் நம் கவிமணியவர்களின் நண்பர் ஒருவர் இருந்தார். அவருக்கு இளமையிலேயே திருமணம் ஆகிவிட்டது. அப்பெண் பலகாலமாகியும் முதற் பூப்பு எய்தவில்லை. பொறுத்துப் பொறுத்து ஆற்றாமை மிக்குற்ற மணமகன் வேற்றூர்புக்குத் தோற்றுநிருந்தனன். சின்னாட் கழிய அம் மணமகளும் பூப்பு எய்துவாளாயினள். அதனை அறிந்த நம் கவிமணியவர்கள் தம் நண்பருக்குத் திருமுகம் போக்கி வரைவுரைத்துக் களிமகிழ் சுற்றம் போற்ற வாழுமாறு உடனுறை வாழ்க்கைக்கு உற்றுழி உதவி வாழ்வித்தனர். அத் திருமுகம் வருமாறு:

மத்தாளை மலர்க்கிருக்க மதுவுண் டூதும் வண்டேபோலே
　　மாமுல்லைக் கொடிபடர வாருங்கொள் கொம்பேபோலே
சித்தார மணியிருக்க ஒளியெய்தச் சென்றிருந்தனைத்
　　தேரூரிற் பலர்கூடித் தெரிந்துகொளக் கேட்டதற்கு
கற்றாத பாலூரான அமுதுண்டு தெவிட்டெழியும்
　　நற்பாமா னைத்தவரும் பெறச்சென்ற நண்பரே
வந்தாலே மறுமொழியும் வரும்படியெனைச் சொல்லிடுதல்
　　வல்லாரும் கூறுகின்ற வகைபோலும் அறியேனே.

இப்பாட்டு மிக்க பொருட் செறிவுடையதாய்ப் பிரிந்து சென்ற காதலன் உள்ளத்தைக் களிவித்து மீண்டுவரச் செய்வதாய், பிரிவின் காரணமும், மீண்டுவந்து கூடிவாழவேண்டியதன் இன்றியமையாமையையும், வாழ்க்கையின் பெறுபேற்றையும் 'மலர் கொடி மணி' முதலிய உவமைகளானும், உருவகத்தானும் விளக்கக் கூறுகின்றது. சிறப்பாக இப்பாட்டு வையத்து வாழ்வாங்கு வாழும் அனைவர்கட்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகும்.

பட்டம் பரிசு முதலன

"சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார்" 1940-ஆம் ஆண்டில் சென்னையில் நிகழ்த்திய ஆண்டு விழாவின்போது, நம் கவிமணியவர்களைப் பலபடப் பாராட்டி ஆங்குக் குழுமிய பெரும் பேரவையுள் "கவிமணி" என்னும் பட்டத்தைக் கண்ணுக்கும் காதுக்கும் முறையே காணவும் கேட்கவும் சீர்சா இன்பம் பயந்து என்றும் நின்று ஒளிவீசுமாறு உள்ள உவகையுடன் ஒருங்களித்தனர்.

1950-ஆம் ஆண்டில் டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் பல மெய்யன்பர்கள் ஒருங்கு குழீஇ நம் கவிமணி அவர்கள் வாழும் தனிஇல்லம் சென்று இவருள்

விரம்பிய சீலச்செல்வராகிய அவர்கட்குச் சீர்சிறப்புச் செய்து பொன்னாடையும் போர்த்திப் பாராட்டினர்.

அதனை மனமுவந்தேற்ற நம் கவிமணியவர்கள் "பெருமை பெருமித மின்மை" என்னும் மறைமொழிக்கிணங்க ஆனைக் குட்டிக்குப் போர்த்தும் சிறப்பினை ஆட்டுக்குட்டிக்குச் செய்தது போல் அடியேனுக்குச் செய்தீர்கள் என்று மிக்க பணிவும் இன்சொலும் தோன்றப் பகர்ந்தனர். இது,

> "பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
> அணியுமாம் தன்னை வியந்து." —திருக்குறள். ௬௭௮.

என்னும் செந்தமிழ்ப் பொதுமறையின் பொன்மொழியை வையச் செய்முறையில் போற்றுகின்ற பொற்பாகும்.

1926—1936-வரை சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியின் படியிலாப்பணி (கௌரவ) உதவியாளராகத் தொண்டாற்றினர். திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பாடக்குழுவின் உறுப்பினராய்த் திகழ்ந்தனர். அரசியலார் பாடசாலைப் புத்தகங்களைத் திருத்தும் குழுவில் உடனிருந்து பணியாற்றினர்.

1943-ஆம் ஆண்டில் ஆத்தங்குடியில் நாட்டுக்கோட்டை நகரத்தார் நம் கவிமணியவர்களைச் செட்டிநாட்டரசர் ராசா-சர். அண்ணாமலைச் செட்டியார் தலைமையில் பேரவை ஒன்றுகூட்டிப் பாராட்டிச் சிறப்பித்தனர். அண்ணாமலை அரசர் வெண்பொற் கலம் பல பரிசாக நல்கி மகிழ்வித்தனர்.

1944-ஆம் ஆண்டில் திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் தம் அருமை அன்னையார் பெயரால் பரிசுவழங்க வைப்புப் பொருள் வழங்கினர். 1950-ம் ஆண்டில் கன்னியாகுமரியில் நடைபெற்ற தமிழ்நாட்டின் தென்குமரி எல்லை மாநாட்டில் திறப்புரை நிகழ்த்தினர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக் கௌரவத் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தனர்.

1950-ஆம் ஆண்டில் திருவாவடுதுறைத் திருமடத்து மகா சன்னிதானம் சிவத்திரு. அம்பலவாண தேசிகத் தம்பிரான் அவர்கள் பொன்னாடை போர்த்திப் பாராட்டி அருளினர்.

1952-ஆம் ஆண்டில் நம் கவிமணியவர்கள் பிறந்த தேரூரில் தேரூர்ப் பெருமக்கள் 'கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை நினைவு நிலையம்' என்னும் பெரியதொரு மண்டபம் கட்டிக், காண்பார் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் அமைத்துத் தம் செய்ந்நன்றி மாண்பினைத் தெரிவித்துள்ளனர். புலவர்

கோமான் வாழும் காலத்தே நினைவு நிலையம் அமையப் பெற்றதை நினைதொறும் நினைதொறும் எவர்க்கும் மகிழ்ச்சி தருவதொன்றாகும்.

1953 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் திகழும் பாரதி சங்கத்தினர் நம் கவிமணி அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டத்தை மிக்க சிறப்பாக நிகழ்த்தினர்.

முதுமைப்பணி

நம் கவிமணியவர்கள் தம் தள்ளாப்பருவத்தும் புறத்துப் போக இயலா நிலைமையிலும் வீட்டிலிருந்துகொண்டே நினைப்பாலும், சொல்லாலும், எழுத்தாலும், ஆள் வாயிலாலும் சூழ வாழும் ஏழைமக்கட்கு எல்லா நலமும் பெருகி அவர்கள் இன்புற்று வாழுமாறு வேண்டிய நற்பணி புரிந்தனர்.

திருவிதாங்கூர்த் தமிழ்மக்களின் அறமுறை வேண்டுகோளுக்குத் தம்முடைய அறிவாற்றலால் முழு ஆதரவையும் நல்கி வந்தனர். அவர்கட்கு இவர்கள் "அறத்திற்கு மூத்த அறிவுடையார்" சார்பாய் விளங்கினர்.

முன்னிகழ்ந்த இந்திக் கிளர்ச்சியின்போது தக்க காரணம் காட்டி மறுத்து அஞ்சா நெஞ்சுடன் போர்கொண்டனர். இஃது இவர்தம் செம்மையான தாய்மொழியாம் தமிழ்மொழியின் கண் கொண்டுள்ள மாறா அன்பினைக் காட்டுவதுடன் உள்ள தனிச்சிறந்த பற்றினை விளக்குகின்றதன்றோ?

பாட்டுநலம்

நம் கவிமணியவர்களின் பாட்டுநலம் பலவகையொன்றுளது; காலத்தொடு பொருந்தியது; குழந்தை உள்ளமும் சிறந்து மேற்கொண்டும் செம்மையது; பண்ணேற்றும் பாடற்பாலது; வண்மையொடு கவின் வாய்ந்தது; வசீப்பாட்டால் சிறந்த பொருளியது; ஆடற்கமைந்தது; பள்ளிப்பாடம் அமைத்திடவும் திகழ்வது; பத்திச்சுவை கனிசொட்டுவது; பழமையையும் புதுமையும் ஒருங்கு கொழுவியது; கன்னித்தமிழ் மணங்கமழ்வது; அறமுறை மிகுந்தது; இன்னும் பல சொல்லொனாச் சிறப்புக்களும் வாய்ந்தது. அப்பாட்டின் மாண்பு புலப்பட ஒருசில முன்னும் காட்டினோம். இன்னும் ஒருசில கண்டுகொட்டினாம், ஆசிரியர் யாத்த நூல்களுள். அவற்றுள் சில வருமாறு:

௧. மலரும் மாலையும

பாலுக்குச் சீனியைப்போல் வண்ணத்தமிழ்ப்
பாட்டுக்கு இன்னிசைபோல்
சோலைக்குப் பைங்கிளிபோல் உன்
தகையும் பெரிதேயம்மா. ௧-௪௧.

தென்னெல்லே காத்தாளும் தேவி குமரீநின்
பொன்னடியைக் கும்பிட்டுப் போற்றுகின்றேன்—மன்னுபுகழ்ச்
செந்தமிழ்நாடு ஒன்ருகித் தேவர்நா டொத்துலகில்
சந்ததம் வாழவரம் தா. ௧அ.

பண்டிதரும் கைவிட்டார் பத்தியமும் தீர்ந்ததுயான்
உண்டமருந் தால்குணமோ ஒன்றுமில்லை—அண்டர்
அமரா வதிகாத்த அண்ணலே செந்தில்
குமரா எனையாண்டு கொள். ௧௯.

நம் கவிமணியவர்கள் இளைப்பிருமல் (ஆஸ்மா)ல் நோயால் பெரிதும் துன்புற்று மருந்துகளால் குணமொன்றும் பெருது மிகவும் வருந்துங்கால் மெய்யன்பர் ஒருவரால் தூண்டப் பெற்று மேற்குறித்த நிறைமொழிப் பாட்டுடன் சில பாட்டுக்களும் பாடினர். முருகன் திருவருளால் நோய் அப்பொழுதே நீங்கப் பெற்று நலம் பெற்றனர். தெய்வம் தெளிவார் இதனைக் கண்டு தெளிக.

௨. உமார்கய்யாம்

திட்டிக் கதவு தெரிந்ததடா
திறவு கோலும் இல்லையடா
கட்டித் திரையும் கண்டதடா
கண்ணும் மயங்கி நின்றதடா
ஒட்டிச் சிறிது நீநான் என்று
உரைத்த உரையும் கேட்டதடா
நட்ட காலம் பின்னையடா
நான்நீ யற்றுப் போச்சுதடா.

௩. ஆசியசோதி

நீட்டிக் கழுத்தை அறுப்பதற்கோ—அதன்
நெஞ்சை வகிர்ந்து பிளப்பதற்கோ
தீட்டிய கத்தியும் கையுமாக—ஒரு
தீச்சிதர் முன்வந்து நின்ருரம்மா.

௪. மருமக்கள் வழிமான்மியம்

வரி. ௨௯௦. வயலைப் பார்த்து வாளனில் இழுட்டுப்
பயலே உனக்குப் பயித்தியம் என்பாய்.
கொத்தை அளந்து கொளளென் ருல்நீ
வைத்த ஆளோ மாட்டேன் என்பாய்.
௩௦௦. தொந்தியும் கரைந்து சுருங்குவ தாச்சு
சுகந்தத் தூளும் சோப்பும் போச்சு
சும்மா சிரங்கு சொறிவது மாச்சு
சீலைக் குடையும் செருப்பும் போச்சு
தினமும் வெயிலில் திரிவது மாச்சு.

௫. தேவியின் கீர்த்தனங்கள்

கண்ணாரக் காணும் சுவர்க்கம்

ராகம்—தன்யாசி   தாளம்—ஆதி

பல்லவி

கண்ணாரக் கண்டேனம்மா—சுவர்க்கம்
கனக சபையல்லவோ

அநுபல்லவி

தண்ணார் மதிசூடும்
சாம்ப சதாசிவன்
பொன்னூறும் பாகன்
பெருமான் அடியவர்   (கண்)

சரணம்

பாடிப் புகழ்ந்து நிதம்—நடராசன்
பாதம் பணிந்திடாமல்
நாடி உலகெங்கும்
ஊர்ஊராய்ச் சுற்றி
வாடி வருந்தி
மலைவதேன் நெஞ்சமே.   (கண்)

௬. கவிமணியின் உரைமணிகள்

ஆக்கம் வேண்டுமெனில்—உண்மை
அடைய வேண்டுமெனில்
ஊக்கம் வேண்டும் அப்பா—ஓயாது
உழைக்க வேண்டும் அப்பா!
வெற்றியில் வேட்கை—சித்தம்
வைத்திடில் வீழ்ந்திடவே
வெற்றி வாடாது—சுதந்திரம்
வளர்ந்து வரும் அப்பா!

பேரா இயற்கை

நம் கவிமணி அவர்கள் செந்தமிழுக்கும், இசைநெறிக்கும், சீரார் தமிழகத்திற்கும் செய்யத் தக்கனவெல்லாம் செய்து புகழ்வெய்யராய்த் திகழ்ந்தனர். சில ஆண்டுகளாகப் புறஞ்செல இயலாது அகமுறைந்து சோர்ந்து உடல் தளர்ந்தாரெனினும் உளம் சுருங்கிலரல்லர். "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே, செல்லும்வாய் எல்லாம் செயல்" என்னும் நற்றவத்தினைப் புரிந்துவந்தனர். வரும் மெய்யன்பர்கட்கும், புலவர்கட்கும், பிறர்க்கும் வரையா வண்ணமாய்ச் சொல்லிருந்தும் கல்லிருந்தும் எவர்க்கும் ஆற்றிவந்தனர்.

26-9-1954, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்குத் தம் 78-ஆம் அகவையில் முழுமுதல் நினைவுடன் நம் கவிமணியவர்கள் சிவபெருமான் திருவடி நீழலை எய்தி இன்புற்றனர். அந்நிலையே என்றும் இன்புற்றிருக்குமாறு கொன்றையந்தார் முழுமுதலை நன்று தொழுவோமாக.

இவர்தம் பேரிழப்பு என்றும் ஈடுசெய்ய வொண்ணாத தொன்றே. நாம் அவர் வழிநின்று அவர்தம் பெருநூல்களுட் கூறியாங்கு ஒழுகி உய்வதும், உய்யச் செய்வதுமே செய்ந்நன்றி மறவாச் சீர்மையாகும். அவர் நூல்கள் என்றும் நின்று நிலவவும் யாவர்கட்கும் எளிதாகக் கிடைக்குமாறு பரவவும் ஆவன செய்வதே மறவா நினைவுக்குறியாகும். அவர்தம் குடும்பத்தார்க்கு நம் ஆழ்ந்தபரிவும் ஆறுதலும் உரியவாகுக.

ஆசிரியரவர்கள் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பேராசிரியராகத் திகழ்ந்தனர். மாணவரும் பிறரும் வேட்பப் பணிபுரிந்தனர். எழுத்தாலும் இனிய மேடைப் பேச்சாலும் யாவரையும் எஞ்ஞான்றும் மகிழ்வித்துவந்தனர். இவர்தம் அரும் பெரும் திறனோர்ந்து ஜாம்ஷெட்பூரில் நடக்கவிருக்கும் தமிழ் மாநாட்டுக்குத் தலைமையாக வேண்டி அங்குள்ளார் நம்பிச் செய்தி விடுத்தனர். அச்செய்தி 24-9-1954 காலை வந்துள்ளது.

இந்நிலையில் 23-9-1954 இரவு 10 மணிக்குக் கல்லூரி வட்டத்துள்ள தம் இல்லத்து எதிர்பாராவகையாக இறைவனடி எய்தினர். இவர்தம் இழப்பும் தமிழகத்துக்குப் பேரிழப்பேயாம். இவர்தம் ஆவி இறைதாள் இன்பம் முறையுற எய்துவதாக. இவர்தம் குடும்பத்தார்க்கு நம் ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரியவாகுக.

—இதழாசிரியர்.

மறைவுற்ற தமிழ் நூல்கள்

[மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி]

(சிலம்பு : உக, பரல் : ௩, ௩௦௩-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய பெருநூலை இயற்றிய அகத்தியர் பாட்டியல் என்னும் சிறுநூலை ஏன் இயற்றினார்? இடைக்காலத்தில் இருந்த புலவர் ஒருவர் அகத்தியர் பெயரால் இயற்றியதாக இருக்கக்கூடும் இந்நூல். பிற்காலத்தில் இருந்த புலவர்கள் சிலர், சங்ககாலத்துப் புலவர்கள் பெயரால் சில நூல்களை இயற்றியுள்ளனர். அத்தகைய நூல்களில் இதுவும் ஒன்றுபோலும். ஆனால், அகத்தியர் பாட்டியல் என்னும் இந்நூல் இடைக்காலத்திலே வழங்கியது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்நூலிலிருந்து இரண்டு சூத்திரங்கள் பன்னிருபாட்டியல் என்னும் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அவை :—

குறிலோ டாடனொடு கூடி நின்ற
ஐ ஒன் பிரண்டும் முடக்கிப்
பால ஆகும் வகை யென்ப
மரணமெய் முதலைந்துத் தானம் வகுத்தனர். (1)

முன்பின் செய்யுள் முதலெழுத் ததற்குப்
பொருத்தமும் விருத்தமும் பலவுங் கொளலே. (2)

95. மாபுராணம். 96. பூதபுராணம்

இப்பெயருடைய நூல்கள் இருந்தன என்பது இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரத்திலும், பேராசிரியர் உரையி லும், மயிலைநாதர் உரையிலும், யாப்பருங்கலக் காரிகை உரையிலும் தெரிகிறது.

"அவர்க்கு (இடைச் சங்கத்தாருக்கு) நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசை நுணுக்கமும் பூதபுராணமும் என இவையென்ப." (இறையனார் அகப்பொருள் உரைப் பாயிரம்.)

"இனிப் படைத்துப்பட்ட பொருண்மையவாகிய மாபுராணம் பூதபுராணம் என்பன இல்லாமற்போய் சிற்றறிவின் மாக்கட்கு உடம் பாடாமையின், தொகுத்துச் செய்யப்பட்டு வழக்கு நூலாகிய தொல்காப்பியம் இடைச்சங்கம் முதலாக இன்று காறும் உளதாயிற்றெனக் கொள்க." (தொல்: பொருள்.

"தொகுத்தல் விரித்தல்" என்னும் 96-ஆம் சூத்திரம், பேராசிரியர் உரை.)

"மதிநலங் கவின்ற மாபு ராணம்
புதுநலங் கனிந்த பூத புராணம்"

என்று கூறுகிறது ஒரு பழைய தனிப்பாடல்.

"செய்யுட்க ளோசை சிதையுங்கா லீரளபு
மையப்பா டின்றி யணையுமா—மைதீரொற்
றின்றியுஞ் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு
குன்றுமே லொற்றளபுங் கொள்.

என மாபுராண முடையாருஞ் சொன்னாராகலின்." (நன்னூல் எழுத்தியல், 87-ஆம் சூத்திரம் மயிலைநாதர் உரை மேற்கோள்.)

(குறிப்பு :—இது வெண்பா பூதபுராணச் செய்யுள் என்றும் கூறப்படுகிறது. எனவே, இது மாபுராணச் சூத்திரமா அல்லது பூதபுராணச் சூத்திரமா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை.)

யாப்பருங்கல விருத்தியுரைகாரர் கீழ்க்கண்ட மாபுராணச் செய்யுள்களைத் தமது உரையில் மேற்கோள் காட்டுகிறார் :—

"மகரக் குறுக்கத்துக்குப் பயன் மாபுராணமுடையார் எடுத்தோதினார். என்னை ?

"கழிநெடி லடியுங் காலெழுத் தசையும்
பெயரற் புணர்ப்பினும் பெயரிடைப் புணர்ப்பினும்
வழுவென மொழிப வாய்மொழிப் புலவர்"

"ஆய்தமு மொற்று யடங்கிறு மாங்கதனை
ஓதினார் தொன்னூ லுணர்வுடையோர்—நீதியால்
ஒற்று யடங்கிறு முன்கால வேற்றுமையாற்
சொற்றார் மகரச் சுருக்கு"

எனவும்,

"மெய்யென்ற சொல்லானே மிக்கமக ரத்தினையும்
வையு மடக்கு வளியென்னின்—ஐயென்ப
தாவி யெனவடங்கு மல்லிற் றெனின்மகரத்
தேய்விற்கு மல்லே திறம்"

எனவும் கூறினார். இன்னும் மகரக் குறுக்கத்தின் பயன் மாபுராணத்திடத்துக் காண்க. கண்டு உரைப்பிற் பெருகும்.

"உயிரென்ற சொல்லானே யொன்பதா மாவி
செயிரின்றிச் சென்றடங்கு மேனும்—பயில்புரைத்தார்

குன்றுதலா வெள்ளிற் குணம்புரிந்தா ரெனவுந்தான்
குன்றுதலாக் கூறப் படும்"

எனவும்,

"காலவிளம்பத் தாற் கட்டுரைக்கப் பட்டவற்றுள்
மூலவியல்பறான் மூவாறமையான் — ஞாலத்து
ளெல்லாமெழுத் தமைத்தார்க் காமோ வெலவெழுத்துச்
சொல்லுதார்க் காகுமோ தாம்"

எனவும்,

"மலையாக்குந் தன்மைய வேயன்றித் தொடையோ
மலையாக்கு மெனவுஞ் சொற்றார் — இசைத்தொடை
மாக்கு மெழுத்தினைக் குன் சொன்று மைமுகத்தாத்
நாக்கியதாற் செய்யுட் டொகுத்து"

எனவும்,

"குறிலு நெடிலு மளபெடையு மொற்று
மறிநூ லசைக்குறுப்பா மென்பர் — வறிதே
பயிர்மெய்யு மாய்தமு மேனுந் தொன்று
செயிரையர்க்கு நின்றதே னென்று"

எனவும்,

"வடாது நெடுந்தன்று மைத்ததுறுன் மற்றுன்
டொடாதனவுந் தொற்று நினைந்தார் — வடாதுபோல
மலிவான் குறுக்கம் வகுத்ததற்கன் மாட்டேதின்தா
ரவளைக்கத் தாழ மசைக்கு"

எனவும்,

"நுலையனம் வெள் விகற்பிற் காய்குற்ற நாப்பகமா
மையாது கார டத்தவே — மெய்யாமே
வறுப்பித நவேவ சிகரம் புணர்ந்ததுடம்
குற்றியல் நாலுக் கேனைந்து"

எனவும்,

"நெடும்புடைய வல்லவெனைத்தற்றுட் டொன்பு
நெடும்புடைய வென்பவோ வெற்றிடை — நுமப்பகைக்கட்
காலைவ தொற்றிவகும வைக்கேடம் காரணத்
தலவளிற் சொற்றுர் நுவர்ந்து"

எனவும்,

"நூற்று வெழுத்து மசைக்குரிய வென்பதன்கண்
உண்மைதா னெச்ச மெனவுரைப்பர் — நுற்றுன்றின்

மிக்கனவுங் கைக்கோடல் வேண்டி வியன்பொருளே
மெய்ப்படுக்கு மாங்கே விதப்பு"

எனவும்,

"மகரக் குறுக்கம் வகுத்துதா னெய்தற்
சிகரக் குறுக்க முதலாய்ப்—புகரற்ற
நாலொன் றுமென்னுதே காட்டுதன் ஞாபகமாய்
நூலொன்றி நிற்றற் பொருட்டு"

எனவும் போந்த இவற்றை விரித்துரைத்துக்கொள்க. இன்னும் மகரக் குறுக்கத்திற்குப் பயன் மாபுராணத்திடத்துக் கண்டு கொள்க. ஈண்டு உரைப்பிற் பெருகும்.

யாப்பருங்கலம் அடியோத்து விருத்தியுரையில் உரையாசிரியர் இவ்வாறு கூறுகிறார்:—

"அகத்திணை யகவலுள் வஞ்சிவாரா..............................
அஃதேயெனிற் பட்டினப்பாலைத் தொடக்கத்தன அகத்திணை வஞ்சியாம் பிறவெனின், அகத்திணையகத்து வஞ்சி வருவது சிறப்பின்றாயினும், சிறுபான்மை வரப்பெறு மென்பாருமுளராகலின் அவையும் அமையுமென்பது. என்னை?

"அகத்திணை யகவயி னிற்ப வஞ்சி
சிறப்பில வெனினுஞ் சிலவிடத் துளவே"

என்பது மாபுராணச் சூத்திரமாகலின்."

யாப்பருங்கலம் ஒழிபியலில் விருத்தியுரைகாரர் மாபுராணத்தைக் குறிப்பிடுகிறார். அவர் எழுதுவது வருமாறு:—

"நான்கடியும் எழுத்தொத்து வருவனவற்றைத் தலையாகு சந்தம் என்றும், ஓரெழுத்து மிக்கும் குறைந்தும் வருவனவற்றை இடையாகு சந்தம் என்றும், இரண்டெழுத்து மிக்குங் குறைந்தும் வருவனவற்றையும் பிறவாற்றான் மிக்கும் குறைந்தும் வருவனவற்றையும் கடையாகு சந்தம் என்றும் வழங்குவரொருசாராசிரியர். தாண்டகங்கட்கும் இவ்வாறே சொல்லுவர். இவற்றை யெல்லாம்..............................மாபுராணம் முதலாகிய தமிழ் நூலுள்ளும் புகுதியுடையார் வாய்க்கேட்டுக் கொள்க. இவை யெல்லாம் விகற்பித்தின்றுரைப்பிற் பெருகும்"

"இனி மாபுராணமுடையார் கூறுமாறு: விகார மாத்திரையாகிய உயிரளபெடையும், கான் மாத்திரையாகிய வொற்றும் பாட்டுடைத் தலைமகன் பெயருக்கும் அவன் பெயர்க்கு அடையாளமாகிய சொற்கண்ணும் புணர்ப்பிற் குற்றமென்றார். என்னை?

“ கழிநெடி லடியுங் காலெழுத் தசையும்
பெயரயற் புணர்ப்பினும் பெயரிடைப் புணர்ப்பினும்
வழுவென மொழிப மாபுராணமே. ”

என்பவாகலின்.

மாபுராணம் இயற்றிய ஆசிரியர் யார் என்பது முதலிய செய்திகள் தெரியவில்லை. மாபுராணம் வெண்பாவும் சூத்திரமும் கலந்து இயற்றப்பட்ட நூலெனத் தெரிகிறது. இந்த புராணத்திலிருந்து வேறு சூத்திரங்கள் கிடைக்கவில்லை.

97. கோயிலந்தாதி

களவியற் காரிகை உரையாசிரியர், கோயிலந்தாதி என்னும் நூலிலிருந்து நான்கு செய்யுள்களை மேற்கோள் காட்டுகிறார். கோயில் என்பது, திருவரங்கம் பெரிய கோயில் எனப்படுகிற ஸ்ரீரங்கம். திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள அரங்கநாதர்மீது அகப்பொருள் துறைகள் அமையப் பாடப்பட்ட அந்தாதி நூல் இது என்பது தெரிகிறது. இந்நூலை இயற்றிய ஆசிரியர், காலம் முதலியன தெரியவில்லை. இந்நூலிலிருந்து, களவியற்காரிகை உரையாசிரியர் நான்கு செய்யுள்களை மேற்கோள் காட்டியுள்ளார். இந்த நான்கு செய்யுள்களில் இரண்டு செய்யுள்கள் சொல் லிதழ்ச் சிதைந்து காணப்படுகிறபடியால், அவற்றை நீக்கி, மற்ற இரண்டு செய்யுள்களைக் காட்டுவோம்.

பிறவா வரையுரு வளித்தவ யாக்கையும் பேயனிவென்
றறைவா வணங்க வார்ந்து வரங்க ளருளியச் சோன்
மறவா வணங்கன் மடக்கனுக் கோசிக் கழிபழிகள்
துறவா வணங்கின் பொருட்டோ வெய்ய வோக்கிறதே.

சேர்க்கைக் கத்த வெறுமைத் தாகச்செல் வேன் முருகத்
தீர்த்தனக் கத்தமிட் டசெல்ன் பயன்கட்டுமன்னைக் கெய்தித்
டாக்கன் கத்தவித் தோலிய கொற்றவன் வெற்றிச் செல்லை
யார்க்குங் கத்தமங்கள் திருத்தாசொன் டணிமின்களே.

98. சினவிருத்தம் 99. எலிவிருத்தம்

கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்த திருஞானசம்பந்தர் தமது திருவாலவாய்ப் பதிகத்தில் இந்த இரண்டு நூல்களைக் குறிப்பிடுகிறார்.

“கட்டு நூலினிற் சினவிருத்தமுந் தொகைத் தோசெலி விருத்தமொழிப்
பாட்டு மெய்சொலிப் பக்கமேசெலு மெல்லவா தக்களே ”

என்று அவர் பாடுகிறார். அதாவது இளிவிருத்தம் எலிவிருத்தம் என்னும் இரண்டு நூல்கள் சமணசமய நூல்கள் என்று கூறுகிறார்.

கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட வீரசோழியம் என்னும் இலக்கண நூலின் உரையிலும் இளிவிருத்தம் எலிவிருத்தம் என்னும் நூல்கள் கூறப்படுகின்றன. வீரசோழிய உரையாசிரியராகிய பெருந்தேவனார் கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் இருந்தவர் ஆவர். வீரசோழியம் யாப்பதிகாரம் 21-ஆம் கலித்துறையின் உரையில் உரையாசிரியர் இவ்வாறு எழுதுகிறார் :—

"குண்டலகேசி விருத்தம் இளிவிருத்தம் எலிவிருத்தம் நரிவிருத்தம் முதலாயுள்ளவற்றுட் கலித்துறைகளும் உளவாம்"

இவ்வுரையாசிரியர் கூறுகிற குண்டலகேசி விருத்தம் என்பது பௌத்த நூல்; இந்நூல் மறைந்துவிட்டது. இதன் சில செய்யுள்கள்மட்டும் கிடைத்துள்ளன. இளிவிருத்தம் எலிவிருத்தம் நரிவிருத்தம் என்பன மூன்றும் சமணசமய நூல்கள். இவைகளில் நரிவிருத்தம் இப்போதும் இருக்கிறது. இளிவிருத்தம் எலிவிருத்தம் இரண்டும் கிடைக்கவில்லை. இந்நூல்கள் மறைந்துவிட்டன.

குறிப்பு: பவானந்தர் கழகம் 1942-இல் அச்சிட்ட வீரசோழியத்தில் இளிவிருத்தம் என்பதைக் கலிவிருத்தம் என்று தவறாக அச்சிட்டுள்ளது. ஆனால், பழைய வீரசோழியப் பதிப்பில் கலிவிருத்தம் என்றே இருக்கிறது. 1907-ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கம் அச்சிட்ட நரிவிருத்தம் என்னும் நூலில், முகவுரை 4-ஆம் பக்கத்தில் இளிவிருத்தம் என்றே கூறப்படுகிறது. எனவே, பவானந்தர் கழகம் 1942-ஆம் ஆண்டில் அச்சிட்ட வீரசோழியப் பதிப்பில் கலிவிருத்தம் என்றிருப்பது தவறாகும்.

100. மல்லிநாதர் புராணம்

மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்ட ஸ்ரீபுராணம் என்னும் நூலில், 19-ஆம் தீர்த்தங்கரராகிய மல்லிநாத சுவாமி புராணத்தில், பழைய இரண்டு செய்யுட் பகுதிகள் மேற்கோள் காட்டப்படுகின்றன. இந்த மேற்கோள் செய்யுள்களை நோக்கும்போது, மல்லிநாதர் புராணம் என்னும் ஒரு நூல் தமிழில் இருந்திருக்கவேண்டும் என்றும், அது பின்னர் மறைந்துவிட்டிருக்கவேண்டும் என்றும் கருதவேண்டியிருக்கிறது. மேற்கோச்

காட்டப்பட்ட செய்யுட் பகுதிகளை இங்குக் காட்டுவதற்குமுன்பு, மல்லிநாதர் என்னும் தீர்த்தங்கரருடைய கதையை அறிந்துகொள்ளுவது அமைவுடைத்து. இந்தப் புராணத்தின் சுருக்கம் இது:

கச்சகாவதி நாட்டின் அரசன் வைசிரவணன் என்பவன் வீதசோக நகரத்தைத் தலைநகரமாகக் கொண்டு அரசாண்டு வந்தான். அந்த அரசன், வசந்த காலத்தில் ஒரு நாள் வனக்காட்சியைக் காணச் சென்றான். வனத்திலே மிகப் பெரியதோர் ஆலமரத்தினைக் கண்டு வியந்து மகிழ்ந்தான். அந்த ஆலமரம் நாற்புறங்களிலும் விழுதுகளால் தாங்கப்பெற்று விண்ணுற ஓங்கி வண்டுகளையும் பறவைகளையும் கிளைத்துத் தழைத்துக் கவிந்து காண்பவர் கண்களையும் மனத்தையும் கவர்ந்து நின்றது. இந்த ஆலமரத்தினைக் கண்டு வியந்து மகிழ்ந்த அரசன் அதற்கு "வனஸ்பதி ராஜன்" என்று சிறப்புப் பெயர் கொடுத்து, அந்த மரத்தைச் சுற்றிலும் மேடையும் சுற்றுச் சுவர்களும் அமைத்து அதற்குக் காவலாளர்களையும் ஏற்படுத்திச் சென்றான்.

சில காலத்திற்குப் பின்னர் அரசன் அவ்வழியாக வந்தபோது அந்த ஆலமரம் அங்குக் காணப்படவில்லை. இடி விழுந்து இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. இதனைக் கண்ட அரசன் மனம் கலக்குற்றது. அப்போது அரசனுடைய மனத்திலே நிலையாமை நன்கு விளங்கியது. இப்பொழுதே தனது வாழ்க்கையும் அரசாட்சியும் நிலையற்றது என்பதையும் இளமையும் யாக்கையும் செல்வமும் நிலையற்றவை என்பதையும் உணர்ந்தான். அப்போதே அரசாட்சியைத் துறந்து, துறவு பூண்டு ஸ்ரீநாக முனிவரிடத்தில் தீக்ஷைபெற்றுத் தவஞ்செய்து கடைசியில் இந்திரபதவியடைந்தான்.

இந்திரபதவியை யடைந்த அரசன், பிறகு வங்கநாட்டு மிதிலாபுரத்தின் அரசனான கும்பன் என்பவனுக்கு மகனாய்ப் பிறந்து மல்லிநாதர் என்னும் பெயருடன் வளர்ந்து பிறகு துறவுபூண்டு தீர்த்தங்கரர் பதவியை யடைந்து சமணசமயத்தை உலகத்திலே பரவச்செய்து பிறகு வீடுபேறடைந்தார்.

மல்லிநாதர் புராணத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு நூல் முற்காலத்தில் செய்யுளாக இயற்றப்பட்டிருந்தது. அந்த நூலுக்கு என்ன பெயர் இருந்தது என்பது தெரியவில்லை. மல்லிநாதர் புராணம் என்னும் பெயரே இருந்திருக்கக்கூடும். அந்நூல் இப்போது மறைந்துவிட்டது. அந்நூலிலிருந்து இரண்டு செய்யுட்பகுதிகள் ஸ்ரீபுராணத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன என்று கூறினோம். அப்பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

"வாயில் மாடமும் மதிலும் அமைத்துக்
காவ லாளரிற் காப்பு கடுபடுத்
தரிதினிற் போகி யடவியினி லாடல்
மருவியது விடுத்து மறித்துமக் கெறியே"

இச்செய்யுட்பகுதி, வைசிராவண அரசன் ஆலமரத்திற்குச் சிறப்புச் செய்ததைக் கூறுகிறது.

"இது இதற் குற்ற திறைவ என்றும்
கதுமென மாகனி கலங்கின ளுறை
வெடிப்பட முழக்கத் திடியுரு மேற்றிற்
பொடிப்பொடி யாகியது பொன்றினமை கண்டு
நொடிது நினைந்து நெஞ்சு கலுழ்வெய்தி
இருவினைப் பயத்திற் றிரிதரும் உயிர்கட்
கருவலி யுடைமையும் ஆண் மையும் அழகும்
திருமலி செல்வமும் தேசும் வென்றியும்
இளமையும் எழிலும் இராச விபூதியும்
வளமையும் இளமையும் மறித்து போக்குதற்கு
நிறுத்துதல் அருமையை நிறுத்திய திதுஎன
வெறுத்துடன் விடுத்தனன் வினைப்பயன் யாவையும்"

இது, வைசிரவண அரசன் ஆலமரம் அழிந்ததைக் கண்டு அதன் மூலம் நிலையாமை யுணர்ந்ததைக் கூறுகிறது. இது அகவற் பாவாலான நூலெனத் தோன்றுகிறது.

(தொடரும்)

கவிமணி பிரிவிரங்கற்பா

கா. கணபதி

இனிய மொழியாம் தமிழ்ச் சொல்லில்
எளிய சொல்லே கண்டுவைத்து
இனிய பாலர் பெரியோர்கள்
எவரும் களிக்கக் கவியாத்து
இனிய வாழ்வின் சுவைகண்டு
இனிய பணிகள் பலவியற்றி
இனிய எம்மைப் பிரிந்தீர்கொல்
இனிய தமிழின் கவிமணியே!

காவியத்தில் சில ஓவியங்கள்

[திரு. த. வடிவேலன்]

இவ்வுலகமே இயற்கையின் வடிவை—இறைவனின் ஆற்றலை என்றும் எடுத்தியம்பி நிற்கக் காண்கின்றோம். உலகு படைத்த இறைவன் உலகு சிறப்புறவும் மனிதரையும் வாழவே வழி செய்கின்றான். அதற்கெனவே உயர்ந்தோரையும் உலகிற் குதவுகிறான். மனித இனமோ பலவித போராட்டங்களினால்—மயக்க உணர்வால் தனது வாழ்வை இவ்வுலகிலேயே முடிவுக்குக் கொண்டுவரத் துணிகின்றது. அம்மக்களுள் சிலர் இறையொளியால்—பகுத்தறிவால் என்றும் நின்று நிலவுமாற்றல் பெற்றனர். தாம் நின்று நிலவுவது மாத்திரமா, பகுத்தறிவுள்ளம் பயன் கருதியதா? மாக்களென்ற அவர்கள் போருள் தம்மினத்திற்கும் பெருவழி காட்டியது அவர்கள் கண்ட நல்வழிகளே இன்று நம்முன் இன்பம் கன்றுள—இறைவழி காட்டும் காவியப் பூஞ்சோலையாகக் காட்சிதருகின்றது. நாமும் அப்பொதும்பரில் புகுந்து, அறிவுக் காட்சிகளைக் கண்டு ஆனந்தமடைவோம்—அன்புநிலை புணர்வோம்—பண்பின்வழிச் சென்று என்றும் இறவாப் பேரொளியாய்த் திகழ்வோம்.

கள்வன் மகன்

பண்பழிக்க பால்மொழியுள்ளம் அருணமதிந்து பொய்மையையும் வாய்மையாக்கியது. அன்னை தன் கையால் அன்னனின் முதுகை நீவுகிறாள்.

தமிழன் தன் பிள்ளையைத் தாலாட்டிச் சீராட்டிக் கவழ் நடைப்பருவம் முடிந்ததும் தரையில் விடுகின்றான். தளர்நடை கண்டு களிக்கின்றான். ஐம்புலனும் உரம்பெற்ற குழந்தையுள்ளங்கள் உலகவாழ்வின் உண்மைகளை—உண்மைகளைத் தாமே அறிய ஆவல் கொள்ளுகின்றன. அவ்விளைய வாழ்க்கை நடப்பணியை அன்பின வடிவான அம்மனையுஞ்செய்ய முற்படுகின்றான். மணல் நிறைந்த இடத்தில் சிறுவீடு செய்கின்றான்; சிறு உணவு சமைக்கத் தொடங்குகின்றான்; அதுகண்ட அவன் தோழியரும் உடன்சேர்ந்து கொள்ளுகின்றனர். அவர்கள் வருங்கால வாழ்வு மண் விளையாட்டிலே மாட்சியுறுகின்றது. இன்றும் நம் குழந்தைகளில் சில பெண்குழந்தைகள் சிறுவீடு கட்டி விளையாடவும், சில ஆண் குழந்தைகள் சிறுதேருருட்டவும் காணலாம். பல குழந்தைகள் இன்று குழலின் பயனும்

பகுத்தறிவற்று உலகியலை விளங்கும் ஆற்றலற்றனவாக இருக்கலாம். ஆனால் அன்று தமிழர் மரபு, தன் கடமையை உணர்ந்து பணியாற்றியது. தமிழ் நாகரிகத்தில்—அன்பு வாழ்வில் தம் கடமையைத் தாமே செய்து இன்பமடையும் பணியில் திளைத்து நின்றனர் தமிழர்களனைவரும். அவர்கள் வழித்தோன்றல்களும் வாழ்வின் உண்மையைச் சிறுபருவத்திலேயே உணர்ந்து வாழ்வினை விளையாட்டாகவே ஆரம்பிக்கத் தொடங்கினர். "வாழும் பிள்ளையை மண்விளையாட்டிலே தெரியும்" என வழங்கும் பழமொழியும் இதுகுறித்தே எழுந்ததாகும்.

கடமையுணர்ச்சியுடன் பொழுதுபோக்காக—உடல் நலமளிக்கும் பயிற்சிகளையும் வாழ்வின் ஒரு பகுதியாக அமைத்தனர். அதற்கேற்ற விளையாட்டாகப் பந்தாடலையே விரும்பிப் பயன்கொண்டனர் பண்டைத் தமிழ் மகளிர் பருவமடையாப் பெண்கள் பந்தாடுங்காலையில் இளம் வாலிபர்களும் அவர்களிடைப் புகுந்து அவர்கள் விளையாட்டைச் சிறப்பிக்கும் செயல்களைச் செய்தலுமுண்டு. விளையாட்டிலே வாழ்க்கையைக் கண்டு பந்தாடும் பாவையர்கள் இறைவனின் திருவிளையாடலை உணர்கின்றனர். பந்தாடும் வேளையில் வந்தூடே செல்லும் வாலிபர்களின் உள்ளத்துட் புகுந்து அன்பென்னும் அரும் பண்பினை விளக்கும் பேற்றினை—இன்ப உலகை ஆக்கும் பெருமையினைத் தமக்குரிய தாக்குகின்றனர். இது அவர்களால் எண்ணிச் செய்யப்படும் ஒரு விளையாடலாக முடியுமா? இதுவே இயற்கையின் பெருவிளையாடல்.

அன்று பலகாலம் தோழியர் பலருடன் கூடிச் சிறுவீடு கட்டி விளையாடினாள்; பந்தாடினாள்; இன்று மங்கைப்பருவமடைந்துவிட்டாள். இனிமேல் பல இடத்தும் ஓடியாடித் திரிதல் பண்பாகாது என உணர்கின்றாள். அவ்விதமாயின் அவளது வீடே அவளது கன்னிப்பருவத்துப் பாசறையாகின்றது; பலகாலம் பழகியோர் அன்று தம் பயன்கருதி—சுயநலங் கருதி வாழப் பழகவில்லை; பண்பறிந்து வாழ்ந்தனர்; பலகாலம் கூடி விளையாடிய தோழிகளது உடன் கூட்டத்தவளிடம் நலனறிய வருகின்றாள். கன்னிப்பருவம் காதல் நிகழ்ச்சிகளுக்கே முதலிடமளித்தவியல்பு. அன்று விளையாடுங் காலத்தில் தம் விளையாட்டிடை—சிறுவீடு கட்டல், சிறுசோறு சமைத்தல், பந்தாடல் ஆகியவற்றிடைக் காட்சியளித்த—விளையாடல் புரிந்த காளைகளைக் கன்னியர் தம் வீட்டிலிருப்பதால் காண்பதரிது. மகளிர் தம் வீடுவிட்டு வெளிச்செல்லா அவ்வேளையில் விளையாட்டில் வாழ்க்கைகண்ட—உளங்கலந்த ஆடவன் தன் உளங்கவர்ந்த கன்னியைப் பார்க்க எண்ணுகின்றான். அவனுறையும்

இல்லத்தின் வழியாக வருகின்றான். காதலியின் வீடு தென்படுகின்றது. அன்பிற்குரியாள் மாத்திரமா அன்னையும் உடன் இருக்கின்றாள் அங்கே. அன்னையும் உடன் இல்லையானால் அவர்களது அன்புநிலை மாண்பு பெறுவதற்கில்லை. எவ்விதமாவது தன் உள்ளம் விரும்பும் காதலியை வெளியிலழைத்து வேடிக்கை செய்யவேண்டுமென்ற எண்ணத்தின் வழிப்படுகின்றான் அண்ணல். விடாயற்ற நிலையிலும் விடாயினை வருவித்துக்கொள்கின்றான். "விடாய் மிக்கது. உண்ண நீர் வேண்டும்" என்ற ஒரு குரல் வெளியில். விடாய்க்குரல் செவிப்பட்ட அன்னை உள்ளம் அவனிருப்பை நோக்குகின்றது. உள்ளிருந்த அன்னை காதல் விடாயை அறியாள். உண்மையில் நீர்விடாய் ஏற்பட்டதென எண்ணுகிறாள். நீர்வேட்கை மிக்கோன் எவனாயினும் அவன் விடாய்தீர்த்தலைப் பெரும்பணியாக இல்லறத்து மாணிராம் பண்டையோர் கருதினர் "மகளே நீர்வேட்கை மிக்க அம்மானுடவனுக்கு இப்பாத்திரத்தில் நீர் கொடுத்து விடாய் தீர்த்துவா" என்ற குரல் பிறக்கின்றது அன்னை பாலிருந்து. கன்னியின் காதலுள்ளம் காளையின் வேட்கையுணர்ந்தத் தணிக்க விருப்புடன் எழுகின்றது. அன்னை சொற்படி பாத்திரத்தில் தண்ணீரைக் கொண்டுவருகின்றாள் வெளியே.

அன்று சிற்றில் சிதைத்து, கூந்தலிற் புனைந்த மாலையை அறுத்து, ஆடும் பந்தினை எடுத்தோடித் திருவிளையாடல் புரிந்து, அன்பின் நிறைவை அவளுக்குணர்த்திய அக்கள்வனே, தான் மேற்கொண்ட வேட்கை விடாமலே இன்றும் விரும்பியே வந்தான் என்பதுணர் அவளை உண்மையறிந்தல்ல தாகந் தீர்க்கும் நீர் வேண்டிய அவ்வன், தையலின் வளைக்கையைப் பற்றுகின்றான். அவன் செயற்கொண்டு அவளிளமையின் விருப்பு அளவுகடந்தது. ஆனாலும் அன்னைமுன் ஏனை இழுத்து வாறென அன்னத்தையதான காளைப் பிடிக்கின்றது அவளுள்ளத்தினை. தன்னையறியாமலே, "அன்னாய் இவன் செய்ததைப் பார்" என்று வாய் குழறுகின்றது.

அன்னை வெளியில் வருகின்றாள். காதலியின் உரை கேட்டதும் அன்னை வருவாள் என்பதுணர்ந்து தோன்றல் தான் பற்றிய காதலியின் கையை விடுகின்றான். அப்பொழுதாம் அன்பின் பெருமிதத்து நின்ற அக்காளை ஆடவனை விட்டு நீ ஏன் உள்ளே சென்றனைகொல்? அன்னைக்குத் தலைவனை மதிப்புடன் காட்டவேண்டுமென்ற அவளது அன்புள்ளம் தருணமறிந்து சுருக்க விடைபகர்கின்றது. யாது காரணமாக அவல ஒலி பிறந்தது என்று அன்னை கேட்பதற்கிடையிலேயே அன்னையும் அன்னையை அன்புடன் ஆதரிக்குமாறு "வெருண்டாயில்லை,

இவ்வரும்பெறலோன் உண்ணுகின்ற நீர் விக்கினன்" என்ற அவளது அறிவுள்ளத்தின் ஆற்றலே அமைதி ஒலியாக வெளி வருகின்றது. அன்னை அம்மைந்தனின் முதுகைப் பலமுறை தடவுகிறாள். மைந்தனுள்ளம் மங்கையின் மதிவலியின் மாண்பை மதிக்கின்றது. உள்ள உவகை கண்ணிற்பட்டுக் காட்சியளிக் கின்றது. கடைக்கண் பார்வையால் காதலியைக் களிவிக்கின் றான் அக்கள்வன் மகன். தலைவனது கடைக்கண் நோக்கினைக் கொல்வான்போல் நோக்கி என்றுரைத்த அந்நங்கையுள்ளமே நகைக்கூட்டஞ் செய்தானக் கள்வன் மகன் என்று கூறுவதைக் காண்கின்றோம். இதுதான் உண்மை அன்பினை விளக்கும் இயற்கையின் மாண்பு.

> "செறாஅச் சிறுசொல்லும் செற்றார் போனோக்கும்
> உறாஅர்போன் றுற்றார் குறிப்பு"

என வள்ளுவரும் உண்மை அன்பினைக்—காதலின் மாட்சியை இனிது விளக்கவைக்கின்றார். இக் காதல் நாடகத்தையே கன்னி தன் தோழியின் கருத்திற்கினிய காட்சியாகக் காட்டுகிறாள்— உள்ள உவகைச் சம்பவமாக எடுத்துரைக்கின்றாள். இதனை எழில்மிகு ஒவியமாகப் புனைந்து உள்ளத்தை உணர்ச்சி கொள்ள வைக்கின்ற உயர்வுள்ளம்—உத்தமப்பண்பு அனை வர்க்கும் வாய்த்தலரிது. அரும்பெரும் புலவர் கபிலருக்கே அப்பேறு உரியதாகின்றது. இக்காட்சி யொன்றினையும் இன்று சென்று காண்போம்.

> "சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில்நாம் ஆடும்
> மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
> கோதைபரிந்து வரிப்பந்து கொண்டோடி
> நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
> அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே
> உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற் கன்னை
> அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
> உண்ணுநீ ரூட்டிவா என்றாளென யானுந்
> தன்னை யறியாது சென்றேன் மற்றென்னை
> வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
> டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
> அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
> உண்ணுநீர் விக்கினா னென்றேனா அன்னையுந்
> தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
> கடைக்கண்ணாற் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டஞ்
> செய்தானக் கள்வன் மகன்" (கலி: ருக)

சேனாவரையத்தில் 'செய்கு'

[வித்துவான் திரு. செ. வேங்கடராமச் செட்டியார்]

'செய்கு' என்பது 'செய்வேன்' என்று பொருள்படுகின்ற தன்மையொருமை வினைமுற்றாகும். இச்சொல்லைப் பற்றிப் பவணந்திமுனிவர்,

> "செய்கென் ஒருமையும் செய்கும்என் பன்மையும்
> வினையொடு முடியினும் விளம்பிய முற்றே"

என விதி கூறியுள்ளார். 'செய்கு என்ற ஒருமை முற்றும் செய்கும் என்ற பன்மை வினைமுற்றும் பெயர்கொண்டு முடிதலேயன்றி வினைகொண்டு முடிந்தாலும் வினைமுற்றேயாம்' என்பது, இச்சூத்திரக் கருத்து. இதற்கு உதாரணம்,

காண்கு வந்தேன், காண்கும் வந்தேம் என்ப. இச்சொற்களையும் விதியையும் கண்டபொழுது இவையேன் வினைகொண்டு முடிந்தும் வினையெச்சம் ஆகாமல் வினைமுற்று ஆகின்றன? என்னும் வினா என்னுள்ளத்தில் எழுந்தது. 'பெயர்த்தனென் முயங்க'; 'உண்டனன் வந்தான்' என வினைமுற்றுக்கள் வினைகொண்டு முடிந்தவழி "வினைமுற்றே வினையெச்சமாகலும்" என்ற சூத்திரவிதியால் 'முற்றெச்சம்' என்று பெயர் பெறுகின்றனவே! இவை சொல்லால் முற்றுவினையாயினும் 'பெயர்த்து முயங்க' 'உண்டு வந்தான்' எனப் பொருள்படுதலால் வினையெச்சம் ஆகின்றன அன்றோ? இவற்றைப் போலவே 'காண்கு வந்தேன்' என்பதும் 'காண வந்தேன்' என்றே பொருள்படுதலால் இதனையும் வினையெச்சத் திரிபு என்னாமல் 'வினையொடு முடியினும் விளம்பிய முற்றே' எனத் தனிவிதி கூறக் காரணமென்னை? என்பது புரியாமலே விழித்தேன்.

பின்னர் சேனாவரையம் படிக்கும் வாய்ப்புப் பெற்றேன்.

274. "அவற்றுள்
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்"

என்னும் சூத்திர உரையில் சேனாவரையர் 'காண்கு வந்தேன்' என்பதை உதாரணம் காட்டினர். "செய்கென் கிளவி அவ்வியல் திரியாதெனவே" "பெயர்த்தனென் முயங்க யான்" (குறுந். 84) எனவும் "[illegible]" எனவும் "மோயினள் உயிர்த்த காலை" எனவும் வினை முற்றுச் சொல் வினைகொண்டும்

.கால் அவ்வியறிரியும் என்பதாம். அவை திரிந்தவழி வினையெச்ச .மாதல் "வினையெஞ்சு கிளவி வேறுபல் குறிய" என்புழிப் பெறப்படும்.

இருசாரனவும் பெயர் கொள்ளாது வினைகொண்டவழிச் செய்கென் கிளவி திரியாதென்றும் ஏனைய திரியுமென்றும் கூறிய கருத்தென்னை எனின்? நன்று சொன்னாய் "காண்கு வந்தேன்" என்றவழிச் செய்கென் கிளவி வினையெச்சமாய்த் திரிந்ததாயின் செய்தெனெச்சமாதற் கேலாமையின் செயவெ னெச்சமாய்த் திரிந்ததெனல் வேண்டும். வேண்டவே செயவெ னெச்சத்திற்குரிய வினைமுதல் வினையும் பிறவினையும் அது கொள்வான் செல்லும். வினைமுதல் வினையல்லது கொள்ளா மையிற் செயவெனெச்சமாய்த் திரிந்ததென்றல் பொருந்தாது. பிறிதாறின்மையின் முற்றுச் சொல்லாய் நின்றதெனவேபடும். அதனான் அவ்வியறிரியாது என்றார் என்பது. எனச் சேனா வரையர் வரைந்த விளக்கத்தைப் படித்தபொழுது என் ஐயம் நீங்கியது. அமைதியுற்றேன்.

இலக்கணம் படிக்கும் மாணவர்க்கு எவ்வெவ்வகையில் ஐயம் தோன்றும் என்பதைத் தம் நுண்ணறிவால் உய்த்து ணர்ந்து வினாவெழுப்பி விடைகூறிச் செல்வது சேனாவரையர் சிறப்பியல்பாகும். அத்தகைய விடங்களைப் படிப்போர் அவரு டைய நுண்மாண் நுழைபுலத்தை வியவாமல் நயவாமலிருத்த லியலாது. இவருடைய இத்தகைய பேறறிவைத் தொல்காப்பிய சொல்லதிகார வுரையாற்கண்ட மாதவச் சிவஞான யோகிகள், தம் 'சூத்திர விருத்தியில்' இவரைக் குறிக்குமிடத்து "வடநூற் கடலும் தமிழ்நூற் கடலும் நிலைகண்டுணர்ந்த சேனாவரையர்" என வரைந்திருக்கின்றார். இக்கூற்று உண்மையே வெறும் புகழ்ச்சியன்று என்பதை, உரைநூல்கட்கு வரம்பெனத் திகழும் சேனாவரையத்தை யூன்றிப் படிப்போர் உணர்வர்.

'செய்கு என்னும் சொல் வினைகொண்டு முடியினும் திரி யாது' என்னுங் கருத்தைத் தொல்காப்பியர், பிறர் கூற்றாகக் காரணங் காட்டாது வாளா கூறியிருப்பவும் சேனாவரையர் அதனை அவ்வளவில் விடாது தம் நுண்ணறிவால் நுனித்து நோக்கிக் காரணங் காட்டிச் செல்வது ஆராய்ச்சி யுணர்வுடை யார்க்கு அருவிருந்தாய் அமைவதாகும்.

எனினும் அவ்வாராய்ச்சியினும் ஒரு சிறிது ஐயம் உண் டாயது. நன்னூல் விருத்தியை மாணவர்க்குப் பாடம் சொல்ல நேர்ந்தபொழுது 'செய்கென்னொருமையும்' என்று தொடங்கும் சூத்திரவுரையில் 'செய்கு' என்பது வினையொடு முடிந்த



வழியும் முற்றேயாதற்குரிய காரணம் யாதும் கூறாமையும் சேனா வரையர் கூறிய காரணங்களையேனும் காட்டாமையும் சென்றிருத் தலையும் "வினைகொண்ட வழியும் முற்றாகும்" என்பது "எப் பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர், செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே" என்றாங்கு மரபாகக் கொள்க என்ற கருத் தையே வரைந்திருத்தலையும் கண்டேன். சேனாவரையத்தை ஆழ்ந்து படித்து அதன் உயர்வை உள்ளவாறுணர்ந்து புகழ்ந் துரைக்கும் சிவஞான முனிவர், இவ்விடத்து அச் சேனாவரையர் கூறிய முடிபை எடுத்துக்காட்டி விளக்காது 'மரபு' என்ற பெயரால் அமைதி கூறிச்செல்லக் காரணமென்னை யென என் னுள்ளம் சிந்தனையில் ஆழ்ந்தது. பின்னர் ஒரு முடிவிற்கு வந்தேன்.

'காண்கு வந்தேன்' என்ற எதிர்கால முற்றுச் சொற்கு சேனாவரையர் உரைத்த அமைதி "காண்பேன் வந்தேன்" என்றாற் போன்ற ஏனைய எதிர்கால முற்றுகளுக்கும் ஏற்புடை யதாய் 'அதிவியாப்தி' என்னும் குற்றத்தின்பால் படுவதாகச் சிவஞான முனிவர் எண்ணி இங்ஙனம் கூறியிருக்கவேண்டும் என்பதே அம்முடிபு. 'காண்கு வந்தேன்' என்பதற் குரைத்த அமைதி 'காண்பேன் வந்தேன்' என்பதற்கும் பொருந்துவது எங்ஙனமெனின்? கூறுவன் :— "காண்பேன்" என்பது எதிர் கால முற்றாகலின் இறந்தகாலத்திற்குரிய 'செய்து' என்னும் எச்சமாகத் திரிதற்கேலாது. எனவே எதிர்காலத்திற்குரிய 'செய'வெனெச்சமாகத் திரிதல்வேண்டும். வேண்டவே செயவெனெச்சத்திற்குரிய வினைமுதல் வினையும் பிறவினையும் அது கொள்ளாச் செல்லும் வினைமுதல் வினையல்லது அது கொள்ளாமையின் அங்ஙனம் திரிதல் இயலாது. [illegible] மையின் வினைகொண்டு முடிந்த வழியும் முற்றுச் சொல்லாய் நின்றதெனவேண்டும் என்று முடிபு செய்துவிடலாமன்றோ? இங்ஙன முடிவுசெய்யின் பொருந்தாதென்பது 'பெயர்த்தனென் முயங்க யான்' என்பதை முற்றெச்சமாகக் கொள்ளவேண்டு மென்ற சேனாவரையர் கூற்றுடன் தெள்ளிதின் புலப்படும். 'காண்பேன் வந்தேன்' என்பதும் 'பெயர்த்தனென் முயங்க' என்பதும் போலமைந்த முற்றெச்சமேயாம். எனவே சேனா வரையர் 'செய்கு' என்னும் சொல்லிற்கு உய்த்துணர்ந்துரைத்த அமைதி மிகைபடக் கூறலாய்க் 'காண்பேன் வந்தேன்' என் னும் தொடருக்கும் சென்று முற்றெச்சம் என அவருரைத்த உரையோடே மாறுகொடாமைப் முடிதல் காண்க. தொல்காப்பிய சூத்திரமும் சிவஞான முனிவர் கருத்திற்கே அரண் செய்வதாக அமைந்துளது. என்னை?

"செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்விய றிரியா தென்மனார் புலவர்"

எனப் பிறர் கூற்றாகவே யுரைத்து வினைகொண்டு முடிந்த வழியும் வினைமுற்றாதற்குரிய காரணம் தமக்குப் புலப்படாமையை யுய்த்துணர வைத்துள்ளாராதலின் என்க. இக்கருத்தினரல்லராக்கால் 'அவ்வியறிரியாது' என்றே ஓதியிருப்பாரன்றோ? இதனால் 'செய்கு' என்னும் சொல் வினைகொண்டு முடியினும் முற்றே யாதல் தொல்லாசிரியர் ஆணையாகக் கொள்ளலே சிறப்பு என்பது புலப்படும்.

தமிழ் மகவு தாலாட்டு

[புலவர், திரு. ராம. பெரியகருப்பன்]

(முன் செல்வி ௨௮-ஆம் சிலம்பு ௨௭௮-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெல்லம் இனிக்குமென்றும் வேம்பு கசக்குமென்றும்
சொல்லப் பழகவில்லை சுவைத்துப் பழகிவிட்டாய்!

தாய்ப்பால் அமுதுணவோ தருமுணவைச் சுவைப்பதற்கோ
வாய்ப்பாகு ஊற்றெடுத்து வடிய முகம்பார்த்தாய்!

தாலாட்டித் தூங்கவைத்துத் தளிர்முகத்தைப் பார்க்கையிலே
மேலான தாய்பதற மெல்லச் சிரித்ததுமேன்?

கண்வளராய் என்றன் கருத்தை வளர்த்திடுவாய்
பண்வளர்க்கும் பசுந்தமிழே, பால்வடிவே, தாலேலோ!

முழங்காலை மண்டியிட்டு முன்னேறி நீதவழ்ந்து
வருங்கால முன்னேற்ற வாழ்வை விளக்குகிறாய்!

தளர்ந்த நடைநடக்கத் தாவி எழுந்திடும்நீ
வளர்ச்சி குறைவென்று வினைந்து விழுகின்றாய்!

வாழ்க்கைத் துணைவழியில் வயது முதிர்ந்துவிட்டால்
வாழ்க்கைத் துணையாக வாய்த்தனையே கண்மணியே!

சான்றோன் எனஉன்னை ஆன்றோர்கள் தான்புகழ
ஈன்றாளின் மனத்திற்கு எழுச்சிதர வந்தனையே!

பிள்ளைகளைப் பெற்றுவளர் பேற்றைச் சிறப்பிக்கும்
வள்ளுவனின் வாக்குக்காய் வளரும் இலக்கியமே!

சொல்லில் சுவையூற்றித் தொட்ட இடம்தான் இனிக்கும்
அல்லி மலர்ப்பூவே அன்புருவே கண்வளராய்!

திரு. வி. க. படத்திறப்பு*

[டாக்டர் திரு. மு. வரதராசனார்]

அருமைத் தமிழர்களே,

இந்த மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் படமாக விளங்குகிறார் நம் தலைவர் திரு. வி. க. சென்னை அரண்மனைக்காரத் தெருவிலே ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற தமிழாசிரியர்கள் மாநாட்டிலே பெருஞ் சொற்பொழிவாளராக விளங்கினார் திரு. வி. க. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அந்த மாநாட்டை நடத்தும் பொறுப்பு எனக்கும் என்னுடைய நண்பர் அன்பு-கணபதிக்கும் இருந்தது. அந்த மாநாட்டிற்குச் சொற்பொழிவாளராக வந்தார் திரு. வி. க. வந்து மாநாட்டைக் கண்டு உளம் பூரித்தார். தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் இருந்து தமிழாசிரியர்கள் ஒன்று கூடியிருக்கின்றார்களே என்பதைக் கண்டு மகிழ்ந்தார்.

“எங்கள் காலத்தில் தமிழ்ப்புலவர்கள் ஒன்றுசேரமாட்டார்கள். அப்படி அவர்கள் ஒன்றுசேர்ந்தாலும் பிரியும் பொழுது அவர்கள் குழப்பமில்லாமல் பிரியமாட்டார்கள்,” என்று சொன்னார்கள். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழாசிரியர்கள் ஒன்றுபடாமல் இருந்தார்கள். கருத்து வேறுபாட்டைக் கலக வேறுபாடாக வளர்த்து வந்தார்கள். திரு. வி. க. வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தார். ஆனால் அநேக ஆண்டுகள் அவர் அங்குத் தமிழாசிரியராக இருக்க இயலவில்லை. தமிழாசிரியர் உலகம் அவரைத் தொண்டாற்றுவதற்காக வேறு உலகத்துக்கு அனுப்பியது. அவர் கற்ற தமிழ் வளர்ச்சிக்கும், உள்ளத்தைப் பண்படுத்துவதற்கும் முதலில் பயன்பட்டது. அவர் தமிழாசிரியர் தொழிலை விட்ட பிறகு தேசிய இயக்கத்தில் சேர்ந்து நாட்டிற்காகத் தொண்டாற்றினார். செய்தித்தாள் நடத்தினார். வாழ்க்கையிலே பல அல்லல்பட்டார். பற்பல துறைகளில் அவருடைய தொண்டு விரிவடைந்தது. ஆனால், இறுதி வரையிலும் அவர் தமிழ் உலகத்திலே இருந்துகொண்டு தொண்டாற்றி வந்தார். தமிழும், தொழிலாளர் உலகமும் அவரை என்றும் விடவில்லை. நோய்வாய்ப்பட்டிருந்த பொழுதுகூட அவர் தமிழை மறக்கவில்லை.

* 11-7-54 அன்று அண்ணாமலைநகர் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் நிகழ்ந்த தமிழாசிரியர் மாநாட்டில் தலைவர் ச. சோ. பாரதியார் தலைமையில், திரு. வி. க. வின் உருவப் படத்தைத் திறந்துவைத்து ஆற்றிய சொற்பொழிவு.

அவர் எதை மறந்தாலும், தமிழையும் தொழிலாளர்களையும்

இறுதி நாட்களில் குடியிருந்த வீட்டில் அவருக்கு இருக்க உரிமை இல்லாமற் போயிற்று. பகலெல்லாம் இரவெல்லாம் சிந்தித்துக்கொண்டு பழகிய இடத்தில் அவர் இறுதி நாட்களில் இருக்க இயலாத நிலை வந்தது. இறுதிக்காலத்தில் செய்யுள் வடிவில் நூல்கள் பல எழுதினார். உரைநடையில் எழுதலாமே என்று கேட்டேன்; அதற்கு அவர் சொன்னார், "உரைநடையில் எழுத எனக்கு விருப்பம் இல்லாமலில்லை. ஆனால் கண் இழந்த எனக்கு யாப்பு அமைதியோடு கூடிய பாடல்களைச் சொல்லி மற்றவர்களை எழுதும்படி சொல்வது எளிதாக உள்ளது. என் மனம் பலவற்றை வெளியிட விரும்புகிறது. கருத்துக்கள் பல வற்றை நினைவில் சேர்த்துத் தொகுத்துச் சொல்வதற்கு யாப்பு பயன்படுகிறது." அவர் மனத்திலே இருந்தவற்றை வெளியிட, அங்கிருக்கும் அன்பர் யாரேனும் ஒருவர் எழுதுகோலால் எழுதிய பின்னர்த்தான் அவர் மனம் நிம்மதி அடையும். ஒரு நாள் இரவு 7-மணிக்குச் சென்றேன். "எழுத யாரும் வரவில்லையே என்று எண்ணிக்கொண்டிருந்தேன் சமயத்துக்கு நீ வந்தாயே" என்று மகிழ்ந்து அவர் மனத்திலே இருந்ததையெல்லாம் என்னிடம் கொட்டினார். அக்கருத்துக்களை என்னிடம் கொட்டினால்தான் மகிழ்ச்சியாய் இருக்கமுடியும் என்று சொன்னார். 100 அடிகள்வரை நான் எழுதினேன். இஃதோடு நிறுத்தி விடுவார் என்று எண்ணினேன். அவர் விடவில்லை; 180 அடி வரை அவர் சொல்லியதை நான் எழுதிய பின்புதான் என்னை விட்டார். அந்த நூல்தான் "படுக்கைப் பிதற்றல்". "அப்பாடா! இப்பொழுதுதான் விடுதலை பெற்றேன். இன்று இரவு நன்கு உறங்குவேன்" என்றார்.

உள்ளத்திலே பல கருத்துக்கள் பிறந்து ஆர்வம் தூண்ட அந்த ஆர்வத்தை அவர் பயன்படுத்திய பின்னர்த்தான் அவர் அமைதி அடையமுடியும். திரு. வி. க. அவர்கள் எந்த மாநாட்டுக்கும் போவார், எந்தக் கூட்டத்துக்கும் போவார், எங்கே திறப்புவிழா என்றாலும் அவரைக் காணலாம். கல்லூரிகளிலே அவர் பேசுவார்; உயர்நிலைப் பள்ளிகளிலே பேசுவார்; சைவ சமயக் கூட்டத்திலும் பேசுவார்; கிறுத்தவர்களின் கூட்டத்திலும் பேசுவார்; தொழிலாளர்கள் கூட்டத்திலும் பேசுவார். "உடல் தளர்ந்தநிலையில் தாங்கள் அமைதியாக இருக்கலாமல்லவா" என்று பலர் இவரைக் கேட்பதுண்டு. எல்லாரிடமும் சென்று நல்லவற்றைச் சொல்லித் தொண்டாற்றும் வேட்கை சிறிதும் குறையாமல் இருந்து வருகிறது என்று சொன்னார். திரு. வி.

க.விடம் அஞ்சாமை உண்டு, புரட்சியான கருத்துக்கள் பல அவருள்ளத்திலும் இடம் பெற்றிருந்தன. அரசியல் புரட்சி மட்டுமல்ல, எந்தப் புரட்சியாக இருந்தாலும் அதை அமைதியோடு எண்ணி ஏற்றுப் போற்றவல்லவர் அவர்.

அவருடைய உள்ளத்திலே புத்தம் புதிய கருத்துக்கள் என்றும் தோன்றிய வண்ணம் இருந்தன. திரு. வி. க.விடம் புதுமை உள்ளம் மட்டுமல்ல, இளமை உள்ளமும் இருந்தது. "உங்களுக்கு உச்சிக்குடுமி ஏன்? கிராப் வைத்துக்கொள்வது கெடுதியா?" என்று கேட்டேன். "மூளையை வெப்பம் தாக்கிக் கெடுக்காமல் இருப்பதற்குக் கிராப்புதான் நல்லது. நான் பல ஆண்டுகளுக்கு முன்பே மொட்டையும் குடுமியுமாகக் காட்சி அளித்தேன். என்னை நம்பிப் பழமை விரும்பிகள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏன் என்னால் மனம் நோகவேண்டும்? இதற்காக மற்றவர்கள் என்னைப் பின்பற்றவேண்டாம்," என்றார்.

திரு. வி. க.வின் தூய அன்பை, பகைமை எள்ளளவும் அறியாத அன்பைப் போற்றாதவர்கள் இல்லை. திரு. வி. க. பல துறையிலே ஆராய்ந்து பேசுவார். தொழிலாளர் உலகத்திலே அவர் போராட்டம் நடத்தியபோது அரசாங்கம் அவரை வீட்டிலேயே சிறை இருக்கும்படி வைத்தது. அப்பொழுது ஒரு விடியற்காலை அவரைக் கண்டேன். அப்போது சொன்னார், "தம்பி, என்னைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை; தோல்வியைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை; தொழிலாளர்களின் கண்ணீர் அமைதிபெறும்வரையிலே எனக்கு அமைதியில்லை" என்று துணிவுடன் மொழிந்தார்.

மிக்க துன்பம் நெருக்கிய காலத்திலும் அவரிடம் கலங்காமையும் அஞ்சாமையுமே கண்டேன். மனைவி மக்களைப் பிரிந்து அவர் பலகாலமும் தமையனாரின் குடும்பத்தோடு வாழ்ந்தார். அதே சமயத்திலே தூய துறவியாகவும் இருந்தார். அவர் சென்ற இடமெல்லாம் உயரிய கருத்துக்களையே "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற கருத்துக்களையே எங்கும் பரப்பினார். தமிழ்மொழி ஆட்சிமொழியாக வேண்டுமென்று விரும்பினார். திரு. வி. க.விடம் பொறுமை உண்டு; அளவுகடந்த பொறுமை உண்டு. திரு. வி. க.விடம் பகைக்கமுடியாத பண்பு இருந்தது. அவரை எதிர்த்துப் பேசுகிறவர்களையும் பகைத்துச் சொல்லமாட்டார். என்றும் ஈரநெஞ்சம் உடையவர் அவர். [illegible] ஆசிரியர் சொல்லிய '[illegible] செல்வம்' திரு. வி. க.விடம் என்றும் [illegible] குன்றாச் செல்வமாகும்.

இனிய நெஞ்சம் உடையவர் தலைவர் திரு. வி. க. அவர்களுக்குச் சில சமயங்களில் துணிவு பிறப்பதில்லை. யாரோ சில

ருடைய கண்ணீர் அவருடைய நெஞ்சை நெகிழ்வித்ததே அதற்குக் காரணம். திரு. வி. க. வாழத் தெரியாதவர் என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்படி திரு. வி. க. வாழத் தெரியாத வள்ளல். பாரி முதலிய ஈரநெஞ்சத் தலைவர்களின் பட்டியிலேதான் திரு. வி. க.வைச் சேர்ப்பேன். அவர் படுத்த படுக்கையைச் சுற்றிக்கொண்டு நோயோடு வேறு வீட்டில் அவர் குடிபுக நேர்ந்தது. இந்த நிலைகளைப் பற்றியும அவர் அவ்வளவாகக் கவலைப்பட்டு நொந்ததில்லை. தமிழ்நாட்டிலே அனைவரும் ஒன்றுபட்டு வாழவில்லை. தமிழன் ஒருவன் தலையெடுத்தால், ஒரு தமிழன் நல்ல நிலையில் வாழ்ந்தால் மற்றொரு தமிழன் பொறாமைப்படுகிறான். இந்தப் பொறாமை நஞ்சு போகவில்லையே. அடிமை மனப்பான்மையும் போகவில்லை. நாடு எப்படி உய்யப்போகிறது என்றுதான் அவர் என்றும் கவலைப்பட்டார்.

சிறந்த சான்றோரின் வாழ்வைப் பற்றித் திருவள்ளுவர் கூறுவது என்ன?

"நத்தம் போற்கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது."

புகழுடம்பு மேம்படுதலாகும் வாழ்வில் கேடும், புகழ்நிலை நிற்பதாகும் சாவும், அறிவில் சிறந்தவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு இல்லை என்கிறார். இக்குறளுக்கு உதாரணமாக அமைந்தது திரு. வி. க. வாழ்ந்த வாழ்வு. பிறர் நோகும்படி எதையும் சொல்லமாட்டார். அப்படிச் சொல்லவேண்டிய நிலை வந்தால் மெல்லமெல்ல நழுவிவிடுவார்.

இவர் உடல்நிலைக்கு ஏற்றவாறு உண்ணும் உணவும் தேடி நாடி உண்பதில்லை. தக்கது இன்னது தகாதது இன்னது என்று உணவுபற்றி எல்லாம் இவர்தம் நூலிலே பலவேறு உடலோம்பலைக் குறித்து எழுதியிருக்கிறார். ஆனால், இந்தக் கருத்து நூலிலேமட்டும் இருக்கும், எந்தக் கருத்துக்களையும் மேடையிலே பேசிவிட்டு வெளியே கண்மூடித்தனத்துக்கு இடம் கொடுப்பவர் அல்லர். நெறியை என்றும் விட்டுநெகிழாப் பெரிய வீரர் அவர். ஆயினும், அவருடைய அன்பு நெஞ்சம் நெகிழ்ச்சி உடையது. "ஒருவரும் எனக்குக் கொள்ளிவைக்க வேண்டாம், ஒருநாள் இந்த உயிர்போகும் அன்று இந்த உடலை எல்லோரும் சேர்ந்து தீப்பற்றவைத்துவிடுங்கள் எல்லோருக்கும் இந்த உரிமை இருக்கட்டும்," என்றார்.

கொள்ளிவைக்கப் பிள்ளை இல்லையே என்று பலர் இன்றும் கலங்குகிறார்கள். ஆனால் திரு. வி. க.வின் உள்ளம் வேறு வகையாக இருந்தது. தம் வாழ்வைப் பொருட்படுத்தாது தூய

நெறியில் போற்றிய பெரியார் அவர். யாரேனும் திருவாசகம், தேவாரம் பாடினால் அமைதியாகக் கேட்டு மகிழ்வார். பெரியோர் பாடலைப் பாடுதலே அவர் போற்றிய பூசை. தொண்டு செய்வதையே அவர் வாழ்க்கை என்று கருதினார்.

பெரியோர்களே! திரு. வி. க. அவர்கள் நோயற்ற உடலோடு வாழ விரும்பினார். இயலவில்லை; தான் இறக்கும்வரை பழைய வீட்டிலேயே அமைதியாக இருக்க விரும்பினார்; இயலவில்லை. அவர் நீண்டகாலமாக இருந்த வீட்டைவிட்டுச் செல்லவேண்டுமென்று நெருக்கடி வந்தது. நான் இறந்த எனக்குப் பாடை வந்ததே, பல்லாக்கு வந்ததே, என்று தெரிந்து பழைய வீட்டைவிட்டு வெளியே செல்லவேண்டி இருக்கிறதே என்று சிறிது வருந்தினார்.

“உணவுத் தொடர்பாகத் தாங்கள் எதுவும் கட்டுப்பாடு இல்லையே, ஏன்?” என்று கேட்டால், “எனக்கென்று தனியே உணவா? மற்றவர்களுக்கு என்ன கிடைக்கிறதோ அதுவே எனக்கும் போதுமானது. எனக்குத் தனிச் சிறப்பான ஏற்பாடு எனிலும் வேண்டாம். என்னுடன் பழகும் தொல்லையிருக்கக் கூடாது” என்பார். காய்கறிகளில்லை பச்சையாயினதாய் போட்டுப் பருக்கும் பொரிக்காமலான உணவு கிடைத்தாலும் அதையே இவரும் உண்பார். வேகாத இட்லியாகக் கிடைத்தாலும் விருந்தோம்பும் ஏழைகளின் மனம் நோகாமல் உண்டு வருவார்.

திரு. வி. க. வின் வாழ்க்கை தோல்வியா? வெற்றியா? திரு. வி. க. வைப் பின்பற்றும் வீரர்களோர் இந்தக் கேள்வியைக் கேட்க விரும்புவார்கள். திரு. வி. க. விடம் பிறர் பொருள் விரும்பாமை என்னும் உயர்ந்த கொள்கை இருந்தது. பெண் உலகம் ஆண் மக்களுக்குச் சிறந்து இருக்கவேண்டும் என்பது அவர் அவா. இதை அவர் உயர்ந்த கொள்கையாகக் கருதினார். தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டிருக்கவேண்டும் என்று கருதினார். தமிழர்களை மற்ற நாட்டாரும் மதிக்கவேண்டுமென்று பாடுபட்டார். இப்பொழுது நாம் என்ன காண்கிறோம்? அந்நாள் அநுபவங்கள் மறந்து புகைவண்டி விலைப்பலர் இந்நிலையைக் காண்கிறோம். தமிழர்க்குத் தன்மதிப்பு நாட்டிலேயே இல்லையே. உலகமெல்லாம் ஒற்றுமையோடு சேர்ந்து நாம் வாழ்ந்தால் பல துறையிலும் முன்னேற்றமுடியும் என்றும், அப்போதுதான் உலகத்திற்கு உற்ற உதவி செய்யமுடியும் என்றும் அவர் கருதலானார்.

உலகத்திலே தலைவர்கள் பலர் தமிழ்நாட்டைப் பற்றிய பிரச்சினையைக் கவனிக்காமல் இருப்பார்களானால் கட்டுக்

குடும்பங்களும் ஒன்றுபட்டு இருக்கமுடியாததைப் போல, நம் மொழி முதலியவற்றைப் புறக்கணித்து நடக்கும் கூட்டு அரசாங்கமும் ஒன்றுபட்டு இருக்கமுடியாது என்று அவர் தம் கருத்துக்களை வெளியிட்டு வந்தார். பிரதமர் நேரு காஷ்மீரை மதிப்பதுபோல முக்கால் பங்கு பற்றுவது தமிழ்நாட்டின்மீது இருக்குமானால் சேர்ந்து வாழுங்கள். இல்லையேல் பிரிந்து வாழுங்கள். நாம் மற்ற நாட்டாரைப் போற்றுவதைப்போல் அவர்களும் நம்மைப் போற்றினால் சேர்ந்து வாழ்வோம்; இல்லையேல் பிரிந்து வாழுவோம் என்ற உறுதியான கொள்கை திரு. வி. க. விடம் இருந்தது. மற்றவர்களைப்போல முயல் வேட்டையில் விருப்பம் வைக்காதவர் திரு. வி. க.

> "கானமுய லெய்த அம்பினில் யானை
> பிழைத்தவேல் ஏந்தல் இனிது."

"காட்டில் ஓடும் முயலை நோக்கிக் குறிதவறாமல் எய்த அம்பு ஏந்துதலைவிட, வெட்டவெளியில் நின்ற யானைமேல் எறிந்து தவறிய வேலை ஏந்துதல் சிறந்தது," என்பது குறள் நெறி. அதுவே திரு. வி. க. வின் உயரிய கொள்கைகளின் அடிப்படையில் இருந்தது.

எதிர்கால மரபு வாழவேண்டும். நாம் மட்டும் அதற்கு உரிய முயற்சிகள் செய்வோம். யானையைக் கொல்லாமல் வேல் தப்பி வந்தாலும் அந்த வேலே சிறந்தது என்ற வள்ளுவர் கொள்கையுடைய வீரர்களுக்குத் திரு. வி. க. வின் வாழ்க்கை வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

தமிழ் நாடு

வேங்கடமே தென்குமரி வேலையெல்லை நாடு
மென்மைகனி இனிமைகனி மேன்மைமொழி நாடு
தேங்கமழும் பொதிகைமலை தென்றறமிழ் நாடு
திருமலைகள் தொடர்மலைகள் தெய்வமலை நாடு
பாங்குபெறு பாவிபெண்ணை பாலைபொன்னி நாடு
பாவளர்ந்த வையைபொடு பழம்பொருனை நாடு
தேங்குசுனை பனிக்கருவி தெளிசாரல் நாடு
சிற்றோடை கால்பரந்த செய்யதமிழ் நாடே.

'உரிமை வேட்கை'—திரு. வி. க.

கானல் வரி

[வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனார், மயிலம்]

மாதவியைக் கோவலன் பிரிதற்குக் கானல்வரிப் பாடல்களே காரணம் என்பது யாவரும் அறிந்ததே. முதற்கண் யாழ் கொண்டு கோவலன் பாட, அவன் பாடல்களில் அகப்பொருட் சுவைமிக்குக் களவில் தலைமகன் கூற்றாகவே அமைந்த கருத்துக்கள் நிரம்பியிருந்ததால், அவன் வேறொருத்திபால் எண்ணம் கொண்டான் என எண்ணிய மாதவி, தனக்குக் கருத்தில்லையேனும் தானும் வேறொருத்தன்பால் எண்ணம் உடையவள் போலப் பாட, அதுகேட்ட கோவலன், அவள் மனம் பிறிதாயினள் என எண்ணியவனாய்ப் பிரிந்தான். "யாழ்இசைமேல் வைத்துத் தன் ஊழ்வினைவந்து உருத்ததாகலின்" பிரிந்தான் என்றார் இளங்கோவடிகள். ஊழ் காரணம் என்றாலும் அதை விடுத்து நாம் உள்நுழைந்து காரணம் காணவேண்டுவது சாலச் சிறந்ததாம். கோவலன், மாதவி ஆகிய இருவரிடையில் குற்றம் யாரிடத்தது என்பதே நாம் காணவேண்டுவது. ஈண்டு திரு ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் கூறியதைக் காண்பாம்.

*"இந்திர விழாவில் இம்மாதவி அரங்கேறி, திருமாற்குரிய தேவபாணி முதல், நிலங்களைப் பாடும் தேவபாணியீறாகப் பலவகைத் தேவபாணி பாடி, பாரதி, கொடுகொட்டி, பாண்டரங்கம் முதலாகவுள்ள பதினொருவகைக் கூத்தும் ஆடி மக்களைக் களிப்பிக்கின்றாள். அவளுடைய ஆடலும் பாடலும் அழகும் மக்கள் மனத்தை இன்புறுத்தக் கண்டு கோவலன், "ஊடற் கோலம்" உறுகின்றான். இஃதேதான், அவன் மாதவியைப் பிரிதற்குத் தோற்றுவாயாகிய மனப்பிளவு தோன்றுகின்றது"

கோவலன் ஊடல் கடலாடு காதையில் காணப்பட்டது.

> "...............................காவலன் விழவும்
> ஆடலும் பாடலும் அணியும் அடைக்கொள
> ஊடற் கோலமொ டிருந்தான்"

என இளங்கோவடிகள் கூறினர். "அவன் ஊடுதற்குக் காரணம் இருவர் முடிதலைவன் வந்த வெளிப்பு; இவள் ஆடலிற் காலம் நீட்டித்ததனாலும் மக்களும் இவளைப்பற்றிப் பாராட்டிப் பொருமை

*சிலப்பதிகார ஆராய்ச்சி, பக்கம் 66.

யாலும் வந்த வெறுப்புமாம்" என்றார் அரும்பத உரைகாரர். அடியார்க்கு நல்லாரும், 'திருநாள் முடிதலான் வந்த வெறுப்பு' என ஊடற்குக் காரணம் கூறிப், பின்னரும் "இனி இவளாடலும் கோலமும் தனது அறிவு நிறையோர்ப்புக் கடைப்பிடிகளைக் கைக்கொண்டுவிடுதலாலே பிறர்க்கும் இவ்வாறும் என்னும் வெறுப்போடிருந்தான் எனினும் அமையும்" என விளக்கமாக எழுதினர். திரு. ஔவை. சு. அவர்கள் இவ்விடத்துக்கொண்ட ஊடலே பின் பிரிவிற்குத் தோற்றுவாயாக அமைந்தது என்பர். இது எவ்வாறாயினும் கோவலன் கானல்வரிப் பாட்டைத் தொடங்குகையில் ஊடல்குறிப்பே யில்லாதிருந்தான் என்று நாம் அறுதியிடலாம். முன்குறித்தபடி ஊடற்கோலம் கொண்ட கோவலனை மாதவி பின்னர்த் தன் மனையகத்துச் சென்று, தன்னைப் பலவகையிலும் அணிந்துகொண்டு அவன் உவக்குமாறு கூடலும் ஊடலும் அளித்தாள்.

"கூடலும் ஊடலும் கோவலற் களித்துப்
பாடமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள்"

என்பர் இளங்கோவடிகள். ஊடியிருந்தவனுதலின் மனைக்கண் சென்றவுடன் முதற்கண் கூடலை அளித்துப் பின்னர் ஊடலை யளித்தாள் என்றார் அடிகள். மாதவி, தொடக்கக் காலமுதலாகவே "கலவியும் புலவியும் காதலற் களித்து" வந்ததாகவே அடிகள் கூறியுள்ளார். அவ்வாறே இந்திர விழாக்காலத்தில் மாதவியின் ஆடல் முதலியவை பிறரையும் இன்புறுத்தல் பொறாது ஊடிய கோவலனை அவளும் பின்னர்த் தெளிவித்து மகிழ்வித்தாள் என்க. அதனால் கோவலனும் ஊடலைவிட்டான் என்க. மறுநாள் கடற்கரைக்குச் சென்ற காலத்தில் மாதவி யாழ் இசைக்கவேண்டினளாக அவனும் அவள் மகிழவேண்டும் என்ற எண்ணத்துடனேயே இசைத்தான். அவன் மனதில் -ற்குறிப்பேயில்லை யென்னலாம்.

"மாதவி தன் மனமகிழ வாசித்தல் தொடங்கும்" என்றார் இளங்கோவடிகள். எனவே யாழிசைத்துப் பாடிய அக்காலத்தில் அவன் தூய எண்ணத்தினனாகவேயிருந்தான் ஆதலின், அவன் வேறு குறிப்புடையன் என என்னுதற்கில்லை. பின்னரும் மாதவியின் பாடலைக்கேட்ட கோவலன் அவள் வேறு குறிப்பினள் என உணர்ந்தானேயன்றித் தன் பாடல்களும் அக்குறிப்பினைத்தரும் என்றுணர்ந்தானில்லை, அவன் மனத்தில் அஃதில்லையாதலின். அதனாலன்றோ "கானல்வரி யான்பாட" என்றே பின்னர்க் கூறினான்? எனவே கோவலன்பால் யாதொரு குற்றமும் தொடக்கத்தில் இல்லை என்னலாம்.

— பிக் கோவலன் வேறு குறிப்பினன் போலவே பாடினன் என்றாலும் மாதவி அவ்வாறு பாடியது பெருங்குற்றமாம். குலமகளிர்க்குரிய இயல்பு அன்று அது. அன்றியும் அவள் அவ்வாறு பாடியதும் அவன் தன்னைத் தவறாகவே புரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடனேயே பாடினாள். அவள் பாட்டில் மாயப் பொய் கலந்திருந்தது. அதனால்தான் தன்னைப் போலவே அகச்சுவை ததும்பப் பாடினாள் எனக் கொள்ளாமல் வேறு குறிப்பிற் பாடினாள் எனக் கொண்டான் கோவலன்.

"கானல்வரி யான்பாடத் தானொன்றின் மேல் மனம்வைத்து
மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் பாடினாள்"

என்று வெறுத்தான் அவன். அவளும் மாயப்பொய் கூட்டினாள் என்பதை இளங்கோவடிகள் நன்கு வெளிப்படுத்துகிறார். கோவலன் பாடிய பின்னர்த்தான் பாடத் தொடங்கும்போது

"கலவியால் மகிழ்ந்தாள்போல் புலவியால் யாழ்வாங்கித்
தானுமோர் குறிப்பினள்போல்........பாடத் தொடங்கும்"

என்றார் அவர். கோவலன்தான் ஓர் குறிப்பினன்போற் பாடவில்லை, அவனுக்கு அது கருத்தின்மையின். அவளுக்குக் கருத்தானமையின் அதற்கேற்பப் பாடினாள். அதனால் அவள் பிற குறிப்பினள் என்பதை எளிதின் வேற்றுப்போக்காக உணர்ந்தான். உடனே பிரிந்தான். திரு. ஞானவை. க. அவர்கள் கூறுவதுபோலக் கோவலனுக்கு இளம் புன்னின்றமையின் அவள் குற்றம் உடையவளா இல்லாதவளா என்பதை ஆராயும் அறிவு அடங் கெடுது. ஒருகுணம் மிக்காலத்து ஒருகுணம் அடங்குவது இயற்கை. எனவே 'கானல்வரி'யில் குற்றம் காணுவதென்றால் மாதவியால் காணவேண்டும் என்னலாம்.

'திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி. —சிலப், கானல்வரி : உ.

பாராட்டுரை*

[திரு. V. ஆனந்தராசு, எம். ஏ. எல். டி.
தென்னார்க்காடு மாவட்டக் கல்வித்துறைத் தலைவர்]

மதிப்பிற்குரிய தலைவரவர்களே! ஆசிரியர் பெருமக்களே!

சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சி எய்துகின்றேன். பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர் பெருமானார் இயற்றிய திருக்குறளுக்கு எழுதிய உரைகள் எல்லாவற்றினையும் மலர்ச் செண்டு போலத் தொகுத்துத்தந்த ஆசிரியர் தண்டபாணி தேசிகர் அவர்கட்கு என் பாராட்டு உரியதாகுக. தேசிகர் அவர்கள் தமிழுக்குப் பெருந்தொண்டாற்றியிருக்கிறார் என்பதைத் தமிழாசிரியர்களே பாராட்டிப் பொன்னாடை போர்த்திப் பெருமைப்படுத்துவது மிகவும் பாராட்டுதற்குரியது. அதிலும், தமிழரின் கண்மணிபோன்ற தமிழைத் திக்கெட்டும் பரப்பத் தமிழ் முழக்கம் புரிந்துவரும் இந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இந்தப் பாராட்டு விழாவை நடத்துவது மிகவும் பொருத்தமானதாகும்.

இப்பெரும் விழாவிலே தமிழாசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க ஆசைப்படுகின்றேன். இன்று தமிழரிடையே, குறிப்பாக பள்ளி பயிலும் மாணவர்களிடையே, ஒரு மறுமலர்ச்சி தோன்றியுள்ளது என்பதை மிகைப்படக் கூற விரும்பவில்லை. மாணவர்கள் தமிழ்ப்பெருங் காவியக்கலையைக் கூர்ந்து பயில முன்வந்துள்ளனர். அவர்கள் எளிதில் தமிழ் நூல்களைப் பயிலவும் எம்மதத்திற்கும் எந்நாட்டினர்க்கும் தொடர்புடைய திருக்குறளை நன்கு கற்றுத் தெளியவும் தமிழாசிரியர்கள் தொண்டு புரிவார்கள் என்று நம்புகிறேன். இப்பெரும்பணியில் தமிழாசிரியர்கள் கைம்மாறு கருதாது பணியாற்ற வேண்டுமென்று மிகப்பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். மாணவர்களிடையே தோன்றியுள்ள இந்தப் புத்துணர்ச்சியை நன்முறையில் பயன்படுத்தித் தமிழ்மக்களிடையே குறள்நெறி வளரப் பணியாற்றுமாறு உங்களை மீண்டும் முறை கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடிக்கின்றேன்.

*11-7-54-இல் அண்ணாமலை நகர், பட்டமளிப்பு விழா மண்டபத்தில் நிகழ்ந்த தமிழாசிரியர் மாநாட்டில் ஆற்றிய பாராட்டுச் சொற்பொழிவு

பேராசிரியர் திரு. ஆ. முத்துசிவன்

[பண்டிதர். திரு. கா. பொ. இரத்தினம் எம். ஏ., பி. ஓ. எல்.,]

"பேராசிரியர் முத்துசிவன் இறந்துவிட்டாரா? சென்ற வைகாசி மாதம் நடந்த திருக்குறள் மாநாட்டிற் பேசினாரே! சித்திரை மாதம் நிகழ்ந்த சிலப்பதிகார விழாவிற் சொற்பொழிவாற்றினாரே! மார்கழி மாதம் கொண்டாடிய பாரதி ஜயந்தி விழாவில் உரைவிருந்தளித்தாரே! அவர் மறைந்துவிட்டாரா?" என்று அன்பர்கள் கேட்கிறார்கள்; அளவிலாத துன்பம் அடைகிறார்கள்; 'இவ்வளவு இளம்பருவத்திற் பிரிந்துவிட்டாரே!' என்று ஏங்குகிறார்கள்.

ஆறு மாதத்தின் முன் மூன்றாம் முறை இலங்கைக்கு வந்து தமது குணப் பெருமையாலும், கவிதைப் புலமையாலும், சொல்வன்மையாலும் அன்பர்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட அவரை இழந்துவிட்டோமே என்பதை நினைக்கும்போது தாங்கொணாத்துயர் ஏற்படுகிறது. தமது பெயருக்கு ஏற்ப முத்து முத்தாகப் பேசும் ஆற்றல் கைவரப்பெற்ற அவருடைய பேச்சைக் கேட்டவர்களுடைய உள்ளத்தைவிட்டு அவர்தம் இனிய பேச்சும், புன்முறுவல்பூத்த முகமும் இன்னும் மறையவில்லை. ஆனால், அவரோ மறைந்துவிட்டார். என்செய்வது? இதுதான் உலக இயல்பு!

உரைநடை எழுதுவதற்கும், சொற்பொழிவாற்றுவதற்கும், கவிதைகளை இனிமையாகப் பாடி அவற்றின் நயங்களை விளக்குவதற்கும் அவர் புதுமுறைகளைக் கையாண்டு புகழ்பெற்றார். அவர் எழுதிய அசோகவனம், கவிதை, மின்னல்கீற்று, அசோகனும் நகரும் முதலிய நூல்கள் அவர்தம் புலமையின் தனிச் சிறப்பை நன்கு காட்டுகின்றன.

[illegible] நகரிலே நடந்த சிலப்பதிகார விழாவிலே சிறந்த கவிதையின் இயல்பை விளக்குதற்கு அவர் பாடிக் காட்டிய பாடல்கள் அவ்விழாப் பந்தரிற் குழுமியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களுடைய உள்ளத்திலே கவிதையைப் பற்றியதொரு [illegible]வினை உண்டாக்கின.

"பார்க்காவது கழுகும் படும் பருப்பாவது தானை
கேற்காவது இறைகே ன்று பார்த்தால் அது தெரியும்"

என்று தொடங்கும் பாட்டைக் கூறி, "இதனைச் சிறந்த கவிதை என்று யாருங் கூறுவார்களா?" என்று அவர் வினவினர். அப்பொழுது அங்கிருந்த மக்கள் அடைந்த மகிழ்ச்சி கண்கொளாக் காட்சியாகும்.

நகைச்சுவை ததும்பப்பேசி மக்கள் மனத்தை மகிழ்விக்கும் ஆற்றல் அவருக்கு இயல்பாகவே அமைந்துளது. இதனால் அவருடைய விரிவுரைகளுக்குத் தமிழ்நாட்டில் தனிமதிப்பு ஏற்பட்டது. தம் விழாக்களைச் சிறப்பாக நடத்த விரும்பிய சங்கத்தினர் அவரை அழைக்கத் தவறுவதில்லை. அவர் விரிவுரை நிகழ்த்தாத விழாக்களும், அவருடைய ஆதரவு பெறாத சங்கங்களும் தமிழ்நாட்டில் மிகக் குறைவு எனலாம். எமது தமிழ் மறைக் கழகத்தின் ஆதரவாளராகவுமிருந்து அவர் பல தொண்டுகள் செய்துளர். சென்ற ஆண்டிலே தில்லிமாநகரிலே நடந்த ஆறாவது தமிழ் விழாவிலே பங்குபற்றிச் சொற்பொழிவாற்றினர். இந்த ஆண்டு நடக்கும் ஏழாவது தமிழ் விழாவுக்கு முன்னர் அவர் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

பாரதியாருடைய பாடல்களை நன்கு சுவைத்துத் தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் நன்குபெறத் தக்க முறையில் அவற்றை எடுத்துக்கூறி விளக்குதலிலும் அவருக்கு அவரே நிகர் எனலாம். "அமரகவி பாரதி" என்னும் நூலிலே பாரதியாருடைய பெருமைகளையும் அவருடைய பாடல்களின் சிறப்புக்களையும் அழகாக விளக்கியுள்ளார். கலிங்கத்துப் பரணியினையும் நந்திக்கலம்பகத்தையும் இலக்கியத் திறனுய்வுடன் வெளியிட முயன்று வந்தார். இப்பெரு முயற்சி முடியுமுன் அவர் பிரிந்துவிட்டார்; பேராசிரியர் மூத்துசிவன் அவர்கள் சமயப் பற்றும் மிக்கவர். தேவார திருவாசகங்களில் நல்ல ஈடுபாடுடையவர். சைவசித்தாந்த உண்மைகளை இக்கால விஞ்ஞான உண்மைகளோடு பொருத்திக் காட்டிச் சைவசமயத்தின் சிறப்பை நன்கு விளக்கும் பேராற்றலும் படைத்தவர். அண்மையிலே அவர் எழுதிய நடராச தத்துவம் என்னும் நூல் இதற்குச் சான்று ஆகும். "கடவுளில்லை" என்று கூறும் மனப்பாங்கு படைத்த இளைஞர்கள் பலரைத் தமது ஒழுக்கத்தாலும் உரையாலும் அவர் நல்வழிப்படுத்தியுள்ளார்.

அழகப்பா கல்லூரியிலே தமிழ்ப் பேராசிரியராகவிருந்து அவர் ஆற்றிய தொண்டுகள் பலப்பல. உடனுசிரியர்களுடைய மதிப்புக்கும் போற்றுதலுக்கும் உரியவராகத் திகழ்ந்தார். மாணவர்களிடத்தும் அவர் பேரன்புகாட்டி அவர்களுடைய முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கினர். அவர் சென்ற

சென்ற இடமெல்லாம் அவருடைய மாணவர்கள் அவரை வர வேற்றுச் சிறப்புச் செய்தார்கள். ஈழத்து மாணவர்கள் பலருக்கு அவர் செய்த உதவிகள் அளவிறந்தன. கைம்மாறு கருதாது உதவிசெய்யும் பெரியல்பிலும் அவர் சிறந்து விளங்கினார். தாம் செய்த பேருதவிகளையுஞ் சிறியனவாகவே அவர் கூறிக்கொள் வார். "சில யாழ்ப்பாண மாணவர்களுக்கும் இடம் கிடைத்து விட்டது. என் முயற்சி சிறியது; மாணவர்களின் தகுதி பெரியது" என்று இருமாதங்களுக்கு முன் தான் எனக்கு எழுதினார். இது "பணியுமாம் பெருமை" என்னும் வள்ளுவர் வாக்கை எனக்கு நினைப்பூட்டிற்று.

பழகுதற்கு இனிய பண்பிலும் அவர் தலைசிறந்து விளங் கினார். அவரை ஒருமுறை தானும் சந்தித்து உரையாடியவர்கள் அவரை எக்காலமும் மறக்கமாட்டார்கள். "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்" என்பர். இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அவர் விளங்கினார். பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு எத்தகையதென்பதை அவருடன் நெருங்கிப் பழகிய வர்கள் நன்கு அறிவர். "பாக்கியம் பெரும்பித்தும் பயக்குமோ என்று சானகி அனுமனிடம் கேட்டாள். அன்பும் அப்படித் தான்" என்று அவர் தம் நண்பரொருவருக்கு எழுதினார்.

பெருங்குணங்களின் கொள்கலமாக விளங்கித் தமிழ் மொழிக்கும் தமிழினத்துக்கும் அருந்தொண்டாற்றிய பேராசிரியர் முத்துசிவன் அவர்கள் 23-9-'54-ஆம் நாள் இரவு 9-15 மணிக்குக் கல்லூரி வட்டத்திற்குள் உள்ள தமது இல்லத்தில் திடுமென உயிர்நீத்தார்கள்; பிரியுங்காலை அவர்கட்கு அகவை 43. இவ்விளமையிலேயே அவர்களுடைய பிரிவு ஈடு செய்ய முடியாததொரு பெரும் பிரிவாகும். அவரை இழந்ததால் அவருடைய குடும்பத்தினர், சுற்றத்தார், நண்பர்கள், நாட்டினர் மாத்திரமன்றித் தமிழ் மக்கள் யாவருமே துன்பமும் வாட்டமும் அடைந்துவிட்டனர். இளமையிலேயே தம் புகழை நிறுவி மறைந்த அவருடைய இன்னுயிர் இறையடியில் இன்புறுக.

திரு. வி. என். குமாரசாமியார் மறைவு

இப்பெரியார் சிறந்த தவஇருக்கை விளக்கனராவர். தவ ...க்கை என்னினும் யோகாசனம் எனினும் ஒன்றே. இவர் ...சாயநூல் பெருவணிகருமாவர். இவர்தம் இல்லக்கிழத்தியார் திருமதி. சீதாலட்சுமி அம்மையாரும் தவஇருக்கைப் பயிற்சி யுடையரேயாவர். அம்மட்டோ இத்தக்கார் இருவரும் சிறந்த தமிழ்ப் பற்றுடையராய்க் கருத்தொத்த காதலராய் மனையறம் பேணுவதுபோல் வணிகத்துறையினையும் பேணிவந்தனர். தவ இருக்கையால் தாங்கள் நோயின்றி நலம்பெற்றுவருவதை எல்லாரும் எய்தி இன்புற்றுவாழவேண்டும் என்னும் நன்னோக்குடையவர். அதற்காம் தொண்டுபுரிந்து வந்தனர். சிறுவர் பலர்க்கு ஊணுடையோடு கல்வியும் பயிற்சியும் தம் இல்லத்து நல்கினர். பெரியார் இருபாலாரும் தம்மில்லத்து வந்து பயில விரும்புவார்க்கு வேண்டும்போதெல்லாம் முகமலர்ந்து பயிற்சி அளித்து வந்தனர். பயிற்சிபெற்ற இருபாலாரும் உடலுரம்பெற்று, நோய் நீங்கி இன்புற்று வாழ்கின்றனர். இப் பெருந்தகையார் திருக்குறளை நன்கு பயின்றவர். பயின்றார்மாட்டுப் பேரன்புடையவர். பலர்க்கும் பயிற்றியவர். திருக்குறள் அவதானம் திரு. சுப்பிரமணியதாசவர்களைத் தம்மில்லத்தே பலமுறை தங்கச்செய்து அவர்கட்குப் பேராதரவுபுரிந்த புரவலரும் ஆவர்.

அம்மட்டோ இருவரும் பல்வேறிடங்களிலும் அவைகளிலும் சென்று தவஇருக்கையின் நன்மையைப்பற்றி மக்கள் எளிதாகக் கைக்கொள்ளுமாறு விரிவுரையாற்றியும், இருக்கை (ஆசனம்) களைச் செய்துகாட்டியும் விளக்கிவந்தனர். அதனால் அக்கொள்கை எங்கும் பரவுவதாயிற்று. தவஇருக்கையைப் பற்றிய நூலொன்று இவர்களால் வரையப்பெற்று 1953-ல் வெளிவந்துள்ளது. இப்பயிற்சியினை 1934-ல் திரு. இ. எஸ். அரங்கசாமியிடமிருந்து பெற்றனர்.

24-9-1954 வெள்ளிக்கிழமை இரவு 11-மணிக்குத் தம் ஐம்பத்துநான்காம் அகவையில் இறைவன் திருவடிநீழலை எய்தினர். இவர்தம் இழப்பும் தமிழகத்துக்குப் பேரிழப்பேயாம். திருவருளால் இவர்தம் ஆவி என்றும் இன்புறுமாக. இவர்தம் அருமை மனைவியார்க்கும், அருமை மக்கள் ஐவர்க்கும் நம் ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரியவாகுக.

—இதழாசிரியர்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) நாமக்கல் கவிஞர் கூற்றுப் பொருந்துமா ?

கடந்த 1—9—61-ஆம் நாள் தில்லித்தமிழ்ச் சங்கச் சார்பில் தமிழன்பர்கள் நாமக்கல் கவிஞர் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளையவர்கட்குப் பாராட்டு ஒன்று நிகழ்த்திப் பெருமைப் படுத்தினார்கள்.

அப்பாராட்டின் கூட்டத்தாருக்கு நன்றி கூறுங்கால் தனித்தமிழ் கூடாது என, அவர் கூறியதாவது :

'ஒருமொழி வளருவதற்குப் பிறமொழிப் பதங்களில் தக்கவற்றை ஏற்றல்தான் நல்லது. இங்கிலீஷ் தடங்கலின்றி அந்நிய மொழிகளிலிருந்து எல்லாவற்றையும் பதங்களைத் தனதாக்கிக்கொண்டிருக்கிறது. சமஸ்கிருத மொழியின்பால் துவேஷம் கூடாது' என்பது.

குறிப்பு : ஆங்கிலம் வளர்ச்சியில்லாத ஒருமொழி. அதனால் எல்லா மொழிச்சொற்களையும் ஏற்றுக்கொண்டு வளர்கிறது. தமிழ் இயற்கை மொழி. புதுக்கருத்துக்களையும் புதுச்சொற்களால் ஆக்கும் வன்மை அதற்குண்டு. எனவே அதற்கு வேற்றுச் சொற்களோ, வேற்று எழுத்துக்களோ வேண்டுமென்பதில்லை. புலவர்கள் இடைக்காலத்தில் தோன்றிய [illegible], [illegible], பதம் போன்ற வேற்றுச்சொற்களையும், [illegible] எழுத்துக்களையும் புகுத்தித் தமிழ்மொழிப் பொன்னுடலில் அழுக்கைத் [illegible] செய்தனர். தமிழ்மொழியின் [illegible] [illegible] வைக்கும்போது ஓசையின் [illegible] [illegible] யும் செய்கின்றனர். ஸ்ரீ. என்பதா இருக்கின்றதா ? திரு. என்பது இருக்கின்றதா ? அக்கிராசனாதிபதி, தலைவர் ஆகியது. பிரசங்கம், சொற்பொழிவு, விரிவுரை ஆகியது. புருஷர், ஸ்திரீகள் ஆண், பெண் ஆயினர். இவைகளும் [illegible] மொழியை வளர்க்கும், [illegible] அதனோடு செல்லும் என்பதைக் கவிஞரே [illegible] [illegible] [illegible] [illegible] வேற்றுமொழி வேட்கை [illegible] தமிழர்களை [illegible] [illegible] விட்டபாடில்லை. இன்னும் [illegible] [illegible] செல்வர்களாகவும் நாடும், மொழியும், கலையும் [illegible] வளரும் ? முன்னேறும் ? தமிழ் மக்கள் கவிஞர் கூற்றைப் பொருத்துமாறு [illegible] என்பது தனித்தமிழ் மொழி வளர்ச்சியில் கருத்து செலுத்துவார்களாக.

(உ) தமிழ் மன்றம்

தமிழ் மன்றம் என்னும் பெயரால் 1[illegible]—61-ஆம் நாள் இந்திய [illegible] பாராளுமன்ற [illegible] திரு [illegible] சுப்பையாவின் வீட்டில் ஒரு பெரிய கூட்டத்தில் இம்மன்றம் தொடங்கப்பெற்றது. இதன் நோக்கம், தமிழின் சிறப்பை உணர்த்தும் நல்ல [illegible] [illegible] ; தமிழ்மொழியின் [illegible] துறைகளையும் ஆராய்வது ; தமிழ்மொழியின் அருமையும் தொன்மையையும் தமிழ் [illegible] மக்கள் யாவரும், [illegible] அறியச்செய்வது [illegible] [illegible] ; [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] ; [illegible] [illegible] [illegible] [illegible] தொடர்பும், [illegible] [illegible] [illegible] போன்றவை.

இதன் [illegible] [illegible] செயற்குழுவில், [illegible] [illegible] [illegible] செட்டியார், டி. வி. இராமன், ஏ. சுப்பையா, கே. கே. பிள்ளை, டாக்டர் மு. வரதராசனார், வி. எஸ். [illegible] முதலியார், வி. [illegible] [illegible] முதலியோர் [illegible] உறுப்பினர்களாகவும் [illegible], அமைச்சர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

மதிப்புரை

வள்ளுவர் தமிழ்மாணவர் கழகம், வெள்ளிவிழா மலர், வையாறு. பக்கங்கள் 102.]


இம்மலர் திருவையாற்று அரசர் கல்லூரித் திருவள்ளுவர் தமிழ் மாணவர் கழகத்தாரால் வெளியிடப்பெற்றது. மேல் அட்டையில் திருவள்ளுவர் திருவுருவும், உட்புறத்தில் கல்லூரிக்கட்டிடமும் சரபோசி மன்னர், ஏ. டி. பன்னீர்ச்செல்வம், வி. நாடிமுத்துப்பிள்ளை, கல்லூரித்தலைவர், ஆசிரியர் குழு, வெள்ளிவிழாக் கழக உறுப்பினர்களும் படமாக அமைந்து அணி செய்கின்றனர். கட்டுரைகளாக 'சரபோதி வாழ்க்கை வரலாறு' முதல் 'சொல்லேருழவர்' என்பது ஈறாக அழகிய சொல்லோவிய, கருத்து வன்மை மிக்க கட்டுரைகள் பாக்கள் திகழ்கின்றன. கட்டுரைகளும், பாக்களும் தனித்தமிழில் மிக்க இன்பந்தருவனவாக அமைந்துள்ளன. அண்மையில் அழிவுறுத்திய புயல்பற்றி திரு. முத்துச்சாமி அவர்கள் பாடியுள்ள பாக்கள் புயலின் கொடுமையை விளக்கும் உயிரோவியமாக அமைந்து மெய்ப்பாட்டு உணர்ச்சியை ஊட்டுகின்றன. படித்தற்கேற்ற சுவைத்தற்கினிய இம் மலர் தமிழ்நன்மக்கள் கையகத்தும் நாவகத்தும் செறிந்து நன்மணம் கமழுவதாக. இவர்களின் அரிய தொண்டினைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

(உ) சொந்தத் தொழில்

[பக்கம் 112. விலை ரூ. 1—8—0. ஆசிரியர்: திரு. ஆர். தயாநிதி ஆசிரியர்: 'உலகம்' திருச்சிராப்பள்ளி, கஸ்தூரி பதிப்பகம், உறையூர்]

உலகம் தொழிலாளரை அடிப்படையாகக்கொண்டது; தொழிலாளர் இன்றி உலகம் இயங்காது; சிறவாது; உலகந்தோன்றிய நாள் தொட்டு முதலாளி தொழிலாளி போராட்டம் நீங்கியபாடில்லை. இப் போராட்டத்தை நீக்க எழுந்ததே இந்நூல். இதன்கண் 'என்ன செய்வது?' என்பது முதல், 'வாசனைத்திரவியங்கள்' என்பது ஈறாக உக தலைப்புக்களில் ஆசிரியர் விளக்கியுள்ளனர். காலத்துக்கேற்ற அரிய சிறிய நூல் இது. ஆசிரியரின் இப்புது முயற்சியைப் பெரிது பாராட்டுகின்றோம். ஆசிரியர், பிறருக்கு அடிமையின்றித் தன்னுரிமையோடு வாழும் வழியை வற்புறுத்தி 'வேலையும் தொழிலும்' என்ற தலைப்பில் விளக்கியிருப்பது போற்றற்குரியது. கைத்தொழில் முறைகளையும் அநுபவத்தின் கீழ் 'தேனீ வளர்த்தல்', 'மால்ட் ஆகாரங்கள்' முதலிய தலைப்புக்களில் கூறி அவைகளை மேற்கொண்டு நிகழ்த்தும் முறைகளையும் விளக்கிக் கூறியிருப்பது ஆசிரியரின் பரந்துபட்ட பேரறிவுப் பண்பை விளக்குகின்றது. ஆசிரியர் இன்னும் இது போன்ற புதுவழிகளில் பன்னூல்கள் எழுதி நாட்டிற்கும், மக்கட்கும் வேண்டும் நலம் பல செய்து மேன்மை பெற வேண்டுகின்றோம்.


திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.



பள்ளிக்கூட வெள்ளி விழாவின்போது 9—2 955: கலந்துகொண்ட பெரியார்கள்



இராசா சர். முத்தையாச் செட்டியாரும், சோமசுந்தர பாரதியாரும்



பேராசிரியர், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் வரவேற்புரை வழங்குதல்

ராஜா சர். முத்தையா செட்டியார் சோமசுந்தர பாரதியாருக்கும்
பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்தல்

பரிபாடல் மாநாடு

உட்கார்ந்திருப்பவர் (இடமிருந்து வலம்): 1 திரு. வ. சுப்பையா பிள்ளை; 2 திரு. ரு. அருணாசலக் கவுண்டர்; 3 திரு. தி. சுந்தரஞ் செட்டியார்; 4 திரு. சுவாமிநாதத் தம்பிரானவர்கள்; 5. திரு. மு. காசி விசுவநாதன் செட்டியார்; 6. திரு. உ. இராமலிங்க முதலியார்.

நிற்பவர் (இடமிருந்து வலம்): 1. திரு. சா. கணபதி முதலியார்; 2. திரு. ந. சேதுரகுநாதன்; 3. திரு. அ. க. நவநீத கிருட்டிணன்; 4. திரு. த. பரமசிவம்; 5. திரு. மு. சாத்தப்ப செட்டியார்; 6. பேர். முத்துக்கருப்ப பிள்ளை; 7. திரு. மு. நாராயணன் செட்டியார்; 8. திரு. சோ. சிங்கார

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௯	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, ஐப்பசி நவம்பர், 1954	பரல் ௩

பிரஞ்சு இந்தியா விடுதலை

உலகில் பலவுயிர்களும் தன்னுரிமையுடன் வாழ்வதே வாழ்வாகும். அஃதின்றி வாழ்வது, கூட்டில் அடைபட்டு வாழும் கிளியின் வாழ்க்கை யொப்பதேயாகும். கூட்டில் பூட்டப்பெற்றிருக்கும் கிளிக்குப் பறக்க இயலாது; அதன் இறக்கைகள் அரியப் பெற்றிருக்கும்; அது, வாழும் வரை, கதவு கொண்டு மூடி, இனத்தவரைத் [illegible]. எனவே, அது தன்னைத்தனியாகத் துன்பத்துடன் வாழும்.

இவ் வாழ்க்கை யொப்பவே, ஒரு நாடு மற்றொரு நாட்டிற்கு அடிமைப்பட்டு வாழ்வது. இவ்வாறு அடிமைப்பட்டுக் கிடந்ததே நம் இந்திய நாடு. ஆங்கில ஆட்சியினர் பிடியிலிருந்து 1947 ஆகஸ்டு 15-ஆம் நாள் விடுதலை பெற்றது. அதன் ஒரு பகுதிக் குட்பட்ட பிரஞ்சிந்தியாவான புதுச்சேரி முதலியன, பிரஞ்சியரின் ஆட்சிக்கு உட்பட்டுக் கிடந்தமையால் அது, வேற்று அரசினர் கைக்குள் சிக்குண்டமையால் — இந்தியா விடுதலை பெற்றபின், விடுதலை பெறவில்லை. இக் காலை அந்நாட்டில் விழிப்புற்ற மக்களின் கிளர்ச்சியால் அற முறையின் வழியாகவே 1948-இல் சந்திரநாகூர் இந்தியாவுடன் இணைப்பு முடிவு செய்ததை உலகில் யாவரும் அறிந்ததே.

அப்பால் புதுச்சேரியின் வாழும் மக்களின் உரிமை வேட்கை கொழுந்துவிட்டு எரிந்தது; விடுதலைக் கிளர்ச்சி மிகுந்தது. பிரஞ்சு அரசினர் அடக்குமுறையைக் கையாண்டனர்; மிரட்டினர்; நெருக்கினர்; அடித்தனர்; வேறு பல வகையில் கொடிய முறைகளையெல்லாம் செய்தனர்; அவையெல்

லாம் விடுதலைவேட்கை ஞாயிற்றின் முன், பனிப்படலமென

பின்னர்ப் பிரஞ்சு ஆட்சியாளர், இந்திய அரசியலாரோடு நட்புமுறையில் பிரஞ்சிந்தியாவை விட்டுக்கொடுத்துவிட்டுச் செல்லலே நலனென உணர்ந்தனர். அதன் பிறகு, 1954-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் உக-ஆம் நாள், இந்தியா, பிரஞ்சு அரசினர்களிடையே தில்லி மாநகரில் ஒப்பந்தம் ஆயிற்று. அப்பால், இந்தியக் குடியரசுப் பிரதிநிதி, திரு. கேவல்சிங்கினிடர் பிரஞ்சுக் குடியரசு அரசியல் தூதர், திரு. பியரிலாண்டி 1954 ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள் க-ஆம் நாள், காலை 6-45 மணிக்கு மாற்றிக்கொடுத்து அவ்வுடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். அன்றுமுதல் பிரஞ்சிந்தியா விடுதலை பெற்று நம் இந்தியக் குடியரசுடன் இணைந்து

இவ்விடுதலை பெருமகிழ்ச்சிக்குரிய வொன்றாகும். இப் பிரஞ்சிந்தியாவை முதன்முதலில் கைப்பற்ற அடிகோலியவர் பிரான்சிஸ் மார்டின் என்பவராவர். அவர் 1674-ஆம் ஆண்டில் ஆங்குப் பிரஞ்சுக்கிழக்கிந்தியக் கம்பெனிச் சார்பில் ஒரு பொறியியல் (Factory) தொழிற்சாலையை நிறுவி நடத்தி வந்தார். அதன் பின் உயர்நிலை பெற்று முன்னேறிவந்த பிரஞ்சிந்தியாவின் தலைநகரான புதுச்சேரியை டச்சுக்காரர்கள் 1693-ஆம் ஆண்டு கைப்பற்றினர். அவர்களிடமிருந்து பிரஞ்சுக்காரர்கள் 1699-ல் அதனை மீட்டனர். அப்பால் பன்முறை பிரிட்டானியர் முற்றுகைக்கு ஆளாயினர். அதன் பின்னர் இறுதியாக 1814-ஆம் ஆண்டு பாரிஸ் உடன்படிக்கைமூலம், பிரஞ்சுக்காரருக்கு இப் புதுச்சேரி முதலிய ஊர்கள் உரிமையாயின.

இப் புதுச்சேரியோடு காரைக்கால், மாகி, ஏனாம் முதலிய நகரங்களும் ஒன்றன்பின் ஒன்றாகப் பிரஞ்சினர்க்கு உரிமையாயின. நூற்றைம்பது ஆண்டுகட்கு மேல் அடிமைப்பட்டுக் கிடந்த இப் பிரஞ்சிந்தியா, இவ் 1954-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் க-ஆம் நாளன்று இந்தியக் குடியரசுடன் இணைப்புற்றது; இணைப்புற்றவுடன் புதுச்சேரி நகரம் எல்லையில்லாததோர் இன்புற்றது; அஃதடைந்த மகிழ்ச்சிக்கு,

> ‘ கார்பெற்ற தோகையோ ; கண்பெற்ற வாண்முகமோ ;
> நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ ?’

எதை ஒப்புரைப்பது! எல்லா நாட்டின் உரிமை மகிழ்வெல்லாம் ஒன்று கூடி இப் புதுவை நகரில் திரண்டுருவானது போன்று காட்சியளித்தது.

ஆனால், ஈண்டு இந்நிலையில் ஓர் துயர்தரும் செய்தியையும் குறிப்பிட வேண்டியிருக்கிறது. நவம்பர் ௧-ம் நாள் பிரெஞ்சிந்திய விடுதலை நாளாக அமைய இருக்கையில், அதற்கு முந்திய நாள் 31-10-54-இல் பிரெஞ்சிந்திய மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தவரும் விடுதலை வேட்கை மிக்குடையாரும், பிரஞ்சு இந்திய மக்கட்சபைத் தலைவருமான திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் எதிர்பாராவண்ணம் மாரடைப்பினால் உயிர் நீத்தார்கள். பிரெஞ்சிந்தியா விடுதலைபெறப் போகிறது என்ற செய்தியால் அவர் உள்ளம் மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தால் தாக்கப்பட்டதுபோலும். அவர் பிரிவு புதுவை நகரைத் துயரத்தில் ஆழ்த்தியது. யாரும் அவரின் எதிர்பாராத பிரிவுக்கு மிக வருந்தினோம்.

அரசியல் உரிமைகளைப்பெற்ற முதலமைச்சரான திரு. கேவல் சிங் அவர்கள் அத்தாணி மன்ற மாளிகைக்குப் புதுவைத் தெருவின் வழியாக உந்துவண்டி (Car)யில் சென்றார்; அப்போது ஆயிரக்கணக்கான மக்கள் கூடினர்; மிக்க மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்; அரசியல் மாளிகையில் பல அலுவல்கள் நிகழ்ந்தன; திரு. கேவல்சிங்கும், அவர் மனைவியாரும் அதனைப் பார்வையிட்டுக் களித்தனர். பிரெஞ்சு அரசினர் விடுத்த ஆட்சி முறையை மாற்றியவுடன் அரசினர் மாளிகையில் இந்தியக் கொடி ஏற்றிப் பறக்க, நிகழ்ந்தது; பெரும் முழக்கம் மிக்கது; முதலான மாளிகையிலே பிரெஞ்சுக் கொடிகள் இறக்கப் பெற்றன. முதலமைச்சர் கேவல்சிங் இந்தியக் காவற் படைகள் பிரெஞ்சிந்திய ஆட்சி காக்கும் சென்ற போலீஸ் நிலையங்களைத் தம் உரிமையாக்கிக்கொண்டனர். திரு. பாலசுப்பிரமணியம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகப் பதவி ஏற்றார்.

இன்று பிரெஞ்சு இந்தியா என்ற பெயர் மறைந்தது. இந்தியாவின் புதுவை, காரை, மாகி, ஏனாம் ஆகிய நான்கு பகுதிகளிலும், நாட்டிலும், நகரிலும், மலைகளிலும் ஊர்களிலும் மகிழ்வு! மகிழ்வு! பெருமகிழ்வு! யாவரும் உளமுவந்து புது வாழ்வு கொண்டனர்!

ஆனால், புதுவை, காரைக்கால் முதலிய நகரங்களையுடைய, தமிழ்நாட்டின் ஆட்சிக்கு உரிய பகுதிகளாக இருந்தவை பெயர் தெரியவில்லை; முன்போலவே தனியாக ஆட்சி நடை பெறும் வகையில் தலைமை பெற்றுள்ளன. பொருள் வேறுபாட்டால் அப்பகுதிகள் தனித்திருக்க நேர்ந்தது பெற்றன. காலச் சூழ்நிலையால் வழி முதிர்வினால் முழு வழியாக மாறி மாறி வருவது போல், இவ்வகையும் மாறலாகும்;

இன்று எம் இந்திய நாட்டோடு இணைவதாயின. ஆயினும், இது முழு விடுதலையென்று கூறற்கில்லை.

எம் சென்னை மண்டிலப் பகுதிகளும், தமிழ்கூறு நாடு நகரங்கள் யாவும் சிற்றூர்களும் இன்றும் தன்னுரிமை பெற வில்லை; முன்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டுக் கிடந்தன. இதுகாலை வடவர் ஆளுகைக்குக் கீழே அடங்கவேண்டுவ தாயிற்று. அரசியல் மன்றங்களில், சட்ட அவைகளில், வழக் குரை மன்றங்களில், அஞ்சல் நிலையங்களில், புகைத்தொடர் நிலை யங்களில், பிறவேறு அலுவலகங்களிலெல்லாம் இந்தி மொழியே தலைமை பெற்றுள்ளது. எம் கன்னித் தமிழ்மொழி கீழேயே கிடக்கின்றது. நம் தமிழ் மொழி ஆட்சி மொழியாக அமைந்து உயர்ந்து நாடு நகரங்களிலெல்லாம் மூலைமுடுக்குகளிலெல்லாம் தமிழ்மொழி வழங்குதல் வேண்டும்; எங்கும் செந்திறத்த தமி ழோசை கேட்கப்பெறல் வேண்டும்; வேற்றுமொழிகள் என்றும் எக்காலத்தும் தலைமையேற்காத உள்ள உரத்தை நம் தமிழர்கள் மாறாது கொள்ளல் வேண்டும்: அன்றே 'விடுதலை விடுதலை! பரவரோடு மறவருக்கும் குறவருக்கும் விடுதலை! விடுதலை! விடுதலை!" என்று முழக்கஞ் செய்த தேசிய வீரன் பாரதியின் கனவு, நனவாக மாற்றம் பெறும். அம் மாற்றமாகிய முழு விடுதலை பெற்று,

> 'வடவேங்கடம் தென்குமரி
> ஆயிடைத்
> தமிழ்கூறு நல்லுலகம்'

ஓங்கி ஒளிரும் நாளே நன்னாள்; பொன்னாள்! இந்நாள் எந்நாள் வருமோ என ஏக்கற்று நிற்கின்றோம்! அன்று எம் தமிழகக் கொடிகளான, மீன், புலி, வில் உருவங்கள் பொறித்த கொடிகள் ஒன்றாக இணைந்து, நந்தமிழகம் மொழி, கலை, பண்பு, அன்பு, நண்பு முதலிய யாவும் நலனுறப் பெற்று ஒளிருமென அந் நாளை எதிர் நோக்குகின்றோம். விரைந்து நம் தமிழகம் விடுதலை பெற்று உயர்வுறுதலைக் கண்டு மகிழ்வோம்! மகிழ்வோம்!

வாழ்க தமிழகம்! மலர்க விடுதலை!

மறப்பெண் மங்கையர்க்கரசி

[புலவர், திரு. க. குமரன்]

நங்கையர் மன்னி: அங்கயற் கண்ணி! வருக! வருக! வணக்கம். இனியவு நல்வரவாகுக.

அங்கயற் கண்ணி: அன்பு. இன்வாழ்த்து! மகிழ்ச்சிக்குரியதே! வா! நாம் பூங்காவுக்குச் சென்று இம்மாலைப் பொழுதைக் கழித்து மகிழ்வோம்.

நங்கையர் மன்னியும் அங்கயற் கண்ணியும் பூங்கா சென்று உலாவுகின்றனர். வானொலி இயர்களின் இன்பத்தோயாக இசை பரப்பிட்டது. சில விளையாட்டுகளும் புரிந்தனர். ஆடி மகிழ்ந்து திரிந்து களைப்பாறுகின்றனர். அப்பொழுது அங்கயற் கண்ணிக்கு ஓர் ஐயம் பிறந்துவிட்டது; அதனை உடனே நாம் கேட்கவேண்டும் என்று ஆவலால் [illegible] பொங்கியெழுந்த உள்ளம், மன்னியின் அருகில், "நங்கைமன்னி! இப்பூங்காவிற்கு 'மங்கையர்க்கரசி பூங்கா' என்று ஏன் பெயர் வந்தது? இந்த ஒரு பெயர் [illegible]. அதற்கு 'மங்கை'யைப் [illegible] வரலாறு காரணமாக உள்ளது தெரியுமா? அதைச் சொல்லி எனக்கு அருளுக!" என்று வேண்டினள்.

நங்கைமன்னி கூறலுற்றாள்: "அங்கயற்கண்ணி! பாண்டிய பேரரசு தென்று வாழ்ந்த மதுரைத் தமிழ் நாட்டிலே — [illegible] அணிந்து, [illegible] கன்னியர் வாழ்ந்த தமிழ் நாட்டில், [illegible] சங்கம் வைத்துத் தமிழ் தேர்ந்து, 'கன்று புரந்தருள் [illegible] — [illegible] தெறுநர்க் [illegible] — [illegible] [illegible] செற்றார் [illegible] கடனே — [illegible] என்று, [illegible], [illegible], [illegible] பாடி, [illegible] [illegible] மிழ்நல் [illegible] [illegible] என்று, [illegible] பண் பாடிச் சான்றோர் போற்ற 'பாண்டியர்' வாழ்ந்த தமிழ் நாட்டில்—அவர்களின் வழியில்—அவர்கள் [illegible] மறந்த பாண்டியர் ஆட்சியில் [illegible] [illegible]! [illegible] [illegible] [illegible]! [illegible]; கேள்:

பழங்காலத்தில்—[illegible], பல் [illegible] பார்வைக்கும் பக்கத்திலேயே இருந்த காலத்தில்—சேர, சோழ, பாண்டியர்கள் செந்தமிழ்ச் சங்கம் வைத்துத் தங்கள் பெருமையை, தம்

காத மறையாக்கிக் கொண்ட நாட்களில், இந்தப் பாண்டியநாட்டில்—நம்மூராகிய இந்த நல்லூரில்—நக்கண்ணை என்பாள்—நங்கையர் நாயகமாய் வாழ்ந்து வந்தாள். அவள், இயற்கையாகப் பெண்கள்குலத்திற்குப் பிடித்திருக்கும் அச்சப் பேயை—கோழைப் பூதத்தை—பேதைமைப் பிசாசை இருக்குமிடம் தெரியாமல் ஓட்டி வாழ்ந்து, கடமை மாறாத கற்புக்கடம் பூண்டு, காதல் அன்பு மீதூர, தாயன்பு தவழ வாழ்ந்த, நன்மனம் படைத்த நங்கை யாவள்.

அவள், பிறந்து, வளர்ந்து, தமிழ்பேசி, 'திருக்குறளை' வாயாலிசைத்தபோது வயது மூன்று. மூன்றும் வயதில் அவள் முழக்கிய திருக்குறள், 'தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால், அம்மா! அரிவை முயக்கு' என்பதாம். இக்குறளை அவளாசிரியர், எப்படியோ முயன்று, முற்றுமழலையும்—கற்றேன் குதலையும் கலந்து, கோவை அறாத நாவை அசைத்து, நற்குரலில் திருக்குறள் முழக்கம் செய்யச் செய்திருக்கிறார்! அவள் அவ்வாறுகூறி, அடுத்து வாய்திறந்ததால்,

'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து, கெடுக உலகியற்றியான்' என்பது ஒலித்ததாம். இவ்வரிய கருத்துக்களை அக்குழந்தைப் பருவத்தில் ஒருகுழவி கூறுமானால் யாருக்குத்தான் வியப்பு வாராது! அம்மா!

'தம்முடைய சொந்த முயற்சியில் கட்டப்பட்ட வீட்டில் இருந்துகொண்டு, தாமே சம்பாதித்த பொருள்களை, உற்றார், உறவினர், அற்றார், அறிஞர்' யாவர்க்கும் பகுத்துக் கொடுத்துத் தாம் உண்பதிலே தோன்றுமாம் பெரிய மகிழ்ச்சி—பெரிய இன்பம்—பெரிய உவகை—இல்லறம் பெற்றபயன்!' 'பிச்சையெடுத்துத்தான் உயிர் வைத்திருக்க வேண்டும் என்று வாழ்க்கை அமையுமானால் இப்பேருலகம் படைத்த கடவுளுந்தான் அழிந்து போகட்டுமே!' என்று, இப்படி விலைகொடுத்து வாங்க முடியாத கருத்து மணிகளைக் குழந்தை கொட்டிற்று.

கண்டாரும் கேட்டாரும் கொண்ட மகிழ்ச்சியால் 'மங்கையர்க்கரசி! மங்கையர்க்கரசி!' என்றே வாயாரக் கூறி வழங்கினர்.

அவள் வளர்ந்து, 'எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற பழுத்த இலக்கணக் கடல்களையும் தமிழிலக்கியங்களையும் கடந்து, திருக்குறளின் 'இன்பத்துப் பாலை'க் கற்கும் இளமையின் எழுச்சியைப் பெற்றாள்.

அவளுக்கு அழகுதங்கி ஆனந்தமடையும் அந்நாட்களில், அழகு சுவைக்கும் ஓர் ஆடவன்—அவன் பெயர், ஆடவர்க்கரசன்—ஆம்—அவனால் காதலிக்கப் பெற்றாள்.

காதலிக்கப் பெற்ற காலத்தே திருக்குறள் காதல்நெறி யாகிய,

'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல'

என்ற, கள்ளங்கபடத்தை வெளிப்படுத்தும் உரையாடலில்லாமல், காதலின் முழு ஆழத்தையும் காட்டி யளக்கும் அளவு கோலாகிய கண்ணால் கண்டு காதலித்து, பெற்றோர், மற்றோர் யாவரும் கூடித் திருமணம் செய்து, ஒருவனை வாழ்க்கையில் ஈடு படுத்தி, வாழ்க்கைத் துணைக் 'காதல்' எனக் காட்டினர். அங்கு அவள் சாத்திரப்போர் செய்யும் கணவனைக் கண்டாள்; நல்லனே பேசி, நல்லனவே செய்து காலம் கழித்த இளமைப்பருவக் காட்சி அங்கு இல்லை; ஒருபக்கம் கொடுமை—ஒருபக்கம் வறுமை—ஒருபக்கம் வஞ்சகம்—ஒருபக்கம் போராட்டம்—ஒரு பக்கம் போலிவேதாந்தம்—ஒருபக்கம் கூடாவொழுக்கம்! இப்படித் தோன்றிய வாழ்க்கையின் இடையில் 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை, பண்பும் பயனுமது' என்ற, அன்புநெறியினுடா, அறநெறியினூடு வாழ்வதனூடு—ஒழுக்கத்தால் விரும்பம் எய்தி இல்வாழ்க்கைப் பண்பையும்—இல்லறப் பெற்ற பயனையும் பெற்று,

'உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்'

என்ற, தேவர் காட்டும் நீக்கமிழ்ப் புலவியை மேற்கொண்டு வாழ்ந்து வரும் நாளில் 'மின்னலங்கனி' பெற்றாள். பெருமாட்டி ஆனாள்.

அக்காலம் வடவர், தெக்கணத்தின் மீது படையெடுத்து வந்து, தமிழகத்து ஆண்மை முடியாதாம் பாண்டிய நாட்டின் மீது முற்றுகையிட்டனர். வீரஞ் செறிந்த தமிழ்நாட்டு மறவர்கள் வெகுண்டெழுந்தனர். அம் மங்கையர்க்கரசியும், 'பெற்ற தாயினும் சிறந்த பொன்னாட்டைக் காப்பதே தமிழ்த்தொண்டு—தமிழ் வீரம்' என்று வினை தலைமேற் கொண்டாள்.

மறக்குடி மக்களைப் பார்த்து மங்கையர்க்கரசி கூறினாள்: "அறிவும் ஆற்றலும் நிறைந்த அன்பர்! வீரத்தை உருவேதாளனி லும் வாழ்வைத் தந்து, வாகைக் கொடுகூடன் என்னுடன் பிறந்தோரே! இமயமே திகைக்கும் வண்ணம் இருங்கல் பொறிக்கும் உங்கள் பாண்டியன் வழிவந்தவனே உங்களைப் படைத்த—உங்கள் நலம்பெற்று—உங்கள் என்னும் நிறம் பெற்ற மன்னர்க்கு—கொல்ல விம்பும் கொடுக்கும்—பெருமையே மாசுபடச் செய்த பகைவரே! உங்கள் வாளுக்கும் வேலுக்கும்

வாளிக்கும் வேலை! உங்கள் வீரத்திற்குச் செந்தமிழ் இலக்கியம் பாட—மாற்றார் வாட—தோள்வலி காட்ட—வாள்வலியோங்க - கைத்திறங்கள் காட்டத்தக்கதோர் வாய்ப்பு! தளராதீர்; உள்ளங் குலையாதீர்; பெண்டு பிள்ளைகளை நினையாதீர்; உற்றவர் நலத்திலும் ஊரார் நலமே பெரிதெனச் செல்லுங்கள்! வெற்றி கொள்ளுங்கள்!" என்று, திக்கெட்டும் படைவீரர் திரள முழக்கி னுள். வீடுகளே திரண்டுவிட்டன

செல்லும் தந்தையும் தமையன்மார்களும் வாயிலில் நிற்க, 'ஆடவர்க்கரசன் என்னுடை அடிகளை வாழ்த்தி, முடியும்வரையில் விருந்தினர்க்கு ஓம்பலாய்' என்று இல்லறச் செல்வம் பெற்ற செல்வமே! சிந்தையில் தங்கும் சீர்மறமங்காய்! சென்று வரு கிறேன். உன் அன்பு என்னுடனே வந்து துணைசெய்யட்டும்' என்று கூறித், தன் முகத்துவழியும் அன்பினை அவள் முகந் தெளித்துமறவிடை பெற்றுச்சென்றனன்—அறப்போர் செய் [illegible]

[illegible] தில் தந்தை இறந்துவிட்டார்; அவருக்குக் கல் நாட்டிவிட்டார்கள் என்ற செய்தி முதலில் வந்தது; சிந்தை நொந்தாள்; கணவனும் தமையன்மார்களும் களத்துள்ளார்கள் என்று மகிழ்ந்தாள்; போர்ச் சிரிப்புச் சிரித்தாள்!

கணவன் இறந்துவிட்டான் என்று அறிந்துங் கேட்டாள்; கொதித்தெழுந்தாள்; களம் சென்றுள்; அகப்புண்பட்டு இறந்த அடலேற்றைக் கண்டாள்; சிரித்த முகத்தைக்கண்டு சிரித்தாள். அவ்வாணழகனை எவ்வேல் கொன்றதோ அவ்வேலை மட்டும் தானெடுத்துக் கொண்டாள். போர்க்களத்தில் ஒப்பாரி இட வேண்டிய நேரத்தில் உள்ளம் பூரித்தாள்; தன் தமையன்மார்கள் உள்ளனர் அவர்கள் வெல்வார்களென்று! வீடு திரும்பினுள்.

திரும்பின அப்போதே, தமையன்மார்களும் இறந்துபட்ட னர் என்ற செய்தி கேட்டாள்; பீதி கொண்டாளில்லை; தன் கையகம் கண்டாள். யாரை? மறக்குலக் கொழுந்தை—இறம் பலபுரி செல்வனை—பால்குடிக்கும் படை மறவனை! அவனைத் தன் முலைபறித்து—தன் கணவனுடைய மறம்பாடும் வேல் வடித்துக் கொடுத்து—முன்னோரின் வீரக்கல் காட்டி, 'செல்க போர்க் களம்' என்றுள்.

சென்றுனம் மறவன் மைந்தன்! குழந்தை! பாவம்! போரில் மாண்டது!

பின் என்ன செய்வாள்?

'ஓ! வீட்டில் இருக்கிறது; என் வீரன்—என் கண்ணுளன் அகப்புண்பட்ட அடலேறு—அவனைக் கொன்ற அவ்வேல்!'

ஓடோடிக் கொணர்ந்தாள் !

'தமிழ்நாடே ! உன் புகழ் நின்றோங்க என்றும், மறப்பாடி மண்ணுலகம் தீர்ந்தது ! தமிழன்னாய் ! நின் புகழ் நின்றோங்க என்றும், கற்புக் கட்டுப்பாடு, காதல் வாழ்வைக் கல்வெட்டாக்கிக் காலம் முடிந்தது. என் நாட்டவர் வெல்க ! எம் பகைவர் வீழ்க ! [illegible] கடைசித் துளிக் குருதியும் என் நாட்டைக் காப்பதாகுக ! [illegible] [illegible] வேல்—காதற்கணவன் [illegible], அதனைக் கொண்டே ஆவி போக்கினள்.

வாழி மங்கையர்க்கரசி ! வாழி ! வாழி ! அவள் குடிக் கோனை இக்காட்சிப் [illegible] இப்படியா உண்டாகப் [illegible] [illegible]—

அவளைப் [illegible] [illegible] [illegible] வணங்குகின்றார்கள் ; [illegible] ; புகழ் பாடுகின்றார்கள். [illegible] [illegible] ! [illegible] ! இவள் வாழ்க்கைக்கு [illegible] [illegible] கேள் :

'[illegible]
ஒன்றும் [illegible]
இ[illegible]
புகழ்[illegible]'
([illegible]: பு. வெ. [illegible]: [illegible])

'[illegible]
முன்னின்று [illegible]
கைபோய்க் [illegible]
எய்[illegible].'
([illegible]: பு. வெ. [illegible]: [illegible])

'[illegible]
வெற்றி [illegible]
[illegible]
[illegible]'
([illegible]: பு. வெ. [illegible]: [illegible])

'[illegible]
வெய்[illegible]
[illegible]
வெற்றி[illegible].'
([illegible]: பு. வெ. [illegible]: [illegible])

வாழ்க தமிழரின் மறப்போர் வெற்றி !

மறைவுற்ற தமிழ் நூல்கள்

[மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி]

(செல்வி, சிலம்பு: ௨௧, பரல்-௨. பக்கம் ௭௨-இன், தொடர்ச்சி)

வீரசோழிய உரையாசிரியராகிய பெருந்தேவனார் தமது உரையில் இந்நூலைக் குறிப்பிடுகிறார். வச்சத்திளங்கோ என்னும் சிற்றரசன்மீது அகப்பொருள் துறையமைத்துப் பாடப்பட்ட 900 வெண்பாக்களையுடையது இந்நூல என்று தெரிகிறது.

வீரசோழியம் அலங்காரப் படலம் 11-ஆம் செய்யுள் உரையில் பெருந்தேவனார், இந்நூற் செய்யுள் ஒன்றை மேற்கோள் காட்டுகிறார். அச் செய்யுள்

வேட்டொழிவ தல்லால் விளைஞர் விளைவயலுள்
தோட்ட கடைஞர் சுடுகந்து—மோட்டாமை
வன்புறத்து மீதுடைக்கும் வச்சத் திளங்கோவை
இன்புறுத்த வல்லமோ யாம்.

இச்செய்யுளைப்பற்றி உரையாசிரியர் மேலும் இவ்வாறு கூறுகிறார்: "இதனுட் சிறப்புடையனாகிய தலைமகளை இகழ்ந்து தலைமகன் சிறப்பில்லாத பரத்தையர்மாட்டு இகழா இன்றமையில் காட்டுக் கடைஞர் உள்ளார் சிறப்பில்லாத கந்தையூன் துய்ப்புடைய ஆமையின் புறத்து உடைத்துத் தின்பர் என்னுமிதனாற் றெடுத்து விளங்கச் சொன்னமையால், தொகைமொழியாயிற்று. வச்சத்தொள்ளாயிரம் முழுதும் தொகைமொழி எனக் கொள்க. தொகைமொழி எனினும் சுருக்கம் எனினும் ஒக்கும்."

கீழ்க்கண்ட இரண்டு செய்யுள்களும் வச்சத்தொள்ளாயிரச் செய்யுள்கள் :—

உன்னுயிரும் என்னுயிரும் ஒன்றென்ப இன்றறிந்தேன்
மன்னுபுகழ் வச்சத்தார் மன்னவா—உன்னுடைய
பொன்னாகத் தெல்லையர்தம் பொற்கைகைச் சின்னங்கள்
டென்னாகத் தேயெரிகை யால்.

வாடை குளிர மருந்தறிவா சில்லையோ
கூட விளியொருகாற் கூடாதோ—ஓடை
மதவாரணத் ததயன் வத்தவர்கோ னூட்டித்
கதவானதோ தமியேன் கண்.

சோழ அரசனுடைய படைத் தலைவனாகவும் சிற்றரசனாகவும் இருந்த வச்சன் என்பவன் வச்சராயன் என்றும் வத்தராயன் என்றும் கூறப்படுகிறான். திரு. சதாசிவ பண்டாரத்தாரவர்கள், தாம் எழுதிய பிற்காலச் சோழர் சரித்திரத்தில் (பகுதி II பக்கம் 62-63) வச்சராயனைப்பற்றி இவ்வாறு கூறுகிறார்:—

"இவன், கந்தாறன் பந்தாசனி முடிகொண்டானை வத்தராயன் எனப்படுவான். சோழநாட்டுக் கந்தாடு என்னும் ஊரின் - பந்தாசனி வாணன் என்பவனுடைய மகன் முடிகொண்டான் என்பது இவனது இயற்பெயர். முதலாங் குலோத்துங்க சோழனுடைய படைத்தலைவர்களில் ஒருவன். இச் சோழ அரசனால் வத்தராயன் (வச்சராயன்) என்னும் சிறப்புப்பெயர் அளிக்கப்பட்டவன்."

முதலாங் குலோத்துங்கன் கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவராகலின், அவன் சேனாபதியாயிருந்த வச்சராயனும் அக்காலத்தவனே. வச்சத் தொள்ளாயிரமும் அக்காலத்தில் இயற்றப்பட்டதே.

வச்சத்தொள்ளாயிரம் பாடிய புலவர்பெயர், அவர் வரலாறு முதலியவை ஒன்றும் தெரியவில்லை. இந் நூலைப்பற்றிய வேறு செய்திகளும் தெரியவில்லை.

101. வாய்ப்பியம்

யாப்பருங்கல விருத்தியுரைகாரர், தமது உரையில் வாய்ப்பியம் என்னும் நூலைக் குறிப்பிடுகிறார். வாய்ப்பிய நூலாசிரியரை வாய்ப்பியனார் என்றும் வாய்ப்பியமுடையார் என்றும் கூறுகிறார். வாய்ப்பியம், இசைத்தமிழ் இலக்கணத்தைக் கூறும் நூல் என்று தோன்றுகிறது.

யாப்பருங்கல விருத்தியுரைகாரர் தமது உரையில், வாய்ப்பிய நூலிலிருந்து சூத்திரங்களை மேற்கோள் காட்டுகிறார். அவை வருமாறு:

"இவையெல்லா மொருபுடையொப்பினாற் பெயர் பெற்றனவெனக் கொள்க. ஒன்றன்கீழொன்று நிற்பதுடைமை நோக்கி வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சியென இம்முறையே பாற்படுத்து வைத்தாரென்க. வெள்ளை வெண்பாம் பாவென்றும் நின்று வெண்பாவென்று முடிந்தது. வேதியர், அரசர், வணிகர், சூத்திரர் என்று சாதிமேற் சார்த்தி வழங்குவாருமுளர்.

"வெண்பா முதலா நால்வகைப் பாவும்
எஞ்சா நால்வகை வருணம் போலப்
பாவினத் தியற்கையு மதனோ ரற்றே."

என்றார் வாய்ப்பிய முடையா ராகலின்."

(யாப்பருங்கலம் : செய்யுளியல், 2. உரை மேற்கோள்.)

'மன்னவ னென்ப தாசிரியம்
வெண்பா முதலா நால்வகைப் பாவும்
எஞ்சா நாற்பால் வருணர்க்குரிய.'

என்றார் வாய்ப்பியமுடையா ராகலின்."

(யாப்பருங்கலம் : செய்யுளியல். 2. உரை மேற்கோள்.)

"இனிப் பண் நான்கு வகைய. அவை பாலை யாழ், குறிஞ்சி யாழ், மருத யாழ், செவ்வழி யாழ் என்பன. என்னை?

'பாலை குறிஞ்சி மருதஞ்செவ் வழியென
நால்வகைப் பண்ணு நவின்றனர் புலவர்.'

என்றார் வாய்ப்பியனார். விளரி யாழோ டைந்து மென்ப. இனிப் பண்சார்பாகத் தோன்றியன திறமாம். என்னை?

'பண்சார் வாகப் பரந்தன வெல்லாந்
திண்டிற மென்ப திறனறிந் தோரே."

என்றா ராகலின். அத்திறம் இருபத்தொரு வகைய.

'அராக நேர்திற முறழும்புக் குறுங்கலி
யாசா னைந்தும் பாலையாழ்த் திறனே.'

'மைவளங் காந்தாரம் பஞ்சுரம் படுமலை
மருள் வியற் பாற்றுஞ்
செந்திற மெட்டுங் குறிஞ்சியாழ்த் திறனே.'

'நவிர்படு குறிஞ்சி
செந்திற நான்கு மருதயாழ்த் திறனே.'

'சாதாரி பியந்தை நேர்ந்த திறமே
பெயர் திறம் யாமை யாழ்
சாதாரி நான்குஞ் செவ்வழியாழ்த் திறனே.'

என்றார் வாய்ப்பியனார்."

(யாப்பருங்கலம், ஒழிபியல் : விருத்தியுரை.)

'மதுவிரி வாகையும்
பொதுவியற் படையும் புறமா கும்மே'

என்றார் வாய்ப்பியனார்."

(யாப்பருங்கலம், ஒழிபியல்: உரைமேற்கோள்.)

'எப்பொரு ளேனும் சொல்லுவோரும் விளக்கச்
செப்பி நிற்பது பெயர்ச்சொல் லாகும்.

வழுவின் றுடலைக் காலமொடு வரைந்து
தொழிற்பட வருவது தொழிற்சொல் லாகும்.

கடுபொருள் மருங்கிற் பற்றுச் செய்ப
இடைநின் றிசைப்ப இடைச்சொல் லாகும்.

மருவிய சொல்லொடு மருவச்சென்று தோன்றி
உரிமையொடு நிற்பது உரிச்சொல் லாகும்'

என்பது வாய்ப்பியம்."

(யாப்பருங்கலம், ஒழிபியல் விருத்தியுரை: மேற்கோள்.)

"இனிச் செந்துறைப் பாக்களும் வெண்டுறைப் பாக்களும் ஆமாறு: நாற்பெரும் பண்ணும், இருபத்தொரு திறமும் ஆகிய இசையெல்லாம் செந்துறை. அல்லது மேற்புறமும் பதினோ ராடலும் என்றிவையெல்லாம் வெண்டுறையாகும் என்பது வாய்ப்பியம்."

(யாப்பருங்கலம், ஒழிபியல்: உரைமேற்கோள்.)

வாய்ப்பியத்தைப் பற்றியும் இந்நூலை இயற்றிய வாய்ப்பியனாரைப் பற்றியும் வேறு செய்திகள் தெரியவில்லை.

102. கருமாணிக்கன் கோவை என்னும் கப்பற் கோவை

இப் பெயரையுடைய ஒரு நூல் இருந்து இப்போது மறைந்துவிட்டது. திரு. மு. இராகவையங்காரவர்கள் "செந் தமிழ்" பத்திரிகையில் (தொகுதி 6: 1907-8.) எழுதியுள்ள ஒரு கட்டுரையில் இந் நூலைப்பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்கள்:—

"இக் கோவையிற் சிற்சில அரிய பாடல்களன்றி இப்போது கேட்கப்படுகின்றனவன்றி நூல்முழுதும் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. இவ்வாறு வெளிவாராமைக்கு, அன்றுமுதல் அச்சிடப்படாது போனமையே காரணமாகும். ஆனால், இக் கோவை முழுவதும் அடங்கிய பிரதியொன்று,

ஆழ்வார் திருநகரி ஸ்ரீமத் தேவர்பிரான் கவிராயரவர்களால் இச் சங்கத்துக்கு (மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கு)க் கிடைத்துள்ளது. இந் நூல் முழுமையும், "செந்தமிழ்," வாயிலாகச் சமீபத்தில் வெளி வரவுங்கூடும்."

இவ்வாறு 1909-இல் எழுதிய திரு. மு. இராகவையங்கார் அவர்கள், 1938-இல் வெளியிட்ட தமது "ஆராய்ச்சித் தொகுதி" என்னும் நூலில் இக் கருமாணிக்கன் கோவையைப்பற்றிய கட்டுரையின் இறுதியில் கீழ்க்கண்ட குறிப்பை எழுதியுள்ளார்கள் :—

"சில வாண்டுகளுக்கு முன் மதுரைச் சங்க மாளிகையில் நேர்ந்த அக்கினி பாதையால் எரிவாய்ப்பட்ட சுவடிகளுள், இக் கருமாணிக்கன் கோவையும் ஒன்று என்ற செய்தி யாவர்க்கும் பெருந் துக்கம் விளைவிக்கத் தக்கது. அதனால், இக் கோவையுள், மேலே யானெழுதின பாடல்களுந் தொடர்களுமே இப்போது எஞ்சியுள்ளவை என்று சொல்லலாம். ஒருகால், இக் கோவைப் பிரதி வேறிடங்களில் உண்டாயின், அறிஞர் அதனை வெளியிட முந்துவார்களென்றே நம்புகிறேன்."

இக் கோவை இப்போது மறைந்துவிட்டதாகக் கருத வேண்டியிருக்கிறது. ஏனென்றால், இதுகாறும் இந் நூல் இருப்பதாகச் செய்தி கிடைக்கவில்லை.

கருமாணிக்கன் என்பவன் பாண்டியனுடைய சேனைத் தலைவன். அன்றியும், பாண்டிநாட்டு முத்தூற்றுக் கூற்றத்தைச் சார்ந்த கப்பலூர், துவராங்குறிச்சி முதலிய ஊர்களை ஆண்ட சிற்றரசன். இவன் கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் இருந்தவன் என்று கருதப்படுகிறான். கருமாணிக்கன்மேல் இயற்றப்பட்ட கோவை கருமாணிக்கன் கோவை எனப் பெயர்பெற்றது. கப்பலூரை யாண்டவன் ஆகையினால் கப்பற் கோவை எனவும் பெயர் பெற்றது.

கருமாணிக்கனுடைய கல் எழுத்துச் சாசனம் ஒன்று, எனது நண்பரும் பழம்பொருள் கலைச்செல்வங்களைத் தொகுத்து வருகிறவருமான இராவ் பகதூர் ஸ்ரீ S. T. ஸ்ரீநிவாச கோபாலாசாரியார் அவர்களிடத்தில் இருக்கிறது. அவர் அனுமதி பெற்று அந்தச் சாசனத்தின் வாசகத்தைத் தருகிறேன் :—

"ஸ்வஸ்தி ஸ்ரீ. கோமார பன்மர் திரிபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு ஒருபத்தாவது. பாண்டி மண்டலத்து முத்தூற்றுக் கூற்றத்து கப்பலூர் கப்பலூருடையான் கருமாணிக்காழ்வான் இயாதவ ராயனான காலிங்கராயன்

அகரம் ஐயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து வல்லவ நாட்டு ஆதியூர்ப்பற்றில் அகரம் பரிவிர நாராயணச் சதுர்வேதி மங்கலம் இதுக்கு எல்லை ஆவது. கீழ்பாற்கு எல்லை நத்தத்துக்கு மேலைக்காலுக்கு மேற்கும் தென்பாற்கு எல்லை அமுபாக்கத்து நால்வர் வீதிக்கு வடக்கும் மேல்பாற்கு எல்லை சாலியூர் ஏரி நீர்பாயும் முக்கூட்டுக் காலுக்கு கிழக்கும் வடபாற்கு எல்லை சாலியூர் எல்லைக்கு தெற்கும் ஆக இச் சதுர்பால் எல்லைக்கும் உள் சக்கரவர்த்திகளையாளுடைய முதல் அடங்கல் இறையிலி."

இந்தக் காப்பியமுடையான் கருணாகரனுக்குச் சாம்புவராயனுக்கு யாதவராயன் என்றும் காளிங்கராயன் என்றும் வேறு பெயர்கள் உள்ளன என்பதும், இவன் சோழமன்னர் திரிபுவன சக்கரவர்த்தி வீரபாண்டியன் காலத்தில் இருந்தவன் என்பதும் இந்தச் சாசனத்தினின்றும் தெரிகிறது.

கருமாணிக்கன் கோவையாகிய கப்பற் கோவையைப் பற்றிச் செந்தமிழ்ப் பத்திரிகையிலும், "ஆராய்ச்சித் தொகுதி" யிலும் கட்டுரை எழுதிய திரு. மு. இராகவையங்கார் அவர்கள், இந் நூலிலிருந்து சில செய்யுட்களைப் 'பெருந்தொகை'யில் மேற்கோள் காட்டியிருக்கிறார். ஆனால், முழுச் செய்யுள் ஒன்றையேனும் காட்டினார் இல்லை. ஆனால், நல்ல காலமாக, இக்கோவை நூலின் கப்பற் கோவைச் செய்யுட்கள் சில மறையாமல் இருக்கின்றன. வைத்தியநாத தேசிகர் அவர்கள் தாம் இயற்றிய இலக்கண விளக்கம் என்னும் நூலில் கருமாணிக்கன் கோவையிலிருந்து சில செய்யுட்களை மேற்கோள் காட்டுகிறார். அச் செய்யுட்கள் இவை:

காவைப் பொருவுமெங் கைக்கரு மாணிக்கன் கப்பல்வள்ளக்
கோவைப் பொருசெய்ய [illegible] மயிலின் [illegible]
மாவைக் குளிர்விப்ப [illegible] வெண்ணிலா [illegible]
பூவைக்கு [illegible] போல்[illegible].

காரைத் தொடுத்தன்ன கைக்கரு மாணிக்கன் கப்பல்வெற்பில்
சோரக் [illegible] கொண்ட [illegible]
போரைத் திருவுரு [illegible]
வாரத் திருப்ப [illegible] கண்ணையே.

இறைவர் [illegible]
பிறைத் [illegible]
நறைவாய் [illegible] கப்பல் [illegible]
நறைவாய் [illegible].

மையாத [illegible]
மையாத [illegible] கொண்ட [illegible]

ரமையாத வன்புதந் தார்பிரிந் தாலரி தாற்றுவதென்
றமையா ளறிந்தல்ல வோசிவந் தாடன் னொருபக்கமே.

அதுநா மறிந்தில மன்னையிப் போதணி நீர்த்துறைத்
துதிநா வலர்புக ழூர்தொண்டை மான்வெற்பிற் றேண்மெலிவும்
புதுநாண் மதிநுதல் வண்ணமும் பார்த்துப் புகையுயிர்த்தாள்
இதுநா மினியன்ன மேவண்ட லாடு மிடமல்லவே.

அரவுக்கு மெல்லியல் சாயலுள் ளோயுண் டறவிருண்ட
இரவுக்கினிய திருமுகந் தோன்று மெழுந்த வெண்ணிலைக்
கரவுக் கடியுண்ட மால்கரு மாணிக்கன் கப்பலன்றே
யுருமிக்கு நீதந்த காமவெந் தீயுண் டெனுள்ளத்திலே.

நாம்வந்த வேற்கை நரபால னுயலர் பொய்வழுத்தார்
தோம்வந் தடர்வழித் தொண்டையர் கோன்கப்பல் சூழ்துறையில்
தேம்வந் தலர்புன்னை கான்கைதை கானெய்தற் சேர்ப்பர்கங்குல்
தாம்வந் தனர்கொலி யான்வந்து போனபின் சாற்றுமினே.

கருமாணிக்கன் கோவை யென்னும் கப்பற் கோவையை இயற்றிய ஆசிரியர் யார்: அவர் வரலாறு என்ன? இவையொன்றும் தெரியவில்லை.

103. நறையூரந்தாதி

இதுவும், அகப்பொருள் துறையமையப் பாடப்பட்ட அந்தாதி நூல். இதன் ஆசிரியர் பெயர், காலம் முதலியன தெரியவில்லை. இந் நூலிலிருந்து ஒரு செய்யுளைக் களவியற் காரிகை யுரையாசிரியர் மேற்கோள் காட்டுகிறார். அச் செய்யுள்

நல்லனர் தானு மமுதனர் தானு நகைக்குநல்ல
வில்லனர் தானுதற் கும்மிலை கேட்கில் விரிதமிழின்
சொல்லனர் தானொரு பாவலர்க் காய்த்துறை யூர்நறையூர்
செல்லனர் தானனர் தானெடு நாட்டிற்கு சேர்கிற்குமே.

துறையூரைச் சேர்ந்த நறையூரில் இருந்த ஒருவர் மீது இவ்வந்தாதி பாடப்பட்டதென்பது தெரிகிறது.

(தொடரும்)

கவுந்தியடிகள்

[வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனர், மயிலம்]

கவுந்தியடிகள் சமணசமயத் துறவியாவர். இவர் பெண்பாலர். இவர் தங்கியிருந்த பள்ளி கவுந்திப்பள்ளி எனப்பட்டது. அப்பள்ளியினை இவர் காவிரிப்பூம்பட்டினத்துக்கு மேற்கில் ஒரு காவதத் தொலைவில் அமைத்து அருளறம் மேற்கொண்டிருந்தார். கோவலன் மாதவியைப் பிரிந்து கண்ணகியுடன் மதுரை நோக்கிப் புறப்பட்டு வந்த காலத்தில் இவ்வடிகளைக் கண்டான். அவன் கருத்தைக் கேட்ட இவர், தாமும் மதுரை செல்லும் எண்ணத்தை முன்னமே யுடையாராதலின், அவனுடன் புறப்பட்டார். கண்ணகியை மதுரைநகரில் இடையர் குல மாதரி வீட்டில் அடைக்கலமாக இருத்தியவரையிலும் உடனிருந்து நீங்கிப் பின்னர்க் கோவலன் கொலையுண்டதும் கண்ணகி மதுரையை அழித்ததும் ஆகியவற்றைக் கேட்டு உண்ணா நோன்பிருந்து உயிர்பதிப் பெயர்த்தனர்.

இவர் துறவியாதலின் முற்றுந் துறந்தவர் ஆவர் எனலாம்; அஃதாவது துறவிக்குரிய இலக்கணம் முழுமையும் வாய்க்கப் பெற்றவர் எனலாம். இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் சிறந்தனவாய நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகியவை இன்றியமையாதன. நற்காட்சியாவது கடவுள், அவர் அருளிய நூல், முனிவர், உயிர் முதலிய ஒன்பது பொருள்கள் ஆகியவற்றை அறிந்து அவற்றில் நம்பிக்கை வைத்தல். நல்லறிவு என்பது கடவுள் அருளிய உயிர் முதலிய பொருள்களைப் பற்றிக் கூறும் நூல்களை அறிதல். உண்மை வழியே பற்றுக்கோடாய விரதங்களைக் கொண்டு நடத்தல் நல்லொழுக்கம். இவற்றுள் கவுந்தியடிகள் பின்னிரண்டும் முற்றும் வாய்க்கப் பெற்றவர் எனலாம். நற்காட்சியில் மட்டும் ஐயம் உண்டு. நற்காட்சியின் வகைகள் எட்டாகும். அவற்றுள் ஒன்று குறைபடினும் நற்காட்சி பயனில்லாது போம். கவுந்தியடிகட்கு அவ்வெட்டினும் இழுக்குள என்று கூற முடியும். அவ்விழுக்கானவை :

1\. கடவுள் கூறியவற்றை முழுதும் தெளிவின்றி ஐயுறல். இக்குற்றமுடையவர் அடிகள் என்பதற்கு, கோவலனுடன் மதுரை நோக்கி வந்தபோது திருவரங்கத்தைக் கடந்த பொழுதில், வந்து தோன்றிய சாரணர் கூறிய மொழியாவது,

“ வினை [illegible] முதல்வன் [illegible]
கொடிய [illegible]
போகாப் பிறவிப் [illegible] ” (சிலப். [illegible])

என்பதை, உறையூர் போந்து தங்கிய காலத்து ஆங்கிருந்த கந்தன் பள்ளிக் கடவுளர்க்கெல்லாம் தாம் கூறியதால் அறியலாம்.

2. காம நுகர்ச்சி விருப்பில்லாமை. துறவு கொண்டமையால் காம விருப்பின்மை புலப்படும். அன்றியும பிற பொருள்க -த்தும் காமம் இல்லாமையை, உறையூரை நீங்கிச் சென்ற டை வழியில் மாடலன் மதுரைக் கேகும் வழி கூறுமிடத்துத், மால் குன்றத்துப் பிலங்கள் மூன்றன் இயல்புகளைக்கூற, அவனை மறுக்கும்போது, அவற்றை விரும்பாமையை உரைத்து,

“வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவது முண்டோ எய்தா அரும்பொருள்” (சில. ௧௧ : ௧௫௪-௫)

என்றும் கூறியதால் உணரலாம்.

3. நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகிய மூன்றையும் உடையவர்களிடம் உடல் மாசு கண்டால் அருவருப்படையாதிருத்தல். இந்நிலையுடையவர் அடிகள் என்பதற்குச் சான்றுகள் வேண்டா, வரலாற்றில் அத்தகைய இடம் இல்லாமையால். ஆனால் சாரணர்க்கு வணக்கம் செலுத்திச் சிறந்தார் அடிகள் என்று அமையலாம்.

4. பிற சமயத்தை உண்மையென்று மயங்காமை. திருமால் குன்றத்தையும் திருமாலையும் சிறப்பித்த மாடலனிடம் “காமுறு தெய்வம் கண்டடி பணிய நீ போ,” என வெறுத்துக் கூறியதும், ஓரிடத்தில்

“காமனை வென்றோன் ஆயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்நா” (சில. ௰ : ௧௬-௭)

என்று கூறியதும் நாலாம் நிலையும் உடையர் என்பதை விளக்கும்.

5. பிறர் குற்றங்களை வெளிப்படுத்தாது மறைத்தல்.

6. அறத்தில் வழுவியவரை மீண்டும் அதில் நிறுத்துதல்.

7. அறத்தில் நின்றாரை விரும்புதல்.

8. அறத்தின் பெருமையை யார்க்கும் உரைத்தல்.

இவற்றான் பின் மூன்றும் வழுவாது போற்றியிருப்பர் அடிகள். சிலப்பதிகாரம் ஒன்றே அடிகளைப்பற்றி யறிதற்குரிய நூல் அதனிடமாக இவற்றிற்குச் சான்றுகள் காண்டற்கில்லை ஐந்தாம் நிலையினை அறப்பழி நீக்கல் என்று தமிழிலும், உபகூஹனம் என்று வட மொழியிலும் கூறுவர். இந்நிலை நம் அடிகளிடம் இருந்ததா என்பது ஈண்டு நாம் காண வேண்டுவதாம். அறப்பழி நீக்கலாவது,

"அறத்துக் கலர்களைத் தெய்வமை யாளும்
இறத்தின் உடைமை வணம்" (21)

என்று அருங்கலச் செப்பு கூறும். இந்நிலையை உறுதியாகக் கொண்டதால் கன்னியில் படைத்தமைக்கு ஜிநேந்திர பக்த சிரேஷ்டி என்பவனைச் சான்று கூறும் அந்நூல். அவன் வரலாற்றினை நாம் அறிய வேண்டியது சன்றி இன்றியமையாததே.

"ஜிநேந்திர பக்தன் என்பவன் கௌடதேசத்துத் தாம்ரலிப்த நகரத்துப் பெருஞ்செல்வன். இவன் தன் ஏழடுக்கு மாளிகையில் மேல்தளத்தில் பார்சுவ தீர்த்தங்கரரை வைத்து அதற்கு முக்குடையமைத்து அதன் உச்சியில் விலையுயர்ந்த வைரமணி பதித்துத் தீர்த்தங்கரரை வழிபட்டு வந்தான். அம் மணியை யடைய விரும்பிய சௌராஷ்டிர தேசத்துப் பாடலிபுர நகர இளவரசன் சுவீரன் என்பவன் திருடனாகிய சூர்ப்பன் என்பவனிடம் அதனைக் கொணருமாறு கூறி ஏவினான். அவன் தன்னை ஒரு க்ஷுல்லகன் என பாவநம் ஸ்பஸ்டமாய் நடித்து, ஜிநேந்திர பக்தனையும் நம்பச்செய்து, அவன் மாளிகையையடைந்து, அவனால் அவ்விடத்துக்குக் காவலனுமாய் இருந்தான். அக்காலத்துச் ஜிநேந்திரபக்தனை யாத்திரை நிமித்தம் கடல் பயணம் சென்ற நகர்ப் புறத்து ஒரு மாளிகையில் தங்கினான். அப்போது சூர்ப்பன் நடு இரவில் வைரமணியைத் திருடினான். அம்மணியின் ஒளியால் மற்றைய காவலர் உணர்ந்து, அவனை மணியுடன் தம் தலைவனிடம் கட்டிச்சென்றனர். ஜிநேந்திரபக்தனும் அவனைத் தொல்லைக் குட்படுத்தாமல் வினை நல்மதித்து மாயச்செய்கை என்னை "இம்மணியை யானே எடுத்துவரச் சொன்னேன்; இம் மகானைத் திருடன் என்பது தவறு," என்று கூறிக் காவலரைப் போகச்செய்து அவனுக்கு நல்லுரை புகன்று அனுப்பினான். காவற்போக்கில் நன்மை செய்து புகழடைந்தான் ஜிநேந்திரபக்தன்."

"புராணவிட்டு வந்த காலத்தில் இடையில் வாய்ப்புடையதுகள் இருவர், கோவலன் கண்ணகியைக் கண்டு, 'யாவர் இவர்?' என வினவ, 'என் மக்கள்' என்றான் அவன். அதற்கு அவர்கள் 'உடன் பிறந்தோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை நடைமுறை கற்றுக்கிறீர்.' என எள்ளினர். உடனே கவுந்தி அவர்களைக் குறுநரியாவென எனதில் சபித்தனர். அவ்வாறு ஆகினர். உணர்ந்த இருவரும் 'செய்தவத்தீர் அடி இருமுன் பிழைத்தோர்க்கு உய்திக்காலம் உரைமின்,' என வேண்டினர். பின்னர் அருளுடன் சாபவிடையளித்தனர்."

இல்லறத்தாருள்ள ஜிநேந்திர பக்தனைக்குப் போல துறவியாகிய கவுந்திக்கும் தெய்வம் கண்டனர். அந்நூலி ...

வம்பப் பரத்தர்கள் என்னினும் பொருட்படுத்தாது விடுதல் செய்யத்தக்கது. அதை விடுத்துச் சபிப்பது துறவிக்கேற்ற தன்று.

> "பாவம் பொருந்துவன சொல்லாமை ஏவாமை
> யாகும் இரண்டாம் வதம்"

என்ற சத்யாணுவிரத நிலையினையும்,

> "பிறர்கண் வருத்தமும் சாக்காடும் கேடும்
> மறந்தும் நினையாமை நன்று"

என்று சமாயிகபாவனைக்குரிய கொள்கையினையும் மறந்தனராவர் அடிகள். அப்பரத்தரது கூற்று அடிகட்குக் கோபத்தை விளைத்தது. அடிகள் துறவியாதலின் கோபம் கொள்ளுதல் தவறாகும். அவர் மேற்கொள்ளவேண்டிய விரதங்கள் அணு விரதங்களும் மகாவிரதங்களும் ஆம். அணுவிரதம் கொளற் கேற்பக் கோபம் சிறிது கொள்ளலாம் என்னினும் சபித்தது தகாது என்னலாம். எனவே, பிழை பொறுக்கும் குணம் இல் லாதவரானார் என்னலாம். எனவே, ஐந்தாம் நிலையினைக் கைவிட்டவராவார் என்னலாம். நற்காட்சிக்குரிய எட்டு நிலை களுள் ஒன்று நீங்கினும் நற்காட்சி பயன் இல்லையாகும்.

> "உறுப்பிற் குறையிற் பயனின்று காட்சி
> மறுப்பாட்டின் மந்திரமே போன்று"

என்பது அருங்கலச் செப்புப் பாட்டாம். "நற்காட்சிக்குரிய எட்டு உறுப்புக்களில் ஒன்று குறையினும் பயனில்லை; அது போல எனின்? மாறுபட்ட மந்திர செபம் பலன் தராதது போல என்க" என்பது அதன் பொருள். "மாறுபாடான செப மாவது, கருடன் என்ற புத்தியினால் கொக்கைத் தியானித்தல்" என்க. கவுந்தியடிகள் ஐந்தாம் உறுப்பாகிய அறப்பழி நீக்கல் என்றதைக் கொள்ளாமையின், நற்காட்சியே வாய்க்கப்பெறாதவ ராயினர் என, எண்ண வேண்டியுளது. அதனால் முக்காலத் தையும் உணரும் அவதிஞானம் இவர்க்கில்லையாயிற்று. இதனை அடியார்க்கு நல்லார் கூற்றால் உணரலாம்.

தன்பால் வந்த கோவலனையும் கண்ணகியையும் நோக்கிக் கண்ணகியின் மென்மைக்கிரங்கி மதுரைக்குக் காடுடையிட்ட வழியே நடந்துசேறல் தக்கதன்று என்று கூறிப் பின்னரும், யான் செலவை ஒழிமின் எனக் கூறவும் ஒழிகின்றிலிராயினீர் என்றார் அடிகள். "உரியதன்றீது ஒழிகென ஒழியீர்" என்பது அவரது கூற்று. இவ்வடியின் உரைக்கீழ் அடியார்க்கு நல்லார் எழுதுவனவற்றைக் காண்பாம்:

"ஒழிகென ஒழியீர் என்பதற்கு இவர்க்கு எதிர்வ தறிந்து கூறினார் எனின், "தவத்தரு சிறப்பிற் கவுந்தி உன்னை போன்மொழி உயிர்ப்பதிப் பெயர்த்தலும்" என சீர்ப்படைக் காதையுள் மாடலன் கூறுதலாலும், அடைக் கலக் காதையில் "தன் ஆலமரணர் அருப்பொருள் பெரு நரின் இருக்கெதிர்கொண்டு, ஒருத்தலைக் கன்னியொடு கடிமனைப்படுத்தவர், உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மனையும், இடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்" எனவும், "காதலி தன்னொடு காதலன் நீங்கு" எனவும், "திசைப் போவின் பதத்து [illegible] கேளாய்" எனவும் ஒரு பொருளிற்கு இத்தகைய ஒப்புமைவகைக் கூறியவண்டா ஆதலாலும் இவர்க்குத் தவப்பயனாலே எதிர்கால உணர்ச்சியின்மை [illegible]"

இவ்வாறு கூறிய அடியார்க்கு நல்லார் இதனையே பிறிதோ ரிடத்தும் வலியுறுத்தினர். இருவர்கள் பக்கல் பொருளில் சாரணர் வந்து தோன்றுதலும் அடிகள் வணங்கினர். சாரணர் வந்தமையைக் கண்டறிந்தார் அடிகள் என்று இங்ஙனே கூறுவர். 'கண்டறிந் கவுந்தி' என்பது அவர் கூற்று. இதற்கு விசேடமாக அடியார்க்கு நல்லார், "கண்டறிந் கவுந்தி என்பதனால் காலவுணர்ச்சியின்மை யுணர்க" என்றார். எனவே, அடிகளுக்குக் கால உணர்ச்சியின்மை பெறுதலாம். வேறு பொருந்தும் கால உணர்ச்சியும் இல்லாமையால் அடிகள் அறவோர்களும் அறவின் இலக்கணம் முற்றும் நிரம்பப் பெற்றவரல்லர் என்னலாம். அறவின் ஆரம்ப நிலையினர் என்னலாம்.

[illegible] இவர் பெற்றிருக்க கவுந்தியின் ஆற்ற லையும் இழிவுபடுத்திடவில்லை என்னலாம். குணமென்னுங் குன்றேறி நின்ற அறவினர் வெகுளியைக் கணமேயுங் காத்தல் அரிதாம். அவர்கள் வெகுண்டக்கால் ஆற்றல் உண்டு; கணமேயும் காத்தல் அரிதாகாம். ஆதலால், அவர்கள் வெகுளியைக் காட்டுவிடுவ ரேல்—சபிப்பரேல், இதனை அவர் அறிந்தோர் [illegible] பெற அரியதையும் இருக்கமாட்டார். இது நிலை தகுமாக் கோட்பாடு. [illegible] [illegible] [illegible] வேண்டும் என்பது [illegible]. அங்ஙனமாயில் கவுந்தியடிகளும் [illegible] [illegible] [illegible] விளக்கும். [illegible] கவுந்தி படிகள் இவை [illegible] தருமே [illegible]. [illegible] முனிவர்—அறவினர் [illegible] எங்ஙனம் கூற முடியாது.

காவியக் காதல்

[திரு. பி. எல். சாமி. பி. எஸ்ஸி]

எந்தக் காதற் காவியத்தின் முதல் ஏட்டைப் புரட்டினாலும், 'அணங்கு கொல் ஆய் மயில் கொல்,' என்ற குறளின் கருத்தையே முதலில் பார்க்கலாம். அதன் கடைசி ஏடு,

> 'அறிதோ றறியாமை கண்டற்றாற் காமம்
> செறிதோறுஞ் சேயிழை மாட்டு'

என்ற குறளின் கருத்தையே ஏந்திநிற்கும். இந்த இரண்டு குறள்களின் கருத்தும் முன்னரோ பின்னரோ ஒன்றிலோ, அஃதின்றியோ அகன்றோ காணப்படாவிடில், காதல், காவியக் காதலாக முடியாது. அக் காதல் மேடைக் காதலாக இருக்கலாம், படக்காட்சிக் காதலாக இருக்கலாம்; பட்டுக் கணக்காய்க் காதலாக இருக்கலாம்; அல்லது காதலானது கத்தரிக்காயானது என்று கேட்கும் இனத்தாரின் கத்தரிக்காய்க் காதலாகவும் இருக்கலாம்.

இந்தக் காவியக் காதல் (Lyric love) ஒரு சிலருக்கே கைகூடுவது. ஆதலின் வள்ளுவர் இதன் அருமை நோக்கி,

> 'மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
> செவ்வி தலைப்படு வார்'

என்று கூறினர். காதல் துறையில் கரைகண்ட பால்சாக் என்ற பிரெஞ்சு ஆசிரியர், 'காதல் மெல்லிய மலர்போன்றது. தொட்டாலும் நொறுங்கிவிடும்,' என்று கூறியுள்ளார். காவியக் காதல் இனிய யாழ்போன்றது. மீட்டத் தெரிந்தவருக்குத் தான் ஒவ்வொரு நரம்பும் வேண்டிய இனிய இசையைத் தரும். கோவலனின் காதலை இழந்த மாதவியின் கைவிரல், பகை நரம்பில் பட்டு துன்பத்தைத் தந்தது. அதுபோல் காதலாகிய யாழை மீட்டத் தெரியாதவர்கள், பகை நரம்பின் ஓசையைத்தரு அவல இசையை உண்டு பண்ணுகிறார்கள்.

ஹெர்பர்ட் ஸ்பென்சர் என்ற ஆங்கில தத்துவ ஞானி காதலை ஆய்வகத்தில் பிரித்துப் பார்த்துப் பார்த்து ஆராய்வது போல் ஆய்ந்து பார்த்தார். காதலின் முதல் உணர்ச்சி வியப்பு (Admiration) என்று எழுதியுள்ளார். அடுத்து மதிப்பு, அழகு, அன்பு என்று வரிசைப் படுத்தியுள்ளார். பண்டைத் தமிழரும் காதலின் முதலுணர்ச்சி வியப்பெனவே கருதினர். ஆதலின்,

கவிகளிலும் காவியங்களிலும் வியப்பையே முதலில் பாடியுள்ளனர். வள்ளுவரின் இன்பப் பாலின் முதற் குறளும் வியப்பையே தெரிவிக்கின்றது. உலகின் பல அறிஞர்கள், ஆசிரியர்கள், கவிகள் இந்த வியப்புணர்ச்சியைக் காதலுக்கு வாயிலாக வைத்துப் பாடியுள்ளனர். வொர்ட்ஸ் வொர்த், பிரௌனிங், ஜே. பி பிரீஸ்ட்லி ஆகிய ஆங்கில ஆசிரியர்களும் இதே முதல் படைத் தான் நிறுவி இருக்கின்றனர். பிரீஸ்ட்லி ஒரு சிறந்த நாடகாசிரியர். அவருடைய 'பொது மக்கள் பாட்டுப்,' என்ற கதையில், [illegible] ஓர் இளைஞன் வருகிறான். அவ் விளைஞன் ஓர் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் காதலித்த பெண்ணோ அன்றாடம் வேலை செய்து பிழைக்கும் பெண். [illegible] இருவரும் காதல் கொள்ளுகின்றனர். அப்பொழுது அந்த எளிய பெண் தொழிலாளியைப் பற்றி இளைஞன் என்ன நினைக்கிறான்? 'இவளை [illegible] போதும் [illegible], [illegible] இணையவளோ, [illegible] இளவரசியின் [illegible], [illegible] [illegible],' என்றெல்லாம் வியப்புறாக பிரீஸ்ட்லி [illegible]. வியப்பு இளைஞனைக் கவர்கின்றது.

காதல் கொண்டவர் முதலுணர்ச்சி வியப்பு, அந்த வியப்புணர்ச்சிக்குக் காரணம் ஒரு பக்கம், [illegible] மனப்பண்புடைய [illegible] வியப்பு, 'அணங்கு கொல் ஆய் மயில் கொல்,' என்று சொல்லச் செய்கிறது. தமிழ்த் தலைவன் கூறும் முறையே இது. ஆங்கிலத் தலைவன் கூறும் முறையே இது. காரணம் [illegible] ஆனால், வியப்புணர்ச்சியே எல்லா [illegible] அடிப்படை. இந்த வியப்புணர்ச்சி பருவத்தினருக்கு உட்பட்டதன்று அன்று, காதல் கண்ணிறைந்த அழகுற்றவளாகத் தோன்றுவாள். ஆனால் காதலர்கள் கொண்டவர்களுக்குத், தன் கண்டவளே, பேரழகுடையவளாகவும் தெய்வப் பெண்ணாகவும் தோன்றுவாள். [illegible], "காதலியின் அழகைக் காண மஜ்னூனின் கண்கள் வேண்டும்," என்று கூறுகிறது. காதலுக்குக் கண்ணில்லை என்பர். ஆனால் காதலுக்கு இருக்கும் காட்சியை, [illegible] அது காட்டுகிறது.

இந்த வியப்புணர்ச்சியை 'She was a Phantom of delight' என்ற கவிதையில் வொர்ட்ஸ் வொர்த் முதல் வரியிலேயே அழகாகக் காட்டியுள்ளார். 'அவள் ஒரு அழகு ஆனந்தக் காட்சி,' என்று [illegible] வொர்ட்ஸ் வொர்த் [illegible], 'பெண்மை தான் தெய்வீகக் காட்சியோ,' என்று பாடியுள்ளார். 'தாமரையில் உறையும் தெய்வமகளோ,' என்று அதே வொர்ட்ஸ் வொர்த் கூறினார்.

வள்ளுவரும் யாவரும் கண்டறியாத கற்பனைத் தெய்வ மகளோ என்று கூறுகிறார். 'அணங்கு கொல்,' என்று வள்ளுவர் கூறிய சொல்லே பல கவிகளில், பாடல்களில் வேறுகோலங்கொண்டு பயின்று வருகிறது.

'அணங்கு கொல்' என்று காணாத ஒன்றில் தனது வியப்பை ஏற்றிவைத்த தலைமகன், அடுத்து ஒரு படி இறங்குகிறான். தான் கண்டவற்றில் சிறந்ததன் மேல், உயர்ந்ததன் மேல் உணர்வை ஏற்றுகின்றான். விண்ணில் சிறகடித்துப் பறக்கும் பறவையைக் கண்டால் கவியுள்ளம் படைத்த மனிதனின் கற்பனையும் இறக்கையடித்து மேலெழுகிறது. அதனது அழகினால் மனித உணர்ச்சியைக் கவியாக்கிக் கற்பனையைத் தூண்டிவிடும் உயிர்களில் பறவை முதன்மை இடம் பெறுகின்றது. ஆதலின் உலகில் காதல் உணர்ச்சியோடு, பறக்கும் புள்ளினங்களை இணைத்துக் கவிகள் பாடுவதைப் பார்க்கலாம். 'இருதலைப் புள்ளின் ஓருயிரம்' என்று இல்லாத பறவையைக் கூட உலகில் உண்டுபண்ணுகின்றனர்! நாரையைத் தூதுவிடுகின்றனர்! குயிலையும் மயிலையும் பழிக்கின்றனர்! கிள்ளையைக் கையிலேந்திச் 'சொல்ல வல்லாயோ அவன் வல்லானை' என்று கெஞ்சுகின்றனர்! காதலுக்கும் பறவைக்குமுள்ள நெருங்கிய தொடர்பையே இது காட்டுகின்றது. வள்ளுவரும் 'ஆய்மயில் கொல்' என்கின்றார். பலகாலமாகப் பறவையை உணர்ச்சியின் ஊர்தியாகக் கொண்டதையே அது காட்டுகின்றது. தமிழ்நாட்டுப் பறவைகளில் அழகியது மயில். பிறநாட்டிற்குத் தமிழ்நாடு மயிலை ஏற்றுமதி செய்தது. பிறநாட்டு மொழியில் 'தோகை' என்ற சொல் புகுமளவு அந்நாட்டு மக்களின் கண்களைக் கவர்ந்தது மயில். அத்தகைய மயிலெனவே வியக்கின்றான் வள்ளுவர் தந்த தலைமகன்.

ஆங்கிலக் கவிகளில் காதல் வாழ்வை ஏட்டளவிற் பாட்டுடனன்றி வீட்டிலும் கடைப்பிடித்த ஒரு தனிக் கவி, 'ப்ரௌனிங்' என்பவர். ஆதலின் அவர் காதலைப்பற்றிப் பேசுவதை உண்மையில் நம்பலாம். "ஓ காவியக் காதலி, நீ பாதி அணங்கு பாதி பறவை" (O! Lyric love, half angel and half bird") என்று அவர் வியந்து பாடுவது 'அணங்கு கொல் ஆய்மயில் கொல்' என்ற குறளுடைய எதிரொலி போலிருப்பது மிகவும் வியப்பிற்குரியது. காலத்தாலும் இடத்தாலும் அருகே இருந்தாலும் எட்ட இருந்தாலும் கவியுள்ளம் ஒரே வழியில் உணர்கிறது! எண்ணுகிறது!

ஆணும் பெண்ணுமாக இயற்கையைக் கண்ட தத்துவ ஞானி தனது வியப்பில் கடவுளையும் பாதி ஆணாகவும் பாதி

பெண்ணுகவும் உருவகப்படுத்தினன். அது போல் இக் காதற் கடவுளும் 'பாதி பாதிதலைவனுமாகவும் பாதி பறவையாகவும்' வியப்பிலாழ்த்த கவிஞர்களுக்குத் தோன்றுகிறது. 'இன்டு ரர்கள்' (கந்தருவர்கள்) என்று வடமொழி இலக்கியத்தில் வரும் காதலர்கள், பாதி மனித உருவமும் பாதி பறவை உருவமும் உடையவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

இந்த [illegible] காதலை,

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]."

என்று [illegible]. இந்தக் [illegible] காதலை [illegible] பார்க்கிறது. [illegible]

"How do I love thee? Let me count
the ways
I love thee to the depth and breadth
and height
My soul can reach when feeling out
of sight."

[illegible]

[illegible] தோன்றுகின்றது. [illegible] இருவருக்கும் தெரி

யாத ஒரு சக்தி தங்களைக் கூட்டி வைத்ததாக வியக்கின்றார்கள். அதை விதி என்றழைக்கின்றனர். பண்டை நூல்கள் அதைப் 'பால்' என அழைக்கும். அந்த விதியை எண்ணி வியப்புத் தோன்றியக்கால்,

"யாயு ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே."

என்ற அழகான பாட்டு வெளிப்படுகின்றது. எங்கிருந்தோ வந்த நீர் எங்கேயோ உள்ள மண்ணில் கலந்து நீரும் மண்ணு மாக மண்ணும் நீருமாக ஒன்றித்துப் பிரிக்க முடியாதபடி-நீரோ மண்ணோ என்று சொல்ல முடியாதபடி - மண்ணின் நிறத்தை நீர் ஏற்க, மண்ணினுருவை நீர் கொள்ள, ஒருருவாகியதுபோல இருவருடைய ஒட்டும் இரண்டுள்ளமும் விட்டுப் பிரியாக் கூட்டு ஆகிவிட்டதைக் கண்டு காதலி வியக்கின்றாள். ஏனெனில் தனது தாயும் அவனது தாயும் ஒருவரை யொருவர் அறியார். தனது தந்தையும் அவன் தந்தையும் உறவினர் அல்லர். அவளும் அவனை முன்பின் அறியாள். ஆனால் கண்டதும் இரண்டுள்ளமும் கலந்தது, செம்மண்ணும் வான் மழையும் கலந்தது போல.

இந்த வியப்பு காதற்கனியான குழந்தை பிறந்ததும் தோன்றலாம். ஆனால் இதைப் புதுமை வியப்பென்று சொல்ல வேண்டும். அவர்கள் கண்டதும் கொண்ட பெருமை வியப்பு, குழந்தைச் செல்வத்தைத் தோற்றுவித்தது. அக் குழந்தை புதுமை வியப்பை உண்டுபண்ணுகிறது. அப்புதுமை வியப்பே ஆயிரம் ஆயிரமாண்டுகளாக தமிழ்த் தாயை "யார் யாரோ யாரிவரோ" (ஆராரோ ஆரிவரோ) என்று பாடவைத்தது; பாடவைக்கின்றது! யார் யாரோ என்று பெருமை வியப்புற்றாள் குறுந்தொகைக் காதலி. ஆனால், யார் யாரோ என்ற பெருமை வியப்போடு, யாரிவரோ என்ற புதுமை வியப்போடும் பார்க்கின்றாள் நெடுங்காலத் தமிழ்த் தாய், தொட்டிலில் தவழும் குழந்தையைப் பார்த்து.

வியப்பு காதலில் முதலுணர்ச்சி. அவ்வுணர்ச்சி வெவ்வேறு கோலங்களில் வெவ்வேறு காலங்களில் தோன்றலாம். அப்படித் தோன்றும்போது அக்காதல், கவிதையையும் காவியத்தையும் உண்டாக்குகின்றது அக்காதல் காவியக் காதலாகிறது.

(தொடரும்)

அறிவறிந்த மக்கட்பேறு

[வித்துவான், திரு. சேந்துறையூரந்து]

வையகத்தில் மண்ணைச் சுவைத்து வளம்பெற்ற நல் வாழ்க்கை என்பது, முறைப்படி நிகழும் நல்லற இல்வாழ்க் கையே. நல்லறம் தழைக்கும் இல்லத்தில், இன்னல்இருள் இடம்பெறுவதின்று. அறத்தின் பெருக்கம் அவ்விடத்து அழியா இன்பத்தை அளிப்பது ஒருதலை. நல்லறம் தழைக்க வும், சுவைபல சிறக்கவும், இல்லறம் வளரவும், இன்பம் பெருகவும் பணியாற்றுவோர் வாழ்வின் ஒளிவிளக்கான மணிகள். அம் மணி விளக்குகளே மங்கல விளக்கு; விளங்கும் ஒளி தாம் மனை யின் அணிகலனாக மக்கட்பேறு. மனைவியின் நற்பண்பே, வந்த விருந்தினரை வரவேற்றுப் போற்றி, பெருமை யாருக் கிருக் கின்ற எதிர்கொண்டு சிறக்கச்செய்து இனியதொரு நிலையை நிலை வாய்ப்பன் ஆகின்றது.

இல்லத்தை இனியதாக்கும் மனையாட்டி நற்பண்பும், அதனை அணிசெய்யும் அணிகலனும் அமையப்பெறுவதே அதனை உயர்த்தும் காரணமாகும் என்ற கருத்தைத்தான் பொய்யில் புலவரும் வள்ளுவத்தில் வரையறுக்கின்றார்.

> மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
> நன்கலம் நன்மக்கட் பேறு.

மக்களைப் பயக்கத் தக்க பருவத்தில் மணந்த தலைவியோ, நல் தாய்மை பயக்கும் சிறந்த தலைவியே அருமையான தான் மனை சிறக்க, மனையறம் சிறக்க, மனையறம் வளர இல்லறத்தை நல்லற மாக்கும் மனைவியின் நற்பண்பும், அதனை அழகு செய்யும் செல்வங்களாகப் புதல்வர் குழந்தை யுள்ளமைக் கொண்டுபோல் விளங்க அவர் தம்மை கட்டுதல் கடமையும் வேண்டும்.

அக்கினியைப் போற்றும் பெரியோர் பழமொழிகள், பல காலமாகப் பேசப்படுகின்ற சிறப்பினை உடையது. அத்தகைய பழமொழிகளில் ஒன்று, 'மக்கட்செல்வம் இல்லாத வீடு இருளடைந்த இடம்—இன்பம் பயக்காது! நன்மையற்றது என்று சொல்லப்படுகின்றது.

பணியாற்றும் மக்களைப் பெற்றிருந்தும், கல்வி செல்வம் முதலியவை பல இருப்பினும், பின்னும்

பின்னும் பொன்னிருப்பினும், மிளிரும் பொருள் இருப்பினும், சிரித்து விளையாடிச் சிந்தையை மகிழ்விக்கும் செல்வக் குழந்தைகள் இல்லாதிருப்பின் பெற்ற பொருளனைத்தும் பாழன்றோ? எனவேதான் பொய்யா மொழியார்,

> தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள்
> தம்தம் வினையான் வரும்.

என்கின்றார். எற்றுக்குத் "தம் பொருள் என்ப தம் மக்கள்" என உரைத்தது எனின், பெறத்தக்க பேறுகளெல்லாம் பெற்றிருப்பினும், மக்கட்பேறில்லாவிடில் மதிப்புடைப் பேறுபெற்றதாக அமையாது. மகப்பேறு ஒன்றுதான் மதிப்புடைத்து; மற்றைய பேறுகளனைத்தும் மதிப்புடைய பேறுகளன்று. ஆகவேதான் அம்மக்களைத் தம் பொருள்கள் என்று அறிஞர் பலர் உரைப்பதாக உணர்த்தியுள்ளார். அங்ஙனம் உணர்த்துவதிலும் மிக வன்மையாகத் தாம் கண்ட உண்மைக் கருத்தைக் கூறத் தவறவில்லை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

> பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
> மக்கட்பேறு அல்ல பிற.

என்பது. மக்கட்பேற்றை மதிப்புடைய செல்வமாகவும் தம்முடைய நிகரற்ற பொருளாகவும் கூறுவதற்குத் தக்க நிமித்தம் கூறலும் நன்மையே.

அவனிக் கடலில் அல்லல் அலைகளால் ஆடிக்குலையும் ஒருவனுடைய வாழ்க்கைக் கப்பல் அமைதியுற ஆங்குத் தேவைப்படுவது நங்கூரம். ஈண்டு நங்கூரமாக அமைவது அறிவுடைய மக்கட் பேறு. இம்மக்களைப் பெற்ற ஞான்றுதான் பெருமகிழ்வு கொள்ளுகின்றனர். அவர்களை அளவில்லா இன்பம் அணுகுகின்றது. வாழ்வும் வளம் பெறுகின்றது. எனவேதான் மக்கட் செல்வம், மாண்புடைச்செல்வம் என்று மதிக்கப்படுகின்றது.

இம்மக்கட் சிறார்களின் செய்யவண்ணத்தளிர் விரல்கள் துழாவிய கூழ், அமிர்தத்தைக் காட்டிலும் அளவற்ற அருஞ்சுவை அளிக்கும். அத்துடன் நில்லாது தன் அழகுடலை அசைத்து, சிங்கார நடைபயின்று, முத்துப்பல் தெரிய முறுவலித்து, மோகன வாய்திறந்து, நீருசுவைநீர் வழிய அன்புடன் கைநீட்டி, தெள்ளுதமிழ் மழலைமொழியில், 'அம்மா, அப்பா' என்று அழைத்து ஆடிவரும் கோலம், அன்பு உருவெடுத்துத் தேடிவரும் திறமாகும். அம்மழலை மொழியின் ஒலியைக்கேட்ட பெற்றோர்கள் அடையும் மகிழ்வுக்கு ஓர் அளவுடைத்தோ? அன்று. ஆகையால்தான் பாண்டியன் அறிவுடைநம்பி

படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே.

எனப் புகன்றுள்ளார். இதன்கண் படைக்கப்படும் செல்வம் பல வற்றையும் படைத்திருப்பினும், அத்துடன் பலரொடு உண்டலை யும் செல்வர்களுக்கு இலக்கணமாக செப்பப்பட்டுள்ளது. அத்துடன் இல்வாழ்வார் எய்தும் இருமையின்பத்திற்கும் காரணமான நன்மக்கட்பேற்றையும் அழகுற உரைக்கப்பட் டுள்ளது. மக்களே இல்லறவியல் வாழ்வின் நல்லதொரு பய னென்ற கருத்தையும் ஈண்டு இயம்புகின்றது.

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் உடையரோ — இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.

என்று புகழேந்தியார் புகன்றுள்ளதை நோக்குமிடத்து அவ ரைப் போற்றுதல் இருக்க இயலவில்லையன்றோ!

வாழ்க்கையில் மாற்றமதை உண்டாக்கும் அம் மழ பிறந்து வளர்ந்து பள்ளிக்குச் செல்லும் பருவமதை எய்துகின் றது. கல்வியைக் கற்றுக்கொண்டு முதிர்ந்த முயற்சியில் ஈடுபடு கின்றது. கல்வியின் முதிர்ச்சியால் சிறக்கும் அக்குழந்தை யைப் பத்துத்திங்கள் சுமந்தீன்றவர் பலமுறையும் இனிமையாம் பாராட்டித் தாலாட்டு வார்த்தைக் 'கண்ணே! மணியே! முத்தமிழே! கனியின் சாறே! கன்னற் தமிழ்க்கலையே!' என்றெல்லாம் பண்ணிசைத்துக் கண்ணின் கருவிழிபோல் காப்புடன் போற்றுகின்றனர், அவ்வன்னையர்.

அதுபோது அவள் செவிகளில் 'உன் செல்வன் ஒப்பற்ற சான்றோன்,' 'உன் மைந்தன் மனித இனத்தின் மாணிக்கம்' என்று ஊரவர் போற்றும் புகழுரைகள் ஒலித்துக்கொண்டிருக் கின்றன. அதனைக் கேட்ட அன்னையின் உடலும் உயிரும் சிலிர்க்க உவகைகொள்ளுகின்றனள். அதுதருணம் இருந்த இல்லாள், இருக் கும் இடம் அறியாது அகமகிழ்கின்றனள். பெருந் துன்பப்பட்டு மகவைப்பெற்ற அப்போதைக் காட்டிலும் அளவற்ற அக மகிழ்வை எய்துகின்றனள்.

பெற்றுவளர்த்துப் பெருமகிழ்வுற்ற அந் நல்லவர்களுக்குப் பெரும்புகழ் நல்கும் தனையனை உத்தமனாக்குவது தந்தையின் கடனன்றோ! ஈண்டு உத்தமனாக்குவது என்பது அறிவுடைய சான்றோனாக்குவது என்று பொருள்படும். மக்கட்பேறு கிட்டுவதை மறுமைப்பேறு கிட்டியது என்று கொள்ளல் கூடும். எங்ஙனமெனில்? அறிவுடைய புதல்வனை அவனி புகழுகின்றது. பெற்றோர் இறந்த பின்னரும் மக்கள் அவர்களைப் போற்றித்தான் பின் அவ்வறிவுடைய மகனை வாழ்த்துகின்றார்கள். அவ்வாழ்த்தலின் பயன், அவர்களுக்கு நற்பேற்றை அணுகச் செய்யும் என்பர் அறிஞர். பெற்ற மக்களைப் பெரியோர்களாக்கும் பணி மிகச் சிறந்ததாகும். அறிவுடைய சான்றோனாகும் மகனைப் பெறாது, அறியவேண்டிய நூல்களை அறிந்து ஒழுகும் சிறார்களைப் பெறாது, அறிவற்ற பல மக்களைப் பெறுவதில் பயனின்று. ஆகவேதான், "அறிவறிந்த மக்கட்பேறு" என்று அழகாகத் தெய்வப் புலவர் விளம்பினார்.

> "பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பேறலின்றோர்
> நற்புதல்வ னைப்பெறுத னன்றாமே—பொற்கொடியே
> பன்றிபல குட்டி பயந்ததனா லேதுபயன்
> ஒன்றமையா தோகரிக்கன் றோது."

இந் நீதிவெண்பாவின்கண் உவமைமுகத்தான் விளக்கப்படும் கருத்து எத்துணை அளவு ஏற்றமுடையதன்றது? பன்றி பல குட்டிகளைப் பெறுதலினால் பயன் ஒன்றுமில்லை. ஆனால், யானைக்குப் பயனளிக்கும் அதன் கன்று ஒன்றே போதுமானது அதுபோன்று நல்லறிவற்ற பல பிள்ளைகளைப் பெறுதலினும் ஒரு நற்புதல்வனைப் பெறுதல் நன்றாகும் என்று தெளிவாக உரைக்கப்பட்டுள்ளதன்றோ!

பிள்ளையை அறிவுடைய பெரியோனாக்கும் தந்தையின் கடமையைக் கூறும்போது, 'தந்தை மகனுக்காற்றும் நன்றி' என்கின்றார் வள்ளுவத் தந்தை. அந்நன்றி யாது? தன் புதல்வனை அறிஞர்கள் நிறைந்த அவைக்களத்தின்கண் அனைவருக்கும் மேலான ஆய்வாளனாக ஆக்குவதேயாகும். இதனைத் தான் புறத்திலும் பொன்முடியார் என்ற பெண்பாற் புலவர் அறிவிக்கின்றார்.

> "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
> சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
> வேல்வடித் துக்கொடுத்தல் கொல்லற்குக் கடனே
> நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
> ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி
> களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."

இதில் அன்னையானவள் அறிவிப்பதாகப் புலவர் தெரிவிக்கிறார். அஃதாவது, அன்னை, பிள்ளையைப் பெற்றெடுத்தல் என் கடன். அப்பிள்ளையைச் சான்றோன் ஆக்குவது தந்தையின் கடன். கற்கவேண்டியவற்றைக் கற்றுத் தெளிந்த அம்மகனுக்குக் கூர்வேல் வடித்துக்கொடுத்தல், கொல்லனின் கடன்; வேல்பிடித்த அவ்வீரனுக்கு வீரநடை நல்கல், வேந்தனின் கடன்; வீரநடை பயின்று வேல்பிடித்துச் செருக்களமேகும் அவ்வீரன் அன்னை, தந்தை, கொல்லன், வேந்தன் அத்தனைபேருக்கும் அழியாப் பெருமை நல்கல் வேண்டும். அப்பெரியோர்கள் அவனுக்காற்றிய கடமைக்கு அவன் நன்றி செலுத்தல் வேண்டும். அதுதான் மனிதப் பண்பாடு. அதுதான் அனைத்தையும் கற்றுத் தெளிந்த அறிவுடை மகனுக்கு அழகு. எனவே, அவன் செலுத்தும் நன்றி யாதெனில், அவன் கடன் என்னவெனில், ஒளிவீசித் திகழும் வாள்கொண்டு செயற்கரிய கொடிய போரில் இறங்கிக் களிறெறிந்து கொற்ற முரசுகொட்டி, வெற்றிக்கொடி பிடித்து, குருதிவாள் தாங்கி வீரநோக்குடன் வரல், காளை போன்ற அம்மகனின் கடனாகும் என மொழிந்துள்ளது சாலச் சிறப்புடைத்தல்லவா?

மற்று, மாநிலத்தில் மனிதனைப் பிறந்து வளர்ந்து மக்கட் சமுதாயத்தில் மாண்புடன் கற்கவேண்டியவை யாவை யாவையுள எனவோ, அவையனைத்தையும் அறியக்கூடிய நன்மக்களைத்தான் நன்மக்கட்பேறு, அறிவறிந்த மக்கட்பேறு என்று கூறல் பொருந்தும். இளமைப் பருவத்தில் கற்ற கல்வியைப்போல் வாழ்க்கையில் பருவத்திற்கேற்பக் கற்கவேண்டிய துறைகளும் பல உள்ளன. ஆகவே கற்கவேண்டிய அவைகள் அனைத்தையும் கற்க, இளமையில் பயிலும் கல்வி இன்றியமையாததாம். கல்வியைப்பெறவில்லையெனில், அம்மக்களின் வாழ்க்கையில் தனியில்லாத போராட்டம் காணப்படுகின்றது. அம்மக்களைப் பெற்றெடுத்த பெரியோர்களின் குடிப்புகழ் குன்றிச் சிறப்புள் நிறைந்து, அவர்கள் உள்ளமும் இன்னுயிரும் மடைகின்றது. எனவேதான் சான்மனிக்கடிமைகிறது

என்று இட்டப்பட்டுள்ளது. பெற்ற மக்களைக் கல்லாது வளர விட்டால், மாண்புடைய குடிக்கு மாசுவது இன்மை. அம் மக்களின் வாழ்க்கையின் அல்லல் ஆட்கொள்ளுகின்றது. இக் காலத்து "பிள்ளைகளும் படிக்க வேண்டாம் பிள்ளையும் படிக்க வேண்டாம், என்னைமாதிரி கைநாட்டு ஆக்கிச் சம்பளப்படையும் வேண்டாம்" என்று சொல்லிய போக்கு மனிதர்களே அன்றுடன் வாழ்க்

னூர்' எனும் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு, அதற்குத் தண்டனையாக நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார்.

உண்மையை மக்கள் ஒருநாளும் அறியமுடியாதென்ற சோபிஸ்தர்களின் கோட்பாடு, அறிவாற்றலுக்குத் தீங்கிழைத்து வீழ்த்துவதாக இருந்தது. ஒழுக்கம், அரசியல் போன்ற துறைகளின் அடிப்படைக் கருத்துக்கள் மாறுபட்டன; அக்கருத்து விளக்கங்களை மக்கள் திரித்துரைத்தனர். இந்நிலையில், மெய்ப்பொருள் அறிவின் இன்றியமையாமையை இப்பெரியார் உணர்ந்தார். எவ்வாறெனின், மேலேசொன்ன அரசியல், ஒழுக்கத் துறைகளில் காணுகின்ற குற்றங்குறைகளும், பிழையான வாதங்களும் மெய்ப்பொருளைப்பற்றி மக்கள் கொண்டிருக்கிற தவறான எண்ணத்தினின்றும் பிறப்பனவாகும் என்பதை அவர் நன்றாக அறிந்தார். மெய்ப்பொருள் காணவிழையும் முயற்சி அறிவின் விளைபயனாகும். ஆகவே, அறிவே எல்லாக் காரியங்கட்கும் ஆயத்தமும், ஆயுதமும் ஆகும் என்பது அவர் கொண்ட முடிபு.

ஆதலால், இருக்கின்ற இடர்ப்பாடுகளைத் தீர்க்கப் பகுத்தறிவாலேயே முடியும் என்றுரைத்த அவர் மனித அறிவாற்றலின் பால் அளவிடற்கரிய நம்பிக்கை கொண்டிருந்தார். தம் முயற்சியின் குறிக்கோளாக அவர் கொண்டது இதுவே. அஃதாவது, மெய்விளக்க முறையை உருவாக்குவது; அறம், உண்மை இவற்றின்பால் மக்கட்கு அன்புபெருகச் செய்வது; மக்கள் நேர் வாழ்வு பெறுதற்பொருட்டு அவர்களை நேர்மைநிறை சிந்தையுடையவர்களாக்குவது போன்றவைகளாகும். இவர் வெறுந் திட்டமிடுபவராகமட்டுமென்றி, வகுத்த விதிகளைச் செயல்வகையில் நடைமுறைப்படுத்துவதையும் குறிப்பாகக் கொண்டவர். தாம் வகுத்த கொள்கைகளைத் தம் வாழ்வின்முறையிலேயே வாழ்ந்துகாட்டிப் பிறரும் தம்மைப் பின்பற்றும்வகையில் ஒழுகினார்.

நம் மனதில் உள்ள குழம்பிய, தெளிவற்ற, வெறுமை எண்ணங்கள் எண்ணிறந்தன; தீர ஆய்ந்துணராக் கருத்துக்கள் நிரம்ப உள்ளன; நம்பிக்கையின் அடிப்படையில் வைத்துக் கொண்டிருக்கிற தப்பெண்ணங்கள் மிகுதியாக உள்ளன. நாமே சரிவரப் பொருளுணராக் கருத்துக்களாகும் இவை. எனவே, உண்மையை அறியும் வழியாவது, நம்முடைய எண்ணங்கள் அனைத்தையும் தெளிவுபடுத்திச் சொற்களின் உண்மைப் பொருள்களைச் சரிவர உணர்ந்து, நாம் கையாளுகிற நோக்கங்களை நன்கு புரிந்து, நாம் என்ன பேசுகிறோம் என்பதைத் தெளிவுறத் தெரிந்துகொள்வதுமாகும் என்று இவர் கருதினார். உண்மையை மக்கள் ஒருநாளும் அறியமுடியாதென்றும்

சோபிஸ்தர்களின் முடிபு தவறுனதாகும் என்று சாக்ரடீஸ் கண்டார். மனிதனுக்கு மனிதன் கருத்து வேறுபாடு உண்டு என்பது உண்மையே எனினும், எல்லா மக்களும் ஒருசேர, ஒத்துக்கொள்கிற ஒரு பொதுக்கொள்கையேனும் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தல் நம்முடைய கடமையாகுமெனப் புகன்றார். அத்தகையதான அனைவரும் ஒப்பும் கருத்துக்களைக் கண்டுபிடிக்கச் 'சாக்ரடீஸ் முறை' என்று தற்பொழுது அவர் பெயராலேயே வழங்கப்படுகிற ஓர் உரையாடல் முறையைக் கைக்கொண்டார்.

அஃதாவது, ஏதேனும் ஒரு பொருள் குறித்து உரையாடும் பொழுது, அதில் பங்கெடுக்கும் பிறரைவிடத் தாம் குறைந்தவராக அப்பொருளைப்பற்றி ஒன்றும் அறியாதது போல நடித்துப் பிறர் கூறும் கருத்துக்கள் அவர்களுக்கே முரண்படுவதாகும் வகையில் உரையாடிப் பின்பு அவர்கள் சிறுகச் சிறுகத் தம் கருத்துக்களைச் சார்ந்து ஒப்புக்கொள்ளும்படி செய்வதே அந்தச் 'சாக்ரடீஸ் முறை'யாகும். இத்தகைய உரையாடலின் பயனாக மக்களிடத்துக் காணப்படுகிற தெளிவற்ற, கலங்கிய நோக்கங்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல அவர்களுக்கே நன்கு புலனாகி விடுகிறது.

ஓர் உரையாடலை உதாரணமாகக் கொண்டு இம்முறையை நன்கு உணரலாம்:

இயூதிடெமஸ் என்னும் இளைஞனை, அவன் பெரும் அரசியல்வாதியாகவும், வல்லுனனாகவும் ஆவதற்கு எவ்வளவு போதாவல் உடையவனாக இருக்கிறான் என்பதைக் கூறும்படி சாக்ரடீஸ் கேட்டுக் கொண்டார். அவ்விளைஞன் அவ்வாறே தன்னுடைய விருப்பங்களை வெளியிட்டவுடன், அத்தகைய அரசியல் திறமை இருப்பதற்கு அவன் மிக நேர்மையுடையவனாக இருத்தலின் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். இயூதிடெமஸ், ஏற்கனவே, தான் நேர்மையினின்றும் விலகாது ஒழுகுபவன் என்று தன்னைக் கருதியிருந்தான்; எனவே அதை வெளிப்படையாகக் கூறினான். உடனே சாக்ரடீஸ், அவ்விளைஞனின் நேர்மையின்பாற்பட்ட செயல்களையும், தன்மைகளையும், நேர்மையின்மையின்பாற்பட்ட செயல்களையும் தன்மைகளையும் தனித்தனியாகக் கூறுபடுத்திக் கூற முடியுமா? என்று கேட்டார். இளைஞன் முடியுமென்று கூறினான்.

பொய் பேசல் தன்மையை எதன்பாற்படுத்துவாய் என்று சாக்ரடீஸ் வினவினார். நேர்மையின்மையின்பாற்படுமென இயூதிடெமஸ் விடையளித்தான். ஏமாற்றுதல், களவு, அடிமைப்படுத்தல்

ஆகிய ஒவ்வொன்றும் எதன்பாற்படும் என்று மேலும் வினவி னார். நேர்மையின்மையையே இக் குணங்கள் சாரும் என்று இளை ஞன் உறுதியாக விடையளித்தான். ஒரு படைத்தலைவன் தன் பகைவனைத் தாக்கிப், போரில் அடிமைகொண்டு, அவன் பொருள்களைப் பறித்துக் கொள்ளுதலாகிய செயல்கள், எதன் பாற்படும் எனச் சாக்ரடீஸ் வினவினார். இவையெல்லாம் நேர்மை யின்பாற்படும் என இயூதைடிமஸ் கூறினான். இளைஞன் விளக்க வுரைகள் முன் பின் முரணாக இருப்பதைச் சாக்ரடீஸ் சுட்டிக் காட்டினார். சற்று முன்பு, ஏமாற்றல், களவு, அடிமைப்படுத்தல் ஆகியவை யெல்லாம் நேர்மையின்மையின்பாற்படும் என்று சொல்லிவிட்டு, ஒரு படைத்தலைவன் தன் எதிரிக்கு அதே செயல்களைச் செய்யும் பொழுது மட்டும் நேர்மையின்பாற்படும் என்றுரைப்பது பொருந்தாக் கூற்றாகும் என்பதை எடுத் துரைத்தார்.

இளைஞன் சிறிதுயோசனையின் பின்பு, இச் செயல்களை நண் பர்களுக்குச் செய்தால் அவை நேர்மையின்மை, பகைவர்களுக் குச்செய்தால் நேர்மை எனக்கூறினான். அவ்வாறெனினும் முரண் பாடுளது. நோய்வாய்ப்பட்ட குழந்தை, மருந்து குடிக்க மறுக் கிறது. ஆனால், குழந்தையின் தந்தை, மருந்து மிகுந்த சுவை யாக இருக்குமென்று பொய் சொல்லிக் குழந்தையை மருந்தருந் தச் செய்கிறான். ஒருவன் தன் எல்லையற்ற இடர்ப்பாடுகளால் உள்ளம்நொந்து உருக்குலைந்து வாடி வருந்திக் கையற்று நிற்கும் வேளையில், அவன் தற்கொலை செய்யத் துணிந்துவிடக்கூடாதே என்று ஐயமுற்ற அவனுடைய நண்பன் முன் அவன் எப்பொழு தும் தன்னோடு வைத்துக்கொண்டிருக்கிற கத்தியை அவனறியா மல் அப்புறப்படுத்திவிடுகிறான். இவ்விரண்டு செயல்களும் முறையே பொய் பேசுவதும், களவு செய்வதுமாகும். இச்செயல் கள் எதிரிகளுக்குச் செய்யப்பட்டதல்ல; நண்பர்களுக்குச் செய் யப்பட்டதுதான். ஆனால், இளைஞனுடைய மொழிப்படி நண்பர் களுக்கு இத்தகைய செயல்களைச் செய்தல் நேர்மையின்மை யாகும். எனவே, சாக்ரடீஸ் இம் முரண்பாட்டை நன்கு விளக் கிக்காட்டிவிட்டு, மேற்குறித்த வினைகள் நேர்மையின்பாற்படுமா? நேர்மையின்மையின்பாற்படுமா? என்று மறுபடியும் வினவினார். "சாக்ரடீஸ், நான் கூறிய விடைகளில் எனக்கே நம்பிக்கை யில்லை. நான் இதுவரை கருதிவந்தவைகளுக்கு எதிர்மாறாகத் தற்பொழுது எல்லாம் தோன்றுகின்றன" என்று இயூதைடிமஸ் கூறிவிட்டான்.

ஆகவே, இத்தவிதமாகத் தொகுப்புவழி அளவை (Process of Induction) முறையால் சாக்ரடீஸ் விளக்க வுரைகளைக் கற்

பித்தார். பல செயல்களை, குணங்களை எடுத்துக் காட்டிக் கொண்டு ஒரு பொருளைப்பற்றிய ஐயமற்ற தெளிவுற்ற கருத்து விளக்கத்தைத் தொகுப்பதே சாக்ரடீஸ் கையாண்ட தொகுப்பு வழியளவை முறையாகும்.

இதைத் தவிர ஒரு குறிப்பிட்ட வாய்மொழியின் ஆதி ஆதாரங்களைக் கண்டுபிடித்து, அவற்றைப் பகுத்து ஆழ்ந்து ஆய்ந்து முடிவு செய்த விளக்கங்களின் உதவியால் அதுபற்றி ஆராய்ந்து வேறு திசையில் சிந்திக்கும் முறை பகுப்புவழி அளவை (Process of deduction) முறையாகும்.

எனவே, நாம் உபயோகிக்கும் சொற்களின் பொருள்களை நன்குணர்ந்து, இவ்விரண்டு வழிமுறைகளைக் கையாளுவதின் வாயிலாய், அவற்றின் ஆதி ஆதாரங்களைக் கண்டுபிடித்தல் இயலுமென்று சாக்ரடீஸ் கண்டார். சுருங்கக்கூறின், அறிவைப்பெறுதல் முடியாதென்கிற சோபிஸ்டர்களின் கூற்று, தவறானது, மெய்யறிவு பெறுதல் இயலுமென்று நிலைநாட்டின பெருமை அவனையே சேரும்.

(தொடரும்)

[illegible]

[illegible]

(அறுசீர் விருத்தம்)

[illegible]

தமிழர் மணம்

[தென்னுப்பிரிகா—டர்பன், திரு. ச. மு. பிள்ளை]

பிறர் பிறரெல்லாம் பலவிதநிலையில் நின்ற அந்தப் பண்டைக் காலத்தே, நாகரிகத்தில் கீர்த்திபெற்று விளங்கியவர் திராவிடரே. இவ்வுண்மையைப் பண்டைத் தமிழ்நூல்களில் பரக்கக் காணலாம். இம்மாட்சிமைப்பட்ட திராவிடர்களிடத்து இருந்த உயரிய பழக்க, வழக்க, வொழுக்க நிலைகள் நாளடைவில் முற்றிலும் மாறுபட்டுவிட்டன.

தம் விழுமிய வொழுக்கங்களை இழந்து, தாய்நாட்டிற் குடிபுக்க சிலர், சுயநலங்கருதிப் புனைந்திட்ட உரைகளை மெய்யெனக் கொண்டு, அவரது ஒழுக்கங்களே தம்முடைய ஒழுக்கங்களெனக்கருதி மயங்கவும் நேர்ந்தன. மணம், தமிழ்நூல் வழக்கால் எவ்வாறு நிறுத்தப்படுகின்றதென்றால் களவு, கற்பு என்னும் இரண்டு வழிகளாலென்க. களவல்லது கற்பு நிகழாது; நிகழினும் அக்கற்பு நிலையுறுதல் அத்துணை இயலாதென்பது தேற்றம். களவென்ற சொற் கேட்டவுடன், களவு தீதென்றல் தவறு. அது நல்லதாக மாறுதலும் உண்டு. தலைவனோடூடிய தலைவி, அவனை அறியாது தன்னைக் கொலைசெய்வான் துணிந்து, ஒரு கலத்தில் நஞ்சுபெய்து மறைவிற் சேமித்து வைத்தனள். அதனை யறிந்தான் ஒருவன். அவளை அறியாது அக்கலத்தினை எடுத்து நஞ்சினை உகுத்தனன் என்க. இது களவாமோ? மற்றும் சிறுமியரை ஈன்ற ஞான்றே இருமுதுகுரவர் இது பிறர் பொருள் என்று வரைசெய்திட்டமையின், பிறர்க்குரிய அவரை வவ்வுதல் வழக்கேயாமன்றோ?

கொடுப்பாரும் அடுப்பாருமின்றி, ஒத்த கல்வியும், ஒத்த அறிவும், ஒத்த செல்வமும், ஒத்த வனப்புமுடைய ஒருவனும் ஒருத்தியும் தம்மிற்றாமே எதிர்ப்பட்டபொழுது இருவருள்ளத்திலும் ஒருங்கே தோன்றிய உருவவன்பு விழிவழிப் பாய்ந்து இருவரையும் ஒன்றுபிணிக்கக் கூடுவது களவாமென்க. அஃதன்றி, அன்பு எவ்வாறு நிகழும்; அன்பில்வழிக் கற்பு எவ்வாறு நிலையுறும்? பின்னர் யாவருமறியச் சடங்குவழி மணத்தல் கற்பாம். இரு முதுகுரவர் கற்பித்த வழி இருவரும், மணமகன் கற்பித்தவழி மணமகளும் நிற்றலாற் கற்பு என்று பெயர்த்

“கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை” என்னும் பெரியோர் வாக்கும் இதனை வலியுறுத்தும். இவ்வித மணமே தமிழ்

மக்கட்குப் பழைமையும் உரிமையுமாம். ஆனால் இப்பொழுது நடைபெறும் மணவினை அறிவுடையார் வெறுக்கத்தக்க நிலையின தாம். ஒத்த கல்வி, ஒத்த அறிவு, ஒத்த உடல்நிலை, ஒத்த வனப்பு என்னுமிவற்றை ஒருசிறிதும் கருதுவாரல்லர். மண மகன் எவ்வளவு இழிந்தவனேனும், வயதில் முதிர்ந்தோனேனும், நோய்க் கிருப்பிடமுள்ளோனேனும் பொருள் ஒன்றுமட்டும் உடையவனாயின் அவனை விழுமிய மணமகனாகக்கொள்வது மிக்க வழக்காயிற்று.

மணமகள், கல்வியறிவற்றவளேயாயினும், அழகும் குணமும் இலளேனும், எவ்வாறிருப்பினும் அவர்கட்குக் கொடுக்கும் பொருள் நிறைவுபெறின் தவர் என்னுமிவற்றை ஆராய்ந்து கொள்ளாமலேயே பெரிதும் மகிழ்ந்து கொள்வாராகின்றனர். இம்மட்டோ! ஒன்றுமறியா இளம்பருவத்தே மணஞ்செய்து வைக்கின்றனர். சுருங்கச் சொல்லின் இப்பொழுது மணம் என்பது ஒரு வாணிகமாக மாறி விட்டது.

முன்னர்க் குறிக்கப்பட்ட இருவர் மனமும் ஒப்பிய உண்மை அன்பே, மணமக்கள் புனையும் மங்கல அணிகலம். அவ்விரு வரும் மலரும் மணமும், மணியும் ஒளியும், கடலும் அலையும் போல ஒன்றுபட்டு அன்புநிறைந்து ஒருவர்க்கொருவர் துணைபுரி பவராய், உரிமையோடு, இறைவன் அருளினால் வாழ்தற்குக் கடப்பாடுடையராகின்றனர் என்பதை மணவினையில் பயன்படும் மறை மொழியாகிய மந்திரங்களும், விரிவான விதானங்களும் செய்வித்துக் கற்பிக்கின்றன.

இல்லறமாகிய சகடம், ஒத்த அறிவும், ஒத்த பண்பாடு முடைய இவ்விருவராகிய இருசக்கரங்களால் ஓடுவது. ஒருவர் சற்று வலிகுன்றியிருப்பினும் அச்சகடம் செவ்வையாக நிலைபெறாது. அவ்விருவர் தம்முள்ளும் இயைந்தொழுகாவிடின் அன்பு உடைபட்டுப் பட்டுவிடுமன்றோ. ஒரு கால் இடர்ப்படும், ஒரு கால் குறைந்ததுமா மில்லை. இவ்வாறு மணமக்களுக்கு மணவினை வழுவமைதியாதலை, மணமகளுக்கு மணமகன் அழகுடையானாதல் இயலுமோ? இவ் வியல்புடைய இருவர் வாழ்க்கையின் நலம் அமைவதோ? சில முறையற்ற உரிமையைப் பெற்ற பாவர் இத்தகைய திருத்தமில்லாப் பெண்மையைக் கல்வியறிவில் இழுக்கமாக்கக் குறிக்கொள முறைப்படுத்தலாகும்.

ஒரு குடியினைத் திருத்தமுறச் செய்யவே அதுபோலப் பெண்பாலாரை வீட்டில் அடக்கிவிட்டனர். அவர் திறங்கள் பெரிதின் ஓங்க இருந்தவர்பெண்பாலிற் சிறந்தார் ஒருவருமின்று. காவியத்தில் தம் பிற முன்னவர்தாமேயாம் என்று கருதுகின்ற பெண்டிர், இக்

மணவினையிலே நன்காரர்யக் கடமைப்பட்டுள்ளார். இனி, இச் சடங்கில் ஏராளமான பொருளை வறிதே செலவிட்டு இடர்ப்படுகின்றனர் என்பது வெள்ளிடைமலை. அப்பொருள் யாவும் ஆடம்பர நெறியிலேயே செல்லுகின்றன.

ஒரு சடங்கைச் செய்யத் தொடங்குபவன் அது யாரால் சொல்லப்பட்டது? எந்த நூலிற் சொல்லப்பட்டது? அது எவ்வாறு செய்யப்படவேண்டும்? யாரால் செய்யப்படவேண்டும்? செய்தால் வரும் பயன் யாது? செய்யாமையால் வரும் இழுக்கென்ன? என்பனவற்றை அறிந்து அல்லது அறிந்தார்வாய்க் கேட்டன்றோ செய்தல்வேண்டும்? தமிழ் மணமுறை பண்டைக் காலத்தில் மிக உயர்ந்து விளங்கிற்றென்பதும், இடையில் அவ் வழக்கு மாழ்கி அயல் வழக்கு விரவிற்றென்பதும், இனிப் பண்டைநிலைக்குக் கொண்டுவருதற்கண் நாம் கல்வியறிவுடைய ராதல் வேண்டுமென்பதும், அதனுள்ளும் பெண்பாலாரை அவ்வழி உயர்த்துதல் இன்றியமையாக் கடப்பாடாகுமென் பதும், அக்கடமையை முற்றுவித்தாலன்றி நம் மூதாதையர் பெருமைக்கு நாம் தீங்கிழைத்தவராவோம் என்பதும் போதரும்.

கவிமணி, தேசிக விநாயகம்பிள்ளையவர்கள் பிரிவு பற்றிய

இரங்கற்பா

ஏ. வே. திருப்பதி

(பஃறொடை வெண்பா)

கவிமணியே கன்னித் தமிழ்த்தா யளித்த
தவமணியே; இன்கவிதை கண்ட—நவமணியே!
காற்றொடு சேர்ந்தனையோ? காலனூர் ஏகினையோ?
ஆற்றுவ தெங்ஙனம்? யானின்று நின்பெருமை
போற்றிப் புகழ்வதல் லால்!

சேக்கிழார் திருமொழி ஒண்மை[1]

[illegible]

[illegible]

1. [illegible]

உண்டாம் எனவும், பிறரைப் பூசிக்கின்ற காலையில் அவருடன் இருத்திச் சிவபெருமானையும் பூசித்தல் சிவபெருமானுக்கு மகிழ்ச்சியை உண்டாக்காமல் சினத்தையே உண்டாக்கலால் அந்தப் பூசை சிவபூசை என்பதில் தவிர்ந்து சிறு தெய்வ பூசை என்று சொல்லப்படும் எனவும், மேற்காட்டிய மறை முதல்வன் கருத்தால் விளங்குகையால், ஒன்றுக்கொன்று வேற்றுமையுற்ற பொதுமொழி ஒன்றுடன் பரமபதியாகிய அவரே தமது மொழியைக் கவனிப்பார் என்பது எங்ஙனம் பொருந்தும்?

பிறர் செய்தலால் சினம் உண்டாமன்றித் தாமே செய்தால் குற்றம் இல்லையெனின், அப்போது கடவுள் தன்மைக்கே இழுக்கு வரும். அப்படித் தாமே செய்ய வேண்டிய இன்றியமையாக் காரணந்தான் காட்ட நேரும். மேல் மறைமேற்கோளால் பிறர் சிற்றறிவினராகவும் அவர் செய்யவே உடன்படாராகிய அக் கடவுள் தாமே தங் கொள்கையை மறப்பார் என்று எப்படி அமையும்? சேக்கிழார் மொழியுடன் கடவுள் மொழி கலந்தது என்பது ஐயம் எனின், அதைக்காட்டினும் கடவுளையே ஐயுறுவது மிக்க சிறப்பாம். இன்னும் இதனை ஆராய்வது இன்றியமையாதது அன்று என்று விடுவதே பெருநலமாம். சைவர் என்னும் சித்தாந்தத்திற் கட்டுண்ட பக்குவமுடையார்க்கே இந்த ஆராய்ச்சி யாகையால், அவன் இன்ன ஹேயாவலம்பனத்தின் இகழ்தல் செய்யான். அவனுக்கு அச் சமயத்தாற் பெறப்படும் யாவும் உண்மையெனக் கொள்ளுந் துணிவு உடைமையால் அத் துணிவு பற்றி ஆராய்தல் ஒன்றே உரிய கடமையாம். அதனால் இனிப் புறச்சமயிகள் கூற்றை விரியாது விடுப்பாம்.

புறச் சமயிகளுக்கும் ஒப்ப நெறிமுறை சொல்லவேண்டுவதுதானே யெனின், புறச் சமயிகள் அநேகருள், கடவுளே இல்லை என்பவனுக்கு எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் என்ன பலன்? முதல் கடவுள் இருப்பை அவனுக்கு விளங்கக் காட்டியன்றோ பின்னர் மற்றைய பொருள்களை உணர்த்தல் வேண்டும், அதற்குப் புண்ணியம் இருந்தன்றோ அவனுக்குக் கைகூடல் வேண்டும். நமது மொழி அவனிடம் பயன்படாது என்க. அவன் நாமாகிற வரையில் அவன் நம் தன்மை அடைவானோ எனின், நாயும் பேயுமே நாளைக்கு நம் தன்மையை அடைவது முடிவாக, எவ்வளவோ படி கடந்து வந்தவனாகிய அவன் வாமாட்டான் என்பது எங்ஙனம்?

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங் களாய், வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச், செல்லாஅ

நின்றஇத் தாவர சங்கமத்துள், எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேன் எம்பெருமான், மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்” என்னும் அருளாளர் திருமொழிப்படி கண்டு கொள்க. அன்றியும்,

“புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும் புகல் மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரமம், அறத்துறைகள் அவை அடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும் அருங் கலைகள் பலதெரிந்தும் ஆரண நூல் படித்தும், சிறப்புடைய புராணங் கள் உணர்ந்தும் வேதச் சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென் றால் சைவத் திறத்தடைவர். இதிற் சரியை கிரியா யோகம் செலுத்திய பின் ஞானத்தாற் றிருவடியைச் சேர்வர்” என்னும் மேற்கோளாற் காண்க.

இந்த அருள் மொழிகளால் இன்னன நாய்களும் பேய் களும் காலக்கிரமத்தில் ஞானிகள் ஆவரென்பதூஉம், அப்படியே புறச் சமயிகளும் பாகம் வாய்ப்பெறுழிச் சைவச் செல்வராவர் என்ப தும் வெளிப்பட்டது. அப்படியாயினும் காலக்கிரமத்தில் ஞானியாவது திண்ணமாயிருந்தும், அந்த ஞானத்தை இப்போது அப்படியா கப் போகிற நாய்களுக்கும் பேய்களுக்கும் கைகூடச் செய்வது அரியதாய், செய்ய முயல்வது அயர்வாமை உடையதாய் முடி புபோல அவ்வளவே புறச் சமயிகளிடமுஞ் சொன்னது தக்கதாம். புறச் சமயிகள் ஒரு வகையும் இசைவு பெற்றுக் குணப்பட இடம் உண்டாகாதபோது, அவர்களைக் குறித்துச் சிவ தத்துவங்களை நம் ஆசாரியர்கள் பிறிதியாய் விரிவுரை செய்திருப்பது என்னை யெனின்? அதன் உண்மையை விளக்குவாம். மெய்ப்பொருள் நாட்டப் பெருஞ் செல்வத்தை அடைதற்குரிய சம்பவர்கள், அப்புறச்சமயி கள் தீய உரைகளால் கலக்க மண்ணுறும் அப் புறச் சமயிகள் மறைவின்றி வெளிப்படையாய்ச் சமயத்திற் புகுந்து சைவத்தைச் சார்ந்திருக்கும் புண்ணியம் உடைமை பெற்றிருந்தும், அப்படிச் சேர்தற் கான முயற்சி அவர் செய்திலரையது, உண்மை தருதற்கும் ஆனை யால் அப்படித் தைக்குந் தோறும் உண்மை இப்படி இருக்கின்ற தல்லவா? நாம் பயனின் சாரமெத்தால் கையிற் கிடைக்க இருக்கு மீதே. இப்போது இதைவிட்டுவிட்டு அதில் தலையிடுகின்ற மாமம் வாட்டுகிறதே! விருதாக் கைகூடாத தன்மையால் அத னுற் கைகூடற்பாலதாய பரிபாகத்தை அவர்க்கு ஊட்டும் பொருட்டும் நம் பெருமக்கள் செய்கை பெருமை பெற்று விளங் கும்! விளங்கும்!!

(தொடரும்)

காதற் கவற்சி

[நெல்லை. திரு. க. சுப்பிரமணியன்]

இளந்தமிழ் மாணவர்காள்! செந்தமிழ்ச் செய்யுளிலக்கியக் கடலுள் மூழ்கி ஒரு முத்தெடுத்து, அதன் ஒளி கண்டு களி கூர்வம், வம்மின்!

எழுமையும் தொடரும் விழுமிய அன்புள்ளம் வாய்ந்த தலைவன் பிரிந்து சென்றான். பிரிந்த பின், பெருந்துயர் எய்திய பெண்ணணங்கு, நெஞ்சுசற்ற ஆற்றாமையை, அடக்கும் வலியிலளாய்த் தோழியின்பால் மொழிகின்றாள். எக்காலமும் மாறுதல் இல்லாத மாண்புடைக் காதலர், தம் மலை நாட்டை மறந்து பிரிந்து போய் விட்டார். கவலையால் வெளிப்படுங் கண்ணீர், ஆறுபோல வந்துகொண்டே இருக்கின்றது. மெல்லிய தோள்வளையும் புல்லியிராமல், கழன்று விழும் நிலையை எய்துகின்றது. உள்ளந் தாங்காத காதற் கவற்சியால், உடலும் வருந்துகின்றது. மருந்து பிறிதில்லாப் பெருந் துயரால் மாளநேரிடும் எனவுணர்ந்த மனையோள், வாழ வழி கூறுதியெனத், தோழியை வினவுகின்றாள்.

மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
எறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழி! யான் வாழும் ஆறே.

'மறப்பருங் காதல்' என்றும், 'அமைப்பருங் காதல்' என்றும், காதலன்புக்கு அடைமொழி கொடுத்தோதுவர், பாலை பாடிய பெருங் கடுங்கோவும், பெருங்கதை பாடிய கொங்கு வேளிரும். நேர்ந்த வழிப் புணர்ந்து, தீர்ந்தவழி மறக்குந் திறத்ததும், முன் மலர்ந்து பின் கூம்பும் இயல்பினதும் பண்டைத் தமிழர் கொண்ட காதலன்று. ஆதலான், ஏற்ற அடையான், 'மாறாக் காதலர்' என மனமகிழ்ந்து விளக்குகின்றாள், மங்கை. தன்னை மறக்கவில்லை; தான் வாழும் மலை நாட்டில், முன் ஓர் நாள், மல்லிகை மணங் கமழ, வண்டிசைத் தேனும் யாழ் முரல, மலர்ச் சோலையில் மார்புறத் தழுவி மகிழ்ந்திருந்த இடத்தை மறந்துவிட்டார் தலைவர் என, அறிவுடம்பட்ட அரிய கருத்தை இயம்புகின்றாள், அரிவை. அன்னணம் பிரிந்து சென்றதும், பிற்றைஞான்று இன்புறற்கும் அறம்புரிதற்கும் வேண்டிய பொருளீட்டவே என எண்ணினள், ஏந்திழையாள். ஆகலான், மனம் நொந்து காதலனை ஏசாமல், தான் தனித்திருக்கலாற்றாத உளக் கவலையையே உள்ளுருத்து உரைக்கின்றாள்.

காதல் கைம்மிக்கது: கவற்சி பெரிதாயிற்று என்பதை ஆறுபோலப் பெருகிவரும் கண்ணீர் காட்டுகின்றது. அது மட்டுமா? அந்தக் கண்ணீர் வெந்த உள்ளத்தினின்றும் வெளிப் படுவது. ஆதலால், வெப்பம் மாறாத இயல்பினதாயிருக்கின்றது என, நயம்படக் காட்டுகிறாள். கண்ணீர் இப்பொழுதும் நிற்க வில்லை, இன்னும் அயர்ந்துகொண்டும், நீர் வீழ்ந்துகொண்டு இருக்கின்றது. உடல் மெலிந்தது: கைகள் மெலிந்தன; வளைகள் கழல்கின்றன; உயிர் வாழ்வது எவ்வளவு காலம் என்று யாவர் சொல்ல முடியும்? தோழியைக் கேட்கின்றாள், மாறும் வழி கூறுக என்பது, காதற் கவற்சி மிக்க தலைவி.

நாலு வரிகளிலமைந்த அழகிய இக் காதற்காட்சியை, யாப்பருங்கல விருத்தியில், மேற்கோளாகக் காட்டப்பட்ட பாட்டொன்று எடுத்துத் தருவதாகும்.

கவிமணி, திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் மறைவு பற்றிய

கையறுநிலை

[வித்துவான், திரு. இ. மு. சங்கரலிங்கம்]

வெண்பா

கவிமணிகள் பற்பலவும் காணிக்கை தந்து
புவிமணியாய் வாழ்ந்த புனிதா!—கவிமணியே
சொன்மேடையர்! இனியகவி யாரும் கொடுக்கும்பு(து)
உண்டோ? உரையாய்! உவந்து! 1

ஆக்கப் பெருமையிலே பேரன் தமிழ்ச்செல்வத்தை
மாற்றிட [illegible] உகந்தாயோ!—சாற்றினையும்
இன்பப் புலமையை [illegible] எவ்வமுமோ?
அன்புருகச் செய்யும் துணிந்து. 2

புத்தர் கருணையும் புதுமையே [illegible]
சித்தம் [illegible] சொரிந்தாய்!—இத்தரையில்
சுத்தநிலை [illegible] கண்டதுண்டோ?
[illegible] 3

தேவி [illegible] மெய்யுணர்வாய்!
ஆசிய [illegible] கவிமணியில்
பற்பலவும் [illegible] இன்னுமுடைய
[illegible]? 4

பிரெஞ்சு இந்தியா, அன்றுமுதல் இன்றுவரை

1674—பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி சார்பில் புதுவையில் பாக்டரி யொன்றை பிரான்ஸிஸ் மார்டின் திறவினார்.

1693—புதுவையை டச்சுக்காரர்கள் பிடித்துக்கொண்டனர்.

1699—ரிஸ்விக் சமாதான உடன்பாட்டின்படி பிரெஞ்சுக்காரருக்குப் புதுவை திரும்பக் கிடைத்தது

17 1—படகாரா ராஜாவிடமிருந்து மாஹியை பிரெஞ்சுக்காரர்கள் பெற்றனர்.

1731—ஏனாமிலும் பிரெஞ்சுக்காரர் ஊன்றினர்.

1761—ஐர்கூட் தலைமையில் ஆங்கிலேயர் புதுவையைப் பிடித்தனர்.

1765—இங்கிலாந்து புதுவையைத் திரும்பவும் பிரான்சுக்கு அளித்தது.

1778—மீண்டும் புதுவையைக் கைப்பற்றினார் ஆங்கில தளபதி மன்ரோ.

1785—வெர்ஸேல்ஸ் ஒப்பந்தப்படி மீண்டும் பிரான்சுக்குப் புதுவை கிடைத்தது.

1793—மற்றொரு முறையும் பிரிட்டிஷார் வசமாகியது.

1816—பாரிஸ் உடன்பாட்டின் மூலம் திரும்பவும் பிரான்ஸ் புதுவையை பெற்றது.

1941—இந்திய சர்க்காருக்கும் பிரெஞ்சிந்திய சர்க்காருக்குமிடையே சுங்க ஒப்பந்தம் முடிவு.

1947—பிரெஞ்சிந்திய பிரதிநிதி சபை தோன்றல் - ஆகஸ்டில் இந்தியா விடுதலை பெற்றதை யடுத்து பிரெஞ்சிந்தியாவிலும் மகிழ்ச்சிக் கிளர்ச்சி - கவர்னர் பரோன் சந்திப்பையடுத்து, அமைதியாயிருக்கப் பிரெஞ்சிந்திய மக்களுக்குக் காந்தியடிகள் வேண்டுகோள்.

1948—இந்தியாவில் தங்கள் அரசியல் மேன்மையை நிர்ணயித்துக் கொள்ளப் பிரெஞ்சிந்திய மக்களுக்கு உரிமையளிக்கும் இந்திய-பிரெஞ்சு உடன்பாடு - முனிசிபல் தேர்தலில் பிரெஞ்சிந்திய சோஷலிஸ்டு கட்சிக்கு மிக்க வெற்றி-மாஹியில் எழுச்சி, பிரெஞ்சுப்பட்டாளம் வருகை. தாயகத்துடன் இணைக்க வற்புறுத்தி ஜெய்பூர் காங்கிரஸ் தீர்மானம்.

1949—வாக்கெடுப்புக்கு நகரசபைகள் மூலம் தேதி நிர்ணயம் - சுங்க ஒப்பந்தம் காலமாதல் - இந்தியாவுடன் போக்குவரத்து பர்மிட் முறை - இந்தியாவுடன் இணையச் சந்திரநாகூர் முடிவு - வாக்கெடுப்பின்றியே திட்டுகளை இணைக்க நகரசபைகள் வற்புறுத்தல்.

1951—சந்திரநாகூர் மாற்றத்துக்கு இந்திய-பிரெஞ்சு உடன்பாடு முடிவு. மக்கள் கருத்தறிவதிலிருந்த அல்லல்களைக் கண்டனர் நடுநிலைப் பார்வையாளர்.

1952—வாக்கெடுப்பு விவகாரம் இனிக்கிடையாது என்று சென்னைக் கூட்டத்தில் ஒரு அறிவுறுத்தல்.

1954—மார்ச். பிரெஞ்சிந்திய நிர்வாக சபை உறுப்பினர் [illegible] நெட்டப்பாக்கம், மதுக்கரையை விடுவித்தனர்.

மே—பிரெஞ்சிந்திய விடுதலை அரசியல் [illegible] - மாஹி விடுதலை.

ஜூன்—பாரிஸில் இந்திய - பிரெஞ்சுப் பேச்சு முறிவு - ஏனாம் விடுதலை.

அக்டோபர்—இணைப்புக் குறித்து இந்திய - பிரெஞ்சுக் கூட்டு அறிக்கை (13-ஆம் நாள்) - இந்தியாவுடன் இணைப்பதை பிரதிநிதி சபை உறுப்பினர்கள் முடிவு (18-ஆம் நாள்) தில்லியில் இந்திய - பிரெஞ்சு ஒப்பந்தம் கையெழுத்தாகியது (21-ஆம் நாள்) பிரெஞ்சு இந்தியா, இந்தியக்குடியரசோடு ஒன்றாக இணைந்தது (நவம்பர் 1-ஆம் நாள்).

செய்திகளும், குறிப்புகளும்

(௧) இந்திய அமைச்சர் நேரு சீனநாட்டு செலவு:

குடியரசுத் தலைவர் திரு. [illegible] அவர்களின் அனுமதியின் பேரில், நம் இந்திய நாட்டு அமைச்சர் திரு. பண்டித ஜவகர்லால் நேரு, 17-10-54-ஆம் நாள் காலை 7-12 மணிக்குத் தில்லி, பாலம் விமான நிலையத்திலிருந்து [illegible] 'டகோடா' என்ற விமானத்தில் [illegible] சென்றார். அவருடன் அவர் புதல்வி திருமதி இந்திரா காந்தியும், வெளிநாட்டு அமைச்சர் அலுவலகச் செயலாளர், திரு. என். ஆர். பிள்ளையும் சென்றனர்.

18-10-54 ஆம் நாள் காலையில் சீன [illegible] போய்ச் சேர்ந்தனர். அங்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி, திரு. நேருவை மிக்க அன்புடன் வரவேற்றனர். [illegible]

அங்குச் சீனநாட்டுக் குடியரசுத் தலைவர் [illegible] 2-11-54-ஆம் நாள் பிற்பகல் 3-10 மணிக்கு [illegible] விமான நிலையத்தில் வந்து சேர்ந்தனர்.

குறிப்பு: நேரு, [illegible] இந்திய, சீன உறவு நன்கு [illegible]?

கு. தி.

மதிப்புரை

['ஸ்ரீ குணரத்நகோசம்' ஸுவர்ண குஞ்சிகா என்ற விரிவுரையுடன் கூடியது. பக்கம் 344; விலை ரூ. 2—8—0 ஆசிரியர் திருமலை நல்லான் அவர்கள். கிடைக்குமிடம்: நம் கழகத்திலும், 29 பெருமாள் முதலித்தெரு, சௌகார் பேட்டை, சென்னை - 1. இலுமாம்.]

இந்நூல் திரு. பராசரபட்டர் அருளியது. இதற்குப் பொற்றிறவுகோல்-சுவர்ண குஞ்சிகா என்னும் விரிவுரை இது. திருமலை நல்லான் என்னும் செஞ்சொற் புலவரால் யாக்கப்பெற்றது. நூல் அறுபத்தொரு வடமொழிச் சுலோகங்களைக் கொண்டதாகத் தெரிகிறது. நூல் நுதலும் பொருள் பிராட்டியின் பெருமையாகும். நூலாசிரியர், பிராட்டி இறைவினினும் சிறந்தவர் என இசைக்கின்றனர். அதற்குரிய அரிய பெரிய காரணங்களையும் அமைவுற அறைகின்றனர்.

இந்நூல் உரை எளிமையும் இனிமையும், திட்பநுட்பமும் செறிந்தது. தக்க தமிழ்நடை வாய்ந்தது. விளக்கமிக்கது. உரையை மட்டும் கற்பினும் அஃதோர் உரைமணித் தனிநூல் போன்று விளங்கும் சால்பமைந்தது. உரையாசிரியர் பாவன்மை, நாவன்மை, பன்மொழிப்புலமை, பண்புடைமை வாய்ந்த மிக்காராவர். செந்நெறி பேணும் சீரியர். புலமையாற்றல், நூலுரை காணும் நிலைமையால் விளங்குவதொன்று. அத்தகைய ஆற்றலை இவ்வுரையாசிரியர் இயல்பாகவே பெற்றுள்ளனர். இப்பெருந்தகையார் தம் இளமைப்பருவத்தே தென்தமிழ் நன்மையும், வடமொழி மேன்மையும், பாவன்மையும் பயனுறக்கொண்டவர்.

நூலாசிரியர் கருத்தறிந்து உரை வகுப்பது ஓர் அருமையாகும். அதன் மேலும் அயன்மொழிக்கண் உரை வகுப்பது மிகவும் அருமையாம்; அவ்வுரைக் கருத்தமையப் பாட்டமைப்பது அருமையினும் அருமை என்பது யாவர்க்கும் ஒத்ததொன்றே. பாட்டும் யாப்பழகோடு பொருட்செறிவும் உள்ளது. அப்பாக்கள் கற்பார் உள்ளத்தைக் கனிவிக்கும் காட்சிய. அவையே தனி நூலாகச் சிறக்கும் தன்மைய. பாட்டுக்களும் அறுபத்தொன்றாகும்; அவற்றுள் ஒன்று:

"அன்னய்சீர் மைதிலியே அரக்கியர்கள் அன்றைக்கும் பைங்குற்றம்
புரியா நிற்ப
அன்னாரை அளித்தநுமன் அழியாவண்ணம் அழித்தனையால்
இராமனது குழுவின் மேன்மை
தந்நாவிற் சரணமெனத் தகுதிவாய்ந்த தசமுகனின் தம்பியொடு
காகங் காத்த
தென்னுவது? இருங்குற்ற மிழைக்கின்றோமுக் கின்பமுன
தியல்பான பொறுமை நல்க."

இந்நூலைப் பொதுவாகச் செந்தமிழ் அன்பர்களும் சிறப்பாகத் திருமால் நெறியினரும் வாங்கியும் வாங்குவித்தும் பொருளுணரக்கற்று அருளும் இன்பும் எய்துவார்களாக. அதன் வழியாக ஆசிரியரவர்களை இதுபோன்ற அரும்பெருந்தொண்டுகளில் மக்கள் ஊக்குவார்களாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.




கல்கி. ரா. கிருஷ்ணமூர்த்தி

தோற்றம்: 9—9—1899


மறைவு: 5—12—1954



தருமபுர ஆதீனத்தார் அளித்த பொன்னாடையை
முதலமைச்சர் திரு. காமராசர்
திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்க்குப் போர்த்துதல்



திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்க்கு
திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் பரிசு வழங்குதல்



பன்மொழிப் புலவர்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்



சிலம்பு ௨௯	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, கார்த்திகை திசம்பர், 1954.	பரல் ௪

ஓம்

மீனாட்சிசுந்தரனார் வெள்ளிவிழா மாண்பு

பிறப்பு

இமிழ்திரைவரைப்பில் தமிழ்க்கோநகராய்த் திகழும் தகைசால் சென்னையம்பதியில் சிந்தாதிரிப்பேட்டை என்னும் திருமலிவூரின்கண் தெய்வ அருளால் சீர்சால் விழுக்குடியில் தோன்றிய செம்மல் நம் மீனாட்சிசுந்தரனாரவர்கள் ஆவர். இவர்கள் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் தமிழ்மொழிப் பயிற்சியே தரவல்லது என்னும் தனிநோக்கு உடையவர்கள். இவர்கள் தந்தையார் பொன்னுசாமிப் பிள்ளை என்ப, இவர்தம் தாயார் திருப்பெயர் உருக்குமணி அம்மையார் என்ப. இவர்தம் தமிழாசிரியர் வேதாந்த வித்தகர், திரு. கோ. வடிவேலுச் செட்டியார் அவர்கள்.

கல்வி

எழுமையும் ஏமாப்பு அளிப்பதாகிய விழுமிய கல்வியை விழைவுடன் கற்று விழுத்தவர் நம் மீனாட்சிசுந்தரனார். புலனடக்கம் வாய்ந்தவரே புலவரெனத்தக்கார் என்னும் மூதுரைக்கு மெய்யான எடுத்துக்காட்டு நம் சுந்தரனாரே ஆவர்; இவர்கள் இளமைமுதற்கொண்டே கல்வியை நன்கு கற்றுவந்துள்ளனர். தமிழில் புலவர் மேனிலைப் பட்டமாகிய எம். ஓ. எல். பட்டமும், அதனையொத்தே ஆங்கிலத்தில் எம். ஏ. பட்டமும் கட்டிளமைக்காலத்தே எய்தியுள்ளனர். பின்னர், வழக்கறி வல்லுநர், சழக்ககற்று வழக்குரை மன்றுடி என்னும் மாண்பமை பட்டமாம் பி. எல். பட்டமும் பெற்றுள்ளனர்.

...ய ஆட்சியைப் பெரும்பாலும் மாட்சிப்படுத் வேண்டிய இடித்துரை ஏமவல்லார் இவ்வழக்கறிஞர்களேயாவ இவர்கள் இன்றேல் பிறழ்வதுமன்றோ பேரியல் உலகு என்னு பெற்றியைப்பெற்று ஆட்சி சீர்குலைந்து அல்லல் உறுத்து என்பது ஐயமின்றித் துணிந்துகொள்ளச் செய்திடாரும்.

தமிழ் ஆங்கிலத் தனிப்புலமை போன்று வேதாந் சித்தாந்த தத்துவங்களிலும் தலைமைசான்ற மெய்ப்புலவ ஆவர். மேலும் அயன்மொழித் துறைகளிலும் மயலறக்கற் வல்ல மாண்பினர். அம் மொழிகள் பலவற்றுள்ளும் சிறந் சிலவற்றைக் கிளந்தெடுத்துக் கூறுவாம். ஆரிய மொழியும் கேரள மொழியும், கிரேக்க மொழியும், பிரெஞ்சு மொழியும் செர்மன் மொழியும் என்னும் சிறப்புடை மொழிகளாகும்.

பன்மொழிப் புலமை

மேற்கூறிப் போந்த பல்வேறு மொழிகளைக் கசடறப் பயின்று பன்மொழிப்புலவர் என்னும் பாங்கார் பட்டமுப் தாங்கினார். பட்டம்பெறுதல் யார்க்கும் எளிய. பெற்றவாபெற் பயனது பிறர்க்கு ஆர்த்துதல் மிகவும் அரிய என்பது பேரு கறிந்த உண்மை. நம் சுந்தரனார்க்கு அதுவும் எளியவாவது தமிழ் அன்னையின் ஆருளேயாகும். அவ்வம் மொழியாளரும் இறும்பூது எய்தும்படி கட்டுரை எழுதியும், காவியச்சுவை காட்டியும், நாடக நுண்மை நன்கெடுத்தியம்பியும், பொருள் நூல் மெய்ம்மைகள் பொருவறப் புகன்றும், நாவான்மையும் பாவான்மையும் நலமுற நல்கியும், பேரவைத்தலைமையும் பெரும் பேச்சு நிலைமையும் பிறங்க உணர்த்தியும், பெருமக்களும் பெரும் புலவர்களும் ஒருங்குணரும் வழியாய் உளங்கொளப் புகன்றும், நூல்பல யாத்தும், நுண்ணறிவினரும் வியப்புற மாணவ மாணவியர் பல்லோர்க்குப் பல்லாண்டுகளாகப் பல்வேறிடங் பகலும் இரவும் ஓவாது பாடங்கள் போதித்தும் வரு கின்றமை உலகறிந்தசெய்தொன்றே.

தொண்டு

சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியை அந்நிலைக்கு உயர்த்திய ஒருபெரும் தொண்டு நம் சுந்தரனார் தொண்டாகும். இற்றைக்கு இருபத்தாறு யாண்டுகளுக்குமுன் இப் பள்ளி ஒரு சில மாணவர்களைக்கொண்ட ஓலைக்குடிலாக இருந்தது. அக் காலை யாரும் கனவுகூடக் கண்டிரார் இப்பொழுதுள்ள நிலை மையை இப்பள்ளி எய்துமென. நம் சுந்தரனார் இப்பள்ளியின் முன்னேற்றக் குழுவின் செயலாளராய் அமைந்தனர். 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி' அஃது நல்லவாதல் ...

யன்றோ! அம்முறையில் விடாதுழைத்தனர். உழைப்பே உண்மை இன்பமென உணரும் ஒருவர் நம் சுந்தரனார். அதனால்
[illegible]
வெண்பொன்னுக்கும் மிகுதியாக மதிப்பிடக்கூடிய வானளாவிய மூன்றடுக்கு மாளிகையாகத் திகழ்கின்றது இஃது.

> "அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
> பெருமை முயற்சி தரும்." (குறள்: சுகக)

என்னும் செந்தமிழ்ப் பொதுமறையின் சீரிய எடுத்துக்காட்டிலக்கியமாகும். இம்மட்டோ, மாண்புறு மகளிரும் கற்றாலன்றி வாழ்க்கை செம்மையுறாதென்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்ததொன்று, அக்குறிக்கோளையும் உளங்கொண்டு அவர்கட்கும் ஆவன அமைத்து நிகழ்த்திவருகின்றனர். இங்ஙனம் இப்பெருந்தகையார் பேரூக்கங்கொண்டு இயைந்தியக்கிவரும் கல்லூரிகள் ஆறெனத் தெரிகின்றன. இவற்றில் கற்கும் மாணவ மாணவியர் தொகை எண்ணாயிரத்திற்கு மேலென்ப. அவை முறையே: சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை ஆரம்பப் பாடசாலை, ராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டியார் பெண்பாடசாலை, சிந்தாதிரிப்பேட்டை பிரைமரிப் பாடசாலை, மாண்டிசோரி பாடசாலை, வள்ளல், C. கலியாணசுந்தரம் செட்டியார் வழங்கிய ரூபா. முப்பத்தையாயிரத்தால் 'கலியாணம்' உயர்நிலைப் பெண்பள்ளி என்பன. இவர்தம் தாளாண்மைமிக்க வேளாண்மையால் தமிழ்ப்பெரும் புலவராய், பெரும் பேராசிரியராய், பாவலராய், நாவலராய், காண்பார் அனைவர்களும் செந்தமிழ்க் கற்கவேண்டுமென்னும் செவ்வியுளம் மலரச்செய்யும் சிறப்பினராய், விழுமிய ஒழுக்கமிக்கராய் ஆண்டாண்டு விளங்கும் ஆன்றோரும் பலராவர். நம் சுந்தரனார் பயன்தர நடமாடும் பல்கலைக்கழகமும், நயன்தர நடமாடும் நற்சுவடி நிலையமும் ஆவர் என்றொருவாறு அறைகுவதன்றி, யாவரே முற்றும் அறைந்திடும் நீரார் என உலகுதொழ நிற்கும் நீர்மையார்.

பணி

அண்ணாமலை நகர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து ஆன்றோர் விருப்பினை அகற்றற்கியலாது தமிழ்த்துறைத் தலைவராய் அரும்பணி புரிந்தனர். அக்காலைச் செய்த தமிழ்த் தொண்டு இன்றும் அமிழ்தாய் நின்று நிலவுகின்றது. அவர்கள் ஆண்டே உறையின் சென்னைமாநகர்ச் சீரிய தொண்டுகள் சிறப்பதெங்ஙனம்? மீண்டும் சென்னை போந்து தொன்மைத் திருத்தொண்டியற்றி வருகின்றனர். இந்நிலையில் 'சென்னை மாநிலக் கல்

லூரியின் தமிழ்ப் பேராசிரியராய்த்' தொண்டு புரிந்து வருகின்றனர்.

அணி

சைவத் திருமரபு தழைக்கவரு திருமடங்களுள் ஒன்றாகிய திருத் தருமபுர ஆதீனத் தலைமைத் தம்பிரான் அடிகளார் அவர் தம் கொலு மன்றத்து நம் சுந்தரனார் அவர்களை வரவழைத் தருளி நனிமிகப் பாராட்டிப் பொன்னாடை போர்த்துப் புகழணி சூட்டியருளினர். இது போலவே திருக்குன்றக்குடி ஆதீனத் தம்பிரான் அடிகளாரும் தம் மன்றத்துப் பொன்னாடையும் புகழணியும் அருளிப் பாராட்டினர். இத்தகைய பாராட்டுக்கள் நம் சுந்தரனார்க்கு எய்தியன எண்ணிறந்தன.

பாராட்டு

நம் சுந்தரனார் கல்விக்குக் கண்ணும் கருத்துமாய் இருபத் தைந்தாண்டு உழைத்தமையைப் பாராட்டி வெள்ளிவிழாக் கொண்டாட்டம் மிக்க சிறப்பாக 4—12—1954-இல் நிகழ் தது. இவ் விழாச் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியி துவங்கிற்று. ஆசிரியர், மாணவர், புலவர், பெருமக்கள் அளவின் றிக் குழுமினர். முதலமைச்சர், திரு. காமராசரவர்கள் பேரமை தலைமை பூண்டார்கள், கல்வியமைச்சர் திரு சி. சுப்பிரமணியப் அவர்கள் சுந்தரனார் உருவச் சிலையைத் திறந்து வைத்தார்கள் திருவாளர் துரை அரங்கனார் அவர்கள், பேராசிரியர் சொல்லின் செல்வர் ஆர். பி. சேதுப்பிள்ளையவர்கள் பாராட்டிப் பயனுை பகர்ந்தனர். சேதுப்பிள்ளையவர்கள் வெள்ளிவிழாக் குழுவின சுந்தரனார் நூல்களுள் சிலவற்றைத் தொகுத்து நான்கு நூல் ளாக வெளியிட்டுள்ளனர். அந் நூல்கள் சுந்தரனார் அறிவு திருமேனியாகும். அதனைத் திறந்து வைத்துப் பாராட்டின சொல்லின் செல்வர். அப் புத்தகங்கள் வருமாறு. "நாடு காமமும், நீங்களும் சுவையுங்கள், நற்றிணை நாடகங்கள், தமிழ நினைத்துப் பார்" என்பனவாகும்.

தருமபுர ஆதீனத் தலைவர் சார்பில் சிவத்திரு, சோமசுந் ரத்தம்பிரான் அடிகள் பொன்னாடை போர்த்திப் புகழ்ந் வாழ்த்தினர். விழாக் குழுவினர் நம் சுந்தரனார் திருப் பெ ரால் அமைக்க இருக்கும் அரும்பணிகள் : கட்டுரைகளை தொகுத்து நூல்களாக வெளியிடுவது. அவர் தம் உருவ சிலையை நாட்டுவது, அவர் திருப் பெயரால் ஏழை மாண மாணவியர்க்கு உதவிச் சம்பளம் உவந்தளிப்பது, பெண் பா சாலையில் சுந்தரனார் வெள்ளிவிழா மண்டபம் அமைப்ப முதலியன.

பல்வேறு கல்லூரிகள், மன்றங்கள், கழகங்கள், தக்கார், திலாச் செல்வர், சான்றோர், மாணவர், பெருமக்கள் ாயினவர்களால் படித்தளித்த வாழ்த்து மலர்களும், மலர் களும் பிறவும் அளப்பில. சுந்தரனார் செவ்விய இனிய நடையில் தக்கவாறு விடையிறுத்தார்கள். எல்லாம் வக் குழந்தைகளுடன் மருவி வாழ்ந்த வாழ்க்கையின் பேறே என்னை இந்நிலைக்கு ஆளாக்கியது. குழந்தை ம் யாவர்களையும் குழைவிக்கும் என்பது மெய்ம்மையாம் வா! என்று மொழிந்தனர்.

ரு

என்றுமுள தென் தமிழைக் கற்றுவல்ல ஏருடையார் கத்தின் அணியாம் எளிய வாழ்க்கை வாழ்வதே அவர்தம் . அத்தகைய வாழ்க்கையை வாழ்ந்து காட்டுகின்றனர் ந்தரனார். நாவலந் தீவாம் நாட்டுப் போரில் காந்தியடிக் கொள்கையைப் பின்பற்றி விழுச் சிறை சென்று மீண்ட நாட்டு நலமலாமல் தனக்கென எந்நலமும் வேண்டா தவர். இதுவே தமிழர்தம் தகைசால் மறமாண்பு.

> "நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்
> வகையென்ப வாய்மைக் குடிக்கு" —திருக்குறள்: சுகூ

ம் நாயனார் நற்றமிழ் மறையின் பண்பாட்டுருவே நம் னார்.

டுகோள்

றப்பிலும் செம்பொருளின் திருவருளால் நம் சுந்தரனார் மி பயனுற வாழ்ந்து பணி பல புரிவாராக. வட நாட்டுத் வக் கொள்கை விவேகானந்த அடிகளால் மேலைநாட்டில் வீறுபெற்று விளங்குவதுபோல் தென்றமிழ் நாட்டு கொள்கையாம் சித்தாந்த சைவம் மேலைநாட்டிலும் ங்கனும் நம் சுந்தரனாரால் வீறுபெற்று விளங்கி விழுப்ப எல்லாம்வல்ல இறைவன் நல்லருள் புரிவானாக. ஆதின ர்களும், அரும்பெரும் செல்வர்களும், ஆட்சி அறவோர் பெருமக்களும் அவர்கட்கு வேண்டுவன புரிந்து துணை ார்களாக. மீனாட்சி சுந்தரனார் மெய்த்தொண்டு வாழ்க, ம் பொன்விழா, மணிவிழா, வயிரவிழாப் பெற்றும் ந்து வாழ்க, வாழ்க.

வாழ்க நற்றமிழ்! வாழ்க சுந்தரனார்!

கல்கியின் மறைவு

வரலாறு

'கல்கி' ஆசிரியர் திரு. ரா. கிருட்டின மூர்த்தியவர்கள் மாயூரத்தின் அண்மையிலுள்ள புத்தமங்கலத்தில் 1899 ஆம் ஆண்டு புகழுடன் பிறந்தார். மாயூரம் நகராண்மைப் பள்ளியில் கல்வி பயின்றார். திருச்சிராப்பள்ளியில் கல்லூரிப் படிப்புக் கற்றார். இடைநிலை என்னும் இண்டர் மீடியட்வரை பயின்றார். 1921 இல் ஒத்துழையா இயக்கத்திற் கலந்து கல்லூரிப் படிப்பைக் கைவிட்டனர். ராஜாஜி, திரு. இராமசாமி நாயக்கர் இவர்களின் தலைமையில் காங்கிரசுக் காரியாலயத்தில் பணிபுரிந்தனர். திரு. வி. க. அவர்கள் நடத்திவந்த 'நவசக்தி'யில் இதழாசிரியராய்ப் பணிபுரிந்தனர். ராஜாஜி அவர்களால் துவங்கப் பெற்ற திருச்செங்கோடு ஆசிரமத்தில் நாட்டுப்பணி புரிந்தனர். அங்கே ஆறு ஆண்டுகள் அரும்பணி புரிந்தனர். கட்குடி ஒழிப்பின் பொருட்டுத் துவங்கிய 'விமோசனம்' என்னும் வெளியீட்டுக்கு ஓராண்டு ஆசிரியராகப் பணிபுரிந்தனர். அத்துடன் சென்னை 'ஆனந்த விகடனு'க்குக் கதை கட்டுரைகள் எழுதிவந்தனர்.

பணி

பின்பு 'ஆனந்த விகடன்' ஆசிரியராக அமர்ந்து நிரம்ப வேலை செய்தனர். அருந்தமிழுக்கு அரிய பணிசெய்யும் உரிய செவ்வியுமாக இஃதமைந்தது. காலப்போக்குக்குத் தக்கவாறு எளிமையும், இனிமையும், நகைச்சுவையும், நாடக அமைவும், உரையாட்டொண்மையும் பிறவும் பொதுள முழுமுயற்சியுடன் பணியாற்றினர். ஆங்கிலமும் தமிழும் கலந்து அயன்மொழி மயல்கொண்ட மயிலாப்பூர் அறிஞரானோரும் வியப்புற கலவாத் தமிழின் கட்டுரைகளும் பிறவும் ஆக்கினர். அவர்களும் மயல கன்று தமிழின் செயல் புகன்று கைக்கொள்வாராயினர். ஆங்கிலத்திலே படித்தவர் தமிழிலும் படித்து அகமகிழ ஆக்கிய ஆற்றல் வாய்ந்தவர் நம் கல்கியார். இஃதொன்றே அவர்தம் அருந்தமிழ்த் தொண்டினுக்குப் பெரும் எடுத்துக்காட்டாகும்.

உரிமை

"கல்கி" என்னும் உரிய வெளியீட்டினை 1941-இல் தொடங்கினர். தொடக்கத்தில் திங்களுக்கு இருமுறையாக வெளிவந்தது. பின்னர் மும்முறையாகவந்துளது. இப்பொழுது கிழமை வெளியீடாகத் திகழ்கின்றது.

நாட்டுப்பற்று மிக்கவர் நற்றமிழ்ப்பற்று அற்றவராய் மொழிப்பற்று வேறு நாட்டுப்பற்று வேறு என நவிலுவதும் செய்வர். அக்குறையினை நீக்கி இரண்டையும் இருகண்போல் இயைத்து ஒழுகிக் காட்டியவர் நம் கல்கியாரே யாவர். நாட்டுப் பற்று உடலாகவும், மொழிப்பற்று உயிராகவும் உடங்கியைந்து நடைமுறைக்குக் கொண்டு வருவதாலேயேதான் உண்மை நலம் எய்தி எல்லாரும் இன்புறுதல் கூடும் என்னும் வாய்மைகண் டொழுகியவர் நம் கல்கியாராவர். தாய்மொழியின்கண் தனிப் பற்றில்லாதவர் பிறமொழியாளரால் நன்கு மதிக்கப் பெறார் என்பது நானிலமறிந்த மேனிலை உண்மை. அவ்வுண்மையினை நாட்டுக்குணர்த்தி விழிப்புண்டாக்கியவர் நம் கல்கியார். புனை கதை புனைவாரும், கற்பனை நாடகம் அமைப்பாரும் அவ்வவற்றிற் குரிய உறுப்பினர்தம் பண்புகளை இழிவுபடுத்தாது இயல்பமை விழுமிதாக்கி வெளிப்படுத்துவதே வேண்டத் தக்கது. அவ்வுண் மையுணர்ந்து கையாண்டு காட்டியவர் நம் கல்கியாராவர். இவை போன்று நுனித்தறிந்து நுவன்று மகிழ்விப்பதே கல்கியாரின் பெருந்திறலாகும்.

'பாரதியார்' புகழ் நிறுவும் பணியில் சார்ந்து பொருள் திரட்டி அன்னார் பிறப்பகமாம் எட்டயபுரத்தில் மண்டபம் அமைத்தனர். அவர் தம் குடும்பத்தார்க்கும் உதவி அளித் தனர். பல இலக்கிய இயக்கங்களிலும் பங்கெடுத்துப் பணியாற் றினர். கம்பர் கழகத்தின் தலைவராய்த் தக்கன புரிந்தனர். அண்ணாமலை நகரில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டில் தமிழ் இலக்கிய முதல்வர்களை அழைத்துச் சென்று தமிழின் பெரு மையை வடநாட்டினரும் உணரும்படி செய்தனர் என்ப. சென் னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகக் கடந்த நான்கு ஆண்டுகளாக நற்பணி புரிந்துவந்தனர். காந்தியடிகளின் நினைவு அமைப்பில் பல பெரியார்களையும் இணைத்து உருப்பெறச் செய்து விளங்கினார். கப்பலோட்டி சிதம்பரனார் கல்லூரியின் தோற்றத்தில் இவர் தம் முயற்சியுமுண்டு. திரு. வி. க. நினைவு அமைப்பிலும் பெரும்பங்கெடுத்துக்கொண்டார். ராஜாஜியின் வலதுகைபோன்று விளங்கி வந்தார். 1927, 1930, 1940 ஆகிய ஆண்டுகள் நிகழ்ந்த காங்கிரசு இயக்கத்தில் கலந்து கொண்ட னர். அதன் பயனாகச் சிறைசென்று வந்தனர்.

எழுதிய நூல்கள்

கள்வனின் காதலி, சாரதையின் தந்திரம், மோகினித்தீவு, பார்த்திபன் கனவு, சோலைமலை இளவரசி, சிவகாமியின் சபதம்,

மகுடமதி, அலையோசை முதலியன. தன் முயற்சியால் முன்னுக்கு வந்து பொன்னும் பொருளும் புகழும் பெற்று மிக்கு விளங்கிய சிலவருள் இவரும் ஒருவராவர். ஏனைத் தாளாண்மையாளர்கள் உலையாமுயற்சி மேற்கொள்ள முன்னிலைப் படிமமும் இவரேயாவர்.

பேரா இயற்கை

சில திங்கள்களாக நோய்வாய்ப்பட்டிருந்தனர். சென்னை முதன்மை மருத்துவமனையில் தங்கி மருந்துண்டு நலமெய்தினர். மூன்று கிழமைக்கு முன்புதான் காந்தி நகரின்கணுள்ள தம் இல்லம் வந்துற்றனர். 5. 12. 1954, வைகல் மணி4-45-க்குத் திடீரென ஆவிநீத்தனர். எல்லோரையும் அவர் பிரிவு ஆற்றொணாத் துயரில் ஆழ்த்தியது. அவர்தம் இறுதிச்சடங்கு முறையாக நிகழ்ந்தது. பிரிவு குறித்து வருந்திப் பலரும் பேசினர். ராஜாஜியவர்கள் பிரிவுத் துன்பத்தால் பேசவொண்ணாத தன் நிலைமையை எழுதிக் காட்டினர். சென்னை ஆட்சி முதல்வர் சார்பாக அவர் தம் மெய்காப்பாளர் மாலைபோட்டு மதிப்பளித்தனர். வந்து பேசிப் பரிவுணர்த்திய பெருமக்களிற் சிலர் வருமாறு:

நாவலர்கள் பக்தவத்சலம், பரமேசுவரன், ஜே. சிவசண்முகம் பிள்ளை, எஸ். எஸ். வாசன், டி. கே. சண்முகம், ம. பொ. சிவஞான கிராமணியார், முசிறி சுப்பிரமணிய ஐயர், எம். ஆர். வேங்கடராமன், பி. இராமமூர்த்தி, சதாசிவன், புத்தனேரி சுப்பிரமணியம், என். சஞ்சீவி, வி. பி. கோதண்டராமன், திருமதி. எம். எஸ். சுப்புலட்சுமி முதலியோர்களும் பல எழுத்தாளர்களும் ஆவர். இவர்க்கு அகவை ஐம்பத்தைந்து, இத்தக்கார்க்கு அரும்பெறல் தாயரும், அகமுறு மனைவியும், ஒருமகனும், ஒருமகளும் உளர். இவர் தம் ஆவி இறையடி நீழலில் முறையுறும் இன்பு எய்துவதாக. அவர் தம் குடும்பத்தார்க்கு எம் பரிவும் ஆறுதலும் உரியவாகுக.

மரமனிதன்

[வித்துவான், திரு. செந்துறை முத்து]

இத்தலைப்பை நோக்குங்கால் இரும்பு மனிதனைப் போன்ற தொரு "மரமனிதனோ" என்று ஐயுறல்கூடும். அற்றன்று. இரும்பு மனிதன் செயற்கையின்பாற்பட்டவன். மரமனிதன் இயற்கையின்பாற்பட்டவன். இயற்கையின் செயலுக்கு இலக்காகி இம் மண்ணில் தோன்றிய மனிதனை மரத்தின் உவமையைக் கொண்டு கூறப்படுவது. மரத்தை உவமையாகக் கூறுவதின் மூலம் அம் மனிதனை மரமென்றே நிலைநிறுத்துவது. ஆறறிவு பெற்ற மனிதனாயிற்றே, அவனை அங்ஙனம் கூறலாமா? அங்ஙனம் கூறப்படும் மனிதன் எவன்? என்றெல்லாம் வினவின் அவ்வினாக்களுக்கு ஏற்புடைய அழகான மாற்றங்கள் தென்படுகின்றன. இதை மாண்புடைய மக்கட்பிறவி எடுத்த ஒவ்வொருவனும் தன் அனுபவத்தின் வாயிலாகவும், அன்றாடநிகழ்ச்சியின் வாயிலாகவும் அறிதல் கூடும். எனினும் ஒருவாறு அம் மர மனிதர்களின் இயல்புகளையும், அவர்களிடம் பண்புடைய மக்கள் நடந்துகொள்ள வேண்டிய நெறிமுறையையும் விளக்க முயலுவாம்.

அளவற்ற கேள்வியறிவு உடையவராக இருப்பினும், கல்வியின் நல்லிடமாகத் திகழினும், பொன், மணி முதலான பொருள்கள் பெற்றிருப்பினும், பணியாற்றும் பணியாளர் பலர் இருப்பினும், அறிவில் சிறந்து அறிஞராக இருப்பினும், பெருமையளிக்கும் நெறிகள் பல இருப்பினும் பெருவுயர்வளிக்கும் உயிர்ப்பொருளான நற்பண்பு (மக்கட் பண்பு) இல்லாவிடின் மேற்கூறிய தகுதிகள் அனைத்தையும் அகற்றி அம் மனிதரை 'மரம்' என்று அழைக்க அஞ்சவேண்டாம் என்பது தான் செந்நாப்போதாரின் செம்மையான கருத்து.

மானிடப் பிறவி சிறப்புடைத்தென்பது மெய்தான். மறுக்க இயலாது. காரணம், மற்றெவ்வுயிருக்கும் அமையாத மனவுணர்வெனப்படுகின்ற ஆறாவது அறிவாகிய பகுத்தறிவுப் பண்பு என்பது ஒன்றிருப்பதேயாகும். ஏனைய உயிர்களுக்கு இவ்வறிவின்று; ஆயின் அவ்வுயிர்களுக்கும் இயற்கையால் அருளப்பட்ட புலமையுண்டு. அவற்றில் பாகுபாடுமுண்டு. அஃதாவது ஓரறிவுயிர், ஈறறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் என்பவையாகும். இவற்றில் ஓரறிவுடையதுதான் மரம்

என்பது. அவ்வோரறிவு யாதெனின் மரத்தைப் பொருள் தீண்டும்பொழுது அல்லது துண்டிக்கும்பொழுது அதனிடத்தில் ஒருவகையான மாற்றத்தைக் காணுகின்றோமே அதுவேயாகும். இஃதொன்றைத் தவிர ஏனைய மெய், வாய், கண் மூக்கு, செவி என இவற்றால் நுகரப்படும் அறிவு அதற்கின்று. இவ் வாறறிவும் நிரம்பப் பெற்றவன்தான் மனிதன்.

இங்ஙனம் அறிவினாலும் உருவினாலும் ஒட்டாத நிலையில் நெடிதுநிற்கும் இவ்விரு உயிரையும் ஒன்றுபடுத்திக் கூறத்தக்க ஒப்புமை யாது? ஈண்டு அவ்வொப்புமைக் கருத்தாகிய நுண்மைக் கருத்துத் திண்மைபெறுகின்றது. மனிதனுக்கமைய வேண்டிய நற்பண்பு அமையப்பெறாத மனிதனை இழிநிலையுடைய மரத்துடன் சேர்த்துவிடுகின்றார் குறளாசிரியர், அங்ஙனம் கூறுகின்றாரெனில் மனிதப் பண்பற்ற மகனைக் குறித்து வள்ளுவரின் உள்ளத்தன்மையை உய்த்துணரக்கூடுமன்றோ?

> "அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண்பு இல்லா தவர்."

வள்ளுவரின் சொல் ஒவ்வொன்றும் பொருட்செறிவு மிக்கது என்பது பலருக்கும் புலப்பட்டதே. இக் குறட்பாவின் கண் அரத்தைப் போன்ற கூர்மைபடைத்த புலமையுடையவரேனும் மனிதனுக்கு அமையவேண்டிய மக்கட்பண்பு இல்லாவிடின் அம் மகன் மரத்தைப் போன்றவன் என்று சுருக்கமாகக் கூறுகின்றார். இனி ஓரளவு இச் சுருக்கத்தின் பெருக்கத்தை

"அரம்" என்பது திண்மையும் கூர்மையும் உடையது என்பது யாவருக்கும் தெளிவு. அது தன்னுடைய கூர்மையினால் ஏனைய உலோகப் பொருள்களைத் துண்டிக்கும் ஆற்றல் பெற்றது. தன்னைப்போன்று அவற்றைக் கூர்மைப்படுத்தும் தன்மைபெற்றது. அதே தருணத்தில் தனக்குக் கேடின்றித் தன்னைப் பாதுகாக்கும் பண்புடையது என்று அரத்தின் இயல்பை அறிவுறுத்துகின்றார்.

"அரம்போலும் கூர்மையர்" என்கின்றார். "கூர்மையர்" என்றுணர்த்துவது மதிநுட்பமிக்க மனிதனையேயாகும். கூர்மையான புலமைமிக்க மக்கள், பலராலும் பன்னெடு நாட்களாகக் காணவொண்ணா அரிய உண்மையைக் கண்டுணர்த்துவரன்றோ! அவர்களின் கூர்மைப் புலமை கதிரவன் ஒளியினும் ஊடுருவிச் செல்லுமன்றோ! எனவேதான் அவர்களைக் கூர்மையர் என்றார். இப்புலமைமிக்க மக்களுக்கு ஓர் உவமைகூற விழைந்தார். கூர்மைமிக்க அரத்தையே உவமையாக உரைத்துவிட்டார்.

இப் புலமைமிக்க பெருமக்களை மிகக் குறைந்த அறிவுடைய மரத்துடன் சேர்த்துக் கூறுகின்றாரே என்று உன்னும்பொழுது தான் வியப்புத் தோன்றும்; ஆயின் வள்ளுவரின் உள்ளக் கிடக்கை முழுவதும் உணருமிடத்து அவ்வியப்பு விடைபெறும்.

ஒவ்வொரு உயிருக்கும் இயற்கையளித்த பண்புண்டு. அவ்வவ்வுயிரும் தத்தமக்குரிய பண்பிற் றவறும்பொழுது பிற உயிரால் இழித்துரைக்கப் படுகின்றது. மனிதனுக்கென் றமைந்த மக்கட் பண்பிற் றவறிப் பண்பாட்டிற் கொவ்வாத நிலையில் ஒழுகும்போது 'ஏ....கழுதை' 'ஏ....மாடு' 'ஏ....மரக்கட்டை' என்று விளிக்கப்படுதலைக் காணுகின்றோம். கூர்மையான அறிவுபெற்ற பெருமகனும் பண்பிற் றவறி ஒழுகுபவரை வள்ளுவர் கண்டு உள்ளம் நொந்தார். எனவேதான் அழுத்தந்திருத்தமாக எவராலும் அகற்ற முடியாத நிலையில், அடித்துக் கூறுவது போல் "கூர்மையரேனும் மரம்போல்வர்" என்று கூறினார்.

"மரம்" என்று உரைத்தது, மரம் தன்னிடத்தில் மேல் நோக்கியுள்ள, பலரும் விரும்பும் நிலையுள்ள பல உறுப்புகளாகிய கொம்பு, இலை, பூ, காய் என இவையிருக்க, இவற்றினை் தனக்குத் தேவைப்படும் வளத்தைத் தேடிக்கொள்ளாது இற்றையொழித்து, கீழ்நோக்கியுள்ள, பலரும் விரும்பமுடியாத நிலையுள்ள மண்ணில் மறைந்திருக்கும் தன் வேரினால் தனக்கு வேண்டிய வளத்தை நாடி அடைகின்றது என்று அதன் இயல்பை மறைவாக உணர்த்தி, ஒரு மனிதன் தன் பெருமைக்குரிய உயர்வளிக்கத்தக்க பலரும் விரும்பத்தக்க நற்பண்பையும், நற்செயலையும் விரும்பாதொழித்துக் கீழ்நிலை நோக்கிச் செல்லும் பண்பையும் பணியையும் ஏற்றொழுகும் நிமித்தத்தான் "மரம்போல்வர்" எனப் புகன்றார்.

அதன் பின்னர் "மக்கட்பண்பு இல்லாதவர்" என்று விளம்புகின்றார். மக்கட்பண்பு என்பது இயற்கையாக அமையப் பெற்ற அன்பினிடத்தில் உருப்பெற்றெழும் ஓர் உயர்ந்த குணம். இயற்கையன்பு அழியாது நிலைக்குமாயின் பண்பு சிதையாது பொலிவுறும். அன்பு சிதைந்தால் பண்பு குன்றும். அன்பும், அவரிடத்து வளர்ந்த பண்பும் குன்றாதிருக்குமாயின் அவரிடத்தில் இரக்கம், கருணை முதலான எல்லாக் குணங்களும் அமைந்துவிடும். எனவே, அன்புமிக்க பண்புதான் அமையப் பெறுதல்வேண்டும். ஈண்டு வள்ளுவரும் அதனைத்தான் காட்டுகின்றார். அஃதாவது எல்லையற்ற கல்விகற்றுப் புலமைமிக்கவராக இருப்பினும் மக்களை மக்களாக மதிக்கும் பண்புவேண்டும். ஒத்தவனையுணரும் மாண்புவேண்டும். மற்ற உயிர்களைப்பேணும்

அன்பு வேண்டும். இவைதான் மக்கட்பண்பு. இவையில்லையெனில், அம்மகன் பிறரை வஞ்சித்து, இழித்து, புறங்கூறி, ஏமாற்றிச் சமூகத்தை அழிக்கும் முதலிடமாவான். அக் கூர்மைப் புலமையும் அதற்குத்தான் பயன்படும் என்ற உண்மைக் கருத்துக்களை உணர்த்தும் உள்ளத்துடன் "மக்கட் பண்பு" எனப் பொருள்பொதிந்த நிலையில் பொறித்துள்ளாரன்றோ! இப்பொழுது நீவிரும் ஒரு மகன் பண்பற்றுக் காணப்பட்டால் அவனை மரம் என்று கூறத்தயங்கிரன்றோ!

கலைக்கூடம் பலவற்றில் கற்றுப் பட்டம்பெற்ற நிலையில், கூர்மையான அறிவுபெற்ற தன்மையில் நிலவி, நாட்டில் இழிவான செயல்களை எடுத்தாற்றும் சில கீழ்மக்கள் உளர். அவர்கள் அக் கீழான செயல்களை எடுத்தாற்றத் துணிந்ததன் காரணம் அப் பண்பற்ற நிலைதான். இங்ஙனம் பண்பற்றுக் கீழான செயல்புரியும் அவர்கள், வையத்தில் வாழ்வாங்குவாழும் பண்புடைய மக்களுக்குப் பகைவர்களாவார். பண்பால் பகைமை கொண்ட அவர்களிடம் சில பண்புடைய மக்கள் கூடி வாழுகின்றனரே, அது நன்றுஎனின், நன்றன்று. அங்ஙனம் இழிநெறியில் இறங்கியவரின் பின்சென்று வாழ்பவரை, மனிதனாகப் பிறந்துவிட்டோம், வயற்றை நிரப்பி வாழ்ந்தால்போதும், மானமும், மதிப்பும், மாண்பும் தேவையின்று. இழிந்தவன் என்று இனம் கூறினும் கூறட்டும் என்ற இழிவெண்ணத்துடன் வாழ்பவராவர் என்று ஐயமின்றிக் கூறலாம்.

பண்பற்ற அப் பகைவனுடைய இயல்புகளை எவரும் விரும்புவதின்று. பண்புடை மக்களும் அப் பகைவருடன்கூடி வாழ ஒருப்படமாட்டார்கள். கூடி வாழவும் கூடாது. அவருடன் ஒட்டாமல் வாழ்வதே உயர்வுடைத்து. ஆயின், அவருடன் ஒட்டி வாழவிழையார் எனினும் சிலபோது சேர்ந்துவாழ நேருகின்றதே அதற்கு என்செய்வது என வினவலாம். இது நல்லதொரு வினாதான். கூர்மைப் புலமை உடையவர்களின் பண்பற்றநிலையை ஒருவாறு மேல்விளக்கிப் போந்தோம். ஆண்டு அவர்கள் எங்ஙனம் பண்பற்ற நிலையை எய்தினார்களோ அதேபோன்றுதான் பண்புடை மக்களும் முற்றுப்பெற்ற மனத்திண்மையின்றி, சிறப்புற்ற சிந்தனைப் பயனின்றி, நற்பண்பின் நிலையை நலமுடனுணராது அவர்களுடன் கூடி வாழ்கின்றனர் என்று கூறல்வேண்டும்.

அப் பகைமனிதன் ஆற்றும் இழிதொழில்கள் யாவையெனின், நற்புலமைக்கு நேராகாத, பலருடைய உள்ளம் புண்படும் தகைமையில், தன் மானம் சிதைவுறும் தன்மையில், தன்

வாழ்க்கையில் மாசுபடும் முறைமையில் நிகழ்த்தப்படும் தொழில்கள் எவையெவையோ அவையனைத்தும் இழிதொழில்களாகும்.. இத்தொழில்களனைத்தும் பண்பற்ற மகனிடத்தில் நிகழக்காணலாம் என்று பொய்யாமொழி தன் பொன்மொழியில் காட்டுகின்றார். இங்ஙனம் இழிதொழிலாற்றும் பகைவனிடம் ஒட்டி வாழ்வபரைக் குறித்துப் பொய்யாமொழி யாது புகலுகின்றாரெனின்; பகைவருடன் கூடிவாழும் பண்புடை மக்கள் தம்முடைய மானம் குன்றி, மரியாதை சிதைந்து, தன் குழுவுக்கு இன்னல்வரும் முறையில் வாழ்வதைவிட, பகையுடன் கூடி வாழாத அந்நிலையிலேயே இறந்துபடுதல் நன்றுடைத்து என

மண்ணிற்கும், மண்ணில்வாழ் மக்களுக்கும் ஏற்றவகையில் உண்மையினை நெறிபிறழாது கூறும் தமிழற-தமிழ்ப்பண்புடைய நூல்களைத் தகவுடன் கற்றுத் தெளியாத காரணத்தாலும், கற்றாலும் அதில் தெளிவான புலமை இன்மையாலும், பிறவற்றினும் உயர்ந்த பண்பையும், அதன்கண் நிகழும் தொழிலையும் உணரத் தவறுகின்றனர். உயர்ந்தவரின் இயல்பை அறிய மறந்து ஒழுக்கத்திற்கு இழுக்களிக்கும் செயல் புரியத் தலைப்படுகின்றனர் சிலர்.

__ிவான தொழிலில் ஈடுபட்டுத் தன் மனம் தடுமாறுற்று மானத்தை ஒடுங்கச் செய்து, ஒழுக்கமற்ற பணியாற்றி ஒப்பற்ற உயர்வுற்ற உடையுடுத்தி ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள் போன்று வேடம்தரித்து நாட்டில் வலம்வருகின்றனர் சிலர் .

பகைமைப் பண்பில் பதமுற்ற அவர்களிடம் சென்றுகூடி உதவிபெற்றுச் சில பண்புடைய மக்களும் சிலர் வாழ்கின்றனர் என்று முன் கூறினம். இவர்களனைவரையும் கண்ணுற்ற வள்ளுவத் தந்தை, வேடம்தரித்த வீணர்களையும், பகை மக்களையும் கடிந்துரைத்து, அவர்களுடன் இணைந்துவாழும் அன்பர்கள் இருக்கவேண்டிய நிலையையும் எடுத்து மொழிந்தார்.

"ஒட்டார்பின் சென்றொருவர் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று."

ன் திருமொழி. இவர்தம் வாக்கின் துவக்கத்திலேயே "ஒட்டார்" எனத் துவக்குகின்றார். இங்ஙனம் துவக்கக் காரணம் யாதெனின், வள்ளுவர் ஒட்டாரைக்கண்டு ள்ளம் குமுறினார். ஒட்டாரை அவர் எள்ளளவும் ஏற்கவில்லை. ட்டார் இருத்தலேகூடாது என்பது வள்ளுவரின் உள்ளப் ண்பு. எனவேதான் எடுத்த எடுப்பிலேயே "ஒட்டார்" என

ஓதினர். (ஒட்டார் - பகைவர், சேராதார்) ஒட்டார் என்ற சொல்லிற்குத் தம்முடன் சேராதார் என்று பொருள்படும். தம்முடன் இரண்டறக் கலந்து இரு உள்ளமும் ஒன்றுபட்டு, வாழும் பழக்கமின்றிப் பிரிந்துசென்று வஞ்சித்துப் புறங்கூறி வாழ்பவர் யாரோ அவரைத்தான் பகைவர் என்று விளம்பினர். ஒன்றுபட்டு வாழாது வறிதே உளரிக் காலங்கழிக்கும் அம் மகனுக்கு "ஒட்டார்" என்ற பெயர் சாலவும் பொருத்தமுடைத் தல்லவா?

கூடி வாழாது ஊடிப்புறங்கூறும் பகைவர்களிடம் சென்று வாழ்பவர்கள் தமக்கு இழுக்குத் தேடிக்கொள்வதோடன்றி தன்னைச் சேர்ந்தோருக்கும் தேடிவைக்கின்றனர். தனக்கும் தன் இனத்துக்கும் ஒட்டாருடன் கூடிவாழ்தலினலன்றோ இன்னல் ஏற்படுகின்றது. அங்ஙனமுற்ற வாழ்க்கை எற்றுக்கு? தன்னை இகழும் மகனிடம் எற்றுக்குப் போகவேண்டும்? எற்றுக்கு அம்மகனைத் தாம் கருதல்வேண்டும்? எற்றுக்கு உரையாடல்வேண்டும்? வேண்டாம்! வேண்டவே வேண்டாம்! அப்பகைவன் நட்பை நாடவே வேண்டாம்! அவனைப்பற்றி எண்ணவே வேண்டாம்! என்று தமிழ்மறை ஆசிரியர் தடை ரர்.

மேலும், அப்பகைவனை எண்ணுது, எண்ணி அவனை நாடி வாழாது வாழமுடியுமெனில் - வாழ்க! இயலவில்லையெனில் வீழ்க! என்கின்றார். ஆயின் வீழ்க என்றுரைக்கும்பொழுது "அந்நிலையே கெட்டான்" என்று கூறுகின்றார். இதில் "அந்நிலையே" என்பது பகைவனுடன் கூடிவாழாத நிலைமையே. அவனுடன் ஒட்டாமல் வாழ இயலவில்லையெனில், அவனுடன் கூடாத அந்நிலையிலேயே இறந்துவிடுக. அதுதான் பெருமை யளிப்பது. அவனுடன் கூடிப் பின் இறந்தால் இகழப்படுமே யன்றிப் புகழப்படாது. அந்த இகழ்வுக்கு இடமின்றி இறந்து விடுக என்பதை உணர்த்தவே "அந்நிலையே" என்றார்.

ஒருவன் தன்னை முரண்பட்ட முறையில் உரையாடி, தானும் அவனுடன் ஒட்டாது, அவனையும் ஒட்டவிடாது தடுக்கும் தகைமையுடையவரின் நட்பை நாடாத நிலையில் "கெட்டான்" என்று உலகு உரைக்கும். அங்ஙனம் உரைப்பது பெறற்கரிய பெருமையை அளிப்பதாகும். இறுதியில் "கெட்டான் எனப் படுதல் நன்று" என நுவன்றுள்ளார். "நன்று" என்பதன் பொருள் விளக்கம் யாதெனின், ஒருவன் ஒட்டாரிடம் ஒண்டா மல் வாழ்ந்து தன்னுடைய மானத்தையும் மரியாதையையும் காத்தல் கடன் என்று கருதி, குடிப்பெருமை தன்னால் குன்றச

கூடாது என்ற கோட்பாட்டிற்காக, மனிதனுக்குரிய பண்பாட்டை நிலைநிறுத்தல் வேண்டி இறந்துபட்டான் என்று கூறப்படுதல் சாலவும் மேன்மையுடைத்து என்பதை விளக்கவே, "நன்று" என வரைந்தார். இதுகாறும் விளக்கியதிலிருந்து "நீ உன்னை இகழும் அன்பர்களுடன் இணைந்து வாழாதே! அங்ஙனம் வாழ்வதைவிட, வசைச்சொற்கிடமின்றி இசைச்சொற்கிடமளித்து இறப்பதே நன்மையுடைத்து," என்பதுதான் வள்ளுவரின் முடிவான உளக்கருத்து என்பதை உணருகின்றோம்.

செந்தமிழ்ப் புலவர் செந்நாப்போதார், அரம்போன்ற கூர்மையான அறிவுபெற்ற மக்களும் மக்கட்குழுவில் கூடி வாழும் பண்பின்றி, பிரிந்துவாழ்ந்து, பிறரையும் சேரவிடாது, அவர்களைப்பற்றிப் புறங்கூறி வஞ்சித்து வாழ்பவர்களைக் கண்டு உள்ளம் நொந்து வேதனைப்பட்டார். அவர்களைத் திருத்துவான்வேண்டி அம் மக்களுக்கு மரத்தை உவமை கூறினார்! அப் பண்பற்ற மக்கள் பண்புடைய மக்களுக்குப் பகை என்பதை வெளிப்படுத்தினார்! பகையிடம் பண்புடையோர் நடக்க வேண்டிய நெறியைக் காட்டித் தன்னினத்தவர்க்கு நல்லதொரு நிலையை நவின்றுள்ளார்! பொய்யாமொழியார் பலரும் அறியும்படி முன்னிலைப்படுத்திய அம் 'மரமனிதன்' இந்நாட்டவர்க்கு மட்டுமன்று என்னாட்டவர்க்கும் பகைவனுவான்!

"அறுபகை அகற்றல்"

அளவில்லாத ஆவிகளைத் தொன்மையே பல்வேறு வகையாகப் பிணித்து அறிவை விளங்க ஒட்டாது காரறிவைச் செய்யும் மலம் பல்வேறு ஆற்றல்களையுடையது. அவ்வாற்றல் வெளிப்பட்டுப் புடைபெயரும் நிலையே ஆணவம் என்ப. ஆணவ வினைவே, க. செருக்கு, உ. சினம், ந. சிறுமை, ச. இவறல், ரு. மாண்பிறந்தமானம், சா. மாணு உவகை என்பன. இவற்றைக் 'காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம்' எனவுங் கூறுப. இவற்றைச் செந்தமிழ்ப் பொதுமறை வருமாறு அருளுது:

"செருக்குஞ் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமிதம் நீர்த்து."

"இவறலும் மாண்பிறந்த மானமும் மாணு
உவகையும் ஏதம் இறைக்கு." (திருக்குறள், சஙக, உ)

—இனியன்.

'புகழ்படைத்த காவலனே!'

ந. புலவர் அரசு]

1. தேரூரில் தோன்றிப்புத் தேரியிலே வீற்றிருந்திப்
பாரூர் புகழ்படைத்த பாவலனே!—சீரூர்ந்த
கற்றோர் உளங்கொள் கவிமணியே! நின்பிரிவால்
உற்றோம் உலையாத் துயர்.

2. ஆசிய ஜோதியால் ஆசகன்றோம் எந்துயரம்
தேசிக விநாயகனே! செப்பரிதால்—கூசிலதே
செந்தமிழ்ப் பாவின் இனிமையைத் தேக்கறியா
அந்தக் கொடுங்கூற்றந் தோ!

3. செந்தமிழ் அன்னைக்குத் தேர்ந்துநீ யாத்தணிந்த
முந்தை மலர்மாலை மூதறிஞர்—சிந்தையிலும்
மற்றோர் உளத்தும் மணங்கமழும் நீங்காமற்
கற்றோம் களித்தோங் கனிந்து.

4. எள்ளல் இலாத கவிஞன்! எளியவர்க்கு
வள்ளல்! வசையிலா மாண்புலவன்!—உள்ளுதொறும்
தேனூருஞ் செஞ்சொலான்! செந்தமிழ் ஞாயிறு!
வானூர்ந்தான் நம்முளத்து வாழ்ந்து!

5. செந்தமிழ்த் தேவி பிரிவால் திகைக்கின்ற
செந்தமிழ் நல்லோரே! தேர்ந்தறிமின்!—நந்தமிழ்
நாடு வளம்பெற நாமியற்றுந் தொண்டொன்றே
கூடும் மகிழவர்க்குக் கொண்டு.

சிலப்பதிகாரம் - ஆராய்ச்சி விளக்கம்

[துடிசைகிழார், அ. சிதம்பரனார்]

1. சிலம்பு

சிலப்பதிகாரம் என்னும் நூலானது தமிழ் மொழியில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. காவிரிப்பூம்பட்டினத்துப் பெருங்குடி வணிகர் மரபில் வந்த கோவலன்—கண்ணகி வரலாற்றை உரைப்பது. முத்தமிழ்ப் புலமையும், வித்தகக் கவித்திறமையும் வாய்ந்த சேர அரச முனிவராகிய இளங்கோ அடிகளால் பாடப்பட்டது. படிப்பவர் நெஞ்சினை அள்ளும் பான்மைத்து. சேர—சோழ—பாண்டியர் ஆகிய முடிமன்னர் மூவரின் ஆட்சிமுறை—திறம்—அறம்—மறம் முதலியவைகளைப் பற்றியும், அக்காலக் குடிமக்களின் ஒழுக்கம், ஊக்கம், ஒப்புரவாண்மை முதலியவைகளைப் பற்றியும் கூறுவது. இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழுக்கும் அரணாக உள்ளது.

2. காப்பியம்

காப்பியம் என்ற சொல் வடமொழியில் உள்ள காவ்யம் என்ற சொல்லின் திரிபு என்பர் சிலர். அது பொருந்தாமை காட்டுதும். காப்பியம் தமிழ்ச் சொல்லே. காப்பு + இயம் எனப் பிரித்துப் பொருள் கூறுவர். இயம் என்ற சொல் ஒலி—சொல்—வாத்தியம் எனப் பலபொருள்களைக் கொடுக்கும். ஆதி காலந்தொட்டே தமிழ்மொழி இயல்—இசை—நாடகம் எனப் பாகுபடுத்தப்பட்டு வளர்ச்சி பெற்றுவருவது கண்கூடு. உலகின் கண் வழக்கில் உள்ள எம்மொழிக்கும் இப்பாகுபாடு இல்லை. வழக்கு இறந்த மொழிகள் உள்ளும் இம்மாதிரிப் பாகுபாடுகள்

சிலப்பதிகாரம் என்னும் நூலைப் பார்த்தால் அது முத்தமிழுக்கும் ஓர் இலக்கியம் ஆகும் என்று யாருங் கூறுவர். அம்மூன்று தமிழ்களையும் குறிக்கும் ஒரு சொல்லைக் கொண்டுதான் அந் நூலுக்குக் காப்பியம் என்று பெயரிட்டுள்ளார்கள்.

ஆரியமொழி இத்தமிழ் நாட்டில் நுழைவதற்குப் பல ஆண்டுகள் முன்னரே, காப்பியக்குடி என்ற ஊரும், காப்பியங்களைப் பாதுகாக்கும் காப்பியர் என்ற குடிகளும் இங்கே உண்டு என்றால், அச்சொல் ஆரிய மொழியாகிய வடசொல் ஆவது எப்படி?

கி. மு. 6000-க்கு முன்னரே சோழநாட்டில் காப்பியர்குடி என்னும் ஊர் சீகாழித் தாலூகாவில் உண்டு. (1) ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர், (2) காப்பியக்குடித் தொல்காப்பியர், (3) வெள்ளூர்த் தொல்காப்பியர், (4) காப்பியம் சேந்தனர், (5) காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் புலவர் பெயர்களையும், காப்பியம்—காப்பியக்குடி—காப்பியாறு முதலிய ஊர்ப்பெயர்களையும் நோக்கினால் காப்பியம் என்பது காவ்யம் என்ற சொல்லின் திரிபு அல்ல என்றும், முத்தமிழ்களையும் பாதுகாக்கும் மக்கள் வாழும் ஊர் என்றும், முத்தமிழ்களையும் பாதுகாக்கும் குடி என்றும் பொருள் ஆவது தெளியலாம். அதுபோல் முத்தமிழ்களையும் சிதைவுறாமல் பாதுகாக்கும் நூல் காப்பியம் என்னப்பட்டது. இந்நூல் மாத்திரம் நம் கைக்கு எட்டியிராவிட்டால் விபுலானந்தர் 'யாழ் நூலை' ஆக்கியிருக்கமுடியாது.

3. இளங்கோ

இத்தகைய முத்தமிழ்களையும் பாதுகாக்கும் நூலாக அமைந்துள்ள சிலப்பதிகாரத்தை யாத்தவர் இளங்கோ அடிகள் ஆவர். அவர் இமயவரம்பன் சேரலாதனுக்கு ஞாயிற்றுச் சோழன் மகள் நற்சோணை வயிற்றில் பிறந்த இரண்டாம் குமாரர். மூத்த குமாரன் செங்குட்டுவன்.

ஒருகால் வஞ்சிமூதூர் மணிமண்டபத்தில் செங்குட்டுவனும், இளங்கோவும் தந்தையுடன் இருக்கும்போது, ஆண்டுப் போந்த நிமித்தகன் ஒருவன், இளங்கோவை நோக்கி, அவருக்கு அரசு வீற்றிருக்கும் திரு உண்டெனச் செப்ப, முன்னவனாகிய செங்குட்டுவன் இருக்க முறைமைகெடச் சொன்னான் என்று இளங்கோ கருதி, செங்குட்டுவன் மனம் நோகாதபடி குணவாயிற் கோட்டத்திலே அப்போதே துறவுபூண்டு, சிற்றின்பத்தை வெறுத்துப் பேரின்பத்தை நாடாலாயினர். குணவாயிற் கோட்டத்தில் இவர் முத்தமிழ்களையும் ஆராய்ந்து புலமை எய்தினர். சைவம், வைணவம், சைனம், பௌத்தம் முதலிய சமயங்களின் கொள்கைகளை ஆராய்ந்து தெளிந்தார். அவர் நூலிலிருந்து அவர் ஒரு பழுத்த சைவசமயத்தவர் எனக் கொள்ளக்கிடக்கிறது. அதனால் அவர் ஏனைய சமயங்களை வெறுக்காமல் அவைகளுக்கு உரிய மதிப்பைக் கொடுத்துப் பாடி இருக்கிறார். மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாதய்யர், பண்டிதர் ந. மு. வேங்கிடசாமி நாட்டார் முதலியோருடைய கருத்துக்களும் அதுவே. இவர் சிலப்பதிகாரத்தைப் பணத்திற்காகவும், ஒருவருடைய வேண்டுகோட்காகவும், மதிப்பிற்காகவும் பாடவில்லை. அரச பதவியையே துறந்த ஒரு துறவிக்குப்

பணமும், மதிப்பும், ஒரு பொருட்டல்ல. அதனால் உண்மைக்கு மாறாகவும், கற்பனையாகவும், அதிசயோக்தியாகவும் பாடவேண்டுமென்ற நோக்கம் சிறிதும் இல்லாதவர்.

4. சிலப்பதிகாரம் பாடிய காரணம்

இவர் குணவாயிற் கோட்டத்தில் தண்டமிழ்ச் சாத்தனாரோடு இருந்தகாலை, குன்றக் குறவர் ஒருங்கே கூடிவந்து, செங்குன்றில் வேங்கைமர நிழலில் கண்ணகிநிற்ப, அமரர்க்கரசன் தமர் வந்து, அவள் கொழுநனைக் காட்டி, அவளுடன் விட்புலம் போயதைக்கூற, சாத்தனார் அப்போது கோவலன் வரலாற்றைக் கூற, கோவலன் கண்ணகி வரலாற்றினால் ஏற்படும் மூன்று உண்மைகளை உலகர்க்கு அறிவுறுத்த வேண்டிச் சிலப்பதிகாரம் பாடினார் என்பது,

> " அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்
> உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,
> ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்,
> சூழ்வினைச் சிலம்பு காரண மாக
> சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
> நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள் "

என்ற பதிக அடிகளால அறியலாம.

5. சிலப்பதிகாரத்தைப் பற்றிய சில ஐயப்பாடுகள்

... ந்த உண்மை வரலாற்றில், அவ வரலாறு நடந்த காலத்திலேயே இருந்த ஒரு சிறந்த புலவரால் பாடப்பட்ட ஒரு நூலில் சில ஐயப்பாடுகள் இப்போது கிளம்பியுள்ளன. அவைகள் வருமாறு :

முதலாவது :—ஐம்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரமும் ஒன்று. இன்னொன்று சிந்தாமணி, சிந்தாமணியைப் பற்றி உமாபதிசிவம் என்னும் புலவர் :—

> " கலகமிடும் அமண்மூடக் கையர் பொய்யே
> கட்டிநடத் தியசிந்தா மணியை மெய்யென்று
> உலகிலுள்ளோர் சிலர்கற்று நெற்குத்துண் ணாது
> உமிகுத்திக் கைவருந்திக் கறவை நிற்க
> மலடுகறந் துளந்தளர்ந்து குளிர்பூஞ் சோலை
> வழியிருக்க குழியில்விழுந் தளறு பாய்ந்து
> விலைதருமென் கரும்பிருக்க இரும்பை மென்று
> ...ய்க் காய்ந்து நொந்தார் "

என்ற பாட்டில் 'பொய்யே கட்டிநடத்திய சிந்தாமணி' என்று கூறுவதால் சிலப்பதிகாரமும் ஏனைய மணிமேகலை—குண்டலகேசி—வளையாபதி என்னும் காப்பியங்களும் பொய்யே யாகும் என்பது.

இரண்டாவது :—அதற்குச் சான்றாகச் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்ட அரசர்கள், அதாவது, கரிகாலன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், செங்குட்டுவன் முதலியோர் ஒரு காலத்தவரல்லர் என்பது.

மூன்றாவது :—கோவலன்—கண்ணகி திருமணத்தில் பார்ப்பனப் புரோகிதம், தீ வலம் வருதல், அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல் முதலிய பிற்காலத்துச் சடங்குகள் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருப்பதால், இளங்கோ அடிகள் பெயரால் பிற்காலப் புலவர் ஒருவர் பாடிச் சேர்த்துவிட்டார் என்பது.

நாலாவது :—கண்ணகியின் தாயும், கோவலன் தாயும், மாதரியும் இறந்ததற்கும், கண்ணகி பிரதிட்டைக்கும் அதிக காலம் இடையீடு இன்மையால், கண்ணகியின் கல்நாட்டு விழாவின்போது, கண்ணகி தாயும்—கோவலன் தாயும்—மாதரியும் மறுபிறப்பு எடுத்து வந்து தம்முடைய முற்பிறப்பு வரலாறுகளைத் தாமே தம் வாயினாற் கூறினர் என்பது பொருத்தமாயில்லை என்பது.

ஐந்தாவது :—சிலம்பு வஞ்சினமாலையில் கூறப்பட்ட கற்புடை மாதர்கள் எழுவருடைய சரித்திரங்களும் நம்பத்தகுந்தவை அல்ல; இளங்கோ அடிகள் அத்தகைய கதைகளைத் தம்முடைய காப்பியத்தில் வைத்துப்பாடி இருக்கமாட்டார் என்பது.

ஆறாவது :—ஒரு பொற்கொல்லன் குற்றம் செய்ததற்காக குற்றம்செய்யாத ஆயிரம் பொற்கொல்லரை வெற்றிவேற்செழியன் கண்ணகிக்குப் பலி கொடுத்ததாகச் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது நியாயமல்லாதது. இளங்கோ அடிகள் அந்தமாதிரிப் பாடி இருப்பாரா என்பது ஐயம் என்பது.

ஏழாவது :—சிலம்பு வஞ்சின மாலையில் :—

" இடமுலை கையால் திருகி மதுரை
வலமுறை மும்முறை வாரா அலமந்து
மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்த
விட்டாள் எறிந்தாள்......................
....
பொற்றொடி ஏவப் புகையழல் மண்டிற்றே
நற்றேரான் கூடல் நகர் "

என்ற அடிகளின்படி கண்ணகி தனது இடமுலையைக் கையால் திருகி எடுத்து மதுரையை மும்முறை வலம்வந்து, வட்டித்து எறிந்து, மதுரை மாநகரை எரிமூட்டியதாகக் கூறப் பட்டுள்ளது, அறிவுக்குப் பொருந்துவதாயில்லை. இளங்கோ அடிகள் அம்மாதிரிப் பாடி இருக்கமாட்டார் என்பது.

6. ஐயப்பாடுகளின் ஆராய்ச்சி

முதலாவது சிந்தாமணிபோல சிலம்பு ஒரு கற்பனை என்பது

ஐம்பெருங் காப்பியங்களில் சிந்தாமணி—சிலப்பதிகாரம்—மணிமேகலை மூன்றும் நம் கைக்கு எட்டி இருக்கின்றன. ஏனைய குண்டலகேசி—வளையாபதி கிடைக்கவில்லை. ஆகையால், கடைசி இரண்டு நூல்களைப்பற்றிப் பேசுவதற்கு இல்லை. முதல்மூன்று நூல்களில் முதலாவது சிந்தாமணியானது கற்பனையாகச் செய்யப்பட்டது, உண்மையாக நடந்த வரலாறு அல்ல என்பதை புலவர் உமாபதிசிவம் கூறுகிறார். நாம் அதனை ஒப்புக்கொள்ளு வோம். அதனாலேயே ஏனைய சிலப்பதிகாரமும் மணிமேகலையும் [illegible] என்பதில்லை. உண்மையாக நடந்த, கோவலன்—கண்ணகி வரலாற்றை, உண்மையாக அதே காலத்தில் வாழ்ந்திருந்த ஒரு சேரமுனிவர் இளங்கோவால், உலகர்க்கு மூன்று உண்மைகளை உணர்த்தும் பொருட்டுப் பாடப்பட்ட ஒரு நூலைப் பொய்க்கதை என்று கூறுவார் மதி இருந்தவாறு என்னே! அதேமாதிரி, கோவலன் மகள் மணி மேகலையின் வரலாற்றை, இளங்கோ அடிகளின்உடன் இருந்த கடைச்சங்கப் புலவர் சீத்தலைச்சாத்தனார் நடந்தது நடந்தபடியே பாடியுள்ளார். ஆதலின், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கற்பனைக் கதைகள் அல்ல. நடந்த வரலாறுகளே; அவ்வரலாறு களில் உள்ள உண்மைகளை மக்களுக்கு உணர்த்தவே அவ்வர லாறுகள் காப்பியங்களாகச் செய்யப்பட்டன.

சேரர் தலைநகராகிய வஞ்சிமூதூரைச் சேர்ந்த குணவாயிற் கோட்டத்தில், தவம் இயற்றிக்கொண்டிருந்த இளங்கோ அடிக ளிடம், அந்நாட்டுக் குன்றக் குறவர் போந்து, நெடுவேள் குன்றில் வேங்கைமர நீழலில் நின்ற கண்ணகிக்கு வானவர் வந்து கோவலனைக் காண்பித்து, அவளை வானுலகிற்கு அழைத்துச் சென்ற புதுமையைத் தாம் நேரிற்கண்டதாகக் கூற, அப்போது அங்கே அடிகளிடம் இருந்த மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் "யானறிகுவன் அதுபட்டது" எனக்கூறி, கோவலன் கண்ணகி வரலாற்றைக் கூறினர். புகாரிலும் மதுரையிலும் நடந்தவற்றை அது தெரிந்த சாத்தனார்கூற, பிறகு வஞ்சியில் நடந்தவற்றை நேரில்கண்ட

இளங்கோ அடிகள் நூலாகப் பாடினார். அப்படி இருக்க அது பொய்க்கதை ஆவது எப்படி?

மேலும், செங்குட்டுவன் வஞ்சியில் கண்ணகிக்குக் கோயில் எடுத்ததுபோல, வெற்றிவேற் செழியன் மதுரையில் கண்ணகிக்குக் கோயில் அமைத்து திருவிழாச் செய்ததும், கொங்கு இளங்கோசர் கொங்கில் கண்ணகிக்குக் கோவில் அமைத்துத் திருவிழாச் செய்ததும், இன்னும் இலங்கைக் கயவாகுவும், உறந்தைச் சோழன் இராசசூயம் வேட்டபெருநற் கிள்ளியும், ஆரிய அரசர்களும், மாளுவ வேந்தரும் கண்ணகிக்குக் கோயில் அமைத்து வழிபட்டதை உரைபெறு கட்டுரையாலும், வரந்தருகாதையாலும், அந்தந்த நாட்டுச் சரிதங்களாலும் அறிகின்றோம்.

இவைகளை எல்லாம் நோக்காது, சிலப்பதிகாரம் கற்பனை என்று கூறுவது பொருந்தாது. கற்பனையாக இருந்தால், பல நாட்டாரும் அதனை ஆதரிக்கமாட்டார்கள். உண்மைச் சரிதமாக இருந்ததினால்தான் எல்லோரும் கண்ணகியை வழிபட்டார்கள். அக் கோவில்கள் இன்றும் நிலைபெற்று நம்பாதவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டி வருகின்றன. உலகத்தார்க்கு நீதிகளைப் போதிக்க அறிஞர்கள் காப்பியங்களை வகுக்கும் போது கற்பனைக் கதைகள் மூலமாகவும், நடந்த சரித்திரங்கள் மூலமாகவும் போதிப்பார்கள். சிந்தாமணியைக் கற்பனைக் கதையாகவும், சிலப்பதிகாரம்—மணிமேகலையை நடந்த சரித்திரங்களாகவும் கொள்ள வேண்டும். உண்மையும் அதுவே.

7. இரண்டாவது சிலப்பதிகாரத்தில் வரும் அரசர்கள் ஒரு காலத்தவர் அல்ல என்பது

இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் சேர—சோழ—பாண்டிய மன்னர்களின் குடிவழிப் பட்டியைப் பார்க்க.

கோவலன்—கண்ணகி காலத்தில் புகாரில் அரசாண்டவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் (கி. பி. 100—145) ஆவான். அவன் இரண்டாம் கரிகாலனுக்கு (கி. மு. 50 கி. பி. 57) மகன் வயிற்றுப் பேரன் ஆவன். மதுரையில் அரசாண்டவன் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் II (கி. பி. 119—145) என்பவன் ஆவான். இவன்தான் கோவலனைக் கொலை செய்தவன். வஞ்சியில் அரசாண்டவன் செங்குட்டுவன் (கி. பி. 100—155) ஆவான்.

இளங்கோ அடிகள் கோவலன் காலத்தில் கரிகாலன் அரசாண்டதாகச் சிலப்பதிகாரத்தில் எந்த இடத்திலும் கூற

அப்படி இருக்கத் தற்காலம் சிலருக்கு ஐயம் ஏற்படுவானேன் என்றால் கூறுதும். அரங்கேற்றுக் காதையில்,

"சூழ்கழன் மன்னருக்குக் காட்டல் வேண்டி"

என்ற அடிக்கு, அரும்பத உரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் சூழ்கழன் மன்னன் என்பதற்குக் கரிகாற் பெருவளத்தான் என்ற பொருள் உரைத்துள்ளார். இளங்கோ அடிகள் கரிகாலன் என்ற பெயர் குறியாது, மன்னன் என்று பொதுவாகக் கூறியுள்ளமையானும், "செரு வெங்காதலின் திருமாவளவன்........ புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்" என்று இந்திர விழவூர் எடுத்த காதையில் கரிகால்வளவனைப்பற்றி இறந்த காலத்தில் கூறியுள்ளமையானும் இளங்கோ அடிகட்கு அது கருத்து அன்று என்று கொள்க.

ஒவ்வொரு காண்டத்து இறுதியிலும் அந்தந்த நாட்டு அரசர்களின் பெயர்களைக் கூறியுள்ளார். அவை வருமாறு :

புகார்க்காண்டம் (கட்டுரை)

"முடியுடை வேந்தர் மூவருள்ளும்
தொடிவிளங்கு தடக்கைச் சோழர் குலத் துதித்தோர்"

மதுரைக் காண்டம் (கட்டுரை)

"முடிகெழு வேந்தர் மூவருள்ளும்
படை விளங்கு தடக்கைப் பாண்டியர் குலத்தோர்
....
வடவாரியர் படை கடந்து
தென் தமிழ் நாடு ஒருங்கு காணப்
புரை தீர் கற்பின் தேவி தன்னுடன்
அரசுக் கட்டிலில் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழிய னோடு ஒரு பரிசா

வஞ்சிக்காண்டம் (கட்டுரை)

"முடியுடை வேந்தர் மூவருள்ளும்
குடிதிசையாளும் கொற்றங் குன்றா
ஆர மார்பிற் சேரர் குலத்துதித் தோர்

பொங்கிரும் பரப்பிற் கடல் பிறக் கோட்டிய
கங்கைப் பேரியாற்றுக் கரை போகிய
செங்குட்டுவ னோடு ஒரு பரிசா

மதுரைக் காண்டத்து இறுதியில் பாண்டியன் நெடுஞ்செழியனையும், வஞ்சிக் காண்டத்து இறுதியில் சேரன் செங்குட்டுவனையும்

கூறிய இளங்கோ அடிகள் புகார்க் காண்டத்து இறுதியில் சோழ அரசனைப் பெயர் குறித்துக் கூருதது நோக்கத்தக்கது. ஆதலால், கரிகால் வளவன் என்ற உரையாசிரியர் கூற்றை நம்பி ஒரு முடிபுக்கு வர முடியாது என்று அறியவும். உரையாசிரியர்கள் காலத்தில் சரித்திர ஆராய்ச்சி இன்மையின், அவர்கள் காலத்தை நோக்காமல் சரிதப் போக்கையே கொண்டு உரையெழுதினவர்கள் ஆவார்கள். ஆதலின், சிலப்பதிகாரத்தில் சரித்திர முரணை இளங்கோ அடிகள் எங்கும் கூறவில்லை என்பது அறியத்தக்கது.

8. மூன்ருவது பார்ப்பனப் புரோகிதம் முதலிய பிற்காலத்தது என்பது

மங்கல வாழ்த்துப் பாடலில் (49—53)

"நீல விதானத்து நித்திலப் பூம் பந்தர்க் கீழ்
வான்ஊர் மதியம் சகடணைய வானத்துச்
சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண் பார்கள் நோன் பென்னை"

என்று கூறப்பட்ட அடிகளைக்கொண்டுதான் இந்த ஐயம் எழுந்தது.

சங்க காலத்தில் பார்ப்பனப் புரோகிதம் இல்லை; பிற்காலத்தில் தான் ஏற்பட்டது என்று நினைப்பதால் வந்த தவறு இது. கி. மு. 7500-ல் பாண்டிய நாட்டில் அரசாண்ட பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி காலத்திலேயே ஆரியர்கள் தமிழ் நாட்டில் குடியேற ஆரம்பித்து விட்டார்கள். வேள்விக்குடிச் சாசனம் உறுதிப்படுத்துகிறது.

சாசன அடிகள்

எனற பதியை
சீரோடு திருவளரச் செய்தார் வேந்தன் அப்பொழுதே
நீரோடு அட்டிக் கொடுத்தமையால் நீடுபுத்தி துய்த்தபின்"

ஆதலின், பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி காலம் முதல், மூன்றும் நிலந்தரு திருவிற் பாண்டியன் (6000கி. மு.) காலத்திலும், அவனுக்குப் பின்னும், கடைச் சங்க காலத்திலும் பார்ப்பனப் புரோகிதமே நடைபெற்றதாகச் சங்க நூல்களிலிருந்து அறியக் கிடக்கின்றது. அரசர்களே அப்படி இருக்க, ஏனைய மக்கள் அவர்களைப் பின்பற்றுவது ஓர் வியப்பாகாது.

மறைவுற்ற தமிழ் நூல்கள்

[மயிலை. திரு. சீனி, வேங்கடசாமி]

(சிலம்பு: உக, பரல்: ௬, ககஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

104. செய்யுளியல்

செய்யுளியல் என்னும் பெயருள்ள நூல் ஒன்று இருந்த தென்பது யாப்பருங்கல விருத்தியுரையினாலும், யாப்பருங்கலக் காரிகைக்குக் குணசாகரர் எழுதிய உரையினாலும் தெரிகிறது. இவ்வுரையாசிரியர்கள், செய்யுளியல் ஆசிரியரின் பெயரைக் கூறாமல், செய்யுளியலுடையார் என்று கூறுகின்றனர். இவ் வுரையாசிரியர்கள் கூறுவன வருமாறு:—

"நேர்க்கீழ்க் குற்றியலுகரம் வரினும் முற்றியலுகரம் வரினும் நேர்பசையாம். நிரையசைக்கீழ்க் குற்றியலுகரம் வரினும் முற்றியலுகரம் வரினும் நிரைபசையாம் என்றார் செய்யுளியலுடையார்." (யாப்பருங்கலம். தளையோத்து. விருத்தி

"'சொற்சீர்' என்பது,

கட்டுரை வகையா னெண்ணொடு புணர்ந்து
முட்டடியின்றிக் குறைவுசீர்த் தாகியு
மொழியிசை யாகியும் வழியசை புணர்ந்தும்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே.

என்று செய்யுளியலுடையார் ஓதிய பெற்றியால் வருவனவெனக் கொள்க." (யாப்பருங்கல விருத்தி. அடியோத்து.)

"ஒருசாராசிரியர் இரண்டாமெழுத்தின் மேலேறிய யுயிரொன்றி வந்தாலு மூன்றாமெழுத்து ஒன்றிவந்தாலும் எதுகைப்பாற் படுத்து வழங்குவர். வரலாறு:—

துளியொடு மயங்கிய தூங்கிரு ணடுநா
ளணிகிளர் தாரோ யருஞ்சுர நீந்தி
வடிமை யெஃகம் வலவயி னேந்தித்
தனியே வருதி நீயெனின்
மையிருங் கூந்த லுய்தலோ வரிதே.

இஃதிரண்டாமெழுத்தின் மேலேறிய உயிரொன்றிய வெதுகை. இது செய்யுளியலுடையார் காட்டியது." (யாப்பருங்கல விருத்தி, தொடையோத்து.)

“ வெண்கூ வெண்பா வென்பது நேரசை வெண்பாவென வெழுத்து மிக்கிசைப்பது. அஃது ஆசுகவிகள் கூறுமாற்றாற் கூறப்பிறப்பது. என்னை ? ‘வெண்கூ வெண்பா வெழுத்திறந்

வரலாறு :—

தண்டடைந்த திண்டோளாய் தாங்கலாந் தன்மைத்தோ
கண்டடையார் தம்மைக் கனற்றுமா—வண்டடைந்த
நாணீல நாறுந்தார் நன்னன் கலைவாய
வாணீலக் கண்ணார் வடிவு.

எனவும்,

அறந்தருதண் செங்கோலை யன்ன மடந்தை
சிறந்தன சேவலோ டே—மறந்தொருகா
றன்ன மகன்றாலுந் தன்னுயிர் வாழாவா
லன்ன மகன்றி லிவை.

எனவும் இவை வெண்கூ வெண்பாவென்று செய்யுளியலுடையார் காட்டிய பாட்டு. (யாப்பருங்கல விருத்தி. செய்யுளியல் 4.)

மனைக்குப் பாழ் வாணுத லின்மைதான் சென்ற
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை. இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை. தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு.

இஃது அகவல் வெண்பாவென்று செய்யுளியலுடையார் காட்டிய பாட்டு. (யாப்பருங்கல விருத்தி. செய்யுளியல் 4.)

“ ‘மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலும்
அஞ்சொன் மடவார்க் கருளு.’

இது பிறப்பென்னும் வாய்பாட்டான் முற்றியலுகர மீறாக இற்ற வெண்பா.

‘இனமலர்க் கோதா யிலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு.’

இது காசென்னும் வாய்பாட்டான் முற்றியலுகர மீறாக இற்ற வெண்பா.

இவை செய்யுளியலுடையார் காட்டிய வெண்பாவெனக் கொள்க.” (யாப்பருங்கலக் காரிகை 25. குணசாகரர் உரை.)

செய்யுளியலுடையார் நாற்சீரடி தன்னையே நாலெழுத்து முதலா ஆறெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் குறளடி

என்றும், ஏழெழுத்து முதலா ஒன்பதெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் சிந்தடி என்றும், பத்தெழுத்து முதலாப் பதினன்கெழுத்தின் காறும் உயர்ந்த ஐந்தடியும் அளவடி என்றும், பதினைந்து முதலாப் பதினேழெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் நெடிலடி என்றும் பதினெட்டெழுத்து முதலாக இருபதெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் கழிநெடிலடி என்றும் வேண்டுவர்.''

(யாப்பருங்கலக் காரிகை. 43. குணசாகரர் உரை.)

105. சங்கயாப்பு

சங்கயாப்பு என்னும் பெயருள்ள யாப்பிலக்கண நூல் ஒன்று இருந்ததென்பது, யாப்பருங்கல விருத்தியுரையினால் தெரிகிறது. யாப்பருங்கல (அடியோத்து 28-ஆவது சூத்திரம்) விருத்தியுரையாசிரியர், பாவினங்களுக்குச் சில செய்யுள்களை உதாரணங்காட்டி, பிறவும் சங்கயாப்பிற் கண்டுகொள்க என்று எழுதுகிறார். சங்கயாப்பு என்னும் பெயருள்ள இந்நூலை யார் இயற்றினார், எந்தக்காலத்தில் இயற்றப்பட்டது என்பன தெரிய வில்லை. இந்நூல் சூத்திரங்கள் சிலவற்றை, யாப்பருங்கல விருத்தியுரைகாரர் மேற்கோள் காட்டுகிறார். அவை வருமாறு:—

அகர முதலா ஒளகார மீறு
யிசையொடு புணர்ந்தவீ ராறு முயிரே. 1

ககர முதலா னகர மீறு
விவையீ ரொன்பது மெய்யென மொழிப. 2

குறிலோ ரைந்து மறிவுறக் கிளப்பின்
அ இ உ எ ஒவென்னு மிவையே. 3

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔவெனும்
ஏழு நெட்டெழுத் தென்ற வியல்பே. 4

கண்ணிமை கைநொடி யென்றிவை யிரண்டு
மின்னடை யளவே யெழுத்தின் மாத்திரை. 5

வன்மை யென்ப கசட தபற. 6

மென்மை யென்ப ஙஞண நமன. 7

இடைமை யென்ப யரல வழள. 8

அவைதாம்,
புள்ளியொடு நிற்ற லியல்பென மொழிப
புள்ளியில் காலை யுயிர்மெய் யாகும். 9

அரைநொடி யளவின வாறுமூ உடம்பே.

அரைநொடி யென்ப தியாதென மொழியின்
நொடிதரக் கூடிய விருவிர லியையே.

குற்றிய லிகரமுங் குற்றிய லுகரமு
மற்றவை தாமே புள்ளி பெறுமே.

நேர்நால் வகையு நெறியுறக் கிளப்பின்
நெடிலுங் குறிலுந் தனியே நிற்றலும்
அவற்றின் முன்ன ரொற்றொடு நிற்றலும்
இவைதா நேரசைக் கெழுத்தி னியல்பே.

இணைக்குறில் குறினெடி லிணைந்து மொற்றடுத்தும்
நிலைக்குரி மரபி னிரையசைக் கெழுத்தே.

"அகவ லென்ப தாசிரியப் பெயரே."

"அகவ லென்ப தாசிரியப் பாவே."

எழுடி யிறுதி யீரடி முதலா
வேறிய வெள்ளைக் கியைந்தன வடியே
மிக்கடி வருவது செய்யுள்கட் குரித்தே
மூவடிச் சிறுமை யாயிர மாகு
மாசிரி யத்தின் பெருமை யளவே.

என்றார் சங்கயாப்புடையார். (அடியோத்து 32. உரை கோள்.)

மூந்திய மோனை யெதுகை யளபெடை
யந்தமின் முரணே செந்தொடை யியைபே
பொழிப்பே யொரூஉவே யிரட்டை யென்னு
மியற்படு தொடைக ளிவைமுத லாகப்
பதின்மூ வாயிரத் தறுநூ றன்றியுந்
தொண்ணூற் றொன்பதென் றெண்ணினர் புலவர்.

வல்லொற்றுத் தொடர்ச்சியு மெல்லொற்றுத் தொடர்ச்சி
மிடையொற்றுத் தொடர்ச்சியு முறைபிறழ்ந் தியலும்.

ஏந்திசைச் செப்பலுந் தூங்கிசைச் செப்பலு
மொழுகிசைச் செப்பலு மூன்றும் வெண்பா
செப்ப லோசை வெண்பா வாகும்.

வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
யேந்திசைச் செப்ப லென்மனார் புலவர்.

இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
தூங்கிசைச் செப்ப லென்மனார் புலவர்.

வெண்சீ ரொன்றலு மியற்சீர் விகற்பமும்
ஒன்றிய பாட்டே யொழுகிசைச் செப்பல். 23

கொச்சகம் வெண்கலி யொத்தாழிசையென
முத்திற மாகுங் கலியின் பகுதி. 24

106. விம்பசார கதை

இப் பெயர்கொண்ட ஒரு நூல் இருந்ததென்பது, நீலகேசி என்னும் சமண சமய நூலுக்குச் சமய திவாகர வாமன முனிவர் எழுதிய உரையில் இருந்தும், சிவஞானசித்தியார் என்னும் சைவ சமய நூலுக்கு ஞானப்பிரகாசர் எழுதிய உரையில் இருந்தும் தெரிகிறது. நீலகேசியில் குண்டலகேசி வாதச் சருக்கத்தில் 41-ஆவது செய்யுள் உரையில் உரையாசிரியர் வாமன முனிவர் இவ்வாறு கூறுகிறார்.

“இவன் (புத்தர்) பிறக்கின்ற காலத்து மாதாவினது வல மருங்குலாற் பிறந்தான்; அவளும் ஆறுநாட் குற்றுயிரோடு கிடந்து ஏழாநாளிறந்தாள். இது புத்த மாதாக்கள் யாவர்க்கு மொக்கும். என்னை?

‘உலும்பினி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோ யாறும
லான்றே னவ்வழித் தோன்றின னுதலி
னீன்றே ளேழாநா ளின்னுயிர் வைத்தாள்.’

என்பது பிம்பசார கதை யென்னுங் காவியம்; பௌத்தருடையது. அதன்கட் கண்டுகொள்க.”

...யார் பரபக்ஷம, சௌத்திராந்திகன் மத மறுதலை 5-ஆவது செய்யுளுரையில் உரையாசிரியர் ஞானப்பிரகாசர் கூறுவது வருமாறு:—

“புத்தன் பிறக்கிற காலத்து மாதாவினுடைய வலமருங்குலாற் பிறந்தான்; அவளு மாறுநாள் குற்றுயிரோடே கிடந்தேழாநாளிறந்தாள். இது புத்த மாதாக்களிருபத்து நால்வர்க்குமொக்கும். இதற்கு உதாரணம்,

‘உலும்பினி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோ யுறும
லான்றோ னவ்வழித் தோன்றின னுதலி
னீன்றோ ளேழாநா ளின்னுயிர் வைத்தாள்.’

இது விம்பசார கதை யென்னுங் காவியம்; பௌத்தருடைய நூல், அதன்கட் கண்டுகொள்க.”

இவ்விரண்டு உரையாசிரியர்கள் கூறுவதிலிருந்து, விம்பசார கதை அல்லது பிம்பசார கதை என்னும் பெயருள்ள பௌத்த மத காவியம் ஒன்று இருந்ததென்பது தெரிகிறது. இதைப்பற்றி வேறு செய்திகள் ஒன்றும் தெரியவில்லை. இந் நூலாசிரியர் யார், அவர் இருந்த காலம் எது என்பனவும்

பிம்பசாரன் என்னும் அரசன் புத்தர் உயிர்வாழ்ந்திருந்த காலத்தில் மகததேசத்தை அரசாண்டுவந்தான். புத்தரிடம் நட்புக்கொண்டு அவருக்குச் சீடனாக இருந்ததோடு புத்தருக்கும் பௌத்தமதத்துக்கும் பல தான தருமங்களைச் செய்தான். இந்த அரசன் புத்தருடைய வாழ்க்கை வரலாற்றில் பலவகையிலும் தொடர்புடையவன். தன் மகன் அஜாதசத்துரு என்பவனால் இவன் சிறையிலிடப்பட்டு உயிர்நீத்தான். பௌத்தர்களினாலே இவன் பெரிதும் போற்றப்படுகிறவன் ஆவன். பிம்பசார காவியம் இவன் வரலாற்றைப் பொருளாகக்கொண்டு எழுதப்பட்டதுபோலும். மணிமேகலை என்னும் பௌத்த காவியத்தைப்போலவே இந்தக் காவியமும் ஆசிரியப்பாவினால் ற்றப்பட்டது போலும்.

(நாஞ்சில், திரு. கா. கணபதி)

நாயொன்று மூலையினில் என்பெலாங்
கட்டுவிட்டு உடல்தளர்ந்து
தீயொன்று மெழுகெனவே துடித்திடவும்
மருங்கே கிடந்த ஏழை,
பாயொன்று மெத்தையினில் படுத்தவனும்
முன்னாள் ஆனால் இன்று
சீயென்று உமிழ்நிலையில் என்புநக
மண்ணதனில் கிடந்தானங்கே! (1)

காந்தச் சுடரொடிடு காட்டினிலே
எரியூட்டும் தீயே உன்முன்

பணமுமிலை அழகொன் றில்லை
பார்தமிலை, பகையில்லை, செருக்கில்லை
சாதியிலை யென்னே நின்போல்
மாந்தரிலே சமநோக்குக் கொண்டவரை
மாநிலத்தில் கண்டேனில்லை!

தினையும் பனையும்

[திரு. கரு. நாகரத்தினம், கணியூர்]

யாருக்காவது ஓர் உதவியைச் செய்தால் இறுதியில் அவர், "இவ்வேளையில் நீசெய்த உதவிக்கு இவ்வுலகமும் ஒப்பு ஆகுமோ?" என்று கூறுகின்றார். இஃது உலக வழக்கு. ஆனால், திருவள்ளுவரோ உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும் அமைந்த அறிஞராக விளங்குகின்றார்.

நன

ஞாலத்தின் மாணப் பெரிது"

என்று காலத்தை நோக்க அவ்வுதவி இஞ்ஞாலத்தை விடப் பெரியது என்று கூறுகின்றார். செய்யாமல் செய்த உதவிக்கு இவ்வையகத்தையே யன்றி வானகத்தையும் சேர்த்துக் கைம் மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாதென்றும், பயன் கிட்டும் என்ற கருத்திலராய்ச் செய்த உதவியாகிய ஈரமுடைமையை நயன்தூக் கின் அதன் நன்மை கடலினும் பெரியது என்று மேன்மேலும் கூறிச்சென்று இறுதியில் 'நன்றிமறந்தவனுக்கு உய்வு

என

ஒருநாள் திருவள்ளுவர் ஒரு காட்டின் வழியே நடந்து சென்று கொண்டிருந்தார். கடும்பசிக்கிடையே பரிதியின் பக லாட்சி வேறு! நிழல்தரும் மரங்கள் எதிரில் எதுவும் தென்பட வில்லை. ஆனால், பாதையின் இருமருங்கிலும் பசுமையுடன் காட்சி யளிக்கும் தினைப்புனத்தைக் கண்டார். குளிர் காற்று ஒருவாறு அவர் உடலுக்கும், உள்ளத்திற்கும் வளப்பம் தந்தது. திடீரென்று 'படபட' என்னும் ஒலி காற்றில் மிதந்து வருவதைக் கேட்டார். கறுத்து, உயர்ந்த பனைமரங்களின் ஓலைகளின் ஒலி தாம் என்று கண்டார். பனையோலை யொன்று காற்றினால் தினைப்புனத்தில் வீழ்ந்தது. திருவள்ளுவர் அதையெடுத்து நறுக்கி ஏட்டின் வடிவாக்கினார். தினையையும் பனையையும் மாறிமாறிக் கீழேயும் மேலேயும் சிறிதுநேரம் உற்று நோக்கினார். ஒப்புமை காட்டும் அளவைகட்கு இவை இரண்டும் உகந்தது என்று எண்ணினார். பனைமர நிழலிலேயே உட்கார்ந்து ஏட்டில் எழுதினார்.

நன்றி செயினும் பனைத்துணையாக்

கொள்வர் பயன்தெறி வார்"

என்று உதவி செய்தவர்களால் வரும் பயனைக் கருதுவார்க்கு அறம் கூறினர். தினையும் பனையுமல்லவா திருவள்ளுவருக்கு உதவி செய்தன.

அடுத்துப் பொருளுக்கு வந்தார். முன்பு கூறியதற்கு மறுதலையாக அமைந்தது போல,

> குற்றம் வரினும் பனைத்துணையாக்
> கொள்வர் பழி நாணுவார்"

என்று 'பழிநாணுவார் குற்றம் வராமல் காத்துக்கொள்க' என்பதை வலியுறுத்துவது போன்று கூறினர். பிறகு, இன்பத்திற்கு வந்தார்; காதலர்களில் மகளிர் அவர் கண்முன் ரர்.

> "தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையும்
> காம நிறைய வரின்"

என்று மகளிர் காமம் மிகுந்துழிச் சிறிதும் ஊடுதல் செய்யாமை வேண்டும் என்று கூறினர். இச்சிறப்புக் கண்டபின்னர் தானே கபிலரும் பின்வரும் வெண்பாவினைப் பாடினர்.

> "தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
> பனையளவு காட்டும் படித்தால்—மனையளகு
> வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனர்
> வெள்ளைக் குறட்பா விரி."

உலகத்து இயற்கை

[நெல்லை க. சுப்பிரமணியன், சென்னிமலை]

அறுசீர் விருத்தம்

திரண்டபெருஞ் செல்வத்தைத் தேடுதற்கும்
செழிப்போடு வாழ்வ தற்கும்
இரவுபகல் உழைக்கின்றார், ஒருசாரார்;
இன்னுமொரு சாரார் தங்கள்
கரவில்லாக் குறிக்கோளைக் கனவினுள்ளும்
கருதிக்கொண் டுழற்று கின்றார்;
இரண்டுவட்ட இயற்கையினால் இவ்வுலகம்
இயங்கிவரும் நிலைமை காண்மின்!

*திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை

உ. பொருட்பால்

க. அரசியல்

பொருள் செயல் மக்களாதலாலும், அம்மக்கள் பலர்கூடித் தம்மில் ஒருவனைத் தலைவனாகக் கொண்டொழுகலும் முன்னர் கூறப்பட்டன. அத்தலைவனே இறையெனவும் வேந்து எனவும் அரசு எனவும் இவ்வாறெல்லாம் கூறப்படுவன். இறை முதலாய இவையெல்லாம் அப்பண்புணர்த்தி நிற்குஞ் சொற்களேயாயினும், சொல்லப்படும் குறிப்பால், அப்பண்பையே உணர்த்தி அஃறிணையாய் நில்லாது அப்பண்பையும் அப்பண்பை உடையானையும் ஒருங்குணர்த்தி உயர்திணை மருங்கின் நிலையினவாம். ஆயினும் அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும். இதனைக் 'குடிமையாண்மை' யெனவரும் தொல்காப்பியக் கிளவியாக்கம் டுஎ-ம் சூத்திரத்தாலறிக. இவை அஃறிணை முடிபு கொள்ளுதலேயன்றி நின்றாங்கிசைத்து உயர்திணை முடிபு கொள்ளுதலும் (கிளவியாக்கம், டுகூ), ஈறு திரிந்து இறைவன் வேந்தன் அரசன் என இவ்வாறு உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைத்து (பெயரியல், கக) உயர்திணை முடிபிற்குரியவாதலும் உண்டு. இது கிடக்க. ஈண்டு அரசியல் என்றது அரசனது இயல்பு கூறும் பகுதியென்றவாறு. அவ் வியல்பினை இறைமாட்சி முதல் இடுக்கணழியாமை யீறாக இருபத்தைந் ததிகாரங்களான் முறைப்படுத்திக் கூறுவான் வைத்த ஆசிரியர் முதற்கண் இறைமாட்சி கூறுகின்றார்.

அதிகாரம் - ௩௯

இறை மாட்சி

அஃதாவது, அரசனது சிறப்பு. உலகம், கட்புலன்காணா இறைவன் வழித்தாமாறு போலக் கட்புலன் காண நிற்கும் அரசன் வழித்துமாகி அவனாற்காக்கப்படுதலின், அரசனும் றவன் எனப்படுவானாயினான். இக் கருத்தானே, 'நெல்லு

* திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை, மறைமலையடிகள் மாணவர், நாகை. சோ. தண்டபாணிப் பிள்ளையவர்களால் எழுதப் பெற்றது. அறத்துப்பால், தனி நூலாகக் கழக வெளியீடாக வெளிவந்துளது. பொருட்பாலுக்கு உரையெழுதி முடித்தற்கு முன்னர், ஆசிரியர் இவ்வுலக வாழ்வை நீத்தனர். கிடைத்த பகுதியைச் செல்வியில் இதுமுதல் வெளியிடுகின்றோம்.

முயிரன்றே நீரு முயிரன்றே - மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்' (புறம்-கஅகூ) எனவும், 'திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்' (திருவாய்மொழி, 34-8) எனவும், 'அனைவோர்க்கும் தெய்வம் - இலைமுகப் பைம்பூணிறை' (நீதிநெறிவிளக். உஎ) எனவும் சான்றோர் கூறுவாராயினர்.

இனி, இவ் வதிகாரத்தில் அரசனதங்கமும், அவன் மாட்சியும், அம் மாட்சியாலாம் பயனும் முறையே கூறுவான் வைத்த ஆசிரியர் முதற்கண் அவனுக்கு அங்கமாவன இவையெனக் கூ

நடுஅக. படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு.

(இ - ள்.) படை - படையும், குடி - குடிமக்களும், கூழ் - உணவுக்குக் காரணமான பொருளும், அமைச்சு - அமைச்சும், நட்பு - நட்பும், அரண் - அரணும், ஆறும் - (என்று சொல்லப் பட்ட) ஆறு அங்கங்களையும், உடையான் - உடையவன், அரசருள் ஏறு - அரசருள் சிங்கம்போல்வான். (எ - று.)

(இ - து.) அமைச்சு, அரண், பொருள், படை, நட்பு, குடி என்னும் ஆறங்கங்களையுடையவனே அரசன். (எ - ம்.)

அமைச்சு, அரண், பொருள், படை, நட்பு, குடி என நிற்பதே முறையாயினும், ஈண்டு முறைபிறழ்ந்து நின்றன செய்யுளாதலின். இவற்றை அங்கமெனல் வடநூல் வழக்கு. 'ஆறுமுடையான்' என முற்றும்மை கொடுத்துக் கூறியவதனால், அவற்றுள் ஒன்று குறையினும் அரசன் மாட்சி குறையும் என்பதாயிற்று. ஆசிரியர் பரிமேலழகர் குடியினை நாடென்றார். நாட்டை அகப்படுத்தியதே அரணாதலின் நாடு அரணுள் அடங்குதலானும், குடிமக்கள் இல்வழி ஏனை அங்கங்கள் இருந்தும் அரசு நடாத்துமாறில்லை யாதலானும், குடிமக்கள் இயல்பினை ஆசிரியர் குடிமை முதற்கயமை யீறாகப் பதின்மூன்றதிகாரங்களான் விதந்தோதுதலானும், பொருட்பா லியலதிகாரத்தொகை கூறிய போக்கியாரும் நாடு கூறும் அதிகாரத்தை அரணியலின் அடக்கி 'உருவல் லரணிரண்டு' எனக் கூறினாராதலானும் குடியென்பதற்கு நாடெனப் பொருள்கோடல் பொருந்தாமை காண்க. ஈண்டுக்கூறிய இவ் வாறங்கங்களையும் பின்னர் ஆறியல்களாக வகுத்து விரித்துரைப்பர்.

அரசனுக்கு அங்கமாவன கூறிய திது. (க)

அரசனது மாட்சி கூறுவன வருநான்கு குறள்கள்.

௩௮௨. அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
　　எஞ்சாமை வேந்தற் கியல்பு.

(இ - ள்.) வேந்தற்கு - அரசனுக்கு, இயல்பு - இயல்பாவது, அஞ்சாமை - நெஞ்சங் கலங்காமையும், ஈகை - கொடையும், அறிவு - அறிவும், ஊக்கம் - ஊக்கமும், இந் நான்கும் - (என்னும்) இந்த நான்கு குணங்களும், எஞ்சாமை - இடைவிடாது நிற்றல். (எ - று.)

(இ - து.) அரசனுக்கு மனவுறுதியும் கொடையும் அறிவும் ஊக்கமும் எப்பொழுதும் இருக்கவேண்டும். (எ - ம்.)

ஊக்கம் - உள்ளக் கிளர்ச்சி. அஞ்சாமை முதலியன வேந்தர்க்கு எப்பொழுதும் இருக்கவேண்டுமென்பார் 'எஞ்சாமை வேந்தற் கியல்பு' என்றார். எஞ்சாமை - குறையாமை.

வேந்தற் கியல்பாக வேண்டுவன நான்கு கூறியதிது. (உ)

அந் நான்கொடு சேரற்பால பிறகூறுவது வருங்குறள் :

௩௮௩. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
　　நீங்கா நிலனாள் பவற்கு.

(இ - ள்.) நிலன் ஆள்பவற்கு - நிலத்தினை ஆளும் வேந்தனுக்கு, (முற்கூறிய நான்கேயன்றித்) தூங்காமை - சோம்பாமையும், கல்வி - கல்வியுடைமையும், துணிவுடைமை - துணிவுடைமையும், இம்மூன்றும் - (என்னும்) இம்மூன்றும், நீங்கா - (ஒருபொழுதும்) நீங்கா (வாகல்வேண்டும்.) (எ - று.)

(இ - து.) சோம்பாமையும் கல்வியும் மனத்துணிவும் அரசனுக்கு எப்பொழுதும் இருக்கவேண்டும். (எ - று.)

தூங்காமை சோம்பாமையாதல், சோம்பலைத் தூக்கத்தொடு வைத்தெண்ணி 'நெடுநீர் மறவி மடிதுயி லென்குங் - கெடுநீரார் காமக் கலன்' (௬௦௫) என ஆசிரியர் மேற்கூறுமாற்றாற் பெறப்படும். தூங்காமை கல்வி துணிவுடைமை என இக்கூறிய மூன்றும் முறையே ஊக்கம் அறிவு அஞ்சாமை என முற்குறளிற் போந்த மூன்றனையுஞ் சார்ந்து அவற்றிற்கு உபகாரப்பட்டு நிற்கும். 'மூன்றும்' என்பதில் உம்மை முன்சென்ற நான்கையுந் தழுவலின் இறந்தது தழீஇயவெச்சவும்மை.

பாட்டானும் அரசனது மாட்சிக்கு ஆங் குணம் கூறப்பட்டது.

அக் குண நிகழ்தற்குரிய ஆறு கூறுவது வருங்குறள் :

௩௮௪. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு.

(இ - ள்.) அறன் இழுக்காது - அறத்தின் வழுவாதொழுகி, அல்லவை நீக்கி - அறமல்லவற்றை ஒழித்து, மறன் இழுக்கா - வீரத்தின் வழுவாத, மானம் - பெருந்தன்மையினை, உடையது அரசு - உடையவன் அரசன். (எ - று.)

(இ - து.) அறமும் கெடாமல், பாவமும் வாராமல், வீரமும் பழுதுபடாமல், மானமும் குலையாமல் அரசமாட்சிக்குரிய குணங்களை நிகழ்த்துபவனே அரசன். (எ - று.)

அறமாவது, இல்லறத்தார்க்குரியவாக முன் விதித்தவற்றைச் செய்தல்; அல்லவை நீக்கலாவது ஆண்டு விலக்கியவற்றை ஒழிதல். அறனென்றது இல்லறத்தையாதல் எற்றாற் பெறுதுமெனின் 'அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை' (குறள், ௪௯) என்றதாற் பெறுதும். வேந்தற்கியல்பெனக் கூறிய அஞ்சாமையும் துணிவுடைமையும் வீரத்தின்பாற் படுதலின் அவ்வீரத்தை நிகழ்த்தாவழி அரசன் மாட்சி குறைந்து மானங்கெடும். வீரத்தின் வழிப்பட்டு மிகை செய்தவழி அறங்கெடும். இவ்விரண்டுங் கெடாமே வீரத்தைச் செய்யவேண்டு மென்பார் மறத்தை இடைப்பெய்துரைத்தார். அரசர்க்கு வீரம் இன்றியமையாதேனும் அஃது அறத்தின் வழிப்படவேண்டுமென்பார் 'அறனிழுக்கா தல்லவை நீக்கி' யென விதிமுகத்தானும் மறைமுகத்தானும் அதனை முதற்கண் கூறினார். இக் கருத்தானே சங்கத்துச் சான்றோரும் 'மாண்ட - அறநெறி முதற்றே யரசின் கொற்றம்' (புறம், ௫௫) என்றார். 'அறனிழுக்காவறன்' 'மறனிழுக்காவறன்' என அரசற்கு அறனுமறனு மியைய வருதலின் அரசற்குரிய அறம் மறநிலையறமாயிற்று. இக்கருத்தானே யாம் முன்னர் அன்புடைமையென்னு மறங் கூறியவழி 'அறத்திற்கே யன்பு சார்பென்ப வறியார் - மறத்திற்கு மஃதே துணை' (குறள், எ௬) என்றதூஉ மென்க

அரசற்குரிய மறநிலையற மாட்சி கூறியதிது. (௪)

மறநிலையறத்தின் வழிப்பட்ட பொருளானுமாட்சி கூறுவது வருங் குறள் :

௩௮௫. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

(இ - ள்.) இயற்றலும் - (பொருளாவனவற்றைச்) செய்தலும், ஈட்டலும் - (அவற்றைச்) சேர்த்தலும், காத்தலும் -

(அவற்றைக்) காத்தலும், காத்த - காத்தவற்றை, வகுத்தலும் - (வரிசையறிந்து) கொடுத்தலும், வல்லது அரசு - வல்லவனே அரசன். (எ - று.)

(இ - து.) பொருளைச் சேர்த்து காத்து வகையறிந்து செலவிட வல்லவனே அரசன். (எ - ம்.)

பொருளாவனவற்றை என்பது வருவித்துரைக்கப்பட்டது. பொருளாவன, மணி பொன் நெல் முதலாயின. 'உறுபொருளு முல்கு பொருளுந்தன் ஒன்னார்த் - தெறுபொருளும் வேந்தன் பொருள்' (குறள், எ௫௬) என்பதால் அரசன் பொருளியற்று மாறு பெறப்படும். 'அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து - தீதின்றி வந்த பொருள்' (குறள், எ௫௪) என்பவாதலானும், 'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் - பொருளல்ல தில்லை பொருள்' (குறள் - எ௫௧) என்பவாதலானும், 'பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி - னது நோக்கி வாழ்வார் பலர்' (குறள், ௫௨௮) என்பவாதலானும், இயற்றிய பொருளை யீட்டிக் காத்து வகுக்குங்கால் அறத்தின்பொருட்டும் பொரு ளின் பொருட்டும் இன்பத்தின் பொருட்டும் வரிசையறிந்து வகுக்கவேண்டு மென்பதாயிற்று. ஆலயமெடுத்தல் அறக்கூழ்ச் சாலை யமைத்தல் முதலாயின அறத்தின்பொருட்டும், அமைச்சு முதலிய அங்கத்திற்காவன செய்தல் பொருளின்பொருட்டும், செய்குன்று இளமரக்கா முதலியன அமைத்தல் இன்பத்தின் பொருட்டுமாம்.

இவை நான்கு பாட்டானும் அரசனது மாட்சியே கூறப் பட்டது. (௫)

மாட்சியொடு பயனுங் கூறுவன வரும் ஐந்து குறள்கள் :

௩௮௬. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்.

(இ - ள்.) காட்சிக்கு எளியன் - (குடிகள்) காணுதற்கு எளியனாய், கடுஞ்சொல்லனல்லனேல் - (எஞ்ஞான்றும் யார் மாட்டும்) இன் சொலுடையனுமானால், மன்னன் நிலம் - அவ் வேந்தனது நாட்டை, மீக்கூறும் - (பிறநாடுகள் பலவற்றினும்) உயர்த்திப் பேசும் (உலகம்.) (எ - று.)

(இ - து.) எளிதிற் காணப்படுவனையும் இன்சொலுடைய வனையும் உள்ள அரசனை உலகம் புகழும். (எ - ம்.)

(தொடரும்)

காவியக் காதல்

[திரு. பி. எல். சாமி, பி. எஸ். ஸி.]

(செல்வி, சிலம்பு ௨௯, பரல்-௩. பக்கம் ௧௨௨-இன் தொடர்ச்சி)

உயர்ந்த காவியமும் சிறந்த காதலியும் பல முறைகளில் ஒத்திருக்கின்றனர். காவியம் பல முறை 'பயில் தொறும் நூல் நயந்' தந்து புத்தின்பந் தருகின்றது சிறந்த காவியத்தைப் படிக்கப் படிக்கப் புது நயங்கள் தோன்றும். அறிய அறிய அறியாமையைக் காட்டும், சிறந்த நூல்கள். இலேயேல் வள்ளு வர், செகப்பிரியர் போன்றோர் நூல்களில் புதுப் புது நலங்கள் தோன்றிக்கொண்டே இருக்காது. படிக்குந் தொறும் புத்தின் பமும் புத்தறிவும் தரும் சிறந்த நூல்களுக்கு என்றும் அழிவே யில்லை. அதுபோன்றே சிறந்த காதலி பழகுந்தொறும் புது நலம் தந்து, புத்தின்பம் ஊட்டுவாள். உலகில் எவையெவை வேண்டுகின்றோமோ அவையவையுமாகி, எத்தனை இன்பங்க ளுளவோ அத்தனையுமாகி, வேட்டதைத் தந்தும் கேட்டதெல் லாம் ஈந்து உதவுவாள் காவியக் காதலி. வள்ளுவரும்,

> "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
> மொண்டொடி கண்ணே யுள"

> "வேட்ட பொழுதி னவையவை போலுமே
> தோட்டார் கதுப்பினாள் தோள்"

என்ற குறள்களில் இதையே கூறியுள்ளார்.

> "உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
> கமிழ்தின் இயன்றன தோள்"

என்ற குறளில் தொடுந் தொறும் புத்துயிர் அளித்து, விடுந் தொறும் சாகாட்டை நாடும்படி செய்பவள் என்று கூறு ஒர்.

அத்தகைய காவியக் காதலி உலகப் பேரழகி கிளியோ பத்ரா. மூக்கும் முழியுமாக இருந்த அவளிடத்தில் அழகு கொட்டிக் கொழித்தது. கிளியோபத்ராவின் மூக்கின் நீளம் அரை விரல்கிடை குறைந்திருக்குமானால் உலக வரலாறே மாறி யிருக்கும் என்று ஒருவர் கூறினார். அவள் விரல் வளையத்தில் வைத்திருந்தாள், அண்டோனியோ, சீசர் ஆகிய மன்னர்களை. 'காற்றில் ஏறி அவ்விண்ணையும் சாடுவோம், கிளியோபத்ரா வின் கடைக்கண் பணியிலே' என்று அண்டோனியோ பாடினான். வீரன் அண்டோனியோ கிளியோபத்ராவை மண்டியிடச் செய்ய ரோமிலிருந்து படையுடன் வந்தான். வெற்றியுடன் எகிப்தில் நுழைந்தான். தனது அரசியல் அடிமை கிளியோபத்ராவை

பிடித்துவரும்படி ஆணையிட்டான். வந்தாள்! கண்டாள்!! வென்றாள்!!! அஃதாவது கிளியோபத்ராவை கண்ட அளவில் அண்டோனியோ அவளுடைய காதலடிமை ஆனான். "ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு" என்று அண்டோனியோ சொல்லவேண்டியதாயிற்று. 'நீரோரன்ன' கிளியோபத்ராவின் சாயல் "தீயோரன்ன" அவன் உரனை அவித்தது. அண்டோனியோவும் சீசரும் கிளியோபத்ராவை அறிய வந்தார்கள். அடைய வந்தார்கள். ஆனால், அவர்கள் அவளை முழுவதும் அறிய முடியவேயில்லை. தங்கள் அறியாமையை அறியுந்தொறுங் கண்டார்கள். மல்லரிடம் மலைத்தறியா மன்னர்கள் மலரினும் மெல்லியவளிடம் மலைத்தனர். காரணம் கிளியோபத்ரா காவியக் காதலைக் கற்றுத் துறை போகியவள். அவள் காவியக் காதலி. செகப்பிரியர் 'அண்டோனியாவும் கிளியோபாத்ராவும்' என்ற காவியத்தில் வெகு அழகாக கிளியோபாத்ராவை வர்ணித்துள்ளார்.

> "Age cannot wither her, nor custom stale
> Her infinite variety; other women cloy
> The appetites they feed, but she makes hungry
> Where most she satisfies; for vilest things
> Become themselves in her."

வயது அவளை வாட வைக்காது. பழக்கம் அவளது மாறும் புதுமையைப் புளிக்க வைக்காது. பிற பெண்கள் தெகட்டலாம். ஆனால், எப்போது அவளிடத்தில் இன்பத்தின் எல்லையை எய்தினோமென்று உணர்வானோ அக்கணமே அதன் குறைவை உணர்த்தி ஆசையைக் கிளறுவாள் என்று அழகாகக் கூறியுள்ளார்.

தமிழிலக்கியத்தில் காவியக் காதலியாகக் கருதத் தக்கவள் மாதவியே. காதலில் கண்ணகி தோற்றாள். மாதவி வென்றாள். காரணம் மாதவி கோவலனுக்கேற்ற காவியமாகத் திகழ்ந்தாள். கண்ணகிக்கு அது தெரியவில்லை. கோவலன் அழகுணர்ச்சி நிரம்பியவன். மாறாத கண்ணகி புளித்தாள். ஆனால், மாறி மாறிக் கோலங்காட்டிய மாதவி இனித்தாள். அருங்கலைகளை மாதவிபால் கண்டான் கோவலன். வீணைச் செல்வம் அவனிடமிருந்தது. ஆடல் பாடலில் ஈடுபாடுடைய கோவலன் மாதவியின்பால் 'விடுதலறியா விருப்பினன்' ஆகியதில் வியப்பொன்றுமில்லை. காதற் காவியத்தை கரைத்துக் குடித்தவள் மாதவி. இல்லற மன்றிப் பிறிதொன்றறியாள் கண்ணகி. ஊடலும் கூடலும் துனியும் புலவியும் கோவலனுக்குக் காட்டத் தெரிந்தவள் மாதவி. இளங்கோ 'ஆடலும் கோலமும் அணியுங் கடைக்கொள ஊடற் கோலமொடு இருந்தோனுவப்ப' என்று மாதவி

யைப் பற்றிக் கூறுகின்றார். கிளியோபத்ரா அண்டோனியோ வைச் சிரித்துச் சிரித்து ஊடலில் ஆழ்த்தி சிரித்துக் கூடலில் கூட்டினாள் என்று செகப்பிரியர் சொல்வதை நோக்கவேண்டும்.

> புப்பயன் கொள்ளு நெடுநிலா முற்றத்துக்
> கலவியும் புலவியுங் கோவலர்க் கெதிரி
> கோலங் கொண்ட மாதவி.............."

என்று இளங்கோ மாதவியின் காதல் திறமையைக் காட்டுகின்றார். முப்பத்திரண்டு ஓமாலிகை ஊறின நீரில் குளித்து அகிற் புகையில் கூந்தலை உலர்த்திக் கத்தூரி ஊட்டி, அணிகலன் பூட்டி, நீலச் சாதரை உடுத்தி கோவலனைக் களிப்பூட்டினள் மாதவி. கலவியும் புலவியும் கோவலற்கு அளித்து, மலைப்பும் திகைப்பும் கொடுத்து அவன் அறிதொறும் செறிதொறும் அறியாமையைக் காட்டினாள் மாதவி. காலமும் பழக்கமும் காதலனுக்கு உவர்ப்பூட்டாதபடி உவப்பூட்டத் தெரிந்தவளே காவியக் காதலி. இதையே வள்ளுவர்,

> "அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
> செறிதோறுஞ் சேயிழை மாட்டு"

என்ற அருமையான குறளில் அழகாகக் கூறியிருக்கின்றார்.

காவியக் காதலி அறியும்படி திறந்த புத்தகமல்ல. பார்த்த அளவில் புரியும்படியான காவியமும் அல்ல. அறியுந்தொறும் அறியாமையை ஊட்டி, படிக்குந்தொறும் புத்தின்பந் தந்து, புரியாத புது நயங்கள் புதைந்துள்ள புத்தகமே காவியக் காதலி. அவள் என்றுமே அருந்தித் தெகுட்டாத விருந்து. பழக்கம் புளிக்க வைக்காப் புதுமை. காலம் கருகவைக்கா இளமை. கேட்டதும் வேட்டதும் காட்டும் கவின்பெறு மந்திரப் பொற் பெட்டகம். இறுதியில் அவள் செறியுந்தொறும் அறியுந் தொறும் அறியாமையை அறிவிக்கும் அணங்கு.

பெண்ணின் அழகில் வியப்புத் தோன்றுகிறது. அவள் ஓர் உணர்வு வடிவான அணங்கு. அழகு வடிவான மயிலாகின் றாள். அஃதாவது அவள் ஓர் அழகுப் புதுமை. தொடர் பில்லாத அவர்களது அன்புபற்றி ஒரு வியப்புத்தோன்றுகிறது. அப்போது அவள் ஒரு அன்புப் புதுமை. இறுதியில் அவள் அறியுந்தொறும் அறிய முடியாப் புதுமையாக இருக்கின்றாள்' அஃதாவது அவள் ஓர் அறிவுப் புதுமை. ஆக காவியக் காதலி அழகுப் புதுமையாகவும், அன்புப் புதுமையாகவும், அறிவுப் புதுமையாகவும் இருக்கவேண்டும். அவளிடை அவனிடைத் தோன்றும் காதலும் காவியக் காதலாகிறது.

வள்ளுவர் நாள்

[கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை அவர்கள்]

பொதுமறை

உலகம் போற்றும் ஒப்பில் ஒருவராம் திருவள்ளுவநாயனார், திருநான்மறையின் பிழிவாகிய திருக்குறள் என்னும் செந்தமிழ்ப் பொதுமறை தந்தருளியவர். அம்மறை எக்காலத்துக்கும், எம்மொழியார்க்கும், எந்நெறியினர்க்கும், எப்பாலவர்க்கும், எந்நாட்டவர்க்கும் ஒப்பமுடிந்த உலகப் பொதுமறையாய்த் திகழ்கின்றது. அப்பெருமானாரை என்றும் நினைவு கூர்ந்து தொழுதுவருகின்றோம். அத் தொழுகையினை ஆண்டுக்கு ஒருமுறை சேர்ந்தும் தனித்தும் சிறப்பாகக் கொண்டாடுவதற்குப் பொருத்தமான ஒரு தமிழ்த் திருநாள் அமைத்தல் வேண்டும். அத் திருநாளினைத் தமிழகத்தாரும், இலங்கை, கடாரம், மலேயா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, வட இந்தியா முதலிய இடங்களில் வாழும் தமிழ்நன் மக்களும், உலகத்தாரனைவர்களும் அன்பினால் ஒருங்கு கொண்டாடுதல்வேண்டும். அந்நாள் ஆட்சியாளர் விடுமுறை நாளாக விளங்குதல் வேண்டும்.

வாய்ப்புநாள்

கல்வியும், அறிவும், ஒழுக்கமும், உழைப்பும், ஒற்றுமையும், ஊக்கமும், செல்வமும், செழிப்பும், சேர்ந்துவாழ் திறனும், அன்பும், உதவியும், ஆண்டவன் நினைவும், ஆன்றோர் வழிபாடும், ஆண்மையும் தோன்றப் 'பொங்கு மங்களம் எங்கும் தங்கும் நாள் பொங்கல் திருநாளேயாம்.' பொங்கல் திருநாள் தமிழர் தனி நாகரிகப் பண்பாடு உணர்த்தும் சால்புநிறை பெருநாள். அந்நாள் தைமாதப் பிறப்பு என்றும், மாதப்பிறப்பு என்றும் வழங்கப்பெறும். மாதப்பிறப்பு என்பதே சிற்றூர், பேரூர், நாடு, நகர மக்கள் அனைவர்களாலும் நவிலப்படும் நன்மொழி. இதனாலேயே தமிழர்தம் தனியாண்டுப் பிறப்புத் தைத்திங்கள் என்பது ஐயுறவின்றித் துணியலாகும்.

தைமாதப் பிறப்பில் புதுவிளைவுப் பொருள்களும், புதுப் பாண்டமும், புத்துணர்ச்சியும், புது மகிழ்வும், மக்கள் அனைவர்களும் வேற்றுமையில்லாது கூட்டுறவு முறையில் ஒற்றுமையுறுதலும், புத்தாடை உடுத்தலும், முற்றத்துப்பொங்கல் இடுதலும், இல்லையென்னாது ஈத்துவத்தலும், சுற்றஞ்சூழலும் மற்றும் பிறவும்

மேற்கொண்டு எல்லாரும் இன்புற்று ஒழுகிவருகின்றனர். நெறி முறையிற் பார்க்கினும் படைப்பின் தோற்றம் தைப்பிறப்பை ஒட்டியே காணப்பெறும். எனவே, தமிழாண்டுத் தொடக்கம் தைத்திங்கள் முதலாகக் கணக்கெடுப்பதுவே சாலப்பொருத்த மும் முறைமையும் ஆகும். அம் முறைபற்றிப் பல ஆண்டு களாக நம் திருவள்ளுவ நாயனார் திரு ஆண்டு தைத்திங்கள் முதல் கணக்கிடப்பட்டு வருகின்றது. இம்முறை, தமிழுக்குத் தனிவரம்பாய் எவ்வகையாற்றலும் குறைவிலா நிறைவாய் மும் மொழிப் புலமையும் செம்பொருட்டுணிவும் சேர்ந்து திகழ்ந்து மறைந்த மறைமலையடிகளாரால் நிறுவப்பட்டதாகும். இப் பொழுது வள்ளுவர் யாண்டு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தைந்து என வழங்கிவருகின்றோம். இது கிறித்துவ யாண்டுடன் முப்பத்தொரு யாண்டுகள் கூட்டிக் கணக்கிடுவ தால் அமைவதாகும்.

தொன்மைத் தமிழக ஆண்டு ஆவணிமுதல் கணக்கெண் ணப்பட்டு வந்ததாகத் தெரிகின்றது. இஃது ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்துள் ஐந்திணை வகுத்து, அவற்றிற்கு முதல் கரு உரிப்பொருள்கள் வகுத்து மேற்கொண்ட முறைமை யாலும் வலியுறும். அது :

"காரும் மாலையும் முல்லை குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்."

(தொல். பொருள். அகத். சு.)

எனவரும் நூற்பாவாகும். கார்காலமே ஆண்டுத் தொடக் கம் என இந் நூற்பாவின்கண்ணும் காண்க. கார்காலம் என் பது ஆவணியும் புரட்டாசியுமாகும். உலகவழக்கின்கண்ணும் ஆடி அறுதி எனப் பயின்று வருவதும், சிறப்புக் கொண்டாடி வருவதும் சில இடங்களில் இன்றும் நிகழ்கின்றன. ஆடி அறுதி எனவே ஆவணி ஆண்டுத் தொடக்கம் என்பதும் தானே பெறப் படும். கார்காலமே உடனுறை வாழ்க்கைக்கு ஏற்ற உரியகாலம் என்பது ஆன்றோர் துணிபு. அக்காலம் வெப்பமும் தட்பமும் மிகாது இடைநிகர்த்தவாய் நீரும் நிழலும் பயந்துள்ள சீருடைக் காலம் என்க. இனி ஆசிரியர் நச்சினார்க்கினியாரும், "கால வுரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்க ஓரை முதலாகத் தண் மதிக்கு உரிய கற்கடக ஓரை யீறாக வந்து முடியுந்துணை ஓர் யாண்டு" என இந் நூற்பா உரையின்கண் கூறியுள்ளனர்.

தொல்லோர் சென்ற நெறிவழியே தென்தமிழ்ப் பகுதிக் கண் புதுவதாக அமைத்த கொல்லம் என்னும் நகர்த் துவக்கக் கணக்கு ஆவணித் திங்கள்முதல் கையாளப்பட்டு வருகின்றது.

இப்பொழுது கொல்லம் யாண்டு ஆயிரத்து ஒருநூற்று முப்பஃ தென்ப. ஐயுறுப்பாகிய பஞ்சாங்கத்துக் கணக்கு எடுக்கப்பட்டு வருவது சித்திரை முதலாகும். இவ் யாண்டு தொடர்ந்து எண் கணக்கு அமைக்க ஒண்ணுதவாறு பெயர்முறையான் அமைக்கப் பெற்றுள்ளது. அப் பெயரும் கிழமை, திங்கள், நாள் முதலியன போன்று பிரபவ முதல் அட்சய ஈறாக அறுபதாகக் காணப்படு கின்றது. இக் கணக்கால் தொடர்பெண் காண்பது எங்ஙனம்?

தைத்திங்கள் பொங்கல் விழாவுடன் மட்டும் அமையாது தொன்றுதொட்டுக் கன்னிப்பெண்கள் நாடு வளமுறவும் நற் பண்பு வாய்ந்த மணமகன் தங்கட்கு எய்தவும் நோன்பிருந்து தாயுடன்கூடி நீராடவும் செய்வர். அச் செயல் 'பரிபாடல், ஐங் குறுநூறு, நற்றிணை, கலித்தொகை முதலிய சங்க மருவிய தொகைநூற்கண் நல்லிசைப் புலவர்களால் பாராட்டப் பெற் றுள்ளது. இந் நோன்பும் நீராட்டும் திருவாதிரை நோன்பும் மார்கழிநீர் ஆடலும் எனத் தற்போது வழங்கப்படுகின்றன. அதற்குக்காரணம் முன்நாளில் மாதங்களைத் திங்கள்வழி அளவை யாகவும் கொண்டு வழங்கிவந்துள்ளனர். அம்முறையில் மார்கழித் திங்கள் மதிநிறை நன்னாள் தொட்டுத் தைத்திங்கள் ஆகும். எனவே, மார்கழித்திங்களில் இப்பொழுது செய்யும் நீராடல் பண்டையோர் கணக்குப்படி தைந்நீராடலே ஆகும்.

நாண்மீன்களுள் திருவாதிரை செம்மீன் எனச் சிறப்பாக அழைக்கப்படும். அம்மீன் இன்றும் வானில் பொன்போல் மிளிர்வதைக் காணலாம். மார்கழித் திருவாதிரைத் திருநாள் முழுமுதல்வன் விழுமிய முதல்வியோடு வெளிப்பட இயைந்து உலகத் தோற்றத்தின் பொருட்டு அம் முதல்வியை இயக்கும் தனித் திருநாளாகும். திருவாதிரைத் திருநாள் பத்து நாள் விழா ஆதலின் திருவாதிரைக்கு முன் ஒன்பது நாட்களுக்கும் ஆற்றல் ஒன்பதும் வெளிப்படுங் குறிப்பாகும். ஆற்றல் ஒன் பதும் நவசத்தி எனப்படும். திருவாதிரைத் திருநாள் உலகத் தோற்றத் திருநாளாகும். அந்த முறையில் திருவாதிரைத் திரு நாளுக்குக் களி என்னும் தமிழகச் சீர்சால் உணவு படைக்கப் படுகின்றது. இதற்குத் திருவாதிரைக் களி என்னும் பெயரும் வழங்கி வருகின்றது.

இதனால் தைப் பொங்கல் திருவிழாத் தமிழகத் தனிப் பெருவிழா என்பது தானே போதரும். பொங்கல் விழாவின் முதல்நாள் ஞாயிற்றுப் பொங்கலும், இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கலும், மூன்றும் நாள் ஆன்றோர்களைப் போய்க் காணும் காட்சிச் சிறப்பும் தமிழகம் எங்கணும் நிகழ்ந்து வருகின்றன. ஞாயிற்றுப் பொங்கல் கடவுளின் அறிவிற்கும், மாட்டுப் பொங்

கல் கடவுளின் ஆற்றற்கும், ஆன்றோர் காட்சி கடவுளின் அன்புக்கும் அடையாளமாகக் கொண்டாடப் பெறும் குறிப்பாகும்.

அன்பின் குறிப்பாம் ஆன்றோர் காட்சி விழாவை அன்புப் பிழம்பாம் திருவள்ளுவ நாயனார் திருவிழாவாகக் கொண்டாடப் பெறுவது முறைமையும் சிறப்பும் ஆகும். உலகப் பொதுச் சான்றோரும் தமிழகச் சிறப்புச் சான்றோரும் வள்ளுவரேயாவர். அவரினுமிக்கார் உளரென உள்ளவும் ஒண்ணுவரோ அறிஞர்? ஆகவே அந்நாளை வள்ளுவர் நாள் ஆக அனைத்துலகமும் கொண்டாடப் பெறுமாறு செய்வதும் தமிழ்மண்டல ஆட்சி விடுமுறை நாளாக்குவதும், அதற்கு வேண்டுவன செய்வதும் நம் அனைவர்களின் பெருங்கடமையும் உரிமையும் ஆகும். ஆட்சி விடுமுறைக்கு நாம் அனைவரும் ஒருமுகப்பட்டு ஒத்த கருத்தினராய் வேண்டிக்கொள்வோமாயின் மிகவும் எளிதாய் உடனே நடைமுறைக்குக் கொண்டுவரும் பேறு செவ்விதாய் அமைந்துவிடும். இந்நாளை வள்ளுவர் நாளாகக் கொண்டாடுவதற்கு வேறு எவ்வகையான தடங்கலும் ஏற்படுவதற்கு இடன் இல்லையென்றே நம்புகின்றேம். அங்ஙனம் அமைக்க அனைவர்களையும் ஒத்துழைக்குமாறும் ஏனை அன்பர்கள் அனைவர்களுக்கும் உணர்த்தி உழைக்கச் செய்யுமாறும் உதவ வேண்டுகின்றேம். இதுபோல் வாய்ப்புடைத் திருநாள் வேறொன்று அமைவது அருமையாகும். இது தமிழன்பர்கள் பலர்க்கும் ஒத்த கருத்தாகவும் உள்ளதென்பது அவர்கள் பேச்சாலும் எழுத்தாலும் காணலாம்.

இப்பொழுது வள்ளுவர் திருநாள் இருவேறு வகையாகக் கொண்டாடப் பெறுகின்றது. ஒன்று மாசி உத்திரம். இது, யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர் பெருமானால் மேற்கொள்ளப்பட்டது. மற்றொன்று வைகாசி அனுசம். இது திருவள்ளுவர் திருநாள் கழகத்தாரால் கைக்கொண்டதாகும். ஏறத்தாழ மூந்நூறு நானூறு ஆண்டுகளுக்கு முன்னுள்ளதாகத் தோன்றும் மயிலாப்பூர்த் திருவள்ளுவர் திருக்கோயிலில் இவ்விரண்டும் நிகழ்கின்றன. இவ்விரண்டு நாட்களுக்குள் வைகாசி அனுசமே பெருவரவிற்றாகக் கொண்டாடப்படுகின்றது. அங்ஙனம் கொண்டாடுவோரையும் மனமொத்து இணங்கித் தை மூன்றும் நாளாக இனிக் கொண்டாடிவரும் படியாகக் கேட்டுக் கொள்கின்றேம். இலங்கை முதலான வெளி நாட்டின் உள்ளாரையும் இங்ஙனமே கொண்டாடி வரும்படி வேண்டிக்கொள்கின்றேம். நிகழ்ந்து வருவதை மாற்றுவது பலருக்குப் புதிது போன்று காணப்படும். புதிது அல்ல என்பதும் முன்னும் ஒரு முறை மாற்றப்பட்டுள்ளதென்பதும் பலரறி உண்மையாகும்.

புளிய மரம்

[திரு. சு. அ. இராமசாமிப் புலவர்]

புளியமரப் பெருமைதனைச் சங்க நூல்கள்
புகழ்ந்தோதும் வகையதனைப் புரிந்தி டாமல்
எளியமரம் ஆகஇந்த உலகந் தன்னில்
இலங்கியது நிற்கின்ற தன்மை கொண்டு
அளியின்றி அம்மரத்தை அழித்து நாளும்
அடுப்புவிற காக்கிடவே அந்தோ இந்தக்
களியளிக்கும் புளியின்விலை கனமாய்க் கூடி
கவலைகொள நிற்கின்ற தன்மை பாரீர். (க)

வெல்லவிலை தனிலும்அது மேலாய்ச் சென்று
வெல்லவிலை யா? அதுதான் வெல்லந் தன்னை
நல்லமனத் தோடின்று நானுமக்கு
நவிலுகிறேன் ஒருமொழிதான் நாடி நின்று
பொல்லாத புளியின்விலை புவியில் நன்கு
பொன்விலையாய்ப் போய்விட்ட தாகை யாலே
எல்லாரும் புளியங்கண் இரண்டெடுத்து
இப்புவியில் நடத்தொடங்கின் இனிமே லேனும். (உ)

நடுங்கவைக்கும் புளியின்விலை கீழே போகும்
நாடுபுகழ் சோழவள நாட்டி லேயும்
கடுங்காற்று வீசியதால் கணக்கி லாமல்
கண்டபடி புளிமரங்கள் வீழ்ந்து விட்ட
நெடுங்கடல்சூழ் பேருலகில் இனியும் முன்போல்
நிலைத்துநின்று புளிவிளங்க நினைப்பீ ராகில்
எடுங்களுட னேபுளியங் கொட்டை தன்னை
இதுஉமக்கு உறுதிதர இயம்பி னேனே. (ங)

செய்திகளும் குறிப்புக்களும்

(க) தமிழ் ஆட்சிமொழியாக வேண்டும்

கடந்த 21—11—54ல் தல்லாகுளம் அருகே உள்ள இடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட காமராசர்நகர் பெயர்ப் பலகையைத் தமிழ்நாடு காங்கிரசுக் குழுத்தலைவர் திரு. எல். எஸ். கரையாளர் திறந்து வைத்தார். இந்த விழாவிற்கு மதுரை மாவட்டக் காங்கிரசுக் குழுத்தலைவர் திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார்.

முதலமைச்சர் திரு. காமராசரவர்கள் தமக்களிக்கப்பட்ட வரவேற்புகளுக்குப் பதிலளிக்கும் வகையில் பேசியபோது, "மதுரையில் தமிழ்ச் சங்கங்கள் இருக்கின்றன, இலக்கியங்களுக்குப் பெயர் பெற்ற இடம் மதுரை. தமிழ்மொழி ஆட்சிமொழியாக இருக்கவேண்டும். பிற மொழிகளில் உள்ள இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும். ஆர்வமுள்ள தமிழறிஞர்கள் இந்த வேலையைச் செய்ய முன் வரவேண்டும். மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் இப் பணியைச் செய்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். அல்லது யார் வேண்டுமானாலும் இப் பணியில் ஈடுபடலாம். இப் பணியைச் செய்ய யார் முன்வந்தாலும் அவர்களுக்கு அரசாங்கம் உதவிசெய்யத் தயாராக இருக்கிறது. அரசாங்கத்திற்கு இருக்கும் அதிகப்படியான வேலைகளால் இதுபோன்ற பணிகளைக் கவனிக்க இயலாது போய்விடுகிறது. தமிழ்மொழியில் ஆர்வமுள்ளவர்கள் யாராக இருந்தாலும் இப்பணியைச் செய்ய முன்வர வேண்டுகிறேன்" என்று கூறினார்.

குறிப்பு: தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்று கூறும் முதலமைச்சரின் முறைமையும் மொழிப்பற்றும் பாராட்டற்குரியவே. அமைச்சர் போன்றார் அடுத்து முயன்றால் ஆகாதனவும் உளவோ?

(உ) திரு. ஓமந்தூரார் கருத்துரை

கடந்த 4—12—54-ல் சென்னை அரசாங்க மேல்அவையில் ஆட்சித் தலைவர் சொற்பொழிவின்பின் பலர் பேசினர். அக்காலை முன்னாள் முதலமைச்சர் திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் கூறியதாவது:

" இப்பொழுது இம்மாநில ஆட்சியே நடைபெறுகிறது. தாய்மொழி ஆட்சிமொழியாக இருக்கவேண்டும். மனமிருந்தால் வழியுண்டு. மாநில முழுதும் தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டுவருவது இயலாததாயின் மாவட்ட வரிசையாகவாவது தாய்மொழியை ஆட்சிமொழியாக்க முற்படவேண்டும் "

குறிப்பு: ஓமந்தூராரின் கருத்துரை கருத்தாழமுடையது. தமிழ் ஆட்சிமொழி ஆவதற்கு ஆட்சியாளரின் உள்ளப்பாங்கே தடையாக உளது எனில் அது மிகையாகாது. அந்நிலை மாறவேண்டும்.

(ங) புதிய கல்வித் திட்டமும் புது முயற்சியும்

சென்னை மாநில, துவக்கக் கல்வித் திட்டத்தை ஆராய்ந்து கருத்துரை வழங்குவதற்கென, டாக்டர் அழகப்பச் செட்டியாரவர்கள் தலைமையில் ஆய்வுக்குழுவொன்றை ஆட்சியாளர் நிறுவியுள்ளனர். புதிய கல்வித்திட்டம் பற்றிய இப்புது முயற்சி, அரசியல் சட்டத்தில்

பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் கட்டாயக் கல்வியை நடைமுறைக்குக் கொண்டு வருவதாகும் என்றும், அந்த நோக்கத்துடன், இம்மாநிலத்திற்கேற்ற சிறந்ததொரு திட்டத்தை இக்குழு தயாரிக்கும் என்றும் சொல்லப்படுகிறது. அடுத்துவரும் பள்ளிக்கூடப் புத்தாண்டில் இத்திட்டம் நடைமுறைக்கு வரும் வகையில் முயற்சிகள் நடைபெறுகின்றன. இத்திட்டத்தை ஆராய நிறுவப்பட்டுள்ள குழுவின் விவரம் வருமாறு :—

டாக்டர் ஆர். எம். அழகப்பச் செட்டியார் (தலைவர்), சென்னைக் கல்வித்துறை இயக்குநர், திரு. என். டி. சுந்தர வடிவேலு ; திரு. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு ; திரு. கோ. அருணசலம், பி. கே. என். ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாலயா, கோயம்புத்தூர் ; திரு. எம். அருணசலம், பி. கே. என். உயர்நிலைப் பள்ளி, திருமங்கலம் ; திரு. வி. எஸ். கோபாலகிருஷ்ண ஐயர், எம். சி. டி. எம். உயர்நிலைப்பள்ளி, சென்னை.

குறிப்பு : துவக்கக் கல்வித் திட்டத்தில் சீர்திருத்தம் காண விழையும் ஆட்சியாளரின் முயற்சியை வரவேற்கிறோம் - பாராட்டுகிறோம். ஆனல் உருவாகப்போகும் புதுத்திட்டம் தமிழக மக்களுக்குக் கல்வித் துறையில் அனைவரும் முன்னேற ஒத்தவாய்ப்பளிக்கும் உயரிய திட்டமாக இருக்குமா என்பதைப் பொறுத்திருந்து காண்போம். புதிய திட்டத்தை நன்கு விளம்பரப்படுத்திக் கல்வித்துறை அறிஞர்கள் ஒப்புதல் பெற்றுப் பின் ஓர் ஆண்டு கழித்தே நடைமுறைக்குக் கொண்டுவருதல் வேண்டும்.

மதிப்புரை

ஞானமிர்தம்

அண்ணமலைப் பல்கலைக் கழகத்தார் வெளியீடாக, க. **'ஞானமிர்தம்'** உ. **'பரதசங்கிரகம்'** ௩. **'கொங்குநாட்டு வரலாறு'** ௪. **'தமிழிலக்கியம்'** என்னும் அழகமை நூற்கள் நான்கு வரப்பெற்றேம். அவற்றுள் **'ஞானமிர்தம்'** சிறந்த பழைமைவாய்ந்த தமிழ் நெறிப் பண்பாட்டின் செம்பொருட்டுணிவை விளக்கும் சிறந்த பெரு நூலாகும். செம்பொருட்டுணிவெனினும் சித்தாந்தம் எனினும் ஒன்றே. இதன் பதிப்பாசிரியர், சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், வித்துவான். திரு. ஔவை, சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் (தியாகராசர் கல்லூரி, மதுரை) நன் முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது.

இந்நூல் சிறந்த முன்னுரை முதலியவற்றோடு அருஞ்சொற்பொருள் அகர நிரல் ஈருக எறத்தாழ அறுநூறுபக்கங்களைக் கொண்டது. செந்தமிழையும் செந்நெறியாம் சித்தாந்த சைவத்தையும் மெய்யுணர்வுடன் தொல்லோர் ஓம்பிய எல்லையிகவாது, நல்லமுறையில் பல்லாற்ருனும் கேட்டோரும், கண்டோரும் நாட்டம் மருள ஓம்பிவரும் 'திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் பத்தொன்பதாம் பட்டத்து எழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமி நாதத் தம் பிரான்சுவாமி அவர்கள்தம் நிழலுருவத்திருமேனியும் இருபதாம் பட்டத்து எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தம் நிழல் உருவத்திருமேனியும், இராஜராஜ அபயகுல சேகர சோழ

மகாராஜா (கி. பி. 985—1013) அவர்தம் உருவத்திருமேனியும் கண் கவர் வனப்பினதாய் இதன்கண் திகழ்கின்றது.

நூலாசிரியர் வாகீச முனிவரனார் ஆவர். இவர்தம் இயற்பெயரும் பிறவும் விளக்கமுறத் தோன்றற் கிடனின்றெனத் தெரிகின்றது. இவர் தம் ஆசிரியர் பரமானந்த முனிவராவர். இவர் சென்னையை அடுத் துள்ள கோடலம்பதியில் (கோடம்பாக்கம்) வீற்றிருந்து சித்தாந்த சைவத்தைப் பரப்பியருளினர். பின் கோனகி சந்தானக் கிளையாம் திருநெல்வேலி மாவட்டத்துத் திருவாலீச்சுரத்துத் திருமடத்துக்குத் தலைவராயினர். இவர், இரண்டாம் இராசாதிராசன் காலத்திருந்தவர் எனத் தெரிவதால் பன்னிரண்டாம் நூற்றாண்டாகலாம். இதன் உரை காரரைப்பற்றி எதும் தெரிவதற்கிடனின்றென்ப.

நூல் சித்தாந்தக் கருவூலமாகிய இறைவன் நூலாம் மெய்யுணர் ஆகமங்களின் பிழிவாய்த்திகழ்கின்றது. எழுபத்தைந்து செவ்விய அகவற் பாக்களையுடையது. அவ்வகவற்பாக்கள் நான்கடிச் சிறுமையும் ஐம்பத்தாறடிப் பெருமையும் கொண்டனவாக ஆயிரத்து எழுநூற்று நான்கடிகளோடு திகழ்கின்றன. “சம்பியஞானம்” முதலிய பல பெரும்பிரிவுகளையும், “உயிர்கட்குப் பற்றுவது பரமன் சீர்பாதம்” முத லிய பல உட்பிரிவுகளையும் கொண்டுள்ளன. இதன் நடை சங்க மிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப்புலவர் நடையேயாகும். முப் பொருள் உண்மையினை இத்துணைச்செம்மையாக பண்டைத்தண்டமிழ் நடையில் யாத்த வண்டமிழ் நூல் வேறு எதுங் காண்டலரிது. மெய்ப் பொருள்களை (தத்துவப் பொருள்களை)த் தூயதமிழ் நடையில் யாத்த முதற்பெரும் நூலும் இதுவேயாகும். அம்மட்டோ வடமொழிக்கண் ணுள்ள சிவகாம நூற்பொருளும் கருத்தும் செந்தமிழின் பாற்படயாத் தாலன்றித் தென்றமிழ் நாட்டார்க்கு நின்று நிலவும் பயன்தராதென மன்றுளார் திருவருளால் உணர்ந்து மொழிபெயர்த்துப் பின்னு ளார்க்கு வழிசெய்த பெருங்குறிக்கோளும் உடையதாகும். இது சிவஞான போதத்துக்கும் காலத்தால் முற்பட்டது.


இந்நூலைச் செந்தமிழ் அன்பர்களும் சித்தாந்தச் செந்நெறிச் செல் வர்களும், மெய்ப்பொருள் வேட்கையுடைய பெருமக்களும் இந்நூலை வாங்கியும், வாங்குவித்தும், கற்றும், கற்பித்தும் தமிழகநெறி முறை கண்டு பெருமை கொண்டு உலகிடைப் பரப்பவேண்டுவது அவரவர் தம் உயரிய உயிர்க் கடனாகும். ‘ஞானத்தின் மிக்க கொடையின்மை யான்’ இந்நூல் பரவத் துணைசெய்வது பிறவிப்பயனாகும். இந்நூலையும் இது போன்ற செம்மைசான்ற பிற நூல்களையும் ஓவாது வெளியிட்டுச் செந்தமிழ் ஓம்பிவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார்க்குத் தமி ழுலகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது. காலச் செவ்வி நோக்கிச் சாலச் சிறந்த இந்நூலை எற்றகாலத்து வெளிப்படுத்தியமை பாராட்டத் தக்கது. அழகிய எழுத்து, நிறைந்த அடிக்குறிப்பு, சிறந்த கட்டடம். இதன் விலை ரூபா. 3-4-0.

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.




மறைவு :

30—12—1954



கு க்குடி அடிகளார் 27—12—1954 அன்று சென்னை ...சவசித்தாந்த
நூற்பதிப்புக் கழக விற்பனை நிலையத்துக்கு எ... ...ருளிக்
கழக நூல்களைப் பார்வையிட்டருள...



குன்றக்குடி அடிகளார் சென் ஈ அப்பர் அச்சகத்து எழுந்தரு
அச்சுப்பொறி யப் பார்வையிட்டரு



குன்றக்குடி அடிகளார் கழகத்துக்கு எழுந்தருளிய நினைவுக் காட்சி.

உட்கார்ந்திருப்பவர்: (இடமிருந்து வலம்) 1. அடிகளாரின் செயலாளர், திரு. கே. எம். சுப்பிரமணியம், 2 திரு. கு. அருணாசலக் கவுண்டர், 3. கழக ஆட்சிப்பொறுப்பாளர், திரு. வ. சுப்பையா பிள்ளை, 4. குன்றக்குடி அடிகளார் சிவத்திரு. அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள், 5. திரு. ப. இராமநாத பிள்ளை, 6. திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை, 7. மேலாளர், திரு. வ. ரா. சிவநாயகம் பிள்ளை.

நிற்பவர்: கழக, அச்சக அலுவலாளருள் சிலர்.



சிலம்பு ௨௯ — திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, மார்கழி — சனவரி, 1955. — பரல் ௫

குன்றக்குடி அடிகளார் எழுந்தருளல்

குன்றக்குடி அடிகளார் சிவத்திரு. அருணசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தமிழ்நாடெங்கும் காலிற் சென்று செம்பொருட்டுணிவாம் சித்தாந்த சைவத்தைத் தொன்மைச் சான்றோர் பரப்பிய நன்முறைவழியே பரப்பிவரும் திருத்தொண்டு நானிலம் அறிந்து நகையும் உவகையும் கொள்ளும் நற்றொண்டென்பது யாவரும் போற்றிப் புகழும் பொருவில் மொழியால் உணரலாம். அம்மட்டோ 'அருள்நெறித் திருக்கூட்டம்' எனும் மாப்பெரும் கழகம் ஒன்றைத் தம் திருமடத்தமைத்து அதன் கிளைகளாக நூற்றுக்கணக்கான கழகங்கள் தமிழ்நாடெங்கணும் நிறுவப்பெற்று நிகழ்ந்துவருகின்றன. அவற்றின் பொருட்டுச் செய்தித்தாள்களும் வெளியீடுகளும் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் சார்பாக தந்நேரனைய புலவரும் பொன்னேரனைய அன்பரும் அறிஞரும் ஆங்காங்குச் செந்தமிழையும் சிவநெறியையும் விரிவுரை வாயிலாகப் பரப்பிவருகின்றனர்.

அவ்விரிவுரை கேட்டு உளந்திருந்து முயர்வெய்தி உண்மையுணர்ந்து நன்மை கடைப்பிடித்து நல்வாழ்வு எய்தி வருகின்றவர் பலராவர். செல்லும் இடங்களில் எல்லாம் நிகழும் நிறைகுடம், விளக்கு, பல்லாண்டு, பாராட்டு, பூமாலை, புலமாலை, தோரணம், காவணம், பல்லியம், திருவுலா; திருமுறை முழக்கம், திருவடிவிளக்கம், அண்ணலார் அடியார்க்கமுதூட்டல், புலவர்ப் போற்றல் முதலிய சீர் சிறப்புக்கள் எண்ணில. காலிற் செல்லுதல் உருளை பூட்டிய ஊர்தியிற் செல்லுதல். கால்—உருளை. இக்காலத்துக் கேற்றவாறு இதனை நிலப்பொறி யூர்தி என்ப.

காலிற் செல்வதுபோல் கலத்திலும் சென்று இலங்கை யாழ்ப்பாணம் முதலிய கடல் கடந்த நாட்டிலும் செந்நெறியை அடிகளார் மலர்ந்த முகத்தாலும் கனிந்த மொழியாலும் துணிந்த வுளத்தாலும் பரப்பிவந்தனர். அடிகளார் அகங் கவர்ந்த அன்புமறை திருவாசகமாகும். திருவாசகம் முனிவர் மொழியல்லவா! கிறித்துவ முனிவராம் போப் ஐயரவர்களையும் யாழ்ப்பாணத்துக் கிறித்துவ ஐயர் கிங்ஃச்பரியவர்களையும் விடாது ஓதச்செய்யும் விழைவை உண்டாக்கியது அவ்விழுத்தவ நூலல்லவா? எனவே திருக்குறள் போன்று திருவாசகமும் உலகப் பொதுமறையே யாம்.

அடிகளார் தம் திருமுறைப் பற்றும,
எண்மையாக உலகிடைப் பரப்பும் உறுதியும் உரனும் செந் ...ழிச் செல்வர்களுக்கெல்லாம் சிறந்த எடுத்துக் காட்டாகும. நால்வர் பெருமக்கள் 'மாதவஞ்செய் தென்திசை வாழ்ந்திட' அருளால் தோன்றினர். 'தீதிலாத் திருத்தொண்டத் தொகை' முதலிய திருமுறை அருளினர். அம் முறையினாலேயே திருக் கோவில் வழிபாடுகள் சிறக்கச் செய்தல் வேண்டும் என்பது அவர்கள் திருவுள்ளம். 'அஃது அருச்சனை பாட்டே யாகும்' என்னும் அருண்மொழியால் ஐயுறவின்றித் துணியலாம். அருச் சனை—வழிபாடு வழிபாட்டு உறுப்புக்களுள் ஒன்றாகிய தளிர் தூவிப் போற்றுதல் செந்தமிழ் மொழியிலேயே மக்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் திருமுறைத் திருமாமறை வழியாகச் செய்தல்வேண்டுமென்னும் குறிக்கோளுடன் "போற்றித்தொடர்" அமைத்துத் திருப்பதிகங்கள் அருளியுள்ளார்கள். அத்திருப் பதிகங்களைப்பாடித் திருக்கோவில்தோறும் அருச்சனை புரிந்து வந்த அரும்பெரும் வழக்கத்தை அயலவர் சூழ்ச்சி மயலால் கை விட்டனர். இது திருமறைக்காடு வேதாரணியம் என வழங்கு மாறு உட்பகையாய்த் திரித்த சூழ்ச்சி உண்மையினை உள்ளூற உணர்வார்க்கு வியப்பாகாது. இச் சூழ்ச்சி வலைப்பட்டுத் தாழ்ச்சி யில் தயங்கிய நம்மனோர்க்கு உண்மையுணர்த்தித் திருமுறை முதலிய போற்றித் தொடர்களால் அருச்சனை செய்யும் வழக் கத்தை மீண்டும் புதிப்பித்த அருள்நிறை அறிவார் அன்பர்கள் சிலராவர். எனினும் திருமடமுதலிகள் யாரும் துணிந்து செய் யாத அவ்வரும் பணியை அடிகளாரே முன்புரிந்து வழிகாட்டி யருளினர். அவர் தம் ஆணையில் திகழும் திருக்கோயில்களி லெல்லாம் இன்றும் தமிழ் அருச்சனையே நடைபெறுகின்றது. அதனால் பலரும் பலவிடங்களிலும் அந் நன்முறையினைப் பின் பற்றி அவ்வாறு செய்து போதருகின்றனர். அங்ஙனம் செய்வ தற்குப் பெருங் காரணமாய் முன்னோர் பலர் உளரெனினும்

அவர்களெல்லாம் அடிகளார் போன்று திருமடமுதலிகளல்லர். அதனால் அடிகளார் காரணம் வலியுடைத்தென்க.

அடிகளார் இப்பொழுது மலேயா நாட்டுக்குச் செந்நெறி பரப்பும் நன்னோக்கத்துடன் செல்லுகின்றனர். அதன் பொருட்டு அடிகளார்க்குச் சென்னையில் பல்வேறிடங்களில் நடந்த வரவேற்பும் பாராட்டும் அளப்பில. அடிகளார் அவற் றின் பொருட்டு வழங்கிய வாழ்த்துரைகளும் அளப்பிலவே.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப்பொறுப் பாளர் திரு. வ. சுப்பையாபிள்ளையவர்களின் வேண்டுகோ ளுக்கு இணங்கி 27-12-1954 திங்கட்கிழமை பகல் பதினொரு மணியளவில் கழகத்துக்கு அடிகளார் எழுந்தருளினர். ஆட்சிப் பொறுப்பாளர் மலர்மாலை யணிவித்து மிக்க சிறப்புடன் வரவேற் றனர். அச்சகம், அலுவலகம், விற்பனையகம் முதலிய பல்வேறு துறைகளையும் அடிகளார் திருக்கடைக்கண் சாத்தியருளினர். ஆங்காங்கு நிழலுருவப் படங்கள் எடுக்கப்பட்டன.

கழகப் புலவர் இராமநாதபிள்ளையவர்கள் அடிகளாரைப் பாராட்டிச் சிலவுரை புகன்றனர். சுருக்கம் வருமாறு:

அடிகளார் செந்தமிழுக்கும் சிவனெறிக்கும் செய்துவரு நற் றொண்டு முன்னையோர் கண்ட முதுமுறையே யாகும். ஓவா உழைப்பும், உளங்கனிந்து முகமலர்ந்து வளம்பெற மொழியும் இன்மொழியும், தகுதியறிந்து பாராட்டியூக்கும் பயனார் பண்பும் யாண்டும் காணப்பெறாது அடிகள் மாட்டே காணப்படுதல் 'ஒன்னார் விழையும் சிறப்பாகும்.' இத்தகைய இடையறாத் திருத் தொண்டால் அடிகளார் உடல் நலிவுற்ற காலத்தும் உளம் நலிவு றாது தொண்டினையே பெரிதும் ஓம்பிவந்தமை உலகறிந்த தொன்றே. முழுமுதற் கடவுளால் இத்தகைய மெய்யடியார் கட்கு இடையிடையே அருளாய்வு நிகழ்வது இயற்கையே. அங் ஙனம் நிகழ்ந்தால்தான் 'முட்டின்றிச் செய்யும்' முறை விளங்கும். அடிகளார் இங்கு எழுந்தருளி இன்முகந்தந்து நன்மையுற ஆட்கொண்டமைக்கு என்றென்றும் கடப்பட்டுள் ளோம். அடிகளார் நலம்பெறுவது அன்பர்கள் நலம்பெறுவ தாகும். அடிகளார் மேற்கொண்டுள்ள திருத்தொண்டும் திருவுளக் கருத்தும் இறையருளால் முறையுற ஓங்கவும், அடி கள் நீடூழி வாழவும் அம்பலவாணன் அடியிணையே இறைஞ்சு வோமாக என்பதே. இதனைத் திருச்செவிசாய்த்து அடிகளார் [illegible]ிய திட்பநுட்பம் செறிந்த பண்பமைந்த அருண் [illegible] வருமாறு:

அடிகளார் அருண்மொழி: "கழகத்தார் என்னைச் சிறப்பாக வரவேற்றமைக்குப் பெரிதும் நன்றி. பொதுவாகக் கழகத்தாரும் சிறப்பாக ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையாபிள்ளையவர்களும் செய்துவரும் அரும்பெரும் தொண்டும் முயற்சியும் நனிமிகப் பாராட்டற் குரியன. பொதுவாகச் செந்நெறிச் செல்வர்களும் சிறப்பாகத் திருமடத்து முதலிகளும் திருமுறைக்கும், சித்தாந்தத்துக்கும், செந்தமிழ் நூற்களுக்கும் அவை எங்கணும் விளங்கி எல்லாரும் ஓதி இன்பவாழ்வு எய்திப் பயனுற நல்ல முறையாக வெளிவரத் துணைபுரிந்து சிவபுண்ணியப் பேறெய்தும் பெருங்கடப்பாடுடையவர்களாவர்.

"அவர்கள் அக்கடப்பாட்டினை மறந்து அந் நூற்களைக் காணவும் கூடுமோ என்று மெய்யன்பர்கள் அலமந்து அல்லலுறுங் காலத்துக் கழகத்தார் தோன்றி அந் நூற்களைச் செவ்விய முறையில் அச்சிட்டதுமன்றிக் கண்கவர்வனப்பினதாய்க் கையினுக்கு அணியாய் வெளிநாட்டவரும் விழையும் வண்ணம் நல்ல அழகிய உறுதியாய உயர்ந்த பல்வேறு வகையான கட்டடங்களோடு பல்வேறு வடிவிலும் வெளியிட்டுப் பலரும் பயனுறச் செய்தனர்; செய்து வருகின்றனர்; வருவர். இவ்வரும் பெரும் பணியினைத் தமிழுலகம் என்றும் மறவாது நன்றிபாராட்டும் என்பதில் எட்டுணையும்

"திருமுறை மாநாடு, சித்தாந்த மாநாடு, குறுந்தொகை மாநாடு, நெடுந்தொகை மாநாடு, கலித்தொகை மாநாடு போன்ற சங்க நூற்களின் மாநாடுகளும் சித்தாந்த வகுப்புக்களும் நல்ல முறையில் அவ்வப்போது இன்றியமையாப் போழ்தில் செய்து சிறப்பித்துள்ளனர். உண்மை நெறியில் ஒல்லும்வகை ஓவாது பாடுபட்டுவரும் இவர்கட்கு உடையான் திருவருள் என்றென்றும் உடனாய் உதவி வருகின்றது. என்னால் செய்யப்பட்டு வரும் சிறுதொண்டினை மிகவும் பாராட்டிப் பேசினர். அஃது என்னை அத்தொண்டில் மேன்மேல் ஊக்குவிக்கும் அன்புரையேயாகும். யானும் உங்களில் ஒருவனாய் நீங்கள் செய்யும் செந்நெறித் தொண்டினில் வேண்டும்போதெல்லாம் உடனாய்க் கலந்து பணியாற்றும் கடப்பாட்டினேன். எல்லா வகையாலும் மெய்ம்மையும் முதன்மையும் பொதுமையும் ஒருங்கமைந்த நம் செந்தமிழ் நன்னெறி உலகெலாம் ஓங்க நாம் பாடுபடுதல் வேண்டும். சிறப்பாக மேல்நாடுகள் சென்று பரப்புவதே இற்றைஞான்று நம் முன்னிற்கும் இன்றியமையாப் பெரும்பணி. அதற்குச் செந்தமிழும் ஆங்கிலமும் சிறப்புறக் கற்றுப் பிறமொழியும் வல்லராய்ப் புலனடங்கியார் புலவரெனப்படுவர் என்னும் பொன்மொழிப் பண்பினராய், ஒழுக்கநெறி வழுக்கா விழுத்தவ

உள்ளத்தராய்ப் பிறர்க்கென வாழும் பெற்றிசேர் நல்லிளைஞர் பலர் வேண்டும். உங்கள் பேரன்புக்கு என்றும் கடப்பாடுடையேன். மீட்டும் உங்கள் அனைவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றி'' என்று முறுவல்பூத்த முகத்தினராய் அருளினர்கள். யாவரும் திருவடிபணிந்து அருட்கொடைத் திருவெண்ணீறு

ஆட்சிப் பொறுப்பாளர் அவர்கள் நன்றி கூறுமுகத்தாற் கூறிய இன்னுரையின் சுருக்கம் வருமாறு:

"அடிகளார் எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி இங்கு எழுந்தருளி அறவுரை பகர்ந்து தலையளி செய்தது நம் பெறும்பேறே யாகும். அடிகளார் எழுந்தருளிய இந்நாள் ஓர் பொன்னுளே யாகும். திருமடத்து முதலிகள் புறத்துப் போந்து காலத்துக் கேற்றவாறு திருத்தொண்டியற்ற வேண்டும் நன்முறையை முன்னின்று செய்து காட்டி உடனுக்கிய பெருமை அடிகளார்க்கே உரியது. அடிகளார் எவ்வகையான பாராட்டையும் இயற்கையிலேயே ஒரு சிறிதும் விழையாதவர்கள். எனினும் எங்கள் பேரன்பைப் புலப்படுத்துவதற்காக யாங்கள் செய்யும் இச் சிறப்பினை ஏற்றருளுகின்றனர். இது செந்தமிழ்க்கும் செம்பொருட்டுணிவாம் சித்தாந்த சைவத்திற்கும் அடிகள் வாயிலாக யாம் செய்யும் சீர் சிறப்பேயாகும். அவை யனைத்தும் எங்களுக்கே பெருமை தருவன. அடிகளார் செல்லும் மலையாச் செலவு, திருவருட்டுணையால் வெற்றி பெற விளங்குமாக. இஞ்ஞான்று தமிழகத்தைக் காட்டிலும் வெளிநாடு போந்து வாழ்ந்துவரும் செந்தமிழ் மெய்யன்பர்கள் செந்தமிழ்மாட்டும் சித்தாந்த சைவத்தின்மாட்டும் உண்மையான உளப்பற்றுக்கொண்டு உணர்ந்து உழைக்கின்றனர். தங்கள் தாய்நாட்டின்மாட்டும் ஆங்கு வாழும் தமிழ்மக்கள் மாட்டும் பேரன்பு பூண்டு ஒழுகிவருகின்றனர். தமிழகத்துள்ள செந்நாப் புலவர்களையும், சீர்சால் அடிகண்மாரையும் உவப்பொடு கண்டு அளவளாவ நாளும் நனிமிகு வேட்கையுடையராய் இருக்கின்றனர். அடிகளார்க்கு எல்லா நலனும் நெடு வாழ்நாளும் ஆண்டவன் அருள்வானாக. அடிகளார் மேற்கொண்டுள்ள திருத்தொண்டுகள் அனைத்தும் வீறுபெற்றுத் திகழ்வதாக. யாமும் அத்தொண்டுகளுக்கு வேண்டும் பணி புரிவோமாக.''

மெய்யன்பர்கள் பொருள்சேர் பாராட்டுகளுக்கிடையே அடிகளார் விடையருளி விடைபெற்று வீறுதிகழப் புறப்பட்டருளினர். யாவர்களாலும் அன்புமுழக்கம் அகம் கனிந்து செய்யப்பெற்றன. வாழ்க அடிகளார்.

துடிசைகிழாரின்
பேராவியற்கை

பிறப்பு

திரு. துடிசைகிழார் அ. சிதம்பரனார் அவர்கள் திருத்துடிசையம்பதிக்கு உரியராய்க் கோயமுத்தூரில் சிறக்க வாழ்ந்து வரும் வேளாண் விழுக்குடியில் தோன்றியவர். தந்தையார் திருப்பெயர் திரு. அர்த்தநாரீச்சுர முதலியாரவர்கள் ஆவர். இவர்கள் திருவிற் கமைந்த உருவினர். நீண்டு வளர்ந்த தோற்றத்தினர். நீண்டு மலர்ந்த முகமும் கண்ணும் கூரிய மூக்கும், தாள் தோய் கையும் பரந்த மார்பும் பாங்குற அமைந்தவர். செந்தமிழும் ஆங்கிலமும் சிறக்கக் கற்ற சீரியர். தனித்தமிழ்ப்பற்றும் சித்தாந்த சைவத் திறனுணர் மாண்பும் ஒருங்குசேர்ந்து ஓர் உருவெடுத்தாற் போன்ற ஒண்மையர். பிற்காலத் தமைந்த இத்தகைய பண்பின் கொழுந்துபோல் வளர்ந்தனர்.

ப்ணி

பாடிகாவற்றுறையாகிய போலீசுத் துறையில் அலுவல் பார்த்தனர். ஆங்கு ஆட்சியாளர்க்கும் நாட்டு மக்களுக்கும் நயனொடு நன்றி புரிந்த நற்பண்பினராய்த் திகழ்ந்தனர். அதற்குரிய காரணங்கள் செந்தமிழ்ப்பற்றுச் செந்நெறிச் செல்கை, சிவ வழிபாடு, நடுநிலை பிறழாமை போன்றவைகளேயாம். படிப்படியாக உயர்ந்து ஊர்காவல் வட்ட முதன்மையராய்த் (போலீசு சர்க்கிள் இன்ஃச்பெக்டர்) திகழ்ந்தனர். அத்தொழிலின் ஊதியம் என்று சொல்லப்படும் பென்சனும் பெற்று விளங்கினர்.

தொண்டு

பெருங்குடும்ப வாழ்க்கையிலிருந்து கொண்டே தனித்தமிழ்த் தொண்டினைச் சலியாது கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் துணிவுடன் நிகழ்த்தி வந்தனர். சிறந்த ஆராய்ச்சி வல்லுநர். சொற்களைத் தனித்தமிழ் ஆக்கமெனக் கூறுங்கால் பெரும்புலவர்களும் பெருவியப் பெய்துவர். ஆனல், பொருத்தமில்லையென மனமார மறுக்க உடன்படார். இவர்கள்தம் மெய்ம்மையான தனித்தமிழ்ப்பற்றும், சித்தாந்த சைவத் துறுதியும் இவர்கள் அவ்வப்போது ஆக்கி அளித்துள்ள கட்டுரைகளாலும் பொருள்பொதி நூற்பெருக்காலும் நன்குணரலாம். இவர்கள் நாடொறும் திருநீறிடுதல் சிவபூசை செய்தல் முதலிய சிவத்தொண்டினைத் திருமுறைத் திருமாமறை வழியாகவே செய்து போந்தனர். அந் நன்முறை உலகெலாம் பரவ வேண்டும் என்

னும் உண்மை உள்ளன்புடன் 'சிவபூசை விளக்கம்' என்னும் சீரிய தெளிவு நூலும் வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ்மொழியின் தனிப்பெரும் மாண்பினைக் 'கழகத் தமிழ் வினாவிடை' என்னும் இரு நூல்கள் நன்கு விளக்குவன. அதுபோல் ஆராய்ச்சி நுட்பத்தினைச் 'சேரர் வரலாறு' என்னும் செவ்விய நூல் ஆர்வமுடன் விளக்கும். ஒருசிலர் ஆராய்ச்சிக் காலம் ஆய்வுக்குப் பொருத்தமே எனினும் அறிவு வரம்பைக் கடந்து அனைவரையும் மருட்டுகின்றதே என்பர். ஆராய்ச்சிகள் வரவரக் காலப்பழமையை ஒப்புக்கொண்டு கட்டுரைக்கின்றன என்பது சிந்து நதிப் பள்ளத்தாக்குப் புதைபொருள் ஆய்வாலுணரலாம்.

தூய்மை

எப்பொழுதும் அகம்புறம் தூயராய்த் திகழ்வர். நகை முகமுடையராய்ப் பணிவும் இன்சொலும் பாங்குற அமைந்தவர். எவரொடும் செற்றம் நீக்கிய செம்மனத்தினர். சினமுதலகற்றி வாழும் சீலத்தர். சொல்லும் சொற்களைச் செம்மையுற அமைதியாய் ஆழ்ந்த கருத்துக்களுடனும் புன்முறுவலுடனும் புலங்கொளப் புகல்வர். 'திருமந்திர'த்துக்கு அரும்பெரும் குறிப்புரையொன்று எழுதியளித்துள்ளனர். அவர்களுடைய முழு எண்ணம் 'திருமந்திரம்' முழுவதுக்குமே விளக்கவுரை எழுத வேண்டும் என்பதே. அது நிறைவுறாமை தமிழ்நாட்டிற்கோர் பெருங்குறையேயாம். இவர்தம் உரைநுட்பங்கண்டே திருப்பனந்தாள் திருமடத்துத் 'திருமந்திர'ப் பதிப்பில் 'திருமந்திர வரலாறு' இவர்களால் வரையப் பெற்றிருப்பது காணலாம். அது 'திருமந்திரமணி' என்னும் இவர் சிறப்புப் பெயரை விளக்கும்.

செய நூல்கள்

கழகத் தமிழ் வினாவிடை (முதற் புத்தகம், இரண்டாம் புத்தகம்), கழகச் சைவ வினாவிடை (I. II.,) அகத்தியர் வரலாறு, தமிழ்ச் சங்கங்களின் வரலாறு, சேரர் வரலாறு, சிவபூசை விளக்கம், விபூதி விளக்கம், உருத்திராக்க விளக்கம், ஆனைந்து, திருத்துடிசைப்புராணம், திருமந்திரம் குறிப்புரையுடன்.

பேரா இயற்கை

எதிர்பாராத நிலையில் திடீரென 30-12-1954-இல் கோயமுத்தூர் தம் அரும்பெரும் இல்லத்துச் சிவனினைவுடன் ஆவி நீத்தனர். அவர்தம் அரும்பெறல் ஆவி சிவபெருமான் திருவடி நீழலில் என்றும் இன்புறுமாக. அவர்தம் குடும்பத்தார்க்கு எங்கள் உளமார்ந்த ஆறுதலும் பரிவும் உரியவாகுக.

துடிசைகிழார் மறைவு குறித்த
இரங்கற் பாக்கள்

[திரு. கோவைகிழார்]

தொண்டை நாட்டுத் தொல்வேள் குடியான்
பண்டைப் பனுவல் பலவும் பயின்றோன்
அண்டை அயலார்க் கவற்றை உரைப்போன்
சண்டை எனினும் சால்பை விடலான். (க)

துடிசைப் பதியின் தூயமைக் கிழவோன்
குடிசை நிரம்பக் கூட்டும் நூலோன்
இடிசெய் கொள்கை இயம்பி வெல்வோன்
துடிசெய் உரைகள் தூவி வந்தோன். (உ)

கொள்கை எதையும் கொள்ளு முன்னர்
உள்கை ஆய்ந்தே ஊட்டும் நிலையான்
எள்கை அஞ்சான் எதையும் நிறுத்தோன்
ஒள்கை ஒன்றே உயர்வில் ஏற்போன். (ந)

தமிழின் தொன்மை தனித்த பெருமை
அமிழ்தின் முறையில் அமைந்த தென்போன்
'உமிழ்தும் பிறர்சொல் உரையை' என்றே
குமிழ்திண் மலர்போல் கொள்வோன் மொழியே. (ச)

இந்தப் பேற்றை இகத்திற் களித்த
எந்தம் கிழாஅன் எங்கே சென்றான்?
அந்தப் புலத்திற் கவன்செல் வழியே
சிந்தை கூரச் சென்று காண்போம். (ரு)

அந்தோ எங்கள் அருமைத் தமிழன்
சிந்தா குலத்தில் செலுத்தி, எமையே
எந்தாய் மலர்த்தாள் இசைந்தோ சென்றான்,
முந்தே சென்று முகமன் சொலவோ? (சு)

திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை

(சிலம்பு: உக, பரல்: ச, உஅக-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகம் என்னும் எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது. காட்சிக் கெளியனுதலாவது, முறை வேண்டினார்க்கும் குறை வேண்டினார்க்கும் எளிதிற் காணத்தக்க செவ்வியுடையனாதல். அதுவேயு மன்றி 'பிறந்த உயிர் தாயைக் கண்டு இன்புறுவது போலத் தன்னாற் காக்கப்படும் உயிர்வாழ் சாதிகள் தன்னைக் கண்டு இன்புறுதலின் தான் அவர்கட்குத் தன் உருக்காட்டு தற்கும், மாற்றரசர் ஒற்றுவந்தவிடத்து அவர் முன்னர்த் தனது ஊக்கங்காட்டுதற்கும்' குடிகள் காட்சிக்கு எளியனாய் உலாப் போதலுமாம். கடுஞ்சொல்ல னல்லன் எனவே இன்சொல்லன் என்பதாயிற்று. இன்சொலி னிலக்கணத்தை இனியவை கூறல் என அறப்பாலிற் போந்த அதிகார நோக்கிக் கண்டுகொள்க. நிலத்தை மீக்கூறும் எனவே அந் நிலத்தை யாளும் மன்னனை மீக்கூறல் சொல்ல வேண்டாதாயிற்று.

மாட்சியுடைய மன்னனுக்குப் புகழ் உரித்தாம் என்றது. (சு)

உலகமும் உரித்தா மென்பது வருங் குறள் :

நடுஎ. இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்
றான்கண் டனைத்திவ் வுலகு.

(இ - ள்.) இன்சொலால் - இனிய சொல்லுடனே, ஈத்து - (பொருளை வகையறிந்து) கொடுத்து, அளிக்க வல்லாற்கு - (உலகைக்) காக்கவல்ல அரசனுக்கு, இவ்வுலகம் - இந்த உலகம், தன்சொலால் - தன் புகழோடு, தான் கண்டனைத்து - தானே படைத்தது போன்றதாம். (எ - று.)

(இ - து.) இன்சொல்லும் கொடையுமுடையனாய் உலகம் காக்கும் மன்னனுக்குப் புகழும் உலகமும் சொந்தமாம். (எ-ம்.)

இன்சொல் மேற் குறளிற் கூறப்பட்டது. வகையறிந்து கொடுத்தலாவது, கொடைக்குரியார்க்கும் பிறர்க்கும் அவரவர் தகுதியறிந்து கொடுத்தல். தான் காத்தல், தன் நாட்டிற் குடிகளும் பசு முதலிய விலங்குகளும் பயிர்களும், கேடுறாமற் பாது காத்தல். சொல் - புகழாதலை 'உரைப்பாருரைப்பவை' (உரு உ) என்னுங் குறளுரையிற் காண்க. சொலால் என்புழி, ஈரிடத்தும் ஆலுருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. காண்டல் -

இயற்றல். இஃது இப்பொருட்டாதல் 'உரைகண்டார்' என்னும் வழக்குப்பற்றி அறியப்படுமாறு முன்னர்க் கூறினும். (குறள்-). அவன் படைத்தது போலாதலாவது, அவன் விரும்பும் நலங்களெல்லாம் நிறையப்பெற்று அவன் ஆணைவழி நிற்றல். 'கண்டனைத்து - கருதிய அளவிற்றும்....கருதிய அள விற்றுதல் - கருதிய பொருளெல்லாஞ் சுரத்தல்' என்றார் பரி மேலழகர். வருங் குறள் நோக்கின் யாங் கொண்ட பொருள் சிறக்குமாறு காண்க.

மாட்சியுடைய மன்னனுக்கு இவ்வுலகந் தன்னாற் படைக் கப்பட்டது போலு மென்றதிது. (எ)

ஆதலின் அவன் கடவுளே போல்வன் என்பது வருங் குறள் :

௩அஅ. முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

(இ - ள்) முறை செய்து - (தன் நாட்டை) முறைப்படி (ஆட்சி) செய்து, காப்பாற்றும் மன்னவன் -, மக்கட்கு - குடி களுக்கு, இறையென்று - கடவுளே போல, வைக்கப்படும் - (உல கத்தா ருள்ளத்து மதித்து) வைக்கப் படுவான்.

(இ - து.) செங்கோ லரசன் தெய்வமே போல்வன். முறை - அறம் பொருளின்பங்களாம் முறை. மன்னன் இறை யாதல் அதிகாரப் பொருள் விரிப்புழிக் கூறப்பட்டது. பிறப் பால் மக்களுள் ஒருவனே யாயினுஞ் சிறப்பால் இறையென வைக்கப்படுவா னென்றவாறு. 'பிறப்பொக்கு மெல்லா வுயிர்க் குஞ் சிறப்பொவ்வா - செய்தொழில் வேற்றுமையான்' (குறள் - ௬௭உ) என்பதாகலின்.

வேந்தனை இறை யென்ற திது. (அ)

இறையாமாறு கூறுவது வருங் குறள் :

௩அ௯. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கு முலகு.

(இ - ள்.) செவி கைப்ப - (தன்) செவி வருந்த (தன் நன் மையைக் கருதி வெஞ்சொற் கூறும் துணையாயினார்), சொற் பொறுக்கும் - சொற்களைப் பொறுமையுடன் கேட்கும், பண் புடை வேந்தன் - நற்குணமுடைய அரசனது, கவிகைக் கீழ் - குடைநிழற் கண்ணே, உலகு தங்கும்-உலகம் தங்கும். (எ-று.)

(இ - து.) துணையாயினோர் இடித்துரைக்கும் உரைகளைப் பொறுமையுடன் செவியேற்கும் அரசனது குடை நிழலில் உலகம் தங்கும். (எ - ம்.)

கைப்பு - நாவின் சுவை ஆறனுள் ஒன்று. அதனைச் செவிக்கேற்றிக் கூறியது உபசாரம். கைப்புடையன நாவிற் கின்னாவாயினும் உடலுக்கு நலம் பயக்குமாறு இடித்துரைக்கும் வெவ்வுரை, செவிக்கின்னா வாயினும் உயிர்க்கு நலம் பயக்குமென்பது கருதி அவ் வுரையைப் பொறுமையுடன் கேட்டல் நன்றென்பார், 'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்பு' என்றார். இவ்விடித்துரை வாயுறை வாழ்த்தோ டொப்பது. இதனை, 'வாயுறை வாழ்த்தே வயங்க நாடின் - வேம்புங் கடுவும்போல வெஞ்சொற்றாங்குதலின்றி வழிநனி பயக்குமென் - றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே' (தொல்காப்பியம்-செய்யுளியல் - ௧௧௨) என்புழிக் காண்க. தாங்குதலின்றி - தடையின்றி. இங்ஙனம் செவி கைப்ப இடித்துரைத்தல் துணையாயினோர் செயலாதலே 'நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண் - மேற்சென் றிடித்தற் பொருட்டு' (குறள் - எ௮௪) என ஆசிரியர் மேற் கூறுமாற்றானறிக.

இறை - தங்குதல். 'மேலா ரிறை யமருள்' என வரும் புறப்பொருள் வெண்பாவினும் (பாடாண் - ௮) இச் சொல் இப் பொருட்டாதல் காண்க. உலகமெல்லாம் தங்குதற் கிடமாதல் பற்றிக் கடவுளை இறை யென்ப. மேற் குறளில் அரசனை இறை யென்றார். அவன்பால் தங்குதல் யாது அஃது யாண்டுத் தங்கு மென்றார்க்குத் தங்குவதுலகம், அஃதவன் குடைநிழற் கண்ணே தங்கு மென்றார். இவ்வாற்றான் மேலைக் குறளோ டிக் குறள் இடைப்பட்ட இயைபு விளங்குமாறு காண்க.

கவிகைக் கீழ்த் தங்கு முலகு என்றதால், முறை தவறாமையின் உலக முழுவது மவன் ஆட்சிக்குட்படு மென்பது பெறப்படும்.

மாட்சியுடைய மன்னன் குடை நிழலில் மக்கள் தங்குவர் என்றவாறு. (௯)

அவன் ஒளியில் ஏனை மன்னர் தங்குவர் என்பது வருங்

௩௯0. கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
 முடையானாம் வேந்தர்க் கொளி.

(இ - ள்.) கொடை - (வகையறிந்து) வகுத்தலும், அளி - (யாவர் மாட்டும்) முகமலர்ந்து இனிய கூறலும், செங்கோல் -

(அறங் கோணாது) முறை செய்தலும், குடியோம்பல் - குடிகளைக் காத்தலும், நான்கும் உடையான் - இந்த நான்கு செயலையும் உடைய மன்னவன், வேந்தர்க்கு - ஏனை மன்னர்க்கெல்லாம், ஒளியும் - விளக்குப்போல்வான். (எ - று.)

(இ - து.) கொடை, இன்சொல், செங்கோல், குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய மன்னன் ஏனை மன்னர்க்கு விளக்குப்போல் விளங்குவான். (எ - ம்.)

செங்கோல் - செவ்வியகோல். அரசர் கையிற் பற்றும் கோல், நிறை கோலைச் சுட்டி முறை கோடாமையினை அறிவுறுத்தற் கமைந்ததொரு குறி. எனவே செங்கோலரசனெனப் படுவான், முறை வேண்டினார்க்கு நடுவுநின்று முறைசெய்வானாயிற்று. 'சமஞ்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற் - கோடாமை சான்றோர்க் கணி' (குறள் - ககஅ) என்றதும் ஈண்டு நோக்கற் பாலது. ஏனை வேந்தர்க்கு அவன் விளக்காதலாவது, அவர் அவன் காட்டும் வழியொழுகி அவன் கேடு கருதாது அவனுக்கு ஆக்கமாவதே தமக்கும் ஆக்கம் என்று கருதி அமைந் தொழுகல். (க0)

இவ் வதிகாரத்தில் முதற் குறளால் அரசற்கு அங்கமாவன இவை யென்பதும், அடுத்த நான்கு குறள்களால் அரசனது மாட்சியும், இறுதி ஐந்து குறள்களால் மாட்சியும் மாட்சியின் பயனும் கூறப்பட்டன.

அதிகாரம் ௪0.

கல்வி

அஃதாவது, கற்றற்குரிய நூல்களைக் கற்றல். கல்லுதலாவது தோண்டுதல். உயிர்கட்கு அமைந்த அறிவு, இறைவனறிவு போன்று வாலிதாகாது, ஆணவ இருளிற் புதைந்து கிடப்பது. அவ்விருட்படலத்தைச் சிறிது சிறிதாகக் கல்லியெடுத் தகற்றுவது கல்வி யாயிற்று. அவ் விருள் அகற்றப்பட்ட அளவாக உள்ளே மறைந்து கிடந்த அறிவு வெளிப்பட்டுத் தோன்றும். 'தொட்டனைத் தூறும்' (குறள்-௩கசு) என்பதும் இதுபற்றி. மேல் அரசனைக் கடவுளோ டொப்பித்தார். சிலவாற்றால் அவ் வொப்புமை செல்லினும், வாலறிவனாகிய இறைவனும் வேறு, சிற்றறிவுடைய உயிர்களில் ஒருவனாகிய அரசனும் வேறு என்பது அறிவுறுத்தற்கு. அரசனுக்கு அறிவுடைமை, இறைவனுக்கு இயற்கையி னிறைந்தது போலாது, செயற்கையின் மிகுவதென்பது தோன்றவும், அரசனுக்குரிய

ஏனை மாட்சிகளெல்லாம் இக் கல்வியில்லையேற் சிறவா வென்பது தோன்றவும் இதனை இறைமாட்சியினையடுத்து முன் வைத்தார். மற்றிக் கல்வி அரசனுக்கே அரசமாட்சி தருவதோ டமையாது அரசரல்லார்க்கும் அரசமாட்சி தருவதொன்றுதலாலும் இறைமாட்சியின்பின் பொதுப்படக் கூறப்படுவதாயிற்று. இஃது அரசரல்லார்க்கும் அரசமாட்சி தருவதெற்றாற் பெறுது மெனின், 'யாதானு நாடாமா லூராமால்' (கூ௯௭) 'கேடில் விழுச் செல்வங்கல்வி' (௪00) என ஆசிரியரும் 'அறிவுடை யோனு றரசுஞ் செல்லும்' (புறம்-௧௮௩) எனச் சங்கத்துச் சான்றோரும், 'மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின் - மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்' எனப் பிற்காலத்துச் சான்றோருங் கூறுமாற்றாற் பெறுது மென்பது. அரசர்க்குக் கல்வி மாட்சி தருதல், "தூங்காமை கல்வி துணிவுடைமை' (௩௮௩) என மேலதிகாரத்துக் கூறினமையிற் பெற்றாம்.

இம்மையும் மறுமையும் வீடும்பயக்கவல்ல கல்வியை ஈண்டுப் பொருட்பாலில் அரசியலிற் கூறிய தென்னையோ எனின், கல்வி யானுய ஒழுக்கமும் மெய்யுணர்வுமே மறுமையும் வீடும் பயக்க வல்லனவேயன்றி, அவற்றிற்குக் கருவியாய கல்விதானே நேரில் மறுமையும் வீடும் பயப்பதன்று. ஆகலான், கல்வியின் காரியமான ஒழுக்கமுடைமையினையும் மெய்யுணர்தலையும் அறப்பாலிற் கூறி, ஈண்டு அவற்றிற்கேயன்றி பொருள்செயற்கும் கருவியான கல்வியைக் கூறினார். 'இருவே றுலகத் தியற்கை திருவேறு - தெள்ளிய ராதலும் வேறு' (குறள்-௩௭௪) என்பவாதலான், ஊழான் நெறிவேறுபட்டுக் கல்வியுந் திருவும் ஓரிடத் தொருங்கு நிற்றல் அரிதாமேனும், அவை யிரண்டும் ஒன்றற்கொன்று கருவியாய் ஒன்றனையொன்றாக்குமாற்றான் இயைபுடையன வாதலின், திருவுடை மன்னர்க்கு இன்றியமையாச் சிறப்பிற் றென அவரியல் கூறும் அரசியலிற் கூறப்பட்ட திஃதென்க. அல்லதூஉம் தானே யன்றித் தன் குடைக்கீழ் வாழும் மக்களும் கல்வியுடையராதற்கு வேண்டுவன செய்தல் அரசன் கடமை யென்பது கருதி இஃது அரசியலிற் கூறப்பட்ட தெனலுமாம்.

கல்வி, அறிவுநூற் கல்வி யென்றும் உலகநூற் கல்வி யென்றும் இருவகைப்படும். அவற்றுள் அறிவுநூற் கல்வி மெய்யுணர்தற்குக் கருவியாய் வீடு பயப்பது. உலகநூற் கல்வி, அவ்வவர் தொழிலுக் கேற்பப் பலதிறப்படும். இவ் விருவகை நூலுள் ஒன்றை யிகழ்ந்து மற்றதைப் புகழ்வார் பலர்.

'அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா
துலகநூ லோதுவ தெல்லாங்—கலகல

கூஉர் துணையல்லாற் கொண்டு தமொற்றம்
போஒந் துணையறிவா ரில்'

(நாலடி - கச0)

என்றதுங் காண்க. ஆசிரியர் அறம் பொருளின்பங்களின்றி வீடில்லை என்பதே பற்றி அவற்றுள் எதையும் இகழாது கொள்வாராதலின், உலகநூற் கல்வி அறிவுநூற் கல்வி இரண்டையும் உடன்பட்டு அவற்றிற்குப் பொதுப்பட நின்ற கல்வியினையே ஈண்டுக் கூறுகின்றார். அதிகார இயைபு முன்னே பெறப்பட்டது.

இவ் வதிகாரத்தில், கற்கப்படுவன கற்குமாறுங் கற்றற் பயனும், கற்கப்படுவனவற்றுள் இன்றியமையாதனவும், கற்றார் சிறப்பும் கல்லார் இழிவும், கல்வியிற் சிறந்தார் தன்மையும், அவர் உயர்வும் ஏனையார் தாழ்வும், கல்வியின் சிறப்பும் முறையே கூறுவான் வைத்த ஆசிரியர் முதற்கண் கற்கப்படுவன கற்குமாறுங் கற்றற் பயனுங் கூறுகின்றார்.

நகூகூ. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.

(இ - ள்.) கற்பவை - (ஒருவன்) கற்கத்தக்க நூல்களை, கசடறக் கற்க - பழுதறக் கற்கக் கடவன்; கற்றபின் - (அவ்வாறு) கற்றால், அதற்குத் தக - அக்கல்விக்குத் தக்கவாறு, நிற்க - (நன்னெறிக்கண்ணே) நிற்கக் கடவன்; (எ - று.)

இ - து.) தக்க நூல்களைக் கற்கவேண்டும்; கற்றால் அக் கல்விக்குத் தக்கவாறு நன்னெறியில் நிற்க வேண்டும். (எ - ம்.)

தக்க நூல்களாவன, அறம் பொருள் இன்பங்களைக் குறித்து வினையினீங்கி விளங்கிய அறிவின் மிக்காரும் அவரோ டொருபுடை ஒப்பாருமாகிய தக்கார் எழுதிய நூல்கள். ஏனையார் எழுதிய நூலாயின் குற்றமிருந்து பயன் குன்றிக் கற்பார் வாணாளை வீணாக்கும் பெற்றியவா மாதலின் அவை கற்கத் தக்கன வல்ல என்பதாயிற்று.

(தொடரும்)

மேலைநாட்டு மெய்விளக்கம்

[திரு. சு. அன்புமலர், பி. ஏ. ஆனர்ஸ்]

(சிலம்பு : உக, பரல் : ௬, ௩௩௬-ஆம் பக்கத் தொடர்ச்சி)

[மேலை நாட்டு மெய்விளக்க ஆராய்ச்சியைக் குறித்துத் தொடர்ச்சியாக திருவளார் எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் செந்தமிழ்ச் செல்வியின் துவக்க இதழ்களில் மேல் நாட்டுத்தத்துவ விளக்கம் என்னும் தலைப்பில் எழுதி வந்தார்கள். சாக்ரடீஸ் காலத்திற்கு முந்திய கிரேக்க நாட்டு மெய் விளக்க வரலாற்றைச் செம்மையாக எளிய தமிழில் எழுதி வந்தார்கள். பின்னர் ஏதோ காரணமாக அக்கட்டுரைத் தொடர்ச்சி நின்று விட்டது. நான் அவர்கள் விட்ட இடத்தி னின்றும், அஃதாவது சாக்ரடீஸ் காலந்தொட்டுள்ள ஆராய்ச்சி வரலாற்றை எழுத முயன்றுள்ளேன்.]

கிரேக்க நாட்டு மெய்விளக்க ஆராய்ச்சி

சாக்ரடீஸ் (Socrates):

தொகுப்பு வழி அளவை (Process of Induction) முறை யால் அனைவரையும் உட்படுத்துகிற உண்மையான விளக்க வரையறைகளைக் (Definitions) கற்பித்தல் இயலுவதே எனச் சாக்ரடீஸ் சாதித்தார் என்பதைக் கழிந்த இதழில் கண்டோம்.

உரையாடல் முறையிலுள்ள அவர் ஆராய்ச்சியின் பெரும் பகுதியும் ஒழுக்க நூல் (Ethics) துறையின் பால்படுகிற சொற் களுக்கு விளக்க வரையறைகளைக் கற்பிக்கும் முயற்சியாக இருப் பதைக் காணலாம். நீதி (Justice), நேர்மை (Right), நேர்மை யின்மை (Wrong), நன்மை (Good), தீமை (Bad) என்பன போன்ற ஒழுக்கத்துறைச் சொற்களின் நுல்லிய பொருள் களைக் கற்றுணரவேண்டும் என்பதே அவருடைய முழு நோக்கமுமாகும். உதாரணமாக, கொடுமை செய்பவன் தண் டனைக்குரியவன் என்பதை அனைவரும் ஒத்துக்கொள்ளுவர். ஆனால், 'கொடியவன் யாவன்? கொடுமை எது?' என்பவற்றைத் திட்டவட்டமாக எவரும் விளக்கமுடிவதில்லை. எனவே, மிகச் சாதாரணமாக அன்றாட வாழ்க்கையில் நாம் கையாளுகிற சொற்களின் உண்மைப் பொருள்களைச் சரிவர உணர்ந்து, வரையறை புரிந்துகொள்ளவேண்டும் என்பதே அவர் போதனை யின் முக்கியமான பகுதி.

இதைக் காரணமாகக் காட்டி கருத்துரைஞர் சிலர் சாக்ரடீ ஸிடம் குறைபாடு கண்டனர். அவர் நல்லொழுக்கக் கொள்கை

யாளரே (Moralist) தவிர மெய்விளக்க அறிஞரல்ல (Philosopher) என்று துணிந்து கூறினர். ஏனெனின், அவர் வகுத்தது என்று கொள்ளத்தகுந்த வகையில் எவ்வித மெய்விளக்க முறைமையும் (Philosophical system) அவர் உருவாக்கவில்லை. அவருடைய ஆராய்ச்சி மனிதன், சமூகம் என்பன போன்ற பொருள்களைச் சார்ந்ததாக இருந்தது. ஆனால், இன்னும் சிறிது ஊன்றிப்பார்க்குங்கால் கூறிய குறைபாடு தவறு என்பது நன்கு

பருப்பொருள்உலகின் படைப்பைப் பற்றிய ஆழ்ந்த ;னைகள் அவர் கொண்டிருக்கவில்லை என்பது உண்மையே. சாக்ரடீஸ் காலத்திற்கு முற்பட்ட மெய்விளக்க அறிஞர்கள் வெளியுலகான மண்ணுலகின் ஆரம்பம், ஆக்கம், அவற்றின் நிகழ்ச்சித் தன்மைகள் ஆகியவற்றை ஆராய்ந்தனர். ஆனால் சாக்ரடீஸ், புறஉலகப் படைப்பைச் சார்ந்த சிந்தனைகளை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு, மனிதனின் அகவுலக அதாவது மனஉலகைச் சார்ந்ததாகத் தன் ஆராய்ச்சியின் போக்கைத் திருப்பினர். ஏனெனின், குளறுபாடுகள் நிறைந்த இயற்கையமைப்பினின்றும் நாம் கற்றுணரத் தக்கவை சிறு அளவே என்பது அவர் கருத்து. அதோடு பருப்பொருளியலான கோட்பாட்டாராய்ச்சிகளால் (Physical speculations) ஈடுபட்ட பண்டைய அறிஞர்கள் பலவாறான அறிவிற்கொவ்வாத பொருந்தாக் கொள்கைகளையே தந்தனர். ஆகவே, புறஉலகப் பொருள்களைப் பற்றிய உறுதியான கருத்துக்களை மனிதன் பெறமுடியாது, அவை மனித அறிவிற்கு அப்பாற்பட்டது என்பது அவர் கொண்ட முடிபு.

மேலும், நடைமுறையில் பயன் தருபவைகளிலேயே அவர் அதிகமான அக்கரை கொண்டிருந்தார். கல்வியின் பயன், கற்றவன் தனக்கும் பிறர்க்கும் தான் விரும்புகிற நலன்களைச் செய்வதாகும். ஆனால், அண்டம் (Cosmos), அதன் இயக்க நிலைகள் ஆகியவற்றை ஆராய்வதால் செயல் வகைப்பெரு நலன்கள் எதுவுமே விளையாது என்று அவர் கருதினர்.

என்வே, அறிவின் தன்மையை ஆராய்வதில் தன் கருத்தைச் செலுத்தினர். ‘மனம், எண்ணம், மனச்சான்று ஆகிய தன்னைச் சார்ந்த காரியங்களை அறிந்துகொள்வதிலேயே மனிதன் திட்டவட்டமான கருத்துக்களைப் பெறமுடியும்; உள்ளுலகைத் தெள்ளத் தெரிந்து தேர்ந்த பின்னரே வெளியுலக அறிவைப்பெற முயலவேனும் முடியும்’ என்பது அவரின் திடமான கொள்கை. மண்ணுலக ஆராய்ச்சியில், தாம் ஈடுபடாததின் காரணத்தைச் சாக்ரடீஸ் ஓரிடத்துக் கீழ்க்கண்டவாறு கூறுவதாகப் பிளேட்

டோவால் (Plato) சித்தரிக்கப்பட்டிருக்கிறது. "I have not leisure for such things and I will tell you the reason. I am not yet able, according to the Delphic Inscription, to know myself; and it appears to me ridiculous, while ignorant of myself to inquire into what I am not concerned in."

ஆகவே 'உன்னை அறிந்துகொள்' (Know thyself) என்ற பொருளார்ந்த கொள்கையே சாக்ரடீசின் கோட்பாடு. 'தன்னை அறிவதே' மனிதனின் ஒரே பிரச்சனை. ஏனைய பிற அறிவுகள் அனைத்தும் பெறுமதியற்றவையும், சிறப்பிற்குரியதாகாத சிற்றறிவுமேயாகும். சாக்ரடீஸ் தம்முடைய அறியாமையைப் பற்றித்தற்புகழ்ச்சி செய்துகொள்வார். மற்றவர்களைவிட அறிவிற்சிறந்தவராக அவர் கருதப்பட்டதின் காரணம், 'பிறர் தங்களுடைய அறியாமையை உணர்ந்துகொள்ளாது தங்களைத் தாங்கள் நிறைந்த அறிவுடையவராகக் கருதிக்கொள்ளும்போது, அவர் தம்முடைய அறியாமையை நன்கு உணர்ந்துகொண்டுள்ளார் என்பதே' என அவர் அடிக்கடி கூறுவதுண்டு. எனவே, இவ்வாறு, மெய்விளக்க ஆராய்ச்சி அகவுலக அறிவைப் பற்றுக்கோடாகக் கொண்டே ஆரம்பிக்கப்படவேண்டும் என்று அவர் கருதியதால், அவருடைய ஆராய்ச்சி முறைகள் மனிதன், ஒழுக்கம், அறம், நேர்மை, வாழ்வு என்ற ஒழுக்கநூல் பால் படுகின்ற பொருள்களைச் சார்ந்ததாக இருந்தது.

"ஒழுக்கம் என்றால் என்ன? நான் என்னுடைய வாழ்க்கையை எவ்வாறு ஒழுங்கு படுத்துவது? வாழ்வின் அறிவுப் பாதை எது? பகுத்தறிவு பெற்ற மனிதன் செயல்கள் எவ்வகை இருத்தல் வேண்டும்." என்பன போன்ற வினாக்களுக்கு விடை காணுவதே அவரின் சீரிய பணியாகும். உலகில் யாவரையும் கட்டுப்படுத்துகிற பொது விதி (Principle), அல்லது பொது அளவு (Standard) அல்லது பொது நன்மை (Good) இருக்கிறது அப் பொதுநன்மையாய விதியை ஆதாரமாகக் கொண்டே நேர்மை நேர்மையின்மை, தெய்வப்பற்று - தெய்வநிந்தனை, அழகு - அழகின்மை, மேம்பாடு - சிறுமை, நீதி - நீதியின்மை, அடக்கம் அடங்காமை, வீரம் - கோழைத்தனம் என்ற எதிர் மறைகள் அளவிடப்படுகின்றன. அப்பொது நன்மையே மீ உயர்ந்த நன்மை (Highest good) என்று அவர் அறுதியிட்டுரைத்தனர். இவ்விடத்து, அம் மீ உயர்ந்த நன்மை எது என்ற கேள்வி எழுதல் இயல்பு. 'அறிவே மீ உயர்ந்த நன்மை' (Knowledge is the highest good) என்பதே அதற்கு அவர் தரும் வணக்கமாகும். நன்மை என்பது அறமே.

சாக்ரடீஸிடமிருந்து பிறந்த தெளிந்த கொள்கைகளில் ஒன்று 'அறிவே அறம்' (Virtue is wisdom) என்பதாகும். ஒரு செயலின் முடிவுகள் (Ends), வகைதுறைகள் (Means), சூழ்நிலைகள் (Conditions) ஆகியவை இன்னின்ன வகையில் இருத்தல்வேண்டும் என்ற பொது நோக்கத்தை மனத்தில் வைத்துக்கொண்டு செய்யப்படும் செயலே அறமென்பது. 'செயல்' அல்லது 'செய்கை' மனிதனின் உணர்வறிவில்லாமல் நிகழ முடியாது. தீயசெயலோ அன்றி நற்செயலோ செய்பவனின் உணர்வறிவில்லாமல் நிகழ்ந்தது என்பது பொருந்தாக் கூற்றாகும். உணர்ந்தறிவதில் ஏற்படுகிற தவறுதலால் தீவினைகள் நிகழ்கின்றன. ஒரு செயலைத் தவறு என நன்கு தெரிந்த பின்பும் அதைச் செய்பவன் தவறு எனத் தெரிந்துகொள்ளாமல் அதைச் செய்பவனைவிடப் பன்மடங்கு சிறந்தவன் எனக் கொள்ளவேண்டும். தவறு எனத் தெரிந்தும் அதைச் செய்பவனிடத்தில் அறிவிருக்கிறது; ஆனால், அறம் ஒருசிறிது கெட்டுவிட்டது என்ற பழியே சாரும். ஆனால் தவறெனத் தெரியாமல்

பழிகளும் சாருகின்றன. எனவே அனைவரையும் கட்டுப்படுத்தும் உண்மையான பொது அறிவைப்பெற்று அதன் வழி ஒழுகுதலே 'அறிவே அறம்' என்பதன் விளக்கமாகச் சாக்ரடீஸ் கொண்டிருந்தார்.

...ில் அமைந்துகிடந்தும் எல்லோரையும் கட்டுப்படுத்துகிறதுமான பொதுமுடிவின் அல்லது பொதுவிதியின் அடிப்படையிலேயே அறச்செயல்கள் அளவிடப்படுகின்றன; அப் பொதுமுடிவை அறிந்து கொள்ளுதல் அறிவுடைமை; அதன்வழி யொழுகுதல் அறம்வழி நிற்றல் என்ற மூன்று கருத்துக்களையும் கொண்டு, சாக்ரடீஸ் ஒழுக்க நூலிற்கு விதையூன்றினார். சாக்ரடீஸ் காலத்திற்குப்பின்பு, அப் பொதுமுடிவு யாதெனை அறியும் முயற்சியில் பலவித மாறுபட்ட கருத்துக்கள் எழுந்தன. ஆன்றிஸ்தெனஸ் (Antisthenes), அரிஸ்ற்றிப்பஸ் (Aristippus), இயூக்லிட் (Euclid) என்பவர்கள் முறையே சினிக் (Cynic), சிரனியாக் (Cyraniac), மாகரிக் (Magaric) என்ற வகைமுறைகளைத் துவங்கினர். இவற்றைப் பின்னர் வேண்டியவிடத்து விரிவாகக் காண்பாம். ஒழுக்க நூலை ஓர் இயல் நூலாக (Science) ஆக்கியது சாக்ரடீஸே ஆகும்.

(தொடரும்)

எலியும் புலியும்

[குடந்தை, திரு. சு. கண்ணன். பி. ஏ.]

காவிரிப் புதுப்புனல் கரைபுரண்டு வந்தது. உழவன் உள்ளத்தில் உவகை பூத்தது. மனமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன. வயலில் நீர் பாய்ச்சினான்; எரு இட்டான். காலையில் கழனிக்குச் சென்று, கடும்பகல் முழுதும் மாலைவரையும் உழுதான். காலையில் கஞ்சி குடித்தவன் மாலையில் வந்துதான் உணவருந்தினான். தான் இதுவரை காத்து வந்த விதைகளைக் கொண்டு விதைத்தான். எப்படிக் காப்பாற்றியது? இல்லாளும், இன்மக்களும் பசியால் வருந்தும் சோகக்காட்சியைக் கண்ணால் கண்டும், விதை நெல்லை எடுத்து உண்ணாது காப்பாற்றியது ஏன்? விதை நெல் உண்டு உயிர் வாழ்ந்தான் என்ற பழிச்சொல் வரும் என்று அஞ்சி.

ஈராண்டு தவறிய வான்மழையும் துணை புரிந்தது. அளவிலா மகிழ்ச்சி. களை எடுத்தான். அல்லும் பகலும், விலங்கினமும் வேண்டாதோரும் தீண்டாதவாறு வயலைக் காத்தான். இது போன்று எத்துணையோ அல்லற் பட்டான் ஆறேழு மாதங்கள்.

அந்தச் சிறிய பழனத்தில் பச்சைப் பசேல் எனத் தழைத்துச் செழித்து வளர்ந்தது நெற்பயிர். கதிர் முதிர்ந்து பழுத்துத் தலை சாய்த்தது; செவ்விதாக வளர்ந்து முற்றி அறுப்பதற்குத் தயாராக இருந்தது.

இதை நோக்கிற்று ஓர் எலி. தக்க உணவு கிடைத்தது என்று கழி மகிழ்வு கொண்டது. கொண்டு, அன்று மட்டும் வேண்டிய அளவு வயிறு நிரம்ப உண்டு விட்டுவிடவில்லை. நாளை மழை வந்தாலோ அன்றி, விளை நெல் உழவன் வீட்டுக்குப்போய் விட்டாலோ தனக்குக் கிடைப்பது அரிது என்று சிந்தித்தது. ஆதலால் விளைந்த கதிராகிய உணவைச் சிறிது சிறிதாகத் தன் சிற்றளைக்கு இன்றைக்கும், இன்னும் பல நாட்கட்கும் பயன்படுமளவுக்கு நிறையச் சேர்த்து வைத்தது.

ஆம், எலியின் நோக்கு அதன் அளவில் நன்றேக்குத்தான். பிற்காலத்திற்காக இன்றே முயன்று சேர்த்தது. ஆனால்........?

உழவன் காலை வந்து பார்த்தான். ஒரு பக்கம் முழுதும் கதிர்கள் களவாடப்பட்டிருந்தன. தான் கூட உண்ணாது காத்து, விதைத்து, உடலால் நாள்முழுதும் உழைத்து அல்லற்

பட்ட அவன் மனம் என்ன பாடுபடும்? சொல்லி முடியாது. எலி யின் முயற்சி சிறிய முயற்சி; இழிந்த முயற்சி. தன் அளை நிறைய வைத்துக்கொண்டதாயினும், அதற்கென உழைத்தவர் வேறொருவர் ஆக, அவர் உழைப்பின் பயனாக வந்த விளைவைத் தான் கவர்ந்து கொண்டதால் அது இழிந்த முயற்சி; பிறர்க்குத் துன்பம் தரவல்லது, எலியின் தன்மை

ஆனால், விலங்கினத்தில் மற்றொரு வகை உயிரினமும் உண்டு. ஒரு புலி காலைமுதல் உணவுகிடைக்காமல் வருந்தியது. நடுப்பகல் எல்லாம் காடுமுழுதும் சுற்றியது; பயனில்லை. பசியின் கொடுமையால் கண் இருண்டது. இறுதியில் இருட்டும் நேரத்தில் வெகு தொலைவில் ஒரு சிறு பன்றி தென்பட்டது. உணவு கிடைத்தது. உண்ணலாம் என்று எண்ணி மகிழ்ந்து, வெகு வேகமாகத் தாவி அதன் மேற் பாய்ந்து கொன்றது. உயிர் இழந்த பன்றி புலியின் இடப்பக்கத்தே வீழ்ந்தது. இதைக் கண்ட புலி அதைத்தின்னது அவ்விடமே விட்டுச்சென்று, இரவுமுழுதும், தன் பெரும் முழையின்கண் பசியுடன் உறங்கிற்று.

மறுநாட்காலை எழுந்து பெரியதொரு களிறைத் தன் வலப் பக்கம் வீழுமாறு கொன்று அதைத் தின்றது. இது எதைக் காட்டுகிறது? தன் இடப்பக்கம் வீழாது, வலப்பக்கம் வீழ்ந்த இரை ஒன்றையே தின்ன வேண்டும் என்ற தன் கொள்கையை, தான் இறக்கும் தறுவாயில் கூட விடாதிருக்கும் ஒரு பெருங் குணத்தைத்தான், அதன் மன உரத்தைத்தான் காட்டுகிறது. இது புலியின் பெருந்தன்மை.

முன்னைய எலியின் உள்ளத்தின் மெலிவிற்கும், புலியின் உள்ளத்தின் உயர்வுக்கும் தான் எட்டுணை வேற்றுமை?

இவ்வேற்றுமை விலங்கினத்தின் உலகிலேதான் நிலவியுள்ளது என்று எண்ணவேண்டா. ஐந்தறிவேயுடைய அவ்விழிந்த உயிரிடந்தான் உளது என்று இகழவேண்டாம். பல துறையிலும் முன்னேறிய பகுத்தறிவாளராகிய மனிதர்களிடமும் இருக்கிறது. பண்பற்றோரும், பண்புடையோரும் கலந்து வாழ்கின்றனர் மக்கட் கூட்டத்திலும்.

மக்களிற் சிலர் தந்நலம் கருதாது பிறர்க்கே உரியராய், மற்றோரது ஆக்கத்திற்கும் நன்மைக்கும் உழைக்கும் உயர்ந்த உள்ளம் படைத்தவராய், மறவழி மன்னுபுகழ் தராது, "அறமொன்றேதரும் மெய்யின்பம்" என்பதை ஓர்ந்து அறக்கொள்கையை, வழுவாது கடைப்பிடிக்கும் மனத்திட்பம் உடையவராய்

அறத்திற்கு மாறுபட்ட வழியில் எனின், 'உலகுடன் பெறினும் கொள்ளலாகாது' என்று எண்ணும் பண்புள்ளம் படைத்தவராய் ... ரர்.

சிலர் மேற்கூறிய உள்ளத்துயர்வும் மனத்திட்பமும் படைத்திலர்; குறுகிய உள்ளம், பிறர் உழைக்கத் தாம் அதன் பயனை பருகும் பண்பு, எந்நலத்துள்ளும் தந்நலமே சிறந்தது என்ற கொள்கை, ஒன்று உற்றக்கால், தம்மை விரைந்து விற்றற்குரிய கீழ்மை—இவைகளையே தம் முத்திரைச் சின்னங்களாகக் கொண்டு வாழும் நடைப்பிணங்கள்.

முன்னவர் புலிபோன்றவர்; பின்னவர் எலி அனையர். பின் கூறிய கேழோராது நட்டை விலக்கி ஏனைய மேலோரைத் தழுவிக் கொள்ளல் வேண்டும். அதுவே முன்னேற வழி.

இது பழம் புறப்பாட்டு ஒன்று கூறும் அறிவுரை.

சோழன் நல்லுருத்திரன் என்பான் சோழநாட்டை ஆண்ட சங்ககால மன்னருள் ஒருவன். காலத்தாற் சற்றுப் பிற்பட்டவன். ஆயினும் ஆழ்ந்த கல்விச் செல்வமும், பரந்த கேள்வி அறிவும் நிரம்பப் பெற்றவன். பாப்புனையும் நாவன்மை படைத்தவன். எண்ணியதை எண்ணியாங்கு சீரிய முறையில் செய்யும் திண்ணிய மனம் உடையவன். இவன் முடியுடைவேந்தருள் ஒருவனாதலின், இவனைச் சூழ்ந்து ஒரு பெருங்கூட்டம் எப்போதும் இருக்கும். குறுநில மன்னர் இருப்பர்; செல்வ மக்கள் இருப்பர்; நல்லோரும் இருப்பர்; அல்லாரும் இருப்பர். சிலர் அவனுக்குக் கேடு சூழ்ந்தனர்; சிலர் கேடில் ஆக்கம் தேடித்தந்தனர்.

சூழ்ந்திருந்தோரின் குணங்களையும், குற்றங்களையும் பயின்று அறியும் அறிவும், அதற்கேற்ற வாய்ப்பும் ஒருங்கே அவனுக்குச் சிறப்புற அமைந்திருந்தன. அதனைப் பயன்படுத்த அவன் அவர்களை இரு பகுதியினராய்ப் ...

ஒரு பிரிவினர் நெல் விளைந்த சிறிடம் நோக்கி, கதிரைத் தன் வளைக்குள் கொண்டு சேர்க்கும் எலியின் தன்மைபோலப் பிறர் நலம் பேணாது, தந்நலத்தால் பிறர்க்குக் கேடு விளைவிக்கும் கீழ்மையராய் இருக்கக்கண்டான். அவர்கள் தம் செல்வத்தை நுகராது, மன்னன் செல்வத்திற்காக அவனுக்குக் கேடுசூழும் பொருத்தமில்லா நட்பினராய் இருத்தலை அறிந்தான்.

மற்றொரு பிரிவினர் இடம்வீழ்ந்த பன்றியைத் தின்னாது, மறுநாள் வலம்வீழ்ந்த களிறையே தின்னும் புலியின் இயல்பு போன்று குறைவற்ற உள்ளத்து உரனோடு, நல்லனவே செய்யும் நட்பினராய் ...

ஆதலால் அவன் முன்னவரை நீக்கி, பின்னவரது நட்புக் கொண்டான். கொண்டு, அரிய செயல்கள் பல செய்து, மிக்க பொருளும், நல்ல புகழும் அடைந்தான்.

இந்த உண்மையை உலகோர் அறியவேண்டும் என்று அவாக் கொண்டான். அந்த ஆசையின் முதிர்ச்சி, ஒரு பாடலாக அவனிடமிருந்து வெளிவந்தது. இத்தனை கருத்துக்களையும் கொண்டு அவன் அன்று பாடிய பாட்டே இன்று அழியாத இலக்கியமாக நின்று நமக்கு அவன் அறிந்த சிறந்த உண்மையைச் செவியறிவுறுத்துகிறது. இதுதான் அவன் பாட்டு:

விளைபதச் சீறிட நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொ
டியைந்த கேண்மை யில்லா கியரோ
கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
அன்றவ ணுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்த னல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மையொ
டியைந்த வைக லுளவா கியரோ. (புறநானூறு 190)

வல்சி — உணவு; மல்க — நிறைய; கேண்மை — நட்பு; கேழல்—பன்றி; விடர் அகம்—குகை.

படித்தார் நிலையும், படிப்பார் நிலையும்

[நெல்லை திரு. க. சுப்பிரமணியன்]

நாட்டினில் வதியும் மாந்தர் பலருளும் படித்தார் எல்லாம்
சீட்டுடன் புகையைக் கோடல்; சிறியபுன் மொழிகள் பேசல்;
நாட்டியம், செய்தித் தாள்கள், திரைப்பட நடிப்பும், இன்ன
காட்டிய நெறியிற் போகிப் பொழுதினைக் கழிக்கின் றாரே!

இன்றைநாள் மாணக் கர்கள் இலக்கியம் விரும்பார்; காம
இன்பமே பொதிந்த அட்டை எழிற்படம் கொண்ட நூலை
நன்றென எண்ணிக் கற்கும் நிலையினை நண்ணி னார்கள்;
என்றுமே பயனும் இல்லை; இவர்நிலை என்னே! என்னே!

சேக்கிழார் திருமொழி உண்மை

(சிலம்பு-உக, பரல்-ரு, கருக-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்ஙனம் நிற்க, மேல் எடுத்துக்கொண்ட பொருளை ஆராய்வோம். சேக்கிழார் அடிகள் அருளிச்செய்ததாகப் பெறப்படும் அத்திருமொழியின் ஒரு சிறு பகுதியே கூத்தப் பெருமான் முதல் எடுத்துக் கொடுத்ததேயன்றி வேறில்லை. ஏனைய எல்லாம் சேக்கிழார் அடிகள் பாடியருளியது. இங்ஙனமாக மிகுந்த பாகத்துக்கு ஆக்கியோராகிய சேக்கிழார் அடிகள் மொழியைக் குறைந்த பாகத்துக்கு ஆக்கியோராகிய கடவுள் மொழியில் அடங்கியிருப்பதெனக் கூறுவது பொருந்தாதெனின், மிகுந்த பாகத்தை அருளிச் செய்தவராகிய சேக்கிழார் அடிகள் என்னை அந்தக் குறைந்த பாகமும் சொல்லத் தெரியாதவரா? அவருக்கு ஏன் அந்தப் பாகத்தை முதலாகக் கடவுள் எடுத்துக் கொடுக்க வேண்டும்? சேக்கிழார் அடிகள் எந்தப் பாகமும் சொல்வார்? அதற்கு மேலும் சொல்வார். கடவுள் மொழியில் வேற்றுமையாகிறபடி அவர்தாம் என்னை, யாம் சொல்லமாட்டேமா? எம் அளவுக்கு இசைந்தபடி, எம் அளவின்படி யாம் சொல்வது போலவே சேக்கிழாரடிகள் தம் அளவின்படி தாமும் சொல்லுவரேயன்றிக் கடவுள் தம் அளவின்படி, கூறிய பாகத்தில் எப்படிக் கூடுதல் பெறும். கடவுள் சேக்கிழாராகாமையாலும், சேக்கிழார் கடவுள் ஆகாமையாலும் அவரவர் அளவின்படி மொழிகள் போந்திடுமாயின் அவை ஏற்றத் தாழ்வுடையனவாயே இருக்கும் என்பது பெற்றும். இதனால் சேக்கிழார் அடிகள் தம் அளவின்படி தாமே மிகுந்த பாகங்களை அருளினார் என்பதும் சேரா தொழியும்.

பெரிய புராணத்தில் (உலகெலாம்) என்று கூத்தப் பெருமானால் முதல் எடுத்துக் கொடுக்கப் பெற்ற குறைந்த பாகம் எந்த அளவுடைத்தோ? அந்த அளவே மற்றை மிகுந்த பாகங்களும் ஒப்புமை பெற்று விளங்கி உண்மையால் அவை ஒரே தன்மையின என்றல் அமையும். இதனால் இரண்டு மொழியும் ஒரே மொழி என்பதும் பெறும். இப்படிக் கொள்ளுங்கால் சேக்கிழார் அடிகள் தமது அறிவாலன்றித் திருவருட் போதத்தால் அருளியபடியோ எனின் அவர் என்னைச் சிவனடியார் தம்மிற் பலர் திருவருள் ஞானமேலீட்டால் பாடினார்களின் அவர் மொழிகளெல்லாம் சிவமொழியாகுமோ! சிவனடியார் மொழிகள் என்பதே போதரும். இதுவும் சேக்கிழார் அடிகளின் மொழியெனலால் சிவனடியார் மொழி என்றாலே அமையும்

எனின், இதற்கே யன்றி ஏனைய மொழிகளுக்குக், கடவுள் மொழி எடுத்துக் கொடுத்தனரா? இப்போது ஆராய்ச்சி யெல்லாம் கடவுள் முதல் எடுத்துக் கொடுத்தருளிய சிறப்புப் பாராட்டியே. ஆகையால் ஏனைய சிவனடியார் மொழிகள் சேக்கிழார் அடிகளின் மொழியுடன் ஒப்புமை பெறா என்க. சுந்தரமூர்த்தி அடிகள் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகைக்குக் கடவுள் முதல் எடுத்துக் கொடுத்தமையால் அவர் திருமொழியும் சிவமொழியாகுமே யெனின் அவரே சிவமாகையால் ஆராய வேண்டுவதில்லை. கடவுள் முதல் எடுத்துக் கொடுத்தாலும் கொடாவிட்டாலும் அவை ஒரே தன்மை பெறுதலால் ஆலால சுந்தரரே சுந்தரமூர்த்திகளாகத் தோன்றியருளியபடியால் இப்படியே சிவப் (விபூதி) பொருளாகிய[1] குமாரக் கடவுள், திருஞானசம்பந்தராகவும் சிவகணத் தலைவர் திருநாவுக்கரசராகவும் தோன்றச் செய்தமையால், அவர் மொழிகளும் சிவ மொழியாம். நால்வர் ஆசாரியர் மொழிகளோடு சேக்கிழார் அடிகள் திருமொழியும் சேர்க்கப்பட்டுத் திருமுறைகளாக எண்ணப்பட்டதனால், மற்றைத் திருமுறைகளும் சிவ மொழியாகுமெனின் அவைகளையும் திருமுறைகளாக ஆன்றோர் தொடுத்த முறைமையானே அவற்றின் ஏற்றம் வெளிப்படலால் அவை சிவமொழியாதலின் இழுக்கா என்க. அம் மொழிகளின் ஏற்றங்களும் அவை சிவமொழியாதற்குப் போந்த நெறி முறைமைகளும் இடம் வந்துழிப் பின்னர் எழுதுவாம்.

இனி, சேக்கிழார் அடிகள் திருமொழி எப்படிச் சிவமொழியாகும் என்பதைச் சற்றே விளக்குவாம். கூத்தப் பெருமான் அவருக்கு (உலகெலாம்) என்று முதல் எடுத்துக் கொடுத்தருளினார் என்பது உண்மையன்றோ? அப்படி எடுத்துக் கொடுக்குங்கால் அவர் என்ன திருமேனி பூண்டு வெளிப்பட்டு நேரில் நின்று அருளிச் செய்தனரா? வானொலியாக நின்று அருளிச் செய்ததே யன்றி வேறில்லை. அப்படியே சேக்கிழார் அடிகளை இயைந்தியக்கி (அதிட்டித்து) ஏனைய பாகங்களையும் அவரே சொல்லியருளினார் என்பதே மேலோர் கருத்தாம். ஆகாயம் என்னும் ஒரு பூதத்தை இடமாகக் கொண்டு முதல் எடுத்துக் கொடுத்தபடியே சேக்கிழார் அடிகளை இடமாகக்கொண்டு ஏனைய பாகங்களை அருளிச்செய்தபடியாம். சிவக்கொழுந்து (இலிங்க) வடிவத்தை இயைந்தியக்கி "நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப" என்று கண்ணப்ப தேவர்க்கு அருளிச் செய்தபடியும் இதற்குப் போந்த சான்றாம். சிவபெருமான் திருமேனி பூண்டு வந்தருளிச்

1. 'பொருபல'

செய்தலும் வானொலியாக நின்று அருள் செய்தலும் சிவலிங்கப் பெருமானை இயைந்தியக்கி நின்று அருளிச் செய்தலும் சிவனடியார்களை இயைந்தியக்கி நின்றருளிச் செய்தலும் அருள் மாபாகையால் அவையே ஈண்டு முடிபாயிற்றென்க. இந்த உண்மையால் சேக்கிழார் அடிகள் ஒன்றும் சொல்லியது இல்லையெனவும் யாவும் கூத்தக் கடவுளே அருளிச் செய்தார் எனவும் வெளிப்பட்டது. இப்படிக்கன்றி வேறு வகையாற் கோடல் அமைதி பெறாது என்க.

சிவபெருமான் இயங்குதிணை நிலைத்திணைகள் தோறும் கலந்திருந்து அவ்வவற்று இயல்பு அறிந்து இயங்கச் செய்வது மறை உடன்பாடாதலின், யாவும் யாவரும் அச் சிவனையன்றி ஒன்றும் செய்யவும் சொல்லவும் கூடாதல்லவா? அப்போது யாவர் சொல்வதும் கடவுள் சொல்வதே. ஆகிறபடியால், சேக்கிழார் அடிகட்கு மாத்திரம் சிறப்பு என்னவெனின், யாவர் சொல்வதையும் சொல்லுவிக்கின்றவர் கடவுள் என்றபடியே அல்லது கடவுளே சொல்லுகின்றார், சொன்னார் என்பது பொருந்தாது என்க. கடவுள் சொல்லுவிக்கின்றார் சொல்லுவித்தார் என்பதே அமையும். சிவலிங்கப் பெருமானிடமிருந்து அவர் ஒன்றைச் சொல்லுகையில் சிவலிங்கம் சொல்லிற்று; அவர் சொல்லுவித்தார் என்றல் அமையாமைபோலவே சேக்கிழார் அடிகளிடத்தும் கொள்ளற்பாலது என்க. ஆயின், சேக்கிழார் அடிகளை அதிட்டித்துப் பின் பாகங்களை ஏராளமாய் அருளிச் செய்த கடவுள் முன்பாகத்தை ஒரு சிறிது அருவமாயிருந்து சொன்னதையே கடவுள்மொழி என்று கொண்டிருக்கின்றானன்றிச் சேக்கிழார் அடிகள் மொழியை இயைந்தியக்கி உரைத்தபடியை அறிந்தது இல்லையன்றோ? உலகத்தில் அதன் பெருமை தோன்ற உரைக்க வந்தவராகையால் அவ்வுலக அநுபவத்தின்படி சிறப்புப்பெற அருவமாக நின்று உரைத்தபடியாம். உண்மையை ஊகிக்கின் அருவமாய் உரைத்ததென்று நாம் கொண்டிருப்பதைக் காட்டிலும் சேக்கிழார் அடிகளை இயைந்தியக்கி மேற்கொண்டு உரைத்ததே சிறப்பாம். எங்ஙனம் எனின் அருவமாக நின்று உரைத்தார் என்கையில் அங்ஙனம் நின்றருளிய இடம் பூதாகாயமாகையால் அதுவே திருமேனியாகி அறிவின்மை பெறும். அப்படியே சேக்கிழார் அடிகளிடம் ஆராய்கையில் அவர் உள்ளமாகிய ஞானகாய இடமே திருமேனியாகிச் சிறந்தார்தல் நிலையுதல் பெறும். இரண்டிலும் சிறந்ததுக்கே சிறப்புக் கூறப்படுதலால் சேக்கிழார் அடிகளை இயைந்தியக்கி உரைத்தமையே சிவபெருமான் விழைவு இருந்தபடியாம். பூதாகாயத்தில் விரவியுரைத்தருளியது பின் உரைக்கப்போகும் அதன் பெரு

மையை விளக்க ஏதுவாக இருந்தமையான் அதுவும் (சுவசம்வே
சஸமே) பெறும். இரண்டும் தம்மில் வேற்றுமையுரினும், இயைந்
தியக்கிய பரன்மொழி வேற்றுமையே பெற்றமையும் உடலாகா
யம் மேலுண்டாகப் போகிற சிறப்புக்கு ஏதுமாத்திரத்தால்
இயைந்தியக்கி அறிவாகாயத்தையே உரிமையாகக் கொண்டமை
யால், நிறைவாக இயைந்தியக்கி முற்றும் மருவிச் செய்தபடி கண்
டுணர்க. மேல் ஆராய்ச்சியால் பூத ஆகாயத்தை இடமாகக்
கொண்டு பரன் சொன்னதும் பரும் பார்வையில் அருவமும் நுட்
பமும் அப்பார்வையில் உருவமுமாக நின்று அருளிச் செய்தார்
என்பதாகக் கொள்ளவரும். இன்ன சிறந்த வியப்புக்கள் போத
ரக்காணும் சேக்கிழார் அடிகள் திருமொழியாகிய பெரிய புரா
ணத்தின் ஏற்றத்தை யாவரே அறியவல்லார்? போதுமான புண்
ணியம் இல்லாதபோது.

இந்த உண்மையால் பெரிய புராணம் அடங்கலும் சிவ
மொழி என்பதே துணியப்பட்டது. சேக்கிழார் மொழியெனி
னும் சிவபெருமான் திருமொழியெனினும் ஒக்குமேனும், சேக்
கிழாரும் சிவபெருமானும் ஒரு பொருள் அல்ல என்பதும்
தெளிந்திடுக. உலகம் மாயையில் தோன்றும் எனினும் பரம
னில் தோன்றுமெனினும், ஒக்குமேனும் மாயையும் பரனும்
ஒன்றாகாதபடியை ஆராய்ந்து தெளியுமாபோல இப்பொருளில்
அளவற்ற ஒப்புரைகளை இதுகொண்டே பெரியார்கள் தெளிந்
துரைக்கக்கூடுமாகையால் இதை இவ்வளவில் விடுத்தாம்.

திருதொண்டர் புராணம் எனவும் பெரிய
புராணம் எனவும் பெயர் வழங்கலால் இவை குணிகுணத்
தொடர்பால் அமைவுபெறும் திருத்தொண்டர் குணியும் பெருந்
தன்மை குணமும் ஆகும். இதனால் திருத்தொண்டரே பெரியவர்
ஆவர் என்பது வெளிப்பட்டது.

"பெரிது பெரிது புராணம் பெரிது.........
தொண்டர் தம்பெருமையைச் சொல்லவும் பெரிதே"

என்ற ஔவை வாய்மொழியும் சான்றும், பதினெண் புராணங்
களையும் வியாதரை இயைந்தியக்கிச் சிவபெருமான் உரைத்
தருளியபடியே இப்பெரிய புராணத்தைச் சேக்கிழாரை இயைந்
தியக்கி வெளிப்படுத்தினர் என்பது உண்மை, வியாதர் மொழி
யே யன்றி ஏனைய நூல்கள் பிரமானமா என்று சிலர் கூறுவரே
யெனின் வியாதருக் குண்டான சிறப்பெல்லாம் அவர் சிவனடி
யாரிற் சிறந்த வராயிருக்குந்தன்மையே யன்றி வேறில்லை.

(தொடரும்)

எழுத்தும் புணர்ச்சியும்

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

(சிலம்பு: உஅ, பரல்; கஉ: ௩சுக-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு இயற்கையாக ஒலிக்கும் தன்மையும், புணர்ப்பும், தமிழ்மரபும் அறியாத ஒரு சிலர், தம் தருக்கினால் 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' எனவும், 'கடல் மீனுக்கு நுளையனிட்டதே சட்டம்' எனவும் வழங்கும் பழமொழிக் கேற்பப் புணர்ச்சி மரபைச் சிதைத்தும், வலி மெலி இடைமைகளின் இயற்கையினை தெரியாது பிற்கால மக்கள் மயங்குமாறு எழுத்துமரபுகளைக் கெடுத்து நூல்கள் எழுதித் தம் அறிவின்மையை உலகிடைப் பரப்புவாராயினர்; அவர் தம் அத்தகைய நூல்களுக்குப் பாராட்டு, அவைகளைப் புகழ்ந்து பேச ஒரு தனிக்கூட்டமெல்லாம் உள்ளன. இவைகளை எண்ணுங்கால் நகைப்பதா? அழுவதா? என்றே தோன்றுகின்றது! என்னே நம் தமிழினத்தார் கொள்கை!

பட்டம் பல பெற்று ஆங்கிலமும் தமிழும் கற்றுத் துறை போய சிலரும் பட்டம் பதவிக்காகவோ தம் செல்வாக்கு நாட்டிடை மிகப் பரவி யிருப்பதன் காரணமாகவோ தாம் எழுதும் நூல்களில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு வேற்றுச் சொற்களைக் கலந்தெழுதி வெளியிட்டுத் தமிழ்மொழியைக் கறைப்படுத்தியுள்ளனர். இவ்வாறு எழுதி நூலுருவாக்கி நாட்டில் வெளிக்கொணரவிட்டால், தமிழ்மரபும், நல்ல தமிழும் எவ்வாறு வாழும்? 'உப்பு' இருக்க 'லவணம்' எதற்காக? லவணம் என்ற சொல், தமிழ் இயற்கையொலியோடு ஒத்துவருகின்றதா? 'வெந்நீர்' என்னும் அழகிய செந்தமிழ்ச்சொல் இருக்க 'ஹாட்வாட்டர்' எற்றுக்கோ? என்பதை எண்ணிப் பார்மின்! 'செந்திறத்த தமிழோசை வட சொல்லாகி' என்று, ஓர் ஆழ்வார் திருமங்கைமன்னர் தமிழுக்கு முதன்மை கூறுகின்றார். அவரைப்பரவும் அடியார்கள், வடமொழியே தமிழுக்கு மூலம் என்று மொழிகின்றனர்! அந்தோ தமிழகமே!

'உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்' என்பது, பழங்கால ஆன்றோர் திருமொழி. நிற்க.

புணர்ச்சிவிதிகளை அறிந்தும் அறியாதார் போன்று, வேண்டாதவைகளையும், ஒரு சொன்னீர்மைப்பட்டு நிற்கும் மொழித்தொடர்களையும் பிரித்தலும் இயைபுடைய சொற்களைத் தனித்தனியாகப் பிரித்தெழுதுதலும் ஒவ்வாதன.

விளையாட்டு என்பது ஒரு சொல்; இதனை விளை ஆட்டு என்று பிரித்தெழுதுகின்றனர். சிறுசிறு சொற்கள் சேர்ந்து ஒரு பொருளைக் குறிக்கின்றவற்றை வழக்காற்றிலும், நூலினுங் காணலாம். அவைகளைத் தனித்தனிச் சொற்களாகப் புணர்த்தாது எழுதின், குறித்த பொருளைத் தாராததோடு வெறித்த பொருளையும் தருவனவாம். திருவாளர், கூறுங்கால், மட்டற்ற போன்ற சொற்களைத் திரு ஆளர், கூறும் கால், மட்டு அற்ற எனப் பிரித்தெழுதினால், சொல்லின் யாற்றொழுக்குக் கெடுவதோடு அவைகள் வெவ்வேறு கவர்பட்ட பொருள்களையும் உணர்த்துவன வாகும். இதனை யறிந்து பிற்கால மொழிமரபுணர்ந்த பவணந்தியார்,

> 'எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி
> இசைத்திரி பால்தெளி வெய்து மென்ப.'

என, உண்மையைத் தெருட்டி யுணர்த்துவாராயினர்.

உள்ளங்கையும் விரல்களும் சேர்ந்த வொன்றே 'கை' யாகும். அவைகளுள், விரல்கள் இன்றி உள்ளங்கைமட்டும் இருப்பின் அது, கைக்குரிய வினையியற்றும் பான்மைகெட்டு, வறுங்கையாக இருத்தலைக் காண்டு மன்றோ? எனவே, அதனைக் கையெனக் கூறுதற்கில்லை. இதுபோன்றே பிரிக்கப்படுகின்ற ஒவ்வொரு சொல்லும் தம் பொருட்பயனையும் அதன் இயல்பையும் ஒருங்கே இழந்து நிற்றலைக் காட்டுவதோடு அஃதோர் மொழியாக அமையாமையையும் அறிவிக்கும்.

தமிழ்நாடு என்னும் சொல்லை ஒன்றாக இணைத்தெழுதினால் தமிழ் வழங்கும் நாடெனப் பெயர்ச்சொல்லாக இருத்தலையும் இதனையே தமிழ் நாடு எனப் பிரித்தெழுதின் தமிழும் நாடும் என விரிக்கப்பெற்று உம்மைத்தொகைப் பொருள்தருதலையும், தமிழை நாடு என ஏவல் வினையாக இருத்தலையும் நன்கு காணலாம். எனவே, பிரிப்பதனாலும், புணர்ப்பதனாலும் பொருள் வேறுபாடு தோன்றல் அறிக. பொருள்நோக்கிப் பிரித்தல் வேண்டுமேயன்றி அஃதின்றிப் பிரிப்பது பொருள்தராது. அன்றியும் பல உரையாசிரியர்களும் வெளியீட்டகத்தாரும் பாட்டுக்களைக் கண்டகண்டபடி பிரிக்கின்றனர். பாட்டு, நாவோடிசைந்த இயற்கைப்பண்புடையது; யாற்றொழுக்குப் போன்ற இடையறவுபடாத ஓசை இன்பமும் உடையது; அதைத் தனித்தனிச் சொற்களாகப் பிரிப்பினும், குற்றிய லுகர, முற்றிய லுகரந்திரிந்த புணர்ச்சித்தொடரை வலிந்து பிரிப்பினும் பாட்டின் இன்னிசை கெடுதலோடு உரைநடைபோன்று இயக்கமடையும். அதினும் நம் தமிழ்மொழி இயற்கையையே தனக்கு உறுப்பாக

வுடையது. அதனைக் கெடுத்தலுமாகும். அப்படிப் பிரிப்பதனால் யாப்பிலக்கண நூலார் வகுத்த அலகு நிலை, வெண்பா இன்னது, ஆசிரியப்பா இன்னது என்னும் வரையறையின்றி யாவும் உரை நடைபோலாகிவிடும். அதனால் பிற்கால மக்கட்குப் பாவின்நிலை இன்னதென்றே அறிய இயலாததாகிவிடும். அதை எண்ணி யாவது பாட்டுக்களைத் தனித் தனிச் சொற்களாக வெட்டா திருத்தல் நன்றெனக் கேட்டுக்கொள்கின்றேம். காட்டாக :

'அகரம் முதல எழுத்து எல்லாம் ஆதி
பகவன் முதல்து ஏ உலகு'

என்று திருக்குறளில் வரும் பாட்டுக்களை யெல்லாம் இவ்வாறு பிரித்தெழுதினால் இதைக் குறள்வெண்பா என்று கூறுதல் பொருந்துமோ? எண்ணிப் பார்மின்!

ஒரு தந்தை தன் மகன் நன்கு ஊன்றிப் படித்தலைக் 'கருத் தாய்ப் படிக்கின்றான்' என்று கூறுவானே யல்லாமல் 'கருத்து ஆய்ப் படிக்கின்றான்' என்று தனித்தனியாகப் பிரித்துச் சொல்வ தில்லை; அப்படிச் சொல்லற்கும் இயற்கையாக வாராது. இஃது இயற்கை.

இவ்வாறு பேச்சு வழக்கிற்கூடச் சொற்கள் இணைப்புற்று வரும்போது செய்யுளில் இணையாது வருமா? அதனைப் பிரிப்ப தால் எவ்வளவு இடுக்கண் இருக்கின்றதென்பதை ஊன்றி

பிரித்தெழுதிய இக்குறட்பா படித்தற்குச் சுவையின்றிப் பாவும் ஆகாது உரைநடையும் ஆகாது 'திரிசங்கு சுவர்க்க' மாக இருப்பதையும் அறிக.

செய்யுட்களையும் பிறவற்றின் சொற்றொடர்களையும் தமிழ் மரபு பேணாது பிரித்துக்கொண்டே போனால், தமிழுக்கென அமைந்த தொல்காப்பியம் போன்ற இலக்கணங்கள் வேண்டா. வேண்டாதாகவே, தமிழிலிருந்து மரபுதிரிந்து, கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலிய பல்வேறு மொழிகளாகத் திரிந்து இற்றைநாள் வேற்றுமொழிகளாக வழக்காறுற்று வருத லைப் போன்று, இற்றைஞான்றைத் தமிழ்மொழியும் இவ்வாறு பிரித்தும் திரித்தும் எழுதுவதால் 'பிரிந்த தமிழ்' என்ற பெய ரால் மாறி வேறொரு தனிமொழியாக ஆதல் கூடும். அந்த அளவிற்கு நந்தமிழக அறிஞர்கள் போகமாட்டார்களென்னும் நம்பிக்கையுடையேன்.

தமிழ் நன்மக்களே! நுங்கள்பால் வெறுப்போ காழ்ப்போ கொண்டு இதனைப் பொறிக்கின்றேனில்லை. அளவின்றி இவ்வாறு

திருத்தஞ் செய்துகொண்டே சென்றால், இறுதியில் எந்த அளவில் சென்று நிற்குமென்று எண்ணிப் பார்மின்! அதற்காக வருந்தியே இதனை வரைவான்புக்கேன்.

தமிழை வளர்க்கவும் சீர்திருத்தவும் விரும்புவோர், வேற்று மொழிக் கலைகளை இங்கே கொணர்வாராக; இயற்கைக்கு முரணுகாமற் பிரிப்பார்களாக என, வேண்டிக்கொள்கின்றேம்.

'ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்'

என்னும் பெரியார் மொழியையும் உணர்ந்து தமிழை ஆட்சி மொழியாக்கி அரியணையேற்றி முதன்மையாக்க வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேம்.

தமிழ்மொழி வாழ்க! அதன் ஒலி வெல்க!

பொங்கல் வாழ்த்து

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரே. இராமசாமிபிள்ளை]

பொங்குக பொங்கல் பொங்குக பொங்கல்
எங்கணும் இன்பம் என்றும் பொங்குக
அன்பார் ஆவின் பாலொடு கட்டி
இன்பார் நீருடன் இசையக் குற்றிய
வெண்ணெல் அரிசியை விருப்புடன் கலந்து
பண்ணற் புதியமட் பானையிற் கோலமும்
மஞ்சட் கொத்துடன் வளமார் கரும்பும்
மிஞ்சவே நாரால் மேலிடஞ் செறித்து
மங்கல மங்கையர் மணிக்கையால் அடுப்பில்
தங்குற வைத்துத் தம்மணி நாவால்
குலவைக் குரலும் கொழுவிய சங்கும்
நலமிக வானம் நண்ண இசைத்தே
பால்மிகப் பொங்கப் பல்லாண்டு பாடி
வால்வெண் பொங்கற் சோற்றை மகிழ்வுடன்
எல்லாம் வல்ல இறைவற் கீத்து
மக்களும் ஒக்கலும் மற்றுங் கிளைஞரும்
தக்கஆ டவரொடு தானினி துண்டு
ஏழை மக்கள் இயங்குயிர் எதற்கும்
தாழ்வ் இன்றித் தனித்தனி கொடுத்து
இன்புற்று வாழ வருமதைப் பொங்கல்
பொங்குக பொங்கல் பொங்குக மகிழ்ச்சி
பொங்குக தமிழகம் புகழ்மிகப் பொங்குக.

ஓம்
திருச்சிற்றம்பலம்

வழிபாட்டு அடிப்படை

[சித்தாந்தபண்டிதர், திரு. ப. இராமநாதபிள்ளை]

வழிபாடு

வழிபாடு என்பது திருவருள் கைவந்த தவத்தோர் சென்ற வழியிலே அத் தவத்தோரைப் பின்பற்றிச் செல்லுவது எனப் பொருள்தரும். வழி+படு=வழிபாடு என்றாயிற்று. படுதல் என்னும் தொழிற் பெயரின் முதனிலை படு. அதுமுதல் நீண்டு பாடு எனலாயிற்று. அடிப்படை என்பது அடிக்கண் உள்ளது என்றாகும். இவ்விரு சொற்களும் கூடி எவ்வகையான வழிபாட்டிற்கும் முதற்கண் இன்றியமையாது வேண்டத்தக்கது எனப் பொருள்தரும். கடவுட்பூசை, ஆசிரியர் பூசை, பெரியோர்பூசை, பெற்றோர்பூசை, மூத்தோர்பூசை முதலியன மட்டும்தான் வழிபாடு என்று கருதுகின்றோம். அதுமட்டும் அன்று. நாம் செய்யும் எல்லாச் செயலும் முறையிற் செய்யப்படின் அவையும் வழிபாடேயாகும்.

முறை

முறையிற் செய்தல் என்பது ஒவ்வொருவரும் அகம் புறம் தூயராய்க், கடவுள் நினைவும், கற்றோர் துணையும், நற்சார்பும் கைக்கொண்டு, அனைத்துயிர்க்கும் நலம் பயக்கும் அன்பருள் கலந்த இன்செயல்களை இனிதியற்றலாகும். அங்ஙனமாயின் உழைத்தல், உண்டல், உறவாடல், உரையாடல், உணர்தல், உறங்கல், இவை யாக்குவித்தல் முதலியனவும் மேற்கூறிய முறைப்படி அமையின் அவையும் வழிபாடே யாகும். அவற்றிற்கு வேண்டிய இன்றியமையாதன சிலவற்றை மட்டும் ஈண்டுத் தருகின்றாம். அதன்படி முதற்கண் அமைத்துக்கொண்டு எல்லா முயற்சியும் மேற்கொண்டு நல்லராய் வாழவேண்டுவது சான்றாண்மை மேற்கொண்டு ஒழுகுவார் அனைவர்க்கும் கடன் என்க.

முழுகல்

"வைகறைத் துயிலெழு" என்பது தமிழ்மூதாட்டியார் திருமொழி. "வைகுறுவிடியல் மருதம்" என்பது ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம். மருதம் என்பது வயலும் வயல்சார்ந்த இடமும் என்ப. இந் நன்னிலமே மக்கட்பண்பு வளர்ந்து கண்ணோட்டமும், கடவுள் வழிபாடும் சிறந்து காவலும் மேவலும் மிகுந்து பொன்னும் பொருளும் பொலிந்து பிறர்க்

கென வாழும் பெற்றிமை வாய்ந்த பெரியோர் திகழ்ந்து உல கோம்புதற்கு உகந்த பெருநிலம் என்ப. நிலம் என்னும் நல லாள் நல்கிய வளங்கொண்டே நாடு வாழ்தல்வேண்டும். அவ் வளம் சேர் விளைபொருள்களாலேயே கைத்தொழில் உண்டாதல் வேண்டும். விளைபொருள் அனைத்தும் மெய்ப்பொருளாம் முழு முதல்வன் உடைமை. விளைநிலமும் அவன் உடைமையே. விளைவிப்பாரும், விலைகொடுத்துப் பெறுவாரும் அவன் அடி மையே. ஆண்டவன் பொருளுக்கு விலை எங்ஙனம் வரையறுப் பது? "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு, என் னாற்றுங் கொல்லோ உலகு." என்னும் தமிழ்மறைப்படி ஏதும் விலைகொடுக்க இயலாதென்பதுதான் பொருத்தம். எனவே, ஆறறிவுபடைத்த மக்களாகிய நாம் ஒருவருக்கு ஒருவர் செய்யும் பண்டமாற்றுதல் அனைத்தும் உண்மையான் நோக்குவார்க்கு ஒருவருக்கொருவராற்றும் உதவியென்றே அமையும். பண்ட மும் பணமும் அவரவர்பால் உள்ளன அன்புடன் உதவும் உதவிப் பொருள்களே. இப்பொருள்கள் அனைத்தும் பயக்கும் அருள் நிறை செஞ்சொல் "வேளாண்மை" என்ப. வேளாண்மை என்பது பிறர்க்குரிய இன்றியமையா விருப்பத்தினை நிறை வுறுத்தும் உதவி என்ப. வேள்—விருப்பம். ஆண்மை—உதவி யால் உயரச் செய்து தன் வழிப்படுத்தல். இத்தகைய வேளாண் மாந்தர் உறையும் மென்நிலம் மருதம். அதற்குரிய சிறுபொழுது வைகறையும் விடியலும். அதற்குரிய தெய்வம் வேந்தன். வேந்தன்—சிவபெருமான். இவனே போகம் ஈன்ற புண்ணியன். அம்மையப்பராக விளங்கும் கொன்றைக் கண்ணியன்.

சிறுபொழு தென்பது ஒருநாளை ஆறு கூறுசெய்வது. பெரும் பொழுது என்பது ஓர் ஆண்டை ஆறுகூறு செய்வது. மருதத்திற்கு உரிய சிறு பொழுது இரவு நாழிகை இருபதி லிருந்து முப்பதுவரையும் உள்ள பத்து நாழிகை ஆகும். இப் பத்து நாழிகையுள் முன் ஐந்து நாழிகை வைகறை யாகும்; பின் ஐந்து நாழிகை விடியலாகும். முதியோரும் தவத்தோரும் வைகறையில் விழித்தல் வேண்டும். இளைஞரும் ஏனையோரும் விடியலில் விழித்தல் வேண்டும். விடியற்காலம் என்பது நான்கு மணியின் தொடக்கமாகும். நான்கரை மணிக்குள் குளிர்ந்த நீரில் முழுகுதல் வேண்டும். இக்காலத்து நீர் தனிப்பெரு மின்னாற்றலுடன் திகழும். முழுகும்போது கூடிக்களித்துக் கடவுள் நினைவுடன் முழுகுதல் வேண்டும். முழுகும்போது ஓத வேண்டிய திருப்பாட்டு:

"களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் நின்றவிப் பத்தரைக் கோதில்செந்தேன்

தெளித்துச் சுவையமுதூட்டி யமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வம் ஆக்குமைய யாறன் அடித்தலமே."
(ச. அப்பர், கஉ-எ)

களித்தல்: இன்புறுதல். கலத்தல்: குடும்பத்தாருடனும் நண்பருடனும் கூடுதல் காதல்: பேரன்பு. கசிவு: அன்பால் செய்யும் தொண்டு. காவிரிவாய்: காவிரியாற்றுத்துறை; சோலை சூழ்ந்த நீர்நிலை. தொழுது: நீறணிந்து வணங்குதல். பத்தர்: மெய்யன்பர். செந்தேன்—திருவடி நினைவு. சுவையமுது: அடிமை உணர்வு. அமரர்—அடியார் பேற்றை அவாவிய விண்ணவர். பெருஞ்செல்வம்: அடியாரிணக்கம்.

அகத்தூய்மை

அகத்தூய்மைக்கு அருள்துணையால் அறுபகை செறுதலும், ஐம்புலன் அடக்குதலும், அருள்வழி நிற்றலும் இன்றியமையாதன. இவைகிடைக்கப் பெற்றார் மெய்யுணர்வுச் செல்வராம் சிவபெருமான் திருவடியைப் புகலாகப் பெற்றுப் பேரின்பம் உற்று என்றும் ஒருபடித்தாய் வாழ்வர். இவர் நிலையே அடிமை நிலை

அறுபகை: க. செருக்கு, உ. சினம், ங. சிறுமை, ச. இவறல், ரு. மாண்பிறந்த மானம், சு. மாணு உவகை. (காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம்.)

ஐம்புலன்: க. செவி, உ. மெய், ங. கண், ச. வாய், ரு. மூக்கு.

செந்தமிழ்ப் பொதுமறையளித்த திருவள்ளுவர் மேலனவற்றை அருளுவது வருமாறு:

"செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமிதம் நீர்த்து.
இவறலும் மாண்பிறந்த மானமும் மாணு
உவகையும் ஏதம் இறைக்கு." (சஙக-உ)

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள." (கக0க)

'களுய்ய ஆண்டவன் உடல், கலன், உலகு, ஊண் முதலியவற்றைப் பேரருளால் மாயையினின்றும் படைத்து அவ் ஆவிகளுக்குக் கூட்டியருளினன். இந்நான்கும் தனுகரண புவனபோகம் என்ப. இவற்றுடன் கூடி அவ்வாவிகள் பண்டே புல்லிய மலநோய் விண்டகல அருள்வழி முயல்வவாயின. அம்முயற்சி ஆண்டவன் ஆணை. ஆணை எனினும் கட்டளை, ஏவல், பணிகள் எனினும்

ஒன்றே. ஆண்டவன் ஆணைவழி நிற்பார் அடிமை எனப் படுவர். தம் முனைப்பற்றவராவர். அவர் செய்யும் செயல்கள் அனைத்தும் மலநோய் நீங்கும் மருந்தாகும். தம் முனைப்பால் செய்வன மல நோய் நீக்கும் மருந்தாகிய வினையைப் பெருக்குவனவாகும். மருத்துவன் சொல்வழி மருந்துண்ணின் பழைய நோய் அகலும், புதிய நோய் அணுகாது. அம் முறையினைக் கடந்து நோயாளி தான் நினைத்தபடி மருந்து உண்ணின் பழைய நோய் அகலினும் புதிய நோய் பல அணுகும். அதன் பொருட்டுப் பின்னரும் மருந்துண்ண வேண்டிவரும். இவற்றை விளக்கும் சிவஞான சித்தியார் திருமொழியும், கருத்தும் வருமாறு :

"அருளினு லுரைத்த நூலின் வழிவாரா ததன்மஞ் செய்யின்
இருளுலா நிரயத் துன்பத் திட்டிரும் பாவம் தீர்ப்பன்
பொருளுலாம் சுவர்க்க மாதி போகத்தாற் புணியந் தீர்ப்பன்
மருளுலாம் மலங்கள் தீர்க்கும் மருந்திவை வயித்திய நாதன்."

(சு. உ. அதி. உ-௩௩)

["வேதாகம நூல்வழி நில்லாமை பாவம், நூல்வழி நின்று அருள்வழி நில்லாமை புண்ணியம், இரண்டும் உயிர்க்கு நோய்- சிவஞான முனிவர்.]

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

என்பதும் இக்கருத்தே யாகும்.

அறுபகை செறுதல் ஐம்புலன் அடக்கல் அருள்வ[illegible] ஆகிய மூன்றும் அகத்தூய்மை வாயில்களாகும். அவற்றைத் தொகையாக நினைத்துக் கைக்கொள்ள ஓதவேண்டிய திருப்பாட்டு :

அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற் றைம்புலனும் அடக்கி ஞானப்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க் கந்திகழச் சலசத் தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட மணம்செய்யும் மிழலை யாமே.

இம் மூன்றும் திருஅருள் துணையால் நிகழவேண்டும். ஆதலின் அதன்பொருட்டு அன்புடன் ஓதவேண்டிய திருமுறைத் திருமாமறைகள் வருமாறு:

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ரு ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க."

இதன்கண் ஆறு வாழ்த்துகள் அமைந்துள்ளன. இவற்றை அன்புடன் ஓதுவதால் 'செருக்கு' முதலிய ஆறு அகப் பகைகளும் அணுகா.

வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க
௧0. சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க.

இதன்கண் ஐந்து வெல்க வந்துள்ளன. அவற்றை அன்புடன் ஓத ஐம்புலனும் ஓதுவார்க்குத் துணையாய் அவர்பின் சென்று அடங்கும். அடங்குதல் நல்வழிப்படுதல். 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பதும் காண்க.

ஈசன் அடிபோற்றி எந்தையடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
௧ஞ. சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி.

இதன்கண் எட்டுப் போற்றிகள் திகழ்கின்றன. இவற்றை அன்புடன் ஓத ஆண்டான் திருவருள் விளக்கம் ஆகிய எண் குணங்களும் அகத்தே மிகும். மிகவே அவர் மெய்யடியாராவர். அவர் திருவடி மறவாச் சிறப்பினராவர். அவரே அருள்வழி நிற்பவர். அவரே பிறவாப் பெருவாழ்வு எய்திப் பேரின்பம் நுகரும் பெற்றியர்.

"சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கி."

என்னும் இத் தொடரைப் புகலும் 'பொய்யடிமை யில்லாத புலவர்' நெஞ்சினுள் இறைவன் முன்னின்று செலுத்துதலின் அவர் செய்யும் செயல் அனைத்தும் அருட்செயலே யாகும். அவரும் 'அவனருளாலே' அனைத்தும் செய்யும் அருங்குறிக்கோள் அகங்கொண்டொழுகும்' 'செயற்கரிய செய்வா'ராவர். இவை இருவினையுஞ் சேரா இறைபணி.

நாம் அனைவரும் முதற்கண் குறித்த 'அகனமர்ந்த அன்பினராய்' என்னும் தேவாரத்தினையும், இச் சிவபுராணத் திருத்தொடர் பதினெட்டினையும் அன்புடன் ஓதிச் "சிந்தைமகிழ" தொண்டுசெய்வாம் என நினைந்து கொண்டு எத்தொழிலும் செய்வோமாக. ஆண்டவன் அருள்வானாக.

உன்னடியேன் செய்பணிகள் உன்தொண்டே உன்அருளே
உன்னடிக்கே ஒப்புவித் தேன்.

பொங்குக இன்பப் பொங்கல்

[திரு. சோ. ந. கந்தசாமி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.]

கவிந்திடும் இருளை நீக்கிக் கதிர்மதிக் கொளியை ஈந்து
குவிந்திடும் மலர்வாய் காட்டிக் கோதறு இயற்கை யெல்லாம்
சவியுறத் திகழு மாறு தகையொளி மழையைப் பாய்ச்சி
அவியுறு துலகைக் காக்கும் அருங் "கதிர்ப் பொங்கல்" வாழி!

குவலயம் குலவி வாழக் கொடுமைகள் தகைய வாழ்வின்
அவலமே அழிய அன்பின் அறமெலாம் ஒளிரப் பாரில்
நுவலருங் கலைகள் ஓங்க நெடிதுநாள் உழைக்கும் மேழித்
தவலரும் உழவர் பொங்கல் தமிழ்ப்பெரும் நன்னாள் வாழி! (உ)

மலைபுரை துன்பத் தாழ்ந்தும் மகிழ்வுடன் ஏர்கை தூக்கி
நிலமெலாம் உழுது வித்தி நீர்எரு நிறைய வட்டி
உலகெலாம் ஓங்கச் செய்யும் உணவுடைப் பொருள்கள் ஈந்து
தலைமுறை யாக வாழ்நர் "தைப்பொங்கல்" நன்னாள் வாழி! (ங)

பொன்னொளி காலுஞ் செந்நெற் பொற்புறும் இஞ்சி மஞ்சள்
கன்னல்நற் கதலிக் கோலம் கவினுறத் துலங்கப் "பொங்கல்"
மன்னிட உழவ ரெல்லாம் மாகவான் பருதி நோக்கிப்
பன்னறும் வாழ்த்துக் கூறும் பழந்தமிழ்ப் பொங்கல் வாழி! (ச)

மங்கைமார் தூநீ ராடி மலர்மடி யணிந்து பொங்கல்
பொங்கிடும் புதுக்கு டத்திற் புதுநெல்லின் அரிசி கூட்டிச்
செங்கரும் பினிய சாறும் தீம்பசுப் பாலும் வார்த்துப்
"பொங்கலோ பொங்கல்" என்னப் பொங்குக இன்பப்
பொங்கல்! (ரு)

கடன்முறை தவறாச் செம்மல் கயக்கறும் உழவர் நட்பாய்
உடன்உழைத் தோங்கும் மாக்கள் உலப்பிலா இன்பம் பொங்க
தடக்குள நீரி லாட்டித் தகைபுனை மாலை சூட்டி
மடந்தைசெய் பொங்க லூட்டி மகிழ்ந்திடும் பொங்கல் வாழி!

கங்குலைச் சீக்குங் காலைக் கதிரவன் எழுந்தான் மானத்
தங்கநற் றமிழ்நா டெல்லாம் தரணியிற் பரப்பி மேலைச்
செங்கலை தமிழிற் சேர்த்துத் தனித்தமிழ் நாடு காணப்
"பொங்கலோ பொங்கல்" என்னப் பொங்குக இன்பப்
பொங்கல்! (எ)

மறைவுற்ற தமிழ்நூல்கள்

[மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி]

(சிலம்பு: உக, பரல்: ச, கஎச-ஆம் பக்கத் தொடர்ச்சி)

107. சிறுகாக்கை பாடினியம்

சிறு காக்கை பாடினியார் என்பவர் இயற்றிய இந்நூலுக்குச் சிறுகாக்கை பாடினியம் என்னும் பெயர் சூட்டப்பட்டது. இது இலக்கண நூல். இவருக்கு முன்னர், காக்கை பாடினியார் என்னும் பெயருள்ள வேறொருவர் தம் பெயரால் காக்கைபாடினியம் என்னும் இலக்கணநூலைச் செய்திருத்தல் பற்றி, அவரின் இவர் வேறானவர் என்பதைக் குறிப்பதற்காகச் சிறு என்னும் அடைமொழி கொடுத்துச் சிறுகாக்கைப் பாடினியார் என்று வழங்கப்பட்டார்.

காக்கைபாடினியார் என்னும் பெயருள்ள இரண்டு ஆசிரியர் இருந்தனர் என்பதை உரையாசிரியர்கள் கூறுவதிலிருந்து அறிகிறோம். பேராசிரியர் (தொல்; பொருள், செய்யுளியில் 1-ஆம் சூத்திர உரையில்) இவ்வாறு எழுதுகிறார்:

"'இணைநூன் முடிபு தன்னூன் மேற்றே' என்பதனால் காக்கைபாடினியார் ஓதிய தளையிலக்கணம் ஈண்டுங்கோடல் வேண்டுமெனின், அஃதே கருத்தாயின் இவர்க்கும் அவர் முடிவே பற்றித் தளை தளையல்வேண்டும். அல்லதூஉம், அவர்க்கு இளையரான காக்கைபாடினியர் தளைகொண்டிலரென்பது இதனாற் பெற்றாம். தளைவேண்டினார் பிற்காலத்தோராசிரியரென்பது இதனாற் பெற்றாம். என்னை?

> 'வடக்குந் தெற்குங் குணக்குங் குடக்கும்
> வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
> றிந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
> நூலதி னுண்மை வாலிதின் விரிப்பின்'

எனக்கூறி வடவேங்கடந் தென்குமரியெனப் பனம்பாரனார் கூறியவற்றானே எல்லை கண்டார் காக்கைபாடினியார்: ஒழிந்த காக்கை பாடினியத்து,

> 'வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
> தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்'

எனத் தென்றிசையுங் கடலெல்லையாகக் கூறப்பட்டதாகலான் அவர் குமரியாறுள்ள காலத்தாரல்ல ரென்பதூஉம், குறும்பனை நாடு அவர்க்கு நீக்கல் வேண்டுவதன்றென்பதூஉம் பெற்றாம்.

பெறவே, அவர் இவரோடு ஒருசாலை மாணாக்கர் அல்லரென்பது எல்லார்க்கும் உணரல் வேண்டுமென்பது.''

மேலும் பேராசிரியர் எழுதுகிறார் :—'' பிற்காலத்துக் காக்கைப் பாடினியாரும் தொல்காப்பியரோடு பொருந்தவே நூல் செய்தாரென்பது. மற்று,

'வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு கரைபொருது கிடந்த
நாட்டியல் வழக்க நான்மையின் கடைக்கண்
யாப்பின திலக்கண மறைகுவன் முறையே'

எனத் தெற்குக் குமரியன்றிக் கடலெல்லையாகிய காலத்துச் சிறு காக்கைபாடினியார் செய்த நூலினையும் அதன் வழிநூலென்னுமோ வெனின், ஈண்டுக்கூறிய பொருளெல்லாந் தழுவு மாற்றாற் செய்தது ஆராயின், அது வழிநூலாதற்கு இழுக்கென்னை யென்க.'' (தொல் : பொருள் : மரபு : 95-ஆம் சூத்திர உரை)

யாப்பருங்கலம் செய்யுளியல் 3-ஆம் சூத்திரமாகிய

'தாழிசை துறையே விருத்த மென்றிவை
பாவினம் பாவொடு பாற்பட் டியலும்.'

என்பதற்கு உரையெழுதிய விருத்தியுரைகாரர் இவ்வாறு எழுதுகிறார் :—''விருத்தம் துறை தாழிசையென்று காக்கைபாடினியார் வைத்த முறைமையின் வையாது தாழிசை துறை விருத்த மென்று தம் (அமிர்த சாகரனார்) மதம்பட வைத்ததன்று; சிறு காக்கைபாடினியார் முதலாகிய ஒருசா ராசிரியர் வைத்த முறைமை பற்றி வைத்தாரென்க.''

காக்கைபாடினியார் என்னும் பெயருள்ள புலவர் இருவர் இருந்தனர் என்பதும், அவர்கள் தத்தம் பெயரால் காக்கை பாடினியம் என்னும் இலக்கண நூலைச் செய்தனர் என்பதும், அவர்களில் ஒருவர் தொல்காப்பியர் காலத்திலும், மற்றவர் பல நூற்றாண்டுக்குப் பின்னர் குமரியாறு கடல் கொள்ளப்பட்ட பிறகு இருந்தவர் என்பதும், இவ்விருவரையும் பிரித்துக் காட்டும் பொருட்டுப் பிற்காலத்தவர் சிறு என்னும் அடைமொழிகொடுத்துப் பிற்காலத்திருந்த காக்கைபாடினியாரைச் சிறுகாக்கை பாடினியார் என்று வழங்கினார்கள் என்பதும் தெரிகின்றன.

சிறுகாக்கை பாடினியாரைப் பற்றியும் அவர் இயற்றிய சிறுகாக்கை பாடினியம் என்னும் இலக்கணநூலைப்பற்றியும் வேறு செய்திகள் தெரியவில்லை.

சிறுகாக்கைபாடினியச் சூத்திரங்கள் சிலவற்றை யாப்பருங் கல விருத்தியுரைகாரர் தமது உரையில் மேற்கோள் காட்டு கிறார். அச்சூத்திரங்கள் இவை :—

குறிய நெடிய வுயிருறுப் புயிர்மெய்
வலிய மெலிய விடைமை யளபெடை
மூவுயிர்க் குறுக்கமு மாமிசைக் கெழுத்தே. 1

தனிநெடி லாகியுந் தனிக்குறி லாகியு
மொற்றொடு வந்து நேரசை யாகும். 2

குறிலிணை யாகியுங் குறிநெடி லாகியு
மொற்றொடு வந்து நிரையசை யாகும். 3

இடையுங் கடையு மிணையுமை யெழுத்தே. 4

ஈரசை யாகிய மூவகைச் சீர்தான்
நேரிதின் வெள்ளை நிரையிறின் வஞ்சி. 5

நடுவுநே ரியலா வஞ்சி யுரிச்சீ
ருரிமை யுடைய வாசிரியத் துள்ளே. 6

இயற்சீ ரொன்று நிலையது வெண்டளை
உரிச்சீ ரதனி லொன்றுத லியல்பே. 7

ஈரசை யியற்சீ ரொன்றிய நிலைமை
யாசிரி யத்தளை யாகு மென்ப. 8

வெண்சீ ரிறுதி நிரைவரிற் கலித்தளை
வஞ்சி வகைமை வரைவின் றாகும். 9

வஞ்சி யல்லா மூவகைப் பாவும்
எஞ்சுத லிலவே நாற்சீ ரடிவகை. 10

முதலெழுத் தொன்றி முடிவது மோனை
யேனைய தொன்றி னெதுகைத் தொடையே
யறுப்பி னொன்றின் விகற்பமு மப்பா
னெறிப்பட வந்தன நேரப் படுமே. 11

(இச்சூத்திரம் காக்கை பாடினியார் சூத்திரம் என்றும் கூறப்படுகிறது.)

சொல்லிசை யளபெழ நிற்பதை யளபெடை. 12

ஒன்றிய தொடையொடும் விகற்பந் தன்னொடு
மொன்றாது கிடப்பது செந்தொடை யாமே. 13

பல்வகைத் தொடையொரு பாவினிற் றொடுப்பிற்
சொல்லிய முதற்றொடை சொல்லினர் கொளலே. 14

பாவே தாழிசை துறையே விருத்தமென
நால்வகைப் பாவு நானூன் காகும். 15

ஒன்றும் பலவும் விகற்பாய்த் தனிச்சொ
லின்றி வருவன வின்னிசை வெண்பா. 16

தொடைபல தொடுப்பன பஃறொடை வெண்பா. 17

அடிமூன் றாகி வெண்பாப் போல
விறுவன மூன்றே வெள்ளொத் தாழிசை. 18

நான்கு மூன்று மடிதொறுந் தனிச்சொற்
றேன்ற வருவன வெளிவிருத் தம்மே. 19

இருசீ ரடிமே லொருசீர் குறையடி
பெறுவன நேரிசை யாசிரி யம்மே. 20

ரக்குற ளாகும். 21
கொண்ட வடிமுத லாயொத் திறுவது

மண்டில யாப்பென வகுத்தனர் புலவர். 22

அடிமூன் றொத்திறி னொத்தா ழிசையே. 23

அறுசீ ரெழுசீ ரடிமிக வரூஉ
முறைமைய நாலடி விருத்த மாகும். 24

தரவே தாழிசை தனிச்சொற் சுரிதகம்
வருவன வெல்லாந் தாழிசைக் கலியே. 25

சேர்த்திய தரவொடு தாழிசைப் பின்னர்
நீர்த்திரை போல நெறிமையிற் சுருங்கி
மூவகை யென்னு முறைமையின் வழாஅ
வளவின வெல்லா மம்போ தரங்கம். 26

அந்த வடிமிக் கல்லா வடியே
தந்தமு ளொப்பன கலித்தா ழிசையே. 27

நாற்சீர் நாலடி கலிவிருத் தம்மே. 28

எஞ்சா விருசீர் நாலடி மூன்றெனில்
வஞ்சித் தாழிசை தனிவரிற் றுறையே. 29

முச்சீர் நாலடி யொத்தவை வரினே
வஞ்சி விருத்த மென்றனர் கொளலே. 30

தனிச்சொல் லென்ப தடிமுதற் பொருளொடு
தனித்தனி நடக்கும் வஞ்சியு ளீறே. 31

108. சித்தாந்தத் தோகை

சிவஞான சித்தியார், நீலகேசி என்னும் நூல்களின் உரைகளிலிருந்து இப்பெயருள்ள நூல் ஒன்று இருந்ததென்பது தெரிகிறது. இது பௌத்த சமய நூல். ஞானப்பிரகாசர், சிவஞான சித்தியார் (பரபக்கம் : சௌத்திராந்தகன் மதம் 2 - ஆம் செய் உரையில் சித்தாந்தத் தொகையிலிருந்து ஒரு ள் காட்டுகிறார். அவர் காட்டுவது :

"'அருணெறியாற் பாரமிதை யாறைந்து முடனடக்கிப்
பொருண் முழுதும் போதிநிழ னன்குணர்ந்த முனிவரன்றன்'
இஃதவர்கள் (பௌத்தர்கள்) சித்தாந்தத் தொகை."

சித்தாந்தத் தொகையிலிருந்து இந்த இரண்டடிகளை மட்டும் மேற்கோள் காட்டிய உரையாசிரியர், ஷை சித்தியார் (சௌத்திராந்திகன் மதம் 31 - ம் செய்யுள்) உரையில் இச் செய்யுள் முழுவதையும் மேற்கோள் காட்டுகிறார். அது,

"அருணெறியாற் பாரமிதை யாறைந்து முடனடக்கிப்
பொருண்முழுதும் போதியின்கீழ் முழுதுணர்ந்த முனிவரன்தன்
அருண்மொழியா னல்வாய்மை யறிந்தவரே பிறப்பறுப்பார்
மருணெறியாம் பிறநூலும் மயக்கறுக்கு மாறுளதோ.'

என்பது.

நீலகேசிக்கு உரையெழுதிய சமய திவாகர வாமன முனிவர், (புத்தவாதச் சருக்கம் 64 - ஆம் செய்யுள் உரை) சித்தாந்தத் தொகையிலிருந்து ஒரு பாட்டின் ஓர் அடியை மட்டும் மேற்கோள் காட்டுகிறார். அது, "மருட்டரு மனம் வாய் மெய்யிற் கொலைமுதல் வினைபத்தாமே, என்பது சித்தாந்தத் தொகை" என்பது.

பௌத்த சமய சித்தாந்தங்களைத் தொகுத்துக் கூறுவது இந்நூல் என்பது தெரிகிறது. இந்நூலைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

109. திருப்பதிகம்

இப்பெயருள்ள பௌத்த சமய நூல் ஒன்று இருந்ததென்பது சிவஞான சித்தியார், நீலகேசி என்னும் நூல்களின் உரைகளிலிருந்து தெரிகிறது. சிவஞான சித்தியார் (சௌத்திராந்திகன் மதம் 2 - ஆம் செய்யுள்) உரையில் ஞானப்பிரகாசர் இந்நூலிலிருந்து இச்செய்யுளை மேற்கோள் காட்டுகிறார் :

"எண்ணிகந்த காலங்க ளெம்பொருட்டான் மிகவுழன்
றெண்ணிகந்த காலங்க ளிருடீர வொருங்குணர்ந்து
மெண்ணிகந்த தானமுஞ் சீலமு மிவையாக்கி
எண்ணிகந்த குணத்திறு னெம்பெருமா னல்லனோ."

இச்செய்யுளை மேற்கோள் காட்டிய பின்னர், 'இது திருப்பதிக மெனக் கொள்க' என்று எழுதுகிறார். சிவஞான சித்தியார், சௌத்திராந்திகன் மதமறுதலை 8 - ஆம் செய்யுள் உரையிலும் இதே செய்யுளை மேற்கோள் காட்டுகிறார்.

நீலகேசி கடவுள் வாழ்த்து உரையில், பௌத்த மதத்தைக் கண்டிக்கும் இடத்தில், சமய திவாகர வாமன முனிவர் இந்தச் செய்யுளையும் மற்றொரு செய்யுளையும் மேற்கோள் காட்டுகிறார். ஆனால், இச்செய்யுள்கள் எந்த நூலைச் சேர்ந்தவை என்பதைக் கூறவில்லை. கூறவில்லையாயினும், இச் செய்யுள்கள் ஞானப்பிரகாசர் குறிப்பிடுகிற திருப்பதிகம் என்னும் நூலைச் சேர்ந்தவை என்பது தெளிவாகத் தெரிகிறது. சமய திவாகர வாமன முனிவர் மேற்கோள் காட்டும் செய்யுள்கள் இவை :—

என்றுதா னுலகுய்யக்கோ ளெண்ணினு னதுமுதலாச்
சென்றிரந் தார்க்கீந்தனன் பொருளுடம் புறுப்புக்க
டுன்றினன் பிறக்குந னுளனுயின் மாமேருக்
குன்றியின் றுணையாகக் கொடுத்திட்டா னல்லனோ.

எண்ணிகந்த காலங்க ளெம்பொருட்டான் மிகையுளந்
தெண்ணிகந்த வுலோகங்க ளிருடீர வொருங்குணர்ந்
தெண்ணிகந்த தானமுஞ் சீலமு மிதையாக்கி
யெண்ணிகந்த குணத்திறு னெம்பெருமா னல்லனோ.

திருப்பதிகம் என்னும் இந்நூலைப்பற்றியும் இதன் ஆசிரியரைப்பற்றியும் வேறு செய்திகள் தெரியவில்லை.

110. சாந்தி புராணம்

சாந்தி புராணம் என்னும் பெயருள்ள நூல் ஒன்று இருந்தது என்பதை, அப் புராணத்திலிருந்து ஒன்பது செய்யுள்கள் புறத்திரட்டு என்னும் தொகைநூலில் தொகுக்கப்பட்டதிலிருந்து அறியலாம். இது சமண சமய நூல். இப்போது இந்நூல் மறைந்துவிட்டது.

சாந்தி புராணம் என்பது சாந்திநாதர் என்பவருடைய வரலாற்றைக் கூறும் நூல். சாந்திநாதர், சைனருடைய இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களுள் பதினாறாவது தீர்த்தங்கரர் ஆவார். இவருடைய வரலாறு ஸ்ரீபுராணம் என்னும் மணிப்பிரவாள

வசன நூலினும், திரிசஷ்டி சலாகாபுருஷ சரித்திரம் (அறுபத்து மூன்று பெரியார் சரித்திரம்) என்னும் நூலில் கூறப்பட்

அஸ்தினபுரத்துக் குருவம்சத்தில் அரச குமாரனாகப் பிறந்து சக்கரவர்த்தியாக விளங்கிப் பின்னர் துறவு பூண்டு கேவலஞானம் பெற்றுத் தீர்த்தங்கரராக வாழ்ந்து சைனமதத்தை உலகத்திலே பரவச்செய்து இறுதியில் மோட்சமடைந்தார்.

இவருடைய சரித்திரத்திலே இவருடைய பதினொரு முற்பிறப்பு வரலாறுகள் கூறப்படுகின்றன. பரத கண்டத்தில் இரத்தின புரத்தின் அரசனாக ஸ்ரீசேனன் என்னும் பெயருடன் முதலில் பிறந்தார். பிறகு உத்தரகுருவில் பிறந்தார். அங்கிருந்து தேவலோகத்தில் தேவனாகப் பிறந்தார். பிறகு இரதநூபுரத்து அரசகுடும்பத்தில் அமிததேஜஸ் என்னும் அரசனாகப் பிறந்தார். பின்னர் நந்திதாவர்த்த தேவலோகத்திலே மீண்டும் தேவனாகப் பிறந்தார். பிறகு மீண்டும் பரத கண்டத்திலே சுபாநகரத்து அரச குடும்பத்திலே அபராஜிதர் என்னும் அரசனாகப் பிறந்தார். இந்தப் பிறப்புக்குப் பிறகு அச்சுத தேவலோகத்திலே இந்திரனாகப் பிறந்தார். பின்னர் மீண்டும் ரதன சஞ்சய நகரத்திலே வஞ்சராயுதன் என்னும் அரசனாகப் பிறந்தார். பிறகு ஒன்பதாவது பிறவியிலே அகமிந்திர தேவனாகத் தேவலோகத்திலே பிறந்தார். மீண்டும், பத்தாவது பிறவியிலே புண்டரீகினி நகரத்திலே மேகரதன் என்னும் அரசனாகப் பிறந்தார். மீண்டும் அங்கிருந்து சர்வார்த்தசித்தி என்னும் தெய்வலோகத்திலே தேவனாகப் பிறந்தார். கடைசியாக, முன்னமே கூறியது போல, அஸ்தினபுரத்திலே சாந்திநாதர் என்னும் பெயருள்ள அரசனாகப் பிறந்து சக்கரவர்த்தியாக விளங்கி இறுதியில் தீர்த்தங்கரராக வாழ்ந்து வீடுபேறடைந்தார்.

இவருடைய முற்பிறப்புச் செய்திகள் இவருடைய வரலாற்றில் மிக விரிவாகக் கூறப்படுகின்றன. சாந்தி புராணமும் இந்த வரலாறுகளைக் கூறுகிற நூலாக இருக்கவேண்டும். சாந்தி புராணத்தைப் பாடிய புலவர் யார், அவர் எந்தக் காலத்தில் இருந்தார் என்பன தெரியவில்லை. இப்புராணம் இப்போது மறைந்துவிட்டது. இந்நூலிலிருந்து நமக்குக் கிடைத்திருப்பவை ஒன்பது செய்யுள்களே. இச்செய்யுள்கள் புறத்திரட்டு என்னும் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன என்று முன்னமே கூறினோம். இச்செய்யுள்கள் இனிமையாக உள்ளன :—

[1]ரங் கதிருடை யருக்கன் பாம்பினால்
ஆயிரங் கதிரொடும் மழுங்கக் கண்டுகொல்

ஆயிரங் கண்ணுடை யமரர் கோனுமோர்
ஆயிரம் அமைச்சர்சொல் வழியின் ஆயதே. 1

நாயும் போல்வர்பல் லெச்சில் நச்சலால்
தீயும் போல்வர் செய்ந் நன்றி சிதைத்தலால்
நோயும் போல்வர் நுகர்தற் கருமையால்
வேயும் போல்வரிவ் வேனெடுங் கண்ணினர். 2

தோளும் மென்முலை யும்மல்குற் பாரமும்
நாளும் நாளும் நவின்று பருகிய
கேள்வன் மார்க்கும் பகைஞர்க்கு மொத்தலால்
வாளும் போல்வரிவ் வேனெடுங் கண்ணினர். 3

தானத்துக் குரித்து மன்று தன்கிளைக் கீயிற் சால
ஈனத்தில் உய்க்கும் நிற்கும் எச்சத்தை யிகழப் பண்ணும்
மானத்தை யழிக்கும் துய்க்கின் மற்றவர்க் கடிமை யாக்கும்
ஊனத்து நரகத் துய்க்கும் பிறர்பொருள் உவக்கில் வேந்தே. 4

கிளருமெரி விடமெழுதல் விழுதல்முத லாய
அளவிலரு நரகில்வரு நவைபலவு மஞ்சின்
உளமொழிமெய் நெறியொழுகி யுறுபொருள் சிதைக்கும்
களவுவிழை வொழிதல்கட னுக்கனனி நன்றே. 5

பிளவுகெழு வெழுநரக மெரிகொளுவ லீர்தல்
இளையவுடல் தடிவொடுறு துயரம்விளை விக்கும்
கிளையறவு தருமரிய புகழினை யழிக்குங்
களவுநனி விடுதலற மென்றுகரு தென்றான். 6

கனிந்தநெய்க் கவளங்கையில் வைத்துடன் கழறுவாரை
முனிந்திடு களிறுபோல்வார் முத்தியை விளக்குநீராற்
மனங்கொளத் துறந்திடாதே வால்குழைத் தெச்சிற்கோடும்
சுணங்கனைப் போலும்நீரார் பற்றிடைச் சுழலும்நீரார். 7

ஆனை யூற்றின் மீன்சுவையின் அசுண மிசையின் அளிநாற்றத்
தேனைப் பதங்க முருவங்கண் டிடுக்க ணெய்து மிவையெல்லாம்
கான மயிலின் சாயலார் காட்டிக் களைவை விளைத்தலான்
மான மாந்தர் எவன் கொலோ வரையா தவரை வைப்பதே. 8

விண்ணில் இன்பமும் வீதல் கேட்டுமால்
மண்ணில் இன்பமும் மாய்தல் காண்டுமால்
எண்ணில் இன்பமாம் ஈறி லாததே
நண்ணி நாயினி நயக்கற் பாலதே. 9

(தொடரும்)

தமிழ்இசை பன்னிரண்டாம்விழா

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

தமிழோடிசை பாடல் மறந்தறியாப் பண்டைக் காலத் தமிழகத்தில் நம் செந்தமிழ் இயல் இசை நாடகமென மூவ்வகையாகப் பிரிவு பெற்று வளர்ச்சி யுற்றது. இடையில் நிகழ்ந்த மாறுபாட்டால் இசையும் வளர்ச்சி குன்றியது. இதனை யுணர்ந்தனர் கூரிய அறிஞர். மீண்டும் அதற்கு உயிர் கொடுத்து மீட்டனர். அவருள் உளதாகும், நுண்ணுடல் பெற்ற பெருந்திருவாளர்களான செட்டிநாட்டு வேந்தர் ராசா சர் அண்ணாமலை செட்டியாரவர்களும், ரா. க. சண்முகஞ் செட்டியாரவர்களும் முதலிடம் பெற்றவர்களாவர். இவ்விருவர்களால் புத்துடல் பெற்று நம் தமிழிசை மதிக்கொழுந்தென நாடொறும் வளர்ந்து வரு

இத் தமிழிசை வளத்துக்குத் தனிச் சங்கமும், அதற்கென விண் தொடநிவந்த மேன்மாட மாளிகையும் சென்னையில் எழுப்பப் பெற்றுள்ளன. மாண்புற இசை பெற்று வளரும் தமிழிசைச் சங்கம் பல மாணவர்க்கும் தமிழிசையை ஊட்டி வருவது பெரு மகிழ்வுக்குரியதாகும். இச் சங்கத்துக்குப் பன்னிரண்டாம் விழா சென்னைத் தமிழிசைச் சங்க மாளிகையான அண்ணாமலை மன்றத்தில் 24-12-54 மாலை 5 மணிக்குத் துவங்கி 3-1-55-ஆம் நாள்வரை நிகழ்வுற்றது.

சென்னை மாநில முதலமைச்சர் திரு. கே. காமராசு அவர்கள் திறப்பாளராகவும், பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரவர்கள் தலைவராகவும் சங்கத் தலைவர் திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரவர்கள் வரவேற்பாளராகவும்

தமிழிசையில் ஆர்வமிக்க அன்பர்கள் பலரும், பொதுமக்களும் ா சூழ்ந்து அவையில் அமர்ந்தனர். அதுகாலை திரு. சி. எஸ். ினசபாபதி முதலியாரவர்கள் தம் அரிய வரவேற்புரையை நிகழ்த்தித் திறப்பாளர், அவைத் தலைவர் முதலிய யாவர்களுக்கும் முகமன் கூறி வரவேற்றனர்.

பின்னர் முதலமைச்சர் திரு. கே. காமராசர் அவர்கள் விழாவைத் துவங்கி வைத்தனர். அப்பால் பேராசிரியர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரவர்கள் அரிய தலைமைப் பொழிவாற்றி மக்களை இன்புறச் செய்தனர். அப்பால் மாலை 6 மணிக்கு இசையரசு திரு. எம். எம். தண்டபாணி தேசிகரவர்கள் இசையரங்கு நிகழ்வுற்று, இரவு 9-30-க்கு மேல் குளிக்கரை பிச்சையப்பா அவர்களின் நாதசுர இன்னிசையுடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

அப்பால் 25-12-54-ஆம் நாள் நடனமும் இசையரங்கும் நிகழ்வுற்றன. 26-12-51-ஆம் நாள்முதல் 29-12-54-ஆம் நாள்வரை நான்கு நாட்கள் தேவாரப்பண் ஆராய்ச்சிக் கூட்டம் நிகழ்ந்து பல பண்களைப் பற்றி ஆராய்ந்து முடிவு செய்தது. 3-1-55-இல் தமிழிசை விழா முற்றுற்றது. யாண்டுதோறும் தமிழிசை வளர்ந்தோங்குக.

தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வு

திருநெல்வேலி, தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தார் ஆண்டுதோறும் நடத்திவரும் இத்தேர்வு இவ்வாண்டு, பிப்ரவரித் திங்கள் 21உ முதல் ஆறு நாட்கள் நடைபெறும். சென்னை மாநிலத்திலுள்ள புலவர் கல்லூரிகளும், இண்டர் D - பிரிவுத் தமிழ் நடத்தும் கல்லூரிகளும், இலங்கை முதலிய குறித்த சில இடங்களும் தேர்வு நடைபெறும் இடங்களாம்.

வித்துவான் இறுதிநிலை, வித்துவான் முதனிலை, வித்துவான் புகுமுகவகுப்பு இவற்றிற்கு விண்ணப்பித்துள்ளவர்களும், சென்னைப் பல்கலைக் கழக இண்டர் D பிரிவுத் தமிழ்ப்பாடம் எடுத்திருப்பவர்களும் (வித்துவான் முதனிலைத் தேர்வுக்கு) விண்ணப்பித்துத் தேர்ச்சி பெறலாம். இண்டர் D-பிரிவு மாணவர்கட்குத் தனிப் பரிசும் வழங்கப்படும். இதுவரை விண்ணப்பம் செய்யாதவர்கள், 25-1-1955-க்குள் கீழ்க்கண்ட முகவரிக்குக் கட்டணத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளலாம். தமிழ்ப் புலவர்கள் ஆசிரியர்கள் துணை பெரிதும் வேண்டப்படுகிறது.

பு. சி. புன்னைவனநாதன்,
புலவர்குழுத் தலைவர்
தென்னிந்திய தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி நகர்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) தமிழிசை பற்றிக் காமராசர் கருத்துரை

தமிழிசைச் சங்கத்தின் 12-ஆம் ஆண்டு விழாவை 24-12-54-இல் துவக்கிவைத்த சென்னை மாநில முதலமைச்சர் திரு. கே. காமராசர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

'தமிழ் நாட்டிலே தமிழில் பாடவேண்டியதற்கு ஒரு போராட்டம் நடக்க வேண்டுவது முதன்மையா? ஏன் போராட்டம் நடக்கிறது? மக்களில் வசதி பெற்றுள்ள சிலர், தங்கட்குக் கிடைத்துள்ள வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக் கொண்டிருப்பதனாலே, அரசியல், பொருளாதாரம், சமூகம் முதலிய எல்லாத் துறைகளிலும் இதே நிலைதான்; ஏற்கெனவே பெற்றுக் கொண்டுள்ள வசதிகளை எளிதில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்; இது இயற்கை; இதனால் போராட்டம் ஏற்படுகிறது.

ஆங்கிலத்தில் பேசினால்தான் திறமை பெற்றவன் என்று நினைக்கும் காலம் இருந்தது. தாய் மொழியில் பேசினால் பெருமை கொடுக்கும் நிலை அரசியல் கிளர்ச்சியின் பின்பு ஏற்பட்டது. மற்றவர்களுக்குத் தெரியாததைத் தங்களிடமே வைத்துக் கொண்டால்தான் தங்களுக்குள்ள வசதிகளைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்ற எண்ணம். அதே போலத்தான் பாட்டுக்களும்..............இன்னும் சிறிது நாள் போனால் தமிழைத் தவிர வேறு எந்த மொழியில் பாடினாலும் கேட்பதற்கு ஆளிருக்கமாட்டார்கள். அத்தகைய காலமும் விரைவில் வந்துவிடும். எத்துறையிலும் மறுமலர்ச்சி ஏற்படும் போதெல்லாம் ஏற்கெனவே வசதி பெற்றிருப்பவர்கள் எதிர்ப்பது இயற்கையே' என்றார்.

குறிப்பு: நம் நாட்டில் தமிழுக்கு ஆக்கமென்று எத்துறையில் வந்தாலும் அதை எதிர்த்து முட்டுக்கட்டை கொடுப்பதையே ஒரு குழுவினர் இயற்கைப் பண்பாடாகக் கொண்டுள்ளனர். அதனை நன்குணர்ந்து உரைத்த முதலமைச்சரின் மதிநல மாண்பைப் பாராட்டுகின்றோம்.

(உ) குன்றக்குடி அடிகளாரின் மலேயாச் செலவு

அடிகள் சென்ற 28-12-54-இல் மலேயாவுக்குச் செல்லும் 'ரசூலா' என்னும் நாவாயில் புறப்பட்டுச் சென்றுள்ளார்கள். அவர்கள் செல்லுங்கால் பல அன்பர்கள் வாழ்த்தி வணங்கி, வழியனுப்புமுகமன் வழங்கினர். அப்போது அடிகள் குறிப்பிட்டதாவது :

'நமது உயிர்நாடியான அருள்நெறியை வளர்க்கும் பணிகளில் மீண்டும் புதிய ஆர்வத்துடன் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கின்றேன். கடல் கடந்து, நான் அருள்நெறித் திருக் கூட்டத்தின் உங்கள் எளிய ஊழியனாகத்தான் செல்கின்றேன். தமிழ் நாட்டு அருள்நெறித் திருக் கூட்டத் தலைவரும், செயலாளர்களும், செந்நாப்புலவர்களும், தலைசிறந்த தொண்டர்களும் தொடர்ந்து பணி செய்யுங்கள். தமிழகம் முழுவதும் நிறைவுற்ற அருள்நெறி நிலமாக அமைய நாமெல்லோரும் ஓவாது உழைக்க வேண்டும். அதுவே, நம் தத்துவம். நெஞ்சொடு நெஞ்சு கலந்த தொண்டர்களுக்கு எனது உளங்கனிந்த வணக்கம்.' என்று தம்மை வழியனுப்ப வந்த அன்பர்களுக்கு வாழ்த்துரையோடு கலந்து உரைத்துச் சென்றனர்.

குறிப்பு: அடிகள் மலேயாச்செலவை இனிதாகத் திருஞானசம்பந்தப் பெருமான்போல் முடித்துக்கொண்டு, நம் தமிழகத்துக்கு மீண்டும்போந்து, செந்தமிழ் மொழிக்கும் திருநெறிக்கும் வேண்டும் ஆக்கம் செய்து நலனுடன் வாழ இறையருளை வேண்டுகின்றோம்.

மதிப்புரை

ஒளிவிளக்குகள்

[**ஆசிரியர்:** டாக்டர், பா. நடராசன், எம்., டி. லிட். (ஆந்திர அரசாங்கப் பொருளாதார ஆலோசகர்) அவர்கள் ஆவர். **கிடைக்கும் இடம்:** பவானி அச்சகம், எழும்பூர், சென்னை-8. **விலை:** ரூபாய் ஒன்று.]

இந்நூல் கிடைக்கப் பெற்றோம். ஆசிரியரவர்கள் இதன்கண் கலைத்துறையில் உளத்துறையில் கணக்குத்துறையில் முதுபெரும் புலவராய் உலகுக்கு உண்மை வழிகாட்டும் தன்மையராய் இந் நூற்றாண்டிலும் கடந்த நூற்றாண்டிலும் புகழுடன் வாழ்ந்து பொன்றாப் புகழுடம்பு நிறீஇப் பேரா இயற்கைப் பெரு வாழ்வு எய்திய பெரியார் மூவரைப்பற்றி முறையே விளக்கியுள்ளார்கள். அம் மூவரும் முறையே ஐயர்லாந்தில் பிறந்து இங்கிலாந்தில் சிறந்த பெர்னாட்சா, ஸ்விட்ஸர்லாந்து நாட்டைச் சார்ந்து தோன்றி பாரிசு, வியன்னா, மீரிஸ்பர்க் என்னும் இடங்களில் சிறந்து பிறங்குவிண்ணெய்திய மெஸ்மர், செங்கோட்டையில் பிறந்து, சென்னை கல்கத்தா முதலிய இடங்களில் சிறந்து அமெரிக்கா அழைப்பின்மேல் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகம் செல்லும் ...கிப்து பாலைவனத்தில் வலவனேவும் வானவூர்தியின் ...ல் இறையடி நீழல் எய்திய எஸ். எஸ். பிள்ளை என்பவராவர்.

இம்மூவர் வரலாற்றையும் சுருக்கமும் விளக்கமும் பொதுள இனிய செவ்விய செந்தமிழ் நடையில் யாத்துள்ளார்கள். இதனைக் கற்கும் மாணவரும் கற்பிக்கும் ஆசிரியரும், பெற்றோர்களும், பெருமக்களும் வாங்கிக் கற்பின் நாடும் மொழியும் நன்னெறியும் தொன்மை உண்மைப் பழக்கத்து நம்பிக்கையும் கொண்டு உழைத்து வருவதே மெய்ம்மை என உணர்ந்து நலமெய்துவர். மூடநம்பிக்கை எனவும், சைவ உணவில் என்ன இருக்கின்றது எனவும் எள்ளி நகையாடுகிறவர்களும் இதனைக் கற்பின் மெய்ம்மை யுணர்ந்து முன்னேறுவர். ஆசிரியரவர்கள் இது போன்றுள்ள உண்மை வரலாறுகள் பல எழுதித் தமிழ்த்தாய்க்கு அணிசெய்வார்களாக. தமிழன்பர்களும் ஊக்குவார்களாக.

இந்திய வரலாற்றுச் சுருக்கம்

[**ஆசிரியர்:** M. R. பெருமாள் முதலியார், M. A., L. T., M. E. S. அவர்கள்; **கிடைக்குமிடம்:** சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை **விலை:** ரூபா. 15.]

இந் நூல் W. H. மோர்லண்டு A. C. சட்டர்ஜி என்னும் இரு பேராசிரியர்களும் சேர்ந்து ஆங்கிலத்தில் எழுதிய நூலின் மொழி பெயர்ப்பாகும். இம் முயற்சி சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனைச் செவ்விய முறையில் யாவரும் எளிதிலுணருமாறு நனிமிக உழைப்பெடுத்து மொழிபெயர்த்து இதன் ஆசிரியர் நல்கியுள்ளனர்.

இந் நூலின்கண் நாடும் மக்களும் முதலாக சமூக முன்னேற்றம் ஈறுக ஐம்பத்தாறு தலைப்புக்களில் நாடு, மொழி, மக்கள் தொன்மை, நாகரிகம், இந்திய நாட்டின் ஆதிமக்கள், வெளியிலிருந்து வந்தவர்கள், ஆட்சி முறை, வெளி நாட்டார் படையெடுப்பு, நிலம், மலை, ஆறு, எல்லை முதலியவற்றின் பல்வேறு ஆட்சியின் காலவரையறைகள், போர் முறைகள் எல்லாம் மிக நன்முறையில் கூறப்பட்டுள்ளன. இதுகாறும் இந்தியவரலாற்றினைத் தமிழ் மாணவர்களும் பெருமக்களும் ஆங்காங்கு வகுப்புக்கேற்ற முறையில் சிறுகச் சிறுக உணர்ந்து வந்தனர். எல்லாவற்றையும் ஒரு நூலின்கண் ஒருங்குணரும் வாய்ப்பில்லாமலிருந்தது. அஃதொரு பெருங்குறையே. அக் குறை இந் நூலால் முற்றும் நீங்கிவிட்டது என்னலாம். இவ்வரிய பணியை உரிய காலத்துச் செய்து முடித்த சென்னைப் பல்கலைக் கழகத்தார்க்குத் தமிழ்நாடு என்றும் பெருங்கடப்பாடு உடையதாகும். இதனை நூல் நிலையங்களும், கல்லூரிகளும், பெருமக்களும் வாங்கிக் கற்றுப் பயன் எய்துவார்களாக. ஒரு நாட்டின் உண்மை வரலாறு தெரிந்தாலன்றி அந் நாட்டு மக்கள் கிளர்ச்சியும் எழுச்சியும் கொண்டு உழைத்து நாட்டை வளம்படுத்தி ஒற்றுமையாய் அன்பும் இன்பும் எய்தி வாழ்தல் இயலாது. அங்ஙனம் வாழப் பெருந்துணை புரிவது இந் நூல். அதனால் இந் நூல் எல்லாரிடமும் இருக்கவேண்டிய தின்றியமையாததென்க. நல்ல அச்சு. அழகிய கட்டடம். பலநிறப் படம், 687 பக்கங்கள் மிளிர்கின்றன.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.



செட்டிநாட்டரசர்

உயர்திரு. மு. அண்ணாமலைச்செட்டியாரவர்கள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அமைத்த வள்ளலார்




இராசா சர். மு. அ. முத்தையச்செட்டியார் அவர்கள்

அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தர்




உயர்திரு. சர். சி. பி. இராமசாமி ஐயரவர்கள்

ண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்



அ பல்க க்கழகக் கட்டிடங்கள்



சிலம்பு ௨௯ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௬, தை | பரல் ௬
பிப்ரவரி, 1955.

அண்ணாமலைப் பல்கலைக்கழக

வெள்ளிவிழாத் திருநாள்

'ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னேர் இலாத தமிழ்.'

உலகந் தோன்றிய காலத்துத் தோன்றிய சீரிய மொழி, நம் செந்தமிழ்மொழி. இஃது, இயற்கை நுட்பம் வாய்ந்த மெல்லிய இனிய மொழி; முன்னை மொழிகட்கெல்லாம் முன்னைய மொழி; பின்னை மொழிகட்கெல்லாம் பிறப்பிடமாகிய தாய்மை மொழி.

இதன்கண், ஆழமிக்க கருத்துரைகளும், மக்களுக்கு வேண்டும் அறம் மறம் மானம் நிறை பொறை ஓர்ப்பு முதலிய பண்பாடுகளும் விளக்கிக்காட்டும் அற நுண்ணியற் கலைகளும், இசை சிற்பம் மருத்துவம் முதலிய கவின்கலைச் செல்வங்களும் நிறைந்து பயன்தரும் சீரிய கருவூலங்கள் அமைந்துள்ளன.

இத்தகைச் சீர்மை சான்ற நம் செந்தமிழ்மொழியை வேற்றுநாட்டார் ஆட்சியினால் போற்றுவாரற்று, இக்கலைச் செல்வங்களைக் கற்பாரும் கேட்பாரும் இன்றித் தமிழிற் பேசுவதும் எழுதுவதுங்கூட அருவருப்பாகக்கொண்டு காலூன்றி வருங்காலத்தில் தோன்றியது, **அண்ணாமலைப் பல்கலைக்கழகமெனப்** பெயரிய கலைக்கோயில்.

பாரி பிறந்த தமிழகத்தில்—பேகன் தோன்றிய பெருநாட்டில்—குமணன் வந்த கொழுந்தமிழ் நாட்டில்—;

தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டில்—அண்ணாமலை அரசர் தோன்றினார்கள். நம் தமிழ்நாட்டில் தமிழ் மொழிநிலை கீழாகக் கொள்ளப்பெறுதலை அவர்கள் கண்டார்கள். இவர்கள், வற்றாவளனுடைய வான் குடிமையில் பிறந்து, அரசர்க்குரிய அரிய பண்புகளெல்லாம் வாய்ந்து திகழ்ந்தார்கள். இவர்கள், காட்சிக்கெளியராய், கடுஞ்சொல் இலராய், இன்சொல் நீரராய் இலகினார்கள்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலினும் வல்லராக விளங்கினார்கள்; இவர்கள்பால் இல்லாதன மடிமையும், பொச்சாப்பும், தூங்காமை முதலிய தீநெறிகளே. இவர்கள்பால் புக்கன, அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், கல்வி, துணிவுடைமை, வற்றாப் பெருந்திரு முதலியனவாம்.

இவ்வள்ளன்மைமிக்க ஒள்ளியார் இற்றைக்கு இருபத்தைந் தாண்டுகட்குமுன் தம் தமையனார் திரு. இராமசாமி செட்டியாரவர்களின் பெயரால் தில்லையில் நடைபெற்றுவந்த உயர்நிலைப் பள்ளியையே தமிழ் வளர்ச்சிக்கு முதலிடமாக அமைத்து 1929-ஆம் ஆண்டு திசம்பர்த்திங்கள் 6-ஆம் நாளிலிருந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகமெனப் பெயரமைத்துத் துவங்கி, அற்றைநாண்முதல் கழகம், தன் சீரிய பணியைச் செய்துவருகின்றது.

கடந்த இருபத்தைந்தாண்டுக் காலத்தில், இக்கழகம் நாட்டுக்கும், மொழிக்கும், கலைக்கும் செய்துவருகின்ற தொண்டுகள் அளப்பில. இதன்கண் கற்றுத் துறைபோய பேரறிஞர்கள் பலர், தம் அரிய பாவன்மை நாவன்மை முதலியவற்றான் அரும்பெறல் தொண்டுகள் செய்து ஆக்கம் பெருக்கியுள்ளனர். அதனால் கல்விநலம் பெற்ற மாணவர்கள் பலராவர். மொழிபெயர் நாட்டு மாணவர்களும் பற்பலராவர்.

இக் கழகத்தால் நம் தமிழகத்தின் பெருமை, உலகம் முழுதும் பரந்து வளர்ந்துள்ளது. இதனைத் தோற்றுவித்த செட்டிநாட்டரசரவர்களின் வள்ளன்மை, நிலத்தினும் பெரிதாய், வானினும் உயர்ந்ததாய் வளர்ச்சிபெற்றுள்ளது. இதற்காக அரசரவர்கள் ஐம்பது நூறாயிர வெண்பொற்காசுகளை வாரி வழங்கியுள்ளார்கள். கொடையில் மடம்படாது திடமுடன் கூர்த்தறிந்து வழங்கிய அண்ணாமலையரசர் கூர்த்த மதிநலம், மாநிலம் உள்ளளவும் மங்காது போற்றும் பெருமைமிக்கதாக வளர்ச்சியுறுகின்றது.

பல்கலைக்கழக வரலாறும், அதைத் தோற்றுவித்த அண்ணாமலை வள்ளல் வரலாறும் இதனகத்தே விரிவாக மற்றோரிடத்தில் வெளிப்போந்துள்ளன.

த்திங்களில் நிகழும் இக்கழக வெள்ளிவிழா நினைவாக ஒரு தமிழ்ப் பேராசிரியரை அமர்த்துதற்கென, இந்திய அரசியலார் மூன்று நூறாயிர வெண்பொற் காசுகளை வழங்கி ஊக்கியுள்ளது பெருமகிழ்வுக் குரியதாகும்.

திசைய அனைத்தும் வீறுகொண்டு பண்டைக்கால முதல் திகழும் நந்தமிழர் பண்பாட்டை, உலகமெல்லாம் பங்குகொள்ள உதவிய அண்ணாமலை அண்ணலார் குறிக்கோள் வெல்க; வாழ்க.

இருபத்தையாண்டுக் குறுகிய காலவெல்லையுள் நூறாண்டுக் காலத்தினும் ஆற்ற இயலாத அருந்தொண்டை இக்கழகம் ஆற்றி வருவது, இக்கழகத்தின் இடையறா முயற்சியின் சிறப்பைக் காட்டுகின்றது.

கற்றுத் துறைபோய ஆசிரியர்கள் நூற்றெழுபத்தைவருக்கு மேற்பட்டவர்கள் பணிபுரிகின்றனர்; இரண்டாயிரவர்க்கு மிகுந்த மாணவர் கல்வி பயில்கின்றனர்; ஒரு நூறாயிரத்துக்கு மேற்பட்ட நூல்களடங்கிய கலைக்கருவூலம் ஒன்றும் இருந்து கற்பவர்க்குக் கலையறிவை ஊட்டுகின்றது; நூற்றுக்கு மேற்பட்ட அரிய ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. இன்னும் இக்கழகம் செய்துவரும் பணி, அளப்பொண்ணுதனவாகும்.

நந்தமிழ் நாட்டுக்கும், ஏனைய நாடுகட்கும் நாடா வளந்தந்து கலைச்செல்வத்தை வளர்த்துவரும் இவ் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மாதொருபாகத்தெம் சிவபெருமான் தண்ணருளால் இற்றைநாள் (9-2-1955) வெள்ளி விழாவின் மேலோங்கி வளர்வதாக; பொன் விழாவும், வைரவிழாவும் பெற்றுப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டுகள் படர்ந்து மேலோங்குவதாகுக.

இதனைத் தோற்றுவித்த அண்ணாமலை வள்ளலார் திருப்பெயருடன் கூடிய புகழ், நாடெல்லாம் மண்டிப்பெருகி நிலவுவதாக. தந்தையார் வழிநின்று தக்கன செய்து போதரும் இராசா சர் முத்தையச் செட்டியாரவர்களும் அவர் வழியினரும் நெடிது வாழ்ந்து வளம் பெருகுக என வாழ்த்துகின்றோம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக

வெள்ளிவிழாப் பாராட்டு

[கழகப்புலவர், சித்தாந்த பண்டிதர், திரு. ப. இராமநாதபிள்ளை]

திருப்பெயர்

இச்சீரிய பல்கலைக் கழகம் தில்லை எல்லையின் அண்மையில் திருவேட்களத்திருவூர்நாப்பண் மண்ணகத்துப் பல்லாற்றானும் விண்ணிழி விழைநகர் என்று எல்லாரானும் போற்றிப் புகழப் பெறும் அண்ணாமலைநகர்க்கண் அமைந்து திகழ்கின்றது. இந் நகரும் இப்பல்கலைக் கழகமும் "டாக்டர் இராசா சர். அண்ணாமலைச் செட்டியார்" அவர்களின் திருப்பெயரால் திகழ்கின்றன.

திகழ்வு

இந்நகர் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பினையும், ஆயிரக்கணக்கான ஓரறிவுயிரினம் செறிகாவினையும், வானளாவ உயர்ந்து விளங்கும் கல்விபயில் பல்கலைக் கோயில்களையும், பல வகைக்கலையின் ஆராய்வுகள் திறம்பெற நிகழ்தற்காம் கருவி முதலிய பொருள்களுடன் இடமகன்ற பற்பல ஆய்வுக்களங்களை யும், பல்வேறு கழகங்கள் தனித்தனி இயங்கும் பல மன்றங்களை யும், பொதுமேடைகளையும், சொற்போர் நிகழ்த்தும் பல பட்டி மண்டபங்களையும், பட்டமளிப்பு விழா நிகழும் மேன்மாடக் கூடல் நிலையங்களையும், ஆசிரியன்மார் குடும்பத்துடன் உறைந்து உணர்வு பெருக்கும் உணர்வு இல்லங்களையும், மாணவ மாணவி யர் உறையுளாம் பல மனைகளையும், மாணவ மாணவியர் தனித் தனி அமைத்துப் பயிலும் பல்கழகங்களையும், கூத்த அரங்கங் களையும், இயல் இசை மிளிரும் நயனார் கோவில்களையும், பணி செய்வார் தொண்டுபுரிவார் பயிலும் மடங்களையும், இருவகை விருந்தினரும் இடையறாது உறையும் விருந்தகங்களையும், ஊட்டுப் புரை, குளிப்புப்புரை, வணக்கக்கோவில், நீர்நிலைகள், ஆமைப் புறமன்ன அழகிய நடைவழிகள், பகலேஎன மருளும் பல்வேறு மின்விளக்குகள் அமைந்த நனிநாகரிகத் தெருக்கள், அஞ்சலகம் முதலியவற்றையும் கொண்டு திகழ்கின்றன. இஃது அண்ணாமலை என்னும் பெயருக்கேற்ப எல்லாவகையாலும் தலைமைசான்ற தாகவே இருக்கின்றது. அண்ணல் - தலைமை.

சிறப்பு

அண்ணாமலைவள்ளலின் அகம்இன்னதென்றறியலுறுவார்க்கு இந்நகர் தக்கவிடைதரும் தன்மைத்து. அகவிருள் போக்கும்

அறிவுச்சுடரினை அகத்தே அமைப்பதுதான் அவ்வள்ளலாரின் அருங்குறிப்பு. அகவிருள் அகலின் அனைத்துயிரும் மும்மையும் பெற்றுச் செம்மையாய் வாழும் என்பது உறுதி. அதனை எளி தின் நல்குவது அண்ணாமலைப் பல்கலைக் கழகமேயாம். இது தமிழ்மொழிக்கும், தமிழிசைக்கும், தமிழ்நெறிக்கும் ஆற்றி வரும் சீரிய தொண்டு அளப்பில. இதன் நிலைவளர்வு 1915-ம் ஆண்டுத் தொடக்கமுதல் வருகின்றது. பெருவள்ளலாரின் திருத் தமையனார் திவான்பகதூர். இராமசாமிச் செட்டியார் திருப் பெயரால் உயர்நிலைப்பள்ளியாய்க் கிடந்து, தனிப்பெரும் தாயார் மீனாட்சி அம்மையார் திருப்பெயரால் கல்லூரியாகத் தவழ்ந்து, தன் திருப்பெயரால்—அண்ணாமலைப் பல்கலைக் கழகமாக உலாவி ஏறுபோற் பீடு நடையாய்த் திகழ்கின்றது.

சீர்மை

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர், நூற்றெழுபத் தைவர்க்கு மேற்பட்ட ஆசிரியர், ஒரு நூறாயிரம் நூற்கள் அடங் கிய நூல்நிலையம், ஆயிரத்திருநூறு மாணவர் உறையும் பல இல் லங்கள், மாணவியர் எண்பதின்மர் தங்கக்கூடிய பலவுறையுள் கள் முதலியவற்றின் சீர்மையைக் கொண்ட அருள் நிலையம் இப் பல்கலைக் கழகம். இஃது இப்பொழுது வெள்ளிவிழாப் பெற்றுப் பலரும் உள்ளங்களிகூர ஒளிர்கின்றது. இவ்விழாத் தலைமை மைசூர் மன்னரேளனின் அதன் மாண்பு எங்ஙனம் கட்டுரைப் பது. விழாக் காண்பாரும், விரிவுரையாற்றுவாரும், வரவேற் புரை பகர்வாரும், தலைமையுரை சாற்றுவாரும் எல்லாவகை யாலும் தலைமையரே. மேலும், பொன்விழா, வயிரவிழா, முத லிய நன்விழா பலபெற்று நாளும் வாழ்க.

சேர்வு

அரச வள்ளலார் அண்ணாமலையார் போன்று அவர்தம் திரு மகனார் அரசர் முத்தையச்செட்டியாரும் தந்தையாரைப் பேணு வதுபோல் தந்தையார் ஊக்கத்தையும் கைக்கொண்டு இப்பல் கலைக் கழகச் சேர்ப்பாய்த் தமிழகத்தின் ஈரெல்லையும் நாப்பணு மாகப் பல்வேறு தமிழ்ப் பல்கலைக் கழகங்கள் நிறுவிப் போற்று வார்களாக. தில்லை அம்பலவாணர் திருவருள் புரிவாராக. அண்ணாமலை வள்ளலார் வாழ்க. அப்பெயர்ப் பல்கலைக் கழகம் வாழ்க. ஆழ்ந்த பெருஞ் செல்வ அக்குடும்பம் வாழ்க. ஆசிரிய மாணவர் அலுவர் அனைவரும் வாழ்க. தமிழ்மொழி வாழ்க. தமிழ்நெறி வாழ்க. தமிழகம் வாழ்க.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாறு

டாக்டர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்களின் தமையனாராகிய திவான் பகதூர். இராமசாமிச் செட்டியாரவர்கள் தம் பெயரால் ஓர் உயர்நிலைப் பள்ளியைச் சிதம்பரத்தில் நிறுவினார்கள். தமையனார் அவர்கள் 1915-இல் இறையடி சேர்ந்தமையின் அவர்கள் வகுத்த அறங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களைச் சேர்ந்தது. தமையனார் பெயரால் நடைபெற்று வரும் உயர் நிலைப் பள்ளியை முதற்றரக் கல்லூரியாக்க ராஜா அவர்கள் எண்ணினார்கள். தம் எண்ணப்படியே 1920-ஆம் ஆண்டில், சென்னை மாகாணக் கல்வித்துறைத் தலைவர் வீட்டில் ஹெயில்ஸ் அவர்களால் அப் பள்ளியின்கண் கல்லூரி முதல் வகுப்புத் தொடங்கப்பெற்றது. அக் கல்லூரிக்குத் தம் அருமை அன்னையாரின் நினைவாக மீனாட்சிக் கல்லூரி எனப் பெயரிட்டார்கள். திரு. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் அதன் தலைவராக விளங்கினார்கள். சிறந்த ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் அக் கல்லூரி செவ்வனே நடைபெற்று வருவதாயிற்று. ஊர் நடுவண் அமைந்திருத்தலால், கல்லூரிக்கு இடம்போதாதென் றெண்ணிய அண்ணாமலை வள்ளல் தில்லைப் பதியின் கீழ்பால் எல்லையில், ஒன்றரைக் கல் தொலைவில் உள்ள தேவாரப் பாடல்பெற்ற திருவேட்களத்தில், நூறு ஏக்கர் நிலம் வாங்கினார்கள். உரிய கட்டிடங்கள் விரைவில் கட்டி முடிக்கப் பெற்றது. கட்டிட வேலைகள் முற்றுப் பெறுமுன்பே பி. ஏ. வகுப்புத் தொடங்கப் பெற்றது. 1920-ல் கல்லூரி முதல்வகுப்பில் பயின்ற மாணவர்கள், 1922-ல் மேல் வகுப்பில் சேர்தற்குரிய வசதிகள் செய்யப்பெற்றன. 29-6-1922-ல் ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் சி. ஆர். ரெட்டி அவர்கள் பி. ஏ. வகுப்பைத் தொடங்கிவைத்து, ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடைய கலைப் பணியினைப் பாராட்டினார்கள். அதனுடைய சிறந்த எதிர்கால வளர்ச்சியைப்பற்றியும் முன்னரே உணர்ந்துரைத்தார்கள். மீனாட்சி கல்லூரி ஒரு பல்கலைக் கழகமாக அமைய வேண்டும் என்றெண்ணியிருந்த ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களை ரெட்டி அவர்களின் பேச்சு, ஊக்குவித்தது.

1924-ல் ஆசிரியர் சிலரும், மாணவர் சிலரும் தங்கியிருத்தற்கு வீடுகளும், விடுதிகளும் அமைக்கப் பெற்றன. 1925-ல் ஆங்கிலம், வரலாறு, பொருளாதாரம் ஆகியவற்றில் கலைச்சிறப்பு (பி. ஏ. ஆனர்ஸ்) வகுப்புக்களும் தொடங்கப்பெற்றது விஞ்

ஞானப் பகுதிக்கும், ஆராய்ச்சிக் கூடத்திற்கும் தனிக்கட்டிடம் ஒன்று கட்டப்பெற்றது. அப்போது சென்னைக் கவர்னரா யிருந்த கோஷன் பிரபு அவர்கள், 1926-ல் விஞ்ஞானப் பகுதி யைத் திறந்துவைத்து, அண்ணாமலை வள்ளலின் கலையார்வத் தினைப் பாராட்டினார்கள். தமிழர் தம் தனிப்பண்புகளை அறிந்து வளர்ப்பதற்குத் தமிழ் மொழியிலுள்ள சிறந்த இலக்கிய இலக் கணங்களைக் கற்றறிதல் வேண்டுமென்ற நன்னோக்கத்துடன் 1927-ல், மீனாட்சி தமிழ்க் கல்லூரியை அண்ணாமலை வள்ளல் நிறுவினார்கள். அதற்கு மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் தலைவரானார்கள். அவ்வாண்டிலேயே வடமொழிக் கல்லூரி ஒன்றும் நிறுவப்பெற்றது. தமிழ் ஆசி ரியப் பயிற்சிக் கல்லூரியும் தோன்றியது. இசை வளர்ச்சிக்கும் ஆவன செய்யவேண்டுமென் றெண்ணிய அண்ணாமலை வள்ளல், 1929-ல், இசைக் கல்லூரி ஒன்றையும் நிறுவினார்கள். இதுபற்றிய வளர்ச்சிக் குறிப்பு, இம் மலரில் ஓரளவு தனியாக உள்ளது. 1920-ஆம் ஆண்டு முதல் 1929-ஆம் ஆண்டுவரை பத்தாண்டு களுக்குள் நான்கு கல்லூரிகளை ராஜா அவர்கள் அமைத்துக் கல் வியை வளர்க்கும் அரும் பணியில் தலைசிறந்து [illegible]ர்கள்.

தொடக்கத்திலேயே ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், ஒரு பல்கலைக் கழகம் நிறுவ வேண்டுமென எண்ணி யிருந்தபடியால், விளையாடுமிடங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றை யெல்லாம் மிகப் பெரிய அளவிலேயே அமைத்தார்கள். அண்ணா மலை வள்ளலின் திட்டங்கள், ஆசிரியர்களும், மாணவர்களும் உடனுறையும் ஒரு பல்கலைக் கழகமாகத் திகழ்வதற்குத் தகுந்த வாறு உருவாயின.

1926-ல், அரசாங்கம், தமிழ்மொழிக்கென்று ஒரு பல் கலைக்கழகம் அமைப்பதுபற்றி ஆய்வுக் குழு ஒன்றை அமைத் தது. எத்துணைப் பல்கலைக்கழகங்களை நிறுவலாமோ அத் [illegible]ப் பல்கலைக்கழகங்களை நிறுவலாமென்றும், ஆனால் பொருள் வசதி யின்மையின் ஒரு பல்கலைக் கழகங்கூட உடனடி யாகத் தொடங்குதற்கில்லை யென்றும் அக்குழு அறிவித்தது. அப்போது, சென்னைப் பல்கலைக்கழகக் குழுவினர், மீனாட்சி கல்லூரியை நேரில் வந்து பார்த்து, அதனுடைய நடைமுறை களைக் கண்டு வியந்தனர். சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் நிறுவு வதற்குரிய திட்டத்தை அக் குழுவின் ஆலோசனைக்குக் கல்வித் துறைத் தலைவர் அனுப்பிவைத்தார். அக்குழு, அவ்வறிக்கையை ஆராய்ந்து, அத்திட்டத்தின் முக்கியக் கொள்கைகளுக்கு ஒப்புத லளித்தது. அரசாங்கம் அத் திட்டத்தை ஆதரித்துப் பொரு ளுதவி செய்யுமெனத் தாம் நம்புவதாக அக்குழு, தெரிவித்தது.

முன்பு ஏற்படுத்திய கல்லூரிகளையும், நன்கு முடிக்கப்பெற்ற எல்லாக் கட்டிடங்களையும், இருபதுலட்சம் ரூபாயையும் நன்கொடையாகத்தரத் தாம் முன்வருவதாகவும், அவற்றின் அடிப்படையில், பல்கலைக் கழகம் ஆக்க வேண்டுமென்றும் அண்ணுமலை வள்ளல் அரசாங்கத்தாருக்குத் தெரிவித்தார்கள். அரசியலார் இவ் வள்ளற் பெருமானுடைய பெருந்தகைமையைப் பாராட்டினர். வைப்புப் பொருளாக இருபது லட்சம் ரூபாயும், கட்டிடங்கள் கட்டுவதற்காக ஏழரை லட்சம் ரூபாயும், ஆண்டுதோறும் உதவித் தொகையாக ஒன்றரை லட்சம் ரூபாயும் வழங்க அரசாங்கத்தாரும் இசைந்தனர். அப் பல்கலைக் கழகம், அண்ணுமலைப் பல்கலைக் கழகம் என்றும், அதன் சார்பாக உண்டாகும் நகரம், அண்ணுமலை நகர மென்றும் எந்நாளும் வழங்கப் பெறுமெனவும் அரசாங்கத்தார் உறுதி கூறினர். இச் செய்தி கேட்டுத் தமிழ்மக்கள் எல்லோரும் 'வாழ்க அண்ணுமலை வள்ளல், வளர்க அண்ணுமலைப் பல்கலைக் கழகம்' என வாயார வாழ்த்தினர். வள்ளல் அப்போது வழங்கிய தொகையும், கட்டிட மதிப்பும் நாற்பது லட்சம் ரூபாய்க்கு மேலாகும்.

சென்னைச் சட்ட சபையில், இப் பல்கலைக் கழகம் பற்றிய திட்டம் வந்தபோது, அது, விரும்பி வரவேற்கப்பெற்றுச் சட்டமாக்கப்பட்டது. அப்போது முதல் அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன் அவர்கள், எஸ். சத்தியமூர்த்தி அவர்கள், சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் முதலியோர் பல்கலைக் கழகத் திட்டத்தை ஆதரித்துப் பாராட்டிப் பேசினர். பனகல் அரசர் அவர்கள், இந்த நன்கொடையைத் தனிப்பட்டவர் செய்யும் நன்கொடையில் மிகக் குறிக்கத்தக்கதென்று கூறினுர்கள்; ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களின் பெருந்தன்மையும், உயர்குணமும் இந்தியாவிலேயே மிக மேம்பட்டன வென்றும், இப்படி ஒரு சிறந்த காரியத்திற்காக நாற்பது லட்சம் ரூபாய் நன்கொடை யளிப்பாரைக் காணுதல் அரிதென்றும் பாராட்டிப் பேசினுர்கள். சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள், இந்தியாவில், இப் பல்கலைக் கழகம் நிறுவிய ராஜா சர். அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் ஒப்பற்ற ஒரு எடுத்துக்காட்டாக விளங்குவதாகத் தெரிவித்தார்கள். திரு. சத்தியமூர்த்தி அவர்கள், நிறுவியோரின் பெருங்கொடையினைப் புகழ்ந்து கூறி, உலகப் பண்பாடுகளை சந்திக்கும் ஓரிடமாக இப் பல்கலைக் கழகம் விளங்குமெனக் குறிப்பிட்டார்கள். பின்னர்ச் சட்ட சபை உறுப்பினர் அனைவராலும் ஆதரிக்கப்பெற்று, இப் பல்கலைக்கழகச் சட்டம், சென்னைக் கவர்னராலும், இந்திய அரசப்பிரதிநிதியாலும்

1929-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், பல்கலைக்கழகம் தொடங்குவதென்று முடிவு செய்யப்பெற்றது. வகுப்பறைகளுக்கும், ஆசிரியர் இருத்தற்குரிய இடங்களுக்கும் மிக விரைவில் ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. செனெட், சிண்டிகேட், அக்கடமிக் கௌன்சில் ஆகியவை 1929-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ஆம் தேதியிலிருந்து பணிபுரியத் தொடங்கின. செனேட்டைத் தொடங்கி வைக்கும்படி சென்னை மாகாணக் கவர்னர் கோஷன்பிரபு அவர்களைக் கேட்டுக்கொண்ட ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள், ஆற்றிய சொற்பொழிவில், "சென்னை அரசாங்கம் தனிப்பட்டவர்கள் செய்யும், பொது நன்மைக்கான முயற்சிகளுக்கு ஊக்கம் அளிப்பதும், தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றை உலகறியச் செய்ய வேண்டும் என்னும் அவாவும் இப் பல்கலைக் கழகம் தோன்றுதற்குக் காரணமாகும்," என்று குறிப்பிட்டார்கள்.

இராசா அவர்களின் எண்ணம் போலப் பல்கலைக் கழகம் பல்லாற்றானும் நன்கு வளர்ந்து வருகிறது. மெய்ப்பொருள், வரலாறு, பொருளாதாரம், சமூக கிராம நலம், கணிதம், புள்ளி விவரம், பௌதிகம், இரசாயனம், தாவரம், விலங்கு நூல், விவசாயம், நிலநூல், ஆசிரியப் பயிற்சி, இசைப் பயிற்சி, பொறியியல், இரசாயனத் தொழிற் கல்வி, ஓவியம், நாடகம், மாணவர் படைப் பயிற்சி ஆகியவைகளும், தமிழ், ஆங்கிலம், வடமொழி, பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளும் இப்போது கற்பிக்கப் பெறுகின்றன. பல்வேறு துறைகளிலும் ஆராய்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது. விலங்குநூற் பகுதி, பல்கலைக் கழகத்தினின்றும், அரசாங்கத்தினின்றும் பொருளுதவிபெற்று, விலங்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்றைப் பறங்கிப்பேட்டையில் நிறுவியுள்ளது. விலங்கு நூற் பகுதியில் உள்ள பொருட்காட்சி எல்லோரும் கண்டு மதித்தற்குரியது. பொறியியற் பகுதியும், இரசாயனத் தொழிற் கல்விப்பகுதியும் திறம்பெற்ற தொழில் வல்லார் பலரை ஆக்கி, நாட்டிற்கு உதவி வருகின்றன. விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, வளமாக உள்ளது. விவசாயத் துறையில் கத்தரிக்காயை விதையில்லாமல் உற்பத்தி செய்யும் முறையும், ஜப்பான் முறைப்படி பயிர் சாகுபடி செய்யும் முறையும் குறிப்பிடத்தக்கன. பலர் பாராட்டும் முறையில் செம்மையாக, மாணவர்களுக்குப் படைப்பயிற்சி இங்கே அளிக்கப் பெறுவதும் குறிப்பிடத் தக்கது. தமிழையும், இசையையும் பற்றிய குறிப்புக்கள் தனியே இம் மலரில் இடம் பெற்றுள்ளன. கற்றுத் துறைபோய பேராசிரியர்களும், ஆசிரியர்களுமாக நூற்றெழுபத்தைவருக்கு மேற்பட்டவர் எல்லாத் துறைகளிலும் பணியாற்றி வருகின்றனர்.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர் கல்வி பயில்கின்றனர். ஒரு லட்சம் நூல்கள் அடங்கிய நூல் நிலையம் ஒன்று நன்கு பயனளித்து வருகிறது. சிறந்த ஆராய்ச்சி நூல்களும் பிறவுமாக 100 வரை பல்கலைக் கழக வெளியீடுகள் வெளிவந்திருப்பது மிக வும் போற்றுதற்குரிய பணியாகும். இங்கே கல்வி பயின்ற பழைய மாணவர் பலர், பல துறைகளில் தலைசிறந்து விளங்கு வது பல்கலைக் கழகத்தின் பெருமகிழ்ச்சிக்கு உரியது.

பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்ட அழகிய மாணவர் இல்லங்கள் பல உள்ளன. இவற்றில் ஆயிரத்து இருநூறு மாணவர் உள்ளனர். இவை மேலும்மேலும் விரிவடைந்து வருகின்றன. மகளிர் விடுதி 80 மாணவியர் தங்குதற்கேற்றதாக உள்ளது. மாணவர் இல்லங்கள், திருவள்ளுவர் இல்லம், இளங்கோ இல்லம், கம்பர் இல்லம், பாரதி இல்லம், சேக்கிழார் ல்லம், திருவாங்கூர் இல்லம் எனப் பல பிரிவாகச் சிறந்து

பல்கலைக்கழகம், கல்விக்கு ஊக்கமளிப்பதுபோலவே உடல்நலத்திற்குக் காரணமான விளையாட்டுக்களுக்கும் ஊக்கமளிக்கிறது. இங்கே பலவகை விளையாட்டுக்களும் இடம் பெற்றுள்ளன. இவைகள் எல்லாவற்றிலும் மாணவர்கள் சிறந்து விளங்குகின்றனர். கிரிக்கெட் வட்டாரங்களில் செட்டிநாட்டுக் கப் சிறந்ததொன்றாகும். விளையாடும் பகுதியைச் சார்ந்த படகு ஓட்டும் கால்வாய், குறிப்பிடத்தக்கது. சிறந்த மருத்துவ நிலையம், இங்கு நற்பணி புரிந்து வருகின்றது.

பல்கலைக் கழகத்திற்கு விருந்தினராக வருபவர்கள் தங்கு வதற்குச் சிறந்ததொரு விருந்தினர் மாளிகை உள்ளது. அண்மையில் மற்றொரு விருந்தினர் மாளிகையும் அமைக்கப் பெற்றிருக்கிறது. ஆசிரியர்களுக்கென்று பொழுதுபோக்குக் கழகம் ஒன்றும் மகளிர் பொழுதுபோக்குக் கழகம் ஒன்றும் உள்ளன. மகளிர் பொழுதுபோக்குக் கழகத்திற்குச் செட்டி நாட்டரசி மெய்யம்மையாச்சி அவர்கள் பேராதரவு அளித்து வருவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பட்டமளிப்பு விழா மன்றத்திலும், கோகலேமன்றத்திலும், பல்கலைக்கழகப் பொதுப் பேரவையும், பிற மன்றங்களும் பல சொற்போர்களை நடத்துவது காணத்தகுந்த காட்சியாகும்.

ில,

பணியாற்றிய பெரியோர்களை எண்ணி, அவர்கட்கு கூறுதல் நம் கடமையாகும். அவர்களைப்பற்றிய குறிப்புக்கள் சில பின்வருமாறு :

துணைவேந்தர்கள்

நிறைந்த அறிவாற்றலும், ஆட்சித்திறமும் வாய்ந்தவர்களே இப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்களாக விளங்கியுள்ளனர். இவ்வகையில் இப் பல்கலைக்கழகம், பெரும்பேறு பெற்றதென்றே சொல்லுதல் வேண்டும். பல்கலைக்கழகம் தோன்றியபோது மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார் அவர்கள் துணைவேந்தர் என முடிவாயிற்று. ஆனால், அவர்கள் அலுவலை மேற்கொள்வதற்குமுன், இந்திய அரசினரால், ஆப்பிரிக்காவின் இந்திய ஏஜெண்டாக நியமிக்கப்பெற்றமையால், இந்தியக் கல்வித்துறையில் சிறந்த பணியாற்றி ஓய்வுபெற்ற சர் எஸ். இ. அரங்கநாதன் அவர்கள், துணைவேந்தர் பதவியை ஏற்றார்கள். அவர்கள் இப் பல்கலைக்கழகத்தில் ஆறு ஆண்டுகள் (1929—1935) துணைவேந்தராய் இருந்து, பல்கலைக்கழகத்தின் ஆக்கத்திற்கு அருந்தொண்டு புரிந்தார்கள்.

பின்னர், மகாகனம் வி. எஸ் சீநிவாச சாஸ்திரியார் அவர்கள், துணைவேந்தர் பதவியை ஏற்றார்கள். அவர்கள் ஆங்கிலமொழியை அழகுறப் பேசுந்திறத்தால் பெரும்புகழ் படைத்தவர்கள். அவர்கள் ஐந்தாண்டு (1935-1940) துணைவேந்தராயமர்ந்து பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்தார்கள்.

பின்பு, சென்னை மாகாண அமைச்சராக இருந்து தொண்டாற்றியவர்களும், சட்டக்கலையில் வல்லுநரும், சில காலம் சென்னைக் கவர்னராயிருந்தவர்களும் ஆகிய சர் கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள், இரண்டாண்டு (1940-42) துணைவேந்தர் பதவி ஏற்றுச் சிறந்த முறையில் தொண்டாற்றினார்கள். இவர்கள் காலத்தில், அண்ணாமலை அரசரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது; சென்னை அரசாங்கத்தினிடமிருந்து ஐந்து லட்சம் ரூபாய் மூலதனமாகிய உதவித்தொகையும், முன்பிருந்ததைக்காட்டிலும் மிகுதியாக ஆண்டுதோறும் நாற்பதினாயிரம் ரூபாய் உதவித்தொகையும் பல்கலைக் கழகத்துக்குக் கிடைத்தது.

பின்னர்த் திரு. எம். இரத்தினசாமி அவர்கள், ஆறாண்டு (1942-48) துணைவேந்தராயிருந்து மிகுந்த பணியாற்றியுள்ளனர். இவர்கள், சென்னைப் பச்சையப்பர் கல்லூரித் தலைவராகவும், சென்னைச் சட்டக் கல்லூரித் தலைவராகவும், சென்னைச் சட்டசபைத் தலைவராகவும், சென்னையில் பல அரசாங்க அலுவலகங்களுக்குப் பொறுப்பாளர்களையும் அலுவலர்களையும் தேர்ந்தெடுக்கும் குழுவின் உறுப்பினராகவும் இருந்து செய

லாற்றிப் புகழ் பெற்றவர்கள். இவர்கள் மிக முயன்று, பல்கலைக் கழக மாணவர் இல்லங்களின் நிலைகளை உயர்த்தினர். பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு வேலை தேடித்தருவதற்கும், மேற் படிப்புப்பற்றி அவர்கள் அறிவதற்கும் ஏற்ற அறிவிப்புப் பகுதி ஒன்றைப் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தினர். இவர்கள் காலத்தில்தான் டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் ஐந்து லட்சம் ரூபாயும், திருவாங்கூர் மகாராஜா அவர்கள் ஒரு லட்சம் ரூபாயும் பல்கலைக் கழகத்துக்கு நன்கொடை யளித்தனர்; சென்னை அரசாங்கம் இரண்டு லட்சம் ரூபாய் வழங்கியது.

திரு. இரத்தினசாமி அவர்களுக்குப் பின், சென்னை மாகாணக் கல்லூரியின் தலைவராக இருந்து ஓய்வுபெற்ற டாக்டர் எஸ். ஜீ. மணவாளராமாநுஜம் அவர்கள் துணைவேந்த ராளுர்கள். இவர்கள் ஆட்சித்திறம் மிக்கவர்கள். பல்கலைக் கழகம் சிறந்த முறையில் நடைபெறவேண்டுமென்று முயன்றார் கள். இவர்களுடைய காலத்தில், மாணவர் படைப்பயிற்சி தொடங்கப்பெற்றது. ஆசிரியர்களுக்கும், ஏனையோர்களுக்கும் ஊதிய உயர்வு ஏற்பட்டது. பட்டம் பெற்ற பின்னர்ப் பயிலும் மேற்படிப்புக்கும், இரசாயனம், தாவரம், விலங்குநூல் ஆகிய வற்றில் ஆராய்ச்சிநிகழ்த்துதற்கும் இந்திய அரசாங்கம், இரண்டு லட்சம் ரூபாய் பல்கலைக் கழகத்துக்கு உதவித் தொகை யளித்தது; பட்டப்படிப்பிற்குப் பின் பயிலும் படிப்பிற்கும், தாவரம்பற்றி ஆராய்ச்சி நிகழ்த்துதற்கும் மீண்டும் நாற்பதி னாயிரம் ரூபாய் உதவித் தொகையாகக் கொடுத்தது.

பின்னர், டாக்டர் சர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள் துணைவேந்தராகும் பெரும்பேற்றைப் பல்கலைக் கழகம் பெற்றது. இவர்கள், 1951-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், துணைவேந்தர் ஆனார்கள். சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள் விரும்பும்போது பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென, டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் விரும்பியதை நிறைவேற்றிய பெருமை, அவர்கள் குமாரர் ராஜா சர் முத்தையச் செட்டியார் அவர்களுக்கு உரியதாயிற்று. பேரறிஞராகிய டாக்டர் சர் ஆர். கே. சண்முகஞ் செட்டியாரவர்கள், பொதுநலப் பணிகளில் தலைசிறந்து விளங்கியவர்கள். மத்திய சட்டசபையின் தலைவராக வும், இந்தியாவின் முதல் நிதியமைச்சராகவும் சிறந்த தொண் டாற்றிப் பெரும் புகழ்படைத்தவர்கள். பல்கலைக் கழகம், தன் வன்மைக்கேற்றவாறு முன்னமேயே விரிவடைந்துள்ளமையால், செட்டியார் அவர்கள் பதவியிலிருந்தபோது, அதை நன்கு ஒழுங்குபடுத்திச் சீராக்க வேண்டுமென எண்ணினார்கள்.

இவர்களுடைய காலத்தில், தமிழ் ஆராய்ச்சிப் பகுதி முன்னேற்ற மடைந்தது. சிறந்த பாடங்களைக்கொண்ட கம்பராமாயணப் பதிப்பு வெளியிடுதற்குரிய பணியை இவர்கள் தொடங்கி வைத்தார்கள். இவர்கள் ஆங்கிலப் படிப்பின் தரத்தை உயர்த்து வதற்குப் பெரிதுங் காரணராக இருந்தார்கள். மத்திய அரசாங்கத்திடமிருந்து பொறியியற் கல்லூரியின் செலவிற்காக ஏழு லட்சம் ரூபாய் நன்கொடையாகவும், பொறியியற் கல்லூரி மாணவர் விடுதி கட்டுதற்கு நான்கு லட்சம் ரூபாய் கால வரையறையில்லா வட்டியில்லாக் கடனாகவும் பல்கலைக் கழகத் துக்கு இவர்கள் காலத்தில் கிடைத்தது. இவர்கள், ஆசிரியர்கள், ஏனைய அலுவலாளர்கள் ஆகியோருடைய மக்களுக்குக் கட்டண [illegible] வாய்ப்பு அளித்தார்கள்.

இவர்கள் உடல்நலங் குன்றிய நிலையில், 1953-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், டாக்டர் சர் சி. பி. இராமசுவாமி ஐயர் அவர்களின் தொண்டு இப் பல்கலைக்கழகத்திற்குக் கிடைப்ப தாயிற்று. இது, பல்கலைக்கழகத்தின் பெரும்பேறுகும். சர் சி. பி. இராமசுவாமி ஐயரவர்கள், உலக அரங்கில் பெரும் புகழ்பெற்றவர்கள். பல பெரும்பொறுப்புக்களை ஏற்றுச் சீரிய முறையில் நடத்தியவர்கள். சிறந்த ஆட்சியாளர், நிறைந்த கல்வி யாளர். இவர்களுடைய ஆட்சியில் கலைகள் செழிப்புற்று வளர் கின்றன. இண்டர்மீடியேட்டுக்கும், பி.ஏ. வகுப்புக்கும் இடையே ஓராண்டுக் காலமுள்ள கலை, விஞ்ஞானம், இசை, நாடகம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு படிப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். இவர்கள் காலத்தில், வெள்ளிவிழா நினைவாக, ஒரு தமிழ்ப் பேராசிரியரை ஏற்படுத்துதற்கு இந்திய அரசாங்கம், மூன்று லட்சம் ரூபாய் பல்கலைக் கழகத்திற்கு வழங்கியிருப்பது குறிப் பிடத் தக்கது. 1952-ல் இந்தியக் குடியரசுத் தலைவராகிய டாக்டர் ராசேந்திர பிரசாது அவர்களும், 1954 ஏப்பிரல் மாதத்தில் இந்தியாவின் தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேரு அவர்களும் பல்கலைக் கழகத்தைப் பார்த்து மகிழ்ந்தனர்.

இராவ் பகதூர் என். விசுவநாத ஐயரவர்கள் இப் பல்கலைக் கழகந் தொடங்கிய காலத்திலிருந்து 1948-ஆம் ஆண்டுவரை இதன் பதிவாளராக இருந்து இதனுடைய வளர்ச்சி, முன்னேற் றம் ஆகியவற்றிற்குப் பெருந்தொண்டு புரிந்தார்கள். பேராசிரியர் அ. இராமநாத பிள்ளை அவர்கள் உதவித் துணைவேந்தராகவும், டி. டி. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பதிவாளராகவும் இப்போது பணிபுரிந்து வருகின்றனர்.

இப் பல்கலைக் கழகத்தின் தேவைகளுக்கெல்லாம் சென்னை அரசாங்கத்தாரும், இந்திய அரசாங்கத்தாரும் செய்துவரும்

உதவிகள் பெரிதும் பாராட்டற்பாலனவாகும். இப் பல்கலைக் கழகத்திலிருந்து கொண்டும், வெளியில் இருந்தும் இதற்குத் தொண்டுசெய்தோர் இன்னும் பலராவர். அவர்களுடைய தொண்டுகளெல்லாம் நன்றியறிவுடன் நினைக்கத்தக்கன.

இவ் வெள்ளிவிழாக் கொண்டாடும்போது, வரப்போகும் பொன்விழாவானது இன்னும் மிகச் சிறப்போடு விளங்க வேண்டும் என்னும் பெரு நம்பிக்கையோடு, மேலும்மேலும் உழைப்போமாக. இப் பல்கலைக்கழகம், சீருடனும், சிறப்புடனும், வளர்ந்து ஓங்கி விளங்குக என, உளமுவந்து வாழ்த்துவோமாக.

இப்போது இப் பல்கலைக் கழக இணைவேந்தரும், (Pro-Chancellor) பல்கலைக் கழகம் நிறுவிய பெருங்கொடை வள்ளல், ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் அருந்தவப் புதல்வருமாகிய ராஜா சர் முத்தைய செட்டியாரவர்களின் வாழ்க்கைக் குறிப்பு, இச் சிறப்பு மலரிற் பிறிதோரிடத்தில் கூறப்பெற்றுள்ளது.

கலைக்கோயில் வாழிய!

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

நிலைமண்டில ஆசிரியப்பா

வாழிய அண்ணா மலைகலைக் கோயில்
வாழிய அண்ணா மலைப்பெயர் வள்ளல்
தண்டமிழ்க் கோயில் தலைக்கலைக் கோயில்
வண்டமிழ் வாணர் வாழுங் கோயில்
௫ மாணவ வண்டினம் வான்கலைத் தேனுணப்
பேணுநல் அறிவிதழ் பிறங்க அவிழும்
தாமரைக் கோயில் தண்மையின் வாழிய
பூமனும் புகழ்மிகப் பொலிந்து வாழிய
அண்ணா மலைப்பல் கலைக்கழ கப்பெயர்
௧0 விண்ணா டதனினும் விஞ்சி ஓங்குக
அறிவெனும் நல்லமிழ் தளித்தே அகனொடு
புறமும் மகிழ்தரப் பொற்புற வளர்ந்தே
வெள்ளி விழாக்கொடு விளங்கி மேம்பட்டு
ஒள்ளியர் உவப்புற வளர்ந்தது காண்மின்
௧௫ பொன்னின் விழாவுடன் பொருந்தி வைரம்
மன்னும் விழாவின் வளனுற வாழிய
கலைச்செல் வத்தை கவினுறத் தந்த
மலையின் மிளிரும்அண் ணாமலை வள்ளல்
பெயரும் புகழும் பெருக வாழிய
௨0 உயர்வுறும் அவன்மகன் முத்தைய உரவோன்
கிளையும் புதல்வரும் கிளர்ந்தெழுந் தின்புடன்
வாழிய பொதியின் மலையினும் வளர்ந்தே.

இராசா சர். அண்ணுமலைச்செட்டியார் வரலாறு

அண்ணுமலைப் பல்கலைக்கழகம் நிறுவிய பெருங்கொடை வள்ளல்

தமிழ்நாட்டின் தனிப்பெரும் பல்கலைக்கழகமென நாடு முழுதும் பாராட்டப்பெறும் அண்ணுமலைப் பல்கலைக்கழகம், கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நாட்டுக்கும், மொழிக்கும் நலம் பல செய்து, இன்று வெள்ளிவிழாக் கொண்டாடப்பெறும் சிறப்பெய்தியுள்ளது. இந்நன்ஞளில் இதனை நிறுவிய பெருங் கொடைவள்ளல் டாக்டர் ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களுடைய அரும்பெரும் பண்புகளையும், செயற்கருஞ் செயல்களையும் எண்ணுதல், பொதுவாக எல்லோருக்கும் சிறப் பாக ஒவ்வொரு தமிழ்மகனுக்கும் பெருமகிழ்ச்சி தருவதாகும்.

ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் கானுடு காத்தான் என்னும் நகரில், தனவணிகர் மரபில், அறம்பல புரிந்த செல்வராகிய மூத்தையச் செட்டியார் அவர்களின் குமார ராக 1881-ஆம் ஆண்டில் பிறந்தவர்கள். இவர்கள் தம் ஆட்சித் திறத்தாலும், அறிவு நுட்பத்தாலும், பேருழைப்பாலும் தம் முப்பதாம் ஆண்டுவரை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள பலதிறப்பட்ட தொழில் துறைகள் வாயிலாகப் பெரும் பொருள் ஈட்டினுர்கள்.

பொதுநலப்பணிகள்

இவ்வாறு ஈட்டிய பெரும் பொருளைக்கொண்டு தாமும், தம்மைச் சார்ந்தவருமே இன்பவாழ்வு நடத்துதல் அமையுமென இவர்கள் கருதினுரல்லர். பொதுமக்களுக்குப் பல்லாற்ருனும் இயன்ற உதவிகள் செய்தல் வேண்டுமென எண்ணினுர்கள். அந்நிலையில், தம் ஊருக்கு அண்மையிலுள்ள காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைமைப்பதவி இவர்களை நாடிவந்தது. பொதுநலப் பணிபுரிதற்கு இது ஒரு வாய்ப்பாகுமென எண்ணி, இவர்கள் அப்பதவியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்கள். மூன்ருண்டுகள் தலைவராயிருந்து அந்நகரத்திற்குப் பல நன் மைகள் செய்தார்கள். அக்காலத்தில் பொதுமக்கள் இவர்களைத் தலைவராகக் கருதினும் இவர்கள் தம்மைப் பொதுநலத் தொண் டராகவே கருதிப் பணிபுரிந்தார்கள்.

ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டிற் பிறக்கும் நன்மக்களைப் தாய்மார்கள் உடல்வளமும் உள்ளக்

களிப்பும் உடையவர்களாயிருந்தாலன்றி அவர்களிடம் நன்மக்களை எதிர்பார்த்தல் இயலாது. ஆகவே, பிள்ளைப்பேற்றின் போதும், பிற காலங்களிலும் பெண்டிர்களுக்கு வருத்தமும், கவலையுந் தோன்றாதவாறு மருத்துவ முதலான வசதிகள் செய்து கொடுத்தல், ஒரு நாடு நலம்பெறச் செய்யும் சிறந்ததோர் அறமாகுமென நம் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் எண்ணினார்கள். எண்ணியவாறே தம் ஊரில் மூன்றுலட்சம் ரூபாய் செலவுசெய்து ஓர் அறப்பணிபுரியும் மருத்துவசாலை அமைத்தனர். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆயிரக்கணக்கான தாய்மார்கள் அம்மருத்துவசாலையில் அழகிய நன்மக்களைப் பெற்றெடுத்திருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான தாய்மார்கள் அம்மருத்துவசாலையை நிறுவிய அண்ணாமலை வள்ளலை வாயார வாழ்த்துகின்றனர். இது, சென்னை மாகாணத்திலேயே சிறந்ததொரு மருத்துவசாலையாகும்.

பிறநாடுகளில் எல்லாத் துறைகளிலும் பெண்டிர் ஆடவருடன் சமமாக வாழ்க்கை நடத்துகின்றனர். பெண்டிர் நாட்டுப் பணிகளிலும் பங்குகொள்கின்றனர். வீட்டரசிகளாகவும் விளங்குகின்றனர். இம்முறை நம் நாட்டில் சில நூற்றாண்டுகளாகத் தடைப்படுத்தப்பட்டது. இத்தவறான நெறியை விடுத்து மாதரும் மைந்தரைப்போல உடற்பயிற்சிக்கான விளையாட்டுக்கள் விளையாடவும், உலகியலறிவு பெறவும், நாகரிக மக்களுடன் நன்கு கலந்து பழகவும் வேண்டுமென உணர்ந்த அண்ணாமலை வள்ளல் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரில் இரண்டுலட்சம் ரூபாய் செலவுசெய்து "வெலிங்டன் கிளப்" என்னும் மகளிர் மன்றம் ஒன்று நிறுவினார்கள். இது தக்க இடத்தில் அமைந்திருப்பதனால், மகளிர் இனத்திற்கு நலம் பயக்கும் பல பணியாற்றிவருகின்றது. சிதம்பர நகர மக்கள் பொதுக்கூட்டம் முதலியன நடத்துதற்குப் போதிய இடமும், கட்டிடமுமில்லாமல் தயக்கமுறுதலை யறிந்து, விரிந்ததோரிடம் வாங்கி, அதன்கண் பூங்காவையும், பொதுமன்றத்தையும் இவர்கள் ஆக்கித்தந்தார்கள். இது ராஜா அண்ணாமலை டவுன் ஹால் என வழங்கப்பெறுகின்றது. அண்ணாமலை வள்ளல் அவர்கள், மதுரைக் கல்லூரிக்கு ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள இடம் வாங்கிக்கொடுத்து, அதிற் கட்டிடம் கட்டுதற்கும் பொருளுதவி செய்தார்கள். மதுரை அமெரிக்கன் கல்லூரிக்கு மாணவர் விடுதியொன்று கட்டிக்கொடுத்தார்கள்; பசுமலையிலுள்ள அமெரிக்க மிஷன் உயர்நிலைப் பள்ளிக்கு அவ்வப்போது செய்த உதவிகள் பலவாகும்; திருச்சிராப்பள்ளியிலுள்ள தேசீய உயர்நிலைப் பள்ளி, சென்னையிலுள்ள பின்னத்

தூர்ச் சுப்பிரமணிய ஐயர் உயர்நிலைப்பள்ளி, இராமகிருஷ்ண கல்வி நிலையம், சேவா சதனம், இந்திய செஞ்சிலுவைச் சங்கம், டில்லியிலுள்ள இர்வின் பாடசாலை, மகளிர் கல்விக்கழகங்கள், கொழும்பு பர்மா இவற்றிலுள்ள கல்விநிலையங்கள் ஆகியவற்றிற்குப் பொருளுதவி செய்துள்ளார்கள். டோராடூனிலுள்ள இந்தியப் பொதுமக்கள் கல்விச்சாலைக்குச் சற்றேறக்குறைய ஐம்பதினாயிரம் ரூபாய் நன்கொடையாக வழங்கினார்கள். சாந்தி நிகேதனத்திற்கு இரண்டாயிரம் புத்தம்புதிய தமிழ்நூல்களை அன்பளிப்பாகக் கொடுத்துதவினார்கள். தமிழ்க் கலைக்களஞ்சிய வெளியீட்டிற்குப் பதினாயிரம் ரூபாய் அளித்தார்கள். இன்னும் எத்துணையோ சங்கங்கள், சபைகள், வாசகசாலை, பாடசாலைகள் முதலியவற்றிற்கு வழங்கிய தொகைகள் வரம்பிலவாகும். சிதம்பரத்தில் கோவிந்தராசப்பெருமாள் கோயில் திருப்பணியையும், இளையாற்றங்குடியில் அம்மன் கோயில் திருப்பணியையும் இவர்கள் செய்ததோடு, மேலும் பல திருக்கோயில்களுக்கும் உதவிசெய்துள்ளார்கள்.

பட்டம், பதவிகள்

இவர்கள் காரைக்குடி நகராண்மைக்கழகத் தலைவராயிருந்து பணியாற்றியபோது "ராவ்பகதூர்" என்ற பட்டத்தையும், 1922, 1923-ஆம் ஆண்டுகளில் முறையே "திவான் பகதூர்", "சர்" என்ற பட்டங்களையும் இவர்களுக்கு அரசாங்கத்தார் வழங்கிப் பெருமைபடுத்தினர். 1929-ல் தகுதியான பட்டம் ஒன்று இவர்களுக்குக் கிடைத்தது. அதுதான் பரம்பரையாக வரும் "இராசா" என்னும் பட்டமாகும். இப்பட்டம் இவர்களைச் சேர்ந்து பெருமைபெற்றது என்றே கூறுதல்வேண்டும். மேலும் சென்னைப் பல்கலைக்கழகச் சட்டமன்றத்தில் வாழ்நாள் உறுப்பினராக இருந்த இவர்கள் செய்துள்ள கல்விப்பணியைப் பாராட்டி, அப் பல்கலைக்கழகம், 1932-ல் எல். எல். டி. என்ற சட்ட டாக்டர் பட்டத்தை இவர்களுக்கு வழங்கியது. 1942-ல் நடைபெற்ற பன்னிரண்டாவது பட்டமளிப்புவிழாவில், அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்ட மன்றத்தார், டி. லிட். என்ற இலக்கிய டாக்டர் பட்டமளித்து இவர்களைப் பாராட்டினர். 1916-ஆம் ஆண்டுமுதல் மூன்றுஆண்டுகள் சென்னைச் சட்டசபை உறுப்பினராகவும், 1921-ஆம் ஆண்டுமுதல் தொடர்ச்சியாக 15 ஆண்டுகள் டில்லி அரசாங்க சபை உறுப்பினராகவும் இவர்கள் இருந்து நாட்டுக்குச் செய்த உயர்ந்த தொண்டுகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இந்திய இம்பீரியல் பேங்கின் கவர்னராக இவர்கள் பத்து ஆண்டு பணியாற்றியுள்ளார்கள்.

பல்கலைக்கழகத் தோற்றம்

"மக்கள் வாழ்க்கை தனித்தமுறையில்
இல்லை; அறிஞர் பலருடன் அடுத்தடுத்துப் பழகுதலும், அய
லிடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள அருமை பெருமைகளைக்
காண்டலும் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாகும். சிறுபான்
மையினரான ஆங்கிலேயர் கல்வி, வாணிகம், ஆட்சித்திறன்
முதலியவற்றில் பிறநாட்டாரினும் மேன்மையுற்று விளங்குகின்ற
நுட்பங்களை அறிதல்வேண்டும்" என இவர்கள் அவாக்கொண்டு,
காரைக்குடி நகராண்மைக்கழகத் தலைவராயிருந்த அக்காலத்தில்,
இங்கிலாந்துக்குச் சென்று இலண்டன் மாநகரில் தங்கினார்கள்.
அப்போது (1911-ல்) ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்கு அங்கு நடை
பெற்ற முடிசூட்டு விழாவிற்கு இவர்கள் சிறப்பாக அழைக்கப்
பெற்று, அவ்விழாவிற் கலந்துகொண்டார்கள். அங்கே தங்கி
யிருந்தபோது ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்
களுக்குச் சென்று அவற்றின் அமைப்புக்களையும், நடைமுறை
களையும் நன்கு கவனித்தார்கள். அவை இவர்களின் உள்ளத்
தைக் கவர்ந்தன. இந்நினைவுகளுடன் இந்தியாவிற்கு வந்தார்கள்.
இங்கிலாந்திலிருந்து திரும்பியது முதல் அத்தகைய பல்கலைக்
கழகம் நம் நாட்டில் உண்டாதல் வேண்டும் என்ற ஆர்வம் உடை
யவர்களாயிருந்தார்கள். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளும்
இப் பெருந்தகையாளரின் உள்ளமாகிய நன்னிலத்தில் அழுந்திப்
பதிந்த அவ்வுயரிய நோக்கமாகிய நல்வித்தானது, நாளடைவில்
முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்து முழுமரமாகிப்
பூத்துக் காய்த்துப் பயன்விளைக்கத் தொடங்கிற்று. இது,
தமிழகம் செய்த தவப்பயனென்றே கூறுதல் வேண்டும்.
இவர்கள் முதல்தரக் கல்லூரி ஒன்று நிறுவுதற்கு முதலில்
முயன்றார்கள். பாண்டிநாட்டின் தலைநகரமும், முத்தமிழ்
வளர்ந்த முதலிடமுமாகிய மதுரை மாநகரமே கல்லூரி நிறுவு
தற்குத் தக்க இடமென நினைந்து, காலந்தாழ்க்காது அந்
நகர்க்கண் விரிந்த நிலமும் வாங்கினார்கள். சில காரணங்களால்
அவ்வெண்ணம் மாற்றப்பட்டமையால், தாம் வாங்கிய நிலத்
தையும், கட்டிடம் கட்டுதற்கு வேண்டும் பொருளையும் மதுரைக்
கல்லூரிக்கு வழங்கிவிட்டுச் சிதம்பரத்தை நோக்கினார்கள்.

தம் தந்தையார் அவர்களும் தமையனார் திவான்பகதூர்
இராமசாமி செட்டியார் அவர்களும் பொதுநலப் பணிகள்
புரிந்த இடம் சிதம்பரமாகும். ஆதலால், அந்நகரத்திலேயே
தாமும் கல்லூரி அமைத்தல் சாலப் பொருத்தமுடையதென
இவர்கள் முடிவு செய்தார்கள். தமையனார் திவான்பகதூர்
இராமசாமி செட்டியார் அவர்கள் 1918-ல் இறையடி சேர்ந்த

மையால், அவர்கள் பெயரால் நடைபெற்றுவந்த உயர்நிலைப் பள்ளியைப் பாதுகாக்கும் பொறுப்பும் இவர்கள் பாலதாயிற்று. ஆதலின் அவ்வுயர்நிலைப்பள்ளியையே முதல்தரக் கல்லூரியாக்க முயன்றார்கள். 1920-ஆம் ஆண்டில் அப் பள்ளியின்கண் கல்லூரி முதல் வகுப்பும் தொடங்கப்பெற்றது. தக்க ஆசிரியர்களாலும், மாணவர்களாலும், நூல்நிலையம் முதலான பிற அங்கங்களாலும் கல்லூரி செவ்வனே நடைபெற்றது. ஆயினும் அக்கல்லூரி ஊர் நடுவில் அமைந்திருந்தமையால், பிற்காலத்தில் அதனை விரிவு படுத்தற்குப் போதிய இடம் பெறுதல் அரிதெனை உணர்ந்தார்கள். விரிந்த இடந்தேடும் எண்ணம் மேன்மேல் வளர்ந்தது. அவ்வெண்ணத்தின் விளைவாகத் தில்லையின் எல்லையில் உள்ளதும், விரிந்த நிலப்பரப்பு உடையதும் ஆகிய திருவேட்களமே கலைவளர்ச்சிக்குத் தகுதியான இடமென நன் முடிவு செய்தார்கள். வேண்டும் கட்டடங்களும், அமைப்புக்களும் விரைவில் நிறைவேறின. அங்கே நடைபெற்ற கல்லூரி தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகமாக வளர்ச்சிபெற்றது. தனித்தனியாக இருந்த தமிழ்க் கல்லூரி, வடமொழிக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, இசைக் கல்லூரி ஆகியவை பல்கலைக் கழகத்தோடு இணைந்தன. இப் பல்கலைக்கழகத்துக்கு அண்ணாமலை வள்ளல் வழங்கிய தொகை ஏறத்தாழ ஐம்பது லட்சம் ரூபாயாகும். இதனை நிறுவுதற்கும், இதன் வளர்ச்சிக்கும் இராசா அவர்கள் மேற்கொண்ட பேருழைப்பு விலைமதிக்க இயலாததாகும். இவர்களுக்கு முன்னும், இவர்களுக்குப்பின் இன்றுவரையும் ஆசிய நாடுகளில் தனியாக ஒருவர் பல்கலைக் கழகம் நிறுவவில்லை. இப்பல்கலைக் கழக வரலாறும், இவர்கள் வரலாறும், பிரிக்க இயலாதவாறு பின்னிக் கிடக்கின்றன. என்றும் நின்று நிலவும் இவர்களின் புகழ் வடிவாக இப் பல்கலைக் கழகம் காட்சி தருகின்றது. இதன் வரலாறு இச் சிறப்பு மலரில் பிறிதோரிடத்தில் விரிவாகக் கூறப் பட்டுள்ளது.

தமிழ்ப்பற்று

அண்ணாமலையரசர் இளம் பருவந் தொட்டே தேவார திருவாசகங்களிலும் திருக்குறளிலும் அழுத்தமான பற்றுடையவர்கள். பல்கலைக்கழகந் தொடங்குதற்கு முன்பே மீனாட்சி தமிழ்க் கல்லூரி நிறுவிப் பல மாணவர்களுக்கு உண்டியும், உறையுளும் உதவி, அக்கல்லூரியில், தமிழ் வித்துவான் வகுப்பில் அம் மாணவர்களைப் பயிலச் செய்தனர். இவர்கள், அத் தமிழ்க் கல்லூரிக்கு மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களைத் தலைவராக இருக்கச் செய்தது [illegible]க குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகம் தொடங்கியபின்

ஆதல் தமிழுக்கு முதன்மையிடங் கொடுக்க வேண்டுமெனும் நோக்கத்தால் தமிழ்ச் சிறப்பு வகுப்பும் (பி. ஏ. ஆனர்ஸ்) உண்டாக்கினார்கள். தமிழ் வடமொழி ஆசிரியப்பயிற்சிக் கல்லூரி நிறுவி, அதிற் பயில்வோர்க்கும் பொருளுதவி செய்தார்கள். மேலும், தமிழ்நாட்டில் தமிழ்ப்பேரறிஞராய்ச் சிறந்தவர்களையே தெரிந்தெடுத்துத் தமிழ்ப்பேராசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் பணியாற்றச் செய்தார்கள். மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களும் தமிழ் நாட்டின் இரு கண்மணிகள்போல் விளங்கியவர்கள். ஆதலின், அவ்விரு பெருமக்களுக்கும் தமது கையாற் பொன்னாடை போர்த்துப் பெருமைப் படுத்தினார்கள். தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப் பல்கலைக்கழகத்தின் சிறந்த குறிக்கோளாக இருக்கும் என்று பல்கலைக்கழகச் செனெட் சபையின் தொடக்கவிழாவில் ராஜா அவர்கள் கூறியது ஒன்றே இவர்களின் தலையாய தமிழ்ப்பற்றிற்குச் சிறந்த சான்றாகும்.

தமிழ்இசை இயக்கம்

தமிழிசை யென்பது, தமிழ்மொழியில் அமைந்த பாடல்களோடு இயைத்துப் பாடப்பெறும் இசையாகும். தமிழ் மொழி எக்காலத்தில் தோன்றியதோ அக்காலந் தொட்டே தமிழிசையும் வழங்கி வருகிறது. தமிழ்மொழியினை இயல் இசை நாடகம் என முப்பெரும் பிரிவுகளாக்கி அவற்றுள் இசைக்கு நடுவிடங் கொடுத்து நம் முன்னையோர் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்த்து வந்தனர். எத்தனையோ இசை இலக்கணங்களும், ஆயிரக் கணக்கான இசைத்தமிழ்ப் பாடல்களும் இருந்தன. முத்தமிழ்க்காப்பியமாகிய சிலப்பதிகாரம் இன்றும் உள்ளது. அதன்கண் இசைநுட்பங்கள் பலவும், இசைக் கருவிகளின் இயல்புகளும் காணப்படுகின்றன. தேவாரம், திவ்வியப் பிரபந்தம், திருவிசைப்பா, திருப்புகழ் முதலானவை தமிழ்இசைப் பாடல்களேயாகும். பிற்காலத்து முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர், இராமலிங்க அடிகளார், கோபாலகிருஷ்ண பாரதியார், வேதநாயகம் பிள்ளை முதலான இசையறிஞர் பலர் பாடிய இசைப்பாட்டுக்களும், பதங்களும் பலவுள்ளன. இவ்வாறிருப்பவும், நம்நாட்டு இசைவாணர்கள், வேற்றுமொழிப் பாடல்களையே பெரும்பாலும் இசையரங்குகளிற் பாடிவந்தனர். தமிழ்ப்பாடல்கள் சில, துக்கடாக்களாக இறுதியிற் பாடப்பெற்றன. இந்த இழிநிலையை மாற்றவேண்டி நம் அண்ணாமலையரசர், தமிழிசை இயக்கத்தைத்

தொடங்கினார்கள். "தமிழ் நாட்டில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் பெரும்பான்மையராய்க் குழுமியிருக்கும் இடங்களில் தமிழிசைப் பாடல்களே பாடப்பெற வேண்டும்; தாய்மொழிப் பாடல்களே மக்களுக்குப் பொருள் உணர்ச்சியைத் தந்து உளம் கவர்ந்து இன்புறுத்தத்தக்கனவாகும்" என்ற நியாயமான எண்ணம் ராஜா அவர்களின் உள்ளத்தில் பதிந்தது; இது, தமிழ் மக்களின் பெரும் பேறாயிற்று. ராஜா அவர்களின் கொள்கையைத் தமிழ்மக்கள் அனைவரும் உவந்து வரவேற்றுப் பேராதரவு தந்தனர். டாக்டர் சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள் முதலிய பேரறிஞர்கள் ஒத்துழைத்துப் பெருந்துணை புரிந்தனர். எவ்விதமான நல்லதோரியக்கத்தையும் சிலர் எதிர்ப்பது இயற்கைதானே. அவ்வாறே இதற்கும் எதிர்ப்பு இருந்தது. தமிழில் கீத வர்ணங்களில்லை யெனவும், இசைக்கு மொழி அவசியமன்று எனவும் எதிர்ப்பாளர் கூறினர். அவர்களுக்குத் தக்கவாறு மறுமொழி கூறியும், தமிழிசை மாநாடுகள் கூட்டியும், சிறந்த தமிழிசைப் பாடல்களுக்குப் பரிசுகள் வழங்கியும், கீத வர்ணங்கள் இசையிலக்கணங்கள் முதலான தமிழிசைப் பாடற்றொகுதிகள் பலவற்றைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வெளிப்படுத்தியும், பல்கலைக்கழகத்தில் தமிழ் இசைப் பாடல்களைக் கற்பிக்கச் செய்தும், ஆங்காங்குத் தமிழிசைப் பள்ளிகள் அமைக்க உதவியும், சென்னையில் தமிழிசைச் சங்கம் நிறுவிப் பல மாணவர்களுக்குத் தமிழிசை கற்பித்துப் பட்டம் வழங்க ஏற்பாடு செய்தும் தமிழிசைக்கு ராஜா அவர்கள் புத்துயிர் அளித்தார்கள்.

"தத்தளித்து நின்ற தமிழிசைச் செல்விக்குப் புத்துயிர் ஊட்டிய நற்புண்ணியவான்" என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் இவர்களைப் பாராட்டிப் பாடியிருப்பது இங்கே நினைக்கத்தக்கது. இப்போது, சிறந்த முறையில் அமைக்கப்பெற்றுச் சென்னை நகருக்கு அணியாக விளங்கும் அண்ணாமலை மன்றம், நம் அண்ணாமலை வள்ளல் தமிழிசை வளர்ச்சிக்குச் செய்த அரும்பெரும் தொண்டுகளை நினைவூட்டித் தமிழிசைஇயக்கத்தில் அவர்கள் பெற்ற பெருவெற்றியின் அழியாச் சின்னமாகத் திகழ்கின்றது. ராஜா அவர்களின் குமாரர்களாகிய ராஜா சர் முத்தையச் செட்டியார் அவர்களும் மு. அ. சிதம்பரஞ் செட்டியார் அவர்களும் அன்று முதல் இன்றளவும் தமிழ் இசை வளர்ச்சிக்கு இடையறாது செய்துவரும் அரும்பெரும் தொண்டுகள், தமிழ்மக்கள் உள்ளங்களில் நிலையான இடம்பெற்றுள்ளன. எனவே, நம் அண்ணாமலை அரசர், தம் குடும்பத்தையே தமிழ் இசைத் தொண்டாற்றச் செய்திருக்கிறார்கள். தமிழிசை வளர்ச்

சிக்காக, அண்ணுமலை அரசர் அவர்களும், அவர்கள் குடும்பத்தா ரும் வழங்கியிருக்கும் தொகை, மூன்று லட்சம் ரூபாய்க்கு மேலாகும்.

அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா

ராஜா அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா, 28-9-1941-ல், செட்டிநாட்டில், மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமையம் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தார், 1200 பக்க அளவில் ஒரு நினைவு மலரை ராஜா அவர்களுக்கு வழங்கித் தம் நன்றியறிவைப் புலப்படுத்திக் கொண்டார்கள். அம்மல ரில், அறிஞர் பெருமக்கள் பலரின் வாழ்த்துரைகளும், பாடல் களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நிறைந்துள்ளன. அவ்விழா வில் ராஜா அவர்கள் பலவகை அறங்களுக்காக மூன்றரை லட் சம் ரூபாய் வழங்கினுர்கள்.

இப் பல பொதுநலப் பணிகளுக்கும் ராஜா அவர் கள் வழங்கிய தொகை, ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு மேலாகும்.

குணநலங்கள்

இனி நம் அண்ணுமலை வள்ளலின் குணநலங்களைப்பற்றி ஒரு சிறிதேனும் கூருதுவிடின் இவ்வரலாற்றுக் குறிப்பு நிறை வெய்தியதாகாது. ராஜா அவர்களின் குணநலங்களை அறிந்து, அவற்றுள் சிலவற்றையேனும் மேற்கொள்வோர், தம் வாழ்வில் உயர்வெய்துவர். ராஜா அவர்கள் நாள்தோறும் வைகறையில் துயிலுணர்ந்து நீராடி, இறைவழிபாடு செய்து, செயலாற்றத் தொடங்குவார்கள். எழுதவேண்டுங் கடிதங்களை யெல்லாம் அவ்வப்போதே எழுதி முடிப்பார்கள். காலையில் தோட்டத்தில் உலாவுதலை ஒழுங்கான உடற்பயிற்சி முறையாகக்கொண்டு, அதனைத் தவருது செய்வார்கள். உணவுநேரந் தவிர இரவு படுக்கைக்குச் செல்லும்வரையில் கருமமே கண்ணுயிருந்து, கடமைகளைச் செவ்வையாகச் செய்து முடிப்பார்கள். வேலை மிகுதியாயிருந்தால், உண்ணும்போதுங்கூட எழுத்தாளர் ஒரு வரை அருகில் இருக்கச்செய்து, அவருக்குச் செய்தி அறிவித்துக் கொண்டே உண்பார்கள். இரவு படுக்கைக்குச் செல்லும் போதும் குறிப்பேடும், எழுதுகோலும் பக்கத்தில் இருக்கும். அடுத்தநாளிற் பார்க்கவேண்டியவர் பெயர்களையும், செய்ய வேண்டுங் காரியங்களையும் அக் குறிப்பேட்டிற் குறித்துவைத் துக்கொள்ளுவார்கள்.

நண்பர்களை வரவேற்று உபசரிப்பதில் இவர்களுக்கு மிக்க விருப்பம் உண்டு. குறித்த நேரத்திற் குறித்த செய்தியைப்

பேசிமுடித்துக்கொள்வார்கள். பயனில்லாதவற்றைப் பேசவும் கேட்கவும் ஒருசிறிதும் விரும்பமாட்டார்கள். இவர்களின் வாழ்நாள் ஒரு நொடிப்பொழுதும் வீணாகக் கழிந்ததில்லை. இவர்கள் இவ்வாறு காலத்தைப் பொன்போலப் போற்றிப் பயன் படுத்தியதனாலேதான் தம் பங்குக்குக் கிடைத்த சில லட்சக் கணக்கான பொருளைப் பல கோடிக்கணக்காக வளர்க்கவும், பிறர் நினைத்தற்கும் அரிய பல்கலைக்கழகம் நிறுவுதல் முதலிய பெரிய செயல்களைச் செய்யவும் இயல்வதாயிற்று.

சிலர் தம்முடைய ஆற்றலுக்கு மேற்பட்ட செயலையும் செய்வேமெனச் எளிதாகச் சொல்லுவர். சொல்லியவண்ணம் செய்துகாட்டல் மிக அரிதாகவே இருக்கும். இதற்கு மாறான நிலையில் ராஜா அவர்கள் விளங்கினார்கள். இவர்கள் ஒன்றனைச் செய்வதாக யாவரிடத்தும் எளிதிற் சொல்லமாட்டார்கள். சொன்னால் அது எத்துணை அரியதாயினும் அதனைச் செய்து முடிக்காமல் விடுவதில்லை. ஆகவே சொல்லுதல் அரிது; செய்தல் எளிது என்பது இவர்கள்பாற் காணப்பெற்றதோர் சிறந்த பண்பாகும். நினைவாற்றல் இவர்களிடம் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. இது எல்லோருக்கும் வாய்த்தல் அரிது. சிலர் பழைமை ஒழுக்கங்களில் அழுந்திய பற்றுவைத்துப் புது மையை அறவே வெறுத்தொதுக்குவர். வேறு சிலர் புதிய நாகரிகங்களில் மோகங்கொண்டு, பழைமையை அறவே கைவிட் டிருப்பர். வள்ளல் அண்ணாமலையரசர், காலத்திற்கும் இடத் திற்கும் ஏற்றவாறு, பழைமை நலமும், புதுமை எழிலும் தழுவி யொழுகும் பண்பாடு உடையவராக இருந்தார்கள். பர்மாப் பிரிவினையின்போதும், செய்கோனில் தனவணிகர் சிலர் நாடு கடத்தப்பட்டபோதும் அவர்களின் நலம் பேணுதற்காக இரண் டாம் முறையாக ஐரோப்பிய நாட்டிற்கு ராஜா அவர்கள் சென்று அவர்களுக்கு உதவிசெய்தது, இவர்களின் பெருந்தன் மைக்கு ஒரு நல்ல சான்றாகும்.

வாழ்க்கையின் குறிக்கோள்

"ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தினந்தோறும் வணங்கு வேன்; அண்ணாமலை சருவகலாசாலையின் வளர்ச்சியை ஒவ் வொருநாளும் சிந்திப்பேன். தமிழ்நாடெங்கும் தமிழிசை முழங்கவேண்டுமென்பது எனது ஆவல். ஈட்டலும் காத்தலும் வகுத்தலும் என் வாழ்க்கையின் கொள்கை" எனத் தம் கையால் எழுதிவைத்தபடியே இறுதிநொடிப்பொழுது வரையும் செய்கையிற் கடைப்பிடித்து ஒழுகிய திறமை, [illegible] உரிய சிறப்பியல்பாகும்.

அறிவாற்றலும், குணநலங்களும் வாய்க்கப் பெற்ற ராஜா அவர்கள் இருபதாம் நூற்றாண்டு இந்திய வரலாற்றில் தன்னேரில்லாத தனிப்பெருந் தலைவரெனப் பொன்னெழுத்துக்களால் பொறித்துவைக்கத் தக்கவர் ஆவார்கள். இவர்களின் பெரும்புகழ் அண்ணாமலைப் பல்கலைக்கழக வடிவாயும், தமிழிசை வடிவாயும், இவர்கள் செய்த பிற பல அறங்களின் வடிவாயும் இவ்வுலகம் உள்ளளவும் நின்று நிலவும் என்பது திண்ணமாகும்.

இராச குடும்பம்

இவர்களுக்குப்பின் அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தராக விளங்கும் இவர்களின் முதற் குமாரர் ராஜா சர் முத்தையச் செட்டியார் அவர்களின் வரலாற்றுக்குறிப்பு, இச் சிறப்புமலரில் பிறிதோரிடத்தில் உள்ளது. அண்ணாமலை அரசரின் இரண்டாவது குமாரரும், 1950—51-ஆம் ஆண்டில் சென்னை நகர மேயராகத் திகழ்ந்தவருமாகிய இராமநாதன் செட்டியார் அவர்களையும், அண்ணாமலையரசரின் மூன்றாவது குமாரரும், இப்போது சென்னை நகர மேயராக விளங்குகின்றவர்களுமாகிய சிதம்பரஞ் செட்டியார் அவர்களையும் தமிழ்நாடு நன்கு அறியும். ராஜா அவர்களின் குடும்பம் மேயர் குடும்பம், என்று பாராட்டத்தக்க, பிறர்க்கில்லாத பெருமையைப் பெற்றிருக்கிறது. மேற்குறிப்பிடப்பெற்றவர்களும், இக்குடும்பத்தினுள்ள குமாரராஜா முத்தையச் செட்டியார் அவர்கள் முதலியோரும், வழிவழி வருவாரும் நாட்டுக்கு நலம் பல புரிந்து, நீடூழிவாழ இறைவன் அருள்புரிவானாக.

வெள்ளிவிழா வாழ்த்து

[திரு. நாஞ்சில். கா. கணபதி.]

சீருயரும் வணிகர் நலம் யாவும் பெற்றுச்
செழுங் கலைகள் பல கண்டு தேர்ந்த செல்வன்
பேருயர் அண்ணா மலையாம் வள்ளல் நன்கு
பெருமையுறப் பல்கலைதேர் கழகம் கண்டான்
பாருயரும் அக்கழகம் பலரும் போற்றப்
பணியாற்றிக் கால்நூற்றாண் டெய்தப் பெற்றுச்
சீருயர வெள்ளிவிழாச் செய்தல் கண்டு
தில்லைநட ராசனருள் செய்கின் றானால்.

இராசா சர். முத்தையச்செட்டியார் வரலாறு*

செட்டிநாட்டு ராஜா சர் முத்தையச் செட்டியார் அவர்கள், 1948-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தர் (Pro-Chancellor) ஆனார்கள். இவர்கள் கானாடுகாத்தான் என்னும் ஊரில், 1905-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பிறந்தார்கள். சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று, 1924-ஆம் ஆண்டில் பி. ஏ. பட்டம் பெற்றார்கள்.

இளம் பருவமுதல் இவர்கள் பொதுநலப்பணியில் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபடுவாராயினர். தம் இருபத்துநான்காம் வயதில் பேங்குகளின் நிலையை ஆராய்ந்த குழுவிலும், தம் இருபத்துஆறும் வயதில், வாக்களிப்பு முறைகளை ஆராயச் சென்னை அரசாங்கம் அமைத்த குழுவிலும் உறுப்பினராக நியமிக்கப் பெற்றார்கள்.

1929-ல், இராசா சர். முத்தையச் செட்டியார் அவர்கள் (அப்பொழுது குமாரராஜா) சென்னை நகராண்மைக் கழகத்தின் உறுப்பினராகி, ஆறு ஆண்டுகள் அரும்பணி யாற்றினார்கள். நகராட்சியின் சிக்கல்களை விரைவில் உணர்ந்துகொள்ளும் ஆற்றல் மிக்கவராக இருந்தமையால், இவர்கள் சென்னைமக்களின் நன் மதிப்பையும், அரசியலாரின் பாராட்டையும் பெற்றார்கள். 1932-ல், சென்னை நகராண்மைக் கழகத் தலைவராகப் போட்டியின்றி இவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். இவர்களுடைய முயற்சியின் விளைவால், 1933-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் மேயர் பதவி தோற்றுவிக்கப்பெற்றது. இவர்களே 1933-ல் முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றதோடு, 1934-35-ஆம் ஆண்டில் மீண்டும் ஒருமுறை மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். இவ்வளவு இளம்வயதில் யாரும் எங்கும் மேயரானதில்லை என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவர்களுடைய ஆட்சிக் காலத்தில், சென்னை நகரம் பல்வேறு வகைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்தது.

இவர்கள், 1930-ல், சென்னைச் சட்டசபையில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, அக்காலந் தொடங்கிச் சென்னை மாநிலத்தின் பொதுவாழ்வில் சிறந்துவிளங்கும் ஒருவராகத் திகழ்ந்துவருகிறார்கள். 1936-ல் கல்வி, சுகாதார அமைச்சராகப் பணியாற்றினார்கள். அதே சமயத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராகவும் (Pro-Chancellor) இருந்

* இணைவேந்தர் (Pro-Chancellor) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தார்கள். 1937-ல் மீண்டும் சென்னைச் சட்டசபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, ஸ்தல ஸ்தாபன அமைச்சராகவும் பணிபுரிந்தார்கள். பின்னர், திரு ச. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது இவர்கள் எதிர்க்கட்சியின் தலைவராக இருந்தார்கள்.

சட்டசபை உறுப்பினர் பதவி இவர்களுக்கு ஒரு அணியன்று; சட்டசபையில் பொறுப்புக்களைக் கடமை உணர்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, அம் மன்றத்தில் ஆலோசனைக்கு வரும் ஒவ்வொரு செய்தியையும்பற்றி ஊன்றிச் சிந்தித்து வருகிறார்கள்; எதனையும் பல கோணங்களிலிருந்து சிந்தித்து முடிவிற்கு வருவது இவர்கள் இயல்பு; முடிவு செய்த பின்னர் அதனை அஞ்சாமல் வெளிப்படுத்தும் ஆற்றல் உடையவர்கள்; அன்பும், நல்ல பழக்கங்களும் தம் குடும்பத்தாரிடமிருந்து இவர்கள் பெற்ற செல்வங்கள். இதனால், எப்பொழுதும் கருணையுடன் விடை கூறி, மாற்றாரிடம் கடுஞ்சொல் கூறாது, காரியவெற்றி பெறுகிறார்கள்.

கல்வித்துறையில் இவர்களுக்கு எப்பொழுதும் ஆழ்ந்த ஈடுபாடு உண்டு. இத்துறையில் பெருந்தொண்டாற்றிய டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் அருமைப் புதல்வர் என்ற முறையில், இவர்களுக்கு இந்த ஆர்வம் இருப்பது இயற்கையேயாகும். 1928-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம், சட்டசபைக்கு வந்தபொழுது இவர்கள் அதனை ஆர்வத்துடன் ஊன்றிக் கவனித்து, இப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதில் தந்தையார் அவர்களுக்கு உதவியாக இருந்தார்கள். அன்றுமுதல் கல்வித்துறையில் இவர்களுடைய ஆர்வம் மேலும் மேலும் பெருகிவருகின்றது. இவர்கள் பச்சையப்பர் அறநிலையங்களின் ஆட்சிக்குழுவில் 25 ஆண்டுகளுக்கு மேல் உறுப்பினராக இருந்து, சிறந்த தொண்டாற்றி வருகின்றார்கள். இவர்களுடைய அறிவுரைகள் அனைத்தையும் அக் குழு உறுப்பினர்கள் எப்போதும் ஏற்று வருகின்றனர். கடந்த 25 ஆண்டுகளாகப் பச்சையப்பர் கல்லூரியின் வளர்ச்சியில் இவர்கள் பெரும்பங்குகொண்டுள்ளார்கள். இவர்கள் ஆட்சிக்குழுவின் தலைவராக இருந்தபோதுதான் பச்சையப்பர் கல்லூரியின் நூற்றாண்டுவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவில் ஆறாண்டு (1940-46) இவர்கள் உறுப்பினராக இருந்து, பல்கலைக் கழகத்துக் கல்விமுறை, ஆட்சிமுறைகளைத் தெளிவாக ஆராய்ந்துள்ளார்கள். தம்முடைய தலைசிறந்த செல்வாக்கைப் பல்லாற்றானும் பயன்படுத்தித் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழிசை

வளர்ச்சிக்கும் சிறப்பாக இவர்கள் செய்துவரும் அரும்பெருந் தொண்டுகள் என்றும் பாராட்டப்பெறும்.

பேங்குகளின் நடவடிக்கைகளில் இவர்கள் மிகுந்த அனுபவம் உடையவர்கள். இந்தியன் பேங்கின் டைரக்டராக நான்கு ஆண்டுகள் (1928-32) பணியாற்றினார்கள்; இம்பீரியல் பேங்கின் டைரக்டராக 1932 முதல் 1936 வரை பணியாற்றினார்கள்; மீண்டும் அந்த டைரக்டர் குழுவில் 1945-ஆம் ஆண்டு முதல் உறுப்பினராகி, இப்போது இப் பேங்கின் சென்னைக் குழுவின் தலைவராக இருந்து பணியாற்றி வருகிறார்கள்.

இவர்கள், 1941-ல் தென்னிந்திய வணிகச்சபையின் தலைவராக இருந்தார்கள். தொழில்—வணிகச்சபைகளின் அகில இந்திய அமைப்பு நிலையத்தின் தலைவராக 1943-44-ல் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். இப் பெரும்பேற்றைப் பெற்ற தென்னிந்தியர், இன்றளவும் இவர்கள் ஒருவரேயாவர்.

ீயப பாதுகாபபுக் குழுவில இவாகளா உறுப்பினராக இருந்தார்கள். இதன் பயனாக, நாட்டின் தற்காப்பினைப் பற்றியும், முப்படைகளைப் பற்றியும் செம்மையாக அறிந்துகொள்ள இவர்களுக்கு வாய்ப்பு நேர்ந்தது. 1946, 1952-ஆம் ஆண்டுகளில் சென்னைச் சட்டசபையில் உறுப்பினராக இவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பெற்று, இன்றளவும் அதன் உறுப்பினராக இருந்து வருகின்றார்கள். அரசியல் அமைப்பு மன்றத்திலும் இவர்கள் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

சென்னைச் சட்டசபையில் மிகக் கூடுதலாகிய அநுபவம் உடையவர்கள் என்று ராஜா சர் முத்தையச் செட்டியார் அவர்களைக் குறிப்பிடலாம். ஏறத்தாழ ஒரு தலைமுறை-25 ஆண்டுகளாகத் தொடர்ந்து அச் சபையின் உறுப்பினராக இருக்கின்றார்கள். இதனால் சட்டசபைத் துறையில் அநுபவக் களஞ்சியமாக விளங்குகின்றார்கள். சட்டசபையின் நடவடிக்கைகளில் இவர்கள் கலந்துகொண்டு நலம்பயக்கும் ஆலோசனைகள் பலவற்றைத் தெரிவிப்பதினின்றும் இவ்வநுபவம் நன்கு புலனாகின்றது. சட்டசபை நடைமுறைஅறிவில் இவர்களுக்கு ஒப்பாரும், மிக்காரும் இப்போது இல்லையென்று கூறலாம்.

சென்னைமாநிலத்தில் சிறந்து விளங்கும் பொதுநல நிலையங்களெல்லாம் எவ்வகையிலேனும் இவர்களின் தொடர்பைப் பெற்றனவாகவே இருக்கும். இவர்களுடைய தோற்றப் பொலிவு, அறிவின் ஆழம், ஒவ்வொரு செயலையும் நுணுகி ஆராயும்

ஆற்றல், முன்னேற்பாட்டுடன் நடந்துகொள்ளும் தன்மை ஆகிய இக்குணச் சிறப்புக்கள் இவர்களோடு பழகுவார் அனைவர் உள்ளத்தையும் கவர்கின்றன. இவர்கள் அருள் நிறைந்தவர்கள்; அலுவல்கள் மலைபோற் குவிந்திருப்பினும் எப்போதும் எவருக்கும் காட்சிக்கு எளியவர்கள்; இவர்களுடைய பெருந்தன்மை பிறரிடம் காணுதற்கு அரியது; அனைவரையும் வயப்படுத்தும் இயல்புடையது. இவர்கள், நலம் பயக்கும் செயல்களிலெல்லாம் ஈடுபடும் இயல்புடையவர்கள்; இதனால் எல்லா வகுப்பினரிடையும் இவர்களுக்குப் பல நண்பர்கள் இருக்கின்றனர். செட்டிநாட்டு அரசர் குடும்பத்தினருக்கு உடன்பிறந்த இயல்பாகிய விருந்தோம்பலை இவர்கள், அன்பே உருவாகிய தம் மனைவியார் செட்டிநாட்டு அரசி அவர்களுடைய உதவியுடன் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றார்கள். இவர்களுடைய தந்தையார் அவர்களிடத்தில் இவர்களுக்கு இருக்கும் பெருமதிப்பும் தந்தையார் மேற்கொண்ட துறைகளிலெல்லாம் தாமும் ஈடுபட்டு அவற்றை வளர்க்கவேண்டும் என்பதில் இவர்கள் கொண்டிருக்கும் தளராத பேரார்வமும், இவர்களுடைய தந்தையாரின் நண்பர்களை எல்லாம் இவர்கள்பால் ஈர்த்து இவர்களை மதிக்கச் செய்கின்றன.

தம் தந்தையார் அவர்கள் உயிர்போற் கருதிய நிலையங்களைப் பாதுகாத்து வளர்ப்பதே தமது வாழ்க்கையின் தலைசிறந்த குறிக்கோளாக இவர்கள் கொண்டுள்ளார்கள். தம் தந்தையார் அவர்கள் நாள்தோறும் பேணிவளர்த்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும், தமிழ் இசையையும் ஆதரித்துப் பாதுகாத்தும் வளர்த்தும் வருவதில் இவர்களின் உள்ளமும், செயலும் எப்போதும் ஈடுபட்டுள்ளன. இவர்களுக்கு நன்றிசெலுத்தும் முறையில் இவர்கள் பெயரால் கவினுறு மண்டபம் ஒன்றை அமைக்கவும் இவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கவும் பல்கலைக் கழகம் முடிவு செய்திருப்பது மிகவும் பொருத்தமாகும். தலைசிறந்த பொறுப்பொன்றை இவர்கள் ஏற்று, மக்களுக்கு வழிகாட்டும் நன்னாளை நாடு ஆவலோடு எதிர்பார்த்

பல்கலைக் கழகம் தன் வரலாற்றில் பெருவளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் இவ்வமயத்தில் தம் தந்தையாருடைய தலைசிறந்த வழிவகைகளைக் கடைப்பிடிக்கும் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களின் தொண்டு கிடைத்துவருவதை நினைக்குந்தோறும் உள்ளம் பெரு மகிழ்வெய்துகிறது. இவர்கள் மேலும் மேலும் பல பொதுநலப் பணிகள் புரிந்து, இன்புற்று நீடூழி வாழ்க என இந் நன்னாளில் இவர்களை வாழ்த்துவோமாக.

வெள்ளிவிழா வாழ்த்துப் பாடல்கள்

[பண்டித வித்துவான் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்]

மக்கள்உளம் மகிழ்ந்துநல வாழ்வுவளம்
　　பெறவேண்டின் மன்னுங் கல்வி
மிக்குலகில் அறிவினொளி விளக்கமுற
　　வேண்டுமெனும் உணர்வாம் வித்துத்

　　மலையரசர் தகைசேர் நெஞ்சில்
புக்குமுளைத் ததன்பயனே போற்றுமிந்த
　　　　　றாப் பொலிவென் பேமால். (௧)

தென்னாட்டுக் குபேரர்முடி புனையாத
　　பெருவேந்தர் திறல்வன் மைக்கு
முன்னாட்டும் வள்ளல் அண்ணா மலைபதித்த
　　கல்விவித்து முளைத்தே யைந்து
சொன்னாட்டுங் கல்லூரி யாய்த்தளிர்த்து
　　வளர்ந்தொன்றாய்த் தொடர்ந்து பின்னர்
எந்நாட்ட வரும்வியப்பப் பலகலைகள்
　　வளர்கழகம் எனவோங் கிற்றே. (௨)

ஓங்கியஅண் ணாமலைப்பல் கலைக்கழகம்
　　எண்ணெழுத்தென் றுரைப்ப தான
நீங்கரிய இருகோடும் பலகிளையுங்
　　கொண்டுகலை நிழல்ப ரப்பி
ஈங்கறிவு மலர்ந்துபுகழ் மணங்கமழ்ந்தே
　　ஈழமுதல் இமய மட்டோ
யாங்கணுந்தன் மாணவராங் கனிகளையீந்
　　தின்புறுத்தல் அறியார் யாரே. (௩)

தனியொருவர் முயற்சியினுற் செயற்கரிய
கலைக்கழகந் தன்னை நாட்டிக்
கனிமனத்தால் தமிழகத்தார் கலையுயர்வு
பெறச்செய்த கருணை வள்ளல்
தலையான மனிதர் அண்ணு
மலையரசர் புகழ்போல் அன்னூர்
இனியதமிழ் இசைவளர்த்த எழிலார்பல்
கழகம் இலங்கும் என்றும்.

இத்தகைய கலைக்கோயில் எண்ணியவா
றியற்றிநின்ற இணையி லாத
உத்தமர் அண் ணுமலைவேள் உலகினுக்குப்
பலநெறியால் உதவி செய்த
அத்தனையும் அறிவாற்றல் அஞ்சாமை
வினைத்திட்பம் அருளன் பாய
வித்தகமாங் குணநலமும் விளம்பலுறிற்
பெருநூலாய் விரியு மன்றே.

அருளார்ந்த பேரறஞ்செய் அரசர்அண்ணு
மலைவள்ளல் அணிசேர் சீர்த்தி
உருவான சிலைதிறந்த உயர்குணத்தர்
கலைவளர்க்கும் ஒண்மை மிக்கோர்
மருவாரும் பொழில்புடைசூழ் வளநாடாம்
மைசூர்நா டாளு மன்னர்
பெருமானும் செயசாம ராசவுடை
யார்பகதூர் பெரிது வாழ்க.

மன்னும்உல கியலறிவும் வளமான
மொழித்திறமும் மருவும் மேலோர்
தன்னிகரில் குடியரசாய்த் தாயகம்வாழ்
வுறப்பணிசெய் தளராத் தொண்டர்
சென்னைமா நிலம்ஆட்சி செயும்கவர்னர்
பலகலைகள் சிறப்புற் றோங்கும்
இங்கிலையத் தின்முதல்வர் பிரகாசா
நலம்பலபெற் றினிது வாழ்க.

காந்தியார் வகுத்தநெறி கடைப்பிடித்துச்
　　சிறைபுகுந்து கலக்க மின்றிச்
சாந்திபெறத் தொண்டாற்றித் தமிழ்நாட்டுக்
　　காங்கிரசுத் தலைமை யெற்று
ஏந்துபெரும் புகழாளர் பொறியியல்மா
　　ணவரில்லம் இவண்தி றப்போர்
வேந்தரென முதல்அமைச்சாய் மிளிர்காம
　　ராசர்நலம் மிக்கு வாழ்க.　　(௮)

போறிஞர் தலைசிறந்த செயல்வீரர்
　　ஆட்சிநலம் பேணும் வள்ளல்
சீரியதம் தந்தையெனத் திகழ்அண்ணன்
　　தமிழ்நாட்டின் திலகம் எங்கள்
நேரியஇக் கலைக்கழகப் புரவலர்நற்
　　குணங்குன்று நிறைதொண் டாற்றும்
பாரறிந்த ராசாசர் முத்தையவேள்
　　பல்லூழி செழித்து வாழ்க.　　(௯)

சொல்லாற்றல் நுண்ணறிவு துலங்குசட்டக்
　　கலைஞானம் தூய பண்பு
நல்லாட்சித் திறமுதலாம் நலங்கள்பல
　　ஒருங்கமைந்தோர் நற்றொண் டாற்றும்
வல்லாளர் சர் சி. பி. இராமசா
　　மிப்பெரியோர் மதிக்கும் கல்வி
எல்லாம்மேன் மேல்வளரும் இக்கழகத்
　　துணைவேந்தர் இனிது வாழ்க.　　(௧௦)

தன்னிகரில் சீர் அண்ணா மலையரசர்
　　பெருங்கீர்த்தி தரணி யெங்கும்
மன்னுகஅம் மன்னவர்தம் மரபுவழி
　　வழிப்பெருகி மகிழ்ந்து வாழ்க
துன்னியஇக் கலைக்கழகம் நாளும்
　　வளர்வுறுக தொடர்ந்து கல்வி
இந்நிலையப் பணிபுரிவோர் எல்லோரும்
　　இறையருளால் இனிது வாழ்க.　　(௧௧)

பல்கலைக்கழகம் நீடுவாழ்க!

[திரு. பாரதிதாசன்]

அகவற்பா

தண்ணறுந் தாயகம் ஒண்மை யெய்த
அண்ணா மலைநகர் ஆக்கி அண்ணாமலைப்
பல்கலைக் கழகம் பண்ணி எண்ணிலா
நல்லா சிரியரை நயந்து பல்வகைத்
௫. துறைதொறும் வகுப்பு நிறைவுற மாணவர்க்
கறிவுபெற வருகென அன்பழைப் பனுப்பிக்
கழகம் தனது காலெடுத் தூன்றி
நடக்கத் துவங்கிற் றென்ற நன்னிலை
அடைவித் தான்எழில் அண்ணா மலைஅரசு
௧௦. அந்நிலை அந்நாள் பல்கலைக் கழகம்
அடைந்த தென்றால் அதற்குக் காரணம்
கனிந்த உள்ளத்துக் காவலன் கைப்பொருள்
இழப்பு மட்டுமா அண்ணலின் இடையறா
உழைப்பும் காரணம் தழைதமிழ் நாட்டில்
௧௫. உடைமை உடலுழைப் பிரண்டும் உதவிய
கொடையிற் பெரிய கோமான் ஒருவனைக்
காட்டெனிற் செட்டி நாட்டானைக் காட்டுவோம்
காய்ப்புநா ளின்முன் காய்த்துப் பழுத்தமாந்
தோப்பும் போன்ற தூய்கழ கத்தாய்
௨௦. அதற்குள் எத்தனை ஆயிரம் அறிஞரை
எத்தனை ஆயிரம் முத்தமிழ்ப் புலவரை
ஈன்று புறந்தந்தாள் ஈடெடுப் பில்லா
எழுத்தா ளர்கள் எத்தனை பேர்களைப்
பேச்சா ளர்கள் எத்தனை பேர்களை
௨௫. அளித்தாள் பொருளின் பெற்றி ஆயுநர்
தமிழிசை வல்லுநர் அமிழ்தப் பாவலர்
இந்தா இந்தா என்று தந்தாள்
ஒருநூற் றாண்டில் தரத்தகு பயனைக்
கால்நூற் றாண்டில் தந்தது கழகம்
௩௦. அதற்கு வையம் அடிநாள் விழிபெற

வண்தமிழ் வழங்கியார் வழிவழி வந்த
பேரா சிரியரைக் கழகம் பெற்றதும்
பாரா சிரியர் புகழும் பண்புறு
சீபி இராம சாமியை அடைந்ததும்
நடு. கன்றை ஆனெனக் கழகத்தை யோம்பும்
அறிஞன்முத் தையானை அண்ணலின் புதல்வனைப்
பெற்றதும் அன்றோ உற்ற காரணம்
வயலும் ஏரும் மழையும் எருவும்
இருந்தும் என்ன செய்வேன் என்னுமோர்
சO. ஏழைக்கு விதைநெல் ஈந்தான் போல
அரசன்அண் ணாமலை, திருநாட் டுக்குப்
பண்டைப் பெருமையும் பதியும் நிதியும்
இருந்தும் வருந்தும் நிலைமை எண்ணி
அறிவின் ஊற்றுத் திறந்தான் அப்பெரு
சரு. நிறுவனம் வெல்க நீடுவா ழியவே
அண்ணா மலைபுகழ் விண்ணென விரிக
அன்னோன் மக்களும் சுற்றமும் மற்றும்
கழகம் காக்கும் கணக்கா யர்களும்
வழுவிலா தென்றும் மாணவர் தாமும்
ருO. எழிலுறு சீபி இராம சாமியும்
வாழிய பழந்தமிழ் நாடு
வாழிய வாழிய வண்தமிழ் நன்றே

கட்டளைக் கலித்துறை

தேனூற்றும் பூவில் தமிழூட்டும் வண்டு திகழ்பொதும்பர்
வானூற்று நண்ணுதில் லைக்கண் அண்ணாமலை மன்னளித்த
ஆனூற்று பாலின் அறிவூற் றிடும்பல் கலைக்கழகம்
கால்நூற் றாண் டுங்கண்டு பல்லூழி யுங்காண வாழியவே.

தமிழ் வளர்ச்சி

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தொடக்கநாள் முதல் இதன் தமிழ்த்துறையும் வளர்ந்து வருகின்றது. இப் பல்கலைக் கழகம், 25 ஆண்டுகளாகத் தமிழ்மொழிக்கும் தமிழ்நாட்டிற்கும் செய்து வரும் பணிகளை எண்ணிப் பார்த்தால், இது தமிழ் இலக்கிய வரலாற்றில் தனக்கெனச் சிறப்பானதோர் இடம்பெற்றிருப்பது புலனாகும். எனவே, இப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்த டாக்டர் இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் விருப்பம் ஒருவாறு நிறைவேறிவிட்டதாகக் கூறலாம். செனெட் சபையின் தொடக்க விழாவின்போது இராசா அவர்கள், ஆற்றிய சொற்பொழிவு இன்னும் நம் செவிகளில் ஒலித்த வண்ணமாக இருக்கின்றது. தமிழையும் தமிழ்ப்பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப் பல்கலைக்கழகத்தின் சிறந்த குறிக்கோளாக இருக்கும் என்று இராசா அவர்கள் அப்போது தெரிவித்தார்கள். அன்னாரின் திருவுள்ளமே இன்று தமிழ்த்துறைக்கு உறுதுணையாக நின்று உதவுகின்றது. தந்தையார் அவர்களைப் போலவே தமிழ்மொழியை மேலும் மேலும் வளர்த்து அதற்குப் பெருமைதரும் மைந்தரும், தமிழ்நாட்டின் தலைசிறந்த தோன்றலும் ஆகிய இராசா சர். முத்தையச் செட்டியார் அவர்களின் அரும்பெரும் பணிகளுக்கு நாம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழில் தேர்ச்சி அடைந்து பி. ஏ. ஆனர்ஸ் பட்டம் பெறுவதற்குரிய வகுப்பு இப் பல்கலைக் கழகத்திலேயே முதன் முதலாகத் தொடங்கப்பெற்றது. தமிழாசிரியர்கட்கு ஆசிரியப் பயிற்சி முதன் முதல் அளித்த பெருமையும் இப் பல்கலைக்கழகத்தையே சாரும். பிற பல்கலைக்கழகங்களில் தமிழுக்கெனப் பேராசிரியப் பதவி இல்லாமலிருந்தபோது தமிழுக்கெனப் பேராசிரியப் பதவி யொன்றை முதன்முதலாக ஏற்படுத்தித் தமிழைப் பெருமைப்படுத்தியதும் இப் பல்கலைக் கழகமேயாகும்.

தமிழ்த் துறையின் ஒரு பகுதியாக விளங்கிய தமிழ் ஆராய்ச்சித்துறை, டாக்டர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களின் ஆட்சிக்காலத்தில் தனக்கென ஒரு பேராசிரியரைக் கொண்டு தனித் துறையாகியது. அடுத்து டாக்டர் சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் துணைவேந்தராய் வந்தவுடன் அத் தமிழ்த்துறை மேலும் ஒரு தனித்துறையாகப் பிரிந்து, வேறொரு பேராசிரியரைப் பெற்றது. இப் பிரிவுகளைப் பிரிவு

என்று சொல்லுதல் கூடாது. தமிழ்த்துறையின் ...
என்றே சொல்லுதல் வேண்டும். எனவே, தமிழுக்கென இப பொழுது மூன்று பேராசிரியர்களும், தம் மூவரையும் தலைவ ராகக் கொண்ட மூன்று தனித்துறைகளும் உள்ளன. இன்னும் சொன்னால், தமிழுக்குப் பேராசிரியர் நால்வராகும் நிலை வந்து கொண்டிருக்கிறது. அஃதாவது, இந்திய அரசியலார் வெள்ளி விழா நினைவாகப் பெருந்தன்மையோடு அளித்த மூன்று லட்ச ரூபாயை மூலதனமாகக் கொண்டு, ஒரு தமிழ்ப் பேராசிரியரை நியமிக்கவும் பல்கலைக் கழகத்தார் கருதியுள்ளனர்.

தமிழ்க்கலைப் பகுதிக்கு டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் எம். ஏ., அவர்களும், தமிழ்க் கீழ்த்திசைக் கலைப் பகுதிக்குப் பண்டித வித்துவான் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களும், தமிழ் ஆராய்ச்சிப் பகுதிக்கு வித்துவான் திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., பி. எல்., அவர்களும் பேராசிரியர்களாகவும், தலைவர்களாகவும் இப்போது உள்ளனர். இவர்கள் தலைமையின் கீழ்ப் பத்தொன்பது ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டின் தவப் புதல்வர்களெனப் போற்றப்பெறும் அறிஞர்பலர் ஆசிரியர்களாகவும் பேராசிரியர்களாகவும் இங்கே தொண்டாற்றியுள்ளனர். தமிழ் நாட்டிற்கும், வெளி நாட்டிற்கும் தமிழாசிரியர்களையும், தமிழ்ப்பேராசிரியர்களையும் தமிழ்ப் பகுதி தந்துதவியிருப்பதும் மகிழ்வுடன் குறிப்பிடத்தக்கது. தமிழாராய்ச்சித் துறையினின்று பல அரிய நூல்கள் வெளிவந்துள்ளன.

தமிழ்த் துறையின் முதல் தலைவராகவும் ரீடராகவும் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம் ஏ., எம்.எல். அவர்கள் பொறுப் பேற்றார்கள். ஓராண்டுக்குப் பின் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை பி. ஏ., பி. எல். அவர்கள் அப் பொறுப்பினை ஏற்றுச் சிலகாலம் நடத்தினார்கள்.

பின்னர் இராமகிருட்டின மடத்தைச் சேர்ந்த துறவியான விபுலானந்த அடிகள் இராசா அண்ணாமலை வள்ளல் அவர்களின் விருப்பத்திற்கேற்ப 1931-ஆம் ஆண்டு முதற் பேராசிரியராகப் பதவியேற்றார்கள். இவர்கள் காலத்தில்தான் தமிழ்ச்சிறப்பு வகுப்பு (பி. ஏ. ஆனர்ஸ்) தொடங்கப்பெற்றது. தமிழ் பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பிற் பயின்ற மாணவர்கள், முதன்முதலாக 1934-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றனர். தமிழ்ச்சிறப்பு வகுப்பு மாணவர்கள் மெய்ப்பொருள் நூல்களும் பயிலத் தொடங்கினர்.

பி. எஸ்ஸி. படிக்கும் மாணவர்கள் ஆங்கிலம் நீங்கலாக மற்றொரு மொழி படிக்கவேண்டும் என்று திட்டம் செய்யப்பெற்றமையால், தமிழ் கற்கும் வாய்ப்பு, பி. எஸ்ஸி. மாணவர்களிற் பெரும்பாலோருக்கும் கிடைப்பதாயிற்று. விபுலானந்த அடிகள் இங்கிருந்த பொழுதுதான் தமது ஒப்பற்ற இசையாராய்ச்சி நூலாகிய யாழ் நூலை இயற்றத் தொடங்கினார்கள்.

பின்பு 1933-ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகள் திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள். எம். ஏ., பி. எல்., தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்கள். இவர்கள் இங்குப் பணி புரிந்தபோது தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்குப் புத்துரைகண்டு. தொல்காப்பிய உரையாசிரியர் வரிசையிலே தாமும் ஒருவரானார்கள். தாம் இயற்றிய 'மாரிவாயில்' என்னும் நூலை அக்காலத்தில் வெளியிட்டனர். அந்நூல் வள்ளல் அண்ணாமலை அரசர் அவர்களுக்கு உரிமையாக்கப்பெற்றது. இவர்கள் மேலும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் ஆங்கிலத்தில் எழுதினார்கள். இவர்களுக்குப் பல்கலைக் கழகத்தார், வெள்ளிவிழாவன்று டாக்டர் பட்டம் வழங்கியிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இவர்கள் தலைவராய் இருந்தபோதுதான் தமிழ் ஆராய்ச்சித்துறை தோன்றியது. மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் இத் துறையில் முதல் தமிழ் விரிவுரையாளராக இருந்து, அரிய பணிகள் பல செய்தனர். அவர்களது இனிய பாடல் இயற்றும் வன்மைக்குப் "பாரிகாதை" யும், அண்ணாமலை வள்ளல் அவர்களைப் பற்றிப் பாடிய பாடல்களும், அன்னாரது ஆராய்ச்சி ஆற்றலுக்கு, அவர்கள் எழுதிய 'தமிழ் வரலாறு', 'நித்தன்', 'கோசர்', 'குறுந்தொகையுரை', 'பட்டினப்பாலையுரை', 'பெரும்பாணாற்றுப் படையுரை', ஆகிய நூல்களும் சான்றாகும். இவர்கள் இன்னும் பல நூல்கள் எழுதியுள்ளனர். ஆயினும், மேற்குறிப்பிடப்பெற்றவை, இவர்கள் இப் பல்கலைக் கழகத்திற் பணிபுரிந்தபோது இயற்றப்பட்டனவாகும். இவற்றுள் "பாரிகாதை", அண்ணாமலை அரசருக்கு உரிமையாக்கப்பெற்றது. இந்நூல், புலவர் பெருமக்கள் பலர் குழுமிய பெரியதோரவையில், (குமார) இராசா சர். முத்தையச் செட்டியார் அவர்கள் திருமுன்பு பல்கலைக்கழகத்தில் அரங்கேற்றப் பெற்றது.

திருவாசகத்தில் உள்ள திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை ஆகிய பகுதிகளுக்கு அரியதொரு உரைகண்டும், இனிய இலக்கியக் கட்டுரைகள் பலவற்றை எழுதியும், நுண்ணிய சமய நுட்பங்களை அறிந்து உரைத்தும் பெரும்புகழ் பெற்ற பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்,

1934-ஆம் ஆண்டிலிருந்து தமிழ் விரிவுரையாளராக நான்கு ஆண்டுகளும், தமிழ்த்துறைத் தலைவரின் அலுவல்களைக் கவனித்து (Acting Professor) இரண்டாண்டுகளும் பணியாற்றினார்கள். இவர்கள் காலத்தில் சமப்பிரதான வித்துவான் வகுப்புக்களில் தமிழும் வடமொழியும் கற்கும் மாணவர்கள் சேர்ந்து பயின்றனர். அரசியலார், பண்டிதமணி அவர்களின் பெரும் புலமையைப் பாராட்டி, மகாமகோபாத்தியாய என்ற பட்டத்தை 1942-ஆம் ஆண்டில் இவர்களுக்குக் கொடுத்துச் சிறப்பித்தனர். அப்பட்டத்துக்குரிய விருதுகளைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவன்று கவர்னர் அவர்கள் பண்டிதமணி அவர்களுக்கு வழங்கியமை குறிப்பிடத் தக்கது. அவ்வாண்டிலேயே சென்னைப் பல்கலைக் கழகத்தார், கௌரவ ரீடர் பதவிச் சொற்பொழிவுகள் செய்யுமாறு இவர்களை அழைத்துச் சொற்பொழிவாற்றுவித்தனர். பண்டிதமணி அவர்கள் தம் ஊருக்குச் சென்று ஓய்வு பெற்று இருந்த பின்னும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் தமிழ்ப்பணி செய்ய வருமாறு இவர்களை அழைத்தனர். அதற்கிணங்கத் தமிழ் ஆராய்ச்சி ஆலோசனையாளராகப் பொறுப்பேற்றார்கள். அப்பொழுது வட மொழியிலிருந்து கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தை மொழி பெயர்த்தனர். அவ்வமயம் தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவின் தலைவராகவும் பணியாற்றினார்கள். 1946-ஆம் ஆண்டில் மீண்டும் ஓய்வு பெற்றனர்.

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், 1940-ஆம் ஆண்டில் பேராசிரியராக நியமிக்கப்பெற்று, நான்கு ஆண்டுகள் பணிபுரிந்தார்கள். வடமொழியில் வேதாந்த சிரோமணி, சாகித்திய சிரோமணி, வியாகர்ண சிரோமணி என்ற வகுப்புக்கள் இருத்தல்போலத் தமிழிலும் சித்தாந்தப் புலவர், இலக்கியப் புலவர், இலக்கணப் புலவர் என்ற வகுப்புக்கள் தொடங்குவதற்கு இவர்கள் காலத்தில் வழிவகுக்கப்பெற்றது.

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்., அவர்கள், 1944-ஆம் ஆண்டிலிருந்து இரண்டாண்டுகள் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றினார்கள். இவர்கள் காலத்தில் பி. ஓ. எல். பட்டப் படிப்புத் தொடங்கப் பெற்றது.

1946-ஆம் ஆண்டுமுதல் டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ., பிஎச். டி., அவர்கள் தமிழ்ப்பேராசிரியராக இருக்கிறார்கள். இவர்கள் 1935-ஆம் ஆண்டிலிருந்து தமிழாசிரியராக இங்கே பணிபுரிந்துவருபவர்கள். இப்போது உள்ள மூன்று தமிழ்த்துறைகளுள் ஒன்றாகிய தமிழ்க் கலைத்துறைப்

பகுதிக்கு 1953-ஆம் ஆண்டுமுதல் இவர்கள் பேராசிரியராக இருக்கிறார்கள். பலர் இவர்களின் மேற்பார்வையில் ஆராய்ச்சி செய்து எம்.லிட்., பிஎச்.டி., ஆகிய பட்டங்கள் பெற்றுள்ளனர். இவர்கள் 1948-ஆம் ஆண்டில் ஐந்து திங்கள்வரை துணை வேந்தர் (Acting Vice-Chancellor) அலுவலகளைக் கவனித்து வந்திருக்கிறார்கள். இவர்களைப் பிரிட்டிஷ் கவுன்சில் அழைத்தமையால், இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகங்களை ஆறு வாரங்கள் சுற்றிப்பார்ப்பதற்காக இப்போது இலண்டனுக்குச் சென்றுள்ளார்கள். இவர்கள் திரும்பி வரும்வரை தமிழ்க் கீழ்த்திசைக் கலைப்பகுதிப் பேராசிரியர் பண்டித வித்துவான் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள், இக் கலைப்பகுதிக்கும் பேராசிரியராக நியமிக்கப்பெற்றுள்ளார்கள்.

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் தமிழ்க் கீழ்த்திசைக் கலைப்பகுதியின் முதற் பேராசிரியராக 1953-ஆம் ஆண்டில் நியமிக்கப்பெற்றார்கள். இவர்கள் 1936-ஆம் ஆண்டிலிருந்து தமிழாசிரியராக இங்கே பணிபுரிந்து வருபவர்கள். 1943-ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகள் தமிழ் இசை ஆலோசனைக் குழுவின் செயலாளராகவும் இருந்து, 20-க்கு மேற்பட்ட தமிழிசை நூல்களைத் தொகுத்து அவை வெளிவர இவர்கள் பணிபுரிந்துள்ளார்கள். ஏழாண்டுகளாக நிறுத்தப் பெற்றிருந்த ஆசிரியப் பயிற்சி வகுப்பு இப்பகுதியில் 1953-ஆம் ஆண்டில் மீண்டும் தொடங்கப்பெற்றுள்ளது. புலவர் வகுப்பு மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்குப் பத்து ரூபாயாக இருந்த உதவிச்சம்பளம் இருபத்தைந்து ரூபாயாக இப்போது உயர்த்தப் பெற்றுள்ளது. எம். ஓ. எல். ஆராய்ச்சிப் பட்டம் பெறுவோருக்கும், புலவர் வகுப்பிற் சேரும் மாணவர்களுக்கும் உதவியாக விதிகள், தக்கவாறு மாற்றியமைக்கப் பெற்றிருக்கின்றன. மேலும் அடுத்த ஆண்டுமுதல் இப்பகுதியில், எம். ஓ. எல். வகுப்பு நடைபெறுவதற்குரிய முன்னேற்பாடுகளுஞ் செய்யப் பெற்றுள்ளன. 1901-ஆம் ஆண்டிலிருந்து 1953-ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவர்கள் இயற்றிய இலக்கிய மதிப்புடைய நூல்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று தொகுப்பதென இந்தியாவின் தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேரு அவர்கள் தலைமையில் இயங்கும் சாகித்திய அகாடமி முடிவுசெய்தது; தமிழைப் பொறுத்தவரையில் அப்பணி பேராசிரியர் இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றுவருகின்றது. இவர்கள் கீழ்த்திசைக் கலைப்பகுதிகளுக்கு டீனாக (Dean, Faculty of Oriental Studies) வும் இருந்துவரு வருகிறார்கள். இப் பகுதியில் பணியாற்றும் திரு. கே. என்.

ரமணி அவர்கள், இதுவரை தமிழில் வெளிவந்த எல்லா நூல்களையும் பற்றிய பட்டியல் ஒன்றைத் தயாரித்துள்ளார்கள்.

தமிழ் ஆராய்ச்சிப் பகுதி தனித்துறையாகப் பிரிந்த நாளி லிருந்து வித்துவான் திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., பி. எல்., அவர்கள் பேராசிரியராக நியமிக்கப்பெற்றுள்ளார்கள். இவர்கள் 1941-ஆம் ஆண்டிலிருந்து தமிழாசிரியராக இங்கே பணிபுரிந்து வருபவர்கள். இப் பகுதியில் "பிற்காலச் சோழர் சரித்திரம்" என்ற சிறந்த நூல் மூன்று பகுதிகளாகத் திரு. சதாசிவப் பண்டாரத்தார் அவர்களால் எழுதப்பெற்று இரண்டு பகுதிகள் இப்போது வெளிவந்துள்ளன. கம்பராமாயணத் திற்குத் திருத்தமான பதிப்பொன்றை வெளியிடுதற்காகப் பல ஏட்டுச்சுவடிகள் இப்போது ஒப்புநோக்கி ஆராயப்பெறுகின் றன. இம் முயற்சியின் பயனாகச் சுந்தர காண்டத்தின் முற் பகுதி வெள்ளிவிழாவன்று வெளிவர இருக்கிறது. இவ் வாராய்ச்சிப் பகுதியிற் பணியாற்றும் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணன் அவர்கள், இப்போது திருமுறை ஆராய்ச்சி [illegible] கள்.

முத்தமிழ்த் துறையின் முறைபோகிய வித்தகர்கள் பலரும், இக்காலத்துக்கேற்றவாறு நுண்ணியற்கலைகளான அறி வியல் ஆய்புலனில் கருத்தூன்றிப் பிறநாட்டு நல்லறிஞர் நூல் களைப் பெயர்த்தும், வரலாற்றுண்மைகளை நன்கு தெரிந்து விளக்கியும் போதருகின்றனர்.

தமிழ்மரபு கெடாதவாறு வேற்றுச் சொற்களைப் புத்தம் புதிய முறையில் படைத்துத் தமிழ்மொழியை வளப்படுத்துகின் றனர். ஆசிரியர்கள் பலரும் கடப்பாட்டுணர்ச்சியுடன் கருத் தூன்றித் தொழிலாற்றிவருவது போற்றுதற்குரியதாகும். இவர்கள் அரும்பெரும் பணிகளால் நம் தமிழன்னை புத்தணி பூண்டு கிளர்ச்சியுடன் வளம்பெற்றுவருவது நாட்டுக்கு நலம்பல பெருகுவதாகும்.

இத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மூன்று தமிழ்த்துறை களும் மேலும் மேலும் வளர்ந்து நாட்டுக்கும் மொழிக்கும் சிறந்த பணியாற்றும் என்பது உறுதியாம்.

தமிழ்இசை வளர்ச்சி

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பொதுவாக எல்லா வகைக் கல்வியையும் வளர்த்து வருகின்றதெனினும், மிகச் சிறப்பாக வளர்த்து வருகின்ற சிலவற்றுள் இசைக் கல்வியும் ஒன்றாகும். இசைக்காகத் தனியே நான்கு ஆண்டு வகுப்பு, முதன் முதலாக நடத்திப் பட்டம் வழங்கும் பெருமை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கே உரியது. 1929 ஆம் ஆண்டில் இசைக் கல்லூரியை நிறுவிய டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், அக் கல்லூரி நிலைபெற்று வளர்ச்சியுற்ற வுடன் 1932 ஆம் ஆண்டில் அதனைப் பல்கலைக்கழகத்தோடு இணைத்தார்கள். சிறந்த இசைவாணர்களாகிய சபேச ஐயர், சங்கீத கலாநிதி டைகர் வரதாச்சாரியார், தஞ்சை சங்கீத கலா நிதி கே. பொன்னையா பிள்ளை, திருப்பாம்புரம் சங்கீத கலாநிதி டி. என். சாமிநாத பிள்ளை முதலியோர் இக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும் பொறுப்பேற்றுப் பணிபுரிந்தார்கள். இப்போது புகழ்பெற்று விளங்கும் சாத்தூர் ஏ. ஜி. சுப்பிரமணியம், திரு. டி. கே. ரங்காச்சாரியார், திரு. எஸ். வி. பார்த்தசாரதி, திரு. கே. எஸ். நாராயணசாமி ஐயர் முதலிய பலர் இக் கல்லூரியில் பயின்ற பழைய மாணவர் ஆவர். இங்கே வாய்ப்பாட்டு, வீணை, பிடில், மிருதங்கம், தேவாரம் ஆகியவை கற்பிக்கப் பெறுகின்றன. இப் பல்கலைக் கழகத்தில், இசை கற்பதற்கும் தமிழ் கற்பதற்கும் இலங்கையில் இருந்து மாணவர் பலர் ஆண்டுதோறும் வருவது குறிப்பிடத் தக்கது.

1936 ஆம் ஆண்டில், துணைவேந்தர் மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார் அவர்கள் தலைமையில் ஒரு இசை மாநாடு இப் பல்கலைக்கழகத்தில் கூட்டப்பெற்றது. தமிழ்ப்பாடல் களைப் பலர் அறியச் செய்யவும், தமிழ்இசைப் பாடல்களை மேலும் மேலும் ஆக்கவும் ஆவன செய்யவேண்டுமென்று அம் மாநாடு வற்புறுத்தியது. ஆயினும், 1940 ஆம் ஆண்டு வரை இப் பல்கலைக் கழக இசைப் பகுதி, பிறமொழிப் பாடல்களுக்கே இடம் தந்திருந்தது. இசைவாணர்கள் தமிழ்நாட்டு இசை அரங்குகளிலும் பிறமொழிப் பாடல்களையே பாடுவாராயினர். நம் நாட்டு இசையரங்குகளில் வேற்றுமொழிப் பாடல்கள் பாடப் பெறுவது நியாயமில்லை, பயனுமில்லை என்ற உணர்ச்சி அண்ணாமலை வள்ளல் அவர்களின் உள்ளத்தில் பதிந்தது. இந்த

நல்லெண்ணம், தமிழ் இசை இயக்கமாக உருவெடுத்தது. எச் செயலையும் எண்ணித் துணிந்து, துணிந்தபின் எத்தகைய எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது, தொடங்கிய செயலை நிறைவேற்றும் ஆற்றல் உடைய ராஜா அவர்கள், இயக்கத்திற்கு நேர்ந்த எதிர்ப்புக்களையெல்லாம் தமிழ்இசை வளர்ச்சிக்கு ஊக்கம் தருவனவாகக் கருதினார்கள். ஆனால், ராஜா அவர்கள் தொடங்கிய தமிழ் இசை இயக்கம், தமிழ்மக்களின் உள்ளங்களில் பேருவகை ஊட்டியது. டாக்டர் சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள் போன்ற பேரறிஞர்கள் ராஜா அவர் களுடன் ஒத்துழைத்தனர். எங்கும் தமிழ் இசை மாநாடுகள் நடைபெற்றன; தமிழ்இசைச் சங்கங்கள் தோன்றின. ஆங்காங்குத் தமிழ்இசைக் கல்லூரிகள் பணியாற்றத் தொடங் கின. இசைஅரங்குகளில் பெரும்பாலும் தமிழ்ப்பாடல்கள் பாடப்பெற்றன. வேற்றுமொழிப் பாடல்களுக்கு இடம் தந்திருந்த பல்கலைக் கழக இசைப் பகுதி, தமிழ்இசை கற்பிக் கும் பகுதியாக மாறியது. அவ்வளவில் அன்றிப் பழையனவும், புதியனவும் ஆகிய இசைப்பாடல்களையும், இசைஇலக்கண நூல்களையும் வெளிப்படுத்தும் பெரு முயற்சியையும் ராஜா அவர்களின் பேராதரவில் பல்கலைக்கழகம் மேற்கொண்டது. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் தமிழ் இசை ஆலோசனைக் குழு ஒன்று நிறுவப்பெற்றது. அக் குழுவுக்குப் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதஞ் செட்டியார் அவர்கள் செயலாளராகப் பணியாற் றினர். வெளியிடங்களில் உள்ள இசைவாணர் பலரும், இசைப் பாடல் இயற்றுதலில் வல்ல அறிஞர்களும், இப் பல்கலைக் கழக இசைப் பகுதி ஆசிரியர் எல்லோரும், வித்துவான் மு. அருணா சலம் பிள்ளை அவர்கள் முதலிய தமிழ்ப் பகுதி ஆசிரியர் சிலரும் ஒத்துழைத்துப் பேருதவி செய்தனர். தமிழ் இசை ஆலோசனைக் குழு, ராஜா அவர்களின் அறிவுரைகளை அவ்வப்போது பெற்று, விரைந்து செய்த பெரு முயற்சியின் பயனாக, 20 தமிழ்இசை நூல்கள், பல்கலைக் கழக வெளியீடாகச் சில ஆண்டுகளுக்குள் வெளிவந்தன. ராஜா அவர்கள் பல்கலைக்கழகத்தின் வாயி லாகத் தமிழ் இசையை வளர்த்ததோடு, சென்னையில் ஒரு தமிழ் இசைச் சங்கத்தையும் நிறுவினார்கள். அச் சங்கம், தமிழ் இசை வளர்ச்சிக்குச் சிறந்த பணிகளை இடையறாது புரிந்து வருவது நாடறிந்த செய்தியாகும். ராஜா அவர்களின் பெயரைத் தாங்கும் பெருமை பெற்று, இப்போது அச் சங்கத்தின் கட்டிட மாகச் சென்னையில் விளங்கும் அண்ணாமலை மன்றம், அண்ணாமலை வள்ளலின் புகழ்போல் ஓங்கி நிற்பதை நாம் கண்டு மகிழ்வெய்து

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், இதுவரை இருபது தொகுதிகளாக 23 தமிழ் இசை நூல்களை வெளிப்படுத்தியுள்ளது. அந் நூல்களில் 1254 தமிழ்இசைப் பாடல்கள் 234 இராகங்களில் அமைந்துள்ளன. சிறந்த இசைவாணர்கள், அப் பாடல்களுக்கு இசை அமைத்துள்ளனர். மேற்குறிப்பிட்ட தொகுகளில் அடங்கிய இசை இயல், தமிழர் இசைக் கருவிகள், சுரமேள கலாநிதி, பரதசங்கிரகம், மத்தளம் கற்கும் முறையும் அதன் சிறப்பு வகையும் என்ற நூல்கள் இசை இலக்கண அமைதிகளைத் தெளிவாக விளக்கத்தக்கன. மிருதங்கம் பயிலும் மாணவர் திறமைபெறும் வண்ணம் இப் பல்கலைக் கழகம் வெளிப்படுத்திய மிருதங்க பாடமுறைப் புத்தகமும் இத் தொகுதிகளில் ஒன்றாகும். இன்னும் சில நூல்கள் இப்பொழுது அச்சில் உள்ளன. மேலும் 1500 க்கு மேற்பட்ட பாடல்கள், இசை அமைக்கப்பெற்று அச்சிடுவதற்கு ஏற்ற நிலையில் இருக்கின்றன. தமிழ் இசைக்கு அரும்பெரும் தொண்டுகள் புரிந்த அண்ணாமலை வள்ளல் அவர்களைப் பாராட்டியும், வாழ்த்தியும் பல சமயங்களில் தக்க புலவர்கள் இயற்றிய பாடல்கள், சிறந்த இசைவாணர்களால் இசை அமைக்கப்பெற்றுச் 'செட்டிநாட்டரசர் இசைமாலை' என்னும் பெயருடன் வெள்ளிவிழா அன்று வெளிவர இருப்பது குறிப்பிடத் தக்கது. 25 ஆண்டு நிரம்பிய நிலையில் கொண்டாடப்பெறும் வெள்ளிவிழா அன்று வெளிவரும் இந் நூலில், 25 இசைப்பாடல்கள் அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இப்போது இசைப்பகுதியில், பேராசிரியர் சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, மாயவரம் பிடில் கோவிந்தராஜ பிள்ளை முதலிய புகழ்பெற்ற இசைவாணர்கள் பணியாற்றி வருகின்றனர். எல்லா இசைப் பிரிவுகளிலும் நூற்றுவருக்கு மேற்பட்ட மாணவ மாணவியர் பயில்கின்றனர். இசையில் தேர்ச்சி பெற்றவர்கள் மிகுதியான தமிழிசைப் பாடல்களைக் கற்றுக்கொள்வதற்கு உதவியான, ஓராண்டுத் தமிழ் இசை வகுப்பு ஒன்றும் இங்கு உள்ளது. தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் இசை வளர்ச்சிக்கும் இரண்டு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையைத் திருப்பனந்தாள் காசிமடத்து அதிபராக இருந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் அவர்களும், அவர்களுக்குப் பின் இப்போது அதிபராக இருக்கும் ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் பல்கலைக் கழகத்திற்கு வழங்கியிருப்பது நன்றியுடன் குறிப்பிடத் தக்கது.

செழுங்கலைக்கோயில் வாழ்க!

[கழகப் புலவர் செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

உலகில் அளப்பருங் கோடி வளப்பரும் உயிர்கள் உள்ளன. அவையிற்றுள் மக்கட் பிறப்பும் ஒன்றும். இம் மக்களை விலங்கி னின்றும் பிரித்து உயர்த்துவது மாண்பெருங் கல்வியாகும். இதன் பெருமையை,

'விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்'

எனக் கட்டுரைத்துத் தெருட்டுவர் வள்ளுவப் பெருமகனார். இத்தகைக் கல்வி, உலகியற்கு ஒவ்வும் கல்வியும், உலகியலைக் கடந்த நுண்கல்வியும் என இருகூறாகப் பகுத்துரைக்கப்பெறும். இவ்விருவகைக் கல்வியும் ஒருங்கே பெற்ற மாநிலமே உயரிய நாடாக மீக்கூறப் பெறுவதாகும்.

இத்தகைய மாண்புமிக்க கல்வியை மக்கள் எய்துதற்கு நாட்டில் கலைக்கூடங்கள் பல்கவேண்டும்; அக் கூடங்களும் அவ்வந்நாட்டின் தாய்மொழியை ஆக்கம்பெற வளர்க்கும் நிலைக் களக்கோயிலாக மிளிர்தல் வேண்டும். அவ்வாறின்றி வேற்று மொழிக்கு முதன்மையும் தாய்மொழிக்கு அஃதின்மையும் ஆக்கும் கலைக்கோயில்களால் வெற்றாரவாரமன்றிப் பயன் யாது மும்.

இக்குறிக்கோளை முதன்மையாகக்கொண்டு முற்காலத்தில் நம் தமிழகத்தின் பழைய நாடாகிய பாண்டிநாட்டில் கூடலம் பதியில் முதலிடை கடையெனச் சங்கங்கள் நிறுவிக் கல்வி யையும் கலையையும் தமிழர் பண்பாடுகளையும் ஆக்கம்பெற ஊக்க முடன் வளர்த்தனர். அதனால் அக்காலம், அவைவில் செழுந் தமிழ் வழக்கே யாண்டும் பரவி மிளிர்ந்தது.

ரக் கூர்த்தறிந்த திருவும் கல்வியும் சேரப்பெற்ற செட்டிநாட்டரசர் இராசா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள், இவ் விருபெருங் கல்வியும் நாட்டிடைப் பரவியொளிர்தல் வேண்டுமெனக் கருதினார்கள்.

தூங்காமை கல்வி துணிவுடைமை யென்னும் அரசாக்கு அமைந்த பண்புகள் நிறைந்த அண்ணாமலையரசரின் பேருள்ளம், தில்லைக்கூத்தன் திருமுன்னர் ஓர் கலைக்கோயிலைக் கண்டது.

அக் கலைக்கோயில் வானுற வளர்ந்த மாடகூடங்களைக் கொண்டு, விண்ணையும் வெறுவிதாமென நகைப்பதுபோல் வெண்சுதை தீற்றி விளங்குகின்றது. அஃதறியாமை வேடையகற்றி அறிவின் நன்னீர் தந்துதவுகின்றது. அதுவே, அண்ணமலைப் பல்கலைக்கழகமெனப் பெயரிய கலைமன்றம்; இஃது நாட்டுக்கு வேண்டும் எல்லாத் துறையினும் கல்வி கேள்வி நலங்களைத் தந்து அரிய தாருவாய்த் தழைத்து நிற்கின்றது; இது, தான் பிறந்த இருபத்தையாண்டகவைக்குள், நுண்கலைச் செல்வர்களை—அருங்கலை விநோதர்களை—சொல்லின் தூய்மையரை—கேள்விப் பெரியர்களை—வளர்த்து, நாட்டில் வெண்மை நீக்கி நுண்மை தந்துதவுகின்றது.

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் அரிய கருத்துக்கொண்டு செட்டிநாட்டு வேந்தர் நிறுவிய இக்கழகம் இன்னும் ஆக்கம் பெற்று வளர்வதாக.

எனபதறம்கறப, தந்தையார் வழியிற் காலூன்றிக் கடைப்பிடித்து இப் பல்கலைக்கோயிலைத் தம் இரு கண்ணெனப் போற்றிவரும் கழக இணைவேந்தர் அரசர் முத்தையச் செட்டியாரவர்களும் அவர்தம் கான்முளைகளும் பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து வாழியர்.

இக் கலைக்கோயில் செழுங்கலை நிலையமாகத் திகழத் தம் மன மொழி மெய்களால் ஓவாதுழைத்துவரும் மூதறிஞர்களாகிய புலமைப் பெருஞ்செல்வர்களும் வாழியர்.

வெள்ளிவிழாக் கண்ட இக் கலைக்கோயில், இன்னும் பொன்விழா, வைரவிழா முதலிய விழாக்களைப் பெற்று வாழிய வையை மணலினும் பலவே என வாழ்த்துகின்றாம்.

அறிவுக்கோயில் வாழ்க!

[நாகை. திரு. த. சி. வேலன்]

கடவுளை அறிவின் வடிவாகக் கண்டார் வள்ளுவப் பெருந்தகை. எனவேதான் இறைவனை வாலறிவன் எனச் சுட்டிக் காட்டினார். கல்வியின் பயன் அறிவு, அறிவின் பயன் உணர்வு. அவ்வுணர்வினை—மெய்யறிவினைப் பெறுதலே இறைவனை அடைதல் எனல் மிகையாகாது. அஃதாவது மனிதன் தன்னிடத்தே படிப்படியாக இறைத் தன்மையை எய்துதல் வேண்டும். இதற்கு

எனவே, இறைவர்க்குக் கோயில் அமைக்கும் நாம், ஆங்காங்கே இறைத்தன்மையாகிய அறிவிற்கும் கோயில் அமைத்தல் வேண்டும். அஃதாவது நாட்டில் கலைக்கூடங்கள் பல அமைத்து, மக்களை மாக்கள் நிலையினின்றும் மாற்றும் அரும்பணியாகிய அறிவாலயப் பணியில் ஈடுபடல் வேண்டும். அஃதொன்றே கடவுளிலக்கணத்தை ஐயந்திரிபு அற உணர்ந்த அறிஞர் செயல். இம்முறையினை நடைமுறையில் கண்டு நனி நாகரிகராக விளங்குகின்றனர் மேலைநாட்டினர்.

அங்கே பலப்பல பல்கலைக்கழகங்கள், பலப்பல ஆராய்ச்சித் துறைகள், ஆராய்ச்சியே தவம் என்ற நிலை இன்னபிற வளர்ந்து வருவதை நாம் நாடோறும் காண்கிறோம், கேட்கிறோம்.

இத்தகு அறிவுப்பணியில் 'மேலைநாட்டினர்க்கு யாம் பின் வாங்கினோம் அல்லோம்' என்று சூள் உரைக்குமுறையால், இற்றைக்கு 25 ஆண்டுகட்கு முன்னர் தில்லைப்பதியில் 'அண்ணாமலைப் பல்கலைக்கழக' மென்னும் அறிவுக்கோயில் கண்டார் வள்ளல் அண்ணாமலைச் செட்டியார். இவ்வறிவுக்கோயிலின் வெள்ளிவிழாக் கண்டு களிக்கின்றேன். தமிழகத்தில் அறிவு ஒளி தோன்றிற்று; வெள்ளி முளைத்தது; இனி அறியாமையும் அதன் தொடர்பாக உள்ள தீமைகள் பலவும் அகலும் என்பதையே இவ் வெள்ளிவிழா உணர்த்துகிறது.

அண்ணாமலையார் அறிவுக்கோயில் கண்டதுபோல் பிற தமிழ்நாட்டுச் செல்வர்களும் அறிவுக்கோயில்கள் அமைத்து, உண்மைத் தெய்வத் திருப்பணி ஆற்றுவார்களாக. வாழ்க பல்கலைக்கழகம்.

புகழ் மொழிகள்

உயர்திரு. டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் அவர்கள்

இந்தியக் குடியரசுத் தலைவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழா நிகழும் இந்த நல்ல நாளில், என் உளமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன். முன்னேற்றக் கருத்துக்களும், ஆக்கும் ஆற்றலும் கலந்த வள்ளன்மைக்குத் தக்க எடுத்துக்காட்டாக இப் பல்கலைக் கழகம் விளங்குகின்றதென்பது என் கருத்து. கல்வித் துறையிலும், பொதுத்தொண்டிலும் புகழடைந்த பேரறிஞர்கள் தொடக்கத்திலிருந்தே இதற்குத் தொண்டாற்றி வந்திருக்கிறார்கள். மற்றைய கல்வி நிலையங்களை ஊக்குவிக்கும் நிலையில், மேலும் மேலும் வளர்ச்சியுற்றுள்ள இப் பல்கலைக் கழகம், அப் பெரியோர்களைத் தன்பால் ஈடுபடச் செய்திருப்பது வியப்பன்று.

இந்த எண்ணம் எவ்வாறு முதலில் தோன்றிற்று. இது நாளடைவில் எவ்வாறு உருப்பெற்றது, உயர்ந்த திட்டத்திற்கேற்ப எவ்வாறு நற்பயனை யடைந்தது என்பனவற்றை யெல்லாம் இவ் விழாவில் நன்றியறிவோடு நினைவு கூர்வது மிகப் பொருத்தமாகும். காலஞ் சென்ற ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்கட்குத் தமிழ்மக்கள் நன்றி பாராட்டும் கடப்பாடுடையர்; ஏனெனில், இவர்கள் கொண்ட பொதுநல ஆர்வமும், எதிர்காலத்தைப் பற்றிய தெளிந்த காட்சியும், தளரா உழைப்புமே மற்றெதற்கும் மேலாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்தன.

1929-ஆம் ஆண்டில், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவப் பெற்றது முதல் அது, எல்லாத் துறைகளிலும் மிக விரைவாக வளர்ச்சியடைந்திருக்கிறது. இன்று, இருபதுக்கு மேற்பட்ட துறைகளையும், நூற்றெழுபத்தைவருக்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்டு, உடனுறை தனிப் பல்கலைக் கழகமாக இது விளங்குகிறது. நான்கு ஆண்டுகள் இசைக்கல்வி பயிற்றும் வகுப்பை முதன் முதலில் தொடங்கிய சிறப்பு, இந்தியப் பல்கலைக் கழகங்களுக்குள் இதற்கே உரியதாகும். தமிழ் இலக்கியக் கல்விக்கும், தமிழ் ஆராய்ச்சிக்கும் தனித் துறைகளை இப் பல்கலைக் கழகம் வகுத்திருப்பது பொருத்தமே. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மேலும் மேலும் வளர்ந்து, நாட்டுக்குப் பயன் மிக்க தொண்டுகள் செய்வதாகுக.

கலைப்பெருங் கோயில் வாழ்க!

அண்ணா மலையரசன் ஆக்கு கலைக்கழகம்
விண்ணாரும் வெள்ளி விழாப்பெற்றுப்—பண்ணார்
இசைபெற ஓங்கும் இயலுடைமை யாலே
மிசையுலகில் வாழ்க மிளிர்ந்து.

—செல்லூர்க்கிழார்.

உயர்திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள்

இந்தியாவின் தலைமை அமைச்சர்.

கடந்த ஏப்பிரல் திங்களில் யான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்குச் சென்றதும், அப் பல்கலைக் கழகம், புதுமைக் கலைகளும், அறிவியலும் இணையப் பெற்றுத் தமிழ்ப் பண்பாட்டிற்கும், தமிழ்க் கல்விக்கும நிலைக்களமாகச் சிறந்து விளங்குவதை நான் கண்டதும் எனக்குப் பேரின்பம் தந்தது. இப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழா விரைவில் கொண்டாடப் பெற விருப்பதை அறிந்து நான் மகிழ்வெய்துகின்றேன். இவ்வமயத்தில் என் நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். இப் பல்கலைக் கழகம், எதிர்காலத்தில் எல்லா வகையிலும் வளர்ச்சியும், வெற்றியும் பெற வேண்டுமென்று விரும்புகிறேன்.

உயர்திரு. டாக்டர் ச. இராதாகிருஷ்ணன் அவர்கள்

இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருபத்தைந்து ஆண்டுகள் பயனுள்ள பணியாற்றி, அதன் வெள்ளி விழாக் கொண்டாடுவதை அறிந்து நான் மகிழ்வெய்துகின்றேன். இப் பல்கலைக் கழகத்தின் தோற்றத்திற்குக் காரணம், காலஞ்சென்ற ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் வள்ளன்மையேயாகும். அவர்களுக்குப் பின், அன்னார் மகனார் ராஜா முத்தையச் செட்டியார் அவர்கள், இப் பெருநிலையத்தின் வளர்ச்சியிலும், நலத்திலும் பேரூக்கம் காட்டி வருகின்றார்கள். இப் பல்கலைக் கழகம் புகழ்பெற்ற கலைஞர்களின் உறுதுணையைப் பல ஆண்டுகளாகப் பெற்றுத் தென்னிந்தியாவிற்குப் பெருமதிப்பிற்குரிய பணியாற்றி வந்திருக்கிறது. தென்னிந்திய ஆராய்ச்சிக்கு, சிறப்பாகத் தமிழ் ஆராய்ச்சிக்கு இப் பல்கலைக் கழக உறுப்பினர்கள் ஆற்றியிருக்கும் தொண்டுகள் மிகவும் போற்றத் தக்கனவாகும் இதன் ஆராய்ச்சித் துறைகளும், இசைப்பகுதியும் நாடு முழுதும் பெரும் புகழ் ஈட்டியுள்ளன. இவைகளிடத்தும் காணுவதற்கரியனவாகிய ஆற்றல், சோர்வின்மை, மன உறுதி ஆகியவற்றோடு இப்போது செயலாற்றிவரும் துணைவேந்தருக்கும் பல்கலைக்கழகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. இக் கலைக்கூடம் எதிர்காலத்தில் மேலும் மேலும் முன்னேற்றமடையவேண்டும் என்பது என் உளமார்ந்த வழிபாடாகும்.

உயர்திரு. ஸ்ரீ பிரகாசா அவர்கள்

கவர்னர், சென்னை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டமாகிய மகிழ்ச்சியும், மங்கலமும் நிறைந்த நல் வேளையில், என் உளம் நிறைந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் இதனோடு தொடர்பு கொண்டோர் அனைவருக்கும் புலப்படுத்துகின்றேன். இப் பல்கலைக் கழகம், தன் முன்னேற்றத்தில் இன்றியமையாத வளர்ச்சிநிலையை எய்திய நேரத்தில், அதன் வேந்தராக (Chancellor) இருக்கும் பேறு வாய்த்தமை குறித்து என் மகிழ்ச்சி மிகுகின்றது.

வள்ளன்மை சான்ற நன்கொடையாகிய இருபது லட்சம் வெண் பொற் காசுகளுடன், மூன்று கல்லூரிகளையும் அளித்த வள்ளலின் பெருங் கொடையைச் சென்னை அரசியலார், முற்பட்டு நன்றியறிதலுடன் ஏற்றுக்கொண்டபோது, 1929-ஆம் ஆண்டில், இந்த உடனுறை பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப் பெற்றது. உயர்நிலைக் கல்வி நலங் குறித்துப் பொதுநல உணர்ச்சியும், தாராள உள்ளமும் மிகுந்த பெருமக்கள் மேற்கொள்ளும் இத்தகைய முயற்சிகளுக்கு அரசினர் ஊக்கம் நல்க வேண்டும் என்பது, நன்கு உணரப்பெற்றது.

இப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இந் நன்னாளில் இக் கலைக் கழகத்துக்கு அடிப்படையாகிய உயர்ந்த உள்ளக்கிடக்கை வாய்ந்த, பெருந்தகையாளராகிய செட்டி நாட்டு ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களை நாம் நன்றியுணர்வோடும், பேரன்போடும் நினைக்கின்றோம். இக் கல்விக் கழகத்தின் நலத்தில் ராஜா அவர்களின் குடும்பத்தினர் நெருங்கிய பேரூக்கம் தொடர்ந்து காட்டி வருவது, மகிழ்ச்சிக்குரியதொரு செய்தியாகும். அதற்காக அவர்கள் நம்முடைய பாராட்டுதலையும், நன்றியையும் பெறுதற்கு உரியராவர். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக, பெரும் புகழ் வாய்ந்த பலர், இப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவியை ஏற்று, இதன் குறிக்கோளை உருவாக்கியுள்ளார்கள். அவர்களை இப் பல்கலைக் கழகம் தன்வயப்படுத்தி, அவர்களின் பாதுகாவலையும், நல்லெண்ணத்தையும் பெறுவதில் வெற்றிபெற இயன்றது குறித்து, நாம் பெருமிதம் கொள்கின்றோம்.

இப் பல்கலைக் கழகம், பொறுப்பாளர்களின் அறிவும், ஆற்றலும் சான்ற துணைமையில், தெற்கில் புகழ்வாய்ந்ததொரு திருப்பதியின் கண் ஓர் உண்மைக் கலைக்கோயிலாக விளங்கி, ‘ஊக்கமும் நன்னம்பிக்கையும்’ என்ற தன் குறிக்கோளுக்கு இணங்க, ஆடவருக்கும் மகளிருக்கும் நாட்டின் நல்வாழ்வின் ஏற்ற பங்கினை ஏற்கும் தகுதியை நிறைத்து அனுப்பும் என்பதில் ஐயமில்லை.

உயர்திரு. கே. காமராஜ் அவர்கள்

முதல் அமைச்சர், சென்னை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம், உண்மையிலேயே மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சியாகும். தமிழ் நாட்டின் தலைமகனார் இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தம் வள்ளன்மையால் இப் பல்கலைக்கழகத்தை நிறுவினார்கள். அதன் வாயிலாகப் புதுமைக் கலைகளுக்கும், அறிவியலுக்கும் ஒரு பெரு நிலையத்தை உண்டாக்கியதோடு மட்டுமன்றித் தமிழ்க்கல்விக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் ஒரு பெருங் கலைக்கூடத்தை அமைத்தார்கள். அதனால், அரசர் பெரு மகனார் தமிழ் நாட்டிற்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் பெரியதொரு பணியைச் செய்திருக்கிறார்கள்.

இப் பல்கலைக் கழகம், செட்டிநாட்டு அரசர் குடும்பத்தாரின் ஆதரவையும், தளரா உதவியையும்பெறும் பெரும் பேற்றைப் பெற்றுள்ளது. அக் குடும்பத்தில் இன்று மதிப்பிற்குரியவராகத் திகழும் தலைமகனார் இராசா சர். முத்தையச்செட்டியார் அவர்களும், அவர்கள் வழிவருவாரும்

தொடர்ந்து பல்கலைக் கழகத்தை ஆதரித்து, அதன் முன்னேற்றத்துக்கு வழிகாட்டி வருவார்களென்று உறுதியாக நம்புகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இந்த 25 ஆண்டுகளில், பயனுள்ள வகையில் பெரு வளர்ச்சி அடைந்திருப்பதும், இதை நிறுவியவர் விரும்பியவாறு நம் நாட்டுப் பெருங்கல்வி நிலையங்களில் ஒன்றெனத் திகழ்வதும், சென்னை மாநிலத்திலுள்ள நாமெல்லாம் பெருமிதம் கொண்டு இன்புறுதற்குரியன. இப் பல்கலைக் கழகம் இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமுள்ள மிகப் பெருங்கல்வி நிலையங்களை ஒத்த பெருஞ்சிறப்பைப் பெற்றிருப்பது பெருமைக்குரியது.

மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார், திவான்பகதூர் எஸ். இ. அரங்கநாதன், சர். கே. வி. ரெட்டி நாயுடு, திரு. எம். இரத்தின சாமி, டாக்டர் மணவாள ராமாநுஜம், டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார், சர். சி. பி. இராமசுவாமி ஐயர் ஆகிய பேரறிஞர்கள் வழிகாட்டிய பயனை இப் பல்கலைக்கழகம் பெற்றிருக்கிறது. ஆதலால், இப் பெரும் பல்கலைக்கழகம், ஆண்டால் இளையதெனினும், கல்வி, கலை ஆகிய துறைகளில் பிறர்க்கு எடுத்துக் காட்டாகத் தக்க உயர்ந்த நிலையை உருவாக்கிக்கொண்டிருப்பது வியப்பன்று. இப்பல்கலைக் கழகம், இந் நிலையைத் தொடர்ந்து மேற்கொண்டு, எதிர்காலத்தில் இதன் சீரிய தொண்டினால் மேலும் மேலும் வளர்ச்சிபெறும் என்பதில் ஐயமில்லை.

இப் பல்கலைக் கழகம், அறிவொளி பரப்பிப் பல்லூழி காலம் நம் மக்களுக்குத் தொண்டு புரிவதாகுக.

உயர்திரு. ராசா சர். முத்தையச் செட்டியார் அவர்கள்

இணைவேந்தர் (Pro-Chancellor) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அதன் வாழ்விலே சிறந்தவொரு நிலையை எய்தியுள்ள இந் நன்னாளில், இப் பல்கலைக் கழக வளர்ச்சிக்குத் துணைபுரிந்த எல்லோருக்கும் எனது பெருநன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன். இதன் வெள்ளிவிழாவை நாம் இப்போது கொண்டாடுவது, உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய தொன்றும். இவ் விழா நிகழ்ச்சிகளில் பங்குபெறுவது என் தூய கடமையாகும். இப் பல்கலைக் கழகம், தொடக்கத்திலிருந்து சென்னை மாநில அரசியலாரிடமிருந்தும், இந்திய அரசியலாரிடமிருந்தும் இனிய ஆதரவையும் அன்பார்ந்த பேணுதலையும் பெற்று வந்துள்ளது. பேரறிஞரெனப் பெரும் புகழ் பெற்றவர்களை ஒருவர் பின் ஒருவராய்த் துணைவேந்தர்களாக அடைந்த நிகரற்ற பேறு இதற்கு உண்டு. இக் கழக வளர்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாடுடைய, திறமைவாய்ந்த பற்பல பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் கடந்த 25 ஆண்டுகளாக இங்கே பணியாற்றி வந்திருக்கிறார்கள். இப் பல்கலைக் கழகத்தை நிறுவியருளிய என் மதிப்பிற்குரிய தந்தையார் டாக்டர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் தலையாய குறிக்கோளை இது நிறைவேற்றி, இந் நாட்டு மக்களின் அன்பு நிறைந்த உள்ளங்களில் நிலையான இடம் பெற்றுவிட்டது. இப் பல்கலைக்கழகம் பயன்மிக்க தொண்டுகள் பலவற்றைத் தொடர்ந்து

ஆற்றிவர அருள்புரியும் வண்ணம் இறைவனை உளமார வழிபடுகின்றேன்.

உயர்திரு. டாக்டர் சர். சி. பி. இராமசுவாமி ஐயர் அவர்கள்

துணைவேந்தர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.

1955-ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 9-ஆம் நாளில், ஆழ்ந்து அகன்ற புலமையுடையவராகிய மேன்மை தங்கிய மைசூர் மகாராஜா அவர்கள், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சிகட்குத் தலைமை தாங்குவார்கள். எதிர்காலத்தைப் பற்றிய தெளிந்த காட்சியுடைய வள்ளல், ராஜா சர். அண்ணுமலைச் செட்டியார் அவர்கள், தோற்றுவித்த இப் பல்கலைக் கழகத்தை, அன்னாரின் மைந்தரும், அவர்களின் நற்செயல்களை யெல்லாம் தொடர்ந்து செய்து வருகின்றவர்களும் ஆகிய ராஜா சர். முத்தையச் செட்டியார் அவர்கள் கண்ணும் கருத்துமாகப் பேணி வருகிறார்கள். கடந்த ஈராண்டுகளாக இதன் துணை வேந்தராகப் பணியாற்றி வருவதால், நேரிற் கண்டறிந்த யான், இச் சிறந்த பல்கலைக்கழகத்தின் சூழ்நிலையையும், வளர்ச்சிக்குரிய வாய்ப்புக்களையும் பற்றிக் கூறுதற்கு உரிமையுடையேன்.

நகரத்தின் ஆரவாரத்துக்கும், ஆடம்பரத்துக்கும், மனத்தைக் குலைக்கும் கவர்ச்சிகளுக்கும் மிக அப்பாற்பட்டு, அமைதியான சிற்றூர்ச் சூழ்நிலையில் அமைந்திருப்பது, இப் பல்கலைக் கழகத்தின் தனிச்சிறப்பாகும். இத்தகைய சூழ்நிலை, உடனுறை பல்கலைக் கழகத்திற்கு மிக இன்றியமையாதது. கலை, அறிவியல், பொறியியல் முதலிய பல துறைகளிலும் இப் பல்கலைக் கழகம் உயர்ந்த, புதிய பயிற்சியளிக்க வேண்டுமென்பது பல்கலைக் கழகம் நிறுவியவர்களின் உறுதியான நோக்கமாகும். மேலும், பயில வேண்டிய ஆங்கிலம், வடமொழி இவற்றின் வளர்ச்சி குறையாத முறையில், சிறப்பாகத் தமிழ்ப்பண்பாட்டின் எல்லாப் பகுதிகளையும் பற்றிய கல்வியையும், ஆராய்ச்சியையும், வளர்க்க வேண்டுமென்றும் அவர்கள் விரும்பினார்கள். அவர்களது இந்த எண்ணம் பெரும்பாலும் நிறைவேறியிருக்கிறது. இப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் உழைப்பின் பயனாகக் குறிப்பிடத்தக்க பல நூல்கள், வெளிவந்திருப்பது இதற்குச் சான்றாகும்.

தலைசிறந்த பயிற்சியையும், அதற்கு வேண்டிய கருவிகளையும் பெருக்க வேண்டுமென்ற கொள்கையை மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார் முதல், எனக்கு முன்பிருந்த டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் வரை பதவியிலிருந்த துணைவேந்தர்கள் கடைப்பிடித்து வந்திருக்கின்றனர். கல்வியோடு நில்லாமல், மாணவர் இல்லங்கள், விளையாட்டிடங்கள், சமூக வாழ்வின் பல துறைகள் ஆகியவைபற்றிய நிகழ்ச்சிகளும் இங்கே நன்கு அமைந்துள்ளன. சுற்றியிருக்கும் சிற்றூர்களில் உள்ள உழவர் குடும்பத்தாருடனும், மற்றையோருடனும் மாணவர்கள் தொடர்புகொண்டு செயலாற்றுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இப் புதிய முயற்சி முதன் முதலாக, இப் பல்கலைக்கழகத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. இதன் பயனாக காடு, நகரம், பாமரர், படித்தவர் ஆகியோரிடையுள்ள தீமையை விளைக்கும் பிளவுகள் நீங்கும் என்று நம்பலாம்.

இவ் வெள்ளிவிழாவின்போது, பல்கலைக்கழகம் இதுவரை செய்து முடித்த செயல்களை மட்டும் கணக்கிட்டுவிட்டு அமைந்துவிட லாகாது; எதிர்காலத்திற்கும் விரிவான திட்டம் வகுக்க வேண்டும். மாணவர் அனைவர்க்கும் உடல்நலம் தருவதாய் உள்ள போதிய உறை விடம் அளிக்காத கல்விநிலையம், உடனுறை பல்கலைக்கழகம் ஆகாது. பன்னிருவருக்கு மேற்படாத மாணவர்களுடன் பழகி, அவர்களுக்கு அறிவுத்துறையிலே தோன்றும் ஆர்வத்தையும், அவர்களது உள்ளத்தே எழும் இன்னல்களையும் கவனித்துப் பொறுப்பேற்கும் ஆசிரியரின் கண்காணிப்பின்றேல், மாணவரில்ல வாழ்வு, பயனற்றுவிடும். அறி விற்கும், ஒழுக்கத்திற்கும் வித்திட்டு, அவற்றை ஒருங்கு வளர்க்க உத வும் சிறந்த நூல் நிலையமும், பட்டி மன்றமும் இருந்தால்தான் மேற் சொன்ன 'கண்காணிப்பு முறை' செவ்வனே நடைபெற முடியும்.

மேற்கூறிய தேவைகளை விரைந்து பெறுதல் வேண்டும்; அப் பொழுதுதான் ஆசிரியர்-மாணவர் ஒருமைப்பாடு வளரும்; இப்போது நிலவிவரும் ஏமாற்றமும் ஒழியும். இதற்கு இயற்கையான கட்டுப்பாடு இன்றியமையாதது. மேற்கூறிய நோக்கங்கள் நிறைவேறுதவரை இயற்கையான கட்டுப்பாடு அமையாது. வளர்ச்சி அனைத்துக்கும் வேண்டிய அடிப்படையானவை இப் பல்கலைக்கழகத்தில் நிறைந் திருக்கின்றன. இந் நிலையத்தின் முன்னேற்றத்துக்குப் பொறுப்பேற்ற வர்களிடையே நட்பும், ஒத்துழைப்பும் வளர வேண்டும். பாராட்டி ஊக்குவிக்கும் பொதுமக்களின் ஆதரவு, இப் பல்கலைக்கழகத்துக்கு இன்றியமையாதது. பொதுமக்களுடன் எளிமையாகப் பழகுகின்ற வர்களும், உயர்ந்த நோக்கம் உடையவர்களும் ஆகிய எதிர்காலத் தலை வர்களைத் தோற்றுவித்தற்குரியது, சீரிய முறையில் அமைந்த உயர்தரக் கல்வியே.

திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கள்

தமிழ் நாட்டின் தமிழ்ப் பல்கலைக் கழகமாக இருந்து தமிழருக்கும் தமிழுக்கும், தமிழ்நாகரிகத்திற்கும் அரண்செய்து வரும் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா நிகழ இருப்பதறிந்து மகிழ் வெய்துகின்றோம். விழா இனிதே நிறைவேறுவதாக.

தமிழகத்தின் வரலாற்றில் பல்கலைக் கழகங்கள் பல இருந்ததாகத் தெரிகிறது. சிறப்பாக உலகில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத காலத்தில் தாய் மொழித் துறையில் பல்கலைக் கழகம் வைத்து மொழி யையும் மொழியின் உயிரோட்டமான பண்பாட்டையும் வளர்த்த பெருமை பழந் தமிழருக்கே உரியது. தமிழச்சங்கங்கள் என்று, தமிழர்களால் பாராட்டப்பெறும் சங்கங்களெல்லாம் பண்டு பல்கலைக் கழகங்களாகவே இருந்தன. அப் பல்கலைக் கழகங்கள் தமிழை வளர்த்த தோடு மாத்திரமன்றி உலகநாகரிகத்திற்கு அடிப்படையான கருத்துக் களை வழங்குகின்ற சிறந்த இலக்கியங்களையும் படைத்துக் கொடுத்தன.

அந்த மரபின் வழி வந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்ற ஆண்டுகளில் ஆற்றிய பணியையும், இனி எதிர்கால நலம் நோக்கி ஆற்ற இருக்கும் திருப்பணிகளையும் நினைந்து உள்ளம் நிறைந்த உவகை யோடு இப் பல்கலைக் கழகத்தின் தந்தை, செட்டி நாட்டரசர் அவர் களைப் பாராட்டுகின்றோம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்குத் தமிழன்னையின் திருவடிகளை வந்தித்து வாழ்த்துகின்றோம்.

உயர்திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.,

தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

கலைக்கோயில் வாழ்க.

தமிழ்நாட்டில் எல்லையற்ற பெருமை வாய்ந்தது தில்லையம்பதி. கோயில் என்ற பொதுப்பெயரைத் தனக்கே உரிய சிறப்புப் பெயர் ஆக்கிக்கொண்டது தில்லைச் சிற்றம்பலம். இத்தகைய பெருமை சான்ற தில்லையின் எல்லையில், எண்ணும் எழுத்தும் உள்ளவரை அழியாத கலை ஞானக்கோயிலை நிறுவி, ஆன்ற புகழ் பெற்றார் அண்ணாமலை அரசர். அவர் பெயரால் அமைந்த பல்கலைக் கழகம் சிறப்பு வகையில் தமிழ்க் கலைகளை ஆதரித்து வளர்க்கும் செழுங்கலைக் கோயிலாகத் திகழ்கின்றது. இருபத்தைந்து ஆண்டுகளாகத் தகவுடையோர் உள்ளத்தில் வீற்றிருக்கும் தகைசான்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இவ்வாண்டில் வெள்ளி விழா நிகழ்த்தும் பேறுபெற்றது. இந்த விழாவில் பல்கலைக் கழகத்தைக் கண்ணினைக் காக்கும் இமைபோல் பாதுகாத்து வளர்த்த அண்ணாமலை வள்ளலின் சீர்மையைப் பாட்டாலும் உரையாலும் பாராட்டி நன்றி செலுத்துவர் நல்லறிஞர்.

இக் கலைக் கோயிலில் ஆறாண்டுகள் சேவை செய்யும் பேறு எனக்குக் கிடைத்தது. முத்தமிழ்க் கலைகளும் முறையாகச் செழித்துத் தழைத்து வாழ்தல் வேண்டும் என்னும் அடிப்படையான நோக்கத்தைக் கொண்டு இப் பல்கலைக்கழகத்தின் புரவலரும், புலவர்களும் இடையறாப் பணி புரிந்து வருகின்றனர். தமிழ்மொழியை விருப்பப் பாடமாகக் கொண்டு பி. ஏ. ஆனர்ஸ் என்னும் கலைப் பட்டம் பெறுதற்குரிய திட்டத்தை முதல் முதல் வகுத்து உதவிய பெருமை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கே உரியதாகும். தாய் மொழி ஒன்றையே ஆழமாகக் கற்றுத் திறமான புலமைபெறக் கருதும் மாணவர்க்குப் பொருள் கொடுத்து ஊக்குவிக்கும் சிறப்பும் இப் பல்கலைக் கழகத்திற்கே உரியதாகும். மேலும் தமிழகத்தில் தலைசிறந்த அறிஞர்களாகத் திகழும் புலவர் பெருமக்களை ஆசிரியர்களாக ஏற்றுத் தமிழ்மாணவர்க்குக் கலை விருந்தளிக்கும் பெருமையும் இப் பல்கலைக்கழகத்தையே சாரும். முன்னாளில் மூன்றுகவடாய் முளைத்தெழுந்த தமிழின் நீர்மையை உணர்த்தும் வகையில், இந் நாளில் மூன்று தமிழ்ப் பேராசிரியர்களைக் கொண்டு தமிழ் வளர்ப்பதும் இப் பல்கலைக்கழகமேயாகும். இவ்வாறு பல்லாற்றானும் பணி செய்து தமிழகத்தின் தண்ணொளியாய்த் திகழும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், எல்லையற்ற காலம் தில்லைப்பெருமான் திருவருளால் இனிது வாழ்க.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.



லம்பு ௨௯ திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௬, மாசி பரல் ௭
மார்ச், 1955.

பரிபாடல்

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பென ஆசிரியர் தொல்காப்பியனாரால் பாராட்டப்பெறும் நம் தமிழகத்தில் பண்டைக்காலம், கலையும் காட்சியும், ஆடலும் பாடலும், அன்பும் இன்பும் களிநடம் புரிந்தன. அவ்வுயரிய காலத்தில் தோன்றிய நூல்கள் பல. அவையிற்றுள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் தலைசிறந்தன

எட்டுத்தொகை நூலுள் ஒன்றாயது **பரிபாடல்** அது, அகம் புறம் ஆய இருவகைப் பொருள்களையும் அகத்தீடாகக் கொண்டு மிளிரும் நூலாகும். இதன்கண் திருமால், செவ்வேள் ஆய இறைவழிபாட்டுக் கூறுகளும், வையை யாற்றின் மாண் பெருவளனும், மாடமதுரையின் மாண்பும் கிளந்தெடுத்துரைப்பதாகும். இவைகளைக் கூறுமுகத்தான நந்தமிழ்நாட்டின் ஆடவர் பெண்டிர் காதற் பண்பும், வீர மேம்பாடும், அறத்தின் திறமும், நாட்டின் இயற்கைக் காட்சிகளும், நீர் நிலவளங்களும், ம் கண்டின்புற தெளித்துரைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் எழுச்சி, கலையின் மேம்பாட்டால் நிலைபெறுவதாம். அக்காலம் எல்லாக் கலைகளிலும் நர்டு வீறுகொண்டு நின்றதால், நந்தமிழகம் எக்கழுத்தங்கொண்டு நின்றது. அதனை எடுத்துக்காட்டற்கு மாநாடுகள் கூட்டி விளக்கியுரைத்துக் காட்டுதலே ஏற்ற கருவியாகும்.

இதனைக் குறிக்கோளாகக் கொண்டு சில்லாண்டுகளாகத் தொடங்கி அகநானூறு புறநானூறு முதலிய ஆறு இலக்கியச் சொற்பொழிவுகளும், அரசியலறிவு, தமிழக வரலாறு போன்ற

வரலாற்றுச் சொற்பொழிவுகளும் நூண்மாண் நுழைபுலஞ் சான்ற ஆசிரியப் பெருமக்களால் ஆற்றப்பெற்றுத் தொடர்பாக அவ்வப்பெயர்களால் நூலகள் அவ்வப்போது வெளிப்போந் துள்ளமை தமிழுலகமக்கள் யாவரும் நன்கறிந்தவொன்றும்.

அவ்வாறே இவ்வாண்டு பரிபாடற் சிறப்புப்பற்றி அறிஞர் பெருமக்களைச் சொற்பொழிவாற்றச் செய்து அவைகளைத் தொகுத்துத் தனிநூலாக்கி 'பரிபாடல் சொற்பொழிகள்' என்னும் பெயரால் தமிழகத்தில் நிலவ வெளியிட்டுள்ளோம்.

இப் பரிபாடல் மாநாடு தருமை அருள்பெறு நெல்லை அருணகிரி இசைக்கழகத்தின் ஒன்பதாம் தமிழ்த் திருவிழா நிகழ்ச்சியின்போது இராவ்சாகிபு திருவாளர் கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் சீரிய தலைமையில் 27-2-'55 இல் நிகழ்வுற் றது. கழக ஆட்சிப்பொறுப்பாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை யவர்கள் யாவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார்கள். அப்பால் இம் மாநாட்டைத் தொடங்கிவைத்த திரு. தி. சுந்தரஞ் செட்டியார், பி. காம். அவர்கள், நம் தமிழ்மொழியின் சிறப்புக்

"உலக மொழிகளில் காலத்தால் முற்பட்டவை மிகச் சில. அவைகளில் இன்றளவும் பேச்சுவழக்கில் இருப்பன, சீன மொழியும் தமிழ்மொழியுமே யாகும்; நாம், நமது நாகரிகத் திலும், மொழியிலும் பழமையுடையோம் என்பதை யுணர்ந்து ஒவ்வொரு தமிழனும் பெருமிதம் கொள்ளவேண்டும்," என்று குறிப்பிட்டுவிட்டு, "பரிபாடல் என்பது அகப்பொருளும் புறப் பொருளும் பற்றிய நூலாகும்.........எட்டுத்தொகை நூல்களுள் பரிபாடல் பாண்டியர்க்குச் சிறப்பாக அமைந்திருக்கின்றது. பரிபாடலில் திருமாலைப்பற்றிய பாடல்களில் அப் பெருமா னுடைய பலவகை அவதாரங்கள் சிறப்பித்துப் பேசப்படு கின்றன. அன்பர் மனத்தில் கொண்டனவன்றி இறைவன் தனக்கென்று ஒரு வடிவமுடையவன் அல்லன் என்ற உண்மையை நான்காம்பாடல் விளக்குகின்றது. முருகப் பெருமான் சிவபெருமானின் திருமகன் என்பதும் அவனைப் பற்றிய புராணச்செய்திகள் பலவும் பரிபாடலில் குறிக்கப் பட்டுள்ளன. அப்பெருமானை வழிபட்ட மாசற்ற மனமுடைய பெரியோர்கள் அவனிடம் 'யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமுமல்ல, நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்று' என்று இவ்வாறு வேண்டும்தன்மை நம்மிடம் வளர்தல் வேண்டும்," என்று கூறி முடித்தார்.

ரு. கு. அருணாசலக் கவுண்டரவர்கள் தம் தலைமை ல் பரிபாடல்கள் மொத்தம் எழுபது பாக்களில்

தற்போது இருபத்திரண்டுதான் கிடைத்திருக்கின்றதென்றும், முற்காலத்தில் இப் பரிபாடலைப் பண்ணோடு பாடினார்களென்றும், இன்று இதனுடைய பண் என்னவென்று தெரிந்து கொள்ளாத நிலையில் நாடு இருக்கிறதென்றும், பழந்தமிழ்மக்கள் சமய உணர்ச்சியில் திளைத்திருந்தவர்கள் என்ற உண்மையை பரிபாடல்களின் மூலம் அறியலாமென்றுங் கூறினார்.

பின்னர்ச் சொற்பொழிவு ஆசிரியர்கள், பரிபாடற் சொற்பொழிவுகளைத் தாம் தாம் எடுத்துக்கொண்ட நூலில் நுவன்ற பொருள்கள் குறித்து அரிய பேருரை நிகழ்த்தினர். திரு. ந. சேதுரகுநாதன் அவர்கள் முதலாவது திருமால் என்னும் பகுதியில் வந்துள்ள பரிபாடலின் அரிய நுண்கருத்துக்களைத் தாம் ஆய்ந்துகண்ட முறைமைப்படி தெள்ளத்தெளிய விளக்கிப் பேசினர். அப்பால் திரு. சா. கணபதி முதலியார் அவர்கள் செவ்வேள் என்னும் பகுதியில் வந்துள்ள பரிபாடற் பாட்டின் நயங்கெழுமிய பொருள்களை விளக்கி இன்புறப்பேசிமுடித்தனர். பின்னர் திரு. அ. க. நவநீதகிருட்டிணன் அவர்கள் வையைப் பகுதியில் வந்துள்ள பரிபாடற் பாட்டின் சீர்மை நிரம்பிய கருத்துக்களை இனிமையுடன் கூறி அவையோரை மகிழ்வித்தனர். பிறகு திரு கு. பரமசிவன் அவர்கள் மதுரை யென்னும் பகுதிக்கண் அமைந்துள்ள மதுரை மாநகரின் சிறப்பியல்களையும் நகரமாந்தர் அறமுதலிய பண்புகளின் நலஞ்சான்ற பகுதிகளையும் பிற நூற்சான்றுகளுடன் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்ப் பேசி இன்பக்கடலாட்டினர். இரவு 9-30 மணிக்குமேல் இன்னிசை நிகழ்ச்சி, நாடக நிகழ்ச்சிகளைக் கழக அன்பர்கள் நிகழ்த்த, விழா இன்புடன் நிறைவேறியது.

தமிழகத்தில் தமிழ் இலக்கியச் செல்வங்கள் பெருகுதற்கு அரிய தொண்டாற்றுவோர், நெல்லை அருணகிரி இசைக் கழகத்தாராவர். அவர்கள் கடந்த ஆண்டுகளில் (4-2-52) இல் 'அரசியலறிவு' என்னும் சொற்பொழிவு நூலும், (23-1-54 முதல் 28-1-54), வரை மூன்றுநாட் சொற்பொழிகளில் ஒன்றாகத் 'தமிழக வரலாறு' என்னும் நூலும் வெளிவரத் துணைபுரிந்தனர். மேற்படி இசைக்கழகத்தார் அரிய தொண்டின் பெருமை பாராட்டுக்குரியது.

இன்னும் இன்னனபோன்ற இலக்கியங்களை நாடு நன்குணர்ந்து தெளிந்து பயன்பெற ஆண்டுகள்தோறும் சொற்பொழிவுகள் வாயிலாக அவைகளை வெளிக்கொணர எல்லாம் வல்ல முழுமுதல் ஒருவனாகிய இறை சிவபெருமான் தண்ணருள் பெருகுவதாக.

சோமசுந்தர பாரதியாருக்குப் பாராட்டு

பண்டைக்கால நம தமிழகத்தில முடியுடை மூவரும், குறுநிலமன்னரும், வள்ளல்களும், தமிழ்ப்பெரும் புலவர்பெருமக்களைப் பாராட்டிச் சிறப்புச் செய்தனர். சான்ருகச் சோழமன்னன் கரிகாற்பெருவளத்தான் கடியலூர் உருத்திரங்கண்ணனுரைப் பெருமைப்படுத்தியதும், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் மாங்குடி மருதனுர்பாற் பெருமதிப்பு வைத்து நடந்த வரலாறும், சேரமான் கணைக்காலிரும்பொறை யென்னும் சேரவேந்தன் மிக்க பேரன்புகொண்டு முரசுகட்டிலில் தூங்கிய மோசிகீரனுருக்குச் சிவிறிகொண்டு வீசிய வரலாறும் பிறவும் அக்காலம் மன்னர்கள் புலவர்களைப் பாராட்டி மேன்மைப்படுத்தியமைக்குச் சான்று தருவனவாம்.

தமிழகம் பண்டைப் பண்பாடு குன்றி வேற்றுநாட்டினர்க்குக் கீழ் அடிமையானபின் அரசர்களின்மையால் அப்பணியைக் குறுநில மன்னர்களிற் சிலரும் செல்வர்களும் கலைக்கழகங்களும் பட்டங்கள் பலவளித்துப் புலவர்களைப் பாராட்டுவ

அம்முறையில் நாவலர் திரு. ச. சோமசுந்தர பாரதியாரவர்கட்கு அண்ணுமலைப் பல்கலைக் கழக வெள்ளிவிழா 9-2-55-இல் நிகழ்ந்தபோது டாக்டர் என்னும் பட்டமளித்துப் பேரறிஞர்கள் பலர் வாழ்த்துதற்கிடையே பாராட்டியது. இப்பட்டம் பெற்றமைக்கு மகிழ்ந்து பாராட்ட அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்மன்றம், தமிழ் இலக்கியக் கழகம் ஆகியவற்றின் சார்பில் 28-2-'55 இல் அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் இணைவேந்தர் இராசா சர். முத்தையச் செட்டியாரவர்கள் தலைமையில் கூட்டம் கூடியது. விழாவிற்கு மன்ற உறுப்பினர்களும், நீதிபதிகளும், புலவர் பெருமக்களும், மாணவ மாணவிகளும் பெருந்திரளாகக் குழுமியிருந்தனர். பேராசிரியர் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரவர்கள்

வப் பேசினர்கள்.

கடவுள் வாழ்த்துக்குப் பிறகு பல சங்கங்களின் சார்பில் முத்தையச் செட்டியா ரவர்கட்கும், **நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியா** ரவர்கட்கும் பல வாழ்த்துரைகள் படித்தளிக்கப் பெற்றன. பின்னர் முத்தையச் செட்டியாரவர்கள் விழாவுக்குத் தலைமைதாங்கித் திரு. பாரதியாரவர்களின் அரிய தமிழ்த்

தொண்டினையும், அவர்களின் ஆற்றலையும் பற்றிப் பெருமை பெறப் பாராட்டிப் பேசிச் சங்கங்களின் சார்பாகப் பொன்னாடை போர்த்துப் பெருமைப்படுத்தினார்கள்.

அப்பால் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், பேராசிரியர் . ரா. பி. சேதுப்பிள்ளை, திரு. சு. இராமசாமி நாயுடு முதலியோர் நாவலர் டாக்டர் பாரதியாரின் தமிழ் ஆய்வுப் புல நலத்தையும், நாவீறுபடைத்த சொற்செல்வப் பண்பையும், பிற பண்புகளையும் பலபடப் பாராட்டிப் பேசினர். அதுகாலை விழாவுக்குக் குழுமியிருந்த மக்கள் பேராரவாரஞ் செய்து தம் மகிழ்வை வெளிப்படுத்தினர்.

பின்னர்ப் பாரதியாரவர்கள் தமக்குப் பொன்னாடை போர்த்துச் சிறப்புச் செய்தமை குறித்துப் பேசுங்கால், தமக்குச் செய்த சிறப்பு தமிழ்மொழியிடத்தில் தமிழகத்தவர் கொண்டுள்ள பேரன்பையே குறிப்பதாகுமென்றும், தமிழுக்கும் நாட்டுக்கும் தம்மால் இயன்றவரை உழைப்பதையே தம் கடமையாகக் கொண்டுள்ளதாகவும், தமிழ் ஆட்சிமொழியாகி எல்லாச் செயல்களும் தமிழிலேயே நடைபெறற்கான வழி வகைகளைக் காணவேண்டுமென்றும் தெள்ளத்தெளிய விளக்க முறக் கூறினர்.

அப்பால வித்துவான திரு. மு. அருணாசலம் அவர்கள நன்றிகூறியபின் நாட்டு வாழ்த்துடன் விழா முடிவுற்றது.

பெரியோர் தூதுகள்

திரு. கா. கணபதி

பண்டு சுந்தரர் பேரில் கொண்ட
மண்டு பேரன்பால் பரவை மனைக்கு
அண்டர் முதல்வன் இறைவ னாரும்
கொண்ட வினையை முடித்த தூதும்
எண்டிசை புகழும் பாண்டவர்க் காகக்
கொண்டல் வண்ணன் சென்ற தூதும்
மண்டல மக்கள் மாசுகள் அகல
இலண்டன் ஏகிய காந்தியின் தூதும்
விண்டலப் புகழில் விரிந்து கலந்து
தண்டமிழ்ப் புகழாய்த் தழைக்கு மன்றே.

விஞ்ஞானச் செல்வி

இராசேசுவரி அம்மையார் பிரிவு

அன்று பாரதியார் ஒரு காட்சியைக் கண்டு நடுநடுங்கினர்; 'புத்தம்புதிய கலைகள் மெத்த வளருது மேற்கே, சொல்லவும் கூடுவதில்லை அதைச் சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை' என்று ஓர் பேதை கூறிய புன்சொல்லுக்காக. அப் புதிய கலையே விஞ்ஞானமெனப் பெயரிய நுண்கலை. அக்கலையை எட்டுத்திக்குஞ் சென்று கொணருமாறு தன் மக்களைக் கூவித் தமிழ்த்தாய் வேண்டுவதாகப் பாரதியார் பகர்ந்தார்.



பாரதி நடுக்கங்கொண்ட விஞ்ஞானக் கலையை அணுவின் கதை முதலிய அரிய கட்டுரைகளால் எழுதித் தமிழில் கொணரமுடியும் என்று காட்டிவந்தவர், கலையரசி ஈ. த. இராசேசுவரியம்மையாரவர்கள்.

இவ்வம்மையாரவர்கள் 1-3-55-ஆம் நாள் செவ்வாய்க் கிழமை இரவு இறைவன் திருவடிப் பேறுற்றார். இவர்களின் பேரிழப்பு ஈடுசெய்யவொண்ணாததாகும். இவர்கள் கடந்த இருபான் ஆண்டுகளாகக் கல்வித்துறையில்—அதினும் தமிழ்த் துறைக்கு அரிய சிரிய தொண்டுகள் பல ஆற்றியுள்ளனர். இவர்கள் இராணிக்கல்லூரியில் விஞ்ஞானப்பேராசிரியராகத் தொண்டு புரிந்தாலும் தமிழ்இலக்கியச் சுவையில் பெரிதும் பேரார்வம் மிக்கவர்; அதில் சிறந்த ஆற்றலும் நுணுகிய அறிவும் வாய்ந்தவர்.

'சூரியன்' என்பது அம்மையாரவர்கள் எழுதிய முதல் விஞ்ஞான நூல். இந்த நூல் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பெற்றது. இது பி. ஏ. பயிலுதற்குப் பாடப்புத்தகமாகப் பலமுறை தென்னாட்டுப் பல்கலைக்கழகங்களில் வழங்கியது. 'பலூன்' என்பது விளையாட்டுச் சிறுவர் விளையாடுதற்குப் பயன்படும் உருண்டை. இதைக் குறித்து 'வானக் குமிழி' என்ற தலைப்பில் மூன்று பகுதிகளாக எழுதினார்கள். வானக்

கப்பல் (Airship, Aeroplane) என்பவற்றைப் பற்றி ஒரு நூல் வெளியிட்டார்கள். வானக்குமிழியும் பி. ஏ. பாடமாக அமைந்தது. ஆசிரியக் கல்லூரியில் இவர்கள்
புள்ளம்' என்ற நூலெழுதி வெளியிட்டார்கள்.
மாநில அரசியலார் பரிசும், சென்னைப் பல்கலைக்கழகத்தார் பரிசும் பெற்றது. 'ஐன்ஸ்டைன் கண்ட காட்சி' என்னும் அரிய நூல் இவர்களால் எழுதப்பெற்றது. 'பரமாணுப் புராணம்' என்பது இவர்கள் இயற்றிய மற்றொரு விஞ்ஞான நூல். இதில் அணுவின் ஆற்றலையும், அதனை அறிய வந்த மக்களின் வரலாற்றையும் விளக்குகின்றது. புராணம் போல் இதனை எளிமையில் உணர்த்துகின்றார். தருமபுர ஆதீனத்தார் இதனை வெளியிட்டு அம்மையாருக்கு விஞ்ஞானச்செல்வி என்ற பட்டமும் வழங்கியுள்ளனர். இந்நூலைப் பாராட்டி டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள் முன்னுரை வழங்கியுள்ளனர். இன்னன போன்ற பல அரிய நூல்களை எழுதித் தமிழ்த்தாய்க்குப் புத்தணியாகப்
ளனர்.

அம்மையார் சொல்லின் செல்வியாவர்; கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப எண்பொருளவாகச் செலச்சொல்லும் ஒண்மையராவர்.

அம்மையாரவர்கள் விஞ்ஞானக் கலையில் மேம்பட்டவராயினும், சமயத்துறையில்—அதிலும் சிறந்த சைவசமயத்துறையில் உறைத்துநின்ற மேதகையோருமாவர். சைவசித்தாந்தத்தை நன்கு கற்றுத் தேறியவர்; அதில் ஆழ்ந்த கருத்துக்களை அவ்வப்போது வெளியிட்டுள்ளனர்; சைவசித்தாந்த மகா சமாசத்தில் அம்மையார் ஆற்றிய சொற்பொழிவுகளைப் பாராட்டாதார் இல்லை.

அம்மையார் சிந்தாதிரிப்பேட்டை நடுத்தரப்பள்ளிச் சங்கத்தின் துணைத்தலைவர்; சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றைத் திறம்பட நடத்த உதவியவர்; இவர்கள் பெண்மைக் குலத்துக்கு முதன்மணியாகத் திகழ்ந்தார்கள். சங்க காலப் பெண்மணிகள் போலக் கல்வியறிவோடு போாற்றல் படைத்த மேதகையோருமாவர். இவர், தம் இளம்பருவ காலத்தே மறைந்தது ஆற்றொணு வருத்தத்திற்குரிய வொன்றும்.

இவ் அம்மையாரவர்கள் தம் நாற்பத்தெட்டாம் அகவையில் இவ்வுலக வாழ்வை நீத்தகன்றார்கள். இவர்கள் பிரிவுகுறித்து மிக இரங்கி வருந்துகின்றோம். இவர்கள் நெடும் பிரிவுக்கு வருந்திப் புன்கணுறும் இவர்கள் உறவினர்க்கு எம் வருத்தத்தை ஒருமை மனமுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அம்மையாரின் ஆருயிர், எல்லாம் வல்ல இறை தெண்ணிலா மலர்ந்த வேணியன் திருவடி இன்பிற்றிளைத்து இன்புறுவதாக.

அம்மையார் வாழ்க்கைக் குறிப்பு

1906-ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் 18-ஆம் நாள் திரு. ஈ. ந. தணிகாசல முதலியாரவர்கட்கு இரண்டாவது புதல்வியாகப் பிறந்தார்.

முறையாகக் கல்வி பயின்று ஆங்கில மொழியில் எம். ஏ. பட்டம் பெற்றார்.

வெல்லிங்டன் பெருமாட்டி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பி. டி. பட்டம் பெற்றார்.

1932-இல் மேரி அரசியார் கல்லூரியில் விஞ்ஞானத் துணைச் சொற்பொழிவாளராக அமர்ந்தார்.

1946-இல் வெல்லிங்டன் பெருமாட்டி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் விஞ்ஞானச் சொற்பொழிவாளராகச் சென்றார்.

1953-இல் மேரி அரசியார் கல்லூரியில் பௌதிகத் துறைத் தலைவராகப் பணிபுரிந்துவந்தார்.

1-3-1955-இல் மறைந்தார்.

இரங்கற்பா

கல்விக் கடலே சொல்லின் செல்வீ!
பல்கலை தேர்ந்த பண்புறும் அம்மே!
தமிழே கண்ணுய்த் தமிழே மூச்சாய்த்
தமிழே நினைவாய்த் தயங்கிய தாயே!
பெண்மையாம் உடற்குப் பிறங்கும் உயிரே!
எண்மையாய் அரும்பொருள் இசைக்கும் ஆற்றலோய்!
விஞ்ஞா னக்கலை வித்தே! தமிழ்நிலத்
திஞ்ஞான் றருஞ்செயல் இயற்றிய மணியே!
மாணவ ருலகும் மாண்புளோர் உலகும்
நீணெடுந் துன்புற நீத்திவ் வுலகைத்
தமிழைத் தணவாச் சைவவான் நெறியை
அமிழ்தென இனிக்கும் அருங்கலை வைப்பினை
எங்ஙனம் மறந்து சென்றீர் நீரே!
அங்குணம் படைத்த அன்புடை அன்னே!
இராசே சுவரி யெனும்பெயர் கொண்ட
பராவரும் புகழ்மிகு பண்புள அம்மையே!

—**செல்லூர்க்கிழார்.**

தமிழகத்தில் தமிழ்நிலை

[திரு. ஔவை, சு. துரைசாமிபிள்ளை]

நமது பாரதநாட்டில் மக்களாட்சி அமைதியுடன் நிலவுகிறது. நிலவுலக முழுதிலுமுள்ள நாடுகளை நோக்கின் பெரும்பான்மை மக்களாட்சியில் இருந்துதான் மாண்புறுகின்றன. அவ்வகையில் நமதுநாடு மக்களாட்சியால் சிறப்பெய்துவதில் வியப்பு இல்லை. மேலும் நாம் மேற்கொண்டிருக்கும் மக்களாட்சிமுறை உலகில் இல்லாத புதிய ஆட்சிமுறையும் அன்று.

நமதுநாடு நிலப்பரப்பாலும் மக்கள் தொகையாலும் நம்மைச் சூழவுள்ள நாடுகள் பலவற்றினும் பெரியது. முப்பது கோடிக்குமேல் நம்நாட்டில் மக்கள் வாழ்கின்றனர். அவர்களில் கற்றவர்தொகை நூற்றுக்குப் பத்துப்பேர்க்குமேல் இல்லையென்பது உண்மை. இந்தப் பத்துப்பேரிலும் தாம் நினைத்ததைப் பிறர்க்கு எழுதிக்காட்டவோ தெளிவாகச் சொல்லவோ தெரிந்தவர் ஐந்துபேர்கூட இல்லை. மற்றைத் தொண்ணூற்றைந்துபேரும் நல்ல கல்வி யில்லாதவராகும். ஆனால், அவர்கள் அனைவரும் நம் மக்களாட்சியின் உறுப்பினர். கல்வியுடைய மிகச் சிலரே மக்கள் ஆட்சியின் செயல்வகைகளையும் விளையும் நன்மைகளையும் பகுத்துணரக்கூடிய நிலையில் உள்ளனர்; இவர்களே ஆட்சி யிருக்கையில்இருந்து ஆட்சி செய்கின்றனர். நூற்றுக்குத் தொண்ணூற்றைந்துபேர் அச்சிலரால் ஆளப்படுகின்றனர். இது பற்றியே கல்வியுடைய ஒருசிலரால் கல்லாத பெரும்பான்மையோரை ஆளுவது நம் நாட்டு இன்றைய மக்கள் ஆட்சியின் மாண்பாக இருக்கிறது என்ற குறையும் கூறப்படுகிறது.

நாட்டுமக்கள் அனைவரும் நாட்டு ஆட்சியின் உறுப்பினராக இருப்பதால் அவர்கள் அனைவரும் "நல்ல" கல்வியுடையவர்களாக இருத்தல்வேண்டும். அப்பொழுதுதான் மக்களது ஆட்சி அசைக்கமுடியாத பேராற்றலும் பெருவலியும் உடையதாய்ப் பெருமைபெற முடியும். அந்தக் காலம்தான் மக்கள் ஆட்சியின் பொற்காலமாகும். அந்தக்காலம் விரைவில் வரச்செய்வதே மக்களாட்சியின் குறிக்கோள். "பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும், கொல்குறும்பும் இல்லது நாடு" என்று திருவள்ளுவர் கூறுவர். கல்லாத மக்கள் பெருகியிருக்கும் நாட்டில் பல்குழுவும் உட்பகையும் கொல்குறும்பும் உண்டாதற்கு வாய்ப்புக்கள் உண்டு. கல்லாத மக்களை இக் குழுக்களின் கொள்கைகள் விரைவில் தமக்குத் துணையாக்கிக் கொள்

ளும். அதன் விளைவாக நாடு அமைதியிழந்து அல்லலுறும். அதனால் நாட்டுமக்கள் அனைவரையும் நல்ல கல்வியுடைய மக்களாக்குவது ஆட்சியின் குறிக்கோளாக இருக்கிறது. மக்கள் ஆட்சி சிறந்து விளங்குதற்கு அது பெரிய பாதுகாப்பும் வலியுமாகும்.

முப்பதுகோடி மக்களைக்கொண்ட நமது நாட்டில் மூந்நூறுக்கு மேற்பட்ட மொழிகள் நிலவுகின்றன என்று மொழியறிஞர் கூறுகின்றனர். ஓராயிரம் ஈராயிரம் மக்கள் பேசும் மொழிகளை விலக்கினால் பல நூறாயிரக்கணக்கில் பேசுபவர்களைக்கொண்ட மொழிகள் மிகச் சிலவேயாகும். அவற்றைக் கொண்டே தமிழ்நாடு, ஆந்திரநாடு, கேரளநாடு, கன்னடநாடு, மராட்டியநாடு, குசராத்திநாடு எனப் பெயர்தாங்கிய உள்நாடுகள் பல நமது பாரதநாட்டில் உள்ளன. அவற்றில் வாழ்பவரும் முறையே தமிழர், ஆந்திரர், கேரளர், கன்னடர், மராட்டியர், குசராத்தியர் என்று குறிக்கப்படுகின்றனர். இந்த உண்ணாடுகள் நமது பாரதப் பெருநிலத்துக்கு உறுப்புக்கள். இந்த உறுப்புக்களின் அறிவுவன்மையால்தான் பாரதப் பேரரசு வன்மையுற்றுத் திகழவேண்டி யிருக்கிறது. இவ் வுண்ணாடுகள் கல்வியால் வன்மை பெற்றாலன்றி நமது பாரதப் பேரரசுக்கு உய்தியில்லை என்பதை யாவரும் தெளிவாக வுணரவேண்டும். தமிழர், ஆந்திரர், கேரளர் எனப்படும் பலரும் தத்தம் பகுதியிலுள்ள மக்கள் நல்ல கல்வியுடையவராக வேண்டும் என்ற கருத்தும் அதனைச் செயற்படுத்துவதில் கண்ணாகவும் இருக்கும் கடமையுடையவராகின்றார்கள்.

மக்களாட்சி நிலவும் பிற நாடுகளிலும் இப்படிக் கல்லாதவர் பலரும் கற்றவர் சிலருமாகத்தான் மக்கள் வாழ்கின்றார்களோ என்று ஓர் ஐயம் உண்டாகலாம் இதனை ஆராய்ந்தால் அவ்வாறு இல்லை என்று கூறவேண்டும். கல்லாதவர் பெருகியிருந்த நாடுகள் சில, மக்கள் ஆட்சிமுறை பெற்ற சிறிதுகாலத்தில் கற்றவர் தொகையைப் பெருவாரியாகப் பெருக்கிவிட்டன. அந்த நாடுகளிலும் அமைதியான வாழ்க்கை இல்லாமையால் அந்த நிலையும் ஏற்பட்டதேயன்றி வேறில்லை. நமது பாரதநாட்டில் சென்ற இருநூறு ஆண்டுகட்கு மேலாக அமைதியான வாழ்க்கையே நிலவியிருந்தது. ஆயினும், மக்களிடையே கல்வியில்லாமை என்ற இருள் நன்றாகப் பரந்து மூடிக்கொண்டது. இதற்குக் காரணம் வேற்றுநாட்டவரின் ஆட்சி என்று கூறலாம். வேற்றவரான ஆங்கிலராட்சியில் அமைதி நிலவியது உண்மை; ஆனால் நல்ல கல்வியறிவு பெறுவதற்கேற்ற வாய்ப்புக்கள் குறைவாக இருந்தன. பெருக்கவேண்டும் என்ற எண்ணம் அரசியலார்க்கும்

கல்விபெற்றிருந்த சில பொதுமக்களுக்கும்
"தான்வாழ ஏனோர் தனக்கடிமை யாக எனும், ஊன அறிவே" அந்நாளில் ஓங்கியிருந்தது. வாழ்ந்தாரை வாழ்விக்கவும் வீழ்ந்தாரை மீளாவறுமையில் வீழ்விக்கவுமே அக்காலச் சூழ்நிலை இடம் தந்துகொண்டிருந்தது.

ஆங்கில ஆட்சியில்தானே கலாசாலைகள் பலவும் கல்லூரிகள் பலவும் தோன்றிக் கல்விப்பணி புரிந்தன; நாட்டுப் புறங்களிலும் நகரங்களிலும் மக்கட்குக் கல்வி தரப்படாமல் இல்லையே என்றொரு கேள்வி இங்கே எழும். கல்வி ஓரளவு தரப்பட்டதுண்டு; ஆயினும் அக்கல்வி நாட்டு மக்களிடையே பரவி அறிவு பெருகுதற்கேற்ற வகையில் நடைபெறவில்லை. நான் யார்? என்னைச் சூழவுள்ளவர் யார்? அவர்கட்கும் எனக்குமுள்ள தொடர்பு யாது? என் வாழ்வு அவர்கட்கும் இந்நாட்டுக்கும் எவ்வகைத் தொடர்பில் இயங்குகிறது? உலக மக்களிடையே என் நாட்டுமக்கள் எந்தநிலையில் உள்ளனர்? என்பனபோலும் அறிவை வளர்த்துப் பயன்பட வாழ்விக்கும் வகையில் அறிவு தோன்றவில்லை. கற்பவர் உள்ளத்தில் நல்லறிவு தோன்றி மக்கட்கு நலம்புரிதற்கேற்ற வளர்ச்சி யுண்டு பண்ணக்கூடிய மொழியில் கல்வி கற்பிக்கப்படவில்லை. ஆட்சி புரிந்த ஆங்கிலேயர் நாட்டில் தங்களது ஆட்சி அமைதியான முறையில் நடைபெறுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அரசியல், நீதி, வாணிகம், போக்குவரவு முதலிய எல்லாத் துறைகளிலும் ஆங்கிலேயரே தலைமையேற்று நின்று, எல்லாச் செயல்முறைகளையும் தங்கள் ஆங்கிலமொழியிலேயே நடத்தினர். அவர்கட்குக் கீழேயிருந்து அவர்க்கு வேண்டியவற்றைச் செய்தற்கேற்ற எழுத்தாளர்களே அவர்கட்குத் தேவைப்பட்டனர். அவர்களை உண்டுபண்ணுவதே அவர்களது கல்விப்பணியின் கருத்தும் நோக்கமுமாக இருந்தன. மக்களின் எதிர்கால நல்வாழ்வு கருதி அவர்கள் வழங்கும் மொழியிலேயே கல்வியறிவு பெறுவிக்கக் கருதாது, தங்கள் நலமொன்றையே கருதித் தங்கட்கு என்றும் அரசியலடிமைகளாய் மக்களை மாற்றி அவர்கள் உள்ளத்தில் அவர்தம் நாடு மொழி கலை பண்பாடுகளை மறந்து ஆங்கில மாக்களாக்குவதே கல்வி நோக்கமாகக் கொண்டனர். அதனால், நாட்டுமொழிகளை மூலையில் ஒதுக்கித் தங்கள் ஆங்கிலமொழிக்கே முதலிடம் தந்து கல்வி தருவாராயினர்.

ஆங்கிலர் ஆட்சியில் வேறொரு சூழ்நிலை தோன்றுவதாயிற்று. வேறு வேறு மொழி வழங்கும் நாட்டுப் பகுதிகளைத் தங்கள் வசதிக்கேற்பச் சேர்த்து ஒருநாடாக்கி ஆட்சிபுரிய ய சூழ்நிலை வந்தது. சென்னை மாநாட்டில் ஆந்திரர்,

கன்னடர், கேரளர், தமிழர் ஆகிய பலரும் ஒருங்கிருந்து ஆளப்படவேண்டியவ ராயினர். அவர்களிடையே மொழிப் பூசல் தோன்றி அமைதியைக் குலைக்காவண்ணம், அவர்கட்கு வேறான ஆங்கிலமொழியை அவர்களிடையே புகுத்தி நிலவவிட வேண்டியது இன்றியமையாததாயிற்று. ஆதலால், ஆங்கில மொழியால் அரசியல் நடக்கவேண்டிய நிலைமை உறுதிபெறுவ தாயிற்று.

அரசியல் ஆட்சி வகையில் நம் நாட்டுமக்கள் அறியாமல் மறைமுகமாகச் சில செயல்முறைகளை ஆங்கிலமக்கள் மேற் கொண்டிருந்தனர். அவர்கள் நம்நாட்டுக்கு வந்ததே வாணிகஞ் செய்து ஊதியம் பெறுவதற்காக ஆதலால், ஆட்சி வகையிலும் ஊதியங்கண்டு, ஆளப்படும் மக்கட்குத் தெரியாமல் அதனைத் தங்கள் நாட்டுக்குக் கொண்டுசெல்லும் வழக்கமுடையரா யிருந் தனர். அதற்கேற்ற சூழ்ச்சிகளை மக்கள் தெரியாமல் தடுப்ப தற்கு மக்களுக்கும் அரசியலுக்கும் இடையே ஆங்கிலமொழி ஓர் அழகிய இரும்புத் திரையாகப் பயன்பட்டது. ஆங்கிலமொழியை நாட்டில் புகுத்துவது வேண்டிய தொன்றா யிற்று.

அமைதியாக வாழ்ந்த மக்கள் அரசியலுக்கும் தங்கட்கும் இடையே ஆங்கிலமொழி திரையாக இருப்பதை நீக்கி, தங்கள் மொழியில் ஆட்சி நடக்கவேண்டுமென்று கேட்கலாமே எனில், ஆங்கிலம் எல்லார்க்கும் பொதுவாக உளது என்ற கருத்து நாட்டவர்களில் ஒருசிலர்க்கு உண்டாயிற்று. பெரும்பாலோர் வேறுவகையில் பழகிவந்தவர்கள். ஆங்கிலர் ஆட்சி வருமுன் தமிழர், ஆந்திரர், கன்னடர் ஆகிய பலரும் வேந்தர் செய்யும் முடியாட்சியின்கீழ் வாழ்ந்து வந்தவர். வேந்தனிடத்தில் குறை வேண்டுதலும் முறை வேண்டுதலுமாகிய இரண்டுமே நாட்டுக் குடிமக்கள் செய்துகொள்வது வழக்கம். நாட்டாட்சியில் தங்கட்குப் பங்குண்டு என்பது அவர்கட்குத் தெரியாது. செய்து கொண்ட குறை நீங்குவதும், முறை பெறுவதுமே அவர்கட்கு வேண்டியன. அவை கிடைத்துவிடின், குடிமக்கள் அமைந்து விடுவது வழக்கம். கல்வியுடையவர்கள் அரசியலில் ஏதாவ தொரு சேவகம் பெற்று அதன் வாயிலாகப் பொருள்பெற்றுத் தம் வயிற்றைக் கழுவுவதே வாழ்வின் குறிக்கோளாகக் கருதினர். ஆங்கிலக்கல்வி பெற்றோருள் பெரும்பாலோர் வெள்ளைத்துரைக்கு மகிழ்ச்சி யுண்டுபண்ணி அவர் விரும்பிப் பாராட்டும் சிறந்த அடிமையாக வாழ்வதே உயிர்வாழ்க்கையின் ஊதியமாகக் கருதினர்.

(தொடரும்)

"பழுத்த புலமைப் பசும்பாவலர்"*

[பேராசிரியர் கா. பொ. இரத்தினம். எம்.ஏ. பி.ஓ.எல்.]

பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து பேரா இயற்கைப் பெரும் பேறு எய்திய துன்பச் செய்தியினை அன்பர்கள் யாவரும் இது வரையில் அறிந்திருப்பார்கள் ; ஆற்றொணாத் துயரில் மூழ்கியும் இருப்பார்கள். "தமிழ் தமிழ்" என உயிர்த்த புலவர் மணியை—'தமிழன்னைக்கு இன்னும் பல தொண்டுகள் செய்தற்காகவே உடல் நலம் பெற விரும்புகிறேன்' என்றுரைத்த பண்டிதமணியைப் பறிகொடுத்து விட்டோம்! பைந்தமிழ்ப் பாடல்களும், அமிழ்தனைய விரிவுரைகளும், ஆராய்ச்சிப் பேருரைகளும் நல்கித் தமிழ்த்தாயை வளம்படுத்திய செந்தமிழ்க்கொண்டல் மறைந்து விட்டது! என்னே! எம் தவக்குறைவு!

'இவ்வுலகிலே பொறுத்தற்கரிய துயர், பெரும் புலவனுடைய பிரிவுதான்' எனப் பாடிய திருவாய் இப்பொழுது ஓய்ந்து விட்டது! அப்பாட்டுத் தீட்டிக் காட்டிய பெருந்துயருக்கு நாம் ஆளாகித் தவிக்கின்றோம். தம் பாட்டுக்குத் தம்பிரிவினையே உதாரணமாக்கிவிட்டு அவர் போய் விட்டார். எமது உள்ளத்திலுள்ள துயருக்கு உருவங்கொடுக்கத் தக்கது அப்பாட்டின் ஒரு பகுதியே யாதலின் அதனை இப்பொழுது படிப்போம்.

சேஎ யிழந்த தாயினும் சேய்தன்
தாஅ யிழந்த தகையினுங் கொழுநனை
இழந்த பெண்டினும், விழைந்த பெண்டினை
இழந்த கொழுநற்கு இயைபெருந் துன்பினும்
பூவலய மெல்லாம் பொதுவறப் புரக்குமொரு
காவலன் பிரிந்த காசினிக் கவல்வினும்
பாவலன் பிரிந்த பரிவுறு பிரிவே
ஆற்றற் கரிய அருந்துயர் என்ப............"

இதனை அவர் இருபது ஆண்டுகட்கு முன் எனது வேண்டுகோட் கிசைந்து பாடினார். இதனுடைய உண்மையினை இன்று யாம் அனுபவத்தில் அறிகிறோம். பிறந்தவர் இறத்தல் இவ்வுலக இயற்கையே எனினும் இவ்வளவு விரைவாக, அறுபத்தைந்தாண்டு வாழ்வுடன் அவர் எம்மை விட்டுப் பிரிந்து விடுவார் என்று யாம் எண்ணவில்லை ; எதிர்பார்க்கவுமில்லை.

---

*17-12-54—இல் பாரதியாருடைய ஈமக்கடன்கள் நடந்த ஞான்று கொழும்பு வானொலி நிலையத்திற் பேசியது.

அவர் மறைவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர்த்தான் அவரைக் கொழும்பிலே அவருடைய மருகருடைய இல்லத்திற் சந்தித்தேன். அந்தச் சந்திப்புத்தான் கடைசிச் சந்திப்பு என்பதை அப்பொழுது யான் அறியேன். ஆனால் அதுவே கடைசிச் சந்திப்பாகி விட்டது என்பதை இப்பொழுது நினைக்க நினைக்க உள்ளம் உருகுகிறது.

வித்துவான் தண்டபாணி தேசிகரும் தினகரன் ஆசிரியரும் அவரைக் காணுதற்கு என்னுடன் அன்று வந்தார்கள். பண்டித மணி அவர்களுடைய உடலிற் சிறிது வாட்டங் காணப்பட்டதெனினும் உள்ளத்திலும் உரையிலும் சோர்வு காணப்படவில்லை. வழக்கம் போலத் தமக்குரிய தனிமுறையில் ஆர்வமை ததும்ப உரையாடினார். உடல் நலம் சிறிது குறைந்த நிலையிலும் அவர்தம் உள்ளத்தின் ஊக்கங்கண்டு மகிழ்ந்தேம். "உடற்பிணி முழுதும் நீங்கி உமையருளை வேண்டி நிற்கிறேன். இன்னுந் தமிழ்த்தாய்க்குத் தொண்டுகள் பல செய்தற்கு விரும்புகிறேன்" என்று உவகையுடன் கூறினார். பின்னர்த் திருவாசகம் பற்றிய உரையாடல் நிகழ்ந்தது. உள்ளங்கனிய ஊன் கரைய அழுதுதான் பேரின்பம் பெறலாம் என்ற உண்மையை விளக்கினார். "அழுதால் வினையேன் உனைப் பெறலாமே" எனும் மணிவாசகத்தையும் நினைப்பூட்டினார்.

தமிழின்பத்திலே திளைத்துச் செம்மாந்திருக்கும் பெரும் புலவர்கள் இவ்வுலகிலே எதனையும் பொருட்படுத்த மாட்டார்கள்; எதற்கும் அடிபணிய மாட்டார்கள்; அவர்களுடைய உள்ளமும் உரையும் வீறுபடைத்து விளங்கும். இத்தகைய பெரும் புலவர்கள் "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் எனினும் வேண்டேன்" என்று பாடுவார்கள். இத்தகையவர்களுடைய பெருமிதமும் தமிழ்ப்பற்றும் உடையவர் நம் பாரதியார். "யான் மீண்டும் தமிழ்நாட்டிலே தமிழ் மகனாகப் பிறந்து தமிழுக்குத் தொண்டுசெய்யவே விரும்புகிறேன்" என்று அவர் அன்று எமக்குக் கூறினார். இம்மையிலன்றி மறுமையிலும் தமிழ்ப்பணி செய்ய விரும்பிய தமிழ்ச் சான்றோராகிய அவரைப் போல் இனி யாரைக் காணல் முடியும்?

பழமையும் பண்பும் பாராட்டி மகிழ்வதிலும் பாரதியாருக்கு நிகரானவர்களைக் காணுதல் முடியாது. பழந்தமிழ்ப் பண்பாடும், பழுத்த புலமையும், அழுத்தமான தமிழ்ப்பற்றும், உள்ளக்கிளர்ச்சியும் உடைய அவருடன் உரையாடுவதில் ஒருதனி இன்பம் உண்டு. அவருடைய உரையாடலில் உள்ளத்தொளி வீசும்; அதனைக் கேட்கக்கேட்க உள்ளந் தளிர்க்கும்; உயிருந்

தளிர்க்கும்; தமது உரையாடலினால் ஒரு புது உலகத்துக்கு அவர் அன்பர்களை அழைத்துச் சென்று விடுவார்; அந்த உலகத்திலே தமிழ்த்தாய் தனி அரசியாகக் காட்சி தருவாள்; தமிழின் பெருமையை மறந்து அதனைப் போற்றாத மக்களையுங் கூடத் தமிழ்த்தொண்டர்களாகவுந் தமிழ்ப் பத்தர்களாகவும் ்கும் ஆற்றல் வாய்ந்தது அவர் தம் உரையாடல்.

உரையாடலின் சிறப்புக்கு அவருடைய உள்ளமே காரணமாகும். அது தமிழ் உள்ளம்; கனிந்த உள்ளம்; கற்பனை வளம் நிறைந்த உள்ளம்; நல்லதை இனியதை உயர்ந்ததைக் கண்டு போற்றி மகிழும் உள்ளம்; தமிழ்ப் புலமை எப்பொழுதும் ஊற்றெடுக்கும் உள்ளம்.

தமிழ்நூல்களைப் புலமைத்துறை முற்றிய நல்லாசிரியர்களிடம் முறையாகக் கற்றுத் தேர்ந்த அவரிடம் இயற்கையாகவே புலமையும் அமைந்திருந்தது; மதிவளமும் நிறைந்திருந்தது. "விதி முறையிற் கலைபயின்ற வெண்ணெய்க் கண்ணன் மிக்க மதிவலி படைத்த வீரன்" என்று அவரைப் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் பாடியது மிகப் பொருத்தமாகப் அமைந்துளது.

"பாடிப்பாடிப் படிவ முற்றுருகி
உணர்ச்சியே உருப்பட் டொளிரும்
பழுத்த புலமைப் பசும் பாவலர்"

எனப் பாரதியார் பாடியுள்ளார். தமது உள்ள—உணர்ச்சிப் பெருக்கினையே அவர் இவ்வாறு தீட்டிக் காட்டினார். பழுத்த புலமைப் பசும் பாவலர் என, அவரையே தமிழ் கூறு நல்லுலகம் போற்றுகிறது. அகராதிகளைப் புரட்டிச் சொற்களைத் திரட்டிப் பாடும் பாவலர்களும், கொச்சைத் தமிழில் அச்சமின்றிப் பாடும் கவிஞர்களும் மலிந்த இக்காலத்தில், பாரதியார் அவர்கள் உணர்ச்சிப் பெருக்கா லுந்தப்பட்டு இனிய தமிழில்—என்றுமுள தென்றமிழில்—பல பாடல்களைப் பாடித் தமிழினை வளம்படுத்தியுள்ளார். அவர்கள் இயற்றிய செழுங்கதிர்ச் செல்வத்திலுள்ள பாடல் ஒன்று அவருடைய பாடல் வேட்கையை நன்கு விளக்குகிறது.

பறவைப் பார்ப்பு முன்வரவைப் பார்த்து மகிழச் செஞ்சிறுவாய்
நிறையப் புகலும் பாட்டெல்லாம் நெறியே வந்தென் செவிப்புகுந்தும்
நறவு பழுத்த செந்தமிழால் நானோ பாடா திருந்திடுவேன்?
கறவை கன்றூட் டுங்காலங் காட்டி வருக!

இந்தப் பாட்டிலே அவர் கூறியபடி நறவு பழுத்த செழுந்தமிழால் அவர் பாடிய பாடல்கள் பன்னயங்களுடன் மிளிர்கின்றன.

சங்கச் சான்றோர் தம் செய்யுள்களோடு ஒப்ப வைத்து எண்ணப் படும் தகைமை சான்ற செய்யுள்களைக் கொண்ட உலகியல் விளக் கம் எனும் நூல் அவருடைய பழுத்த தமிழ்ப்புலமைக்கு மாத் திரமன்றிச் சங்கத் தமிழ்ப்பயிற்சிக்கும் எடுத்துக் காட்டாக விளங்குகிறது. இந்நூலினை விபுலாநந்த அடிகளாரே பதிப் பித்துளார் எனின், இதன் பெருமையைப் பற்றி மேலுங் கூறல் வேண்டுமா! புத்திளஞ்செங்கதிர், செழுங்கதிர்ச்செல்வம் முதலிய வற்றுடன் பல தனிப்பாடல்களையும் அவர் இயற்றித் தமிழினைச் செழிக்கச் செய்துளார்.

திருவாசகத்துக்கு அவர் எழுதி வெளியிட்ட ஆராய்ச்சிப் பேருரை, மிகப்பெரிய தொரு தமிழ்ப்பணியாகும். திருவாசகத் துக்குப் பேரறிஞர் பலர் உரை எழுதி யுள்ளனர். எனினும் முழு நூலுக்கும் சிறந்த முறையில் உரை எழுதிப் பணச் செலவையும் பொருட்படுத்தாமல், வெளிப்படுத்திய தனிப் பெருமை பாரதி யார் அவர்களுக்கே உரியது. அவருடைய பன்னூற் பயிற்சி, ஆராய்ச்சித்திறன், புலமைச் சிறப்பு, சைவசித்தாந்த நுண் ணறிவு, கட்டுரைவன்மை முதலியவற்றை இவ்வுரை நன்கு காட்டுகிறதெனு அறிஞர்கள் கூறுகிறார்கள். அவருடைய இப் பெருந்தொண்டினைப் பாராட்டிப் பொன்னுடை போர்த்து மகிழக் கொழும்பு மாநகரிலுள்ள அன்பர்கள் பலர் முயன் றார்கள். ஆனல், அவரோ என்றும் நிலைத்த புகழாடையினைப் போர்த்துக் கொண்டார்.

தமிழ்த் தாயிடத்தும் தமிழ்ப் புலவர்களிடத்தும் அவர் அளவில்லாத அன்புடையவர். தமிழ் மொழியிற் கொண்ட பெருங் காதலினுல் தமது பெயரை (நவநீத கிருஷ்ண பாரதி) **மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனுர்** எனத் தனித்தமிழில் மாற்றி அமைத்தார்.

தமிழாசிரியராகப் பல ஆண்டுகள் கடமையாற்றித் தமிழறி ஞர்கள் பலரை நம் நாட்டுக்கு நல்கியுள்ளார். இராமநாதன் கல் லூரியும், பரமேசுவரக் கல்லூரியும் அவர்தம் தொடர்பினுலே தமிழ்வளம் பெற்றுயர்ந்தன. மதுரைத் தமிழ்ச்சங்கம், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் முதலியவற்றின் வளர்ச்சி கருதியும உழைத்தார். தம் கட்டுரைகளினுலும் விரிவுரைகளினுலும் தமிழ் உணர்ச்சியை ஊட்டித் தமிழ் மக்களை விழிப்படையச் செய்த பெருந்தகை யாளராகவும் அவர் விளங்கி ஞர். வளர்க அவர் எழுப்பிய தமிழுணர்ச்சி! வாழ்க அவர் புகழ்!!

மறைவுற்ற தமிழ் நூல்கள்

[மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி]

(சிலம்பு: உக, பரல்: ங, உஙகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

111. பல்சந்த மாலை

பல்சந்தமாலை என்னும் நூலிலிருந்து சில செய்யுள்களைக் களவியற் காரிகை யுரையாசிரியர் மேற்கோள் காட்டுகிறார். இதனால் இப் பெயரையுடைய நூல் ஒன்றிருந்தது என்பது தெரிகிறது. பாண்டிநாட்டிலே காயற்பட்டினத்திலே இருந்த ஒரு முகமதியப் பிரபுவின்மீது பாடப்பட்டது இந்நூல். இது அகப்பொருள் இலக்கிய நூல். களவியற் காரிகைப் பதிப்பாசிரியர் இந்நூலைப்பற்றிக் கூறுவது வருமாறு:

"பல்சந்தமாலை யென்ற பெயரையுடைய நூல் சில செய்திகளைப் புலப்படுத்துகின்றது. பன்னிரு பாட்டியலிற் பல்சந்தமாலை யென்றொரு பிரபந்தவகை கூறப்பட்டுள்ளது. இந்நூல் அப்பிரபந்த வகையைச் சார்ந்ததாக இருத்தல் கூடும். ஆனால் இதன்கணின்று களவியற்காரிகை யுரையிற் காட்டப்படுவனவெல்லாம் கலித்துறைச் செய்யுட்களே இந்நூல் வச்சிரநாட்டு வகுதாபுரியில் அரசு புரிந்து வந்த அஞ்சுவன்னத்தவர் மரபினராகிய ஓர் முகமதிய மன்னனைக் குறித்துப் பாடப் பெற்றதாகும். வகுதாபுரியை இக்காலத்திற் காயற்பட்டினம் என வழங்குவர்......................வகுதாபுரிக்கு 'அந்துபார்' எனவொரு பெயரும் இருத்தல் வேண்டும் என்பது ஒரு செய்யுளால் புலப்படும்."

பல்சந்தமாலை இயற்றிய ஆசிரியர் பெயர், காலம் முதலியன தெரியவில்லை. பல்சந்தமாலையிலிருந்து எட்டுச் செய்யுள்கள் களவியற்காரிகையுரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. அச் செய்யுள்கள் இவை:

கலைமதி வாய்மைக் கலுழ்பா வழிவருங் கற்பமைந்த
தலைமைய ரேழ்பெருந் தோங்க மும்பெற்ற நாதசச
மலையனமா மதில் வச்சிர நாடன்ன வாணுதறன்
முலையிணை தோய்ந்ததெல் லாங்கன வேயென்று
முன்னுவனே. 1

நாட்டம் புதைக்கின்ற தென்னீ மடந்தை நவகண்டமே
வீட்டம் புகழ்வின்னன் மேவா ரெனவிங்ஙன் யான்வருந்த
வாட்டம் பயின்றுங் ககிலின் குழம்பணிந் தாகமெங்கும்
வேட்டந் தெரிகின்ற கொங்கைக ளென்னை மிகைசெய்தவே. 2

கருதா மரைமலர் சூழ்வாவி சூழ்வச்ர நாடர்தங்கள்
வருதா புரியன்ன வாணுத லீர்மற்ற வார்தழையு
மிருநாண் மலர்களுங் கொண்மின்கள் கொள்ளா விடின்மதுவந்
தொருகாம னேங்கணை யாலெம தாவி துவக்குண்ணுமே. 3

செம்முக மானதர் செங்குங்கு மப்புயர் சீர்சிறந்த
மைம்மலி வாசப் பொழில்வாய் மதியன்ன வாணுதலீர்
மும்மத மாரி பொழியப் பொழிமுகில் போல்முழங்கிக்
கைம்மலை தான்வரக் கண்டதுண் டோநும் கடிபுனத்தே. 4

இயவன ராசன் கலுபதி தாழுத லெண்ண வந்தோர்
அயன்மிகு தானைய ரஞ்சுவன் னத்தவ ரஞ்சலென்னுக்
கயவர்கள் வாழ்பதி போலத் தினைப்புனங் காய்கொய்துபோம்
பயன்விளை வாம்படி பூத்தது வேங்கை பணிமொழியே. 5

பிறையார் நறுநுதற் பேதைதன் காரணத் தாற்பெரும
மறைநா ளிரவில் வருவது நீயொழி வச்சிரநாட்
டிறையா கியகலு பாமுத லானவர் யானைகணின்
றறைவாரும் விஞ்சத் தடவிகள் சூழு மணிவரையே. 6

வானது நாணக் கொடையா லுவகை வளர்த்தருளும்
சோனகர் வாழுஞ் செழும்பொழில் சூழ்ந்து பாரனையா
டானணி வாணுதல் கண்டும் பகலே தனித்தனியே
மானமி லாதிரை தேரும் பறவைக டாமழகழிந்தே. 7

வில்லார் நுதலியு நீயுமின் றேசென்று மேவுதிர்கு
தெல்லா முணர்ந்தவ ரேழ்பெருந் தாங்கத் தியவனர்க
ளல்லா வெனவந்து சத்தியுநந தாரவகை தொழுகுஞ்சீர்
நல்லார் பயிலும் பழனங்கள் சூழ்தரு நாட்டகமே. 8

112. செயிற்றியம்

செயிற்றியம் என்னும் பெயருள்ள நாடகத் தமிழ் இலக்கண நூல் ஒன்று இருந்தது என்பது சிலப்பதிகார அரும்பொருளுரையாசிரியர், அடியார்க்கு நல்லார், இளம்பூரண அடிகள், பேராசிரியர், யாப்பருங்கல விருத்தியுரைகாரர் ஆகிய உரையாசிரியர்களின் உரைகளினால் தெரிகிறது. செயிற்றியனார் என்னும் புலவர் செய்த நூலாகலின் இதற்குச் செயிற்றியம் என்னும் பெயர் உண்டாயிற்று. இந்நூல் அடியார்க்கு நல்லார் காலத்திலேயே மறைந்துவிட்டது. என்னை?

"நாடகத் தமிழ் நூலாகிய பரதம் அகத்திய முதலாக வுள்ள தொன்னூல்களுமிறந்தன. பின்னும் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒரு சார் சூத்திரங்

துள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதி கா[illegible]மை பின் அவையும் இறந்தன போலும்" என்று சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் அவர் கூறுவது காண்க.

[illegible]யம் என்னும் நூலைப்பற்றிப் பேராசிரியர் தமது உரையில் (தொல்: பொருள்: மெய்ப்பாட்டியல் 2-ஆம் சூத்திர உரை) இவ்வாறு எழுதுகிறார்:—

"இங்ஙனம் அடங்குமென்பது நாடக நூலுள்ளுஞ் சொல்லுபவோ வெனின், சொல்லுபவாகலினன்றே அதன் வழி நூல் செய்த செயிற்றியனுர் சுவையுணர்வும் பொருளும் ஒன்றாக வடக்கிச் சுவையுங் குறிப்புஞ் சத்துவமுமென மூன்றாக்கி வேறு வேறிலக்கணங் கூறி அவற்றை,

"எண்ணிய மூன்று மொருங்கு பெறுமென
நுண்ணிதி னுணர்ந்தோர் [illegible]றன ரென்ப,

என்றோதினு ராயிற்றென்பது."

யாப்பருங்கல விருத்தியுரைகாரர், தமது உரையில் ஆங்காங்கே இந்நூலைக் குறிப்பிடுகிறார்:—

"கலியுறுப்புக்கு அளவைச் செயன் முறை யுள்ளும் செயிற்றியத்துள்ளும் அகத்தியத்துள்ளும் கண்டு கொள்க.

(யாப்பருங்கலம்: செய்யுளியல் 29-ஆம் சூத்திர உரை.)

"மற்றையன விவ்வாறு செயிற்றியத்துள்ளும் அகத்தியத்[illegible]ம் ஒதிய [illegible]

(யாப்பருங்கலம்: செய்யுளியல் 31-ஆம் சூத்திர உரை.)

[illegible]றை. வெண்டுறைப் பாட்டாவன: பதினோராடற்கு மேற்ற பாட்டு. அவை அல்லிய முதலியனவும் பாடல்களாக ஆடுவாரையும், பாடல்களையும், கருவியையும் உந்து இசைப்பாட்டாய் வருவன.........இனி, இவற்றி னுறுப்பு ஐம்பத்து மூன்றாவன: அல்லிய உறுப்பு 6. கொட்டி யுறுப்பு 4, குடையுறுப்பு குடத்தினுறுப்பு 5, பாண்டரங்க உறுப்பு 6, மல்லாடலுறுப்பு 5, துடியாடலுறுப்பு 6, கடையத்துறுப்பு 6, பேட்டின் உறுப்பு 4, மரக்காலாடலுறுப்பு 4, பாவையுறுப்பு 3 எனவிவை. இவற்றின் றன்மை செயிற்றியமும் சந்தமும் பொய்கையார் நூலும் முதலியவற்றுட் காண்க"

(யாப்பருங்கலம்: ஒழிபியல் "மாலை மாற்றே" என்னும் சூத்திர உரை.)

அடியார்க்கு நல்லார் தமது சிலப்பதிகார உரையில், செயிற்றிய நூலிலிருந்து சில சூத்திரங்களை மேற்கோள் காட்டுகிறார். அவை வருமாறு:—

"அறமுத னன்கு மொன்பான் சுவையு
முறைமுன் நாடக முன்னோ னாகும்"

'அறம்பொரு ளின்ப மரசர் சாதி'

எனவும்,

'அறம்பொருள் வாணிகர் சாதியென் றறைப'

எனவும்,

'அறமேற் சூத்திர ரங்க மாகும்'

எனவும் சொன்னார் செயிற்றியனர்."

(சிலம்பு: அரங்கேற்றுகாதை 13-ஆம் அடி அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள்.)

'அக்கோ லேழுகன் றெட்டு நீண்டு
மொப்பா லுயர்வு மொருகோ லாகு
நற்கோல் வேந்த னயக்குறு வாயின்
முக்கோ ரூனு முயரவு முரித்தே'

என்றார் செயிற்றியனர்."

(சிலம்பு: அரங்கேற்று காதை. 101-ஆம் அடி. அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள்.)

"பிணியுங் கோளும் நீங்கிய நாளா
லணியுங் கவினு மாசற வியற்றித்
தீதுதீர் மரபிற் றீர்த்த நீரான்
மாசது தீர மண்ணுநீ ராட்டித்
தொடலையு மாலையும் படலையுஞ் சூட்டிப்
பிண்ட முண்ணும் பெருங்களிற்றுத் தடக்கை மிசைக்
கொண்டுசென் றுறீஇக் கொடியெடுத் தார்த்து
முரசு முருடு முன்முன் முழங்க
வரசு முதலான வைய்பெரும் குழுவுந்
தேர்வலஞ் செய்து கவிகைக் கொடுப்ப
வூர்வலஞ் செய்து புகுந்த பின்றைத்
தலைக்கோல் கோட றக்க தென்ப.'

என்றார் செயிற்றியனர்."

(சிலம்பு: அரங்கேற்றுகாதை, தலைக்கோலமைதி அடியார்க்கு நல்லார் உரைமேற் கோள். சிலம்பு, அரும் பொருள் உரையாசிரியரும் இச்செய்யுளைத் தமது உரையில் மேற்கோள் காட்டுகிறார்.)

இளம்பூரண அடிகள் தமது தொல்காப்பிய உரையில், செயிற்றிய நூலிலிருந்து கீழ்க்கண்ட சூத்திரங்களை மேற்கோள் காட்டுகிறார் :—

" மத்திம மென்பது மாசறத் தெரியிற்
சொல்லப் பட்ட வெல்லாச் சுவையொடு
புல்லா தாகிய பொலிவிற் றென்ப. 1

நயனுடை மரபி னிதன்பய மியாதெனின்
சேர்த்தி யோர்க்குஞ் சார்ந்துபடு வோர்க்கு
மொப்ப நிற்கு நிலையிற் றென்ப........... 2

உய்ப்போ னிதனை யாரெனின் மிக்கது
பயக்குந் தாபதர் சாரணர் சமணர்
கயக்கறு முனிவ ரறிவரொடு பிறருங்
காமம் வெகுளி மயக்க நீங்கிய
வாய்மை யாளர் வருத்தனர் பிறரு
மச்சுவை யெட்டு மவர்க்கில வாதலி
னச்சுவை யொருதலை யாதலி. னதனை
மெய்த்தலைப் படுக்கவிதன் மிகவறிந் தோரே........... 3

என்பது செயிற்றியச் சூத்திரம்."

'இருவகை நிலத்தி னியல்வது சுவையே' 4

என்றும்,

'நின்ற சுவையே. . . . .
ஒன்றிய நிகழ்ச்சி சத்துவ மென்ப.' 5

என்றும்,

'சத்துவ மென்பது சாற்றுங் காலை
மெய்ம்மயிர்க் குளிர்த்தல் கண்ணீர் வார்த
னடுக்கங் கடுத்தல் வியர்த்த றேற்றங்
கொடுங்குரற் சிதைவொடு நிரல்பட வந்த
பத்தென மொழிப சத்துவந் தானே'

என்றும் சார்பொருள் உரைப்ப."

(தொல். பொருள் : மெய்ப்பாட்டியல் 1-ஆம் சூத்திரம்.
இளம்பூரண அடிகள் உரை மேற்கோள்.)

'உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதன்
மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே'

(தொல் : பொருள் : மெய்ப்பாடு 3-ஆம் சூத்திரம்.
இளம்பூரண அடிகள் உரை மேற்கோள்.)

"நகையெனப் படுதல் வகையா தெனிலே
நகையெனச் செய்வோன் செய்வகை நோக்கு
நகையொடு நல்லவை நனிமகிழ் வதுவே."

(நகைச்சுவை)

"உடனிவை தோன்று மிடமியா தெனினே
முடவர் செல்லுஞ் செலவின் கண்ணு
மடவோர் சொல்லுஞ் சொல்லின் கண்ணுங்
கவற்சி பெரிதுற் றுரைப்போர்க் கண்ணும்
பிதற்றிக் கூறும் பித்தர் கண்ணுஞ்
சுற்றத் தோரை யிகழ்ச்சிக் கண்ணு
மற்று மொருவர்கட் பட்டோர் கண்ணுங்
குழவி கூறு மழலைக் கண்ணு
மெலியோன் கூறும் வலியின் கண்ணும்
வலியோன் கூறும் மெலிவின் கண்ணும்
ஒல்லார் மதிக்கும் வனப்பின் கண்ணுங்
கல்லார் கூறுங் கல்விக் கண்ணும்
பெண்பிரி தன்மை யலியின் கண்ணு
மாண்பிரி பெண்மைப் பேடிக் கண்ணுங்
களியின் கண்ணுங் காவாலி கண்ணுந்
தெளிவிலா ராழுகுங் கடவுளார் கண்ணு
மாரியர் கூறுந் தமிழின் கண்ணுங்
காரிகை யறியாக் காமுகர் கண்ணுங்
கூனர் கண்ணுங் குறளர் கண்ணுங்
மூமர் கண்ணுஞ் செவிடர் கண்ணு
மான்ற மரபி னின்னுழி யெல்லாந்
தோன்று மென்ப துணிந்திசி னோரே."

(தொல்: பொருள்: மெய்ப்பாடு: 4-ஆம் சூத்திரம்.
இளம்பூரண அடிகள் உரை மேற்கோள்.)

(அழுகைச்சுவை)

"கவலை கூர்ந்த கருணையது பெயரே
யவல மென்ப வறிந்தோ ரதுதா
னிலைமை யிழந்து நீங்குதுணை யுடைமை
தலைமை சான்ற தன்னிலை யழிதல்
சிறையணி துயரமொடு செய்கையற் றிருத்தல்
குறைபடு பொருளொடு குறைபா டெய்தல்
சாப மெய்தல் சார்பிழைத்துக் கலங்கல்
காவ லின்றிக் கலக்கமொடு திரிதல்
கடகந் தொட்டகை கயிற்றொடு கோடல்

முடியுடைச் சென்னிபிற ரடியுறப் பணிதல்
வுளைப்பரி பெருங்களி றூர்ந்த சேவடி
தளைத்திளைத் தொலிப்பத் தளர்ந்தவை
திறங்கிள ரகல நீறொடு சேர்த்தல்
மறங்கிளர் கயவர் மனந்தவப் புடைத்தல்
கொலைக்களங் கோட்டங் கோன்முனைக் கவற்சி
யலைக்கண் மாறு வழுகுர லரவ
மின்றோ ரன்னவை யியற்பட நாடித்
துன்னின ருணர்க துணிவறிந் தோரே."

"இதன்பய மிவ்வழி நோக்கி
யசைந்தன ராகி யழுத லென்ப."

என்பன செயிற்றிய மாகலின்."

(தொல்: பொருள்: மெய்ப்பாடு. 5-ஆம் சூத்திரம்
இளம்பூரண அடிகள் உரை மேற்கோள்.)

(உவகை)

"ஒத்த காமத் தொருத்தனு மொருத்தியு
மொத்த காமத் தொருவ னொடு பலரு
மாடலும் பாடலுங் கள்ளுங் களியு
மூடலு முணர்தலுங் கூடலு மிடைந்து
புதுப்புனல் பொய்கை பூம்புன லென்றிவை
விருப்புறு மனத்தொடு விழைந்து நுகர்தலும்
பயமலை மகிழ்தலும் பனிக்கட லாடலும்
நயனுடை மரபின் நன்னகர்ப் பொலிதலுங்
குளம்பரிந் தாடலுங் கோலஞ் செய்தலுங்
கொடிநகர் புகுதலுங் கடிமனை விரும்பலுந்
துயிற்க ணின்றி யின்பந் துய்த்தலு
மயிற்கண் மடவா ராடலுண் மகிழ்தலு
நிலாப்பயன் கோடலு நிலம்பெயர்த் துறைதலுங்
கலம்பயில் சாந்தொடு கடிமல ரணிதலு
மொருங்கா ராய்ந்த வின்னவை பிறவுஞ்
சிருங்கா ரம்மென வேண்டுப விதன்பயன்
துன்ப நீங்கத் துகளறக் கிடந்த
வின்பமொடு புணர்ந்த வேக்கழுத் தம்மே."

(தொல்: பொருள்: மெய்ப்பாடு. 11-ஆம் சூத்திரம்.
இளம்பூரண அடிகள் உரை மேற்கோள்.)

இந்நூலை இயற்றிய செயிற்றியனாரைப் பற்றியும் அவர் காலத்தைப்பற்றியும் ஒருசெய்தியும் தெரியவில்லை.

113. செயன்முறை

செயன்முறை என்பது நாடகத்தமிழ் இலக்கணநூல் எனத் தெரிகிறது. இந்நூலை யாப்பருங்கலவிருத்தி யுரைகாரர் தமது உரையில் குறிப்பிடுகிறார்.

"கலியுறுப்புக்கு அளவை செயன்முறையுள்ளும், செயிற்றியத் துள்ளுங் கண்டுகொள்க. அவை யீண்டுரைப்பிற் பெருகும்."

என்று ஷெ உரையாசிரியர் (யாப்பருங்கலம் செய்யுளியல். 29-ஆம் சூத்திர உரை.) எழுதுகிறார். செயன்முறை என்னும் இந்நூலைச் செயிற்றியம் என்னும் நாடகத்தமிழ் இலக்கண நூலுடன் சேர்த்து உரையாசிரியர் குறிப்பிடுகிறபடியினாலும், செயன்முறை என்னும் பெயரினாலும் இந்நூல் நாடகத்தமிழ் இலக்கணநூல் என்பது நன்கு தெரிகிறது.

இந் நூலைப்பற்றியும் இந் நூலாசிரியரைப் பற்றியும் வேறு செய்திகள் ஒன்றும் தெரியவில்லை.

114. ஓவியநூல்

அடியார்க்குநல்லார் தமது சிலப்பதிகார உரையிலே ஓவிய நூலைக் குறிப்பிடுகிறார். குறிப்பிடுவதோடு அந்நூலிலிருந்து ஒரு சூத்திரத்தையும் மேற்கோள் காட்டுகிறார். சிலம்பு, வேனிற்காதை 25-ஆம் அடி உரையில், அடியார்க்குநல்லார் இவ்வாறு எழுதுகிறார் :—

"ஓவியநூலுள் நிற்றல் இருத்தல் கிடத்தல் இயங்குதல் என்னும் இவற்றின் விகற்பங்கள் பலவுள; அவற்றுள் இருத்தல்: திரிதரவுடையனவும் திரிதரவில்லனவுமென இருபகுதிய. அவற்றுள் திரிதரவுடையன :—யானை தேர் புரவி பூனை (?) முதலியன. திரிதரவில்லன ஒன்பது வகைப்படும். அவை :—பதுமுகம், உற்கட்டிதம், ஒப்படியிருக்கை, சம்புடகம், அயமுகம், சுவத்திகம், தனிப்புடம், மண்டிலம், ஏகபாதம் எனவிவை. என்னை ?

"பதுமுக முற்கட்டிதமே யொப்படி
யிருக்கை சம்புட மயமுகஞ் சுவத்திகந்
தனிப்புட மண்டில மேக பாதம்
உளப்பட வொன்பது மாகுந்
திரிதர வில்லா விருக்கை யென்ப."

என்றார் ஆகலானும்......."

ஓவிய நூலைப்பற்றியும் அதன் ஆசிரியரைப்பற்றியும் செய்திகள் ஒன்றும் தெரியவில்லை. (தொடரும்)

சொல்லும் சொல்லாதோ கதை

[பி. எல். சாமி, பி. எஸ்ஸி.]

புதைபொருள் ஆராய்ச்சியாளனுக்குக் கல்லும் கதை கூறும், ஓட்டாஞ் சில்லும் காலங் காட்டும். உயிர்நூல் ஆராய்ச்சியாளர்க்குப் பள்ளத்திலெடுத்த பல்லும் பல கதை கூறும். எலும்பும் என்னென்னவோ சொல்லும். கலைஞனுக்குக் கல்லும் கவிதை சொல்லும். அதுபோல சொல்லும் கதை கூறும் மொழிநூலறிஞனுக்கு. ஒரு சொல் பல காலத்தில் பல கோலங் கொண்டு உருமாறிப் பொருள் மாறிக் 'கண்ணாமூச்சி' ஆடலாம். மாரீச மானைப்போல் மறைந்து மறைந்து இலக்கியத்திலும் பேச்சிலும் தோன்றலாம். காலமென்னும் மணற் பரப்பில் சொல்லின் சுவடு தேடிச் செல்வான் மொழிநூலறிஞன். சுவடுகள் எங்கேயாவது விட்டுப்போய்விடும். இருப்பினும் இடைவிட்ட சுவட்டைக் கண்டு பிடித்துச் சொல்லின் வேரையே அடைந்து விடுவான். இந்த ஒற்றுவேலை, வேவுவேலை அறிவுக்குகந்த பொழுது போக்கு. சொல்லின் சுவட்டைத் தேடிப்போனால் அது நம்மை வரலாற்றுக் காலத்துக்கு முன்னரே கொண்டு சேர்க்கலாம். இடைக் காலத்தோடு நின்று விடலாம். அல்லது சுவடு போகப் போக மறைந்தும் விடலாம்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாச் சில அடிப்படைச் சொற்கள் வரலாற்றுக் காலத்துக்கு (Historic period) முன்னரே தோன்றின. தீ என்பது அவைகளில் ஒன்று. இந்தியாவிலுள்ள பல மொழிகளிலும் நெருப்பைக் குறிக்கும் சொல் 'அக்' என்ற வேர்ச் சொல்லின் அடிப்படையாகத் தோன்றியவையே. ஆனால், தமிழ் முதலிய திராவிட மொழிகளில் அந்த வேர்ச் சொல்லடியாகப் பிறக்கவில்லை. இத்தகைய அடிப்படைத் தேவைக்கான சொற்கள் எளிதில் மொழி வேற்றுமையையும், இன்னும் இனவேற்றுமையையும் தெளிவாக எடுத்துக்காட்டும்.

எழுத்து என்ற சொல்லின் வேர்ச்சொல் கட்புலனாம் பொருள் பற்றியதா அல்லது செவிப்புலனாம் பொருள் பற்றியதா? இது ஒரு சிக்கல். எழுத்து என்ற சொல்லின் வேர்ச் சொல் வரைவது என்ற பொருள் கொண்டது. ஆதலின், எழுத்து என்பது முதலில் சித்திரத்தைக் குறித்ததென்றும், பின்னர் படிக்கும் குறியீட்டைப் பற்றி வழங்கியதென்றும் கூறுவர். வணிக முத்திரைகளில் பொறித்த சித்திரத்தை 'கண்ணெழுத்து' என்று பழங்காலத்தில் வழங்கினர். மொகஞ்சதாரோவிலும் முதலில் இந்த சித்திரங்கள் வணிகத்திற்குப் பயன்

பட்டு, பின்னரே எழுத்தாகமாறின என்று தெரிகிறது. புடைவையில் வரையப்பட்ட சித்திரத்தையும் எழுத்து என்று அழைத்தனர். எழுத்தென்பது கண்ணால் பார்க்க முடியாத ஓசையென்று கொண்டு, அதன் வேர்ச்சொல் எழுச்சிப் பொருள் கொண்டதென்பார் சிலர். எழுத்தென்பதின் வேர்ச்சொல் ஓசைபற்றியதென்பதற்குச் சான்றுகள் உள. "சாத்தன் யாழ் எழூஉம், குழல் ஊதும், பாடும்" என்ற சொற்றொடர்களில் எழூஉம் எனும் சொல் ஒலி மேலெழும்புவதைக் குறித்து வருவதைக் கவனிக்க வேண்டும். பாடும்போது ஓசை உயர உயர ஏறுவதற்கு 'எழால்' என்று இசையில் வழங்கி வருவதும் கவனிக்க வேண்டும். இவைகளில் ஒலி எழுதல் என்ற பொருளிலேயே வேர்ச்சொல் வழங்கி வருகின்றது எழுத்து என்பதின் வேர்ச்சொல்லும் மேலெழும் ஓசையையே குறித்தது என்பது மிகவும் பொருத்தமாகக் காணப்படுகிறது.

சாவு என்ற சொல் எப்படித் தோன்றியது? ஏன் தோன்றியது? இச் சொல் நம்மைப் பழங் கற்கால நாகரிகத்திற்குக் கூட்டிச் செல்கிறது. சங்க இலக்கியத்தில் கற்கால நாகரிகம் பற்றிய குறிப்புகள் இல்லாமலில்லை. கற்காலத்தில் 'அம்புத் தலைகள்' (Arrow Heads) எனப்படும் கருவிகளைப் பயன்படுத்தினர் இவைகள் கூர்மையான தேய்க்கப்பட்ட கற்களாகும். இக் கற்களை 'கூர்ங்கல்' என்று தமிழில் சொல்லினர்.

> "மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
> பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்
> விரனுதி சிதைக்கும்..............." (அகம். ரு)

இக் கற்கள் மழுகிய நுனியையும், பதிக்கப்பட்டன போலவும் இருந்தன எனப்படுவதால் இவை வெறுங் கற்கள் அல்ல. 'அயில் காய்ந்தன்ன கூர்ங்கல்' என்ற வரியிலும் வேலின் அலகு போன்ற கற்கள் என்று கூறப்படுகின்றது. ஆதலின், இவை வெறுங் கற்களன்று. கற்கால மனிதரின் கருவிகள். இவைகள் பாலை நிலங்களில் இருப்பதாகக் கூறப்பட் டிருக்கின்றது.

மற்றும் ஒரு பழங்காலச் செய்தியைத் தமிழ்நூல்களில் படிக்கலாம். விலங்குகளின் மருமத்தில் அம்பு எய்யும் கொடிய வழக்கம் இருந்திருக்கின்றது.

> "இரும்புவடித் தன்ன கருங்கைக் கானவன்
> விரிமலர் மராஅம் பொருந்திக் கோறெரிந்து
> வரிநுதல் யானை யருநிறத் தழுத்தி
> யிகலடு முன்பின் வெண்கோடு கொண்டுதன்." (அகம். கஎஉ)

இவ வழககம பிற பாடலகளிலும கூ
ஸ்பெயினில் அகப்பட்ட பழங் கற்கால மனிதனின் குகைகளில் அவன் வரைந்த ஓவியங்கள் அப்படியே காணப்பட்டன. விலங்குகளின் மருமத்தில் அம்பு தைத்திருப்பதுபோல பல ஓவியங்கள் அகப்பட்டன. அப்படி வரைந்தால் அவ் விலங்குகள் வேட்டையாடும்போது எளிதில் விழுந்து விடும் என்பது அவர்கள் நம்பிக்கை. இதே நம்பிக்கையால் மெழுகில் எதிரியின் பொம்மை செய்து ஊசி குத்தி நெருப்பில் போடுகிறார்கள். மருமத்தில் அம்பெய்துவது மிகப் பழங்கால மனிதனின் பழக்கம்.

சாவு என்ற சொல் மிகப் பழங்கால வழக்கத்திலிருந்து வந்தது என்பது பலருக்குத் தெரியாது. இதன் பொருளை முதலில் குறிப்பாக உணர்த்தியவர் நல்லூர் ஞானப்பிரகாசர். 'உடம்புக்கு அதிகமாய்விட்டது' என்று சொல்லுகிறோம். 'உடம்பு குன்றிப் போச்சு' என்றும் பேசுகிறோம். 'பயத்தினால் குக்கி விறைத்து' என்ற பேச்சுவழக்கு உள்ளது. இந்தப் பேச்சு வழக்குகளெல்லாம் நேர்ப்பொருளைத் தராது வேறு பொருளையே தருவதைக் கவனிக்க வேண்டும். 'குக்கி' என்றால் உட்கார்ந்து என்பது பொருள். கொங்கு நாட்டில் பேச்சு வழக்கில் இருக்கிறது. விறைத்து என்பது இறந்தவரின் நிலை. இதற்கு நேரிடைப் பொருள் உட்கார்ந்து விறைத்துப் போதல் என்பதாம். இதற்கும் முதுமக்கட்சாடியில் முதுகிழவர்கள் உட்கார்ந்து இறப்பதற்கும் யாதேனும் தொடர்புண்டா ? 'குன்றுதல் என்ற சொல் நேர்ப்பொருள் தராது வேறு பொருள் தருவதுபோல், உடம்பு நுணுகிற்று' என்பதில் 'நுணுகிற்று' வேறு பொருள் தருகிறது. தொல்காப்பிய உரையில் 'உயிர் போயிற்று, உடம்பு நுணுகிற்று' என்ற வரி காணப்படுகின்றது. உயிர் போவதற்கும் உடம்பு நுணுகுவதற்கும் என்ன தொடர்பு? உயிர் போனால் உடம்பு பெருகுகின்றதே யன்றி, உடம்பு சுருங்குவதில்லையே, என்று சிந்திக்கும்போது உண்மை தெரிந்தது. பழந் தமிழர் உயிர் போனதும் உடலை முதுமக்கட் சாடியில் உட்காரவைத்து உடலைக் குறைத்து வைத்தார்கள். அதாவது உடம்பு நுணுகுகிறது. சாடியில் சுருங்குகிறது குறைகிறது. ஆதலின், உயிர் போனதும் உடம்பு நுணுகிற்று என்று கூறப்பட்டது. உடம்பு நுணுகிற்று என்பதற்கும் 'உள்ளதன் நுணுக்கம்' என்று தொல்காப்பிய சூத்திரம் கூறுவதற்கும் என்ன தொடர்பு? அதை ஆராயுங்கால் சாவு என்ற சொல்லின்பொருள் புரியும்.

"ஓய்தல் ஆய்தல் நிகழ்த்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்."

என்று தொல்காப்பிய சூ. 330 கூறுகிறது. சாய் என்பதற்குப்

பொருள் உள்ள தன் நுணுக்கமாகல் 'உயிர் போயிற்று உடம்பு சாயிற்று' என்று சொல்லலாம். உடம்பு குன்றி விட்டது என்று தற்போது சொல்வது போலவே, அக்காலத்தில் தலைவியின் உடல் மெலிந்தது என்பதற்குச் 'சாய்' என்ற சொல் பல பாடங்களில் பயின்று வருவதைக் கவனிக்கவும். இறந்தோன் உடலை உட்காரவைத்து உடலைச் சுருக்குவதால் அல்லது நுணுக்குவதால் அதற்குச் சாய்வு என்ற பெயர் வந்தது பின்னர் அது சாவு என்றாயிற்று. முதலில் முதுமக்கட் சாடியில் புதைத்தலைக் குறித்து வழங்கிய சொல் நாளடைவில் இறத்தலைக் குறித்தது. சாவைக் குறிக்கும் மற்றொரு சொல் சாக்காடு. சாக்காடு என்பது சாய்க்காடு என்பதிலிருந்து வந்தது. முதுமக்கட் டாழியில் இறந்தோர் சாய்ந்த (நுணுகிய) காட்டைக் குறித்த இச் சொல் பின்னர் இறப்பையே குறித்தது. முதுமக்கட் சாடியில் சாய்தல் இறத்தலைக் குறித்ததோடன்றி, அந்தச் சாடிகளிருந்த காடே, சாய் என்ற சொல்லுடன் சேர்ந்து இறத்தலைக் குறிப்பது வியப்பைத் தருகின்றது.

இறந்தோர் உடலைத் தீர்க்கும் முறைகள் நான்கு இருந்ததாக மணிமேகலை தெரிவிக்கின்றது.

> "சுடுவோ ரிடுவோர் தொடுகுழிப் படுப்போர்
> தாழ்வயி னடைப்போர் தாழியிற் கவிப்போர்."

எனபன நானகு முறைகள. இடுவோா என்பது கிடத்தி விட்டுச் செல்வதைக் குறிக்கும். இறந்தவர் உடல்மேல் இலை முதலியவற்றைப் போட்டு மூடிவிட்டுச் செல்லும் வழக்கம் பாலை நிலத்தில் இருந்ததாகச் சங்க நூல்களில் தெரிகிறது. 'உவலிடு பதுக்கை' என்ற வரியில் 'பதுக்கை' என்பது இப்படி இறந்தோரைப் பதுக்கி வைப்பதையே குறிக்கின்றது. தாழ்வயினடைத்தல் என்பதற்கு, தாழ்ந்த இடத்தில் அடைத்தல் என்று பொருள் கூறப்பட்டுளது. அது பொருத்தமின்று. அப்படிப் பொருள் கொண்டால் தொடுகுழிப்படுத்தலுக்கும் தாழ்வயினடைத்தலுக்கும் வேற்றுமையில்லை. தாழ்வயினடைத்தல் என்பது கல்லறையில் புதைக்கும் வழக்கத்தையே குறிக்கும். தாழ் என்பது தாழ்ப்பாள் போன்ற சொற்களில் பயில்வது போன்ற காப்பு எனும் பொருள் கொண்டது. கல்லறையில் புதைக்கும் வழக்கம் ஒரு காலத்தில் இருந்த தென்பதற்கு, புதுக்கோட்டை மாவட்டத்தில் நிறையச் சான்றுகள் அகப்பட்டுள்ளன. அடுத்துக் கூறப்பட்ட தாழியில் கவிக்கும் முறை மிகப் பழங் காலத்தது. இந்தச் சாடிகள் இருக்குமிடத்தைப் பாண்டக் குழி யென்றும், பாண்டிய வீடு என்றும் இக் காலத்தில் கூறுகின்றனர். மாண்ட

வர் குழியே பாண்டக் குழியாயிற்று என்பர். பாண்டம்+குழி என்பதே பாண்டக்குழி, பாண்டிய வீடு ஆயிற்று என்பது அதை விடப் பொருத்தமானது. இச் சொல் தற்காலத்துப் பெயரென்பதில் ஐயமில்லை. பாண்டுக் குழி யென்று கொண்டு கிழவரின் குழி யென்பாருமுளர். அதுவும் பொருத்தமே. முதுமக்கட் சாடி என்பது அத்துடன் தொடர்புடைத்து. பாண்டி என்றொரு விளையாட்டுளது. அதில் ஏழு ஏழு குழிகள் உள்ளது. அவ் விளையாட்டைக் குறிக்கும் 'பாண்டி' எனும் சொல்லுக்கும் பாண்டக் குழிக்கும் தொடர்பிருக்குமோ. இரண்டிலும் குழியுண்டு. 'பாண்ட' என்ற சொல்லுண்டு. இந்தச் சாடிகள் உள்ள இடத்தைக் குரங்குப் பட்டடை என்கின்றனர். அதற்கொரு புராணக்கதை சொல்கின்றனர். இராமாயணத்தில் வரும் வானரர்கள் கருவிகள் செய்த பட்டறை என்கின்றனர். ஆனால், அதற்கும் முதுமக்கட் சாடிக்கும் பொருத்தமேயில்லை. அதிலிருந்து எழுந்ததுதான், இச் சாடிகள். வாலிருந்த மனிதர்களால் செய்யப்பட்டதென்பது. பாண்டக் குழி பாண்டவர் குழியானது நமது மக்களின் புராணப் பைத்தியத்தினலேயாம். குரங்கு+பற்று+அறை என்று ஒருவர் பொருள் கொண்டு குரங்குபோல் பற்றி அடைக்கும் அறை என்றார். சாடியில் அடைக்கும் வழக்கம் தாழியிற் கவித்தல் என்று சங்க நூல்களில் வழங்குகிறது. குரங்கு என்ற சொற்குப் பொருள்களாகக் கவித்தல், சுருங்கல் என்பன சங்க நூல்களில் வழங்குகிறது. கவித்துச் செல்லும் விலங்கு கவி என்று பெயர் பெற்றதும், அது கபி, 'கபா,' 'ஏப்,' என்று வேற்று மொழிகளில் மாறியதும் கவனிக்க வேண்டும். தாழியில் குரங்கியவரை (கவித்தவரை) அடைக்குமிடம் என்பது குரங்குப் பட்டடைக்குப் பொருளா யிருக்கலாம். (குரங்கு+படு+அடை; குரங்கி கவித்து, படு—இடு) பின்னர் பொருள் புரியாது புராணத்தைக் கலந்தனர். உடல் நுணுகிற்று, சாவு என்பதொடு உடல் குரங்கிப் படுதலை ஒப்பிட்டுப் பார்க்கவும். மூன்றிலும் சுருங்குதல் என்பது அடிப்படைப் பொருள். இறந்தோரை 'பட்டவர்' என்பதும் வழக்கு. குரங்கிப் (சுருங்கி) பட்டவரை அடைக்குமிடம் என்றும் சொல்லலாம். இந்தத் தாழிகளில் ஈட்டி, முதலிய கருவிகளும் வளையல் முதலிய அணிகளும் அகப்பட்டதால் குரங்குகள் செய்தவை என்று கருதலானார்கள்.

"தேவருலக மெய்தின னாதலி னன்றேற்
கவிக்குங் கண்ணகன் றாழி." (புறம், உஉஅ)

"கவிசெந் தாழிக் குவிப்புறத் திருந்த." (புறம், உ௩அ)

"ஈமத்தாழி யகலி தாக வனேமோ." (புறம், உருச)

"ஓடி மறலி யொளிப்ப முது மக்கட்
சாடி வகுத்த தாரா பதியும்." (விக்கிரம சோழன் உலா.)

"பதுமக் கடவுள் படைப் படையக் காத்த
முது மக்கட் சாடி முதலோன்." (குலோத். உலா.)

"மொய்த்த முதியோர்க்கு முது மக்கட் சாடி பல
வைத்தகுல தீபகனை மன்னுகோ மன்னுகோ."
(திருவெண்காட்டுப் புராணம்.)

சங்கப் பாடல்களில் கவி என்ற சொல் இத் தாழி தொடர்பாகப் பயின்று வருவது, குரங்கு என்பதற்குக் கவி எனும் பொருள் இவ்விடம் கொள்ளலாம் என்பதைக் காட்டுகின்றது.

இம் முறையாகப் புதைக்கும் பழக்கம் குறும்பர், வேடர் என்ற பழங்குடிகளுடையது என்பர். பிற்காலத்தில் அரசர்களும் கொண்டனர் என்பதும், அரசர்களே முதியவர்களுக்குத் தாழிகள் கொடுத்தனர் என்பதும் தெரிகிறது. இறக்கும் தறுவாயிலிருப்போரும் தாழிகளில் வைக்கப்பட்டனர். இவை இராக்கதர்கள் பயன்படுத்தியது, பாண்டவர்கள் பதுங்குவதற்கு வைக்கப்பட்டது முதலிய கதைகள் கற்பனைகளே. இம் முறையில் புதைங்கும் பழக்கம் பழங் கற்காலத்துக்கு முந்தினதென்றும், வரலாற்றுக் காலத்துக்கு மிக முந்தின தென்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவைகளில் அகப்பட்ட கருவிகளிலிருந்து கி. மு. 3000 ஆண்டுக்கு முற்பட்ட தென்றும், சில கி. மு. 20,000 ஆண்டுகட்கு முன்னும் கொண்டு செல்கின்றன வென்றும கருதுகின்றனர். கூர்ங்கற்கள் என்று சங்க நூல்களில் வருபவை இப் பழங்காலக் கருவிகள் என்று முன்னர் காட்டினேன். இக் கற்கள் தாழிகள் இருக்குமிடத்தில் வட்டமாகப் பதிக்கப்பட்டிருத்தலையும் தமிழ் நாட்டில் பார்க்கலாம். "தாழிய பெருங்காடெய்திய ஞான்றே" என்ற (புறம் உருச) வரியிலிருந்து இவைகள் சுடுகாடுபோல தாழிக்காடு என்று வழங்கியதாகத் தெரிகிறது. இதுவே சாய்க்காடு என்றும் வழங்கப்பட்டு, சாக்காடாகி, பின்னர் இறப்பைக் குறித்தது.

பிரெஞ்சு நாட்டில் (Grotte-des-enfantes) என்ற இடத்தில் தோண்டி யெடுத்தபோது ஒன்பது மட்டங்களில் எலும்புக் கூடுகள் அகப்பட்டன. ஆழத்திலிருந்த ஒன்பதாவது மட்டத்தில் ஒரு பெண்ணும் பையனும் புதைபட்டிருந்த முறை புதியதாக இருந்தது. மேல் மட்டங்களில், படுக்க வைத்துப் புதைத்திருந்தனர். ஆனால் ஒன்பதாவதில் மட்டும் உட்கார்ந்த நிலையில் தலையைத் தொங்கவிட்டு உடல் சுருங்கிய நிலையில் புதைக்கப்பட்

டிருந்ததாகத் தெரிகிறது. இந்த முறையில் புதைத்தவர் வேறினமென்று கண்டனர். அவர்கள் நீக்ரோவருடன் தொடர்புடைய குள்ளமான 'கிரிமால்டி' இனமென்று ஆராய்ந்து கண்டனர். இவர்கள் ஒரு காலத்தில் உலக முழுவதும சுற்றித் திரிந்தனர். இவர்கள் மிக மிகப் பழங் காலத்தில் தோன்றிய இரண்டு அல்லது மூன்று இனங்களில் ஓரினத்தவர் என்றும் தெரிகிறது. இவர்கள் நாம் காளையைக் கும்பிடுவதுபோல், காட்டெருமையைத் தொழுததாகத் தெரிகிறது. இவர்கள் புதைத்த முறை தாழியில் புதைக்கும் முறையோடு ஒத்திருக்கின்றது. நமது முறை மத்தியதரைக் கடல் நாடுகள் முழுவதும் இருந்ததைக் கண்டுபிடித்துள்ளனர். ஒருவேளை கிரிமால்டி இனத்தார் விட்டுச் சென்றதையே குறும்பர், வேடர் கைக்கொண்டனரோ. 'துவாபர யுகத்தின் கடைசியில் தோன்றிய குள்ளர்கள் இந்த முதுமக்கட் சாடியில் புதைத்ததாக செவி வழிச் செய்தி கூறுகிறது.' ஒருவேளை இந்த துவாபர யுகக் குள்ளர் 'கிரிமால்டி' வகுப்பினரோ என்ற கேள்விகள் எழுகின்றன. இதைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்க்கு விட்டு விடுகிறேன். சாவு என்ற சொல் நம்மைப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன் பல்லாயிரம் கல் தொலைவுக்குக் கொண்டு சென்று விட்டது. இப்பொழுது சொல்லுங்கள்! சொல்லும் சொல்லாதோ கதை!!

அணங்கை வாழ்த்துவம்

[பொன்னி, இரா. இளமுருகனார்]

கண்ணிகள்

தெள்ளமுதாம் வள்ளுவர்
  தெய்வம ணங்கமழும் சிலப்பதிகா ரமதும்
கொள்ளைகொளும் கம்பனின் கொழுஞ்சுவையும்
  கொண்டதமி ழணங்கை வாழ்த்துவம் நன்றே.

பண்டைத்தமிழ் வேந்தர்க்கோர் பாண்டித்துரையைப்
  பாவலர்தம் வழிக்கோர் பாரதியாரை
திண்டோள்கட்டப் பொம்மன்வழி சிதம்பரத்தைத்
  தெளிந்தளித்த அணங்கை வாழ்த்துவம் நன்றே.

பிட்டுக்கும் பெருமானுர் மண்சுமக்கவோர்
  பெண்குலங் கொண்டவளை வாழ்த்துவம் நன்றே
அட்டியின்றி ஈழம்மலே யாவினையாளும்
  அருமைத் தமிழணங்கை வாழ்த்துவம் நன்றே.

ஒருவனே தேவன்

[திருவாட்டியார், கோ. பத்மாவதி அம்மையார் பி.ஓ.எல். (ஆனர்சு)]

அகரமே எல்லா மொழிக்கும் முதல்போல்
ஆழிசூழ் உலகுக் காதி பகவன்
பலநூல் படித்தும் பயனில்லை ஏதும்
தூயறி வுடையோன் தாளிணை தொழாரேல்
ரு. பிறந்திவ் வுலகில் பெருந்துய ராழ்வார்.
அன்புடன் நினைப்போர் உள்ளமலர் வாழ்வான்
விருப்பும் வெறுப்பும் இல்லா இறையவன்
அழியாத உண்மைப் புகழ் உடையோன்
இடைவிடா தெண்ணி அவனைப் புகழ்வோர்
க0. இருவினைப் பயன் அடையார் என்றும்.
அறமெல்லாம் சேர்ந்தோர் உருவாய் அமைந்தோன்
தனக்கொரு நிகர் இல்லாத் தலைவன்;
ஆசைகள் ஐந்தையும் அவித்த பெரியோன்
அருட்கடல் அன்னோன் நல்வழியிற் செல்வோர்
கரு. அழியாமல் இன்ப உலகில் வாழ்வார்.
தத்தம் தொழில்களுக் குதவாத ஐந்து
பொறிகளைப் போல பயனில வாகும்
எண்குணன் அவனை வணங்காத் தலைகள்
அவனியில் ஆழ்ந்து அவனை மறப்பார்
உ0. பிறவிக் கடலை நீந்தல் அரிதாம்
உலகை மறந்து அவனை நினைப்பார்
பிறவிக் கடலை நீந்தல் எளிதாம்
அகரமே எல்லா மொழிக்கும் முதல்போல்
ஆழிசூழ் உலகுக் காதிபகவன் ஆம்
உரு. ஆழிசூழ் உலகுக் கொருவனே தேவன்.

மேலைநாட்டு மெய்விளக்கம்

[திரு. சு. அன்புமலர், பி. ஏ. (ஆனர்சு)]

(சிலம்பு : உக, பரல் : ௫, உ௩0-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிரேக்கநாட்டு மெய்விளக்க ஆராய்ச்சி

பிளேட்டோ (Plato)[1]

சாக்ரடீஸின் அறக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு சினிக் (Cynic), சிரனியாக் (Cyraniac), மாகரிக் (Magaric) என்ற வகைமுறைகள் துவங்கப்பெற்றன என்பதைக் கடந்த இதழில் கண்டோம். ஆனால், அவற்றில் ஒன்றேனும் பல விரிவான கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டு அறச் செயல்கள் அளவிடப்படுகிற பொது முடிவு யாதெனத் தீர்ந்து கூறும் கருத்தாழம் நிறைந்த வகைமுறையாக உருப்பெறவில்லை. இருப்பினும், சாக்ரடீஸால் தோற்றுவிக்கப்பட்ட ஆராய்ச்சியை முழுமையாக்க அத்தகைய முயற்சியில் ஈடுபடுதல் இன்றியமையாததாக இருந்தது. அவர் சுட்டிக்காட்டிய பிரச்சினைகள் மேலும் ஆழ்ந்து ஆராயப்பட வேண்டியவைகளாக இருந்தன. அவை ஒன்றிற்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாகவும், வாழ்க்கையின் இறுதிநிலை என்ன என்ற பிரச்சினையோடு தொடர்புடையனவாகவும் இருந்தன. எனவே, அவற்றைப் பெரிய ஆராய்ச்சியின் உறுப்புக்களாகக்கொண்டு அவற்றின் உள்ளுறவுகளைக் கற்றுணராவிடில் அவைகளுக்குத் தகுந்த விடை காணுதல் முடியாதென்பது விளங்கிற்று. மனித வாழ்வு, மனித அறிவு, மனித ஒழுக்கம், மனித நிறுவனங்கள் (human

---

1. பிளேட்டோ கி. மு. 427-இல் நல்ல உயர்குடியில் பிறந்தார். இசை, கவிதை, ஓவியம், மெய்விளக்கம் ஆகியவைகளை இளம் வயதிலேயே கற்றார். கி மு. 407-இல் சாக்ரடீசின் மாணவரானார். கி. மு. 399-ல் சாக்ரடீஸ் இறந்தபின்னர், ஈஜிப்ட் (Egypt), ஆசியா மைனர் (Asia minor), இத்தாலி (Italy) முதலிய நாடுகளைச் சுற்றிவந்தார். ஆதென்ஸ் (Athens) நகரையடுத்த 'அக்கடமஸ்' (Academus) எனுந் தோட்டத்தில், 'அக்கடமி' (Academy) என்ற பெயரால் வழங்கிய ஒரு பள்ளிக்கூடத்தைத் துவங்கினார். கணிதம், மெய்விளக்க ஆராய்ச்சியின் பல்வேறு கிளைகள் ஆகியவற்றைக் கற்பித்துவந்தார். கி. மு. 347-இல் இறந்தார். அவர் மெய்விளக்க அறிஞர் மட்டுமன்று ; கவிஞர் (Poet) ; ஞானி (Mystic) ; ஒப்பற்ற தருக்க வல்லுநர் (Dialectician). அவரிடத்து மேம்பட்ட பண்புகள் குடியிருந்தன. பிறப்பால் உயர்குடி மகனான பிளேட்டோ எண்ணத்தாலும் உயர்குறிக்கொண்ட அறிஞராகத் திகழ்ந்தார். ஏறத்தாழ அவருடைய நூற்கள் அனைத்துமே அழிவுறாமல் நமக்குக் கிடைத்துள்ளன என்று கருதப்படுகிறது.

institutions) ஆகியவற்றின் ஆக்க நோக்கம் (meaning) என்ன என்ற வினவிற்கு விடை காணவேண்டுமெனின், இயற்பொருள் அல்லது மெய்ப்பொருளின் (Reality) ஆக்க நோக்கம் (meaning) என்ன என்பதற்கு விடை கண்டாகவேண்டும். ஏனெனின் முதலிற் குறித்த பிரச்சினைகள் இதைச் சார்ந்தனவே ஆகும். இதினின்றும் தனியாக அவற்றிற்கு விளக்கங்கள் பெறுதல் இயலாது. சாக்ரடீஸின் மாணவர்களில் தலைசிறந்து விளங்கிய ஆற்றல் மிக்க பிளேட்டோ இப்பணியை மேற்கொண்டார். அவர் அறிவு விளக்கக் கோட்பாடு (theory of knowledge), ஒழுக்க விளக்கக் கோட்பாடு (theory of conduct) அரசு விளக்கக் கோட்பாடு (theory of state) முதலியவற்றைத் தனித்தனியாக ஆக்கித் தந்ததோடல்லாமல் சிறந்த அனைத்துலகு விளக்கக் கோட்பாட்டையும் (theory of the universe) அமைத்துத் தந்தார்.

அறிவும் அறமும் செறிந்த வாழ்க்கையில் நின்றொழுகுதற்கு நன்மையைப் (good) பற்றிய அறிவைப் பெற்றிருத்தல் இன்றியமையாதது எனவும், அவ்வறிவைப் பெறுதல் இயலுவதே எனவும் சாக்ரடீஸ் எடுத்துரைத்தார் என்பதை முன்பு கண்டோம். அவர், உரையாடல் முறையால் உண்மை அறிவைக் கண்டுபிடிக்கும் கலையைத் தம் செயற்பழக்கத்திலே கையாண்டு வந்தாரே அன்றி, உண்மையை அடையும் முறையை விளக்கும் கோட்பாட்டை (theory of method) இயற்றவில்லை. பிளேட்டோவும் தம்முடைய நூல்களில் உரையாடல் முறைகளை வெகுவாகப் பயன்படுத்தியுள்ளார். ஆனால் அஃதோடு நின்றுவிடாமல் கையாளப்படுகிற முறையைக் குறித்தும், உண்மையின் தன்மையைக் குறித்தும் மேலும் ஆழ்ந்து சிந்தனை செய்தார். அதன் பயனாக, விவாதமுறையியல் (Dialectics) அல்லது வாய்வியல் (தருக்கவியல் Logic) என்ற விவாதமுறை விளக்கக் கோட்பாட்டையும் (theory of method) வகுத்துத் தந்தார். அதன் கண், பொதுமைக் கருத்துக்களைப் (concepts) படைப்பதும், புணர்ப்பதும் எவ்வாறு, அஃதாவது உண்மையை அடைதற்கு ஆதாரமான விவாத இயக்கங்கள் (logical operations) எவ்வாறு நிகழுகின்றன என்பதை விவரித்துரைக்கிறார். இதிலிருந்து தான் ஒழுங்கான வாய்வியல் (தருக்கவியல் logic) என்ற அறிவு விளக்கக் கோட்பாடு (theory of knowledge) துவங்கப்பெறுகிறது. உண்மையான பொதுமைக் கருத்துக்களையும் (concepts) தீர்ப்புரைகளையும் (Judgements) அடையும் வகையைக் கூறியதோடு பிளேட்டோ மனநிறைவு பெறவில்லை; அவற்றை அறிந்து அனுபவித்து இன்புறவேண்டும் என்பதே அவருடைய

அளவிறந்த ஆவலாகும். இயற்பொருள் அல்லது மெய்ப் பொருளைப் (Reality), பருப்பொருளியல் (Physical), மனவியல் (Mental), ஒழுக்கவியல் (Moral) என்ற அதன் பல தோற்றங் களிலும் உற்றறியவேண்டும்; அஃதாவது இயற்பொருளை அதன் ஒன்றித்த நிறைவான நிலையில் புரிந்துகொள்ளவேண்டும் என் பதே பிளேட்டோவின் குறிக்கோளாகும். உலகின் தன்மையை உய்த்துணராதவரையில் அறிவுப் பிரச்சினையை அலசி ஆராய்வது என்பது இயலாத காரியம் என்பதை அவர் நன்கு அறிந்து கொண்டிருந்தார். எனவே, இதைக் குறியாகக்கொண்டு சாக்ர டீஸின் கற்பித்தல்களுக் கிசைந்தவாறு ஒரு அனைத்துலகு வகை முறையை (Universal system) வகுத்துத்தந்தார். தம் மெய் விளக்க ஆராய்ச்சியை அவர் வாய்வியல் (தருக்கவியல் logic), புலங்கடந்த நுண்பொருளியல் (Metaphysics), ஒழுக்கவியல் (Ethics) என்று வெளிப்படையாகப் பகுக்கவில்லையெனினும், அத்தகைய பாகுபாட்டைப் பின்பற்றியே தம் நூல்களை எழுதி யுள்ளார். எனவே, நாமும் அப்பகுப்பைத் தொடர்ந்து அவரு டைய ஆராய்ச்சியின் போக்கை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

விவாதமுறையியல் (Dialectics)

அவர் வாழ்ந்த காலத்து, மெய்விளக்க ஆராய்ச்சியில் அறிவுப் பிரச்சினையே முதன்மையான இடம் பெற்றிருந்தது என்பதை அவர் நன்கு உணர்ந்தார். அக்காலத்து நடைபெற்ற ஆராய்ச்சியில் எழுந்த ஐய வினாக்களுககு ஆராய்ச்சியாளர் எத் தகைய விளக்கங்களைத் தந்தார் என்பது, அவ்வாராய்ச்சியாளர் அறிவின் தோற்றுவாயையும் (origin) அதன் தன்மையையும் (nature) குறித்து எத்தகைய கொள்கை உடையவராக இருந்தார் என்பதைப் பொறுத்ததாகவிருந்தது. உதாரணமாக, உண்மை யான அறிவைப் பெறுதல் இயலாது என்று சோபிஸ்தர்கள் (Sophists) முடிந்த முடிபாகக் கூறினர் என்பதை முன்பு கண் டோம். புலனுணர்வு (Sense - Perception), தற்கோள் (Opinion) ஆகியவற்றிலிருந்தே நாம் கையாளுகிற வாக்கியங்கள் (Propositions) பிறக்கின்றன என்ற கொள்கையைச் சரியெனக் கொள்வோமாகில் 'உண்மை அறிவைப் பெறமுடியாது' எனும் அவர்களுடைய முடிபும் முழுக்க முழுக்கச் சரியானதே. எவ் வாறெனின், புலனுணர்வு (Sense-Perception) வெறுந் தோற் றத்தை (appearance) நமக்கு விளக்குகிறதே அன்றிப் பொருட் களின் மெய்யியல்பை (true reality) விளக்குவதில்லை. அதே போன்று, தற்கோள் (opinion) மெய்யானதாகவும் இருக் கலாம், பொய்யானதாகவும் இருக்கலாம்; வெறும் தற்கோள் உண்மை அறிவல்ல; தற்கோள் நம்பிக்கையினின்றும் பிறப்ப

தாகும்; அது உண்மையென்று நிலைநிறுத்த முடியாதது. உண்மையான அறிவென்பது பகுத்தறிவு; காரண காரியத் தொடர்பு முறையில் பகுத்துப்பார்க்கின் சரியானதென்று நிலைநிறுத்தமுடிந்ததே மெய்யறிவாகும் எனவே சோபிஸ்தர்களுடைய கொள்கைப்படி பார்க்கும்பொழுது, மக்கள் எண்ணற்ற கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர்; ஆனால், அக்கருத்துக்களை ஏன் கொண்டிருக்கின்றனர் என்பதைத் தெரிந்து கொள்ளாமலும், அக் கருத்துக்களுக்கும், நோக்கங்களுக்கும் ஆதாரமென்ன என்பதைத் தெரிந்துகொள்ளாமலும் அவற்றைக்

அறத்தைபற்றிய கொள்கையிலும் இந்நிலைதான். அஃதாவது, அறச்செயல்களும் புலனுணர்வினின்றும் (Sense-Perception), தற்கோளினின்றுமே (opinion) பெருகிவளருகின்றன; மக்கள் எத்துணையோ செயல்களைச் செய்கின்றனர்; ஆனால், எதற்காக அச்செயல்களைச் செய்கின்றனர் என்பதைத் தெரிந்து கொள்ளாமலே செய்கின்றனர்; ஈ, எறும்புகளைப்போலப் பழக்க வழக்கங்களையொட்டி இயல்பூக்கப் போக்கில் (instinctively) செயல்களைச் செய்கின்றனர்; அவர்களுடைய செயல்கள் இன்பமும், துன்பமும் கருதித் தன்னலத்தால் தூண்டப்பட்ட செயல்களாக இருக்கின்றன என்பவையே சோபிஸ்தர்களின் விளக்கமாகும். இங்குத்தான் அவர்களுடைய தவறு வெள்ளிடை மலையென விளங்குகிறது. அவர்கள் தோற்றத்தையும் (appearance) இயற்பொருளையும் (Reality) தாறுமாறாகப் புரிந்து பிரித்துணரமுடியாது மயங்கினர். எனவே புலனுணர்வு (Sense-Perception), தற்கோள் (opinion) ஆகியவை தோற்ற நிலைகளே (appearance) எனவும், அவற்றில் நீங்கிய உண்மையறிவே மெய்ப்பொருள் (Reality) எனவும் விளக்கிக்காட்டி, அம்மெய்யறிவை அடையும் வகையையும் வகுத்துத்தந்தவர் பிளேட்டோவே யாவர்.

(தொடரும்)

திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை

(சிலம்பு : உக, பரல் ூ: , உ0சு-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்கருத்தானே,

‘ கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதி
னாராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.’ (நாலடி - கஙௌ)

என்றார் பிறருமென்பது. கசடறக் கற்றலாவது, ஐயமும் மயக்கமுந் தீரக் கற்றல். கற்றதற்குத் தக நிற்றலாவது, அந் நூல்கள் கூறிய நெறியானே அறஞ்செய்து பொருளீட்டி இன்பந் துய்த்து வீடுபெற நிற்றல். இக்கருத்தானே பிற்காலத் தௌவைப்பிராட்டியாரும், ‘வீடுபெற நில்’ என்பாராயினர். ஆசிரியர் நூன்முகத்தே ‘கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ—னற்றா டொழாஅ ரெனின்,’ (உ) என்றதும் இது நோக்கிற்று.

கற்கத் தக்கனவற்றைக் கற்கவென்றதிது. (க)

கற்கத் தக்கனவற்றுள் இன்றியமையாதன கூறுவது வருங் குறள் :

ௗகூஉ. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

(இ - ள்.) (அறியாதார்) எண் என்ப - தருக்கம் என்று சொல்லுவனவும், ஏனை எழுத்து என்ப - அதனின் வேறாகிய இலக்கணம் என்று சொல்லுவனவும், இவ்விரண்டும் - ஆகிய இவை இரண்டனையும், வாழும் உயிர்க்கு - (பயன் கருதி) வாழும் (சிறப்புடைய மக்கள்) உயிர்க்கு, கண் என்ப - கண் என்று சொல்லுவர் (அறிவுடையோர்) (எ - று.)

(இ - து.) தருக்கமும் இலக்கணமும் மக்களுயிர்க்கு இரு கண்போலும் என்பர் அறிவுடையோர் (எ - ம்.)

நூலாவது அதனை இயற்றினார் கருத்தை வெளிப்படுக்கும் சொற்றொகுதி யன்றே. ஆகவே கருத்துஞ் சொல்லும் முறைப் பட அமைந்தாலன்றி நூல் செவ்வியின் அமைவதுமில்லை, பயன் கொள்ளப்படுவதுமில்லை. ஆதலான் நூலை இயற்றுதற்கும் இயற்றிய நூலை அறிதற்கும் கருத்தின் அமைதி ஆமாறும் சொல்லின் அமைதி ஆமாறும் இன்றியமையாது அறியற்பாலன

வாம். எனவே நூற்பொருளுணர்தற்கு அவையிரண்டும் கருவி யாதல் பெறப்படும். கருத்தின் அமைதி ஆமாறு தருக்கம் எனவும் சொல்லின் அமைதி ஆமாறு இலக்கணம் எனவும் வழங் கப்படும். கருத்தாவது எண்ணமாதலின் தருக்கம் எண் எனவும், சொல்லாவது எழுத்தாலாதலின் இலக்கணம் எனவும் கூறப்படும். தருக்கம், எண், அளவை, ஏரணம் என்பன ஒரு பொருட் கிளவி. எழுத்து இலக்கணம் என்பன ஒருபொருட் கிளவி. எண்ணு மெழுத்தும் தருக்கமும் இலக்கணமு மாதலே 'ஏரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்' (திருக்கோவையார் - நூற்சிறப்பு) என்புழியுங் காண்க. எண் ணென்பது கணிதம் என்றார் ஆசிரியர் பரிமேலழகர். தருக்கம் கணித நூலுக்கு உறுப்பாமாதலின் அஃதொக்கும். உலகத்துப் பொருள்களைக் காண்டற்குக் கண் கருவியாதல்போல, நூற் பொருள்களை அறிதற்குத் தருக்கமும் இலக்கணமும் கருவியாத லின் அவை கண் எனப்பட்டன. எனவே, இவை கூறும் நூல் களும ஏனை நூலுணாசசிககுக கருவ நூலகளாயின. வாழும் உயிர்க்கு என்றது பயன் கருதி வாழும் உயிர்க்கு என்றவாறு. பிறந்தவாறும் வாழுமாறு மறியாது பசித்தாலுண்டு, களைத்தா லுறங்கி, தளர்ந்தால் இறக்கும் விலங்கினங்களும் அவற்றோ டொத்த ஒருசார் மானுடங்களும் போலாது, நிலையான இன் பத்தை யடைதலே வாழ்க்கையின் பயன் என்றுணர்ந்து அப் பயனிற் கண்வைத்து அறம் பொரு ளின்பங்களை ஆய்ந்து கொள்ளும் சிறப்புடைய மக்களைச் சுட்டி, அவர்க்கே இவை கண்போல் சிறக்கும் என்பார், 'வாழு முயிர்க்கு' என்றார். அவர் கருதும் பயன் பிற நூலுணர்ச்சிக்குக் கருவி மாத்திரையா யுள்ள இவற்றாற் பெறுமா றெங்ஙனமோ வெனின், நிலையான இன்பம், நிலையாததும் துன்பக் கொள்கலமுமான மக்களுடம்பு கருவியாகப் பெறப்படுமாறு போலப் பெறப்படுமென்க. கருவி யாதலின் உடம்பு சிறந்தாற்போல இவையுஞ் சிறக்குமெனவுங் கொள்க. இதுபற்றி யன்றே,

> "ஆதி முதலொழிய வல்லா தனவெண்ணி
> னீதி வழுவா நிலைமையவான்—மாதே
> யறம்மார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
> றிறமாமோ வெண்ணிறந்தாற் செப்பு."

> "எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
> மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
> முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
> கட்டறுத்து வீடு பெறும்."

என்னும் பாக்கள் எழுவவாயின என்பது. என்ப என்றவற்றுள்

முன்னைய இரண்டும் எனப்படுவன என அஃறிணைப் பன்மை
வினையாலணையும் பெயரும், பின்னையது என்பர் என உயர்
ப் பன்மை வினைமுற்றுமாம்.

எண்ணு மெழுத்துங் கண்ணு மென்றதிது. (உ)

அவை கற்றோரே கண்ணுடையார் என்பது வருங் குறள் :

௩௯௩. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

(இ - ள்.) கற்றோர் - (கருவி நூல்களைக் கற்று அவை கருவியாக ஏனை நூல்களுள் கற்பவற்றைக்) கற்றவரே, கண்ணுடையர் என்பவர் - கண்ணுடையவர் என்று சொல்லத் தக்கவர்; கல்லாதவர் - (கருவி நூல்களையும் அவை கருவியாகக் கற்கப்படுபவற்றையும்) கல்லாதவர், (கண்ணுடையவரே யாயினும்) முகத்து - (தம்) முகத்தில், இரண்டு புண்ணுடையர் - இரண்டு புண்ணுடையவரே (யன்றி இரண்டு கண்ணுடையவராகக் கருதப்படார்.) (எ - று.)

(இ - து.) கற்றவர் கண்ணே கண்; ஏனையார் கண் புண் போலும். (எ - ம்)

காண்டற்குக் கருவி கண்; கா[...]
துங் குருடரே. அங்ஙனமே கருவிநூல் கற்றவழியும் கற்பவை கல்லார் கல்லாதவரே யாவர். ஆதலின் பொதுப்படக் 'கற்றோர்' என்றார். ஊனக் கண்போலக் காலத்தானும் இடத்தானும் வரையறைப்படாதது ஞானக்கண்ணாதலின், கல்வியாலது பெற்றோரைக் 'கண்ணுடையார்' என்று சிறப்பித்தார். ஊனுவதெல்லாம் புண்ணாதலின் (குறள் - உ௫௭) ஊனக்கண்ணன்றி ஞானக் கண் இல்லாதார் 'புண்ணுடையர்' எனப்பட்டார்.

கற்றார் சிறப்புங் கல்லாதார் இழிவுங் கூறியதிக் குறள். (௩)

கற்றார் தன்மை கூறுவது வருங் குறள் :

௩௯௪. உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

- ள்.) (யாவரையும்) உவப்ப - (அவர்) மகிழுமாறு,
- சந்தித்து, உள்ள - (இனி இவரை யாம் சந்திக்கக் கிடைக்குமோ என அவர்) நினைக்குமாறு, பிரிதல் - (அவரை) நீங்குதலாகிய, அனைத்து - அதுதன்மைத்து, புலவர் தொழில் - கற்றறிந்தாரது தொழில். (எ - று.)

(இ - து.) தமது கூட்டுறவைப் பலரும் விரும்பிடுந் தன்மையுடையோர் கற்றோர். (எ - ம்.)

தம்மைச் சந்தித்தவர் எஞ்ஞான்றும் அச் சந்திப்பை உவகையோடு உள்ளவைத்துப் பிரிதல் எனினும் அமையும். உரையும் ஒழுக்கமும் தொழிலா யடங்கும். நன்னெறி ஒழுகிக் காட்டுதலும், இனிமையும் பயனுமுடையன சொல்லுதலும் கற்றோர் செயற்பால. அவை செய்தவழிப் பலரும் அவர் நட்பை விரும்பி அவர்பால் அன்புடையராவர் என்பதாம்.

கற்றோர் தன்மை கூறியதிது. (௪)

கற்றோர் உயர்வும் மற்றோர் தாழ்வுங் கூறுவது வருங் குறள் :

௩௯௫. உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

(இ - ள்.) உடையார்முன் - செல்வ ரெதிரே, இல்லார் போல் - வறியர் (நிற்குமாறு) போல, ஏக்கற்றும் - (கல்வி ஞசையால் ஆசிரியர் எதிரே) தாழ்ந்துநின்றும், கற்றார்-கற்றுப் புலமை எய்தினோர் (தலையாயினார்); கல்லாதவர் - கல்வி யில்லாதவர் (செல்வ முதலியவற்றால் உயர்ந்து எவர் முன்னுந் தாழ்ந்து நின்றறியாதவ ராயினும்), கடையரே - (எஞ்ஞான்றுந்) தாழ்ந்தவரே. (எ - று.)

(இ - து.) ஆசிரியர்முன் தாழ்ந்து நின்று கற்றோர் உயர்ந்தவராவர்; கல்லாதவர் தாழ்ந்தவ ராவர். (எ - ம்.)

ஏக்கறுதல் - தாழ்ந்து நிற்றல். கல்லாதவர் கடையர் எனவே அதன் மறுதலையாய கற்றார் தலையாயார் என்பது தானே போதரும். ஆதலின், கற்றாராமாறு பெறுவித்தற்கு இன்றியமையாத சொற்களைக் கூறி எஞ்சிய தலையாயார் என்பது இசையெச்சமாக்கினார். எனவே, கற்றுப் புலமை நிரம்புதற்கு ஆசிரிய வழிபாடு இன்றியமையாததென்பதும், குரவனை வழிபடக் கூசிக் கல்லா தொழிந்தவர் பின்னர்ப் பலர் முன்னுங் கூசித் தாழ்ந்து நிற்பரென்பதும் பெறப்படும்.

'வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான்.'

என்ற பிற்காலச் செய்யுளும் ஈண்டு நோக்கற்பாலது.

கற்றார் உயர்வுங் கல்லார் தாழ்வுங் கூறியதிது. (௫)

கல்வியின் சிறப்புக் கூறுவன வரும் ஐந்து குறள்கள் :

௩௯௬. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

(இ - ள்.) மணற்கேணி - மணலின்கட் கேணி, தொட்டனைத்து - தோண்டிய அளவாக, ஊறும் - சுரக்கும்; (அது போல) மாந்தர்க்கு - மக்களுக்கு, அறிவு-, கற்றனைத்து - கற்ற அளவாக, ஊறும் - சுரக்கும். (எ - று.)

(இ - து.) தோண்டிய அளவாகக் கிணற்றில் நீர் சுரப்பது போலக் கற்ற அளவாக மக்களுக்கு அறிவு சுரக்கும். (எ - ம்.)

நளம். இது திசைச்சொல். ஈண்டுத் தன் கணுள்ள நீரை யுணர்த்தி இடவாகுபெயராய் நின்றது. சிறிது தோண்டிப் பின்னர் விடின் நீர் சுரவாததோடு தோண்டிய உழைப்பும் வீணாதல்போலச் சிறிது கற்றுப் பின்னர் அதனை யொழியின் அறிவு சுரத்தலின்றாதலோடு கற்ற கல்வியும் பயனில தாம் என்பதாயிற்று. எனவே மேன்மேற் கற்றல் வேண்டு மென்பதாம். அங்ஙனங் கற்றவழி அறிவு பெருகுமென்பது. இஃது ஊழ் மாறுகொள்ளா வழியாதலின் மேல் 'உண்மை யறிவே மிகும்' (குறள் - ௩௭௩) என்றதனோடு மலையாமை யறிக.

கல்வி இருமைக்கு மாவதாகிய அறிவுபயக்கு மென்றது. (௬)

இம்மை பயக்குமாறு கூறுவது வருங் குறள் :

௩௯௭. யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

(இ - ள்.) (கற்றவனுக்குத் தன் நாடும் தன் ஊருமே யன்றி) யாதானும் நாடாம் ஊராம் - யாதாயினுமொரு நாடும் நாடாம், யாதாயினுமோர் ஊரும் ஊராம்; (இங்ஙனமாகவும்) ஒருவன் சாந்துணையும் - ஒருவன் தான் இறக்குமளவும், கல்லாதவாறு - கல்லாமற் கழிகின்றது, என் - என்ன (அஃதொரு வியப்பாகின்றது) (எ - று.)

(இ - து.) சென்ற விடமெல்லாம் சிறப்பைத் தருவது கல்வியாகவும், அதனை ஒருவன் கல்லாது காலங்கழித்தல் அறிவீனம். (எ - ம்.)

ஆல் இரண்டும் அசைநிலை. பிறவிடமும் தம்மிடம் போலு மென்றது, யாண்டும் சீரும் சிறப்பும் உண்டா மென்றவாறு. கற்கக் கற்க அறிவு மிகுமாதலின், சாந்துணையுங் கற்றல் வேண்டு மென்பதாயிற்று. செத்த பின்னும் உயிர்க்குத் துணையாவது கல்வியென்பது மேற் கூறுகின்றாராதலின் அது நோக்கிச் 'சாந்துணையும்' என்றார் எனலுமாம்.

கல்வியின் இம்மைப் பயன் கூறிய திது. (௭)

மறுமைப் பயன் கூறுவது வருங் குறள் :

௩௯௮. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, ஒருமைக்கண் - ஒரு பிறப்பின்கண், தான் கற்ற கல்வி-, எழுமையும் - ஏழு பிறப்பினும், ஏமாப்பு - (சென்று) துணையாதலை, உடைத்து - உடையது. (எ - று.)

(இ - து.) ஒருவன் ஒரு பிறப்பிற் கற்ற கல்வி அவனுக்கு ஏழுபிறப்பினும் துணையாம். (எ - ம்.)

ஒருவன் செய்த அறம் அவன் உயிரொடு சென்று பிறவி தோறும் அவனுக்குத் துணையாதல்போலக் கல்வியுந் துணையா மென்றவாறு.

எனவே, கல்வி அறத்தோ டொப்ப தென்றதிது. (அ)

கல்வி இன்பமா மென்பது வருங் குறள் :

௩௯௯. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

(இ - ள்.) கற்றறிந்தோர் - கற்றுப் புலவராயினோர், தாம் இன்புறுவது - தாம் இன்புறுதற் கேதுவாகிய கல்விக்கு, உலகு இன்புற - உலகம் இன்புறுதலால், கண்டு - (அச்சிறப்பு) நோக்கி, காமுறுவர் - (பின்னும் அக் கல்வியைக் கற்றலையே) விரும்புவர். (எ - று.)

(இ - து.) கற்றோர் தமக்கே யன்றிப் பிறர்க்குந் தங் கல்வி யின்பமாதல நோக்கி மேலும்மேலுங் கற்றலையே விரும்புவர். (எ - ம்.)

தாமின்புறுதலாவது கற்குங்காலைத் தாம் சொல்லின்பமும் பொருளின்பமும் நுகர்தலேயன்றிப் புகழும் பொருளும் எய்தி இன்புறலும் மேல் அது பிறவித்துணையாகித் தரும் வீடுபெற்று

இன்புறலுமாகி இன்பம் தமக்கு இடையறாதாதல். இங்ஙனம் கல்வி இன்பமும் பயனும் ஒருங்களித்தல் கரும்பு தின்னக் கைக்கூலி போல்வதாம். உலகின்புறுதல் 'உவப்பத் தலைக்கூடு' லான். (குறள் - ௩௯௪).

இன்பமாதல் கூறிய திது. (௯)

பொருளுமாதல் கூறுவது வருங் குறள் :

௪00. கேடில் விழுச்சேல்வங் கல்வி யோருவற்கு
மாடல்ல மற்றை யவை.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, கேடில் - அழிவில்லாத, விழுச்செல்வம் - சிறந்த செல்வமாவது, கல்வி-கல்வியாம்; மற்றையவை - அஃதொழிந்த பொன்னும் மணியும் முதலாயின, மாடல்ல - செல்வமல்ல. (எ - று.)

(இ - நு.) ஒருவனுக்கு அழியாத செல்வமாவது கல்வியே; பல்ல. (எ - ம்.)

கேடில்லாமையாவது, வலியரால் கொள்ளப்படாமையும் குறையாமையும். விழுப்பமாவது தானும் சிறப்புற்றுத் தன்னைப் பெற்றாரையும் சிறப்பித்தல். இவை யிரண்டும் மணி பொன் முதலாயினவற்றுக் கின்மையின் அவை மாடல்ல வாயின். கல்வி கேடில் விழுச்செல்வ மாதலை, 'இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்—றம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றால்' 'வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை—மிக்க சிறப்பி னரசர் செறின் வவ்வார்' என வரும் (௧௩௩, ௧௩௪) நாலடிப் பாட்டுக்களான் அறிக. பொருட் சிறப்புப் போற்றப்படுவதாயினும் கல்வியை நோக்கச் சிறப்பிலதாதலின் 'மாடல்ல' என்றார்.

இவை யைந்து பாட்டானும் கல்வியது சிறப்புக் கூறப் பட்டது.

இவ்வதிகாரத்தில், முதற் குறளால் கற்கப்படுவன கற்குமாறு மவை கற்றற் பயனும், அடுத்த குறளால் கற்கப்படுவன வற்றுள் இன்றியமையாதனவும், அடுத்த குறளால் கற்றார் சிறப்பும் கல்லா ரிழிவும், அடுத்த குறளால் கல்வியிற் சிறந்தார் தன்மையும், அடுத்த குறளால் அவர் உயர்வும் ஏனையார் தாழ்வும், இறுதி ஐந்து குறள்களாற் கல்வியின் சிறப்பும் கூறப் பட்டன. (தொடரும்)

குளவியும் தேனீயும்*

[கோபாலை திரு. வே. பெருமாள்]

அன்பீர்! நண்பீர்! அனைவருங் கேண்மின்
தன்னே ரில்லாத் தேனீ யொன்றைக்
குரலுடைக் குளவி வரவுகாண் டலும், "என்
மரபிற் றோன்றிய மாண்புறு உறவினாய்
நின்போல் யானும் என்றோ மக்களால்
நன்னீர் மையனென் று நச்சப் படாமல்
கண்டதும் வெறுத்துக் கொலைசெயப் பார்க்கிறேன்
பண்பிலே னென்னப் பகரவும் படுகிறேன்
ஒளிதிகழ் முதுகுடன் ஒண்மாண் எழிலும்
௧௦. களிகொடு பொன்னிறங் காட்டும் செய மேனியும்
உடையனா யிருந்தும் உலகினர் இவ்விதம்
படைபோ லெதிர்க்கப் பார்க்கின் றனரால்
நண்ப! இதனை நவில்வாய் எதனால்
என்னினும் நீபண் புளனெனப் பகர்வது."
"உறவின் மிக்க வுயரெழில் நண்ப!
உற்றவற் றையே உரைத்தா யெனினும்
நின்போ லதிக நிந்தைகள் நிகழ்த்தாது
பன்னலம் பயக்கும் பயனுடைத் தேனை
விரும்பியே என்னை விழைகின் றனரால்;
௨௦. மறுவறு ஒளிகள் மிளிரும் நின்னை
எழிலால் விரும்புவர் எனினும் கொட்டும்
பழிச்செயல் தானினைப் பயனில தாக்குமால்;
பிழைமலி எழிலைப் படைத்த என்னை
விழைவ தென்றன் கொடுமை யின்மையும்
சுறுசுறுப் புடைமையும், தேன்தரு தன்மையும்
மறுவறு மக்களால் மதிக்க வைக்குமால்"
என்றே புகன்றீ யேகிய தன்றே.
எத்துணை எழில்கள் ஏற்றிருப் பினுமவர்
௨௬. பித்துறு செயல்கள் புரிவதென் பெரிதே.

கதைச் சுருக்கம் :- குளவி யொன்று தேனீயைக் கண்டது. 'நண்ப! நான் உன்னைவிட எவ்வளவோ அழகு பெற்றிருக்கிறேன்; மக்கள் உன்னை விரும்பும் அளவுகூட என்னை விரும்பவில்லையே; காரணம் என்னையோ?'

* புலவர் Anon எழுதிய "Awasp and ABee" என்னும் ஆங்கில நூல் மொழி பெயர்ப்பு.

அறுபதாம் ஆண்டுநிறை அணிவிழா வாழ்த்து*

[பெருநாவலர் திரு. பு சி. புன்னைவனநாத முதலியார்]

சொல்மேவும் வேணுவன நாதன்அடித்
துணைப்போதெப் போதும் போற்றும்
அல்மேவும் அறக்கூந்தல் அறம்வளர்த்த
வடிவாள்நம் அன்னை முன்னாம்
பல்மேவும் முகச்சித்தி விநாயகனை
அளித்தாள்அப் பகவன் தன்உள்
இல்மேவும் தெய்வம்என வழிபடுசீர்
எழில்சுப்ர மணிய வேளே !

மேவுமுயர் வானம்என விளங்குமணி
மாளிகைநன் கமைத்தாய் வண்ணப்
பாவுரைசெய் புலவர்வறி ஞர்வறுமைப்
பாடறிந்துள் உவப்ப ஈவாய்
காவுடன்நீர்க் குழாய்காந்தி உருவகுத்தாய்
கருதுகுடி அரசு நாளில்
மேவுதிருப் பணிப்பிள்ளை யார்உருவம்
எழுந்தருளு வித்தாய் நன்றே.

நன்றெண்ணும் மதியுடையாய் நாவலர்சொற்
பொருளுணர்வாய் நாளும் அல்லோர்
அன்றெண்ணும் பரம்பொருளை ஆம்என்னும்
படிசெய்யும் அருளே பூண்டாய்
குன்றென்னும் குணமுடையாய் கோதறுநல்
உளம்படைத்த கோவே வேலை
அன்றன்று செய்தொழிலர் ஆர்வமுற
மகிழ்விக்கும் அன்பால் மிக்கோய்.

---

* திருநெல்வேலி ஆயத்த அணிகல அங்காடி அதிபரும், சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத் தலைவரும் ஆன உயர்திரு. மு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களுக்கு 26-1-1955-இல் நடைபெற்ற 60-ஆம் ஆண்டு நிறை அணிவிழாவின்போது வாழ்த்திப் பாடிய பாடல்கள்.

ஆர்கலிசூழ் புவியினிடை ஆறுபத்
 தாண்டுநிறை அணிவி ழாக்கள்
பேர்பெறவே செய்தவர்நற் பெற்றியுணர்ந்
 துள்ளோம்நற் சமயச் சார்பில்
சீர்பெறநல் அறிஞர்துணை யாற்கும்ப
 வழிபாடு வேள்வி செய்தோர்
பார்புகழ மூவிருப தாண்டுநிறை
 மணிவிழாக்கொண் மணியே காணோம்.

கொண்டல்நிகர் கொடைவளத்தாய்! கோதறுநற்
 றமிழ்வளர்க்குங் கொள்கை கொண்டாய்
தண்டமிழ்ச்சங் கத்தலைவ தமிழ்ச்சங்கம்
 சைவசித் தாந்த சங்கம்
எண்டகவே போற்றுதலால் இரவிமதி
 யுள்ளவரை இல்வாழ்க் கைச்சீர்ப்
பெண்டகவார் சிவகாம சுந்தரியோ
 டினிதூழி பிறங்க வாழி.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) குசராத்தியில் தாய்மொழிக்கு முதலிடம்

கடந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் குசராத்தி பல்கலைக் கழகத்தார் கல்லூரி முதல் வகுப்பில் கலை, விஞ்ஞானம் முதலிய பாடத்தேர்வுகளைக் குசராத்தி மொழியிலேயே நடத்துவதென்றும், பாடங்களைக் கற்பிக்கும் மொழியும் குசராத்தி மொழியாகவே யிருத்தல் வேண்டுமென்றும் முடிவு செய்திருந்தனர். பல்கலைக் கழகத்தாரின் இந்த முடிபுக்குப் பம்பாய் கவர்னர், அப் பல்கலைக்கழக வேந்தர் என்ற முறையிலே தமது ஒப்புதலை அளித்து விட்டார்.

மேல் வகுப்புகளில் குசராத்தி மொழியிலேயே கல்வி கற்பிக்கவும் அப் பல்கலைக்கழகம் முடிவு செய்திருக்கிறது; இத்திட்டம் விரைவில் செயல் முறைக்கு வருமெனத் தெரிகிறது.

குறிப்பு: குசராத்தி பல்கலைக் கழகத்தாரின் முடிபும், அதற்கு ஆட்சியாளர் காட்டி வரும் நன்மதிப்பும், பண்பும் பயனும் உடைத்தா யிருத்தல் பாராட்டத் தக்கது. தாய்மொழி மூலம் கல்வி கற்பித்தல் வேண்டும் எனத் தமிழகம் நெடு நாட்களாகக் கேட்டு வந்தும் சென்னை ஆட்சியாளர் இன்னும் செயல் மறந்திருப்பது ஏனோ தெரியவில்லை!

(உ) **நம் கல்வியமைச்சரின் தாய் மொழிப்பற்று :**

சென்ற 18-2-55 இல் நடைபெற்ற தமிழ்வளர்ச்சிக் கழகப் பரிசளிப்பு விழாவில் பேசிய சென்னை மாநிலக் கல்வி அமைச்சரவர்கள், தமிழகத்தார் உள்ளம் குளிரும் வகையிலே, 'கல்லூரிகளில் தமிழே பயிற்சி மொழியாகவேண்டும்; கல்லூரிகள் இப்பணியை மேற் கொள்ளாவிட்டால் அரசியலார் தலையிட்டு அதனை வற்புறுத்த நேரிடும்' எனப் பேசியுள்ளார்.

குறிப்பு : அமைச்சரின் ஆர்வத்தையும் துணிவையும் கண்டு மகிழ்பேருவகையடைகிறோம். ஆனால், இவ்வளவு நாட்கள் கழித்து, கழகத்தின் உள்ளக்கிடக்கை அறிந்திருந்தும், தமிழை ஆட்சிப்பீட மேற்றும் ஆணையைக் கையகத்தே வைத்துக் கொண்டு, சட்டத்தின் துணைக்கொண்டு அதனைச் செயற்படுத்தாமல் ஆட்சியாளர்கள் வாளா விருப்பது தாயகத்துக்கு நலஞ் செய்வதாகாது.

(௩) **டாக்டர் உ. வே. சாமிநாதையரின் நூற்றாண்டு விழா :**

தமிழ் மொழிக்கு ஆக்கஞ் செய்த பெரியார் பலராவர். அவருள் அண்மையில் மறைந்த தமிழ்ப் பெரியார் உ. வே. சாமிநாதையரவர் களும் ஒருவராவர். அன்னாரின் நூற்றாண்டு விழா 18, 19, 20-2-55ஆம் நாட்களில் சென்னையில் பல்லிடங்களில் நிகழ்வுற்றன. அறிஞர் பலர் ஐயரவர்களின் தொண்டினைப் பாராட்டிப் பேசினர். சங்ககாலச் சுவடிகளை அச்சுக்குக் கொணர்ந்து நாட்டுக்குதவிய அவர்தம் தொண் டினை நாடு என்றும் பாராட்டற்குரியது. தமிழ்ப் புலவர்களைக்கொண் டாடி விழாவெடுக்கும் இந்நற்காலம் பெருகுவதாக.

(௪) **மிகப்பெரிய திமிங்கில மீன் :**

தரங்கம் பாடிக்கு அருகே புதுப்பேட்டை என்னும் செம்படவச் சேரியின் பக்கத்தில் கடற்கரை ஓரமாக நூறடி நீளமும் ஐந்தடி அகலமும் மூன்றடி உயரமுமுள்ள திமிங்கில மீன் ஒன்று 27-2-55 ஆம் நாளன்று அலைகளால் ஒதுக்கப் பெற்றது. திமிங்கிலத்தின் விலா எலும்பின் நீளம் இருபது அடியும் உயரம் ஒன்றரை அடியும் அகலம் முக்கால் அடி அளவும் உள்ளன.

திமிங்கிலம் அழுகிய நிலையில் இருப்பதாகவும் தரங்கம் பாடிக் கடற்கரை யருகில் அதை வைக்கப்பட்டிருப்பதாகவும் மீன் இலாகா அதை ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் செய்தித் தாள்களின் வழி அறிகின்றோம்.

(௫) **திருப்பேரூர் சாந்தலிங்க அடிகளார் குருபூசை விழா :**

நாளது சய ஆண்டு மாசித்திங்கள் 21, 22, 23 நாட்களில் (5, 6, 7—3—55) சனி, ஞாயிறு, திங்கட்கிழமைகளில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் குருபூசை விழாவும், அதனையொட்டி, தமிழ்க் கல்லூரி, பள்ளி விழாக்களும் நடைபெற்றன.

7—3—55 திங்களன்று முற்பகல் **குருபூசை விழா** வழிபாடுகளும், இரவு **சாந்தலிங்கப்பெருமான் திருவீதியுலாவும்** நடைபெற்றது. அறிஞர்கள் பலர் அவ்வப்போது தலைமை பூண்டும் சொற்பொழி வாற்றியும் சிறப்பித்தனர்.

மதிப்புரை

(க) துகளறு போதம்

[ஆசிரியர்: சீகாழிச் சிற்றம்பலநாடிகள்; உரையாசிரியர்: அச்சுவேலியூர் ஈசான சிவன்; பதிப்பாளர்: இரத்தினம் பிள்ளை, திக்கம் வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம், இலங்கை; பக்கம்: 50; விலை அணு 14.]

இந் நூல் சீகாழிச் சிற்றம்பல நாடிகள் திருவாய் மலர்ந்தருளியது. சித்தாந்த நுண் பொருள்களைச் செம்மையாக மலைவறத் தெளிவிப்பது. முப்பது பிரிவுகளாகப் பகுத்து முப் பொருள் உண்மை விளக்கமுறச் செப்புவது. ஒரு நூறு வெண்பாக்களை உடையது. வெண்பாக்கள் எளிமையும் இனிமையும் ஆற்றொழுக்கும் கொண்டு திகழ்வன. இந் நூலின் பொருளுண்மை விரிவு, திருச்சிற்றம்பலக் கோவையார் என உரையாசிரியர் உய்த்துணர்ந்து விளக்குவது சாலப் பொருத்தமேயாம்.

இந் நூற்கு அமைந்த சீரிய உரை சித்தாந்தப் பொன் திறவு கோலெனப் புகலின் பொய்யாகாது. உரை திட்ப நுட்பம் செறிந்து, சித்தாந்த உண்மை பொதுளுவது. வேண்டும் இலக்கணம் குறைவின்றிக் காண்பது. பல மலைவுகளையு முற்றும் ஒழிப்பது. உரையாசிரியர் இலக்கண, இலக்கிய, சித்தாந்த, செந்நெறி யொழுக்க மேம்பாடமைந்த சீரிய சான்றோராவர். ஈசானசிவனுர் என்னும் சிவதீக்கைப் பேறுடையார். திக்கம் செல்லையா என வழங்கும் சிறப்பினர். நுண் மாண் புலமையர். யாழ்ப்பாணத்துத் தொன்மைசேர் வேளாண் ரயர்.

இந் நூலினைப் பொதுவாகத் தத்துவ நூலாய்வாரும் சிறப்பாகச் சித்தாந்த சைவர்களும் வாங்கியும் வாங்குவித்தும் ஓம்புவார்களாக. அதன் வாயிலாக உரையாசிரியரவர்கள் எழுதிவைத்துள்ள இது போன்ற சித்தாந்த நுணுக்கங்களை அவர் தம்மகளுரை வெளியிடவூக்குவிப்பார்களாக.

(உ) திருக்குறள் அறத்துப்பால் துறவறம்

[ஆசிரியர்: மயிலை, சிவ. முத்து; வெளியீட்டாளர்: மாணவர் மன்றம், 17. இரத்தின முதலி தெரு, சென்னை-1; பக்கம்: 68; விலை அணு 6.]

இந் நூல் மறைந்த மாணிக்கம் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் நினைவாக அமைந்தது. உரையாசிரியர் மயிலை. சிவ முத்து அவர்களாவர். சென்னை மாணவர் மன்றத்தார் வெளியீடு. இனிய எளிய உரை என்னும் பெயருக்கேற்பச் சிறந்தது. எல்லாரும் கற்றுப் பயனெய்தற்கேற்றது. அன்பர்கள் வாங்கிப் போற்றுவார்களாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.



சிலம்பு உகூ — திருவள்ளுவர் ஆண்டு கக௲அகூ, பங்குனி — ஏப்ரல், 1955. — பரல் அ

“சைவசமயமே சமயம்”

தொன்மை

‘சைவ சமயம்’ என்பது வரலாற்றுக் காலத்துக்கு அப்பாற்பட்டது. கால எல்லை காண ஒண்ணாதது. ஏறத்தாழ இரு பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுள்ள வலிய சான்றுகள் அந்நாள் உலகெங்கெணும் வழங்கி வந்தது சைவ சமயமென மெய்ப்பிக்கின்றது. இன்னும் வெளிப்படும் புதை பொருளாராய்ச்சி முதலியவற்றால் அக்காலம் எத்துணை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் செல்லுமென்று இப்பொழுது அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. சைவம் சிவ சம்பந்தம் உடையது என்னும் பொருள் பயக்கும் ஒரு தூய செந்தமிழ்ச் சொல். எனவே, சிவசம்பந்தம் சைவம். சைவம் என்றாலும் சிவநெறி என்றாலும் ஒன்றே.

சிவநெறி தென்னாட்டில் தோன்றி உலகெங்கணும் விளங்கும் தொன்மைத் தூய தமிழ் நெறி. இவ்வுண்மை “தென்னாடுடைய சிவனே போற்றி” என்னும், திருவாசகத் திருமறையான் நன்கு விளங்கும். அம்மட்டோ அச் சிவநெறி உலகப் பொது நெறி. அவ்வுண்மை மேற்குறித்த அருட்டொடரை யடுத்து “எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி” என்னும் மறைத்தொடர் வலியுறுத்தும். சிவன் என்னும் சொல் இயற்கை இன்ப எழில் உருவினன் என்று பொருள் தரும். இறைவன் என்னும் சொல் இயைந்தியக்கும் இயற்கைத் திருவினன் என்னும் பொருளுடையதாகும்.

பொதுமை

இச் சிவநெறி ஒன்றே உலகில் முழுமுதற் கடவுட் பெயரால் விளங்கும் பொது நெறி. ஏனைய நெறிகள் அவ்வந்நெறியை

உலகிடைப் பரப்பிய தலைவர் திருப் பெயர்களால் நிலவுகின்றன. எடுத்துக்காட்டாகப் புத்தநெறி, சமணநெறி, கிறித்துவநெறி, முகம் மதியநெறி என வழங்குவதைக் காணலாம். நெறிகள் அனைத்தும் நன்றேயாயினும் பள்ளிக்கூட வகுப்புப் போலவும், ஏணிப்படி ஏற்றம் போலவும் ஒன்றுக்கு ஒன்று உறுதுணையாய்த் தன்னைச் சார்ந்தாரை உயர்த்தி உயர்வற உயர்நலத் துய்க்கும் ஒண்மை வாய்ந்தன என உண்மையுரைக்கும் திண்மை நெறி சிவனெறி யொன்றேயாம். ஏனைய நெறிகள் தத்தம் நெறி யொழித்து மற்றைய நெறிகள் பொய்ந்நெறிகள்—பாழ் நெறிகள் எனப் புகல்கின்றன. 'அறிதோறும் அறியாமை' காண்பது வாய்மை யெனினும் முன்னறிந்தது பின்னறிவதற்குப் பகைமையும் பாழு மன்றுகும். ஈண்டு அறியாமை என்பது புதிதாக அறியும் பொருண்மையினை முன்னறியாதிருந்ததேயாம். முன்னறிந்தது மாறுபட்டு அறியாமையாக முடிவதன்று. எடுத்துக்காட்டாக உண்மையாம் தனி மெய் முப்பத்தாறனுள் நிலம், நீர், நெருப்பு, காற்று என்ற நான்கு மெய்களுமே கண்ணுக்குத் தோன்றுவன. ஆதலின், அந் நான்குமே மெய் வேறில்லை என்று கொண்டவன் கருதல் அளவையான் வானம் உண்டெனக் கொள்ள நேரும் போது முன்னிவ் வானை அறியாமையான் மெய் நான்கு என நிலை நாட்டியது அறியாமையாக முடியும். மெய்—தத்துவம். காண்ட லளவைக்கு எட்டுவது உடல் மட்டுமே. உயிர் கருதலள வையால் கொள்ளுதல் வேண்டும். உயிர் நீங்கிய உடல், தொழிற் படக் காணவில்லை. ஆகையால், உயிரே உடம்புடன் இயைந்து அதனைத் தொழிற்படுத்துகின்றது எனக் கருதுகின்றோம். முன் உடம்பே உள்ளது உயிரில்லை என்று கூறுகிறவனுக்கு அக் காலத்து உயிரை அறியாம லிருந்ததே அறியாமை. உடலை அறிந்ததும் அறியாமையாகாது. அது போன்று ஒவ்வொரு நெறியும் ஓரோர் எல்லை வரை அறிந்து மேலுள்ளதை அறிய அவாவாமல் நின்றுவிடுகின்றது. அதனால், அவ்வந் நெறியினர் தங்கள் நெறியே நெறி ஏனைய வெல்லாம் அன்னவல்ல வென்று மயங்கிச் சொற்போரிட்டு மற்போரும் புரிந்து மாறுபட்டுக் கலாய்க்கின்றனர். தமிழ் நெறியாம் சிவனெறியாளர் முப்பத் தாறு மெய்யும் கொண்டவராதலால் ஒவ்வொரு நெறியினர்க்கும் அவ்வந்நெறிக்குத் தக்க பயன் உண்டு என உளமுவந்து உரைக் கின்றனர். இதனை விளக்கக் குருடர் யானையின் உறுப்புக்கள் ஒவ்வொன்றை மட்டும் தடவிப் பார்த்து அவ்வவ்வுறுப்பே யானை என்று தம்முள் போரிட்டனர். கண்ணுடையான் வந்து முழு யானையையும் கண்டு அவர்களுக்கு உண்மை உணர்த்தி அவர் தம் கலாத்தை அகற்றினன். எங்ஙனமென்றால் நீங்கள் சொல்லுவது ஒவ்வோர் உறுப்பு. ஒவ்வோர் உறுப்பும் தனித்தனி யானையாய்

யிடாது. அவ்வவ்வுறுப்புக்களைக் கொண்டு இயங்கும் உறுப்பியே யானை என உண்மை யுணர்த்துவதாகும்.

யானையின் காலைத் தடவிய கண்ணிலான் யானை உரல் போன்றது என்றனன். கையைத் தடவியவன் உலக்கை போன்றது என்றனன். வயிற்றைத் தடவியவன் மலை போன்றது என்றனன். காதைத் தடவியவன் முறம் போன்றது என்றனன். வாலைத் தடவியவன் துடைப்பம் போன்றது என்றனன். இவர்கள் ஒவ்வொருவர் சொல்லுவதும் உண்மை. ஆனால், அவை அனைத்தும் உறுப்பு. அவை சேர்ந்த பொதுமை உறுப்பியே யானை. உறுப்பைக் கூறுங்கால் யானைக்கால் முதலியவாகக் கூறுவோம். இவ் யானை மரம், கல் முதலியவற்றுளாயது. இது போலவே உறுப்பியாகிய கடவுள்நெறியைக் கூறுங்கால் 'சிவனெறி' என்று முழுமுதற் கடவுட் பெயரால் எல்லாரும் வழங்குகின்றனர். ஏனைய நெறிகளை உறுப்பியாகிய கடவுட் பெயரால் கூறாது உறுப்பாகிய வழிப்படுத்தோர் பெயரால் எல்லாரும் வழங்குகின்றனர். இவைகளாலேயே சிவனெறி அனைத்து நெறிகளையும் உறுப்புப்போல் தழுவும் உறுப்பியாகிய பொதுநெறி என்பது புலனும். இவ்வுண்மை வரும் திருப்பாட்டுக்களான் உணர்க.

> "விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயம் செய்தே
> எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்
> பரிவினாற் பெரியோ ரேத்தும் பெருவேளூர் பற்றி னானை
> மருவிநான் வாழ்த்தி யுய்யும் வகையது நினைக்கின் றேனே."
>
> (அப்பர், ௪. ௬௦—௯.)

எரிவு - ஒற்றுமையைக் கெடுத்து வேற்றுமையை விளைக்கும் மக்கட்காழ்ப்பு. இதற்குக் காட்டு மேலைநாட்டில் பழைமையாகிய கத்தோலிக்க நெறியை எதிர்த்துத் தோன்றிய புறநெறியாகிய புராட்டசற்றாண்டு நெறி. நம்நாட்டில் பழைமையாகிய சைவ நெறிக்கு மாறுபட்டுச் செய்த வைணவ நெறி. சைவ நெறி முழுமுதற் கடவுள் பிறப்பிறப்பிலான் - அவன் சிவன் என்று கூறுகின்றது. வைணவ நெறி பிறப்பிறப்புள்ளவன் கடவுள் - அவன் திருமால்எனக் கூறுகின்றது.

> "ஓதுசம யங்கள்பொருள் உணரும் நூல்கள்
> ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
> யாதுசம யம்பொருள்நூல் யாதிங் கென்னின்
> இதுவாகும் அதுவல்ல தெனும் பிணக்க தின்றி
> நீதியினா லிவையெல்லாம் ஓரிடத்தே காண
> நின்றதியா தொருசமயம் அதுசமயம் பொருள்நூல்
> ஆதலினால் இவை யெல்லாம் அருமறையா கமத்தே
> அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்."
>
> (சிவஞானசித்தியார், அ, ௨—௧௩)

அருமறை - மூவர்தமிழ்; முனிமொழியும் திருவாசகம். ஆகமம் - திருமூலர்தமிழ். அரனடிக்கீழ் - திருவருள் உணர்வில். அடங்கும் - அவ் வருள்வழிக் கற்று ஒழுகி அடிமையாய் புறும் வழியினை எடுத்துக்காட்டி நிற்கும்.

... புண்மைகளை எண்மையாகக் காட்
அமிழ்த அருண்மொழி. அது வருமாறு :

> "தேவர் குறளும் திருநான் மறைமுடிவாம்
> மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
> திருவா சகமும் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகமென் றுணர்." (நல்வழி)

திருநான் மறைமுடிவாம் என்பது திருநான் மறையும் முடிவும் ஆம் எனஉம்மைத்தொகையாக் கொள்க. திருநான்மறை - அறம், பொருள், இன்பம், வீடு. முடிவு - மீளாஆளாய்ப் பேரின்பம் உறும் பேறு. தமிழ் நூல்களை வரிசைப்படுத்தி ஒரு மொழி எனக் கூறவந்த தமிழ்மூதாட்டியார் இயைபில்லாத ஆரிய மொழியையும் உடன்கூறி யிருப்பரென எண்ணுவது பெருமயக்கே. தேவர்குறள் - செந்தமிழ்ப் பொதுமறை. மூவர் தமிழ், அறம் பொருள் இன்பமும், திருவாசகம், வீடும் கூறும் செந்தமிழ்ச் சிறப்புமறை. திருமூலர்சொல் - பேறுகூறும் செந்தமிழ்ப் பொதுஆகமம். திருக்கோவையார் - பேறும் செந்தமிழ்ச் சிறப்பாகமம். இங்ஙனம் கூறினும் எல்லாவற்றினும் ஐந்தும் ஏற்றபெற்றி காணலாம். இதனாலேயே இந்நூல்கள் ஆதித்தமிழ் மந்திரம் அஞ்செழுத்தின் விரிஎன்ப. அவ் வஞ்செழுத்து 'சிவயசிவ' என்னும் மீநுண்மையாகும். மீநுண்மை எனினும் அதிசூக்குமம் எனினும் ஒன்றே. திருமுறைகளில் 'நமசிவய' 'சிவயநம' 'சிவய' 'சிவசிவ' என வருவனவற்றை ஓர்ந்துணர்க.

நான்மை

மென்மையின் விளைவு மேன்மையாவதுபோல் நன்மையின் விளைவு நான்மையாகும். 'சிவநெறி' 'தமிழ்நெறி' 'திருநெறி' 'ஒளிநெறி' 'இயல்நெறி' 'இறைநெறி' 'அருள்நெறி' 'அறநெறி' 'சைவநெறி' 'முறைநெறி' 'பொருள்நெறி' 'தவநெறி' முதலிய சொற்கள் பலவும் நான்கு எழுத்துக்களாலாகி யியங்குவனவும் நான்மையின் மேன்மையினை நன்குணர்த்தும். சிவன், தமிழ் என்னும் இரு சொற்களும் தமிழுக்கேயுரிய னகர ழகரச் சிறப்பெழுத்துக்களைக் கொண்டியங்குவன. எனவே, சிவன் தமிழ் என்ற இரண்டும் உயிர் உடல் போன்று பிரிக்க முடியாத ஒன்றேயாம். கொலைபுலை விடுத்த நலமே **சைவம்** என உலக வழக்கிலும் நூல்வழக்கிலும் மிக்குப் பயின்று வருகின்றது.

"சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்" ஆகிய செம்பொருட்டுணிவாம் சிவனெறிக்கண் கடவுள் நிலை அத்தன் அன்னை மூத்தோன் இளையோன் என நான்கு, சீலம் நோன்பு செறிவு அறிவு என நெறி நான்கு. அந்நான்கு நெறியினை உலகுக்குணர்த்திய ஒரு நிகராராகிய அப்பர், சம்பந்தர், ஆரூரர், மணிவாசகர் எனும் திருநெறிய தமிழ்முதல்வர் நால்வர். சந்தாகுசிரியர் நால்வர். 'சிவசிவ' என்னும் தமிழ் முதலெழுத்து நான்கு. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கு. தாய், தந்தை, கொல்லர், தலைவர் எனத் துணைநான்கு. பாநான்கு, சீர் நான்கு, அடி நான்கு. பெயர் வினை இடை உரி எனச் சொன்னான்கு. இங்ஙனம் நான்மைப் பாகுபாட்டுச் சிறப்புப் பலவாம் என்க. இந் நான்மை தொன்மைத் தமிழ் முறையாம் என்பது காதலன், காதலி, பாங்கன், பாங்கி எனவும், திருமணத் தின்போது 'வாலிழை மகளிர் நால்வர் கூடி' (அகம்: அசு) எனவும் வரும் குறிப்புக்களான் உணர்க.

நூல்

திருமுறை பன்னிரண்டு, சித்தாந்தம் பதினான்கு, திருக்குறள் ஒன்று ஆக இருபத்தேழுமாம். இவற்றிற்கு மாறுபடாத முன்பின் உள்ள நூல்கள் நூற்பகுதிகள் கொள்ளப்படும். வேற்றுமொழி நூல்கள் வேண்டுமேல் தாய் மொழியாம் தமிழ் மொழியில் பெயர்த்தமைத்து இயைந்த அளவில் கொள்ளப்படும். திருக்கோவில்களிலும் வீட்டிலும் வழிபாடுகளில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருமூலர், பதினோராம் திருமுறை, சேக்கிழார், திருக்குறள், சித்தாந்தம் இவ்வெட்டும் இன்றியமையாது ஓதப்பெறுதல் வேண்டும். திருவிசைப்பாவுடன் திருப்பல்லாண்டும், திருவாசகத்துடன் திருக்கோவையாரும் உடன் ஓதப்பெறுதல் வேண்டும். ஆயின் தமிழ்த் திருமாமறை பத்தாகும். திருவுருவம் சிவலிங்கம். ஏனைய திருவுருவங்கள் இதன் விரிவேயாகும். நெறியின் பொதுமை போன்று கடவுள் உருவின் பொதுமையும் சிவலிங்கமேயாம். திருவடையாளம் திருவெண்ணீறு தீப்பிழம்பின் தொடர்பால் வருவது திருநீறு. இதுவும் பொதுமையேயாம். இம்முறைகளால் சைவ சமயமே பொதுமையும் முதன்மையும் வாய்ந்த தமிழ்ச்சமயம் என்னும் உண்மையோர்ந்து தமிழ்த் திருமாமறையால் வழிபட்டு வழிபடச் செய்து வாழ்வோமாக.

சிவனெறி செந்தமிழ் திருமுறை சித்தாந்தம் வாழ்க.

ப்பலம்

சிற்றூர்க் காட்சிகள்

[திரு. ஆ. சேனுபதி, இளையான்குடி]

காலை வேளை :

காகங்கள் கரையும், புட்கள்
கவ்விய இருளை யோட்டும்;
மேகங்கள் கீழ்வா னத்தில்
மெல்லிய தங்கப் பூச்சாம்;
வேகமாய் உழவர் தோளில்
மேழியைச் சாய்க்கு முன்னம்
ஈமாம் எழிலைக் காட்ட
தினகரன் உலகைப் பார்ப்பான்.

(வேறு)

பசும் புல்லின் தளிர் மேனி படர்கதிரின் வரவால்
விசும் பென்னும் துளி யோட்டும்! விரைந்தோடி வீட்டில்
'குசும்' பென்று சொல்லும்படி கொஞ்சமங்கு மிங்கும்
பசும் பொன்னை நெற்கதிரை பாழாக்கும் பார்! பார்!!

ஏழை வீடு :

(வேறு)

வேய்ந்த கூரை யோர் புறம்
வீழும் காட்சி காணவே
சாய்ந்த கதிர் ஞாயிறு
சற்று உள்ளே செல்லுவான்;
மாய்ந்து போகப் பெய்த தால்
மழை யின்ஈரம் தான் கிடாது
ஓய்ந்து வீழும் சுவரைத்தான்
ஒட்ட மதில் வைப்பரே!

அடுப்பினி லிட்ட கஞ்சி
யாறிடு முன்கு டிக்க
இடுப்பினி லுள்ள சேலை
இறக்குவாள் சொக்கி யம்மாள்
படுக்கையாய்க் கிடந்த பச்சைப்
பாலகன் எழுந்து கொஞ்சம்
கொடுக்குமுன் தரையில் வீழ்தல்
கோலமாய் இருக்கு மாதோ!

மாசித்திங்கள்

[வித்துவான் திரு. நா. திருநாவுக்கரசு]

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (தொல் - சொல் - 155) என்றார் தொல்காப்பியனார். தமிழிலுள்ள ஒவ்வொரு சொல்லும் ஏதாவது ஒரு பொருளை உணர்த்துவதாகவே இருக்கும். ஆனால் காலச் சுழற்சியிலே இடுகுறி அளவோ எனக் கருத வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. ஆய்ந்து பார்த்தால் சொல்லை உண்டாக்கியவர்களின் நுண்ணறிவு தெற்றென விளங்கும். எடுத்துக் காட்டாக சொல்லுதலைக் குறிக்கும் சொற்களாக இன்று வழங்கும் கழறல், கூறல் ஆகியவைகளை எடுத்துக் கொள்வோம். இவைகள் இன்று அடுக்குவார் வாயில் அகப்பட்டுக்கொண்டு பொருள்பெற்ற செல்வன் அஃதில்லா வறியவனோடு சேர்ந்து கைப்பொருள் இழந்து இழிநிலை அடைந்தாற்போன்று, பொருளற்றுத் திண்டாடுகின்ற நிலை இரங்கத் தக்கதாகும். இவைகள் பொதுவாகச் சொல்லலைக் குறித்தாலும் சிறப்பாக அதன் வகைகளையே உணர்த்துவனவாகும். 'கழறல்' என்ற சொல்லிற்குப்பொருள் 'இடித்துக் கூறல்' என்பதாம். தஞ்சைவாணன் கோவை போன்ற அகப்பொருள் இலக்கியங்களில், தோழிமுதலியவர்கள் தலைவன் தலைவி முதலியோரின் நடத்தை முதலியவைகளைக் கண்டித்து இடித்துக் கூறும் பகுதி 'தோழி கழறல்' என்ற தலைப்பில் அமைந்திருப்பதைக் காணலாம். அடுத்துள்ள 'கூறல்' என்ற சொல் கூறுபடுத்தி, அஃதாவது பாகுபடுத்தி, வகைப்படுத்திச் சொல்லலையே குறிப்பதாகும். இங்ஙனம் நம் பண்டையோர் சொற்களை அமைத்த திறன் போற்றற்குரிய தொன்றாகும். நிற்க. இனி ஆண்டுகள் தோறும் நிகழ்கின்ற மாசித் திங்களைப்பற்றி ஆய்வோம்.

மாசித் திங்கள்—நல்ல குளிர் மிகுந்த திங்களாகும். குளிர் என்றவுடன் நமக்குப் போர்வையின் நினைவுதானே வருகிறது. ஆனால் புலவர்களுக்கோ! பிரிந்த தலைவன் தலைவியர் குளிர் மிகுதியால் வாடுவதும், சேர்ந்திருப்போர்கள் தமக்குள் காற்றுப் புகும் இடைவெளி யிருப்பினும் ஊடிக்கூடி இன்பம் துய்ப்பதும் அவர்கள் நினைவிற்கு வந்து அழகிய பாக்களைப் பாடியுள்ளனர். புலவர்கள் எதைத்தான் பாடாது விட்டார்கள் என்கிறீர்களோ! யென்றால் பாரதி கண்ணனைக் குறித்து,

> " தீக்குள்ளே கையைவிட்டால் நந்தலாலா—நின்னைத்
> தீண்டு மின்பம் தோன்றுதையே ! நந்தலாலா !"

என்று பாடி யிருப்பாரா என்ன

மாசித் திங்களில் குளிரைத் தருவது எது? பனிதானே! அப்பனியைத் தருவது எது? மேகம் தானே! அம்மேகம் கருமேகமா? அல்லது வெண் மேகமா? நிலநூலில் (Geography) மேகம் எங்ஙனம் உண்டாகிறது என்பது பற்றியும் கருமேகம் (நோயைக் குறிப்பிடவில்லை, காள மேகத்தையே குறிப்பிடுகிறேன். காளமேகம் என்றால் புலவனையல்ல; நான் குறிப்பிடுவது மழை பொழியும் மேகத்தையேயாகும்) வெண்மேகம் இவைகளின் தோற்றத்தையும், இவைகளில் மழை பொழிவது எது? பனி பொழிவது எது? என்பது பற்றியும் படித்திருப்பீர்கள். வெண் மேகம் தானே பனியைத்தருவது.

அவ் வெண் மேகம் மாசித் திங்களில் நிறைந்து காணப்படுவதைப் பார்க்கிறீர்கள் அல்லவா? அதனால் தானே இம்மாதத்தில் பனியும், குளிரும் மிகுதியாக இருக்கிறது. எனவேதான், ஒளவையாரும் "தையும் மாசியும் வை அகத்து உறங்கு" என்றருளினர். அத்தகைய வெண்மேகத்தை எங்ஙனம் அழைக்கிறோம்? மாசி என்று தானே அழைக்கிறோம். வெண் மேகத்தை அஃதாவது பனியைத் தரும் மேகத்தை 'மாசி' என்றழைத்தல் தொன்றுதொட்டு நம் தமிழகத்தார் வழக்கில் இருந்து வந்திருக்கிறது. எனவே தான் பனியைத் தருகின்ற வெண்மேகமாகிய 'மாசி' மிகுந்திருக்கின்ற இத் திங்களை 'மாசி' என்றழைத்தனர்.

இங்ஙனம் பொருள் பொதிந்த சொற்கள் பல இன்று நம்மவரால் பொருளிலாச் சொற்களாகப் பயன் படுத்தப்பட்டு, வழக்காறிழந்து வருகின்றன. புதிய உண்மைகளை விஞ்ஞானத்தால் கண்டு பிடிக்க முடியாவிடினும் கண்டு பிடிக்கப்பட்ட விஞ்ஞான விளைவுகளைப் பற்றிப் படித்துத் தேர்வில் வெற்றி பெறுது படையெடுப்பவர்கள் மிகுந்த நாடு தானே இது! எனவே அறிவு சான்ற நம் மூதாதையர் ஆக்கிய பொருளுள்ள சொற்களின் பொருளை உணராதிருப்பதில் வியப்பொன்றும் இல்லையல்லவா!

திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை

(சிலம்பு: உக, பரல் எ, ௩௩௫-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரம்-௪௧.

கல்லாமை

அஃதாவது கற்றலைச் செய்யாமை. மேற்கற்றலின் சிறப்புக் ...ரர்; அஃது ஆண்டடங்காமை கண்டு விதிமுகத்தாற் கூறிய அதனையே ஈண்டு மறைமுகத்தாற் கூறுகின்றார். எனவே, கல்லாமையின் இழிவு கூறி, அவ்வாற்றானே கல்விச் சிறப்புப் பெறுவிப்பா ராயினர். ஆசிரியர் அதிகாரமொன்றற்குப் பத்துப் பாட்டாக வரையறை செய்துகொண்டு நூலியற்றுகின்றாராதலின், கூறக் கருதிய பொருள் அவ்வரையறையின் அடங்காத வழித் தாம் வகுத்த வரையறையுங் கெடாமே, கருதிய பொருளுங் கெடாமே, அப் பொருளைப் பல்லாற்றாற் பகுத்து அவ்வாற்றா னதிகாரம் வேறாய் வகுத்துக் கூறுவர். இதனை யீண்டேயன்றிப் பிறாண்டுங் காணலாம். அதிகார இயைபு கூறாதே கொள்ளக் கிடந்தது.

இவ் வதிகாரத்தில், கல்லாதார் சான்றோ ரவையிற் சிறவாமையும், தமக்கும் பிறர்க்கும் அவர் பயன்படாமையும், அவர் இழிவும் முறையே கூறுவான் வைத்த ஆசிரியர், முதற்கண் கல்லாதார் சான்றோரவையிற் சிறவாமை கூறுகின்றார் :

௪0௧. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

(இ-ள்.) நிரம்பிய நூல் இன்றி-குறைவற்ற நூலறிவில்லாமல், கோட்டி -(சான்றோர்) அவையில், கொளல் - (ஒன்றைக் கூற) மேற்கொள்ளுதல், அரங்கு இன்றி-வகுப்பறை இல்லாமல், வட்டு ஆடியற்றே - வட்டாடுதல் போலும் (எ-று.)

(இ-து.) விரிந்த நூற் பயிற்சியில்லாமல் சபையில் ஒன்றைப் பேசப்புகுதல் அறைவரையாது வட்டாடப் புகுவது போலும் (எ-ம்.)

அரங்காவது சூதாடுதற்கு வகுத்த அறைவட்டு சூதாடு கருவி; உருண்டை வடிவிற்று. வட்டாடுதலாவது, உருண்டை வடிவிற்றாய அச் சூதாடு கருவியை உருட்டுதல். இவை யின்னவாதலைக் 'கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக், கல்லாச் சிறாஅர் நெல்லி வட்டாடும்' என வரும் நற்றிணை (௩-ஆம்) செய்யுளா

னறிக. 'நெல்லி வட்டாடும்' என்றது நெல்லிக்காயை வட்டாகக் கொண்டு ஆடும் என்றவாறு. 'ஒன்றை யுரைத்தலை' என்பது எஞ்சி நின்றது. கோட்டி - அவை; ஏழாம் வேற்றுமையுருபு தொக்கு நின்றது. மேற்கொளல் எனற்பாலது முதல் குறைந்து நி

அரங்கின்றி வட்டாடுதல் நெறிப்படாததலோடு கண்டார் நகைக்கவுங் காரணமாதல்போல, விரிந்து கல்வியின்றிச் சபையி லொன்றைச் சொல்லப்புகுதல் நெறிப்படாதாகிச் சான்றோர் நகைக்கக் காரணமா மென்றவாறு.

கல்லாதான் சொல்லாடல் இத்தகைத் தென்றஃதிது. (௧)

சொல்லாட விரும்ப லித்தகைத்தா மென்பது வருங் குறள்:

௪௦௨. கல்லாதான் சோற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.

(இ - ள்.) கல்லாதான் - (பரந்துபட்ட நூற்பொருள்களை யெல்லாம் குறைவறக்) கல்லாதவன், சொல் காமுறுதல் - (சான்றோரவையின்கண் ஒன்று) சொல்லுதலை விரும்புதல், முலை இரண்டும் இல்லாதாள் - இரண்டு முலைகளும் (இயல்பாகவே) இல் லாதவள் ஒருத்தி, பெண் காமுற்றற்று - (தனக்கமைந்தது பேடித்தன்மையே யாகவும் தான்) பெண் தன்மையை விரும்பி னாற் போலும் (எ - று.)

(இ - து.) கல்லாதவன் கற்றோரவையில் ஒன்றைச் சொல்ல விரும்புதல், பேடி பெண்தன்மையை விரும்புதல்போலாம் (எ - று.)

இனைத்தென அறிந்த பொருளாகலின், இரண்டும் எனத் தொகையொடு உம்மை கொடுத்தார். முலையிரண்டு மில்லாதவள் பேடி. அவள் பெண்மையை விரும்புதல் நிறைவேறாது; நிறை வேறினும் நகைக்கிடமாம். கல்லாதவற்கும் அங்ஙனமே. சொல் லக் கருதினும் அது கைகூடாது; கைகூடினும் அது நகைக்கிட மாம் என்பதாயிற்று.

கல்லாதார் கற்றோரவையிற் சொல்லாட லித்தகைத்தா மென்ற திது. (உ)

சொல்லாடாமையே நன்றென்பது வருங் குறள்:

௪௦௩. கல்லா தவரு நனிநல்லர் கற்றோர்முற்
சொல்லா திருக்கப் பெறின்.

(இ - ள்.) கல்லாதவரும்—, கற்றார்முன் - கற்றார் (கூடிய அவையின் கண்ணே அவர்) முன்னாக, சொல்லாது இருக்கப் பெறின் - (தன் விருப்பத்தின் வழியே சென்று யாதொன்றினை யும்) சொல்லாதிருத்தல் கூடுமாயின், நனி நல்லர் - மிகவும் நல் லவராவர் (எ - று.)

(இ - து.) கல்லாதவர் கற்றாரவையில் வாய்திறவாமை நன்று (எ - ம்.)

கல்லாதவரும் என்றதில் உம்மை இழிவு சிறப்பு. அவர்க்கு நன்மையாம் என்பார் நன்மையை அவர்க்கேற்றி அவர் 'நல்லர்' என்றார். தமக்கு நன்மை யாவதறிந்து அவ் வழியொழுகும் அறிவும் ஆற்றலும் இல்லாராதலின், அவர்க்கஃது அரிதென்பார் 'இருக்கப்பெறின்' என்றார். அவர்க்கு நன்மையாவது அவையில் இகழப்படாமை.

கற்றாரவையில் கல்லார் சொல்லாடாமை நன்றென்ற (௩)

நற்பொருளாயினும் சொல்லலாகாதென்பது வரும் குறள்:

௪0௪. கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார்.

(இ - ள்.) கல்லாதான் - கல்லாதவனது, ஒட்பம் - அறிவு டைமை, கழிய நன்றாயினும் - (ஒரோவழி) மிகவும் நன்றாயினும், அறிவுடையார் கொள்ளார் - அறிவுடையோர் (அதனை அறிவு டைமையாகக்) கொள்ளமாட்டார் (எ - று.)

(இ - து.) கல்லாதவன் ஒரோவழி அறிவுடைய சொற் களைச் சொன்னானாயினும் கற்றறிவுடையோர் அவற்றை ஏற் றுக் கொள்ளார் (எ - ம்.)

ஒட்பமாவது ஒண்மை; அஃதாவது ஒளியுடைமை; அஃதா வது அறிவொளியுடைமை. நன்றாகாது ஆயினும் எனப் பொருள்படுதலால் உம்மை எதிர்மறைப் பொருளது. ஆமாறெங் ஙனமோ எனின், நத்தை மணலிற் செல்லும்போது அதன் குறிப்பின்றியும் ஒரோவழி அதன் சுவடு ஒரெழுத்தாயமைதல் கூடுமாதல்போலக் கல்லாதான் பிதற்றும் பலவற்றுள் ஒன்று ஒரோவழி ஒட்பங் கழிய நன்றாதலு முண்டென்க. நத்தை செல் லுஞ் சுவடு ஒரோவழி எழுத்தாயமையி னதனை ஏரலெழுத் தென்ப. அல்லதூஉம் கல்லாதான் அறிவுடையனாயினும் அவன் தான் கண்ட ஒண்பொருளைச் சொல்லிக்காட்ட வகையறியாது பிதற்றுமாதலின், அப் பிதற்றிலிற் றோன்றிக் காக்கும் ஒண்

பொருளை, நீர்மேலெழுத்தெனக் கருதி கற்றறிவுடையோர் கொள்ளா ரென்றலு மொன்று. 'கல்லாதான் கண்ட கழிநுட்பம் காட்டரிதால்' (பழமொழி-௩௬௭) என்றார் முன்றுறையரையரும்.

கல்லாதானு மொட்பமுடைய னாதல் கூடும் என்றமையின் 'அறிவுடையார்' என்றது, கற்றறிவுடையவ ராதல் பெறுதும்.

கல்லாதான் கண்ட கழிநுட்பம் கற்றார் அவையிடைக் கொள்ளப்படாது என்றதிது. (௪)

அதற்குக் காரணங் கூறுவது வருங் குறள் :

௪0௫. கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

(இ-ள்.) கல்லா ஒருவன் - கல்லாத ஒருவனது, தகைமை- (தற்)பெருமை, தலைப்பெய்து -(கற்றோரவையிற் கற்றோருடனே) ஒன்று கூடி, சொல்லாட -(ஒன்றைச்)சொல்ல, சோர்வுபடும்- கெடும் (எ - று.)

(இ - து.) கல்லாதவன் கொள்ளும் தற்பெருமை கற்றோரவையில் வாய்திறந்தாற் கெடும் (எ - ம்.)

தகைமையாவது, யான் அறிவுடையே னெனத் தன்னைத் தானே மதிக்கும் மதிப்பு - தற்பெருமை. தலைபெய்தல் - ஒன்று கூடல். கல்லாதவர் தாம் அறிந்ததொன்றை உரைக்குமாறறிந்து உரைக்கமாட்டா ராதலின், சொற்சோர்வுபட்டு மதிப்பழிவர் என்பதாம்.

இவை ஐந்து பாட்டானுங் கற்றோரவையிற் கல்லாதார் சிறவார் என்பது கூறப்பட்டது. (௫)

கல்லாதார் தமக்கும் பிறர்க்கும் பயன்படாமை கூறுவன வரும் மூன்று குறள்கள் :

௪0௬. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

(இ-ள்.) கல்லாதவர்—, உளர் - (மக்களுருவிற் காணப் படுதலால்) உள்ளனர், என்னும் மாத்திரையர் அல்லால் - என்று சொல்லப்படும் அவ்வளவினரேயன்றி(ப் பயனளவிற் பார்த்தால், தமக்கும் பிறர்க்கும்), பயவா - பயன்படாத, களர் அனையர்- களர்நிலத்தோ டொப்பர் (எ - று.)

(இ - து.) கல்லாதார் களர்நிலம்போலத் தமக்கும் பிறர்க்கும் பயன்படார் (எ - ம்.)

களர்நிலத்து உப்பு விளைவதுண்டாதலால், அஃதன் றென்பதற்குப் 'பயவாக் களர்' என்றார். அது தானும் நீர்ப்பாய்ச்சல் முதலிய பயன்களைப் பெறாது உயிர்கட்கும் உணவு முதலியன உதவாததுபோலக் கல்லாதார் தாமும் பயன்பெறாது பிறர்க்கும் படாரென்றவாறு.

கல்லாதார் தமக்கும் பிறர்க்கும் பயனிலரென்றறிது. (௬)

அவர் அழகும் பயன்படுவ தன்றென்பது வருங் குறள் :

௪0௭. நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று.

(இ - ள்.) நுண்மாண் - நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டு, நுழைபுலம் - (பல நூல்களினுஞ்) செல்லும் அறிவு, இல்லான் - இல்லாதவனுடைய, எழில்நலம் - எழுச்சியோடு கூடிய அழகு, மண் - மட்சாந்தால், மாண்புனை - மாட்சிமைப்படப் புனைந்த, பாவையற்று - பாவையினுடைய (எழுச்சியோடு கூடிய அழகைப்) (எ - று.)

(இ - து.) நூலறிவில்லாதவனது அழகு மண்ணாலான பதுமையின் அழகு போலும் (எ - ம்.)

அறிவிற்கு நுட்பமாவது, காண்டற்கரிதாய் நூலிடைக் கரந்து கிடந்த கருத்தையெல்லாம் கதுமெனச்சென்று கவர்ந்து கொள்ள வல்லதாதல்; மாட்சியாவது, பொருள்களைக் கடிதிற் காண்டலும் குற்றமுங் குணமுங் கலந்துகிடந்தவிடத்தில் எளிதிலவற்றைப் பிரித்துக் குற்றத்தைத் திருத்தியுங் குணத்தை மிகுத்துங் கொள்ளுதலும், கொண்ட பொருள் மறவாமையும் முதலாயின. பாவை-பாவையின் அழகை உணர்த்தி ஆகுபெயராய் நின்றது. எழினலம் - இருபெயரொட்டு; எழிலாகிய நலம் என்க. அஃதாவது எழுச்சியோடுகூடிய நலம் என்றது வளர்ந்து அமைந்ததாயினும் இன்னும் வளரு மென்பது தோன்ற நிற்கு நலமென்றவாறு. 'ஒப்புமுருவும் வெறுப்பு மென்றா-கற்பு மேரு மெழிலு மென்றா—' எனவரும் தொல்காப்பியப் பொருளியல் (௫௪-ம்) சூத்திர உரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'ஏராவது எழுச்சி; அஃது எழுகின்ற நிலைமையெனை நிகழ்காலமே குறித்து நிற்கும். எழிலாவது, அங்ஙனம் வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறியதன்றி இன்னும் வளருமென்பது போன்று காட்டுதல்' என்றார். 'உருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலு மரிது' (சிந்தாமணி-௨௭௫௨) என்ப வாகலான், அங்கக் குறைபாடின்றி அழகோடு கூடிய மக்களுடம்பு பெறுதலும் பயனு

டைத்தே யாயினும், கல்வியறிவில்லாவழி அது சிறவா தென்ப தாம். (எ)

கல்லாதார் அழகு பயன்படா தென்றது இது.

அவர் செல்வமும் பயன்படா தென்பது வருங் குறள் :

௪௦௮. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

(இ - ள்.) கல்லார்கண் - கல்லாதவரிடத்தே, பட்ட - உண்டான, திரு - செல்வமானது, நல்லார்கண் - (கற்று) நல்லாராயினாரிடத்தே, பட்ட - உண்டான, வறுமையின் - வறுமையினும், இன்னாது - துன்பஞ் செய்வதாம் (எ - று.)

(இ - து.) கற்றார் வறுமையினும் கல்லாதார் செல்வம் துன்பந் தருவதாம் (எ - ம்.)

மேற் கல்லார் என்றலின், நல்லார் என்றது கற்று நல்லாரை யாயிற்று. 'இன்மையி னின்னாத தியாதெனின் இன்மையி, னின்மையே யின்னா தது' (குறள் - ௧௦௪௧) என்பதாகலான், 'வறுமையினின்னாது' என்றார். வறுமையினும் எனற்பால திழிவு சிறப்பும்மை தொக்கு நின்றது. நல்லார் கட்படின் அவருக்கும் பிறருக்கும் நன்மை பயப்பதாகிய செல்வம், கல்லார்கட் படின், குரங்கின் கைப்பட்ட கொள்ளியே போல அவருக்கும் பிறருக்கும் தீமைபயக்கு மென்பது கருத்து.

இவை மூன்று பாட்டானும் கல்லார் எவ்வாற்றானும் தமக்கேனும் பிறர்க்கேனும் பயன்படாமை கூறப்பட்டது. (அ)

கல்லாதார் இழிவும் கற்றார் உயர்வும் கூறுவன வரு மிரு குறள்கள் :

௪௦௯. மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு.

(இ - ள்.) கல்லாதார்—, மேற்பிறந்தா ராயினும் - உயர்ந்த குலத்திற் பிறந்தாராயினும், கீழ்ப் பிறந்துங் கற்றார் - தாழ்ந்த குலத்திற் பிறந்தும் கல்வியுடையராயினாரது, அனைத்து - (பெருமை) அளவினதாகிய, பாடுஇலர் - பெருமையில்லாதவராவர் (எ - று.)

(இ-து.) கற்றவர் குலத்தில் தாழ்ந்தவராயினும் உயர்ந்தவரே; கல்லாதவர் குலத்தில் உயர்ந்தவராயினும் தாழ்ந்தவரே (எ - ம்.)

'அனைத்திலர்' என்பது அனையென்னும் இடைச் சொல்லடி யாகப் பிறந்த எதிர்மறைக் குறிப்புவினையாலணையும் பெயர். ஆசிரியர் உயர்குடிப்பிறப் புடம்பட்டுக் குடிமையென்னு மோரதிகாரம் (கூகூ) வகுத்தாராயினும், குடியுயர்வு ஒழுக்கம் கல்வி முதலியனவற்றானய தொன்றே யொழியப் பிறிதில்லை யாகலின், அவ்வொழுக்கம் முதலாயின இல்வழிக் குடியுயர்வு மில்லையா மென்பதனை ஆண்டேயன்றிப் பிறண்டும் 'ஒழுக்க முடைமை குடிமை' (கநடு) எனவும், 'பார்ப்பான் பிறப்பு ஒழுக்கங் குன்றக் கெடும்' (கநச) எனவும், 'மேலிருந்து மேலல் லார் மேலல்லர் கீழிருந்துங், கீழல்லார் கீழல் லவர்' (கூஎடு) என வுங்கூறி ஒழுக்கம் கல்வி முதலியவாக உயர்வுக்குஆவன பிறவின் றிப் பிறப்பினுன்மட்டும் உயர்வு தாழ்வு வேண்டற்க வென்பார் 'பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும்' (கூஎஉ) எனத் தெளியக் கூறினமையின், உயர்குடிப் பிறந்தாராயினுங் கல்லாதார் உயர் வுடையவராகார் என்பதும், தாழ்குடிப் பிறந்தாராயினுங் கற்றார் உயர்வுடையவ ராவார் என்பதுமாம். இக் கருத்தானே நாலடி யாரிற்,

> 'களர்நிலத்துப் பிறந்த வுப்பினைச் சான்றோர்
> விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
> கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
> தலைநிலத்து வைக்கப் படும்' (கநடு)

> 'நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்
> சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பி
> னொண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை
> யென்றிவற்றா னாகுங் குலம்' (ககூ)

எனக் கூறினார் பிறரு மென்பது. அல்லதூஉம் பிறப்புயர்வு எடுத்த பிறவியோடு ஒழிவதாகக் கல்வி 'எழுமையும் ஏமாப் புடைத்து' (குறள்-நகூஅ) ஆகலான், அதனானய உயர்வு சிறந்த ... றன்க.

கற்றார் ஏனையாரின் உயர்ந்தா ரென்றது. (கூ)

கற்றாரும் ஏனையாரும் ஒப்பாகா ரென்பது வருங் குறள் :

சகo. விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

(இ - ள்.) இலங்கு நூல் - விளங்கிய நூல்களை, கற்றா ரோடு—, ஏனையவர் - மற்றவர்களை (உவமிக்குமிடத்து), விலங் கொடு - மிருகங்களோடு, மக்கள் அனையர் - மக்களை (உவமித் தாற்) போல்வர் (எ - று.)

(இ - து.) கற்றாரையும் கல்லாரையும் உவமித்தல் மக்களை யும் மிருகங்களையும் உவமித்தல் போலும் (எ - ம்.)

ஓடு என்பது மூன்றும் வேற்றுமை யுருபு; ஒப்பலொப்புப் பொருளில் வந்தது. ஆசிரியர் சேனாவரையர் மூன்றும் வேற்று மைப் பொருள் வேறுபாடு விரிக்குஞ் சூத்திரவுரையில், அதனோ டியைந்த வொப்ப லொப்புரை - "பொன்னொடிரும்பனையர் நின் னொடு பிறரே" என்பது; ஒப்பல்லதனை யொப்பாகக் கூறலின் ஒப்ப லொப்புரையா யிற்று' என்றது காண்க. 'விலங்கின் மக்கட் கேற்றமாகிய உணர்வுமிகுதி காணப்படுவது கற்றார் கண்ணே யாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்த பிறப்பினரல்லரென்ப தாம்' என்றார் ஆசிரியர் பரிமேலழகர். விலங்கு ஏனையாரும் மக் கள் கற்றாருமாகப் பொருள்கொள்ளக் கிடத்தலின், இது மயக்க நிரனிறை. எதிர்நிரனிறை யெனினும் ஒக்கும்.

இவ் வதிகாரத்தில் முதல் ஐந்து பாட்டுக்களால் கற்றோ ரவையிற் கல்லாதார் சிறவார் என்பதும், அடுத்த மூன்று பாட் டாற் கல்லார் தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையும், இறுதி இரண்டு பாட்டாற் கற்றார் உயர்வும் கல்லார் தாழ்வும் கூறப் பட்டன.

(௧0)

(தொடரும்)

திருவாசகத் தேன்

மூவர் முதலிகளருளிய தேவாரத்தோடொத்து விளங்கும் திரு மறை, திருவாசகமாகும். திருவாசகம் கருங்கல் மனத்தையும் கரைக்க வல்லது; பத்திச்சுவையும் கனிவும் இனிமையும் தந்து இன்ப அன்பைப் பெருக்குவது; இதன் அருமை பெருமைகளை யுணர்ந்த மேனாட்டறிஞரும் தத்தம் மொழிகளில் பெயர்த்தெழுதிப் பாராட்டுவா ராயின், இதன் சிறப்பை என்னெனப் பகர்வது? இதனானே, 'திரு வாசகத்துக்கு உருகார், ஒருவாசகத்துக்கும் உருகார்' என்ற பழமொழி யும் வழங்கலாயிற்று.

இப் பெருமறையை ஓதி உணர்ந்து உளமுருகல் நம் தமிழ் மக்க ளின் உரிமையும் கடமையுமாகும்.

'என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ?'

என்பதில் எவ்வளவு உருக்கமும் எளிமையும் கனிவும் பார்மின்!

-சேல்லூர்க்கிழார்.

பாரியொடு மூவேந்தர்போர்

[வித்துவான். திரு. செ. வேங்கடராமச் செட்டியார்.]

பாரி என்பவன் கடைச்சங்க காலத்திருந்த எழுவள்ளல் களில் ஒருவன். வேளிர்குலத்தைச் சேர்ந்தவன். வேள்பாரி என்றும் இவன் கூறப்படுகின்றான். இவன் முந்நூறு ஊர்களை யுடைய பறம்பு நாட்டிற்கும் பறம்பு மலைக்கும் தலைவன். பொய்யாநாவினையுடைய 'கபிலர்' என்னும் பெரும்புலவர்க்கு உயிர் நண்பன். கொடையிற் சிறந்தவன். இவன், ஒருநாள் காட்டிற்குச் செல்லநேர்ந்தபொழுது முல்லைக்கொடி ஒன்று காற்றால் அசைந்து ஆடுவதைக் கண்டு, அது கொள்கொம்பின்றி வாடியாடியதாகக் கருதித் தன் அன்புளங் கசிந்து தன் தேரையே அக்கொடியேறிப்படருமாறு கொடுத்து வந்த பெருங் கொடையாளன். இவன் கொடைச் செயல்கள் பலவற்றிலும் முல்லைக்குத் தேரீந்த செய்தியே பெருமையாகப் பல புலவர் களாலும் பாராட்டப்படுகின்றது. புலவர்கள் நாத்தழும்பேறு மாறு புகழ்ந்து பாடினால், அவர்க்கு வேண்டியது கொடுப்பதே ஏனைவள்ளல்கள் இயல்பாயிருக்க, முல்லைக்கொடி அவ்வாறு நாக் கில் தழும்புண்டாம்படி பாடாமலிருக்கவும் பாரி தன் ஒலிக்கின்ற மணிகள் கட்டிய நெடியதேரைக் கொள்க என்று கொடுத்தான் என்று பாரியின் கொடைமடத்தைக் கபிலர் பாராட்டுகின்றார்.

> "பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
> நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
> கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
> பறந்தோங்கு சிறப்பின் பாரி." (புறம்-உ00)

என்பது காண்க.

ஓரறிவுயிராகிய ஒரு முல்லைக்கொடிதானும் தன்முன் வருந்தலாகாது என்றுகருதிப் பாரி தன் நீண்ட பெரிய தேரையே கொடுத்துவந்த அருமையைப் பாராட்டிச் சிறு பாணாற்றுப்படையில் நல்லூர் நத்தத்தனார் என்னும் புலவர்,

> "சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
> பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரல்
> பறம்பிற் கோமான் பாரி."

என்று கூறியிருத்தல் காண்க.

இத்தகைய புலவர் பாடும் புகழுடைய பெருவள்ளலாகிய பாரியோடு மூவேந்தர் போர்செய்த செய்தி புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது. அப்போர் நிகழ்ச்சியைப் பாடலாக அமைத்த

வர், பாரியின் உயிர் நண்பராய்—அமைச்சராய்—அவைக்களப் புலவராய் விளங்கிய 'கபிலர்' என்னும் பொய்யாநாவிற் புலவரே யாவர். தமிழ்நாட்டு முடியுடை வேந்தர் மூவராகிய சேர சோழ பாண்டியர்கள், பாரியோடு போர் செய்யக்கருதி அவன் பறம்பு மலையை முற்றுகையிட்டிருந்தார்களாக, அம்மூவேந்தரையும் நோக்கிப் பொய்யில் புலவராகிய கபிலர் கூறிய பாடல்கள் மூன்று. (௧0௯, ௧௧0, ௧௧௧ புறம்.) அவை,

"அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்கு பயனுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினர் செலினே
நாடுங் குன்றும் ஒருங்கீ யும்மே."

என்பதும்,

"கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்பு கொளற்கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே."

என்பதும்,

"அளிதோ தானே பேரிருங் குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே
நீலத் திணைமலர் புரையு முண்கட்
கிணைமகட் கெளிதால் பாடினள் வரினே."

என்பதுமாம்.

இம்மூன்று பாடல்களிலும் பாரியோடு மூவேந்தர் போர் செய்யவந்தமைக்குரிய காரணம் வெளிப்படையாகக் கூறப்பட வில்லை. ஊகித்தே உணரவேண்டியுளது. பாரி, தன் கொடைப் பெருமையால் உலகு புகழ் பெருவள்ளலாக விளங்கினான். இரப்பார்க்கொன்றீவார் மேல் புகழ் நிற்பது இயல்புதானே! 'வண்புகழ்மூவர்' என்று பாராட்டப்பெற்ற சேர சோழ பாண்டி யர்கள் புகழ், பகல்விளக்காகப் பாரியின் புகழ் பகலொளிபோல் பரவியது. இதனை,

> "நிழலில் நீளிடைத் தனிமரம் போலப்
> பணைகெழு வேந்தரை யிறந்தும்
> இரவலர்க் கீயும் வள்ளியோ னொடே." (புறம் : ௧௧௪)

என்ற அடிகளால் அறியலாம். பிற புரவலர்யாரும் கொடை யாகிய தங்கடமையை மறந்துவிட்ட நிலையில் பாரி, முரசுடைய மூவேந்தரைக் காட்டிலும் இரவலர்களுக்கு ஈந்தான் என்பது கருத்து. பாரி, தானும் நாட்டால் செல்வத்தால் மூவேந் தரினும் மிகமிகத் தாழ்ந்தவனாயினும் கொடைப்புகழால் அவ ரினும் பன்மடங்கு புகழுடையனாதலே முடியுடை வேந்தர் மூவரும் பொறாராயினர். பாரியைவிட மூவேந்தர் புகழ் பெற வேண்டுமாயின் அப் பாரியைக் காட்டிலும் பெருங்கொடை யாளர்களாக அவர்கள் மாறியிருந்தால் பழிப்பில் புகழ் படைத் திருப்பார்கள். அம் மூவேந்தர்க்கும் பணமிருந்தும் மனமில்லை. அவர்கள் பொருளிற் குறையிலராயினும் அருளிற் குறையுடைய ராயினர். எனவே, அந்நேரிய வழியில் பாரியினும் புகழ்பெற நினையாது தம்மினும் மிகுபுகழுடைய பாரியைக் கொன்று பெருமையடையலாமென நேர்மையற்ற நினைவு கொண்டனர். மண்மிசைத்தன் தண்ணிலவு சொரிந்து மன்னுயிர்க் கின்பஞ் செய்கின்ற திங்களில்லாத வானத்தில், விண்மீன்கள் ஒளிவீசிச் சிறப்படையவில்லையா? மாரிபோல வாரி வழங்கி இரவலரைப் புரந்த பாரி மறைந்த நாட்டில் மூவேந்தர் சிறப்பெய்துவதும் அப்படித்தான் என்பதை அழுக்காறு நிறைந்த அம் மூவேந்தர் கள் அப்பொழுது எண்ணிப்பார்த்திருக்கமாட்டார்கள்.

எனவே, மூவேந்தரும் பாரியிடம் பகைமை கொண்டார் கள். அவனை அழிக்கும் வழியைக் கண்டார்கள். படையொடு வந்து பறம்புமலையைச் சூழ்ந்து கொண்டார்கள். ஒரு சிற் றரசனைவெல்ல வேந்தர்மூவரும்படையெடுத்துவருவது போரறம் அன்று என்பதையும் நினைத்திலர். பறம்பு மலையைச் சுற்றி யுள்ள மரங்கள் தோறுந் தங்கள் யானைகளைக் கட்டினார்கள். அம்மலையைச் சுற்றிலுமுள்ள நிலந்தொறும் தேர்களை நிறுத்

தினர்கள். பறம்பு மலையிலுள்ள பாரியும் அவன் படைவீரர்களும் புறத்தே போகாதபடி காத்துநின்றார்கள்.

மூவேந்தர் பறம்பு முற்றியிருந்த நிலையையும் அவர்கள் நினைவையும் கண்டார் கபிலர். அவ் வேந்தர்க்கு அறிவுறுத்துகின்றார். "பாரியின் பறம்புமலையை முரசுடை வேந்தராகிய நீவிர் மூவிரும் படைவீரரோடு சூழ்ந்து காத்து நின்றாலும் அம் மலை நும்மால் கவரத்தக்க எளிமையுடையதன்று. பறம்பு மலையிலுள்ளோர் புறத்துப் போகாதபடி சூழ்ந்திருந்தால் வருந்திப் போர் செய்யவேண்டாது எளிதில் வென்றுவிடலாம் என்ற எண்ணத்தால் நீவிர் சூழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் எத்துணைநாள் முற்றுகையிட்டிருப்பினும் உணவுப் பொருளின்றி நாங்கள் வருந்திப் பணிந்துவிட மாட்டோம். எங்கள் பறம்பு மலையில் உழவர்கள் உழுது விளைவு செய்யாமல் இயற்கையாக விளையக் கூடிய நால்வகை உணவுப் பொருள்கள் இருக்கின்றன. மூங்கில் நெல் நன்கு விளைந்திருக்கின்றன; இனிய சுவையுடைய பலாப்பழங்கள் நிறையப் பழுத்திருக்கின்றன; செழுமையான வள்ளிக்கிழங்கு வளம் பெற்றிருக்கின்றது; தேனழிப்பாரின்றித் தேனடைகள் தேனைச் சொரிகின்றன; பாரியின் பறம்பு மலை உயரத்தால் வானிடத்தைப் போன்றுளது; அம் மலையிலுள்ள சுனைகள் வானத்து மீன்களைப் போலப் பலவாக இருக்கின்றன; எனவே, நாங்கள் புறத்துப் போகாது மலையிலிருந்தே குறைவின்றி வாழ்தற்குரிய உணவும் நீருமுடையேம்; ஆதலால், நீங்கள் மரங்கள் தோறும் கட்டிய யானைகளையுடையீராயினும், விளைநிலங்கள் தோறும் பரப்பிய தேரினையுடையீராயினும் உங்கள் முயற்சியால் அம் மலையைக்கொள்ளவியலாது; உங்கள் வாளைக் கண்டஞ்சிப் பாரி தன் மலையைத் தாரான்; அம் மலையைக் கொள்ளும் வழியை யானறிவேன். அவ்வழியாதெனின்? மணமுடைய தழைத்த கூந்தலையுடைய நும்விறலியர் பின்தொடர வடித்து முறுக்கிய நரம்பினையுடைய சிறிய யாழைப்பண்ணி வாசித்து ஆடியும் பாடியும் சென்றால் பாரி நுமக்குத் தன் நாட்டையும் மலையையும் கொடுப்பான்."

இவ்வாறு கபிலர் கூறியும் மூவேந்தர் முற்றுகை விடவில்லையாதலின், ஒருகால் தம் படைவலிமையால் நம் நாட்டைக் கைப்பற்றவுங்கூடும் என்று பாரியும் கபிலரும் எண்ணிப் பறம்பு நாட்டிற்குரிய முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்குக் கொடுத்துவிட்டார்கள். போரில் தோற்போம் என்ற உறுதி பாரிக்கும் கபிலர்க்கும் வந்த பின்னரே இதைச் செய்திருக்கவேண்டும். செல்வமும் யாக்கையும் உள்ள பொழுதே பிறர்க்குக் கொடுத்துப் பெரும்புகழடைவது சிறந்ததல்லவா? மூவேந்தர்க்குத் தோற்

றால் பின் எவ்வுடம்பைக்கொண்டு எப்பொருளைப் பிறர்க்குக் கொடுப்பது? என்று எண்ணிப்பார்த்தே இங்ஙனம் செய்திருக்கவேண்டும். இக்கொடைச்செயலுக்குப் பிறகு கபிலர் ஒரு பாடலைப் பாடியுள்ளார். (கக0 - புறநானூறு)

"வஞ்சியாது எதிர் நின்று கொல்லும் படையினையுடைய நீவிர் மூவரும் கூடிப் பொருதாலும் பறம்பு கொள்ளுதற்கரிது. தண்ணிய நல்ல பறம்பு நாடு முந்நூறு ஊரையுடையது. அம் முந்நூறு ஊரையும் பரிசிலர் பெற்றுக் கொண்டனர். நீவிர் பாடிக் கொண்டு பரிசிலராய் வந்தால் நுமக்கு யாமும் பாரியுமுள்ளேம்; அதுவேயன்றிப் பறம்பு மலையுமுண்டு" என்ற கருத்துடையது அது. மூவேந்தர் வஞ்சித்தும் பாரியைக் கொல்வார்களோ என்ற ஐயம் கபிலர்க்குத் தோன்றியதால் அவர் படையைக் கூறும்பொழுது "வஞ்சியாது எதிர் நின்று கொல்லும் படை" என்ற பொருளுடைய "கடந்தடுதானை மூவிரும்" என்றார்.

இவ்வாறு கபிலர் கூறியும் மூவேந்தர் முற்றுகை நீங்காதிருக்கவே அவ் வேந்தரை முன்னிலைப் படுத்திக்கூற விரும்பாது படர்க்கையில் வைத்துக்கூறுகின்றார். ஒரு முறைக்கு இருமுறை சொல்லியும் கேளாதார்க்கு மீண்டும் கூறுவது பொருந்தா

அவர் கூறியது கரிய பெரிய பறம்பு மலை இரங்கத்தக்க நிலையுடையதன்று. வேலால் வெல்லுதல் வேந்தர்க்கும் அரிது தான்; ஆனால் நீலமலரையொத்த மையுண்ட கண்களையுடைய விறலிக்கு எளிது; அவள் பாடிக்கொண்டு வந்தால்" என்ற கருத்துடைய பாடல் (புறம். கக௧)

இவ்வாறு கபிலர், பாரியின் பகைவர்க்கரியனும் பண்பினையும் இரவலர்க்கெளியனும் இயல்பினையும் மூன்றுபாடலினும் குறிப்பிடவே, மூவேந்தரும் கபிலர்சொல்லையே துணையாகக் கொண்டு வஞ்சித்துப் பாரியைக் கொன்று விட்டார்கள்; பறம்பு மலையைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இவ்வாறு நிகழ்ந்ததென்பதைப் பாரி மகளிர் பாடிய பாடலில்,

வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங் கொண்டனர் யாம் எந்தையு மிலமே." (புறம் : கக௨)

என வருமடிகள் கொண்டுணரலாம்.

இதுவே புறநானூற்றிலிருந்து பாரியைப் பற்றி அறியும் வரலாறாகும். இவ்வரலாறறை விரிவாக்கிச் சொற்செறிவும் பொருட்பொலிவும் பொதுள வெண்பா யாப்பினால் சேது சமத்

தான மகாவித்துவான் உயர்திரு. ரா. இராகவையங்கார் அவர்கள், "பாரிகாதை" என்னும் சிறந்த நூலை இயற்றியிருக்கின்றார்கள். அது தமிழ் மக்களுக்கு அமிழ்தென இனிக்கும் இயல்பினது. அந்நூலுக்கு அழகான குறிப்புரையும் அவரே வரைந்துள்ளமை மிகவும் போற்றத் தக்கதாகும்.

அப் பாரி காதையை யான் படித்துச் சுவைத்து மகிழும் வாய்ப்பைப் பெற்றேன். வெண்பாக்களின் அழகிலும் சொன் னயங்களிலும் பொருளாழத்திலும் திளைத்து மகிழ்ந்தேன். ஆயினும், 'புறநானூற்றில் கண்ட வரலாற்று முறைக்குச் சிறிது வேறுபட்டிருக்கின்றதே' என்ற எண்ணம் மாத்திரம் என்னெஞ்சில் இடங்கொண்டே இருந்தது. அச் சிறு வேறுபாடு எது என்பதை இனிக்காண்போம்.

பாரியோடு மூவேந்தர் பொருதற்குரிய காரணம் பாரி கொடைப் புகழால் மூவேந்தரினும் மிக்குத் தோன்றினமையே என்பதை முன்னர்க் கண்டோம். அக் காரணத்தையே ஐயங்கார் அவர்களும் உடன்பட்டுக் கூறுகின்றார்கள். ஆயினும் அதனினும் சிறந்த காரணமாக வேறொன்று புதுவதாகக் கூறியிருக்கின்றார் கள். பாண்டியன் பாரிமகளிரின் அழகின் சிறப்பையும் அறி வின் பெருக்கையும் கேட்டு அவர்பால் மயல் கொண்டான் என் றும், தன் கருத்தைத் தூதுவர்மூலம் பாரிக்குணர்த்தியும் பாரி யுடன் படாமை கேட்டுச் சினந்து ஏனை வேந்தரொடு சேர்ந்து கொண்டு பாரியைத் தொலைக்கப் படையொடுவந்து பறம்பு மலையை முற்றுகையிட்டான் என்றும் பாரிகாதையில் கூறி யுள்ளமையேயது.

"பாரி னறிஞர்வாய்ப் பாரி மகளிருஞ்
சீரினிது கேட்டுமயல் செய்தனனால்—போரி
னிணமாலை சூடு நெடுவேற் செழியன்
மணமாலை சூட மனத்து." (பாரி—௧௬௬)

எனவும்,

"மணம்பேசி னேற்கு மறுத்தில் லறத்தின்
குணம்பேசி விட்ட கொடியோன்—இணங்காற்கு
நூலா னறிவித்தல் நொய்தாகும் என்வெற்றி
வேலா னறிவிப்பேன் வேறு. (பரி-௨௨௬)

எனவும்,

வரும் வெண்பாக்களால், பாரியொடு மூவேந்தர் போர் செய்யக் காரணம், பாண்டியற்குப் பாரி மகண் மறுத்தமையே என்பது ஐயங்கார் அவர்கள் கருத்தாதல் தெளியலாம். பாரியை வெல்ல

ஏனைவேந்தரும் பாண்டியனோடு சேர்ந்து கொண்டார்கள் என்ற செய்தியை,

> "செகத்தாள், குலவேந்தன் மாறன் குறிப்பி னியன்றார்
> நிலவேந்தர் பல்லோரும் நேர்ந்து." (உஉஅ)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

பாரியின் உண்மை வரலாற்றையறிதற்குச் சிறந்த மூலமாக வுள்ளவை புறநானூற்றுப் பாடல்களே என்பதை ஐயங்கார் அவர்கள் பாரிகாதை முன்னுரையில் தெளிவு படுத்தியிருக்கின்றார்கள். புறநானூற்றில் பாரியைப் பற்றிய பாடல்கள் 16 உள்ளன. அவற்றுள், எந்தப்பாடலினும் பாண்டியன் பாரிமகளிரை மணக்க விரும்பினான் என்பதற்கோ பாரி தன் மகளிரைக் கொடுக்க மறுத்தான் என்பதற்கோ சான்று காணப்படவில்லை. அங்ஙனமாகவும் இப்புதுக் கருத்தைப் "பாண்டியற்கு மகண் மறுத்த திறம்" என்ற தலைப்பில் 65 பாடல்களால் விரித்துரைப்பதற்குக் காரணம் யாதென்பது ஆராயத்தக்கது.

> அளிதோ தானே பாரியது புறம்பே (புறம் : ௧0௯)

என்று தொடங்கும் பாடல் முதலாக மூன்று பாடல்களுக்கும் திணை - நொச்சி. துறை - மகண் மறுத்தல் என எழுதப்பட்டுளது. இதைக் கண்ட ஐயங்கார் அவர்கள் 'மகண் மறுத்தல்' என்பது பாரி, தன் மகளிரைக் கொடுக்க மறுத்ததே என்றும், மூவேந்தருள் பாண்டியனே பாரி மகளிரை மணக்க விரும்பினான் என்றும், மற்றை இருவேந்தரும் பாண்டியற்குத் துணையாக வந்தவர்கள் என்றும் ஊகித்துப் பொருள்கொண்டு தம் புலமைத் திறத்தால் புதுவதோர கற்பனை செய்து கொண்டு பாரிகாதையில் "பாண்டியற்கு மகண் மறுத்த திறம்" விரித்துரைத்திருக்கின்றார்கள். பாடல்களிலுள்ள பொருளை நோக்காது அப்பாடல்களின் கீழுள்ள துறைப்பொருளையே நோக்கி ஒரு வரலாற்றை நிறுவுவது பொருந்துமா ?

புறநானூற்றிற்குத் துறை வகுத்த உரையாசிரியர், புறப்பொருள் வெண்பாமாலையைத் துணைகொண்டு துறை வரைந்துள்ளார் என்பதும், அவர் வரைந்த திணையும் துறையும் அவ்வப் பாடற்கேற்றனவல்ல என்பதும் நச்சினார்க்கினியர் கருத்தாகும். அவர் கருத்து அன்னதாதல்,—"தத்தம் புது நூல் வழிகளாற் புறநானூற்றிற்குத் துறை கூறினாரேனும் அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறைகூற வேண்டுமென்றறிக." என்று தொல்காப்பியப் புறத்திணையியலில் 'கொடுப்போரேத்தி' என்னும்

சூத்திர வுரையில் அவரெழுதியிருத்தலானும் மேற்கூறிய புறத்திணையியலுரையில் புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை வேறு திணை துறைகளுக்கு உதாரணமாகக் காட்டி அவர் மறுத்தலானும் அறியலாம்.

நொச்சித் திணை என்ற திணையும் மகண் மறுத்தல் என்ற துறையும் தொல்காப்பியரால் கூறப்படாதனவே. இக் கருத்தை ஐயங்கார் அவர்களும் விளக்கியிருக்கின்றார்கள். "தொல்காப்பியனார் நொச்சித்திணை என ஒன்று உடன்படாமையின் அதனுட்டுறையாக ஐயனாரிதனார் கூறிய மகண் மறுத்து மொழிதற்கு அந்நூலுள் இடனேயில்லாமை துணியலாம். மற்றுப் புறப்பாட்டுரையாசிரியர் ஐயனாரிதனார் மதம் பற்றியவர் என்பது (௧0௯, ௧0, ௧௧)-ஆம் பாடல்களை நொச்சித் திணையுள் மகண் மறுத்தற்றுறைப்பாடல்களாகக் கூறுதலானறியலாம். நொச்சித் திணையுள் வைத்து மகண் மறுத்தலாக இவர் கூறியது மகண் மறுத்தலே காரணமாகப் போர் நிகழ்கின்ற நிலையில் எயில் காத்தல் பற்றி என்று கொள்ளத்தகும்" என்று பாரிகாதை முகவுரையில் வரைந்திருப்பது காண்க.

இதனால் (௧0௯, ௧0, ௧௧) ஆகிய புறப்பாட்டுக்களின் கீழ் வரைந்துள்ள நொச்சித்திணையும் மகண் மறுத்தல் என்னும் துறையும் புறப்பொருள் வெண்பாமாலையைப் பின்பற்றி எழுதப்பட்டனவே என்பது ஐயங்கார் அவர்கள் துணிபாதல் பெறப்படும். புறப்பொருள் வெண்பாமாலை யுரையில் "மகட்பாற் காஞ்சி அரசற்குரித்து; மகண் மறுத்து மொழிதல் மறவர்க்குரித்து." என்று விளக்கந்தரப்பட்டுளது. "மகண் மறுத்து மொழிதல் மறவர்க்குரித்து" என்றது, மகண் மறுத்து மொழிதற்குரியோர் மறவர் என்று எளிதில் பொருள் கொள்ளக் கிடக்கவும், ஐயங்கார் அவர்கள், மகண் மறுத்து மொழியப்படுவோர் மறவர் என்று திரியக் கொண்டு தம் முகவுரையில்,—"இவர் மகட் பாற்காஞ்சி எனவும் மகண் மறுத்த லெனவும் துறை கூறிய பாடல்கள் பெரும்பாலும் வேந்தர்க்கு மகண் மறுத்தலாகவே இருத்தல் கண்டுகொள்க.—பாரியைப் பற்றிய பாடல்களில் 'மூவிரு முற்றினும்' எனவும், "மூவிருங்கூடியுடன்றனிராயினும்" எனவும், "வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே" எனவும் வருவனவற்றால் இவை மறவர்க்கு மணமறுத்தலாகாமை நோக்கிக் கொள்க." எனவும், "மகண் மறுத்தல் துறைப் பாடல்கள் மூன்றும் மூவேந்தரையும் நோக்கியனவாக இருத்தலால், புறப்பொருள் வெண்பாமாலை யுரைகாரர், 'மகண் மறுத்தல் மறவர்க்குரித்து' என்று கூறியது இயையாமை காண்க." எனவும் மறுத்துரைத்திருக்கின்றார்கள். அது கிடக்க

மகண் மறுத்தல் என்னும் துறைப் பொருளையே பொருளாகக் கொண்டு ஐயங்கார் அவர்கள், பாரி, தன் மகளிரைப் பாண்டியற்குக் கொடுக்க மறுத்த செய்தியைக் கூறுவதே (௧௦௯, ௧௦, ௧௧) அம்மூன்று பாடல்களும் எனக் கருதினாரன்றி அத் துறைக்குரிய அப் பாடல்கள் என்ன கூறுகின்றன என்பதை நினைத்துப் பார்த்ததாகவே தோன்றவில்லை. அப் பாடல்கள் மூன்றும் முன்னரே எடுத்துக்காட்டப்பட்டன. அப்பாடல்களுள் மகளிரைக் கொடுக்க மறுத்த செய்தி குறிப்பானும் பெறப்படவில்லை என்பது தெளிவு. "அளிதோ தானே பாரியது பறம்பே" எனவும் "பறம்பு கொளற்கரிது" எனவும், "அளிதோ தானே பேரிருங் குன்றே" எனவும் பறம்பு மலையைக் கொடுக்க மறுத்த செய்தியே கூறப்படுகின்றது என்பதை யாரும் எளிதினுணரலாம். இப்பாடல்களைப்பாடிய கபிலர்க்குப் பாரி மகளிரைப் பாண்டியற்குக் கொடுக்க மறுப்பதே கருத்தாயின் அக்கருத்தை வெளிப்படக் கூறியிருப்பாரன்றோ? இது மறைத்துக்கூறும் மறைபொருளல்லவே. மகட்பாற் காஞ்சித் துறையிலுள்ள இருபத்தொரு பாடல்களில் (௩௩௬-௩௫௬) மகளைக் கொடுக்க அஞ்சி மறுக்குஞ் செய்தி வெளிப்படையாக விரித்துக் கூறப்பட்டுள்ளதே.

என்ற புறப்பாட்டில் (௩௪(

"மைய னோக்கிற் றையலை நயந்தோர்
அளியர் தாமே யிவடன்னை மாரே
செல்வம் வேண்டார் செருப்புகல் வேண்டி
நிரலல் லோர்க்குத் தரலோ வில்லெனக்
கழிப்பிணிப் பலகையர் கதுவாய் வாளர்
குழாஅங் கொண்ட குருதியம் புலவொடு
கழாஅத் தலைய கருங்கடை நெடுவேல்
இன்ன மறவர்த் தாயினு மன்னோ
வென்னா வதுகொல் தானே
பன்னல் வேலியிப் பணைநல் லூரே."

என்ற பாடலை நோக்குக. இதில் ஒரு பெண்ணின் தமையன்மார், தம் தங்கையை விரும்பிவந்த மன்னர்களின் செல்வத்தை மதித்துக் கொடாது அவர்கள் தம் குடிக்கு நிகரல்லோர் என்ற காரணத்தால் அவரொடு போர் செய்யத் துணிந்தநிலை வெளிப்படையாகக் கூறியிருத்தல் காண்க. இது போலவே,

"ஏர்பரந்தவய னீர்பரந்த செறுவின்
னென்மலிந்தமனைப் பொன்மலிந்த மறுகிற்

படுவண் டார்க்கும் பன்மலர்க் காவின்
நெடுவேளாதன் போந்தை யன்ன
ருருங்கொண் டியளே கருஞ்சினை
வேம்பு மாரும் போந்தையு மூன்றும்
மலைந்த சென்னியர் அணிந்த வில்லர்
கொற்ற வேந்தர் வரினும் தற்றக
வணங்கார்க் கீகுவ னல்லன்வண் டோட்டுப்
பிணங்குகதிர்க் கழனி நாப்ப ணேமுற்
றுணங்குகல னாழியிற் றோன்றும்
ஓரெயின் மன்ன னொருமட மகளே." (புறம்: ௩௩௮)

என வரும் பாடலிலும் வெளிப்படக் கூறியிருத்தல் காண்க. வளம் வாய்ந்த தோட்டினையுடையதாய் ஒன்றோடொன்று பின்னிக்கிடக்கின்ற கதிர்களையுடைய கழனிகளின் நடுவில் காவலாகப் பொருந்திக் கடலில் போக்கற்றுக் கிடக்கும் கப்பலைபோலத் தோன்றும் ஒரே ஒரு மதிலையுடைய மன்னன், ஏர்கள் பரவியுழும் வயலினையும், நீர் பரவிய ஏரிகளையும், நெல் நிரம்பிய வீடுகளையும் பொன்னிறைந்த தெருக்களையும், வண்டுகள் ஆரவாரிக்கும் பல மலர்களையுடைய சோலையினையுமுடையதாய், நெடு வேளாதன் என்னும் மன்னனுக்குரியதாய போந்தை என்னும் ஊரினை யொத்த பெரிய சிறப்பினையும் அரிய அழகினையுமுடையவளாகிய, தன் ஒப்பற்ற இளமை வாய்ந்த மகளைக், கரிய கிளையினையுடைய வேப்பம் பூவினையும், ஆத்திப் பூவினையும், பனம்பூவினையும் சூடிய தலையினையுடையவர்களும், கையில் தாங்கிய வில்லினையுடையவர்களுமாகிய வெற்றி வாய்ந்த பாண்டியனும் சோழனும் சேரனும் ஆகிய மூவேந்தர் வந்தாலும் அவர்கள், தன்னைத் தகுதியோடு வணங்காராயின் அவர்கள் செல்வத்தையும் வீரத்தையும் மதித்து அவர்க்குக் கொடுக்கமாட்டான் என்பது பொருள்.

ஓரெயின் மன்னன், அருங்கொண்டியளாகிய தன்னொடு மட மகளை வேந்தர்வரினும் வணங்கார்க் கீவனல்லன் என மாறி முடிக்க.

இப் பாடலில், ஒரு சிற்றரசன், 'தான் ஓரெயின் மன்னனாக இருந்தாலும் தன்னொரு மகளைச் செல்வத்தால் வீரத்தால் மிக்கவர்களாகிய மூவேந்தர்களே விரும்பி வந்தாலும் அவர்கள், வணங்கிக் கேளாராயின்—வில் வீரங் காட்டிப் பெறலாமென்று எண்ணுவராயின் அவர்க்கு அஞ்சிக் கொடுக்கமாட்டான்' என வெளிப்படையாகக் கூறியிருத்தல் காண்க.

பாரி மகளிரைப் பாண்டியன் விரும்பி வந்து மற்ற இரு வேந்தரோடு சேர்ந்து படைவலி காட்டிப் பாரியைப் பணிவித்து

அவன் மகளிரைப் பெறப் பறம்பு மலையை முற்றியது உண்மை யாயின், அவ் வடாத செயலைப் பொய்யா நாவிற் கபிலர், மேல் மகட்பாற் காஞ்சித் துறைப்பாடல்களில் கூறியுள்ளதுபோல வெளிப்படையாகவன்றோ கூறியிருப்பார். பாரியின் உயிர் நண்பராய்ப் பாரியுடனிருந்து போர் நிகழ்ச்சியை நேரிற் கண்ட கபிலர் அந் நிகழ்ச்சியை ஒரு பாடலிலும் குறிப்பிடாதிருக்கப் பன்னூறுண்டுகட்குப் பின் வந்தவர், பாண்டியன் பாரி மகளிரை விரும்பியே பாரியொடு போர் செய்தான் என்று எவ்வாறு துணிந்து கூறுவது?

பாரி மகளிரை விரும்பி அவர்களைப் பெறவேண்டியே பாரியொடு பாண்டியனும் பிறரும் போர் செய்தார்கள் என்பது உண்மையாயின், மூவேந்தரும் பறம்பு மலையை முற்றியிருந்து பாரியைக் கொன்ற பின் அவ் விரும்பப்பட்ட பாரி மகளிரைப் பாண்டியன் மணஞ் செய்து கொள்ளாது விடுப்பானா? விடுத்தானாயின் பன்னாளுழந்து செய்த போர் பயனில் செயலாகவன்றோ முடியும்? மேலும் பாண்டியன் நேர்மையற்ற நிலையில் பாரிமகளிரை விரும்பிப் போர் செயத துண்மையாயின் அப் பாரி மகளிர் பாடிய பாடலில், வேந்தர், தம் பறம்பு மலையைக் கவர்ந்த செய்தியையும் தம் தந்தையாகிய பாரியை யிழந்த நிலையினையும் தெளிவாக எடுத்துரைக்கும் அவர்கள், பாண்டியன் பண்பாடின்றித் தம்மை விரும்பிப் போர் செய்தான் என்ற நிகழ்ச்சியைக் கூறியிருக்கமாட்டார்களா? அங்ஙனம் கூறாமையால் மூவேந்தரும் போர் செய்தது பாரி மகளிர் பொருட்டன்று என்பது தெளிவா

“பாரி மாய்ந் தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேந் தொழுது நிற்பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும் பெயர்ப் பறம்பே
கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே.” (புறம் : ௧௧௩)

எனப் பாரியை யிழந்து நின்ற கபிலர் கலங்கிச் செயலற்றுப் பறம்பு நோக்கிப் பாடியபொழுது, மகளிர் கூந்தலைத் தொடுதற்குரிய உரிமையுடைய கணவரைப் பெற வேண்டிச் செல்கின்றேம் என்ற பொருள்படக் கூறியிருத்தலால் பாண்டியன் பாரிமகளிரை மணக்கவில்லை என்பது விளங்கும்.

மகண் மறுததல எனனும துறைக்குரியவாகக் காடடப பட்ட பாடல் மூன்றினும், “அளிதோ தானே பாரியது பறம்பே” “பறம்பு கொளற்கரிதே” “அளிதோ தானே பேரி
” எனப் பறம்பு மலை பகைவரால் கொளற்கருமை

யும், "ஆடினிர் பாடினிர் செலின் நாடுங் குன்று மொருங்கீயும்" "நீர் பாடினிர் செலின் யாமும் பாரியு முளமே குன்று முண்டு" "கிணை மகட் கெளிதால் பாடினள் வரினே" என இரவலர்க்குப் பாரி எளியனாய் நின்று யாவும் கொடுக்கும் தன்மையும் கூறியிருப்பது காண்க.

இவற்றை நோக்கும் பொழுது மூவேந்தர் பாரியோடு போர் செய்தது அவன் மகளிரைப் பெறவன்று என்பதும், பாரியைக் கொன்று பறம்பு மலையைக் கொள்ளவே என்பதும் தெற்றென நம். இதனாலன்றோ பாரிமகளிர் பாடிய,

> எந்தையு முடையேம் எங்குன்றும் பிறர்கொளார்
> இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
> வென்றெறி முரசின் வேந்தரெங்
> குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே." (புறம் : ௧௧௨)

என்ற பாடலில், வேந்தர், பறம்பு மலையைக்கைப்பற்றின செய்தியையும் பாரியைக் கொன்ற செய்தியையும் தவிர வேறொன்றும் கூறாது விடுத்திருக்கின்றார்கள்! பெண்டிரைப் பெற விரும்பிப் போர் செய்தவர்கள் குன்றத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள் என்றால் பொருந்துமா?

'பறம்பு கொளற்கரிது' என்ற தொடர் குறிப்பாகப் 'பாரி மகளிர் கொளற்கரியர்' என்பதை யுணர்த்திற்று என்று கூறுவாருளராயின், அப் பாரி மகளிரே, "வேந்த ரெங்குன்றுங் கொண்டார்" என்று கூறுமிடத்தும் குன்று என்பது குறிப்பாகப் பாரி மகளிரை யுணர்த்திற்று எனல் தகுமோ? மேலும் "கிணைமகட் கெளிதால் பாடினள் வரின்" என்னுமிடத்து வேலினால் பாரியை வென்று அவன் மகளிரைக் கொள்ளுதலரிது; கிணைமகள் பாடிக் கொண்டு வந்தால் அவட்குப் பெற வெளியர் என்று பொருள் பட்டு நகைப்பிற்கிடமாதலறிக. கிணைமகட்கு எளியர் பாரி மகளிர் என்றால் அக் கிணைமகளன்றோ பாரி மகளிரை மணக்க வேண்டும்?

எனவே, எவ்வகையில் நோக்கினும் 'மகண் மறுத்தல்' என்னும் துறைக்குரிய பாடல்கள் மூன்றனும் பாண்டியற்குப் பாரி மகளிரைக் கொடுக்க மறுத்த செய்தி பெறப்படாமையும் பறம்பு மலையும் நாடும் கொடுக்க மறுத்த செய்தியே கூறப்படுகின்றதென்பதும் எளிதினுணரலாம்.

புறநானூறு, பழந் தமிழர் வரலாற்றை யுள்ளவாறுரைக்கும் சிறந்த நூல் என்பது ஆராய்ச்சியாளர் பலரும் ஒப்புக் கொண்ட உண்மை. அந் நூலிலுள்ள பாடல்கள் யாவும் பல

புலவரால் பல காலத்துப் பாடப்பட்டவை. பொய்யாத நாவினை யுடைய புலவர்கள், தாம் நேரிற் கண்ட நிகழ்ச்சிகளையும், தாம் ஆராய்ந்து கண்ட முடிபுகளையும் பாடலாக அமைத்து நமக்குத் தந்திருக்கின்றார்கள். அப் பாடல்களில் சிலவற்றிற்குக் கீழ்க் குறிப்புக்கள் காணப்படுகின்றன. "கடந்தடு தானை" என்று தொடங்கும் பாடற்குக் கீழ் "மூவேந்தரும் பறம்பு முற்றியிருந் தாரைக் கபிலர் பாடியது" என்பதுபோல. இத்தகைய வரலாற் றிற்குரிய குறிப்புக்கள், பாடிய புலவராலோ அல்லது அவர் காலத்திருந்து அவ்வரலாற்றை நன்குணர்ந்தவராலோ எழுதப் பட்டிருத்தல் வேண்டும். எனவே, அத்தகைய கீழ்க் குறிப்புகளே வரலாற்றிற்குத் துணையாகக் கொள்ளத்தக்கன. திணையும் துறை யும் பிற்காலத்து உரை யெழுதியவரால் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். இது ஐயங்கார் அவர்கட்கும் உடன்பாடே என்பது முன்னர்க் காட்டப்பட்டது. எனவே, நூல் செய்த காலத்துக் குப் பன்னூறாண்டுகட்குப் பின் தோன்றிய உரையாசிரியர் கூறிய துறைப் பெயரைக் கொண்டு ஒரு வரலாற்றை நிறுவுவது பொருந்துமா என்பது ஆராயத் தக்கது.

ஆயின், உரையாசிரியர் தாம் அத் துறைப் பெயரைச் தம் இயைபில்லாமல் வரைந்திருப்பாரா? என்ற கேள்வி யெழு தல் இயல்பே. புறநானூற்றுப் பாடல்கள் புலவர் கண்ட முடிவு களையும் அவ்வக் காலத்து நிகழ்ச்சிகளையுமே புணர்த்தும் நோக் கத்துடன் பாடப்பட்டவையேயன்றி, இன்ன திணையில் இன்ன துறையில் இப்படிப் பாடவேண்டும் என்று கருதிப் பாடிய புறப் பொருள் வெண்பாமாலை போன்று பாடப்பட்டவையல்ல என் பது நினைவு கூர்தல் வேண்டும். பொய்யில் புலவர் பாடிய பாடல் களை வைத்துக்கொண்டு அவை ஒவ்வொன்றும் என்ன திணை யைச் சேர்ந்தது; என்ன துறையைச் சேர்ந்தது என்று எண்ணி ஒவ்வொரு பாடற்கும் திணையும் துறையும் கூறுவது பின் தோன்றிய உரையாசிரியர் செயலாகும். இங்ஙனமன்றிப் பாடிய புலவரே திணையும் துறையும் கூறியிருப்பின், "தூங்குகையா னோங்கு நடைய (புறம். ௨௨) என்று தொடங்கும் பாடற்கு 'அரசவாகை' என்று துறை கூறிவிட்டுப் பின் 'இயன்மொழியு மாம்' என்றாற்போல வேறு துறை கூறுதல் இயலாமை யறிக.

இவ்வாறு முன்னோர் பாடிய பாடற்குத் துறை வகுக்க மேற்கொண்ட புறநானூற்று உரையாசிரியர்; கபிலர் பாடிய அம் மூன்று பாடலையும் எத்துறையில் அடக்கலாம் என்று எண்ணிப்பார்த்து அப்பாடல்கட்குரிய புறத்துறைகள் கிடைக் கப் பெறாமையால் ஒருவகையான ஒற்றுமைநோக்கி மகண் மறுத்தல் என்னுந் துறைப்பாற்படுத்தி யிருக்கவேண்டும். புறப்

பொருள் வெண்பாமாலை ஆசிரியர் 'மகண் மறுத்து மொழிதல்' என்னும் துறைக்கு விளக்கமாக,

"வெம்முரணோன்மகள் வேண்ட
அம்மதிலோர் மறுத்துரைத்தன்று."

என்றும், உதாரணமாக,

"ஒள்வாள் மறவ ருருத்தெழுந் தும்பர்நாள்
கள்வார் நறுங்கோதை காரணமாக்—கொள்வான்
மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்
கருங்கண்ணி வெண்கட்டிற் கால்."

என்றும் வரைந்துள்ளார். 'மதிலிலுள்ள ஒள்ளிய வாள் வீரரைக் கோபித்தெழுந்து மேனுள் தேனொழுகும் நறுமாலையையுடையவள் பொருட்டாகக் கொண்டு, கொள்வான் வேண்டி இடையின்யின் அழகைக் கருதி வந்தவருடைய இளைய யானைகளின் கொம்புகள், இந்தக் கறுத்த கண்ணிணையுடையாளது வெளுத்த கட்டிலின் கால் ஆயின,' என்பது பொருள்.

இதனுல் ஒரு கொடிய வலிய வேந்தன் தன்பகை மன்னனுடைய மகளை விரும்பிக் கேட்க, அம் மன்னன் மதிலிலுள்ள வீரர்கள், 'நுமக்கு எளியளல்லள்' என்பதுபட மறுத்துரைப்பதே 'மகண் மறுத்து மொழிதலாகும்' என்பது விளங்கும்.

இப்பாடல் நொச்சித்திணையில் வைத்திருத்தலையும் அப்பாடலின் கருத்தையும் ஊன்றிநோக்கின் வேறுவகையாகப் பொருள் கொள்ளவும் இடம் தருகின்றது. நொச்சி வீரர் தொழில் முற்றுகையிட்ட உழிஞையான் விரும்பிய வண்ணம் மதிலைக் கைக்கொள்ளாதபடி மதிலைக் காத்து நிற்றலே யாதலின் அம் முறையால் இப்பாடற்குப் பொருள் கூறலாம். மதிலை மகளாக்கி, அம்மதிலாகிய மகளை முற்றியிருந்த மன்னன் வேண்ட அம்மதிற்கண் வீரர் கொடுக்க மறுத்தார்கள் என்பதே அப்பொருள். கருங்கண் முதலியன பெண்ணாக மதிலை யுருவகஞ் செய்ததற்கேற்ப வந்த இயற்கையடைகள். மதிலைப் பெண்ணாகக் கூறும் மரபு உண்டு என்பது, 'கருதாதார் மதிற்குமரி மேல்' (பு. வெ. ௧0௭) "வணங்காதார் மதிற்குமரியொடு, மணங்கூடிய மலிபுரைத்தன்று" என்று பிறவிடத்துக் கூறுவது கொண்டுணரலாம். மதிலைக் குமரியாக்கிக் கூறியதே யன்றி அம் மதிலை ஒரு மன்னன், தனக்குரித்தாக்கிக் கொண்டமையை மணங்கூடியதாகக் கூறியிருப்பதும் நோக்குக. மகட்பாற்காஞ்சியில் மகளைக் கொடுக்க மறுக்குஞ்செயல் மன்னனுக்குரியதாகவும் மகண் மறுத்து மொழியுமுரிமை மறவர்க்குரியதாகவும் ஓதப்பட்டிருப்பது இக்கருத்தையே வலியுறுத்தல் காண்க. மதிலாகிய மகளைக் கொடுக்க மறுக்குமுரிமை மறவர்க்குரியதாவது நேர்

மையே யன்றி மன்னவன் மகளைக் கொடுக்க மறுக்குமுரிமை மறவர்க்குரியதாதல் நேரிதாகத் தோன்றுமையும் நோக்குக. மகண்மறுத்து மொழிதல், நொச்சித் திணையதாதலும் இக் கருத்துப்பற்றியே யாம்.

புறநானூற்றுரை யாசிரியர், ஐயனாரிதனார் கருத்துணர்ந்து 'மகண் மறுத்து மொழிதல்' என்ற துறைக்குப் பொருள் கொண்டு அத்துறையைக் கபிலர் பாடல்களுக்கு (௧0௯, ௧௧0, ௧௧௧) உரியதாக ஓதி யிருத்தல் வேண்டும். ஒரு மன்னன் மதிலுள்ள மறவர் அம் மதிலாகிய மகளை வேண்டிய பகை மன்னனுக்கு மறுத்துரைத்தல் போலவே, பாரியின் நண்பராகிய கபிலர், பாரிக்குரிய பறம்பு நாடாகிய மகளைக்கொள்ளவிரும்பி வந்த மூவேந்தரை நோக்கிக் கொளற்கரிதெனை மறுத்துரைத் திருத்தலால் அப்பாடல்களுக்குத் திணை, நொச்சி யெனவும் துறை—மகண் மறுத்தல் எனவும் வரைந்திருப்பது பொருத்தமா

, "கடந்தடு தானை" என்று தொடங்கும் பாடற்குக் ப்பாக "மூவேந்தர் பறம்பு முற்றியிருந்தாரைக் கபிலர் பாடியது" என்றுள்ளது. பாரி மகளிரை விரும்பி மூவேந்தர் பறம்பு முற்றியிருந்தது உண்மையாயின் அவ்வின்றியமையாச் செய்தியையும் சேர்த்துப் பாரி மகளிர் காரணமாக மூவேந்தர் பறம்பு முற்றியிருந்தாரைக் கபிலர் பாடியது என்றன்றோ அக் குறிப்பு வரைந்தார் எழுதியிருப்பார்? இன்றியமையாத வரலாற்றுக் குறிப்புகளைப் பலவிடத்தும் எழுதியிருக்கும் அவர் "பாரி மகளிரை விரும்பி" எனச் சேர்த்து அக் குறிப்பு வரையாமை ஒன்றே மூவேந்தர் பாரிமகளிர் காரணமாகப் போர் செய்யவில்லை என்பதற்குத்தக்க சான்றாதல் காண்க.

இது காறும் கூறியவாற்றான் பாரியின் கொடைச் சிறப்பும் அக்கொடைச் சிறப்பே அவனோடு மூவேந்தர் போர்செய்யக் காரணமாக இருந்ததென்பதும், பெருநில முழுதாளும் பெற்றியுடைய பெருவேந்தரைக் காட்டிலும் முந்நூறூர்களை யாளும் சிற்றரசனாகிய வேள் பாரி புகழால் சிறந்தான்—அவன் கொடையாலாய புகழ், நாடு முழுவதும் பரவி யிருந்ததென்றால், அது மூவேந்தர்க்குச் சிறுமை தந்து சினத்தை வளர்த்துப் படையொடுவந்து அப்பாரியொடு பொரச் செய்ததென்பது பொருந்துவதாகும் என்பதும் 'மகண் மறுத்தல்' என்ற துறையையே பொருளாகக்கொண்டு பாரி மகளிர் காரணமாகவே பாரியோடு மூவேந்தர் போர் செய்தார்கள் என்பது உண்மை வரலாற்றோடு மாறுகொள்வதாக உள்ள தென்பதும் விளங்கும்.

வழியனுப்பு வாழ்த்து*

நம்பரநா தன்னடியே சிந்திக்கும் திருப்பெற்ற
சிதம்பரநா தப்பெரியீர்! செந்தமிழின் சுவையுணர்ந்து
பதம்பெறுநல் மாணவர்க்குப் பல்கலைசேர் கழகத்தில்
இதமுடனே பயில்விக்கும் எந்தமிழ்ப்பே ராசிரியீர்! (க)

ஆங்கிலமும் அருந்தமிழும் ஆய்ந்துணர்நும் பேரறிவின்
ஓங்கியுயர் பயனெய்த உவந்தழைத்தார் உளந்தழைத்தே
ஆங்கிலநாட் டுறைபுலவோர்; அவரழைப்பை எதிரேற்றுப்
பாங்குடனே சென்றுதமிழ்ப் பணியாற்றும் பணியேற்றீர்! (உ)

ஊர்காணப் பேர்காண உவந்தபொருள் தமைக்காணப்
பார்காணப் பறந்திடுவர் பலரிங்கி லாந்தினுக்கே
ஏர்காட்டத் தமிழ்க்கலையின் எழில்காட்ட இலக்கணத்தொல்
சீர்காட்டச் சென்றிட்டார் சிலர்யாரே நுமைப்போல? (ங)

மகிழ்வுற்றாள் தமிழன்னை மதிப்புற்றார் தமிழ்நாட்டார்
புகழ்பெற்ற சிதம்பரமும் பொருந்துகலைக் கழகமுமே
திகழ்வுற்ற தமிழ்நூல்கள் செருக்குற்றேம் யாங்களெலாம்
இகழ்வற்ற நும்முடைய இங்கிலாந் துச்செலவால். (ச)

மொழிநூல்க ளெனவுலகில் மொழிநூல்க ளனைத்தையுமே
ஒழியாமல் தெரிந்துணர்ந்தே உரைக்கவல உயர்புலவீர்!
மொழிகளிலே இனிமையதும் முந்தியதும் உயர்ந்ததுமாம்
மொழிதமிழே எனத்தேற மொழிந்திடுவீர் இங்கிலாந்தில். (ரு)

தமிழ்நாட்டில் தமிழுயரத் தமிழ்ப்புலவோர் தரமுயர
அமிழ்தனைய திருக்குறளின் அறம்பரவ முயன்றிடுவீர்,
இமிழ்கடலுக் கப்புறத்தும் இணையறுதொல் இலக்கியத்துத்
தமிழ்பரவச் செய்திடுவீர் தமிழ்நாட்டின் தகவுயர. (சா)

கலைமலியும் ஆங்கிலமார் கவினிங்கி லாந்தினுக்குப்
புலவர்கள்தம் முகமாகப் புகுந்துபுகழ் பெறவிரைவீர்,
நிலவணிவோன் நிறையருளால் நினைந்தவெலாம் நிறைவெய்தி
வலனுக நமக்கென்று வணங்கிவழி விடுக்கின்றேம். (எ)

---

* அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர். திரு. டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் இங்கிலாந்தின் அழைப்பிற்கு இணங்கிச் சென்றபொழுது அவர் மாணவர், திருப்பதி S.V.O. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான். செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள் மகிழ்ந்து பாடியது.

தமிழகத்தில் தமிழ்நிலை

[திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை]

(சிலம்பு : உக, பரல்: எ, ௩0ச-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆதலால், அவர்கள் தங்கட்கொரு மொழி உண்டு என்றும், அதன் வாயிலாகத் தங்கள் நாட்டு அரசியல் நடக்குமாயின் அதனால் நாட்டில் நல்வாழ்வும் நல்லறிவும் தோன்றி விளங்கும் என்றும் நினையாராயினர்; ஆங்கில மொழி ஆளப்படும் மக்கட்கும் ஆளும் அரசுக்கும் இடையே இரும்புத்திரையாக இருக்கிறது என்பதை அறியமாட்டா தொழிந்தனர்

ஒளியைக் கண்டு இருள் அஞ்சுவதுபோல, அறிவைக் கண்டு அறியாமை அஞ்சுவது இயற்கை. அதனால் கல்விக்குக் கல்லாமை அஞ்சியோடுவது அறமாயிற்று. ஆங்கிலக் கல்வி கற்றோர் அரசியலதிகாரிகளாய் ஆங்கில மேலோரின் சிறந்த அடிமைகளாய் ஆட்சிபுரியத் தொடங்கியதும், கல்லாத பொதுமக்கட்கு அவர்கள்பால் அச்சமும் ஒடுக்கமும் உண்டாயின. ஆங்கிலம் கற்றோர் உயர்ந்தோராகவும் அது கல்லாதவர் தாழ்ந்தோராகவும் சமுதாயத்தில் வேறுபாடுகள் தோன்றலாயின. அதனால் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் இடையே மனக்கலப்பு இல்லாதொழிந்தது. ஆங்கிலமொழி வாயிலாக வந்த அறிவு, பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் அவர்களிடையே பரவா தொழிந்தது. அறியாமைக்கு மன்னிப்பு இல்லையாதலால், அறியாமை கொண்ட பொதுமக்கள், ஆங்கில வறிவு கொண்ட அதிகாரிகட்கு அஞ்சி நீங்கி நின்றனர். இதனால் பொதுமக்களிடையே நல்ல கல்வியும் அறிவும் வளர்வதற்கு இடமில்லை யாயிற்று.

இந்த நிலை நல்லறிவு வளர்தற்கு இடம் தராது போயினும் பொதுமக்கள் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியை எழுப்பிற்று. ஆங்கிலக் கல்வி, மக்கள் சிலர்க்கு அதிகாரமும் பெரும் பொருளும் தருவதை அவர்கள் கண்டனர். அதனால் அவர்கள் தங்கள் நாட்டு மொழியினும் ஆங்கில மொழியினிடத்தில் பற்றும் நன்மதிப்பும் தர முற்பட்டனர். தங்கள் வயிற்றில் பிறக்கும் மக்களை எவ்வகைத் துன்பப்பட்டேனும் ஆங்கிலக் கல்வியுடையராக்க வேண்டுமென்று முயல்வாராயினர். இம் முயற்சியில் வீடு நிலம் முதலிய பொருள்களை யெல்லாம் விற்று ஆங்கிலம் கற்றவர் மிகப் பலராவர். இந்த வேகத்தில் தமிழ் நாட்டுத் தமிழும், ஆந்திர நாட்டுத் தெலுங்கும் பிறவும் கைவிடப்பட்டன. இத்துறையில் ஏனை ஆந்திரர், கேரளர், வங்காளியர். முதலியோரைக் காட்டி

னும் கண்டோர் இகழத்தக்கநிலையில் தங்கள் மொழியைக் கைவிட்டவர் தமிழர்களே. தமிழர்களுள் பலர் தமிழ் படிப்பதை யும் தமிழில் பேசுவதையும் மானக் குறைவாகவும் இழிநிலையாக வும் கருதினர்; இன்னும் சிலர் கருதிக்கொண்டிருக்கின்றனர்.

தலையில் ஒழுகிய சேறு, உடல் முழுதும் ஒழுகிப் பரவுவது போல, அன்று அரசியல் தலைமை நிலையத்தில் பாய்ந்த ஆங்கிலம், இன்று நாட்டில் தந்தி, தபால், தொழிற்சாலை, மருத்துவச்சாலை, கல்விச் சாலை, வாணிகம், கோயில், புகை வண்டி, மோட்டார் நிலையங்கள் முதலிய எல்லா இடங்களிலும் பரவிக் கொண்டது. நாடு நகரங்களிலும், சிற்றூர் பேரூர்களிலும், மூலை முடுக்கு களிலும், பிச்சைக்காரர் வாயிலும், பெருஞ் செல்வப் பெரு மக் கள் வாயிலும் எங்கும் ஆங்கிலம் இடம்பெற்று விட்டது. இன்று மக்கள் நினைக்கும் நெஞ்சிலும், பேசும் வாயிலும் ஆங்கிலம் முன் னணியில் நிற்கிறது என்றால் வேறு கூறுவானேன்?

தமிழ் நாட்டுத் தமிழன் உடலில் தமிழ் நினைக்கும் நெஞ்சில் தமிழ் இல்லை; தமிழ் பேசும் வாயில் தமிழ் இல்லை; தமிழனுடைய அன்றாட வாழ்வில் தொடர்புடைய தொழில், கல்வி, மருத்து வம், போக்கு வரவு முதலிய யாவும் ஆங்கிலமொழி நிலவும் இடங்களாய்விட்டன. இதனால் தமிழனது தமிழ் இருக்குமிடம் தெரியாது ஒடுங்கிவிட்டது. எப்பக்கமும் வேற்றுமொழி வந்து மோதுவதால் தமிழ்வாழ்வு தலை தடுமாறி நிற்கிறது.

இது நிற்க, இந்த ஆங்கில மொழி வரவால் தமிழன் தமிழ் ஒதுக்கப்பட்டதே யன்றித் தமிழருட் சிலரேனும் பயன்பட்ட துண்டோ எனின், பெரும்பயன் பெற்றுள்ளனர் என்பதை எவ ரும் மறுக்கமுடியாது. மக்களாட்சிக்கு இன்றியமையாத அரசியல் உரிமை உணர்வில், சிலர் முன்னேறி யுள்ளனர். சமுதாய வாழ் வில் தக்க மதிப்புப் பெற்றுள்ளனர். பொருள் துறை, தொழில் துறைகளில் ஓரளவு நல்லறிவு பெற்று விளங்குகிறார்கள். தாம் இந்த நாட்டுக்கு உரியவர்; இந்த நாட்டின் நல்வாழ்வில் தமக்கு நல்லதொரு பொறுப்பும் கடமையும் உண்டு என்பதை நன்றாக உணர்ந்துள்ளனர்; விஞ்ஞானம், தத்துவம், வரலாறு, அரசியல் நுட்பம், நீதி முதலிய துறைகளில் சிலர் ஓரளவு உணர்வு பெற் றுப் பிறங்குகின்றார்கள். இந் நிலைக்கெல்லாம் காரணம் ஆங்கிலக் கல்வியின் பெருக்கமே என்று எவரும் நன்கு அறிவர்.

நமது நாட்டில் புகுந்து இருநூறு ஆண்டுகளாகக் கல்விப் பணி புரிந்த மிகச் சிலரே ஆங்கிலத்தால் பயன் பெற்றுள்ளார் கள் என்றால், அதனால் நாட்டுமக்களில் பெரும்பாலார் பயன் பெறாமல் போனதற்குக் காரணம் ஆராய வேண்டிய தொன்று.

ஆங்கிலம் கற்றவர் அதனைக் கல்லாத மக்களோடு கலந்துகொள்ளாதவாறு அரசியல் பதவியும் ஊதியமும் தடை செய்து வந்தன. ஆங்கிலக் கல்வி காட்டிய இலக்கியக் காட்சியும் அரசியல் வரலாறு, நீதிநூல் முதலியன காட்டிய காட்சியும் ஆங்கில நாட்டுக் காட்சிகளாய்க் கற்றவருள்ளத்தை அவற்றினிடமே அடிமைப் படுத்தி விட்டன. ஆங்கிலக் கல்வி காட்டும் மக்கள் வாழ்வும் பண்பாடும் ஒழுகலாறும் நம் நாட்டுக்கு உரியவல்ல வாதலால் அவற்றை உள்ளத்தில் வாங்கிக்கொள்ளும் வகையில் செய்த உழைப்பு, நம்மவரை நம் நாட்டு வரலாறு, வாழ்க்கை, பண்பாடு, அரசியல் முதலிய துறைகளை அறவே மறக்கச் செய்தது. நம் நாட்டு மக்கட்கு உணர்த்தக் கூடிய மொழி நமது தமிழ் மொழி; அதனைச் சிறுபோதிலேயே கைவிட்டமையின் ஆங்கிலம் கற்றவர்கள் தாம் கற்றதைப் பிறர்க்கு உரைப்பதற்கு அவரிடம் சொற்கள் இல்லாமல் போய்விட்டன.

இன்று ஆங்கிலம் கற்றவர்கள் உள்ளத்தில் நிறைந்திருக்கும் அறிவுக் கருத்துக்கள் அனைத்தும் ஆங்கிலச் சொற்களாகவே யிருக்கின்றன. ஆங்கிலப் பயிற்சிக்கொப்பாக இன்றேனும் ஒரு சிறிது குறைவாகவேனும் தமிழ்ப் பயிற்சியிருந்திருப்பின், அவர் உள்ளத்தில் நிறைந்து கிடக்கும் கருத்துக்களுள் பெரும்பான்மையானவற்றை ஆங்கிலம் கல்லாத நாட்டுமக்களுக்கு உணர்த்தி ஆங்கிலக் கல்வியின் பயனை நாட்டில் பரவச் செய்வர். போதிய தமிழ்ப்பயிற்சியின்றி நிறைய ஆங்கிலப் பயிற்சி பெற்றுவரும் தமிழ் மக்கள் பஞ்சியடைத்த குடுக்கைகள் போலப் பிறர்க்குப் பயன்பட வழியின்றித் திகைக்கின்றனர்.

இன்று அறிவுத்துறையில் விஞ்ஞானம், கணிதம், வான நூல், மருத்துவ நூல், மின்சார நூல், தொழில் நுட்ப நூல், அரசியல் தந்திர நூல், உள நூல், தாவர நூல், ஏனை உயிர் நூல் என எண்ணிறந்த நூல்கள் ஆங்கிலத்தில் பெருகி வந்துள்ளன. விவசாய வகையில் எத்தனையோ பல அரிய நூல்கள் வளர்ந்து வந்திருக்கின்றன. இவற்றின் கருத்துக்களில் ஒரு சிறிதும் நாட்டுமக்களுக்குத் தெரியாமல் ஆங்கிலமொழியிலே அடைபட்டுக்கிடக்கின்றன. அவையெல்லாம் வெள்ளம்போல் நாட்டுமக்களிடையே பரந்து பாயவேண்டும். நாட்டுமொழிப் ...லாமையால் நாட்டவர்க்கு அவை பயன்படாது மட்கு

நாட்டுமக்களுக்கு உணர்த்தும் பணியைச் செய்யவேண்டுமானால் ஆங்கிலம் கற்றவர்களிடம் உள்ள ...றையை நோக்கவேண்டும். அவர்களிடம் தங்கள் கருத்துக்

களைத் தெரிவிப்பதற்கேற்ற தமிழ்ச்சொற்கள் இல்லை; அவை இல்லாமைக்குக் காரணம் அவர்கள் தமிழ்ச்சொற்கள் மிகுதியாகப் பெறுவதற்கேற்ற பயிற்சியில்லை. சிறு வகுப்பில் கற்ற ஒருசில சொற்களைக்கொண்டு. பல்லாண்டுகளாகப் பேருழைப்புச்செய்து பெற்ற சொற்பொருளை உரைக்கச்சொல்வது இரண்டடி உயரமுள்ள குள்ளனை எட்டடி உயரமுள்ள நெடியவன் தோள்மேல் கைபோட்டுச் செல்லச்செய்வது போலும் மடமைச் செயலாகும்.

ஆங்கிலமொழிச் சொற்களுக்கு ஒத்த அளவு தமிழில் இல்லாமல் இருக்கலாம். ஆங்கிலச்சொற்களின் தொகைக்கு முக்காற் பங்கு தமிழ்ச்சொற்கள் தமிழில் உண்டு. இவை யாவும் செயலற்று மடிந்து மறைந்துள்ளன. இவை வெளிப்படவேண்டுமானால், அரசியல், வாணிகம், போக்குவரவு, நீதி மன்றம், தபால் முதலிய எல்லாத்துறைகளும் தமிழில் இயங்க வேண்டும்; அப்போது மூலைமுடுக்குகளில் மறைந்துகிடக்கும் தமிழ்ச்சொற்கள் வெளிப்படும்.

அடுத்தபடியாக அரசியல் பணிகளுக்கு ஆங்கிலம் கற்றவர்களை விலக்கி, மிக்க ஊதியம் தந்து நாட்டுமக்களுக்கு ஆங்கிலக் கலையறிவை உணர்த்தும் பணியில் ஈடுபடுத்தி ஊக்கவேண்டும். அரசியல் நிலையங்கள், நீதிமன்றங்கள், மருத்துவ நிலையங்கள், தொழில் நிலையங்கள் ஆகிய எங்கும் தமிழே வழக்குமொழியாக நிலவப் பண்ணினால் ஒருசில ஆண்டுகளில் கல்வியறிவில்லாத நாட்டுமக்கள் பலர் நல்ல அறிவுடைய மக்களாய் மக்கள் ஆட்சிக்கு மாண்புமிக்க உறுப்பினராய் விளங்குவார்கள். நாடும் நல்வாழ்வுக்குரிய செல்வம் சிறக்கும் திருநாடாகத் திகழும்.

செல்வர்களே !

[நாஞ்சில், திரு. கா. கணபதி]

துள்ளிக் குதிக்கு மிளங்கன்று
    தொடர்ந்து பசுவை நெருங்குவபோல்
உள்ளம் கடவுள் திருவடியை
    உந்த வேண்டும் செல்வர்களே !
வள்ளல் தில்லை மன்றில்நடம்
    வழங்கும் எம்மான் அருளொன்றே
தள்ளற் கரிய மணியென்றே
    தலையால் வணங்கி வாழ்வீரே.

தமிழ் புறக்கணிப்பா?

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

தமிழ்மொழி சொல்வளங் குன்றாத் தொன்மொழி; இதன்கண் காலத்துக்கேற்றவாறு புதுச்சொற்களை ஆக்கற்கு வேர்ச் (Root) சொல் உண்டு. இதற்குமுன் இல்லாத புதுப் பொருள் ஒன்று புதிதாகத் தோன்றுமானால், அதற்கு ஏற்ற-தக்க சொல்லை, ஆக்குதல் கூடும். அத்தகைய வளங்குன்றா மொழி, எம் சீரியகூரிய செந்தமிழ்.

காட்டாக ரேடியோ, ஏரோப்பிளேன் முதலியன புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள்; இவைகட்கு முறையே வானொலி, வானூர்தி எனக் காரணத்தோடு தமிழ்ச்சொல் ஆக்கினர். பொட்டாட்டோ என ஆங்கிலப் பெயர்பூண்ட கிழங்கு, நம் நாட்டிற்குப் புதுவதாக வந்தது. அதைக்கண்ட தமிழர் ஏனைய கிழங்குகளைப்போல் இருப்பதை அறிந்தனர். அஃதோடு பந்துபோல் உருண்டை வடிவாக இருந்ததையும் நோக்கினர்; அதற்கு உருளைக்கிழங்கு எனப் பெயரமைத்தனர். இவ்வாறே எந்தப் புத்தம் புதிய பொருள்கட்கும் நம் தமிழில் புதுப் பெயர்களை உண்டாக்கி உலகில் நடமாடவிடலாம். நம்மொழி அதனால் ஆக்கமும் சிறப்பும் எய்தும்.

இவைகளைப் போன்றே தற்காலம் தமிழே ஆட்சிமொழியாகக் கொணரவேண்டுமென்று அவாக்கொண்டுள்ள மக்கள் எண்ணம் ஈடேறும் வண்ணம் ஆட்சிச்சொற் (அரசியல் முறைகட்கேற்ற சொல்)களைத் தமிழில் எளிதில் படைக்க ஒல்லும். அதில் எத்தகைய வருத்தமுமில்லை; படித்த-ஆங்கிலங்கற்ற கூட்டம், தமிழ் ஆட்சிமொழியாக வரவிட்டுவிட்டால் தம் பிழைப்பில் மண் விழுமேயென்று தன்னலங்கருதி முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு வருகின்றது. இதனைக் கருதியே முற்றத்துறந்த முனிவரராகிய தாயுமான அடிகள்கூடக்,

'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள், கற்றுமறி வில்லாத என்
கன்மத்தை என் சொல்வேன்'

என்று கற்றவர் தவற்றினைத் தமக்கு ஏற்றிக் கூறினார்.

இவ்வுண்மையை, சில திங்கட்குமுன் ஒரு கூட்டத்தில் பேசும்போது நம் சென்னை மாநில முதலமைச்சர் காமராசரவர்கள் நன்கு விளக்கிப் பேசினார்கள். அதற்கு ஆங்கில இந்துத்தாள் தன் தலைப்பில் கனன்று சீறியது தமிழகம் அறியும்.

அண்மையில் நிகழ்ந்த சென்னைச் சட்ட அவைக்கூட்டத்தில் திரு. வி. வி. இராமசாமி அவர்கள் கேள்வி கேட்டபோது அமைச்சர் மறுமொழி கூறுங்கால், 'தாய்மொழியே அரசியல் மொழியாக இருக்கவேண்டுமென்பதில் கருத்து வேறுபாடில்லை யென்றும், 'ஆனல் எப்போது எப்படி என்று பார்த்துச் செய்ய வேண்டு' மென்றும், 'இதைக்குறித்துப் பேசவேண்டாமென்பதுவே அரசினர் வேண்டுகோள்', என்றும் கூறினர்.

நம்நாடு விடுதலை பெற்றதும், அவ்வம் மாநிலத்திலுள்ள மொழி வழியாக மாகாணம் பிரிக்கப்படுமென்றும், அதன் வழியாகவே அரசியல் நடைபெறுமென்றும் காங்கிரசுத் திட்டமும் காந்தியடிகளின் கொள்கையும், ஏற்கனவே உள்ளது. அது ஏட்டளவில் - சொல்லளவில் - நிற்கின்றது. செயலளவில் வேற்றுமொழிகளுக்கே ஆட்சியும் ஆக்கமும் மறைமுகமாகக் கொடுக்கப் பெறுகின்றன. ஆந்திரம் நம் தமிழகத்தோடு இணைந்திருந்தது. மொழிப்பற்றின் காரணமாக நம்மை விட்டுச் சென்று தனி மாநிலமாகப் பிரிந்து தனக்கென முழு ஆட்சியையும் கொண்டு தம் மொழியாகிய தெலுங்கு மொழியிலேயே எல்லாவகையான நடவடிக்கைகளும் செய்துகொண்டு வருகின்றது. அதனல் நாளுக்குநாள் எழுச்சியும் சிறப்பும் மிகுந்துகொண்டு வருதலை யாவரும் அறிவோம். தன் மொழியில் பலவும் நடத்துவதால் அதனல் எந்தச் செயல்களும் அங்கு நின்றுவிடவில்லை, இங்கே தான் எதற்கும் எதிர்ப்பு புல்லுருவிகளால்.

தமிழ்நாடு என்று கூறக்கூட வாய் கூசி 'எஞ்சிய சென்னை மாகாணம்' என்று கூறும் குழுவினரால் ஒருபோதும் தமிழ் மொழி ஆட்சிமொழியாக வரப்போவதில்லை. அதற்கு மாருக வேற்றுமொழி, கலை, நாகரிகத்தையே தமதாகக்கொண்டு தமிழ் நாட்டில் பரப்ப முற்படுவர். இவர்கள் இருந்தென்! ஒழிந்தென்!

ஆகவே, தமிழகம் தனி நாடாகப் பிரிந்தாலன்றித் தமிழ் மொழிக்கோ கலைக்கோ நாகரிகத்துக்கோ பண்புக்கோ வளர்ச்சி யில்லை. ஆட்சி பீடங்களில் அமர்ந்துகொண்டு தமிழ்மொழியை ஆட்சிமொழியாக்கத் திட்டமில்லையெனின் இவர்களால் நாட்டுக்குச் செய்யப்போகும் நன்மையென்னையோ? 'துஞ்சாக்கண் வடபுலத்தரசே' என்றிருந்த நிலை இன்று மாறி, வடவரின் கீழ் அடிமையாக வாழ்வதில் என்ன நலனிருக்கிறதென்பதை அமைச்சர்கள் எண்ணிப்பார்த்தல் சாலும்!

ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு என்ன நல னிருக்கின்றது? வடநாட்டில் பல கோடிக்கணக்கில் பணத்தை வாரி இறைத்து யாற்றின் அணைக்கட்டுகள் கட்டி நீரைத்

தலைத்து விளைவைப் பெருக்குகின்றனர். இங்கே காவிரிக்கு என்ன திட்டமிட்டுள்ளனர்; வையைக்கு என்ன வாய்ப்பு; பொருநைக்கு என்ன பொருத்தம்; ஒன்றுமில்லை. மழையும் பெய்யாது, அதை அணைகோலித் தடுக்கவும் திட்டமில்லை, எல்லாம் வடக்கே.

உலக வழக்கில் செத்துப்போய் ஏட்டளவில் நிற்கும் வட மொழியை ஒரு தனிக் கூட்டம், ஆட்சிமொழியாக்க மடிதற்று நிற்கின்றது. அதைக் கண்டும் கேட்டும் மானங்கெட்ட தமிழர், தமிழ் ஆட்சிமொழியாகக் கூடாதெனத் தடங்கல் செய்யும் ஒரு சாரார்க்குத் துணை நிற்கின்றனர். தமிழன் பண்பாடென்ப தெல்லாம் பெயரளவில் ஏடுகளில் இருக்கின்றது. முன்பு மேலைநாட்டானுக்குத் தமிழகம் அடிமையாக இருந்தது. இன்று, வடநாட்டானுக்கு மீளா அடிமையாகக்கிடக்கின்றது.

வடநாட்டு அகதிகளெனப்படுவோர்க்கு மாடமாளிகைகளில் குடியிருந்து இன்பமாக வாழ இடனுண்டு. தமிழ்நாட்டு அகதிகட்கு இருக்க, நிற்கக்கூட இடனில்லை. தெருக்களில் அங்கண நீர் (சாக்கடை) செல்லுமிடங்களில் பிள்ளைகுட்டிகளுடன் வெயிலில் காய்ந்தும் பனியில் நடுங்கியும் மழையில் நனைந்தும் காலந்தள்ளுகின்றனர். வாயில்லாப் பூச்சிகளாகிய இவர்கள் தமிழ்நாட்டில் தமிழராகப் பிறந்த குற்றத்துக்காக இந்த நிலை. வடவராகப் பிறந்த சிறப்பினால் நாடு விட்டு நாடான மொழிபெயர் தேயத்திலும் செல்வாக்கு; சிறப்பு. இதைக்கேட்டால் குறுகிய மனப்பான்மையுடையவன்; நாட்டைத்துண்டாடுகின்றவன் என்று தூற்றப்படுகின்றது; கேட்டால் குற்றம்; கேட்காதிருக்க நடுநிலை நெஞ்சம் ஒருப்படுகின்றிலது.

தமிழ் ஆட்சிமொழியாவதில் தடையில்லையென்று வாயளவில் சொல்லிக் காற்றில் பறக்கவிட்டு விட்டால் தமிழ் தானாகவே ஆட்சிமொழியாக வந்துவிடுமா?

சமக்கிருதத்தின் நிழலான இந்தி எந்தச் சிறப்பைக் கொண்டு இன்று ஆட்சிமொழியாக இருக்கின்றது, அதிலுள்ள எழுத்துப் பெருக்கங்களும், காலும் கோடும் கோல்கள்போல் தோன்றுந் தன்மையாக இருக்கின்ற காரணத்தால் ஆட்சி மொழியாக்கப் பெற்றதா? என்னையோ? இல்லை, இல்லை. ஆட்சித் தருக்கினால்.

'வானம் பொழியுது மண்ணில் விளையுது மன்னவன் காணிக்கு ஏது கிஸ்தி' என்று அன்று ஆட்சிக்குக் கால்கொள்ள நின்ற வெள்ளையரை உறுமினன் வீரபாண்டியக் கட்டபொம்மு.

இன்று ஆட்சிமொழியாகத் தமிழ் தகுதியில்லையென்று சொல்வார்கட்கு இங்கு என்ன இருப்பு என்றே கேட்கின்றோம்; அவர்கள் வடநாட்டுக்குத் தென்னாட்டு அகதியென்று செல்வார்களாக, அங்கே என்ன நிகழுமென்பதை அறிவர்.

ஆகவே, இந்த வெட்கக்கேடான நிலையைவிட்டுவிட்டுத் தமிழை ஆட்சிமொழியாக்கி, வேற்று மொழியை அகற்றி நம் நாட்டை வடநாட்டுப் பிடிப்பினின்றும் விடுவித்துத் தன்னுரிமை நாடாக ஆக்கக் கிளர்ச்சி செய்யுமாறு தமிழ் மக்களைப் பெரிதும் வேண்டுகின்றோம். தமிழைப் புறக்கணிப்பது கூடாதெனக் கூறி அறிவுறுத்தவும் பெரிதும் கேட்டுக்கொள்கின்றோம்.

'காலமுண் டாகவே காதல்செய் துய்ம்மின்.'

தமிழ் ஆட்சிமொழியாக விரைவில் வருக; ஓங்குவதாக.

எண்ணிப் பார்மின்!

[நாகை, திரு. த. சி.

எண்ணிப் பார்மின்! எண்ணிப் பார்மின்!
இந்நாள் காறும் இனியநந் தமிழ்மொழி
ஏனோ ஏற்றம் பெறவிலை என்பதை
எண்ணிப் பார்மின்! எண்ணிப் பார்மின்!
இதற்கோர் காரணம் இருந்திடல் வேண்டும்
எனஆய்ந் திடிலோர் உண்மை விளங்கும்
இல்லை நம்மிடம் ஏற்புடைக் கொள்கை
இல்லை நமக்கோர் ஒருமை உள்ளம்
இல்லை நமக்குத் தமிழகம் தந்த
தொன்மைச் சிறப்பும் தூய உள்ளமும்
என்றுநாம் தமிழராய் வாழ்வதோ அன்றே
எய்திடும் தமிழுக் கேற்றம் அறிமினே.

வள்ளுவர் வழிவந்த வள்ளல்

[டாக்டர். பி. எல். சாமி பி. எஸ். ஸி.]

வள்ளுவர் வகுத்த வழிவந்த வள்ளல்கள் பலர். அத்தகைய வள்ளல்களில் ஒருவர் 1952-ஆம் ஆண்டில் நோபல் பரிசு பெற்ற டாக்டர் ஆல்பர்ட் சுவீட்சர். தற்கால "வள்ளல்கள்" வலக் கையால் கொடுக்கும்போதே இடக் கையால் விளம்பரப் படுத்துவர். ஆனால் இவர் வலக்கை செய்தது இடக்கை அறியாது. பொருளை அள்ளிஅள்ளித் தருவர். ஆனால் அன்பையும் அருளையும் வாரிவாரி இறைக்கும் வள்ளல்கள் ஒருசிலர். அவர்களில் ஒருவர் ஆல்பர்ட் சுவீட்சர். வள்ளுவர் வகுத்த வழியில் வாழும் இவர் வள்ளுவரை வானளாவிப் போற்றி எழுதியிருப்பதில் வியப்பொன்றுமில்லை ஏனெனில் திருக்குறளை வாழ்ந்து காட்டுபவர் இவர்.

இவர் சுவிஸ் இனத்தவர். 1875-இல் பிரான்ஸில் அல்சாஸ் என்ற இடத்தில் பிறந்தார். இளம் வயதிலேயே ஜெர்மன், பிரெஞ்சு முதலிய மொழிகளைக் கற்றார். இசை, மதம், தத்துவம் ஆகிய துறைகளில் கற்று டாக்டர் முதலிய பட்டங்கள் வாங்கினார். மனிதருக்குத் துன்பத்தைக் குறைப்பதையே வாழ்வின் குறிக் கோளாகக் கொண்ட இவர், மருத்துவத்துறையில் நுழைந்ததில் வியப்பில்லை. அதிலும் பட்டங்கள் பெற்றார். பெற்ற பட்டங்களை நெற்றியில் ஒட்டிக் காட்டித் திரியவில்லை. ஆப்பிரிக் காவுக்குச் சென்று பள்ளிகள் கட்டினார்; மருத்துவ நிலையங்கள் நிறுவினார்; பிரான்சில் கிடைத்த பணத்தை ஆப்பிரிக்கருக்குச் செலவழித்தார்; ஆப்பிரிக்காவிற்கு சென்றதற்கு அவர் கூறிய காரணம் உன்னிப் பார்க்கத்தக்கது. ஏனெனில், வெள்ளையர் கள், உலகில் உள்ள கருப்பர்களைத் தங்களின் "தாங்கமுடியாத பளு" என்று சொல்லிக்கொண்டு கருப்பர்கள் மேலேயே குதிரை யேறுவர். கருப்பர்கள் தாங்குவார்கள். "தாங்குகி றோம் நாங்கள்" என்பார்கள் வெள்ளையர்கள்! அத்தகைய ஆப்பி ரிக்கனின் துன்பச் சுமையைத் தூக்கிக் குறைப்பதற்குச் சென் றார் இவர். "ஆப்பிரிக்காவில்தான் துன்பச் சுமை நிறைய உள் ளது. ஆதலின் அங்கே செல்லுகிறேன்" என்று சொல்லி மனிதரையே கொன்று தின்னும் மனிதரிடைச் சென்று மருத்துவம் செய்தார். துன்பத்தைத் துடைத்தார்; அறியா மையை அகற்றினார்; நாற்பது ஆண்டுகளாக உழைக்கிறார். உழைத்துக்கொண்டே யிருப்பாராம், உடல் ஓடாகும் வரை. யைக் கிள்ளுவது கொலை, பூவைப் பறிப்பது பாவம்,

எறும்பை நசுக்குவது பெரும்பழி என்ற உயரிய கொள்கைப்படி நடப்பவர். ஊசிமருந்து ஏற்றும்போதே நோய்தரும் உயிர்கள் மடிகின்றனவே என்று வருந்துவாராம்! உலகில் ஒவ்வொருவரும் ஒரு சிறிதாவது துன்பத்தைக் குறைக்க முயலவேண்டும் என்பதே அவர் வேண்டுவது. "துன்பம் துடைப்போம் சேர வாரும் செகத்தீரே" என்று அவர் அழைக்கிறார். முதியவராய் விட்டார். பல நூற்றுக்கணக்கான அறுவை மருத்துவம் (Surgery) செய்த கைகள் சோர்வுற்றாலும், பிற மருத்துவர்கள் அறுவை செய்யும்போது அருகிலேயே இருப்பாராம் அவரைப் பார்க்கப் பல கல் தொலைவில் இருந்து மக்கள் வருவார்களாம். அவருடைய சிறந்த நண்பர்களில் ஒருவர் ஆப்பிரிக்கர். இந்த உழைப்பிற் கிடையிலும், அவர் பல புத்தகங்கள் எழுதியுள்ளார். இசை, மதம், தத்துவம் ஆகிய துறைகளில் இவர் எழுதிய புத்தகங்கள் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அந்த நூல்களில் ஒன்றான 'Indian Philosophy and its devolopment' என்ற நூலில் திருக்குறளைப்பற்றி எழுதியுள்ளார். இப் புத்தகம் ஜெர்மன் மொழியில் இயற்றப் பட்டது.

சிறிது காலமாக மேல்நாட்டு அறிஞர்கள், தங்கள் கண்களைக் கீழ் நாட்டு நூல்களில் திருப்பியுள்ளனர். ஆல்டுவஸ் ஹக்ஸ்லி (Aldous Huxley) கிறிஸ்டோபர் பிரை (Sir Chris Topher Fry) டி. எஸ். எலியட் (T. S. Eliot) ஆகிய சில அறிஞர்கள், கீழ் நாட்டு அற நூல்களைப் படித்துப் பயன் பெற்றனர். ஆனால், கீழ்த்திசையில் கலங்கரை விளக்கமாக இருந்த திருக்குறள் அவர்கள் கண்ணோட்டத்தில் படவில்லை. காரணம், விளம்பரமில்லை. திரை மூடியிருக்கிறது. அந்தத் திரையைத் திறக்கும் வேலையை ஆல்பெர்ட் சுவீட்சர் நன்றாகச் செய்துள்ளார். முகிலைக் கிழித்தெழும் முழுமதி என்று பலரும் அறியச் செய்தார். ஆல்பர்ட் சுவீட்சர் கண்ட குறளோ இரண்டாந்தர ஜெர்மன் மொழிபெயர்ப்பு. மொழிபெயர்ப்பில் குறள் பல இடங்களில் முடம்பட்டது. ஆயினும் அந்த மொழிபெயர்ப்பிலும் கண்டுகொண்டார், குறள் பாறையில் புதைந்துள்ள பத்தரைமாற்றுப் பொன் என்று! கீதையையும், மனுவையும் ஒப்பிட்டுப் பார்த்தார். வேற்றுமைக்கு விளக்கம் தந்தார். மொழிபெயர்ப்பில் முடம்பட்டிருந்த குறள் புடம் பெற்று ஒளிர்ந்தது, அவருடைய விளக்கத்தில்.

குறளில் இருக்கும் கருத்துடன் மிகச் சிறிது ஒத்துக் காணப்படுவது எதோ, அதை மனுஸ்மிருதியிலும், உபநிடதத்திலும், தேடித் துருவிக் கட்டிப் பிடித்துக் கொண்டுவந்து, "இதோ பாருங்கள், இக்குறள் மனுவின் நிழல், இஃது உப

படம, அது கீதையின் சாயை" என்று காட்டுகின்றனர் தமிழ்நாட்டில் சில அறிஞர்கள். இந்தப் "பல தண்காட்சிகளை"ப் பார்த்துவிட்டு ஆல்பர்ட் சுவீட்சர் காட்டும் குறள்தரும் காட்சியைக் காணுங்கால், நாம் மலைத்துவிடுகிறோம். ஜி யூ. போப் முதலிய அறிஞர்கள் குறளுக்கும், வட நூற்களில் உள்ள அறவுரைகட்கும் உள்ள வேற்றுமையைப் பல இடங்களில் காட்டியுள்ளனர். அந்த வேற்றுமைகளை விளக்கமாக வலியுறுத்திக் கூறியுள்ளார் டாக்டர் ஆல்பர்ட் சுவீட்சர். குறளின் கருத்துக்கள் புத்தரின் கொள்கையை விட, உபநிடதத்தின் 'உபதேசத்தை'விட, கீதையின் கருத்தைவிடச் சிறந்தது என்பதைச் சில இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார். அவருடைய சில கருத்துக்கள் காட்டப்படும்.

'வரும் பயனை எதிர்பார்த்து அறம்செயயலாம்' என்ற மனுவின் கருத்தைவிடப் பயன் கருதாது 'அறம் செய்க' என்ற குறளின் கருத்துச் சிறந்தது என்று கூறியுள்ளார். 'குறி யெதிர்ப்புக் கூடாது' என்றே குறள் கூறுகிறது. உலகம் மாயை என்று பேசி வந்த பிராமணீயம், பௌத்தக் கொள்கையைவிட 'உலகம் உண்மை; இன்பம் இயல்பு' என்று கூறும் காமத்துப்பால் சிறந்தது என்கிறார். மற்றொரு இடத்தில் குறள், 'தொழிலால் மனிதன் உயர்வடைகிறான்' என்று கூறுகிறது. ஆனால் வட நூற்களோ பிறப்பால் உயர்வடைகின்றான் என்று கூறுகின்றன என்பதையும் எடுத்துக் காட்டுகிறார். மற்றும் அன்பு, அருள், நட்பு முதலிய இயல்களில் வரும் குறள்களை எடுத்துக்காட்டி, அவைகளின் சிறப்பைப் போற்றியுள்ளார்.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்ற குறளின்படி தனக்குற்ற நோயைத் தாங்கி, பிறர்க்குற்ற நோயைப் போக்கி, யாதொரு உயிர்க்கும் உறுகண் செய்யாமல் வாழும் இப்பெரியார், இப்பொழுது எண்பதாவது ஆண்டை எய்தியுள்ளார். ஆனால் இன்றும் 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று கருதி, ஆப்பிரிக்காவில் தொண்டு செய்கிறார். இத்தகைய பெரியார், வள்ளல், வள்ளுவர் குறளைப்பற்றிக் கூறியுள்ளதை எல்லோரும் மனத்திலிருத்த வேண்டும்.

"உலக இலக்கியங்களில் இத்தகைய உயர்ந்த அறிவுரை தாங்கிய அறநூல் அருமையிலும் அருமை."

—டாக்டர் ஆல்பெர்ட் சுவீட்சர்.

வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள்

[தமிழ் மறைக் கழகத் தலைவர். திரு. கா. பொ. இரத்தினம்]

ஆண்டுதோறும் ஒவ்வொரு வீட்டிலுங் கொண்டாடுக :

சென்ற இரண்டு ஆண்டுகளிலும் வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாகத் தமிழினைப் பேசும் மக்கள் வாழும் இடங்கள் எங்கும் கொண்டாடச் செய்தோம். ஐம்பதுக்கு மேற்பட்ட பத்திரிகைகளும், நூற்றுக்கணக்கான சங்கங்களும், திருச்சி, சென்னை, கொழும்பு, சிங்கப்பூர் வானொலி நிலையங்களும் எமது கழகத்தின் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கின; சாதிமத அரசியற் கட்சி வேறுபாடுகளின்றித் தமிழ்ப் பெருமக்கள் பலர் ஆதரவளித்தனர்.

1. பத்திரிகைகளும், சங்கங்கள், கல்விச் சாலைகள் முதலிய பொது நிலையங்களும் வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாக ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடுமாறு வற்புறுத்திக் கூறிக் கொண்டாடச் செய்தல். [இத் திருநாளுடன் சில நாட்களையும் சேர்த்து வள்ளுவர் வாரமாகவும் கொண்டாடலாம்.]

2. பத்திரிகைகள் யாவும் திருவள்ளுவர் திருநாள்மலர் வெளியிடல்.

3. சங்கங்கள், மன்றங்கள், கழகங்கள், கல்விச்சாலைகள் முதலியன திருவள்ளுவர் திருநாளன்று பெரும் விழாக்களை நடத்தல்.

4. வள்ளுவர் திருநாளாகிய வைகாசி அனுடத்தை அரசினர் விடுமுறை நாளாக்குவித்தல்.

5. நாட்குறிப்பு, நாட்காட்டி, பஞ்சாங்கம் முதலியன வெளியிடுவோர், இவற்றிலே வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாக ஆண்டுதோறும் குறித்தல்.

6. யாவரும் திருவள்ளுவர் தொடர் ஆண்டை வழங்குதல் முதலியனவாம்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) எல்லா மொழிகட்கும் ஒருவகை எழுத்து

பஞ்சாபி தர்பார் ஆண்டுவிழா, மூன்று நாட்கள் 27—3—55 முதல் நிகழ்வுற்றது. அதற்கு இந்தியநாட்டு இணைப்பு அமைச்சர் சகசீவன் ராம் தலைமை தாங்கினார். அவர் அதுகாலை, 'இந்தியாவிலுள்ள எல்லா நாடுகளும் மொழிகள் வளர்ச்சிக்கும், நாட்டின் பண்பாட்டுக்கும் ஒரு பொதுவான எழுத்தை ஏற்பது முதன்மையானது; பஞ்சாபி மொழியை இந்த நாட்டில் வளர்க்கப் பெப்சு அரசினர் கைக்கொண்டுள்ளனர்; அதனை மிகவும் பாராட்டுகின்றேன். ஆனாலும் ஒரு பொதுவான எழுத்து இருக்கவேண்டுமென்று நான் கொண்டுள்ள கொள்கைகளைப் பஞ்சாபி எழுத்தாளர்களை எண்ணிப்பார்க்குமாறு வேண்டு [illegible]

இந்திய மொழிகள் யாவும் சமக்கிருதத்திலிருந்தே உண்டானதாகையால் இது செய்வது எளிதெனவும் கருதுகின்றேன். அரசியல் மொழிக்கும் மாகாண மொழிகட்கும் போட்டியோ முரண்பாடோ இருக்கத் தேவையில்லை என்றார்.

குறிப்பு: திரு. சகசீவன்ராம் கூறுவதுபோன்று சமக்கிருதமே எல்லாவற்றிற்கும் அடிப்படையான மொழி என்றால் அது நாட்டு வழக்கத்தில் இறந்து ஏட்டளவில் நிற்பானேன்? அமைச்சர்களும் அவரை ஒட்டியவர்களும் செத்த மொழியை வழக்கிற்கொணர நினைப்பது பெரியதோர் அறியாமையாகும். சமக்கிருத 'லிபி' எண்ணிலடங்காதன; அவைகளை அடிமை மாநில மொழிகளில் திணிப்பானேன். எனவே, பயனற்ற இதுபோன்ற வேலைகளில் ஈடுபடுவதைவிட நாட்டுக்கு ஆக்கந்தரும் வேலையில் சகசீவனார் முயலல் மிக நலனெனக் கூற விழைகின்றோம்.

(உ) சமக்கிருதத்தை ஆட்சிமொழியாக்கக் கனவு

தில்லி பாரதீய சாகித்திய சம்மேளனக் குழுவினர் சமக்கிருதத்தை ட்சிமொழியாக்கவேண்டும் என்று கோரி 27—3—55-இல் ஒரு முடிபு [illegible]

ரியர் மாதவாச்சாரியா என்பார், இதனைக் கொண்டுவந்து நிறைவேற்றி எல்லா மாகாண மொழிகளும் தங்கள் வளர்ச்சிக்குச் சமக்கிருதத்தையே நம்பியுள்ளனவென்றும், சமக்கிருதத்தை எல்லா மாநிலங்களும் ஏற்றால் நாட்டு ஒற்றுமை நிலைக்குமென்றுங் கூறினார். இதனை ஆசிரியர் எஸ்.பி. வாகேர் வழிமொழிந்தார். நாட்டின் முடிவான குறிக்கோள் சமக்கிருதத்தை ஆட்சிமொழியாக்குவதென மகாமகோபாத்தியாய கிர்தர் சாத்திரி சர்மா ஒரு தீர்மானங் கொண்டுவந்து [illegible] றார்.

குறிப்பு: அமெரிக்கா, உருசியா போன்ற முற்போக்கான நாடுகள், மனிதன் ஏன் பிறக்கின்றான்? ஏன் இறக்கின்றான்? முதுமை ஏன் வருகின்றது என்பன போன்றவற்றை எண்ணி ஆய்ந்து அதற்கு முடிபுகண்டு இறப்பைத் தடுக்க வழிகோலி நிற்கின்றன. நம் இந்திய நாட்டில் செத்துப்போன மொழிக்கு உயிர் கொடுப்பதிலும் அவைகளை

வளர்த்து உலகமொழிகளில் உயர்ந்ததாகக்கொள்ள வைத்தலுமாகிய பயனற்ற வழிகளிலேயே காலத்தை வீணுக்குகின்றனர். எந்த நாட்டிலாவது எங்காவது சமக்கிருதத்தில் பேசுவதாகவோ? எழுதுவதாகவோ வரலாறு கேட்டதுண்டோ? நடமாட்டமில்லா மொழி எவ்வாறு வளரும். இச்சாத்திரியர்கள் எண்ணிப்பார்த்து நடமாடும் மொழிகட்குத் தாம் வாழும் தம்மை வாழ வைக்கும் மொழிகட்கே ஆவன புரிவது அறிவுடைமையாகும்.

(௩) குன்றக்குடி அடிகளார் சென்னை வருகை

மலேயா முதலிய கடல்கடந்த நாடுகளில் சுற்றுச் செலவை முடித்துக்கொண்டு 25-3-55 இல்-குன்றக்குடி சிவத்திரு. அருணசல தேசிக பரமாசாரிய அடிகளார் வந்து சேர்ந்தருளினார்கள். அவர்கட்குச் சென்னை சிவனடியார் திருக்கூட்டச் சார்பில் வரவேற்பு நிகழ்ந்தது.

அவ்வரவேற்பின்போது அடிகளார் தாம் மலேயா இந்தோனேசியா முதலிய நாடுகளில் கண்ட நம் தமிழ்நாட்டுக் கலைப்பண்பினையும் சிவபெருமான், திருமால், பிள்ளையார், முருகப் பெருமான் முதலிய கடவுளர்கட்குத் திருக்கோவில்அமைத்து வழிபட்ட சிறப்பையும், பழங் காலந்தொட்டே உள்ளன வென்று பாராட்டிப் பேசியருளினார்கள்.

குறிப்பு: அடிகளார் தம் உடற் செம்மையையும் தற்பெருமையையும் பொருட்டாகக் கொள்ளாது 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் பெரியார் திருமொழிக்கு இலக்காக வெளியுலகில் வந்து தொண்டு செய்வது தமிழுலகிற்கும், சைவவுலகிற்கும் பெருமையளிப்பதாகும். அடிகளாரின் இம்மாபெருந் தொண்டுக்கு மகிழ்ந்து அடிகளாரின் பொன்னடிகள் பன்னெடுங்காலம் இந் நிலவுலகில் நின்று நிலவியொளிர இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

மதிப்புரை

(௧) கொங்கு நாட்டு வரலாறு

[இதன் ஆசிரியர், கோவைகிழார், திரு. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழக சரித்திர வெளியீடு. இதன் விலை ரூபா. 8-0-0. கிடைக்குமிடம்: அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.]

ஆசிரியர் பன்மொழிப்புலவர், வரலாற்று நூற்றிறலர்; பன்னூல் ஆசிரியர்: கல்வெட்டாராய்ச்சிக்கலை வல்லுநர் நுண்ணுணர்வினர். எளிமையும் இனிமையும் பொதுள எழுதும் மாண்பினர்.

ல் இரண்டு பகுதிகளை உடையது. எண்பத்திரண்டு உட்பிரிவுகளையுடையது. நானூற்று நாற்பதுக்கு மேற்பட்ட பக்கங்களையுடையது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் இன்றுகாறுமுள்ள கொங்குநாட்டுவரலாறு தக்க சான்றுகளுடன் கற்பார்களிந்துருகுமாறு இதன்கண் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. பெயரளவில் கொங்கு நாட்டு வரலாறு என்று பொறிக்கப்பட்டிருப்பினும் பொதுவாக இந்திய நாட்டு வரலாற்றுக்குறிப்பும், சிறப்பாகத் தமிழ்நாட்டின் சங்ககாலந் தொட்டுள்ள முழுவரலாறும், ஆட்சி முறைகளும், அயல்நாட்டுத்

தொடர்பும் வணிகமும், கடல்கடந்து நிகழ்ந்த பெருவணிகமும் கொடுங்கோலர் படுத்திய பாடும், அவர்கள் பட்ட பாடுகளும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. கால ஆராய்ச்சி முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது. நாட்டெல்லைப் படங்கள், திருக்கோவில், திருவுருவம், கோபுரம், மண்டபம், மன்றம், மன்னர் முதலிய பல்வேறுபடங்களை வழுவழுப்பான கடிதத்தினில் அச்சிட்டு ஆங்காங்கே பொருத்தமான பக்கங்களில் இணைத்துள்ளமை பெரிதும் போற்றத்தக்கது. நாகரிகம், மொழியாராய்ச்சி, பண்பாடு முதலியனவும் பரக்கக் காணலாம். இந் நூல் ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் இன்றியமையாக் கருவூலமாகும். தமிழ்நாட்டின் விரிந்த வரலாறு எழுதுவோர்க்குப் பெருந்துணை அடிப்படைப் பெருநூலாகும். தமிழ்நாட்டோடு தொடர்புள்ள மேலைநாடு கீழைநாடுகளின் வரலாறுகளும் தனிச்சிறப்பாக வுள்ளன. கல்லூரி மாணவர்களுக்குத் துணைப் பாடமாக வைப்பதற்கேற்ற வளமுடையது. தமிழைத் தனிமுறையாகப் போற்றிவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார்க்குத் தமிழ்நாடு என்றுங் கடப்பாடுடையது.

(உ) பரதசங்கிரகம்

[அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத்தமிழ் வெளியீடு. இதன் ஆசிரியர், அறம் வளர்த்தான் என்பவராவர். இதன்பதிப்பாசிரியர் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனூர் (தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) அவர்கள் ஆவர். இதன் விலை ரூபா. 3-0-0.]

இந்நூல் எல்லையில்லா வல்லெதிர்ப்பினிடையே தொன்மைத் தமிழ்ப் பண்ணிசைக்குப் புத்துயிரளித்துப் பண்டுபோல் நிலவச் செய்த அரசவள்ளலார் பல்கலைக்கழகச் சார்பில் வெளிவருவது மிகவும் பொருத்தமான அரும்பணியே.

இதன்கண் 'பரதசாத்திரம்' முதல் 'தாளவியல்' ஈறுகப் பதினைந்து இசைப் பொருள்கள் பேசப்படுகின்றன. பக்கம் நூற்றெண்பத்தாறுகும். குழல் மத்தளம் முதலிய கருவிகள், பரதம் தாண்டவம் முதலிய நடனங்கள், இராகங்கள், தேவதைரூப அவினயம் முதலிய பல தெளிவாகவும் விரிவாகவும் விளக்கப்பட்டுள்ளன. மேலும் இந்நூல் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, நூற்பா முதலியவற்றல் ஆக்கப்பட்டுள்ளது. இதற்குத் தெளிவான பழையவுரையும் காணப்படுகின்றது. பதிப்பாசிரியரவர்கள் மிக முயன்று பல குறிப்புக்களுடன் செப்பனிட்டுள்ளார்கள். பொதுவாக இசை பயில்வார்க்கும் சிறப்பாகத் தமிழ்இசை பயில்வார் பயிற்றுவார்க்கும் இந்நூல் பேருதவியாகும். புதுவதாக இசை யிலக்கணம் யாப்பிலமைப்பார்க்கு இது அடிப்படைத் துணையாகும். இதனைத் தமிழகம் விழைந்தேற்று நன்மையுறும் என நம்பு

(௩) தமிழிலக்கியம்

[இதன் ஆசிரியர், சென்னை முன்னுள் மேயர் திரு. கு. இராமசுவாமி நாயுடு அவர்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு. இதன் விலை ரூபா. 4-14-0.]

இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியரவர்களால் வேனிற்காலத்து ஆற்றப்பட்ட மூன்றுநாள் சொற்பொழிவின் விளக்கமாகும். நூற்றுமுப்பத்தைந்து பக்கங்களைக்கொண்டது. இந்நூல்

'சங்ககால இலக்கியம், இடைக்கால இலக்கியம், பிற்கால இலக்கியம்' என முப்பிரிவுகளாக அமைத்துக் கி.மு. 3000 முதல் நாளிதுவரையுள்ள சிறந்த இலக்கண இலக்கியங்கள். அவ்வவற்றிற்குரிய உரைகள், நூலாசிரியர் உரையாசிரியர்களின் வரலாறுகள், காலவரையறைகள், அவ்வக்காலத்து ஆண்ட தமிழ் மன்னர்களின் ஆட்சிக்காலங்கள், வரலாறுகள், நாட்டுநிலைகள், பிறநாட்டுத் தொடர்புகள், நூலுரை நயங்கள், சமயங்கள், சமயசாரியன்மார், சமய நூல்கள், சமய வழக்குகள், திருக்கோயில்கள், மன்னரும் மக்களும் திருக்கோவில்களையும் தெய்வநெறிகளையும் பேணின வகைகள் முதலிய பலவும் வரன்முறையாகச் செம்மையாய் ஆய்ந்து துணிந்து விளக்கப்பட்டுள்ளன. இனிய எளிய நடைவாய்ந்தது. இவ்வொருநூலைக் கற்பார் தமிழ்நூல்களின் சிறப்பும் சுருக்கமும் எளிதின் உணர்ந்து இன்புறுவர். காலத்தொடு பொருந்திய சிறந்த நூலாகும். தமிழின் தொன்மையும் உண்மையும் உணர்வார்க்கு உறுதுணையாகும். மேலும் இதுவோர் தமிழக வரலாற்று நூலுமாகும். இதனைத் தமிழகம் நன்கு வரவேற்று இன்புற்றுப் போற்றுமென நம்புகின்றோம். பல்கலைக் கழகம் சொற்பொழிவுவாயிலாகவும் தமிழைவளர்க்கும் தனி மாண்பு தலைசிறந்தாகும். இம்மூன்று நூலுக்கும் குறிக்கப்பட்ட விலைகள் கழிவு நீக்கியே

(ச) திருக்குறள் ஆராய்ச்சி

[இதன் ஆசிரியர், திரு. M. சோமசுந்தரம் அவர்கள், பி. ஏ. எல். டி. முன்னைத் தலைமை ஆசிரியர். இதன் விலை ரூபா 1-8-0. இது தொண்ணூற்று பக்கங்களைக் கொண்டது. கிடைக்குமிடம் 'ஔவை இல்லம்' காட்டுமன்னார் கோவில் தென்னார்க்காடு மாவட்டம்.]


இஃதோர் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை நூலாகும். பயனுறு பகுத்தறிவுச் சார்பாய் எழுந்தது. தொன்மைத்தமிழ் நெறியாம் சிவனெறியின் அடிப்படை உண்மைகளையும், திருமந்திரம், திருவாசக முதலிய திருமுறைகளையும் துணையாகக்கொண்டு எழுந்தது. திருக்குறளில் தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறுபட்டு உரையாசிரியர் பரிமேலழகரும், பிறரும் ஆரியச்சார்பாய்ச் செய்துள்ள உரைகளும் காலம் சொல் முதலிய பிழைபட்ட ஆய்வுகளும் நடு நின்றாய்ந்து வள்ளுவர் மெய்ம்மைக்கருத்து செம்மையாக நாட்டப்பட்டுள்ளது. பல திருக்குறள்களை எடுத்து விளக்கிச் சொல்லும் ஆசிரியர் திறம் போற்றற்குரியது. பொதுவாகப் பழந்தமிழகக் கொள்கை காண்பாரும் சிறப்பாகத் திருக்குறள் ஆய்வுண்மை காண்பாரும் இதனைக் கற்று மெய்மை காண்பாராக. எளிய இனிய உரைநடை. மேலும் இது திருக்குறள் கட்டுரைநூல் போன்று மாணவர் பயிலுதற்கு ஏற்புடையது. பாடக்குழுவினர் பள்ளித் துணைப்பாடமாக வைத்து ஆசிரியரவர்களை ஊக்குவார்களென நம்புகின்றோம். திருவாளர் K. அப்பா துரைப்பிள்ளை, எம். ஏ. எல். டி. யின் அணிந்துரையும் இதனை அணிசெய்கி

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.



18-4-55-இல் சென்னை அண்ணாமலைமன்றத்தில் பேராசிரியர் திரு ரா. பி. சேதுப்பிள்ளையவர்கட்கு நிகழ்ந்த பாராட்டுக்கூட்டம்.

இடமிருந்து வலம்: 1. திரு. எ. இலட்சுமணசாமி முதலியார், 2. இசையரசு, திரு. எம் தண்டபாணி தேசிகர், 3. திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், 4. **பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை**, 5. முதலமைச்சர் திரு. கே. காமராசநாடார், 6. இராசாசர். திரு. மு. அ. முத்தையச் செட்டியார், 7. திருப்புகழ்மணி, திரு. கிருஷ்ணசாமி ஐயர், 8. பயிர்த்தொழில் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் [illegible]யார் திகழ்கின்றனர்



சிலம்பு உகூ — திருவள்ளுவர் ஆண்டு ககூஅசு, சித்திரை — பரல் கூ

மே, 1955.

திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கட்குப்

பாராட்டுப் பெருவிழா

இடம்

தமிழிசைச் சங்கத்தைத் தொன்மைத் தமிழ்ச் சங்கங்களே போன்று எண்ணிலா வண்ணப் பண்களுக்குப் புத்துயிரளித்து என்றும் நின்று நிலவச்செய்த சீர்மை, பெருவள்ளல் செட்டிநாட்டு மன்னர்பால் உள்ளது. அம்மன்னர் பெருந்தகையார் திருப்பெயரால் விளங்கும் அணியார் கோவில் இடம். தமிழ் முதன்மையாக விளங்கும் இடமே தனிப்பெருங் கோயிலாகும். தமிழ், உடல் உளம் உயிர் உடங்கியைந்தது போன்று முறையே கூத்து இசை இயல் என முத்தமிழும் ஒருங்குசேர நிகழ்வதாகும். அதற்குரிய மன்றம் சென்னை 'அண்ணாமலை மன்றம்.' இதுவே பாராட்டுவிழாப் பாங்கார் இடமாம்.

நாள்

1955 ஏப்பிரல் 18-ஆம் நாள் திங்கட்கிழமை, மாலைப் பொழுது, குறியாச் சிறப்பாகச் சித்திரைச் சதய நாளாம் திருநாவுக்கரசர் திருநாளாகவும் அமைந்தது. இக் குறிப்பினைப் பாராட்டிய மெய்யன்பர்கள் பலருள் ஒருவராகிய திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளையவர்களும் அன்றே அப்பேரவையின் கண்ணே அகமிக மகிழ அறிவித்துள்ளார்கள். நாவரசர் பெருமானார்க்குத் திருஞானசம்பந்தப் பெருமானாரால் கொடுக்கப்பட்ட திருப்பெயர் 'அப்பர்.' சொல்லுக்கு உறுதி அப்பர் எனச் சொல் என்பது உலகப் பெருவழக்கு. அவ்வுறுதிச் செல்வத்தை ஒருங்குபெற்ற செல்வர் நம் சொல்லின் செல்வர். அவர்தம்

பாராட்டுவிழா அப்பர்தம் திருநாளில் அமைந்தது மிகவும் பொருத்தமேயாம்.

அவை

பேருறையுளாம் அண்ணாமலை மன்றம், பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கும் நிறைபேரவை. இத்துணைப் பெருங் கூட்டம் யாரும் எதிர்பாராத வகையில் இயைந்ததென்றே கூறலாம். ஆண்பெண் இருபாலாரும் நிரம்பியிருந்தனர். மன்றத்தின் அகத்தும் புறத்தும் நின்றவர் கூட்டமே மிகுதி. இக்கூட்டப் பெருமக்களின் உள்ளக்கிளர்ச்சி அவர்தம் முக மலர்ச்சியாலும் எழுச்சியாலும் இன்னுரைகளாலும் "தமிழ்மொழிப் பாராட்டினால்" தமிழ்மொழி ஆட்சிமொழியாகி விட்டதென்றே நம்பிய நிலையிலிருந்தன. இக குறிப்பின் எதிர்த்தோற்றமே, அவையினை வரவேற்ற அன்பர் பேசிய அணிந்துரையாகும்.

அது வருமாறு: 'முன்னாள் முத்தமிழ் வளர்த்த மூவேந்தர் போன்று புரக்கும் வேந்தாம் முதலமைச்சர் திரு. காமராசரும், புரவலர் வேந்தாம் செட்டிநாட்டரசரும், புலவர் வேந்தாம் சொல்லின் செல்வரும் ஒருங்கு குழீஇயுள்ளனர். இப் புணர்ப்பே தமிழ் ஆட்சி மொழியாய் அறிகுறியின் மெய்ப் புணர்ப்பாகும் என்பதே. மேலும் ஒன்று கைகூட ஆற்றல் ஆக்கம் அறிவு மூன்றும் ஒருங்கு தோற்றவேண்டும். அத்தோற்றமே இம் முப்பெருமக்களின் தோற்றமாகும் என்பதுமாம்.

பாராட்டு

பாராட்டுக்குரிய தகுதி வாய்ந்தார் சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளையவர்களாவர். தென்றலும் தீந்தமிழ்ப் பொருநையும் நின்று நிலவும் பாண்டி வளநாட்டு வளமெலாம் காட்டும் ஆடி எனத் திகழும் நெல்லைமாவட்டத்துச் சீர்சால் செப்பறைப்பாங்கர் பேர்பெறும் இராசவல்லிபுரம் என்னும் நன்மைவாய்ந்த ஓர் ஊர் உள்ளது. அதன்கண் வேளாண் விழுத்திணைத் தோன்றிய விழுமியார் நம் சேதுப்பிள்ளை யவர்களாவர். இவர்கள் இளமையின்கண்ணே நுண்மாண் நுழைபுலச் செல்வராய்த் திகழ்ந்தனர். தனிப்பெரும் தகைமை வாய்ந்த தாய் மொழியாம் தமிழ்மொழியினும் சார்புலக மொழியாம் ஆங்கிலத்திலும் ஓங்கு பெருப்புலமை பெற்றனர். நாட்டுக்கு நலம் பயப்பது ஆட்சிமுறையேயாம். அம்முறையினை முட்டின்றி நிறுத்துவது முறை நூலேயாகும். முறைநூலெனினும் சட்ட நூல் எனினும் ஒன்றேயாம். அச்சட்ட முறையினை வழுவாவண்ணம் உரனுடன் எடுத்துக்காட்டுபவர் சட்டநூற் புலவராவர். இவர்களை வழக்குரைஞர் என்பர். இவர்களே மன்றுடியராவர். அந்நூற் புலமையினும் தேறிப் பட்டமும் பெற்றுள்ளார்.

தம் புலமையெல்லாம் தாய்மொழி வளர்ச்சிக்குத் துணையாவதே தவநிலையென வுன்னினர். அதற்கேற்ற தொழில் ஆசிரியத்தொழிலெனவே அக்கொண்டனர். அதற்காம் வழியில் முயன்றனர். நெல்லை நகராண்மைக்கழகத் துணைத் தலைவராய்ப் பணிபுரிந்தனர். கல்விக்குழுவினும் கருத்தொருமித்துத் திருத்தமுறத் தமிழாக்கம் ஒன்றே குறிக்கொண்டு தொண்டாற்றுகின்றனர். பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராய்த் திகழ்ந்தனர். அண்ணாமலைப் பல்கலைக்கழக அருந்தமிழ்ப் பேராசிரியராய் அணிசெய்தனர். கடந்த இருபதாண்டுகளாகச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராய்ப் பேராசிரியராய்ப் பெரும்பணி புரிந்து வருகின்றனர்.

தமிழகத்து நம் சொல்லின் செல்வர் சென்று தலைமை [illegible]ரை நிகழ்த்தாத கழகங்களோ, மன்றங்களோ, ஆதீனங்களோ, ஆலயங்களோ, அணியார் நாடு நகரங்களோ இடையா. பழம்பெருந் தமிழ்ச்சொற்களைக் கிழமைமாறாது பெருமக்களிடையே குழைத்து இனிமைபெற ஊட்டும் குணமிக்கார். பெரும்பாலும் இவர்தம் பேச்சும் உரைநடைநூலும் மோனை எதுகையமைய முழங்கும் தன்மைய. எளிய இனிய சிறு சொற்களால் திட்டநுட்பச் செறிவோடு திகழ்வன. உவமைச்சுவை மிக்கன. உளங்கொளப் பதியும் வளமைய. தமிழ் வளர்க்கும் சிவத்திருவாம் தம்பிரான் தரத்தாங்கிய பட்டம் சொல்லின் செல்வர் எனச் சொல்லுவர் பல்லோர்.

சென்னைக்கோநகர்க்கண் பல்வேறிடங்களில் பல்வேறு காலங்களில் பல்வேறு வகுப்புக்களை நிகழ்த்திப் பலரும் பயன்பெறும் பண்பாளராயினர். அவற்றுள் சிறந்தன கந்தபுராணம், இராமாயணம், சிலப்பதிகாரம், வள்ளுவப்பயன் முதலியனவாகும். சிவநெறியாம் செந்நெறிக்கண் நிறைந்த பற்றுடையவர். சிவமும் தமிழும் உயிர் உடல் போன்று பிரிப்பின்றித் தோன்றுதொட்டு இயைநதுவரும் தமிழகப் பெரும்பண்பென்பதனைச் சொன்னடைகளால் வலியுறுத்தும் அரும்பண்பினராவர்.

அவ்வப்போது சிறந்த செய்தித்தாள்களிலும், வெளியீடுகளிலும் வெளியிட்டுள்ள கனிவும் இனிமையும் மிகுகட்டுரைகள் எண்ணில. நூல் வடிவில் போந்து பல பதிப்புக்கள் கொண்டு திகழ்வன அளவில. கல்லூரிப் பாடப் புத்தகங்களாகத் திகழ்வன கணக்கில. அவற்றுள் சில வருமாறு: திருவள்ளுவர் நூல் நயம், தமிழின்பம், ஊரும்பேரும் முதலாயின.

'தமிழின்பம்' என்னும் நூலை இந்தியப் பேரரசு நன்கு மதித்து ஐயாயிரம் பரிசு வழங்கியது. ஐந்திலக்கணமும் நிறைந்த

அந்நூற்கு எத்தனை ஐயாயிரம் வழங்கினும் ஈடாகாதென்பது எவரும் எளிதினுணரும் உண்மையேயாம். கடை எழுவள்ளல்களும், மூவேந்தரும், குறுநிலமன்னர் புரவலர்களும் பொன்றிய பின்றை இதுவே நந்தமிழ் மொழிக்கு முதல் பரிசாம் ஆட்சிப் பரிசாகும். இனிப் பல்வேறு பரிசுகள் இதன்வழியாக வருதலும் கூடும். இதனால் நந்தமிழ்த்தாய் முந்திய நிலைபோல் 'ஞாலம் அளந்த மேன்மையுடன்' அரசுவீற்றிருத்தலும் கூடும். அதன் கால்கோள் இப்பாராட்டுப் பயனுள் ஒன்றுமாகும்.

முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கள் பேரவைத் தலைமை பூண்டார்கள். திரு. தண்டபாணி தேசிகர் அவர்கள் திருநெறிய தமிழ்ப்பா இன்னிசையுடன் ஓத விழாத் துவங்கப் பெற்றது. குமுதம் ஆசிரியர் திரு. எஸ். ஏ. பி அண்ணாமலை யவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் நகரப் பெருமக்கள் சார்பாக நீண்டதோர் வாழ்த்துப் பாமாலை யொன்று படித்தளித்தனர். நம் கழகம் உள்ளிட்ட பல கழகங்களும், தனிப்பட்டவர்களும் பாமாலையும், பூமாலையும், நூல்களுமாய்ப் பல வழங்கினர்.

உள்நாடு வெளிநாட்டுக் கழகங்கள், அன்பர்கள் பலர் வாழ்த்து விடுத்துள்ளனர். அவை முறையே பம்பாய், கல்கத்தா, இலங்கை, மலேயா, இந்தோனேசியா முதலியவிடங்களும், சிவத்திரு குன்றக்குடி யடிகளார், திருவாளர், பி. எஸ். குமாரசாமி ராசா, மு. ராகவையங்கார், நாமக்கல் கவிஞர், யோகி சுத்தானந்த பாரதி முதலியோருமாவர்.

திரு. காமராசர் அவர்கள் சேதுப்பிள்ளையவர்களுக்குப் பொற்பதக்கம் அணிவித்துப் புகழுரை புகன்றனர். அவை வருமாறு: தமிழ் வளர்ச்சிக்காகத் தம் வாழ்நாள் எல்லாம் வழங்கியவர். நனவினும் கனவினும் செல்லும் இடம் எல்லாம் தமிழ் நினைப்பே தலையாய உலையா நினைப்பாகும் இவர்க்கு. தமிழுக்குப் பண்டுபோலுள்ள இத்தகைய நல்ல நிலைமையை மீண்டும் கொண்டுவந்த பெருமை சேதுப்பிள்ளையவர்களையே சேர்ந்தது. அவர்களுக்கு அளித்த பரிசு தமிழ்ப் பெருமக்களுக்கு அளித்த ஒரு பெரும் பரிசேயாகும். ஈண்டுப் பரிசு என்பது பெருமை என்னும் பொருட்டு. ஆகவே நாமெல்லாம் யடைய வேண்டிய தென்பதேயாம்.

செட்டி நாட்டரசர் டாக்டர் எம். ஏ. முத்தைய செட்டியாரவர்கள் பொன்னாடையைப் பொற்புடன் போர்த்திப் பொன்மொழி பல புகன்றனர். அவற்றுள் சில வருமாறு: 'கடந்த ஆண்டுகளாகத் தாய் மொழியாம் தமிழையும் தமிழ்ப்

புலவர்களையும் ஆதரிக்கக் கூடிய புத்துணர்ச்சி தமிழரிடையே இருந்து வருகிறது. திரு. சேதுப்பிள்ளையவர்கள் இந்நன்னுளைக் கத்திடையே வாழ்ந்து வருவது தமிழ் நாட்டின் தனிப்பெரும் பேறாகும். அவர்களால் எழுதப்பட்ட சுவடிகள் அனைத்தும் சிறந்தனவேயாம். அவற்றைப்போன்ற பல புத்தகங்கள் வெளி வருதல் வேண்டும். ஆயின் ஆட்சியினர் நூறாயிரக் கணக்கில் பணம் ஒதுக்குதல் வேண்டும். கல்லூரிகளிலும் தமிழுக்குரிய தகுதியினை இன்றியமையாது அளித்தாதல் வேண்டும். டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரவர்களை நோக்கிய வண்ணமாகவே, நல்ல காட்சியிது, தமிழை ஆதரிப்பவர்களில் நானும் ஒருவன். தமிழ் வளர்ச்சிக்காகத் திருமடத்தம்பிரான்மார் சிறந்த உதவி செய்கின்றனர். இவ்வேளையில் அவர்களுக்கு நன்றி செலுத்துதல் வேண்டும். தமிழ்ப் புலவர்கள் ஒன்று சேர்ந்தால் தமிழுக்கு மிகுந்த உதவி செய்ததாகும். திரு. சேதுப்பிள்ளையவர்களைப் போல் பிற புலவர்களுடன் ஒன்றாக வேலை செய்ய முன் வருதல் வேண்டும். அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தின்கண் எத்துணைத் தமிழ்ப் புலவர்கள் வந்தாலும் இடமிருக்கின்றது. ஐந்தாறு ஆண்டுகளாகத் தமிழ்ப் புத்தகங்கள் வெளியிடுவதில் பலர் ஊக்கங் காட்டுகின்றனர். அவர்களைப் பாராட்டுகின்றேன்' என்பதே.

கல்கியாசிரியர் திரு. சோமசுந்தரம் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்நிலையத்தின் அன்பளிப்பாக மற்றோர் பொன்னாடையையும் செட்டி நாட்டு மன்னர், சேதுப்பிள்ளையவர்கட்குச் சிறப்புறச் சேர்த்தினார்கள்.

பின்பு அமைச்சர், திரு. எம். பத்தவத்சலம் அவர்கள், திரு. டி. எம். கிருட்டிணசாமி ஐயரவர்கள், பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரவர்கள், பேராசிரியர் திரு. சிரீனிவாச ராகவன் அவர்கள், திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் முதலிய பெரும்புலமைச் செல்வர்கள் அரும் பெரும் பாராட்டுரை பல அன்புடன் நிகழ்த்தினர்.

திரு. சேதுப்பிள்ளையவர்கள் அனைவர்களுக்கும் தக்கவாறு நன்றி செலுத்தினார்கள். அப்பொழுது கூறியவற்றுள் சில வருமாறு: நண்பர்கள் அன்பால் அளித்த மிக்க சிறப்பினை நினையுங்கால் நெஞ்சம் உருகுகின்றது. பேச்சுவரவில்லை. பெரியவர்கள் வாழ்த்து வழங்கினர். இதைவிடச் சிறந்த பெருமை எனக்கு வேறு என்ன இருக்கிறது? யான் தமிழ்த்துறையில் இறங்கிய போது அமிழ்தினும் இனிய தமிழின்பத்தின் பொருட்டே இறங்கினேன். அப்போது தமிழுக்கு இத்துணைச் சிறப்பு ஏதும் இன்று. வரும் என்ற நம்பிக்கையும் அறிகுறியும் இல்லை.

தமிழ்மக்கள் இப்பொழுது சிறிது ஆதரவு அளித்து வருகிறார்கள். நல்ல தமிழைப் படிக்கும் ஆர்வம் நன்றாகப் பொங்கி வெள்ளமாக ஓடுகிறது. இனி ஆட்சியினர் ஆதரவினும் மக்கள் ஆதரவே அமைவுடைத்தாகும். 'தமிழின்பம்' என்னும் இப் புத்தகம் ஐந்தாண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. மூன்று பதிப்புக்கள் வெளியாகி விட்டன. இதனால் மக்கள் ஆதரவுமிக் கிருக்கின்றதென்பது புலனாம். நல்ல தமிழைக் குடிமக்கள் புரிந்துகொண்டுவிட்டார்கள். அதை ஏற்று அவர்கள் சார் பாகத் திரு. காமராசர் அவர்கள்

அக்காலத்தில் வழக்காடுவதைவிட மேடையில் நான் சொல்லாடிக் கொண்டிருந்தேன் என்று என்னைப் பிறர் சொல்வது வழக்கம். என் நலத்துக்கு உழைப்பதை விடத் தாய் மொழியாம் தமிழின் நலத்துக்கு உழைப்பதனையே மேலெனக் கொண்டேன். என் ஆற்றலுக்குத் தக்க பணிபுரிந்தேன், புரிந்துவருகின்றேன். இந்நூல் தமிழ்மக்கள் பெற்ற பரிசு என்று கருதுகின்றேன். உங்கள் அன்பை என் மனக்கோயி லில் வைத்து என்றும் வாழ்த்துவேன் என்பதே.

அன்புப் பரிசாகப் பெற்ற வெண்பொன் ஐயாயிரத்துடன் மேலும் பத்தாயிரம் வெண்பொன் சேர்த்துப் பதினையாயிரம் வெண்பொன்னாகத் தாம் தமிழ்த்தாய்க்குக் காணிக்கை செலுத்தப் போவதாவும், சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம இரண்டினுக்கும் தம்வளமெலாம் கடைசியில் வழங்கி விடவே விழைவு கொண்டிருப்பதாகவும் அன்புகுழைந்த இன்ப மொழியில் எழிலுற அறிவித்தனர்

திரு. எஸ். இராமசாமி நாயுடு அவர்கள் அனைவர்கட்கும் நன்றியும் வாழ்த்தும் நயம்பெற நவின்றனர். இப்பாராட்டு விழாக்குழுவில் மேனிலை முறை மன்ற நடுவர் திரு. என். சோம சுந்தரம் அவர்கள், திருவாளர்கள் சி. எஸ் இரத்தின சபாபதி முதலியார், மித்திரன் ஆசிரியர், சி. ஆர். சிரீனிவாசன், டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, ஆனந்தவிகடன் ஆசிரியர் எஸ். எஸ். வாசன், சேவு. மெ. மெய்யப்ப செட்டியார், எஸ். இராமசாமி, எஸ். ஏ. பி. அண்ணாமலை, செ. மெ. பழனியப்பச் செட்டியார் முதலியோர் அமர்ந்துள்ளதாக அறிவித்தனர்.

பாராட்டுப் பத்து*

[வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார்]

'தமிழின்பம்' எனுநூலைத் தகுதிபெற உருவாக்கித்
தமிழின்பித் தகையதெனத் தரணியெலாஞ் சுவைத்துணரத்
தமிழ்மகனார் ரா பி. சே. தந்தபெரும் புலமையறிந்
திமிழ்கடல்சூ ழிந்தியர்கோ ஈந்தனர்காண் பெரும்பரிசில். (க)

பெரும்பரிசில் பெறுபவர்ரா. பி. சேதுப் பிள்ளையவர்
விரும்புமெழில் தமிழணங்கே விளங்குபுகழ்த் தமிழ்நாடே
கரும்பனைய மொழிபேசும் கலையார்வத் தமிழர்களே
பெரும்பரிசை யாயிரமும் பெற்றுமகிழ் கொள்கின்றார். (உ)

பழந்தமிழ்நூற் பெருங்கடலிற் படிந்தாழ்ந்து நுனித்தறிந்த
விழுமியபல் பெருங்கருத்தாம் விழுமுத்துக் குவியலினை
எழிலுறுசொல் லெனுநூல்கோத் திலங்குமணி கலனாக்கிப்
பழந்தமிழ்த்தாய் பதத்தணியும் பத்தர்பெறும் பயனிதுவே. (ங)

திரு.சேதுப் பிள்ளையெனின் தெய்வசுவைத் தமிழென்பேம்
இருளார்ந்த உளத்தினரும் இனியதமிழ்ச் சுவையுணரப்
பொருளார்ந்த சொல்லடுக்கிப் பொருந்தெதுகை மோனையொடும்
தெருளாரப் பேரவையில் தித்திக்கப் பேசுவதால். (ச)

செவியினிக்கக் கேட்பவர்தம் சிந்தைகளி கூர்ந்தினிக்கக்
கவியினிக்கப் பேசுமிவர் கவினுரையைக் கேட்டபினே
புவியறியத் தமிழென்றால் பொருளினிமை யெனப்புகன்றார்
சவியுறுதொல் லோரெனலாம் தடைகால மிடையிலதேல்! (ரு)

கம்பர்பிரான் கவிச்சுவையில் கருத்தமுந்திப் பேசுங்கால்
நம்புமெழில் சிலம்பினயம் நாவினிக்க நவிலுங்கால்
இம்பரிலே இளங்கோவும் இணையில்புகழ்க் கம்பருநேர்
நம்மெதிரே நின்றுமொழி நவில்கின்றார் எனத்தோன்றும். (சு)

இறையனாஅர் களவியலுக் கினியவுரை வரைந்தளித்த
துறையறியும் நக்கீரர் தூயதமிழ் நடைகாட்டப்
பொறையுடம்பு பெயர்மாறிப் புகழ்சேதுப் பிள்ளையெனத்
தரைவந்தார் எனமொழிவார் தகுமிவர்சொன் னடைகண்டார். (எ)

தமிழ்மொழியின் நிலைசிறக்கத் தமிழ்நாட்டின் புகழ்பரக்கத்
தமிழ்ப்புலவர் வள்ளுவனார் தரைக்களித்த திருக்குறளும்
அமிழ்தனைய மொழிவழங்க அறிசேதுப் பிள்ளையினால்
அமைவுடைய தனிவிளக்கம் அடைந்ததெனின் புகழ்சிறிதோ. (அ)

பேச்சினிலே வல்லவராய்ப் பேசியதை யெழுதாரும்
பேச்சின்றி எழுதுதொழில் பெற்றாரும் பலராகப்
பேச்சினிலும் எழுத்தினிலும் பெருந்தகுதி பெற்றுயர்ந்த
பேச்சாளர் எழுத்தாளர் பேர்சேதுப் பிள்ளை அவர். (கூ)

வாழியர்காண் பல்லாண்டு வளர்புலமைத் தலைமகனார்
வாழியர்காண் இந்தியர்கோ வழங்குபெரும் பரிசிலவர்
வாழியர்காண் சொலின்செல்வர் மாண்சேதுப் பிள்ளையவர்
வாழியர்காண் நலம்பல்கி மணிமிடற்றோன் திருவருளால். (க0)

---

* சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திருவாளர் ரா. பி. சேதுப்பிள்ளை B.A., B.L., அவர்கள் எழுதிய 'தமிழின்பம்' எனும் நூற்கு இந்திய அரசியலார் ஐயாயிரம் வெண்பொற் காசுகள் பரிசளிக்க விழைந்தமை யறிந்து பாடியது.



பாராட்டு வாழ்த்துமலர்*

செந்தமிழ்ப் புலவ ரேறே!
சிதம்பர நாதச் செம்மால்
முந்திய விருப்பை ஏற்றே
முன்னிஇக் கூட்டத்துக்கு
வந்தது கண்டே நாங்கள்
மகிழ்ச்சியில் திளைக்கின் றேமால்
இந்தநன் னாளெம் வாழ்வில்
எழிலுறு பொன்னா ளாமே! (க)

உள்ளமும் செயலும் ஈன்ற உயர்தமிழ் மொழிக்குத் தந்தே
வள்ளுவம் உலகில் எங்கும் வயங்கிடப் பணிக ளாற்றும்
தெள்ளுசீர்க் குணக்குன் றே! எம் சிதம்பர நாதத் தோன்றல்!
வள்ளலே வருக! எங்கள் மாண்புறு தலைவ! வாழ்க! (உ)

சிதம்பர நாதன் என்னும் திருப்பெயர்க் கேற்பப் பன்னாள்
சிதம்பரத் திருந்து நல்ல செந்தமிழ் நாதம் செய்வாய்!
நிதமுநற் புலவர் வாழ்வை நினைவினிற் கொண்டே வேண்டும்
உதவிகள் பலவும் செய்யும் உத்தம! வருக! வாழ்க! (ங)

அண்மையில் சிதம்ப ரத்தில் அமைந்தமா நாட்டில் நின்றன்
திண்மையும் தெளிவும் வாய்ந்த உரைகளைச் செவிம டுத்தோம்
கண்மணி யனையாய் நீயே கனித்தமிழ்க் கேற்ற மைந்தன்
உண்மையே கூறுகின் றோம்; புகழ்ச்சியாய் உரைக்க வில்லை. (ச)

செந்தமிழ் நாட்டில் நாளை திகழ்தமிழ்ப் புலவர் தம்மில்
மந்திரி ஒருவா வேண்டும் நிலையது வாய்த்த தானால்
புந்தியில் மிகுந்த நீயே பொருந்திடு அமைச்ச ராவாய்
விந்தையொன் றிதிலே இல்லை; உண்மையே விளம்பு கின்றோம். (ரு)

இன்றுநின் பெருமை ஓர்ந்தே இங்கிலாந் தழைத்தந் நாட்டில்
ஒன்றுபல் கலைகள் போற்றும் உயர்நிலைக் கழகம் காண
நன்றுனை வேண்டிற் றென்னும் நலமிகு செய்தி கேட்டோம்
தென்றலே! தமிழர் வாழ்வே! சென்றுநீ வருக நன்றே! (சு)

பலகலைக் கழகங் காணப் பயணமேற் கொள்ளும் அண்ணால்!
துலங்கிடு தமிழின் பம்அத் தொலைநகர் தனிலும், வேறு
தலங்களும் பரவ நின்னால் சார்ந்தவை செய்க என்றே
புலங்கொள வேண்டு கின்றோம் புலவர்தம் மணியே வாழ்க! (எ)

நின்னெழிற் பயணம் எங்கும் நீள்புகழ் வளத்தி னோடும்
இன்புற அமைய வேண்டி இறைவனை வாழ்த்து கின்றோம்
சென்றுநீ வருக எங்கள் சிதம்பர நாத வேந்தே
அன்புரு வான ஐய, அண்ணலே வாழ்க! வாழ்க! (அ)

---

* சென்னை மாநிலத் தமிழாசிரியர் கழகத் தலைவரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவரும் ஆகிய பேராசிரியர் டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார் M. A., அவர்கள் மேல் நாட்டுப் பல்கலைக் கழகங்களைப் பார்வையிடும் நோக்குடன் இங்கிலாந்துக்குப் புறப்படும் செய்தி கேட்டுச் சென்னை மாணவர் மன்றத்தினரும், சென்னைத் தமிழாசிரியர் கழகத்தினரும் மகிழ்ந்து படித்தளித்தது.

திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை

அதிகாரம் ௪௨

கேள்வி

அஃதாவது கற்றறிந்தார் கூறும் நூற்பொருள்களைக் கேட்டல். இது கற்றறிவுடையார்க்காயின் தாம் கற்றுணர்ந்த பொருள்களை உள்ளத்தில் பதித்து வலியுறுத்தலானும், கல்லாதவர்க்காயின் அறிவை உண்டாக்குதலானும் கல்வி கல்லாமைகளின் பின் வைக்கப்பட்டது.

இவ் வதிகாரத்தில் கேள்வியது சிறப்பும், கேள்வியுடையாரது சிறப்பும், கேள்வியுடையார் எய்தும் பயனும் கேளாமையின் தீமையும் முறையே கூறுவான் வைத்த ஆசிரியர் முதற்கண் கேள்வியது சிறப்புக் கூறுகின்றார்.

௪௧௧. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

(இ - ள்) *செல்வத்துள் - செல்வங்கள் பலவற்றுள்ளும், செல்வம் - (சிறப்புடைய) செல்வமாவது, செவிச் செல்வம் - செவியான் வருஞ் செல்வம்; அச் செல்வம் -, செல்வத்துள் எல்லாம் - (பிற) செல்வங்கள் எல்லாவற்றினும், தலை - தலைமையானது (ஆதலால்). எ - று.*

(இ - து.) *கேள்விச் செல்வமே சிறந்த செல்வம். (எ - ம்.)*

செவியான் வருஞ் செல்வம் - கேள்விச் செல்வம். கேள்வியால் எல்லாப் பொருள்களையும் அறிதல். பிற செல்வங்கள் பொருட் செல்வமும் கல்விச் செல்வமும். பொருட் செல்வத்தினும் கல்விச் செல்வம் சிறந்ததாதல் மேலதிகாரங்களிற் பெறப்பட்டது. அக் கல்விச் செல்வமும் கேள்வியானாதலின் கேள்விச் செல்வம் தலைமையுடையதாயிற்று.

கேள்விச் செல்வமே சிறந்த செல்வ மென்ற திது. (௧)

இடையறாது ஈட்டத் தக்க தஃது என்பது வரும் குறள்.

௪௧௨. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

(இ - ள்.) *செவிக்கு உணவு - செவிக்கு உணவாகிய கேள்வி, இல்லாத போழ்து - இல்லாத பொழுது, வயிற்றுக்கும்*

சிறிது - வயிற்றுக்கும் சிறிது உணவு, ஈயப்படும் - இடப்படும். (எ - று.)

(இ - து.) உடம்பை வளர்க்கும் உணவினும உயிரை வளர்க்கும் கேள்வி சிறந்தது. (எ - ம்.)

உடம்பிற்குப் பசி இயற்கையாயதுபோல உயிருக்கு அறிவின்மை ஆதியே பொருந்திய ஆணவக்கட்டால் அறியாமை இயற்கையாயிற்று. இதனானன்றே 'அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா—லின்மை யரிதே வெளிறு' (குறள், ௫௦௩) என்பதாயிற்று இத் தமிழ்மா மறையென்பது. உடற்பசி அவ்வப்போது உணவாற் றணித்தற் பாலது. உயிரைப்பற்றிய அறியாமையோ அவ்வாறு இடையிட்டுத் தீர்த்தற்காகாது நிற்பது. இதனானன்றே ஆசிரியர் 'அறிதோ றறியாமை கண்டற்றால்' (குறள் - ௧௧௧௦) என்றார். மற்றும் வயிற்றுணவு இடையறாதுண்ணின் உடலை நோய் செய்யும் இயல்பிற்று; 'இழிவறிந் துண்பான்க ணின்பம் போ னிற்கும்—கழிபே ரிரையான்க ணோய்' (குறள் - ௯௪௬) என்றதுமிதுபற்றி. செவியுணவோ வெனின் 'தொட்டனைத் தூறு மணற்கேணி' (குறள் - ௩௯௬) போலக் கொள்ளக் கொள்ளப் பயன் மிகுவது. ஆதலின் வயிற்றுணவைக் காலத்தானும் அளவானும் வரையறுத்துக் கொள்க எனவும், செவியுணவை எக் காலமும் எத் துணையுங் கொள்க எனவும் கூறினா ராயிற்று. கேள்வியை உணவெனவும், செவி அதனை உண்பது போலவுங் கூறியது உபசாரம்.

இவை யிரண்டு பாட்டானும் கேள்வியது சிறப்புக் கூறப் பட்டது. (உ)

கேள்வியுடையாரது சிறப்புக் கூறுவது வருங் குறள்.

௪௧௩. செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
ஞன்றாரோ டொப்பர் நிலத்து.

(இ - ள்.) செவியுணவின்-செவி யுணவாகிய, கேள்வியுடையார் - கேள்வியினையுடையவர், நிலத்து - நிலவுலகில் இருப்பவராயினும், அவியுணவின் - அவியுணவினையுடைய, ஆன்றாரோடு - தேவரோடு, ஒப்பர் - ஒப்பாவர். (எ - று.)

(இ - து.) கேள்வி யுடையார் தேவர் போல்வர். (எ - ம்.)

செவியுணவிற் கேள்வி - இருபெய ரொட்டுப் பண்புத் தொகை; இன் என்பது சாரியை, அல்வழிக்கண் வந்தது. அல்வழிப் புணர்ச்சியின் னகரம் றகரமாகத் திரிதற்கு விதியில்லாமை

மின் அங்ஙனமாயது வலிக்கும் வழி வலித்தலாகக் கொள்ளப் படும், செய்யு ளாதலின்.

அவியுணவு - தேவர்க்கு வேள்வித்தீயிற் கொடுப்பன. ஆன் றோர் - நிறைந்தார். பலவகையாலும் குறைபாடின்றி நிறைந்தவ ராதலின் தேவர் ஆன்றோ ராயினர். கேள்வியுடையார் அறிவான் நிறைந்து இன்ப வாழ்க்கையுடையராதலின் தேவரோ டொப்பர். உயிர்களைக் கொன்று பெறப்படும் அவியுணவுமின்றி, வீடுபேற் றிற்கு இடமல்லாத போகபூமியின் வாழ்க்கையுமின்றித் தேவரோ டொத்தலின், கேள்வியுடையார் தேவரிற் சிறந்தா ரென்பார். 'அவியுணவி - னான்றோரோ டொப்பர் நிலத்து' என்றார். மேல் செவிக்குண வெனக் கூறினார், ஈண்டு அது விளங்க 'செவியுண விற் கேள்வி' என்றார்.

கேள்வியுடையார் சிறப்புக் கூறிய திது. (௩)

கேள்வியுடையார் எய்தும் பயன் கூறுவன வரும் நான்கு குறள்கள் :

௪௧௪. கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

(இ - ள்.) (ஒருவன்) கற்றிலனாயினும் - (கற்கத்தகும் நூல் களைக்) கல்லாதவ னாயினும், கேட்க - (கற்றறிந்தார் சொல்லும் நூற் பொருள்களைக்) கேட்கக் கடவன்; (ஏனெனில்) அஃது - அக் கேள்வி, ஒருவற்கு - ஒருவனுக்கு, ஒற்கத்தின் - வறுமை வந்த விடத்து, ஊற்றாம் - ஊன்றுகோலான, துணை - துணையாம். (எ - று.)

(இ - து.) கேள்வியறிவு உற்ற சமயத் தூன்றுகோல்போல உதவுமாதலின், ஒருவன் கல்வி கல்லாவிட்டாலும் கற்றவர் சொல்வதைக் கேட்கக்கடவன். (எ - ம்.)

'கற்றில னாயினும்' என்பதில் உம்மை 'மறப்பினும் ஒத்துக் கொளலாகும்' (குறள் - ௧௩௪) என்புழிப்போலக் கற்றிலனாதல் தகாது என்னும் பொருள் தோன்ற நிற்றலின் எதிர்மறையும்மை யாம். ஒற்கமாவது வறுமை. 'இலம்பா டொற்கமா யிரண்டும் வறுமை' என்பது தொல்காப்பியம் (உரிச்சொல்லியல் - ௬௨). எனவே, பொருளானாக அறிவானாக வறுமையுற்றுத் தளர்ந்த வழி 'ஊன்றாந் துணை' யாவது கேள்வியாம். ஊன்றப்படும் கோல் ஊன்று என முதனிலைத் தொழிலாகு பெயராய் நின்று வலித்தலாய் ஊற்று என நின்றது. 'கேடில் விழுச் செல்வம் கல்வி' (குறள் - ௪௦௦) யாதலால் அதனோ டொருபுடையொத்த கேள்வி 'ஒற்கத்தி னூற்றாந் துணை' யாயிற்று.

கேள்வி ஒருவற்கு ஊன்றுகோல்போல் உதவும் என்றதிது. (௪)

இதனை விளக்குவது வருங் குறள்.

௪௧௫. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

(இ - ள்.) ஒழுக்கமுடையார் வாய்ச் சொல் - (கல்வியானுய) ஒழுக்கமுடையவர்கள் கூறும் வாய்மையுடைய சொற்கள், இழுக்கல் உடையுழி - வழுக்கல் உள்ளவிடத்து, ஊற்றுக்கோலற்றே - ஊன்றுகோல் போல (உதவும். ஆதலின் அவர் சொற்க் கேட்க.) எ - று.

(இ - து.) வழுக்கும் நிலத்தில் செல்வார்க்கு ஊன்றுகோல் கீழ்விழாமல் உதவுதல்போல, நல்லார் சொல்லைக் கேட்டல் கல்லாதவர்க்கும் வறுமையுற்ற காலத்தில் உதவும். (எ - ம்.)

உழி - இடம். ஊன்றுகோல் என்பது வலித்தலாய் ஊற்றுக்கோலென நின்றது. உவமைப் பகுதியில் வழுக்கு நிலம் என்றமையின், பொருட் பகுதியில் வறுமைக் காலம் கொள்ளப் பட்டது. வாய்மையுடைய சொல் என்பார், வாய்ச்சொல் என்றார்.

கற்றலானுய பயன அதற்குத் தக நிற்றலாதலான், கல்விப் பயனை எய்தினார், என்பார் 'ஒழுக்க முடையார்' என்றார். அவர் சொற்களைக் கேட்க என்பது குறிப்பெச்சம்.

நல்லார் சொற் கேட்டல் தாழ்வைத் தடுக்கும் என்றதிது.

பெருமையைக் கொடுக்கும் என்பது வருங் குறள் :

௪௧௬. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

(இ - ள்) (ஒருவன்) நல்லவை - (நல்லார் சொல்லும்) நல்லுரைகளை, எனைத்தானும் - எவ்வளவு சிறிதாயினும், கேட்க - கேட்க (அக் கேள்வி), அனைத்தானும் - அவ்வளவாயினும், ஆன்ற - நிறைந்த, பெருமை தரும் - பெருமையைத் தரும். (எ - று.)

(இ - து.) ஒருவன் சிறிதாயினும் நற்பொருளைக் கேட்டால், கேட்ட அளவாகவேனும் அவன் நிறைந்த பெருமையுடையனுவான். (எ - ம்.)

எனைத்து அனைத்து என்பவற்றாற் குறிக்கப்பட்ட அளவு கேட்கும் பொருளையும் காலத்தையும் ஒருங்கு குறிக்கும். எறும்பூரக் கற்குழிதல் போல அறிவை ஆழமாக்கியும், மழைத்துளி போல வந்தீண்டி அறிவைப் பெருக்கியும் வருமாதலின், இச் சிறு பொருளைக் கேட்டென் பயன் சிறிது பொழுது கேட்டென் பயன் என்று இகழாமல் சிறிது பொருளாயினும் சிறிது காலமாயினும் வாய்த்துழி வாய்த்துழிக் கேட்க என்பதாம். அவையெல்லாம் ஈண்டி அறிவு நிறைக்கவே பெருமையும் நிறையு மாதலின், 'ஆன்ற பெருமை தரும்' என்றார்.

நல்லவை கேட்க என்றது இது. (சு)

கேட்டார் நல்லவை சொல்வ ரென்பது வருங்குறள் :

சகஎ. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்.

(இ - ள்.) இழைத்துணர்ந்து - (பொருள்களைத் தாமும்) கற்றுணர்ந்து (அதன் மேலும்), ஈண்டிய கேள்வியவர் - நிறைந்த கேள்வி யுடையவர், பிழைத்துணர்ந்தும் - (தாம் உணர்வுழி ஒருகாற்) பிறழ உணர்ந்தா ராயினும், (பிறர்க்கு உரைக்குங்கால்) பேதைமை சொல்லார் - அறியாமைப்பாற் படுவனவற்றைச் சொல்லார். (எ - று.)

(இ - து.) கேள்வியறிவுடையார் அறியாமை யானவற்றைச் சொல்லார். (எ - ம்.)

பிழைப்ப எனற்பாலது பிழைத்து எனத் திரிந்து நின்றது. பேதைமைச் சொற்களைப் பேதைமை என்றது ஆகுபெயராதல் பற்றி. இழைத்துணர்தல் - கல்வியுணர்தல்; அஃதாவது கற்றுணர்தல் : எனவே, கற்றுணர்தல் ஆராய்ந்துணர்தலாதல் காண்க.

கல்வியறிவோடு கேள்வியறிவு முடையார் உணர்வு மயங்கார்; மயங்கினும் மயங்கிய பொருளைச் சொல்லார் என்பதாம். எனவே, கல்லார்க்கேயன்றி கற்றார்க்கும் கேள்வி இன்றியமையா தாயிற்று.

இவை நான்கு பாட்டாலும் கேள்வியுடையார் எய்தும் பயன் கூறப்பட்டது. (எ)

கேளாமையின் குற்றங் கூறுவன வரு மூன்று குறள்கள் :

சகஅ. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

(இ - ள்.) கேள்வியால் - (அறிவுடையோர் சொல்வதைக்) கேட்டலினால், தோட்கப்படாத செவி - தொளைக்கப்படாத

செவிகள், கேட்பினும் - (தம் புலமான ஓசையினை மட்டும்) கேட்குமாயினும், கேளாத் தகையவே - (அது தானும்) கேளாத (செவிடாம்) தன்மையனவே. (எ - று.)

(இ - து.) அறிவுரைகளைக் கேளாதவர், செவிடரல்லராயினும் செவிடரே போல்வர். (எ - ம்.)

விலங்கு முதலியன போல ஓசையுணர்ச்சி யுடைமையானே உயிர்க்கு ஆம் உறுதிப் பயன் கிட்டாமையின் 'கேளாத்தகையவே' என்றார். ஏகாரம் தேற்றம். உள்ளத்தில் நூற்பொருள் நுழைதற்கு வழி செய்தலின் கேள்வியைக் கருவியாக்கி அதனால் 'தோட்கப்படாத செவி' என்றார். எனவே, கற்றறிந்தார் உரைகளைக் கேளாச் செவிகள் 'கேட்பினும் கேளாத் தகையவே' யானுற்போலத் தொளையுடையன வாயினும் தொளையில்லன போலு மென்பதாயிற்று.

கேள்வியில்லாதார் செவிகள் செம்மையுடையனவல்ல என்றறிது. (அ)

அவர் வாயும் செம்மையுடைய தன்றென்பது வருங் குறள் :

௪கக. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.

(இ - ள்.) நுணங்கிய - நுட்பமான (பொருள்களைக் கேட்டறிந்த), கேள்வியரல்லார் - கேள்வியறிவுடைய ரல்லாதவர், வணங்கிய வாயினராதல் - பணிந்தமொழியுடையராதல், அரிது- ஆம் (எ - று.)

(இ - து.) கேள்வியில்லார்க்கு நாவடக்கமுமிராது (எ-ம்.)

கேட்கப்படும் பொருளின் நுட்பத்தைக் கேள்விமேலேற்றிக் கூறியது உபசாரம். வாய் கருவியாகுபெயராய் மொழியினை உணர்த்திற்று. பணிந்தமொழி - பணிவைப் புலப்படுத்தும் மொழி. மேல், 'கேள்வியவர் பேதைமை (புலப்படுக்குஞ் சொற்களைச்) சொல்லார்' (குறள் - ௪கஎ) என்றார்; ஈண்டு அதனை எதிர்மறுத்துக்கேள்வியில்லார் தம்பேதைமை புலப்படுக்க ஏதுஞ் சொல்வார் என்பார் 'வணங்கிய வாயினராத லரிது' என்றார். அஃதன்றியும், கேள்வியில்லார் தம்மைத் தாமே புகழ்ந்து தஞ் சிறுமையும் புலப்படுப்பர் என்பதாயிற்று. என்னை? மேல் 'எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு - மான்ற பெருமை தரும்' (௪கசு) எனக் கூறிப் போக்கிப் 'பணியுமா மென்றும் பெருமை : சிறுமை - யணியுமாந் தன்னை வியந்து' (கூஎஅ) என்றாராகலின். இதனானன்றே பழமொழியும்,

"கற்றறிந்தார் கண்ட வடக்க மறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பர்—தெற்ற
அறைகல் லருவி யணிமலை நாட
நிறைகுட நீர்தளும்ப லில்." (௨௧௧)

எனக் கூறுவதாயிற் றென்பது. 'கேள்வியரல்லால்' என்பதும் பாடம். இதற்கு 'ஏனையோர்' என ஒரு சொல் வருவித்துப் பொருள் கொள்ளப்படும்.

கேள்வியில்லாதார் உறுப்புக் குறைபாடிலராயினும் குறைபாடுளரே போல்வ ரென்ற தி து. (௯)

அவர் மக்கட்பிறப்பினரேனும் விலங்குபோல்வர்; உயிருடையரேனும் இறந்தார்போல்வர் என்பது வருங் குறள் :

௪௨0. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மேன்.

(இ - ள்.) செவியின் - செவிகளால், சுவைஉணரா - (நுகரப்படும்) சுவைகளை உணராத, வாய்உணர்வின் - வாயால் (நுகரப்படும் ஊண்சுவை மட்டுமே உணரும்) உணர்வுடைய, மாக்கள் - மனவுணர்ச்சியில்லா மக்கள், அவியினும் - இறப்பினும், வாழினும் - இருப்பினும், என் - (உலகிற்காம் பயன்) யாது? (ஒன்றுமில்லை) (எ - று.)

(இ - று.) கேள்வியில்லாதார் இருந்தும் பயன்படார்; இறந்தும் பயன்படார். வாழ்க்கையின் சிறப்பு உணர்ச்சியின் ஏற்றத்தால் அளந்தறியப்படுவது. ஐம்புலனால் அடையத் தக்க உணர்ச்சிகளைச் சிறுகவும் பெருகவும் ஒருங்கேயுந் தனித்தும் நேர்ந்த நேர்ந்தவாறு நுகர்வதே வாழ்க்கை யாகின்றதன்றிப் பிறிதென்னை? இவ்வுணர்ச்சி யின்றேல் உயிருடைய மக்கட்கும் உயிரறு பாவைக்கும் வேறுபாடு இல்லையன்றே. ஆகவே, வாழ்க்கை யென்பது உணர்ச்சி வயப்படுத லாயிற்று. எனவே, வாழ்க்கையின் ஏற்றமுந் தாழ்வும் மிகுதியுங் குறைவும் அவ்வுணர்ச்சியா லளந்தறியப்படுத லியைவதொன்றேயாம். பண்டைத் தமிழறிஞரெல்லாரும் ஒருவனுக்கும் ஒருத்திக்குமிடையே அன்பொடு பொருந்திய இன்பவொழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறியதெல்லாம் ஐம்புல உணர்ச்சியும் ஆண்டு ஒருங்கே பெறக் கிடத்தலினு லன்றே? என்னை? நந்தந் தெய்வப்புலவரும், 'கண்டு கேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு - மொண்டொடி கண்ணே யுள' (௧௧0௧) என்றாராகலி னென்பது. அற்றே லைம்புல நுகர்ச்சியைத் துறக்குந் துறவினைச் சிறப்பித்ததென்னையோ

வெனின், அஃது இன்பப் பான்முகத்துப் போக்கிக் கூறப்படு மாதலின் ஈண்டு விரித்தற்கிடம் பெறுதென்பது. ஈண்டறியற் பாலது ஐம்புலவுணர்ச்சியான் வாழ்க்கை அளக்கப்படும் என் பதே. அஃதுடன்பாடாயின், அவ் வைம்புல உணர்ச்சியும் உள் ளத்தோடியைந் தியங்குவது முடன்பாடாதற் கிழுக்கில்லை. அவ் வுள்ளந்தான் மக்கட்குச் சிறப்பினமைந்ததோர் புலனாயிற்று. இப்புலன் ஏனை ஐம்புலங்களை இயக்கியும், அவற்றால் இயக்கப்பட் டும், அவற்றின் துணையின்றித் தானே இயங்கியும், அவற்றின் எல்லையில் தானடங்காது தன்னெல்லையில் அவற்றை யடக்கியும் போதரும் அரும் பேராற்றலுடைய தொன்றாதலும் பலர்க்கும் தெரிந்ததோர் உண்மை. உள்ளத்தின் இவ்வாற்றலை மிகுவித்து அதன் வழியே ஐம்புல உணர்ச்சியையும் இயக்குவது கல்வியும் அதனோடியைந்த கேள்வியுமேயாம். அம் முறையீண்டு விரிப் பிற் பெருகும் அவ்வியக்கமே சொற்சுவை யெனவும் பொருட் சுவையெனவும் வழங்கப்படும். சொல்லானன்றிப் பொருளாமா றில்லையாதலின், சொற்சுவை பொருட்சுவை யிரண்டுக்கு மிடமா வது சொல்லாயிற்று. அச்சொல் செவியாற் கேட்கப்படுதலின் சொற்சுவை பொருட்சுவைகளை நுகர்தற்கு வாயில் செவியா னமைபற்றிச் 'செவியிற் சுவை யுணரா' என்றார். வாழ்க்கைப் பயன் நிரம்ப எய்தற்கு இன்றியமையாத இவ் வுணர்ச்சி இல்லா தார் வாழ்ந்தும் பயனின்மையில் அவர் 'அவியினும் வாழினு மென்' னென்றார். மனத்தொடுபட்டுப் பலபட விரியும் பெற்றிய தாய் மக்கட்கே சிறப்பினுரிய இச்சுவை போலாது மனத்தொடு படாது விலங்கு முதலிய பிறவுயிர்கட்கும் பொதுவாயுள்ள ஊண்சுவை யொன்றுமே யுடையார் மக்களாய்ப் பிறந்தாரே னும் விலங்கோ டொப்பர் என்பார் 'வாயுணர்வின் மாக்கள்' என்றார். என்னை? 'மாவு மாக்களு மையறி வினவே' (தொல்- மரபியல்-௩௨) என்பதாகலான். 'வாயுணவின்' என்பதும் பாட மாம்.

இவ் வதிகாரத்தில் முதல் இரண்டு குறளகளால் யது சிறப்பும், அடுத்த குறளால் கேள்வியுடையாரது அடுத்த நான்கு குறள்களால் கேள்வியுடையா ரெய்தும் பயனும் இறுதி மூன்று குறள்களால் கேள்வியில்லாமையின் குற்றமும் கூறப்பட்டன.

(தொடரும்)

கள்ளும் சூதும்

[செல்லூர்க்கிழார் திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

உலகம் தோன்றிய நாள்தொட்டு பகலும் இரவும் மாறி வருவதும் போவதுமாக இருக்கின்றன. இருட்டு என ஒன்றுண்டேல், வெளிச்சமுமுண்டு. நன்றுண்டேல், தீமையும் அதன் பக்கலிலேயே உளது. இவை போன்றே நலத்தைக் கெடுத்தற்குக் கள்ளும் சூதும்; இவைகள் ஒவ்வொன்றுக்கும்

பழங்காலத்தில் இக்கள்ளினை அரசர்முதல் கீழ்மக்கள் வரை எளிதாக உண்டு களித்துவந்தனர். இதற்குச் சான்று சங்க இலக்கியங்கள் பகர்கின்றன. சங்க காலத்திருந்த ஔவை மூதாட்டியார், தம்மைப் போற்றிச் சிறப்புச் செய்த அதியமான் நெடுமான் அஞ்சி தன் பருவுடல் நீத்தகாலை அவன் தமக்குச் செய்த சிறப்புக்களுள், இக்கள்ளினைத் தமக்குக் கொடுத்துத் தானும் உண்ட செயலையே பாராட்டி இரங்க லுரையாக,

> 'சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே
> பெரியகட் பெறினே
> யாம்பாடத் தாம் மகிழ்ந்துண்ணும் மன்னே'

எனக் கூறி வருந்துவாராயினர். முற்கால நூல்களிலிருந்து பிற்கால நூல்கள் வரை இதனையே யெடுத்துப் பாராட்டிப் பேசுகின்றன. அதன் சுவையும், அதை உண்பதால் உணர்வு இழந்த நிலைப்பண்புமே அவற்றைப் பாராட்டிப் பேச மனத்தை உந்துவவாயின. வள்ளுவர் பெருமானே தம் அறநூற் பகுதியாகிய காமத்துப் பாலில்,

> 'இனித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
> கள்ளற்றே கள்வநின் மார்பு'

> 'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
> கள்ளுக்கில் காமத்திற் குண்டு'

எனத், தலைவி தோழிகள் கூற்றாக இன்பத் திளைப்புக்கு உவமையாக அமைத்துக் கூறுவாராயின், இக்கள்ளின் ஆட்சியை என்னெனப் பகர்வது? இதற்கு அடிமைப்பட்ட, அரசர் அறிஞர் முதலியோர் எண்ணடங்கார். இதனை உண்டார் எவ்வளவு அறிஞராயினும் செல்வராயினும் தம் அறிவு சிதைய உணர் விழந்தவராகி தத்தம் அலுவல்களிலும் கடமைகளிலும் தவறு

தனுடையராகின்றனர். எனவே, அவர் உணர்விழந்த பிண்ட மாய் மக்களாய்ப் பிறந்த மாண்பினையுணராதவர்களாய்க் குடிப் பது உறங்குவது களிப்பது இந்த அளவோடு அவர் வாழ்வு கழிந்து விடுகின்றது ஆகலின், இதனை விலக்கி யொழித்தாலே மக்கள் பயன்பெற முடியுமெண மூதறிஞர் கருதினர். அது கருதியே பல நூல்கள் மூலம் இதன் தீமையைக் கண்டித்து இதனை விலக்குமாறு அறிவுறுத்துவாராயினர்.

சூதென்பது, அரசர் அறிஞர் தொழிலாளர் முதலியோர், மன ஓய்வுக்காக - மனக்கவலையை மாற்றுதற்காக - உழைப்புக் கடுமை குறைதற்காக - அமைத்த ஒருவகை விளையாட்டு. அது போர்முறையை ஒட்டி அமைக்கப்பட்ட கதைபோன்ற ஒன்றே என்று எண்ணற்கேற்ற தன்மையையுடையதாக அமைந்திருக் கின்றது. இப்போக்கில் அமைந்த சூதாட்டமே சாதுரங்கம், சொற் கேட்டான், தாயம் போன்ற விளையாட்டுக்கள். பிற்காலத்துவந்த சீட்டாட்டமும் இத்தகைய வொன்றே. இச்சூது, வரவர ஒரு வன் உரிமையை மற்றவன் பறிக்கின்ற கொள்ளைத் திருட்டாக மாறி விட்டது. அதனால் இதுவும் கள்ளுண்டலால் வரும் தீமையைப்போல் அதிற் சிக்குண்ட மக்களைத் தன் வயப்படுத்தி அதிலேயே கருத்தை முனையச்செய்து பண்பொடுபட்ட வாழ்க் கையையும் நீராடல் உண்ணல் உறங்கல் முதலிய அன்றாடக் கடன்களையுங்கூட, நிகழ்த்தவிடாது தன்பால் ஈர்த்து மக்களை ஒன்றெய்தி நூறிழக்கச் செய்யும் கொடும்பாடுடையது. இதனான், இதனைக் கள்ளொடு ஒன்றுபடுத்தி அறநூலார் விலக்க முற்பட்டனர். சூதால் பல கேடுகள் நிகழ்ந்ததைப் பண்டும், நிகழ்வதை இன்றும் தெளிந்து வருகின்கின்றோம். முற்காலத்து நளன், தருமன் காதைகளும் தற்காலத்துக் குதிரைப்பந்தயம் சீட்டாட்டம், 'ஜரிசு லாட்டரி', கதைப்போட்டி, குறுக்கெழுத்துப் போட்டி முதலியனவும் நமக்குச் சான்று காட்டுகின்றன. இதனால் எவரோ ஒருவர் வாழப் பலர் கெடுகின்றனர்; இதனால் பொரு ளிழப்பும், ஆர்வம் மிகைப்பட்டுப் பலர் தம் அறிவுநிலை மாறிப் பைத்தியம் பிடித்து இறத்தலையும் காண்கின்றோமன்றே. ஆகவே, கள்ளும் சூதும் மக்களின் மாண்பைக் குலைக்க வந்த பேய்கள் எனக் கூறின், மிகையாகாது. ஆகவே, இதனைப் பண்பின் தலைப்பிரியாத பேரறிஞர், சமயக்கணக்கர், ஒழுக்கம் ஓம்பும் உயர்வாளர், மற்ற யாவரும் ஒருங்கே கடிய முற்பட் டனர், கடிந்தனர்.

இவைகளின் தீமையை நுனித்தறிந்த பேரறிஞர் சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது

வள்ளுவர் எவ்வாறு வகுத்து விலக்கிக் கடிந்துள்ள னர் என்பதை இனிக்காண்பாம்.

வள்ளுவர் ஓர் அறநூல் அறிஞர். அவர் உலகமாந்தர் உய்தற்காக வழிகாட்டி விதிவிலக்களித்த பெருந்தகையாளர். அவர் உலகு பயன்கருதி ஆக்கிய இனிய நூல் திருக்குறள். அதில் மூவ்வகைப் பால் வகுத்து அவைகளில் தாம் உரைத்த அறத்தை-உலகியல் நெறியை - இல்லறக்கிழமையின் ஏற்றத்தை-எடுத்துணர்த்திய முதுபெரும் புலவர் பெருந்தகை.

திருக்குறளில் வரும் பகுப்புகள் மூன்று ; அவை : அறம், பொருள், இன்பம் என்பன. முதற்கண் அறநெறியினின்று வழுவாது கடனாற்றி உலகியலோடொத்து வாழ்தலை விளக்கிக் கூறினார். அஃது அறத்துப்பால் எனப்பெறும். அறம் செய்தற்கும் உலகில் வாழ்தற்கும் துணைக்கருவியாக நின்று உதவுவது பொருள். பொருளை ஈட்டும் நெறியும், அதை ஈட்டுங்கால் வரும் இடையீடுகளும், அவைகளை விலக்கும் முறையும், பிறவும் வகுத்துக்கூறிப் பொருளின் இன்றியமையாத பகுதியை உணர்த்தி வழிகாட்டிய நெறியாகும். இஃது பொருட்பால் எனப்பெறும். அறம் செய்யப்படும் முறையில் செய்யினும் அதற்கேற்ற முறையில் பொருளீட்டும் நெறி திறம்பட வாய்ப்பினும் அவைகட்கேற்ற இன்பம் அமைதல் வேண்டும். அவ்வின்பம் பெண்மை ஆண்மைப் பண்புகளினிடையே சுரந்து வருவது. இவ்வியல்பு வாய்ந்த ஆண்மகனும் பெண்மகளும் ஒன்று பட்டுப் பிரிவின்றி வாழும் வாழ்க்கைமுறையை விரித்துரைப்பதே காமத்துப்பால் எனப்பெறும்.

இத்தகைய அறநூலின் பொருட்பாலில் கட்டுரைப்பன கள்ளும் சூதும் என்னும் தனித்தனி அதிகாரப்பகுதிகள். கள்ளினால் வரும் கெடுதலையும், சூதினால் எய்தும் சீர்கேட்டையும் பல வகைகளில் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டி, அவைகளை அறவே நீக்குமாறு வற்புறுத்திக் கூறுகின்றார். இவர், பொருளியல் வழியாகச் சென்று கொண்டிருக்கும் ஒருவனை அந்நெறியில் முட்டின்றிச் செல்லாதவாறு விலக்குவன இவ்விவையென முறைவைப்பாக வைத்து அமைத்துரைத்திருப்பதன் ஒட்பம், வள்ளுவரின் மதிவன்மையைக் காட்டுவதாக அமைந்துள்ளன. அவை பெண்வழிச்சேறல், வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, சூது என்பன. இவையிற்றுள் முதற்கண்ணின்ற பெண்வழிச்சேறல் என்பது, ஒரு ஆடவனுக்கு அமைந்த வாழ்க்கைத்துணையாகிய இல்லாள், அவன் வழி ஒழுகற்பாலள் அன்றி, அவள் வழி கணவன் ஒழுகுதல் சாலாது. அதற்கேற்ற இயற்கையும் அவ்

வாறே. எனவே, இதனை ஈங்கே விரித்தற்குரியதன்று. தனியாக ஆராய்ந்து முடிபு காண்டற்பாலது. அதற்கடுத்தபடி நிற்கும் அதிகாரம் வரைவில் மகளிர் என்பது. இது, பெண்மை இயல்பு திறம்பி ஒருவன் வழி ஒடாது இவர் தக்கார் தகவிலரென ஆராயாது பொருள்தருவார்க் கெல்லாம் தம் பெண்மை நலத்தை விற்று வாழும் தந்நெறிப் பெண்கள் இயல்பு. இது பொருளீட்டுவான் பொருள்களையெல்லாம் கொள்ளைகொண்டு அழிக்கும் இயற்கை. எனவே, இவர் கூட்டுறவு கூடாதென்பது. இதனையடுத்து நிற்பது கள்ளுண்ணாமை. தன் மனையாளுக்குக் கீழ்ப்படிந்தொழுகி, அதற்கடுத்துப் பெண்மை இயல்பில்லாத பொதுமகளிர் காமத்தை நச்சிவாழ்வது அறிவுக்கண்ணை அழிக்கும் நீர்மைத்து. அவ்வறிவைத் தலையெடுக்காது செய்வது கள்ளுண்பது. அக்கள்ளுண்டலால்வரும் கேட்டினும் பெருங் கேடெய்துவிப்பது சூது என முறையே வகுத்துக் கள்ளுண்ணாமையை முதலினும் அதற்கடுத்துச் 'சூது' என்னும் அதிகாரத்தையும் வைத்திருப்பதன் நோக்கம், இவைகள் கூடாதென்பதும் இவைகள் ஒன்றுக்கொன்று இனமானவை யென்பதும் விளக்கற் பொருட்டேயாமெனத் தெளிக.

கட்குடியின் தீமையை வள்ளுவர் மிக அழுத்தந் திருத்தமாகக் கண்டிக்கின்றனர். அவர் எடுத்த எடுப்பிலேயே கள்ளின் மீது விருப்பங் கொண்டுள்ளவர், 'பிறரால் மதிக்கப்படார்; தம் புகழையும் இழந்து விடுவார்' என்று கூறுகின்றார். கள்ளில் விருப்பம் கொள்ளுவோர் பிறரால் மதித்தற்குரியரல்லாதாரோடு, தம் பெயரும் கெடுமென்று சொல்லாமற் சொல்லிக் கள்ளுண்ணாமையை வற்புறுத்துகின்றார். பின்னரும்,

'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என் மற்றுச்
சான்றோர் முகத்துக் களி'

எனவும்,

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்

எனவும், இறுதிக் குறளில

'கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு'

எனவும் கட்டுரைப்பது, ஒருவன கள்ளுண்டு, கொண்டு பிதற்றுதலைப் பெற்ற அவன் தாய்கூடப் பொறுக்கமாட்டாளே, அப்படியிருக்க இவன் நல்லோர் காணக் கள்ளுண்டு வெறியாருவது அவர்கட்கு எவ்வளவு வெறுப்புத் தருமெனக் கள்ளுண்போரையே கேள்விகேட்டு அதை உண்பதை விடுமாறு

நயம்பட வேண்டுகின்றார். பின்பு அவர் கள்ளுண்டு உணர்வற்றுக் கிடப்பதை வெறுத்து நோக்கிக் கள்ளுண்போர் உறங்குவோரினும் செத்தோரினும் வேறுபட்டவரல்லர்; எந்தக் காலத்தும் கள்ளுண்போர், நஞ்சை உண்டு தமக்குக் கேடுவிளைத்துக் கொள்ளும் அறியாதவரோடொப்பர் எனக் கட்டுரைத்து விளக்குகின்றார். பின் பலபட இடித்துக்கூறி அதனை விட்டுத்தொலைக்க வேண்டிய முதன்மையையும் எடுத்துக்காட்டுமூலம் 'ஒருவன் தான் கள்ளுண்ணாது நல்லறிவோடிருக்குங் காலத்தில் கள்ளுண்டு மயங்கிக் கிடப்பவன் ஒருவனைக்கண்டு, நாமும் கள்ளுண்டால் இவன் நிலையில்தானே மயங்கிக் கிடப்போம் என எண்ணமாட்டானோ?' என அவன் தன்னைக்கூடச் சிந்தித்து எண்ணாத மதியீனத்தை விளக்கி யெடுத்துக் காட்டுகின்றார். இதனோடு அவர் கள்ளுண்டலால்வரும் தீமையை விளக்கிவிட்டு, அதற்குத் துணையாக அமைந்த சூதை யெடுத்துக் கொண்டு விளக்குவார். அதில்,

'வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி அற்று.'

ஒருவன் வெற்றியே பெறுவதாயினும் சூதாட்டத்தை விரும்பாதிருப்பானாக. வென்ற அவன் வெற்றிமேம்பாடும் தூண்டின் முள்ளிலுள்ள இரையை விழுங்கித் தன் உயிரிழக்கும் மீன் தன்மையனாவன் எனச் சூதால் பெற்ற பொருளினால் வரும் கேட்டினை விளக்கினார். பின்னரும்

'சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன் றில்'

எனவும்,

'அகடாரார் அல்லல் உழப்பர் சூதென்னும்
முகடியான் மூடப்பட் டார்'

எனவும்,

'உடை செல்வம் ஊண்ஒளி கல்வியென் றைந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்'

எனவும் கூறும் குறள்களில் சூதினால் பல துன்பங்களும் ஒருங்கே தொடருமென்றும், இதனை மேற்கொண்டார் உடுக்கும் ஆடையும் அதைப் பெறற்கு வேண்டும் பொருளும் உண்டற்குச் சோறும தன் நல்ல பெயரும் கல்வியும் ஒருங்கே இல்லாதவராய் அலமந்து ஏங்குவரென்றும், அதனைக் கைவிட்டு நன்னெறியிற் படரவேண்டுமென்றும் அறிவுறுத்துகின்றார், நம் வள்ளுவர் பெருமான். ஆகவே, மக்களுடல் பெற்ற நாம் வள்ளுவர் போன்ற வழிகாட்டும் வான் பொருட்செல்வர் ஆணை

வழி நின்று கள்ளையும் சூதையும் ஒழித்து அறிவுக்கண்ணராய் ஒழுகுவோமாக.

இதுகாலை நம் சென்னைமாநில அரசியலார் வள்ளுவர் (காந்தி) வகுத்த ஆணைவழி நின்று 'மதுவிலக்குச் சட்டம்' மூலம் வெளிப்படைக் குடியை ஒழித்துள்ளனர். 'பந்தயம்' 'குறுக் கெழுத்துப் போட்டி' போன்ற சூதுமுறைகளையும் விரைவில் நீட்பார்களாக. அதனையொட்டி புகைக்குடியை அறவே ஒழித்துக்கட்ட வேண்டுவது முதற்பெருங் கடப்பாடாகும். வள்ளுவர் கள்ளுண்ணாமை அதிகாரத்தினுள் 'ஒருமொழி ஒழிதன் இனங்கொளற்கு உரித்தே' என்னும் உரைப்படி 'புகையுண்ணாமை' அடங்கிக் கிடப்பதை ஓர்க.

புகைக்குடியால் இன்று இளைஞருலகம் நாளுக்குநாள் கேடுறுகின்றது. இப் புகைக்குடி குடிக்காத இளைஞரே இல்லை யெனலாம். இக்கொடிய குடியாகிய நச்சுப்பாம்புக்கு இளை ஞருலகம் இரையாகின்றது. இதனை அரசியலார் சட்ட மூலம் தடுத்தல், ஒழுக்கத்தையும் இளைஞர்களையும் பாதுகாக்கும் வழி யாகும். இதனால் இளைஞர் முகம் வெளுக்கின்றது; நெஞ்சம் ஈரப்பசை அருகுகின்றது; கண்கள் செந்நிறம் பெறுகின்றன; இவர் இருமலுக்கு ஆளாகி விரைவில் மண்ணுலக வாழ்வை மறந்து செல்ல இயல்கின்றது. தம் நலங் கருதியாவது இளைஞ ருலகு இதை விட்டுவிட்டுத் திரும்பித் திருந்துமென நம்புகின் றோம். வள்ளுவர் வாயுறை வாழ்த்தும் இன்னனபோன்ற கொடிய வழியை நீக்குமாறே முழங்குகின்றது. அதன் வழியில் நிற் பதே சாலச் சிறந்ததாகும்.

இப் புகைக்குடி உடலைத் தூய்மையில்லாது ஆக்குதலோடு, அறிஞர்களால் வெறுக்கும் நிலை உண்டாக்குகின்றது. இளைஞ ருலகமே! நுட்கட்கு எச்சரிக்கை செய்து ஒன்று வேண்டுகின் றேம்! புகைக்குடி நுங்கட்கு நன்மையைத் தருகின்றதா? நெஞ் சில் கையை வைத்துக் கூறுங்கள்! நும் நெஞ்சே 'நன்மை' இல்லை யென்று சான்றுகூற, மடிதற்று முன்நிற்கும்! தொழிலாளர் பெருமக்களே! நீவிர் நாள்தோறும் உழைத்து உழைத்து ஓடா கிப் பெற்ற காசைக் கரியாக்காதீர்! புகைக்காதீர்!

ஓய்வுக்காலத்தில் நல்ல கதைகள் படித்தலினும், அறிஞர்கள் வரலாற்றை அறியும் துறையினும் கால்கொள்ளுங்கள்! திரைப் படத்தால் சீரழியாதீர்! அதனால் நும் காசும் கண்ணும் கெடுகின் றன என்பதை மறவாதீர்! மறவாதீர்! என வேண்டுவல். அன்பு தழைக. கள்ளும் சூதும் குடிப்பழக்கமும் நீங்குக. நலங்கள் பெருக நாடு.

மன்மத ஆண்டில்

பிள்ளையார் சதுர்த்தி, நவராத்திரி, கந்தர்சட்டி.

[டாக்டர், கணியர், திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளை]

(1) பிள்ளையார் சதுர்த்தியை ஆவணியிலும், (2) நவராத்திரியைப் புரட்டாசியிலும், (3) கந்தர் சட்டியை ஐப்பசியிலும் தான் கொண்டாட வேண்டும். இவ்விரதங்களை இன்ன என நன்ருக ஆராய்ந்து தக்க ஆதாரங்களுடன் முடிவு செய்வோம்.

1. பிள்ளையார் சதுர்த்தி

பிள்ளையார், விநாயகர், விக்னேசுவரர் என்பன சிவபெருமானுடைய மூத்த திருமகனுரைக் குறிப்பன. திருமகனுர் என்பதே பிள்ளையார் என்று வழங்கப் பெறுகிறது. விநாயகர் என்ற சொல் தலைவர் என்று பொருள்படும். சிவகணங்களின் நாயகர்தான் விநாயகர்; அதனுல் அவர் கணபதி என்றும் அழைக்கப் பெறுகிருர். பிள்ளையாருடைய வரலாறுகளையெல்லாம் கூறுவது விநாயக புராணம். அது அவருடைய பிறப்பைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது:

"இவ்வாறு தலைவர் அவதரித்த வைகல்,
பந்தமறும் ஆவணித் திங்களின் வளரும் சதுர்த்தி எனப்பகர்வர் அற்ருல்
அந்தமதிச் சதுர்த்தியிற் பூசிப்பவருக்கு உறுபயன் ஆர் அளக்கவல்லார்."

ஆவணி மாதம் வளர்பிறைச் சதுர்த்தியில் பிள்ளையார் பிறந்தருளினுர். அதனுல் அந்த நாள் பிள்ளையார்சதுர்த்தி என்றும் விநாயக சதுர்த்தி என்றும் பெயர்பெற்றுத் திருநாளாக நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. அந்த நாளிலே பிள்ளையாரைப் பூசிப்பவருக்குக் கிடைக்கும் பயன் இவ்வளவு அவ்வளவு என்று அளக்க முடியாதது. விநாயகப் பெருமானே கூறுவதாக மற்ருேரிடத்தில் அப்புராணம் பின் வருமாறு கூறுகின்றது.

"சிங்கமாமதியிடைச் சேர்முன்பக்கத்துத்
தங்கும்நம் சதுர்த்தி."

சிங்கமாமதி என்பது ஆவணி மாதம்; முன்பக்கம் என்பது வளர்பிறை.

நவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த கவிச்
யாகிய கச்சியப்ப முனிவா பாடியது விநாயகபுராணம்.
மாகிய விநாயகபுராணப் பிரமாணங்களினாலே பிள்ளையார சதுர்த்தியை ஆவணி மாதத்தில் வரும் வளர்பிறைச் சதுர்த்தியன்றுதான் கொண்டாட வேண்டும் என்பது தெளிவாகிறது. செல்வ வளம் நிரம்பிய பிள்ளையார் கோவில்களிலே பிள்ளையாருக்குத் தேர்த் திருவிழாக் கொண்டாடப்பெறுகிறது. பிள்ளையாருக்குத் தேர்த் திருவிழாவை எந்த நாளிற் செய்யவேண்டும் என்று சுவாயம்பு ஆகமம் விநாயகோத்சவப் படலத்தில் விதிக்கின்றது. அதனை விளக்குவோம்.

"ய வ்ச்சேஷண வ்க்னேசோத்சவம் உத்தமம்
சர்வபாபஹரம் புண்யம் சர்வலோக சுகாவஹம்"

(இதன் பொருள்.) "இனி அனைவருக்கும் சுகத்தைத் தருவதாயும் பாவங்கள் அனைத்தையும் போக்குவதாயும் மேலானதாயும் உள்ள புண்ணியமான விநாயகோத்சவத்தைச் சிறப்பாகக்

"ஆதௌ தீர்த்தம் விநிச்சித்திய தத்பூர்வே பஞ்சமேபிவா
சப்தமே நவமேவாபி திருதீயே த்வஜம் ஆரபேத்."

(இ - ள்.) முதலாவது தீர்த்த தினத்தை நிச்சயித்துக் கொண்டு அதற்கு முன் மூன்றாவது தினத்திலாவது, ஐந்தாவது தினத்திலாவது, ஏழாவது தினத்திலாவது, ஒன்பதாவது தினத்திலாவது கொடியேற்றம் செய்ய வேண்டும்.

"சிராவணே விக்நராஜஸ்ய சதுர்த்யாஞ்ச ரதோத்சவம்
தத்திநே தீர்த்தகிருத்யஞ்ச பஞ்சம்யாம் வா விசேஷத"

(இ - ள்.) சிராவண (ஆவணி) மாதத்தில் விநாயகருக்குச் சதுர்த்தியில் தேர்விழாச் செய்யவேண்டும். அதே நாளில் தீர்த்த விழாவையும் செய்யலாம். பஞ்சமியிலும் தீர்த்தோத்சவத்தைச் செய்யலாம் என்பது மற்றொரு பட்சம்.

மேலே கண்ட சிவவாக்காகிய சுவாயம்புவாகம வாக்கியங்களின்படி ஆராய்ந்தால் முதலில் ஆவணி மாதத்தில் வளர்பிறைச் சதுர்த்தியைத் தீர்மானித்துக் கொண்டு அன்று பிள்ளையாரைக் குறித்து விரதம் இருந்து திருவிழாக் கொண்டாட வேண்டும் என்பதும், அன்றுதான் தேர்த்திருவிழா என்பதும், அன்று அல்லது மறுநாள் தீர்த்தவாரி நடத்தவேண்டும் என்பதும், இத் திருவிழாவை ஒன்பது நாள், ஏழு நாள், ஐந்து நாள், அல்லது மூன்று நாள் கொண்டாடலாம் என்பதும் விளங்குகின்றன. ஆகையால், மன்மத ௵ ஆவணி ௴ 5௨ ஞாயிறன்றுதான்

பிள்ளையார் சதுர்த்தியைக் கொண்டாடுவது நல்ல பல பலன்களைத் தருவதாகும் என்ற உண்மை நிலைபெறுகின்றமை காண்க.

ஆவணி மாதத்திற் பிறந்தவர்களுக்கு ஆவணி மாதத்திலேயேதான் பிறந்தநாள்விழாக் கொண்டாடுகின்றோம்; ஆவணி மாதத்தில் இறந்தவர்களுக்கும் இறந்தநாள்விழாவை ஆவணி மாதத்திலேயே கொண்டாடுகின்றோம். நம் நெல்லையப்பர் கோவிலிலும் திருச்செந்தூரிலும் ஆவணிப் பெருவிழா ஆவணி மாதத்திலேதான் நடைபெறுகின்றது. நெல்லையப்பர் கோவிலில் ஆவணிப் பெருவிழா நடைபெறும் இடையிலேதான் பெரும்பாலும் பிளளையார்சதுர்த்திவிழாவும் நடைபெறும்; நெல்லையப்பர் கோவில்விழா ஆவணி முதல் வாரத்தில் முடியுமானால் ஆவணிக் கடைசி வாரத்தில் பிள்ளையார் சதுர்த்தி வரும்.

நம நாடடில இககாலத்தில் சைவர், வைணவர், சுமார்த்தர், நவர், மகமதியர் ஆகிய பல மதத்தினர் வாழ்கின்றார்கள். இவர்களில் கிருத்தவர் தமக்குச் சனவரி, பிப்ரவரி முதலிய பன்னிரண்டு நிலையான மாதங்களை வைத்திருக்கின்றார்கள்; அம் மாதங்களில் அவர்கள் சம் திருவிழாக்களைக் கொண்டாடுகின்றார்கள். மகமதியரோ முகரம் முதலிய பன்னிரு மாதங்களை உடையர்; அம்மாதங்கள் சந்திரனுடைய வளர்ச்சி தளர்ச்சியைக் கொண்டு கணிக்கப்படுகின்றன; அமாவாசை கழிந்த மூன்றாம் பிறையிலே அவர்களுடைய மாதம் தொடங்குகின்றது; அதனால் அவர்களுடைய பன்னிரண்டு மாதங்களும் சேர்ந்த ஆண்டு ஒன்றுக்குச் சற்று ஏறக்குறைய 355 (முந்நூற்று ஐம்பத்தைந்து) நாட்களே உண்டு. இதற்குச் சாந்திரமான (அதாவது சந்திரனுடைய) ஆண்டு என்பது பெயர். மானம் என்பது அளவு. காலத்தைச் சந்திரனைக் கொண்டு அளந்து கணக்கிடுவது சந்திரமானம்; சூரியனைக் கொண்டு அளந்து கணக்கிடுவது சூரியமானம். இவை முறையே சாந்திரமானம், சௌரமானம் என்றும் பெயர் பெறும். சூரியனைப் பூமி ஒரு முறை சுற்றி வருவதற்கு $365\frac{1}{4}$ நாள் ஆகிறது; பூமிதான் உண்மையில் சூரியனைச் சுற்றிவருகிறது; ஆனால் காட்சிக்குப் பூமி அசையாமல் இருப்பதுபோலவும் சூரியனே பூமியைச் சுற்றிவருவது போலவும் காணப்படுகிறது. அதனால் பூமிமானம் என்னப் பெறவேண்டியதே சௌரமானம் என்று அழைக்கப்படுகிறது. சௌரமான மாதங்கள் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, [illegible], கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்பன.

மகமதியர்களுடைய சாந்திரமானம் வேறு எதையும் பற்றாது தனித்து இயங்குகின்றது. சௌரமானச் சித்திரை மாதம்

முதல் நாள் சாந்திரமான மொகரம் முதல் நாள் தொடங்குமே யானால் அது மறுபடி சித்திரை மாதம் முதல் நாளில் தொடங்கு வதற்கு அறுபத்தைந்து ஆண்டுகள் கழிய வேண்டும். மகமதி யர்களைப்போலவே சுமார்த்த மதத்தினரும் சாந்திரமானிகளே. மகமதியர் மாதம் வளர்பிறை மூன்றாம் பிறையில் தொடங்கு கிறது; சுமார்த்தர் மாதமோ வளர்பிறை முதற் பிறையில் (பிரத மையில்) தொடங்குகின்றது. 1. மொகரம், 2. சபர், 3. இரப்பி லவ்வல், 4. இரப்பிசானி, 5. சமாதிலவல், 6. சமாதிசானி, 7. இரசப்பு, 8. சாபான், 9. இரம்சான், 10. சவ்வால், 11. சில்காது, 12. சில்கேது என்று மகமதிய மாதங்கள் பன்னிரண்டு; மகமதிய ஆண்டு 354 நாள் 48 நாழிகை 8 விநாடி 36 தற்பரை கொண்டது. இதனைப் போன்றதே சுமார்த்தர்க ளுடைய ஆண்டும். ஆனால் சுமார்த்தர்களுடைய மாதங்களுக்குப் பெயர் இல்லை. அவர்கள் சித்திரையைச் சைத்திரம் என்றும், வைகாசியை வைசாகம் என்றும், ஆனியைச் சேட்டம் என்றும், ஆடியை ஆசாடம் என்றும், ஆவணியைச் சிராவணம் என்றும், புரட்டாசியைப் பாத்திரபதம் என்றும், ஐப்பசியை ஆச்வீசம் என் றும், கார்த்திகையைக் கார்த்தீகம் என்றும், மார்கழியை மார்க்க சிரம் என்றும், தையைப் புசியம் என்றும், மாசியை மாகம் என் றும், பங்குனியைப்பால்குனம்என்றும் திரித்து வழங்குகின்றனர். சுமார்த்தர்கள் தமது சைத்திரம், வைசாகம் முதலிய மாதங்களை மகமதியருடைய மொகரம் முதலிய மாதங்களைப் போலத் தம் போக்கில் விட்டுவிடாமல் சௌரமான சித்திரை, வைகாசி முத லிய மாதங்களுடன் பிணைக்கின்றார்கள். அவர்கள் தமது சைத் திர மாதம் சித்திரையுடனும், வைசாக மாதம் வைகாசியுடனும் இங்ஙனமே ஏனைய மாதங்களும் அவ்வவற்றிற்குரிய சௌர மாதங் களுடனும் சேர்ந்திருத்தல் இன்றியமையாதது என்று கொள்ளு கின்றனர்; அவ்வாறு சேராது போகும் மாதங்களைப் பொய் மாதங்கள் என்று தள்ளிவிடுகின்றனர்.

சைத்திர மாதம் சௌரமான சித்திரையுடன் தொடர் புடையதாக இருக்கவேண்டும்; அதாவது சைத்திர மாதத்தின் முடிவு நாளாகிய அமாவாசை சித்திரை மாதத்தில் இருக்கவேண் டும்; அதாவது சித்திரை மாதத்தில் வரும் அமாவாசையோடு சாந்திரச் சைத்திரம் முடியும்; அதன் மறுநாள் சாந்திர வைசா கம் தொடங்கும். அந்த வைசாகம் வைகாசியில் வரும் அமா வாசையுடன் முடியும். சௌர ஆண்டு 365 நாள், 15 நாழிகை, 31 விநாடி கொண்டது; சாந்திர ஆண்டோ முன் கூறியபடி 354 நாள், 48 நாழிகை, 8 விநாடி, 36 தற்பரை கொண்டது. அதாவது சாந்திர ஆண்டைக் காட்டிலும் 10 நாள், 27 நாழிகை

யாகக் கொண்டது சௌர ஆண்டு. அதனால் களில் சித்திரை மாதத்தில் இரண்டு அமாவாசை வரும்போது முதல் அமாவாசையோடு சைத்திர மாதம் முடிந்துவிடும்; வைசாகம் மறுநாள் தொடங்கிச் சித்திரை மாதக் கடைசியில் வரும் அமாவாசையோடு முடிந்துவிடும். அதனால் வைசாக மாதத்திற்கு வைகாசி மாதத் தொடர்பு இல்லாமற் போய்விடுகிறது. ஆதலின் சுமார்த்தர்கள் சித்திரை மாதத்துடன் முடிகிற வைசாக மாதத்தைப் பொய் மாதம் என்று தள்ளிவிட்டுச் சித்திரை மாதக் கடைசியில் வரும் அமாவாசைக்கு மறுநாள் பிரதமை முதல் தொடங்கி வைகாசி மாதக் கடைசியில் வரும் அமாவாசையோடு முடிகிற மாதத்தை நிச வைசாகம் என்று கொள்கின்றார்கள். இங்ஙனமாக வருகிற பொய்மாதப் போக்கினாலேயே பல மாறுபாடுகள் விளைகின்றன.

நிகழும் மன்மத ஆண்டில் ஆவணி மாதம் முதல்நாள் ஓர் அமாவாசையும் முப்பதாம் நாள் ஓர் அமாவாசையும் வருதலினாலே முதல் அமாவாசையோடு சிராவணம் என்ற சாந்திர மாதம் முடிந்துவிடுகிறது; அதன் மறுநாள் தொடங்குகிற பாத்திரபத மாதத்திற்குப் புரட்டாசி மாதத் தொடர்பு அற்று விடுகிறது. மகமதியருடைய முதல்நாளுக்கு வளர்பிறைத் திருதியை இரவில் இருக்கவேண்டும்; அதாவது அன்று மூன்றாம் பிறைச் சந்திரனைக் காணுதல் வேண்டும் என்பது விதி; அதைப் போலவே சுமார்த்தர்களுடைய மாதத்திற்குப் பிரதமை சூரிய உதயத்தில் இருக்கவேண்டும் என்பது விதி. இவ்விதிப்படி ஆவணி மாதம் 31௳ பிரதமை சூரிய உதயத்தில் இல்லை. அதனால் அந்த நாளும் பொய்ம்மாதத்தோடு சேர்ந்த பொய்ந்நாளாகவே முடிகிறது. புரட்டாசி மாதம் முதல்நாளிலேயே சாந்திரப் பாத்திரபதம் தொடங்குகின்றது. ஆதலின் இந்தப் பாத்திர பதத்திற்கு ஆவணித் தொடர்பே இல்லாமற் போய்விட்டது.

ஆவணி மாதம் 2௳ யிலிருந்து 31௳ முடிய அதிக பாத்திர பதம் அல்லது பொய்ப் பாத்திரபதம் என்று சுமார்த்தர்கள் கொண்டாலும் அக்காலத்தில் வரும் தங்களுடைய பிள்ளைகள் முதலியோர் பிறந்தநாள், முன்னோர் இறந்தநாள் இவைகளை அக்காலத்திலேயேதான் செய்கிறார்கள். மேலும் ஆவணியில் வரும் பிரதோடம், அமாவாசை, பூரணை முதலிய விரதங்களை அவர்கள் கொள்ளாமல் விடுவார்களா? "சிராவண கிருஷ்ணாட்டமி" என்று அவர்கள் கூறும் வைகானச பாஞ்சராத்திர சீயந்தி விழாவை—அதாவது கண்ணன் பிறந்த நாளை ஆவணி மீ 24௳ யன்றுதான் பஞ்சாங்கத்திற் குறித்திருப்பதேன்? அட்டமி என்பதும் திதிதான், பிள்ளையார் சதுர்த்தி என்பதும்

திதிதான்; அட்டமியாகிய சீசயந்தியை மட்டும் அவர்கள் ஆவணியிற் குறித்துப் பிள்ளையார் சதுர்த்தியை மட்டும் புரட்டாசியிற் குறிப்பானேன்? சீசயந்தியை ஆடி மாதத்திற் குறித்தால் வைணவர்கள் எளிதில் விட்டுவிடுவார்களா? அதனால் அவர்கள் ஆடி மீ 25௳ யன்று "சுமார்த்த சன்மாட்டமி" என்று தம் விரத முறையைப் பிரித்துக் குறித்துக் கொண்டு வைணவபுறமாக அதனை ஆவணியிலே குறித்தது ஆராயத்

ஆனால், பிள்ளையார் சதுர்த்தியைத் தம் மனம்போல அவர்கள் புரட்டாசி மாதம் கொள்ளட்டும். சைவபுறமாக அதாவது ஆகமோக்தமாக "ஆவணி மீ 5௳ யிலும் சைவ விநாயக சதுர்த்தி" என்று குறிப்பிடுவதுதானே ஒழுங்கு? ஆதலினாலே சைவப் பெருமக்கள் இதனை நன்கு கவனித்து விநாயகசதுர்த்தியை ஆவணி மீ 5௳ கொண்டாடித் திருவருளுக்குப் பாத்திரராகும்படி வேண்டுகின்றோம். புரட்டாசியில் விநாயகசதுர்த்தி கொண்டாடுவது சிவவாக்கிய ஆகமவாக்கியங்களுக்குப் புறம்பானது; ஆதலின் கோவில்களில் புரட்டாசியிற் கொண்டாடுவது பாவமான செயலாகும்.

2. நவராத்திரி விழா

நவராத்திரி என்பது ஒன்பது இராத்திரி எனப் பொருள்படும். புரட்டாசி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி முடிய ஒன்பது நாட்களும் பார்வதி தேவியைப் பூசித்துத் திருவிழாக் கொண்டாட வேண்டும். காமிகாகமம்,

"கன்யாசிதப் பிரமா மாரப்ய நவம்யந்தம் உமாவிரதம்"

மேலே கண்ட காமிகாகம வாக்கியத்தை ஆராய்ந்தால் கன்யா மாதத்தில் அதாவது புரட்டாசி மாதத்தில் அமாவாசை கழிந்த மறுநாளாகிய பிரதமை முதல் நவமி முடிய நவராத்திரி என்பது பெறப்படும். இதையே பூர்வகாரணாகமம்,

"அதாதஸ் சம்பிரவஷ்யாமி நவராத்திரி விதிக்கிரமம்
ஆஸ்வயுக் சுக்லபக்ஷேது பிரதிபந் நவம்யந்தகே
பிரதிபத் தினமாரப்ய விரதோத்சவம் சமாசரேத்."

என்று கூறுகிறது. இதில் ஆஸ்வயுக் என்பது சாந்திரமான ஐப்பசியாம். சாந்திரமான ஐப்பசி பெரும்பாலும் புரட்டாசியிலேயே பிரதமை முதல் நவமி முடிய வருமாதலால் இந்த வாக்கியம் தோன்றியது. ஆகையால் இதைச் சௌரமான ஐப்பசி என்றாவது அல்லது சாந்திரமான ஐப்பசி என்றாவது மயங்கி

விடுதல் கூடாது. சாந்திரப் பெயராக இங்கே கூறப்பெற்ற ஆஸ்வயுக் சௌரமானப் புரட்டாசியையே உணர்த்தும். இவ் வுண்மை அப்பூர்வ காரணாகமம் மகோத்சவ விதிப்படலத்தில்,

"சௌரமாச : பிரசஸ்தோகி சாந்திரமாசோப்ரசஸ்தகம்"

"சௌர மாதமே மேலானது, சாந்திர மாதம் அற்பமானது" என்று விதிப்பதால் விளங்கும். மேலும் காமிகாகமம் நவராத்திரி விதி கூறுமிடத்தில்,

"சௌரமாஸே கர்த்தவ்யா நவராத்திரிர் விசேஷத :
சாந்திரவாஸே நகர்த்தவ்யா, கிருதஞ்சேது ராஷ்டிர நாசனம்"

என்று கூறுகிறது. இதனால் "நவராத்திரியைச் சௌரமானத் திலேதான் செய்தல் வேண்டும்; சாந்திரமானத்திற் செய்யக் கூடாது; செய்தால் நாடு அழியும்," என்ற உண்மை வெளிப் படுகின்றது.

நவராத்திரியைப் புரட்டாசி மாதத்திலேதான் செய்தல் வேண்டும் என்பதை யாமளதந்திரம்,

"ததஸ்ச கன்யாமாசேது பூர்வ பக்ஷே விசேக்ஷத :
பிரதமாயாம் சமாரப்ய நவம்யந்தம் பிரபூஜயேது"

என்று கூறுகிறது. பூர்வகாரணாகமம் ஓரிடத்தில் ஆஸ்வயுக் என்று கூறுவதைச் சாந்திர ஐப்பசி என்றோ, சௌர ஐப்பசி என்றோ தவறாகக் கொண்டுவிடக் கூடாது என்பதை நிலைநிறுத் தவே அகோர சிவாசாரியார் தமது நவமி பூசா விதியில்,

"மாசி பாத்திரபதேபட்சே சுக்லே பிரதிபதாதிகம்
நவம்யர்தம் விசேஷேண புஜயித்வா மகேஸ்வரீம்."

என்று கூறுகிறார். பாத்திரபதம் என்ற சொல் சௌரமானப் புரட்டாசியை உணர்த்தும். மேலும் ஆகமங்களெல்லாம் "சாந் திரமானமாகக் கூறப்பெறும் மாதப்பெயர்களை யெல்லாம் சௌரமான மாதப் பெயர்களாகவே கொள்ளல் வேண்டும்" என்று விதிக்கின்றன.

"ஆஸ்வயுக்" என்பதைச் சாந்திரமான ஐப்பசியாகக் கொண்டு பிரதமையே நவராத்திரியில் முக்கியம் என்று கொண் டால் அது சில ஆண்டுகளில் புரட்டாசி மீ' முதலில் ஓர் அமா வாசையும் கடைசியில் மற்றோர் அமாவாசையும் வந்தால் ஐப்பசி மாதம் முதல்நாளிலே சாந்திரமான ஆஸ்வயுக் அதாவது ஐப்பசி தொடங்கும். அப்போது "கன்னியாகதேசவிதரி" என்ற ஆகம வாக்கியத்துக்கு மாறாகச் சௌரமான ஐப்பசியில் நவராத் திரியைத் தொடங்க நேரும்.

மேலும் நவராத்திரியில் பிரதமை பிரதானம் அன்று; நவமி மகாநவமி என்று பெயர் பெற்றது போலப் பிரதமை மகாபிரதமை

என்று பெயர் பெறவில்லை. பிரதமை பிரதானமாயின் அது மகாப் பிரதமை என்று பெயர்பெற்றிருக்கும். நவமியும் மகா நவமி என்று பெயர்பெற்றிராது. பெரிய கோவில்களிலும் பணக்காரர் வீடுகளிலும்தான் நவராத்திரி ஒன்பது நாளும் விழாவாக நடைபெறும். பொதுமக்கள் அனைவரும் மகாநவமியாகிய ஒரு நாளையே விழாவாகக் கொண்டாடி வருகிறார்கள். மேலும் நிகழும் மன்மத ஆண்டினில் சுமார்த்தர்கள் கணக்குப்படி மகாநவமி ஐப்பசி மாதம் 8உ செவ்வாய்க்கிழமை வருகிறது. அதனால் அதன் தொடக்கம் புரட்டாசி மாதம் 31உ திங்களன்று தான் ஆகும். இத்திங்கட்கிழமை துதியைதான் இருக்கிறது; பிரதமை இல்லவே இல்லை. புரட்டாசி மீ 30உ ஞாயிறன்றுதான் பிரதமை; அன்று தொடங்கினால் இவ்விழா மாநவமியோடு பத்து நாளாகிவிடும்.

நவராத்திரியில் மகாநவமியே முக்கியம். இதனைப் பின் வரும் ஆகம வாக்கியங்கள் நிலைநாட்டுவன:

> "கன்யாகதே சவிதரி சுக்லபட்சேஷ்டமியுதா
> மூலநட்சத்திர சம்யுக்தா சாமகா நவமீஸ்மிருதா"

என்று உத்தரகாமிகாகமம் துர்க்காபூசா விதிப்படலத்தில் விதிக்கிறது. இதன் பொருள்: "சூரியன் கன்னியா ராசியில் வந்த அளவில் வளர்பிறையில் அட்டமியுடனும் மூலநட்சத்திரத்துடனும் கூடிய திதி எதுவோ அது மகாநவமி என்று சொல்லப்படுகிறது," என்பது. இதனால் மகாநவமி என்பது கன்னியாராசியாகிய புரட்டாசி மாதத்தில் இருக்கவேண்டும் என்பது இன்றியமையாத விதியாகிறது. மேலும் சாந்திரமானிகளாகிய சுமார்த்தர்கள் தங்களுக்குப் பிரமாணமாகக் கொண்ட விரதசூடாமணி,

> "மூலேத் வாவாகயேத் தேவீம் பூர்வாஷாடேது பூசயேத்"

என்று கூறுகிறது. இதன் பொருள்: "மூலநட்சத்திரத்தில் தேவியை ஆவாகனம் செய்யவேண்டும்; பூராடத்தில் பூசிக்க வேண்டும்" என்பது. "மூலநட்சத்திரம் அட்டமியுடன் சேர்ந்து வருவதும் பூராடம் நவமியுடன் சேர்ந்து வருவதும் புரட்டாசி மாதத்திலேதான் நிகழும்; ஐப்பதி மாதத்தில் வரவே வராது" இதையே உத்தரகாமிகாகமம் "கன்னியாகதேசவிதரி" என்ற வாக்கியத்

> "ஆஸ்வயுக் சுக்லபட்சேவா அஷ்டமி மூலசம்யுதா
> சாமகா நவமீக்ஞேயா திரைலோக்யேதிசு துர்லபா"

(ஆஸ்வயுக் மாதம் சுக்லபட்சத்திலேயாவது அட்டமி மூலத்தோடு சேர்ந்து மகாநவமி என்று சொல்லப்படுகிறது. அது மூவுலகத்தாராலும் அடையமுடியாதது) என்று கூறுகிறது. அதாவது

"கன்னியா மாதமாகிய புரட்டாசியை விடுத்து ஐப்பசி மாதத்தில் சாந்திரமான முறைப்படி மகாநவமியைக் கொள்ளும்போது மூலத்தோடு அட்டமி சேர்ந்து ஒரு காலத்திலும் மூன்றுலகத்திலும் ஏற்படாது" என்ற உண்மையே இதனால் நிலைபெறுகின்றது. நிகழும் மன்மத ஆண்டில் புரட்டாசி மீ 8௳ அட்டமியும் மூல நட்சத்திரமும் சேர்ந்து வருவது காண்க.

மேலும் விசயதசமியைப்பற்றி மகுடாகமம்,

"கன்யாமாசே சிதேபட்சே தசாஹேது திதித்வயே
சமீபூசாச கர்த்தவ்யா தசம்யாம் சைவகாரயேத்
அன்யத்ரதிதி பூசாச ராஜாதுர்ஜய மாப்நுயாத்
கிராமகர்த்திரு விநாசாய தனதான்ய விநாசனம்"

(புரட்டாசி மாதத்தில் சுக்கிலபட்சத்தில் பத்தாவது தினத்தில் தசமியில் சமீபூசை செய்க; வேறுவிதமாகச் செய்தால் அரசர் தோல்வியடைவர், கிராமாதிகாரி கெடுவான், பொருளும் தானியங்களும் அழியும்) என்றும், அஜிதாகமம்,

"கன்யாமாசே சிதேபட்சே தசம்யாம்ச சமீம்யஜேத்
பூர்வாஹ்ணேவா பராஹ்ணேவா தசாஹே திதிசம்பவே
தத்காலேது விசேஷேண விதிவத் பூஜயேத்குரு:"

என்றும், காரணாகமம்

"மாஸே பாத்ரபதே சுக்லே தசம்யா ராதனம் குஹ
சாதிதெள மிருக யாத்ராச சைவாகமேஷூ பாஷிதம்"

என்றும் கூறும் பிரமாணங்களால் விசயதசமியும் புரட்டாசி மாதத்திலேதான் என்பது தெளிவாகிறது. இதனால் மகாநவமி புரட்டாசி மாதத்திலேதான் இருக்கவேண்டுவது இன்றியமையாததென்பது சொல்லாமலே அமையும்.

ஆகையால் நிகழும் மன்மத ஆண்டில் புரட்டாசி மீ 9௳ ஞாயிறன்றுதான் மாநவமி; 10௳ திங்களன்றுதான் விசயதசமி என்பது நிலைபெறுகின்றமை காண்க.

3. கந்தர்சட்டி விழா

இனி, கந்தர்சட்டி விழாவைப்பற்றி ஆராய்வோம். முருகப்பெருமான் சூரபன்மனை அழித்த தினம் ஐப்பசி மாதத்திய வளர்பிறைச் சட்டியாம். இதனையே கந்தபுராணம், கந்த விரதப் படலத்தில் (செய்யுள் 20)

"வெற்பொடும் அவுணன் தன்னை வீட்டிய தனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப்போற்றி அமரரும் முனிவர் யாரும்

சொற்படு துலையில் திங்கள் சுக்கில பக்கந் தன்னில்
முற்பகல் ஆதி யாக மூவிரு வைகல் நோற்றூர் ''

என்று கூறுகிறது. இதையே சகஸ்ராகமம் ஸ்கந்தோத்சவ படலத்தில்,

" துலாயாம் ரவிசம் ப்ராப்தௌ சுக்லபட்சே விசேஷத:
ஷஷ்டியந்த முத்சவம் குர்யாத் சாந்யமாசம் நகாரயேத்''

(சூரியன் துலாராசியை அடைந்த அளவில் அதாவது ஐப்பசி மாதத்தில் சிறப்போடு கூடிய வளர்பிறையில் சட்டி வரையிலும் திருவிழா நடத்தவேண்டியது. பிற மாதங்களிற் செய்யக் கூடாது) என்று கூறுகின்றது. இவ்வுண்மையை மேலும் தெளிவாக கௌசிகப் பிரஸ்ந குமாரதந்திரம் என்ற ஆகம நூல் நிர்ணயிக்கிறது. அவ்வசனம் வருமாறு :—

" அதாத சம்ப்ரவச்யாமி ஸ்கந்த ஷஷ்டி விதிம்ஸ்ருணு
நவாஹஞ்சாமி சப்தாஹம் ஷஷ்டா ஹஞ்ச திரியாஹகம்
அதவாதத்திநேவாபி சோத்ஸவஞ்ச சமாசரேது
துலாயாம் ரவிசம்பிராப்தௌ சுக்லபட்சே விசேஷத:
ஷஷ்டியந்தம் உத்சவம் கிருத்வா சாந்யமாசே நகாரயேது
காரயேது யதிமோஹேந கர்த்தா போக்தா விநஸ்யதி
நதோஷ: இதிவிக்யாத ஸ்கந்தஷஷ்டி துலாரவௌ
துவிவாரே கண்டிதே தித்யாம் ராத்ரௌ வியாபி விசேஷத:
திவா வியாப்தம் நகர்த்தவ்யம் கிருதஞ்சேது கர்மநாசனம்
சௌரமாசேந கர்த்தவ்யம் சாந்திரமாசே நகாரயேது."

இதன் பொருள் வருமாறு :— "பிற்பாடு அதனால் கந்தர் சட்டி விதியைச் சொல்கிறேன்; கேட்பாயாக. ஒன்பது நாளாவது, ஏழு நாள், ஆறு நாள், மூன்று நாளும், அல்லது அதே நாளாவது உற்சவம் செய்யத்தக்கது. சௌரமாதமான துலாத்தில் சூரியன் வந்தபோது அதாவது ஐப்பசியில் வளர்பிறையில் சிறப்பாக சட்டிமுடிய விழாச்செய்க; மற்ற மாதத்திற் செய்யற்க. மயக்கத்தினுற் செய்வானேயானுல் செய்பவனும் செய்விப்பவனும் நாசமடைகிறுர்கள். உற்சவ ஆரம்பத்தில் இரண்டு மாதம் சம்பவிக்குமானுல் குற்றமில்லை என்று கூறப்படுகிறது; கந்தர்சட்டி துலா மாதத்தில் (ஐப்பசி என்னும் சௌர மாதம்) தான். இரண்டுநாளில் திதி வருமானுல் இரவில் வியாபிப்பதே மேலானது; பகலில் வியாபித்ததிற் செய்யக்கூடாது. செய்தால் கர்மம் கெட்டுப்போம். சௌரமானம் செய்யத்தக்கது; சாந்திரமானத்திற் செய்யக்கூடாது."

ஆதலின் நிகழும் மன்மத ஆண்டில் கந்தர்சட்டி ஐப்பசி மாதம் 4உ வெள்ளிக்கிழமைதான். கார்த்திகை மாதம் செய்வது ஆகம விரோதம் என்பது நிலைபெறுகின்றமை காண்க.

அலர்சுமந்து ஒழிக!

[வித்துவான் திரு. செந்துறைமுத்து]

கடைக்கண் நோக்கில்—கண் பிறழா நேர் முகப் பார்வையில்—இதழோரப் புன்னகைத் தோற்றத்தில்—இரு உள்ளமும் ஒன்றுபடும் செயலில் எழுகின்றது அன்பு எனும் மலர். ஓர் வண்ணப் பூங்காவின் கண்ணோ அல்லது தருக்கள் நிறைவுற்ற சாலையிலோ தலைவன் தன் உள்ளத்தைக் கவரும் தலைவியைக் காணுகின்றான். காணும்போது அத் தலைவனின் உள்ளத்தில் ஏதோ புதிய உணர்வு எழும்புகின்றது. தன் அன்பைத் தன் கண்களின் வாயிலாக வெளிப்படுத்த முனைகின்றான். அத் தலைமகனைக் கண்ணுற்ற தலைமகளும் அவனுடைய கண்களில் வெளிப்படும் அன்பை அறிய முற்படுகின்றாள். அறிந்து அவளுடைய கண்களும் அவளன்பை வெளிப்படுத்தி நிற்கின்றது. எங்கோ இருந்து வந்து எதிர்ப்பட்ட இருவருக்குமிடையில் அன்பு தோன்றிவிடுகின்றது. நாளுக்கு நாள் தலைமக்களிடத்தில் களவு முறையிலேயே பிறைமதி போன்று அன்பு பெருகி விடுகின்றது.

களவு முறையில் இருந்து வரும் இத்தலைமக்களின் அன்பு மெல்ல, மெல்ல ஊரறியத் தலைப்பட்டது இருவரிடத்திலும் களவு முறையில் பூத்த அன்பு மலரை, ஊரும் உலகும் அறியும்படி உடனுக்குடன் பணியாற்றுவது அலர் என்பது. ஊரில் அலர் பரவாவிட்டால் இவர்களுடைய உற்றாரும், பெற்றோரும் எங்ஙனம் இவர்கள் அன்பை அறிய இயலும்? இத் தலைமக்களுக்குத்தான் இல்லத்தில் ஏது கடிந்துரை? ஊரில் ஏது இழிவுரை? எனவே, அலர் என்பதுதான் அவையனைத்தையும் தோற்றுவிக்கின்றது. தலைமகன் தலைமகள் இருவரிடத்திலும் அன்பு தோன்றும் பொழுதே ஊரில் அலரும் தோன்ற ஏதுவா

நாள்தொறும் பொழுது போக்கிற்காக மக்களில் பலரைப் பற்றிப் பல்வகையாகப் புகழ்ந்தும் இகழ்ந்தும் உரையாடுபவர்களைக் காண்கின்றோம். உள்ளதும் இல்லதும் பேசி ஊர்ப் பொது இடங்களில் உறங்கி விழிப்பவர்களையும் காண்கின்றோம். இவர்களிடத்தில்தான் அவ்வலர் என்பது முதன் முதல் அவர்களுடைய அன்பை வெளிப்படுத்துகின்றது. அதையறிந்த இவர்கட்கு, அதை இழித்துப் பேசுவதிலும், பலரிடத்தில் உரைப்பதிலும் பயிற்சியும் பழக்கமும் உண்டு. அங்ஙனம் செய்வதில் அவர்கட்குத் தனி இன்பமும் உண்டு. இவ்வூர் மக்கட்கு இன்பமாக இருப்பினும் அத் தலை மக்களுக்கு அலர் பகையாக அமைகின்றது.

இவ் அலர்தான் அன்புப் பாதையில் செல்பவர்களுக்கு முதலாவது துன்பநிலையாகும். பரந்த நீலவானில் முழுமதி மிதந்து கொண்டிருக்கின்றது. அதற்கு எவ்விதத் துன்பமும் இல்லை என்று கூறலாம்; எங்கோ ஒரு மூலையில் எழுந்த கருமேகம் வந்து பரவி அம் முழு நிலவையே மறைத்துவிடுகின்றது. அதே போன்றுதான், தலைமக்களின் உள்ளமாகிய வானில் மிதக்கும் அன்பு நிலவை அலராகிய மேகம் மறைக்க முன் வந்துவிடுகின்றது. இவ் வன்பர்களுடைய களவுச் செயல் எவ்விதத்தும் அலருக்குத் தென்படாமல் இருப்பதில்லை. அலரின் கண்கள் அவ்வளவு கூர்மை வாய்ந்தது என்று கூறலாம். இரு இளைஞர் எங்காவது மறைவாகக் கூடினாலோ, கூடி உலாவினாலோ, பேசினாலோ, பேசி மகிழ்ந்தாலோ அதை அவ்வப்போது அறிந்து அலர் ஊருக்கு உணர்த்துகின்றது. இளைஞர்களின் களவுநட்பை ஊரறிந்த பின்னர்த்தான் இருவரும மீண்டும் கூட இயலாநிலை ஏற்படுகின்றது. கூட இயலாது தனித்திருந்து வாடும் தன்மைக்கு பிரிவுத் துன்பம் என்று நுவலப்படும். இப் பிரிவுத் துன்பம் மிகுதியாக இருக்கும்பொழுது அவர்களுக்குப் பெற்றோர்களால் ஏற்படும் துன்பங்களும் எல்லையற்றதாகும். இத் துன்பநிலைக்கோர் எடுத்துக்காட்டு ஈண்டு விளக்கப் புகுவது.

செந்தமிழ்ச் செல்வமான எட்டுத்தொகைநூல்களுள் ஒன்றான நற்றிணையில் உலோச்சனார் என்ற புலவர்பெருமான் களவு முறையில் நட்புக்கொண்டவர்களின் நிலையையும், அந் நட்பைக் குறித்து ஊரறிந்த அலரையும், ஊர்மக்கள் அலர் தூற்றும் முறைமையையும், அதனால் தலைமகள் அடைந்த இன்னலையும் அழகுறக் காட்டுகின்றார்.

நெய்தல் நிலத்தைச் சார்ந்த கடற்கரை—அதையடுத்த அழகான ஒரு சிற்றூர்—அங்கு எழில்மிக்க மின்னற்கொடியாள் ஏற்றமுடன் வளர்கின்றாள். கடலலைகள் அவளுடைய கண்களின் புருவம்போல் வளைந்தலைக்கும் கடற்கரை. முத்துக்களைப் போன்ற கழிப் பரப்பு. அதனருகில் ஓர் எழில்மிக்க பூங்கா. பூங்காவினருகில் நெடுஞ்சாலையும் உள்ளது. மின்னற்கொடியாள் அச் சோலையுள் மலர் பறித்துச் சில ஆடல்கள் நிகழ்த்தினாள். அவளுடைய நற்றாயும் செவிலித் தாயும் மிகவும் செல்வமாகப் பொன்னினும் போற்றி வளர்த்தனர். அந் நங்கையும் எவ்வித இன்னலும் கவலையுமின்றிக் கடலலைகள் தேடிவந்து கொடுக்கும் வெண் சங்குகளையும், செம் பவழங்களையும் சேர்த்துவைத்து விளையாடினாள். சில தருணம் தம் தோழிமார்களுடன்கூடி கண் பொத்தியும், கழங்கு கொண்டும் ஆடினாள்.

நாளுக்கு நாள் வளர்ச்சியுறும் அந் நங்கை விளையாடுவ தையே தன் தொழிலாகக் கொண்டுவிட்டாள். அங்ஙனம் விளை யாடி வரும் நாட்கள் பல கழிந்தன. சிறு நங்கையும் பார்ப்போர் உள்ளத்தைக் கவரும் பருவப்பெண்ணாக மாறினாள். செந்தமிழ் இனிமையைப் போன்று இன்பம் பயக்கும் சேல்விழி மங்கை யானாள். அவள் முகத்தில் இளமையழகு பெருக்கெடுத்தது. அவள் உடலெழிலும் உயிரோவியமாக ஒளி வீசியது. அவள் கன்னத்தில் செம்மையும், கண்ணில் வெண்மையும் கருக்கொண் டிருந்தது.

இவ் வெழில் மிக்க நங்கை ஒரு நாள் மணம் கமழும் தாழை மடல்கள் நிறைந்த பொழிலில், வண்ண மலர்க் கொத்துக்களைக் கையில் ஏந்திய வண்ணம் புன்னைமர நிழலில் பொலிவுடன் நின் றிருந்தாள்—விரைந்து செல்லும் புரவிமிசை வன்மைமிக்க ஓர் கட்டழகன்—எங்கோ செல்ல வேண்டியவன் நெறிதவறிப் பூங் காவை யடுத்த அச் சாலையில் வந்தான். நெறிபுரியாது நின்று சிறிது சிந்தித்து நாலு பக்கமும் நோக்கினான். பூங்காவையும் அதன் வனப்பையும், அதனிடைப் புன்னைமரநிழலில் அழகு மிக்க பெண்ணுருவம் நிற்பதையும் நோக்கினான். என்ன நினைத்தானோ, தன் புரவியைத் தட்டிச் சோலையினுள்ளே சென் றான். செல்லும் பொழுதே புன்னைமர நிழலில் வண்ணமலர்க் கொத்துகளைத் தாங்கி நிற்கும் பெண்ணுருவப் பூங்கொடியோ, என எண்ணி வியப்புற்றான். புன்னை மரத்தருகில்போய் நின்றான் மெல்ல. புரவி வரும் ஒலியைக் கேட்ட அப் பெண் தன் முகத் தைத் திருப்பினாள். கட்டழகன் முகத்தைக் கண்டு நாணிக் கவிழ்ந்து தன் முகத்தைப் பின் வாங்கினாள் யாதும் பேச இய லாது. சென்று நின்ற கட்டழகன் தான் செல்ல வேண்டிய 'யைக்கூறி 'யாது புகலுவாயாக' என மெல்லவே வினவினான்.

பவும் நோக்கினாள்; ஆயின் யாதொரு மாற்றமுமின்று. அவனும் தான் கேட்டதை மறந்து அவளை நோக்கிய வண்ணம் நின்றான். சிறிது நேரம் சென்ற பின்னர் அவள் மெல்லிய குரலில் 'யாது வினவினீர்' என விளம்பினாள். அவனுக்கு யாதுரைப்பது என்று புரியாது ஒரு புதுமலர்ச்சியுடன் அவளை நோக்கியவண்ணம் காணப்பட்டான். சேய்மையில் நின்றிருந்த தோழி, இவற்றைக் கண்ணுற்றுத் தலைவியை அச்சத்துடன
அழைத்தாள். தலைவியும் ஒன்றும் விளங்காவகையில் எதுவும் உரையின்றி உடனுறை தோழியிடம் சென்றுவிட்டாள். தோழி தலைவியை அழைத்துக் கொண்டு இல்லம் ஏகினாள்.

அப் பருவ நங்கையின்மீது அவன் அன்பு கொண்டு விட்டான். அவளைப் பார்க்க வேண்டும், பேசவேண்டும் என்ற எண்ணம் மிகுதியாக எழுந்தது. ஆகையால் மறுநாளும் அப்பக்கம் வரலானன். பருவப் பெண்ணும் வழக்கம்போல் பூங்காவில் விளையாட வீற்றிருந்தாள். முன் நாளைப் போன்றே இன்றும் நோக்கினர். நோக்கில் உள்ளத்தை வெளிப்படுத்தினர். புன்னகை புரிந்தனர். சில உரைகள் பேசிமகிழ்ந்தனர். முன்னாள் போன்றே இன்றும் தோழி கூப்பிட்டாள். தலைவி செல்ல மனமில்லாது மீண்டும் மீண்டும் திரும்பிப் பார்த்த வண்ணம் சென்றடைந்தாள். இங்ஙனமே மறுநாளும் கூடினர்; பேசினர். அன்பு அரும்பை அழகாக மலரச் செய்தனர். அன்றும் தோழி அழைத்தாள். தலைவிக்கு எழுந்து செல்ல எண்ணமே இல்லை. தோழி வலிய வந்து அழைத்துச் சென்றாள். இங்ஙனம் மறைவாகக் கூடிய நாட்கள் கடலலைபோல் கணக்கற்று உருண்டோடின. அவ்விருவருடைய உள்ளத்திலும் அன்பு எனும் மொட்டு நன்றாகக் கட்டவிழ்ந்து மலர்ந்து வண்டிற்கு மதுவளிக்கும் மலரைப்போல்

மகிழ்வளித்த அக் கோலத்துடன் அவர்களுடைய நட்பு நின்றுவிடவில்லை. பூங்காவில் புன்னைமர நிழலில் கூடிப் பேசுவதைக் கண்ட அலர், தன் தொழிலை நிகழ்த்தத் துவங்கிவிட்டது. இவர்களுடைய கள்ள நட்பைக் குறித்து ஊர் முழுவதும் அலர் தோன்றியது. வாழ்நாளை வீணுக்குகின்றோம் என்பதை உணராது ஊரில் பலரையும் பலவகையாகப் பேசிக் காலங் கழிக்கும் ஆண்களும் பெண்களும் இவர்களுடைய நட்பை இழித்துரைத்தனர். ஊரில் யாண்டுச் சென்றிடினும் இவர்களைப்பற்றிய இழிவுரையே; இது அல்லாத இடமேயில்லை. அத் தலைவி இல்லத்தை விட்டு வெளியே புறப்பட்டால் போதும், பெண்ணினம் முழுவதும் அவளைப் பல்வகைக் கருத்துடன் பார்த்தலையும், ஒவ்வாத முறைமையில் நிந்தித்துப் பேசுதலையும் நிகழ்த்தாமல் இருப்ப

ஊரவா இழித்துரைப்பதைக் கண்ட அத் தலைவி வருந்தினள். மன வருத்தம் தாழாது புலம்பினள். அங்ஙனம் கொடுந்துன்பமுற்ற பொழுதெல்லாம் தோழிமார்கள் அவளை ஆறுதல் றித் தேற்றுவித்தனர். ஊர் முழுவதும் அலரும் மிகுதியா

ஒரு நாள் அலர் தூற்றுவோர் சிலரும் பலருமாகக் கூடினர்; வழியில் வந்துகொண்டிருந்த தலைவியைக் கண்டனர். கண்டவுடன் தம் முகத்தைத் திருப்பிக்கொண்டு கண்ணின் கடைப் பார்வையைச் செலுத்தினர்; அவரவரும் தம்முடைய

உச்சியில் சுட்டு விரலைச் சேர்த்தனர். மூக்கின் உச்சியில் விரல் வைத்து வியப்புடனும் அச்சத்துடனும் 'நற்குடியில் பிறந்தவள், நற்குணம் நிறைந்தவள் இவள் இங்ஙனம் கள்ள நட்புக்கொண்டு ஒழுகி வருகின்றாளே! இதுவரையில் ஒழுங்காக இருந்தவள் இப்பொழுது குறையுறுகின்றாளே!' என்று பல்விதமாக உரையாடினர். இவ்வுரையாடலைச் செவியுற்ற வண்ணம் செவியுறாதவள் போல் கலக்கத்துடன் சென்றாள்.

ஊரும் உலகும் அறிந்து உணர்த்தும் இழிவுரையைத் தலைவியின் உற்றாரும் பெற்றோரும் உணர்ந்தனர். தம்முடைய பண்பட்ட குடியையும், குலத்தையும், பெண்ணையும் இங்ஙனம் இழித்துரைக்கின்றனரே என்று ஏக்கம் கொண்டனர். இதற்குக் காரணம் தம் பெண்தான் என்பதை யறிந்து அவள்மீது அளவற்ற சினம் கொண்டனர். அங்ஙனம் மனக்கவலையுடன் மகள்மீது சினங்கொண்ட பெற்றோர்களில் தலைசிறந்தவள் அவளைப் பத்துத் திங்கள் சுமந்தெடுத்துப் பாலூட்டித் தாலாட்டி விளையாட விட்ட தாய் தான். தலைவியினுடைய தந்தையைக் காட்டிலும் தாய்க்குத் தான் பெரும் துன்பத்தைப் பயந்து விட்டது அலர். தாய் தன்னுடைய அருமைப் பெண்ணின் வாழ்வு என்னவாகுமோ என ஏக்கமுற்றாள். எனவே, தான் அடக்க இயலாச் சினமுற்றாள். சினத்தை அடக்க முடியா நேரத்தில் அத் தாய் ஒரு சிறு கோலை எடுத்துத் தன் மகளை அடிக்க முற்படுவதுபோல் அடித்தாள். பல்வகையிலும் துன்புறுத்தினாள். இனிப் பூங்காவிற்குப் போதல் கூடாது. வீட்டைவிட்டு வெளியில் செல்லக்கூடாது என்று கடுமொழி பேசினாள். மகட்குக் கட்டளை யிட்டாள். செல்வமாக வளர்த்தெடுத்த பெண்ணைச் சிறுகோல் கொண்டு அதட்டும் அளவிற்கு ஊரில் அலர் பரவி விட்டது. இப்பொழுது தலைவியின் துன்பத்தை எல்லையிட்டுரைத்தலும் இயலுமோ? தலைவிக்குத் தாயின் அதட்டுதலும், தலைவனைக் கூடாதிருக்கும் தனிமையும் தான் அலர் அளித்த பரிசு.

தலைவி தலைவனைக் காண இயலாமல் கலங்கினாள். ஊரார் தூற்றும் அலர்மொழியைக் கேட்டுப் புலம்பினாள். செல்வமாக வளர்த்த அவள் தாய் சிறுகோல் கொண்டு அடிக்க வந்தது அவள் உள்ளத்தை வருத்தியது. கண்கள் சிவந்தன. கன்னத்தில் நீர் வடிந்தது. உடல் வாடத் துவங்கியது, உணவும் அற்றது. உறக்கமும் இல்லை. இவைதான் அவளுடைய அப்போதைய வாழ்க்கைநிலை. இந்நிலையிலிருந்துதான் தன் அன்பரையும் அன்பையும் எண்ணி எண்ணி விம்மினாள்; ஆனால் இந்நிலையை அவன் அறியான்; ஆனால் அவனும் அவளைக் காணாது அல்லலுற்று வாழ்விழந்தவன் போன்று வாட்டமுற்றுத் திரிந்தான். தலைவி

யைக் கூடிய இடத்திற்கு வந்து இன்றாகிலும் வரமாட்டாளா, என்ற எண்ணத்துடன் காத்திருந்தான். தலைவி இவன் எண்ணப் படி வர இயலுமோ, வரவில்லை இறுதியாக மனக் குழப்பத் துடன் பித்தேறியவன்போல் தலைவியின் ஊரினுள் புகுந்து, தலைவியைத் தேடி அவள் வீட்டுப் பக்கம் வந்தான். அப்பொழுது தலைவியும் தோழியும் இல்லத்தின் பின்புறமாக உள்ள தோட் டத்தில் அமர்ந்திருந்தனர்; ஆகையால் தலைவன் வந்துள்ளதைத் தோழி அறியலானாள். அறிந்து சிறிது சிந்தித்தாள் தலைவியின் நிலையை எங்ஙனம் அவர்க்கு உணர்த்துவது என்று. தலைவனும் சோர்வு மிகுதியால் உடல் வன்மை யிழந்து அத் தோட்டத்தரு கில் அமர்ந்தான். மேலும் அதை அறிந்த தோழி மிகவும் நன்மை யாக அமைந்து விட்டது என்று எண்ணி மகிழ்ந்து உடனே கீழ்க்கண்டவாறு தலைவியை விளித்து உரையாடுகின்றாள்.

"தோழி! நீ வாழ்க! நம் தெருவிலுள்ள பெண்கள் சில ரும் பலரும் ஊரில் பல இடங்களிலும் கூடி நின்று, கடைக்கண் பார்வையால் சுட்டிக் காட்டி, வியப்புற்றவர்கள்போல் தத்தம் மூக்கின் உச்சியில் சுட்டுவிரலை வைத்துப் பழிச்சொல் கூறித் தூற்றினார்கள். அப் பழிமொழிகளைக் கேட்ட உன் அன்னை சினம் கொண்டு சிறுகோலை எடுத்துச் சுழலும்படி வீசி அடிக்க வந்து உன்னைக் கடிந்துரைத்தாள். இவற்றைக் கண்டு நான் மிக வும் துன்பமுற்றேன். ஆகையால் இத் துன்பமெல்லாம் தவிரும் படி, கடற்கரை யருகிலுள்ள சோலையில் மலரும் புது மலர்களைத் தீண்டிப் பூமணம் கமழும், நல்ல நிறம் பொருந்திய பிடரி மயிரை யுடைய விரைந்து செல்லும்படியான குதிரையை உடைய தலைவ னோடு நீ செல்வதற்கு நான் உடன்பாடுடையேன். நீ எழுவாயாக, அங்ஙனம் நீ சென்றொழிந்தால் அப்பொழுது இப் பொல்லாத ஊர் என்ன செய்யும்? அலர் தூற்றித்தூற்றி அழிந்துவிடும்," என்று கூறினாள். தலைவனும் இதைச் செவிமடுத்திருந்தான். தலைவன் தலைவியைக் கொள்ளுதற்குரிய முறையில் மணந்து இன்புற்றான் என்பர்.

> சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
> மூக்கி னுச்சிச் சுட்டு விரல் சேர்த்தி
> மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச்
> சிறுகோல் வலந்தனள் அன்னை யலைப்ப
> அலந்தனென் வாழி தோழி கானற்
> புதுமலர் தீண்டிய பூனுறு குரூஉச்சுவற்
> கடுமான் பரிய கதழ்பரி கடைஇ
> நெடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
> செலவு அயர்ந்திசினால் யானே
> அலர்சுமந் தொழிகஇவ் வழுங்க லூரே. (நற்றிணை: கசக)

இலக்கியத்தில் இன்பச்சுவை

[திரு. தி. வைரமுத்து]

இலக்கியம் பண்டைத்தமிழர் வாழ்வின் எதிர்த்தோற்றம். அகப்பொருள்பற்றிய நூல்களே இலக்கியத்தில் பெரும்பாலும் திகழ்வதைக் காணலாம். சிறுபான்மையே புறப்பொருள்பற்றி வருவன. அவற்றுள், முத்தொள்ளாயிரம் அகத்துறையை விளக்கும் நூல் என்னலாம். சேர, சோழ, பாண்டிய அரசர் களைப் புகழும் மூன்று தொள்ளாயிரப் பாடல்களையுடையது இந்நூல். 2,700 பாடல்களில் 109 பாடல்களே இன்று கிடைக் கப்பெற்றுள்ளன. மற்றவை காலக் கடலில் அமிழ்ந்துவிட்ட தெனத் தெரிகிறது. இதன் ஆசிரியர் பெயர் காணப்படவில்லை. ஆனால், அவர் 2,000 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்துவந்ததாகச் சில சான்றுகள் வாயிலாக அறியக்கிடக்கிறது. இனி, சற்று நூலுக்குள் நுழைந்து தமிழ்நலங்கண்டு அதன் பயனைப் பெறுவோமாக.

ஒருத்தி ஒருவனை அவன் அறியாதபடி அகத்தின்கண் நிகழும் அன்பு நெகிழ்ச்சியால் விரும்புகின்றாள். இதனையே கைக்கிளை என்பர். இத்துறையைத் தழுவியே இந்நூலில் பல பாடல்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

களம்புகுந்த காவலன் வாகையுடன் திரும்பும்நாள் எந் நாளோ? அவனுக்கு என்ன நேர்ந்ததோ? என அவனுடைய குடிகள் ஏங்கிய வண்ணம் எதிர்பார்க்கின்ற பொழுதில் ஊரவர் மனம் மகிழ வீதிவழியே தன் மால்களிற்றின்மீதேறி வீர முழக்கமுடன் உலா வருகின்றான் பாண்டியன். மங்கல முழக் கங்கேட்ட மாத்திரத்தில் மனைகள்தொறும் மாதர்கள் விரைந் தோடி வந்து மாறனைப் பார்க்கின்றனர். வெஞ்சமர் வென்ற வீரவழுதியை வாழ்த்திக் கைகுவித்துச் சிரந்தாழ்த்தி நின்றனர். அப்பொழுது காண்கின்றாள் ஓர் காரிகை.

அக் காரிகை வலம் வரும் வழுதியின் எழில்நலம் காண் கின்றாள். வீரபாண்டியனைத் தாங்கிவரும் வேழம், அப்பாவையின் வீட்டைக் கடந்து செல்கிறது. அவனை விரும்பிய அவள் உள் ளம் மாறனைப் பின்தொடர்ந்து நாடிச்செல்கின்றது. மன்ன னிடம் மனத்தைப்போக்கிய மங்கை தன் மனத்தை மீட்க வகை யறியாது சித்திரப்பாவையென்ன அசைவற்று நிற்கின்றாள். இதனையுணர்ந்த அன்னை, தலைவனது காட்சியைக் காணவிடாமல்

இல்லினுள் இருத்தி வெளிக்கதவினை அடைத்துக் கடிகாவல் புரியலானாள். வழி யாதும் புலப்படாத அவ்வனிதை தன் அன்னையின்பால் அதுபோழ்து உற்ற வருத்தத்தை எழில்பட வார்த்தைகளில் வடித்தெடுப்பதை உன்னுவோமாக.

'வாட்கணாய்! அரும்பவிழ்ந்த மலர்மாலையினையும், மாற்றலரைப் புறங்கண்டு அவர்தம் மண்ணைக் கைக்கொண்ட தானைகளையும், மறங்கனல்கின்ற வேல்தாங்கிய மாறனைப் பாராதே என்று நம் அன்னை சொல்லுகின்றனளே. அவள் என் இளமைப் பருவ நிலையைச் சற்றும் அறிதற்கில்லையே! நம்மைப் பயந்த அவள் மட்டிலும் இளமைப் பருவம் எய்தாது பிறக்கும்போதே மூப்புத் தன்மை பெற்றவளாய்ப் பிறந்தனளோ?' என்று காமமிக்க கழிபடர் கிளவியில் தலைவி தோழியைப் பார்த்துக் கூறுகின்றாள்.

"வளையவாய் நீண்டதோள் வாட்கணாய்! அன்னை
இளையளாய் மூத்திலள் கொல்லோ—தளையவிழ்தார்
மண்கொண்ட தானை மறங்கனல்வேல் மாறனைக்
கண்கொண்டு நோக்கலென் பாள்"

பாண்டிமன்னன்பால் மனம்போக்கிய பாவை தன் செவிலித்தாயர்களை நோக்கிச் சொல்வது அதனினும் நயம்பட அரிய சீரிய முறையில் புலவன்தன் கற்பனைத் திறத்தைக் கையாண்டிருப்பதைப் பயில்தொறும் பயில்தொறும் விளக்கும் இந்நூல் நயம் என்னலாம். அதன் பயனை ஈண்டுப் பெறுவோமாக.

'செவிலித்தாயரே! என் கைவளைகளைக் கவர்ந்து செல்கின்ற வீரனும் வாளாயுதத்தையுடையவனுமான வழுதி, அற்றைநாள் இரவு யானைமீதேறி வீதிவழிவந்து என் கண்ணுக்குள்ளே புகுந்துவிட்டனன்; கையை நீக்கிக் கண்களைத் திறப்பேனாயின் அவன் தப்பியோடிவிடுவான்; ஆகவே, என் உயிரைக் களைய நேரிடினும் என் கண்ணைத் திறந்துகாட்டேன்' என்கின்றாள் தலைவி.

"தளையவிழும் பூங்கோதைத் தாயரே ஆவி
களையினுமென் கைதிறந்து காட்டேன்—வளைகொடு
வன்கண்ணன் வாள்மாறன் மால்யானை தன்னுடன்வந்
தென்கண் புகுந்தா னிரா."

இன்னும் இதுபோன்ற சுவையான பகுதிகள் இந்நூலில் செறிந்திலங்குகின்றன. இவண் எடுத்துத்தரப்பட்டது இரண்டு பாடல்களே. இவை மாத்திரமல்லாமல் சோழ, சேரர்களைப் புகழ்ந்து பாடப்படும் பாடல்களிலும் இன்னனபோன்ற நற்சுவையூட்டும் பாடல்கள் பல உள்ளன.

அணுவுலகச் சிற்பி ஆல்பெர்ட் ஈன்ஸ்டீன்

[திரு. பி. எல். சாமி., பி. எஸ். ஸி.]

இமயத்தின் கொடுமுடியை எட்டிப் பிடித்தனர், தேன்சிங்கும், இலாரியும்; உள்ள, உடலுரத்தால். அறிவின் கொடுமுடியை எட்டிப்பிடித்தார் ஆல்பர்ட் ஈன்ஸ்டீன்; தமது அறிவுத் திறத்தால். அவர் அண்மையில் இறந்தார். அளவை அலுவலகத்தில் (Patent office) வேலை செய்த ஒருவர் தமது பேனாவினால் அறிவியல் உலகில் ஒரு புரட்சி செய்தார். அவர்தான் சுவிஸ் நாட்டில் பிறந்த ஆல்பெர்ட் ஈன்ஸ்டீன்.

குறுகத் தறித்த குறியீடு ஒன்று. அது அணுவைத் துளைத்தது! 'எழு' கடலைப் புரட்டிற்று! அது எது? ஈன்ஸ்டீன் கண்ட ஒரு வரிச் சூத்திரம் $E=MC^2$ இந்தச் சூத்திரம் அப்போது அறிவியல் உலகில் ஈன்ஸ்டீன் போட்ட அணுக்குண்டு. இதுவே ஐம்பது ஆண்டுக்குள் உண்மையான அணுக்குண்டைக் காண அடிப்படையாயிற்று. அதுவே, அணுவில் அடைந்துள்ள அளக்கமுடியாச் சத்தியை வெளியிடும் திறவுகோல்.

அவர் கண்டுபிடித்த சார்புக்கொள்கை (Relativity theory) மிகவும் சிக்கலானது என்பர். உலகில் அதைப் புரிந்துள்ளவர் பத்தே பேரென்றார் என் கல்லூரி அறிவியல் ஆசிரியர். 20 ஆண்டுகளுக்குமுன் அக்கொள்கையைத் தெரியாதவர், தெரிந்தவர்கள் போல் பேசினர். தெரிந்தவர் தெரிந்தவரை 'அவர் புரிந்தது பொய், நான் தெளிந்ததுதான் மெய்,' என்று பூசலிட்டுக் கொண்டனர். மின்காந்தம், புவிஈர்ப்பு முதலியவைகளெல்லாம் ஒரே அடிப்படையில் அடங்கும்படி அவர் வெளியிட்ட 'ஒன்றுபட்ட சார்புக் கொள்கை' அவரது அறிவின் கொடுமுடியெனலாம்.

'பொருள் (Matter) அழிவதில்லை. சக்தி (Energy) அழிவதில்லை' என்ற கொள்கை வெகுகாலமாக அறிவியல் உலகில் நிலவிவந்தது. அதை ஒரே வரியில் ஈன்ஸ்டீன் அழித்தார். 'பொருள் அழியும். பொருள் அழியும்போது அளவிலாத சக்தி பிறக்கும்' என்றார் ஈன்ஸ்டீன். நடைமுறையில் பின்னர் அது பல அறிஞர்களால் மெய்ப்பிக்கப்பட்டது. நீளம், அகலம், உயரம் என்று அளந்துவந்தது உலகம். கூடக் காலத்தையும் சேர்த்து அளக்கவேண்டும் என்பதைக் காட்டினார். எங்குமில்லாத 'ஈதரை' ஒழித்தார். சிக்கலான சார்புக் கொள்கையில் காலத்தை அவர் நகைச்சுவையுடன் எளிதாக விளக்கியுள்ளார். கூடிய காதலர்க்குக்

காலம் 'காரெனக்கடிது' பறந்து செல்கிறது. 'வெண்ணிலா ஊரில் பிறந்தாரைப்போல வரும் வெண்ணிலாவே! இந்த வேகம் உனக்காகாதே' என்று சொல்லச் செய்கிறது. ஆனால், பிரிந்த காதலர்க்குக் காலம் நகரமாட்டேனென்கிறது; எருமையாகிறது; அச்சுமுறிந்த தேராகிறது; விகடராமன் குதிரைபோல் நகரா மல் 'இடக்கு'ச் செய்கிறது. இது ஏதோ ஒரு முறையில் சார்புக் கொள்கையில் காலத்தைக் குறிப்பாக உணர்த்தும். ஆனால், புரி யும்படி அவ்வளவு எளிதல்ல அது.

எழுதுகோல்முனையில் அவர்செய்த மாபெரும் புரட்சியைப் புரியமுடியாத சிலர் புரட்டு என்று கருதினர், குருட்டுக்குருவி மதியால். அறிவின் கொடுமுடியில் ஏறி அவர்கண்ட நிறை மதியைச் சிலர் குறைமதியென்றனர் தங்கள் பிள்ளைப் பிறைமதி யால். நடைமுறையில் காட்டமுடியாத கொள்கை என்று எண்ணினர். ஆனால், ஐம்பதே ஆண்டுகளில் அவர் கொள்கை பெரிதினும் பெரிய அண்டபேரண்டத்திலும் புகுந்து சிறிதினும் சிறிய அணுவையும் பிளந்தது. அண்டத்தில் இருந்த 'மெர்குரி' என்ற கோளின் (Planet) ஒழுங்கற்ற போக்கை விளக்கியது. கோள்களின் போக்கில் இருந்த சில சிக்கல்களை அவர் கொள்கை விளக்கியது. பிளக்கமுடியாது என்று ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கருதிவந்த அணுவைப் பிளந்து மனிதன் கையில் மாபெரும் சக்தியைக் கொடுத்தது.

அறிவில் முன்னோடிகளான அறிஞர்கள் நாட்டில் நாடோடி களாகின்றனர். ஈன்ஸ்டீன் இருந்த நாட்டைவிட்டு இறுதியில் அமெரிக்காவில் அடைக்கலம் புகுந்தார். பிரின்ஸ்டன் பல்கலைக் கழகம் வரவேற்றது. கேட்டதற்குமேல் நான்கு மடங்கு ஊதி யம தந்து கணக்குப் பேராசிரியராக்கிற்று. அவருடைய மேதை, குன்றின்மேலிட்ட விளக்காயிற்று. இட்லரின் இனவெறிச் செருக் கால் செர்மனி மாபெரும் மேதையை இழந்தது. செர்மனியின் இழப்பு, அமெரிக்காவின் சிறப்பு ஆயிற்று. கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பன்றோ? செர்மானியர் அணுக்குண்டு ஆராய்ச்சியில் முனைந்துள்ளதை அறிந்த ஈன்ஸ்டீன் அமெரிக்கக் குடியரசுத் தலைவரை அணுக்குண்டு ஆராய்ச்சியில் ஈடுபடுமாறு தூண்டினார். இட்லர் கையில் அமெரிக்கருக்குமுன் அணுக்குண்டு கிடைத்திருக்குமானால் குரங்கு கையில் கொள்ளி ஆகியிருக்கும். அதை உன்னியே ஈன்ஸ்டீன் அமெரிக்காவில் அணு ஆராய்ச் சிக்கு அடிகோலினார். ஆனால், பின்னர் அணுக்குண்டு அழிவுக் காகப் பயன்படுத்தப்படுவதைக்கண்டு மனம் வெதும்பினார். மனித மனம் பண்பட வேண்டுமென்றார். அணுவை ஆக்கத் திற்குப் பயன்படுத்தவேண்டும் என்று வற்புறுத்தினார். உலக

அமைதி, தனிமனிதன் உரிமை ஆகியவற்றிற்கு இறுதிக் காலத்தில் பாடுபட்டார். அதனால் நேருவுடன் நெருங்கிய கருத்தொற்றுமை உடையவரானார். அறிவுலக மேதையாயினும், கலையில் மிகுந்த ஈடுபாடுள்ளவர். உள்ளத்தைக் கனிவிக்கும் இசையில் ஈடுபாடுடையவர். பெர்னாட்ஷா அவருடைய அறிவியல் அறிவைவிட இசையறிவைப் போற்றினார். தமது கடைசிக் காலத்தில் அமெரிக்காவில் இருந்த அறிவுக் கட்டுப்பாட்டை எதிர்த்தார். உரிமைக்காக வாதாடினார். இக்காலத்தில் அறிஞனாயிருப்பதைவிட ஏழைத் தொழிலாளியாக இருப்பது நலம் என்றார். அத்துணை மனிதப் பண்பாடுடையவர் ஈன்ஸ்டீன்.

உலகில் பிறக்கும்போதே சிலர் சிறப்பாகப் பிறப்பார்கள். பணம், பதவி, சாதியின் காரணமாகச் சிறப்பு வரும். ஆனால், அவை உண்மைச் சிறப்பாகா. 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்பது வள்ளுவர் வாய்மொழி. ஆனால், இறக்கும்போது சிறப்பாக இறப்பது எல்லார்க்கும் கைகூடுவதில்லை. ஆபிரகாம் லிங்கன், அண்ணல் காந்தி ஆகியோருக்கு இறப்பே மிகச் சிறப்பைத் தந்தது. ஆனால், அது எண்ணிக் கருதிப் பெறுவதில்லை. இறந்ததிலும் சிறப்பைப் பெற்றார் ஈன்ஸ்டீன்.

> "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு"

என்பது குறள். என்பினும் சிறந்த தமது மூளையையும், மற்றும உடலின் சிறந்த பாகங்களையும் மருத்துவ ஆராய்ச்சிக்கு எழுதிவைத்திருந்தார். அப்படி ஈந்ததால் இறப்பினும் சிறப்புப் பெற்றார் ஆல்பெர்ட் ஈன்ஸ்டீன்.

உயர்திரு. ரா. பி. சேதுப்பிள்ளை திருவம்மானை

[செல்லூர்க்கிழார் திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

தண்ணார் தமிழின்பம் தந்தகொடைச் சேதுவுக்குக்
கண்ணார்பொன் னாடை கனித்தளித்தார் அம்மானை
கண்ணார்பொன் னாடை கனிந்தளித்தார் ஆமாயின்
திண்ணார்நல் அன்பின் திறனன்றோ அம்மானை
சீரார்சே துப்பிள்ளை செஞ்சொல்வளம் அம்மானை. (க)

ஐயா யிரம்வெண்பொன் அரசியலா ரும்அளித்தல்
செய்யாமற் செய்யும் சிறப்பன்றோ அம்மானை
செய்யாமற் செய்யும் சிறப்பதுவே ஆமாயின்
வையம் அளந்ததமிழ் மாண்பெதுவோ அம்மானை
செந்தமிழின் இன்பார் சேதுவைக்கேள் அம்மானை. (உ)

சென்னைமாகாணத் தமிழ்ச்சங்கம்

21-4-1955 ல் திருநெல்வேலியில் தண்டல்நாயகர் உயர்திரு. S. M. பாலகிருஷ்ண பிள்ளை, ஐ. ஏ. எஸ். அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்ற **ஆட்சிச் சொல்லாக்கக் கழகம்** (Administrative Terms Committee) **அறிக்கை.**

நமது சங்கம் 1934-இல் தோன்றியது; அன்றுதொட்டுக் கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபட்டு அதற்கென்றே நான்கு பெரிய மாநாடுகள் நடத்தி 1938-இல் "**கலைச் சொற்கள்**" என்ற நூலைச் சென்னை, திருவாங்கூர் ஆகிய பல்கலைக் கழகங்களின் பொருளுதவிகொண்டு வெளியிட்டது. சென்னை அரசாங்கம் அந்நூலைப் பாராட்டி, தமிழ்நாட்டிலுள்ள உயர்பள்ளிகளுக்கெல்லாம் அரசாங்கச் செலவில் ஒவ்வொருபடி அனுப்பி அச்சொற்களைத் தாராளமாக ஆசிரியர்கள் பயன்படுத்திப் பாடங்களைக் கற்பிக்க வேண்டும் என்றும் சுற்றுவோ அனுப்பியது. 1946-இலும் சென்னை அரசாங்கம் நமது சங்கம் குறிப்பிட்ட பெரியார்களைத் தமிழ்க் கலைச் சொல்லாக்கக் கழகத்திற் சேர்த்துக் கலைச் சொற்களை முடிவுசெய்து அச்சிட்டு வெளியிட்டுள்ளது. நம் சங்கப் பணிகளின் விளைவாகிய இவ்விரண்டு 'கலைச் சொற்களை'யும் அடிப்படையாகக் கொண்டுதான் இப்போது இலங்கை அரசாங்கம் கலைச் சொற்களை ஆக்கி வெளியிட்டு வருகிறது. நமது சங்கம் சென்னையில் ஆட்சிமொழி மாநாடு நடத்தி நமது நாட்டின் ஆட்சி தமிழிலேயேதான் நடைபெறவேண்டும் என்ற உண்மையை நிலைநாட்டி அதற்கு அடிப்படையான ஆட்சிக் கலைச் சொல்லாக்கத்திற்கு ஒரு கழகத்தையும் அமைத்திருக்கிருக்கிறது; அக் கழகத்தின் தொடக்கவிழாவே இப்போது இங்கே நடைபெறுகின்றது.

ஆட்சிக் கலைச் சொல்லாக்கக் கழகத்தின் தலைவர் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திருவாளர் **தா. கோமதிநாயகம் பிள்ளையவர்கள்** பி. ஏ., பி. எல். வேளாண்மை, வைத்தியம், காவல், பத்திரப்பதிவு, அஞ்சல், பொறித்துறை முதலிய பல துறைகளில் பல ஆண்டுகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களாக இருந்த பெரியார்கள் இக் கழகத்தில் உறுப்பினராக இருக்கிறார்கள்; கல்லூரித் தலைவர்கள், வழக்கறிஞர்கள் பலர் இருக்கிறார்கள். இக் கழகத்திற் சேர்ந்து பணிபுரிவதற்குச் சென்னை அரசாங்கம் இம்மாவட்டத்தின் கீழ்பாதிக் கல்வி அதிகாரி திரு. கி. வேங்கடசுப்பிரமணியம் எம். ஏ., பி. டி. அவர்களுக்கு அனுமதி ஆணை உதவியிருக்கின்றது.

நம் சங்க அமைச்சர் டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்களும் பேராசிரியர் ஆ. அருளப்பன் பி. ஏ., அவர்களும் தலைவர்களின் துணைகொண்டு சொற்களை ஆக்கி அவ்வப்போது இக் கழகத்தின் முன் வைத்து முடிவு செய்வார்கள். அச் சொற்கள் உடனே அச்சிடப் பெற்று இக் கழகத்தாருக்கும் இக் கழகத்தின் உறுப்பினராகச் சேர்ந்து பணியாற்ற இசைந்துள்ள, தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலுள்ள, பெரியாருக்கும் மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுக்கும், சென்னை அரசாங்கத்தை நடத்தும் அமைச்சர்களுக்கும் திருத்தங்கள் ஒரு குறித்த காலத்தில் அனுப்புமாறு விண்ணப்பத்துடன் அனுப்பப் பெறும்; செய்தித்தாள்களுக்கும் அவை அனுப்பப்பெற்று அவைகளின் ஆசிரியரிடமும் அவைகளைப் படிக்கும் பெரியார்களிடமும் திருத்தங்கள் கேட்கப்பெறும். திருத்தங்கள் வந்தவுடன் அவை ஒருமை

செய்யப்பெற்று ஆட்சிச் சொல்லாக்கக் கழகத்தார் முன் வைக்கப் பெற்று நன்றாக ஆராய்ந்து சொற்கள் முடிவு செய்யப்பெறும். பின் அவை அச்சிடப்பெற்று நூலாக வெளியிடப்பெறும்.

கலைச் சொற்களை ஆக்குவதில் நமது சங்கம் மேற்கொண்டுள்ள அடிப்படையான விதிகள் பின்வருவன :—

1. சொற்கள் சுருக்கமாகவும், தெளிவாகவும், பொருள்பொதிந்தனவாகவும் இருத்தல் வேண்டும்.

2. அவை தமிழோடு தமிழாய்க் கலக்கும் இயல்பினவாக இருத்தல்வேண்டும். இக் கொள்கைகளுக்கு முரணில்லாதிருந்தால் வேறு மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் வாங்கக் கூடாதென்றோ தமிழில் முன்னமேயே கலந்து இப்போது வழக்கிலுள்ள பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தக் கூடாதென்றோ திட்டமான விதி யொன்றும் கைக்கொள்ளப் பெறமாட்டாது. தெளிவான, குறுகிய, பொருள் செறிந்த சொற்கள்; தமிழோடு தமிழாய்க் கலந்து இயங்க வல்ல சொற்கள்; இவையே ஆக்கப்பெறும்.

அரசாங்கமும், அரசியற்றலைவர்களும், புலவர்களும் வேண்டும் துணைபுரிந்து எமது கருத்து நிறைவேறித் தமிழாட்சி நிலைபெறுமாறு செய்தருள யாவரையும் பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

(க) கட்டாய இந்தித்திணிப்புக்கு ஆச்சாரியார் கூற்று

இந்திமொழி தற்கால நிலையில் கட்டாயப்படுத்தி, அது வழங்காத மாநிலங்களில் வைக்கக்கூடாதென்றும், அதை முதலில் வளப்படுத்திய பின்னரே கட்டாயப்படுத்தி வைக்கவேண்டுமென்றும், தில்லிச் சட்ட அவையிலும் சவகர் போன்ற கற்றுத்தேறிய உறுப்பினர்களும் ஆங்கிலத்தில் சொல்வதுபோல் இந்தியில் விளக்கமாகச் சொல்ல இயல வில்லை யென்றும், அதற்குக் காரணம் இந்திமொழி நன்கு வளர்ச்சி யடையாததுதான் என்றுங்கூறி அதை வளர்ப்பதற்கு மறைமுகமாகக் கூறியுள்ளார். கருத்தும் தெளிவாக இல்லை. இந்தியிலும் தமிழ் எத்துணை அளவோ மேம்பாடுடையது. ஞாலமளந்ததனைத்துமளந்த தன்மையுடையது. அதை ஆட்சிமொழியாக்க ஆச்சாரியார் பாடுபட லாகாதா?

(உ) கட்டாய இந்திபற்றி டாக்டர் மதுரம் எம். பி. கூற்று

24-4-55-இல் நாசரேத்து நகரில் நிகழ்ந்த கிறித்துவர்கள் மாநாட்டில், அம் மாநாட்டைத் திறந்து வைத்த டாக்டர் மதுரம் அவர்கள் கூறியதாவது :

'தாய்மொழியில்கூட பயிற்சியில்லாத சட்ட அவை உறுப்பினர்கள் இருக்கும்போது பார்லிமெண்ட் தபால், கார்டு, கடிதங்களில் கூட இந்தியைக் கட்டாயமாகவும், வற்புறுத்தியும் புகுத்துவது கூடாத தாகும்' என்றார்.

குறிப்பு: இந்தி மொழியை மற்ற மொழியினரிடம் திணிப்பது அரசியலின் சூழ்ச்சியாகும் ஆதலால், நாம் தமிழ் மொழியை வளர்த்தலில் கண்ணுங்கருத்துமாக இருத்தல் வேண்டும். இந்திப் படையெடுப்பு தானாகவே நின்றுவிடும்.

(ங) அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டீன் மறைவு

செர்மனி நாட்டில் அல்ம் என்னும் ஊரில் 1879 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 17.ஆம் நாள் தோன்றிய ஐன்ஸ்டீன் 1955 ஆம் ஆண்டு ஏப்பிரல்திங்கள் 18-ஆம் நாள் தம் 76 ஆவது அகவையில் தம் உயிர் நீத்தார். இவர்தம் பிரிவு உலகுக்கே மிக வருத்தந் தருவதொன்றாகும். இவர் உயிர் அமைதிபெறுக. இவர், சுருங்கிய வரலாறு இவ்விதழில் மற்றோரிடத்தில் வெளிவந்துள்ளது.

(ச) ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம் பத்தாம் ஆண்டுவிழா

சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம் பத்தாவது ஆண்டுவிழா 29-4-55-ஆம் நாள் சென்னைப் பயிர்த் தொழில் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது. பல அறிஞர்கள் சொற்பெருக்காற்றினர்.

அதுகாலைப் பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்களையும், புலவர்மணி, திரு. பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரவர்களையும் அறிஞர்கள் பலர் பாராட்டிப் பேசி, பாராட்டிதழ் வழங்கப்பெற்றன.

(ரு) நாட்டுப் பொதுமொழிபற்றி திரு. கிருட்டிணமேனன் கருத்து

கடந்த 3-5-55-இல் சென்னை வழக்கறிஞர் கழகச் சார்பில் திரு வி. கே. கிருட்டிணமேனன் அவர்களுக்கு ஓர் வரவேற்பளிக்கப்பட்டது. அதுகாலை அவர் ஆற்றிய பேருரையின் ஊடே நாட்டுப் பொதுமொழி பற்றியும் சில பேசியுள்ளார். அது வருமாறு:

நாட்டுப் பொதுமொழிக்கும் நாட்டு ஒற்றுமைநிலைக்குமிடையேயுள்ள தொடர்பு பற்றிப் பலரும் தவறான கருத்தே கொண்டுள்ளனர். மொழியைக்கொண்டு ஒரு இனத்தின் அடிப்படையை அறிய முயல்வதோ ஒரே மொழி பேசப்பட்டதால் ஒருமைப்பாடு நிலவ முடியும் என்று வாதிடுவதோ சரியல்ல. இதனால் பொதுமொழி காணும் முயற்சி கூடாது என்பதும் பொருளல்ல. பொதுமொழி தேவைதான். ஆனால் அதனைக் கட்டாயத்தின் மூலம் திணிப்பது கூடாது. மக்களே விரும்பி ஏற்கும்வகை காணல்வேண்டும். இந்தியாவில் பல மொழிகள் வழங்கி வருகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொருவித ஆற்றல் பெற்றவையா யிருக்கின்றன. இதனைச் சட்டத்தின் துணைகொண்டு அழித்துவிட முடியாது. கட்டாயத் திணிப்பு என்று ஏற்பட்டால் அதற்கு எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும். எனவே, எம்மொழியைப் பொதுமொழியாக்கினாலும் அதனைச் சட்டத்தின் துணைநாடாது மக்களின் விருப்பத்தின் வழியே செய்தலே நன்று.

மதிப்புரை

(க) சீவகசிந்தாமணி சொற்பொழிவு நினைவுமலர்

[பக்கங்கள்: உ0சு. விலை: ரூ. 2. பதிப்பாசிரியர் சிந்தாமணிச் சொற்பொழிவாளர், வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள். வெளியிட்டோர்: சைனத் தமிழ் இலக்கிய மன்றத் தார். வழக்கறுத்த ஈசுவரர் கோவில் தெரு. ஆடிசன் பேட்டை,

நம் செந்தமிழ்க்கு அணியாக இலகும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகத் திகழ்வது சீவகசிந்தாமணி யெனப் பெயரிய அரியநூல். நந்தமிழக மாந்தர்களின் அன்பு பண்பு வீரம் கல்வி கொடை செல்வம் தொழில் முதலிய பல துறைகளையும் ஒருங்கே விளக்கிச் சொல்லும் பெருங்காப்பியம் சிந்தாமணி. இதன்பின் எழுந்த நூல்கள் யாவும் இதன் கருத்தையும் சொற்களையும் சொற்றொடரையும் எடுத்தாண்டு தத்தம் நூல்களில் அமைத்துக் கொண்டன. இதைத் தமிழ்நூல் கற்றுத் துறைபோயவர் யாவரும் நன்குணர்வர். இடைக்காலத்தில் இதன் பெருமையும் சுவை நலமும் உணராமல் தமிழகம் மருண்டு கிடந்தது. இற்றைநாள் அறிஞர் பலரின் நன்முயற்சியால் மீண்டும் இந்நூல் புத்தொளி வீசத் தொடங்கிற்று. இது சமண சமயநிலையை உலகில் பரப்பத் தோன்றியதாயினும் காப்பியப் பண்பும் தன்னிக ரில்லாத் தலைவன் மாண்பும் வீர மேம்பாடும் அமைச்சர் நலந் தீங்கு களும் தாய்மை பெண்மை அறங்களும் அறிதற்கும் இன்பச் சுவையும் பிறவும் கண்டு மகிழ்தற்கும் இன்றியமையாக் கலைப்பெருங் கோயிலாய்ப் பொதுமையைக் கிளந்தோதும் அரிய கருவூலம் போன்றதாய்த் திகழ்கின்றது.

இதன்கண் நாவீறுபடைத்த நல்லிசைப் புலவர்கள் பலரால் திருத்தக்கதேவர் துதி என்பது முதலாக திருத்தக்கதேவர் திரு வுள்ளம் ஈறாக முப்பானேழு தலைப்புக்களில் அரிய பெரிய கட்டுரைகள் விழுமிய கருத்துடன் வெளிப்போந்துள்ளன. இதனைத் தமிழக மாந்தர் யாவரும் வாங்கிக் கற்றுத் தமிழ்ச் சுவைநலம் பெறுவாராக.

இதனைத் தொகுத்து பதித்துதவிய புலவர் வேணுகோபாலப் பிள்ளையவர்கட்கும், இதனை நாட்டில் வந்துலவத் துணைபுரிந்து வெளியிட்ட சைனத் தமிழ் இலக்கிய மன்றத்தார்க்கும் இந்நூலின் அரிய கருத்தைத் தமிழ்கூறு நல்லுலகம் பெறக் கைம்மாறு கருதாது உதவிய கட்டுரையாளர் யாவர்கட்கும் தமிழகம் நன்றிபாராட்டும் கடப்பாடுடையது.

இதுபோன்ற அரிய நூல்களைச் சைனத் தமிழ் இலக்கிய மன்றத்தார் வெளியிட்டுதவி நாட்டில் கலைச்செல்வத்தை வளர்க்க நயருள் புரிவதாக.

(உ) தமிழர் திருமணத்தில் தாலி

[இந்நூலின் பக்கங்கள்: 114. விலை ரூ. 1-8-0. நூலாசிரியர்: டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனாரவர்கள் எம். எ. எல். டி., எம். ஓ. எல்., பி. எச். டி. வெளியிட்டோர்: செல்வி பதிப்பகம், காரைக்குடி.]

'தமிழர் திருமணத்தில் தாலி' என்னும் இந்நூலில் ஆசிரியரவர்கள் தம் அஃகியகன்ற நுண்ணுணர்வால் சங்க காலத்திலிருந்து தற்காலம்

வரை ஆராய்ந்து தம் முடிபை விளக்கியுள்ளார்கள். இவர்கள் முடிபு சங்ககாலத்தில் தாலியிருந்ததில்லை யென்பது. பழங்காலமுதல் துருவி ஆய்ந்தால் தமிழகத்தில் தாலி யென்ற பெயரால் ஒன்றில்லையாயினும் தாலியை ஒத்த ஓர் அடையாளம் உண்டென்றே கொள்ள இடனுண்டு.

இதில் காணப்பெறும் ஆய்வு, கற்றுத்துறை போகும் மாணவர் கட்கும், உண்மைகாண விழையும் ஆய்வாளர்க்கும் பெருந்துணை புரிய வல்லது. யாவரும் கற்றுக் கருத்தில் வைக்கத் தகுந்த நூல். இதனை உதவிய ஆசிரியரவர்களும் பதிப்பகத்தாரும் இன்னும் இதுபோன்ற பல நூல்களை உருவாக்கி நாட்டில் ஆய்வுப்புலத்தை வளர்க்கத் துணை புரிவார்களாக.

(௩) திருவள்ளுவர் காலம் யாது ?

[இந்நூலின் பக்கங்கள்: 69. விலை: ரூ. 1. ஆசிரியரும் பதிப்பகத் தாரும் மேற்கண்டவர்களே யாவர்.]

திருவள்ளுவர் உலகப் பொதுமறையாகிய திருக்குறளை உதவிய ஒண்மையர். இவர் இருந்த காலம் தெற்றெனத் தெளியவில்லை. இவர் வரலாறு பற்றிய கட்டுக்கதைகள் அறிவியலுக்கு ஒவ்வாதன. காலமும் அவ்வாறே. இதனை ஒருவாறு ஆய்ந்து முடிபு கூறுகின்றார் ஆசிரியர்.

திருக்குறட் கருத்துக்கள் சங்ககால நூல்களிலும் அதற்குப் பின்னர்க் காலந்தோறும் தோன்றிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளன. ஆயினும் அவைகளைக் கொண்டு அவ்வக்காலம் என முடிபு கூறுதற் கில்லை. ஆயினும் ஒரு காலம் இதுதான் என்று துணிதல் வேண்டும். அம்முறையில் ஆசிரியரவர்கள் நுனித்தறிந்து வள்ளுவர் காலத்தை கி. மு. 1 முதல் 300 க்கு உட்பட்டது என்று கோடலே அமைவுடைய தாகும் என்று கூறியுள்ளார்கள்.

ஆராய்ச்சியில் காலம் போகப் போக உண்மை புலனாகலாம். அதுவரை ஏதேனும் ஒரு வரையறை வேண்டுமன்றோ, அதையே இந் நூல் கூறுகின்றது.

ஆய்வு போற்றற்குரியது. வள்ளுவர் காலத்தையும் மாண்பையும், திருக்குறட் பெருமையையும் மேலும் அறிய வாய்ப்புத்தரும் நூல் இது. தமிழகத்தார் கற்று உண்மை காண்டற்கு வழிகாட்டியாகத் திகழ் கின்றது.

(௪) திருவள்ளுவர் திருநாள் மலர்

[இந்நூலின் பக்கங்கள்: 60. இதனை வெளியிட்டோர்: தமிழ்மறைக் கழகம் 44, 33-ஆம் ஒழுங்கை கொழும்பு 6.]

திருவள்ளுவர் நினைவுநாள் நாட்டில் பலவாறாகக் கொண்டாடு கின்றனர். ஒவ்வோராண்டும் வைகாசித் திங்கள் அனுட நன்னாளையே திருநாளாகக் கொண்டாட வேண்டுமெனப் பல வெளியீடுகளாகிய பத்திரிகைகளின் கருத்தையும் அறிஞர் சங்கங்களின் கருத்துக்களையும் சாரத்தையும் தொகுத்துத் திரட்டிக் கூறும் நூல் இதுவாகும். தமிழ் மக்கள் வாங்கிப் பயன்பெற வேண்டிய நூல்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.



சிலம்பு ௨௯ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௬, வைகாசி
ஜூன், 1955. | பரல் ௧0

தமிழில் வழிபாடு

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி."

வழிபாடு

வழிபாடு என்பது ஆன்றோர் வழியில் ஆண்டவன் வழியில் படுதல் என்பதாகும். படுதல் - சார்தல். ஆன்றோரைச் சார்ந்து அவர் ஆணைவழி ஒழுகுதல் வழிபாடாகும். அதுபோல் ஆண்டவனைச் சார்ந்து அவன் ஆணைவழி ஒழுகுதல் வழிபாடென்பது தானே பெறப்படும். வழிபாடு என்றாலும் பூசை என்றாலும் ஒன்றே. பூசையை அருச்சனை எனவும் கூறுவர். வழிபாடு, வழிபடுவோர்க்கும் வழிபடப்படுவோர்க்கும் புரியும் மொழியில் நடப்பதுதான் பயன் தருவதாகும். புரியாத மொழியில் நடந்தால் எப்படிப் பயனுண்டாகும்? உண்மையாக நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று: மதி என்னும் சொல் மலையாள மொழியில் போதும் என்னும் பொருளைக் குறிப்பதாகும். அச் சொல் சிங்கள மொழியில் போதாது என்னும் பொருளைக் குறிப்பதாகும். இருவரும் ஒருவரோடொருவர் அச் சொல்லைச் சொன்னால் என்னவாகும்? கலகந்தான் ஏற்படும். அப்படியே கலகமும் ஏற்பட்டது.

ஒழித்துக் கட்டுதல்

வழிபடுவோரின் தாய்மொழி வழிபடப்படுவோர்க்குப் புரியாவிட்டால் வழிபடுவோர் எங்ஙனம் நன்மை எய்துவர். அதற்காக அவ் வழிபடப்படுவோர் மொழிபெயர்ப்பாளர்களை உடன்வைத்துக் கொள்கின்றனர். அவர்களுக்குள்ள அருளிரக்கங்கூட நம் கடவுளுக்கு இல்லை என்றால், அஃது எவ்வளவு

கொடுமையாகும். கடவுளுக்குச் செய்யும் அருச்சனை வட மொழியி லிருக்கிறது. அது தமிழராகிய நம்மவர்களுக்குப் புரியாது. ஆண்டவனுக்குப் புரியும், அந்த ஆண்டவன் நமக்குப் புரியவைக்க ஒரு மொழிபெயர்ப்பாளனை வைத்துக்கொள்ள வேண்டாமா? இல்லையே! ஏன்? நாம் நம்முடைய தாய்மொழியாகிய தமிழ் மொழியில் அருச்சனை செய்தால் அஃது அவ் ஆண்டவனுக்கும் புரியும் என்னும் காரணத்தால் என்க. பின்னை ஏன்? தமிழருச்சனை நடக்கவில்லை? தமிழ்மொழிப் பற்றில்லாத, ஏன்? பகைக்கும் தன்மையும் வாய்ந்த பேர்கொண்ட பார்ப்பனச் சூழ்ச்சியால் குருக்கள்மார் சிலரும் சேர்ந்து முன் நடந்து வந்த தமிழருச்சனையை ஒழித்துக் கட்டினர். அது முடியுமா என்று சிலர் நினைக்கலாம். மூவர் பாடலிலும் பின்னும் முன்னும் வழங்கி வந்த திருமறைக்காடு என்னும் திருப்பெயரை இப்பொழுது நாம் கேட்கமுடிகின்றதா? அப் பெயரை என்ன செய்தார்கள்? ஒழித்துக்கட்டி அதன் மொழிபெயர்ப்பாகிய வேதாரணியம் என்னும் வட சொல்லை வழங்க வைத்துவிட்டார்கள். இஃது ஒன்று மட்டுமா? இன்னும் எத்தனையோ பல. ஆண்டவனுக்கு 'மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் பாடல்.' எனச் சிறப்பெய்திய மூவர்க்கும் தித்தித்தது—இனித்தது திருமறைக்காடு என்னும் செந்தமிழ் மொழி. அம் மொழி பார்ப்பனர்க்கும், பார்ப்பனச் சார்பாம் சில குருக்கண்மார்க்கும் கசந்தது வியப்பல்லவா?

தமிழ் மந்திரம்

மேலும் அச்சிலர் உண்மையை மறைத்து உலகை ஏமாற்றி வருகின்றனர். மந்திரம் தமிழில் இல்லை; வட மொழியில்தான் இருக்கின்றது. மறை தமிழில் இல்லை; வட மொழியில்தான் இருக்கின்றது. சிவாகமம் தமிழில் இல்லை; வடமொழியில்தான் இருக்கின்றது. இம்மொழிகள் பெருங் கொடுமையையும், பத்தியையும் முன்னேற்றத்தையும் தடுப்பதும் ஆகிய மாறுபாட்டையும் தருகின்றன. சைவ சித்தாந்த முதல்வராகிய திருமுறை முதல்வர்களையும், மெய்கண்ட முதல்வர்களையும், அவர்கள் அருளாணைத் தமிழ் மந்திரங்களையும் இம் மொழிகள் புறக்கணிக்கின்றன. நால்வர் முதலிகள் தோன்றியிராவிட்டால் நம் சைவ சமயம் போன இடம் புல் முளைத்துப் போயிருக்கும். எங்கும் புத்த சமண அறியாமை இருளே செறிந்திருக்கும். அப் புத்த சமண இருளைப் போக்கியது திருமுறைச் செந்தமிழ் மந்திரங்களே யல்லாமல், வட மொழி மந்திரங்கள் அன்று. அத்துணை ஆற்றல் வாய்ந்த தமிழ்மந்திரங்கள் திருக்கோயில் அருச்சனைக்கும் பூசைக்கும் ஆற்றல் வாய்ந்தன அல்ல என்பது எவ்வளவு

அறியாமையும் பொருந்தாமையும் ஆகும். அதனைப் பகுத்தறிவுக்கண்கொண்டு ஆராயாமல் அப்படியே ஏற்றுக்கொள்ளும் நம்மவர் அறியாமை அதைவிடக் கொடுமை வாய்ந்ததாகும்.

திருமுறைத் தீந்தமிழ் மந்திரங்கள் செய்த அருட் பெருஞ்செயல்கள் அளப்பில. அவற்றுள் ஒரு சில ஈண்டுக் கூறுதும். பாண்டியன் சுரநோயை நீக்கிற்று, ஏடு எரியிலிட வேவாது பச்சையாய் விளங்கிற்று; ஏடு வையை யாற்றுக்கு எதிரே ஓடிற்று. திருமருகலில் பாம்பு கடித்து இறந்த வணிகனை எழுப்பிற்று. திருக்கொடிமாடச் செங்குன்றூரில் நீங்காக் குளிர் சுரத்தை நீக்கிற்று. திருப்பாச்சிலாச்சிராமத்தில் கொல்லி மழவன் மகளின் வலிநோயை நீக்கிற்று. திருமறைக் காட்டில் திருக்கதவினை அடைப்பித்தது. திருக்கொள்ளம் பூதூரில் ஓடத்தைச் செலுத்திற்று. புத்தன் தலையில் இடியை வீழ்த்திற்று.

சுண்ணாம்புக்காளவாயில் ஏழுநாள் வரை யிருந்தும் தீங்கொன்றும் இல்லாமல் இருக்கச் செய்தது. நஞ்சுண்டும் மாளாமல் இருக்கச் செய்தது. யானையை வணங்கச் செய்தது. கடலில் கல்லை மிதக்கச் செய்தது. பாம்பு கடித்த பிள்ளையை எழுப்பியது. மறைக்கதவினைத் திறப்பித்தது. முதலையுண்ட பிள்ளையை அழைத்தது. தகாதது பேசிய புத்தரை ஊமையாக்கிற்று. பிறவி ஊமையாக இருந்த ஈழநாட்டு மன்னன் மகளைப் பேசச்செய்தது.

சேந்தனார் திருப்பல்லாண்டு தில்லைத் திருத்தேரைத் தானே ஓடி நிலைக்கு நிற்கச் செய்தது. உமாபதி சிவனார் கொடிக்கவி தில்லைத் திருக்கொடியைத் தானே ஏறச்செய்தது. சிவபெருமான் பாணபத்திரர்க்குச் சேரமான்பால் சேர்க்கத் திருமுகம் கொடுத்தது தமிழிலேயே. பெத்தான் சாம்பானுக்கு உமாபதி சிவனார்பால் சேர்க்கக் கொடுத்த சீட்டுப்பாட்டும் செந்தமிழே. இத்தனை எல்லாமிருந்தும் தமிழில் மந்திரமில்லையென்று கரைவது எத்தனை ஏழைமை. அதனை ஏற்றுக்கொள்வது எத்தனை கோழைமை. இனிமேலாவது தமிழ்மந்திரத்தின் ஆற்றலுணர்ந்து நாட்டிலும் வீட்டிலும் திருக்கோவில்களிலும் அதனையே கைக்கொண்டு ஒழுகி விழுப்பயனும் முழுப்பயனும் எய்துவார்களாக.

தமிழ் மறை

சிவபெருமான் திருவுள்ளம் செந்தமிழ் அன்பர்களுக்கு வடமொழி மறைதான் வேண்டுமென்றிருந்தால் அதனையே பயில அருளியிருப்பன். நால்வர் வாயிலாகத் தொன்மைத் தமிழ் மறையினை அருளியிரான். ஆண்டவன் ஆணையையும் கடந்து தமிழர் தலையில் வடமொழி மறையினைச் சுமத்துவது கொடுமை!

கொடுமையை மேலும் திருமுறைகண்ட புராணத்து வடமொழி மறை, பல கடவுளரைக் குறிப்பது என்றும் திருமுறை ஒரே கடவுளைக் குறிப்பது என்றும் கூறுகின்றது. திருமுறையைத் தமிழ்மறையென்றே கூறுகின்றது. அத்திருமுறையே ஆண்டவனுக்கு அளவிலா உவப்பைத் தருகின்றது என்றும் கூறுகின்கின்றது. அதுவே வழிபாட்டுக்கும் அருச்சனைக்கும் அமையும் என்று அழுத்தமாகவும் கூறுகின்றது. "அருச்சனை பாட்டே யாகும்" என்பதும் திருமுறையே.

மணிவாசகப் பெருமான் "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்வார்" என்றருளுகின்றனர். திருநாவுக்கரசர் "சொற்பாவும் பொருள் தெரிந்து" என்றருளுகின்றனர். சம்பந்தப் பெருமான் "ஞான சம்பந்தன செந்தமிழ் கொண்டிசை, பாடு ஞானம்" என்றருளுகின்றனர். இவற்றால் கடவுளை வழிபடுவோர் தங்களுக்கும் பிறர்க்கும் புரியும் தாய்மொழியினால் தான் வழிபட வேண்டும் என்னும் மெய்ம்மை வலியுறுத்தப்படுகின்றமை யாவரும் எளிதின் உணரலாம். வடமொழியில்தானே வழிபாடு; தமிழில் ஏது என்கின்றனர்! "ஞான சம்பந்தன், வந்த வாறே புனைதல் வழிபாடே" எனச் சம்பந்தர் அருளுகின்றனர். இங்கே 'சம்பந்தன்' என்பது ஆகுபெயராய் அப்பெருமான் அருளிய தமிழ்மாலையாகிய தேவாரத்தைக் குறிக்கும். இப்பொழுது திருக்கோவில்களில் என்னென்ன வழிபாடுகள் நடக்கின்றனவோ அத்தனையும் திருமுறைத் தெய்வத் தமிழால் நடத்துதற்கு திருப்பதிகங்கள் அருளியிருக்கின்றனர். அதனை நாம் மேற்கொள்ளாமல் இருப்பது பழிபாடேயாகும். பெற்றோர்களையும், பிள்ளைகளையும் மகிழ்விக்கும் தமிழ்மொழி சிவபெருமானை மகிழ்விக்காது என்று பிறர் சொன்னால் நாம் கேட்பதா? அச் சிவபெருமான் இவர்களிடமாக விளங்க வில்லையா? விளங்கித் தமிழ்மொழியைக் கேட்கவில்லையா? குடும்பம் கடவுள் உறையும் சிறிய இல். கோயில் அக் கடவுள் உறையும் பெரிய இல். கோயில் - பெரிய வீடு. கோ - பெரிய, இல் - வீடு. தமிழ் நாட்டில் வாழும் பிறமொழியாளர்கட்கும் தமிழ் தெரியும். அவர்களுக்கும் நம்மைப்போல் வடமொழி தெரியாது. இப்பொழுது கோவிலில் நடக்கும் வேதமந்திர வழிபாட்டைப் புரிந்துகொள்வார் ஒருவரும் இலர். அவ்வழிபாடு தமிழில் நடந்தால் எல்லாரும் புரிந்துகொள்ளுவர். பொருள்தெரிந்து பொருவிலா மகிழ்வு எய்துவர். அந்த நாள் எந்த நாளோ என்று எண்ணுதல் வேண்டா. இந்த நாளே வந்தது அருளால் என்று எண்ணுங்கள். பாடுஞ்சொல் புரியாவிட்டால் அச்சொற்பொருள் உணர்ச்சியை எப்படித் தட்டி எழுப்பும்? கோவில் வழிபாடு கூடியுள்ள

பெருமக்களுக்கே. பூசை செய்யும் அருச்சகருக்கன்று. அருச்சகர் தாங்கள் அருச்சனை செய்யும் கூலியாள் என்பதனை மறந்துவிடுகின்றனர். ஆனால் கூலிபெற மறப்பதில்லை. அருச்சனை செய்விப்பாரிடம் அக்கூலியை வடமொழியில் கேட்பதில்லை. நம்மிடம் தேங்காய் பழம் வெற்றிலைபாக்கு வில்வம் பூ என்று தமிழில் கேட்கின்றார்கள். ஆண்டவனிடம் சொல்லும்போது நாளிகேரம் முதலிய வடமொழிச் சொற்களால் சொல்கின்றனர். தமிழ் ஆண்டவனுக்குத் தெரியாதா? அல்லது தமிழுக்கு அத்துணை ஏற்றந்தருவதா என்னும் புறக்கணிப்பா? அறிகின்றிலம். என்னவானாலும் இத்தகாத செயல் இனி நிலைக்காது. நாளும் மிகாது.

ஆண்டவன் தன் அருமைத் திருவாய்மொழியால் 'தில்லை வாழந்தணர்' எனவும், 'உலகெலாம்' எனவும் அடி எடுத்துக் கொடுத்தருளியது தெய்வத் தமிழல்லவா? முன்பு சிவபெருமான் பாட்டும் சீட்டும் கொடுத்தருளியது பழம்பெருந் தமிழில் என்று கண்டோம். இப்பொழுது தமக்காகக் குருக்கண்மார் தமிழில் சொன்னால் ஆண்டவன் வேண்டாமென்று சொல்லுவானோ? படிக்கத் தெரியாதவரும் தமிழில் பாடினால் விளங்கிக் கொள்வர். படித்துக் கரைகண்ட புலவர்க்கும் வடமொழியிற் சொல்லுவது புரியவில்லை. நாம் கோவிலிற் சென்றால் அங்கும் புரியாதமொழி வழங்குவதால் செவிடராகிவிடுகிறோம். அதனைப் பிறர்க்குக் கூறமுடியாமையால் ஊமராகிவிடுகின்றோம். கடவுளுக்கு வைக்கும் படைப்பைக் காணமுடியாமையால் குருடராகிவிடுகின்றோம். திருக்கோவில் கட்டுகளில் சில இடம் செல்ல முடியாமையால் முடவராகிவிடுகின்றோம். இம்மையில் இறைவனைத் தீண்டமுடியாமையால் அம்மையிலும் தீண்டமுடியாதவராகின்றனம். இந்த முறையால் பார்த்தால் திருக்கோவில் செல்லும் தமிழன்பர்கள் செவிடராய், ஊமராய், குருடராய், முடவராய், தீண்டத்தகாதவராய் ஆகின்றனர். இதுதான் கோவில்களில் நாம் பெறும் பயன் என்று ஒருவர் சொன்னால் மறுப்பவர் யார்? "பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் பிறவா நாள்" அல்லவா? நாமும் திருக்கோவில்களில் சென்று தெய்வத் தமிழால் வழிபாடு செய்யாமையால் சிறந்த வுறுப்பைச் சிறவா உறுப்பாக ஆக்கிக்கொள்ளுகின்றோம்.

தமிழ் வழங்காத இடத்துக்கு நம் சமய முதற்குரவர்கள் சென்றருளவில்லை. அந்நாடுகள் பிறமொழி வழங்கும் நாடுகளாயுள்ளன. அந்நாடுகளிலுள்ள சிவபெருமானைத் திருக்காளத்தியிலிருந்தே பாடியருளினர். இந்த வுண்மை அவர்கள் சென்றருளிய இடமெல்லாம் செந்தமிழ் வழிபாடே நடந்ததென்பதனை

ஐயமறக் காட்டும். ஆனால் இப்பொழுது அவர்கள் சென்றருளிய இடங்களில் எல்லாம் தமிழ்மொழிக்கு இடமில்லை. வட மொழிக்கு இடமாக இருக்கின்றது. ஒருவன் உண்மைக் கருத்தைத் தாய்மொழியில்தான் உணர முடியும். இப்பொழுது நால்வர் பெருமக்கள் போன்றார் தோன்றுவரேல் நம் திருக்கோயில்களுக்குப் புறம்பாக நின்றுதான் பாட நேரிடும். ஏன், நால்வர் பாடியருளிய திருமுறைகள் இப்பொழுது நம் கோவில்களில் என்ன நிலையில் இருக்கின்றன? வடமொழி வேதம் கட்டாயம் படிக்கவேவேண்டும். அது படிப்பார்க்கு முதலிடம். தமிழ் வேதமாகிய திருமுறை ஓதுதல் கட்டாயமில்லை. எப்படியோ ஓத நேர்ந்தால் அதற்கு முதலிடமும் இல்லை. இதைப்பார்க்கும் போது 'ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர்' என்னும் செந்தமிழ்ப் பொதுமறை நமக்கே முற்றும் பொருந்துவதாகும். இக் குறையைப் போக்கவேண்டுவது நம் பெருங்கடமையல்லவா? தாய்மொழியில் அல்லாமல் சமயத்தையும் பத்தியையும் சாத்திரத்தையும் பரப்ப முடியுமா? இவ்வுண்மையறிந்த கிறித்தவர்கள் அவர்கள் மதத்தைத் தமிழ்மொழியில் பரப்புகின்றார்கள். நாம் என்ன செய்கின்றோம்: நம் தாய்மொழியாம் தமிழ் மொழியில் என்ன இருக்கின்றது? எல்லாம் வடமொழியிலிருக்கின்றது என்று கூறி நம்மவர்களைக் கிறித்துவ சமயத்தில் நிரப்புகின்றோம். இனிமேலாவது இக்கொடுமை அகலவேண்டும். பத்தி வளரவேண்டும். அதற்குரிய வழியில் ஆண்டவன் அருள்துணை கொண்டு செல்லுவோமாக.

தமிழாகமம்

ஆகமம் தமிழில் இல்லையே? என்ன செய்வது என்று உண்மை உணராது உரைக்கின்றனர். சிவபெருமான் அருள் ஆணைவழித் திருமூல நாயனாரருளியது செந்தமிழாகமம் அன்றோ? அவ்வாகமம் தமிழர்களாகிய நமக்கன்றோ சிவபெருமான் தந்தருளினன். அதை நாம் வழிபாட்டில் மேற்கொள்ளாவிட்டால் என்ன பயன்? அத் தமிழாகமத்தைத் தெலுங்கரா? அல்லது வடவரா? பிறரா மேற்கொள்வர். தமிழில் செய்யவேண்டுமென்றுதானே அத் தமிழாகமம் தோன்றப்பெற்றது. அப்படியிருக்கும்போது ஏன் இன்னும் வடமொழியை மேற்கொள்ளுதல் வேண்டும் இப்பொழுது கோவில்களில் நடக்கும் பூசை முதலிய பத்ததிகளை ஏன் தமிழில் மொழிபெயர்த்தல் கூடாது? தமிழில் செய்தல் கூடாது? எண்ணிப்பார்மின் சிவபெருமானே நமக்கு வழிகாட்டியாயிருக்க நாம் ஏன் பின்னடைதல் வேண்டும்? வடமொழியைவிடத் தமிழ் மொழிக்கே ஆற்றல் மிக்கதென்பது திருமூலர் திருவுள்ளம். அதுவரும் திருமந்திரத்தால் உணரலாம்.

ஐம்ப தெழுத்தே அனைத்துவே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தின் அடைவை அறிந்தபின்
ஐம்ப தெழுத்தே அஞ்செழுத் தாமே. —௧0, ௨௯ - ௧௮

ஐந்தெழுத்து - சிவயநம

இவ்வைந்தெழுத்தின் பெருமையினை, வடமொழியினும் மேம்பட்ட சிறப்பாம் மாண்பினைத் திருமுறையில் பரக்கக் காணலாம். அஞ்செழுத்துண்மை காட்டும் திருப்பதிகங்கள் நான்குள்ளன. அவற்றுள் ஒன்று அந்தணர்க்கு அந்தியுள் மந்திரம் ஐந்தெழுத்தே என்பது. வரும் திருமுறையான் உணர்க:

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுண் மந்திரம் அஞ்செ ழுத்துமே. —௩. ௩. ௨௨ - ௨௨.

திருவைந்தெழுத்தைக்கொண்டே எல்லா வழிபாடும் செய்துகொள்ளலாமென்பது சித்தாந்த சைவ உண்மை. இஃது சிவஞானபோதத்து "அஞ்செழுத்தாலுள்ளம்" எனவும், சிவஞான சித்தியாரின்கண் "அஞ்செழுத்தா லான்மாவை" எனவும் வரும் திருப்பாட்டுக்களான் நன்கு விளங்கும்.

தமிழருச்சனை

ஆட்சிமொழி தமிழாக வேண்டுமென்று அரும்பாடுபடுவது போல் அருச்சனை தமிழாகவேண்டும் என்னும் முயற்சியும் இருக்கிறது. இது வெளியுலகோர்க்கு நகைப்புக்கிடமேயாம். விரும்புவார்க்கு வடமொழியினும் செய்யலாம் எனக் கூறும்போது தாய்மொழியாம் தமிழுக்கேன் இத்தனை எதிர்ப்பு. திருவைந்தெழுத்துக்கு ஓங்காரம் வேண்டாமைபோன்று திருமுறை அருச்சனைக்கும் ஓங்காரம் வேண்டுவதின்று. 'ஓம் சதாசிவாய நம' என்னும் தொடரை நாம் நம் தாய் மொழியில் 'சதாசிவனே போற்றி' என்று மொழிந்தால் போதுமானது. இது போற்றித் திருத்தாண்டகத்துள் 'சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி, சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி' என்னும் மறைமொழித் தொடரினை மெய்யன்பர்கள் காதாரக் கேட்க, வாயார மொழிந்து, கையார மலர்தூவிப் போற்றி வழிபடுவாராக.

போற்றித் திருத்தாண்டகம் ஐந்து, போற்றித் திருவகவல் ஒன்று தமிழருச்சனைக்கென்றே அமைந்துள்ளன. திருமுறைகளில் இடையிடையே வரும் போற்றித தொடர்கள் எண்ணிறந்

றன. இவற்றால் வழிபடுவோமாக. அகத்தியரும் தாம் திரட்டியருளிய தேவாரத்திரட்டில் திருமுறைப் போற்றித் தொடர்களையே அருச்சனை என்று உறுதி செய்துள்ளார். அவை வருமாறு: "பந்து, வேற்று, கொன்றிவை மூன்றும் நந்தலில் அருச்சனை நாட்டியதாகும்" என்பன. தமிழருச்சனையின் பொருட்டு நம் கழகத்தில் 'மலர் வழிபாட்டு வரிசை' என ஆறு சுவடிகள் வெளிவந்துள்ளன.

> தாவில்நன் பொன்னணியாம் சாற்று திருமுறைகள்
> மேவுபொற் றாலிமெய் யைந்தெழுத்தாம்—கூவுமறை
> ஐம்பொன் கலப்பணியாம் ஆண்டுக் குறித்தசில
> இம்பர்நவில் மந்திரமாம் எண்.

எண்ணல்

அருச்சனை செய்வார் நாளும், பொழுதும், பொருளும் கருதிக்கொள்ளுதலை எண்ணல் என்ப. இதனையே சங்கற்பம் என்பர். அம்மூன்றற்கும் வரும் திருமுறைத் திருமாமறையினை ஓதிக்கொள்ளுவது போதும்:

> வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
> மிகநல்ல வீணை தடவி
> மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
> உளமே புகுந்த வதனால்
> ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
> சனிபாம் பிரண்டு முடனே
> ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
> அடியா ரவர்க்கு மிகவே.

> காலையே போன்றிலங்கு மேனி கடும்பகலின்
> வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு—மாலையின்
> தாங்குருவே போலும் சடைக்கற்றை மற்றவர்க்கு
> வீங்கிருளே போலும் மிடறு.

> வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
> கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
> சுடர்த்திங்கள் சடையானைத் தொடர்ந்து நின்றென்
> தாயானைத் தவமாய தன்மை யானைத்
> தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
> சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
> சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே.

திருச்சிற்றம்பலம்

தமிழாட்சி

மா. ரா. வஞ்சிக்கோவன்]

ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டின் மொழியாட்சி நடைபெறச் செய்வதே நாட்டு மக்களின் தலையாய கடமையாகும். நாட்டு மொழி, பிறமொழியாதிக்கத்தினின்று விடுபட்டு ஆட்சி பெறல் வேண்டும். தனது தனிச்சுவை குன்றாது வளம் பெறல் வேண்டும். இந்த நோக்கம் தமிழகத்தில் இன்று ஈடேறக் காண்கிலோம். இனியும் தமிழகம் உறக்கத்தில் கண்மூடியிருத்தல் அழகாகுமா ?

மொழி வளம்

தொல்காப்பியத்திலிருந்து பாஞ்சாலி சபதம் வரை—புறநானூற்றிலிருந்து பாண்டியன் பரிசுவரை—சிலப்பதிகாரத்திலிருந்து ஆசிய சோதிவரை—தமிழ் மொழியின்—தமிழ்க் கன்னியின் இளமை, பொலிவு, அழகு காட்டப்படுகிறது. தமிழ்க் கன்னியின் பொலிவைக் கண்டு பெருமிதம் அடைகிறோம். அவளின் இனிய ஓசையைக்கேட்டு இதயம் பூரிக்கிறோம். அவளின் அழகிய அணிகளைக் கண்டு ஆச்சரியப்படுகின்றோம். கன்னல் தமிழ், கற்கண்டுத் தமிழ், அமிதத் தமிழ், வற்றாத வளம்பெற்ற தமிழ் அருவி என்று வருணிக்கிறோம்.

மொழி நம்மை உணர்வுகொள்ளச் செய்யும்—பரவசமூட்டும்—துடிப்பு உண்டாக்கும் ஒரு பொருள்; தாய் மொழி நம்மைத் தலைநிமிர்ந்து நடக்கச் செய்யும் தனிப்பண்பு உடையது.

மொழியும் இனமும்

ஒரு நாட்டின் இயல் சீர்குலைந்தது என்றால் - ஒரு நாட்டின் இசை சீர்குலைந்தது என்றால்-ஒரு நாட்டின் நாடகம் சீர்குலைந்தது என்றால் - அதற்குக் காரணம் பிறமொழிக் கலப்புத்தான் என்று கிரேக்கநாட்டு அறிஞர் அரிஸ்டாட்டில் கூறியிருக்கிறார்.

எனவே, ஒரு நாட்டின் மொழி நல்ல வளர்ச்சி அடைய வேண்டுமாயின் அந்த மொழி பேசும் இனம், அந்த இனத்தின் கலை, அந்த இனத்தின் நாடு இவைகள் தனித்தியங்கவேண்டும். கொடுங் கயல்களுக்குத் தப்பி நெடுங்கடலில் கலம் செலுத்திய தமிழன் - ஒல்காப் புகழுடைய தொல்காப்பிய காலத் தமிழன்-

இன்றைய மொழிக்கலப்புற்ற தமிழைக் கேட்க நேர்ந்தால் இதழ் கிழிய நகைப்பானன்றோ?

நாற்பெருங் கவிஞர்

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவனைப்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணும் கண்டதில்லை" என்றார் பாரதியார். தமிழ் மொழிக்கு இலக்கியச் சுவையை ஊட்டினான் கம்பன். தமிழன் கொள்கைகளை வரையறுத்தான் வள்ளுவன். தமிழ்ப் பெண்மையை எடுத்துரைத்தான் இளங்கோ. இதைக்கொண்டுதான் பாரதி அப்படிப் பாடியிருக்கவேண்டும். "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்" என்ற புதுமைக் கவியின் கருத்துப்படி ஒவ்வொருவரும் செயலாற்ற முற்பட வேண்டும்.

தமிழரும் மேனாட்டுச் செலவும்

அயல்நாடு செல்லும் தமிழர்கள் நம் தாய்மொழியின் சிறப்புப்பற்றிச் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றுதல் வேண்டும். இதனால் மேனாட்டார் தமிழின் சுவையை உணர்ந்து அதனைக் கற்க முற்படுவர். அவர்கள் வழியாகத் தமிழ் பரவத் தொடங்கும். ஒவ்வொரு தமிழனும் மேனாட்டுச் செலவுகளை மேற்கொள்ளும்போது இவ்வாறு செய்தால் விரைவில் தமிழ் உலகம் போற்றும் மொழியாகும் என்பதில் ஐயமில்லை. தானே தனித்து உண்பதைவிடப் பகுத்துண்பது எவ்வளவு நல்லதோ, அது போல் தானே தமிழின் சுவையை உணர்ந்து மகிழும் மகிழ்ச்சியில் மற்ற மொழியாளரையும் பங்குபெறச் செய்தல் நலம். அதனால் நம் மகிழ்வு குறையாது மிகுதிப்படும்.

புதுமை மலர்தல்

தமிழ்மொழியிலே புதிய இலக்கியங்கள், காவியங்கள் தோன்றவில்லை என்று சிலர் கூறுகின்றனர். மறுக்க முடியாத உண்மை. தற்போது இருக்கின்ற இலக்கியங்களையே சரியாகப் படித்துப் பொருள்கொள்ளத் தெரியவில்லை சிலருக்கு! இந்நிலையில் புதிய இலக்கியங்கள் எவ்வாறு தோன்றும்? இன்றைய நிலையில் இலக்கியங்கள் தோன்றா. தோன்றவும் முடியாது. பண்டைக்காலத்திலே மக்கள் துன்பமின்றி வாழ்ந்து வந்தனர். காவியங்கள் தோன்றின. துன்பம் மக்கள் மனதில் இருந்தால் காவியங்கள் தோன்றா. இன்று மக்கள் படுந்துயர் கொஞ்சமில்லை. உணவு கிடைக்கிறது; வாங்குவதற்குப் போதிய பணமில்லை. படிப்பு இருக்கிறது; ஆனால் வேலை இல்லை. ஒருவேளை தாம் படும் துன்பச் சுமையை அவர்கள் காவியமாக்கலாம்.

தமிழாட்சி

எண்ணங்களைக் கோடிக்கணக்கில் எண்ணுகிறோம்; பேச்சுக்களை இலட்சக் கணக்கில் பேசுகிறோம்; எழுத்துக்களை ஆயிரக்கணக்கில் எழுதுகிறோம்; குறிக்கோளை நூற்றுக்கணக்கில் குறிக்கிறோம்; துணிச்சலில் பத்துக்கணக்கில் துணிகிறோம்; ஆனால் செயலில் ஒன்றையாவது உருவாகச் செய்வதில்லையே! இனி இந்த நிலை கூடாது. தமிழை வளர்ப்போம் எனக் கங்கணங் கட்டிக்கொண்டு கிளம்புவோம். பாரதி கண்ட தமிழகத்தை உருவாக்குவோம். தமிழ்த் தெருக்கள் முழுதும் தமிழ் முழக்கம் செய்வோம். தமிழரென்று சொல்லுவோம். தலை நிமிர்ந்து நிற்போம். நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை இவற்றோடு தமிழ் வாழ்க என எடுத்துரைப்போம். இமயத்திலே கொடி நாட்டினானே செங்குட்டுவன். அந்த இமயம் வரைக்கும் நம் குரல் கேட்கட்டும்! வரலாற்றில் காணும் வெற்றி முரசு ஒலித்த வண்ணம் இருக்கட்டும். தமிழ், தமிழகத்தின் அரசியல் மொழியாகும்வரை நாம் அயரமாட்டோம். தமிழ்நாடு தனித்திருந்து தமிழாட்சி நடத்தவேண்டும். அரசாங்க ஆலோசனைகள் அலுவலகங்கள் யாவும் தமிழிலேயே நடைபெறுதல் வேண்டும். நீதிமன்றங்களில் தமிழாட்சி நிலவவேண்டும். தெய்வ வழிபாடு தமிழிலேயே நடத்தல் வேண்டும்.

எண்ணம் ஒரு மலர். மொழி அதன் மொட்டு. செயல் அதன் பழுத்த கனி. கற்றோரும் மற்றோரும் தமிழைக் கொடுமைப் படுத்தாமல் இருப்பார்களேயானால் அதுவே அவர்கள் மொழி வளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் என்பதை எடுத்துக்காட்டும்.

பழங்கதைகள்

திரு. வி. க. சொன்னார்: "உலகம் என் உடல்; இந்தியா என் உள்ளம்; தமிழகம் என் உயிர்" என்று. ஆனால் தமிழ்த்தென்றல் திரு. வி. க. இன்று இல்லை. நம் கடமையை நமக்குக்கூற யாருமில்லை. நாமே நம் கடமையை உணர்வோம். அன்று மதுரையிலே சங்கம் வைத்து வளர்க்கப்பட்ட தமிழ்! சிவபெருமானே தமிழில் பாடினார் என்றெல்லாம் பேசுவதிலே பயனில்லை. "பண்டைப் பெருமை பேசிப்பேசி மண்டை உடைத்து மாள்வதேன்" பண்டைப் பெருமையைப் பேசாதே. அதனால் இன்றைய தமிழ் வளராது என்று இடித்துக் கூறுகின்றார் நாஞ்சில் நாட்டுக் கவி. இனி ஆகவேண்டியதைக் கவனி என்று கட்டளையிடுகிறார் கவிமணி!

தமிழர் கடமை

நமது தாய்மொழியாகிய தமிழ் பழைய நிலைக்குத் திரும்ப வேண்டுமானால்....? தமிழர்கள் ஓரளவு கல்வி அறிவு பெற்றுத்

தாய்மொழி என்றால் என்ன? என்பதை அறிந்துவிட்டார்களானால் மிக விரைவில் ஓரிரண்டு ஆண்டுகளில் செந்தமிழ் நலந்திகழ ஓங்கி வளரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இங்ஙனம் அழியாதுகிடைத்த அரும்பொருளைத் தெளிவும், இனிமையும், எளிமையும் உடைய செந்தமிழ் மொழியைச் சீரிய முறையில் பாதுகாப்பது தமிழ் மக்களின் கடமையன்றோ? உரிமையாக, அருமையாகக் கிடைத்தசெல்வத்தைப் போற்றாத ஒருவன் தூற்றப்படுவானல்லனோ?

"உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்றார் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அது முற்றிலும் உண்மை. அமரகவி, "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று கூறவும், பாரதிதாசன், "பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தோரைச் சங்காரம் செய் என்று சங்கே முழங்கு" என்று துணிந்து கூறவும் முடிந்தது. "தமிழ் நாட்டின் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை" என்ற ஒரு கவியின் உள்ளம் நைந்த சொற்கள் மாறி, "எங்கெங்குக் காணினும் சக்தியடா" என்றவாறு எங்கெங்கும் தமிழ் முழங்கவேண்டும். மொழி நாட்டின் விழி என்பது அறிஞர் கருத்து. பயிர்களுக்கு இடையே களைகள் இருப்பதுபோல் நம் தமிழ் மொழியிலும் தேவையற்ற பிறமொழிச் சொற்கள் பல இருக்கின்றன. களையைக் களைந்தால்தான் பயிர் செழிப்பாய் வளரும். அதுபோல் தமிழிலுள்ள களையைப் போக்கினால்தான் தமிழ் சிறப்பு நிலையை அடையும். இதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

அன்னையின் அறைகூவல்

தமிழ்த்தாய் ஓலமிடுகிறாள்! சிலம்புச் செல்வத்தை அளித்த தமிழ்த்தாய் - மேகலையைக் கொடுத்த தமிழ்த்தாய் - குறளை ஈந்த தமிழன்னை - உதவி வேண்டுகிறாள்! நாமெல்லோரும் அவளின் புதல்வர்கள்! வாருங்கள் செல்வோம் உதவிக்கு!

அண்டை நாடு ஆந்திரம். அதைக்கண்டாவது தமிழை ஆட்சிமொழியாக்குவோம். தமிழைத் துச்சமாகப் பேசிய கனகவிசயர் தலைகளில் கல் சுமக்கச் செய்த செங்குட்டுவன் வழித்தோன்றல்கள் நாம்! பொறுத்தது போதும். எலியென நம்மை இகழ்ந்தவர் நடுங்கப் புலியெனச் செயல்செயப் புறப்படுவோம்!

கானல்வரி

[வித்துவான் ஆ. சிவலிங்கனார், மயிலம்.]

(சிலம்பு: உக, பரல்: உ, அகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோவலன் கடற்கரைப் பாடல் அவன் வேறொரு குறிப் புடையவன் போலத் தோன்றியதாதலின் மாதவியும், தானும் வேறொரு குறிப்புடையள்போலத் தோன்றும்படிப் பாடியது முறையாமா? அவள் பாடக் காரணம் யாதாகும்? இவையே நாம் காணவேண்டுவன.

உண்மையில் மாதவிக்குக் கோவலனையன்றிப் பிறன் ஒரு வன்பால் மனம் நாடியதேயில்லை. அவள் எச்செயலையும் தன் கோவலன் பொருட்டே செய்துவந்தாள். அவனை மகிழ்விப்பதே அவள் உட்கோள்.

> "நிலவுப்பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்துக்
> கலவியும் புலவியும் காதலற் களித்தாங்கு
> ஆர்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்
> கோலங்கொண்ட மாதவி" (சிலப் ச-நக-ச)

எனக் கூறுகின்றார் இளங்கோவடிகள். தான் நாடகக் கணிகை யாதலின், ஆடலும் பாடலும்கொண்டு பிறரை மகிழ்விக்கும் செயலையும்விடாது போற்றிவந்தாள். அம்முறையினாலே இந்திர விழாவிலும் அரங்கேறிப் பதினொருவகைக் கூத்துக்களையும் ஆடிக் களிப்பித்தாள். இங்குக் கோவலன், மாதவியின் ஆடலும் பாட லும் பிறர்க்கும் இன்பம் செய்தலைக்கண்டு பொறாதவனானான். அத னால் உள்ளத்து ஊடல் கொண்டான். அதனையுணர்ந்த மாதவி கூடற்குரிய ஊடல்என எண்ணி, அதனைப்போக்கத் தன்னை யழகுபடுத்திக் கூடல்உணர்வு தோன்றச் செய்தாள். இவ் விடத்தைத் தெளிவுபடுத்தவந்த உயர்திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் தமது சிலப்பதிகார ஆராய்ச்சியில் எழுதியன வற்றைக் காணலாம்.

> "அவளுடைய பாடலும் ஆடலும் அழகும் மக்கள் மனத்தை இன்புறுத்தக்கண்டு கோவலன் "ஊடற்கோலம்" உறுகின்றான். இங்கேதான், அவன் மாதவியைப் பிரிதற் குத் தோற்றுவாயாகிய மனப்பிளவு தோன்றுகிறது. இதனை மாதவி தெளிய உணராது, வாளாது, கூடற்குரிய ஊடலென்றே கருதி யொழிகின்றாள். அவனுவக்குமாறு

தனது கூந்தல் முதல் சீறடியீருகப் பலவகையுறுப்பும் அழகு திகழப் புனைந்துகொள்ளுகிறாள். இக்கோலம் கொண்டது அவன் உவக்குமாறே யன்றித் தன்னைக் காண் பார் மகிழுமாறு அன்று என்பதை அடிகள், "ஊடற் கோலமொடு இருந்தோன் உவப்ப" (கடலாடு, எஙி) என்றும், "கூடலும் ஊடலும் கோவலற் களித்துப், பாடமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள்" (கடலாடு கoஎ—கo) என்றும் நன்கு வற்புறுத்துவதனால், இம்மாதவி, நாடக மகளாயினும் குலமகட்குரிய கற்பும் பொற்பும் உடைய ளாய் இருந்தமை தெளிய விளங்குகிறது. கடற்கானற்குச் செல்லும்போதும் இம் மாதவி, கோவலனுடன் ஒரே ஊர்தியிற் செல்லாது, அவன் ஒரு கோவேறு கழுதைமேல் இவர்ந்து வரத் தானோர் வையமேறிச் செல்லுகின்றாள்"

(பக். சுசு, சுஎ)

இவர்கள் தம் கூற்றில், மாதவி குலமகட்குரிய கற்பும் பொற்பும் உடையளாக இருந்தமை தெளிய விளங்குகின்றது. ஆயினும் கணிகைக்குரிய குணமும் தலைதூக்குகிறது என்றும் கூற விரும்புகின்றேம். கணவன் பரத்தமை கொண்டானாயின், அவனை மனைவி, புலந்துகொள்வதும் பரத்தையைப் பழிப்பதும் செய் வள். அவ்விரண்டும் செய்யாதவளே கற்புடை மனைவியருள் ளும் சிறந்தவளாகக் கருதப்படுவாள். கோவலன் பாடிய "திங் கள் மாலை வெண்குடையான்" என்று தொடங்கும் பாடலும் இக்கருத்தையே வலியுறுத்தும். கண்ணகி அத்தகையவளே. மாதவியையும் பழித்தாளல்லள்; கோவலனையும் வெறுத்தாளல் லள். தீதிலா வடமீனின் திறம் உடையவளாதலின் அப் பெருங் குணம் பெற்றிருந்தாள்.

> "எழுதுங்கால் கோல்கோணக் கண்ணேபோல் கொண்கன்
> பழிகாணேன் கண்ட ..."

என்று கூறினாள் ஒருத்தி. அவளையும் விஞ்சினாள் கண்ணகி. கணவன் போற்றா ஒழுக்கம் புரிந்தானாகக் கருதினாளேயன்றி அதுபற்றி அவனைப்பழிக்கும் எண்ணம் கொண்டிலள். அதனா லன்றோ குலமகளிருட் சிறந்தவளானாள்! இனி மாதவியும் குல மகட் கற்புடையவளென்றால் அது குறைபாடுடையதாகும் என்க. மாதவி கோவலனையன்றிப் பிறனை நினையாதவள்தான். கோவ லன் கொலையுண்டதுகேட்டுத் தான் துறவறம் கொண்டதே அதனை வலியுறுத்தும். தன் மகள் மணிமேகலையையும், தன் தாய் சித்திராபதி வேண்டியும் கேளாது ஆடலரங்கில் நிறுத்தாது விட்டதுடன் அமையாது, துறவினை மேற்கொள்ளச் செய்ததும்

தாண்க. கோவலனும் கண்ணகியைப் பிரிந்தவன் மாதவியிடத் தங்கிவிட்டான். அதனால் கண்ணகியைப்பற்றிய நினை

"அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னைநும்
பெருமகள் தன்னொடும் பெரும்பெயர்த் தலைத்தாள்
மன்பெரும் சிறப்பின் மாநிதிக் கிழவன்
முந்தை நில்லா முனிவு இகந்தனனா
அற்புளம் சிறந்தாங் கருள்மொழி யளைஇ
எற்பா ராட்ட யானகத் தொளித்த
வாயல் முறுவற்கவ ருள்ளகம் வருந்தப்
போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" (சிலப் கொலை. எக-அக)

என்று கண்ணகி கோவலனிடம் கூறியனவற்றால் நன்கு அறியலாம். அன்றியும் வேறு பரத்தையையும் கருதினானல்லன். எனவே, அவனும் மாதவியால் பழிக்கப்படற் குரியனல்லன். மாதவியும் தான் கணிகையாதலின், 'குலமகளைப் பழிப்பது பரத்தையர்க்குண்டு' என்ற நிலையினையும் அடைதற்கு வாய்ப்பில்லாதவளானாள். இந்நிலையில், இந்திரவிழா நாளில் கடற்கானப் பாடல்மூலம் கோவலன்பால் குற்றம்கண்ட மாதவி செயற்பாலது யாது? கோவலன் வேறு குறிப்பில்லாதவன் என்பதை நன்கு உணர்ந்தவள், அவன் பாடலால் அவ்வாறு வேறாக உணர்ந்தவுடன் ஊடல்கொள்வது முறையேயன்றித் தானும் அவ்வாறு வேறு குறிபின்றியிருந்தும் உடையவள்போலப் பாடுவது அழகோ? இவள் செய்கை, "நீ யென்னையன்றி வேறொருத்தியை விரும்பியதால் நானும் நின்னையன்றி வேறொருவனை விரும்பினேன்," என்று தன் கணவனிடம் ஒருத்தி கூறின் அக்கூற்றை ஒக்குமன்றோ? குலமகள் அவ்வாறு கூறுவாளோ? கூறின் உலகம் தூற்றாதோ? எனவே, மாதவி பிறவகையில் சிறந்தவளானாலும் இக் கானல்வரிப்பாட்டளவில் தவறுடையவளாவள் என்பதில் ஐயமில்லை. எனினும், அவ்வாறு பாடுவது தவறு என அவட்குப் புலப்படவில்லை அப்போது. ஏன்?

மாதவி குலம் கணிகையர் குலம். மாதவியின் தாய் சித்திராபதி என்பவள் பொருள் மிகுதியாகக் கொடுத்தார்க்கெல்லாம் உரியவளாக இருந்தவள். மாதவி தன் மகள் மணிமேகலையைத் துறவுக்கோலத்தினளாகச் செய்த காலத்தில் சித்திராபதி தடுத்து தீய தொழிலிலேயே ஈடுபடுத்தும்படி வற்புறுத்தினாள் என்று மணிமேகலையால் அறிகின்றோம். அத்தகையவள் மகள்

மாதவியாதலின், அவள் குணம் மாதவியிடம் எஞ்சியிருக்கும் அன்றோ? அதன்வினையே கடற்கரைப்பாட்டில் மாறுபட்ட நிலையை மேற்கொள்ளச்செய்தது என்னலாம்.

> " தக்கார் தகவிலர் என்பது அவரவர்
> எச்சத்தாற் காணப்படும் "

என்பது வள்ளுவர் வாக்கு. தன் வினைப்பயத்தால்பெற்ற நற்குணங்களையும் அறிவையும்கொண்டு கோவலனுடன் குலமகளைப் போல் ஒழுகி வந்திருந்தாலும், குலப் பிறப்புக்குணமும்-அதாவது தன் தாயின் குணமும் உடையவளாய் இருந்தவளாதலின் அவ்வாறு பாடினள் என்க. தாயின் குணம் அடங்கிக் கிடந்து செயலறவுபட்டதாய் இருப்ப மற்றைக்குணங்கள் மேலோங்கி மாதவியை மாண்புறச் செய்தன. கானல்வரிப் பாட்டிடத்து மட்டும் ஊழ்வலியும் உடன் தூண்டக் குலப்பிறப்புக் குணம் தலைதூக்கிக் கோவலன் பிரியப் பின் அடங்கியது என்னலாம். எனவே, கோவலனுக்கு மாறாகப் பாடியது குலகமளின் மாண்புக்கு ஒவ்வாது என்னலாம்.

சிறந்தல் கடனே!

[நாஞ்சில், கா. கணபதி]

நம் எழுத்தும் இயற்றும் செயலும்
முழுமுதற் றாய்மொழி வழியே செய்க!
அண்டை நாட்டில் சொந்த மொழிதனை
மண்டு காதலால் மயங்கா தமூழ்ந்திப்
௫. பரப்புதல் பார்த்துப் பயில்வது கடனே!
அடிமை வாழ்வு அகன்ற பின்பும்
கொடிய பிறிது குதர்க்க மொழியை
வடிய நீக்கி வழங்குதல் கடனே.
செம்மை நல்கிச் சீரும் ஊட்டும்
௧0. வண்மைத் தமிழே வயங்கல் கடனே!
ஊரும் பேரும் உருவும் தெரியா
ஆரிய மொழிதனை அகற்றல் கடனே!
வழிவழி வழங்கும் தமிழ்மொழி வளரச்
செய்வன செய்து சிறத்தல் கடனே!

குமரிமுனை

[செ. முத்துவீராசாமி நாயுடு, B. A.]

குமரிமுனையை நினைக்கும்போது தென் தமிழ்நாடு, கடலால் கவரப்பட்ட நிகழ்ச்சியும் விளைந்த இழப்பும் நினைவுக்கு வருமாற்றான் உள்ளம் வருந்துகிறது. விளையாட்டாகத் தாம் மணலினால் அமைத்த இல்லங்களைப் பின் சிதைத்து மகிழ்தலும் பிள்ளைகளுக்கு விளையாட்டேயாவது போன்று, ஆக்கலையொத்து அழித்தலும் எல்லாம்வல்ல தெய்வத்தின் திருவிளையாட்டே போலும்! தென்னாட்டின் மறைவும் இவ்வாறே நிகழ்ந்ததென உணரினும் பல்லாயிர ஆண்டுகள் கழிந்தபின், இன்றுங்கூட, உள்ளம் ஆறுதல் கொள்வதில்லை.

கடந்த ஆடித்திங்களின் இறுதியில பாண்டி நாட்டிலுள்ள சில ஊர்களுக்குச் சென்று, ஆங்குள்ள கலைத்திறம் திகழும் திருக்கோவில்களில் இறைவனை வணங்கியபின் ஒருநாள் பிற்பகலில் குமரிமுனைக்குப் புறப்பட்டேன். முனநாள் பெய்த மழையின் பயனாகக் குளிர்ந்த மென்காற்று வீசிக்கொண்டிருந்தமையால், வெப்பம் தோற்றவில்லை. தண்ணிழ லளிக்கும் சாலை மரங்களிலிருந்து சில பறவைகள் பாடிக்கொண்டிருந்தன. யானிருந்த பேருந்து[1], திருவாங்கூர் எல்லைச் சுங்க நிலையத்தைக் கடந்தபின், அவ் விராச்சியத்தின் தென்பகுதியிலுள்ள தமிழர் வாழும் நாஞ்சில் நாட்டின் இடையே சென்றது. செல்லும் வழியிலிருந்த ஊர்களினிடை அப்பேருந்து தங்கிய போதெல்லாம் அந்நிலப் பகுதியில் ஏதோ பரபரப்பு ஏற்பட்டிருந்ததாகக் காணப்பட்டது. பேருந்திலிருந்தோர் உரையாடலிலிருந்து, தமிழர் வாழும் அப் பகுதியைச் சென்னை இராச்சியத்துடன் இணைத்திட வேண்டி மக்கள் நடத்திக்கொண்டிருந்த போராட்டத்தைத் தொடர்ந்து, அந்நாடெங்கும், அடுத்த நாள் வேலை நிறுத்தமும், ஊர்வலங்களும்நிகழ்த்துவதெனக்கொண்ட திட்டத்தைப் பற்றியதே அப் பரபரப்பென்பது தெரியவந்தது.

மலையாளிகள் வாழும் அந்நாட்டின் எஞ்சிய பகுதி, முன்னாள் சேரநாட்டின் ஒரு பகுதியேயாகும். மலையாளிகளின் முன்னோரும் அன்னார் அரசர்களாகிய சேரரும் தமிழரேயாவர். தமிழ் இலக்கிய நூல்களின் முன்னணியில் நிற்பதும் ஒப்பற்ற

1. பேருந்து-Bus

நாடகக் காப்பியமெனப் போற்றப்படுவதுமான சிலப்பதிகாரத்தைத் தந்தருளியவர் அந்நாட்டின் இளங்கோ ஒருவரே யாவர் எனவும், மொழிமாற்றத்தினால், அதற்குக் காரணமாயிருந்த வேற்றுவகுப்பினர் நாகரிகத்தைப் படிபடியாகத் தழுவியவர், நாட்கள் கழியக்கழிய அம்மாற்றத்தை ஏற்காத நாட்டின் பிற பகுதியினரைத் தம்மில் வேறுபட்டவரென்று கருதலாயினர். அவ் விருவகுப்பின் வழிவந்தோரிடையமைந்த வேற்றுமை இன்று முற்றிவிட்டமையால். தமிழர், அடுத்துள்ள தமிழ்நாட்டுடன் தாம் வாழும் நிலப்பகுதியை இணைத்துக்கொள்ள விரும்பிப் போராடுவதில் வியப்பொன்றுமில்லை.

எழுந்த இந் நினைவுகளைச் சிந்தைசெய்து கொண்டிருக்கும் போது, பேருந்து, குமரிமுனையின் தென் கிழக்கிலுள்ள அரசினா சாவடியின் முன்நிலைக்கு வந்தது. இறங்கிச் சென்று அச் சாவடியின் கீழ்புறம், மதில்சுவரை யடுத்துள்ள ஒரு அறையில் தங்கினேன். அவ்வறையின் கீழ்புறமுள்ள பலகணியினூடு, வங்காள விரிகுடா காணப்பட்டது. அதன் அலைகள் அம்மதில் நிற்கும் பாறைகளின்மீது தாக்கும் ஓசை ஒலித்துக்கொண்டே இருந்தது. மாலைப்பொழுது அணுகியது. பகலவன் மறையும் கோலத்தைக் காணவிரும்பி, அறையைவிட்டு வெளிப் போந்தேன். வீசும் குளிர்ந்த காற்றினால் பகலவன் வெப்பம் தோற்றவில்லை. அவன் ஒளி நிலவொளியெனத் காணப்பட்டது. மதில் சுவரைக் கடந்து சிறிது கிழக்கே சென்றதும், நேரே தென்புற மமைந்த வீதியின் கோடியில் குமரித் தெய்வம் எழுந்தருளி யிருக்கும் திருக்கோயிலின் வடவாயிற் கோபுரம் தென்பட்டது. அவ்வீதியொழிய, இல்லங்கள் நிரல்பட அமைந்த தெரு அப் பாக்கத்திடை வேறொன்றுமில்லை. அத்திருக்கோயிலிலும், அரசினர் களரிகளிலும், சாவடிகளிலும் வினையாற்றும் அலுவலர்களும் ஆங்குள்ள சில உணவு விடுதிகளிலும், சில நாளங்காடிகளிலும் உள்ளவர்களுமே அச் சிற்றூரின் குடிகளாவர். உழவும் பிற தொழில்களும் நிகழாமையின் மக்கள் பலர் கூடி வாழ்வதற்கான வாய்ப்புகள் ஆங்கில்லை. எனவே, மக்கள் திரளாக வாழும் ஊர்களிடை மேவும் சந்தடியும் இரைச்சலும் ஆங்கில்லை; அமைதி மேவி நிற்கின்றது. திருக்கோயிலின் வலப்புறஞ் சென்று, அதனை யடுத்துத் தென்புறமுள்ள முனையை யடைந்தேன்.

இச்சிறு மணற்பரப்பின் நாற்புறமும் தாழ்ந்த மதில்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. நடுவில் ஒரு கல்மண்டபம் நிற்கின்றது. தென்மதிலிடையமைந்துள்ள படித்துறையின் கீழ், சிறு பாறைகளினிடை, தென்கடலும் வங்காள விரிகுடாவும் அராபிக் கடலும் கூடும் புண்ணிய நீர்ச்சந்தியுள்ளது. முனைக்குக் கிழக்கிலும்

தெற்கிலும் தென்மேற்கிலும் கற்பாறைகள் கடற் பரப்பின்மீது காணப்படுகின்றன. கரையை நோக்கிவரும் அலைகள் அப்பாறைகளின்மீது தாக்கிச் சிதைந்து வேகந் தணிந்து மதிலில்மோதியலம்புகின்றன. மேற்கிலும் வடக்கிலும் நாட்டின் நிலப்பரப்பே காணப்படுகின்றது. முனையைச் சுற்றிலுமிருக்கும் கற்பாறைகளிடையே வெளிறிய பொன்வண்ண மணற்பரப்பின்மீது செம்மணலும் கருமணலும் அரிகளெனப் படிந்துள்ளன.

முனையின் மாலைக் காட்சியைக் காணவந்த சிலர், கல்மண்டபத்தில், மேற்குநோக்கி அமர்ந்திருந்தனர். யானும், அங்குற்று, ஒருபுறம் இருந்தேன். அலைகள் ஒல்லென ஓயாது ஒலித்துக் கொண்டிருந்தன. வானவெளியும் வெள்ளிப்புகைத் தொகுதி போன்ற முகிற்கூட்டங்களும் கடல்அலைகளின் பரப்பும் அவற்றின் சிதைந்து தெறிக்கும் நீர்த்துளிகளும் பொற்றட்டென ஒளிரும் கதிரவன் ஒளியில் பொன்னென மிளிர்ந்தன. இடையே காணப்பட்ட நீர்ப்பறவைகளும் திருக்கோயிலும் பல பொருள்களும் பொன்னொளி போர்த்துப் பொலிந்தன. கடலும் நிலமும் பொருந்திய வட்டப் பரப்பும் அதன்மீது கவிந்து நின்ற வானவெளியும் சேர்ந்து நல்கிய தோற்றம் ஒரு மாபெரும் பொற்பேழை போன்று திகழ்ந்தது. பொறுப்பும் வறுமையும் பூசலும் கவலையும் மேவும் வாழ்க்கையி லீடுபட்டு அமைதிகெட்டு, இன்னலுறும் மக்கள் திரள் திரளாகக் கூடிவாழும நம்நாட்டின் தென்கோடியில் அமைதி மேவிநிற்கும் முனையில் அக்காட்சி இன்பமே நிலவும் பொன்னாடெனப் பொலிந்தது. இயற்கையின் வனப்பு இருந்தவாறுதான் என்னே!

அக்காட்சியின திருவில என மனம என்னை யான் மறந்தேன் போலும். இவ்வாறு சிறிது நேரம் கழிந்திருத்தல் வேண்டும். உணர்வு மீளும்போது அருகில் அமர்ந்திருந்தவர் உரையாடலின் குரலும் அலையோசையும் மெல்லென என் காதிற்பட்டன. பகலொளி பெரும்பாலும் மங்கியிருந்தது. மேற்கே, வானவெளியில் சிறிது படர்ந்திருந்த செவ்வொளி இருளொடு தோய்ந்து நின்றது. மண்டபத்திலிருந்த பிறர் நீங்கினர். இரவு மேவிற்று.

கீழ்வானத்திலிருந்த மதியின் ஒளி கிளர்ந்து பரவிற்று. கோள்களும் சில நாள்களுமே வானில் தென்பட்டன; பிற, நிலவொளியில் மறைந்து நின்றன. இருள் சிறிது செறிந்தது. படரும் நிலவொளி, வானவெளியிலும், திரையும் கடற்பரப்பின் மீதும், நிலப்பரப்பிலும் மேவி மிளிர்ந்தது. நிரம்பிய அமைதியினிடையில் மேவும் அலையோசை அவ்வமைதியின் வீக்கத்தையே உணர்த்திற்று.

அவ்விடை, மீண்டும் மீண்டும் ஓயாது திரைந்தும் எழுந்தும் சுருண்டும் மடிந்தும் விழுந்து அரற்றி யழுங்கும் கடற்பரப்பை நோக்கிக்கொண்டிருந்தேன். அங்ஙனமாகக் குமரிக் கண்டத்தைப் பன்னூறாண்டுகட்குமுன் கடல் மேவி யழித்தது என் நினைவிற்கு வரவும் அந்நிகழ்ச்சியின் காட்சி என் மனவெளியில் தோன்றிற்று. தென்கடல் பொங்கி நிலத்தைக் கவர்ந்திட, வாகுடை மாந்தரும் வனப்புடை மாதரும் வயங்கெழில் மக்களும் வடிவும் வண்ணமும் சாயலும் பீடுமுடைய புள்ளும் மாவும் பிற உயிரும் அல்லலுற்று மடியத் திருக்கோயில்களும் மாடமாளிகைகளும் மதிப்பிடற்கரிய முத்தமிழ் நூல் நிலையங்களும் பிற அருங்கலைச் செல்வங்களும் கல்லூரிகளும் பள்ளிகளும் அரங்குகளும் மன்றங்களும், அங்காடிகளும் துறைமுகவிடுதிகளும், களரிகள் பலவும், குடில்களும் சோலைகளும் பிறவும் கடலுக்குள் ஆழ்வதும், விளையும் அவலமும் கண்டு என் உள்ளம் திடுக்கிட்டுத் துயர்க்கடலுள் ஆழ்ந்தது. உணர்வு மீண்ட பின்னும் அவ்வவலக் காட்சி என் மனத்திரையினின்றும் அகன்றிலது. அலையோசையில், அவ்வவல நிகழ்ச்சியின்போது எழுந்த பல குரல்களும் கலந்திசைத்தன என்று உணர்ந்தேன்.

கலைகள் பலவும் மன்பதையின் நாகரிகமும் பிறந்த பழந்தமிழ் நாட்டிற்கு நேர்ந்த அவலந்தான் என்னே! கடலின் இகழ்ந்துபட்ட செயலின் கொடுமைதான் என்னே! பனிமலை வரையும் நிலவி நின்ற அவர் மொழியும் நாகரிகமும் வேற்று மொழி நாகரிகங்களினால் தாக்குண்டு உருமாறிப் பிற பெயர்களொடு வழங்கிடத் தமிழ்வழங்கும் பரப்பு மிகச் சுருங்கி மெலிந்த நிலைதான் என்னே! விளைந்த இன்னலும் இழப்பும் எத்துணையாம்! அளவிடற்குமாமோ! அன்பே வடிவான எல்லாம் வல்ல தெய்வத்தின் திருவுள்ளம் இருந்தவாறுதான் என்னே! என்னே!

ஓயாது திரிவதும் எழுவதும் கரையில் மோதி விழுந்திரைதலும் செய்யும் கடலின் பித்தங்கொண்ட தன்மை, அடாத செயலால் நிலத்தைக் கவர்ந்து அளவில்லாத இன்னலை விளைவித்ததன் பயனாகவே நேர்ந்தது போலும். காற்றில் மேவிய குளிர் மிகுந்தது. அமைதி கெட்டு அல்லலுறும் நெடுஞ்சொடு மெதுவாகப் பெயர்ந்து சென்று என் இருக்கை சேர்ந்தேன். துயிலும் வரையும், கடலுளாழும் தென் தமிழ்நாட்டின் அவலக் குரல், கடலிரைச்சலில் மேவி ஒலித்தலை யுணர்ந்தேன். எனவே அவ்விரைச்சலைக்கேட்கும்போதெல்லாம் தூண்டப்பட்ட [illegible] போன்று என் வருத்தம் மிகுந்தது.

காலையி லெழுந்து, அறையிலிருந்தபடியே, பலகணியினூடு, மெல்லெனத் திரையும் கிழக்குக் கடலின் பரப்பைக் கண்ணுற்றேன். வெளியே, பலர் கதிரவன் தோற்றத்தைக் காண்பதற்குக் கூடியிருந்தனர். யானும் வெளிப்போந்தேன். நீலமும் பொன்னும் சிவப்பும் பிற வண்ணங்களுமுடைய சித்திர உடைகளை யணிந்த இளஞ் சிறாரும் மெல்லியன் மாதரும் அவருடன் போந்த மாந்தரும் தாழ்ந்த மதில் சுவரின்மீது அமர்ந்தவரும் நின்றவரும் பலர், கீழ்பால் திசையை நோக்கிய வண்ண மிருந்தனர். பனியின் மென்படலம் மேவிய வான வெளியும், இடையில் மெல்லெனத் திரியும் திரைந்த மணற் பரப்பை யொத்த முகிற் கூட்டமும், கடற் பரப்பும் மெல்லெனச் சிவந்து ஒளிரலாயின. ஒளி மேன்மேலும் மிகுந்தது. தண் பூங் காற்று மெல்லென வீசிற்று. கடற் பரப்பின் விளிம்பின் ஓரிடத்தில் மிகுந்த செவ்வொளி கிளர்ந்து பொலிந்தது. ஒரு நொடியில், மலரும் செந்தாமரையை யொத்துக் கதிர் வட்டத்தின் ஒரு பகுதி கடல் விளிம்பின் மீது தோன்றிற்று. பின், மெதுவாகப் பரிதிவானவன் முழு வட்டமும் நீலக்கடல் மீது செம்மணி போன்று நின்ற காட்சி, நீலமயிலின்மீது செவ்வேள் அமர்ந்த காட்சியொடு உவமிக்கும் திருமுருகாற்றுப்படையின் அடியை நினைவு கொளச் செய்தது. திருக்கோயில் மணி ஒலித்தது. அமைதியுடன் செஞ்ஞாயிற்றின் தோற்றத்தை நோக்கியிருந்தவர் பெயர்ந்து சென்றனர்.

அக்காட்சியைப் பிரிய இசையாத உள்ளத்தொடு பிரிந்து சென்று, முந்நீர்த் துறையில் நீராடிய பின், திருக்கோயிலை வலஞ் செய்து, கன்னித்தெய்வத்தை வணங்கி விடைபெற்று, என் இருக்கையை யடைந்து, அங்கிருந்தும் திருவனந்தபுரம் செல்வதற்கு வெளிப்போந்து, சாவடியின் முன் நின்ற பேருந்தில் அமர்ந்தேன்.

அங்ஙனமாகச் சிறிது நேரத்தில் பேருந்து நிற்கவும் புறத்தே நோக்கினேன். புராரியுடன் காத்தற்கடவுளான திருமாலும் ஒருசேரக் கோவில் கொண்டெழுந்தருளியுள்ள சுசீந்திரத் திருக்கோயிலின் அகன்றோங்கிய கோபுரத்தைக் கண்டேன். அக்கோபுரத்தைக் கண்டதும் தென்னாடு கடலுக்குள் மறைந்த போது வடநாட்டின் வடவெல்லையில், உலகிலேயே உயர்ந்த சிகரத்தைக்கொண்ட பனிவரை தோன்றிய நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்தது. நிலைத்த பேறு, அருட்பெரியார் மனதுக் கிசைந்த, கங்குல் பகலற நின்ற எல்லையில்தான் உள்ளது போலும்!

தென்னிந்திய தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி

தமிழ்ப்புலவர் மாணவர்தேர்வு

இச்சங்கச் சார்பில் 1955 பிப்ரவரி 21-ஆம் தேதிமுதல் 6 நாட்கள் சென்னை மாநிலப் புலவர் கல்லூரிகளிலும், நெல்லை, சென்னை, கம்பம் முதலிய இடங்களில் நடந்த தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வுக்கு விண்ணப்பித்தவர்கள்: வித்துவான் இறுதிநிலை 25, முதனிலை 41, புகுமுகம் 21 ஆக 87. எழுதாதவர்கள் 13, தேர்ந்தவர் 66. இவர்களில் முதற்றகுதியில் தேர்ந்த முதல் மூவர்கட்குமட்டும் அவ்வவ் வகுப்பு நிலையில் குறிக்கப்பெற்ற பரிசுத்தொகைகள் வழங்கப்படும். தேர்ச்சி யுற்றிருப்பவர்கள் அனைவருக்கும் சங்க முத்திரையுடன்கூடிய தகுதித் தாள்கள் வழங்கப்படும்.

வித்துவான் இறுதிநிலை

முதற்றகுதியில் முதன்மையானவர்

பதிவெண் 95. மு. பழனிமுத்து, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள் ரூ. 50

„ 90. கு. இராமகிருஷ்ணன், 2-வது பரிசு „ ரூ. 35

„ 93. வே. சின்ன சீனிவாசன், 3-வது பரிசு „ ரூ. 25

வித்துவான் முதனிலை

பதிவெண் 213. பெ. லலிதாபாய், முதற் பரிசு ரூ. 40
திருவள்ளுவர் செந்தமிழ்ப் புலவர் கல்லூரி, நெல்லை.

வித்துவான் புகுமுகம்

பதிவெண் 185. சின்னுக் கவுண்டர், கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்—முதற் பரிசு ரூ. 20

„ 182. சி. கண்ணுசுவாமி, பெரியகுளம், 2-வது பரிசு ரூ. 15

„ 179. இரா. இராமநாதன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள். 3-ஆவது பரிசு ரூ. 10

வித்துவான் இறுதிநிலையில் இரண்டாந் தகுதியில் தேர்ச்சியுற்றவர் வரிசை:

பதிவெண்	84.	சு. சடையப்பன், K.V.S.S. கல்லூரி திருப்பனந்தாள்.	
„	92.	வீ. திருப்புளி	„
„	89.	R. வேதையா	„
„	91.	கு. இராமசாமி	„
„	88	கு. கிருஷ்ணன்	„
„	94.	இல. அண்ணுமலை	„
„	96.	க. இளங்கோவன்	„
„	86.	மு. பாலகிருஷ்ணன்	„
„	85.	மா. முத்துக்கிருஷ்ணன்	„
„	101.	நா. ஆளவந்தார்	„
„	99.	வே. சிரஞ்சீவி	„
„	103.	பொ. முருகையன்	„

மூன்றாந் தகுதியிற் றேர்ச்சியுற்றவர்கள்

பதிவெண் 102. மா. சுப்பிரமணியன்
K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்
" 83. ரா. சானகிராமன் "
" 87. ச. பரமசிவம் "
" 107. வி. தா. சுப்பராய பிள்ளை, கரும்பூர்.
" 104. அ. சற்குண பாண்டியன், கம்பம்.

வித்துவான் முதனிலை (இண்டர் D) யில் இரண்டாந் தகுதியில் தேர்ந்தவர் வரிசை

வண் 195. விமலா தங்கையா, (இண்டர் D) சாரா தக்கர் கல்லூரி, பாளையங்கோட்டை.
" 180. சி. சுந்தரகிருஷ்ணன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
" 214. சாவித்திரி முத்தையா, திருவள்ளுவர் செந்தமிழ்ப் புலவர் கல்லூரி, நெல்லை.
" 183. சு. கைலாசம், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்
" 194. வயலா சார்லஸ் (இண்டர் D) சாரா தக்கர் கல்லூரி, பாளையங்கோட்டை.
" 212. செ. கா. அருணாசலம், கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

மூன்றாந் தகுதியில் தேர்ந்தவர் வரிசை

பதிவெண் 182. து. சோ. நடராசன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
" 175. வ. சேகராசன் "
" 178. அ. துரைராசு "
" 211. பி. தங்கராசன், கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
" 210. ஆ. பி. வெள்ளையப்பன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
" 179. கோ. அழகிரிசாமி, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
" 201. க. நாகரத்தினம், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
" 185. ச மா. ஈசுரன், K.V.S.S. கல்லூரி, திருப்பனந்தாள்.
" 200. க. சுப்பிரமணியன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
" 181. R. அரங்கநாதன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
" 176. உ. கோவிந்தசாமி, K. V. S. S. "
" 202. முருகேசன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
" 174. கி. வேங்கடராமன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
" 196. இராமலக்குமி சங்கரராமன், (இண்டர் D) சாரா தக்கர் கல்லூரி, பாளையங்கோட்டை.

பதிவெண் 204. சுப்பிரமணியன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
„ 193. வே. கனகசபாபதி, கம்பம்.
„ 177. திருமூர்த்தி, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
„ 208. வெ. தனபாலன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
„ 206. ந. பொன்னுசாமி „
„ 205. ப. பொன்னுசாமி „
„ 199. தி. வ. கலியாணசுந்தரம், (இண்டர் D) ம. தி. தா. இந்துக்கல்லூரி, நெல்லை.
„ 207. மா. கோடீசுரன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.

வித்துவான் புதுமுகத்தில் இரண்டாந் தகுதியிற் றேர்ந்தவர் வரிசை

பதிவெண் 175. அ. சிவசுப்பிரமணியன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
„ 184. M. A. இராமசாமி, கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
„ 168. பொ. முத்து, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.

வித்துவான் புதுமுகத்தில் மூன்றாந் தகுதியிற் றேர்ந்தவர் வரிசை

பதிவெண் 183.ச. சுப்பிரமணியன், கம்பம்.
„ 176. K. ஞானசம்பந்தம், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
„ 170. சி. அ. அனந்தராமன், „
„ 171. சி. சொக்கன், „
„ 173. சு. இராசமாணிக்கம் „
„ 165. K. G. தியாகராசன், „
„ 174. கா. மாரிமுத்து, „
„ 178. N. சோமசுந்தரம், „
„ 181. க. முத்தையன், „
„ 166. வி. சிவலிங்கம், „
„ 169. வ. முத்துசாமி, „

தெ. த. சங்கம்,
நெல்லை,
7-5-55.

பு. சி. புன்னைவனநாதன்,
புலவர்குழுத் தலைவர்.

திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை

(சிலம்பு - உக, பரல் - கூ, பக்கம் - சOச-இன் தொடர்ச்சி)

அதிகாரம் - சஉ

அறிவுடைமை*

அஃதாவது ஆவனவும் ஆகாதனவும் பகுத்தறிதல் உடைய னாதல். இது கல்வி கேள்விகளான் ஆதலின் ஈண்டு வைக்கப் பட்டது. எனவே, அதிகார முறைமை பெறப்பட்டது.

இவ் வதிகாரத்தில், அறிவனது சிறப்பும், இலக்கணமும், அறிவுடையார திலக்கணமும், அறிவுடையார் எய்தும் நன்மை யும், அறிவுடையார்க்கும் அறிவிலார்க்கும் உள்ள வேறுபாடும் முறையே கூறுவான் வைத்த ஆசிரியர் முதற்கண் அறிவினது சிறப்புக் கூறுகின்றார்.

சஉக. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
 முள்ளழிக்க லாகா வரண்.

(இ - ள்.) (ஒருவனுக்கு) அறிவு - அறிவானது, அற்றம் காக்கும் - கேடு (வராமல்) காக்கும், கருவி - படைக்கருவி (போல்வதாம்); (அஃதேயன்றி) செறுவார்க்கு - (கெடுக்கக் கருதி வரும்) பகைவர்க்கு, உள் அழிக்கலாகா - உள்ளே (புகுந்து) அழிக்க முடியாத, அரணும் - அரணும் (போல்வதாம்). (எ-று.)

(இ - து.) கேட்டைக் கெடுக்கும் கருவியும் கேட்டைத் தடுக்கும் அரணும் போல்வது அறிவு. (எ - ம்.)

செறுவார்க்கும் என்பதில் உள்ள உம்மை அரணுக்குப் பிரித்துக் கூட்டப்பட்டது. 'அளக்கலாகா உள்ளரண்' எனக் கூட்டிப் பொருள் கொண்ட ஆசிரியர் பரிமேலழகரும் மேல் நின்றவாறே வைத்துப் பொருள் கோடலை உடன்பட்டார்.

கேடென்றது உயிர்க் கேடு பொருட் கேடு முதலாய இம் மைக் கேடுகளையும் மறுமைக் கேட்டையும் குறிக்கும். படைக் கருவி இயங்கிக் காப்பது; அரண் நிலைத்துக் காப்பது. அறிவு சூழ்ச்சியாய் இயங்கியும் தன்னளவாய் நிலைத்தும் கேடுவாராமற்

---

*இஃதோடு தண்டபாணி விருத்தியுரை முடிவுறுகின்றது. இதற்கு மேல் எழுதியன கிடைக்கப் பெறவில்லை.

காத்தலின், கருவியுமரணும் போல்வதாயிற்று. செறுவார் என்றது புறப்பகைவரையே யன்றிச் செருக்கும் சினமும் முதலாய அகப் பகைவரையுமாம். என்னை? வருமதிகாரத்திற் 'குற்றமே காக்க பொருளாகக் குற்றமே - யற்றந் தரூஉம் பகை' (குறள், சங்ச) என்பாராகலின்.

சிறப்புப்பற்றி அரசர்க்குரியனவாக அரசியலிற் கூறப்பட்ட பலவும் பிறர்க்கும் ஒவ்வுமென முற்கூறிய தீண்டுத் தெளிய விளங்குமாறு காண்க.

அறிவினது சிறப்புக் கூறிய திது. (க)

இனி வரும் ஐந்து குறள்களால் அறிவினது இலக்கணங் கூறுவான் வைத்து, அறிவுதான் உள்ளம் பற்றியும் உரைபற்றியும் செயல்பற்றியும் நிகழ்தலின் அம் மூச் சார்பின் முதலதான உள்ளத்தினைப் பற்றி நிகழும் அறிவினது இலக்கணத்தை வருங் குறளாற் கூறுகின்றார்.

சஉஉ. சென்ற விடத்தாற் செலவிடா தீதோரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

(இ - ள்.) (உள்ளத்தை) சென்றவிடத்தால் - (அது) செல்லும் வழியிலெல்லாம், செலவிடாது - செல்லவிடாமல், (நல்வழியும் தீவழியும் அறிந்து) தீது ஒரீஇ - தீயவழியினின்று (அதை) நீக்கி, நன்றின்பால் - நல்ல வழியில், உய்ப்பது - செலுத்துவது, அறிவு - அறிவாம். (எ - று.)

(இ - து) மனத்தை அதன் விருப்பத்தின் வழியே செல்லவிடாமல் நல்வழியிற் செல்லவிடுவது அறிவு. (எ - று.)

செல்லும் எனற்பாலது சென்ற என இறந்த காலமாக நின்றது, மயங்கு மொழிக் கிளவி யாதலின்; 'இறப்பே யெதிர்வே யாயிரு காலமுஞ் - சிறப்பத் தோன்று மயங்கு மொழிக் கிளவி' என்பது தொல்காப்பியம்—வினையியல்—சூத்திரம் ருo. இடம் என்றது நெறியை. இடத்தால் என ஏழாவதன் பொருண்மைக்கண் மூன்றாவது மயங்கிற்று. விடாமல் எனற்பாலது ஈறுகெட்டு நின்றது. தீது நன்று என்பன அவ்வந் நெறியைக் குறித்து நின்றன. 'உய்ப்பது' என்னுஞ் சொற்குறிப்பால், குதிரையை நெறியறிந்து உய்ப்பான் பாகனுதல் போல, உள்ளத்தை நெறியறிந்து உய்ப்பது அறிவு என உவமங் கொள்ளப்படும். உள்ளம் என்னும் செயப் படுபொருள் வினைக்கியைபாதல் நோக்கி வருவித்துரைக்கப்பட்டது.

உள்ளத்தின் சார்பாக நிகழும் அறிவினதிலக்கணங் கூறிய தி து. (உ)

உரையின் சார்பாக நிகழும் அறிவினதிலக்கணங் கூறுவான் வருவன வருமிரு குறள்கள்.

௪உ௩. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) எப்பொருள் - யாதொரு பொருளை, யார்யார் வாய் - யாவர் யாவர் சொல்ல, கேட்பினும் - கேட்டாலும், அப் பொருள் - அந்தப் பொருளின், மெய்ப்பொருள் - மெய்யான உண்மையை, காண்பது - காணவல்லது, அறிவு - அறிவாம். (எ - று.)

(இ - து.) யார் எதைச் சொன்னாலும் அதில் உண்மைப் பொருளைக் காணவல்லதே அறிவு. (எ - ம்.)

யார் யார் என்ற அடுக்கு பன்மை பற்றி வந்தது.

அறிவு உயிர்க் குணமாதலால் அஃது இன்னார் இனியார் என்னாது எல்லாரிடத்தும் காணப்படும். அற்றேல் அறிவுடை யார் அறிவிலார் எனப் பகுக்குமா றென்னையோ வெனின், காணப்படும் அறிவின் மிகுதியுங் குறைவுங் குறித்த தப் பாகு பாடே யன்றிப் பிறிதில்லை யென்க. என்னை? 'குணநாடிக் குற் றமு நாடி யவற்றுண் - மிகைநாடி மிக்க கொளல்' (௫0௪) என் றார் ஆசிரிய ராகலின் என்பது.. அஃதாகவே, 'எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண் - மெய்ப்பொருள் காண்ப தறிவு' (குறள், ௩௫௫) ஆதலான் எவரும் ஒரொருகால் ஒரு சிறிதளவேனும் மெய்ப்பொருள் காண்டல் இயலும். கண்டால் அவர் உரையில் அவர் கண்ட மெய்ப்பொருள் விரவிக்கிடத்தலும் இயலும்.

அஃதேயுமன்றி முக்குணங்களும் மாறி மாறி வருதலின் அறிவான் மிக்காரிடத்தும் ஒரொருகால் உள்ளீடின்றி வெளி றிய பொய்ப்பொருள் காணப்படுதலும் இயலும். என்னை? 'அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா - லின்மை யரிதே வெளிறு' (௫0௩) என்றார் ஆசிரிய ராகலி னென்பது. ஆகவே, உரைப்பாரது உயர்வு தாழ்வு குறியாது அவர் உரையினை ஆராய்ந்து அதன்கண் காணப்படும் மெய்ப்பொரு ளுண்டேற் கொண்டு இல்லையேற் றள்ளுதலே அறிவுடைமை என்பதாயிற்று.

அழுவுடையார் அறிவிலார் என வரைவாது யார் யார் எனப் பொதுப்படக் கூறினமையின், புகழ்வார் இகழ்வார் எனவும் நட்டார் பகைவர் எனவும் பெரியார் சிறியார் எனவும் வேறு பிறவாற்றானும் வேற்றுமை குறியாது அவரவர் கூற்றினை ஆராய்ந்து அக் கூற்றின்கண் உள்ள மெய்ப்பொருளைக் கொள்வது அறிவு என்பதாயிற்று. என்னை? ஓரோவழிப் புகழ்ச்சியிற் பொய்யும் இகழ்ச்சியில் மெய்யும் நண்பருரையிற் கேடும் பகைவர் உரையில் நன்மையும் பெரியார் உரையில் வெளிற்றறிவும் சிறியார் உரையில் மெய்யறிவும் காணக்கிடத்தலினென்பது. இதுபற்றியன்றே ஆசிரியர், 'புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை, இகழ்வாரை நோவ தெவன்' (உ௩௭) எனவும், முகத்தினினிய நகாஅ வகத்தின்னா, வஞ்சரை யஞ்சப்படும் (அ௨௪) எனவும், 'உருவு கண்டெள்ளாமை வேண்டு முருள் பெருந் தேர்க், கச்சாணி யன்னா ருடைத்து' (௬௬௭) எனவும்,...........

நால்வர் திருமணிமாலை

[திரு. சிவானந்த சுவாமிகள்]

காப்பு

நேரிசை வெண்பா

செப்பரிய மெய்ஞ்ஞான சம்பந்தர் சேவடியை
அப்பர் திருவடியை ஆரூரர்—ஒப்பில்
கமலத் திருவடியை வாதவூரர் காலை
விமல மனமே நினை.

நாயக வணக்கம்

தெற்கு முகமாகித் தென்கூடல் வீற்றிருக்கும்
முக்குறுணி ஐங்கரனும் முன்னிற்க—சற்குருவும்
நால்வர் புகழ்மாலை நான்பாட நாமகளும்
சால்புபெற நிற்கவே தான்.

திருஞானசம்பந்தர்

கட்டளைக் கலித்துறை

பூவே நிறைந்தநற் பொய்கையிற் பாலுண்ட புண்ணியமே
பாவே யருமறை யாமெனப் பாடிய பாவலனே
கோவே திருமரு மார்பனும் வேதனுங் கொண்டுதொழுந்
தேவே திருஞான சம்பந்த னென்னுமெய்த் தேசிகனே. (௧)

(தொடரும்)

தமிழ் எழுத்துக்களின் சிறப்பு

[சைவப்புலவர், இராவ் சாகிப், டாக்டர் தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை,
L. M. S. S. A., M. R. A. S. LOND.,]

தமிழ் நெடுங்கணக்கு—முறை, நிலை, உருவம் மாத்திரை முதலியன

கடந்த சில ஆண்டுகளாக, தமிழ் எழுத்துக்களைப்பற்றி, பொதுவாய், 'செந்தமிழ்ச் செல்வி,' 'தொண்டன்' முதலிய வெளியீடுகளில், எம் கருத்துக்களைத் தெரிவித்துள்ளோம். இங்கு எடுத்துரைப்பது எமது நோக்கம். தமிழ் எழுத்துக்களின் வரிசை, தமிழில் 'தமிழ்நெடுங்கணக்கு' என்றும் ஆங்கிலத்தில் 'Tamil Alphabet' என்றும் அழைக்கப்படும். இவண், இனி எடுத்துரைக்கப்படும் பொருள்களை 'சிறப்புக் குறிப்புக்கள்' என்றழைப்பது பொருத்தம். இங்குக் கூறப்படும் பொருளை, மக்கள் எல்லாரும் எளிதில் அறிவதே எமது குறிக்கோள் ஆதலின், மிக எளிய நடையில் எழுதுவதே எமது பேரவாவுமாகும்.

தமிழ் எழுத்துக்கள் - முற்கூறிய பொதுக்குறிப்புக்களைப் தொகுத்துக் கூறல்

இன்று தமிழகத்தில் நிலவுகின்ற நூல்களில், மிகப் பழமையானது தொல்காப்பியம் என்பது யாவரும் அறிந்ததே. இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறாண்டுகளுக்கு முந்தியதென்று தமிழ்ப்பேரறிஞர் பலர் கணக்கிடுகின்றனர்; ஐயாயிரம் ஆண்டுக்கு முற்பட்டதென்றும், எண்ணாயிரம் ஆண்டுக்கு முந்தியதென்றும் ஒரு சிலர் கூறுகின்றனர்.

பண்டைத் தொல்காப்பியர் குடியில், தோன்றிய புலவர் ஒருவரால் எழுதப்பட்டமையால் தொல்காப்பியம் எனப் பெயர் பெற்றதென்பார் சிலர்; இன்னும் தொன்மை+காப்பியம்= தொல்காப்பியம் என்று பிற்காலத்தவரால் அழைக்கப்பட்டதென்று கூறுவாரும் உளர். எங்ஙனமாயினும், இந்நூல் திருக்குறளுக்கும் கடைச்சங்க இலக்கியங்களுக்கும் முந்தியதென்பதை தமிழறிஞர் யாவரும் ஒருங்குசேர ஒப்புக்கொள்வர்.

இந்நூலில் எடுத்தோதப்பெற்றபடி, தமிழ்நெடுங் கணக்கு - எழுத்துக்கள், உயிர் - 12, மெய் - 18, சார்பெழுத்து-3 ஆக முப்பத்து மூன்று (33) எழுத்துக்களாலாயது என்று கூறப் பட்டுள்ளது. இந்த 33 எழுத்துக்களும் முப்பத்து மூன்று ஓசை களைக் குறிக்கும். தமிழெழுத்துக்களுக்கு உருவங்கள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரேயே ஏற்பட்டுள்ளன. எழுத்துக்களின் உரு வங்களைப்பற்றியும், எழுத்துப் புணர்ச்சிகளில் அவ்வெழுத்துக் களில் ஏற்படும் உருவ மாறுதல்களைப்பற்றியும், பல குறிப்புக்கள் தொல்காப்பிய நூற்பாக்களிற் காணப்படுகின்றன என்பதில் ஐய மில்லை. தமிழ் எழுத்துக்கள் உயிர், மெய் (உடல்), உயிர் மெய் சார்பு என வகுக்கப்பட்டதற்கு அடிப்படையான ஏது (கார ணம்), அக்காலத்தில் நிலவிய சமயக் கருத்துக்கள் (Religious Ideas) என்றே கூறலாம். உயிர் எழுத்துக்கள் 12-ம் ஒரு சுழி யில் (வட்டம்) தொடங்குகின்றன. உயிர் எழுத்துக்களில் ஒன்று கிய 'ஓ' என்னும் எழுத்து ஓங்காரம் (பிரணவம்) என்னும் மூல ஓசைக்கு முதலாய் நிற்பது. இந்த 'ஓ' என்னும் எழுத்து தனது வடிவத்திலேயே ஓங்காரத்தின் உட்பொருளைச் சுட்டிக் காட்டி நிற்பது, தமிழ் எழுத்துக்களுக்கே தனிச் சிறப்பாகும். குற்றிய லுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்னும் மூன்று சார்பெழுத் துக்களில் ஆய்த எழுத்து தனி நிலையாய் உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் மிடையும் (சேர்க்கும்) தகுதியுடைய தாய், கனத்த ஓசைகளை மெல்லோசைகளாய் ஆக்கக்கூடிய ஆற்ற லுடையதாய் நின்றிலங்கும் தனிப்பெருஞ் சிறப்புடையது.

மெய்யெழுத்துக்கள் 18-ம், வல்லினம் - 6, (க, ச, ட, த, ப, ற), மெல்லினம் - 6 (ங, ஞ, ண, ந, ம, ன), இடையினம் - 6 (ய, ர, ல, வ, ழ, ள) என்று மூன்று தொகுதிகளாய் (கணங்கள்) வகுக்கப்பட்டுள்ளன. இன்னும், க - ங, ச - ஞ, ட - ண, ப - ம என்னும் இரண்டிரண்டு எழுத்துச்சேர்ந்த இரை களும், ய, ர, ல, வ, ழ, ள என்னும் ஆறெழுத்துச் சேர்ந்த மூம ஆக மூன்று இனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இடையின எழுத்துக்கள் ஆறினில், 'ய'—'வ' என்னும் இரண்டு எழுத் துக்கள் 'உடம்படு மெய்'யாயும் வரும்.

தமிழ் எண்களைக் குறிக்கும் குறியீடுகள்—(க, உ., ௩, ச, ரு, சா, எ, அ, கூ, ௰) தத்தம் உருவத்திலேயே சில குறிப்புக் களை சுட்டிக் காட்டி நிற்கின்றன. உலகில் நிலவும் எந்த மொழியில் உள்ள ஓசையையும் தமிழில் ஒலிக்கவும் எழுதவும் முடியுமென்பதை, உண்மை ஆராய்ச்சிப் புலவர் உயர்திரு. பா. வே. மாணிக்க நாயக் கர் அவர்கள் B. E., M. C. I. (Retd. Superintending Engi- neer) பல அரங்கங்களில் (மேடை) மிகத் திறம்பட எடுத்துக்

காட்டி யுறுதிப்படுத்தியுள்ளார்கள். கூர்ந்து நோக்குவார்க்கு, தமிழ் நெடுங்கணக்கெழுத்துக்கள் இறைவன், உயிர், உலகம் என்னும் முப்பொருட்களையும் சுட்டி நிற்கின்றன; முப்பத்து மூன்று என்னும் எண், சங்கஇலக்கியங்களிலும் சமயநூல்களிலும், கோயிற் கொடிமர அமைப்பு, மனித உடல் முதுகெலும்பு இயற்கை, இவை போன்ற பல இடங்களில் சிறப்புற்றுக் காணப்படுவதால், பண்டைத் தமிழர் முப்பத்து மூன்று என்னும் எண்ணைத் தனிச் சிறப்புள்ள எண்ணாக மதித்து வந்தனர்; தமிழகத்தில் முப்பத்து முக்கோடிதேவர் (33 கோடி) என்னும் தூய சொற்றொடர் இன்றும் வழக்கில் இருந்து வருகிறது. திருவள்ளுவர் 1330 குறட்பாக்களைப் ($1000+33\times10$) பாடி அமைத்ததே முப்பத்து மூன்றின் சிறப்பை மிளிரச் செய்கின்றது.

தொல்காப்பியர் ஓதியுள்ள பல நூற்பாக்களில் இலக்கண விதிகள் மட்டுமல்ல, அக் காலத்துச் சமயக் கருத்துக்களும் அடங்கியுள்ளன. இவைபோன்ற எமது பல பொதுக் குறிப்புக்கள் விரிந்த முறையில், தக்க சான்றுகளோடு அச்சேறி வெளிவந்துள்ளன. இவைகளையும், இனிவரும் எமது சிறப்புக் குறிப்புக்களையும் நுழைபுலமிகுந்த பெரும் புலவர்கள் ஆராய்ச்சி முறையிற் சிந்தித்து முடிவு கட்ட வேண்டுமென்பது எமது வேண்டுகோள்—நிற்க.

சிறப்புக் குறிப்புக்கள்—சித்திர எழுத்துக்கள்

உலக மக்கள் யாவரும் தத்தம் எண்ணங்களை நேரிற் சைகை காட்டியும் பேசியும் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். ஆனால், நேரிற் பேச முடியாதபொழுது, ஒருவர்க்கொருவர் எழுதித் தெரிவித்துக் கொள்வது இயற்கையேயாகும். இங்ஙனம் தங்கள் எண்ணங்களை யெழுதிக் காட்டுவதில் முதல் முதலில் சித்திரத்தை (படம்) வரைந்து அதன் பொருளைக் குறிப்பிட்டுக் காட்டுவது மக்கள் ஆதியிலிருந்து கையாண்டு வரும் எளிய முறை என்பது மனித வரலாறு. ஒருவர் 'கண்' (Eye) என்னும் உறுப்பைக் குறிப்பிட எண்ணுகிறார். 'கண்' போன்ற ஒரு படத்தை அவர் எழுதிக் காட்டுகின்றனர். கண்ணைச் சித்திரித்துக் காட்டுவதால், அதைச் 'சித்திர எழுத்து' என்று கூறுவர். ஓர் 'ஆள்' என்று காட்டுவதற்கு, ஒரு மனித உருவத்தைப் படமாக எழுதிக் காட்டுவர். இவ்வண்ணம், படத்தை யெழுதி, பொருள்களையும் எண்ணங்களையும் தெரிவிப்பதைத்தான், ஆங்கிலத்தில் (Pictographic Writing) என்றழைப்பர். இதுபோன்று, சித்திரம் எழுதிக் காட்டும் முறை, பண்டைக் காலத்திலிருந்தே மக்கள் யாவராலும் கையாளப்பட்ட இயற்கையான பழக்கம் என்

பது எளிதிற் புலனாகும். ஓடுகின்ற யானையைப் படம்போல, ஒரு தொழிலைச் சித்திரித்துக் காட்டுவது ஓடும் வினையைக் காட்டும் பட எழுத்தாகும். ஏறத்தாழ எல்லா மொழிகளிலும், பொது வாகச் சித்திர எழுத்துக்களே முதலில் தோன்றின. இங்ஙனம் படத்தை வரைந்து காட்டுவதைத்தான், படஎழுத்து, சித்திர எழுத்து, கண் எழுத்து, உருவ எழுத்து என்றெல்லாம் அழைப்பர்.

மோகஞ்சதரோ—சித்திர எழுத்துக்கள்

நமது இந்திய நாட்டின் வடமேற்குப் பாகத்தில், சிந்து நதிக் கரையோரங்களில் (The River Indus), பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, தோன்றிச் சிறப்புற்றிருந்த பல நக ரங்கள், ஆற்றின் வெள்ளப்பெருக்கு முதலிய ஏதுக்களால் அழிந்து போயின.

அங்ஙனம் மறைந்த நகரங்களைத் தோண்டியெடுத்து அதில் அகப்படும் பொருள்களைச் சோதித்துப்பார்த்து அங்குள்ள பண்டை நாகரிகத்தை அறிவது நல்ல படிப்பாகும். மாட்சிமை தங்கிய நம் அரசாங்கத்தார் சிந்து ஆற்றுப் பக்கங்களில் விளங் கிய மொகஞ்சதரோ, கரப்பா என்னும் ஊர்களைத் தோண்டி யெடுத்துப் பார்ப்பதற்கான வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். நீடூழி வாழ்க. அங்கு அகழ்ந்து (தோண்டி) எடுக்கப்பட்ட பொருள்களில், சித்திர எழுத்துப் பொறித்துள்ள பல முத்திரை களும் (Seals) அகப்பட்டுள்ளன. இப் பொருட்களை ஆராயும் ஆற்றல் வாய்ந்த புலவர்கள் (Geologists, Archaeologists) மொகஞ்சதரோ நாகரிகம் இற்றைக்கு ஐயாயிரம் (5000) ஆண்டு களுக்கு முற்பட்டதென்று முடிவுகட்டி யுள்ளார்கள். இதைப் பற்றிய முதன்மையான குறிப்பாக இங்கு மனதிற் பதிக்கத் தக்கது என்னை? மேற்கூறிய மொகஞ்சதரோ முத்திரைகளிலும் சித்திர எழுத்துக்களே காணப்படுகின்றன.

(தொடரும்)

போற்றி வழங்கும் நெறி

தென்மொழி ஞானபண்டிதன், ஆனைமலை.]

அறிவு பல படைத்த ஆன்றோர்களை ஈன்றெடுத்த இவ்வுலகம், அறிவற்ற பொருள்களையும் தன்னகத்தே கொண்டுதான் விளங்குகிறது. எத்தனையோ உயிருள்ள பொருள்கள் தோன்றி இருந்து, மறைந்து வரும் பெருமைக்குரிய இவ்வுலகில் உயிரல்லாத பொருள்களும் தோன்றியும், இருந்தும், மறைந்தும் வருகின்றமையை நாம்—எல்லாவற்றினும் சிறப்பு நிலையிலே வாழ்ந்து வரும் மனித இனமாகிய நாம்—நன்கு அறிவோம்! இவ்வாறு வாழ்ந்தும் அறிந்தும் வருகின்ற நமக்கு ஏனையவற்றினும் சிந்தித்து அதாவது பகுத்தறியும் அறிவு இயல்பாகவே அமைந்துள்ளமையால் அப் பேற்றை என்னென்பது? இதுவன்றோ பெறுதற்கரிய பிறப்பும் பேறுமாகும்!

இவ்வாறு பெற்ற பிறப்பும், கிடைத்த பேறும் நற்றவச் செயல் என்பதன்றி வேறு கூறுதற்கு உளதென்னை? இந்த நிலையில் உலகத்து ஏனைய மக்களுள்ளும தமிழகத்து வாழ்ந்த ஆன்றோர்கள் பன்னெடுங் காலந்தொட்டே போற்றி வழங்கு நெறியில் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை நாமேயன்றி உலகத்து ஏனையோராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாததொன்றாகும்! இதனை இற்றை நாள் வாழ்ந்து வருகின்ற நாம் நன்கு உன்னுதல் வேண்டும்! பிறர் வாழ்வில் நலங்கண்டு மகிழ்ந்த தமிழகத்து ஆன்றோர் பலர் வாழ்ந்துள்ளனர்; பிறர்க்காகும் துன்பங் கண்டு மனம்பொறாது, அத்துன்பத்தினைத் துடைத்த பெருமக்கள் நம் தமிழகத்தே வாழ்ந்திருக்கின்றனர் என்பதையும் நாம் நன்கு அறிவோம்! இறவா மருந்தே எய்தினும் தனித்துண்ணும் எண்ணமும் இல்லாதவராக, பொறையுளங் கொண்டு உழைப்பாற் கிடைப்பது நீருணவேனும் மகிழ்வுடன் உண்பவராகத், 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் உயர்நோக்கங் கொண்டவராக, பகை, பாவம், அச்சங்களுடன் கூடிய பழியினுக்கு அஞ்சுபவராக, 'என்றும் முயற்சியாற் பொன்றுவதொன்றில்' என்னுங் குறிக்கோளே தம் வாழ்வின் உட்கோளாகக் கொண்டு வாழ்ந்த ஆன்றோர்கள் நம் முன்னோர்களிலே பற்பலராவர்! இக்கூற்று வெறும் புகழ்ச்சியன்று; உண்மை! ஓர்ந்து கற்று உணர்ந்து தெளிவீர் தமிழ்த் தோழர்களே!

சங்க காலத்து நூல்களுள் எட்டுத் தொகையுள் ஒன்றாகிய புறநானூற்றைக் காணுங்கள்! படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகியவைகளெல்லாம் அமைந்த நலத்தைக் காண

வேண்டுமா? அன்றி இவற்றையெல்லாம் கொண்டு விளங்கிய அரசருள் ஏறென வாழ்ந்த மன்னனைக் காணவேண்டுமா? இன்னும் கூரிய வேலேயாயினும் தன் கண்ணின் நேர் எதிராக வீறிட்டுப் பாய்ந்து வருவதால் அதுகண்டு அக்கண் இமையை இமைத்தலால் தோல்விப் பெறுகிவிடுமென்று அஞ்சி எதிர்த்து நிற்கும் வீரனைக் காணவேண்டுமா? முன்னாட் போரில் தன் கொழுநனையிழந்தும், உள்ளவன்—அருமையாக வளர்க்கப்பட்ட மகன் ஒருவனே என்பதையும் எண்ணாது, மறுநாட் போருக்கு அம்மகவை அனுப்பி அவனும் வீரமரணம் எய்தியது கண்டு மகிழ்ந்த வீரப் பெண்மணியைப் பற்றியும் அறியலாமே! இஃதோடுமட்டுமா! கல்வி, கேள்வி, பொருட் செல்வங்களிலும் குறைந்தவர்களல்லவே நம் முன்னோர்கள்! அவர்கள் வாழ்ந்த காலம் இறைவனைத் தலைவனாகக் கொண்டு வாழ்ந்த காலமல்லவா?

'நெல்லும் நீரும்தான் உலக வாழ்வுக்கு உயிராகும் என்பதை மறுத்து வேந்தனாகிய உயிரையுடைத்து, பரந்த இவ்விடத்தையுடைய யுலகம்' என்பதனைத் தெளிந்த குடிமக்கள் இங்குத்தானே வாழ்ந்திருக்கின்றனர்! 'எந்த நாடாக இருப்பினும் அன்றிக் காடாக இருப்பினும் என்? ஒன்றின் பள்ளமாக இருந்தாலும் இருக்கட்டும் அல்லது மேடாக இருந்தாலும் இருக்கட்டுமே! ஆனல், எந்தப் பகுதியில் போற்றி வழங்கு நெறியினுக்குரித்தான மகன் ஒருவன் வாழ்கின்றானே அவனாலன்றோ அப்பகுதிக்கு - அந்நாட்டினுக்குப் பெருமை கிடைப்பதாகவிருக்கிறது? அத்தகைப் பெற்றியானைக் கொண்டுள்ள நிலமே நீ நன்று வாழ்வாயாக' என வாழ்த்திய பெருந்தகை மக்களும் நம்மவரன்றோ? இந்த உண்மையை,

> 'நாடா கொன்றோ காடா கொன்றோ
> அவலா கொன்றோ மிசையா கொன்றோ
> எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே!' —புறம் : கஅஎ.

என ஔவை முதியாரின் வாயிலாக நாம் அறியக் கிடக்கிறது. இதன் உண்மைக்கு இலக்கானவர் நம் பழந்தமிழரேயாவர் என்பதையும் நாம் நன்கு உணரவேண்டும்.

இத்தகைய பெருமைக்குரியவர் யாரோ அவரே போற்றி வழங்கு நெறிக்குரியவராவரன்றோ? ஆம். இந்தப் பிறப்பின்கண் ஒரு செயலைச் செய்வதால், இனிமேல் எய்தும் பிறப்பிற்கு உதவிகிட்டும் என்ற எண்ணங்கொண்டு தன்னிடத்துள்ள பொருளை விலையாகக் கொடுத்து அதனால் அறங்கொள்ளுகின்ற

ஒரு வாணிகனாக இருந்தவனல்ல. 'நன்னெறிப்பட்ட சான்றோர்கள் சென்ற வழியே நாம் ஈயும் பொருளும் செல்வதாக' என்ற எண்ணத்தோடு கொடுக்கும் பண்பு வாய்ந்தவனாக வாழ்ந்த பெருமகன். அவனது வள்ளன்மையும் அதன் பாலதேயாம். அந்தப் பேற்றினுக்குரிய தமிழ் மகன் யாவன்? அவன்தான் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் முதுபெரும் புலவரால் பாடப்பெற்ற வள்ளலாகிய ஆய்மன்னன். இதோ,

> 'இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
> அறவிலை வணிகன் ஆயலன் பிறரும்
> சான்றோர் சென்ற நெறியென
> ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே!' —புறம் : ௧௩௪

இப்பண்பினையே வள்ளுவர் பெருமானும்,

> "....................மேலுலகம்
> இல்லெனினும் ஈதலே நன்று"

என்றார்.

மேலும், அறஞ்செய்வதும் காலந் தாழ்த்திச் செய்யலாமென்னாது, இயலுமளவிற்கேனும் அப்பொழுதே செய்தல் வேண்டுமென்பதை நாலடியார்,

> 'இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
> பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
> யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
> மருவுமின் மாண்டார் அறம்.'

என்று வலியுறுத்துவதோடு, தீயனவற்றை நீக்கி எந்த வேளையிலும் நாம் இறத்தற்குரியவர் என்றமனத்தினராய் அவ்வறத்தைச் செய்யவேண்டுமென்றும் கூறுகிறதன்மை நம் பண்டையோர் பண்பாட்டைத் தெளிவுபடுத்துவதாகும். இதனையே

> 'அன்றறிவா மென்னா தறஞ்செய்க; மற்றது
> பொன்றுங்கால் பொன்றாத் துணை.'

என்று தமிழ் மறையும் கூறுகின்றமை எத்தகைய பொருத்தமுடையதென்பதை உன்னுக! உன்னுக! உன்னித் தெளிக!

௭, செல்வம் படைத்த வள்ளல்களுக்கோ அல்லது செருவென்ற மன்னர்களுக்கோ உரியசெயலென்று நாம் எண்ணுதற்கிடமில்லை. வறுமையே தமது உடைமையாமென வாழ்ந்த பொறுமையாம் பெரும்புலவர்களிடத்தும் இவ்வறச் செய்கை மிக்கிருந்தமையை நாம் அதே புறநானூற்றின் வாயிலாகக் காணலாம்.

நல்குரவே தமக்குற்ற நல்லுற வன்றி வேறுறவினர் இல்லையென்னும்படிக்கு வாழ்ந்தவர். ஆம், கைப்பொருளொன்றுண்

டாயின் ஒருவனை எல்லாரும் நாடுவர்; புகழ்ந்தேத்துவர்; இல்லாத உறவாயினும் இழுத்துங்கொள்வர். எனவே, மெய்ப் பொருளொன்றே யன்றிக் கைப்பொருளாகப் பெருஞ்சித்திரனாருக்கு இருந்தவையெல்லாம் வறுமையும், அதனால் வருந்தி வாழ்விழந்துகொண்டிருக்கும் மனைவி மக்களுமே யாவர். அவரது மனையற வாழ்க்கையோ புனையுரைக்கும் எட்டாதவை. கிடைத்தனவற்றைப் பலருக்கும் பங்கிட்டுண்ணுதலால் உள்ள பொருளழிந்து வேறெதுவும் இன்றி வாட்டமுறும் புல்லிய உளைமயிர்போலும் குடுமியைப் பெற்றுள்ள அப் புலவர்பெருந்தகையின் இல்லாள் தன் புதல்வன் பலபடியும் பாலில்லாது, வருடிய தனது தனத்தைச் சுவைத்தும் பால் பெறாதவனாய்க் கூழும், சோறும் வேண்டி விட்டிலுள்ள மண்சட்டிகளைத் திறந்து திறந்து அவற்றுள்ளும் ஏதும் இல்லாமையைக் கண்டு அழவும், அந்த அழுகையை மாற்றத் தாயானவள் புலியை வரவு சொல்லிப் பயமுறுத்தலும் அதனாலும் அழுகை நீங்காமையான் வருந்தியவளாய் அம்மகவைநோக்கி நின் தந்தையை நினைந்து வருந்துவாயெனச் சொல்லுதற்கும் அமையாளாய் வருந்துகின்ற நிலையிலுள்ள அவளது நிலையையும், தம் இல்ல நிலையையும் ஒரு சித்திரமாகப்பாடிய பெருஞ்சித்திரனார் முதிரமென்னும் மலைக்குத் தலைவனாகிய குமண வள்ளலிடம் சென்று பரிசும் பெற்றார். பரிசோ பெருஞ் செல்வக் குவியல்!

பெற்ற பெரும் பரிசோடு தம்மனை சேர்ந்தார். வள்ளலின் தன்மைக்கு உள்ளம் மகிழ்வுபெற்றார்! கொழுநன்கொணர்ந்த பரிசுப் பொருளைக்கண்ட அவரின் இல்லக்கிழத்தியோ சொல்லொணா உவகையடைந்தாள். அதனைக் கொண்டு தமக்குற்ற வறுமை நோயைத் தீர்த்துக்கொள்ள முடிவு செய்தாள். ஆனால் புலவர் பெருந்தகையோ கிடைத்த பரிசிலைக் கீழ்க்காணுமாறு பயன்படுத்துமாறு மனையாளுக்குப் பணித்தார்.

“என் அருமை மனைக்குரியவளே! பலாப் பழமுதலாயின சுவைமிக்க பழங்கள் தூங்குதல் புரிகின்ற முதிரமென்னும் மலைக்குத் தலைவனும், திருந்திய வேலினையுடையவனுமாகிய குமணன் என்னும் வள்ளலளித்தவை, இச்செல்வக்குவியல்! இவற்றைக்கொண்டு நின்னிடம் அன்பு கொண்டு வாழும் மகளிர்க்கும், பல குணநலங்களையும், பெருமை வாய்ந்த கற்பினையும் உடைய நின் சுற்றத்து முதிய மகளிர்க்கும், நம்மவரது கொடும்பசியைத் துடைக்க நினக்கு நெடுநாட்படக் குறித்தளதிர்ப்பைத் தந்தவர்கட்கும் இன்னும் இத்தகைய ரென்று எண்ணுமல், என்னையும் எதிர்கொண்டு கேட்டுக் கொடுப்போ மென்னாது, நெடிது குடிவாழ்க்கைவாழ்தலை

விரும்புவோ மென்றுங் கருதாது நீயும் யாவருக்கும் வழங்கு தல் செய்வாயாக!" என்னுந் தமது எண்ணத்தைத் தெரிவித் தமையைப் புறநானூறு தெளிவுறுத்துகிறது.

> 'நின்னயந் துறைநர்க்கும் நீ நயந் துறைநர்க்கும்
> பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்குங்
> கடும்பின் கடும்பசி தீர யாழநின்
> நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
> இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
> வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
> எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே!
> பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
> திருந்துவேற் குமண னல்கிய வளனே.' —புறம்: ௧௬௩.

வள்ளலாயினும் வறிஞராயினும் நம்மவர் உள்ளப் பண்புதான் என்னே! இஃதன்றோ போற்றி வழங்குநெறி! அவர்கள் நிலைக்கும் இன்றுள்ள நம்மவர் செயலுக்கும் உள்ள வேறுபாடு எத் தகைத்து என்பதை நாம் இனியாவது ஓர்தல்வேண்டும். ஓர்ந் தவாறே உறைதலும் வேண்டும் தமிழ் மகனே!

உண்மையான அறம், பொருள், இன்பம் என்பன யாவை? ஈத்துவக்கும் இன்பமன்றோ உண்மையான அறமாகக் கருதப் படும்? தீவினை நீக்கிப்பெறுகின்ற பொருள் தானே உண்மைப் பொருளாக ஆன்றோர்களால் கருதப்படுகிறது? என்றும் அன் பெனும் பிணைப்பால் ஒரே கருத்துடையவராகப்பெற்றுக் கண வனும் மனைவியும் ஒன்றுபட்டு வாழ்வதன்றோ இன்பம்! இம் மூன்று நிலையினுக்கும் உடையவராகி அந்நெறியில் தம் வாழ் நாளைச் செலுத்துவதன்றோ நிலையான வீடுபேறாகும்!

> 'ஈதலறம்; தீவினைவிட் டீட்டல் பொருள்; எஞ்ஞான்றும்
> காதலிருவர் கருத்தொருமித்து—ஆதரவு
> பட்டதே யின்பம்; பரனைநினைந் திம்மூன்றும்
> விட்டதே பேரின்ப வீடு.'

ஆகவே, நம் முதுகுரவர்களின் வாழ்க்கை நெறிக்கு - போற்றி வழங்கு நெறிக்கு - அடிகோலியதாகக் கருதப்பட்டு வந்ததே இந்த அறமும், பொருளும், இன்பமும், வீடுமாகும். கருதியவாறே நடந்து காட்டினவர்களும் நம் தமிழ்ப்பெரு மக்களே. இந்த நெறிபற்றி வாழ்ந்தவர் - வாழ்பவர்களையே உலகம் என்றும் போற்றி வாழ்வதாகும். வாழ்ந்தவாறே வழங்கு வதுமாகும். வழங்கு நிலையில் நெறிப்பட்ட ஒருவனது வாழ்வே பல்லோராலும் போற்றி வழங்குநெறியாகக் கொள்ளப்படும்.

> ௬௧ அதுபொருள்
> 'போற்றி வழங்கு நெறி.' —திருக்குறள், ௭௨௫.

தாய்க்கடன்

-டர்பன்-திரு. ச. மு. பிள்ளை]

தாய் தன் மக்களிடத்து அன்பும், சாந்தமும், பொறுமை யும் கலந்து மிளிரச் சீவித்தல் எவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய தோர் உண்மையாகும். தாயினும் அதிகமாகப் பிள்ளைகளை நேசிக்கத்தக்க உரிமையுடையவர் உலகில் இலர். அவ்வாறு தான் முழு மனதுடன் நேசிக்கும் பிள்ளையை உலகில் அறிவா லுயர்ந்தோர் மத்தியில் வைக்க எண்ணுதல் நலமென்பதையும் உணர்ந்து நடக்கும் தாய்மார் மிகச்சிலர். தாயானவள் இத் தகைய தன் கடன் உணர்ந்து அதற்கான எத்தனங்களைத் தினமும் தன் மக்கட்கு ஊட்டிவர உன்னுதல் வேண்டும். அங்ஙனம் செய்யாதிருப்பின், பின்னர்த் தம் மக்களால் கலங்கிக் கலங்கித் திகைக்க ஏதுவாகும்.

பிள்ளையானது தந்தையிடமிருந்து தன் வாழ்க்கைக்கு வேண்டியதைத் தெரியப் போதிய சாதனங்கள் இருந்தபோதி லும், அதுவோ தன் தாய் தந்தைக்குக் காட்டும் அன்பின் பெருக் கால் மயங்கித் தாயைத் தன் சிறு மனதினுலே முழுவதாக நம்பி நேசிக்கத் தொடங்குவதால், அவளிடமிருந்தே தன் வருங்கால வாழ்வுக்கு வேண்டிய சகல ஏதுக்களையும் தெரிந்துகொள்ளு கின்றது. ஆகவே, பிள்ளை தன் வளரும் பருவத்தில் தன் மாதா வைப் பார்த்து அவளிடமிருந்து தனக்காகும் நன்மையோ, தீமையோ தெரிந்துகொள்வதால் அதுவே அப்பிள்ளையின் அடிப் படையாகி மனதில் உறுதிப்படுகின்றது. இக்காரணம் பற்றியே "தாயைப்போல் பிள்ளை நூலைப்போற் சீலை" எனச் சொல்வ துண்டு. பெரும்பாலும் பிள்ளைகள் தாய்மாரின் சாயல் என்றே சொல்லலாம்.

"தாயோடறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்" என் னும் பாடலைப் பெரும்பாலானோர் பின்பற்றினவர்களாகத் தம் மக்களின் தேகத்தை வளர்க்கப் பிரயாசை யெடுத்து, தம்மை யும் பொருட்படுத்தாது அல்லும் பகலும் பாடுபட்டு அவர்களை உண்பித்து பின்னர்ப் பல்வகையான சுவையுள்ள உணவுகளால் மாத்திரம் அவர்களை இன்புறச் செய்கின்றனர். தேக வளர்ச் சிக்கான ஏதுக்களையே எந்நேரமும் எவ்விடத்தும் பேசி, அதுவே தம்மாற் செய்யக் கூடியதுபோல் நடந்து தந்தையின் மேலேயே மன வளர்ச்சிக்கான சகல பொறுப்பும் தங்கியுள் ளது என்றெண்ணிச் சீவிக்கின்றனர். சிற்சிலர் கல்விக்கடுத்த காரியங்களைக் கேடி நாடுவதைக் கைநெகிழ்வதோடு, தந்தை

தன்னுலியன்றதைச் செய்யுங்கால் தாய் அவர் எடுக்கும் சிரத்தையோடு தானும் சேர்ந்து கலந்து உற்சாகப்படுத்தாது, தமது விருப்பு வெறுப்பையும் காட்டாதுவிடுகின்றனர். அன்றியும் தந்தை தன் பிள்ளைகளுக்கு நன்மை செய்பவர்போலக் காட்டி அவர்க்கு இடையூறாக இருப்பவருமுண்டு. அம்மம்ம! இது எத்துணைத் துன்பத்தைத் தம் பிள்ளைகட்குக் கொணரும் என்பதைத் தாய்மார் அறியார் போலும்! பிள்ளையை ஈன்றபொழுதில் தாய்க்கு உண்டாகும் மகிழ்ச்சியிலும், அப்பிள்ளை அறிவாலுயர்ந்தோர் மத்தியில் கல்வி மிக்கதாக விளங்குங்காலை அவளுக்குண்டாகும் இன்பம் பன்மடங்கு அதிகமல்லவா?

தாய், பிள்ளை தன் மடியிலிருந்து வளருங்காலும், அது பாலிய பருவத்தில் தன் விளையாட்டுடன் காலத்தைச் செலவிடுங்காலும், தன்னைத் தனது மொழியை, செய்கையை, கூட்டுறவை, நடத்தையைக் கவனித்து அவற்றிலிருந்து தனக்கு வேண்டியவற்றை நிமிடந்தோறும் தேடிப் பொறுக்கி வருங்காலத்திற்கு தன்னைப் பலப்படுத்தும் உபகரணங்களாக்கிக் கொள்கிறதென்பதைச் சிந்தியாது, பின்னால் சரிப்பட்டுவிடும் என்று கவலையற்றிருப்பது வருந்தத்தக்கது. தாய் தன் பிள்ளைக்கு உடனிருக்கும் உபாத்தியாயினி என்பதை மறவாதிருத்தல் வேண்டும். உபாத்திமார் பாடசாலையில் பெரும்பாலும் போதனையாற் படிப்பிக்கப் பார்ப்பதோடு அப்படியே செய்தும் வருகிறார்கள். ஆயின் மாதாவோ எந்நேரமும் தன் மக்களுடனிருப்பதால் போதனையாலும் சாதனையாலும் அவர்களை வளர்க்கவேண்டிய குருவாகின்றாள். ஆகவே பிள்ளைகள் ஒழுக்கம் யாரிடம் தங்கியுள்ளது என்பதைத் தாய்மார் எண்ணுதல்வேண்டும்.

பிள்ளை தாயின் மடியிலிருந்த காலம்முதல் பிராயமடைந்து குடும்பத்துட் புகுங்காலம் மட்டும், அல்லும் பகலும் தன் தாயையே தியானமாக்கி மனோபாவனை செய்து அவளை பிரதிவிம்பிக்கப் பிரயாசைப்படுகிறது. மாதாவின் மொழியே பிள்ளையின் மொழியாகும். இனிய செந்தமிழ் அன்னையின் மொழியாகுமானால், அதுவே தன் பிள்ளைக்குமுரிய மொழியாகும். தாய் இன்சொல் கனியும் குணமுடையவளாயிருந்தால் பிள்ளையும் இன்சொல்லே மொழியும். அறத்தின் செயல்கள் மாதாவினிடம் இல்லையாயின் மக்களிடத்து அவை எங்ஙனமிருக்கும்? தாயினது சிநேகர் எத்திறத்தினரோ அவ்வாறே அவர்தம் மக்களுக்கும் நண்பரிருப்பர். அவர் அறிவாலுயர்ந்தோரைச் சார்ந்திருப்பின் மக்களும் அவரைச்சார முயல்வர், இவ்வாறே மொழியையும் செய்கையையும் சிநேகரையும் சிறுவயதிலேயே செவ்வனே ஆராய்ந்துணர்ந்து, அவ்வுணர்ச்சிகொண்டு தமக்கென

அமைக்கும் மக்களது ஒழுகத்தை வருணிக்க யாரால் முடியும்? உயிரினும் மேலாக உயர்ந்தோரால் கருதப்படும் ஒழுக்கமுடையராகும் பிள்ளைகளது பெருமையைக் கண்டு தாய், உறவினர், பெரியோர் முதலியவர்கள் போற்றுவதை யாரே ஆட்சேபிக்க வல்லார்?

பின்னும் பிள்ளைகள் தம் சாதிக்கும் தேசத்துக்கும் உலகத்துக்கும் பிரயோசனமுடையவராக வரக்கூடிய நற்போதனைகளை அவர்கள் சிறுபிராயந்தொட்டு ஊட்டி வருதல் தாயினது கடனாகும். பொருட்செல்வத்திலும், கல்விச் செல்வம் மேம்பட்டதென்பதையும் அதுவே கொடுக்கக் கொடுக்கக் குறையாத தனமாகிப் பெருகும் விசேடமுடையதென்பதையும் "மாசறக் கற்றோர்க்கு உலகெலாம் சிறப்பு" என்பதையும் மக்களின் சிறு பருவத்தில் அவர்கள் இதயத்தில் கல்லின் எழுத்துப்போல் வளர்த்து விடுதல் இன்றியமையாத நற்செயலாகும்.

மேலும் தாய்மார் தம் மக்களுக்கு "இட்டார் பெரியோர் இடாதாரிழிகுலத்தோர்" என்னும் உறுதி மொழியையும் தம் தினசரி போதனையால் மாத்திரமன்றிச் சாதனையாலும் காட்ட வேண்டியவராகின்றனர். தாம் பிறவியிலுயர்ந்த குலத்திலுதித்தமையால் பிறரைத் தாழ்குலத்தினரென்றும் சொல்லல் பெரியோர் கொள்கையன்று. ஒருவன் தன்னைத்தானே தன்னெண்ணத்தால், பேச்சினால், செய்கையினால் நடத்தையினால் உயர்குலத்தினனாகலாம். பணத்தை மாத்திரம் பிச்சை கொடுப்பது போதியதன்று. எதுவிடயத்திலும் தாழ்ச்சியடையவர்மாட்டுப்போய் அவர்க்குத் தாழ்ச்சி நீங்க இனிய மொழியோ, அறிவினாலோசனையோ உடல் உதவியோ எதுவானாலும் உதவிடவே ஒருவனை மேனிலைக்குக் கொணரும். உலகம் பெருமை கொள்ளவும் நேரிடும். ஆனதுபற்றித் தாய்மார் தம் மக்களுடன் சிறுபருவத்தில் பேசும் பேச்சுக்கள், சிறு கதைகள் யாவும் இப்பேர்ப்பட்ட எண்ணத்தை அவர் மனத்தில் எழுப்புதற்கேற்றனவாகவே பேசுதல் வேண்டும்.

முடிவாக நாள்தோறும் தம் கடமையை யறிந்து தம்மக்களை மேம்படுத்தும் வழிவகைகளைக் கணந்தோறும் எண்ணுதலைக் காட்டினும் சிறந்தது தாய்மாருக்கு எதுவுமில்லை. ஆகையால் தம் மக்கள் மேன்மைக் குணமும், பரந்த மனமும், அறச்செயலுமுடையவராகி, அவைதனில் கல்வியாளராக விளங்கி, அவர்களை உலகம் போற்றும் உத்தமர்களாக்க முயலுவார்களாக!

*தமிழ்நாடே உலகின் கலைக்கோயில்

[பேராசிரியர் திரு. கா. பொ. இரத்தினம் எம். ஏ., பி. ஓ எல்.]

ஈழநாட்டின் சரித்திரத்திலும் நாடகக் கலையின் வரலாற்றிலும் இன்றையநாள் தனிப் பெருமையுடையது. இக்கொழும்பு மாநகரிலேயுள்ள பத்துச் சங்கங்கள் ஒன்றுபட்டு நாடகக் கலைஞர்களை இன்று பாராட்டுகின்றன. முற்காலத்திலே முடியுடை மூவேந்தருங் குறுநில மன்னர்களும் பெருநிதிச் செல்வர்களும் கலைஞர்களைப் பாராட்டினார்கள். பெரும் போரினாற் பெறமுடியாதவற்றைக் கலையினாற் பெறத்தக்க நிலைமை தமிழ்நாட்டிலிருந்தது. புலவர் பெருமானாகிய கபிலர் இந்த உண்மையை அழகாகக் கூறியுளார். பாரி எனும் வள்ளலைத் தோற்கடிப்பதற்கு மூவேந்தர்களுஞ் சேர்ந்து போரிட்டனர். பன்னாள் முயன்றும் அவர்கள் முயறசி பயனளிக்கவில்லை வாளினாலும் தாளினாலும் பெறமுடியாதவற்றைப் பெறுதற்குரிய வழியினைக் கபிலர் மூவேந்தருக்குங் கூறினார்.

> "தாளிற் கொள்ளலிர் வாளிற் றூரலன்
> யானறிகு வனது கொள்ளு மாறே
> சுகிர்புரி நரம்பிற் சீறியாழ் பண்ணி
> விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
> ஆடினிர் பாடினிர் செலினே
> நாடுங் குன்றும் ஒருங்கீ யும்மே."

இது தான் அவர் கூற்று. ஆடல்பாடல்களுக்கு-இசை நாடகக் கலைகளுக்கு - அக்காலத்திருந்த பெருமையினை எடுத்துக் காட்டுதற்கு இதனை விடச் சிறந்த செய்தி வேறுண்டோ?

பல்லாயிரம் ஆண்டுகளாக நாகரிக வாழ்க்கையினை நடத்திய தமிழினம், அழகியற்கலைகளின் சிறப்பை நன்குணர்ந்து அவற்றைக் கண்ணேபோற் போற்றி வந்துளது. இக் கலைகளுள்ளும் இலக்கியம் இசை நாடகம் எனும் மூன்றினையும் சிறப்பாக வளர்த்தனர். அழகியற்கலைகளுள் இம் மூன்றுமே மொழியுடன் தொடர்புபட்டவை. மனிதனை விலங்கினின்றும் மொழி எவ்வாறு பிரித்து உயர்த்துகிறதோ அவ்வாறே இக்கலைகள் இவற்றினைச் சுவைத்துப் பண்பட்டோரை ஏனையோரினின்றும் பிரித்து

*நாடக மாமணிகள் டி.கே. சகோதரர்களுக்குக் கொழும்பு மாநகரிலுள்ள பத்துச் சங்கங்கள் எடுத்த பாராட்டுவிழாவில் நிகழ்த்திய உரை.

உயர்த்துகின்றன. இவற்றின் ஈடுபாடின்றி மக்கள் பண்பாடு உடையவர்களாக நல்வாழ்வு வாழுதல் முடியாது. ஆதலால் இவையும் மொழியினைப் போல எல்லா மக்களுக்கும் இன்றியமையாதன. இந்தப் பேருண்மையினை நன்கு அறிந்தே நம் முன்னோர் இவற்றை நம் மொழியுடன் இணைத்து 'முத்தமிழ்' என வழங்கினர். இம்மூன்றினையும் ஒன்றாக வளர்த்தனர்; முத்தமிழ்க் கலைஞர்களுக்குச் சமுதாயத்தில் முதலிடமளித்தனர்.

இந்த வுண்மையினை மீண்டுந் தமிழ் மக்கள் உணர்ந்து இக்கலைகளை வளர்த்துப் பயன்பெறவேண்டுமெனும் நோக்கத்தாலேயே சென்ற ஏழு ஆண்டுகளாக இக் கொழும்பு மாநகரிலே முத்தமிழ்விழாக்களை நடத்திவந்தோம். சென்ற ஆண்டிலே எழிட்டிடங்களிலே முத்தமிழ் விழாக்கள் நடந்துள்ளன. இது தமிழ்மக்கள் தாம் வாழும் நாடுகளெங்கும் முத்தமிழ்விழாக்களை நடத்தி முத்தமிழ்க்கலைகளையும் வளர்க்கும் பெரும்பணியில் ஈடுபடுங்காலம் அண்மையில் வந்துவிட்டதென்பதற்கு அறிகுறியாகும்.

ஆவடிக் காங்கிரசு மாநாட்டிற்கு வந்த, இந்திய முதலமைச்சர் நேரு அவர்கள் 'தமிழ்மொழி இந்தியநாட்டுக்குப் பெருமை அளிக்கிறது' என்று கூறினார். சில நாட்களுக்கு முன் சென்னைக்குவந்த சீனக் கலைக்குழுவின் தலைவர், 'இந்தியாக் கலையின் தலைவாசல் சென்னையே' என்று உரைத்தார். இந்தியாவுக்கு மாத்திரமேயன்றி முழு உலகுக்குமே கலைக்கோயிலாகத் திகழும் தகுதி வாய்ந்தது தமிழ் நாடேயாகும். இந்நிலைமையைத் தமிழ்நாடு விரைவில் அடைந்து விடும் என்பதற்கும் பல சான்றுகள் இப்பொழுது காணப்படுகின்றன. தமிழன் என்ற முறையில் தமிழ்நாட்டைப் புகழ்கிறேன் என்று கருதல் வேண்டாம். கலையின் வளர்ச்சிக்கும் உரிய காரணங்களை அறிந்தவர்கள் இஃது உண்மை என்பதை உணர்வார்கள்.

இலக்கியம், இசை, நாடகம் முதலிய கலைகளை எவ்வாறு முயன்றாலும் சில ஆண்டுகளில் சிறப்புடையனவாக உருவாக்கி விடல் முடியாது. இவற்றின் வளர்ச்சி மொழியின் வளர்ச்சியையும், மக்களுடைய நாகரிக முதிர்ச்சி, அழகியலுணர்வு, ஆதரவு முதலியவற்றையும், கலைஞர்களின் தொண்டு, ஆராய்ச்சி முதலியவற்றையும் பொறுத்துளது. சுருங்கக் கூறின், நாகரிகம் முதிர்ந்த ஓரினத்தின் பல்லாயிர ஆண்டின் படிப்படியான முயற்சியே இக்கலைகளின் சிறப்புக்குக் காரணமெனலாம்.

தமிழ்நாட்டை உலகின் கலைக்கோயிலாகத் திகழச் செய்தற்குப் பல கலைச்சிற்பிகள் இப்பொழுது முயல்கிறார்கள். இவர்

களுள்ளே சிறந்தவர்கள் யாம் இன்று பாராட்டும் டி. கே. எஸ். சகோதரர்கள் என்பதைப் பல்லாயிரக்கணக்கில் இங்குக் கூடி யிருக்கும் அவையினரே உறுதிப்படுத்துகிறார்கள். இக்கொழும்பு நகரிலுள்ள மக்களில் ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்டோர் இவர்கள் நடத்திய நாடகங்களைக் கண்டு களித்திருக்கிறார்கள். பழம் பெருமை வாய்ந்த நமது நாடகக் கலையினைத் திரைப்படம் ஒதுக்கி விடல் முடியாது என்பதை இச்செய்தி உறுதிப்படுத்தி ..

இலக்கியம், இசை என்பவற்றிலும் பார்க்க நாடகம் சில துறைகளிலே சிறந்து விளங்குகிறது. அவை காதுக்குங் கருத் துக்கும இன்பமளிக்குமேயன்றி நாடகம் போற் கண்ணுக்கும் விருந்தளிக்கமாட்டா. படித்தவர்களும் படியாதவர்களும் எவ் வித வேறுபாடுமின்றிச் சுவைக்கத் தக்க தனிப்பெருமையும் உடையது நாடகக்கலையே. பல காலங்களிற் பல்வேறிடங்களில் நடந்த நிகழ்ச்சிகளை ஒரு காலத்தில் ஓரிடத்தில் நம் கண்முன்னே காட்டும் ஆற்றல் உடையது அது. மேலும், நாம் காணும் நிகழ்ச்சிகளிலே பங்குபற்றாமல் அந்நிகழ்ச்சிகளாற் பெறத்தக்க அனுபவத்தை யாம் இலகுவிற் பெறவும் அது வாய்ப்பளிக்கிறது. நமக்குப் பல உணர்ச்சிகளையூட்டி அவற்றை நிறைவுசெய்து உள்ளத்துக்கு நிறைவினையும் அளிக்கிறது. வாழ்விலேற்படுந் துன்பங்களைக் கண்டு அவைபடும் மக்களுக்கு அத்துன்பங்களைக் கற்பனையாற்காட்டி இன்பம்நல்கும் மாயவித்தையே கலையின் தனிச்சிறப்பு என்பர். இச்சிறப்பிலும் நாடகக்கலைக்குத் தனி உரிமையுண்டு. மக்களிடையே உள்ள அறியாமை, போட்டி, பொறாமை, போராட்டம் முதலியவற்றை நீக்கி இன்பமாக வாழும் வழியைக் காட்டுதற்கும் நாடகக் கலையைப்போற் சிறந்த

நம் நாடகமாமணிகள் டி. கே. எஸ். சகோதரர்கள் நடித்த 'எது வாழ்வு' எனும் நாடகம், வாழ்விலேயேற்படும் சிக்கல்களைக் காட்டி அவற்றை விடுவிக்கும் முறையைப் புலப்படுத்தும் அருமைதான் என்னே! 'இசைபட வாழ்தல்தான் வாழ்வு எனும் தமிழ்மறையின் முடிபினையன்றோ அது நிலைநாட்டுகிறது.' இவர்கள் நடித்த பயன்மிக்க 'நாடகங்களைப் பார்த்தபின்னர்த்தான் "பயன் நாடகம் கண்களியக் கவர்ந்துண்டு," எனும் சிந்தாமணி ஆசிரியர்தங் கூற்று நன்கு புலனாகிறது. இவர்களுடைய நாட கங்களைப் பார்த்தற்குத் திரண்டுவந்த மக்களின் தொகை யினைப் பார்த்த பொழுது ஈராயிரமாண்டுகளுக்குமுன் தமிழ் நாட்டிலே நாடகம் பார்த்த மக்களின் நினைவு, எனக்கு வந்தது. அக் காலம்போல இக்காலத்திலும் மக்கள் பெருந்

கூட்டமாக நாடகங்களுக்கு வந்தார்கள், அக்கால மக்களின் கூட்டத்தைப் பற்றி, "கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ் செல்வம், போக்கும் அது விளிந்தற்று," என்று வள்ளுவர் பெருமான் கூறியுளார்.

நம் ஈழநாட்டில் மாத்திரமன்றி இந்தியாவின் பல பகுதிகளிலும் வாழும் தமிழ்மக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட நாடக மாமணிகளாக டி. கே. எஸ். சகோதரர்கள் விளங்குகிறார்கள். அவர்களுடைய நாடகங்களால் நம் ஈழநாட்டு மக்களிடையே தமிழ்ப்பற்றும் இன உணர்ச்சியும் மிக்கோங்குகின்றன. 'வீடுதோறும் கலைகளின் விளக்கம்' ஏற்பட வேண்டுமென்று பாரதியார் விரும்பினார். இப்பொழுது இம்மாநகரிலுள்ள தமிழர்களுடைய வீடுகளில் டி. கே எஸ் சகோதரர்களின் கலைத்திறனைப் பற்றிய பேச்சு நிகழ்கிறது. முன்போற் கலைஞர்களைப் போற்ற நாம் அறிந்து விட்டோம். இனிக் கலைகளைப்போற்றி வளர்த்து வீடுகள் தோறும் கலைவிளக்கங் காண்போம் என்பதற்கு ஐயமின்று.

தமிழ்க் கலைகளின் பெருமை உலக அரங்கிலே நிலைநாட்டுங் காலமும் இனி வந்து விடும். நம் நடிக மாமணிகள் இதற்காகவும் இனி முயலுதல் வேண்டும். சென்னை மாகாணம் தமிழ்நாடெனப் பெயர் கொண்டு தமிழ் அரசியல் மொழியாக அரியணை ஏறியவுடன் இஃது இலகுவில் நடைபெறும்.

டி. கே. எஸ். சகோதரர்களுடன் நன்கு பழகும் வாய்ப்பு எனக்குச் சில ஆண்டுகளுக்கு முன் தில்லிமாநகரில் நடந்த தமிழ்விழாவின் போது ஏற்பட்டது. டி. கே. சண்முகம் அவர்களைத் தமிழ்ப்பண்பாட்டின் உருவம் என்றே கூறலாம். நாடகக் கலைஞராக மாத்திரமன்றி அவர் முத்தமிழ்க்கலைஞராகவுந் திகழ்கிறார். அவருடைய பெருமைக்குக் காரணம் அவருடைய தமிழார்வமும், முத்தமிழ்ப்புலமையும், பண்பாடுமேயாகும். அவர்களைப் போல நடிக்கும் ஆற்றல் உள்ளவர்கள் தமிழ் நாட்டிலே இருக்கலாம். ஆனால் அவர்களைப் போல் நாடக நூற் புலமையும், நூல் ஆராய்ச்சியும் உடையவர்கள் தமிழ் நாட்டில் இல்லையெனலாம். எந்தக் கதையை நடித்தாலும் தமிழ் மரபுக்கும், தமிழர் பண்பாட்டுக்கும், தமிழ்மொழியின் உயர்வுக்கும் ஏற்றம் அளிக்கும் மூல முறையில் அக்கதையினை அமைத்துக் கொள்ளும் அவர்தம் புலமையினை அறிஞர்கள் பாராட்டு கின்றனர்.

இவராற் சிறப்படைந்த கதாபாத்திரங்களுள் ஔவையாரையே யாவரும் போற்றுகின்றனர். அழகிய இளமங்கையாக நடித்தற்கு

வேண்டிய அழகும் அமைப்பும் இவருக்கு உண்டெனினும், தமிழ்க் கிழவியாக நடித்தே இவர் புகழீட்டியுள்ளார். உருவத்தை மாத்திரமன்றிக் குரல், செயல் முதலியவற்றையும் மாற்றி இவர் ஔவையாராக நடிக்கும் பொழுது இவருடைய நண்பர்கள் கூட இவரை அறிந்து கொள்ளுதல் முடியாது. இவ்வாறு அற்புதமாக நடிப்பவர்களை இவ்வுலகிற் காணுதல் முடியாதெனலாம். இவருடைய இந்த நடிப்புத்திறனை மந்திரமோ, தந்திரமோ, மாயமோ என்று புலவர்களும் பொதுமக்களும் போற்றுகின்றனர். இவருடைய இந்த நடிப்பு மாத்திரமே உலக அரங்கிலே தமிழ்நாட்டுக்குப் புகழ் ஈட்டித் தரத்தக்கது.

இவர்தம் நடிப்புத்திறனை உணர்ந்த அறிஞர்கள் இந்த நாடக மாமணியை ஔவை சண்முகம் என்று பாராட்டுகிறார்கள். தமிழ்ப்புலமை உலகிலே ஔவையாருக்கு எப்படி ஒரு தனிப் பெருமையுண்டோ அப்படியே நாடகக் கலையுலகில் ஔவை சண்முகத்துக்கு ஒரு தனிப் பெருமையுண்டு. ஔவையார் புகழ்போல் அவர்தம் புகழும் என்றும் நிலைத்து நிற்கும்,

இவருடை அருமைத் தம்பியார் டி. கே. பகவதி அவர்களைப் பற்றிப் பல கூற வேண்டியதில்லை. 'அண்ணன் எப்படித்தம்பியும் அப்படி,' என்று கூறுதலே பொருத்தமாவது. இவர்களுடைய நாடகக் குழுவிலுள்ள ஏனைய கலைஞர்களும் இவர்களைப் போலவே கலையார்வமும், நடிப்புத் திறனும், பெருநோக்கமும் உடையவர்கள். இவர்கள் யாவரும் ஒற்றுமையாக நாடகக் கலைக்குச் செய்து வருந்தொண்டினைப் போற்றுகிறோம், புகழ்கிறோம். பொலிக ! இவர்கள் தொண்டு; வாழ்க ! நாடகக் கலை.

இயற்கைக் கூத்தும் இசையும்

'இருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழில்
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
வெயில்நுழை பறியாக் குயில்நுழை பொதும்பர்
மயிலா டரங்கின் மந்தி காண்பனகாண்
மாசறத் தெளிந்த மணிநீர் இலஞ்சிப்
பாசடைப் பரப்பின் பன்மலர் இடைநின்று
ஒருதனி ஓங்கிய விரைமலர்த் தாமரை
அரச அன்னம் ஆங்கினி திருப்பக்
கரைநின் றாலும் ஒருமயில் தனக்குக்
கம்புட் சேவல் கனைகுரல் முழவாக்
கொம்பர் இருங்குயில் விளிப்பது காணாய்.'

—ம. ௨-௧௬

செய்திகளும் குறிப்புக்களும்

(க) பண்ணொலிகேட்கும் பழங்கால மண்டபம்

சென்னைப் பல்கலைக் கழக இசைப் பேராசிரியர், திரு. பி. சாம்பமூர்த்தியவர்கள் 27-5-1955 இல் திருக்குற்றாலஞ் சென்றனர். திருக்கோவிற் செயலாளர், அறங்காப்பாளர் முதலியோரால் நன்கு வரவேற்கப்பட்டனர். வழிபாடியற்றினர். உலகன்னையாராகிய பேராற்றலின் திருமுன் மண்டபத்தில் ஒரு கல்லைக்கொண்டு தட்டினர். அதிலிருந்து ஓர் அரிய இன்னொலி தோன்றிற்று. அவ்வொலி ஆனந்தப்பைரவியாகக் காணப்பட்டதாம். என்னே பழந்தமிழ்க் கற்றச்சரின் நுண்மதி. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் சென்றும் எவ்வகைக் காவலுமின்றி பல்லாயிரக்கணக்கான வழிபாட்டன்பினர் தீண்டியும் இன்னோசை மழுங்காது இன்றுங் கேட்கின்றதென்றால், இது வியப்பினும் வியப்பன்றோ? இத்தகைய அருங்கலை பல நிறைந்த திருக்கோவில்களை நாம் இக்காலத்தும் உண்டாக்கி நம் பழந்தமிழ்ப் பண்பாட்டினைப் பேணி நிலைநிறுத்துவதன்றோ நம் கடமையும் உரிமையும் அறிவுடைமையும் ஆகும். அதற்கு மாறாக இருக்கும் கோவில்களைப் பழுதாக்கவும் பழுதுபட்ட கோவில்களைத் தரைமட்டமாக்கவும் மடிகட்டி மார்தட்டி முன்வரும் மதியினர் முயற்சியே பெரிதாகின்றது. அந்நண்பர்கள் நன்முயற்சியில் ஈடுபட்டு நாட்டையும் மொழியையும் நன்னெறியினையும் பண்டுபோல் ஓம்புவாராக.

(உ) தேவாரப்பணி

30-5-1955 இல் சென்னையை அடுத்துள்ள வடதிருமுல்லைவாயிலின்கண் காசித்திருமடத்து முதல்வரின் தேவாரத் திருப்பணிச் சிறப்புக் கூட்டம் நடந்தது. திருவாளர் சங்கரவடிவேற் பிள்ளையவர்கள் (இந்து நெறி அறங்காவற்றுறை முதல்வர்.) தலைமை பூண்டார்கள். பல மெய்யடியார்களும் புலவர்களும் ஓதுவாமூர்த்திகளும் சொற்பொழிவும் ஓதுதலும் புரிந்தனர். வன்றொண்டப் பெருந்தகையார் பாடியருளிய அத் திருவூர்த் திருப்பதிகம் திருப்பனந்தாள் திருமட முதல்வரால் சீர்பெறப் பளிங்குக்கல்லில் பொன்னெழுத்தால் எழுதுவித்து நிலைநாட்டப்பெற்றது. அத் திருப்பணியைத் தலைவர் அவர்கள் தம் அருமைத் திருக்கையால் திறந்துவைத்தார்கள். அவர்கள் கூறிய அருந்தமிழின் சுருக்கம்:

திருப்பனந்தாள் திருமடமுதல்வர் இதுபோன்று இருபத்தைந்து தேவாரத் திருப்பணிகள் பல்வேறிடங்களில் அமைத்துள்ளனர். தேவாரப் பதிகங்களை எல்லாரும் எளிதின் ஓதிப் பெரும்பயன் எய்த இதுவே சிறந்த வழியாகும் இத் திருமடத்துக்கு ஆண்டு வருவாய் நாற்பத்தேழாயிரம். இம் முதல்வர் இதுகாறும் செய்துபோந்துள்ள அறமுதலீடு முப்பத்து மூன்றுநூறாயிரம். ஆண்டு வருவாய் பதினைந்து நூறாயிரமுள்ள பெரிய திருமடங்களிருந்தும் இத்தகைய பேரறங்கள் புரியவில்லை. திருக்கோவிற் குருக்கண்மாருக்குச் சிவமணி வாங்கி வழங்க ஓர் ஏற்பாடு செய்யவேண்டுமென்று முதல்வர்பாற் குறிப்பித்தேன். அவர்களும் இணங்கி ஐம்பதினாயிரம் வெண்பொன் முதலீடு நிறுவி நல்ல சிவமணிகளை வரவழைத்து வழங்கிவருகின்றனர். அவ்வகையில் ஒன்று இப்பொழுது இத்திருக்கோயில் குருக்களுக்கு வழங்குகின்றேன். அவர்கள் எப்பொழுதும் அணிந்திருத்தல்வேண்டும், மேலும் திருக்கோவில் குருக்கள்மார் அனைவர்களும் தேவாரம் பயின்று ஓதுதல் வேண்டும். தேவாரம் ஓதாத குருக்கண்மார்க்குத் திருக்கோயிலில் வேலையில்லை என்பதே.

மதிப்புரை

(க) தண்டியலங்காரம் வினு - விடை

[இதன் ஆசிரியர் வித்துவான் வ. தங்கையா நாடார் அவர்கள், தலைமைத் தமிழாசிரியர், புனிதயோவான் உயர்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை. பக்கங்கள்—கருஉ, விலை ரூபா. 3.]

இதன்கண் சிறந்த முன்னுரை, ஆராய்ச்சியுரை, பதிப்புரைகள், பிற்சேர்க்கை கச பக்கங்கள் காணப்படுகின்றன. அணியிலக்கணங்களின் தன்மை, வடமொழி தமிழ்மொழிகளிலுள்ள நூல்கள், நூலாசிரியர் பெயர்கள், காலங்கள், உரைசிரியர் பெயர்கள், காலங்கள் முதலியன செவ்வையாகப் புலனுகும். இவைகளை மாணவரும் ஆசிரியன்மார்களும் குறிக்கொண்டு நோக்கல் சிறப்பாகும்.

நூலாசிரியர் தண்டியலங்காரத்தை மாணவர் எளிதிற்கற்றுப் புலமை எய்தவேண்டும் என்னும் நன்னேக்கத்தால் மிகமுயன்று யாத்துள்ளனர். தண்டியலங்காரச் சூத்திரங்களை முதற்கண் செம்மையாக அமைத்துள்ளனர். பின்னிணைப்பில் 1930-முதல் 1958, வரையுள்ள சென்னைப் பல்கலைக்கழகம், மதுரைத் தமிழ்ச்சங்கம் இவற்ருல் நிகழ்த்தப்பட்ட வினுக்களை முறைபுறுத்துள்ளார்கள். அவ்வவ் வினுக்களுக்குரிய விடைப்பகுதிகளை நூலகத்து எளிதிற்காணும்படி எண்முறை யமைத்துள்ளார்கள். கற்பிக்குமுறையில் மாணவர்க்கு எளிதாகவும் இனிதாகவும் செய்யக்கூடியது வினுவிடை ஒன்றேயாம். அம்முறையில் இவ்வினுவிடை யமைந்துள்ளது. இதன் பொருட்டு ஆசிரியர் மிகுந்த உழைப்பெடுத்துள்ளார்கள். தெளிவும் விளக்கமும் எளிமையும் இனிமையும் ஒருங்கமைந்துள்ளன. இவ்வினுவிடையைக் கற்பார் சூத்திரம், உதாரணச் செய்யுள் விளக்கம் எளிதுணர்ந்து தேறுவதுடன் பெரும்புலமையும் பெறுவர். பாடத்திட்டக் குழுவினர் இதனைப் பாடப்புத்தகமாக அமைத்து ஆசிரியரை ஊக்குவார்களாக. மாணவரும் ஆசிரியன்மாரும் இதனை வாங்கியுதவும் வாயிலாக ஆசிரியர் மேற்கொண்டுள்ள பண்டைய இலக்கண நூல்களின் வினுவிடை நூல்கள் வெளிவரத்துணை புரிவார்களாக.

(உ) செஞ்சியின் செல்வன்

[ஆசிரியர், சே. அமலன் அவர்கள். இலக்கியப் பூங்கா, 17, கஸ்தூரிபாய் வீதி, பண்ணுருட்டி. (தெ. ஆ.) பக்கங்கள்-கஎகூ, இதன் விலை ரூபா. 2-4-0.]

இஃதோர் அருமையான நாடகநூல். உண்மை வரலாற்று நூல் உணர்ச்சியூட்டும் புதுமலர்ச்சி நூல். வீரம்செறிந்த பேச்சு, பண்டை நிகழ்ச்சிகளை நேரிற்காண்பது போலிருக்கும் எழிலமைந்த நூல். இயல் இசை, நாடகம் மூன்றும் முறையே உயிர் உளம் உடல்போன்று எனவே நாடக வழியாக ஒழுக்கமுறைகளை எளிதிற் கற்பிக்கலாம். போன்ற நூல்களைப் பெருமக்கள் ஆதரித்துப் பண்டைப்பெருமை தமிழகத்துக்குத் தருவார்களாக.

(௩) வாழ்க்கையில் உயரும் வழி

[ஆசிரியர், ச. கந்தசாமி முதலியாரவர்கள், தமிழாசிரியர் ஒ தியாலாஜிகல் உயர்நிலைப்பள்ளி சென்னை. பக்கங்கள்-எஅ, ரூபா. 1-0-0.]

ஆசிரியர் பழுத்த பழக்கம் வாய்ந்தவர். பல நூல் பினர். மாணவர் உளமறிந்த மாண்பினர். மாணவர்

ஒழுகி நாட்டையும் மொழியையும் நன்னெறியினையும் வளம்படுத்து வதற்கு இந்நூல் வழிகாட்டியாகும்; இதன்கண் ஒழுக்கம், கல்வி, கடவுள் நினைவு, ஆன்றோர் பெருமை, ஆண்மை, அன்பு, நலம் முதலிய பலவும் செம்மையாக உரைக்கப்பட்டுள்ளன. நல்லதன் நலனும் அல்ல தன் தீமையும் உண்மை வரலாற்று முறையால் விளக்கப்பட்டுள்ளன. எளிய இனியநடை. மாணவர்க்கு ஏற்றமுறையில் அமைந்துள்ளது. மாணவர் ஆசிரியர், பெருமக்கள் எல்லாரும் இதனை வாங்கிப் பயன் பெற்று ஆசிரியரை ஊக்குவிப்பார்களாக.

(ச) கன்னித்தமிழ்

[எழுதி வெளியிடுவோர் மறைமலையடிமை. பக்கங்கள்-கக, விலை நபா. 1-0-0. கிடைக்குமிடம்: "கன்னித்தமிழ்" களஞ்சேரி, தஞ்சாவூர்.]


இதன்கண் பல சிறந்த அறிஞர் கட்டுரைகளும் கற்பனைக் கதை களும் காணப்படுகின்றன. எல்லாம் தனித்தமிழ் வண்ணமே. வட மொழியாளர் சூழ்ச்சியால் நேர்ந்த கேடுகள் ஆங்காங்கு நிகழ்த்தப் பட்டுள்ளன. அறமுறைகள், ஒழுக்கங்கள், வாழ்க்கைப் பண்புகள், புலவர்கள் போற்றும் புலவர்கள், ஆற்றும் ஆண்மையர், வினைப்பயன்கள் முதலிய பலவும் விளங்க உரைக்கப்பட்டுள்ளன. தமிழகமும் தமிழும் சிறந்தோங்க இந்நூல் சிறந்த துணையாகும். இதனை எல்லாரும் வாங்கி யும் வாங்குவித்தும் அருந்தமிழ் மொழியினைப் பண்டையினும் சிறக்க ஓங்குவிபபார்களாக. இந்நெறியில் உழைத்து வெற்றிகண்டுள்ள ்ந்நூலாசிரியர்க்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

ர) ஆழ்வார்கள் கண்ட அல்லிக்கேணி

[ஆசிரியர், திருமலை நல்லான் அவர்கள், பக்கங்கள்-எக, விலை அணா 12. கிடைக்குமிடம்: 29, பெருமாள் முதலி தெரு, சௌகார் பேட்டை, சென்னை-1.]

இந்நூலின்கண், பேயார், திருமழிசை யாழ்வார், திருமங்கை ஆழ் வார் ஆகிய திருமாலடியார் பாடியருளிய திருப்பதிகங்களுக்குச் செவ் விய உரையும் விளக்கமும் காணப்படுகின்றன. நடை, இனிய எளிய ஆற்றொழுக்குநடை. பல்லவர்கள் சோழர் பாண்டியர்களைப்பற்றியும் வரலாற்றுக்குறிப்புக்கள் காணப்படுகின்றன. கல்வெட்டுக்குறிப்புக் களும் உள. பல வடமொழி மேற்கோள்களும் உள்ளன. புராணக்கதை, பாரத இராமாயணக்கதை ஆங்காங்குத் திகழ்கின்றன. வேண்டிய அளவு இலக்கணக்குறிப்பும் உண்டு. பெரியவாச்சான் பிள்ளைகள், எம் பார் முதலிய பேருரையாளர் ஈடுகள் சிலவும் காணலாம். வைணவசித் தாந்த அருங்குறிப்புகளும் உள. கதையொடுமட்டும் நின்றுவிடாது கதையின் உருவகத்தால் கைக்கொள்ளவேண்டிய கற்பனைக் குறிப்புக்களும் உள. எடுத்துக்காட்டாக மழை தடுத்தல், யானையைக் காத்தல் முதலியவற்றைக் காண்க. இந்நூலைச் சிறப்பாகத் திருமால் நெறியினரும், பொதுவாகச் செந்தமிழன்பரும் வாங்கி ஆசிரியரை ஆதரிப்பார்களாக.


திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.



அம்பாசமுத்திரம் வழக்கறிஞர்

க. அ. சிவஞானம் பிள்ளை

மறைவு: **27-6-1955**



சிலம்பு உக — திருவள்ளுவர் ஆண்டு ககூஅகூ, ஆனி — ஜூலை, 1955. — பரல் கக

சிவஞானம் பிள்ளை அவர்கள்

[மாதவச் சிவஞானமுனிவர் மரபினர்]

ஊர்

சந்தனப் பொதியிலும் பைந்தமிழ்த் தென்றலும் முந்துறு பொருநையும் முத்தமிழ் முழக்கமும் எந்நாளும் திகழும் திருநெல்வேலித் திருக்குற்றாலத்துக்கு அண்மையிலுள்ள தக்க வேளாண்குலம் மிக்கிருக்கும் விக்கிரமசிங்கபுரம் ஆகும். இத்திருவூர் பாவநாசத் திருவூருக்கும் பக்கத்ததாகும். இவ்வூரின்கண் ஏறத்தாழ நூற்றெழுபத்துமூன்று ஆண்டுகளுக்கு முன் அருளால் தோன்றிய செந்நெறிச் செல்வர் சிவஞான முனிவரனார் ஆவர். இத்திருவினர் கருவிலே திருவருள் கைவந்த உருவினர். உலகுய்யத் தோன்றியருளிய நிலையினர். மிக இளமைப் பருவத்தே உளமார் துறவு உற்றவர். தென் தமிழும் வடமொழியும் முன்னைத் தொடர்பால் நிலைகண்டுணர்த்தும் திறலினர். மெய்கண்டாரருளிய செந்தமிழ்ச் சிவஞானபோத முழுமுதற் சித்தாந்த நூற்குச் சிற்றுரையும் பேருரையும் யாத்தருளிய முற்றுணர் பேராசிரியர். சித்தாந்தம், தூய செந்தமிழர் தம் சிறந்த தெய்வக் கொள்கையினை வலியுறுத்திவரும் தனிப்பெரும் நெறியாகும். இந்நெறியின் மெய்ம்மையினை விரித்து விளக்கி என்றும் நின்று அரண்செய்வது முனிவரனார் பேருரையே ஆகும். இவர்கள் நாவன்மையும் பாவன்மையும் பயிற்றும் மாண்பும் தவ அருளால்பெற்ற சிவகுரவர். உலகுய்தற்பொருட்டு இலக்கண இலக்கிய நூற்களும், அளவை சமயம் முதலியன விளக்கும் நூல்களும், வரிப்பாட்டு நூற்களும் ஆக முப்பது நூற்களுக்குமேல் அருளியுள்ளார்கள். அத்தகைத் தமிழ் சிவரனார் திருக்கோவில் இன்றும் ஆங்குத் திகழ்கின்றது.

மரபு

நம் சிவஞான முனிவரனார் தோன்றியருளிய திருக்குலத்து நேர்வழி முறையாகக் கொல்லம் க0௫ரு-ஆம் ஆண்டு வைகாசித் திங்கள், ஐந்தாம் நாள் தோன்றியவர்கள் நம் சிவஞானம் பிள்ளையவர்கள் ஆவர். இவர்கள் திருமுகமும் நம் முனிவரனார் அருள் முகமும் வடிவ ஒற்றுமையாகத் தோன்றுதலொன்றே மரபுண்மை நாட்டும் வாய்மையாகும். இவர்தம் தந்தையார் திருப்பெயர் அனந்தகிருட்டிணக் கவிராயர் என்ப. தாயார் முத்தம்மை.

கல்வி

இளமையிலேயே திருக்குறள் சித்தாந்தத் தொன்னூல்களிடத்து நனிபெருங் காதற் கருத்தினர். அவ்வுண்மை பின் தங்கள் வாழ்நாள் முழுவதும் அந்நூற்களை இடையறாது ஓதியும் ஓதுவித்தும், ஓதும் ஒண்மையர்க்கு ஒல்லும்வகை உதவி ஊக்குவித்தும் வரும்பணியே சிவப்பணியாகக் கைக்கொண்டொழுகிய தவவொழுக்கத்தால் நன்கு புலப்பட்டது. செந்தமிழும் ஆங்கிலமும் முறையாகக் கற்றுப் புலமை நிரம்பினர். ஆங்கிலத்தில் இளம்புலவர் (F. A.) என்னும் எழிற்பட்டம் எய்தினர். சட்டக் கலையிலும் தேறி வழக்கறிஞர் ஆயினர்.

வழக்கறிஞர்

அம்பாசமுத்திர அணிநகர் உறைந்து அறம்பயக்கும் வழக்கறிஞர் தம் வாய்மைத் தொழிலை மேற்கொண்டனர். உடல் நோய் நீக்கி உயிர்க்கு உதவும் மருத்துவத் தொழில்போன்று வழக்கறிஞர் தொழிலும் வண்மையுடையதே யாகும்; என்னை? உயிர்க்கு ஏற்படும் உடைமைக்கேடு உடலூறு இவற்றான் வரும் துன்பங்களைச் சட்டமுறையின் நீக்குவித்து இன்பமொடு இனிது வாழத் துணை புரிதலானென்க. இத்தொழிற்கண் பேரும் புகழும் பெருகப் பெற்றுத் திகழ்ந்தனர். வாய்மை வழக்கல்லாத வற்றைக் கடிந்து சேய்மையில் நீக்குவது இவர்தம் பண்பு. வாய்மை வழக்கினைத் தூய்மைசெய்து துணிவொடு நிலைநாட்டி வெற்றி காண்பது இவர்தம் வினைத்திறன். இம்முறையால் முறை மன்றத்தாரும், வழக்காளர்களும், உலகோரும் இவர்கள் பால் நன்மதிப்பு ஒருங்கு பூண்பாராயினர். அதனால் செம்மை நெறியால் மும்மைச் செல்வமும் எளிதிற் சேர்வவாயின. அச் செல்வம் தீதின்றிவந்த பொருளாதலின், அறனீன்றது; அவ்வழி இன்பமும் ஈன்றது. உறவும் நண்பும் சூழ்ந்தன.

வாழ்க்கை

புண்ணியப் பேற்றால் நண்ணிய வாழ்க்கைத் துணைவியார் மனைத்தக்க மாண்புடையார். சோர்விலாப் பெண்தகையார்.

துணைவரை இணையிலாத் துணையாய் இடைவிடாது காக்கும் எழிலினர். இனிய மருத்துவர்போன்று யாக்கையினை நோய்க்கு இடங்கொடாது காத்து ஊக்குவித்து உற்றுழியுதவிய ஒண்மையர். இவ்வுண்மை அவர்கள் வாய்மொழியாகப் புகன்று வருந்திய வருத்தமொழி பொருத்தமுறக் காட்டுவதாகும்; என்னை? 'இல்லத்துணையார் முன்னே செல்ல நேராது உடனிருப்பரேல் என்நோக்குப் பறிபோகாது ஆக்கமொடு நிலவும்' என்பதேயாம். பின்னாட்களில் தன்னை வற்புறுத்தித் தவிராது எண்ணெய் முழுக்கு முழுகச் செய்திருப்பரேல் இந்நிலை நேர்ந் திராதெனவும் கூறி, இரங்கினர். இது வள்ளுவப் பெருந்தகையார் 'அடிசிற்கினியாளே' என்று அகமுறக்கூறிப் பரிவுற்றதனை நினைவுறுத்துவதாகும். துணைவியார் பெயர் சிதம்பரத்தம்மாள்.

திருவருட்டுணையால் விருந்தும் ஈகையும், வேளாண் வாழ்க்கையும், தாளாண்மையும், அடியவர்ப் பேணலும், அறனை மறவாமையும், ஒக்கல் போற்றலும், மக்கட் செல்வமும், ஆன்றோர் நட்பும், ஊருடன் வாழ்தலும் ஒருங்கு எய்திச் சிறந்து வாழ்ந்தனர். திருக்குறளே இவர்தமக்கு உருக்கமுள்ள வழிகாட்டியாகும். எப்பொழுதும் உடனிருக்கும் உயர்ந்த கருவூலமாகும். ஒருகால் நீராவி வண்டியிற் செல்லும்போது வெள்ளைப் பாதிரித் துரைமகனாருடன் செல்ல நேர்ந்ததாம். அப்பொழுது அத் துரைமகனார் தங்கள் கிறித்துபெருமான் உலகுக்குணர்த்திய உயர்ந்த அறவுரைபோன்று எவரும் யாண்டும் புகன்றிலர் எனப் பெருமிதம் கொண்டனராம். அஃதென்னை எனின்? "ஒருவன் உன் வலக்கன்னத்திலடித்தால் உனது இடக் கன்னத்தையும் அவனுக்குத் திருப்பிக்கொடு" என்பதே. இதனை அன்புடன் கேட்டுக்கொண்டிருந்த நம் பிள்ளையவர்கள், அகமகிழ்வுடன் எங்கள் திருவள்ளுவ நாயனார், 'துன்பம் செய்வார்க்கும் இன்பம் செய்' என்றருளினர். அது "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண, நன்னயம் செய்துவிடல்" என்னும் திருக்குறளாகும் எனத் திருக்குறளை எடுத்துக்காட்டி விளக்கினர். அந்நாள் தொட்டு அத்துரைமகனார் நண்பராய்த் திருக்குறளைக் கற்றுத் தெளிந்து மேல்நாடு சென்றும் நண்புமுறை எழுத்துக்கள் விடுத்துக்கொண்டேயிருந்தனர் என்ப.

இச்சீரிய தொண்டுமுறை பிள்ளையவர்களின் திருமகனார் திருமணத்தின்போது புறக்கொடையாய்ப் பெரும்பாலும் உடலோடமைவதாயுள்ள சந்தனம் பன்னீர் வெற்றிலை பாக்கு பூ பழம் முதலன வழங்குவதுடன் உயிருடன் உறைவதாயுள்ள உணர்வு நூற்கொடையும் வழங்கி வழிகாட்டினர். அந்நூல், எது? 'திருக்குறள் அறத்துப்பால் இல்லறஇயல்

உரையுடன்' சேர்ந்த அணிநூல் ஆகும். மேலும் நம் சிறிய மகளிர் வள்ளுவர் வழியின்றொழுகி வாழ்தற்பொருட்டு, நம் இல்லங்களில் அவர்கள் கண்ணில் காணும்படி பெரிய எழுத்தில் இன்றியமையாத சில திருக்குறளை அழகுறப் பொறித்துவைத்தல் வேண்டும் என வலியுறுத்துவர். அவ்வாறு தாங்கள் செய்ததாகவும் கூறுவர். அவற்றுட் சில: 'அற்றாரழி பசிதீர்த்தல்' 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' 'பழியஞ்சிப் பாத்தூண்' முதலிய முழுத்திருக்குறளுமேயாம்.

பொதுத்தொண்டு

திருநெல்வேலி 'வேளாளர் கல்விச் சங்கத்தின்' தூணையுறுதிச் சுற்றமாய், தலைமைப் பணியராய், உண்மை உழைப்பினராய், ஓவா துழைத்து உயர்த்திய ஒருபெரு முதன்மையர். அச் சங்கத்தின் வைப்புப் பொருள் உரிமை நிலையம் முதலியன அமைத்தற் பொருட்டு உள் நாட்டினீட்டிய உதவித்தொகையுடன் கடல்கடந்து இலங்கை முதலிய இடங்களிலும் வந்து பெரும்பொருள் திரட்டி நல்கினர். அப்பொழுது அவர் தம் நீண்டு பரந்த முகப்பொலிவும், புன்முறுவலும், நாவன்மையும், அன்பிணைப்பும் யாவரையும் ஒருங்கீர்த்து உதவச் செய்தன. இதனைக் கண்ணுறுவார் இவர்தம் பண்பாட்டொழுக்கம் இத்தகைய என இசைப்பர். அவை தருக்கின்மையும், உயர்ந்தார்ப்பணிதலும், ஒத்தார்க்குறவும், உயர்வார்க்கு நன்மதிப்பும் தக்கவாறளித்து உலகத்தோடொட்ட வொழுக்கின என்பதே. இம்முறையால் அவர்கள் பல்லாண்டுகளாக அம்பாசமுத்திரம் வட்டக் குழுவாட்சியின் (Taluk Board) தலைவராகவும், சேரன்மாதேவி வட்டக் குழுவாட்சித் துணைத்தலைவராகவும், திருநெல்வேலி மாவட்டக் குழுவாட்சி உறுப்பினராகவும் உறைந்து நன்மதிப்புடன் தொண்டாற்றி யுள்ளனர். அதுவேபோல் அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியின் செயலராகவும் தலைவராகவும் இருந்து அப்பள்ளியின் முன்னேற்றத்துக்கான பயனார் பலபணி புரிந்துள்ளனர்.

சிவத்தொண்டு

திருக்குறளின் காதல் போன்று திருமுறை பன்னிரண்டும் சித்தாந்த நூல் பதினான்கும் ஆகிய மெய்ந்நூற்கண் மெய்க்காதல்கொண்டு ஒழுகியவர். திருக்கோவில் முன்னாள் ஆட்சிக் குழுவினருள் ஒருவராயிருந்து அறப்பணி புரிந்தவர். சித்தாந்த சைவ உண்மை நாடெங்கும் பரவவேண்டும் என்னும் பெருங்காதல் கொண்டவர். சித்தாந்த சைவத் தமிழ் மந்திரமாம் 'சிவயநம' என்னும் திருவைந்தெழுத்தில் மிக வுறுதியுடையவர்.

அதனைத் தம் வாழ்நாளில் பல கோடிக் கணக்காக உருவேற்றியவர். அதன் பொருட்டு அவர்கள் கைக்கொண்ட முறை நாடொறும் அகம்புறம் தூயராய்த் தூய இடத்தமர்ந்து சிவ நினைவுடன் ஒரு குறிப்புப் புத்தகத்தில் வரிசை வரிசையாக எண் முறைவைத்து எழுதிவருவது. அது கோடி என்னும் எண் நிறைந்ததும், பாடல் பெற்ற திருவூர்களிற் சென்று சிவனை மலர் தூவி வழிபட்டுத் திருவடியில் புத்தகத்தோடொப்புவித்தல்.

இச் சிவத்தொண்டினை ஏனையோரும் கைக்கொண்டு உய்தற் பொருட்டுத் திருமுறை நூல்கள் பல அவ்வப்போது வெளியிட்டு நன்கொடையாக வழங்கி யுள்ளார்கள். அந்நூற்களைப் பெற விழையும் அன்பர்கள் நூற்களுக்குத் தக்கவாறு திருவைந்தெழுத்தை ஆயிரம், பதினாயிரம், நூறாயிரம் இவற்றிற் குள்ளிட்ட எண்கள் முதலியனவாக வரையறுத்தபடி எழுதியனுப்புதல் வேண்டும். அவ்வாறு எழுதியனுப்பிப் பலர் பல நூற்கள் பெற்று நன்மை எய்தியுள்ளார். அப்பழக்கத்தால் திருவைந்தெழுத்தை ஓதலும் ஓதத் துணைபுரிதலும் இயல்பாயின.

'சிவஞானபோதப் பாடம்' கேட்கும் பேரார்வம் உடையவர். நம் கழகச் சார்பில் திருநெல்வேலியில் 27-4-52 முதல் 30-5-52 வரை திரு. தா. சு. கந்தசாமி முதலியார் அவர்கள் ஆசிரியராக இருந்து நிகழ்த்திய பாடவகுப்பில் முதுமைத் தோற்றத்தும் இளமைப் பண்போடிருந்து விடாது பாடங்கேட்டனர். நுணுக்கமான வினாக்கள் எழுப்பிக் கற்பார்க்கு ஊக்கம் காட்டினர். அதுபோன்று சமாசத்தால் பாபநாசத்தில் நடத்திய சிவஞானபோத வகுப்புக்களிலும் கேட்டனர்.

சிவனடி நீழலெய்தல்

இத்தகைய தவப்பெரியார் 27-6-1955 திங்கட்கிழமை இரவு தம் இல்லத்துப் பெண்மக்கள், மருகர், பெயரர் பெயர்த்தியர், ஆண்வயிற்றுப் பெயரன் அவர் தம் துணைவியர் உற்றார் நண்பர் ஊரவர் புடையிருந்து திருமுறையோதச் சிவநினைவுடன் ஆவி நீத்தனர். இவர்கட்கு மூன்று பெண்மக்களும், ஆண்வயிற்றுப் பெயரர் ஒருவரும் உளர். அவர்தம் ஆவி என்றும் சிவனடி நீழல் எய்தி இன்புறுமாக. அவர்தம் வழியினர்க்கும், அருமை மருகர் இந்துமத அறநிலையக் கழக ஆணையர் சைவத்திருவாளர் சங்கர வடிவேலுப் பிள்ளை, ஐ. ஏ. எஸ்., அவர்கட்கும் எங்கள் பரிவும் ஆறுதலும் உரிமையாகுக.

வாழ்க சிவஞான வள்ளல் வழிமரபு

நெய்தலே நெய்தல்

[வித்துவான், திரு. ப. சு. நடராசன்.]

ஆம்! நெய்தலே நெய்தல். நெய்தற் றொழிலே நெய்தல். இல்லை இல்லை. வலை நெய்தலே நெய்தல். அதுவுமின்று; நெய்தற் பூக்கள் நிறைந்த காரணத்தால் நெய்தல். இவ்வாறு பெயர் பெற்றதென்று பலவாறாகப் பகர்வார்கள் பலர், தங்கள் தங்கள் கருத்திற்கேற்ப.

தமிழறிஞர்கள் தன்னுட்கிடக்கையை யுணர்த்த, குறிப்பிட்ட பண்பும் தொழிலும் காரணமாக, அவ்வந் நிலங்கட்குப் பெயர் வைத்தார்களோவென்று ஆய்ந்தாய்ந்து பார்க்கும் நிலையிற் றிகழ்கின்றது.

இவ்வாறாயின், நெய்தல் என்ற பெயர் பொருள்பற்றி வந்ததா? அன்றிப் பொருளில்லாமல் வந்ததா? என்பதற்குப் பொருளில்லாமல் பண்டைப் பெரியோராம் சான்றோர்கள் எவற்றிற்கும் பெயர் வைத்திருக்கமாட்டார்கள், என்று உறுதியுடன் கூறிக்கொள்ளலாம்.

அப்படியாயின் நெய்தல் என்ற சொற்குப் பொருள் என்னையோவென்று ஆய்ந்து நோக்குவோமாயின், முதற்கண் கூறியபடி கடற்கரைவாழ் மக்கள் தம் தொழிலின் பொருட்டு நெய்தல் வேலையைக் கைக்கொண்டார்களா? அல்லது வலைஞராதலும் (ஒரு சார்பில்) நெய்தல்நிலப் பிரிவினராகலின், வலை நெய்து வாழ்ந்த காரணத்தால், அந்நிலத்திற்கு நெய்தலெனத் தெற்றெனப் பெயர் வைத்தார்களா? என்றுமறியக் கிடக்கி...

அத்துடன் நம் ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்திற்கு உரைவரையப்போந்த நச்சினார்க்கு இனியர் கூற்றையும் ஆய்வாம். இந் நச்சினார்க்கு இனியர் அவ்வொல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தின் முதலுரையாசிரியராம் இளம்பூரண வடிகளின் கருத்தை மறுக்கவெண்ணி, (போலும்) ஐந்து நிலங்களும் தத்தமக்குரிய ஒழுங்கங்களினால் பெயர்பெற்றன என்று பகர்ந்து கூறுதல்தான் பொருந்துமென்றவராய், ஐந்து நிலங்களும் தங்கள் தங்களுக்கே யேற்ற ஒழுக்கங்களினாற் பெயர் அடைந்தன என்று அறைந்து கூறுவதன்றி, "முல்லை முதலிய பூவாற் பெயர் பெற்றன இவ்வொழுக்கங்களெனின் அவ்வந் நிலங்கட்கு ஏனைப் பூக்களும் உரியவாகலின், அவற்றாற் பெயர் கூறலும் உரியவெனக் கடாவுவாற்கு விடையின்மை யுணர்க" என்று மறுத்துப் போந்தார்.

நச்சினார்க்கினியர் கூற்றுப்படி நெய்தல் என்ற சொற்குப் பொருள் இரக்கம் என்றுகொண்டு, இவ்வொழுக்கத்தினாலும்

பெயர் கூறியது பொருந்துமென்று கொள்வதன்றி, இளம்பூரணர் கருத்தையும் மறுப்பதற்கில்லை. எவ்வாறேனெனின், பலமரங்கள் செறிந்தடர்ந்த தோட்டத்தைப் பெரும்பான்மை பற்றிக் "கமுகந்தோட்டம் என்றாற்போல நெய்தற் பூக்கள் மிக்குள்ளமைபற்றியும், தலைவன், தலைவியை நாடித் தேரூர்ந்து வருதற்கண், கடற்கரையிற் படர்ந்த நெய்தற்கொடி தேருருளைகளாற் துண்டுபடுத்தப்படும்" என்று இலக்கியங்களில் வருதலானும், அவர் கூற்றும் கொள்ளவேண்டியதன்றித் தள்ளவேண்டிய கூற்றன்றாம் என்க. இது நிற்க.

இனி, சில புலவர்களின் கவிச்சுவையைக் கண்டு களிகூர்வாம். நெய்தல்நிலத் தலைவியைத் தலைவன் பிரிந்தான்; பிரிந்தது ஆற்றகில்லாது, நாணத்தின் எல்லைகடந்து, கலங்கி அறிவழிந்து கூறுகின்றாள்.

முதற்கண் திங்களிடத்துள்ள குறுமுயலை நோக்கி, "குறுமுயலே! யான் பிரிந்து வாடற்குக் காரணமாய கேள்வனைக் காட்டுவாய்! காட்டாயாகில் நின் பகையாய நாயை நின்னிடத்துச் சினப்படுத்திக் கடிக்கவிடுவேன். அத்துடன் நின்னை விடுவனோ? வேட்டுவருள்ளவிடஞ் சென்று முயலொன்றுண்டென அறைவேன். அதுவுமேயன்றி நீ அரணாக உறைகின்ற திங்களோடே, தன்புறத்தி விழுங்கும்படி மதிக்குப் பகையாம் பாம்பிடத்துப் பகர்வேன், ஆதலின், நீ தப்பித்துக்கொள்ள (குறுமுயல்பால் இரக்கங்கொண்டு) என் கணவனும் கேள்வனைக் காட்டென்பாள். இதைத்தான் கற்பனைக் கடலாகக் காட்டுகின்றார் ஆசிரியர். பாருங்கள் பாட்டை,

"திங்களுள் தோன்றி இருந்த குறுமுயால்
எங்கேள் இதனகத் துள்வழி காட்டீமோ
காட்டீ யாயின் கதநாய் கொளுவுவேன்
வேட்டுவர் உள்வழிச் செப்புவேன் ஆட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் மதிதிரிந்த
என்னல்லல் தீரா யெனின்."

அடுத்ததாக, காற்றைக் கண்ணுற்றுக் கூறுகின்றாள், "வளியே! கதிரவன் கதிர்கள் உள்ள இடமெல்லாம் சென்று வீசும்நீ, என்னழகையுண்டு காரணமில்லாமற் பிரிந்தானைக் காட்டாயோ? காட்டாயாயின், என் கண்ணீரைத் தெளித்து அதன்கண் உண்டாம் அழலாலே நின் மேனியெல்லாஞ் சேரச் சுட்டுவிடுவேன்," என்று வஞ்சினங் கூறுமுறையில் கற்பனைக் களஞ்சியமாம் நல்லந்துவனார் கண்ட செய்யுளையே காணுங்கள்:

"வளியே எதிர்போம் பலகதிர் ஞாயிற்று
ஒளிஉள் வழியெல்லாம் சென்று முனிபுஎம்மை
உண்மை நலனுண்டு ஒளித்தானைக் காட்டீமோ

காட்டாயேல் மண்ணகமெல்லாம் ஒருங்கு சுடுவேனென்
கண்ணீர் அழலால் தெளித்து''

அத்துடன் விட்டாளா? அவ்வாற்றாளாய தலைவி, கடலை யும் நோக்கிக் கலக்குகின்றாள். "ஏ! கடலே! கண்ணான கணவனைக் காண்பதற்கு வழிவிடாயாகில் என்ன செய்வேன் தெரியுமா? நின் நீரிடமெல்லாம் வெறுமணலாம்படி என் புறங்காலாம் அடிப்புறத்தாலே நீரெல்லாம் வற்றிப்போம்படி இறைப்பேன். 'அது உன்னால் முடியுமோ?' என்று, எளனச் சிரிப்புச் சிரித்தாலும் சிரிப்பாய். யான் செய்கின்ற செயலுக்கு அறமானது துணை செய்தலுமுண்டு. இதிற் றடையில்லை. இதைப் புனைகின்றார் கவி பூங்காவாக, நகைச்சுவை ததும்பும்படி. பாருங்கள் அந் நகைச்சுவை அடிகளை,

"பேணுன் துறந்தானை நாடும்இடம் விடாயாயின்
பிறங்குஇரு முந்நீர் வெறுமண லாக
புறங்காலிற் போக இறைப்பேன் முயலின்
அறம்புணை யாகலும் உண்டு."

இப்படி வேடிக்கையாகக் கவிபுனைவதிலும் வல்லவர்போலும் நல்லந்துவனார்!

நிற்க, கவைமகனின் சொற்றிறங் காண்பதுங் களிப்புடைத்தாம். தலைவனுக்குந் தலைவிக்குமிடையில் சிக்குண்டதாகக் கற்பிக்கிறார் தோழியை. பாருங்கள் சொற்றிறமையை, "பெரும! நீ நினது அன்புடைமை மிக்குள்ள செவ்வியால், கொல்லுதல் வல்ல ஆண்முதலைகள் நிறைந்த வழியிலே, பிறர் செல்வதைத் தடுத்து நிற்கும் கானற் கடற்றுறை இருங்கழியை நீந்திக் கடந்து தலைவியிடத்து வருகின்றாய். தலைவியோ தன் அறியாமையிற் சிக்குண்டு நின்னிடர் குறித்து நைகின்றாள், வரும் வழியின் கொடுமை நோக்கி.

"நீங்கள் இருவரும் இப்படி இருக்க, நானோ நஞ்சுண்ட இரட்டைக் குழந்தையைக் கண்டு, நடுக்குற்று, இருவர் பக்கலும் இரக்கங்கொண்டு, இருவரிடத்தும் நலனுண்டாதல் நினைத்து மருந்தளிக்கும் அன்னைபோல, உங்களிருவருக்கும் வரைவாகிய மருந்தளிப்பதைத் தவிர, வேறு வழி அறியாளாய்த் தவிக்கிறேன். இக்காலத்து'' என்கிறாள் தோழி. செய்யுளுருவிலும் காணுங்கள் இச்செய்தியை:

"கொடுங்கால் முதலை கோள்வல் ஏற்றை
வழிவழக் கறுக்கும் கானலம் பெருந்துறை
இனமீன் இருங்கழி நீந்திநின்
நயன் உடைமையின் வருதி இவள்தான்
மடன் உடைமையின் உயங்கும், யான்அது

கவைமகன் நஞ்சு உண்டாங்கு
அஞ்சுவல் பெருமதி! என் நெஞ்சத்தானே"

இக் கவிச்சுவையைத் தெளிவுடன்-நுண்மாண் நுழைபுலத்துடன் கண்டால் நெக்குநெக்கு உருகல் வேண்டாவோ!

'குறுந்தொகை' கண்டோம் 'நெடுந்தொகை' எப்படி? காண்பாம். நெடுந்தொகையாம் அகத்தில் 'செல்லூர்கிழார் மகனுர் பெரும்பூதங் கொற்றனுர்' தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலையைக் காட்டுகின்ருர். தலைவியை நோக்கித் தோழி கூறுவதாக "தலைவி மணங்கமழ் மணலிற் கணங்கொள் ஆயமொடு கலந்து விளையாடாநிற்குங்கால், தேரினைத் தேர்ப் பாகனெடு நீக்கி நிறுத்தித் தாரையும் கண்ணியையும் அணிந்தவனுகி அணிமையில் வந்து, ஒரு தலைவன் யாம் கட்டிய வண்டலா லியன்ற விளையாட்டு வீட்டைப் புகழ்ந்த சொல்லன் ஆக, அதற்கு விடை பெருனுகவும் திரும்பிச் சென்ருன். இவ்வாறு சென்றதை நினைத்தவளாய், துன்பத்தால் தோள்மெலிய, பெண்டிர்கள் தூற்றும் அலரால் உள்ளங் கலங்கி, வளைகழன்ற நம்முடன் இக் கடற்றுறையுங் இரக்கங்கொண்டு துஞ்சாது துன்பப்படுகிறது போலும் இவ்விருளிலே" என்று கூறுகின்ருள் தோழி. இதைத் தான் கவியுருவிற் பிழிந்தார் கவிவாணர் பின்வருமாறு:—

"கணங்கொள் ஆயமொடு புணர்ந்து விளையாடக்
கொடிஞ்சி நெடுந்தேர் இளையரொடு நீக்கித்
தாரன் கண்ணியன் சேர வந்து ஒருவன்
வரிமனை புகழ்ந்த கிளவியன் ஆவதும்
மறுமொழி பெருஅன் பெயர்ந்தனன் அதற்கொண்டு
அரும்படர் எவ்வமொடு பெருந்தோள் சாய
அவ்வலைப் பரதவர் கானலஞ் சிறுகுடி
வெவ்வாய்ப் பெண்டிர் கவ்வையிற் கலங்கி
இறைவளை நெகிழ்ந்த நம்மொடு
துறையுந் துஞ்சாது கங்கு லானே."

இவ்வாருகப் பண்டை நம் புலவர்கள் தங்கள் தங்கள் கருத்தைத் தடங்கலின்றித் தரணிக்குக் கொடுத்துச் சென்றனர். அதை நம் வண்டமிழ் நாட்டார் யாவரும் நுகர்தல் வேண்டாவோ?

நுகரும் இன்பத்தின் இடையில், நுண்ணிய பொருள்களாம் அறவுரைகளையும் எளிதாக நுழைத்து விடுகின்ருர் நம் நல்லந்துவனுர் என்பதற்குச் சான்ருக ஒன்று காண்பதும் தகுதியுடைத்தாம்.

இல்வாழ்க்கை இயல்புடன் நடத்துவதென்று நவில்வது மிடியுற்ருர்க் கொன்று உதவுதலையாம்.

ஒன்றைப் பாதுகாத்தல் என்று பறையறைவதெல்லாம், கூடினரைப் பிரியாதிருத்தலேயாம்.

மக்கட்கேற்ற பண்பெனப்படுவது உலகத்தோடு ஒட்ட ருதலேயாம்.

அன்பென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, தன் உற வினரை நகை முகங்கொண்டு, பகைமுறை கொள்ளாது கெடா யாம்.

அறிவு அறிவு என்று கூறுவதெல்லாம் அறியாதார் தன்னை நோக்கிச் சொல்லுஞ் சொல்லைப் பொறுத்துக் கொள்வதாம்.

ஒருவற்கு ஒருவன் உறவு என்று கூறப்படுவது, கூறிய தொன்றினை மறாது செய்தலேயாம்.

நிறை யென்று சொல்லப்படுவது, மறைந்தது ஒரு செயலைப் பிறர் அறியாது ஒழுகுதலேயாம்.

முறை முறை யென்று மக்கள் முறையிடுவதெல்லாம், நம ரென்று கண்ணோட்டஞ்செய்யாது, அவர் செய்த குறைக்கேற்ப முறையாக உயிர் வாங்குதலேயாம்.

பொறை யென்று புகலப்படுவது, பகைவரைக் காலம் வருமளவும் பொறுத்திருந்து வெல்லுதலேயாம்.

இக்கருத்தமைந்த கவியை ஆசிரியர் செய்தபடியே காண்பது நலந்தருமன்றோ? பாருங்கள் அக்கவிதையாம் அறவுரையை:

"ஆற்றுதல்என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார்சொல் நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்"

இவைகளையெல்லாம் நாம் உணர்ந்துகோடல் கடமையன்றோ? கடமையுணர்ந்து நாமும் பிற்கால மக்களுக்குக் கவிபுனைய வேண்டாவோ?

இத்துடன் இது நிற்க; சங்கப் புலவர்கள் உவமைகூறி ஒரு பொருளை விளக்குவதில் கைதேர்ந்த அறிஞர்கள் என்றுதான் கூறவேண்டும். மேற்கோளாக சிலவற்றை ஆய்தலும் பொருந்து மன்றோ? மாலையின் துன்பத்தைச் சிறப்பிக்கவந்த ஆசிரியப் பெருமகனார் நல்லந்துவனார், உவமை கூறுகிறார் (யாரும்) சொல் லொணா உவமையாக.

முதலில் நீர் வெள்ளத்திலே அகப்பட்டுக் கரையேறமாட்டாது தடுமாறிக்கொண்டிருக்கும் மருண்ட பார்வை மரையினது மார்பகத்தை நோக்கிக் கணைதொடுக்கின்ற கயவனும் கொடியவனைப்போல, என்னை அல்லற்கடற்கண் அழுத்தி இன்னற் படுப்பிக்க வந்தாயோ? ஏ! அருளில்லாத மாலையே என்றும்,

இரண்டாவதாகப் போரிலே தோற்றிருந்தவர்களை அவர்கள் பட்ட தோல்வியைச் சொல்லிச் சொல்லி இகழ்ந்து சிரிப்பாரைப் போல, பொறுத்தற்கரிய இன்னற்கடலில் ஆழ்ந்து துன்புறுகின்ற என்னை வருத்துவிக்க வந்தாயோ? அஞ்சும்படியான கடிய மாலையே என்றும்,

மூன்றாவதாக முன்பே வெந்ததொரு புண்ணிலே பின்பொரு வேலைச் சொருகி அல்லலுழப்பிப்பாரைப்போல, என் உடல் வெதும்புதற்குக் காரணமான காமநோயிலே கிடந்து, அழுந்துகின்ற என்னை உள்ளி, உள்ள அறிவையும் கலக்கி அறிவைப் போக்க வந்தாயோ? ஏ! கருணையற்ற மாலையே! என்றும்,

மூன்றுவமையின் மூலமாக மாலையின் கொடுமையை மொழிந்தார். இவ்வுவமையின் உண்மையான சொற்றிறங் கண்டு இன்புறத்தக்கது, தமிழ்நாட்டுப் பண்புடை மக்களின் கடனேயாம். செவியுறுங்கள் அச் சொற்றிறத்தை:

"மாலைநீ;
வெள்ளமான் நிறம்நோக்கிக் கணைதொடுக்கும் கொடியான்போல் ;
அல்லற்பட் டிருந்தாரை அயர்ப்பிய வந்தாயோ
",
போர்தொலைந் திருந்தாரை பாடெள்ளி நகுவார்போல்
ஆரஞர் உற்றாரை அயர்ப்பிய வந்தாயோ
மாலைநீ,
வெந்ததோர் புண்ணின்கண் வேல்கொண்டு நுழைப்பான்போல்
காய்ந்தநோய் உழப்பாரைக் கலக்கிய வந்தாயோ"

என்னே! என்னே! அவரின் நாவன்மை.

இவ்வாறு கொடுமைசெய்த மாலையே தனக்குரிய காலங் கழிந்ததும் காணமற் போயது என்பதை யுணர்த்த உணர்ச்சியுடன் கூடிய உண்மையான ஓர் உவமையை உரைக்கின்றார் ஆசிரியர். நால்வகைப் படை வகைகளில் குறைந்த அரசனை, அவன் இளைத்தகாலங் கண்டு, அவன்மேற் போர்தொடுத்து, மேலாய் வந்த பகையானது, அப் பகைமையை விரையப்போக்கி, முறியடிக்கவல்ல, நல்லிறைவன் வந்தெதிர்த்துப் போர்புரிய, பகையரசன் தோற்றோடி ஒளித்தாற்போல, கொடுமை செய்யப்போந்த மாலையும், தேரூர்ந்த கணவன்தோன்ற, இராக்காலத்திடத்தே

சென்றொளித்தது என்ற பொருள்படப் பாடுகின்றார் புலவர் பாருங்கள் பாட்டை:

"..............................காதலர் துனைதர
மெல்லியான் பருவத்து மேனின்ற கடும்பகை
ஒல்லென நீக்கி ஒருவாது காத்தோம்பும்
நல்லிறை தோன்றக் கெட்டாங்கு
இல்லாகின்றால் இருளகத்து ஒளித்தே"

மற்றொரு விடத்தில் பகல் செல்லுகின்ற தன்மையையும் மாலைவருகின்ற செவ்விய போக்கினையும் உவமையாக விரித்துரைக்கின்றார், மனம் மட்டற்ற மகிழ்ச்சியில் மகிழ்வுற்றிருக்க,

"நயனும் வாய்மையும் நன்னர் நடுவும்
ியிய இவையென இரங்கப்
புரைதவ நாடிப் பொய்தபுத்து இனிதாண்ட
அரைசனொடு உடன்மாய்ந்த நல்லூழிச் செல்வம்போல்
நிரைகதிர்க் கனலி பாடொடு பகல்செலக்
கல்லாது முதிர்ந்தவன் கண்ணில்லா நெஞ்சம்போல்
புல்லிருள் பரத்தரூஉம் புலம்புகொள் மருண்மாலை"

இவ்வடிகள் என்ன கூறிற்றோ வென்று திகைக்க வேண்டாம். பாருங்கள் பொருளை.

(இம்) மன்னனால் விளங்கின, "கலந்த உறவும் உண்மை கூறலும், நன்மையையுடைய நடுவுநிலைமையுமாகிய இவை இனி விளக்கமின்றிப் போயின வென்று, தனக்குப் பின்பு உலகத்தார் இரங்கும்படியாக, அவற்றிற்கு உயர்ச்சி மிகும்படி ஆய்ந்து, பொய்யைக் கெடுத்து நன்றாக ஆண்ட அரசனோடே சேரக் கெட்ட, நல்வழியால் உண்டாய செல்வம்போல, கதிரையுடைய ஞாயிறு மறைதலோடு பகற்காலமும்போக, பின்பு, மாலைக் காலம், ஒன்றையுங் கல்லாமல் மூத்தவனுடைய அறிவுக்கண் திறக்கப்பெறாத நெஞ்சம்போல் அற்பமான இருள் உலகத்திலே பரந்தது.

இவ்வாறு நாட்டின் நலத்தையும், அவர்கட்குண்டாம் துன்பத்தின் நிலையையும் உவமையின் வாயிலாகவும், அறவுரையாகவும் கூறிப்போந்த பண்டை நம் தமிழ்ப் புலவர்களின் நூலாம் குறுந்தொகை நெடுந்தொகை, கலித்தொகைகளை மறத்தலியலுமோ?

தமிழ் எழுத்துக்களின் சிறப்பு

[சைவப்புலவர், இராவ் சாகிப், டாக்டர். தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை
L. M. S. S. A., M. R. A. S. (LOND.)]

(சிலம்பு: உக, பரல்: க0, சகஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

எகிப்துநாட்டுச் சித்திர எழுத்துக்கள்

எகிப்துநாட்டிற் காணப்படும் எழுத்துக்களும் சித்திர எழுத்துக்களே (Egyptian Hieroglyphics). இவை மறை பொருளாயுள்ள (இரகசியமான) எழுத்துக்களையே குறிக்கின்றனவென்று ஆராய்ச்சி வல்லுநர் கூறுகின்றனர். இது மிகப் பழமையான சித்திர எழுத்தாகும். மேற்கூறப்பட்ட மொகஞ்சதரோ சித்திர எழுத்துக்களுக்கும், திராவிட மொழிகளுக்கும் (சிறப்பாய்த் தமிழ் மொழிக்கும்) மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகிறதென்று தவப்பெருந் திரு. Rev. H. Heras S. J. அடிகளார் பெருமான் (Director, Indian Historical Commission of Bombay), மொகஞ்சதரோவிற் கிடைக்கப்பெற்ற ஆயிரக்கணக்கான சித்திர எழுத்துக்களைக் கூர்த்த ஞானக்கண்களோடு ஆய்ந்து தெளிந்து உறுதிப்படுத்தியுள்ளார் (இவ் அடிகளார்க்கு உலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. தமிழகத்துக்குத் தலைசிறந்த போற்றி இவரே. முழுமுதற் கடவுள், உலக வுண்மைகளை உறுதிப்படுத்த இன்னும் ஒரு நூற்றாண்டுக்காவது இவரது பூதவுடலை உய்விப்பாராக).

எகிப்துநாட்டுச் சித்திர எழுத்துக்களும் தூய தமிழ் மொழியிலேயே உள்ளதென்று நெல்லை மாவட்டத்து ஆராய்ச்சியாளர் ஒருவர் கூற முன்வந்துள்ளார். வாழ்க. உண்மை ஓங்குக.

ஆங்கில எழுத்துக்களின் உருவங்கள் சித்திர எழுத்துக்களா?

இன்று நம்நாட்டில் தாய்மொழிக்கு அடுத்தபடியாயுள்ள ஆங்கில எழுத்துக்களின் உருவங்கள் எங்ஙனம் தோன்றியெழுந்தன என்பதைச் சிந்திப்பதும் இங்குப் பொருத்தமே. ஆங்கில எழுத்துக்களின் இற்றைய வடிவங்கள் உருவாகிய முறையைப்பற்றிய சில குறிப்புக்கள் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன. கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஆங்கிலம் கற்று வந்தும், ஆங்கிலமொழி இலக்கியங்களில் உயரிய பட்டங்கள் பெற்றுள்ள பலஅறிஞர்களுடன் நெருங்கிப் பழகியும், ஆங்கிலமே தனித் தாய்மொழியாக நிலவும் மேனாடு சென்று மருத்துவக் கல்லூரியிலும் கற்றுப் பட்டமும் யாம்பெற்றிருந்தும், பின்வரும் குறிப்புக்கள் இத்தனை நீண்டகாலமாய் எம் அறிவிற்கு எட்டாமலிருந்தது நினைக்குந்தோறும் பெருவியப்பாகவே யிருக்கின்றது.

ஆங்கில எழுத்துக்கள், இன்று பல உருவங்களிற் காணப்படு கின்றன. இவை, இந்த உருவங்கள் ஏற்றதற்குத் தக்க ஏதுக்கள் இருக்கத்தான் வேண்டுமென்று பலநாள் சிந்தித்ததுண்டு. தற் செயலாக, மூன்றாண்டுகளுக்குமுன், திருக்குற்றாலத்தில் (தென் காசி வழி) ஒரு நன்னாளில், கீழ்க்கண்ட குறிப்பு எமக்குக் கிடைத்தது. இங்கிலாந்தில் மான்செச்டர் (Manchester) பல்கலைககழகத்தில் செமிட்டிக் (Semitic) மொழிகளைக் கற்றுக் கொடுக்கும் பேராசிரியர் பன்மொழிப் புலவர் எம். எ. கான்னி (M. A. Canney, Profesor of Semitic Languages) என்பவர் ஆங்கில எழுத்துக்களின் உருவங்கள் எங்ஙனம் தோன்றின வென்பதைப் பல்லாண்டுகளாக, ஐரோப்பிய மொழிகள் பலவற் றோடும் ஒப்பிட்டு நோக்கி, ஆராய்ச்சி செய்து வந்துள்ளனர். இவரது கூற்று, பின்னொரு தொடர்ச்சிக் கட்டுரையாக விரிவாய் விளக்கப்படும். இவர் ஆங்கில எழுத்துக்கள் முதலிற் சித்திர எழுத் துக்களிலிருந்தே தோன்றியுள்ளன என்பதை ஐயந்திரிபற எடுத்துக்காட்டியுள்ளார். அது எங்ஙனம் என்பதற்கு அவர் சொல்லியபடி இங்கு ஒரு சான்று காட்டுதும்.

ஆங்கில எழுத்துக்கள் உரோமன் எழுத்துக்களின் உருவங் கள் (Roman Script) என்னும் பெயர் பெற்றுள்ளன என்பது உலகம அறிந்ததே. ஆல்ஃபபெட் (Alphabet) என்னும் சொல் எபிரேய (Hebrew) மொழியில் உள்ள முதல் இரண்டெழுத் துக்களாலாயது (Aleph, Beth). இதை கிரேக்க நெடுங்கணக்கில், Alpha, Beta என்று கூறுவர். இதினின்றே A, B என்னும் ஆங்கில எழுத்துக்கள் உருவாயின.

சித்திர எழுத்துக்களிலிருந்தே இன்று நிலவும் ஆங்கில எழுத்துக்களின் உருவங்கள் எழுந்தன என்பதற்கு ஒரு சான்று காட்டுதும். ஆங்கிலத்தில், முதல் எழுத்தாகிய 'A' என்னும் எழுத்தை எடுத்துக்கொள்வாம். ஆல்ஃப் (Alef) என்னும் எபிரேய எழுத்திலிருந்து, Alpha என்னும் கிரேக்க எழுத்து வந்தது. இது பின்னர் உரோம எழுத்தில் ஆளப்பட்டு, பின்னர் ஆங்கிலத்தில் வழங்கப்பட்டுள்ளது. Alf என்னும் சொல் எருது (Ox) என்னும் பொருள் தரும். இப்பொழுது 'A' என்னும் எழுத்து 'எருது' என்று குறிக்கும் சித்திரத்திலிருந்து (Fugure of ox) எங்ஙனம் உருவாயிற்றென்பதை நோக்குவாம். ox என்பது எருது (மாடு). மாட்டைக் குறிப்பதற்காக மாட்டின் தலைமட்டும், முதலில், படமாக எழுதப்பட்டது. மாட்டின் தலையில் இரண்டு கொம்புகள் உண்டு. முதல் முதலில் மாட்டின் தலையைக் குறிப்பதற்காக 'A' என்னும் எழுத்து '∀' தலைமாறிய உருவத்தில் எழுதப்பட்டு வந்ததாம். இங்குக் காட்டிய உருவத்

தில் (கீழ்பாகம்) முக்கோணம் போலிருப்பது மாட்டின் தலையை யும், (மேற்பாகம்), பக்கங்களிற் மேல்நோக்கிப் போகிற இரண்டு வரிகள் மாட்டின் இரண்டு கொம்புகளையும் சுட்டிக் காட்டும். முதலில் '∀' போன்ற படமாக எழுதப்பட்டுவந்த உருவம் பின்னர் 'A' என்று தலைகீழாக மாற்றப்பட்டு, இன்றுள்ள உருவம் அடைந்துள்ளது. ஆகவே, எபிரேய Aleph என்னும் எழுத்து Alpha என்று கிரேக்க எழுத்தாகத் திரிந்தது. பின்னர்ப் பல்லாண்டுகளாய் அது ஆங்கிலத்தில் '∀' என்ற வடிவில் எழுதப்பெற்று, அதற்குப் பின்னர், 'A' என்று தலை மாறி உருவம் பெற்றது. இதுதான் 'A' என்னும் எழுத்தின் உருவ வரலாறு. ஆதலின், ஒரு எருதைக் குறிக்கும் சித்திரத்தி லிருந்து 'A' என்னும் எழுத்து வந்துள்ளது. இதேமாதிரியாக, ஆங்கில எழுத்துக்கள் ஏறத்தாழ முழுவதற்கும், இன்னின்ன சித்திரங்களிலிருந்து இன்னின்ன வந்தனவென்று M. A. கான்னி என்னும் பேராசிரியர் தம் கூரிய அறிவால் பல ஆதாரங் களைக் காட்டி உறுதிப்படுத்துகின்றனர். ஆங்கில எழுத்துக் களின் உருவங்களைப்பற்றி விரிந்த முறையில் அடுத்து எடுத் துரைப்பது எமது நோக்கம். ஆங்கில எழுத்துக்களின் இற்றைய உருவங்களை நன்காராய்ந்து, சித்தாந்தப்படுத்துவது, ஆங்கிலங் கற்றறிந்த பேரறிஞர்களின் கடமை. இத்தகைய ஆராய்ச்சி பல நன்மைகளையும் இன்பங்களையும் அளிக்கும் என்பது எமது திண்மையான எண்ணம்.

பண்டைத் தமிழர் பழங்குடி மக்களில் மிகத் தொன்மை வாய்ந்தவர் என்பதை எவராலும் மறுக்கமுடியாது. இதைப் பற்பல நுண்ணிய ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பழைய கற்காலத்து மக்கள் கையாண்டுவந்த, கல்லினால் ஆக்கப் பட்ட ஆயுதங்கள் (Paleolithic Instruments made of Quartzite) நமது நாட்டின் தென்பாகங்களில் சில இடங்களில் அகப்பட்டு வருகிறதென்பது உண்மை. இதனினின்றும் ஊகிக்க வேண்டியதென்னை? பழந்தமிழ்க்குடி மக்கள் ஆதிகால மக்களைச் சேர்ந்தவர் என்பதே.

கன்னியாகுமரிக்குத் தெற்கே ஐயாயிரம் மைல் அளவுக்குக் குறையாமல் பெரும் நிலப்பரப்பு (Lemuria continent) இலெ மூரியாக் கண்டம் ஒன்றிருந்து கடல் கோளால் (The Deluge) அமிழ்ந்துவிட்டதென்று W. Scott Elliot, Rudolph Steiner போன்ற பேராராய்ச்சியாளர்கள் முடிபு கட்டியதோர் உண்மை யன்றோ!

தமிழகத்துக்குக் கிழக்கே ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள Indonesia நாகரிகம், தென்னிந்திய நாகரிகத்

தினைச் சேர்ந்ததுதான் என்பது உலகறிந்த உண்மை. அண்மையில் அங்குச்சென்று திரும்பிய சிவத்திரு குன்றக்குடி அடிகளார் பெருமானார் அங்குள்ளவர்கள் தமிழர்களே; தமிழர்கள் நாகரிகமே அங்குத் தலை சிறந்து விளங்குகின்றதென்று தெள்ளத் தெளிய விளக்கிக் கூறுகின்றனர். இந்தோனேசியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் பல்லாயிரமைல் தூரத்துக்குக் கிழக்கே கடல்கடந்து சென்று வாழ்ந்துவரும் தமிழர் இன்றும், மத்திய அமெரிக்காவின் மேற்கு பாகங்களில் Maya & Naga Culture என்றழைக்கப்படும் நாகரிகம் உடையவர்களாயிருப்பது இன்னும் பலர் அறிந்ததில்லை. அதைப்பற்றியும் பின்னர் விளக்கப்படும். அங்குள்ள மக்கள் நாகரிகம், தென்னிந்தியப் பழக்கவழக்கங்களோடு மிக மிக ஒத்திருக்கின்றதென்று, அங்குச்சென்று திரும்பிய மேனாட்டாரும் கூறுகின்றனர். தி. சாமன்லால் என்னும் பேராசிரியர் இதைப்பற்றி மிக விரிவான நூல் எழுதி உதவியுள்ளனர். கன்னியாகுமரிக்கு அருகாமையில் உள்ள நிலப்பரப்புகளிலேயே முதலில் மனிதன் தோன்றியிருக்க வேண்டுமென்றும் பலர் கூறுகின்றனர். ஆரியம் நம் நாட்டுக்குள் நுழைவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே திராவிட மொழிகள் நம்நாட்டில் நிலவுகின்றனவென்று பற்பல பெரும் புலவர்கள் உறுதிப்படுத்துகின்றனர். திராவிட மொழிகளுள் தமிழ்மொழியே மிகப் பழமையானதென்று மொழி ஆராய்ச்சியாளர்களால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. தமிழ் மொழியே மனிதன் பேசிய முதன் மொழியென்று தமிழ் இசை ஆராய்ச்சிப் புலவர் இராவ்சாகேப் ஆபிரகாம் பண்டிதர், தவத்திரு தனிநாயகம் அடிகளார் முதலியோர் பறைசாற்றுவதும் நாமறிந்ததே. பழங்காலத் தமிழர் ஓவியம், சிற்பம் முதலிய பற்பல கலைகளிலும் உயரிய தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பது சரித்திர வரலாறு. மொகஞ்சதரோ, எகிப்துநாடு எழுத்துக்கள் சித்திர எழுத்துக்களாயிருப்பதுமன்றித் திராவிட மொழிகளுக்கு நெருங்கிய தொடர்புடையதென்று உலக ஞானிகள் கூறுவது முன்னர் எடுத்துக்காட்டப்பட்டது. ஆங்கில எழுத்துக்களும் சித்திர எழுத்துக்களிலிருந்தே தோன்றியிருக்கின்றன வென்பதும் இங்கு நோக்கத்தக்கது. மேலும், பாபிலோனியா (Babylonia), அசீரியா (Assyria), கிரீட் (Crete), சைப்பிரசு (Cyprus) முதலிய நாடுகளிலும் முதன்முதலாக சித்திர எழுத்துக்களே அங்குள்ள மக்களால் கையாளப்பட்டு வந்தனவென்று மொழிவல்லுநர் கூறுகின்றனர்.

(தொடரும்)

தமிழ் அருச்சனை

[சித்தாந்த பண்டிதர், கழகப் புலவர், திரு. ப. இராமநாத பிள்ளை]

புதுமை

உலகில் எங்கும் காணுப் பொருத்தமில் புதுமை நம் நாட்டகத்து மட்டும் காணப்படுகின்றது. அது, தமிழகத்துத் தாய்மொழியாம் செந்தமிழ் மொழிக்குச் சிறுமையும், புதிது வந்த அயன் மொழிக்கு அளவில் பெருமையும் தெருளுணர்வின்றிக் கொடுத்து மருளும் மருளேயாம். பிறந்து மொழி பயில்வது தமிழ். மொழி பயிலும் முற்பருவத்து ஓராட்டு, பாராட்டு, சீராட்டு வாயிலாக உளம்புகுவது தமிழ். பெற்றூர் உடன்பிறந்தார், உற்றூர், ஒக்கல், ஊரார் முதலாயினருடன் ஓவாது உரையாடுவது தமிழ். முழுமுதற் சிவனைத் தொழுவது தமிழ். பள்ளியிற் படிப்பது தமிழ். துள்ளி விளையாடுவது தமிழ் உள்ளி ஏவுவது தமிழ். உள்ளுவந்து இயற்றுவது தமிழ். உலகியற் பொருள்களை வழங்கற்கமைந்த காரணப் பெயர்கள் தமிழ். ஊண், உடை அணி, பூச்சு, சூடுதல் முதலிய அரும்பெரும் பொருள்களுக்கு வழங்குவது தமிழ். ஊர்ப்பேர் முதலியன தமிழ். இன்னும் விரிக்கிற் பெருகும். இதுபோல் கூறுதவற்றையும் கூறிக் கண்டு கொள்க.

இங்ஙனமெல்லாமிருந்தும் இல்லத்து நடக்கும் மணச்சடங்கு முதலியவற்றிற்கும், இல்லத்தும் புறத்தும் நடக்கும் பிணச்சடங்கு முதலியவற்றிற்கும், தொன்று தொட்டு நின்று நிலவும் செந்தமிழ் முழுமுதல் தெய்வமாம் சிவபெருமான் வழிபாட்டிற்கும், இயற்கை இனிமை வாய்ந்த தமிழிசைக்கும், நாடாளும் ஆட்சி மொழிக்கும், பீடுசேர் கலைத்துறைகட்கும் அயன்மொழியே சுமத்தப்பட்டு மயலுறுத்துகின்றது. இந் நீக்கரிய போக்காம் பரிவுநிலையை எண்ணுங்கால் உள்ளம்உருகி, உளைந்து செயலறுகின்றது. இத்தகைய பேரிடரான நிலை வேறு எம்மொழியாளர்க்கும் யாண்டும் இன்று. இதனினும் சொல்லொணுப் புதுமையை நல்லுணர்வினர் வேறு எங்குக் காண்பர். நாடும் மக்களும் நனிநாகரிகமும் கூறுசெய்து மதிக்கப்படுவது தாய்மொழி ஒன்றினுலேயாம். தற்பொழுது ஆட்சிமுறையினும் மொழிவாரிப் பிரிவே விழுமிதென மூதறிஞர் மொழிகின்றனர்.

ஒருவன் எய்தும் சிறப்பெல்லாம் அவன்றன் உயிரினும் சிறந்த தாய்மொழியின் சிறப்பினுலேயாம். அச்சிறப்பு உலகிடைப் பிறமொழிக்கெல்லாம் உள்ளதாய்க் காணக்கிடக்கின்றது. அம்மொழிகளெல்லாவற்றினும் தொன்மையதாய், எல்லாத்

துறையினும் மேன்மையதாய், இருவகை வழக்கினும் ஒருவாது அன்றுபோல் இன்றும் என்றும் நின்று நிலவுவதாய், தனித்தியங்கும் தனிப் பேராற்றல் வாய்ந்ததாய், இனிமையும் எளிமையும், உயிர்ப்புச்செட்டும், தெளிவும், திட்ப நுட்பமும் இயல்பின் அமைந்ததாய், தொன்மை இலக்கண இலக்கிய மெய்ந்நூற் செறிவினதாய் விளங்கும் 'ஞாலம் அளந்த மேன்மை' நம் தாய் மொழிக்கு மட்டும் அப்பெருமையை நம்மில் சில்லோர் மறைத்தும் மறுத்தும் எய்தவொட்டாது செய்துவருகின்றனர். என்னே இவர்தம் புன்மை. முன்னை ஞான்று 'ஆரியம் நன்று தமிழ் தீது என்ற காரியத்'தைச் செய்த சீரியான் வரிசையில் நிற்கின்றனர். தமிழ், வாழ்க்கைச் சடங்குகளுக்கும், தெய்வ வழுத்துதலுக்கும் ஒவ்வாது என்று புறக்கணிக்கப்படுகின்றது. அத்தகைய தீது தமிழின்மாட்டு என்ன இருக்கின்றது என்று யாரும் எடுத்துரைத்தாருமல்லர். எடுத்துரைக்கவும் இயலாது. அடுத்துக் கொண்டுள்ள அவர்தம் மயக்கேயன்றி வேறின்றென்க. பண்டைச் சங்கச் சான்றோரேயன்றிச் சைவச் சான்றோரும் அவ்வப்போது தமிழின் மேன்மையைத் தனிச்சிறப்பாக எடுத்து வற்புறுத்தியுள்ளனர். தமிழோடொத்த சில சிறப்புகள் ஆரியத்துக்கும் உள்ளமையால் அதனையும் இணைத்துப் பேசியுள்ளனர். ஆரியம் நன்றென்று முனைத்துக் கூறுவார் முனைப்பொடுங்க உண்மை காட்டியுமுள்ளனர். அது வருமாறு :

> " ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று
> வட்டணை பேசுவர் மானுடம் போன்று "

—கக. நக்கீர. கோப.

(இத் திருப்பாட்டு பதினோராம் திருமுறைக்கண் உள்ளது)

இத்தகைய புதுமைக்குள் புதுமை, தமிழ் மந்திரமொழியன்று எனவும், தெய்வத்துக்குப் புரியாதெனவும் தற்காலத்தும் சிலர் கூசாது பேச முன்வருவதே. அங்ஙனம் பேச முன்வரும் சிலருள் சிலருக்கும் செந்தமிழின் சீரிய இயற்கை உண்மைத் தன்மை தெரியுமா என்பது மறுக்கொணா ஐயமே. அங்கிலையில் அவர்கள் எல்லாரும் வழக்கம் வழக்கம் என முழக்குவது நன்றாமோ? விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சிலர் தமிழ் மக்கட்கும், ஏன்? தம்மில் பெரும்பாலோர்க்கும் ஒன்றுமே புரியாத இடைவழக்காய் வந்த அயன்மொழியை விடாப்பிடியாய்ப் பற்றுடன் வற்புறுத்தி மாறுகொண்டு நிற்பரேல், எல்லார்க்கும் புரிவதாய், ஏன்? அம் மாறுபடுவார்க்கும் புரிவதாய் இறைவனுக்கு நிறைந்த உவப்புத் தருவதாய்த் திகழும் தமிழ் அருச்சனையை வழக்கத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்னும் திண்மை உண்மைச் செந்நெறி மெய்யன்பர்கட்கு வியப்பையும் நகைப்பையும் தருவ

தல்லது அச் செய்கை வேறென் செயும்? இதுபோன்றே தமிழிசை இயக்கம் தோன்றிய காலத்தும் அயன்மொழி மயலினர் மாறுபட்டனர். களைகட்டப் பயிர் செழிக்குமாறு தமிழிசை இயக்கமே வீறுகொண்டு வென்று விளங்கிற்று. அதுபோல் தமிழருச்சனை இயக்கமும் வீறுகொண்டு விளங்கும். இவ்வுண்மையுணர்ந்து அம் மாறு கொள்ளும் தமிழ்மெய்யன்பர்களும் ஒத்து உறுதுணையாவார்களாக. ஒருவர்க்கு இரு தாய்மொழி உண்டென்பது யாண்டும் காணவும் கேட்கவும் பெறாத பெரும் புதுமையேயாம். யாண்டும் நற்றாய் ஒருத்தியே. பலராயிருத்தல் பொருந்துவது ஒன்றன்றாம். செவிலித்தாய் பலராவர். செவிலித்தாய் நற்றாய்க்குத் தோழியாவளே யன்றி தலைவியாகாள். நற்றாய் என்றும் தலைவியே. இவ்வொப்பினைப் பொருளுடன் இயைத்து விரிக்குங்கால் தமிழ் நற்றாயும், ஆரியம் செவிலித்தாயும் ஆகும். செவிலித்தாய் நற்றாய்மொழியைக் கற்றிருத்தல் வேண்டும். நற்றாய் செவிலித்தாய் மொழியைக் கற்றல்வேண்டும் என்னும் கடப்பாட்டினள் அல்லள். இதனாலும் தவப்பேற்றால் தாய்மொழியாம் தனித் தமிழ்மொழிக்கு ஏற்றமேயன்றி அயன்மொழியாம் வடமொழிக்கு ஏற்றமின்று. இவ்வுண்மை, "ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயன் அறிகிலா அந்தகர்" என ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்துள்ளனர். ஈண்டுக் காட்டப்படும் 'ஒடு' உருபு 'அதனோ டியைந்த ஒப்பல் ஒப்புரை' என்பதன்கண் அடங்கும். மேலும் கலைமகள் நாற்பத்தெண் புலவராய்த் தோன்றி ஆரியமும் ஏனைப் பதினெண் மொழியும் ஆய்ந்து பின் உய்வு எய்தத் தமிழ் கற்றுப் புலமைசார்ந்து உண்மை ஓர்ந்து உய்ந்தனள் என்னும் வாய்மை திருவிளையாடற் புராணத்துச் சங்கப்பலகை கொடுத்த படலத்துக் கேட்கப்படுகின்றது. அதனாலும் அருந்தமிழ்மொழி, விருந்தாம் ஆரியத்தினும் மிக்கதென்னும் மெய்ம்மை பொருந்தக் காணலாம். அது வருமாறு:

அக்கர நாற்பத் தெட்டு மவ்வழி வேறு வேறு
மக்களாய்ப் பிறந்து பன்மாண் கலைகளின் வகைமை தேர்ந்து
தொக்கவா ரியமு மேனைச் சொற்பதி னெட்டு மாய்ந்து
தக்கதென் கலைநுண் தேர்ச்சிப் புலமையிற் றலைமை சார்ந்தார்.

—திருவிளையாடல், சங்கப்-கக

ஆரியக் கடும்பற்றுள்ளவர் தமிழை அழியாமல் அழிக்கும் வழியினர் என்பது முன்னைய வரலாற்று உண்மையாலும் உணரலாம். திருமுறைகள் ஓதப்பட்டுச் சிறந்து செந்நெறிச் செல்வர்கள் ஈடேறும் பொருட்டுத் தில்லைப் பேர்கொண்ட அந்தணர்பால் திருநெறியாளரால் ஒப்புவிக்கப்பட்டன. அவ்வந்தணர்கள் ஒப்புவித்தார் உள்ளக்கருத்துக்கு முற்றுமாறாக அத் திருமுறைகளின்

வைப்பிடத்தை மறைத்தும், அவற்றைச் செல்லரித்தழிக்க இடங்கொடுத்தும், அபயகுலசேகர மன்னன் அரும்பாடு பட்டு இருக்குமிடம் அறிந்துவந்து உசாவியகாலத்தும் பொருந்தாவுரை புகன்று போக்கவுன்னியும் முன்னின்று முனைந்தனர். இவ்வுண்மை திருமுறைகண்ட புராணத்து நன்கு விளக்கப்பட்டுள்ளது. அக்காலத்துச் செந்தமிழ் மொழிக்குத் துணையாய்த் தமிழையே பாடித் தனிமுதலை வழிபட்டுத் திருமுறை வகுததுநிலவச் செய்த ஆதி சைவ அந்தணர் நம்பியாண்டார் நம்பியாவர். அம்மரபினராகிய நம் கோவில் குருக்கண்மார் சில்லோரும் நம் வழி வாராதுமாறு நிற்பது காலக்கோலமேயாம்.

திருமுறை மாண்பு

செந்தமிழ்த் திருமுறையின் சிறப்புத் 'திருமுறை கண்ட புராண'த்தின் கண்விரிவாகக் காணலாம். ஈண்டு வேண்டிய அளவு ஒரு சிறிது உணர்த்துதும். 'வடமொழி வேதம், வேத முடிபு சூத்திரம் போன்றனவென்றும், சிவாகமங்கள் மலைவகற்றும் பேருரைகள் போன்றனவென்றும் மாதவச் சிவஞான முனிவரனார் வாய்மைகண்டுணர்த்தியுள்ளனர். அவ்வுண்மையை உற்று நோக்குவார்க்கு வடமொழி வேதம் தன்னளவில் கற்பாரை மருளுறச் செய்யும் என்பதே துணிபாம். இவ்வுண்மை திருமுறை கண்ட புராணத்தும் தெளித்தருளப்பட்டது. அஃது, 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' (திருமூலர், உகoச) என்னும் அழியா இயற்கையுண்மையினை அருளால் தெளியக் கண்டவர் செந்தமிழ்ச் செந்நெறிச் செல்வர்களாகிய நம் முன்னோர்கள். பல தெய்வமும் பல சாதியும் நிலவக்கொண்டு மயங்கியும் மயக்கியும் தெளியா வழியொழுகுபவர் வடவாரியர். நம்மவருள் சிலரும் அம்மயக்கிலாழ்ந்து மருளுகின்றனர். சிவபெருமானை இவர்கட்குத் தெருள் அருளுமாறு வேண்டிக்கொள்வதே நம் தவமாம். தமிழ்வேதமாகிய திருமுறை உலகவொழுக்கத்தோடு ஒட்டி ஒரு தெய்வவுண்மையையும் ஒருகுலவுண்மையையும் திருவருட் செயலால் நிறுவியுள்ளது. அத்திருப்பாட்டு வருமாறு :

அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடும்
அதுபோலன் றிதுவென்று முளதா முண்மைப்
பரபதமும் தற்பரமும் பரனே யன்றிப்
பலரில்லை யென்றெழுதும் பனுவல் பாரின்
எரியினிடை வேவாதாற் றெதிரே யோடும்
என்புக்கு முயிர்கொடுக்கும் இடிநஞ் சாற்றும்
கரியைவளை விக்குங்கன் மிதக்கப் பண்ணும்
கராமதலை கரையிலுறக் காற்றுங் காணே.

—திருமுறைகண்

இத் திருப்பாட்டின்கண் மூவர் பாடல்களும் ஏழு முறைகளாக வகுக்கப்பட்டு நிலவும் உண்மை உய்த்துணரக்கிடக்கின்றது. அவை வருமாறு: ஆளுடைய பிள்ளையார் அருட்செயல் பலவற்றுள்ளும் மூன்று செயல்களும், அதுபோல் அரசர்க்கு மூன்று செயல்களும், நம்பிக்கு ஒரு செயலும் கிளந்தெடுத்து ஓதப்பட்டமை. ஒருபுடையொப்பாக இவ்வேழும் முறையே முழுமுதற் சிவன், கூட்டும்அருள், ஊட்டுமருள், வினைநீக்கம், மாயைநீக்கம், மலநீக்கம், திருவடியாக்கம் என்பவற்றின் இயைபு குறிப்பனவாகக் கொள்ளலாம். கூட்டுமருள் - வனப்பாற்றல். ஊட்டுமருள் - மறைப்பாற்றல்.

மந்திரம்

இத்திருமுறைகள் முழுமுதல்வன் அருண்மொழிகளே. அவ்வுண்மை ஆளுடைய பிள்ளையார் "எனதுரை தனதுரையாக" எனவும், "பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன், வழிமொழிகள்" எனவும் அருளிச் செய்கின்றமையான் விளங்கும். 'எழுதுமொழி' என்பது ஆண்டவன் ஆருயிர் உணர்வில் அருளால் எழுப்புமொழி என்று பொருள்படும். அம் மொழியினை வழிமொழிந்தருளிய வள்ளலார் வாய்மைப்பிள்ளையார். அதனால் திருமுறைகள் உலகியலோ டொட்டிய அருண்மொழிகளேயாம் இவ்வுண்மை வரும் திருப்பாட்டான் உணர்க:

கொண்டுகுல சேகரனுங் கோன்பால் வந்து
குஞ்சரத்தோ னருள்செய்த கொள்கை யெல்லா
மண்டுபெருங் காதலுடன் சொல்லி யந்த
வண்தமிழின் பெருமைதனை வகுத்துச் சொல்வார்
கண்டபெரு மந்திரமே மூவர் பாடல்
கைகாணு மந்திரங்கண் ணுதலோன் கூறல்
எண்டிசையும் சிவனருளைப் பெறுதற் காக
இம்மொழியின் பெருமையையான் இயம்பக் கேள்நீ.

திருமுறைகண்ட, கங.

கைகண்ட பெருமந்திரம் - உலகியலொழுக்கத்து நிகழக்கண்ட தாய்மை மந்திரம். ஏனைய மந்திரங்கள் குறித்த பயனைத்தர வெவ்வேறாகக் காணப்படுகின்றன. தமிழ்மந்திரமாகிய திருவைந்தெழுத்து எல்லாச் செயற்கும் இயல்பாயமைந்த ஒரு பெருமந்திரமேயாம். அம்மந்திர வடிவினராய்த் திகழும் அருளாளர் திருவாய் மொழியனைத்தும் மந்திரமே யாம். மேற்காட்டிய அருட்செயல் ஏழும் நிகழ்த்தியது திருமுறைத் தீந்தமிழே யன்றோ? அம்முறையால் திருமுறையிற் காணப்படும் எழுத்தும் சொல்லும் சொற்றொடரும் விழுமிய நிறைமொழி மந்திரமே யாம். திருமறைக்காட்டில் திருக்கதவு திறந்ததும் திருக்கொள்

ளம்பூதூரில் ஓடம் சென்றதும் திருமுறைச் செழுந்தமிழ் மாலைகளானன்றே. இவ்வுண்மையினை நடுநின்றுணர்வார் தமிழில் மந்திரமில்லையென்று மயங்கார். அவர்கள் சொல்லுவது ஒருவகையாகப் பார்த்தால் ஓர் உண்மையை உணர்த்துவதாகும். என்னை? வடமொழியினைப்போல் குறித்த சில சொற்றொடர் மட்டும் மந்திரங்களாகத் தமிழில் இல்லை. தமிழின் எழுத்தும் சொல்லும் முழுவதுமே மந்திரம் என்பனவாம். அவ்வுண்மை குமர குருபர முனிவரனார் அயன்மொழியினை அறிவுறுத்தருள வேண்டிப் பாடியருளிய செழுந்தமிழ்ச் சகலகலாவல்லி மாலையே தமிழ் மந்திரமாய் நிறைபயன் அளித்தது. இன்றும் அதனை உண்மையான் ஓதுவார்க்கு அளித்து வருகின்றது. மேலும் திருமுறையில் காணப்படும் பதிகங்களும் உண்மையான் ஓதுவார்க்கு அவரவர் வேண்டும் நற்பயனை அளித்து வருகின்றன. அஃதின்றும் கண்கூடேயாம். இம்முறையினால் மூவர்பாடலைப் பாடல் என்னும் மொழியாற் பாடியருளினர். பாடல் என்பது சொல்லும் பொருளும் விளங்கிச் செவிக்கும் செவ்விய உளத்திற்கும், உணர்விற்கும் சுவையளிப்பதாய்க் கைம்மேல் பயன்படுவதாய்த் திகழ்வது. படுதல் பாடலென்றாயிற்று. மூவர் பாடல் மொழிக்கு மொழி தித்திக்கும் மந்திரங்களே என்பது வரும் தாயுமானச் செல்வர் திருப்பாட்டானும் உணர்க:

> "தேவரெலாம் தொழச்சிவந்த செந்தாள் முக்கட்
> செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப் பாக
> மூவர்சொலும் தமிழ்கேட்கும் திருச்செ விக்கே
> மூடனேன் புலம்பியசொல் முற்று மோதான்.
>
> —தாயுமானவர், கல்-கசு.

இத்திருநெறிய தமிழ்மந்திரப் பாடல்களைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பின்னுள்ள மெய்யன்பர்கள் ஓதுங்காலும் இறைவன் உகப்பானெனின், அதன் பெருமையை அளவிட்டுரைக்கற் பாலார் யாவர்? இவ்வுண்மை ஆளுடைய நம்பியருளும் அருண்மறையாற் காண்க:

> நல்லிசை ஞானசம் பந்தனு நாவினுக்
> கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
> சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானைத்
> தொண்ட னேனறி யாமை யறிந்து
> கல்வி யன்மனத் தைக்கசி வித்துக்
> கழலடி காட்டியென் களைகளை யறுக்கும்
> வல்லியல் வானவர் வணங்கநின் றானை
> வலிவ லந்தனில் வந்துகண் டேனே. — ௺ கூ.[illegible]

மேலும்,

"பரந்த பாரிட மூரிடைப் பலிபற்றிப் பார்த்துணும் சுற்றமாயினீர்
தெரிந்த நான்மறை யோர்க்கிடமாய திருமிழலை
இருந்து நீர்தமி ழோடிசை கேட்கு மிச்சையாற் காசு நித்தநல்கினீர்
அருந்தண் வீழிகொண் டீரடி யேற்கு மருளுதிரே." —எ. அஅ-அ.

என்னும் ஆளுடைய நம்பி திருப்பாட்டும் மேலதனையே வலி யுறுத்துதல் காண்க.

'கண்ணுதலோன் கூறல் கைகாணு மந்திரம்' என்பது புறத் துத் தோன்றாது அருளாளர் அகத்தே கூறுபடுத்து உணர்த்தும் அருள் ஒலியாகும். அவ்வருள் ஒலி அருளாளர் வாயிலாக வெளிப்பட்டு உலகிடைப் பரவும். இம்முறையால் பாடல் கூறல் என்னும் சொற்கள் பொருளாற்றல் நிரம்பியனவாம் என்க.

வழிபாடு

வழிபாடு எனினும் பூசை எனினும் ஒன்றே. இவ்வழிபாடு இடமுறையால் நான்கு வகைப்படும். அவை, அக வழிபாடு, அகப்புற வழிபாடு, புற வழிபாடு, புறப்புற வழிபாடு என்பன. அக வழிபாடென்பது ஒவ்வொருவரும் சிவ தீக்கை முறையான் அகம்புறம் தூயராய்க் கொப்பூழ், நெஞ்சம், புருவமத்தி என் னும் மூன்றிடத்தும் முறையே ஓமம், அருச்சனை, தியானம் என்னும் முச்செய்கைகளையும் திருவைந்தெழுத்தாலே செய்வ தாகும். இவ்வுண்மை :

அஞ்செழுத்தா லுள்ளம் அரனுடைமை கண்டரனை
அஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தில்—அஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டம் சானிக்கில்
அண்டனும் சேடனும் அங்கு. —சிவஞானபோதம், க. ௩-க.

என்னும் மெய்கண்டான் தமிழாலும் உணர்க.

அகப்புற வழிபாடு பூசை மடத்திலேனும், நீர்நிலை அண்மை யிலேனும் திருமுறை வழியாகச் சிவ வழிபாடியற்றல். இவ் வழிபாட்டினையே உடையவர் பூசை எனவும் உரைப்பர். இன்ன வர் தம் பொருட்டுத் திருக்கோவில்களிற் சென்று சிறந்த நாட் களில் வழிபாடியற்றுவதும் உண்டு. அவ்வுண்மை திருநீலநக்க நாயனார் ஒரு திருவாதிரைநாளில் வீட்டில் செய்யும் அகப்புற வழிபாடு முடித்துத் திருக்கோவில் சென்று புறவழிபாடும் இயற்றினர். அவ்வழிபாட்டினுக்கு அவர்தம் மனைவியாரும் உடன் சென்று வேண்டுவ உடனிருந்துதவினர் எனவும் காண்

கின்றோம். இவ்வுண்மை உணர்வார் இஞ்ஞான்று காசியிலும் நேபாளம் முதலிய திருவூர்களிலும் சிவலிங்கத்தை எல்லாரும் தொட்டு வழிபாடியற்றும் வழக்கம் தொன்மைத் தமிழ்நாட்டு வழக்கமெனத் தெளிவர். ஆயிரத்து நானூறு யாண்டுகளுக்கு முன்னிருந்த இப்பெருநெறி வழக்கம் வரவர அயலவர் கட்டி வழங்கிய நம்மனோர்க்குப் புரியாமொழியில் காட்டிய பொய் விதியினால் தடைப்பட்டது போலும். இந்நன்முறை மீட்டும் தமிழகத்து மலர்தல் வேண்டும். வழிபாட்டுண்மை வரும் சேக்கிழாரடிகள் அருண்மொழியால் உணர்க:

> அணைய வந்துபுக் கயவந்தி மேவிய வமுதின்
> துணைம லர்க்கழல் தொழுதுபூ சனைசெயத் தொடங்கி
> இணைய நின்றங்கு வேண்டுவ மனைவியா ரேந்த
> உணர்வின் மிக்கவ ருயர்ந்தவர்ச் சனைமுறை உய்த்தார்.
>
> ல நக்-கூ.

அரிவாட்டாய நாயனார் தாம் அமுதாக்கித் திருக்கோவிலிற் சிவபெருமானுக்கு ஊட்டினர். இதனாலும் தமிழக மெய்யன்பர்கள் சித்தாந்த சைவ முறைப்படி ஒரு குலத்தவரே யன்றிப் பல சாதியாரல்லர். மேலே கூறிய வழிபாடுகளில் சாதிப் பிணக்கைப் புகுத்துவது தவறு. பேர் கொண்ட பார்ப்பனரே அன்று முதல் சாதிப்பிணக்கைச் சாதித்துப் பொய்ம்மை வழிப் புகுத்துகின்றனர். வழிபடுவார்க்கு வழிபடப்படும் பொருளைத் தீண்டற்கும் உரிமையின்றென்பது பெருநோக்கு உடையார் எவர்க்கும் ஒவ்வாததொன்றேயாம். சாதியை அறக்களைவதே சைவமுதல்வராம் நால்வர் கண்ட நன்னெறி. அதற்குரிய செய்யுட்கள் பலவற்றுள் இரண்டொன்று காட்டுதும்.

> 'சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
> கோத்தி ரமுங்குல முங்கொண் டென்செய்வீர்
> பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
> மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே.' —ரு. சுo - ந.

> 'வைத்த நிதிபெண்டீர் மக்கள்குலம் கல்வியென்னும்
> பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னும்
> சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
> வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.'
>
> —அ. திருக்கோ - சு.

வழிபடும் மெய்யன்பர்கட்கு வழிபடப்படும் திருவுருவின் திருவடியைத் தீண்டிக் கண்ணினும் முடியினும் ஒற்றிக்கொள்ள

வேண்டும் என்னும் காதலுக்கு அளவின்றென்பது அவர்கள் மெய்யடியார்கள், ஆசிரியன்மார், ஆன்றோர்கள், ஈன்றோர், தம் முன்னோர் முதலியோர் திருவடிகளை ஆராக் காதலுடன் தீண்டி முடிமீது கொள்ளுதலால் நேரிற் காணலாம் இத்தகையோர் காதலைப் புரியாப் பொருந்தாப் போலி விதியால் தடுப்போர் கொடுமையை என்னென்பது? காதல் மிக்க கண்ணப்பநாயனார் சிவலிங்கத்தைக் கண்டதும் 'ஓடிச் சென்றார் தழுவினர் மோந்து நின்றார்' என்பது இயற்கைக் காதலன்றோ! இச் செயற்கருஞ் செயற்கு முன்னின்று வழிகாட்டித் துணை நிற்கவேண்டிய ஆன்றோர் பழியெனவும் பாராது வழிமறுப்பரேல் என் செய்வது? என்றும் பார்ப்பனர் இவ்வாறுதாம் இருப்பர் போலும்! ஏறத் தாழ மூந்நூறு ஆண்டுகளுக்கு முன் திருப்பழனியில் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் திருக்கோவில் வழிபாடு செய்துவந்த பண்டாரத்தார் உரிமையைப் பார்ப்பனச் சூழ்ச்சியால் திருமலை நாயக்கன் பறித்து நல்கினன் என்பது வரலாறு கண்ட வுண்மை. ஆயினும் இன்றும் பழனி ஆண்டவற்குத் திருமஞ்சனம் கொடுக்கும் உரிமை பண்டாரத்தார்பாலேயே இருக்கின்றது.

திருக்கோவில் வழிபாடு ஆதி சைவக் குருக்கண்மாரால் உலகோர் பொருட்டுத் திருக்கோவில்களிற் செய்யப்படும். இது வும் புறவழிபாடேயாம்.

திருக்கோவிலின் புறத்தே திருவிழாக் காலங்களில் நடக்கும் திருவுலா, திருத்தேர், தெப்ப விழா முதலியன புறப்புற வழிபாடாகும். இவ்வழிபாடுகளெல்லாம் திருமுறை யோதி வழிபட வேண்டுமென்பதே நால்வர் திருவுள்ளம். அவ்வுண்மை வரும் திருமுறைத் திருப்பாட்டாற் காண்க:

> அந்தண் சோற்றுத் துறையெம் மாதியைச்
> சிந்தை செய்ம்மின் அடியா ராயினீர்
> சந்தம் பரவு ஞான சம்பந்தன்
> வந்த வாறே புனைதல் வழிபாடே. —க. உ௮. கக.

ஈண்டுச் சம்பந்தன் என்பது ஆகுபெயரால் அவரால் அருளிச் செய்யப்பெற்ற திருமுறையைக் குறிப்பதாகும். திருமுறையில் வந்தவாறே ஓதித் திருமுழுக்கு முதலிய சிறப்புச் செய்து வழிபடுவதே செந்நெறி வழிபாடாகும் என்க.

> எல்லாச் செயற்கும் இயம்புமறை ஐந்தெழுத்தே
> வல்ல **சிவயநம** வாழ்த்து.

என்பதை நினைவு கொள்ளுவோமாக.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திரம் அஞ்செ ழுத்துமே. —ங. உஉ - உ.

என்னும் ஆளுடைய பிள்ளையார் அருண்மொழியால் திருவைந் தெழுத்தே எல்லார்க்கும் எல்லாச் செயற்கும் மறைக்குள் நின்றுய்க்கும் உயிர்மறை என்பது தானே போதரும்.

அருச்சனை

வழிபாட்டுக்கே பெயராகிய அருச்சனை அதன் உறுப்பாகிய மலர்தூவிப் போற்றுதற்குக் காரண இடுகுறியாகும். அருச்சனை தமிழில் நடந்த முறை திருமுறைக் காலத்துக்கு முன்னும், திருமுறைக் காலத்தும், சேக்கிழார் காலத்தும் இருந்ததென்பது வெளிப்படை. பின் கொற்றவன்குடி உமாபதி சிவனார் காலத்தும் தமிழருச்சனையே நிலவிற்று என்பது உறுதி. என்னை? அவர் பாடியருளிய சேக்கிழார் திருவரலாற்றில் 'திருத்தொண்டர் புராணத் திருமுறையை மறையவர் சிவமூலமந்திரத்தால் அருச்சனைசெய் திறைஞ்சினர்' எனக் கிளந்தெடுத்துரைத்தருளினர். சிவமூல மந்திரம் செந்தமிழாம் என்க.

சேக்கிழார் அடிகள் தடுத்தாட்கொண்ட புராணத்து 'அருச்சனை பாட்டேயாகும்' என்று அருளினர். அகத்தியர் சிவாலயமுனிவர்க்குத் திரட்டிக்கொடுத்தருளிய தேவாரத்திரட்டில் "பந்து, வேற்று, கொன்றிவை மூன்றும், நந்தலில் அருச்சனை நாட்டிய தாகும்" என்றருளினர். இந்த முறையான் தமிழகத்திருக்கோவில்களில் தமிழிலேயே அருச்சனை நடந்துள்ளதென்பது தெளிவு. இவ்வுண்மை மூவர் அருளிச்செய்துள்ள திருமுறைகளினின்றும் அருச்சனைக்கென்று திரட்டிய திருப்பதிகங்கள் 'போற்றுதுமே' 'போற்றி' என்னும் தமிழ் முடிபினையுடையனவாகக் காணப்படுவதனானும் விளங்கும். போற்றித் திருத்தாண்டகம் ஐந்துள்ளன. அவ்வைந்தனுள் 'கற்றவர்களுண்ணும் கனியே போற்றி' என்னும் திருப்பதிகம் நூற்றெட்டுப் போற்றிகளைத் தன்னகத்துக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இஃதுடம்பொடு புணர்த்தலென்னும் முறையான் மலர்தூவிப் போற்றுதலாகிய அருச்சனை 'போற்றி'த்தொடரிலேயே இருத்தல்வேண்டும் என்பதும் பெறப்படும். பெறப்படவே முதலும் முடிவும் ஓம் நம எனக் கூறப்படும் அயன்மொழியார் வழக்கம் செந்தமிழர்க்கு வேண்டுவதின்றென்பதும் பெறப்படும். திருவாசகத்தின்கண் சிவபுராண முதலியவற்றில்

இடையிடையே போற்றித்தொடர் காணப்படுவது மட்டுமன்றிப் போற்றித்திருத்தாண்டகம் போன்று 'போற்றித்திருவகவல்' என்று தனியே ஒரு திருவகவலும் உள்ளது. ஏனைய திருமுறைகளிலும் ஆங்காங்குக் காணப்படும் போற்றித்தொடர்கள் அளப்பில.

புரியுமொழி

வழிபாடு வழிபடுவார்க்குப் புரியுமொழியிலேயேதான் இருத்தல்வேண்டும் என்பது செந்நெறி முதல்வர்களாகிய நால்வர் திருவுள்ளம். அஃதச் செல்வர்கள் பாடியருளிய திருமுறைகள் எல்லாம் செந்தமிழ்மொழியில் திகழ்வனவே சான்றாம். ஒவ்வொருவருக்கும் அவரவர் தம் தாய்மொழியேதான் எளிதில் புரியும். அம்மட்டோ செந்தமிழ் வழங்காத நாட்டில் திருமுறைகள் ஓதுவது ஆங்குள்ள அயன்மொழி மக்களுக்குப் பயன்தாராதென்ற திருவுள்ளங்கொண்டே ஆளுடைய பிள்ளையார் முதலிய செந்நெறி முதல்வர்கள் திருக்காளத்தித்திருமலை சென்றதும் அதன் வடபாலும் மேல்பாலும் அருந்தமிழ் வழக்கம் நிகழாமையாலும், சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோவில்களையெல்லாம் பாடல்வேண்டுமென்னும் கடப்பாட்டினாலும் திருக்காளத்தி மலையினின்றே அத்திருக்கோவில்களுக்குத் திருமுறை பாடியருளினர். இம்முறைமையினை உடம்பொடு புணர்த்தலாகக் கொண்டு நோக்கின் தமிழ் வழங்கும் எல்லையில் அயன்மொழியால் வழிபாடு செய்வதும் செய்விப்பதும் அவர்கள் திருவுள்ளக் கருத்துக்கு முற்றும் மாறுபட்டதென்பது தானே விளங்கும்.

தமிழ் வழங்கும் எல்லையில் தமிழ்மொழி புரியாது அவ்வயன்மொழி மட்டும் புரியும் அன்பர்கள் உளரேல் அவர் பொருட்டு அவ்வயன்மொழியாற் செய்வது ஏற்புடைத்தேயாம். நமக்குத் தெரிந்த மட்டில் தமிழகத்தில் தமிழ்மொழி புரியாதார் எவருமிலர். அவ்வயன்மொழி புரிபவர் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே. அச்சிலர்தாமும் வீட்டிலும் நாட்டிலும் குடும்பத்தாருடனும் பிறருடனும் பேசுவதும் எழுதுவதும் தமிழே. தமிழகத்தில் அயன்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு நீண்டநாளாக வாழும் வடுகர், மலையாளர், கன்னடியர், மராட்டியர், சௌராட்டிரர், பட்டாணியர், (அண்மையில் வந்த) ஆங்கிலோ இந்தியர் அனைவர்களும் தாய்மொழிப் பெரும்பற்றினால் அவரவர்களுக்குள் அவ்வம்மொழிகளைப் பேசிக்கொண்டாலும் தமிழகத்தாரனைவருடனும் தமிழ்மொழியிலேயே தான் பேசியும் எழுதியும் வருகின்றார்கள். தமிழ்மொழி வழங்காத திருக்கோவில்கள் ஒருசில அம்முதல்வர்கள் காலத்துத் தமிழக

எல்லையின் வெளியிலிருந்தன. அந்தோ இக்காலத்தோ தமிழகத்துள்ளேயே இருக்குமா காண்கின்றோம். இஃதென்ன காலக் கொடுமையா! கோலமயக்கா! இக்கொடுமை நன்னெறி முதல்வர் நால்வரைப் பின்பற்றும் செந்நெறியாளர்கட்கு அடுக்குமா? இவர்களும் திருமுறைச் செல்வர்களாவரோ? நினைமின், நினைமின். தமிழ்மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட ஒருவர் வடுகர் முதலிய அயன்மொழியாளர் இல்லம் சென்றால் அவர்கள் குடும்பத்தாருள் பேசிக்கொள்ளும் அயன்மொழியைக் கேட்டும் புரியாமையால் செவிடராய், விடைசொல்ல முடியாமையால் ஊமராய், பகுத்துக்காணமுடியாமையால் விலங்கொத்தவராய் விளங்குகின்றனர்.

அதுபோலவேதான் செந்தமிழின் செம்மையோர் தமிழகத்திருக்கோவிலுக்குச் சென்றால் ஆங்குச் செய்யப்படும் அருச்சனையோ வழிபாடோ அயன்மொழியிலிருப்பதால் செவிடராய் ஊமராய் விலங்கராய் விழிக்கின்றனர். அம்மட்டோ? சித்தாந்த சைவத்துக்கு முற்றும்மாறான சாதிக்கொடுமை சாற்றி இறைவனுக்குச் செய்யும் படைப்புக்களைக் காண்டல் கூடாதென்று திரையிட்டுக் குருடருமாக்கி வருகின்றனர். ஆண்டவன்மக்களாகிய அனைவரும் அவன் உண்டருளும் படைப்பைக்காண்டற் குரிமையின்றென்பது எத்துணைக்கொடுமை. தேங்காய் பழம் முதலிய படைப்பு படைப்புக்கள் அன்றோ! அவைகளைக் காணலாமாயின் ஏனையவற்றை ஏன் காண்டல் கூடாது? அவை செயற்கைப்படாததெனின், வெல்லக்கட்டி செயற்கைப்பட்டதன்றோ? அவற்றைக் காண்டல் கூடுமா? இவையெல்லாம் போலிக்கொள்கையும், மக்களைப் பிரித்தொதுக்கும் பொருந்தாக் கொடுமையுமாவன. இக்கொடுமையாலேயே சித்தாந்த சைவத்துக்கு வடுவும், தமிழகத்துப் பாழ்ங்கொள்கை பரவுதலுக்கு வாயிலும் ஆயின.

தாசு

திருமுறைகள் முற்றும் பொன்னணியொத்துத் தமிழ் மந்திரங்களே. அவற்றுள் திருவைந்தெழுத்தென்பது அப்பொன்னணியுள் தாலியொத்துத் தலைமை சான்றது. ஏனைய மொழிகள் அங்ஙனமன்று. சிறப்பாக வடமொழியும் அன்னதே. அவைகள் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, அரக்கு, சங்கு, பளிங்கு, கண்ணாடி முதலியவற்றான் விரவிய அணிகளைக் கொண்டன. அவற்றுள் மந்திரங்கள் பொன்னணிகளையொத் ... மை வரும் நிகழ்ச்சிகளை நடுநின்றாய்வார்க்கு நன்கெளிதிற் புலனாகும்:

குச்சகமுனிவர் மகன் கவுச்சிகர். அவர்செய் அருந்தவப் பேற்றால் மிருகண்டேயர் எனத் திருப்பெயர் பெற்றார். அவர்தம் மனைவியார் பெயர் விருத்தை. இவ்வம்மையார்தம்மைப் பெண் பேசிக் குச்சகமுனிவர் சென்றனர். பெண்ணை யீன்றாரும் இணங்கினர். மணத்தின்முன் அப்பெண் மதயானையால் துரத் துண்ணப்பட்டுப் பாழ்ங்கிணற்றின் வீழ்ந்துமாண்டாள். யாவரும் புலம்பினர். குச்சகமுனிவர் அவ்வுடலை எண்ணெய்த்தோணி யில் மூழ்குவித்தனர். பின் கூற்றுமறையினைப் பல்கால் எண்ணி னர். கூற்று மறையினை மிருத்துஞ்சயம் என்பர். அதன்பின் அப்பெண் உயிர்பெற்றெழுந்தது. இம்மறையினை எண்ணுவ தற்குமுன் அப்பெண்ணுக்கு இச்சாவு இடைச்சாவா என்றும் ஆய்ந்தனர். இவ்வரலாறு கந்தபுராணத்து மார்க்கண்டேயப் படலத்துள்ளது. இத்தகைய குறிப்பிட்ட பொன்னனி போன்ற மந்திரங்களே வடமொழியின்கண் உள்ளன இவை போலன்று திருமுறை. திருமுறை முற்றும் முதல்வர் ஆணை யாம் மந்திரங்களே.

திருத்தொண்டர் புராணத்துத் திருமணத்துக்காகக் காத லொருமித்துக் கால்நடையாக வந்த வணிகப்பெண்ணும் வணி கனும் திருமருகல் திருக்கோவிலில் இரவு தங்கினர். வணிகன் பாம்பால் மாண்டனன். அப்பெண் ஆண்டவனை நோக்கிப் புலம் பினள். சம்பந்தப்பெருமான் அருள்கூர்ந்து அப்பொழுதே "சடையாயெனுமால் சரணீ யெனுமால்" எனும் திருப்பதிகம் பாடியருளி வணிகனை உயிர்ப்பித்தனர். இதனால் திருமுறைக்கண் காணப்பெறும் ஒவ்வோர் எழுத்தும் மறையே யாம். ஈண்டு மறை என்பது அருண்மொழி முதல்வர் ஆணைமொழி பற்றி என்க.

மேலும் சேந்தனார் பாடியருளிய ஒன்பதாம் திருமுறைப் பல்லாண்டென்னும் திருப்பதிகம், தில்லைத்தேரினை இழுப்பார் இளைத்தொழிந்தபோழ்து யாருமின்றி அத்தேரினை நிற்கும் நிலை யினின்றும் எழச்செய்து, தெருச்சுற்றி நிலைவந்துசேர அருளிற்று.

உமாபதிசிவனார் அருளியகொடிக்கவி எவ்விதத் தனிமறையு மின்றித் தமிழ்ப்பாடல் முழுவதும் மறையேயாய்த் தில்லைக்கொடி யினை ஏற்றுவித்தருளியது உலகறிந்த மறுக்கப்படாவுண்மை. வடமொழிப் பற்றினர் தனித்தனிமறை—மந்திரம் வேண்டு மென்று சாற்றுவது செந்தமிழர்க்கன்று. இவ்வுண்மை சகலா கம பண்டிதர் மிகச்சிறந்த சிவதீக்கைக்கண் உடனுறைப்புத் தீண்டற்கு அஞ்செழுத்தே அமையுமென்று ஆணையருளினமை யால் நன்கு விளங்கும். அவ்வாணைக்குப்பின்னும் நம்மவர்

அவ்வழியொழுகுகின்றனரா? இன்று, இன்று. இதுவா சித்தாந்த சைவர்க்கு அழகு? அத்திருப்பாட்டு வருமாறு :—

அஞ்செழுத்தா லான்மாவை அரனுடைய பரிசும்
அரனுருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்டு
அஞ்செழுத்தால் அங்ககர நியாசம் பண்ணி
ஆன்மாவின் அஞ்செழுத்தால் இதயத் தர்ச்சித்து
அஞ்செழுத்தால் குண்டலியின் அனலை ஓம்பி
அணைவரிய கோதண்டம் அணைந்தருளின் வழிநின்று
அஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கமதி அருக்கன்
அணைஅரவம் போல்தோன்றும் ஆன்மாவில் அரனே.

சித்தியார். ௯ - ௩ - ௮.

ஆகமம்

திருக்கோவில் வழிபாடுகள் அனைத்தும் ஆகமமுறைப்படியன்றோ நிகழ்கின்றன. அவ்வாகமம் தமிழில் இல்லையே யென மருளுநரை உரைத்து மருட்டுவர் வெருட்டுவர். அவற்றிற்கெல்லாம் உண்மைச் செந்தமிழர் மயங்கார் தியங்கார் மருளார் வெருளார். என்னை? முழுமுதற் சிவபெருமானே திருவுளங்கொண்டு திருமூலரைப் பிறப்பித்துச் செந்தமிழாகமம் சேர்ப்பித்தினன். இவ்வுண்மை வரும் திருமந்திரங்களான் உணர்க:

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே. —௧0-௮௧.

நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்
தந்தி மதிபுனை அரனடி நாடொறுஞ்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே. —௧0-எ௮.

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே. —௧0-௯௯.

தமிழாகமத்துக்குத் துணையாய்க் கருவியும் விளக்கமும் வேண்டுமேல் வடமொழி யாகமத்தினின்றும் மொழிபெயர்த்துக் கொள்வதே வாய்ப்புடைத்தாகும். அங்ஙனம் செய்வதற்கு வாயில் திருமூல நாயனார் செந்தமிழாகமம் செப்பியருளியதே சான்றும் என்க. இதனால் சித்தாந்தச் செல்வர்க்குத் திருமூலர் தமிழாகமமே எல்லா நிகழ்ச்சிகளுக்கும் சால்புடைத் தென்க.

அவரவர் தாய்மொழி நீண்டு தொடருமென்பது 'ஒருமைக் கண் தாங்கற்ற கல்வி ஒருவற், கெழுமையும் ஏமாப் புடைத்து." (ருகூஅ) என்னும் செந்தமிழ்த் தெய்வப் பொதுமறையாம் திருவள்ளுவர் திருக்குறளான் நன்குணரப்படும். அதனாலன்றோ ஆருயிர்மக்கள் தெய்வயாக்கையைப் பெற்றகாலத்தும் தம் தாய்மொழித்தொடர்போ டிருக்கின்றனர். இவ்வுண்மை எல்லா மொழியானும் இமையோர் தொழுதேத்துவர் என்பதனால் பெறப்படும். அது வருமாறு.

"கல்லான் நிழன்மேய கறைசேர் கண்டாவென்
றெல்லா மொழியாலு மிமையோர் தொழுதேத்த
வில்லா லரண்மூன்றும் வெந்து விழவெய்த
நல்லா னமையாள்வான் நல்லம் நகரானே." —க. அடு-க.

இன்னும் அள்விறந்த சான்றுகள் திருமுறைக்கண் காணலாம். விரிக்கிற் பெருகும். ஆண்டுக் கண்டுகொள்க. இதுகாறும் கூறியவாற்றால் செந்தமிழகத்துச் சிறக்கும் திருக்கோவில் பெருமையனைத்தும் திருமுறைச் சார்பால் வந்தன. அதனை மறந்து ஒழுகுவது திருவருளையும் செய்ந்நன்றியையும் மறந்த செயலினை ஒக்குமென்று கூறுவது நடுநிலையாளர்க் கெல்லாம் உடன்பாடேயாம். தமிழருச்சனை செய்யத்துணையாய் நம் கழகத்தினின்றும் 'மலர்வழி பாட்டு வரிசை' முதலிய திருமுறை நூல்கள் பல வெளிவந்துள்ளன, வந்துகொண்டிருக்கின்றன. இவ்வுண்மையை அல்லும் பகலும் அகத்தும் புறத்தும் ஒல்லும் வகை ஓவாது உழைத்துப் பண்டேபோல் சித்தாந்த சைவத்தை உய்விப்பதே தம்முயிரெனத் தொண்டு பூண்டொழுகும் சிவத்திரு குன்றக்குடி அடிகளார் அண்மையில் நிகழ்த்திய அம்பாசமுத்திர விரிவுரை அருண்மொழிக்கண்ணும் குறிப்பிட்டருளினர். அடிகளார் பெருநோக்கத்துக்குப் பேராதரவு தமிழகத்தும், இலங்கை, மலேயா, சிங்கப்பூர், பர்மா முதலிய கடல்கடந்த வெளிநாட்டகத்தும் உண்டு. அஃது இன்னும் வளர்ந்து எல்லையின்றி விரிதல்வேண்டும். கடவுள் அருள்வானாக.

முதன்மை

திருக்கோவில்களில் நடக்கும் நாள்விழா, சிறப்பு விழாக்களுக்கு அவ்வந்நாட்டுப் பெருமக்களும் தனித்தனி விழா உரிமையாளரும் முதல்வராவர். நாடோறும் நிகழ்த்தும் அருச்சனைக்கு அவ்வவ் வருச்சனையாளரே முதல்வராவர். முதல்வரெனினும் கருத்தா எனினும் ஒன்றே. முதல்வர் ஏவலே முதல்வர் கருத்தறிந் தியற்றுவதே இயற்றுவோர் கடமையாகும். கோவில் அருச்சகர் இயற்றுவோரே யன்றி வேறல்லர். இவ்

வுண்மை, விழா அருச்சனை முதலியன புரியத்தொடங்கும் துவக்கத்தில் உரிமையாளர்பால் ஆணை பெறுதலும், முடிவில் இறைவன்பால் வேண்டிக் கோடலும், வாழ்த்துதலும் கூர்ந்து நோக்குவார்க்கு நன்கு விளங்கும். மேலும் அருச்சகர் செய்யும் செயற்குக் கூலிபெறுவதும் அவர்கள் முதல்வரல்லர் என்பதைக் காட்டும். ஆணையை அநுஞை என்பர். ஆணை யெனினும் கட்டளை எனினும் ஒன்றே. இவ்வுண்மை இன்றும் திருச்செந்தூரில் வழிபடுவார் ஏவலை இயற்றுவோர் கட்டளையர் என்று அழைக்கப்படுதலும், ஏவுவோரை அவ்வையர்மாருள்ளிட்ட அனைவரும் கட்டளைக்காரர் என்று அழைப்பதும் வழக்கத்தில் காணலாம். இதனை உற்றுநோக்கின் முன்னுள்ளார் முறைதிறம்பா தொழுகினர் என்பது விளங்கும்.

தனித்தமிழ் மறையுண்மை வரும் திருப்பாட்டுக்களான் நன்கு விளங்கும்:

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப. —தொல். பொருள். சகூ0.

மந்திரப் பொருள்வயி னுஅ குநவும். —தொல். சொல். சசக.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். —திருக்குறள், உஅ.

பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தம்
கரணம்போ லல்லாமை காண். —திருக்களிறு. கஉ.

செந்தமிழ்த்திறம் வல்லிரோசெங்க ணரவமுன்கையி லாடவே
வந்துநிற்குமி தென்கொலோபலி மாற்றமாட்டோ மிடகிலோம்
பைந்தண்மா மலருந்துசோலைகள் கந்தநாறுபைஞ் ஞீலியீர்
அந்திவானமு மேனியோசொலு மாரணீய விடங்கரே.

—எ. ருசு - ச.

தொன்மைத் தமிழருச்சனை தொடர்ந்து ஓங்குக, செந்தமிழும் சிவனெறியும் செழித்து வாழ்க.

"தென்றில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி

திருச்சிற்றம்பலம்

மெய்ப்பொருள் நாயனர்

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

உலகில் எண்ணற்ற உயிர்வகைகள் தோன்றுகின்றன; வளர்றன; முதிர்கின்றன; இறக்கின்றன. இது நாம் உலகில் ஒவ்வொரு நாளும் கண்டுவரும் உண்மையாகும் அவ்வுயிருள், மக்களுடம்பு பெற்றனவே சிறந்தனவாகும். ஏனெனின்? எவ்வகை உயிர்களும் உலகில் தோன்றி உண்பது, தின்பது, உறங்குவது, உலவுவது, பெண்ணினத்தோடு கூடுவது, இன்பந் துய்ப்பது, இறப்பதென்பதோடு முடிகின்றன. இவைகளையே மக்கட் பிறவி பெற்ற ஒருவன் செய்வானுனல் அவன் வேறுயிர்களினின்றும் எவ்வாறு விலக்கப்பெறுவான்? ஆகலான், இவைகளினும் மேம்பட்ட மனனுணர்வுகொண்ட உயிருடையோனே சிறந்தவனுகப் போற்றப் பெறுகின்முன். அம்மனனுணர்வு, தனக்கு வரும் துன்பம்போல் வேறு உயிர்கட்கு வருங்காற் கண்டு இரக்கங்கொள்வது, பிறர்க்குத் துன்பம் வந்தகாலத்து உதவிசெய்வது, காலந்தோறும் நன்மை செய்வது போன்ற செயற்கரிய செய்கின்ற திறமேயாகும். இவைகளினும் சிறந்தது, தமக்குக் கேடு செய்தவர்க்குத் தாமும் கேடு செய்யாது, அவர் கேடு செய்தது, அவர்தம் அறியாத தன்மையேயென்று இரக்கங்கொண்டு அவர்க்கு நன்மை செய்தலேயாகும். எற்றுல் இஃது அதனினும் உயர்ந்ததெனின்? தமக்குத் துன்பம் வந்தகாலத்து இடையூறு நேர்ந்தபோது, அதைப் பொறுக்கலாற்முது, அதை விலக்க முற்படுதலும், அத்தீமை செய்தவர்களை ஒறுத்தலும் இயற்கையாக எல்லா வுயிர்களிடத்தும் காணப்பெறும் நிகழ்ச்சியாகும். பாம்பு, தேள் முதலிய நச்சுயிர்கள், தமக்கு இடையூறு தருபவைகளினின்றும் விடுபடவே கடிக்கின்றன; கொட்டுகின்றன. இவ்வுயிர்களைப் போன்றே மக்களும் இருப்பாராயின் இவ்வுயிர்கட்கும் இவர்கட்கும் உருவ வேறுபாடன்றி அறிவில் வேறுபாடு சிறிதும் காணப்படுதல் இல்லையன்றே? ஆகவே, தங்நலந் துறந்து பிறநலம் பேணுபவரே சிறந்தவராக எல்லா நாட்டினும் போற்றப்பெறுகின்றனர். இவரையே பெரியோர் - சிறந்தோரென உலகம் கட்டுரைத்துப்

[1] 'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்'

என்பதும்,

1. திருக்குறள்: உகூ.

[1] 'இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்'

என்பதும் வள்ளுவர் கண்ட உண்மை.

இவ்வுண்மைக்கு எடுத்துக்காட்டாகப் பண்டும் இன்றும் பலர் இருந்தனர்; இருக்கின்றனர். அவருள் இத்தலைப்புப் பொருளாக வரும் மெய்ப்பொருளாரும், கிறித்துபெருமானும், சிரத்தானந்தரும் தற்காலப் பெரியவராக இலகிய காந்தியடிகளும் சிறப்பாகக் கொள்ளற்குரியர்.

இவருள், கிறித்துபெருமான், தமக்குக் கொடியர்கள், வசைமொழி புகன்றும் காறி உமிழ்ந்தும், முள்முடிசூட்டி அடித்தும், ஒறுத்தும், இறுதியில் சிலுவைமரத்தில் போட்டு அறைந்தும் கொடுங்கொலைசெய்து செந்நீர் யாறாகத் தம் உடலினின்றும் வழிந்தொழியும்போதும் தமக்காகச் சிறிதும் வருத்தங் கொள்ளாது, அக் கொடியர்கட்கு இரங்கி ஆண்டவனை நோக்கி,

'ஆண்டவனே! இவர்கள் நன்மை தீமை அறியாதவர்களாக இருக்கின்றனர்; இவர்கள் செய்வதிது, செய்யாத திதுவெனப் பகுத்தறியும் ஆற்றலில்லாதவர்களாகவும் இருக்கின்றனர்; இவர்கள் பாவத்தை மன்னியும்'

என்று வேண்டுவாராயின், இவர்தம் உள்ளப்பண்பை எவ்வாறு புகழ்வது! அதனால் இவரைச் செயற்கரிய செய்த பெரியாராக உலகம் போற்றுதலாயிற்று.

சிரத்தானந்தர் என்பார், அண்மையில் விளங்கிய பெரியார்; இவரால் பல முகம்மதியர் இந்துசமயநெறிக்குக் கொணரப்பட்டனர்; இவர், கேட்போர் மனங்கொள்ளுமாறு எடுத்து விளக்கிப் பேசும் பேராற்றல் பெற்றவர்; சொல்லின் செல்வர்; அதனால், இவர் அருளுரை கேட்டு முகம்மதிய உலகும், இவர் வழி கால்கொள்ளலாயிற்று. இதைக் கண்டான் முகம்மதிய இளைஞன் ஒருவன்; அப்துல் ரசீத் என்னும் பெயரினன். இவரால் நம் இசுலாமியம் தொலைந்தொழியுமென எண்ணினான்; அஞ்சினான்; அடிகளார் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமிய ஒரு பெருங்கூட்ட நடுவண் சொற்பொழிவாற்றிக்கொண்டிருக்கும்போது கொலைக்கருவி கொண்டு சுட்டான்; அடிகள் செந்நீரொழுகக் கீழே வீழ்ந்தார்; கூட்டத்தை நோக்கி, 'இந்நண்பரை ஒன்றுஞ் செய்யாதீர்; அவரைக் காப்பாற்றுங்கள்' என்று கூறித தம் உயிர்நீத்தார். இப் பெரியாரின் குறிக்கோள் யாண்டுச்சென்றது! தம்மைக்கொன்ற இளைஞன் உயிரைக் காத்தற்

1. திருக்குறள்: உகூ.

கன்றே! என்னே ஆனந்தர் அருள்! ஆகவே, இவரும் செயற்கரிய செய்த சீரியாரானார்.

காந்தியடிகளை இக்கால உலகம் நன்கறியும். தொழுதற்டத்தில் அவரை முதற்கண் சுட்ட ஒருவனை ஒறுக்காது காக்க வேண்டினர்; அவனைக் காத்தனர்; பின்னர்க் கோட்சே என்னும் கொடியோன் சுட்டனன்; 'அரே! ராம்' என கூறிக் கொண்டு உணர்விழந்த நிலையில் வீழ்ந்தார்; உயிர் துறந்தார். உணர்வோடிருப்பரேல் அவனையும் காக்க முற்படுவர். ஆகவே, இவரும் பெரியாருட் பெரியாராகப் போற்றப்பட்டார்.

இத்தகைய பேரருளாளரே இங்கே யாம் எடுத்துக்கொண்ட தலைப்பில் வரும் மெய்ப்பொருள்நாயனார். இவர் சேக்கிழார் தொண்டர்புராணத்துள் அறுபான்மும்மை அடியார்களில் ஒருவர். செயற்கரிய செய்த பெரியார். தம் உயிர்துறக்க நேர்ந்த காலத்தும் தம் தன்மைமாறாத் தகையர்; இவர் அரசரே ஆயினும் தாம் அரசர் என்னும் தருக்குக் கொள்ளாது அடியார்க்கு அடியாராய் ஒழுகிய அருந்தகையராவர்; இவரை 'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்' என்று போற்றினார் வன்றொண்டப் பெருந்தகையார்.

இவர், மறைமுதற் பொருள்களெல்லாம் மணிமிடற்றவனே யெங்கும்நிறை பரம்பொருளென்று கூறும் மெய்ம்மையை மெய்யென்றுணர்ந்து பூதிசாதனமே நெறிவீடெனக் கொண்ட சீர்மையர். அதனான்,

[1] 'அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே'

என்னும் மெய்கண்டார் உரைக்கேற்ப, சிவனடியார் திருவேடங்களையும், அவன் திருக்கோயில்களையும் இறைவனாகக்கொண்டும், அஃதில்லா நிலையை,

[2] 'சிவனடியார்க் கன்பிலாச் சிந்தையே இரும்பு; ஏவல்செய்து நாளும்
அவனடியார் திறத்தொழுகா ஆக்கையே மரம்; செவிகண் ஆதி ஐந்தும்
பவனடியார் இடைச்செலுத்தாப் படிவமே பாவை; மறைபரவும் சைவ
தவநெறியல்லா நெறியே பயநெறி'

எனக் கொண்டொழுகும் பான்மையராய் ஒழுகினமையால்— இந்நெறி ஒன்றே உண்மையெனக்கொண்ட காரணத்தால்-இவர், மெய்ப்பொருளார் என்னும் பெயர் வழங்கப்பெற்றார். இவர் தம்

1. சிவஞானபோதம் நூற்பா: கஉ.
2. திருவிளை, விருத்தகுமார: கஎ.

அளக்கொணு இறைவன்பாற் கொண்ட பேரன்பை, சேக்கிழார் பெருமான்,

[1] 'அரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமற் காத்து
வரைநெடுந் தோளால் வென்று மாற்றலர் முனைகள் மாற்றி
உரைதிறம் பாத நீதி ஓங்குநீர் மையினின் மிக்கார்
திரைசெய்நீர்ச் சடையான் அன்பர் வேடமே சிந்தை செய்வார்'

என்று பொற்பொடு போற்றியுரைத்தார்.

இத்தகைய சிறப்பினரான மெய்ப்பொருளார் பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப் பரியும் அருட்கடலாகிய சிவ பெருமான் திருவடிக்கண் மனம்பதிந்த நீரராய் ஒழுகுநாளில் பகை கிளைத்தது. முத்திநாதன் என்பானொர் சிற்றரசன், இவர்மீது போர்தொடுத்தான்; போர் நீள நிகழ்ந்தது; அவன் படைகளை முறியடித்தார்; அவனைப் புறமுதுகிட்டோடத் துரத்தினர்; அடியார் பணியில் மடம்பட்டோராகத் தோன்றி னும் படையில் மடம்பட்டாரல்லர்; முத்திநாதன் தோற்றமை யால் வெள்கினன்; அவன் நாட்டிலேயே பழிப்புரைக்கும் இடனானன்; அவன் ஒன்றெண்ணினன்; 'இவனைப் படைவலியால் வெல்லல் எளிதன்று; சூழ்ச்சியால் வெல்வதே கூடும்; அதற்கு ஆவன செய்தல் வேண்டு'மென்று கருதினன்; அஃதாவது, இவர்க்கு விருப்பமான துறையில் இவரை ஏமாற்றிக் கொல்லு தல் வேண்டுமென்பது. இவர்க்கு விருப்போ சிவனும் அவன் அடியார்களுமே. ஆகலான் அடியார் போன்று கோலங் கொண்டான். இந்நிலையைச் சேவையர் காவலராகிய சேக்கிழார்,

[2] 'மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன்'

என்று அவன் கொண்ட பொய்த் தவக்கோலத்தை முடிமுதல் அடிகாறும் ஓவியமாக எழுதிக் காட்டினர். இத்தகைய பொய் வேடப் புரையோன், சேதியர் பெருமானாகிய மெய்ப்பொருளின் அரண்மனை வாயிலை அணுகினன்.

பொருளார், பள்ளிக்கட்டிலில் துயில்கின்றார். இவன் வாயிற் காவலனைக் கண்டான்; தன் வருகையை அரசனுக்குத் தெரிவிக்குமாறு கூறினன்; காவலன் வழிவிட்டான்; உட் காவலன், தத்தனென்னும் பெயரினன்; 'ஐய! இதுகாலை அரசர் தூங்குகின்றார். தெரிந்து செல்லுதல் வேண்டு'மென்றான்.

1, 2. பெரியபுராணம், மெய்ப்: ௨; எ.

அதற்கு வஞ்சன், 'யான் அவர்க்கு உறுதிப்பொருள் உரைக்க வந்துளேன்' என்று கூறிக் கடந்து பள்ளியறை யண்மினன். ஆங்கே காவலரின் மனைவியார் பக்கலில் இருந்தவர், இவனைக் கண்டதும் கீழிறங்கி அரசரைத் துயில்நீக்கி எழுப்பலானர். பக்கலில் வெண்ணீற்றுக்கோலத்தனுய், வேணிமுடித்த வித்தகன் போன்று நிற்பக் கண்டு, அகங்குழைந்தார்; மயிர்க்கூச்செறிய வணங்கினர்; அவனை வரவேற்றார். 'மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்ததென்ன, இங்கெழுந்தருளப் பெற்றது என்கொலோ?' என்று வினவினர். அதற்கு முத்திநாதனுகிய பொய்த்தவத்தோன், 'உங்கள் நாயகனுர் முன்னம் உரைத்த ஆகமநூல், எங்கும் இல்லாததொன்று கொண்டு வந்தேன்; இயம்பீ' என்று விடையிறுத்தான்.

அப்பால் கரையிகந்த பேரன்புடையராய் மலாடர் கோமகனர், முத்திநாதக் கைத்தவனை நோக்கி, 'பேறெனக்கு இதன் மேல் உண்டோ?' என்றார். 'மாறில் ஆகமத்தை வாசித்து அருள்செய்ய வேண்டு'மென்று கேட்டுக்கொண்டார். கைதவன் 'உன் மனையாள் ஈண்டிருத்தல் கூடாது; நானும் நீயும் தனியிடத்திருந்து படிக்கும் தகையது' என்றான். அப்பால், அரசர் பெருமகனர், தம் தேவியை அந்தப்புரம் ஏகப் பணித்தார்; அவரும் ஏகினராக, அரசர், முத்திநாதனை உயர்பீடத்தேற்றி அமர்த்தி, தாம் தரைக்கண் இருந்து அவனைப் பணிந்து 'இனி அருள்செய்யும்' என வேண்டினர்.

அதுகாலைப் புத்தகம் அவிழ்ப்பான் போன்று தான் நினைந்தவாறே அவர் வணங்குங்கால் வாளால் அவர் தலையை வணக்கினன். இதைக் கண்ட வாயிற்காவலனுகிய தத்தன், சினங்கொண்டான்; வாளெடுத்தான்; வஞ்சனை வீசி யெறிய முற்பட்டான்; நிறைத்த செங்குருதிசோர வீழ்கின்ற மெய்ப்பொருளார், நமரெனக் கூறினர்; அவன் கையைப்பிடித்தார்; தடுத்தார்; நிறுத்தினர்; கீழ்வீழ்ந்தார். தத்தன் அவரை வணங்கினன்; 'யாது நான் செய்கேன்?' என்றான். அதற்கு அவர், 'எம்பிரான் அடியார் போக, மீதிடை விலக்காவண்ணம் கொண்டு போய் விடுநீ' என்றார்.

இவ்வாருக, இதனையறிந்த மக்கள் யாவரும் திரண்டு போந்தனர்; அரசனைக் கொன்ற இந்தப் பொய்த்தவத்தோனைப் பொன்றுவிப்போமெனக் குழுறினர். தத்தன் அவர்களைத் தடுத்தான்; 'இவனைப் பாதுகாத்து அவன் இருக்குமிடம் சேர்த்து வருமாறு இறைவன தாணை பிறந்தது' என்றான். அது கேட்டு அவர்கள் அஞ்சி அகன்றாராக, அரசர் கட்டளைப்படி வெவ்வினைக் கொடியோனை விட்டுவிட்டு மீண்டு வந்தான்.

இச்செய்தியை அறிதற்கு அவாக்கொண்டு மெய்யுயிர் தாங்கிநின்ற கொற்றவனாரின் முன்னர்ச் சென்று நின்றான், தத்தன். அவர் அவனைப் பார்க்க, அவன், 'செய்தவ வேடங் கொண்டு வென்றவர்க்கு இடையூறின்றி விட்டனன்' என்றான். அதற்குத் தொண்டர்க்குத் தொண்டராம் மன்னர்,

'இன்றெனக்கு ஐயன் செய்தது யார் செய்யவல்லார்' என்று கூறி நிறைபெருங் கருணை கூர்ந்தார். அப்பால் தத்தனை நோக்கி, 'தத்தா அரசியல் ஆயத்தார்க்கும், அழிவுறு காதலார்க்கும் நீ ஒன்று விளம்புக.' அது, 'பரவிய திருநீற்றன்பு பாது காத்துய்ப்பீர்' என்பது. இதைக் கூறி இறைவன் பூங்கழல்களை ...ர்.

தொண்டனார்க்கு இமையப்பாவை துணைவனார் தம்மைக் கண்டவாறு எதிரே நின்று காட்சிதந்தருளினார். இடையறாது இறைவனையே கும்பிட்டுக்கொண்டு வீற்றிருக்கும்பேறு நல்கினார், எம்மிறைவர்.

[1] 'திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே
உருக்கோலி மந்திரத்தால் எனநினையும் அவர்க்கும்
உளன்எங்கும் இலன்இங்கும் உளன்என் பார்க்கும்
விருப்பாய வடிவாகி இந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தில் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கும்
உருக்காண ஒண்ணாத பால்முலைப்பால் விம்மி
ஒழுகுவது போல்வெளிப்பட் டருளுவன்அன் பர்க்கே'

என்று அருணந்தியடிகளார் அருளிச்செய்தவாறு, எவனொருவன் எவ்வெவ் வடிவில் இறைவனை நோக்கி வழிபடுகின்றானோ அவ்வவ் வடிவில் நின்று இறைவன் ஆட்கொண்டருளி உய்விக்கின்றானென்பது. இங்கே மெய்ப்பொருள்நாயனார், சிவபெருமான் திருக்குறிகளான கோயிலையும் தொண்டர்களையுமே உளங்கொண்டு சிவபெருமானாகக் கருதினார். முத்திநாதன், அவர் கருதிய அடியார் திருவுருத் தாங்கினான்; தான் நினைந்தவாறே செயல் செய்து முடித்தான். ஆனால், நாயனார் அக்காலத்துங் கூட அவனைச் சிவனடியார் என்று கருதினாரன்றி வேறு சிறிதும் பகைவனாகவோ—கீழோனாகவோ கருதினாரில்லை. ஆதலால், இறைவன் இவர்க்கு முன்னின்றருளினான். இடையறா இன்ப அன்பைப் பெருக்கினான்.

இவர் வரலாறு, பிறர் எவரின் சிறந்த வரலாற்றுக்கும் மேற்பட்டதாகும். கிறித்துவும், சிரத்தானந்தரும், காந்தியடிகளும்

1. சிவஞான சித்தியார், சுபக்கம், கஉ-ஆம் சூத்திரம்: ௩.

ஒரே நீர்மையராகக் கொள்ளப்பெறுகின்றார். இவர் அவரினும் விஞ்சியவராய்த் தம் கொள்கையை உலகெங்கும் நிலைக்குமாறு செய்ய ஏவி, தத்தனுக்குக் கட்டளையிட்டு இறையடிப் பேறுற்றாரென்றால், இவர் பெருமை அளவிட்டுரைக்கத்தக்க தன்று; ஆனால் நம்நாடு, பிறநாட்டுக் கதைகளை—வீரர்களைப் போற்றுவதன்றி நம்நாட்டுப் பெரியார்களைப் போற்றுவதில் பின்வாங்கியே நிற்கின்றது.

சங்க காலத்தில் நம் தமிழகத்தில் வாழ்ந்திருந்த புலவர் பெருமக்கள், அரசர்கள், வள்ளல்கள், ஓவியர்களின் வரலாறு கள் யாவும் தெரியாது ; தெரிதற்கு வாய்ப்பும் இல்லை ; கணியன் கூறிய வாய்மொழிகொண்டு தம் மூத்தோன் அரசு கட்டிலேறி இருக்க விழைந்து தன் நலந்துறந்து, இளங்கோ, இளங்கோவடிக ளாகத் துறவு பூண்டார். இது, தமிழ்மகனுக்கு இன்னுந் தெரி யாது ; இலக்குவன் தன் தமையனோடு காட்டுக்குத் தொடர்ந்து சென்றது தெரியும் ; சிறையில் வாடி, சங்கிலித் தொடர் கொண்டு விலங்கு பூட்டியதற்கு மனந் தாழாது நீர்வேட்கை மிகுந்தும் நீரருந்தாது மானத்தால் உயிர்விட்ட மானவீரன் சேரமான் கணைக்கால் இரும்பொறை வரலாறு தெரியாது ; சூழ்ச்சியால் அபிமன்னுவைப் பல வீரர் கூடிக்கொன்ற பாரதக் கதை தெரியும் ; தன் கணவன் கொலைஞன் என்ற பழிச்சொல் தீரச் சிலம்பால் செழியனை வென்ற சேயிழை கண்ணகி வரலாறு சரிவரத் தெரியாது; ஐவருக்கும் அழியாத பத்தினி திரௌபதை கதை தெரியும்; இவ்வாறு நாட்டியல், வரலாற்றியல் தெரியாது தமிழனுக்கு.

இராமகாதை, பாரதக் கதைகள் பொய்யும் புளுகும் புனைந்து கட்டியன. அதில் வரும் கதைப் போக்குகள், தமிழ் நாட்டுக்கும் தமிழர் பண்புக்கும் ஒவ்வாதன. அவைகள் இங்கே போற்றப்படுகின்றன; ஏற்றியுரைக்கப்பெறுகின்றன. தமிழன், வேற்றுநாட்டுக் கதைவெறி, மொழி மோகம், அடிமை பெண் ணம் இவைகள் மாறி, இவர்போன்ற நல்லார் நெறியை வல்லமை யாகக்கொண்டு நடக்கும் நாளே நன்னாளாகப் பொன்னாளாகப் போற்றப்பெற்று மிளிரும் என்ப தொருதலை.

மன்றுளார் அடியாரவர் வான்புகழ், நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

தண்டமிழ் வேலி

[சே. சி. சேதுராமலிங்கம்]

அரசியல், நாட்டிற்கும் மக்களுக்கும் இன்றியமையாத தொன்று. மொழி நாகரிகம், பழக்க வழக்கம் முதலியவற்றைத் தமக்குப் பொதுவாகக் கொண்ட ஆறறிவுடைய மக்கள் வாழும் நிலப்பகுதி நாடு எனப்படும். அந்நாடு அம் மக்கள் பேசும் மொழியின் பெயராலோ அல்லது அந்நாட்டில் மிகுதியாகக் காணப்படும் சிறந்த பொருள் ஒன்றின் பெயராலோ அல்லது வேறு யாதானும் ஒரு பெயராலோ அழைக்கப்படும். "வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" தமிழகம் எனப் பெயர்பெற்றது. நாடு மக்களால் ஆயது. எனவே, நாடு தன்னுடைய உயர்விற்கும் செழிப்பிற்கும் மக்களைச் சார்ந்திருக்கின்றது.

நாட்டுக்கு அணிகலன் அரசியலே. தமிழகத்திற்குத் தமிழ் மக்கள் அளித்த அணிகலன் தமிழ் அரசியலே. தமிழகத்தின் அணிகலனாகிய தமிழ் அரசியல் மிகவும் உயர்ந்த நிலையில் பிறங்குவதற்குக் காரணம் அதனைச் சமைத்த தமிழ் அறிஞர்களின் மனநுட்பமும் ஆக்கத்திறனும் ஆகும். அவ் அணிகலனையும் அதனைச் சமைத்த அறிவும் ஆற்றலும் மிக்குடைய மக்களையும், தமிழகத்தையும், பிற நாட்டாரின் பேராசைப் பிடியிலிருந்தும் அதனால் உளவாகும் இழிசெயல்களிலிருந்தும் காப்பாற்றிப் போற்றுவது தண்டமிழ் வேலியே.

காலப் போக்கிற் கேற்பவும், காவலரின் வினைத்திட்பத்திற் கியையவும் ஒரு நாட்டின் அரசியல் மாற்றமடையும். இது எல்லா நாடுகளுக்கும் பொதுவான ஓர் விதி. அதேபோன்று தமிழக அரசியலும் மக்களின் உயர்வு தாழ்வுகளுக்கேற்ப உயர்ந்தும் தாழ்ந்தும் இதுகாறும் வந்திருக்கின்றது. "ஒரு அரசியல் என்றென்றும் நீடித்திருக்கும் தன்மையதன்று; அதனைத் தோற்றுவித்த மக்களே பின் அதனை மாற்றி யமைத்தலும் கூடும். அல்லது, வலிமையும் வீரமும், செழிப்பும் செல்வமும், உடைய பிற நாட்டாரின் அரசியல் வந்து புகுந்து கொள்ளுதலும் கூடும். எனவே, மக்கள் தங்கள் முன்னேற்றத்திற்கும், உயரிய வாழ்விற்கும் அரசியலை முழுவதுமாகச் சார்ந்திருத்தல் சிறப்புடையதன்று. தங்கள் பாதுகாப்பிற்கும் அரசியலைப் பூரணமாகப் பற்றியிருத்தல் நல்லதன்று. நாட்டுமக்களை ஒன்று கூட்டி, நல்வழியில் செலுத்தி, அவர்களையும் அவர்களது அரசியலையும்

பாதுகாத்துவரும் உரனும் ஊக்கமும் உடையது அவர்கள் வழங்கும் மொழியே. தமிழகத்தைப் பாதுகாக்கும் தன்மையுடையது தமிழ்மொழியே. அத் தமிழ்மொழியே தமிழகத்தின் தண்டமிழ் வேலியாகும். அவ் வேலியை உரனுடையதாக்கிப் பிறர் அழிக்காவண்ணம் வைத்திருப்பது தமிழ்மக்களின், பிறவியெடுத்ததின் முதற்கடமையாகும்'' என்று தெளிவாக, உறுதியாகக் கூறிச் சென்றுள்ளார் நம் தமிழகச் சான்றோர் ஒருவர்.

உலகியல் வாழ்விற்கு இலக்கணம் வகுத்த மொழியாம் தமிழ்மொழியை எங்ஙனம் தண்டமிழ் வேலியாக நிறுவுவது என்று தமிழக மக்களுள் சிலர் திகைத்தல் கூடும். தமிழகத்தில் வாழும் ஆண் பெண் இருபாலாரும் தீந்தமிழின் சுவை மாந்தித் தமிழ் உணர்ச்சி பெற்றுத் தமிழையே தங்கள் உயிர்ப்பாகக் கொண்டு வாழ்ந்தால் தமிழை வேலியாக ஆக்கமுடியும்; அங்ஙனம் வாழ்வதுதான் தண்டமிழ் வேலியின் பாதுகாப்பிலே வாழ்க்கையாக வளமுடன் வாழ்வதாகும். தமிழக மக்கள், தங்கள் தாய்மொழியைப் பேச்சிலும் செயலிலும், கனவிலும் நனவிலும், பயன்படுத்தும்பொழுது அவர்களால் ஆக்கப்பட்ட அரசியலும், அவர்தம் மொழியிலேயே நடைபெற வேண்டியதாயிருக்கின்றது.

இந்தியா விடுதலை பெற்றபின் தமிழறிஞர் சிலர், தமிழ் நாட்டின் அரசியல் தமிழிலேயே நடைபெறல் வேண்டும் என்று உரைத்தனர். தமிழகத்திலே பிறந்திருந்தாலும் தமிழ் உணர்ச்சியற்ற வேறு சிலர் "தமிழ்மொழி அரசியல்மொழியாக வேண்டாம்; இந்திமொழிதான் இந்தியா முழுவதும் அரசியல் மொழியாக ஆகும் தகுதியுடையது; அதுதான் அரசியல் மொழியாக இருக்க வேண்டும்'' என்று பறைசாற்றித் திரிகின்றனர் இன்றும். தமிழைத் தமிழகத்தின் அரசியல் மொழியாக்கத் தளரா முயற்சியுடன் அயரா உழைப்பை மேற்கொண்டுள்ளனர் சிலர்; ஏன், தமிழகமக்களில் பெரும்பான்மையோர் அதனை வரவேற்கின்றனர். ஆனால் ஒரு சில மக்கள் மொழிப்பற்று நாட்டுப்பற்று அற்ற மக்கள், தமிழ் அரசியல்மொழியாவதை எதிர்த்தனர்; இப்பொழுது சிறிது மனம் திரும்புகின்றனர்.

"இந்தியக் குடியரசின் கீழ் அடங்கிய பல்வேறு நாடுகளில் அவ் வந்நாட்டு மொழியே அரசியல்மொழியாக வழங்கப்படுமானால் அவ்வந் நாட்டுமக்கள் உணர்ச்சியால் உந்தப்பட்டு இந்தியக் குடியரசினின்றும் பிரிந்து வாழ விரும்புவர். அதனால் இந்தியக்குடியரசு சிறப்பிழந்து விடும். சிறு நாடுகளின் அரசியல்

அந்நாட்டு மக்களின் அரசியலாக இருந்தாலும், இந்தியாவெங்கும் அரசியல் மொழியாக இந்தி இருக்குமாயின் அந்நாடுகள் இக் குடியரசினின்றும் பிரிந்து செல்ல வழியின்று'' என்பதனை வடவர் நன்குணர்ந்தவராதல் வேண்டும். அதனாலேயே இந்தி மொழியாகிய வேலிக்குள் இந்தியாவைக் கட்டுப்படுத்த வடவர் பெரிதும் முயற்சி எடுத்து வருகின்றனர்.

'' 'இந்தி மொழியில் விஞ்ஞானத் துறையில் பத்தாயிரம் சொற்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன.' 'இந்தியை உயர்நிலைப்பள்ளிகளில் கட்டாயமாகப் போதிப்பதற்கு இந்திய அரசாங்கம் பெரும் அளவில் பணம் அளித்துள்ளது' 'மைசூர் மாகாணத்திலுள்ள பள்ளிகளில் இந்தி கட்டாயமாகப் போதிக்கப் படுகிறது.' 'இந்தி மொழியின் சிறப்பினை நாட்டுமக்களுக்கு உணர்த்த அயல் நாடுகளிலிருந்து மொழிநூல் வல்லுநர் பலர் இந்தியாவிற்கு வரவழைக்கப் பட்டிருக்கின்றனர்.'' என்று இவ்வாறெல்லாம் பத்திரிகைகளிலிருந்து நாம் செய்தி அறியலாம். அரசாங்கமேயன்றி வடநாட்டுமக்களே இந்தியைப் பரப்புவதில் பெருமுயற்சி எடுத்து வருவதோடு அதற்காகப் போதுமான பணத்தையும் உதவுகின்றனர்.

ஆனால் தமிழ்மக்கள் ஏதேனும் செய்கின்றனரா? வயிற்றுப் பிழைப்பிற்காகத், தம்மை ஆளுவோர் வேற்று நாட்டாராயினும் அவர்தம் நிழலில் தங்குவர் சிலர். ஆங்கிலேயர் ஆட்சியிலே அவர் மொழியைக் கற்று, அவர் மதத்தைத் தழுவி, அவர் நாகரிகத்தை மேற்கொண்டு, தமிழ்ப்பற்று அற்று வாழ்ந்த தமிழகத்திற்றோன்றிய மக்களும் உளர். இந்தியக் குடியரசிலே வடவரின் ஆதிக்கத்திற்குத் தலையை ஆட்டி, அவர் மொழியைக் கற்று, அவர் தம்மைப் போற்றி வாழ விருப்பங்கொள்ளும் மக்களும் தமிழகத்தில் உள்ளனர். இத்தகையோரால் தமிழகம் சிறப்படைவது எங்ஙனம்? வேலியைச் சிதைக்கும் விலங்குகளாகவே இவர்கள் தோற்றமளிக்கின்றனர்.

'தமிழை அரசியல் மொழியாக ஆக்கியே தீரவேண்டும்' என்று சட்டசபை உறுப்பினர்கள் பலர் முயன்றதன்பேரில், 'தமிழ்மொழியை ஒரு சில மாவட்டங்களில் மட்டும் அரசியல் மொழியாகச் செயல்படுத்தி, அதன் விளைவைக் காணுவோம்' என்று அவ்வாறே அரசியலார் செய்துள்ளனர். அதன் விளைவை மிகத் தெளிவாகக் கண்டுள்ளார் தமிழ்ப்பெரியார் ஒருவர். செந்தமிழ் மொழியின் சொற்சிறப்பையும், சங்ககாலத் தமிழ் மக்களின் நல்வாழ்வையும், அரசியலையும் அவர்தம் ஆட்சித் திறனையும் உணராதவர் போன்றும், இந்தி மொழியின் பாலுள்ள தமது மதிப்பு இன்னும் குறையப் பெறாதவர் போன்றும் அவர்

நாளிதழ் வாயிலாகத் தமிழகத்திற்குப் புலப்படுத்துகின்றார். அவர்தம் கூற்றைச் சற்றுக் கவனிப்போம்:

"தமிழ் அரசியல் மொழியாகக் கொள்ளப்பட்ட மாவட்டத்திலிருந்து அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்ட செய்தி ஒன்றில் 'உரகம்' என்ற கடினமான தமிழ்ச்சொல் உபயோகிக்கப் பட்டிருந்தது. அரசியல் அலுவலாளர் 'உரகம்' என்ற சொல்லின் பொருளை அறிய அகராதியைத் தேடவேண்டியதாயிற்று. 'உரகம்' என்று எழுதுவதைவிடப் 'பாம்பு' என்றே எழுதியிருக்கலாம். தமிழ் அரசியல் மொழியாவது சரிதான்; ஆனால் நாடோடித் தமிழிலேயே அரசியல் நடைபெறவேண்டும்" என்று கூறியுள்ளார் அப் பெரியார்.

இயற்றமிழ், இசைத்தமிழ், கூத்துத்தமிழ் என, தமிழ் மூவகைப்படுமேயன்றி நாடோடித் தமிழ், பட்டணத்துத் தமிழ், கிராமத்துத் தமிழ் என இவ்வாறு பலவகையுடைத்தன்று. நாடோடித் தமிழ் ஆகிய இவற்றிற்குத் தனி இலக்கணமும் இடையாது. தென் பாண்டி நாட்டில் கிராமங்களிலே உபயோகிக்கப்பட்டுவரும் 'உலங்கு' என்னும் சொல் நகரங்களிலே வழங்கப் படுவதன்று; அச் சொல்லைக் கேட்ட நகரவாசிகள் அதற்குப் பொருள் தெரிய அகராதியைத் தேடவேண்டும். ஆனால் அச் சொல் இலக்கியங்களிலே மிகுதியும் எடுத்தாளப்பட்டுள்ளது. மதுரையிலே 'இட்டிலி சுடுதல்' என்பர். அதனைக் கேட்கும் திருநெல்வேலியார் சிரிக்கத்தான் செய்வர். 'வாயப்பயம்,' 'இஸ்துகின்னு' போன்ற சொற்களை நாடோடித் தமிழ் என்று கொண்டு அரசியல் செய்திகளிலே எழுதினால் சென்னை மக்களைத் தவிர மற்றத் தமிழக மக்கள் அவையிற்றின் பொருளையறிய அகராதியைத் திருப்பி அதிலே காணாமல் தமிழ்ப்புலவர்களைத் தேடிச் செல்லவேண்டும். அவர்களும் யாது பொருளுரைப்பரோ அறியேன். மதுரைக் கடைகளிலே 'அஸ்கா' கொடுக்கும்படி கேட்டார் நண்பர் ஒருவர். கடைக்காரச் சிப்பந்தி பொருள் தெரியாமல் விழித்தான். பூவரசு மரத்திலே விளையும் காயைப் 'பூவரசங்காய்' என்பது பொருத்தமுடைத்து. ஆனால் அதனைப் 'பம்பரக்காய்' என்று ஒரு சில கிராமங்களில் மட்டும் சொல்லுகிறார்கள். சிறுவர் அதனைப் பம்பரம் சுற்றுகின்றனர். அதனால் அக்காய்க்கு அப்பெயர் பொருந்தியது. 'பம்பரக்காய்' என்று எழுதினால் அரசியல் அலுவலாளர் பொருள் தெரிந்துகொள்ளுவரா? ஒருகாலும் முடியாது.

அமிழ்தத்தொடு சிறிதளவு தேனைச் சேர்த்தாலும் அமிழ்தத்தின் இயற்கையான சுவை கெட்டுவிடும் என்பது யாவரும்

அறிந்த உண்மை. அதேபோன்று நீந்தமிழுடன் பிறமொழிச் சொற்களையும் கலந்து பேசப்பேசத், தமிழின் சுவை கெடுகின்றது. அதனால் தமிழ், தமிழகத்தில் பல பாகங்களிலும் மக்கள் பேசும் தன்மையைப் பொறுத்துத் தன்னிலையிற் றிரிகின்றது. இங்ஙனம் திரித்துப் பேசப்படும் தமிழைப் பொதுவாகக் 'கொச்சைத் தமிழ்' என்றே கூறவேண்டுமேயன்றி நாடோடித் தமிழ் என்றோ, பட்டணத்துத் தமிழ் என்றோ, பட்டிக்காட்டுத் தமிழ் என்றோ சொல்லுவது முறையன்று. ஓரிடத்தில் பேச்சில் வழங்கும் சொல் மற்றோரிடத்தில் இலக்கியத்தில் வழங்கும் செந்தமிழ்ச் சொல்லாகப் பாவிக்கப்படுகின்றது.

இன்றைய தமிழகம் தண்டமிழ் வேலியின் இன்றியமையாமையை உணர்ந்துவிட்டது. அவ் வேலியை எவ்வாற்றானும் நிலைப்படுத்துவதே கடமை என்பதை மக்கள் உணர்ந்து முயற்சி செய்கின்றனர். அவ்வேலி கொச்சைத் தமிழ் என்னும் அகத்திக் கம்பால் நிறுவப்படுமாயின், எளிதில் அழிவெய்தும் என்பது உறுதி. நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்கும் வேலி மிகவும் வலிவுடையதாயிருக்க வேண்டும். மக்களின் அரசியல், பொருளாதாரம், வாழ்க்கை, விஞ்ஞானம், கல்வி, கலை ஆகியவற்றின் முன்னேற்றம், சிறப்பு அனைத்தும் தண்டமிழ் வேலியின் வலுவைப் பொறுத்திருக்கின்றன. ஆகவே, தமிழகமக்களாகிய நாம் அனைவரும் செந்தமிழையே கற்று இனிய தமிழையே பேசி வாழ்க்கையில் வெற்றிகாண முயலுவோமாக.

தமிழ்மொழி ஆட்சி

'வானம் அளந்தது அனைத்தும் அளந்த வண்மொழி' யென்று போற்றுகின்றார் பாரதியார். அத்தகைய சீரிய மொழி இன்னும் ஆளும் மொழியாக அமையவில்லை; அதை உரிமையாகக்கொண்ட நம்மக்கள், மந்திரியாவதிலும் தந்திரியாவதிலும் தம் காலத்தைப் போக்குகின்றனர். வேறுமொழி கற்றவன், தகுதியற்றவனாயினும் அவன் அலுவலுக்கு மிகைக் கூலி கொடுக்கின்றனர். தமிழ் கற்றவனுக்குக் கற்ற தகுதிக்கேற்ப நன்மதிப்பு இல்லை; கூலியுமில்லை. இந்த மனப்பான்மை ஒட்டுப் புற்போல் நம் தமிழ்மக்கள்பால் ஒட்டிக் கிடக்கின்றது. இது மாறினால் தமிழ்மொழி முயற்சியின்றியே அரியணையேறி ஆட்சி செலுத்தும். தமிழ் ஓங்குக.

—செல்லூர்க்கிழார்.

மதிப்புரை

(க) பாலு சகோதரர்களின் கலைக்கூட மலர்

[பக்கங்கள்—கசுஉ, வழுவழுத்த அழகிய தாள், விலை ரூ. 3.]

இம்மலர், ஓவியக் கலைஞர்களான பாலு சகோதரர்களின் கலைக் கண்காட்சி ஓவியங்களும் அவ்வோவியங்களைப்பற்றிய பல பேரறிஞர் களின் அரிய சிறந்த கருத்துக்களும் கொண்டு திகழும் அரிய கருவூலம். மேலுறையில் கூத்தப்பெருமான் திருவுரு திகழ்கின்றது.

இதில் திருக்குறட் பாக்களின் கருத்தோவியங்களும், அகநானூறு புறநானூறு சீவகசிந்தாமணி போன்ற அருங்கலைப் பேழைச் செல்வங் களின் கருத்தோவியங்களும் கண்கவர் வனப்பிற்றாய்த் திகழ்கின்றன. முதற்கண் நம் தமிழகச்சான்றோர் வள்ளுவர் திருவுருவும் உலகப் பெரியார், காந்தியடிகளின் திருவடிவும் இந்தியநாட்டு முதலமைச்சர் நேருவின் திருவுருவவடிவும், நம் சென்னைமாநில முதலமைச்சர் காமராசர் திருவடிவ ஓவியமும் திகழ்கின்றன.

பாலு சகோதரர்களின் கைவண்ணங்கள், கலைக்கதிர் வண்ணங்க ளாய்—ஓவியமாய்—காவியமாய்—இற்றைநாள் தமிழகத் தடத்தில் அரிய மலராய் மலர்ந்து நாடெங்கும் மொழிபெயர் நாடுகளினும்கூட வளத்துடன் கமழ்கின்றன; இது தமிழ்நாட்டின் நற்பேறேயாமென மகிழ்கின்றோம்.

குறளோவியத்தில் 'உள்ளினேன் என்றேன்' என்னும் கருத் தமைந்த பாவுக்குக் காதலன் காதலிகளின் மனத்துன்ப, இன்ப உருக்க நிலைகள் முகத்தினும் கைகால்களின் செயற்பாடுகளிலும் உயிர்க்களை யுடன் அமைந்த உருவோவென எண்ணுமாறு திகழ்கின்றன. இன்னும் 'அல்லற்பட்டு ஆற்றாது' என்ற குறட்பாவுக்கும் 'இரந்தும் உயிர்வாழ்தல்' என்ற குறட்பாவுக்கும் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்ற குறட்பாவுக்கும் 'கைவேல் களிற்றொடு' என்ற குறட்பாவுக்கும், இன்னும் இன்னனபோன்ற குறட்பாக்கட்கும் அவ்வக் கருத்து நயங்கள் அவ்வவ் வடிவங்களில் மெய்ப்பாட்டுணர்ச்சிகள் தோன்ற எழுதிய ஓவியக்காட்சிகள் உள்ளமுருக்கும் உயர்தகையன. இக்கருத்துக்களமைந்த பாக்களை வடித்தெடுத்துக்கொடுத்த அறிஞர் களும் போற்றற்குரியர்; கட்டுரையாளர்களும் நன்மதிப்பிற்குரியர்.

அகநானூற்றுக் களிற்றியானைநிரைப் பகுதியில் இசைக்கு இசைந்து தினைக்கதிர் உண்ணாது உறங்கும் யானை உருவும் அதைப் பாரண்மீது நின்று தன் கூந்தல் காற்றில் அவிழ்ந்து தொங்கி உலர நிற்கும் கொடிச்சியின் அழகுருவும் நம் தமிழகச் சான்றோர் நாகரிகப் பண்பை உயர்த்தும் சான்றாக அமைந்துள்ளன. புறத்தில் கொண்ட வாளொடு படுபிணம் பெயர்த்து தன் வீரமகன் இறந்த கிடக்கைகண்டு 'உவகைக் கலுழ்ச்சி' கொள்ளும் வீரத்தாயின் மாண்பும் நம் பழந் தமிழர் உருவ அமைப்பொடு தீட்டியுதவிய பாலு உடன்பிறப்பாளர் கைகளே கைகள்.

இன்னும் திருவாசகத்தேன், சிலப்பதிகாரச் செஞ்சொல், இவை களைக்காட்டும் ஓவியங்கள் அன்பர்கட்கு அமிழ்தாக இறையன்பில் கூட்டுவிப்பதாகவும் கலைச் சுவைஞர்கட்குக் களிவிருந்தாகவும் அமைந் துள்ளன.

'அல்லையாண்டமைந்த மேனி' எனக் குகன் வாய்மொழியாகக் கம்பர் காட்டும் இராமாயணப்பாட்டுக்கு இராமபிரான் சீதை இவர்கள் புல்லும் கல்லும் பொதுளிய தரைப்படுக்கையில் கண்டுயிலும் காட்சியும், பிறந்தானும் உளனென்னப் பிரியாத இலக்குவன் உறங்காது விழித்தகண் வேல்கொண்டெறியினும் அழித்திமையாது நிற்கும் அன்பும் தறுகண்மையும்கொண்ட உருவ அமைப்பும் 'அஞ்சினள் அஞ்சியன்னம்' என்னும் பாட்டில் அயோத்தியேந்தலை ஆரத்தழுவிக் கொண்ட சீதையின் அன்பின் அகலத்தை அளந்துகாட்டும் ஓவியமும் கண்டவர் கண்ணையும் கருத்தையும் ஈர்த்து ஈர்த்து என்பையும் உருக்கும் நிலையினவாக வுள்ளன.

இன்னும் உலகப் பெரியாராகிய காந்தியடிகளின் வாழ்க்கை ஓவியங்கள், வாளோடு முன்பிறந்த மூத்தகுடியினரான வீரபாண்டியக் கட்டப்பொம்மு, வீரமங்கை முத்துவடிவுபோன்றவர்களின் ஓவியங்களும் பிறவும் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்கின்றன. மீண்டும் நம் தமிழகத் தலைவர்களான, திரு. வி. க; ஈ. வே. ரா; வ. உ. சி; கல்கி போன்றார்களின் இயற்கை ஓவியங்களும் சிறந்து திகழ்கின்றன.

இத்தகைய அரிய கலைக்காட்சி நிறைந்த ஓவியங்களை நம் தமிழகத்துக்கு—தாம் பிறந்தநாட்டுக்கு—நன்றியாகக்—கடப்பாடாக—உதவிய பாலு உடன்பிறப்பினர் பன்னெடுங்காலம் நெடிது வாழியர் என வாழ்த்துகின்றோம்.

இவர்களால் கலையும் காவியங்களும் ஓவியங்களும் புத்துயிர்பெற்றெழுந்தன என்றால் மிகையாகாது. இவ்வோவியங்களால் கலையே இன்னதென்றுணரவறியாத அறிவுமதுகை பெறாத மக்களும் திருக்குறட் கருத்தை—அகநானூற்று அகத்தை—புறநானூற்றுப் புதுமையை—சிந்தாமணித் திறத்தை—எளிதில் அறிந்து சுவைக்க உதவிய சீரிய சூரியர் எனக்கூறின் அது புகழ்மையாகாது. இவர்கள் இன்னும் இன்னனபோன்ற பாக்களுக்கு ஓவியந்தீட்டின், நம் நாடு கலையும் பண்பும் வீரமும் பெற்று முன்னாள்போல் நன்னாள் இன்பம்பெற்று இலகும்; அவ்வாறே ஓவியம் உருவாக்குவாராக.

இக்கலைஞர்கள் இருவரும் பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்று இன்னன தொண்டுகள் பல செய்து சிறந்தொளிர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(உ) குறள் நெறி

[ஆசிரியர்: பேராசிரியர் சி. இலக்குவனார், எம். ஏ. எம். ஓ. எல். வெளியிட்டோர்: இலக்கியப்பண்ணை, புதுக்கோட்டை. விலை ரு. 1-4-0.]

திருக்குறள் உலகப் பொதுநெறி உணர்த்தும் அரியநூல். அதன் சிறப்பை யெடுத்து விளக்குவதே இந்நூல். நாட்டு இயல், நல் அரசு இயல், கல்வி அறிவுப்பேறு இயல் என மூவகையாக வகுத்துக்கொண்டு நாடு இன்ன நிலையில் இருத்தல்வேண்டும்; அதற்கு நல்லரசு இன்ன நிலையில் அமைதல்வேண்டும்; அங்குக் கல்வியறிவுப்பேறு பெறும் முறை இவ்விவ்வாறு நிகழவேண்டும் என, குறட்பாக்களைக் கொண்டே விளக்கி எழுதியுள்ளனர். எளிய இனிய நடையில் அமைந்த இச் சிறு நூல், திருக்குறளைக் கற்றற்குப் பெருந்துணைபுரியும் அரிய நூலாக அமைந்துள்ளது.

(ரு) உவகை உள்ளம்

[பக்கங்கள் 90. ஆசிரியர்: சுவாமி பிரான்சிஸ் மோறய்ஸ், சேண் பகனூர், மதுரை மாவட்டம். வெளியிட்டோர்: கஸ்தூரி பதிப்பகம், உறையூர்—திருச்சிராப்பள்ளி. விலை ரூ. 1-8-0]

இந்நூலில் அர்ப்பணம் முதலாக கவிதைத்திறன் ஆய்வு இறுதியாக, சச தலைப்புக்களில் சீரிய கூரிய தீஞ்சொல் வளம்நிறைந்த அரிய செந் தமிழ்ப்பாடல்களின் தொகுப்புக்கள் அடங்கியுள்ளன. பாட்டுக்கள் கருத்து நிறைந்தன. ஆனால் பாடல்களில் அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிகளில் வல்லினம் மிக வேண்டிய இடங்களில் மிகாது இயல் பாக உள்ளது, தமிழ் மரபுக்கு ஒவ்வாதது. வேற்றுச் சொற்களும் வடமொழியெழுத்துக்களும் இடையிடையே வருவது தமிழின் மர பொலிக்கு ஒவ்வாதது. இவைகள் அடுத்த பதிப்பிலாவது திருத்தப் பெறுமென நம்புகின்றோம்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) தமிழ்மொழி வளர்ச்சிக்கு நன்கொடை

சொல்லின் செல்வராகிய பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை யவர்கள் தாம் எழுதிய 'தமிழின்பம்' என்னும் நூலுக்குப் பாரத அரசினர் ரூ. 5000 பரிசாக அளித்தனர். அஃதோடு தாம் ரூ. 10000 சேர்த்து ரூபா பதினையாயிரம் நம் தமிழ்வளர்ச்சிக்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு வழங்கியுள்ளனர். ஆசிரியரின் தமிழ்ப் பற்றினைப் பாராட்டுகின்றோம்.

(உ) தமிழில் அருச்சனைக்கு முட்டுக்கட்டைகள்

சேலம் குகை திருக்குறட் கழகம் 14-ஆம் ஆண்டு விழா, பேராசிரி யர் டாக்டர் திரு. இராசமாணிக்கனார் தலைமையில் 11, 12-6-55-ஆம் நாட்களில் நிகழ்ந்தது. பல பேரறிஞர்கள் திருக்குறளின் பெருமை பற்றிச் சொற்பொழிவாற்றினர். அதிற் சொற்பொழிவாற்றிய திரு வாசகமணி பாலசுப்பிரமணியம் பேசுங்கால் தமிழில் கோவில்களில் வழிபாடு செய்தலைக் குறித்து, 'அருச்சனை என்பது வடமொழி மந்தி ரத்துக்கே உரியதென்றும் பிரார்த்தனைதான் தமிழில் இருத்தல் வேண்டுமென்றும் இது வீண்வாதத்தைக் கிளப்பி நாத்திக வளர்ச்சிக்கு உதவி செய்வதாகுமென்றும் கூறியுள்ளனர்.

குறிப்பு: அருச்சனை வடமொழி மந்திரத்துக்கே உரிய தென் கிறார். வடமொழி ஒன்றே மந்திரமொழிக்கு உரியதானால் எல்லா மொழியினரும் வடமொழியிலன்றோ மந்திரம் ஓதவேண்டும். பொருள் தெரியாத மொழியில் கூறுவது நல்லதா? பொருள்விளங்கும் மொழி யில் கூறுதல் நல்லதா? என்று மணி சிறிது எண்ணிப்பார்க்க வேண்டு கின்றோம்; இவர் நாத்திகத்தை வளர்க்கின்றாரா? தமிழில் வழிபடு வோர் வளர்க்கின்றார்களா? இவர்போன்ற முட்டுக்கட்டைகள்தான் தமிழிசை இயக்கம் வந்தபோது தெலுங்குக்குத்தான் இசை உண்டு; மற்ற மொழிகளுக்கு இல்லையென்று பிதற்றினர். அவ்வாறே இப் போது அருச்சனையை எதிர்க்கின்றனர். மந்திரம் என்பது வெறும் சந்தை இரைச்சல்போன்ற ஒலியல்ல. பொருளுள்ள சொற்கள்தான்.

பொருளற்றதென மணி மயங்கவேண்டா. ஆகவே, வழக்கில் உள்
மொழியில்—சாவாது நாட்டிலும் ஏட்டிலும் வழங்கும் மொழியில்—
அதினும் செஞ்சொற்றமிழில்—இறைமுன் மலர்தூவி வேண்டுவ
குற்றமா? நல்ல கண்கொண்டு ஆராய்ந்து மணி, தமிழ்மொழிக்கு ஆ
க்கந்தரும் செயலில் ஈடுபட வேண்டுகின்றோம். தமிழ் அருச்சனை
எதிர்க்கும் பிற்போக்காளர்கள் யாவருக்கும் இதுவே தடையற்ற விடை

(௩) அவ்வந்நாட்டு மொழிகளில் கல்வி கற்பித்தல்

அந்தந்த வட்டாரங்களில் வழங்கும் மொழிகளே பிள்ளைகளுக்கு
கற்பிக்கும் மொழியாக இருத்தல் வேண்டுமென்றும் கலைச்சொற்க
சம்பந்தமாக இரண்டு வெவ்வேறு கருத்துக்கள் தெரிவித்திருப்பதா
வும் வழங்குஞ் சொற்களை அவ்வாறே வைத்துக் கொள்வது; அன்
அதற்கேற்ற சொற்களை ஆக்கிக்கொள்வதென முடிவு செய்து, அத
கோர் அறிஞர் குழு சென்னை அரசியலார் அமைத்திருக்கின்றன
ரென்றும் அதற்குச் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் இலட்
மணசாமி முதலியார் அக்குழுவின் தலைவராக இருப்பாரென்று
தெரிகின்றது. கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் 23-6-55-ஆ
நாள் பல அறிஞர்களின் முன்னிலையில் இது குறித்துக் கலந்த
பேசினர்.

குறிப்பு: அரசினர் வட்டார மொழிகளில் கல்வி கற்பிக்க முன்
வந்திருப்பதும் கலைச் சொற்களை ஆக்க முன்வந்திருப்பதும் போற்ற
குரியது; இவ்வாறு வருமானல் நம் தமிழ்மொழியும் அரசியல் மொழ
களில் ஒன்றாக மேம்பட்டுத் திகழுமென மகிழ்கின்றோம். கலை
சொற்களை அப்படியே கொள்ளாது தத்தம் மொழிகளில் பெயர்த்துக்
கொள்வதே கருத்து விளக்கந் தெரிதற்கு ஏற்ற முறையாகும். பள்ளி
களில் தமிழைக் கொணர்தற்குமுன், ஆட்சிமொழியாகக் கொண்டு
வர அரசியலாளரை வேண்டுகின்றோம்.

(௪) இந்திய முதலமைச்சர் நேரு ரஷ்யச் செலவு

இந்திய முதலமைச்சர் பண்டித சவகர்லால் நேரு அவர்கள்
5-6-55-ஆம் நாள் தம் புதல்வி இந்திரா காந்தியுடன் பம்பாயிலிருந்து
'இராணி ஆவ் அசந்தா' என்னும் பெயருடைய வானூர்தியில்
சோவியத் ரஷ்யாவுக்குப் புறப்பட்டு செக்கஸ்லவேகிய தலைநகராகிய
பிராக் என்னும் ஊரில் இறங்கி ஓய்வு எடுத்துக்கொண்டு, சோவியத்
தலைமையமைச்சர் புல்கானின் அனுப்பிய வானூர்தியில் ஏறிச்சென்று
7-6-55-இல் மாஸ்கோபோய்ச் சேர்ந்தார். அங்கு மிகச் சிறப்பான
வரவேற்பு நிகழ்ந்தது. செஞ்சேனையின் நன்மதிப்பு அணிவகுப்பு
ஏற்பாடாகியிருந்தது; அதைப் பார்வையிட்டார்; மகிழ்ந்தார். நேரு
இறங்கிய வானூர்தி நிலையத்திலிருந்து புறப்படுமுன் இந்திமொழியில்
தம் நன்றியறிதலைத் தெரிவித்தார். அப்போது இருநாட்டு உறவும்
வலுப்பெறுமென்று தாம் நம்புவதாகக் கூறினர். அவர் மேல்நாட்டுச்
செலவு, நம்நாட்டுக்கு ஆக்கத்தையும் சிறப்பையும் தருவதாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.



சிலம்பு ௨௯	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௬, ஆடி. ஆகஸ்டு, 1955.	பரல் ௧௨

தமிழகத்தில் இந்திமொழி

பொதியிற் றென்றல் என்று தோன்றியதோ அன்றே தோன்றிய பழமையுடையது நம் தீந்தமிழ்; அம்மொழி தென்னவன் முச்சங்கத் தொட்டிலில் வளர்க்க வளர்ந்து நாடெங்கும் விளையாடியது; சேர சோழர்கள் பாண்டியரோடு துணைநின்று வடநாடுவரை வளம் பெற்றிருந்தது நம் செந்தமிழ்.

முடியுடை மூவேந்தர்களின் ஆட்சி நிலைகுலைந்தபின், வேற்று நாட்டினர் கைக்கு நம் தமிழகம் மாறியது. அம் மொழிபெயர் நாட்டு மன்னர்கள் தம் தம் மொழிகளை நம் தமிழகத்தில் திணித்து அரசியல் மொழியாக ஆக்கினர்; அதனால் தமிழ் மொழி வளர்ச்சி குன்றித் தாழ்ந்தது; மொழி வளர்ச்சி குறையவே அதன் தொடர்பான இசை கூத்துக்களும் சிற்பம் முதலிய நுண்கலைகளும் தேய்வனவாயின. தம் தாய்மொழியான தமிழ் கற்பதால் அரசியலில் மதிப்புக் கிட்டாதென அறிந்த நம்தமிழர், அரசியலுக்கு வந்த வேற்றுமொழிகளைக் கற்று அதில் பட்டங் ள் பலபெற்றுக் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைவரை அரசியல் லுவல்களை மேற்கொள்ளலாயினர். இவற்றால் இங்குத் தமிழ்த் ரைதான் இருந்ததன்றித் தமிழ்மொழி தன் உருக்குலைந்தும், தம் நாட்டுப் பண்புகள் யாவும் திரிபுற்று வேற்றுப் பண்புகள் கலந்தும், தமிழகம் தன் தமிழ் நாகரிகத்தைக் கெடுத்துத் தொலைக்கலாயிற்று.

நம் தமிழகத்தை நவாபு ஆண்ட காலத்தில் தமிழிற் கலந்த உருதுச் சொற்களான கிஸ்தி வசூல் வஜா கஜானா சிரஸ்தார் தாசில்தார் போன்ற பலவும் ஆங்கில ஆட்சி இருநூ[illegible]ண்டுகள்வரை

நிலைபெற்றிருந்தும் இன்னும் மாற்றமுடியவில்லை. அப்பால் ஆங்கிலேயர் வருமுன் வேற்றுமொழியினர் வந்தனர்; ஆண்டனர்; அவரவர்கள் மொழிகள் வளர்ந்தன; கலைகள் ஓங்கின. தமிழ்மொழி பகலவிளக்குப் பட்டாங்கு மூலையில் ஒடுங்கி ஒளி குன்றிற்று. ஆங்கிலேயர் வந்து நம் நாட்டை ஆண்டபின் நங் கருந்துரைகளும் வெண்துரைகளாக மாறினர்; அதைப் பற்றிக் கேட்க வேண்டா; காப்பிக் குடியும் ஊது புகையுமே சாலும்! அவர் ஆண்டதைவிட அவர் மொழி இன்னும் ஆள்கின்ற கொடுமை பெரிது! பெரிது!

ஆங்கிலேயர் நம்நாட்டை விட்டுவிட்டுப்போய் நம் நாடு விடுதலைபெற்று உரிமையாகிக் குடியரசு நாடாகத் திகழ்ந்து எட்டாண்டுகள் ஆயின. இன்னும் ஆங்கிலேயத்துக்கு இருக்கும் மதிப்புச் சிறிதும் குறையவில்லை. பி.ஏ. பட்டம் ஆங்கிலேயத்தில் பெற்ற ஒருவருக்கும் தமிழில் புலவர் (பண்டித) பட்டம் பெற்ற ஒருவருக்கும் அறிவுத்திறனை அளந்தால் தமிழ்க் கற்றவரின் அறிவே மிகுதியாக இருக்கும், தம் தாய்மொழி ஆதலால். ஆனால் அவர்கள் செய்கின்ற ஆசிரியத் தொழின்மைக்குத் தமிழைக் கற்ற குற்றத்திற்காக ஒருவருக்குத் திங்கள் ஊதியம் குறைவு. ஆங்கிலேயம் பயின்ற மற்றவர் மேன்மைக்காக ஊதியம் கூட ஒருபங்கு மிகுதி. இவ்வாறிருந்தால் தமிழை எதற்காகக் கற்பான்?

இவ்வாறு ஆங்கிலத்தின் இடமே மாற்றவொண்ணாத நிலையில்—ஆங்கிலேயனை மகன் இல்லாததோன்றன்றி அவன் மொழி இன்றும் நம்மை ஆட்சி செலுத்துகின்ற நிலையில்—நாளையும் செலுத்துகின்ற நிலையில்—தமிழ் அன்றும் இன்றும் ஒன்றே

இஃதிவ்வாறாகப் போதாக்குறைக்கு வடநாட்டினின்றும் இந்தி தென்னாட்டின்மீதும் ஏனைய பல்வேறு மொழிகள் வழங்கும் நாடுகளிலும் படையெடுத்து வந்துள்ளது. ஆங்கிலேயம் இருக்கும் இடத்தில் தனக்குரிய இடஞகை - ஆளும் மொழியாக வந்துகொண்டிருக்கின்றது; கரையைத் தகர்க்கும் நீரலைபோலச் சிறிது சிறிதாக ஆங்கிலேயம் இருக்கும் இடத்தினின்றும் அதை அகற்றிவிட்டுத் தான் மேலேறி ஊர்ந்து வருகின்றது. காட்டாக, புகைவண்டி நிலையங்கள், அஞ்சல் நிலையங்கள், முறைமன்றங்கள் போன்ற இடங்களில் தலையில் ஏறிக் கொண்டிருக்கின்றது. அஞ்சல் அட்டை (Card) கூடு (Cover) முதலியவற்றிலும் அது முதலிடம் பெற்று வருகின்றது. இன்றும் அம்மொழி, கல்லூரிகளிலும் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பெற்று வருகின்றது; வடநாட்டுப் பொதுஅரசியலார், இந்திமொழி கற்

றோர்க்குத்தான் உத்தியோகம் வழங்கப்படுமென்று அறிக்கைக ளும், சுற்றறிக்கைகளும், பிறவும் வெளியிட்டு வருகின்றனர். அவர்களை நுங்கள் நாட்டு இந்தி மொழியை எங்கள் நாட்டுக்கு முந்தி விடுகின்றீர்களேயென்று கேட்டால், நாங்கள் கட்டாயப் படுத்தவில்லையே என்று கூறி, 'மெல்ல மெல்லப் பாயுந் தண்ணீர் கல்லும் உருகப் பாயும்' என்னும் பழமொழியைக் கடைப் பிடித்து வாயாரச் சொல்லி மறுப்பிச் செயலில் கொணர்ந்து காட்டுகின்றனர். இவர்கள் இந்தியை வலுவாக நடமாட விட வில்லையென்றால், அறிக்கைகள் விடுவானேன்? நம் தென்னாட் டுக்கு இரண்டாயிரம் இந்திப் புலவர்களை விடுப்பானேன்? ஆங் கிலங்கற்று இந்திமொழி கற்காத நம் தென்னாட்டிற் பிறந்த தில்லிச் சட்ட அவை உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளாத வகையில் வடநாட்டு உறுப்பினர்கள் சட்ட அவைக் கூட்டத்தில் இந்தி மொழியில் முடிபுகளும், உரையாடல்களும் கிளத்துதல் என்ன காரணமெனக் கடாவுகின்றோம்? உருசிய நாட்டுக்குச் சென்ற நம் இந்திய நாட்டு முதலமைச்சர், அந்நாட்டுத் தலைவர் புல்கானின் வரவேற்புக்கு நன்றி கூறுங்கால் அவரறிந்த ஆங்கில மொழியில் அவர் அறியும்படி கூறாது இந்தி மொழியில் பேசிய தன் கருத்தென்ன? அவர் இந்தி அறிவாரா? இந்தியில் பேசுவது தான் மகிழ்ச்சியா? இங்கிலையை நேரு அறியாரா? அரசியல் நுட்பம் அறியாதவரா? இச்சென்னை ஆவடியில் கூடிய அனைத் திந்தியக் காங்கிரசு மாநாட்டில் வடநாட்டுத் தலைவர்கள் இந்தி மொழியில் பேசியது ஏன்? இவைகளைக் கேட்பின், பிரித் தாளும் கொள்கையுடையவர் தென்னாட்டார் என்பதா? அண் மையில் கூடிய சென்னைச் சட்டஅவை மேலவைக் கூட்டத்தில் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சு மணசாமி முதலியார் இது குறித்து வருந்திக் கூறியவை வெற்றுரவாரமா? அவர் கூறியவற்றை இதன் கீழே பொறித்துள் ளோம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரும் இம் மொழிபற்றிய தம் கருத்துரைகளைக் கூறியுள்ளனரே! அது தெரி யாத கூற்றா? அதனையும் ஈங்கே இதனடியிற் காட்டியுள்ளோம்.

ஆகவே, பொது அரசியலார் உடனடியாக எம் தமிழகத் தின்மீது கட்டாய இந்தியைத் திணிக்கும் வேலையைக் கைவிட்டு விட்டு, நம் தமிழ் மொழியை நம் தமிழகத்தில் ஆட்சிமொழி யாக ஆக்கி, நல்ல பெயரைத் தேடிக்கொள்ள வேண்டுகின்றோம்; தமிழ்மொழி ஒன்றே உலக முழுதும் ஆட்சி மொழியாகத் திகழத் தக்க இயற்கை வாய்ந்த மொழி யென்பதைக் கூற விழைகின்றோம்.

பேரறிஞர் ஏ. இலட்சுமணசாமி முதலியாரவர்கள் கருத்துரை:

4-8-55-இல் சென்னை மேல் சட்ட அவையில் கவர்னர் சொற்பொழிவின் மீது உரையாடல் நிகழ்ந்தது; அப்போது முதலியாரவர்கள் கூறியன:

"இந்திப் பிரச்சினையில் உறுதியான முடிவு காணாவிடில் உறுதியாகக் கிளர்ச்சியும் குழப்பமும் ஏற்படும். 'லோக் சபை'யில் ஆங்கிலம் தெரிந்த உறுப்பினர்களும் இந்தியிலேயே பேசுகிறார்கள். இந்தி தெரியாத தமிழக அங்கத்தினர்கள் எதுவும் புரியாமல் திணறுகிறார்கள். சபை நடவடிக்கைகளில் முழுதும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் அவர்களும் இந்தி கற்று ஆக வேண்டும். இந்தியைத் திணிக்க முயற்சிக்கவில்லை யென்று பேச்சு மட்டும் இருக்கிறது. எப்படி நம்புவது? மத்திய அரசியலாரின் ஊழியத்திலிருக்க விரும்புகின்றவர், இந்தி அறிந்தவராக இருக்க வேண்டும் என்ற யோசனை குறித்துப் பல்கலைக்கழகக் குழு, தனது கருத்தைத் தெரிவிக்கும்படி உள்நாட்டிலாகா மீண்டும் வற்புறுத்தி யிருக்கிறது. அப்போது சென்னைக்கு வேலைக்கு அனுப்பப்படும் மத்திய அரசினர் ஊழியர்கள், தமிழ் அல்லது, வேறு தென்மொழி அறிந்தவராக இருக்க வேண்டுமென்று சென்னை மாநில அரசியலார் வற்புறுத்தினால் தவறென்ன? எம் மொழியையும் நாம் வெறுக்கவில்லை. சென்னைக் கல்லூரிகளில் இந்தி கற்பிக்கப்படுகிறது. ஆனால் எம் மொழியும் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுவதையே மறுக்கின்றோம்; மிகவும் எதிர்க்கின்றோம். அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதென்ன? உண்மையில் நடப்பதென்ன? அறியாமையில் மூழ்கியிருக்கும் மக்களுக்குக் கல்வி யறிவைப் புகட்டுவது முதன்மையா? அல்லது இந்தி கற்றுக் கொடுப்பது முதன்மையா? இரண்டாயிரம் இந்தி ஆசிரியர்களை இங்கு அனுப்புவதில் அவசர மென்ன? ஆங்கிலத்தைப்போல் இந்தியும் தென்னாட்டுக்கு அன்னிய மொழிதான். ஆகவே, இப் பிரச்சினையில் உறுதியான முடிவு காணவேண்டும். இன்றேல் கிளர்ச்சியும் குழப்பமுமே ஏற்படும். இந்நிலையில் நாட்டின் ஒற்றுமையைப் பற்றிப் பேசுவதிற் பொருளேயில்லை. பெரிய செயல்களில் ஒற்றுமை, சிறிய செயல்களில் வேற்றுமை. ஆனால் அனைத்திலும் ஒன்றுபட்ட நிறைந்த மனப்பான்மை. இதுவே, இன்று நமக்குத் தேவை. பண்டித நேருவால்தான் இன்று நமக்குப் பெருமை; அவரையே கேட்கிறேன்; இந்தி நிலைமையில் நல்லபடி கவனம் செலுத்துங்கள்."

ெவவாறு கூ

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்கள் பிறகு பேசுகையில் இந்தி மொழிபற்றிக் கூறியன:

"இந்திய அரசியல் கூட்டுக் குழு மறைமுகமாக இந்தியைப் புகுத்த முயலுவதாயும் அதன் வழியாகச் சிறந்த தென்னிந்திய

மக்களுக்கு அக் குழுவில் இடமில்லாது போய்விடுமென்றும், ஆத லால் இந்தியைக் கற்பிக்கும் மொழியாகவோ அல்லது அதை இந்திய அரசியல் கூட்டுக் குழுவின் தேர்வுமொழியாக ஆக்குவ தையோ தாம் ஆதரிக்கவில்லை யென்றும், இதனால் இந்தி படிப் பதைத் தாம் ஆதரிக்கவில்லை யென்று கருதக்கூடா தென்றும் அதை விருப்பப் பாடமாக்கி அனைவரும் படிக்க வழி செய்யலா"

மென்றும் கூறினர்.

இவ் விருவரும் இரண்டு தனித்தனிப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள; இருவரும் ஆங்கிலத்தில் கற்றுத்துறை போய பேரறிஞர்கள். இவ் விருவருள், முதலியார் ஆங்கிலத்தில் பேசுந் திறமையில் உலகப் பெருமை பெற்ற சீரியர். மற்றொரு வர் ஆங்கிலத்தில் பெரும் பட்டம் பெற்று அத்துறையில் அறிவு நிரம்பிய நேரியர். இவர்களின் கூற்றுக்களைக் காய்தல் உவத்த லின்றி ஆய்ந்து அரசியலார், தமிழகங்கூறும் நலனுரைக்குச் செவி சாய்த்துக் கேட்டு நல்லன செய்ய முன்வருவார்களென நம்புகின்றோம்.

பெரியார் ஈ. வே. ரா. வின் கொடியெரிப்புப் போர்

மத்திய அரசியலார் நம் தென்னாட்டில் இந்தி மொழியை வலுக்கட் டாயமாகத் திணித்துப் பாடமாக வைத்திருப்பது கூடாது என்பதைக் காட்டுதற்காகப் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள், நம் இந்திய நாட்டுக் கொடியை நெருப்பிட்டுக் கொளுத்துவதாக அறிக்கை வெளியிட்டிருந் தனர். அதைக் கொளுத்தும் நாளும் 1-8-55 என்று குறிப்பிட்டிருந்தார்.

பின்னர் நம் சென்னைமாநில முதலமைச்சர் தில்லி நகருக்குச் சென்றிருந்தபோது நம் இந்திய நாட்டு முதலமைச்சர் நேரு அவர்களைக் கண்டு உரையாடினராம். அப்போது இது பற்றிய கருத்துக்களைக் கூறினராம். 'அவ்வாறாயின் இனி இந்தியைக் கட்டாயப்படுத்த மாட் டாது' என்று அறிக்கை விடுமாறு நேரு கூறியதாகவும், அதன் பின்னரே முதலமைச்சர் காமராசர் இந்தியைப் பற்றிய அறிக்கையை வெளியிட்டனராம். அதை வெளியிடுமுன் பெரியாரிடம் கொண்டு வந்து காட்டி இவ்வாறு வெளியிடலாமா? எனக் கேட்டனராம். பெரியார், சில திருத்தங்கள் சொல்லி அதன்படி இருந்தால் போது மென்றனராம். அதன் பின்னரே கொடிக் கொளுத்துதல் போராட் டத்தை ஒத்திவைத்தனர்.

அதில் 'இந்தி திணிக்கப்படாது என்ற உறுதியை நடைமுறையில் காணவேண்டுமென்று கூறி, இப் போராட்டத்தை ஒத்திவைக்கிறேன்' என்று அறிக்கையில் விளக்கங் கூறினர். பின்னரே கொடியெரிப்புப் போர் நின்றது.

சேரர் மரபு

[வித்துவான், திரு. சு. குமாரஸ்வாமி ஆச்சாரி, எம். ஏ., மயிலம்.]

சேரர் தமிழ்நாட்டு மூவேந்தருள் ஒரு மரபினர். சேர சோழ பாண்டியர் என வேந்தரைக் கூறும்பொழுது முதலில் வைத்துக் கூறுவதனாலேயே அவர்களது தொன்மை உணரப் படும். சங்க காலத்துச் சேர மன்னர்களைப் பற்றி இலக்கியங் கொண்டு நாம் ஓரளவுதான் உணரமுடிகிறது. மரபைப் பற்றி ஒன்றும் உணர இயலவில்லை. சேர நாட்டில் செருமான் என்ற ஒரு சிறு கூட்டத்தினர் இருக்கின்றனர். அவர்கள் சேரமான் மரபினராதல் வேண்டும் என்கின்றனர் சிலர். இவர்கள் நாய ரினத்தில் ஓர் பிரிவினராவர். புலையர் என்ற ஒரு பிரிவினர் ஆங்குண்டு. அவர்கள், துரியோதனனுக்குப் போரில் துணை செய்ததனால் இழிநிலை யடைந்ததாகக் கூறுகின்றனர். நாயர் நாக மரபினர் எனக் கருதப்படுகின்றனர். ஆதலின் சேரரது மரபினை ஆய்வாம்.

சிங்களம், சாவகம் முதலியன நாக நாடுகள் எனக் குறிக்கப் படுகின்றன. புத்தர் தமது மதத்தினைப் பரப்பச் சிங்களத்துக்கு வந்தபோது ஆங்கிருந்த இயக்கர்கள் (Yakshas) அவரை எதிர்த்தனர். ஆதலின், இயக்கர்கள் வாழ்தற்கியலாதபடி புத்தர் மழையில்லாது செய்தார். பின்னர் அவர்களைக் கிரித்வீ பத்திற்கு (மலையாளத்திற்கு)ச் செல்லும்படி கட்டளையிட்டார். அவ்வாறே அவர்கள் சிங்களத்தை விட்டகன்றனர். நாகர்கள் புத்தரொடு உறவு கொண்டனர். புத்தரோடு வந்த இந்திரன் அவர்களிடம் இராஜாயதனவிருட்சத்தைத் தந்து சென்றான். நாகர்கள் அம் மரத்தினைப் போற்றி வளர்த்தனர்; புத்த சமயத் தைப் பின்பற்றினர்; இந்திர வணக்கத்தைக் கைக்கொண்டனர். அந்நாளிலிருந்து இலங்கை வரலாற்றில் நாகரும் மறைந்தனர். சிங்களத்தில் மகதர்கள் கங்கைச் சமவெளியிலிருந்து குடியேறிய தற்கு முன்பே இந்தியாவிலிருந்து குடியேறியவர்கள் நாகர்கள் எனச் சிங்கள வரலாற்றாசிரியர் பார்க்கர் (Parker) பகர்கின்றார். நாகர்கள் முதன் முதலில் வாழ்ந்த இடம் இந்தியாவின் தென் கோடியே என்பர்.[1]

மலையாளப் பகுதி, மாலவல்லி, வனவாசியைச் சூழ்ந்த பகுதி நாக கண்டம் என வழங்கப்பட்டதுண்டு. மலையாள வாசிகளில் ஒவ்வொரு குடும்பத்தினரும் நாகத்தை வணங்கி

1. Ancient Ceylon by Parker.

வருவதும் இதனை வலியுறுத்தும் என்பர். கேரளம் பரசுராம ரால் அமைக்கப்பட்டது எனக் கூறுகிறது அந்நாட்டு வரலாறு. பரசுராமர் கேரளத்தில் நம்பூதிரிப் பிராமணர்களைக் குடியேற் றியபோது நாகர்கள் அவர்களை எதிர்த்தனர். நாகர்களை அவர் களால் வெல்லமுடியவில்லை. பரசுராமர் அந்நாகர்களுக்கு நாட்டி லோர் பகுதியைத் தந்து சமாதானம் செய்துகொண்டார். நம்பூதிரிகள் நாக மகளிர்களை மணந்துகொண்டனர். ஆதலின், அமைதியாக வாழ்ந்து வந்தனர். இவ்வாறு பிராமணர்களே நாட்டை ஆண்டு வந்த காலத்து ஆட்சியில் மாறுபாடு ஏற்படவே ஆட்சி முறையினை மாற்றியமைத்தனர். அரசியலவையின் முதல்வர் நாகமரபினராயிருத்தல் வேண்டும். அவர் பன் னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும். ஏனையவர் பிராமணர்கள் மூன்று ஆண்டுகளுக் கொருமுறை தேர்ந்தெடுக்கப்படவேண்டும். முதல்வன் பன் னிரண்டாண்டுகளுக்கொருமுறை தேர்ந்தெடுக்கப்படுதலின் நாட் டில் கிளர்ச்சி ஏற்பட்டது. அரசியலவையைச் சார்ந்த நாடு வாழிகள் (Raksha Purushas) ஐவரும் ஒரு கட்சியாக, நாட்டு மக்கள் ஒரு கட்சியினராக இருசாரார்க்கும் பூசல் எழுந்தது. கொங்கு நாட்டு மன்னனொருவன் இருசாராருக்கும் உதவி செய்து வந்தான். அவன் ஒருவருக்குதவி செய்வது பிறருக்குத் தெரியாதவாறு ஒழுகிவந்தான். இருகட்சியினரும் அயர்ந்து நின்றனர்; ஒற்றுமையாகவே வாழ எண்ணினர்; தங்களுக்கு ஓர் அரசனைப் பிற நாட்டிலிருந்து கொண்டுவரத் துணிந்தனர். போரில் தங்களுக்குதவி செய்த மன்னனையே நாடினர். அவனும் இணங்கினான். அவன் பாணவர்மன் உதியன் சேரலாதன் எனப் படுவான்; அவன்கேரள நாட்டு மன்னனாக ஆனான். அவன் சேர நாடு ஆண்ட மகாபலியின் மரபில் வந்தவனாதலின் பாணவர்மன் எனப்பட்டான். பிராமணர்களது ஆட்சியில் அம்மரபு அரசிழந் திருந்தது; மீண்டும் வீறுகொண்டெழுந்தது; இச் சேரலாதன் புறநானூற்றில் குறிக்கப்படும் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என்பர். புறநானூற்று மூன்றும் செய்யுள் குறிக்கும் ஐவரை யும் நூற்றுவரையும் நாடுவாழிகளாகவும் குடிமக்களாகவும் கொள்ளின் அச்செய்யுள் பாரதப் போரினைக் குறிப்பதாகக் கொண்டு இடர்ப்படவேண்டியதில்லை. உதியன் சேரமன்னனாக ஆனது கலி 2988-ஆம் ஆண்டு என்பர். இவன் காலத்து வஞ்சிமா நகர் என்பது மகோதயபுரம் எனத் தன் பெயரால் வழங்கியது. இவ்வரலாறு கேரள சரித்திரம் கூறுகிறது.[1] இதனாலும் நாகர் கள் மலையாளத்துப் பண்டைய குடிகள் என்பது புலப்படும்.

1. Kerala Charitram by Krishnapisharoti.

மைசூர், குடகுப் பகுதியில் கிடைக்கும் சாசனங்கள், 'அந்நாட்டுப் பண்டைய குடிகள் நாகர்கள், பாம்பினை வணங்குபவர்கள், பெண்வழிச் சொத்துரிமையுடையவர்' எனக் குறிக்கின்றன. தென்னாட்டில் சமுத்திர குப்தன் படை எடுத்து வந்தபோது எதிர்த்தவர்களுள் கணபதி நாகன் ஒருவன். சிவஸ்கந்த நாக சதகர்ணியின் மகளை மணந்து ஓர் பல்லவன் காஞ்சியை அடைந்தான். சாதவாகனரது நாட்டினை அவர்களது வீழ்ச்சிக்குப்பின் சூட்டு நாகர் அடைந்தனர். கதம்பர்கள், கங்கர்கள், சாளுக்கியர்கள் தங்களை நாகர் மரபினர் எனக் கூறிக்கொள்ளுகின்றனர். துளுநாட்டு ஆளுபர் (ஆள்வார்)களும் நாக மரபினர் எனக் கூறப்படுகின்றனர். ஆதலின் மலையாளப் நாகர்கள் வாழ்ந்த இடம் என்பதிற் சிறிதும்

நாகர், நாக இலச்சினையையுடையவர்; தக்ஷகர் எனவும் கூறப்படுவர். உடையில்லாமல் சஞ்சரிப்பவராதலின் நாகர் எனப்பட்டனர். (Nangta - Bengali, Nanga—Hindustani = Naked). 'நோக்' (Nog) என்னும் சொல் திரிந்து நாகர் என வழங்குகிறது என்பர். 'நோக்' என்றால் நாகர் மொழியில் 'மக்கள்' எனப் பொருள்படும். மக்களாகக் கருதப்பட்டவர், மக்களது வளர்ச்சிக்குக் காரணமானவர் எனப் பொருள் கொள்ளப்படும். இது அவர்களது மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையிலிருந்து புலப்படும். நாகரிகம் என்னும் சொல்லும் இவர்களது வாழ்க்கையிலிருந்து தோன்றியது எனக் கருத இடனுண்டு. கச்சாரி மொழியில் நாகர் என்னும் சொல்லுக்கு வீரர் என்பது பொருளாம். இடையின் மேல் பகுதி மனித வடிவாகவும் கீழ்ப் பகுதி பாம்பின் வடிவாகவும் உள்ளவர் நாகர் எனக் கூறுவர். எக்காரணம் பற்றி இங்ஙனம் கூறினர் என்பது விளங்கவில்லை. சிங்களச் சிற்பங்களும் இந்தியாவில் அமராவதிச் சிற்பமும் நாகர்களை அவ்வடிவில் காட்டவில்லை. நாகத்தின் தலை போன்ற முடியினை அணிந்த மனிதர்களாகத்தான் அச் சிற்பங்கள் குறிக்கின்றன. நாகர்கள் இன்பம் நிறைந்த வாழ்க்கையினர் என்பதை நம் நாட்டுப் புராணங்களும் கூறுகின்றன. நாகர்கள் இந்தியாவில் பெரும்பான்மையான பகுதிகளில் வாழ்ந்தவர்; மன்னர்களாக நாடாண்டவர். நாகர்கள் அசுரர்கள்; நாகர்கள் வீழ்ச்சியடைந்தபின் அசுரரும் வீழ்ச்சியுற்றனர் என்பர்.[1] சுமேரு பகுதியிலிருந்து இந்திரனால் துரத்தப்பட்டு சால்மலித்வீபத்தை (Chaldia) அடைந்தனர் என்பர்.[2] இவர்கள் தார்த்தாரியர், தார்த்தாரிய மலைப்பகுதியில் வாழ்ந்தவர்.[3] தார்த்தராஷ்டிரன்

1, 3. Pre Buddhist India by Mehta

2. Kutavaka Jataka.

(Dhataratta—தார்த்தாரியத் தலைவன்) என்னும் சொல்லைத் திருதராஷ்டிரன் என்னும் சொல்லொடு ஒப்புநோக்குதல் தக்கது. தார்த்தாரியர் திராவிடர்களே என்பது வரலாற்றாராய்ச்சி முடிபாம்.

நாகர்களுள் ஆய் நாகர் (Ao Nages) ஒரு பிரிவினர்; திருந்திய வாழ்க்கையுடையவர்; அஸ்ஸாம், பர்மா பகுதியில் வாழ்பவர். 'ஆய்' என்ற சொல் 'தாய்' எனப் பொருள்படும். இவர்கள் தாயை இச் சொல்லால் அழைத்தமையின் இப்பெயர் பெற்றனர் என்பர்.[1] (Retes, Assam—Syam—(Saiyam)—Aham=Tas) நந்தமிழ் நாட்டில் ஆய் மரபினர் இம்மரபினரேயாவர். ஆய் அண்டிரன் இலிங்க வழிபாட்டொடும் நாகத்தொடும் தொடர்பு கொண்டிருப்பது நோக்கத்தக்கது. ஓய் (Oyo) என்ற சொல்லும் தாய் எனப் பொருள்படும் என்பர். நல்லியக்கோடன் இம்மரபினனாவன். ஓய் மரபு நாகர் மரபு என நச்சினார்க்கினியர் சிறுபாணாற்றுப் படையில் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. இலங்கை வரலாற்றாசிரியராகிய திரு. இராஜநாயகம் அவர்கள் நாகர் விசுவகர்மர் என்பர்.

நாகர்களும் கச்சாரிகளும் ஓரினத்தவர் என்பர் வரலாற்றாசிரியர்கள்.[2] அஸ்ஸாமில் காமரூபம் என்னுமிடத்தில் அமைந்துள்ள காமாட்சி ஆலயம், இவர்கள் தேவி வணக்கமுடையவர், சாக்தர்கள் என்பதை உணர்த்துகிறது. காமாட்சி - காமாக்யா-காளியின் அம்சம், தாமசாரிமாயை என்பர். மலையாளத்துப் பகவதி வழிபாடு ஆங்கு நாகர்கள் வாழ்ந்தனர் என்பதை நன்கு புலப்படுத்துகிறது.

கச்சாரிகள் சீனா, திபேத் பகுதிகளில் வாழ்ந்தவர், பிரமபுத்ரா நதிப் பள்ளத்தாக்கில் வாழ்பவர். கச்சாரி, கச்சினகச்சி, கோச் மரபுகள் ஒரு மரபின் பிரிவுகளேயாம். சின் மரபினர் வாழ்ந்த இடம் சீனா.[3] கோச் மரபினர் வாழ்ந்த இடம் கோச், கோச் பீஹார் என வழங்கப்படும் கொச்சின் என்னும் நகரமும் அவர்கள் பெயராலேயே வழங்கப்பட்டதாகல்வேண்டும். கச்சி நகரம் கச்சி மரபினர் வாழ்ந்த இடமாகவேண்டும். இவர்கள் தமிழ்நாட்டுக் குடிகள் என ஹாட்ஜ்சன் (Hodgson) என்னும் வரலாற்றாசிரியர் கூறுகின்றார். கச்சார் நாட்டுப் பகுதியில் அழிந்து கிடக்கும் கட்டடங்கள் கச்சாரிகளது கட்டடக் கலை வன்மையை உணர்த்துகின்றன. கச்சாரிகள் திமாசா (Dimasa)

1. Ao Nagas of Assam by W. C. Smith.
2. History of upper Assam by L. W. Shakespear.
3. Living races of mankind by Hutchinson.

எனவும் வழங்கப்படுவர் திமாசா (Dimasa) என்றால் பேராறு களின் மக்கள் எனப் பொருள்படும்.[1] எனவே ஆறுகளுள்ள இடங்களில் பயிர்த்தொழில் செய்துவந்தனர் என்பது புலனாகும். இவர்கள் மலைப்பகுதியில் நீர்வளமுள்ள இடங் களில் அமைதியாக வாழ்ந்தவராவர். 'சேரமக்கள்' என்பதற் குத் திரு. கோபால் பணிக்கர் பயிர்த்தொழில் செய்பவர் (chera-dam, makkal-people=agriculturist) எனப் பொருள் கூறியிருப்பதும் நோக்கத்தக்கது. செரு என்னும் சொல், வயல் எனப் பொருள்படுதலும் கவனிக்கத்தக்கது. கோலேரிய மரபினராகிய முண்டர்களது மொழியில் செரு (cheru) என் னும் சொல் ஊர் (village) எனப் பொருள்படும். அச்சொல்லே கோலேரியருள்—முண்டர்களுள் வன்மைமிக்க ஓர் மரபினைக் குறிக்கும். கோசல, அங்க தேசங்களில் செருகுல மன்னர்கள் ஆண்டனர் என முண்டர் வரலாறு கூறுகிறது.[2] மதுகைடபன் ஓர் முண்டன். கங்காநதிக் கரையிலுள்ள அம்பிகோட் [Ambikot சேரம் (Cherum) எனப்படும் கோட்டை] செரு மன்னருக்குரியது. முண்டர் மொழியில் கச்சு (Kachua) எனில் ஆமை எனப் பொருள்படும். கச்சாரிகளது நகரத்துள் ஒன்று கமடாபூர் (Kamatapur), இறைவன் கமடேஸ்வரன். கமடம் என்பது ஆமை ஆதலின் கச்சாரிகள் முண்டர்களது இனத்தைச் சார்ந்தவராவர். சிங்போங்கா (Singbonga) என் னும் இறைவன் முதலில் ஆமை, நண்டு, அட்டை மூன்றையும் உண்டாக்கி, உயிர்களைப் பெருக்கிப் பிறகு மக்களைப் படைத்தார் என முண்டர்கள் வரலாறு கூறுகிறது. இவர்களது கொள்கை யின்படி முண்டர்கள் (கச்சாரிகள் - நாகர்கள்) உலகத்தில் முதன்முதலில் தோன்றிய மக்களாவர்.

கச்சாரி மரபில் இருபது பிரிவுகளுண்டு. அவர்களுள் சுவர்க்கர் (Swarga āroi) என்பார் ஒரு பிரிவினர். சேரர்கள் வானவர் எனப்படுதல் இச் சுவர்க்கரை நினைவூட்டுகிறது. பான்பரா (Bānbār āroi) என்பவர் ஒரு பிரிவினர். மூங்கில் நிறைந்த பகுதியில் வாழ்பவர் என்பது இச்சொல்லின் பொருள். இச்சொல்லொடு 'வானவரம்பன்' என்னும் சொல் ஒப்புநோக் குதற்குரியது,

கோச் (Koch) மக்கள் அஸ்ஸாம் பகுதியில் பயிர்த்தொழில் செய்து வாழ்ந்தவர். மகம்மது துக்ளக், தனது படைகளை அந் நாட்டில் செலுத்தியபோது அப் படைவீரர்கள், 'அந்நாட்டு மக்

1. History of Assam by Edwar Gait.
2. History of Mundas by Saratchandra Ray.

கள் மந்திரக் கலையில் வல்லவராதலின் அந்நாட்டினுள் நுழைய மாட்டோம்' எனக் கூறியதாக L. W. ஷேக்ஸ்பியர் என்னும் வரலாற்றாசிரியர் கூறியிருக்கிறார். தாய்(Tai) என்னும் மரபினர் கச்சாரி மரபினைச் சார்ந்தவர். கச்சாரிகள் போடோ (Bodo) எனவும் போடோபிசா (Bodofisa) எனவும் வழங்கப்படுவர். போடோபிசா என்றால் வீமனது மக்கள் எனப் பொருள்படும். வீமனுக்கும் இடும்பிக்கும் பிறந்தவர்கள் என டோராங் (Darrang) பகுதியிலுள்ள சச்சாரிகள் கூறுகின்றனர். கோங் (Kōng-Liasong Kōng) என்னும் சொல் கொங்கு நாட்டை நினைவூட்டுகிறது. குரங்கர்கள் (Quoirangs) வாழ்ந்த இடம் கொங்கு எனப்பட்டது போலும். இராமாயணம் குறிக்கும் வானரர்கள் இவர்களாகத்தான் வேண்டும் என்பதில் ஐயம் வருவதற்கில்லை. கச்சின், கச்சாரி, கோச், நாகர் ஆகியவர்கள் மங்கோலியத் திராவிடர் எனக் கூறுகின்றனர். கோச் மரபினர் ஆரியத் திராவிடர் எனவும் குறிக்கப்படுகின்றனர். கச்சி மக்கள் கச்சாரி எனப்படுதல் போலக் கோச் மக்கள் கோசாரி எனவும் வழங்கப்பட்டனர். கச்சாரி மரபினர் வாய்மையும் வீரமும்!உடையவராதலின் கோச் மக்கள் வாய்மொழிக் கோசராவர்.

கச்சாரி, கச்சின், கச்சி, கோச், நாகர், நாயர் ஆகிய யாவரும் ஓரினத்தவரே என்பது அவர்களது பண்பாட்டொற்றுமையினால் விளங்கும்[1] (1) தூண்கள் நிறுத்தி அதன்மேல் வீடுகட்டி வாழ்வர். (2) சவங்களை வீட்டின் மேல்பகுதிகளில் அடக்கம் செய்து வைப்பர். (3) ஆண்களும் பெண்களும் தமக்கு விருப்பமான காதலரைத் தாமே தேர்ந்து கொள்வர். இதனால் திருமணத்துக்கு முன்பு இருபாலாருக்கும் ஏற்படும் கூட்டுறவினை யாரும் தடுப்பதில்லை. எனினும் திருமணத்தின் பின்னர்க் கற்பு வழுவாது இருக்கவேண்டும். விரும்பினால் காதலர் பிரிந்து விடலாம். பின்னர், ஆடவர் வேறு மகளிரை, மகளிர் வேறு ஆடவரை மணம் செய்துகொள்ளலாம். (4) மணமாகாத ஆடவர்கள் தங்கி உறங்குவதற்கென ஓர் தனியிடம் உண்டு. மணமாகாத மகளிருக்கும் அவ்வாறு தனியிடம் உண்டு. ஒரே இடத்தில் இருபாலாரும் தங்கியிருப்பதுமுண்டு. இவ்வாறு தனித்திருக்கச் செய்வது மேற்குறித்த செய்திக்குத் துணையாம். (5) மகளிர் பச்சை குத்திக்கொள்வர். (6) ஒவ்வொருவரும் கேடயம் வைத்திருபபர். (7) ஆடவர் மக்கள் தலையினை வேட்டையாடுவர். அவர்கள் பகைவரை அழிக்குந் திறமையினை இது உணர்த்துகிறது. மகளிர் ஆடவரை அத் துறையில் ஊக்குகின்றனர். இவ்வேட்டையில் திறமையுள்ளவர்

1. Ao Nagas of Assam by Smith.

களைத்தான் மகளிர் மணப்பர். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகத் தலைகளை வேட்டையாடிக்கொண்டு வருகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு மதிப்புண்டு. சேரர்களுக்கு எழுமுடியாரம் குறித்திருப்பதும் இவ்வுண்மையை உணர்த்தும்.

ஆதலின் முண்டர் மரபினரான (Cheru) குலத்தவரே—கச்சாரிகளே—நாகர்களே சேரர்கள் என்பது நன்கு புலனாகும். 'சேர' (Chera) என்னும் மலையாளச்சொல் பாம்பு எனப் பொருள்படும் என்பதும் ஒப்புநோக்கத்தக்கது. வானவன், வானவரம்பன் என்பன, சேரர் மரபினைக் குறிக்கும் சொற்களே என்பதும் புலனாம். நாகர் மரபில் ஒரு பிரிவினரான மாறன் (Morans) என்பவர்கள் பாண்டிய மரபினராவர் என எண்ணுவதற்கிடனுண்டு. மலையாளத்து மாரன்மார் பாண்டியர்கள் எனக் கூறப்படுகின்றனர். இது ஆய்வுக்குரியது.

இயற்கையின் இயல்புகள்

[திரு. ஆ. சேனுபதி]

தடமலையின் பனிதடவும் மேகம் போலத்
 தனிமையிலே நெடுநேரஞ் சுற்றி வந்தேன்
திடமில்லா மனஞ்சுற்றும் சுழற்சி யென்னத்
 திரைதயிரின் மத்தென்னச் சுழன்ற யர்ந்தேன்
திடுமெனவே அயலிலுள வாவி கண்டேன்
 சேர்ந்ததண் தாமரையின் ஆட்டங் கண்டேன்
நடனமிடு மடமாதர் தடங்கண் வீச்சு
 நளினத்துக் கேற்றஇசை தாளங் கேட்டேன். (க)

தண்டாம ரைக்கயத்தின் கரையினேரம்
 தவழ்ந்தலையும் திரைக்கரத்தால் முகமன் கூற
மண்டேகம் ஓர்சார்பில் முழுங்கக் கேட்டேன்
 மதுவுண்டு திளைத்திடவே பண்ணி சைத்து
வண்டூதும் மலர்மேலே பார்த்துச் சோர்ந்தேன்
 வாழ்க்கையினைக் கெடுக்கின்றேன் ஈதோ என்று
நண்டோர்ந்து கொடிவெட்டி நாசஞ் செய்ய
 நயவஞ்சம் பொறாதுநான் திரும்பி னேனே. (உ)

முத்துமணித் திரைக்கடலின் மேலே சென்று
 மோகனப்புன் முறுவலொடு நீர்க வர்ந்தே
தித்திக்கும் மதுப்பிலிற்றும் பூங்கா மேலே
 தெண்ணீரைத் தெளித்துமலர்த் தூக்கம் போக்கி
எத்திக்கும் குளிர்பரந்தர் தானு யாகி
 எரிகனற்றும் பகலவனின் சூட்டை யாற்றி
மத்தளிகன் போலார்த்து வானத் தூர்ந்து
 மழையாகப் பெய்திடுவேன் மேகம் என்பேர். (ஈ)

சித்தமருத்துவ மாநாட்டுப் பேருரை*

[திரு. பண்டித, எஸ். எஸ். ஆனந்தர்]

அன்பிற் சிறந்த பேரறிஞர்களே!

சித்த மருத்துவ சிரோன்மணிகளே! வணக்கம்

நமது நாட்டில் ஆங்கிலர் ஆட்சிக்குமுன் மக்கள் இனம் (சமூகம்) இக்காலத்தில் தோன்றியுள்ள பற்பல நோய்களைப் போன்ற நோய்களுக்கு இரையாகாமல் வலிமையுடன் நலமாய் நூறுண்டுவரை வாழ்ந்துவந்தார்கள். ஆங்கிலர் ஆட்சி தொடங்கிய பின்னர் தங்கள் மொழியாகிய வலையில் மக்களைச் சிக்க வைத்தனர். நம் நாட்டைத் தங்கள்நாட்டுப் பண்டங்கள் விற்பனை செய்யும் கடைகளாகச் செய்தனர். தங்கள் நாட்டு மருந்துகள் நம் நாட்டில் வியாபாரமாவதற்கு ஆங்கில மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தி அதில் நம்மவர்களைப் படிக்க வைத்து டாக்டர் எனப் பட்டங் கொடுத்துத் தங்கள் மருந்துக்கு ஏஜண்டுகளாக்கிக்கொண்டனர்.

ஆசுப்பத்திரிகளெனப் பெரிய கட்டிடங்களைக் கட்டி அவர்கள் மருந்தைக்கொண்டு இலவசமாக மருத்துவம் செய்தனர். அவர்களின் பகட்டான பலவகை விளம்பரங்களில் மக்கள் மயங்கி நம் நாட்டு மருந்துகளையும் மருத்துவர்களையும் கைவிட்டனர். அன்று தொடங்கி நமது நாட்டு மருத்துவம், இயற்கை மருத்துவம், அறுவை (இரண) மருத்துவம் முதலிய முறைகள் மறையத்தொடங்கின. அயல்நாட்டு மருந்துக்காக நம் நாட்டுப் பணம் கோடிக்கணக்கில் அவர்கட்குச் செல்கின்றது. நமது நாட்டு வெப்ப தட்பங்களுக்கும் உணவுக்கும் பொருந்தாத மேல் நாட்டு மருந்துகளால் நம் மக்கள் உடல்நிலை கெட்டுப் பலவித நோய்கள் மிகுதிப்பட்டு, உடல் வலிமை குறைந்து, ஆயுள் குறைந்து அழியத்தலைப்பட்டனர். இந்த உண்மையை ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் நம்முடைய தலைவர்கள் கண்டு இந்திய மருத்துவத்தைச் சிறப்பாகத் தென்னாட்டுத் தமிழ்ச் சித்த மருத்துவத்தை உயிர்ப்பித்துப் பொதுமக்களைப் பாதுகாக்கப் பெருமுயற்சிகள் செய்து தமிழ்நாட்டுக்குத் தலைநகரமாகிய சென்னையில் இந்திய மருத்துவப்பள்ளியை நிறுவி, மருத்துவ மனையையும் அமைத்துச் சித்தர் நூல்களிலுள்ள நோயணுகா விதிகளையும் வந்த நோய்களை மருந்தின்றி நீக்கும் இயற்கை

*சேலம் நகரில் 7—6—55 இல் நடைபெற்ற சித்தமருத்துவ மாநாட்டில் நிகழ்த்தியது.

மருத்துவங்களையும் நமது நிலத்தில் நம்முடன் தோன்றிய மருந்துகளாலும் பத்திய உணவு, செயல் மாற்றங்களாலும் நோய் நீக்கும் முறைகளைத் தமிழ்மொழி வாயிலாகவே கற்பிக்க ஏற்பாடு செய்தார்கள். மருந்தென்பதே ஒரு தனிப்பொருள் அல்லவென்பது நம் பெரியோர்கள், சித்தர்கள் கண்ட உண்மை.

'மறுப்ப துடல்நோய் மருந்தென லாகும்
மறுப்ப துளநோய் மருந்தெனல் சாலும்
மறுப்ப தினிநோய் வாரா திருக்க
மறுப்பது சாவை மருந்தென லாமே.' (திருமூலர்)

'உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்செல்வான் என்று
அப்பால் நாற்கூற்றே மருந்து.' (திருவள்ளுவர்)

எனக் கூறுகின்றனர். இத்தகைய அரிய பெரிய உண்மைகளை மருத்துவர்களும், மற்ற மக்களும் அறிந்து ஒழுகும்படி செய்ய வேண்டும்.

அவசியம் நேர்ந்த காலத்தில் தற்கால மேலை நாட்டு அறுவை மருத்துவம் தெரிந்துகொள்ளவேண்டுமாயின் ஆங்கில மல்லாத பிரான்ஸ், ஜர்மனி, ரஷியா, சீனு போன்ற நாடுகளைப் போல் நமது மொழியின் வழியாகவே அதனைக் கற்க ஏற்பாடு செய்தார்கள். ஆங்கிலத்தில் எழுதிய உடல் நூலை (அனுட்டமி) யையும் கெமிஸ்ட்ரி யையும், மிட்ஒய்பரியையும், மெடிகல் ஜூரிஸ் புருடென்ஸ் எனும் மருத்துவ நீதி நூலையும் சுமார் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் தமிழர்களுக்காகத் தமிழில் அச்சிட்ட நூல்கள் இன்னும் இருக்கின்றன. அவைகளை நமது தமிழ் மருத்துவ நூல்களோடு ஆலோபதி முறைகளையும் தமிழிலுள்ள புத்தகங்களைக் கொண்டு கற்பிக்காமல், அந்நூல்களைப் புறக்கணித்து ஆங்கிலத்தின் வழியாகவே கற்பிக்கவேண்டுமென் ஐந்தாறு ஆண்டுகளாய் ஆங்கில ஆட்சி விலகியபின்னரும், ஆங்கில மொழியையும், ஆங்கில மருத்துவத்தையும் ஆதரித்துப் பெருக்கி வளர்க்கின்றார்கள். ஆங்கிலர் ஆட்சிக்காலத்தில் தங் நலத்துக்காக அவர்கள் நடத்திவந்த மெட்ராஸ் மெடிகல் காலேஜை அவர்கள் ஆட்சி முடிந்தபின் இந்திய மருத்துவக் கல்லூரியாய் மாற்றுமல் அதே நிலையில் இன்னும் நடத்திவருவதும், இந்திய மருத்துவக்கல்லூரியில் ஆங்கிலமொழியையும், ஆங்கிலமருத்துவத்தையும் மிகுதிப்படுத்தி ஆங்கில மருத்துவக் கல்லூரியாய் மாற்றப் பார்ப்பதும் முறையாகுமா? அதனுல் தமிழ்மருத்துவக் கலை அழிந்து, நம் மக்கள் உடல் நிலை கெட்டு நாசமாவதோடு ஆங்கில மருந்துக்காக நமது நாட்டுச் செல்வ

மும் கொள்ளைபோகின்றது. தற்காலம் இந்திய மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் ஆங்கில மருத்துவம், தமிழ் மருத்துவம் இரண்டையும் சரியாய்ப் படிக்க முடியாமல் வருந்து கின்றார்கள். இந்திய மருத்துவக் கல்லூரியில் ஆங்கில மருத்து வத்துக்கு மிகுதி ஆதரவு காட்டுகிறபடியால் அலோபதி மருத்து வத்தைக் கவனித்துப் படிக்கின்றார்கள். சித்தமருத்துவத்தைப் புறக்கணிக்கின்றார்கள். அவர்கள் படித்து வெளியேறியதும் கிராம மருத்துவர்கள் முதல் எல்லோரும் ஆங்கிலமருத்துவமே செய்கின்றார்கள். ஊசிபோடுகின்றார்கள்.

இன்று ஜர்மனி, பிரான்ஸ், ஜப்பான், சைனு, ருஷியா போன்ற நாடுகளில் பல்கலைக்கழகம் (யூனிவர்சிடி) அந்தந்த நாட்டு மொழிகளில் நடைபெறுகின்றது. மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய கலைகளெல்லாம் அந்தந்த நாட்டுமக்களின் தாய் மொழியின்மூலமாகவே மிக எளிதாய்க் கற்பிக்கப்படுகிறது. அதனுல் அந்த நாட்டு மக்களுக்கு இவ்வளவு பொருட்செலவு, நேரச்செலவு, மூளைச்செலவின்றி வலிமையுள்ளவர்களாக இவ்வ ளவு நோய்களின்றி வாழ்கின்றார்கள்.

அயல்மொழியாகிய ஆங்கிலமொழியை வருந்திக்கற்று அதன் வழியாக எல்லாக் கலைகளும் கற்பிக்கப்படுவதால் மாண வர்கள் பிராண சக்தி, நேரம், பணம் முதலியவைகள் மிகுதியாய் வீணுக்கப்படுகிறது. அதனுல் மாணவர்கள் மெலிந்து நோய் வாய்ப் படுகின்றார்கள். கோடி மக்கள் ஒரே மொழியைப் பேசும் நாட்டில் அந்நாட்டு மொழியிலேயே பல்கலைக் கழகம் நடைபெற வேண்டும் எனவும், ஆங்கிலர் ஆட்சி நம் நாட்டில் முடிந்த பின் னும் நமக்கு ஏன் இந்தத் தொல்லை என, இந்திய அரசாங்கத் தலைவர் திரு, இராஜேந்திரப்பிரசாத் அவர்கள் ஐதராபாத்தில் பேசினுர்கள்.

மூன்று கோடிக்குமேல் சுமார் நான்குகோடி தமிழர்கள் உள்ள தமிழ்நாட்டில் பல்கலைக் கழகம் ஏன் தமிழ்மொழியில் நடைபெறக்கூடாது? அயல்நாடுகளில் அணுக்குண்டு ஆராய்ச்சி கூட அவரவர் நாட்டுமொழிகளில் நடைபெறுகின்றது. நம் நாட்டில் என்ன நடைபெறுகின்றது? ஆங்கிலர் ஆட்சி நடை பெறுங்காலத்தில் இந்திய மருத்துவப்பள்ளியில் மருத்துவம் படிக்கத் தமிழில் நல்ல அறிவு வேண்டும். ஆங்கிலம் கட்டாய மில்லை எனத் தீர்மானித்தார்கள். ஆங்கில ஆட்சி போனபின் இந்தியமருத்துவக் கல்லூரியில் ஸ்கூல் பைனல் படிப்புப்போதா தெனவும், கல்லூரிப்படிப்பு இண்டர்மீடியட் படித்துத்தான் இந்திய வைத்தியம் படிக்கவேண்டுமெனவும் முடிவுசெய்து

நடத்துவதால் தமிழ்மாணவர் பலர், அக்கல்லூரியில் தமிழ் மருத்துவம் படிக்கவியலாமல் இருக்கிறார்கள். இந்தியாவில் இந்திய மருத்துவம் படிப்பதற்கு ஆங்கிலம் இண்டர் படிப்பு வரை வேண்டுவதில்லை. அதை மாற்ற வேண்டும். ஆங்கிலர் காலத்தில் சென்னையில் அவர்கள் ஏற்படுத்திய ஆங்கில மருத்துவக் கல்லூரியை இந்திய மருத்துவக் கல்லூரியாய் மாற்ற வேண்டும்.

தமிழ்நாட்டில் சங்கமிருந்து தமிழ் வளர்த்த மதுரையில் அரசினர் ஆண்மையில் ஆங்கில மருத்துவக்கல்லூரி ஆரம்பித்துள்ளார்கள். அதைத் தமிழ் (சித்த) மருத்துவக் கல்லூரியாய் மாற்றவேண்டும். தஞ்சையில் ஆங்கிலமருத்துவக் கல்லூரி நடத்த ஏற்பாடு செய்வதையும் சித்தமருத்துவக் கல்லூரியாய் நடத்தும்படி செய்யவேண்டும். அப்படிச்செய்யாமல் தமிழ் நாட்டிலே ஆங்கில மொழியையும், ஆங்கில மருந்துகளையும் வளர்த்துக்கொண்டே போனால் நமது தமிழ்மருத்துவம் அடியோடு அழிந்துவிடும். அதனால் மக்களுக்குப் பிணிகள் மிகுந்து உடலூரம் குன்றி ஆயுள் குறைந்து அழிய நேரும். அயல்நாட்டு மருந்துக்காக நமது பணமும் இலட்சக் கணக்கில் மேலைநாட்டுக்குப் போய்ச் சேரும்.

ஆங்கில அலோபதி மருத்துவமுறைப்படி எக்சரே படம் பிடித்து நோயாளர் பலரை அறுத்துத் தீர்க்கவேண்டுமென முடிவு செய்யப்பட்ட பத்துப் பேர்களில் சுமார் எட்டுப் பேர்களுக்கு அறுவையின்றி நமது தமிழ்மருந்தால் நோய் நீக்கப்பட்டது. அலோபதி டாக்டர்கள் தீராதெனக் கைவிடப்பட்ட பல பிணியாளர்கட்குத் தமிழ்ச்சித்த மருந்தால் பிணி நீக்கப்பட்டது. இந்த உண்மைகளைக் கண்கூடாகக் காணலாம்.

தமிழிலுள்ள மருத்துவம், நீதி, யோகம், ஞானம், கணிதம், இசை, ஓவியம் போன்ற உயர்ந்த கலைகள் கெட்டழியாவாறு இப்போதுமுதல் ஒற்றுமையாக ஊக்கத்துடன் உறுதியுடனிருந்து தமிழர்கள் தங்கள் மொழியையும் அதிலுள்ள கலைகளையும் காப்பாற்றி வளர்க்கவேண்டுவது முதற் கடமையாகும்.

தமிழில் வழிபாட்டுக்கும் எதிர்ப்பா ?

[செல்லூர்க்கிழார் திரு. செ. ரெ. இராசாமிபிள்ளை]

தமிழ்மொழி தொன்றுதொட்டு உலக வழக்கினும் செய்யுள் வழக்கினும் நின்று நிலவிவரும் உயர்தனிச் செம்மொழி. இம்மொழியை, அயல்மொழிப் பித்துப்பிடித்தவர்களும், அடிமை மனப்பான்மைகொண்ட புல்லுருவிகளும் சில பல இடங்களில் ஒதுக்கி முன்னேறவிடாது தடுத்தொழித்தனர். காட்டாகத் தேவாரம் பாடிய மூவர் அடியார்கள் காலத்தில் மறைக்காடு என்றிருந்ததை, வேதாரண்யம் என்றும், முதுகுன்று என்பதை, விருத்தாசலம் என்றும், குடந்தை, குடமூக்கு என்பதை, கும்பகோணம் என்றும், மயிலாடுதுறை என்பதை மாயவரம் என்றும் திருவரங்கம் என்பதை ஸ்ரீரங்கம் என்றும் ஊர்ப்பெயர்களையெல்லாம்கூடத் தமிழ்ப்பெயர் நின்ற இடத்தில் வடமொழிப்பெயரை [illegible]ர். ஒவ்வோர் ஊர்களிலும் உள்ள கடவுள் பெயர்கள் யாவும் வாயாற்கூடச் சொல்ல இயலாத கனைப்போசைகளால் இயன்ற வடமொழிப் பெயர்களே ஆக்கி மறைத்தனர். இவைகளையெல்லாம் தமிழ்நாட்டில் தமிழனாகப் பிறந்தவன் எவனும் உற்றுணர்ந்தால் வயிறெரியாமல் இரான். இவ்வாறு ஊர்ப்பெயர்கள் கடவுளர்பெயர்களை மாற்றிய புல்லுருவிகளாலேயே கோவில்களில் தமிழ் வழிபாடு (அருச்சனை) இல்லாமல் வடமொழியை மந்திரமொழியாக வைத்ததில் வியப்பொன்றுமில்லை. இவ்வாறு நுழைவிக்கப்பெற்றதே கோவில்களில் இன்று நிகழும் வடமொழி மந்திர அருச்சனைகள்.

இன்று, நாட்டில் தமிழ்மொழிக்கே எல்லா இடங்களிலும் முதன்மை கொடுக்க வேண்டுமென்னும் எண்ணம் மக்கள் எல்லாரிடத்தும் பரவிவரும் உண்மையாகும்; அது, முறைமையுமாகும். ஆனால், எதிலும் புல்லுருவிகளும் பதடிகளும் இருப்பது உலக இயல். இன்று கோவில்களில் வழங்கும் வடமொழி மந்திரங்கள் இன்னதென விளங்காதனவாகவும், அருச்சனை புரிவோர் பலர் அம்மந்திரங்களின் பொருளறியாதவர்களாகவும் தப்பும் தவறுமாகக் கடவுள் திருமுன் சொல்லி மலர்தூவி வழிபாடு செய்கின்றனர். அருச்சனை புரியவரும் அப்பாவிகளான அன்பர்கள் அருச்சகர்களால் செய்யப்படுவன இன்னதென அறியாராய்க் கோவில்திருநீறு முதலியன பெற்றுச் செல்வதோடு அமைகின்றனர். ஆகவே, இவ்வாறு நடைபெறுதல் மக்களை ஏமாற்றுதல்போல் ஆகின்றது.

இதனை உணர்ந்த உண்மையாளர் சிலர் முயன்றே எல்லோருக்கும் பொருள் விளங்கக்கூடிய வகையில் தமிழ்மொழியில் மலர்வழிபாடு செய்யவேண்டுமென்று கருதினர்; விரும்பினர். அவ்விருப்பை நங் கழகம் நிறைவேற்றித் தமிழகம் முழுவதும் கடல்கடந்த நாடுகளில் தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் நூல் வெளியிட்டுப் பரப்பிற்று. வெளிநாடுகளில் வாழும் தமிழ்மக்கள் யாவரும் நன்கு வரவேற்றனர். அதனைச் செயலில் கொணரவும் முன்வந்தனர். ஆங்காங்கே திருக்கோவில்களில் தமிழிலேயே வழிபாடு செய்விக்கின்றனர். இங்கேயும் சில கோவில்களில் நிகழ்கின்றன. குன்றக்குடி அடிகளார் தம் ஆட்சியின்கீழ் நிலவும் கோவில்களிலெல்லாம் தமிழிலேயே அருச்சனை நிகழ்த்தும்படி கட்டளையிட்டுள்ளார்கள்; அவ்வாறே அக்கோவில்களில் நிகழ்ந்து வருவதாக அறிகின்றோம். இங்கே வடமொழியே தம் உயிரென்றும் தமக்கே உரிய மொழியென்றும் கூறுவோர் எதிர்க்கவில்லை. உடன்பிறந்தே கொல்லும் நோய்போன்று தாம் தமிழர் என்றும் கற்றுத்துறைபோனவரென்றும் சொல்லிக்கொள்ளும் அறிஞர்கள் சிலரும், சைவப்போர்வை போர்த்த புலிகளும், மணிப்பட்டம்பெற்ற மாண்பினரும், சித்தாந்தச் செல்வரென்று சொல்லிக்கொள்ளுவோருமாகிய ஆண்டகைகளே எதிர்க்கின்றனர். அவர்கள் கூறுவன நாளிதழ்களில் வெளிவந்துள்ளன; இவர்கள் ஒரு கூட்டத்தில் ஒரு பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றுங்கால், அதிற் கருத்துச்செலுத்திப் பேசாது, இடைப்பிறவரலாக, மற்றொன்று விரித்தலாகத் தமிழில் அருச்சனை செய்தலை எதிர்த்துப் பேசுகின்றனர். இவர்தம் அறிவிருந்தவாறென்னே! என்னே! இவர்தம் புல்லறிவாண்மையையும் பேதைமையையுங் கண்டு வருந்துகின்றேம்!

முன் தமிழிசை இயக்கந்தோன்றியபோது இவர்போன்ற புல்லுருவிகள் தோன்றி எதிர்த்தனர்; அவ்வெதிர்ப்பைத் தகர்த்துச் செட்டிநாட்டு வேந்தர் அண்ணாமலையாரசரும், பேரறிஞர் ரா. க. சண்முகனாரும் நின்று அவர்தம் கொட்டம் அடக்கித் தமிழிசையை மேலோங்கச் செய்தனர். இன்று அது சிறந்தோங்கி வளர்ந்து வருகின்றது. அதுகாலைத் தெலுங்கிற்குத்தான் இசை இசைந்ததென்றும், மற்ற மொழிகளுக்கு இவ்விசைப்பண்பு வராதென்றும் இப்போலிஞர்கள் வாதிட்டனர். காக்கை வெளிதென்றும் தாய்க்கொலை சால்புடைத்தென்றும் கூறும் சிற்றினம் எது கூறாது! யாவும் கூறுமன்றோ? இவ்வாறே இற்றை நாள், தமிழ்வழிபாட்டுமுறையை எதிர்க்கும் குழுக்கள் தோன்றியுள்ளன; அவர்கட்கு இன்னும் அடிமைப் புத்தி மாறவில்லை!

ஒருவர் சொல்கிறார், தமிழில் மந்திரமொழியில்லையென்றும் அதன் பொருளைத்தெரிந்துகொள்ள வேண்டுமென்பது கட்டாய மில்லை. நோயாளிக்கு நோய் தீரவேண்டுமென்றி, நோய்க்குக் கொடுக்கும் மருந்தை எதனால் இயன்றதென்று கேட்கவேண்டுவ தில்லையென்று. எதனால் ஆனது? அதை எவவாறு செய்வது? என்று ஒருவன் கேட்பது குற்றமா? மூன்றும் இரண்டும் ஆறு என்று ஒருவன் கூறுகின்றான். அஃது எவ்வாறு ஆறாயிற்று என்று கேட்பது தவறா? எவ்வாறு தவறாகும்! அதுபோல் கோவிலில் நின்று நீ ஏதோ சொல்கின்றாயே, அதற்குப் பொருளென்ன என்று அறியவிரும்புவது தவறா? அது பொருளற்ற ஒலி என்றால் அது, வெறும் இரைச்சலாகவன்றோ முடியும். பொருளற்ற ஒன்றைப் பொருளாகக் கொள்வது அறிவோடுபட்ட செயலாகுமா?

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

எனவரும் வள்ளுவர் வாய்மொழியிற் கூறுவதும் தவறாகவன்றோ முடியும். ஆகவே, வடமொழியில் கடவுள் திருமுன் கூறுவதிலும் தாம் அறிந்த மொழியில்—சாவாது நாட்டிலும் ஏட்டிலும் வழங்கும் மொழியில்—கூறி வழிபாடுசெய்வது எதனால் ஆகாதது? என்று அந்த அறிஞர்களைக்கேட்கின்றோம். வடமொழியே ஆண்டவனுக்கு உகந்தது; தமிழ் உதவாதென்றால், நாயன்மார் களும் ஆழ்வார்களும் வடமொழியிலன்றோ சுலோகம் பாடியிருப் பர்? அவர்கள் தமிழில் பாக்களை அருளிச் செய்ததின் நோக்க மென்ன? தமிழிலேயே கடவுளைத் தொழவேண்டுமென்ற ஒன்றாலேயேயாம். அருச்சனை செய்வதின் நோக்கம் ஆண்டவன் சிறப்புக்களை எடுத்துப் பேசிப் புகழ்ந்து தம் குறைகளை நீக்கி நன்மையை அருளுமாறு வேண்டுதற்கென்றே என்பதை நன்கு ஆய்ந்து உணரின் அறிதுமன்றோ? வடமொழியில் செய்யும் அருச்சனை மொழிகள் இவர் கூறுவதுபோன்று வெறும் ஒலி யாக இருக்கவில்லை. வெறும் ஒலியாக இருக்குமானால் அது மொழியாவதியாங்ஙனம்? ஒன்றையெடுத்துக்கொள்வோம்:

'சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம்
சதுர்புஜம் ப்ரசந்ந வதநம் தியாயே
சர்வ விக்நோப சாந்தயே'

என்பது, ஒரு சுலோகம். இதில், 'சுக்ல அம்பரதாம் - வெள்ளாடை அணிந்தவனே, விஷ்ணும் - எங்கும் நிறைந்தவனே,

சசிவர்ணம் - சந்திரன்போன்ற ஒளிபொருந்தியவனே, சதுர்ப் புஜம்-நான்கு தோள்களையுடையவனே, ப்ரசந்ந வதநம் - மலர்ந்த முகத்தையுடையவனே, தியாயே - வணங்குகின்றோம், சர்வ விக்நோப சாந்தயே - எல்லாத் துன்பங்களையும் நீக்கியருள்வாயாக' என்று பொருள்தருதலை அறிக. இன்னும் பிள்ளையார் வணக்கமாக,

> 'மூஷிக வாகன மோதக ஹஸ்த
> வாமன ரூப மகேஸ்வர புத்ர
> விக்ந விநாயக பாத நமஸ்தே'

எனவரும் இச் சுலோகமும் பொருளற்றதாக இல்லை. 'பெருச்சாளிவாகனனே, கொழுக்கட்டையுடைய கையனே, குறுகிய வடிவனே, சிவபெருமான் புதல்வனே, துன்பங்களைத் தீர்க்கும் தலைவனே, உன் திருவடிகளை வணங்குகின்றேம்' என்றே பொருள் கொள்ளக்கிடக்கின்றது.

ஆகவே, தமிழில் வழிபாடு செய்தால் இவ்வாறு மூடமந்திரமாக இல்லாமல் யாவரும அறிந்துகொள்ளற்கேற்ற முறையில் இருக்கும். தானறிந்த மொழியில் ஆண்டவன் முன்னிலையில் கூறி இறைவனை வழிபட்டால் அன்பும் உணர்ச்சியும் பெருகுமே தவிரக் குறையாது! புல்லுருவிகள் கூறுகிறபடி இதில் மொழி வெறியோ! இவருக்குப்போன்ற அடிமை மனப்பான்மையோ இருக்கவில்லை என்பதைப் பொதுமக்கள் யாவரும் நன்குணர்வார்களாக. இவர்கள் போடுகின்ற முட்டுக்கட்டைகள், பெருவெள்ளத்தின்முன் மணலிணைப்போலவும், சூறைக்காற்றுமுன் இலவம்பஞ்சு போலவும் தகர்ந்து பறந்தோடியொழியும் என்பதொருதலை. விளக்கின்முன் இருளெங்கே நிற்கும்?

ஆகவே, உணர்ச்சிமிக்க எம் தமிழ்ப்பெருமக்களே! இமையத்தில் மீன் புலி வில் உருவெழுதிய வீரர்வழி வந்தவர்களே! மயிர்நீப்பின் வாழாக் கவரிமானன்ன மானமிக்க எம் தமிழ் வீரர்களே! நம் தமிழ்மொழி, நாடு விடுதலைபெற்றும் இன்னும் அரசியலில் இடம்பெறவில்லை! ஆங்கே வேற்றுமொழிகள் கூத்தாடுகின்றன! சட்ட அரங்கங்களில், மானமற்ற தமிழர் ஆகிய உறுப்பினர்கள் வேற்றுமொழியில் பேசுவதைச் சிறப்பெனக் கொண்டு தமிழை ஆட்சிமொழியாக்க முற்படாது வாளாவிருந்து காலத்தை ஓட்டுகின்றனர்! நீவிர் தமிழை ஆட்சிமொழியாக்க முற்படுங்கள்! கோயில்களில் இறைவன்முன் பேச வழிபாடாக்குங்கள்! விடுதலை! விடுதலை! இந்தியோடு ஆங்கிலத்திற்கும் விடுதலை கொடுத்து வழியனுப்புங்கள்! நம் தமிழே அரியணையேறி எல்லாத்துறைகளிலும் மேலோங்க ஆக்குமின்! ஆக்குமின்!

நல்லிசை நிறுத்தவேண்டினுல்....?

[குடந்தை. திரு. சு. கண்ணன், பி. ஏ.]

"வாழைப்பழம் வேண்டாமென்னும் குரங்கும் உண்டோ" என்று ஒரு பழமொழி உண்டு. அது குரங்கிற்குப் பழம் என்ருல் மிக்க ஆசை என்று தெரிவிக்கிறது. அதுபோலவே மானிடரும் புகழ்பெற மிக்க ஆசையுள்ளவராக உள்ளனர். "புகழ் வேண்டாப் பூதலத்தோர் இல்லை" என்று கூறலாம். மனிதரின் ஒவ்வொரு செயலையும் கூர்ந்து நோக்கினுல், அதன் அடிப்படையிலே, செயல்புரியும் மனிதனின் புகழ்பெற விழையும் மனநிலை நன்கு புலப்படும். நான்குபேர் நம்மை மதிக்கவேண்டும், ஊரும் உலகமும் நம்மைப் போற்றவேண்டும் என்ற எண்ணம் உந்துவதால்தான் பல செயல்களைச் செய்கின்றனர் மக்கள்.

புகழ்பெற விழைவது முதன்மையாகும். புகழ்தரும் செயல்களையே செய்யவேண்டும். எடுத்த பிறவியின் பயன் புகழ்பெறுதலே என்று கூறுகிருர் வள்ளுவர் கூட. "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலின் தோன்ருமை நன்று" என்பது குறள். புகழ்பெருது வாழ்பவர் தோன்ருமலே இருந்திருக்கலாம் என்று இழித்துரைக்கின்ருர். எவனெருவன் இசையுடன் வாழ்கிருனே அவனே 'வாழ்கிருன்' என்ற சொல்லுக்கு ஏற்றவன்; இசையொழிய வாழ்பவர் வாழாதவர். வாழும் உயிர்க்கு ஊதியமாவது இசைபட வாழ்தலே அன்றி வேறில்லை என்பது தெய்வப் புலவர் கருத்து.

ஆக, பழந்தமிழ் நூல்கள் கூறும அறிவுரைகளையும் மக்களின் இயற்கை உள்ளப்போக்கையும் நோக்கினுல், எல்லோரும் புகழ்பெற விரும்புவது இயற்கையே; இன்றியமையாததுங்கூட எனத் தெரிகின்றது.

எண்மை நிலையிலுள்ள மகனெருவன் அவாவுதல் போன்றே பண்டை மன்னரும் புகழ்பெற விழைந்தனர். மன்னனும் மனித உள்ளம் படைத்தவன் தானே! ஆதலால் தன் நாட்டு மக்கள் தன்னை நன்கு போற்றவேண்டும் என்று நினைந்தான். அதுமட்டுமன்று. பிறநாட்டு மன்னரும் தன்கீழ் வாழவேண்டும், பூதலம் முழுதும் தன் புகழ் பரவி மற்ற நாட்டு மன்னரும் மக்களும் தன்னை ஏத்த இவர்களுக்குமுன் தான் ஒருவனுக வாழவேண்டுமென விரும்பினுன்.

இந்த நிலை அன்றுமட்டும் இருந்ததொன்றன்று; இன்றும் உண்டு. நாட்டில் இன்று எத்துணையோ கட்சிகள் உள. எண்ணற்ற தலைவர்கள் நாட்டை நடாத்த எழுந்துள்ளனர். எல்லோ

ரும் மக்களிடம் நன்மதிப்புப் பெற விரும்பியே செயலாற்று கின்றனர். இவ்விதம தன் மக்களிடமும் மற்றவர்களிடமும் சீரும் சிறப்பும் பெற்று இந்த உலகில் நல்லிசை நிறுத்திப்போக விரும்பினால், அதற்கோர் வழியுண்டு. அவ்வழியிலே தவறாது தலைவர்கள் சென்றால் தம்புகழ் ஈண்டு நிலைநிறுத்துவது திண்ணம்.

அவ்வழி யாது என்பதைப் பண்டைத் தமிழ்ப்புலவர் ஒருவர் கூறியிருக்கிறார். அன்று புகழ்பெற விரும்பிய மன்னனொருவனுக்கு எடுத்துக் கூறுமுகமாக கூறியுள்ளார். அவர் பெயர் குடபுலவியனார். அவர் வாழ்ந்தது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக விருந்த சங்ககாலம். அவர் தம் அரசன் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்தும் வகையிலே அவ்வழியைப் புலப்படுத்துகிறார். அதன் வழியிலேயே இன்றும் தலைவர்கள் நடந்தார்களேயானால் அவர் தம் எண்ணம் ஈடேறும்.

குடபுலவியனார் பாண்டி நாட்டுப் புலவர். பாண்டி நாட்டின் மேற்பகுதியில் வாழ்ந்து வந்தார். அரசனிடம் பொருட்கொடை பெற்றுச் செல்லுதலைமட்டுமே பண்டைப் புலவர்கள் குறிக்கோளாகக் கொள்ளவில்லை. அரசர்க்குப் பொருள்வளம் குன்றாது மேன்மேலும் பெருகுதற்குரிய செயன்முறைகளை ஆங்காங்கு அறிவுறுத்துவதையும் தம் கடமைகளாகக் கொண்டனர்.

அதுபோன்றே குடபுலவியனாரும். தாம் வாழ்ந்த பகுதியில் ஒருகால் நீர்நிலையின்றி விளைநிலம்குன்றி வாடும்போது நீர்நிலை பெருக அமைக்கவேண்டுமென பாண்டியனுக்கு உணர்த்தக் கருதினார். உடனே அரசவைக்குச் சென்றார். அங்கே அரியணையில் அரசன் அமர்ந்திருக்கக் கண்டார். ஒரு குடைக்கீழ் உலகையாண்ட அவனுடைய முன்னோர் புகழைக்கூறி அவனை நீண்டகாலம் இருக்க வாழ்த்தினார். வாழ்த்திவிட்டு அவனைக் கேட்கிறார்.

"வயவேந்தே! நீ மறுமை உலகத்தில் நுகரும் இன்பத்தை [illegible]யா ?"

"ஆம் அறிஞரே!"

"உலகத் தலைவர்களையெல்லாம் வென்று நீ ஒருவனாக ஆள் விரும்புகிறாயா ?"

"உண்மையே! புலவரே.'.

"எல்லாவற்றிற்கும் மேலாக நீ இவ்வுலகில் நல்ல புகழை நிறுத்திச்செல்ல விரும்புகிறாயா ?"

"ஆம் புலவரே"

"பெரியோய்! அதற்கான செயல்களை இப்போது சொல்கிறேன் கேட்பாயாக" என்று கூறிப் புலவர் அவ்வழியைச் சொல்லத் தொடங்கினர்.

இப்புவியில் பல்லுயிரையும் ஆட்டி அல்லலுறுத்துவது பசிப்பிணியேயாகும். பசியின் கொடுமையைப்பற்றி மணிமேகலை பலபடியாகப் பேசுகிறது. "பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" இப்பிணி எல்லா இழிசெயல்களையும் செய்யத்தூண்டும். இவ்வுலகில் பசியாத நல்வயிறே எங்கும் கிடையாது. ஆதலால் பசித்தவர்க்கு உணவு கொடுத்து உதவவேண்டும். "தானத்தில் சிறந்தது அன்னதானமே." அவ்விதம் நீர்இன்றி அமையாத இவ்வுடம்பிற்கு எவன் உணவு கொடுத்துக் காக்கின்முனே அவன் உயிர்கொடுத்தவனுகிறுன். உணவைத்தான் உயிராக, முதற்பொருளாக கருதுகிறது இவ்வுடல். அவ்விதப்பெருமையையும் முதன்மையையும் பெற்றது இவ்வுணவு.

இந்த உணவை உற்பத்திசெய்ய, நிலத்திலே நீர்பாய்ச்சி வித்திட்டு விளைவிக்கவேண்டும். ஆதலால் உணவு என்று சொல்லப்படுவது நிலமும் நீரும் கூடியதொன்று என்று கூறிவிடலாம். அந்நீரையும் நிலத்தையும் கூட்டியவர் இவ்வுலகத்து உடம்பையும் உயிரையும் ஒன்று கூட்டியவராவர். அவ்விதம் நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்த்து விளைவை அதிகரிக்கவைக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது. நிலத்திற்கு நீர்வேண்டும்பொழுது வேண்டிய அளவு நீர் கிடைக்கும்படி சில ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும். நீர்நிலைகள் இல்லாவிடத்து உண்டுபண்ண வேண்டும். நெல் முதலியவற்றை விதைத்தால் நீருக்காக வானை நோக்கி ஏங்கி நிற்கும் எத்தனையோ 'வானம் பார்த்த நாடுகள்' நாட்டில் இருக்கும். அவற்றல் அரசர்க்குப் பயன் கிட்டாது. ஆதலால் அரசர் அதற்கான முன்னேற்பாடுகள் செய்து கொள்ளல்வேண்டும்.

மழை எப்போதும் பெய்யாது; எல்லா இடத்திலும் பெய்யாது. ஆகையால் மழைபெய்யும்போது, பெய்யும் நீரை நல்ல இடத்திலே நெடிய நீண்ட கரையெடுத்துத் தேக்கிவைக்கவேண்டும். அவ்விதம் தேக்கிவைத்து வேண்டும்போது வேண்டிய அளவு விளைநிலங்களுக்குப் பாய்ச்சி விளைநலனைப் பெருக்கி மக்களுக்கு உணவு நல்கவேண்டும். அவ்விதம் நீரைத்தேக்கிய அரசரே இவ்வுலகிலே புகழை நிறுத்தியவராவர். அந் நீரைக் கட்டித் தேக்காதவர் புகழைக்கட்டித் தேக்கத் தவறியவராவர். நீரைத் தேக்கினல் நிலம் செழுமையுறும்; விளைநலம் பெருகும்; தன் நாட்டில் வாழ்நர்க்கு அளவற்ற உணவு கிடைக்கும்; மக்கள் மகிழ்வர்; அது மன்னனுக்கு மங்காப்புகழ் அளிக்கும்.

இதுவே புலவர் குடபுலவியனார் பாண்டியனுக்கு எடுத்துக் கூறிய மொழிகள். அவரது பொன்மொழி பாட்டாக எழுந்தது:

மல்லன்மூதூர் வயவேந்தே
செல்லு முலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினும் சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினு மற்றதன்
தகுதி கேளினி மிகுதி யாள
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரி யோரீண்டு
உடம்பு முயிரும் படைத்திசி னோரே
வித்தி வானோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினும் நண்ணி யாளும்
இறைவன் றாட்குத வாதே யதனால்
அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவண தள்ளா தோரே."

—(புறநானூறு - கஅ.)

இதே வழியை இன்னும் நம் நாட்டில் நல்ல புகழ்பெற்று மேம்பாடு அடைய விரும்பும் எந்தத் தலைவரும் பின்பற்ற வேண்டும். இன்று மக்களிடையே பசிப்பிணி இல்லாதவாறு ஆக்கவேண்டும். அதற்கு மக்கள் விளைச்சலை அதிகரிக்கவேண்டும். பயிர்த்தொழிலுக்கு வேண்டிய நீர், என்றும் நிறையக் கிடைக்கும்படி அரசாங்கம் செய்யவேண்டும். ஆதலால் மழை பெய்யும்போது நீரை வீணாக்காது, நல்ல அணைகள் பல கட்டித் தேக்கவேண்டும். அவ்விதம் அணைகள் பல கட்டினால், கட்டி நீரைத் தேக்கினால் தம் நாட்டிலே தலைவர்கள் நல்லிசை நிறுத்த முடியும். தம் நாட்டிலே நற்புகழை நிலைநாட்டினால் உலக அரங்கிலும் முதல்நிலை பெறமுடியும். பல ஞாலங் காக்கும் தலைவர்களும் நம்மை நன்கு மதிப்பர்.

இதுபோன்று நம்நாட்டிலே நலமும் வளனும்பெருக நல்ல பல திட்டங்களை அன்றே தமிழர்கள் அறிந்திருந்தார்கள் என்றால், அதுவே நல்லாட்சி நடத்தத் தமிழர்கள் பெற்றிருந்த திறமைக்கும், அவர்களது அறிவுநுட்பத்திற்கும் சான்று பகரும். இக்காலம் நம் நாடாள்வோர் இவ்வாறு செய்ய முன் வருவார்களா?

அறிவினால் ஆயபயன்

[நாகை. திரு. த. சி. வேலன்]

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். உயர்திணை அஃறிணை என்னும் இப் பாகுபாட்டில், மனிதஉயிர் அல்லாத பிற உயிர்களனைத்தையும் அஃறிணையின்பாற்படுத்தி மனிதனை மட்டும் உயர்திணையாகச் சுட்டியது ஏனெனில், பிற உயிர்களிடம் காணப்படாத பகுத்தறிவு என்னுமோர் அறிவாற்றல் மனிதனிடம் கூடுதலாகக் காணப்படுதலாலேயாம்.

இவ்வுண்மை பலரும் அறிந்ததே. ஒரு மனிதன் தவறு செய்கின்றபோது "உனக்கு அறிவில்லையா?" எனவும், சினம் மிகுகின்றபோது 'அறிவு கெட்டவனே' எனவும் அவனைப் பிறர் இடித்துரைத்தலும் இகழ்ந்து பேசுதலும் அறிவின் ஆற்றல் எத்தகையது என்பதை விளக்கப் போதிய சான்றுகளாகும்.

மனிதன், மனிதனுக்குரிய பண்பாடுகளை இழக்கும்போது அவன் தவறிழைக்கிறான் என்று சொல்லுவதைவிட, அவன் மனிதத்தன்மையினின்று விலங்குத்தன்மைக்குப்போகிறான் அல்லது அறிவின்—உண்மையான அறிவின்—ஒரு சிறு பகுதியை இழக்கிறான் என்பதுதான் பொருந்தும்.

மக்களாய்ப் பிறந்த எல்லோருக்கும் அறிவு உண்டு. அறிவில்லாத மக்கள் எவருமிலர். ஒருவரையொருவர் அறிவில்லாதவர் எனப்பேசும் வழக்கம் பொதுவாக மக்களிடையே காணப்படினும், அஃது அறிவில்லாமையைக் குறிக்கும் சொல்லாகாது. அறிவின் திரிபு, அல்லது கெடுதல் என்பதையே குறிக்கும். அறவே அறிவற்ற மக்கள் இருப்பது அரிது. அங்ஙனம் இருப்பின் அவரைப் பித்தர் என்றே அழைத்தல் வேண்டும். இன்றேல் மனிதஉருவில் காணப்படும் ஒருவகை விலங்கு எனல் வேண்டும்.

மனிதக்குரங்கு என்னுமோர் வனவிலங்கைப் பலரும் பார்த்திருப்பர். அவ்விலங்கு தோற்றத்தால்—நடையால்—செயலால்—மனிதனையே ஒத்திருக்கும். அதனைக் காண்போர், "ஓ! இஃதென்ன மனிதனைப்போலவே இருக்கிறதே!" என வியந்து பேசுவர். மனிதன் மாண்புமிக்கப் பிறவியின பகுத்தறிவுடையவன்—தன் மனிதப்பண்பிலிருந்து இழிசெயலில் ஈடுபடும்போது "இவனும் ஓர் மனிதனா?" என வெறுத்துப் பேசுகின்றனர் மக்கள்.

இங்ஙனம் மனிதப்பண்பு என்னும் ஓர் அளவுகோலைக் கொண்டு மனிதனை அளவிடுகிறது அறிவுலகம். உலகப் பேரறிஞர் வள்ளுவர் மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்ற கருத்துடையவர். இக் கருத்துக்கண்கொண்டே உலகை—உலக மக்களை—அவர்தம் செயலை—நிலையை—நினைப்பை—மற்றுமுள்ள நிகழ்ச்சிகளை—உற்றுநோக்கி ஆராய்ந்தார். அங்ஙனம் ஆராயுங்கால், மக்கள் வடிவிலே நடமாடும் வியப்பான விலங்கினத்தைக் கண்டார்; வியந்தார். "இப்படியும் மனிதப் பிறவிகள் உள்ளனவே! இவரும் மக்கள் தாமோ? இவரைப்போன்ற வியப்பான பிறவியினரை யாம் கண்டிலமே?" என்று தம்மையும் மறந்து பேசுகின்றார் அச் சிந்தனைச்சிற்பி. இதோ, அவர் கூறுவதைக் காண்மின்!

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்." (குறள் - க0எக)

எனவே, மனிதன் அறிவென்னும் ஆற்றலால் ஆக்கப்படும் ஓர் உருவம் என்பது ஈண்டு நோக்கற்பாலது. சரி, அங்ஙனமாயின் அறிவுமிக்கோர் அனைவரையும் மனிதர் எனல் சாலும் அன்றோவெனின், அதுவுமன்று. இவ்வுலகில் அறிவுமிக்கோர் பலர் உண்டு; கற்றவர் பலருண்டு; தாம் கற்ற கல்வியின் ஆழத்தை அகலத்தை மக்கள் மன்றத்திலே எடுத்துக் காட்டிப் பேரும் புகழும் பெறுவோர் பலருண்டு; அங்ஙனமே கலை அறிந்தோர், தொழில் அறிந்தோர், இன்ன பிற ஆற்றல் உடையோர் பலரும் இருக்கின்றனர். இவர் எல்லோரும் அறிவுடையோரே. கல்வி கற்காதவராயினும் அறிவு வன்மை வாய்ந்தவர் பலர் உண்டு. ஆனால், இங்ஙனமெல்லாம் இருந்தும்—அறிவு இயக்கப் பெற்றும்—உலகில் தீமைகள் குறைந்தனவா? மக்கள் மக்களாக வாழ முடிகின்றதா? நாகரிக காலம் எனக் கருதப்படுகின்ற இக்காலத்திலும் கொலை, களவு, பகற்கொள்ளை, நாகரிகக் கொள்ளை, வகுப்புப்போர், பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் பேதைமை, ஆண்டான் அடிமை என்ற வேறுபாடு, இன்னபிற இருக்கத்தானே செய்கின்றன?

கல்வியின் பயன் அறிவு; அறிவின் பயன் பகுத்தறிவு; பகுத்தறிவின் பயன் பண்புடைமை; பண்புடைமையின் பயன் மனிதன் மனிதனாக வாழ்தல். இந்த உண்மையை அடிப்படையாகவைத்து ஆராய்கின்றபோதுதான், இத்தகைய அல்லல்களுக்கெல்லாம் காரணம், அறிவு அறிவாக இல்லாமையும், திரிபு பெற்ற நிலையிலே வளர்ந்துள்ளது—வளர்ந்து வருகிறது என்ற உண்மையும் புலப்படும்.

நன்மை செய்வதற்கு எங்ஙனம் அறிவு பயன்படுகிறதோ, அங்ஙனமே தீமையைத் திறம்படச் செய்வதற்கும் அதே அறிவுதான் பயன்படுகிறது. அறிவுடைய மனிதன் தன்செயல்கள் அனைத்திற்கும் காரணம் கற்பிக்கிறான். அச்செயலால் பிறரோ, ஒரு சமுதாயமோ, நாடோ எங்ஙனம் ஒறுக்கப்படுகிறது, அல்லது அதன் விளைவுகள் யாவை? என்பன பற்றியெல்லாம் அவன் நினைப்பதில்லை. தன்னலம் ஒன்றே அவன் குறிக்கோளாகக் கொண்டுவிடுகிறான். அந்தக் குறிக்கோளை நடுவாகக்கொண்டே அவனது அறிவாற்றல் சுழல்கிறது. அதற்கேற்பத் தனது சட்டத்தையும் திட்டத்தையும் வகுத்துக் கொள்ளுகிறான். பகுத்தறிவின் துணைகொண்டு நன்மை தீமைகளை ஆராய்ந்தறிந்து தீமையை விலக்கி நன்மையின்பால் செலுத்தவேண்டிய அறிவாற்றலைத் தீமையின்பால் செலுத்துகிறான். ஆனால், இவ்வடாத செயலை அறிவு என்னும் அழகான திரைபோட்டு மறைக்கின்றான்.

உலகம் உய்யவேண்டுமானால்—மக்கள் மக்களாக வாழவேண்டுமானால்—உண்மையான நாகரிகத்தை நாடி உலகம் முன்னேறவேண்டுமானால் — இத்தகைய நிலை மாறவேண்டும். அறிவு திரிதல் கூடாது; திருந்தவேண்டும். கூர்மையான அறிவைவிட நேர்மையான உள்ளமே சிறந்தது. சிலவேளைகளில் கூர்மை மிகத் தீமையை விளைவிக்கக்கூடும். இற்றைநாள் அனைத்துலக அரசியல்துறை முதற்கொண்டு தனிமனிதனின் வாழ்க்கைத்துறை ஈறாகக் காணப்படும் அல்லல்களுக்கெல்லாம் காரணம் மக்களின் அறிவின்மையல்ல, அறிவின்கூர்மை என்றே கூறவேண்டும்.

கத்தி கூர்மையாக இருக்கவேண்டும். ஆனால், அக் கூர்மை கழுத்தை அறுக்கப் பயன்படக்கூடாது. இனிய கனியை அரிந்துண்ணப் பயன்படல் வேண்டும். அறிவும் அவ்வண்ணமே பயன்படல்வேண்டும். அறிவு ஒரு கத்தி; கல்வி அதனைத் தீட்டிக் கூர்மையாக்கப் பயன்படும் ஒரு சாணைக்கல். அங்ஙனம் தீட்டப்படும் அறிவு நல்ல நோக்கத்தோடு தீட்டப்படவேண்டும். இன்றேல் அறிவு அழிவுக்கே வழிகோலும்.

எனவே, அறிவின் ஆற்றல் அணுவின் ஆற்றலைவிட மிகப் பெரிது. எங்ஙனம் அணுவாற்றல் ஆக்கத்திற்கும் அழிவுக்கும் வழிகோல வல்லதோ, அங்ஙனமே அறிவாற்றலும் பயன் கருதி —நற்பயன் கருதி—செலுத்தப்படாவிட்டால் தீமையும், பயன் கருதிச் செலுத்தப்படுங்கால் நன்மையும் பயக்க வல்லதாகும். எனவேதான் அறிவினால் ஆய பயன் இன்னது என்பதைப் பலவிடங்களில் சுட்டிக்காட்டுகிறார், வள்ளுவப்பெருந்தகை.

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை." (குறள் - ௩௧௫)

"அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்." (குறள் - ௧௭௫)

என்னும் குறட்பாக்கள் ஈண்டு கூர்ந்துநோக்கற்பாலன. இன்னா செய்யாமை, வெஃகாமை ஆகியவற்றை வலியுறுத்தப்போந்த அப்பெரியார் ஆண்டும் அறிவையே சுட்டிக்காட்டி அறிவினான் ஆயபயன் என்ன என்று கேட்கிறார். அறிவு அஃகி அகன்று இருந்து மட்டும் பயனில்லை. அறிவு அறிவாக இருத்தல்வேண்டும்; அஃதாவது நன்மையை நாடியதாய் இருத்தல் வேண்டும் என்கிறார்.

மனிதன் மனம் என்னும் மாண்புறு புலனைப் பெற்றவன். அப்புலன் பிறருடைய இன்னலில் இன்பம் காண்பதற்காக ஏற்பட்டதல்ல. அதன் துணைகொண்டு பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்க்கும் பெற்றி வேண்டும். அதுதான் நாகரிகம்; அதுதான் அறிவு. இதைத்தான் வள்ளுவர் அறிவினால் ஆகும் பயன் என்கிறார்.

அம்மட்டோடு நில்லாது அறிவின் மாண்பை உணர்த்தப் போந்த வள்ளுவர் 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் இவ்வுண்மையைத் தெளிவாக அறுதியிட்டு,

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு." (குறள் : ௪௨௨)

என்று கூறுகிறார்.

காட்டாறுபோல் செல்லும் அறிவைப் பண்புடைமை என்னும் பயிர் விளைவுக்குப் பயன்படுத்தாவிட்டால் அவ்வாற்று நீரால் என்ன பயன்?

எனவே, கற்றதனால் ஆயபயன் தூய அறிவுடையராதலும், அத்தூய்மையின் துணைகொண்டு நல்லறிவு நற்செயல் உடையராகத் திகழ்தலுமே மனிதப் பிறவியின் மாண்பாகும்.

குமரிமுனையில் கொடுந்தமிழ்

[செல்வி. எஸ். ஜமலாதேவி]

‘ வஞ்சி நாடதனில் நஞ்சை நாடென
செந்தமிழ் வழங்கும் தேயம் ஒன்றுளது ’

என்ற மனோன்மணீய ஆசிரியரின் மாசறு கூற்றிற்கிணங்கத் தமிழ்நாட்டின் தனிப்பெருஞ் செல்வமாகத் திகழ்வது நாஞ்சில் நாடு. தமிழ் தழீஇய தண்குலம் வாழும் அப்பதியில் தமிழ் அன்றுபோல் இன்றும் தழைக்கிறது; பெருமை சான்ற இலக்கியச் சிந்தனைவள்ளல் வையாபுரிப்பிள்ளை போன்றோரால் அருந்தமிழ் அரும்பி முகிழ்க்கிறது; பழந்தமிழ்ப்பண்பு குன்றாது பொலிந்து பொழிகிறது; சேரலர்கோன் விடுத்த சிலப்பதிகாரச் செந்தமிழால் செழிக்கிறது; மலரும் மாலையும் முகிழ்த்த மாண்பால் மகிழ்கிறது; எனில் அதன் அந்தமில் பெருமை அறியார் யாரே எனப், பைந்தமிழ்ப் புலவரொடு பாடிப் பரவுவோம்.

இத்தகைய நன்னலம் நிறைந்த நாஞ்சிலம்பதியின் அயலே அமைந்தது குமரிமுனை. தமிழ் இலக்கியத்துத் திளைப்போர்க்குக் குமரி என்ற சொல்லினைப் பல்வகையானும் அறியும் வாய்ப்பு ஏற்படுதல் இயற்கையாகும். குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ளத் தமிழ்நாட்டின் பெரும்பகுதி நீரிடை மூழ்கியது. அவ்வண்ணம் மறைந்தமையால் இலக்கிய இலக்கணச் செல்வங்கள் அருகலாயின. எனினும் தமிழின்சாயல் தமிழ்நாட்டாரிடையே தவழ்கின்றமையான் இன்றும் இயல் இசை நாடகம் போன்ற துறைகளில் மாறா இன்பம் பெறுதல் இயலுகிறது. ஆனால் காலம் என்பது கறங்குபோற் சுழல்வது. எனவே மேலது கீழா, கீழது மேலா மாறிடும் தன்மை செயற்கையும் அன்று.

குமரிமுனையின் கன்னித்தன்மை காண இன்றும் எண்ணற்ற மக்கள் நாட்டின் பலபகுதியினின்றும் செல்கின்றனர். இறைவன் அடி தொழுவார் சிலர், இயற்கையில் மூழ்குவார் சிலர், நீலக் கடல் அலையிடை நீந்துவார் சிலர், நிமிர்ந்த வானத்தில் நிலவும் காய்கதிர்ச் செல்வனின் வரவு கண்டும் மாலை தோன்றும் மதியத்தின் தண்மை கண்டும் மகிழ்வார் சிலர்.

எந்தையொடு சின்னாள் முன்னர் அக்குமரியந் துறையாடி வருதற்பொருட்டுச் சென்ற என் இளமை உள்ளம் கண்ட

இவ்வண்ணம் என்னை வரையத் தூண்டியது. அங்குச் செல்வோர் காண்பவைகளில் கல்மண்டபமும் அதனையடுத்த நீர்த்துறையும் சில. நல்லதோர் மண்டபம், பழமைக்கு இலக்கியமாயது; பண்பிற்குச் சின்னமாயது; அயலே தோன்றும் அடியார் மூழ்கி நீராடுந்துறையில் கல்லோவியம் ஒன்று நிற்கின்றது; அக்கல்லிடைத் தோன்றிய தமிழ் ஓவியம் என் கண்ணையும், கருத்தையும் கவர்வதாயிற்று; காலச் செல்வனுல் தேய்வு பெறினும், அதனை என் தமிழ்க் கண்கள் காண்டல் இயன்றதாயது; கல்லில் அமைந்தவற்றைப் பலமுறை படிக்க முயன்றேன்; பயன் இதுதான்.

'மாதிறுதீர்த்தம்' என்பதே என் இளமை உள்ளத்தை உறுத்திய தொடர். என் சிந்தனை சிதறியது. நன்னூலும் நற்றமிழ் இலக்கணமும் நங்கை உள்ளத்தை நலியச் செய்தன. தமிழ் நாட்டிடைத் தோன்றும் கற்றாண், தமிழ்மக்கள் கண்டு களிக்கும் குமரி முனையில் குலவும் கல்லோவியம், தமிழ்ப் பண்பிற்கே ஒவ்வாத தமிழ்த் தொடர், இதனைக் காணும் எத்தமிழ் உள்ளமும் வருந்தும். இலக்கணம் அல்லது சொல்லாக்கம் தமிழ்மொழிக்கு மிக மிகத் தேவையாகும். பல்லாயிர மக்கள் யான் கண்ட கல்லுருவைக் கண்டிருத்தல் இயலும். எனினும் அவர் உள்ளம் இதுகாறும் ஒன்றும் செய்திலவே என எண்ணி வருந்தினேன். ஏழைச் சிறுமியேன் நொந்து என்ன பயன்? சொல்லின்செல்வர் பலர் இக்கல்லோவியத்தைக் காணுறும் நாள் என்நாளோ? மாதிறுதீர்த்தம் எனும் தொடர் மாதர் தீர்த்தம் என அமையலாம். எனில், நாகிள நங்கையர் நீராடும் துறை எனப் பொருள்படும். அன்றி மா திரு தீர்த்தம் என அமையின், நற்பேறு நல்கும் நீர்நிலை என ஆகலாம். மேலும் தீர்த்தம் எனும் சொல் செம்மையான தமிழ்த் தன்மைத்தோ என்ற ஐயமும் எழல் இயற்கையே. ஆனல் பல யாண்டுகளின் முன்னர் வரைந்த ஓவியச் செல்வனின் உள்ளத்தே எத்தகைய கருத்தலைகள் தோய்ந்தனவோ என்றறியும் பெருவிருப்பு என் உள்ளத்தே நின்று சுடர்விடுகிறது. அவ்வொளி நற்றமிழ் அறிஞர் உள்ளத்தும் பரவின், கல்லோவியம் நற்றமிழ் ஓவியமாகலாம். கொடுந்தமிழ் குலவு செந்தமிழாதலும் சாலும்.

தலையீந்த தமிழன்

[திரு. தா. இளந்திரையன்]

கடை ஏழு வள்ளல்கட்குப் பின்பிறந்த கொடைவள்ளல் குமணன். தலையீந்த தமிழன் எனத் தனியாகப் புகழ்ப்பெற்ற இவ்வரசன் குதிரைமலை என்னும் முதிரைமலையை ஆண்டான். இவ்வரசன் கொடை என்னும் நீரைத் தமிழ் என்னும் புலமை வனத்தில் பாய்ச்சி, புலவர் என்னும் செடியை தழைக்கச் செய்து தமிழென்னும் பூவை மலரச் செய்தான்.

குமணன் பரிசளிப்பதெல்லாம் தமிழ்மொழி தழைக்கவும் கற்றுவல்ல பெருமக்களை ஆதரிக்கவும், என்பதை மறந்து, அண்ணனால் அரண்மனைச் செல்வம் செலவழியும் என எண்ணங் கொண்ட இளங்குமணன் தன் தமையனை நாட்டினின்று நீக்க எண்ணங் கொண்டான். இதையறிந்த குமணன் காட்டிற் சென்று கரைந்து உறைவானாயினன்.

ஆவூர் மூலங்கிழார் என்னும் பெரும் புலவரின் மகனார் பெருந்தலைச் சாத்தனார் என்னும் தமிழ்ப்புலவர் தம் தந்தை சேர்த்துவைத்த பொருள் செலவழிந்தமையால் ஒரு காவலரை நாடிச் சென்று பரிசுபெற விரும்பிக் குமண வள்ளலிடம் சென்றார். முதிரைமலையை அடைந்தவுடன் இளங் குமணனால் குமணவள்ளல் காடு சென்றான் என்பதை யறிந்து தம் வறுமையின் மிகுதியால் காடுசென்றாயினும் குமணனைக் கண்டு பரிசில்பெறக் கருதிக் காடுசென்று குமணனைச் சந்தித்தார்.

"தமிழ்க் களஞ்சியம் எனப்போற்றப்படும் குன்றாக் கொடை வள்ளலே! புலவர், பாணர், கூத்தர் போன்றவர்களது வறுமையைத் தீர்க்கும் வற்றா நதியே! உணவில்லாமல் மெலிந்த என் மனைவி கண்களிலிருந்து சொட்டும் நீரை, பாலாக இருக்கக் கூடாதா என ஏங்கி மார்பைச் சுவைத்துக் கொண்டிருக்கிறது பாலுண்ணும் குழந்தை. அரசு என்னும் முடியைத்தாங்கிக் கோலேத்தாங்கி வீரமென்னும் வாளை ஏந்திக்கொண்டிருந்த தாங்கள் காடுசென்றீர் எனக்கேள்விப்பட்டு, என் வறுமையைப் போக்கிக் கொள்ள தங்களிடம் பரிசுபெற வந்துள்ளேன்" எனப் புலவர் தன்மொழியை இன்மொழியால் புகன்றார்.

புலவரின் வறுமை நிலையை யறிந்த வள்ளல், "புலவரே! யான் நாட்டிலிருந்து என்னை வேண்டியோர்க்கு வேண்டின

தருங்காலத்து நீர் வந்தீரில்லை, யான் நாடுதுறந்து காட்டின் கண் உறையுங்கால் வந்தீர். இப்பொழுதும் நீர் பரிசுபெற நல்ல வழி இருக்கிறது. புலவரே! என் அருமைத் தம்பி என் தலையை வெட்டிக்கொண்டு வருபவருக்குத் தகுந்த பரிசளிப்பதாகப் பறையறைவித்திருக்கிறான். நீவிர் தயவுசெய்து இந்த வாளினால் என் தலையை வெட்டி எடுத்துக்கொண்டுபோய் என் தம்பியிடம் கொடுத்துப் பரிசுபெறுக! இவ்வாய்ப்பைக் கொடுத்த என் தம்பியும், இவ்வாய்ப்பைப் பெற்ற நீரும் வாழ்க!!" என்று தன் கையிலிருந்த வாளைப் புலவரிடம் ஈந்தான்.

"பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவைகளைப்போன்ற புலவர்களுக்குத் தலையீந்து வாழ்ந்த வள்ளல்களால்தான் உலகம் நன்னிலையில் உள்ளது" என எண்ணங்கொண்டு புலவர் தந்த வாளை வாங்கிக் கையிலேந்தி எங்ஙனமாயினும் இவ்வள்ளலை அரசனாக்கவேண்டும் என எண்ணிய புலவர் இளங்குமணனிடம் விரைந்து சென்றார்.

புலவரைக் கண்ட இளங்குமணன், 'இவர் நம் அண்ணனை வெட்டவே வந்துள்ளார்' என்னும் மகிழ்ச்சியால் புலவரை வரவேற்றான். உடனே புலவர் இளங்குமணனை நோக்கி, "யான் பாடிய பாவலருக்கு யானையைப் பரிசிலாகத்தரும் குமணனைக் காட்டிலே கண்டு என் வறுமையைக் கூறினேன். அங்குப் பரிசிலாகத் தருவதற்கு அவனைக் காட்டிலும் சிறந்த பொருள் இன்மையால் தலையை வெட்டி எடுத்துக்கொள்ளும்படி வாளீந்தான். இத்தகைய செயலால் அவன் கடை ஏழு வள்ளல்களினும் மேம்பட்டான் அத்தகைய சிறந்த நின் தமயனைக் கண்டு நின்னையும் காண வந்துள்ளேன்!!" என வீரத்துடன் புகன்றார்.

புலவர் கூறியவைகளைக் கேட்ட இளங்குமணன் மனமிரங்கித் தன் தமையனை அழைத்து வந்து அரசனாக்கினான். புலவரும் பரிசு பெற்றுச் சென்றார்.

> பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
> நாடிழந் ததனினும் நனியின் னாதென
> வாள்தந் தனனே தலையெனக் கீயத்
> தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்
> ....' (புறம்: கசுரு)

ஆக்குக தமிழை ஆட்சிமொழியாய்!

[திரு, தி. நா. அறிவுஒளி.]

தமிழகத் தீரே! தமிழகத் தீரே!
தமிழனை ஓம்பாத் தகைசால் பெரியீர்!
தாய்மொழி யாம் தமிழ் தண்ணுயிர் போற்றித்
தாயகம் புரக்காத் தண்ணரு ளோரே!
ரு. தமிழகம் தாழவும், தமிழ்மொழி குலையவும்,
நமைச்சூழ் பகையை இமைப்பொழு தெண்ணு
வள்ளற் றன்மை வாய்த்த நல்லோரே!
உள்ளத் துறுதி ஒன்றும் இல்லா
வெள்ளை மனத்தீர்! வெறுங்கதை பிதற்றிக்
கo. கொள்ளை விடுகின் றீரே யந்தோ!
ஊரும் பேரும் ஒன்றும் அறியாச்
சீரில் உளறல், சேய்மொழி யெல்லாம்
ஆள்மொழி யாக ஆவதும்; செருக்கி
நாணில் மகளென நடப்பதும் காண்மின்!
கரு. இன்று பிறந்த இந்தி மொழியது
பண்டை மொழிகளின் பண்பிடம் பற்றி
ஆள்மொழி யென்று ஆர்ப்பதைக் கண்டும்
ஆண்மை சற்றும் அறியாப் பேதை
மானக் கிடக்கும் மதிப்பும் ஏனோ?
உo. எழுமதி நாடே! எழுமதி நாடே!
தமிழகத் தீரே! தமிழகத் தீரே!
ஆக்குக தமிழை ஆட்சி மொழியாய்
தேக்குக தமிழர் திருவை ஈண்டே
ஆக்குக தமிழைக் கல்வியில் முதலாய்!
உரு. தாய்மொழி ஒன்றே தக்கது கற்க
தாய்மொழி கலையகப் பாடம தாகுக!
திருக்குறள் ஆட்சித் திருநூல் ஆகுக!
திருக்குறள் தமிழர் திருமறை ஆகுக!
பல்கலைக் கழகம் பட்டி மன்றம்
கூo. அஞ்சல் நிலையம் அறங்கூ றவையம்
பாரான் மன்றம் ஊரான் கழகம்
சீரார் கோயில் செயலகம் எங்கும்
செந்தமிழ் மொழியே முழங்கிடல் வேண்டும்!
இன்னே வேண்டும் இதற்கு ஆக்கம்

௩௫. ஞாலம் தோன்றிய நாளி லிருந்து
காலம் கடந்தும் கற்புக் கடமை
சாலச் செழித்து, சார்புகள் வளர்த்துப்
பொம்மென வளரும் மேதை மொழியாம்
நம்முயிர்த் தமிழ்மொழி நனிநல் லாட்சிச்
௪௦. செம்மொழி யாகச் செய்வினை புரிவோம்
ஆருயிர் அளித்தும் அரும்பொருள் இழந்தும்
சீருடல் அளித்தும் செவ்வுரை கொடுத்தும்
எவ்வழி யேனும் எந்தமிழ் வாழச்
செவ்விதி னெழுக செந்தமிழ் நாடே!
௪௫. தமிழாள் மொழியாய் ஆவது தடுக்கும்
தமிழ்ப்பகை யாளரைத் தண்ணரு ளின்றி
தகைதல் கடனும்; தக்கதும் அதுவே
"வெல்லுஞ் சொற்கள் விரிதமிழ் மொழியில்
நல்லன இல்லை; நாளை வளரும்
௫௦. அந்நாள் செந்தமிழ் ஆகுக ஆள்மொழி"
என்றிடுங் கயவர்க் கேற்ற விடையினை
இன்னே யளிப்போம்: "தமிழினுஞ் சீரிய
வளமார் மொழியிந் நாவலந் தீவினில்
உளமொழி யாவினும் ஒன்றுமே இல்லை;
௫௫. உண்மை; இதுபொய் புனைமொழி அன்று;
நுண்கலைச் சொற்கள் எண்ணில உடையது;
இன்னும் ஆக்கலாம்; இனியும் சேர்க்கலாம்"
பன்னிப் பன்னிப் பைந்தமிழ் வளர்ச்சியைக்
கொன்னே தடைசெயல் கோடி பிழைசெயும்
௬௦. போரும் பூசலும் புகையா முன்னே
சீராய்த் தமிழ்மொழி ஆட்சியை எய்தப்
பாராள் கின்றார் பணிசெயல் வேண்டும்
மாறு முறைசெய் மாண்குடி யரசெனில்,
தமிழ்க்கலை தழைய, தமிழ்ப்பண் புயர
௬௫. தமிழர் வாழ்வு அமிழ்தெனச் சிறக்க
இன்னே தமிழகப் பொதுமொழி தமிழாய்
நன்றே யாக்கி நற்புகழ் அடைகவே!

தமிழ் எழுத்துக்களின் சிறப்பு

[சைவப்புலவர், இராவ் சாகிப், டாக்டர் தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை
L, M. S. S. A., M. R. A. S. (LOND,)]

(சிலம்பு உகூ; பரல் கக, ௫00-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இன்னோரன்ன பற்பல ஏதுக்களைக் கொண்டு இன்று நில வும் தமிழ் எழுத்துக்களும் ஒரு காலத்தில் சித்திர எழுத்துக் களாயிருந்து பின்னர் வரிவடிவங்களைப் பெற்றுள்ளனவா என்று ஆராய்வது இயற்கை அறிவுக்குப் பொருத்தமானதே.

தமிழ் எழுத்துக்கள் சித்திரங்களிலிருந்து தோன்றியிருக்கலா மென்ற எமது எண்ணத்தை 22-1-1950-இல் திருநெல்வேலி அருணகிரி இசைக்கழகத்தில் தமிழ்த்திருநாள் திருவிழாத் திறப்புரையில் குறிப்பித்துள்ளோம். "பழந்தமிழரும் முருகன் முக்கண்ணன் வணக்கமும்" என்னும் எமது நூலிலும் இதைச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

மேற்காட்டியபடி, இவண் எடுத்துக்கூறிய அடிப்படை யான குறிப்புக்களை மனதில் நன்கு பதித்துக்கொண்டு, தமிழ் எழுத்துக்களின் தற்காலிக உருவங்களை மிகக் கூரிய முறையில் ஆய்ந்து சிந்திப்போமாக.

பண்டைத் தமிழ் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் சுட்டுகின்ற உட்பொருளை உற்றுநோக்கி ஆய்வதற்கு முன், அவ்வெழுத்துக் களுக்கு வடிவம் இருந்தனவா என்பதைத் தெளிந்து உறுதிப் படுத்துவது எமது முதற்கடமையாகும். பழந்தமிழ் நூல்களில் இதைப்பற்றிய சான்றுகள் எவ்வாறு பயன்படுகின்றன என்ப தைச் சிந்திப்பாம். தமிழ் நூல்களிலே மிகப் பழமையான தொல்காப்பியத்தில் தமிழ் எழுத்துக்களின் வடிவங்களைப்பற்றிய குறிப்புக்கள் பற்பல இடங்களிற் காணப்படுகின்றன. அவற்றிற் சிலவற்றை இங்கு எடுத்துரைப்பாம்.

தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள், உயிர்-12, மெய்-18 ஆக முப்பதோடு, சார்பு எழுத்துக்கள் மூன்று உள்ளன என் பதை நாம் நினைப்பூட்டிக்கொள்வோமாக. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் இரண்டாவது நூற்பாவில் ஆசிரியர் சார் பெழுத்துக்களைப்பற்றி எடுத்துரைக்கின்றனர். அஃதாவது:—

"அவை தாம் குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன" இந்நூற்பாவில் "ஆய்தம்" என்னும் எழுத்தை எடுத்துக்கொள்வோம்.

குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என மூன்றும் சார்பெழுத்து. சார்பெழுத்து என்பது தனித்து நிற்கமுடியாத எழுத்து; மற்றொரு எழுத்தைச் சார்ந்தே நிற்கும். சார்ந்தே இயங்குவதால் சார்பெழுத்து என்றழைக்கப்படும். சார்பெழுத்து மூன்றில் ஆய்தம் என்னும் எழுத்தைத்தான் பொதுவாக நாம் நன்கறிவோம். இதை நாம் "அஃகென்னு" என்று அழைப்பது உண்டு. அடுப்புக்கட்டி மூன்று குமிழ்களை (Knob) உடையது போல, ஆய்தம் என்னும் எழுத்து மூன்று புள்ளி (வட்டம்) களால் ஆகிய உருவத்தால் (ஃ) குறிக்கப்படுகிறது. மூன்று புள்ளிகளுடையபடியால், ஆய்தவெழுத்தை தொல்காப்பியர் 'முப்பாற்புள்ளி' என்றழைத்தனர் போலும்-[சிவஞான முனிவர் போன்ற இலக்கணப் புலவர் ஏறுகள் (சிங்கங்கள்) இந்நூற்பாவிற் குறிக்கப்பட்ட மூன்று சார்பெழுத்துக்களும் மூன்று புள்ளி களாற் குறிக்கப்படுகின்றனவென்று கூறுகின்றனர். இது சிறந்த ஆராய்ச்சிக்குரியது. எழுத்துக்களைத் தனித்தனியாய் ஆராயும் பொழுது விரிந்த முறையில் இது சிந்திக்கப்படும். நிற்க.]

தொல்காப்பியர் காலத்தில் ஆய்த எழுத்துக்கு ஒரு தனி -ருவம் (முப்பாற்புள்ளி) ஏற்பட்டு இருந்தது என்பது இங்கு வெளிப்படை.

தொல்காப்பியத்திலேயே, மற்றொரு நூற்பாவைப் பார்ப் போம்.

"மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையல்"

(எழுத்து - கரு)

மெய்யெழுத்தின் தன்மை என்னை? அதுதான் ஒரு புள்ளி யைப் பெற்றுநிற்பது. நாம் நடைமுறையில், மெய்யெழுத்துக் களுக்கு, ஒரு குத்துப் போடவேண்டுமென்று சொல்கிறோம். குத்து, புள்ளி, குறி எல்லாம் ஒரே பொருளையுணர்த்தும் கிளவி கள் (சொற்கள்). தொல்காப்பியச் சூத்திரங்கள் மிகக் கடின மானவை என்று மயங்குபவர்கள் இந்த நூற்பாவைச் சிறிது நோக்குக. எவ்வளவு எளிமை! நிற்க, மெய்யெழுத்துக்களுக்கு ஒரு புள்ளி உண்டென்பது இதினின்றும் விளங்குகின்றது.

இதையும் பொருள்நிறைந்த மற்றொரு நூற்பாவையும் சிந்திப்பாம்.

"புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோடு உயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவு திரிந்து உயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்த லாறே" (தொல் - எழுத்து - கஎ.)

இதன் பொருள்: மெய்யெழுத்துக்களோடு அகர உயிர் புணு ரும்பொழுது (சேரும்பொழுது) அவைகளிலுள்ள புள்ளிகள்

ம்: (எ-டு.) க்+அ=க; ஆனால் அவை அகரத்தைத் தவிர மற்றைய உயிர்களோடு (ஆ, இ, ஈ, உ, ஊ-....) சேரும் பொழுது, மெய்யெழுத்துக்களின் உருவம் மாறிவிடும். (எ-டு.) க்+உ=கு; க்+ஔ=கௌ.

இந்த நூற்பாவினின்றும், மெய்யெழுத்துக்களுக்கு வெவ்வேறு உருவங்கள் ஏற்பட்டிருந்தன என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றதல்லவா?

இம்மாதிரியே, இன்னும் பற்பல நூற்பாக்களில் எழுத்துக்களின் வடிவங்களைப் பற்றிய குறிப்புக்கள் வருவதை எடுத்துக் காட்டலாம். அவைகளிற் சில :—

(1) உட்பெறு புள்ளி (2) ங ஞண நமன என்னும் புள்ளி (3) மஃகான் புள்ளி (4) ய ர ழ என்னும் புள்ளி (5) அகரத் திமபர் யகரப் புள்ளி (6) உடம்படு மெய்யின் உருவு கொளல் வரையார்.

இங்ஙனமாக, 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தோங்கிய தொல்காப்பியர் தமிழ் எழுத்துக்களின் உருவங்களை நமக்கு எடுத்துக்காட்டினராயின் பண்டைக்காலத்தில் தமிழ் எழுத்துக்களுக்கு வெவ்வேறு வடிவம் இருந்ததென்பதில் ஐயமுண்டோ? தொல்காப்பியருக்குப் பின்னர் வந்த தமிழ் இலக்கண ஆசிரியர்கள் எழுத்துக்களின் வடிவத்தைப் பற்றிக் கூறும் குறிப்புக்களைச் சற்று ஆராய்வாம்,

நன்னூல் பவணந்தி முனிவர் எழுதிய இலக்கணம். ஒரு சிலரால், இது வழிநூல் என்றும், வேறு சிலரால், இது சார்புநூல் என்றும் கூறப்படுகின்றது. ஆனால் ஒருவழிநூல் முதல் நூலின் அடிப்படையான கொள்கைகளையே தகர்த்துவிடுமாயின், அது 'முடிபு ஒருங்கு ஒத்தது' (பொருள் முடிபு முழுவதும் ஒத்தது) என்று எங்ஙனம் கூறுவது? அந்நூலுக்கு வழிநூல், சார்புநூல் என்னும் பெயர் பொருந்தவே பொருந்தாது. ஐயாயிரம் (பதினாயிரம்) ஆண்டுகளாக வழங்கிவந்த தமிழ் நெடுங்கணக்கில், **சார்பெழுத்துக்கள் மூன்றே** என்று தொல்காப்பியர் வரையறுத்து எடுத்தோதினர். ஆனால் பவணந்தியோ சார்பெழுத்தைப் பத்தாக்கிவிட்டனர். நன்னூலை வழிநூல் சார்புநூல் என்று அழைப்பது எங்ஙனம்? ஆயினும் தமிழ் இலக்கணத்தின் சில பாகங்களை மிக எளிமையாக்கித் தந்தது நன்னூலேயாகும். அதில் எங்ஙனம் கூறுகின்றதென்பதை இவண் நோக்குவாம்:

> '**தொல்லை வடிவின** எல்லா எழுத்தும் ஆண்டு
> எய்தும் எகர ஒகரமெய் புள்ளி.'　　(நன்னூல்: கஅ)

நம்முடன் வாழ்ந்த இலக்கண விளக்க ஆசிரியர்கூட,

"எழுதப்படுதலின் எழுத்தே........" என்றார்.

எழுத்தென்றழைத்ததற்குக் காரணம் எழுதப்படுவது, என்றார். எழுதப்படுவது எழுத்து; யாதாமொரு உருவமுமில்லாமல் எழுத முடியுமா? ஆதலின், எழுத்துக்களுக்கு உருவம் க்கவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

இற்றைக்கு ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பட்ட "வீரசோழியம்" என்னும் இலக்கண நூலைப் பார்ப்போம்: இந்நூலில் சந்திப்படலம்—3-ஆம் நூற்பாவில் "எகர ஒகரமெய்யிற் புள்ளிமேவும்" என்று ஆசிரியர் பொன்பற்றி காவலர் புத்தமித்திரனார் கூறினார். இதற்கு "எகர ஒகரங்களும், மெய்கள் பதினெட்டும் மேலே புள்ளி பெற்றுப் புள்ளி எழுத்தென்னும் பெயரவாம்" என்று பெருந்தேவனார் உரையெழுதி உதவினார்.

மேற்காட்டியபடி, தமிழ் இலக்கண ஆசிரியர்கள் எல்லாரும் தமிழ் எழுத்துக்களுக்குத் தனி உருவங்கள் பண்டைக் காலங்களிலிருந்து (தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரேயிருந்து) நிலவி வருகின்றன என்பதை ஒருமித்து உறுதிப்படுத்துகின்றனர்.

மேலும், தமிழ் இலக்கணங்களில் (தொல்காப்பியம் உள்பட) முதற்பாகம் எழுத்ததிகாரமேயாகும். எழுத்து என்னும் சொல் மங்கலமொழியென்பது பழந்தமிழ் இலக்கிய இலக்கண மரபு. எழுத்து என்னும் சொல் மிகமிகத் தொன்மையானது. இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி நிலவும் சொல்லாதலின், அது ஏறக்குறைய இருபத்துநான்கு பொருள்களில் வழங்கக்கூடியதொரு சிறந்த சொல்லாயிற்றே!

இதுகாறுங் கூறியவற்றால், தமிழ் எழுத்துக்கள் சித்திரங்களாய் எழுதப்பட்ட எழுத்துக்களினின்று தோன்றியிருக்கலாம் என்று ஆராய்வது சாலப்பொருத்தமென்பதும், தொல்காப்பியர் காலத்துக்குப் பற்பல ஆண்டுகளுக்கு முன்னரேயே, தமிழ் எழுத்துக்கள் வெவ்வேறு உருவங்கள்பெற்று வழக்கில் இருந்து வந்தன என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இனி, தமிழ் எழுத்துக்கள் தமிழகத்தில் எத்தனைகாலமாய் நிலவுகின்றன என்பதும், இன்று நிலவும் தமிழ் எழுத்து உருவங்களுக்கும் பண்டையத் தமிழ் எழுத்து வடிவங்களுக்கும் வேறுபாடு உளவா? உளவாயின், எத்தகைய வேறுபாடு என்பதையும் அடுத்து ஆராய்வாம்.

‘பேபர்’ என்னும் பூச்சிப்புலவர்

[திரு. என். கே. வேலன்]

ஜீன் என்ரி பேபர் என்னும் அறிஞர் இயற்கைப் பொருள் ஆராய்ச்சியில் தலைசிறந்து விளங்கியவர். இவர் பூச்சி புழுக்க ளின் பிறப்பு, வளர்ப்பு, வாழ்க்கை முறை, இறப்பு முதலிய வற்றைக் கூர்மையாக ஆராய்ந்து பார்த்து அவற்றின் நுட்பங் களைக் கண்டுபிடித்தவர். எல்லா உயிர்களும் ஆண்டவனது பிள்ளைகள் தாம் என்ற பெருநோக்குடன் சின்னஞ்சிறிய பூச்சி யையும் தம் உடன்பிறப்பாகவே கருதி அதனிடம் இரக்கம் காட்டியவர்.

இப் பெரியார் 1823 ஆம் ஆண்டில் பிரெஞ்சு நாட்டில் லியான்ஸ் என்னும் ஊரில் தோன்றினார். இவரின் தந்தையார் மிகவும் எளிய நிலைமையில் ஒரு சாப்பாட்டு விடுதியை நடத்தி வந்தார். படிப்பு வாசனை இல்லாத ஏழைக்குடும்பத்தில் பிறந் தும் பேபர் சிறந்த அறிவாளியாக இருப்பதைக்கண்டு ஊரில் உள்ளவர்கள் வியப்படைந்தனர். இளம் வயதிலேயே அவருக்கு இயற்கை ஆராய்ச்சியில் நாட்டம் சென்றது.

பிற் காலத்தில் தாம் எழுதிய ஓர் ஆராய்ச்சி நூலில் அவர் கூறுவதாவது :—

“நான் மற்றப் பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு இருக் கும்பொழுது ஒருநாள் பட்டுப் பூச்சியின் அழகைக்கண்டு மெய்ம் மறந்துபோனேன். அழகிய செடி கொடிகளும் மலர்களும் பறவைகளும் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. அவை கள் என்னைக்கண்டு நகைப்பதுபோலவும் என்னுடன் பேசுவது போலவும் எனக்குத் தோன்றின. படைப்பின் அருமையைப் பற்றி எந்த நேரமும் கனவு கண்டுகொண்டிருந்தேன்,” எனக் கூறியுள்ளார்.

“நம்மைச் சுற்றிலுமுள்ள மிகச்சிறிய பொருள்களிலும் கூடப் பல நுட்பங்கள் அடங்கி இருப்பதைக் கண்டேன். இவை களைப்பற்றி மேலும்மேலும் ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டும் என்னும் எண்ணம் எனக்கு உதித்தது” என்று மற்றோரிடத் தில் கூறுகின்றார்.

பேபர், சிறுபிள்ளையாக இருக்கும்பொழுது அவர் புழுக்களைப் பிடித்துக்கொண்டு விளையாடியதாகவும், அவர் வீண்

பொழுது போக்குவதாக எண்ணி அவரின் அன்னையார் அவரை அடித்துத் துன்புறுத்தியதாகவும் கூறப்படுகின்றது. பேபர், முதலில் ஒரு திண்ணைப்பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கல்வி பயின்று வந்தார். சம்பளம் கொடுக்க வகையின்றி ஆசிரியருக்கு விறகுக்கட்டுக்களைக் கொண்டுபோய்க் கொடுத்துப் படிக்க வேண்டி இருந்தது. பன்னிரண்டு ஆண்டுகள் நிரம்பியபோது அடுத்த ஊரில் ஓர் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார். தமது ஓய்வு நேரங்களில் மாதா கோவிலில் வேலைசெய்து அதனால் கிடைத்த பொருளைப் பள்ளிக்கூடத்திற்குக் கட்டிப் படித்து வந்தார்.

பேபரின் குடும்பம் வறுமையால் வாடி இருந்தது. பெற்றோர்கள் வயிறு பிழைக்க ஊரூராக அலைந்து திரிந்தனர். பேபரின் படிப்பும் நிறுத்தப்பட்டது. அவர் பழங்களை விற்று அதனால் வரும் ஊதியத்தைப் பெற்றோரிடம் கொடுத்து வாழ்க்கை நடத்திவந்தார். நல்ல வேளையாக சிறிது காலத்திற்குப்பின் பேபருக்கு இலவசக்கல்வி கிடைத்தது. பழம் விற்பதைவிட்டு மீண்டும் கல்விகற்கத் தொடங்கினார்.

அக்காலத்தில் தாம் நடத்திய எளிய வாழ்க்கையைப்பற்றி அவர் கூறியதாவது :—

“ கன்றுக்குட்டிகளுடனும் கோழிக்குஞ்சுகளுடனும் நான் வாழ்ந்து வந்தேன். ஆடுகளும் மாடுகளும் கோழிகளும் குஞ்சுகளும் எனக்கு இன்பம் ஊட்டின. இயற்கைப் பொருள்களினின்றும் ஏதோ ஓர் ஒளி வீசுவதுபோல் எனக்குத் தோன்றிற்று. ஒருநாள் சூரியனைப் பார்த்துக்கொண்டே நெடுநேரம் நின்றுகொண்டிருந்தேன். விளக்கை நாடிய விட்டிலைப்போன்று துடித்தேன். வாயைத் திறந்தபடி கண்களை இறுக மூடிக் கொண்டேன். கண்களைத் திறக்கும் பொழுதெல்லாம் ஞாயிற்று ஒளியின் இன்பவெள்ளம் பெருக்கெடுத்து ஓடிற்று. கண்களைத் தந்த ஆண்டவனைப் போற்றினேன். உலகிற்கு வெப்பத்தையும் ஒளியினையும் தரும் ஞாயிறு பசிப்பிணியையும் போக்கக் கூடும் எனில் இவ் உலகம் ஓர் இன்ப உலகமாக மாறிவிடும் என எண்ணினேன் ” என்று தமது நூலில் வரைந்துள்ளார்.

படிப்பு முடிந்தவுடன் பேபர், ‘கார்ப்பெண்டிராஸ்’ என்னும் இடத்தில் பள்ளிக்கூட ஆசிரியராக வேலைபார்த்து வந்தார். ஆண்டு ஒன்றுக்கு இருபத்தொன்பது பவுன் சம்பளம் கிடைத்தது. சில ஆண்டுகளுக்குப்பின் ‘அசாக்கியோ’ என்னும் கல்லூரியில் பேராசிரியராக அமர்ந்து இயற்கைப்பொருள் பாடங்களைக் கற்பித்து வந்தார். ஓய்வுநேரங்களில் தமது

ஆராய்ச்சிகளை நடத்துவது வழக்கம். ஒரு சிறிய வெட்டுக்கிளி யைப்பற்றி ஆராய்ச்சிசெய்வதானாலும் சிறிதும் சலிப்பின்றிப் புதர்களின் நடுவில் மறைந்திருந்து அதன் வாழ்க்கையை அப் படியே படம்பிடித்துக் காட்டுவார். தமது ஆராய்ச்சியின் பொருட்டு இரவில் உறக்கம் விழிப்பதாலும் பனியில் நனைவதா லும் பேபருக்குக் கொடிய காய்ச்சல் வந்தது. ஆண்டவன் அருளால் தப்பிப்பிழைத்தார்.

சில ஆண்டுகளுக்குப் பின் 'அவிக்னன்' என்னும் இடத்தி லுள்ள பள்ளிக்கூடத்திற்கு அவரை மாற்றிவிட்டனர். இங்கு நீண்டகாலம் வேலைபார்த்து வந்தார். இரவு நேரங்களில் பிள்ளை களுக்கு இலவசமாகப் பாடம் கற்பித்து வந்தார். பிறகு வேலையை விட்டு அகன்று தமது சொந்த ஊருக்கு வந்துசேர்ந்தார். பல ஆண்டுகளாக அரும்பாடுபட்டுக் கண்டுபிடித்த ஆராய்ச்சிகளை எல்லாம் பல நூல்களாக வெளியிட்டார். இதில் அவருக்கு ஏராளமான பொருள் கிடைத்தது. கல்வி அமைச்சர் 'விக்டர்' துரை என்பவர் அவரைப் பாரிஸ் நகருக்கு வரவழைத்துச் சிறந்த பட்டங்களை வழங்கினார். மூன்றாவது நெப்போலியன் என்னும் மன்னரிடம் அவரை அறிமுகப்படுத்திவைத்தார்.

பேபர், பாரிஸ் நகரிலிருந்து திரும்பிவந்து தமது ஆராய்ச்சி களைத் தொடர்ந்து நடத்திவந்தார். ஒரு பூச்சியைப் பற்றி ஆராய்வதென்றால் இரவும் பகலும் அதன் போக்குவரவுகளைக் கூர்மையாகப் பார்த்து அதன் உட்கருத்தைக் கண்டுபிடித்து விடுவார். பல நாட்களாக ஆராய்ச்சிசெய்து தவறிப் போய்விட் டாலும் சிறிதும் கலங்காமல் மீண்டும் மீண்டும் முயற்சிசெய்து வெற்றியடைவார். தொடர்ச்சியாகப் பன்னிரண்டு மணி நேரம் கடும் வெயிலில் வேலைசெய்வார். அவர் காடு மேடெல்லாம் சுற்றி அலைவதைக்கண்டு அவருக்கு ஏதோ மூளைக் கோளாறு ஏற் பட்டிருப்பதாகச் சிலர் எண்ணினர். அவர் ஆராய்ச்சியில் ஈடுபட் டிருக்கும்பொழுது எதிரில் வருபவர்களைப் பார்ப்பதும் இல்லை. பேசுவதும் இல்லை. பித்துப்பிடித்தவர்போல் காணப்பட்டார்.

அவருக்கு உலகமே ஒரு நாடகமேடையாகத் தோற்றம் அளித்தது. சிலந்திப் பூச்சி வலை வீசுவதும் ஈக்களை ஏமாற்றிப் பிடித்துத் தின்பதும் ஓர் இயற்கைக்காட்சியாக அவருக்குத் தோன்றவில்லை. இருப்பதா அல்லது இறப்பதா என்னும் வாழ்க்கைப் போராட்டத்தை அவர் சிலந்திக் கூட்டில் கண்டார். மாரிக் காலத்திற்கு வேண்டிய உணவை முன் எச்சரிக்கையுடன் தேடிவைக்கும் ஒரு சிற்றுயிரின் ஊக்கத்தையும் சுறுசுறுப்பை யும் கண்டு வியந்தார். பூச்சி புழுக்கள் மனிதனைக் காட்டிலும் திறமையுடன் வேலை செய்வதைக்கண்டு வியப்புற்றார். அவற்றின்

இன்பங்களையும் துன்பங்களையும் வாழ்க்கை வரலா தமது நூல்களில் சித்திரித்துக் காட்டியுள்ளார். சுதந்தரம் எழுதுபவர் அந்திப்பொழுதில் செக்கர்வானத்திற் காணும் ஓர் இன்பத்தினைப் பூச்சி புழுக்களின் வாழ்க்கையில் பேபர் கண்டார். அவர் உலாவச்சென்றாலும் திரும்பி வந்தவுடன் தாம் கண்ட உண்மைகளைக் குறித்து வைப்பது வழக்கம். அவர் எந்தப் பொருளானாலும் மிகவும் உன்னிப்பாக ஆராய்ந்து ஏதேனும் புதிய உண்மைகளைக் கண்டுபிடிப்பார்.

ஒருவகை வண்டு சாணி முதலிய கழிவுப்பொருள்களை உருண்டையாக்கி அதனை உருட்டிச் செல்வதை நாம் சில வேளைகளில் காண்கிறோம். இந்தச் சாணி உருண்டையை வட்ட வடிவமாக உள்ள ஞாயிற்றின் அடையாளம் என்றும் அதனை உருட்டிச் செல்லும் வண்டு கடவுள் தன்மை உடையதென்றும் எண்ணிச் சில நாடுகளில் மக்கள் அதனை வழிபட்டு வந்தனர். அந்த வண்டின் வடிவத்தில் நகைகளைச் செய்து அணிந்துகொண்டனர். இதனைப்பற்றிப் பேபர் ஆராய்ச்சி செய்துபார்த்ததில், வண்டு தனது முட்டைகளைச் சாணியில் மறைத்துவைத்து உருட்டிச் செல்வதென்றும் தனக்கு வசதியான இடம் கிடைத்தவுடன் முட்டைகளைப் பத்திரப்படுத்தி வைக்கின்றதென்றும் கண்டு பிடித்தார்.

பேபர், தாம் கண்ட உண்மைகளை மிகவும் எளிய நடையில் தெளிவாக எழுதிவந்தார். பூச்சிகளைப்பற்றிய பெரிய ஆராய்ச்சி நூல் ஒன்று பத்துப் பக்கங்களாக வெளியிடப்பட்டது. சிலந்தியின் கூட்டில் நடக்கும் போரை இராமாயணப் போராகவும் பாரதப் போராகவும் சித்திரித்துக் காட்டுகின்றார். தேளைப் பற்றிய ஆராய்ச்சி அரிச்சந்திர புராணமாக வளர்கின்றது. தேளின் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கலந்திருப்பதைக் கண்டார். பெண்தேள் ஆண் தேளைவிட அளவில் பெரியது. ஆணும் பெண்ணும் முதலில் கூடிக்குலவுகின்றன. கைகோத்து உலவுகின்றன. பின்னர்ப் புதிய வீட்டைத் தேடிச் செல்கின்றன. மனதிற்கு உகந்த இடமாகக் கிடைத்தால் இரண்டு தேள்களும் உள்ளே செல்கின்றன. மறுநாள் காலையில் மணமகன் பிணமாகக் காட்சி அளிக்கின்றான். பெண் தேள், தன் கணவனையே முதல் உணவாகக் கொள்கின்றது. ஆண் தேளின் கை, கால், அல்லது வேறு உறுப்புகள்தான் எஞ்சி நிற்கின்றன. மணம்புரிந்த மறுநாட் காலைக்குள் ஆண் தேள் பெண் தேளுக்கு இரையாகின்றது என்பதைப் பேபர் கண்டுபிடித்தார்.

பேபர், வயது முதிர்ந்த காலத்திலும்கூடத் தமது ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்திவந்தார். "நமது சொந்த உலகம்"

என்னும் நூலில் மலையும் மலைசார்ந்த காடுகளைப்பற்றியும், அவற்றின் இயற்கை வனப்புகளைப்பற்றியும் எழுதி இருக்கிறார். அவரின் நூல்களில் உலகநீதிகளை எல்லாம் பரக்கக்காணலாம். மனிதர்களைப்போலவே சிற்றுயிர்களும் ஒன்றேடொன்று போர் தொடுப்பதையும் ஒன்றை மற்றென்று கொடுமைப்படுத்துவதையும் கண்டு இரக்கமுற்றார். ஒருவர் உணவை ஒருவர் பறிக்கும் வழக்கம் மாறவேண்டுமென்றும், ஊனைத்தின்று ஊனை வளர்க்கும் பழக்கம் ஒழியவேண்டுமென்றும், எளியாரை வலியார் வாட்டும் தீமை நீங்கவேண்டுமென்றும் வற்புறுத்தி வந்தார். இவ் உலகம் இன்ப உலகமாக மாறவேண்டுமெனத் தவங்கிடந்தார். எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணி இருக்க வேண்டுமென்றும், எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும் என்றும் பறைசாற்றினர்.

பேபரின் 90 ஆவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுவதற்காகப் பிரெஞ்சு மக்கள் அவர் இருந்த இடத்திற்குத் திரள் திரளாக வந்து கூடினர். ஏராளமான வெகுமதிகளைக் கொண்டு வந்து கொடுத்தனர். ஆராய்ச்சிக் கழகத்தினரால் அவருக்கு ஒரு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. பேபர், இன்பத்தில் மூழ்கி ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்.

"நான் எப்படி என்பதற்கு மட்டும் தானே விடை கண்டு பிடித்தேன். ஏன் என்பதற்கு இன்னும் விடை தெரியவில்லையே" என்று கூறினர். "நமது சிற்றறிவிற்கு எட்டாத பொருள்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன" என்பதையும் எடுத்துக்காட்டினர்.

"எனது ஆராய்ச்சிகளுக்காக நான் பொருள் ஒன்றும் செலவழிக்கவில்லை. என் காலத்தைத்தான் செலவழித்தேன். எனக்குப் பொருள் தேவை இல்லை. உங்கள் அன்பு இருந்தால் போதும்" எனக் கூ;

இவரது புகழ் நாடெங்கும் பரவியது. 'விக்டர் ஹியூகோ' (Victor Hugo) என்னும் கவிஞர் பேபரைப் "பூச்சிப்புலவர்" எனப் போற்றிப் புகழ்ந்தார். பேபர் தமது ஆயுள் முழுவதும் ஆராய்ச்சியிலேயே கழித்து 1915 ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) சென்னை நகராண்மைக் கழகத்தார் நாட்டுப்பற்று

சென்னை நகராண்மைக் கழகத்தினர் 27—7—55 ஆம் நாள் கூடிய கூட்டத்தில் நகராண்மைக் கட்டிடத்தில் தாங்கியிருக்கும் ஆங்கிலேயர்க்குரிய விருதினை உடனடியாக எடுத்துவிட்டு நம் தமிழக மூவேந்தர்களின் கொடிகளான மீன் புலி வில்லுருவம் பொறித்த கொடியை உயர்த்துவதென்று முடிபு செய்துள்ளார்கள்.

குறிப்பு: இந் நகராண்மைக் கழகத்தாரின் நாட்டுப்பற்றையும் தமிழர் பண்பாட்டின் சிறப்பு, அவர்கள்பால் திகழ்தலையும் அறிந்து மகிழ்கின்றோம்; விரைவில் முடியுடை வேந்தர்களின் நம் தமிழகக் கொடி, நகராண்மைக் கழகக் கட்டிடத்தில் வானளாவ நின்று நிலவுமென எதிர்நோக்குகின்றோம். கொடியில் பொறிக்கப்பெறும் சொற்கள் தமிழ்மொழியிலே பொறிக்கப் பெறுமென நம்புகின்றோம்.

(உ) சென்னை நகரம் யாருக்கு உரிமை ?

சென்னை நகரம் இயற்கைவளம் நிரம்பியது. தமிழகத்தின் பெருமைக்குச் சான்றாகத் திகழ்வது. அதன் உள்ளிடங்கள் தமிழர் தெய்வ உருவநிலையங்களாகத் திகழும் பிறவாயாக்கைப் பெரியோன் கோயில்களும், அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில்களும், நீல மேனி நெடியோன் கோயியில்களும், வெற்றிவேற்றடக்கைக் கொற்றவை கோயில்களும் திகழ்வன ஒருபாற் சான்றாக, கடற்கரைப்பட்டினமாதலால், அச்சார்புடைய பெயர்களாக, கோடம்பாக்கம் நுங்கம்பாக்கம் சேப்பாக்கம் மீனம்பாக்கம் போன்ற ஊர்ப்பெயர்களும் அமைந்து தமிழகமாந்தர் திணைப்பெயர்கொண்டு அமைத்த பெயர்களால் வழங்கப்படுவதொன்றே இச் சென்னை தமிழகத்துக்கே உரிய நகரமென்பதொருதலை. அவ்வாறிருந்தும், மொழிபெயர் நாட்டினர் வருபவர் போபவரெல்லாம் தத்தமக்குரியதென உரிமை கொண்டாட வருவது வருந்தத்தக்கதாவதுடன், அவர்தம் பேராசை வெறிகண்டு பெரிதும் இரங்கத்தக்கதுமாகும்.

அண்மையில் ஆந்திரநாட்டு முதலமைச்சர் திரு. கோபால் ரெட்டியார் இச் சென்னைக்கு வந்தார்; அதுபோது, நம் அமைச்சர்கள் அவர்க்கு விருந்து புறந்தந்தனர். அப்போது பாராட்டுக் கூறினர். அதற்கு மறுமொழி இறுத்த ரெட்டியார், 'சென்னை நகரம் தேசத்தின் பொதுச்செல்வம்; தமிழர் ஆந்திரர் அனைவருக்கும் பொதுவான நகரம்' என்று வாய்வாளாது கூறினர். அண்மையிற் கூடிய நகராண்மைக் கழகக்கூட்டத்தில் இது குறித்துத் தம் மறுப்புக்கூறி கண்டிப்பான தீர்மானம் நிறைவேற்றி, கோபால்ரெட்டியாருக்கு இதை அறிவித்துச் சென்னைநகர் தமிழருக்கே உரியதென ஏற்கெனவே முடிவாகி ருப்பதை அறிவிக்கவேண்டுமென அவையாரால் முடிபுறுத்தப்

குறிப்பு: சென்னை நகராண்மைக் கழகத்தார் தம் உண்மையை நன்குணர்ந்து நேரிய நிலையில் நின்று கடப்பாட்டுணர்ச்சியுடன் தமிழ் நாட்டுக்கு எழுச்சியூட்டி ஆக்கந்தேடுதலைப் பெரிதும் பாராட்டு

(ரு) தமிழில் வழிபாட்டுக்கு எதிர்ப்பு

உலகில் தாய்மொழியே அவ்வந்நாட்டாருக்கு உயர்ந்தது, அதற்குக் கேடு சூழ்வோர், தாய்க்கொலை சால்புடைத்தென்னும் அறிஞர் கூட்டத்துள் சேர்ந்தவராவர். ஆகவே, தன்னுரிமை பெற்ற நாட்டில் தாய்மொழியே ஆட்சி மன்றம்முதல் கடைத்தெருவரையில் முதன்மையாக வைத்தற்குரியதாகும்.

இம்முறையைப் பின்பற்றியே, நம் தமிழகத்தில் இந்தியை எதிர்க்கின்றோம். கோயில்களில் நடமாடும் வடமொழி மந்திரத்தையும் வேண்டா என்கின்றோம். இதில் தவறில்லை; இதற்காக ஆண்டவன் பால் தமக்கு நலம் வேண்டித் தமிழிற் கூறிவேண்டினால், மந்திரிகளும் தந்திரிகளும் கூட இதை எதிர்க்கின்றனரென்றால், இன்னும் வடமொழிப்பித்துத் தெளியவில்லை யென்றுதான் கருதுகின்றோம். பலர், நாளிதழ்களில் திங்கள் இதழ்களில் தமிழில் அருச்சனை செய்தால் குடி முழுகிப் போய்விடுமெனப் பிதற்றுகின்றனர். இவர்கட்கெல்லாம், குன்றக்குடி அடிகளார் முன்வந்து தமிழிலேயே வழிபாடு செய்ய வேண்டுமெனக் கட்டளையிடுவதொன்றே சாலும்.

(௬) சென்னை முதன் அமைச்சர் வித்துவானாக இருத்தல்வேண்டும்

கடந்த 16—7—55இல் தமிழ் இலக்கிய மாநாடு சிதம்பரம் இராசா அண்ணாமலை நகரில் அமைந்த கவிமணி பந்தலில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் தலைமையில் நிகழ்வுற்றது.

அதுகாலைத் தம் தலைமையுரைச் சொற்பொழிவாற்றியபொழுது அவர் குறிப்பிட்டதாவது: பழைய மொழி ஒன்று இருக்கின்றதென்றால் அது தமிழ் மொழியையே குறிக்கும். தமிழ்நாட்டில் தமிழை வளர்ப்பதற்காகவே இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் ஒரு பல்கலைக் கழகத்தை அமைத்தார் என்றும், அதில் தமிழ்மொழி இலக்கியத்தை வளர்ப்பதற்காக ஓர் அவை ஏற்படுத்தியிருப்பதாகவும், அதில் இலக்கியத்துக்காகத் தம்மைப் பொறுப்பாளராக அமைத்திருப்பதாகவும் கூறியதோடு, அதனால் தமிழன் பெருமை இலக்கியத்தால் மாண்புறுகின்றதென்று விளக்கிப் பேசினார். ஆகவே, இனி வருங்காலத்தில் யாவரும் தமிழ்ப்புலவர்களாக ஆதல்வேண்டுமெனக் கூறி, இனி வருகின்ற சென்னை மாநில முதலமைச்சர் ஓர் தமிழ்ப்புலவராகத்தான் இருக்கவேண்டுமென்று வற்புறுத்திப் பேசித் தம் தலைமைச் சொற்பொழிவை முற்றுவித்தார்.

குறிப்பு: தலைமை தாங்கிய பேராசிரியரவர்களின் கரைகாணாத் தமிழ்க்காதலைப் பாராட்டுகின்றோம். தமிழ்மொழி ஆட்சிமொழியாக விரும்புகின்றோம். தமிழ்ப்புலவரே நம் தமிழக முதலமைச்சராக அடுத்துவருதல் வேண்டுமென விரும்பும் விருப்பம், இறைவனருளால் விரைவில் நிறைவுபெற விழைகின்றோம்.

மதிப்புரை

(க) கம்பன் யார்?

[எழுதியவர்: உயர்திரு. மா. இராசமாணிக்கனார் அவர்கள் எம். ஏ. எல். டி, எம். ஓ. எல். பி. எச். டி. வெளியீட்டோர்: செல்வி பதிப்பகம், காரைக்குடி. பக்கங்கள் கOஅ. விலை ரு. 1-8-0]

கம்பன் யார்? என்னும் நூல் நம் தமிழகப் பெருங்கலைஞராகிய கம்பரைக் குறித்துச் சுருங்கிய முறையில் விளக்கிக் கூறுவதாகும். கம்பர் ஓர் சிறந்த கவிஞர்; அவர் நம் தமிழகத்துக்கு உதவிய செல்வம், இராமாயணப் பெருங்காப்பியமென்னும் சிறந்த நூல்.

இராமாயணம், கட்டுக்கதையென்றும், அது கற்றற்குரியதல்ல வென்றும் இக்கால அறிஞர் பலரும் வாது கூறுவர். ஆயினும் அக் கதை பழங்கால முதல் மக்களிடைப் பரவி வேரூன்றிவிட்டது. அஃ தெவ்வாறாயினும் ஆகுக. நமக்கு வேண்டுவது அறங்களும், மக்கள் மாண்புகளும், வீரம் காதல் கொடை ஆடவர் பெண்டிர் நன்னீர்மை ஆகிய நல்லறங்களே. இவைகளெல்லாம் இக்காவியத்தே மண்டிக் கிடப்பதைக் கற்றுத் துறைபோயார் அறிவர்.

இவையிற்றைக் கருவிகளாகக்கொண்டு ஆசிரியரவர்கள், கம்ப ராமாயணம் என்பது முதல் காதல் மணம் என்பது ஈறாகப் பன்னிரண்டு தலைப்புகளில் ஆய்ந்து நம் தமிழர் பெருமையை உலகிற்குணர்த்தி யுள்ளார்கள். அவற்றுள், வால்மீகி இராமாயணம், பௌத்த இராமா யணம், சைன இராமாயணம் இவைகளில் காதைத் தலைவனான இராமபிரான் வரலாறுகள், வெவ்வேறு வகையாக ஒவ்வொன்றும் முரணுகக் கூறியிருப்பனவற்றையும் பிறவற்றையும் ஆய்ந்துகூறி, கம்பர், இக்கதைப் போக்கை உட்கொண்டு நம் தமிழ்நாட்டுக்குப் பொருந்தும் ஒழுக்கங்கள் இவை, பொருந்தாதன இவையெனக் கூர்த்தாய்ந்து நம் நாட்டுப் பழக்கவழக்கங்கட்கேற்ப மாற்றஞ் செய்துள்ளனவற்றை இந் நூல் பக்கம் உO முதல் உஎ வரை கூறிவிளக்கியுள்ளனர். பின்னரும் இந்நூலில் கம்பர் காவியத்தில் இடம் பெற்றுள்ள கடவுட் கொள்கை, அரசியல் நுட்பம், காதல், அதன் பகுதியாகிய ஊடல் கூடல் முதலிய வற்றையும் ஆங்காங்கே கம்பரின் பாடல்களைக் கொண்டே விளக்கிச் செல்வது, இன்ப விருந்தாக அமைந்துள்ளது. ஆசிரியரவர்கள், கம்பரைச் சுவைத்து மகிழ்ந் தீட்டிய கம்பன் யார்? என்னும் இந்நூல் காவியச்சுவை காண்பார்க்கும், வரலாற்றுண்மை ஆய்வார்க்கும், மாணவர்கட்கும் கம்பராமாயணக் காப்பியத்தை ஆய்வதற்கு வழி காட்டியாகத் திகழ்கின்றதெனலாம். யாவரும் கற்கவேண்டிய பய னுள்ள நூல்.

ஆனல், பெரும்புலவர்களையோ அறிஞர்களையோ ஒருமைச் சொல்லால் அழைப்பது நாகரிகத்துக்கு ஏற்றதன்று. 'கம்பன் யார்?' என்பதைக் காட்டினும் கம்பர் யார்? என்றிருந்தால் மிகச் சிறப்புக் குரித்தாகும். குறிகுணங் கடந்த இறைவனைமட்டும் எப்பாற் சொல்லா லும் அழைக்கலாம். பிறரைப் பால் திணைவழுவாது கூறலே சால்பு. இக்காலத்தில் இஃதொரு மறுமலர்ச்சியாகக்கொண்டு வள்ளுவன், சம் பந்தன், நாவுக்கரசன் என்றெல்லாம் அறிஞர்கள் சொற்பொழிவுகளில்

கூறக்கேட்கின்றோம். எனவே, இப்பிற்போக்கினின்றும் அறிஞர்களைப் பன்மைச் சொல்லாற் பாராட்டுதலே நன்முறையாகும்.

இந்நூலாசிரியரையோ இன்னர் போன்ற வேறு ஆசிரியர்களையோ ஒருமைச் சொல்லால் எழுதின், பேசின் பொறுப்பரோ? என்றே கூற விழைகின்றோம்.

(உ) மனங்கவர் மதுரை

[யாத்தோர்: வித்துவான், திரு. தி. கி. சுந்தரமூர்த்தியவர்கள், பக்கங்கள் ௪௪. விலை ரூ. 0-8-0. இந்நூல் கிடைக்குமிடம்: தி. கி. சுந்தரமூர்த்தி, தமிழாசிரியர், பசுமலை, மதுரை மாவட்டம்.]

இந்நூல் அகவற்பாக்களானியன்ற செய்யுள் நூல். தோற்றம் என்பது முதல் எழுச்சி என்பது ஈறாக முப்பானிரண்டு தலைப்புக்களில் மதுரைமாநகரின் சிறப்புக் குறித்து விளக்கியுள்ளனர். மதுரை நகர் பண்டைக்கால முதல் இற்றை நாள்வரை வரலாற்றுச் சிறப்புப்பெற்ற மாநகர். நம் கன்னித்தமிழ் இந்நகரில் வளர்ந்தே உலகெல்லாம் பரந்தது. இறைவன் அறுபத்துநான்கு திருவிளையாடல் புரிதற்கும், கண்ணகியார் காற்சிலம்பால் காவியம் பிறத்தற்கும் பத்துப் பாட்டு எட்டுத்தொகை நூல்கள் தோன்றற்கும் காரணமாக

நகைய தமிழ் மதுரையைத் தற்காலம் காண்பதற்கு எற்றதாக ஆசிரியர் ஆக்கித் தந்துள்ளனர். இந்நூலைக்கொண்டு இந்நகரைப் பார்க்காதவரும் இந்நகரில் இன்னின்ன, இன்ன இடங்களில் உள்ளன என்பதைக் காண்டற்கு வழித்துணையாக உதவுவது இஃதெனின் மிகையாகாது. எல்லோருக்கும் நன்கு தெளிவுறும்படி வேற்றுச் சொற்களையும் கலந்து பாக்களில் அமைத்துள்ளனர். ஆயினும் நகரச் சிறப்புத் தெரிதற்குத் தொடர்வண்டி வழிகாட்டி (Railway guide) போல் உதவியாக அமைந்துள்ளது. மேலுறை மீனாட்சியம்மையார் திருக்கோவில் திருவுரு இலகுகின்றது. நல்ல எளிய சிறிய நூல் இதை யாத்த ஆசிரியர் வாழ்க.

(௩) கூட்டுறவால் நாட்டுயர்வு

ஆசிரியர்: திரு. ஓ. இரா. கிருட்டினசாமி எம். ஏ. பி. காம், எப். ஆர். ஈ. எஸ். அவர்கள். கிடைக்குமிடம்: மறைமலை இல்லம், 188, திரு. வொற்றியூர் ஐரோடு, சென்னை-21. பக்கம்: ௭௨. விலை ரூ. 0 8-0.]

கூட்டுறவால் நாட்டுயர்வு என்னும் இந்நூல் சுருக்கத்தில் பெருக்கமாக மக்கள் பொருள் நிலையில் உயரும் நிலையை எடுத்து விளக்கிக் காட்டும் நூல். ஆசிரியர் வணிக நுண்ணியற் கலையில் கற்றுத் துறைபோயவராகலின், இதில், பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது முதலாகக் கடல் கடக்கும் வகை என்பதீறாக எழு பகுதிகளாகப் பகுத்துக்கொண்டு உலகியலை ஆய்ந்து, பொருள்நிலையில் மன்பதை யுலகு முன்னேறவேண்டியவற்றிற்கு வழிகோலிக் காட்டுகின்றார். மக்கள் தனித்தனியாகப் பிரிந்துநிற்றல் கூடாதென்றும், கூட்டுறவினாலேயே உலகம் இயங்குகின்றதென்றும், அதற்குக் காட்டாக அணுக்களின் கூட்டுறவு, புள்ளினங்களின் கூட்டுறவு, மற்றைய எல்லா உயிர்க

னிடையேயும் கூட்டுறவு என்று விளக்கிக் கூறி, மக்கள் கூட்டுறவின் இன்றியமையாத் தன்மையை விளக்கிக் காட்டியுள்ளனர். முதலாளித் தனம், உலகைப் பாழாக்க முற்படும் கம்யூனிசக் கொள்கை முதலி வற்றின் நிலைகளினால் நலங்கெட்டதெனக் கூறி நன்கெடுத்து விளக் யுள்ளனர்.

இறுதியாக வணிகக் கூட்டுறவு முறையால் நாடு முன்னேறு எனக்கூறி நூலை முற்றுவிக்கின்றார். நூல் தனித்தமிழ் உரைநடையில், செவ்விய இனிய செந்தமிழ்ச் சொற்களால் ஆக்கி நாட்டுக்கு உதவியுள்ளனர். பயனுள்ள நல்ல நூல். யாவரும் கற்று அவ்வழி யொழுகிச் செல்வ நிலையில் எக்கழுத்தங்கொள்ளத் துணையாகிய விழுமிய நூல் எனப் பாராட்டுகின்றோம்.

(ச) தாமரைக் குமரி

[ஆசிரியர் : மு. அண்ணாமலை அவர்கள், அண்ணாமலை நகர்: வெளியிட்டோர் அன்புப்பண்ணை, சென்னை - 5. பக்கங்கள் 118. இரண்டாம் பதிப்பு, விலை ரூ. 1-8-0.]

தாமரைக் குமரி என்னும் இந்நூல், செய்யுட்களால் இயன்றது. ஆசிரியரவர்கள் இந்நூலை இயற்கை, பிற, காதல், சிறு காவியம் என்னும் நான்கு பகுப்பாகப் பகுத்துக்கொண்டு முப்பத்திரண்டு தலைப்புக்களில் நூலை ஆக்கியுள்ளனர். பாடல்கள் யாவும் எளிமையும் இனிமையும் கொண்டுள்ளன; இழுமென் ஓசை நயம் வாய்ந்து யாற்றொழுக்குப் போல் செய்யுட்கள் யாவும் தட்டுத் தடையின்றி ஓடுகின்றன; கருத் தாழமிக்கனவாகவும் திகழ்கின்றன.

தாமரைக் குமரி என்னும் இந்நூலின் பெயராக அமைந்த பகுதி மிக்க சுவையான காதற் பகுதியாகும். இதில் கதிரவனும், தாமரை மலராகிய பெண்ணும் உரையாடுவதாக அமைத்திருக்கும் கற்பனைகள் மிக்க இன்சுவை தருவன. பிறண்டும் இந்நூலகத்துப் புதுவதாக மலர்ந்த அரிய கருத்து நயங்கள் படித்துப் படித்துச் சுவைத்து மகிழத் தக்கனவாகும்.



திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.